GOVT. MUS. MADRAS
6352

ஸ்ரீ:

ஸ்ரீமஹாபாரதம்

சாந்திபர்வம்.

(மோக்ஷதர்மம்.)

தம்பீகோணம், அத்வைத ஸபாபண்டிதர்கள், மஹாவித்வான்,
ப்ரம்மஸ்ரீ, வேதாந்தகேஸரி, மஹாமஹோபாத்யாயர்,
பைங்காநாடு,

கிருஷ்ணபதி சாஸ்திரிகள்

அவர்களாலும்,

மஹாவித்வான், ப்ரம்மஸ்ரீ,
கருங்குளம்,

கிருஷ்ண சாஸ்திரிகள்

அவர்களாலும்

மொழிபெயர்க்கப்பெற்று,

தம்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்

ம. வீ. இராமாநுஜாசார்யரால்

பதிப்பிக்கப்பெற்றது.

விலை ரூபா - 4 தபால்சார்ஜ் அணா - 8

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

1915

MAHAMAHOPADHYAYA
R. V. SWAMINATHAIYAR LIBRARY
VAIJAYANTI PUR, MADRAS.

(All Rights Reserved.)

ஸ்ரீ:

முகவுரை.

ஸ்ரீமஹாபாரதத்தின் * 'பெரும்பலம்' என்று ஸ்ரீ வேதவ்யாஸபகவானே கூறியிருக்கிற சாந்திபர்வத்தின் தமிழ்மொழிபெயர்ப்பானது பூர்த்தியாகி வெளியான விஷயம் யாவருக்கும் பெருமகிழ்ச்சியை விளைக்குமென்பதில் ஸந்தேகமில்லை. மிகப்பெரியதும் கடினமுமான இப்பர்வத்தில் எளிதிற் பொருள்விளங்காத சுலோகங்கள் மற்றப்பர்வங்களைக் காட்டிலும் அதிகமாகவுள்ளன. ராஜதர்மமும், ஆபத்தர்மமும், மோக்ஷதர்மமுமாகிய பரமதர்மங்களைச் சொல்லுகிற பாகமானதால் இதில் விஷயமும் மிக்ககடினமானது. பிரஸித்திபெற்ற பெரியபண்டிதர்களே மோக்ஷதர்மத்தில் அநேகவிடங்களில் உண்மைப் பொருள் விளங்கவில்லையென்று கூறுவார்களானால் இதைப் பற்றி நான் சொல்லவும்வேண்டுமோ? மஹாபாரதத்தை மொழிபெயர்த்து வெளியிட உத்தேசித்து, என்விருப்பத்தை முதலில் சிலபெரியோர்களிடத்தில் விஜ்ஞாபித்தபோது, அவர்கள், 'சாந்திபர்வத்தை மொழிபெயர்ப்பது ஸ்ரமமானகாரியம்; அதனுள்ளும் மோக்ஷதர்ம மொழிபெயர்ப்பு அதிக ஸ்ரமமாயிருக்கும். ஆதலால், அதுதவிர்த்து வேறினல்தான் மஹாபாரதமொழிபெயர்ப்பு நிறைவேறினதாக நம்பலாம்' என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதின் உண்மை அனுபவத்தில் எனக்கு நன்கு விளங்கிற்று. இத்தப்பர்வத்தின் வேகமினுல் என்புத்திக்கும் சரீரத்துக்கும் உண்டான ஸ்ரமமும், எற்பட்ட பொருட்செலவும் மற்றப்பர்வங்கள் எல்லாவற்றின் வேகமினுலும் உள்ளவற்றினும் குறைந்தவையல்ல. இப்பர்வத்தைச் சீக்ரம் பூர்த்தி செய்யவேண்டியதைப்பற்றிப் பல பெரியோர்கள் அடிக்கடி கடிதங்கள் எழுதியும் விசாரித்தும் என் மனத்திற்கு மிக்க ஊக்கத்தை அளித்துவந்தார்கள். பாரதம் முழுவதிலேமே மொழிபெயர்த்தானதோடு கடினமான பர்வங்களும் அச்சிட்டு வெளியாகிவிட்டபடியால், வெளிவராத மற்றப்பர்வங்களும் ஸர்வேஸ்வரனுடைய திருவருளாலும் பெரியோர்களுடைய அனுக்ரஹத்தாலும் இனி விரைவில் வெளிவருமென்று உறுதியாகச் சொல்லலாம்.

* ஆதிபர்வம் பக்கம் ௪௯, வரி ௪

முகவுரை.

இப்பர்வத்தின் பொருட்சிறப்புக்கேற்ப, தக்கபண்டிதர்களைக் கொண்டு இதனை மொழிபெயர்க்க விரும்பி, கும்பகோணம அத்வைதஸபா பண்டிதராகவிருந்த மஹாவித்வான் ப்ரம்மஸ்ரீ, வேதாந்தகேஸரி மஹாமஹோபாத்யாயர் பைங்காநாடு கணபதி சாஸ்திரிகளவர்களைக் கேட்டுக்கொண்டேன். அவர்கள் பெரிதும் மனமுவந்து மொழிபெயர்க்கத்தொடங்கி 240 - ஆவது அத்தியாயம்வரையில் மொழிபெயர்த்து உதவினர்கள்.

சிலகாலஞ்சென்றபிறகு அவர்கள் தூரவறம்பூண்டு ஸித்தியடைந்தமையால் எஞ்சிநின்றதும் மிக்க கடினமுமானபாகத்தை யாரைக் கொண்டு மொழிபெயர்ப்பதெனப் பெருங்கவலையுற்றுச் சாந்திபர்வ வேலையைப் பலகாள் நிறுத்திவைக்கவும் நேர்ந்தது.

இங்ஙிலைமையில், ஷ்டி அத்வைத ஸபாபண்டிதராக இப்பொழுது விளங்கும் மஹாவித்வான் ப்ரம்மஸ்ரீ கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள் என வேண்டுகோளுக்கிணங்கி, காலதாமதத்தால் எனக்கு மிகுந்த பொருள் நஷ்டமும் பலவிதமான ஸ்ரமங்களும் உண்டானதை உணர்ந்து இரவும் பகலும் ஓய்வின்றி உழைத்து 240-ஆவது அத்தியாயத்துக்கு மேலுள்ள பாகத்தை அதிவிரைவில் மொழிபெயர்த்துக்கொடுத்து என்கவலையை நீக்கினர்கள். அவர்களுடைய பெருங்கருணையினாலேயே, சாந்திபர்வத்தை முற்றிலும் வெளியிட நான் சக்தனானேன்.

மஹாபாரத மொழிபெயர்ப்பானது பல சிறந்த பண்டிதர்களையும் உதவிக்காக மற்றும்பலரையும் வைத்துக்கொண்டு பலவருடங்கள் செய்யவேண்டிய பெருங்காரியமென்பதையும், அதனுக்குத் தக்கபடிபொருளுதவியில்லாமல் நான் மிகவும் ஸ்ரமப்பட்டுக்கொண்டிருந்ததையும் அறிந்து கும்பகோணம் ப்ரம்மஸ்ரீ Professor K. சுந்தராமையரவர்கள் M. A. ரூபா 200-ம் ப்ரம்மஸ்ரீ ஆனரபிள் தீவான்பகதூர் ஜஸ்டிஸ் T. சதாசிவையரவர்கள் ரூபா 100-ம் நன்கொடையளித்து உதவினர்கள்.

இப்பெருங்காரியததை மேல்நடந்த இயலாமல் 1914-ஆம் ஒரு ஜனவரி மாஸத்தில், ஸமாசாரப்பத்திரிகைகள் மூலமாக நான் ஒரு விண்ணப்பஞ்செய்திருந்தேன். அதனைப்பார்த்தபிறகு சென்னை லெக்ஸிஸ்லேடிவ் கௌன்ஸில மெம்பர் மஹாகனம் பொருந்திய Hon'ble Mr P. S. சிவஸ்வாமி ஐயரவர்கள், C. I. E., C. S. I. ரூபா 100-ம்

கொழும்பிலுள்ள Hon'ble Mr. P. இராமநாத முதலியாரவர்களி ரூபா 200-ம் உதவிபுரிந்து ஊக்கமளித்தார்கள்.

ஆண்டிபட்டி ஏர்மீன்தாரவர்களாகிய ஸ்ரீமான், S. RM. M. CT. பெத்தாச்சி செட்டியார் அவர்கள், M. R. A. S. பிஷ்மீபர் வத்தை அச்சிட்டு வெளியிடச்செல்லும் ரூபா 1000உம் தாங்களே கொடுத்து உதவுவதாக வாக்களித்து முன்னதாக நல்லசமயத்தில் ரூபா 500 அனுப்பி என் மனக்கவலையை அகற்றிப் பெரும்புண் ணியத்தைக் கைக்கொண்டார்கள்.

இதற்குமுன் எனக்கு முட்டுப்பாடுகள் நேர்ந்த ஸமயங்களில் கைம்மாறுகருதாது வேண்டிய திரவிய ஸஹாயஞ்செய்து உத்ஸாகப் படுத்திய பிரபுசிகாமணிகளைப்பற்றி யான் அவ்வப்போது உரிய இடங்களில் கூறியிருப்பதை யாவரும் பார்த்திருக்கலாம்.

மேற்கூறிய தமிழ்நாட்டினரையன்றி அயல் நாட்டாராகிய ஐரோப்பிய கனவான்கள் சிலரும் என்னுடைய அஸௌகரியங்களை யறிந்து மனமிரங்கி ஆதரித்து வருகிறார்கள்

இத்தப் பரோபகாரிகளுடையபேருதவியினாலேயே இத்தமஹா இதிஹாஸமான தமிழ்மொழிக்குப் பயனுள்ளதாக ஆகிறபடியால் நம தமிழ் நாட்டாரனைவரும் இவர்களிடத்து நன்றிபாராட்டக் கடமை யுற்றிருக்கிறார்கள்.

தேசாபிமானமும், பாஷாபிமானமும் உள்ள பல கனவான்கள் தங்கள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதாக வாக்களித்திருக்கி றார்கள். அவர்கள் பெயரையும் செய்யும் உதவியையும் பின்னா வெளி யிடுவேன். இப்பெருங்காரியத்தில் தங்கள் தங்களால் இயன்ற உதவிக ளைசெய்து எனக்குஊக்கமளித்துத் தமிழ்மொழிக்குப் பேருதவிபுரிந்து வரும் பத்திரிகைகளுக்கும் கையொப்பக்காரர்களுக்கும் என் மனப்பூர்வ மான நன்றியைச் செலுத்துகிறேன்.

இங்ஙனம்:

ம. வீ. இராமானுஜாசாரியன்.

ஸ்ரீ:

ஸ்ரீமஹாபாரதம்.

சாந்திபர்வம்.

விஷயஸூசிகை.

மோக்ஷதர்மம்.

அத்யாயம்.		பக்கம்.
173	ஒரு பிராம்மணருக்கும் ஸேனஜித்துக்கும் நடந்த ஸம்பாஷணையும் பிங்களோபாக்யானமும் ...	590 - 595
174	காலம் விரைந்து செல்லுதலால் நன்மைக்குக்கார ணமானதை விரைவில் செய்யவேண்டுமென்ப தைப்பற்றி ஒருபிதாவுக்கும் புத்ரனுக்கும்நடந்த ஸம்பாஷணை	595 - 599
175	சம்யாகர், வறுமைமேன்மைக்கும் பொருள்துன் பத்துக்கும் காரணமென்பதைப்பற்றிப் பீஷ் மருக்குச் சொல்லியது	600 - 601
176	மோக்ஷத்துக்காக அடையத்தக்க இந்திரியங்க ளும் மஸ்கியென்பவரின் வரலாறும் ...	602
	மஸகியானவர் வைராக்கியமே ஸுககாரணமென்றும் ஆசையைவெறுத்தும் செய்வம் பெரிதென் றும் கூறியது	602 - 606
	போத்யர் ஆசையைவிடுவதே ஸுகமென்று கூறி யது	607 - 608
177	வைராக்கியமே ஸுகத்திற்குக் காரணமென்னும் விஷ யத்தில் ப்ரஹ்லாதருக்கும அஜகரவ்ராதமுள்ள முனிவருக்கும்நடந்த ஸம்பாஷணை ...	608 - 612
178	ஆத்மிவே ஸுகத்திற்குக்காரணமென்னும் விஷயத் தில் இந்திரனுக்கும் காஸ்யபனுக்கும நடந்த ஸம்பாஷணை	612 - 616
179	முன்ஜன்மத்தில் செய்யும் நல்வினைதீவினைகள் பின்ஜன்மத்தில் பயனைத்தருதலால் தர்மமே செய்யவேண்டுமென்பது	617 - 619
	செய்வினை செய்தவனையே அடையுமென்பது ...	618
80-190	ப்ருகுவுக்கும் பரத்வாஜருக்கும் நடந்த ஸம்பா ஷணை...	619 - 649

விஷய அகரவரிசை.

அத்யாயம்.		பக்கம்
	உலகஉற்பத்திமுதலியவை	619 - 622
	பூமிமுதலியவற்றின் உற்பத்திமுதலியன ...	623 - 624
	ஸ்தாவரங்களும் ஜந்து பூதங்களாலானவையென் பதும் அவற்றிற்கும் உயிர்முதலியன உண்டென்பதும்	624 - 628
	சரீரத்திலுள்ள பிராணன்முதலியவற்றின் காரியங்கள்.	628 - 630
	சரீரத்தைக்காட்டிலும் வேறுக ஜீவன் எதென்று பரதவாஜர் ஆக்ஷேபித்தது	630 - 631
	சரீரத்தைக்காட்டிலும் ஜீவன் வேறென்பது ...	632 - 635
	பிராம்மணர்கள் தம்தம் இஷ்டப்படியான நடக்கைகளால் குணவேறுபாடடைந்தது ...	635 - 637
	ப்ராம்மணர்முதலியவர்களின் லக்ஷணமும் வைராக்யமே மோக்ஷத்திற்குக்காரணமென்பதும் ...	638 - 639
	உண்மையின் சிறப்பு...	640
	மெய் ஸ்வர்க்கத்திற்கும் பொய் நரகத்திற்கும் பரம்பரைக்காரணமென்பது	640 - 641
	இவ்வுலகத்துக்கும் ஸ்வர்க்கத்துக்குமுள்ள வேற்றுமை	642
	ஹோமம் அதயயனம் தானம் தவம் இவற்றின் பயன்	642 - 643
	நான்கு ஆச்ரமதர்மங்கள்	643 - 647
	ஹிமாசலத்துக்கு வடக்கிலுள்ள உலகம் ஸ்வர்க்கம் போன்றதென்பதும் அது புண்யசாலிகளால் அடையத்தக்கதென்பதும்	648 - 649
191	நல்ல ஆசாரங்கள்	650 - 653
192	ஆத்மதத்வம் பூதங்களின் கார்யங்கள் முக்குணமுதலியவற்றின் செயல்கள்முதலியன ...	653 - 661
193	த்யான யோகம்	661 - 665
194	ஜபத்தின் பயன்	665
	ஜபிக்குமுறை	665 - 667
195	ஜபத்தை முறைப்படி செய்யாதவனுக்குள்ள தாழ்ந்திமுதலியன	667 - 668
196	எல்லாதேவர்களின் ஸ்தானங்களும் பரமாதமாவின் ஸ்தானத்திலும் இழிந்தவையென்பதும் பரமாத்மஸ்தானத்தின் சிறப்பும் ...	669 - 670
197	ஒரு ஜபப்ரம்மணருக்குக் காயத்ரி, தர்மமுதலியவர்களுடன்கடந்த ஸம்வாதம்	671 - 682

விஷயஸூசிகை.

அத்யாயம்.		
	பொய்யின் இழிவும் ஸத்யத்தின் சிறப்பும் ...	676 - 677
198	ஜபப்ராம்மணனும் இக்ஷ்வாகுவும் மோக்ஷமடைந்ததும் ஜபத்தின் பயனும்	683 - 686
199-204	ப்ருஹஸ்பதிக்கும் மனுவுக்கும் ஞானமுதலியவற்றைப்பற்றிநடந்த ஸம்பாஷணை ...	686 - 706
	கர்மஞானமார்க்கங்களின் விவரணம் ...	687 - 690
	ஜீவாத்மா பரமாத்மாக்களின் லக்ஷணமுதலியன...	690 - 696
	பரமாத்மாவை அறியும்வகையும் அதனிடமிருந்தே எல்லாம் உண்டாகி அதனிடமே ஒடுங்குகின்றனவென்பதும்	696 - 706
205	நிபதனர் தம்தாய்க்கு ஸம்ஸாரதத்தை அரணயமாகச் சொல்லியது	707 - 708
	ஸம்ஸார சக்ரலக்ஷணம்	709
	நாரதருக்கும் ஸாவித்ரிகரும் நடந்த ஸம்வாதம ...	710 - 711
	நாரதர் தவஞ்செய்து விஷ்ணுவைத் தர்சித்தது ...	711 - 712
206	விஷ்ணு உலகங்களைப்படைத்தமுறையும் அவருடைய அவதாரமுதலியவையும் ..	714 - 718
207	மரீசிமுதலான ஸருஷ்டிகர்த்தர்களும் ஒவ்வொரு திக்கிலுமுள்ள ரிஷிகளும்	719 - 721
208	விஷ்ணுவின் வராகாவதாரகதை	722 - 726
209	நாரதர் வாஸுதேவரின் பெருமையை அறிந்தது	726 - 732
210	விஷ்ணுவானவர் மனிதன் மரணகாலத்தில ஜபிக்கத்தக்க மந்திரத்தை நாரதருக்கு உபதேசித்தது	734 - 740
	நாரதர் விஷ்ணுவைத் துதித்தது	734 - 739
211	கருடன் விஷ்ணுவின் மாகாத்மியத்தைப் பீஷ்மருக்குச் சொல்லியது	742 - 747
212-214	ஒரு குருவானவர் தம்சிஷ்யனுக்கு ஆத்மதத்வத்தை உபதேசித்தது.	748 - 760
215	பரமாத்மஜ்ஞானமில்லாதவர்கள் படும்துன்பமும் அத்துன்பம் விலகத்தக்க உபாயமும் ..	760 - 763
216	ப்ரம்மசர்யமுதலியவற்றின் சிறப்பு ...	763 - 767
217	வைராக்யமுதலிய மோக்ஷகாரணங்கள ...	767 - 770
218-219	பரமாத்மாவை அறியும்வகை	770 - 777
220	பஞ்சசிகர் ஜனகருக்கு ஸாங்கிகமதமுதலியவற்றைக்கண்டித்துசசொல்லியது	779 - 782
222	பஞ்சசிகர் கர்மபலன்களே ஜனகருக்குச் சொல்லியது	788 - 789
223	மிதிலையெரிந்ததும் ஜனகர் வைலயத்திருந்ததும்	789 - 791

விஷயானுக்ரமணிகை.

அத்யாயம்.		பக்கம்
224	இல்லறத்திலிருந்தே முக்தியடையுவதற்கு உதாரணமான ஸுவர்ச்சலையின் கதை	791 - 800
225	அடக்கமுள்ளவனுடைய லக்ஷணமும் அடக்கத்தின் சிறப்பும்	801 - 802
226	தவம் உபவாஸமுதலியவற்றின் முறையும் பயனும்	803 - 804
227	ஸநத்குமாரர் முனிவர்களுக்குப் பகவத்ஸ்வரூபத்தை உபதேசித்தது	807 - 809
229	ஞானம் மோக்ஷஸாதனமென்பதையும் அதைஅடையும்வகையையும்பற்றி இந்திரனுக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்த ஸம்பாஷணை	810 - 815
230 - 232	இந்திரன் பலியை இகழ்ந்ததும் காலத்தின்வன்மையைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் நடந்த ஸம்பாஷணையும்	817 - 828
	இந்திரனுக்கும் லக்ஷ்மிக்கும்நடந்த ஸம்பாஷணையும் லக்ஷ்மிவஸித்தற்கும் விலகுதற்கும் காரணங்களும்...	824 - 827
233	மோக்ஷஸாதனத்தைப்பற்றி இந்திரனுக்கும் நமுசிக்கும் நடந்த ஸம்பாஷணை	828 - 831
234	ஆபத்தில் ஸதர்யமே ஸுகத்துக்குக் காரணமென்பதைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் நடந்த ஸம்பாஷணை	832 - 840
235	லக்ஷ்மி தான் அஸுரரைவிட்டுவிலகியகாரணத்தை இந்திரனுக்குச்சொல்லியது	843 - 848
236	ப்ரம்மஜ்ஞானிகளின்லக்ஷணத்தைப்பற்றித் தேவலருக்கும் ஜைகீஷவ்யருக்கும்நடந்த ஸம்பாஷணை	850 - 852
	பார்வதீபரமேஸ்வரர் ஜைகீஷவ்யரைப் பரீக்ஷித்தது...	852 - 855
237	நற்குணங்கள் உலகைவசப்படித்துமென்னும் விஷயத்தில் நாரதரின் பெருமையைப்பற்றி உக்ரஸேனனுக்கும் வாஸுதேவருக்கும் நடந்த ஸம்பாஷணை	855 - 857
	நாரதர் வாஸுதேவருக்கு உபாயங்கூறியது ...	858
238 - 260	வ்யாஸர் சுகருக்குப் பலவிஷயங்களைஉபதேசித்தது	860 - 923
	உலகஉற்பத்திமுதலியன	860 - 867
	ப்ரளயமுதலியன	868 - 869
	ப்ராம்மணதர்மமுதலியன	869 - 871
	ப்ராம்மணரைப்பூஜித்து மேன்மையெற்றவர்கள்	871 - 872
	ப்ராஹ்மணதர்மமும் ஞானதத்தின்சிறப்பும் ...	872 - 875

அத்யாயம்.		பக்கம்.
	ஞானமே மோக்ஷஸாதனமென்பதுமுதலியன ...	875 - 879
	பிராணிகளின் உயர்வுதாழ்வும் ஞானத்தின்பிறப்பும்	880 - 882
	மதம்யுகமுதலியவற்றின் வேற்றுமைமுதலியன...	882 - 884
	ப்ரம்மஜ்ஞானத்தை அடையும்வழிமுதலியன ...	885 - 888
	யோகத்தின்முறை	888 - 891
	கர்மஞானங்களின் வேற்றுமைமுதலியன ...	891 - 893
	ப்ரம்மசர்யத்தின்முறையும் பெருமையும் ...	894 - 896
	க்ருஹஸ்ததர்மம்...	896 - 899
	வானப்ரஸ்ததர்மம்...	899 - 902
	பிக்ஷாஸ்ரமதர்மம்	902 - 906
	ஆத்மாவைஅறியும் வகைமுதலியன ...	906 - 908
	பஞ்சபூதமுதலியவற்றின் குணங்கள் ...	908 - 910
	ஆத்மாவே எல்லாமாய் எல்லாவற்றையும் செய்கிறதென்பது	910 - 912
	ஞானிகளின் பெருமை	913 - 914
	ஆத்மஜ்ஞானம்	914 - 916
	வைராக்யமே மோக்ஷஸாதனமென்பது ...	917 - 918
	பஞ்சபூதமுதலியவற்றின் குணங்கள் ...	919 - 920
	யோகதர்மம்	920 - 921
	காமமுதலியவற்றை வெல்வது அவசியமென்பது	921 - 923
261	பஞ்சபூதங்கள் மனம் புத்திஇவற்றின் குணங்கள்	923 - 924
262-264	நாரதர் ம்ருத்யுவின் வரலாற்றை அகம்பனனுக்குச் சொல்லியது	925 - 932
	ப்ரம்மதேவர் கோபத்தீயால் ப்ரஜைகளை எரித்ததும் அதனைத்தணிப்பதற்காக ருத்ரர் அவரிடம் சென்றதும்	925 - 926
	ருத்ரர் ப்ரம்மதேவரைக் கோபத்தையடக்கவேண்டியதும் அவர் அடக்கியதும்	926 - 927
	ம்ருத்யுவின்பிறப்பு	927
	ப்ராணிகளைக்கொல்லும் விஷயத்தில் ப்ரம்மதேவருக்கும் ம்ருத்யுவுக்கும் நடந்த ஸம்வாதம் ...	928 - 931
	நோய்களின் உற்பத்தியும் அவை ம்ருத்யுவுக்குத் துணையானதும்	931
265	தர்மத்தின் லக்ஷணம்..	932 - 934
266	தர்மபுத்ரர் தர்மத்தின் பிரமாணத்தைப்பற்றி ஆக்ஷேபித்தது	934 - 935
267-270	ஜாஜலி தர்மநிமித்தமாகக் கர்வமடைந்து துலாதாரனிடம் செல்வது...	936 - 937

அத்யாயம். பக்கம்

ஜாஜலிக்கும் துலாதாரனுக்கும் தர்மநிர்ணயத்தைப்பற்றி நடந்த ஸம்பாஷணை ... . 940 - 951

271 கொலையையும் சரீரத்துக்குவாட்டதையும் செய்யாமல் தர்மத்தைச் செய்யவேண்டுமென்பது .. 952 - 953

272 காரியத்தை ஆராய்ந்து செய்யவேண்டுமென்பதும் சிரகாரியின் கதையும் ... ... 953 - 959

பிதாவின் சிறப்பு ... ... 954 - 955

மாதாவின் சிறப்பு ... ... 955 - 957

ஆராய்ந்து செய்வதன் சிறப்பு 959

273 பிரஜைகளைத் துன்பப்படுத்தாமல் காகமும் விஷயத்தில் ஸத்யவானுக்கும் தயுமத்ஸேனனுக்கும் நடந்த ஸம்பாஷணை ... ... 960 - 963

274-276 பசுவைக்கொல்லாமல் யாகஞ்செய்ய வேண்டுமென்பதும் கபிலருக்கும் ஸ்யூமரஸ்மிகளும் நடந்த ஸம்பாஷணையும் ... . 964 - 978

277 அறம்பொருளின்பங்களுள அறமே சிறந்ததென்பதைப்பற்றிய குண்டதாரன்கதை . 979 - 983

278 லோகத்துக் காரணமாதலால் யாகம் இழிந்ததென்பதைப்பற்றி நாரதர்சொல்லிய உஞ்சவ்ருத்திப்ராம்மணர்கதை . . ... . 983 - 985

279 பாவம் தர்மம் வைராக்யம் மோக்ஷமுதலியன . 985 - 987

280 மோக்ஷத்திற்குரிய உபாயங்கள் .. .. 988 - 989

281 பிராணிகளின் பிறப்பிறப்புகளைப்பற்றி நாரதருக்கும் தேவலருக்கும் நடந்த ஸம்பாஷணை .. 989 - 992

282 ஜனகன் ஆசையை விடுவதே ஸுககாரணமென்பதை மாண்டவ்யருக்குச் சொல்லியது . 993 - 994

283 நற்கதிக்குரியதை உடனே செய்யவேண்டுமென்பதைப் பற்றி ஒரு நகுலதைக்கும் நகுலனுக்கும் நடந்த ஸம்பாஷணை ... .. 994 - 997

284 ப்ரம்மதத்தை அடைவதற்குரிய ஆசாரமுதலியன .. 998 - 1000

285 அறிவே ஸுகதுக்கங்களுக்குக் காரணமென்பதைப்பற்றிச் சுக்ரருக்கும் வ்ருதராஜனுக்கும் நடந்த ஸம்பாஷணை ... . 1001 - 1003

286 ஸநத்குமாரர் விஷ்ணுவின மஹிமையையும் பிறப்பின் கணக்கையும் ஜீவர்களின் வாஸனம் கதிமுதலியவற்றையும் சுகருக்கும வ்ருத்ராஜனுக்கும் சொல்லியது ... .. 1003 - 1009

287 - 288 இந்த்ரனுக்கும் வ்ருத்ரனுக்கும் யுத்தம் 1012 - 1015

அத்யாயம்.		பக்கம்.
	வ்ருத்ரனுக்கு ஜ்வரம் வந்ததும் இந்த்ரன் விருத்ரனைக்கொன்றதும்	1013 - 1015
	இந்த்ரனே ப்ரம்மஹத்தி அடைந்தது ...	1016
	ப்ரம்மதேவர் ப்ரம்மஹத்தியை அக்நிமுதலிய நால்வருக்குப் பங்கிட்டது	1016 - 1018
	நீர்க்குமிழிகள் பருகத்தகாவென்பது ...	1019
289	சங்கரர் தக்ஷயாகத்தை அழித்தது	1022
	சங்கரர்வேர்வையிலுண்டான நீ யாகத்தையெரித்ததும் ப்ரம்மதேவர் கோபத்தியை அடக்கும் படி அவரை வேண்டியதும்	1022 - 1023
	ஜ்வரமானது எதுஎதனிடத்தில் எப்படிஎப்படி அமைந்ததென்பது	1023
290	தக்ஷயாகத்தில் சங்கரரை அழையாமைக்காகத் தநீ கோபித்தது...	1025 - 1026
	தக்ஷன் சங்கரரை அலக்ஷ்யமாகச சொல்லியதும் உமையும் சங்கரரும் பேசிக்கொண்டதும் ...	1026 - 1027
	வீரபத்ரரா உண்டாகித் தக்ஷயாகத்தை அழித்தது	1027 - 1028
	வீரபத்ரரர் தம்மை இன்னொன்று தக்ஷனுக்குத் தோன்வித்த சிவரூபமணமாகச சொல்லியது ...	1028 - 1029
	தக்ஷன் சங்கரரை ஸஹஸ்ர நாமத்தால் துதித்தது	1030 - 1042
	சங்கரர் தக்ஷனுக்கு வரமளித்தது	1042 - 1043
	சிவஸஹஸ்ரநாமத்தைப் படிப்பதால் கேட்பதாலின் பயன்	1043 - 1044
291	ஆத்மா, புத்தி, பூதங்கள், இந்த்ரியங்கள், குணங்கள்முதலியவற்றின் விவரணம்	1045 - 1048
292	ஸனங்கர் முதலியன தொடர்நாமலிருந்ததற்குரிய காரணத்தை நாரதருக்குச் சொல்லியது	1049 - 1050
293	நாரதர் மேன்மையடைதற்குரிய காரணங்களைக் கூறுவருக்குச் சொல்லியது	1051 - 1055
294	சுகருடன் ஜனகனுக்கு வைராக்யமுதலிய மோக்ஷோபாயங்களை உபதேசித்தது	1056 - 1059
295	உசனஸ் சுக்ரரென்னும் பெயரை அடைந்ததைக் கூறும் ப்ரகரணமானது	1060 - 1063 1061
296-304	பராசரரிதை	1063 - 1081
	ச்ரேயஸ்ஸுக்குரிய காரணங்கள்	1063 - 1067
	யார் யார் துக்கிக்கப்படதற்கு நிலைமையை அடைவரென்பது	1065
	நியன்றவரை தர்மஞ் செய்வதே மேன்மைக்கு	

அத்யாயம்.		பக்கம்.
	காரணமென்னும் விஷயத்தில் சில்லரை தொகு	
	கரித்தது	1068 - 1069
	வர்ணதர்மங்கள்	1070 - 1072
	யார் யார் எந்த எந்த வகையில் ஈட்டிய பொருள்	
	சிறந்தென்பது	1071 - 1072
	நிரிபுரவதம்	1073
	தவத்தின் பெருமை	1074 - 1077
	வர்ணங்களின் பிரிவுகள்	1078
	கோத்ரங்களின் வரலாறு	1078 - 1079
	வர்ணங்களின் தனித்தனிதர்மங்களும் பொதுவா	
	னதர்மங்களும்	1079 - 1080
	வினையே தோஷத்துக்குக் காரணமென்பது ...	1080
	தற்கொலையால் வரும் தீங்குகள் ...	1082
	யார் யார் எது எதனினும் மேலானவரென்பது ...	1083
	எது எதனால்வரும் மரணம் இழிவானதென்பது...	1083
	மனிதனுக்கு அஜ்ஞானமே பகையென்பது ...	1083
	மனிதப்பிறப்பின் உயர்வு	1084
	பலவித மோக்ஷோபாயங்கள்	1085 - 1089
305	உண்மை அடக்கமுதலியவற்றைப்பற்றி ஸாத்யர்	
	களுக்கும் ஹம்ஸத்திற்கும்நடந்த ஸம்பாஷணை	1089 - 1094
306	யோகமுறையும் யோகிகளின் சிறப்பும் ..	1094 - 1099
307	ஸாங்கியத்தின்முறையும் சிறப்பும் ..	1100 - 1109
308	வஸிஷ்டர் கூராகூரங்களின் லக்ஷணத்தை ஜனக	
	னுக்குச் சொல்லியது	1110 - 1113
309	வஸிஷ்டர் ஜீவர்கள் அஜ்ஞானத்தினால் படும்துன்	
	பங்களை ஜனகனுக்குச் சொல்லியது .	1113 - 1117
310	வஸிஷ்டர் பிராணிகளுக்குச் சரீரமும் உருவமுத	
	லியவையும் உண்டாகும்வகையை ஜனகனுக்	
	குச் சொல்லியது	1118 - 1121
311	வஸிஷ்டர் யோகமுறை ஸாங்கியமதமுதலியவற்	
	றை ஜனகனுக்குச் சொல்லியது ..	1122 - 1126
312	வஸிஷ்டர் வித்தை அவித்தைகளைப்பற்றி ஜனக	
	னுக்குச் சொல்லியது . ..	1126 - 1130
313	வஸிஷ்டர் ஞானஜ்ஞானங்களையும் உபதேசம்பெற	
	த்தக்கவர் தகாதவரையும் ஜனகனுக்குச் சொல்	
	லியது	1130 - 1134
314	ஸுமனஸின் நன்மைக்குரியவற்றை வஸுமனஸுக்	
	குச் சொல்லியது	1135 - 1137

அத்யாயம். பக்கம்.

315 யாஜ்ஞவல்கீயர் பிரிகிருதி விகிருதிகளையும் படைப்புமுறையையும் ஜனகனுக்குச் சொல்லியது 1138 - 1139
316 யாஜ்ஞவல்க்யர் அவ்யக்தமுதலியவற்றின் காலக்கணக்கையும் ஸ்ருஷ்டியையும் ஜனகனுக்குச் சொல்லியது ... ... 1139 - 1141
317 யாஜ்ஞவல்க்யர் பிரளயத்தின்முறையை ஜனகனுக்குச் சொல்லியது ... . 1141 - 1142
318 யாஜ்ஞவல்க்யர் அத்யாத்மமுதலியவற்றையும் முக்குணங்களையும் ஜனகனுக்குச் சொல்லியது ... 1143 - 1144
319 யாஜ்ஞவல்க்யர் குணங்களுக்கும் வினைகளுக்கும் உரியகதிகளை ஜனகனுக்குச் சொல்லியது ... 1145 - 1146
320 யாஜ்ஞவல்க்யர் ஸாங்க்யமதத்தை ஜனகனுக்குச் சொல்லியது ... ... 1146 - 1148
321 யாஜ்ஞவல்க்யர் யோகத்தை ஜனகனுக்குச் சொல்லியது... ... ... 1148 - 1150
322 யாஜ்ஞவல்க்யர் ஜீவன் வெளிப்படும் உறுப்புக்களால்வரும் பயனையும் மரணக்குறிகளையும் ஜனகனுக்குச் சொல்லியது ... ... 1150 - 1152
323 யாஜ்ஞவல்க்யர் விஸ்வாவஸுவின கேனவிகளுக்குத் தாம்விடையளித்ததை ஜனகனுக்குச் சொல்லியது ... ... 1154 - 1160
324 பஞ்சசிகா மூப்பு இறப்புகளைத்தாண்டும் வகையை ஜனகனுகுச சொல்லியது ... 1162 - 1165
325 ஜனகனுக்கும் ஸுலபைக்கும் முக்தலக்ஷணமுதலியவற்றைப்பற்றி நடந்த ஸம்வாதம் .. 1165 - 1179
326 ஆஸுரி அவ்யக்தமுதலியவற்றைச் சொல்லும்படி கபிலரைக்கேட்டது 1180
327 கபிலர் அவ்யக்தமுதலியவற்றை ஆஸுரிக்குச் சொலலியது ... ... 1180 - 1183
328 கபிலர் தத்வங்கள்முதலியவற்றை ஆஸுரிக்குச் சொல்லியது ... ... 1183 - 1184
329 வ்யாஸர் உலகம் அநித்தியமென்பதையும் ப்ரம்மஜ்ஞானத்தினால் மோக்ஷம்பெறுவது அவசியமென்பதையும் சுகருக்குச் சொல்லியது ... 1184 - 1192
330 வேத, செய்தவனையே சென்றடையுமென்பது முதலியன ... ... 1192 - 1194
331 வ்யாஸர் புத்ரனுக்காகத் தவஞ்செய்ததும் சங்கரர் வரம் அளித்ததும் ... ... 1195 - 1196

அத்தியாயம்.		பக்கம்.
332	சுகருடைய பிறப்பும் உபயனமுதலியவையும் ..	1196 - 1198
333	வ்யாஸர் சுகரை ஜனகனிடப் செல்லச்சொல்லியது	1199
	சுகர் ஜனகனிடம் சென்றது	1199 - 1201
334	ஜனகன் சுகரைப் பூஜித்தது	1202
	சுகர் ஜனகனிடம் மோக்ஷதர்மங்களைச்சொல்லும் படி கேட்டது	1203
	ஜனகன் சுகருக்கு ப்ரம்மஜ்ஞானத்தை உபதேசித்தது	1203 - 1206
335	ஸுப்ரம்மண்யர் உலகை அவமதித்துக் கூறியது	1207
	விஷ்ணு, சக்தியை அசைத்தது	1207
	ஸுமந்துமுதலியோர் வ்யாஸரிடம் வேதமோதியதும் வ்யாஸர் அவர்களுக்கு வரமளித்ததும் ...	1208 - 1210
336	ஸுமந்துமுதலியோர் வ்யாஸரிடம் விடைபெற்றுச் சென்றது	1210 - 1211
	நாரதர் எதுஎதற்கு எதுஎது தோஷமென்பதையும் பிசாசின்கதையையும் சொல்லி வ்யாஸரை வேதமோதச்சொல்லியது	1212 - 1214
	வ்யாஸர் பெருங்காற்றடிக்கையில் வேதமோதக் கூடாதகாரணத்தைச் சுகருக்குச் சொல்லியது	1214 - 1216
	ஏழுவாயுக்களின் வரலாறு	1214 - 1216
337 - 339	நாரதர் சுகருக்கு உலகஇயல்புகளைச்சொல்லி மோக்ஷோபாயத்தை உபதேசித்தது	1217 - 1227
	சுகர் வைராகயம்அடைந்து கைலைசென்றது ...	1227 - 1229
340	சுகர் யோகஞ்செய்துஸ்வர்க்கத்தைக்குப்புறப்பட்டது	1229 - 1230
	சுகர் தம்பிதாஅழைத்தால் மறுமொழிசொல்லும் படி தேவர்களுக்குச் சொல்லியது ...	1231
341	வ்யாஸர் சுகரைத்தேடி வருந்தியது ...	1233
	சங்கர் வ்யாஸருக்கு வரமளித்தது ...	1234
342	நாராயணர் தவஞ்செய்தது	1235
	நாரதர் பதரிகாஸ்ரமம்அடைந்தது	1236
	நாராயணரிஷி தாம்பூஜிப்பவரை நாரதருக்குச் சொல்லியது	1237 - 1238
343	நாரதர் ஸ்வேதத்வீபஞ்சென்றது	1239
	பாஞ்சராத்ரசாஸ்திரத்தின் வரலாறு ...	1240 - 1243
344	உபரிசரவஸு யாகஞ்செய்தது	1243 - 1244
	ப்ருஹஸ்பதி ஹரியின்மேல் கோபித்தது ...	1244 - 1245
	நாரதர் நாராயணருடைய மஹிமையை ப்ருஹஸ்பதிக்குச் சொல்லியது	1245 - 1248

அத்யாயம். பக்கம்.

345 இந்திரன் யாகஞ்செய்ததும் ப்ருஹஸ்பதிக்கும் தேவர்களுக்கும் யாகபசுவைப்பற்றியவிவாதமும் 1249
உபரிசரவஸு பொய்சொன்னதும் ரிஷிகள் அவனைச் சபித்ததும் 1250
தேவர்கள் உபரிசரவஸுவுக்குவரமளித்துச்சென்றது 1251
உபரிசரவஸு ஹரியைப் பூஜித்துச் சாபத்தினின்று விடுபட்டது ... ... 1251 - 1252
346 நாரதர் நாராயணரைத் துதித்தது ... 1253 - 1260
347 நாராயணர் நாரதருக்குக காட்சியளித்தது ... 1260
நாராயணர் தாம் செய்தஸ்ருஷ்டிமுதலியவற்றை நாரதருக்குச் சொல்லியது .. ... 1262 - 1266
348 நாராயணர் தம் அவதாரங்களை நாரதருக்குச் சொல்லியது ... ... 1266 - 1271
பாஞ்சராத்ர வாலாற்றைப் படித்தல் கேட்டல்முதலியவற்றின் பயன் .. ... 1272 - 1273
349 ப்ரம்மாமுதலியோர் தவம்புரிந்ததும் நாராயணர் வரமளித்ததும் ... ... 1277 - 1281
350 வாஸுதேவர் தமதுமகிமையையும் தமது நாமங்களின் அர்த்தவிசேஷத்தையும் அர்ஜுனனுக்குச சொல்லியது ... . 1284 - 1288
351 வாஸுதேவர் உலகத்தின் படைப்புமுறையையும் ப்ரம்மணர் மஹிமையையும் அர்ஜுனனுக்குச் சொல்லியது ... ... 1288 - 1299
352 வாஸுதேவர் தம நாமங்களின அர்த்தவிசேஷங்களையும் ருத்ரருக்கும் நாராயணருக்கும் போர் நடந்ததையும் அர்ஜுனனுக்குச சொலலியது... 1299 - 1306
353 நாரதர் ஸ்வேதத்வீபத்திலிருந்து திரும்பப் பதரிகாஸ்ரமம்வந்ததும் அங்கு நரநாராயணருடன் ஸம்பாஷித்ததும் ... ... 1309 - 1312
354 நரநாராயணர் பகவானுடைய மஹிமையைச் சொல்லியதும் நாரதர் தவஞ்செய்ததும் ... 1312 - 1314
355 நரநாராயணர் பிதிருகார்யம் மிக சிறந்ததென்று நாரதருகுச் சொல்லியது ... ... 1315 - 1316
பிண்டங்களின் வரலாறு . .. 1315 - 1316
356 நாரதர் தம்ஆஸ்ரமம்சென்றது 1317
நாராயணரின் மஹிமை ... ... 1317 - 1319
357 நாராயணர் ப்ரமாணவைப்படைத்ததும் மநுமைடபர் வேதத்தைக் கவர்ந்ததும் 1321

அத்யாயம். பக்கம்.

பிரம்மதேவர் வேதத்துக்காகவருந்தி ஹரியைத் துதித்தது ... ... 1321 - 1323

நாராயணர் மதுகைடபரைக்கொன்று வேதத்தை மீட்டு பிரம்மாவுக்குக் கொடுத்தது ... 1324

358 ஏகாந்திதர்மத்தின்வரலாறு ... ... 1327 - 1334

359 வ்யாஸர் விஷ்ணுவுக்குப்புத்ராான வரலாறு ... 1335 - 1339

60-361 பரமாத்மாவின்மஹிமையைப்பற்றி பிரம்மாவுக்கும் சுக்ராருக்குங்கடந்த ஸம்பாஷணை ... 1341 - 1344

362 நாரதர் இந்திரனிடம்வந்ததும் அவன் அவரைக் கதைசொல்லச்சொல்லியதும் 1345

363 ஒருபிராம்மணர்வீட்டுக்கு ஓர்அதிதி வந்ததும் அவர் அவரை உபசரித்ததும் ... ... 1345 - 1346

364 பிராம்மணர் மோக்ஷோபாயத்தைக்கேட்க, அதிதி தமக்கும் அது ஸந்தேகமாயிருக்கிறதாகச் சொல லியது ... ... 1346 - 1348

365 அதிதி, ப்ராம்மணரைப் பத்மனிடம் போகச்சொல் லியது ... . 1348 - 1349

366 அதிதி விடைபெற்றுச் சென்றதும் ப்ராம்மணர் நாகனிடம் சென்றதும் ... ... 1349 - 1350

367 பிராம்மணர் நாகனுக்குத தம்வரவைத தெரிவிக்கும் படிசொலலி மலலதிட்டில வவிழ்த்தது ... 1351

368 நாகனேச்சேர்ந்தவாகள் போஜனம்செயயும்படி ப்ரா ம்மணருககுச சொலலியதும் அவர் மறுத்ததும் 1352 - 1353

369 நாகன்வருதும் அவன்மனைவி அவனை ப்ராம்மண ரிடம் போகச்சொன்னதும் ... ... 1353 - 1354

370 நாகன் கோபித்ததும் அவன்மனைவி அவனை ஸமா தானம்செய்து ப்ராம்மணரிடம் போகசசொல் லியதும் ... . 1354 - 1355

371 நாகன் பிராம்மணரைக்கண்டு பேசியது ... 1356 - 1357

372 நாகன் ஸூர்யனிடத்துள்ள அதிசயங்களை ப்ராம மணருகுச் சொலலியது ... ... 1358 - 1359

373 ஸூர்யன் தன்னிடம்ப்ரவேசித்த தேஜஸின்வர லாற்றைச் சொல்லியது 1359

374 ப்ராமமணர் நாகனிடம்விடைபெறறுச சென்றது 1360

375 ப்ராம்மணருக்கும் நாகலுக்கும்கடநதஸம்வாத உ லகில்வநதமுறை 1361

சாந்திபர்வம் விஷயஸூசிகை முற்றும்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

சாந்தி பர்வம்.

விஷயஸூசிகை.

மோக்ஷதர்மம்.

அத்யாயம்.		பக்கம்.
173	ஒரு பிராம்மணருக்கும் ஸேனஜித்துக்கும் நடந்த ஸம்பாஷணையும் பிங்களோபாக்யானமும் ...	590 - 595
174	காலம் விரைந்து செலவுதலால் நன்மைக்குக்காரண மானதை விரைவில் செய்யவேண்டுமென்பதைப் பற்றி ஒருபிதாவுக்கும் புதல்வனுக்கும்நடந்த ஸம்பா ஷணை	595 - 599
175	சம்யாகர், வறுமை மேன்மைக்கும் பொருள் துன் பத்துக்கும் காரணமென்பதைப்பற்றிப விஷம ருக்குச சொலலியது	600 - 601
176	மோக்ஷத்துக்காக அடையத்தக்க ஐந்துகுணங்களும் மங்கியென்பவரின் வரலாறும்	602
	மங்கியானவர் விரகதியே ஸுககாரணமென்றும் ஆசையைவெறுத்தலும் தெய்வமே பெரிதென்றும் கூறியது	602 - 606
	மோக்ஷர் ஆசையைபிரிவதே ஸுகமென்று கூறியது	607 - 608
177	விரக்தியே ஸுகத்திற்குக் காரணமென்றும் விஷ யத்தில் ப்ரவ்ருத்தராதருக்கும் அகரப்ரகாஸ முள்ள முனிவருக்கும்நடந்த ஸம்பாஷணை ...	608 - 612
178	அதிலேயே ஸுகத்திற்குகாரணமென்றும் விஷயத்தில் இருதிராதுக்கும் காஸ்யபருக்கும்நடந்தஸம்பாஷணை	612 - 616
179	மூன்றுவர்ணத்தில் செய்யும் கல்வினை ஜீவிஸைகள் பின்றுவர்ணத்தில பயனைத்தருதலால் தர்மமே செய்யவேண்டுமென்பது	617 - 619
	செய்வினை செய்தவர்களே அடையுமென்பது ...	618
180-190	ப்ருகுவுக்கும் பரத்வாஜருக்கும் நடந்த ஸம்பாஷணை	619 - 649
	உலகஉற்பத்திமுதலியவை	619 - 622
	பூமிமுதலியவற்றின் உற்பத்திமுதலியவை ...	623 - 624

அத்யாயம்.		பக்கம்.
	ஸ்தாவராங்களும் ஐந்துபூதங்களாலானவையென்பதும், அவற்றிற்கும உயிர்முதலியன உண்டென்பதும்...	624 - 628
	சரீரத்திலுள்ள பிராணன்முதலியவற்றின் காரியங்கள்	628 - 630
	சரீரத்தைக்காட்டிலும் வேறுக ஜீவன் ஏதென்று பரத்வாஜர் ஆக்ஷேபித்தது	630 - 631
	சரீரத்தைக்காட்டிலும் ஜீவன் வேறென்பது ...	632 - 635
	பிராம்மணர்கள் தம்தம் இஷ்டப்படியான நடக்கைகளால் குணவேறுபாடடைந்தது... ...	635 - 637
	ப்ராம்மணர்முதலியவர்களின் லக்ஷணமும் வைராக்யமே மோக்ஷத்திற்குக்காரணமென்பதும் ...	638 - 639
	உண்மையின் சிறப்பு...	640
	மெய் ஸ்வர்க்கத்திற்கும் பொய் நரகத்திற்கும் பரம்பரைக்காரணமென்பது	640 - 641
	இவ்வுலகத்துக்கும் ஸ்வர்க்கத்துக்குமுள்ளவேற்றுமை	642
	ஹோமம் அத்யயனம் தானம் தவம் இவற்றின்பயன்	642 - 643
	நான்கு ஆச்ரமதர்மங்கள்	643 - 647
	ஹிமாசலத்துக்கு வடக்கிலுள்ள உலகம் ஸ்வர்க்கம் போன்றதென்பதும், அது புண்யசாலிகளால் அடையத்தக்கதென்பதும்	648 - 649
191	கல்ல ஆசாரங்கள்	650 - 653
192	ஆத்மதத்வம் பூதங்களின் கார்யங்கள் முக்குணமுதலியவற்றின் செயல்கள்முதலியன ...	653 - 661
193	த்யானயோகம்	661 - 663
194	ஜபத்தின் பயன்	665
	ஜபிக்குமுறை	665 - 667
195	ஜபத்தை முறைப்படி செய்யாதவனுக்குள்ள தாழ்கதிமுதலியன	667 - 668
196	எல்லாத்தேவர்களின் ஸ்தானங்களும் பரமாத்மாவின் ஸ்தானத்தினும் இழிந்தவையென்பதும் பரமாத்மஸ்தானத்தின் சிறப்பும் ...	669 - 670
197	ஒரு ஜபப்ராம்மணருக்குக் காயத்ரி தர்மம் முதலியவர்களுடன்நடந்த ஸம்வாதம்	671 - 682
	பொய்யின் இழிவும் ஸத்யத்தின் சிறப்பும் ...	676 - 677
198	ஜபப்ராம்மணனும் இக்ஷ்வாகுவும் மோக்ஷமடைந்ததும், ஜபத்தின் பயனும்	683 - 686
199-204	ப்ருஹஸ்பதிக்கும் மனுவுக்கும் ஞானமுதலியவற்றைப்பற்றிநடந்த ஸம்பாஷணை ...	686 - 706

அத்யாயம்		பக்கம்.
	கர்மஜ்ஞானமார்க்கங்களின் விவரணம் ...	687 - 690
	ஜீவாத்மா பரமாத்மாக்களின் லக்ஷணஸ்தலியன...	690 - 696
	பரமாத்மாவை அறியும்வகையும் அதனிடமிருந்தே எல்லாம் உண்டாகி அதனிடமே ஒடுங்குகின்றன வென்பதும்	696 - 706
205	நிபந்தனர் தம்தாய்க்கு ஸம்ஸாரத்தை அரண்யமாகச் சொல்லியது	707 - 708
	ஸம்ஸார சக்ரலக்ஷணம்	709
	நாரதருக்கும் ஸாவித்ரிக்கும் நடந்த ஸம்வாதம் ...	710 - 711
	நாரதர் தவஞ்செய்து விஷ்ணுவைத் தர்சித்தது ...	711 - 712
206	விஷ்ணு உலகங்களைப்படைத்தமுறையும் அவருடைய அவதாரமுதலியவையும் ...	714 - 718
207	ஸ்ரீமுதலான ஸப்தஷடிகர்ணதர்களும் ஒவ்வொரு திக்கிலுமுள்ள ரிஷிகளும்	719 - 721
208	விஷ்ணுவின் வராகாவதாரகதை	722 - 726
209	நாரதர் வாஸுதேவரின் பெருமையை அறிந்தது ...	726 - 732
210	விஷ்ணுவானவர் மனிதன் மரணகாலத்தில் ஜபிக்கத் தக்க மந்திரத்தை நாரதருக்கு உபதேசித்தது ...	734 - 740
	நாரதர் விஷ்ணுவைத் துதித்தது	739 - 739
211	கருடன் விஷ்ணுவின் மாகாத்மியதத்தைப் பீஷ்மருக்குச சொல்லியது	742 - 747
212-214	ஒரு குருவானவர் தம்சிஷ்யனுக்கு ஆத்மதத்வத்தை உபதேசித்தது.	748 - 760
215	பரமாத்மஜ்ஞானமில்லாதவர்கள் படும்துன்பமும் அத்துன்பம் நிலைத்தக்க உபாயமும் ...	760 - 763
216	ப்ரம்மசர்யமுதலியவத்தின் சிறப்பு ...	763 - 767
217	வைராக்கியமுதலிய மோக்ஷகாரணங்கள் ...	767 - 770
218-219	பரமாத்மாவை அறியும்வகை	770 - 777
220	பஞ்சசிகர் ஜனகருக்கு காஸ்திகமதமுதலியவற்றைக் கண்டித்துச்சொல்லியது	779 - 782
222	பஞ்சசிகர் கர்மபலன்களே ஜனகருக்குச சொல்லியது	783 - 789
223	மிதிலைபெரிந்ததும் ஜனகர் சபையிற்சேர்ந்ததும் ...	789 - 791
224	இல்லறத்திலிருந்தே முக்திபெறுவதற்கு உதாரணமான ஸுவர்ச்சலையின் கதை	791 - 800
225	அடக்கமுள்ளவனுடைய லக்ஷணமும் அடக்கமின்மையின் தீமையும்	801 - 802

விஷயஸூசிகை.

அத்யாயம்.		பக்கம்.
226	தவம் உபவாஸமுதலியவற்றின் முறைபும் பயனும்	803 - 804
227	ஸநத்குமாரர் முனிவர்களுக்குப் பகவத்ஸ்வரூபத்தை உபதேசித்தது	807 - 809
229	ஞானம் மோக்ஷஸாதனமென்பதையும் அதை அடையும்வகையையும்பற்றி இந்திரனுக்கும் ப்ரஹ்லாதனுக்கும் நடந்த ஸம்பாஷணை	810 - 815
230-232	இந்திரன் பலியை இகழ்ந்ததும் காலதத்வன்மையைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் நடந்த ஸம்பாஷணையும்	817 - 828
	இந்திரனுக்கும் லக்ஷ்மிக்கும்நடந்த ஸம்பாஷணையும் லக்ஷ்மிவஸித்தற்கும் விலகுதற்கும் காரணங்களும்...	824 - 827
233	மோக்ஷஸாதனத்தைப்பற்றி இந்திரனுகும் கருஷிக்கும் நடந்த ஸம்பாஷணை	828 - 831
234	ஆபத்தில தைர்யமே ஸுகத்துக்குக் காரணமென்பதைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் நடந்த ஸம்பாஷணை	832 - 840
235	லக்ஷ்மி தான் அஸுரரைவிட்டுவிலகியகாரணத்தை இந்திரனுக்குச்சொல்லியது	843 - 848
236	ப்ரம்மஜ்ஞானிகளிலக்ஷணத்தைப்பற்றித் தேவலருக்கும் ஜைகீஷவ்யருக்கும்நடந்த ஸம்பாஷணை	850 - 852
	பார்வதீபரமேச்வரர் ஜைகீஷவ்யரைப் பரீக்ஷித்தது.	852 - 855
237	கர்மங்கள் உலகைவசப்படுத்துமென்னும் விஷயத்தில் நாரதரின் பெருமையைப்பற்றி உக்ரஸேனனுக்கும் வாஸுதேவருக்கும் நடந்த ஸம்பாஷணை.	855 - 857
	நாரதர் வாஸுதேவருக்கு உபாயங்கூறியது ...	858
238-260	வ்யாஸர் சுகருக்குப் பலவிஷயங்களை உபதேசித்தது	860 - 923
	உலகஉத்பத்திமுதலியன	860 - 867
	ப்ரளயமுதலியன	868 - 869
	ப்ராம்மணதர்மமுதலியன	869 - 871
	ப்ராம்மணரைப்பூஜித்து மேன்மைபெற்றவர்கள்	871 - 872
	ப்ராம்மணதர்மமும் ஞானத்தின்சிறப்பும் ...	872 - 875
	ஞானமே மோக்ஷஸாதனமென்பது முதலியன ...	875 - 879
	ப்ராணிகளின் உயர்வுதாழ்வும் ஞானத்தின் சிறப்பும்	880 - 882
	மத்ஸ்யகூர்மமுதலியவற்றின் வேற்றுமைமுதலியன ...	882 - 884
	ப்ரம்மஜ்ஞானத்தை அடையும்வழி முதலியன ...	885 - 888

435

அத்யாயம்.		பக்கம்.
	யோகத்தின்முறை	888 - 891
	கர்மஞானங்களின் வேற்றுமைமுதலியன ...	891 - 893
	ப்ரம்மசர்யத்தின் முறையும் பெருமையும் ...	894 - 896
	க்ருஹஸ்ததர்மம்	896 - 899
	வானப்ரஸ்ததர்மம்	899 - 902
	ஸந்யாஸதர்மம்	902 - 906
	ஆத்மாவை அறியும் வகைமுதலியன ...	906 - 908
	பஞ்சபூதமுதலியவற்றின் குணங்கள் ...	908 - 910
	ஆத்மாவே எலலாமாய் எல்லாவற்றையும்செய்கிற தென்பது	910 - 912
	ஞானிகளின் பெருமை	913 - 914
	ஆத்மஜ்ஞானம்	914 - 916
	வைராக்கியமே மோக்ஷஸாதனமென்பது ...	917 - 918
	பஞ்சபூதமுதலியவற்றின் குணங்கள் ...	919 - 920
	யோகதர்மம்	920 - 921
	காமமுதலியவத்தை வெல்வது அவசியமென்பது	921 - 923
261	பஞ்சபூதங்கள் மனம் புத்தி இவற்றின் குணங்கள்	923 - 924
262-264	நாரதர் ம்ருத்யுவின் வரலாற்றை அகம்பனனுக்குச் சொலலியது	925 - 932
	ப்ரம்மதேவர் கோபத்தீயால் ப்ரஜைகளை எரித்தும் அதனைத்தணிப்பதற்காக ருத்ரர் அவரிடம் சென்றதும்	925 - 926
	ருத்ரர் ப்ரம்மதேவரைக் கோபத்தையடக்கவேண்டியதும் அவர் அடக்கியதும்	926 - 927
	ம்ருத்யுவின்பிறப்பு	927
	ப்ராணிகளைக்கொலலும் விஷயத்தில் ப்ரம்மதேவருக்கும் ம்ருத்யுவுக்கும் நடந்த ஸம்வாதம் ...	928 - 931
	நோய்களில் உற்பத்தியும் அவை ம்ருத்யுவுக்குத் தூணையானதும்	931
265	தர்மத்தின் லக்ஷணம்..	932 - 934
266	தர்மபுத்ரர் தர்மத்தின் பிரமாணத்தைப்பற்றி ஆக்ஷேபித்தது	934 - 935
267-270	ஜாஜலி தர்மநிமித்தமாகக கர்வமடைந்து துலாதாரனிடம் சென்றது...	936 - 937
	ஜாஜலிக்கும் துலாதாரனுக்கும் தர்மநிமித்தமாக நடந்த ஸம்பாஷணை	940 - 951

அத்யாயம்.		பக்கம்.
271	கொலையையும் சரீரத்துக்குவாட்டத்தையும் செய்யாமல் தர்மத்தைச் செய்ய்வேண்டுமென்பது ...	952 - 953
272	காரியத்தை ஆராய்ந்து செய்யவேணடுமென்பதும் சிரகாரியின் கதையும்	953 - 959
	பிதாவின் சிறப்பு	954 - 955
	மாதாவின் சிறப்பு	955 - 957
	ஆசீர்வந்து செய்வதன் சிறப்பு	959
273	பிராணிகளைத் துன்பப்படுத்தாமல் காக்கும் விவசாயத்தில் ஸத்யவானுக்கும் துஷ்டஸேனனுக்கும் நடந்த ஸம்பாஷணை	960 - 963
274-276	பசுவைக்கொல்லாமல் யாகஞ் செய்யவேண்டுமென்பதும் கபிலருக்கும் ஸுமரஸ்மிக்கும் நடந்த ஸம்பாஷணையும்	964 - 978
277	அதம்பொருளின்பங்களுள் அதமே சிதந்ததென்பதைப்பற்றிய குண்டதாரன்கதை ...	979 - 983
278	கொலைக்குக் காரணமாதலால் யாகம் இழிந்ததென்பதைப்பற்றி நாரதர்சொலலிய உஞ்சவருத்தி ப்ராம்மணர்கதை	983 - 985
279	பாவம் தர்மம் வைராக்யம் மோக்ஷமுதலியன ...	985 - 987
280	மோக்ஷத்திற்குரிய உபாயங்கள்	988 - 989
281	பிராணிகளின் பிரதப்பிரதப்புக்களைப்பற்றி நாரதருக்கும் தேவருக்கும் நடந்த ஸம்பாஷணை ...	989 - 992
282	ஜனகர் ஆசையை விடுவதே ஸுககாரணமென்பதை மாண்டவ்யருக்குச் சொல்லியது ...	993 - 994
283	உதகதிக்குரியதை உடனே செய்யவேணடுமென்பதைப் பற்றி ஒருதாதைக்கும் தனயருக்கும் நடந்த ஸம்பாஷணை	994 - 997
284	ப்ரம்மத்தை அடைவதற்குரிய ஆசாரமுதலியன	... 998 - 1000
285	ஆதிவேலோகத்துக்குக் காரணமென்பதைப்பற்றிச் சக்ரருக்கும் வருத்ரருக்கும் நடந்த ஸம்பாஷணை	...1001 - 1003
286	ஸநத்குமாரர் விஷ்ணுவின மகிமையையும் பிரபஞ்சத்தின் கணக்கையும் ஜீவர்களின் வர்ணம் கதி முதலியவற்றையும் சக்ரருக்கும் வருத்ரருக்கும் சொலலியது	...1003 - 1009
287-288	இந்திரனுக்கும் வருத்திரனுக்கும் யுத்தம்	...1012 - 1015

அத்யாயம். பக்கம்.

வ்ருத்திரனுக்கு ஜ்வரம் வந்ததும் இந்திரன் விருத்திரனைக்கொன்றதும் ... ... 1013 - 1015
இந்திரனை ப்ரம்மஹத்தி அடைந்தது ... 1016
ப்ரம்மதேவர் ப்ரம்மஹத்தியை அக்னிமுதலிய தேவருக்குப் பங்கிட்டது ... ... 1016 - 1018
நீர்க்குமிழிகள் பருகத்தகாவென்பது ... 1019
289 சங்கரர் தக்ஷயாகத்தை அழித்தது ... 1022
சங்கரர்வேர்வையிலுண்டான நீ யாகத்தையெரித்ததும் ப்ரம்மதேவர் கோபத்தையை அடக்கும்படி அவரை வேண்டியதும் ... ... 1022 - 1023
ஜ்வரமானது எதுஎதனிடத்தில் எப்படிஎப்படி அமைந்ததென்பது 1023
290 தக்ஷயாகத்தில் சங்கரரை அழையாமைக்காகத் தக்ஷரி கோபித்தது ... ... 1025 - 1026
தக்ஷன் சங்கரரை அலக்ஷ்யமாகச் சொலலியதும் உமையும் சங்கரரும் பேசிக்கொண்டதும் ... 1026 - 1027
வீரபத்திரர் உண்டாகித் தக்ஷயாகத்தை அழித்தது 1027 - 1028
வீரபத்திரர் தம்மை இன்னுரென்று தக்ஷனுக்குத் தெரிவித்துச் சங்கரரை வணங்கச் சொல்லியது 1028 - 1029
தக்ஷன் சங்கரரை ஸஹஸ்ரநாமத்தால் துதித்தது 1030 - 1042
சங்கரர் தக்ஷனுக்கு வரமளித்தது ... ... 1042 - 1043
சிவஸஹஸ்ரநாமத்தைப் படித்தல் கேட்டலகளின் பயன் ... ... 1043 - 1044
291 ஆத்மா, புத்தி, பூதங்கள், இந்திரியங்கள், குணங்களுற்பதலியவற்றின் விவரணம் ... ... 1045 - 1048
292 ஸமங்கர் துக்கமுதலியன தொடராமலிருத்தற்குரிய காரணத்தை நாரதருக்குச் சொல்லியது... 1049 - 1050
293 நாரதர் மேன்மையடைதற்குரிய காரணத்தைக் காலவருக்குச் சொலலியது ... ... 1051 - 1055
294 கருடன் ஸகரருக்கு வைராக்யமுதலிய மோக்ஷோபாயங்களை உபதேசித்தது ... ... 1056 - 1059
295 உசதஸ் சக்ரரென்னும் பெயரை அடைந்ததை ... 1060 - 1063
சூலம் நிஷ்பலமானது 1061
296-304 பராசரனுதை ... ... 1063 - 1081
ஸ்ரேயஸுக்குரிய காரணங்கள் ... ... 1068 - 1067
யார் யார் துக்கிக்கப்படத்தக்க நிலைமையை அடைவர் சென்பது 1065

அத்யாயம். பக்கம்.

இயன்றவரை தர்மஞ் செய்வதே மேன்மைக்குய் காரணமென்னும் விஷயத்தில் சிலரை உதாகரித்தது ... ... 1068 , 1069
வர்ணதர்மங்கள் ... ... 1070 - 1072
யார் யார் எந்த எந்த வகையில் ஈட்டிய பொருள் சிறந்ததென்பது ... ... 1071 - 1072
திரிபுரவதம் 1073
தவத்தின் பெருமை... ... ... 1074 - 1077
வர்ணங்களின் பிரிவுகள் 1078
கோத்ரங்களின் வரலாறு ... ... 1078 - 1079
வர்ணங்களின் தனித்தனிதர்மங்களும் பொதுவான தர்மங்களும் ... ... 1079 - 1080
விஜயே தோஷத்துக்குக் காரணமென்பது ... 1080
தற்கொலையால் வரும் தீங்குகள் 1082
யார் யார் எது எதனினும் மேலானவரென்பது ... 1083
எது எதனால்வரும் மரணம் இழிவானதென்பது... 1083
மனிதனுக்கு அஜ்ஞானமே பகையென்பது ... 1083
மனிதப்பிறப்பின் உயர்வு 1084
பலவித மோக்ஷோபாயங்கள் ... ... 1085 - 1089
305 உண்மை அடக்கமுதலியவற்றைப்பற்றி ஸாத்யர்களுக்கும் ஸம்ஸத்திற்கும்கூடத்த ஸம்பாஷணை
306 யோகமுறையும் யோகிகளின் சிறப்பும் ... 1094 - 1099
307 ஸாங்கியத்தின் முறையும் சிறப்பும் ... 1100 - 1109
308 வஸிஷ்டர் ஸுதாஸுரங்களின் லக்ஷணத்தை ஜனகருக்குச் சொல்லியது ... ... 1110 - 1113
309 வஸிஷ்டர் ஜீவர்கள் அஜ்ஞானத்திலிருந்து படும்துன்பங்களை ஜனகருக்குச் சொல்லியது ... 1113 - 1117
310 வஸிஷ்டர் பிராணிகளுக்குச் சரீரமும் உருவமுதலியவையும் உண்டாகும்வகையை ஜனகருக்குச் சொல்லியது ... ... 1117 - 1121
311 வஸிஷ்டர் யோகமுறை ஸாங்க்யமுறைதலியவற்றை ஜனகருக்குச் சொல்லியது ... 1122 - 1126
312 வஸிஷ்டர் வித்தை அவித்தைகளைப்பற்றி ஜனகருக்குச சொல்லியது ... ... 1126 - 1130
313 வஸிஷ்டர் ஞானத்தாலன்றியும் உபதேசம்பெறத்தக்கவர் தகாதவரையும் ஜனகருக்குச் சொல்லியது ... ... 1130 - 1134
314 ஒருமுனிவர் நல்லமைக்குரியவற்றை வஸுமாலுக்குச் சொல்லியது... ... ... 1135 - 1137

அத்யாயம். பக்கம்.

315 யாஜ்ஞவல்க்யர் பிரகிருதி விகிருதிகளையும் படைப்புமுறையையும் ஜனகருக்குச் சொல்லியது ... 1138 - 1139
316 யாஜ்ஞவல்க்யர் அவ்யக்தமுதலியவற்றின் காலக் கணக்கையும் ஸ்ருஷ்டி முறையையும் ஜனகருக்குச் சொல்லியது ... ... 1139 - 1141
317 யாஜ்ஞவல்க்யர் பிரளயத்தின் முறையை ஜனகருக்குச் சொல்லியது... ... ... 1141 - 1142
318 யாஜ்ஞவல்க்யர் அதயாத்மமுதலியவற்றையும் முக்குணங்களையும் ஜனகருக்குச் சொல்லியது ... 1143 - 1144
319 யாஜ்ஞவல்க்யர் குணங்களுக்கும் வினைகளுக்கும் உரியகதிகளை ஜனகருக்குச் சொல்லியது ... 1145 - 1146
320 யாஜ்ஞவல்க்யர் ஸாங்கயமதத்தை ஜனகருக்குச் சொல்லியது ... ... 1146 - 1148
321 யாஜ்ஞவல்க்யர் யோகதத்தை ஜனகருக்குச் சொல்லியது ... ... 1148 - 1150
322 யாஜ்ஞவல்க்யர் ஜீவன் வெளிப்படும் உறுப்புக்களாவரும் பயனையும் மரணக்குறிகளையும் ஜனகருக்குச் சொல்லியது ... .. 1150 - 1152
323 யாஜ்ஞவல்க்யர் ஸ்ரீவாஜஸனேயின் கேவலாத்வைதத் தாம்பிடையாயிரதத்தை ஜனகருக்குச் சொல்லியது 1154 - 1160
324 பரமேச்வர் ரூபம் இரப்புகளுக்குத்தாணமிடும் வகையை ஜனகருக்குச் சொல்லியது ... ... 1162 - 1163
325 ஜனகரும் ஸ்ரமணரும் முகதலஸ்ரமணமுதலியவற்றைப்பற்றி ஆராய்ந்த விவாதம் ... 1165 - 1179
326 ஆஸுரி அவ்யக்தமுதலியவற்றைச் சொல்லும்படி கபிலரைக்கேட்டது 1180
327 கபிலர் அவ்யக்தமுதலியதத்தை ஆஸுரிக்குச் சொல்லியது ... ... 1180 - 1183
328 கபிலர் தத்வங்களுமுதலியவற்றை ஆஸுரிக்குச் சொல்லியது ... ... 1183 - 1184
329 வ்யாஸர் உலகம் ஆதித்யமென்பவை யும் பரம்ம ஜ்ஞானத்திற்கு மோக்ஷமென்பதும் அவிய மென்பதையும் ஸநகருக்குச் சொல்லியது .. 1184 - 1192
330 ஸ்ரீனை, செய்தவினையே செய்து அடைமை முதலியன ... . 1192 - 1194
331 வ்யாஸர் புத்ரஜீவிகாகத்தை ஸ்துதிசெய்ததும் அவர வரம் அளித்ததும் ... ... 1195 - 1196

அத்யாயம்.		பக்கம்.
332	சுகருடைய பிதப்பும் உபயனமுதலியவையும் ...	1196 - 1198
333	வ்யாஸர் சுகரை ஜனகரிடம் செலஸ்சொல்லியது	1199
	சுகர் ஜனகரிடம் சென்றது	1199 - 1201
334	ஜனகர் சுகரைப் பூஜித்தது	1202
	சுகர் ஜனகரிடம் மோக்ஷதர்மங்களைசொல்லும் படி கேட்டது	1203
	ஜனகர் சுகருக்கு ப்ரம்மஜ்ஞானத்தை உபதேஸித்தது	1203 - 1206
335	ஸநத்குமாரர் உலகை அவமதித்ததுக்கு கூறியது	1207
	விஷ்ணு, சதக்ரதுவை அனைத்தது	1207
	ஸமாதியுற்றவர்கள் வ்யாஸரிடம் வேதமோதிய தும் வ்யாஸர் அவர்களுக்கு வரமளித்ததும் ...	1208 - 1210
336	ஸமாதியுற்றவர்கள் வ்யாஸரிடம் விடைபெற்றுச் சென்றது	1210 - 1211
	நாரதர் எனதுதகுதியையும் தோஷமென்பதையும் பிசகின்மையையும் சொல்லி வ்யாஸரை வேத மோதச் சொல்லியது	1212 - 1214
	வ்யாஸர் பெருங்கர்த்தடிகையில் வேதமோதக் கூடாதகாரணத்தைச் சுகருக்குச் சொல்லியது	1214 - 1216
	ஏழுவாயுக்களின் வரலாறு	1214 - 1216
337-339	நாரதர் சுகருக்கு உலக இயல்புகளைச்சொல்லி மோ க்ஷோபாயத்தை உபதேஸித்தது... ...	1217 - 1227
	சுகர் வைராக்யம்அடைந்து கைலாஸம் சென்றது	1227 - 1229
340	சுகர்யோகஸ்திதியை வைகுண்டத்துக்குப் புறப்பட்டது	1229 - 1230
	சுகர் தம் பிதாவைமுதலில் மறுமொழி சொல்லும் படி தேவர்களுக்கு நியமித்தது ...	1231
341	வ்யாஸர் சுகரைத்தேடி வருந்தியது ...	1233
	சுகர் வ்யாஸருக்கு ப்ரமஸித்தது ...	1234
342	நாராயணர் தர்சனம்செய்தது	1235
	நாரதர் பதரிகாஸ்ரமம்சேர்ந்தது	1236
	நாராயணர்வ் தாம்முன்பிறவிகளை நாரதருக்குச் சொ ல்லியது	1237 - 1238
343	நாரதர் ஸ்வேதத்வீபஞ்சென்றது	1239
	பாஞ்சராத்ரசாஸ்த்ரத்தின் வரலாறு ...	1240 - 1243
344	உபரிசரவஸு யாகஞ்செய்தது	1243 - 1244
	பருந்தைப்போல் கழுகின்மேல் கோபித்தது ...	1244 - 1245
	ஏகதர் நாராயணரிடைய மஹிமையை பருந்துக ளிடஞ்சொல்லியது	1245 - 1246

அத்யாயம். பக்கம்.

345 இருஷிகள் யாகஞ்செய்ததும் ப்ருஹஸ்பதிக்கும் தேவர்களுக்கும் யாகபசுவைப்பற்றியவிவாதமும் 1249
உபரிசரவஸு பொய்சொன்னதும் ரிஷிகள் அவனைச் சபித்ததும் 1250
தேவர்கள் உபரிசரவஸுவுக்கு வரமளித்துச்சென்றது 1251
உபரிசரவஸு ஹரியைப் பூஜித்துச் சாபத்தினின்றும் விடுபட்டது. ... ... 1251 - 1252

346 நாரதர் நாராயணரைத் துதித்தது ... ... 1253 - 1260

347 நாராயணர் நாரதருக்குக் காடசியளித்தது ... 1260
நாராயணர் தாம் செய்த ஸ்ருஷ்டி முதலியவற்றை நாரதருக்குச் சொல்லியது ... ... 1262 - 1266

348 நாராயணர் தம் அவதாரங்களை நாரதருக்குச் சொல்லியது ... ... 1266 - 1271
பாஞ்சராத்ர வரலாறைப் படித்தல கேட்டலமுதலியவற்றின் பயன் ... ... 1272 - 1273

349 ப்ரம்மாமுதலியோர் தவம்புரிந்ததும நாராயணர் வரமளித்ததும் ... ... 1277 - 1281

350 வாஸுதேவா தமது மகிமையையும் தமது நாமங்களின் அர்த்தவிசேஷத்தையும் அர்ஜுனனுக்குச சொல்லியது... ... ... 1284 - 1288

351 வாஸுதேவர் உலகத்தின் படைப்புமுறையையும் பராமணர் மஹிமையையும் அர்ஜுனனுக்குச் சொலலியது ... ... 1288 - 1299

352 வாஸுதேவர் தம் நாமங்களின் அர்த்தவிசேஷத்தையும் நாரதருக்கும் நாராயணருக்கும் போர் நடந்ததையும் அர்ஜுனனுக்குச சொலலியது ... 1299 - 1306

353 நாரதர் ஸ்வேதத்வீபத்திலிருந்து திரும்பிப் பதரிகாஶ்ரமம்வந்தும் அங்கு நாராயணருடன் ஸம்பாஷித்ததும்... ... ... 1309 - 1312

354 நாராயணர் பகவானுடைய மஹிமையைச் சொல்லியதும் நாரதர் தவஞ்செய்ததும் ... 1312 - 1314

355 நாராயணர் பிதிருகார்யம் மிகச் ஶ்ரேஷ்ட்மென்று நாரதருக்குச் சொலலியது ... ... 1315 - 1316
பிண்டங்களின் வரலாறு ... ... 1315 - 1316

356 நாரதர் தம் ஆஶ்ரமம்செல்லுதல 1317
நாராயணரின் மஹிமை ... ... 1317 - 1319

357 நாராயணர் ப்ரம்மாவைப்படைத்ததும் மதுகைடபர் வேதத்தைக் கவர்ந்ததும் 1321

அத்யாயம்.		பக்கம்.
	ப்ரம்மதேவர் வேதத்துக்காகவருந்தி ஹரிஸ்துதி செய்தது	1321 - 1323
	நாராயணர் மதுகைடபரைக்கொன்று வேதத்தை மீட்டு ப்ரம்மாவுக்குக் கொடுத்தது ...	1324
358	ஏகாந்திதர்மதின்வரலாறு	1327 - 1334
359	வ்யாஸர் விஷ்ணுவுக்குப் புத்ரரான வரலாறு ...	1335 - 1339
360-361	பரமாத்மாவின்மஹிமையைப்பற்றி ப்ரம்மாவுக்கும் சங்கரருக்கும்நடந்த ஸம்பாஷணை ...	1341 - 1344
362	நாரதர் இந்திரனிடம்வந்ததும் அவன் அவரைக் கதை சொல்லச சொல்லியதும்... ...	1345
363	ஒருப்ராம்மணர்வீட்டுக்கு ஓர்அதிதி வந்ததும் அவர் அவரை உபசரித்ததும்	1345 - 1346
364	ப்ராம்மணர் மோக்ஷோபாயத்தைக்கேட்க, அதிதி தாமகும் அது ஸாங்கேதகமாயிருக்கிறதாகச் சொல லியது	1346 - 1348
365	அதிதி, ப்ராம்மணரைப் பத்மனிடம் போகச்சொல் லியது	1348 - 1349
366	அதிதி விடைபெற்றுச செனறதும் ப்ராம்மணர் நாகனிடம் சென்றதும்	1349 - 1350
367	ப்ராம்மணர் நாகலுக்குத் தம்வரவைத் தெரிவிக்கும் படிசொலி மண்டலிடமல வவிழ்த்தது ...	1351
368	நாகனேஸ்ரோத்தவாகம் போஜனம்செய்யும்படி ப்ரா ம்மணருக்குச் சொலலியதும் அவர் மறுத்ததும்	1352 - 1353
369	நாகன்வந்ததும் அவர்மனைவி அவனை ப்ராம்மண ரிடம் போகசசொன்னதும்	1353 - 1354
370	நாகன் கோபித்ததும் அவர்மனைவி அவனை ஸமா தானம்செய்து ப்ராம்மணரிடம் போகசசொல் லியதும்	1354 - 1355
371	நாகன் ப்ராம்மணரைசகணடு பேசியது ...	1356 - 1357
372	நாகன் ஸூர்யனிடத்துள்ள அதிசயங்களை ப்ராம் மணருக்குச சொலலியது	1358 - 1359
373	ஸூர்யன் தன்னிடம் ப்ரவேசித்த தேஜஸ்வின்வர லாறுதைச் சொல்லியது	1359
374	ப்ராம்மணர் நாகனிடம்விடை பெறுச்சென்றது ...	1360
375	ப்ராம்மணருகலும் நாகலுக்கும் நடந்த ஸம்வாதம் உலகில வந்தமுறை	1361

சாந்திபர்வம் மோக்ஷதர்மம் விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ மஹாபாரதம்.

சாந்திபர்வம்.

நூற்றெழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம்.

(பீஷ்மர், ஒருபிராம்மணருக்கும் ஸேனஜித்தென்னும் அரசனுக்கும் நடந்த ஸம்பாஷணையையும் அந்தப்பிராம்மணர் ஸேனஜித்துக்குச் சொல்லிய பிங்களோபாக்கியானத்தையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பூஜ்யர்களிற்சிறந்தவரே! ராஜதர்மங்களைப்பற்றியவைகளும் சுபங்களுமான தர்மங்கள் பிதாமஹரான உம்மால் சொல்லப்பட்டன. நீர் ஆஸ்ரமிகளுக்குரிய மிகச்சிறந்ததான தர்மத்தையும் சொல்லவேண்டும்" என்றுசொன்னர்.

பீஷ்மர், "ஸ்வர்க்கலோகத்திற்குக் காரணமானதும் ஸத்யமான பயனை உண்டுபண்ணுவதுமான தர்மமானது எல்லாவிடத்திலும் விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் பலதுவாரங்களுள்ள தர்மத்தின்செய்கையானது பயனற்றதாகிறதில்லை. பரதர்களிலுத்தமனே! எந்தஎந்தமனிதன் எந்தஎந்தவிஷயத்தில் நிச்சயத்தைஅடைகிறானோ அவனவன் அந்தஅந்தவிஷயத்தையே அறிவான்; வேறுவிஷயத்தை அறியமாட்டான். உலகத்திற்கு ஸாதனமான பொருள்கள் எந்தஎந்த விதமாக அஸாரமானபொருள்களாக அறியப்படுகின்றனவோ அந்த அந்தவிதமாக அந்தப்பொருள்களில் வெறுப்புண்டாகும். இதிற சந்தேகமில்லை. யுதிஷ்டிர! இவ்விதமாக உலகத்தைப் பலதோஷமுள்ளதென்று நிச்சயம்செய்துகொண்டபின் புத்தியுள்ளமனிதன் தன்னுடையமோக்ஷத்திறகுக்காரணமானலயிலுமுயற்சிசெய்யவேண்டும்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பொருள்கஷ்டமாலும் மனைவியோ மகனோ தந்தையோ மரணமடைந்தாலும் உண்டாகும்சோகத்தை விலக்கிக்கொள்ளக்கூடிய புத்தியை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

"பொருள்கஷ்டமாலும் தாமோ புத்திரனோ தனதையோ மரணமடைந்தாலும் மனிதன், 'அந்தோ! (ஆத்மாவைத்தவிரமற்றது) துக்கம்' என்று அலோசித்துக்கொண்டு சோகம்விலகும்வழியைச்செய்துகொள்ளவேண்டும். இவ்விஷயத்திலும் ஸேனஜித்தென்

னும்அரசனிடம் அவனுக்குமித்திரனான ஒருபிராம்மணர்வந்துகூறிய பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். 'புத்ரசோகத்தால் மிகத்தாபமடைந்தவனும் சோகத்தால் (கைகால்முதலியவை) அசைவற்றவனும்அறிவுமழுங்கியமனமுள்ளவனுமான ஸேனஜித்தென்னும் அரசனைக்கண்டு ஒருபிராம்மணர் ஒருவசனத்தைச்சொல்லத்தொடங்கினார். 'அரசனே! நீ அறிவில்லாமல் ஏன் மோஹமடைகிறாய்? உன்னைக்குறித்துச் சோகப்படக்கூடிய நீ ஏன்மற்றொன்றைப்பற்றிச் சோகப்படுகிறாய்?' ஒருஸமயம் உன்னைப்பற்றிச் சோகப்படும் ஜனங்களும் சோகப்படத்தக்கவர்களாய் அந்தக்கதியை அடைவார்கள். அரசனே! நீயும் நானும் நான்குபுறத்திலும் உன்னையடுத்து உபாவிக்கும் மற்றுமுள்ளவர்களுமான நாம்அனைவரும் எங்கிருந்துவந்தோமோ அவ்விடத்திற்கே செல்லுவோம்' என்றுசொன்னார். ஸேனஜித், 'தவத்தைப் பொருளாகக்கொண்டபிராம்மணரே! எதை அடைந்து நீர் சோகப்படாமலிருக்கிறீரோ உம்முடைய அந்தப்புத்தி எது? ஆலோசனை எது? ஸமாதி எது? ஞானம் எது? சாஸ்த்ரம் எது?' என்று கேட்டான். பிராம்மணர் சொலலலாதொடங்கினர். 'இவ்வுலகில் அந்தஅந்தக்கர்மங்களுக்குத்தக்கபடி உத்தமமும் அதமமும் மத்தியமமுமான பிராணிகள்யாவும் துக்கதால் நிரம்பியிருப்பதைப் பார். 'இந்தஜாதமாவும் என்னுடையதன்று; அலலது, பூமிமுழுமையும் என்னுடையது. ஏனக்குஎவ்விதமோ அவ்விதமே மற்றவர்களுக்கும்' எனறு அறிந்துகொண்டசாரணதால் எனக்குச்சோகமிலலை. நான் இந்தப்புதலையைஅடைந்து ஸந்தோஷப்படவுமிலலை; சோகப்படவுமில்லை. எவ்விதம் பெரியகடலில கட்டையும்கட்டையும் சேர்ந்தசை அடையுமோ, சோந்தபின்விலகுமோஅவ்விதம் பிராணிகளின் சேர்க்கையிருக்கிறது. புதராரும் பௌதரர்களும் ஞாதிகளும் பந்துக்களும் அவ்விதமேயிருக்கிறாகள். அவர்களிடம் ஸ்நேஹதைச் செய்யக்கூடாது. அவர்களைவிட்டுபிரிவது நிச்சயமன்றோ? அறியப்படாதகாரணத்திலிருந்து வந்தபுத்ரன் நிரும்பவும் அறியப்படாதகாரணத்தைஅடைந்தான். அவன் உன்னை அறியவிலலை. நீ அவனை அறியவில்லை. எதற்காக நீ சோகப்படுகிறாய்? துக்கமானது ஸுகத்தின்முடிவிலுண்டாகும். ஸுகமான து துக்கத்தின் முடிவிலுண்டாகும். ஸுகத்திலிருந்து துக்கமுண்டாகிறது. துக்கத்திலிருந்து ஸுகமுண்டாகிறது. ஸுகத்திற்கு அடுத்தது துக்கமும் துக்கத்திற்கு அடுத்தது ஸுகமுமாயிருக்கும். மீன்பிடிக்கருவிக்கு ஸுகமும் துக்கமும் தேர்உருளைபோலச் சுறறிவருகின்றன. நீ ஸுகத்திலிரு

ந்து துக்கத்தை அடைந்திருக்கிறாய்; திரும்பவும் ஸுகத்தை அடையப்போகிறாய். எப்பொழுதும் துக்கத்தையே அடைகிறவனுமில்லை; எப்பொழுதும் ஸுகத்தையே அடைகிறவனுமில்லை. ஸுகத்திற்குச் சரீரமே இருப்பிடமாகிறது. துக்கத்திற்கும் சரீரமேஇருப்பிடமாகிறது. ஆகையால், தேஹியானஜீவன் சரீரமெடுத்து எந்தக்கர்மத்தைச்செய்கிறானோ அந்தக்கர்மத்தின்பயனைச் சரீரத்தையெடுத்தே அனுபவிக்கிறான். ஜீவனதற்குக்காரணமான ஸூக்ஷ்மசரீரமும் அந்தச்சரீரத்துடன் கூடவே உண்டாகிறது. ஸ்தூலமும் ஸூக்ஷ்மமுமென்கிற இரண்டுசரீரங்களும்சேர்ந்துகொண்டே பலவிதமாயிருக்கின்றன. இரண்டும்சேர்ந்து காசமடைகின்றன. ஜனங்கள் பலவிதமான ஸ்நேஹமென்னும் கயிறுகளால விஷயங்களே உள்ளத்தில்கட்டிக்கொண்டு விரும்பியதைச்செய்துகொள்ளாமல மணல்களால்கட்டபட்டகரைகள் ஜலத்தால் (கரைவது) போல (அவ்விஷயங்களால்) தன் பப்படுகிறார்கள். [1] ஸ்நேஹமுள்ளகாரணத்தால் எள்ளானது செக்கார்களால் ஆக்ரமித்துப் பீடிக்கப்படுவதுபோல, உலகம்யாவும் பிறப் பெண்ணும்சக்கரத்தில [2] ஸ்நேஹமிருக்குங்காரணத்தால் அஜ்ஞானத்தாலுண்டாகும்துன்பங்களால ஆக்ரமித்துப் பீடிக்கப்படுகிறது. மனிதன், மனைவிமுதலியவர்களைப் போலிக்கவேண்டி அசுபமான கர்மத்தைச் சேர்க்கிறான். அந்தமனிதன் [3] ஒருவனுக இவ்வுலகிலும் மேலுலகிலும் துன்பங்களை அடைகிறான். பூதத்தார்களிடமும் தாவரங்களிடமும் மற்றக்குடும்பங்களிடமும் அசைபற்றிய மனிதர்கள்யாவரும் வனத்திலுள்ள கிழுபாலைகளைப்போலச் சேர்கமென்னும் சேற்றுக்கடலிலழுந்தினவர்களாகிறார்கள். [4] பாபமுள்ள! புத்ரனுக்கும் பொருளுக்கும் ஸம்பத்துகளுக்கும் காசமுண்டாவதை காட்டுத்தீக்கொப்பான பிரப்பெரியதுக்கத்தை அடைகிறார்கள். ஸுகமும்துக்கமும் [4] பிறப்பும் [5] இறப்பும்ஒரியாயாவும் செய்வதை அடித்திருக்கின்றன. [6] ஸுகமுருதிலிலிகவனும் ஸுகமுருதத்துள்ளவனும், சத்துருவுள்ளவனும் மித்துரனுள்ளவனும், அறிவுள்ளவனும் அறிவிலுள்ளவனும், தெய்வத்தாலும் ஸுகத்தை அடைகிறான். எல்லாஜீவிகள் ஸுகத்தைச் செய்யும் [7] நித்தியமையுள்ளவர்களல்லர். சத்துருக்கள் துக்

1 பாஷமென்ன. 2 உலகம் என்கிறது.

3 'அதாதஸ்ய கலு ஜந்தோர் ஜாயதே ஸர்வதோ பயம்' என்பது பாடம்.

4 'செல்வமும் மரணமும் ஸமமாகவே' என்பது பாடம்.

5 காந்திபர்வம், 28ம் - மத்தியில் முடிகிறது.

கத்தைச் செய்வதற்கு ஸமர்த்தர்களல்லர். புத்தியானது பொருள் களுக்குக் காரணமாகிறதில்லே. பொருளானது ஸுகங்களுக்குக்கார ணமாகிறதில்லே. புத்தியானது தன்தத்தை அடைவதற்குக் காரண மன்று. மூடத்தன்மை ஸம்பத்தில்லாமற்செய்கிறதன்று. அறிவிற் சிறந்தவன் உலகஸ்ருஷ்டியினுண்மையை அறிகிறான்; மற்றவன் அறியமாட்டான். புத்தியுள்ளவனே மூடனே, சூரனே பயந்தவ னே, கவியோ அசடனே, பலமுள்ளவனே பலவீனனே, அடையத் தக்கபாக்யமுள்ளவனே ஸுகமானது அடைகிறது. பசுவானது கன் றிற்கும் இடையனுக்கும் யஜமானனுக்கும் திருடனுக்கும் சொந்த மாகும். எவன் ஒருபசுவின்பாலைக்குடிக்கிறானே அப்பசுவானதுஅவ னுடையதென்பது நிச்சயம். உலகில் எவர்கள் மிகவும்மூடர்களோ, எவர்கள் அறிவின்மேலானநிலையை அடைந்தவர்களோ அந்தமனிதர் கள் ஸுகமாகச்செழிக்கிறார்கள். இடையிலுள்ளமனிதன் கஷ்டப் படுகிறான். அறிவுள்ளவர்கள் புருஷார்த்தங்களுள் மூன்றினதர்மத் திலும் கடைசியானமோக்ஷத்திலும் ஸந்தோஷமுள்ளவர்களாயிருப் பார்கள். அவர்கள் இடையிலுள்ள பொருள்காமங்களில் ஸந்தோஷப் படமாட்டார்கள். தர்மத்தையும் மோக்ஷத்தையும்அடைவது ஸுக மென்றும் இடையிலுள்ள பொருள்காமங்கள் துக்கமென்றும் (அறி வுள்ளவர்கள்) கூறுகிறார்கள். மூடனையிருபபவன் தன்கர்மங்களைச் சிந்தியாமல் கம்பளத்தால் மூடப்படுவதுபோல மிகுந்தஅஜ்ஞான த்தால மூடப்பட்டு ஸுகமாகஉறங்குவான். எவர்கள் மேலான அறிவைஅடைந்தவர்களும் ஸுகத்துக்கமுதலிய த்வந்துவங்களிலிருந் து விலகியவர்களும் மதஸரமில்லாதவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களே இன்பங்களும் துன்பங்களும் ஒருபொழுதும் துன்பப் படுததமாட்டா. கல்வஅறிவை அடையாமலும் மூடத்தன்மையி லிருந்து விலகியுமிருக்கிறவர்கள் கரைகடந்து ஸந்தோஷப்படுவார் கள்; தாபத்தையுமடைவார்கள். அறிவிலலாதவர்களும் மிக்கஅஹங் காரத்தால திருப்தியடைந்தவர்களுமானமூடர்கள் தேவ்லோகத்தி லுள்ள தேவக்கூட்டங்கள்போல எப்போதும் ஸந்தோஷமுள்ளவர் களாயிருப்பார்கள். (முதலில) ஸுகமாகததோற்றும் சோம்பலானது முடிவில் துக்கமாகும்; துக்கமாகத்தோற்றும்முயற்சியானது ஸுக ததை உண்டுபண்ணுவதற்குக் காரணமாகும். அணிமாமுதலியவித் தியும் முயற்சியுள்ளவனிடம் லக்ஷ்மியுடன்வலிக்கும்; சோம்பேறி யிடமராது. ஸுகமோ துக்கமோ ப்ரியமோ அப்ரியமோ வருவதை யெல்லாம் மனத்தில்சோர்விலலாமல அனுபவிக்கவேண்டும். சோகத

திற்கிடமானபல்லாயிரங்களும் பயத்திற்கிடமான பலநூறுகளும் ஒவ் வொருநாளிலும் மூடனைப் பிடிக்கின்றன ; அறிவுள்ளவனைப் பிடிக் கிறதில்லை. புத்தியுள்ளவனும் அறிவையடைந்தவனும் (சாஸ்திரங்க ளைக்) கேட்கவிருப்பமுள்ளவனும் அஹங்காரமற்றவனும் அடக்கமுள்ள வனும் இந்திரியங்களைவென்றவனுமானமனிதனைச் சோகமானது தொடருகிறதில்லை. அறிவுள்ளவன் இந்தப்புத்தியையடைந்து பரி சுத்தமானமனத்துடன் ஸஞ்சரிக்கவேண்டும். [1]சுக்லம் [2]க்ருஷ்ணம் என்னும்வழிகளையறிந்தவனும் தெய்வம்ஆஸுரம்என்ற ஸ்வபாவங் களிலிருந்து வெளிப்பட்டவனும் பிறப்புஇறப்புக்களை அறிந்தவனு மானமனிதனைச் சோகமானதுதொடத்தக்கதன்று.சோகமும்பயமும் கோபமும் சிரமமும் எதைக்காரணமாகக்கொண்டு உண்டாகின்றன வோ அது தன்அங்கங்களில்ஒன்றாலும் அதை விலக்கவேண்டும். ஆசைப்படத்தக்கவிஷயங்களுள் எதைஎதை மனிதன் விலக்கிக் கொள்ளுகிறானோ அதுஅது பூர்ணஸுகத்திற்குக் காரணமாகும். ஆசையைத் தொடர்ந்துசெல்லுத்தன்மையுள்ளமனிதன் அவ்வாசை களைஅனுஸரித்தே நாசமடைவான். மானிடஉலகத்திலுள்ளவிஷய ஸுகமும் தேவலோகத்திலுள்ளபெரியஸுகமும் ஆசையைவிட்ட தனுடைய ஸுகத்தின் பதினாறிலொருபாகத்திற்கும்ஒப்பல்ல. சுபமானதோ அசுபமானதோ முன்பிறப்பிலுள்ள சரீரத்தாலசெய்யப் பட்டகர்மமானது அறிவுள்ளவனுடனும் மூடனுடனும் சூரனுடனும் அந்தக்கர்மத்தைச்செய்தமனிதனை அடையும். இவ்விதமேகாணப் படும் ப்ரியங்களும் அப்ரியங்களும் துக்கங்களும் ஸுகங்களும் ஜீவர் களிடம் சுறறிக்கொண்டிருக்கின்றன. மனிதன் இந்தப்புத்தியை நன்றாகஅடைந்து நற்குணங்களுடன்கூடியவனாகிச் சோகப்படாம லிருக்கவேண்டும் ; ஆசைப்படத்தக்க எல்லாவிஷயங்களையும் வெறு க்கவேண்டும் ; கோபத்தைப் புறத்தில் தள்ளவேண்டும். இந்தச் சோகமானது மனத்தில்உண்டாகி வளர்ச்சிஅடைந்தால மனத்தி லுண்டானமிருத்யுவாகும். பிராணிகளுக்குச் சரீரத்திலுள்ளகோப மென்பது அறிஞர்களால இவ்விதம்சொல்லப்படுகிறது. மனிதன், ஆமையானது தன் அங்கங்களை அடக்கிக்கொள்வதுபோல்காமங்களை யெல்லாம் உள்ளத்தில எப்பொழுது அடக்கிக்கொள்ளுகிறானோ அப் பொழுது தானுகைவிளங்கும் ஆத்மரூபத்தின்பிரகாசமானது உள்ளத்தி லேயே தெளிவாகவிளங்கும். ஸ்ருவஸ்துவானது கிருகாரிருகாரும்

1 சுகலம் = வெண்மை ; முக்திக்குக்காரணமானது.

2 கருஷ்ணம் = கருமை ; ஸம்ஸாரத்திற்குக்காரணமானது.

'என்னுடையது' என்ற அபிமானத்துடன் கருதப்படுமாயின், அதுவே நாசத்தைஅடையுங்காலத்தில் (அவனுக்குத்) தாபத்தையுண்டு பண்ணுவதற்குக் காரணமாகிறது. இந்தமனிதன் எப்பொழுது ஒன்றிலும் பயமில்லாதவனுயிருக்கிறானோ, எப்பொழுது இவனிடமிருந்து ஒருவரும் பயமடையாமலிருக்கிறார்களோ எப்பொழுது இவன் ஒன்றையும் விரும்பாமலும் பகையாமலுமிருக்கிறானோ அப்பொழுது ப்ரம்மமாகிறான். மனிதன், ஸத்யம் பொய், சோகம் ஆனந்தம், பயம் அபயம், ப்ரியம் அப்ரியம் இந்தஇரட்டைகளைவிலக்கிக்கொண்டபின் மிகவும்சாந்தமானமனமுள்ளவனுயிருப்பான். மனிதன் எப்பொழுது அறிவுள்ளவனுகிச் செய்கையாலும் மனத்தாலும் வாக்காலும் எல்லாப்ராணிகளிடத்திலும் துன்பதத்தைச்செய்யாமலிருக்கிறானோ அப்பொழுது ப்ரம்மமாகிறான். துஷ்டபுத்தியுள்ளவர்களுக்கு விலக்கக்கடினமானதும் கிழதன்மையைஅடையும் மனிதனுக்கும் குறைவடையாததும் ஆயுள்முழுவதுவரையிலுமுள்ளரோகமுமான ஆசையை விலக்கிக்கொள்ளுகிறவனுக்கு ஸுகமுண்டு. அரசனே! இந்தவிஷயத்தில் பிங்களையென்னும் வேசியானவள் கஷ்டமுள்ளகாலத்திலும் தான் ஸுதனமானஸுகத்தை அடைந்ததைக்குறித்துப் பாடிய காதைகளைக் கேள். பிங்களையென்னும்வேசியானவள் ஸுகமேதஸ்தலத்தில் ஆசைநாயகனை விலக்கப்பட்டவளாயிருந்தாள். உடனே அப்பொழுது கஷ்டத்தை அடைந்த பிங்களையானவள் தன்புத்தியைச் சாந்தமாக (ஆத்மருபத்தில்) நிலைபெறச்செய்துகொண்டாள். அவள் 1'நான் பித்துக்கொண்டவளாகிப் பித்தனலலாதநாயகனை (விரும்பிக்கொண்டு) நெடுநேரம்வஞ்சித்துக்கொண்டிருந்தேன். அருகிலுள்ள இந்தநாயகனை முதலில நான் தெரிந்துகொள்ளவில்லை. 2ஒருகூரையுள்ளதும் ஒன்பதுத்வாரங்களுள்ளதுமானவீட்டை மூடிக்கொள்ளுகி

---

1 'பிசாசுபிடித்தவனாகிய நான் காமபோகமாகிய விஷத்தை வெகுகாலம் மனதைத் தூக்கொண்டிருந்தேன். ஆபத்துவருகிறதில்லை ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் இவரை முதலில் நான் அறியவில்லை' என்பது மூலையுரை.

2 இங்கு வீடென்பது சரீரமாகும்; வீட்டிலுள்ள கூரை, யதனுலது தாங்கப்படுகிறதோ அது ப்ராணனைத் தாங்கிக்கொண்டிருப்பது பிராணன்; ப்ருஷ்டவம்சமாகிய மேற்கால்வைத்து அதிலுள்ளது இரண்டாவது ப்ராம்மணத்தில் உள்ள இந்த ரூபகம், ப்ரச்நோபநிஷத்தில் இரண்டாவதுப்ரச்நத்திலும் இது தெளிவாகச்சொல்லப்படும். இதிலுள்ளபடி ஏழு த்வாரங்களானவை; கண்கள், காதுகள், மூக்குத்துவாரங்கள், வாயாகிய ஏழும் ஒன்பது துவாரங்களாகின்றன. இதில் மூலையில் அதாவது கீழ்ப்பாகமும் மேல், கீழ், முன், பின், வலது, இடது, மனம், புத்தி, சாமம், சாமமனைவிதுவுமாகிய துவாரங்களுமில்லை என்றும் பலமூலையுரை கூறுகிறது.

றேன். இங்குவரும் விரும்பத்தகாதவனைமனிதனே நாயகனென்று எவள் அபிமானிப்பாள்? ஆசைவேஷத்துடன்கூடினவர்களும் உண்மையில்ஆசையில்லாதவர்களும்மானிடஉருவங்கொண்டவர்களுமான வஞ்சகர்கள் திரும்பவும் என்னை வஞ்சிக்கமாட்டார்கள். நான் அறிவுள்ளவளாயிருக்கிறேன்; விழித்துக்கொண்டிருக்கிறேன். தெய்வத்தாலும் முன்செய்தவினையாலும் துன்பமாயிருப்பதும் ஸுகமாக முடியும். நான் நல்ல அறிவுள்ளவளும் விஷயங்களிலிருந்து விலகியவளுமாயிருக்கிறேன். நான் இப்பொழுது இந்திரியங்களை வெல்லாதவளாயிருக்கவில்லை. ஆசையில்லாதவன் ஸுகமாகஉறங்குவான். ஆசையில்லாமை மிகவும்ஸுகமாகும்' என்றுசொன்னாள். பிங்களை. யானவள் விஷயபோகத்தைப்பற்றியஆசையை இலலாததாகச்செய்து கொண்டு ஸுகமாகஉறங்கினாள்' என்றுசொன்னார். இவ்விதங்களும் மற்றவைகளும்யுக்தியுள்ளவைகளுமானபிராம்மணருடையவசனங்களால் [1]சோகத்தைவிலக்கித் தைரியமுள்ளவளைச் செய்யப்பட்ட ஸுனஜித்தென்னும் அரசன் ஸுகமாக ஸந்தோஷமடைந்தான்" என்றுசொன்னார்.

நூற்றெழுபத்துநான்காவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், காலம்வேகமாகச்செல்லுவதால் ஸ்ரேயஸ்-க்கு ஸாதனமாயிருப்பதைச் சிக்கிரம் செய்துகொள்ளவேண்டுமென்கிற விஷயத்தில் ஒருதகப்பனுக்கும் புத்திரனுக்கும்நடந்த ஸம்பாஷணையைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! இக்கக்காலமானது எல்லாப்பிராணிகளுக்கும்நாசத்தைக்கொடுப்பதும் (யாவற்றையும்) பிரிச்செல்லுவதுமாயிருக்கும்பொழுது (மனிதன்) எவ்விதஸ்ரேயஸை அடையவேண்டும்? அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் ஒருதகப்பனுக்கும் புத்திரனுக்கும்நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். யுதிஷ்டிர! அதை அறிந்துகொள். ஏ! பார்த்த! வேதமோதுவதில் விடாமுயற்சியுள்ள ஒருபிராம்மணருக்குமேதாவியென்றுபெயருள்ள மனம் நல்லபுத்தியுள்ளவனுமான ஒருபுத்திரன் இருந்தான். மேதாவி

---

1 'ஆத்மதத்வத்தில் நிலைநிறுத்தப்பட்ட' என்பது மூலையருளர்.

தர்மங்களைப்பற்றியவிஷயங்களில்ஸாமர்த்தியமுள்ளவனும்உலகடைக்குரிய தந்திரத்தில்ஸமர்த்தனுமானஅந்தப்புத்திரன்வேதாத்யயனஞ் செய்வதில்மிகப்பற்றுதலுள்ளதந்தையைநோக்கி, 'தந்தையே! மனிதர்களின் ஆயுள் சீக்கிரமாக நாசமடைகிறது. ஆகையால், இதை அறிந்தவனைநீரபுருஷன் எதைச்செய்துகொள்ளவேண்டும்? பிதாவே! எவ்விதம் நான் தர்மத்தைச்செய்துகொள்ளுவேனோ அவ்விதம் நல்லபயனுள்ளதானஅந்தத்தர்மத்தை எனக்கு முறையாக உபதேசிக்கவேண்டும்' என்றுகேட்டான். பிதா, 'மகனே! ப்ரம்ம சர்யாச்ரமத்திலிருந்து வேதங்களைக்கற்றபின் (க்ருஹஸ்தாச்ரமம் சென்று) பரிசுத்தியுறவேண்டிப் பித்ருக்களுக்காகப் புத்திரர்களை விரும்பவேண்டும்; ஆதானவிதிப்படி மூன்றுஅக்னிகளையும் உண்டுபண்ணிக்கொண்டு விதிப்படி யாகங்களைச்செய்தவனுகி அரண்யஞ் சென்று பிறகு முனியாயிருக்கவேண்டும்' என்றுசொன்னர். புத்திரன், 'உலகமானது நான்குபுறத்திலும் இவ்விதம்சூழப்பட்டும் கொல்லப்பட்டுமிருக்கவும் இல பழுதின்றிச் சென்றுகொண்டிருக்கவும் தீரபுருஷன்போல என்னபேசுகிறீர்?' எனறுகேட்டான். பிதா, 'உலகமானது எவ்விதம் கொலலப்பட்டிருக்கிறது? எதனால் நான்குபுறத்திலும்சூழப்பட்டிருக்கிறது? எவைகள் பழுதின்றிச்சென்றுகொண்டிருக்கின்றன? என்ன எனக்குப் பயத்தையுண்டபண்ணுகிறாய்?' என்றுசொன்னர். புத்திரன் சொல்லத்தொடங்கினன், 'உலகமானது மிருத்யுவால் கொல்லப்பட்டதும் கிழத்தனத்தால் நான்குபுறத்திலும்சூழப்பட்டதுமாயிருக்கிறது. இரவும்பகலும் இதோ (பிராணிகளின்ஆயுளை அபஹரித்துக்கொண்டு) செல்லுகின்றன. ஐயா! என் இதைத் தெரிந்துகொள்ளவில்லை? இரவுகளும் பழுதற்றவைகளாய் எப்பொழுதும் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கின்றனவே. [1] மிருத்யுவானவன்(பிராணிகளைப்பிடியாமல்) நிற்கிறானென்பதில்லை. இதை நான் உள்ளபடி அறிகிறேன். வலையால்பிடிக்கப்பட்டவனபோல லோகமானது கொண்டிருக்கும் நான் எவ்விதம் இயமடையாமலிருக்கக்கூடும்? ஒவ்வோர் இரவும்சென்றவுடன் ஆயுளானது மிகவும் குறைவுபடுகிறதாதலின், அங்ஙனம்பயனற்றதாயிறவென்று ஸமர்த்தனாயிருப்பவன் அறிந்துகொள்ளவேண்டும். இவ்விடங்கள் அடையப்படாமலிருக்கும்பொழுதே மிருத்யுவானவன் மனிதனைத் தொடருகிறான். அப்பொழுது ஆழமில்லாத ஜலத்திலிருக்கும்மீன்போல எவன்ஸுகத்

[1] இங்கு 'பிதாசொல்லுகிறார்' என்பது பொருத்தமின்மையால் விடப்பட்டது.

தையடைவான்? செந்நாயானது, பெண் ஆடுகளின்று துகாலத்தைத் தேடிக்கொண்டிருக்கும் ஆட்டையெடுத்துச்செல்வதுபோல மிருத்யுவானவன், கர்மபலன்களை நதேடுகிறவனும் வேறிடத்திற்சென்ற மனமுள்ளவனுமானமனிதனை எடுத்துக்கொண்டு செல்லுகிறான். ஏது ஶ்ரேயஸோ அதை இப்பொழுதே செய்துகொள்ளும். இக்காலமானது உம்மை மீறிச்செல்லவேண்டாம். கார்யங்கள்செய்யப்படாமலிருக்கும் பொழுதே மிருத்யுவானவன் (வந்து) இழுப்பான். நாளைக்குச்செய்யவேண்டியவேலையை இன்றுசெய்துகொள்ளவேண்டும். மாலையில் செய்யவேண்டியதைக் காலையில்செய்யவேண்டும். ஏனெனில், மிருத்யுவானவன் இந்தமனிதனால் செய்யப்பட்டதையும் செய்யப்படாமலிருப்பதையும் எதிர்பார்க்கிறவனல்லன். எவனுக்கு இப்பொழுது மிருத்யுவின்காலம்வருகிறதென்று எவன் அறிகிறான்? சிறுவனயிருக்கும்பொழுதே தர்மத்தைச்செய்யும்ஸ்வபாவமுள்ளவனயிருக்கவேண்டும். ஆயுளானது நிலையற்றதன்றோ? தர்மத்தைச்செய்தால் இவ்வுலகில் கீர்த்தியுண்டாகும்; இறந்தபின்னும்ஸுகமுண்டாகும். அவிவேகத்தாலபஹரிக்கப்பட்டமனிதன் புத்திரர்களுக்காகவும் பெண்டிர்களுக்காகவும் முயற்சியுள்ளவனாய்ச் செய்யத்தக்கதையும்செய்யத்தகாததையுஞ்செய்து இவர்களுக்கு வேண்டியபாகத்தைக் கொடுக்கிறான். புத்திரர்களையும் பசுக்களையுமுடையவனும் (விஷயபோகங்களில்) பற்றுதலுள்ளமனமுள்ளவனுமான அந்தமனிதனைத் தூங்கிக்கொண்டிருக்கும்மிருகத்தைப் புலியானது அடிப்பதுபோல மிருத்யுவானவன் எடுத்துக்கொண்டுசெல்லுகிறான். விஷயங்களைச் சேகரிக்கிறவனும் போகங்களில்திருப்தியடையாதவனுமாயிருக்கும்பொழுதே, புலியானது பசுவைப்பிடிப்பதுபோல மிருத்யுவானவன் அவனை யெடுத்துக்கொண்டுசெல்லுகிறான். 'இது செய்யப்பட்டது; இதைச் செய்யவேண்டும்; மற்றொன்று [illegible] செய்யப்படாமலிருக்கிறது' என்று இவ்விதம் [illegible] ஸுகமுள்ளமனிதனை யமனானவன் [illegible] செய்யப்படாத காமங்களின் பயனையடையாதவனும் [illegible] பற்றுள்ளவனும் க்ஷேத்ரங்களிலும் கடைகளிலும் வீடுகளிலும் ஆசைகொண்டவனுமானமனிதனை மிருத்யுவானவன் [illegible] எடுத்துக்கொண்டுசெல்லுகிறான். பலமில்லாதவர்களையும் பலமுள்ளவர்களையும், [illegible] பவர்களையும், மூடர்களையும் பண்டிதர்களையும், [illegible] எல்லாவற்றையும் அடையாமலிருக்கும்பொழுது மிருத்யுவானவன் எடுத்துக்கொண்டு செல்லுகிறான். மிருத்யுவும் [illegible] நோயும் [illegible] பலகாரணங்களாலுண்டாகுந்துக்கமும் சரீரத்தைத்தொடர்ந்துகொண்டிருக்

கும்பொழுது ஏன் ஒன்றுமில்லாதவர்போல் நிற்கிறீர்? சரீரமடைந்த மனிதனைப் பிறப்படைந்தபொழுதே நாசஞ்செய்யவேண்டி அந்தகன் தொடருகிறான்; கிழத்தனமும் தொடருகிறது. ஸ்தாவரஜங்கமங்களான் இப்பொருள்கள், அந்தகன் ஜரைஇவ்விரண்டாலும் தொடரப்பட்டிருகின்றன. கிராமத்தில் வஸிப்பவனுக்கு (பிள்ளை பெண்டிர் முதலியவற்றிலுள்ள) ஆசையென்பதுதான் மிருத்யுவின்முகமாகும்.[1] அரண்யமென்பதுதான் இந்திரியமென்னும் பசுக்களைக்கட்டத்தக்க கொட்டிலாகுமென்று வேதம் உபதேசிக்கிறது. (ஆகையால்) கிராமத்திலிருப்பவனுக்கு (சிற்றின்பங்களைப்பற்றிய) ஆசையானது தன்னைக்கட்டத்தக்க கயிறாகும். புண்ணியசாலிகள் இக்கயிற்றை அறுத்துவிட்டுச்செல்லுகிறார்கள். பாபிகளாயிருப்பவர்கள் இக்கயிற்றை அறுக்கிறார்களில்லை. எவன் மனத்தாலும் வாக்காலும் சரீரத்தாலும் மற்றகாரணங்களாலும் பிராணிகளைத் துன்பப்படுத்தாமலிருக்கிறானோ அவன் உயிரையும் பொருள்களையும் அபஹரிக்கத்தக்கபிராணிகளாலும் துன்பப்படுத்தப்படமாட்டான். (கிழத்தனம் வ்யாதிமுதலியஉருவமுள்ளதாக)வரும்மிருத்யுவின்ஸேனையை [2]ஸத்தியம்என்றுசொல்லாமல் ஒருவனும் ஒருபொழுதும் தடுக்கவல்லவனல்லன். ஸத்யமல்லாததை விலக்கவேண்டும். மோக்ஷமானது ஸத்யத்தையேஅடித்தளமாகக்கொண்டிருக்கிறது. ஆகையால், ஸத்யத்திற்குத்தக்க வ்ரதங்களைச்செய்கிறவனும் ஸத்யமானயோகத்தை மிகமுக்கியமாகக்கொண்டவனும் ஸத்யமானசாஸ்திரத்தையடைந்தவனும்எப்பொழுதும் அடக்கமுள்ளவனுமாயிருந்துகொண்டு ஸத்யத்தாலேயே மிருத்யுவை வெல்லவேண்டும். மோக்ஷமும் மிருத்யுவுமான இரண்டும் சரீரத்தில் நிலைபெற்றிருகின்றன. மிருத்யுவானது அவிவேகத்தால் வருகிறது. ஸத்யத்தால் மோக்ஷமுண்டாகிறது. நான் ஹிம்ஸைசெய்யாதவனும் ஸத்யத்தைவிரும்புகிறவனும் காமத்தையும் கோபத்தையும் வெளியில்விலக்கியவனும் ஸுகத்தையும்துக்கத்தையும் ஸமமாகக்கொண்டவனும் [3]க்ஷேமமுள்ளவனுமாயிருந்துகொண்டு [4]தேவனைப்போல மிருத்யுவை விலக்கிக்கொள்ளுகிறேன். கிருஹஸ்தாச்ரமத்தில பழக்கமென்னுமாகத்தில் பற்றுள்ளவனும் இந்திரியநிக்ரஹமுள்ளவனும் ப்ரம்மஜ்ஞானமென்னுமாகத்தில் நிலைபெற்றவனும் வாக்கு மனம் சரீரங்களுக்குள்ள ஜபம் த்யானம் ஸ்நானம்முதலாகிய

---

1 த்யானஞ்செய்யத்தக்க தனிமையானஇடம் அரண்யமென்றுசொல்லப்படுகிறது. 2 ப்ரம்மஜ்ஞானம்.

3 'பிறர்களுக்கு ஸுகத்தைவிரும்புகிறவனே' என்பதும், 4 'ஹிரண்யகர்ப்பன்போல்' என்பதும் பழையஉரை.

ஞள்ளவனுமான முனியாயிருந்துகொண்டு உத்தராயணம்என்னும் பிரம்மலோகவீதிக்குத் தக்கவனுயிருக்கப்போகிறேன். அறிவுள்ளவனை என்போன்றவன் ஹிம்ஸையுள்ளவைகளும் அழியத்தக்க பயமுள்ளவைகளும் 1 பசுக்களால்செய்யத்தக்கவைகளுமான யாகங்களைப் பிசாசமானது 2 தன்சரீரத்தின் நாசமென்னும்பாகங்களைச் செய்வதுபோல எவ்விதம் செய்யத்தக்கவனுவான்? எந்தமனிதனுடைய வாக்கும் மனமும் எப்பொழுதும் கன்முக த்யானத்துக்குத்தக்கவைகளாயிருக்கின்றனவோ எவனுக்குத் தவமும் தயாகமும் ஸத்யமுமிருக்கின்றனவோ அந்தமனிதனே யாவற்றையுமடைவான். ஞானத்திற்கொப்பானகண்ணில்லை. ஸுகயுகதிறகொப்பானதவமில்லை. ஆசைக்கொப்பான துக்கமில்லை. த்யாகத்திறகொப்பானஸுகமில்லை. ஆத்மரூபத்திலிருந்தே ஆத்மரூபத்துடன்ஜனித்த நான் ஆத்மரூபதில் நிலைபெற்றவனுயிருக்கிறேன். நான் ஸந்ததியில்லாதவனுயிருந்தாலும் ஆத்மரூபத்திலேயே இருக்கப்போகிறேன். ப்ரஜையானது என்னைத (துக்கத்திலிருந்து) மீட்டுவைக்கத்தக்கதன்று. பிராமணனுக்குத் தனிமை,ஸமநிலை,ஸத்யம்,சீலம்,மர்யாதை,ஹிம்ஸையிலலாமை,ருஜுவாயிருப்பது, அந்தஅந்தக்காமங்களிலிருந்துமுழுவிடைவது இவைகளுக்குச்சரியான பொருளில்லை. ஓ! பிராம்மணரே! மரிக்கப்போகிற உமக்குப் பொருள்களால்என்னபயன்? பந்துக்களாலும் உமக்கு என்னபயன்? தாரங்களால உமக்கு என்னபயன்? உம்முடையபிதாவும் பாட்டனரும் எங்கேபோனர்கள்? ஸ்ருதயுகையில் ப்ரவேசிததிருக்கும்ஆகமரூபதத்தைத் தெரிந்துகொள்ளும்படி என்முன்சொன்னீர். அரசனே! புத்ரனுடைய இத்தவசனத்தைக்கேட்டபின்னும், பிதாவானவர் சுவர்க்கத்தைச்செய்துகொண்டாரே அவ்விதம் நீயும் ஸத்யமென்னுந்தர்மத்தைத் மிகப்பெரிதாகக்கொண்டவனுயிரு" என்றுகூறினர்.

நூறாவதுபத்தைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரஹ்மர், ப்ராணிகளுக்கு வறுமை மோக்ஷமைக்கும், செல்வம் துன்பத்திற்கும் காரணமாகும்மென்றும்,ப்யத்தில் சம்யாகர் (சோல்லியதைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஓ பிரபுவான்களுக்கும் ஸ்ரேஷ்டரான பிதாமகருக்கு நமஸ்காரம்! ஓ ஸர்வஜ்ஞரே! ஸர்வலோகங்களையும் ஸ்ருஷ்டித்தவரே! ஸர்வ

---

1 பசுக்களிலிருந்து பெறத்தகுந்த நெய்முதலான பொருள்களால் செய்யத்தக்கவை.

2 'பிசாசம்' என்பதும் 'ஆகரிஷ்ணு' என்பதிலுள்ள 'தம்' என்பதும் பழையவுரை.

3 'ஸவதந்தரிணி' என்பதும் பழைய; அதற்கு 'தம் சாஸ்த்ரமனுஸரிதவர்கள்' என்பது பழையவுரை.

மஹரே ! அவர்களுக்கு ஸுகதுக்கங்கள்வருவது எப்படி ? அஃது எத்தன்மையது ?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் சாந்திமார்க்கத்தைஅடைந்து முக்திபெற்ற 1 ஸம்யாகரென்னும்பிராம்மணரால் சொல்லப்பட்ட பழையஇவ்விதி ஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். முன்காலத்தில் கெட்டதாரத்தாலும் கெட்டஆடையாலும் பசியாலும்துன்பப்படுகிறவரும் வைராக்யத்தை அடைந்தவருமான ஒருபிராம்மணர் மன்னனைநோக்கிச் சொல்லத் தொடங்கினர். 'இவ்வுலகத்தில் பிறவியடைந்தமனிதனுக்குப் பிறக்கத்துமுதல் பலவிதமானஸுகங்களும் துக்கங்களும் வந்துகொண்டிருக்கும். அந்தஸுகதுக்கங்களுள் ஒருவழியானது இந்தமனிதனை அடைந்துகொண்டிருக்கும். (ஆகிலும்) ஸுகத்தைஅடைந்து ஸந்தோஷப்படக்கூடாது. துக்கத்தையடைந்தும் தாபப்படக்கூடாது. நீ ஆசையற்ற மனமுள்ளவனுயிருந்தும் எப்போழுதும்சமையைவிடாதுக்கொண்டு ஆத்மாவுக்குரிய சிரேயஸைச் செய்துகொள்ளாமலிருக்கிறாய் ; ஆத்மஸந்தோஷத்தையும் அடையாமலிருக்கிறாய். நீ ஒருவிதமானபொருளுமில்லாமல் ஸுகசாரத்தைச்செய்துகொண்டு ஸுகத்தை அனுபவிப்பாய். ஒன்றுமில்லாதவனேமனிதன் ஸுகமாகஉறங்குவான் ; ஸுகமாகஎழுந்திருப்பான். உலகத்தில் ஒன்றுமில்லாதவனுமையானது, ஸுகமும் கவலையில்லாததும் கேடுமற்றும் இடையூறில்லாததுமாயிருக்கிறது. இது சதுரருக்களில்லாத வழியும் (ஆசைகொண்டவர்களுக்கு) அடையக்கூடினதும் ஸாதுக்களுக்கு எளியதுமாயிருக்கிறது. மூன்றுலகங்களையும் கண்டவனேனான், எல்லாவிஷயங்களிலும் வைராக்கியத்தை அடைந்தவனும் பரிசுத்தியுள்ளவனுமான எனக்கு நிம்மதியிருப்பதைவிட இவ்வுலகங்களில் காணேன். எனதுதனத்தையும் ராஜ்யத்தையும் நெல்லில் தூக்கிப்பார்த்தேன். சிறந்தகுணமுள்ளவனுக்கு ராஜ்யத்தைவிட மேலானதாயிருந்தது. வருணமும் ராஜ்யமும் எனக்குப்பிரியதானதால்தான் இந்தஅபாயத்தில் அகப்பட்டிருக்கிறது. பொருளற்றவனாயிருப்பதே 2 பயமுள்ளவனுக்கு யோகியிருக்கவேண்டும். பொருளோடுகூடினவன் அதைவிட்டு அநுபவிப்பட்டவனும் ஆசையற்றவனுமான இந்தபுருஷனிடம் நியும் நிருபர்களும் மிருதியும் வேதமுடையமும் சாந்திபுருஷலக்ஷணமாயிரா. எப்பொழுதும் ஒருவனுக்கு ஸுகமும்துக்கமும் மாறிமாறிவருவதாயிருக்கும். இதைஅறிந்தவனும் துன்பங்களால் மதிமயங்காதிருப்பவனும் துன்பங்களை

1 'சம்பாகர' என்பது பேதபாடம். 2 பேதபாடம்.

வனும் அடக்கமுள்ளவனுமான அந்தவுழைமனிதனைத்தான் தேவர்கள் மிகவுங்கொண்டாடுகிறார்கள். பொருளுள்ளவன், கோபத்தாலும் பேராசையாலும்பற்றப்பட்டவனும் அறிவழிந்தவனும் கோணலான பார்வையுள்ளவனும் காய்ந்தமுகமுள்ளவனும் புருவக்கோணலுள்ள முகமுள்ளவனும் பாபியும் கோபங்கொண்டுகீழ்ப்போகும் உதடுகளைக்கடிப்பவனும் க்ரூரமாகப்பேசுகிறவனுமாயிருப்பான். அவன் பூமியைத் தானஞ்செய்யவிருப்பங்கொண்டாலும் எவன் அவனைப்பார்க்க விருப்பமடைவான்? எப்பொழுதும், ஸம்பத்துடன்சேர்ந்திருப்பது பண்டிதனல்லாதமனிதனை மோகமுள்ளவனாகச்செய்யும். காற்றானது சரத்காலத்திலுள்ளமேகத்தை அபஹரிப்பதுபோல அந்தஸம்பத்தானது அவனுடையமனத்தை அபஹரிக்கும். மேலும், அழகுள்ளவனென்றும் பொருளுள்ளவனென்றுமுள்ள அபிமானமானது இந்த அவிவேகியை வந்தடையும். 'நான் நற்குலத்திற்பிறந்தவனுயிருக்கிறேன்; ஸித்தியுள்ளவனுயிருக்கிறேன். நான் ஸாதாரணமான மனிதனல்லேன்' என்னும் இந்தமூன்றுகாரணங்களாலும் அந்தஅவிவேகியின்மனமானது (தர்மத்திலிருந்து) தவறுதலடையும். (சிற்றின்பத்தில்) மிக்கபற்றுதலுள்ளமனமுள்ளவன் தந்தையால்சேர்த்துவைக்கப்பட்ட பொருள்முதலியபோகங்களை அழித்துவிட்டுக் குறைவடைந்து பிறர்பொருள்களை எடுப்பதை நல்லதென்றுநினைப்பான். மரியாதையைமீறிச்சென்றவனும் அங்கங்கிருந்து (பிறர்பொருளை) எடுப்பவனுமான அந்தஅவிவேகியை, மிருகத்தை வேடர்கள் அம்புகளால் அடிப்பதுபோல அரசர்கள் தடுத்துத்தண்டிப்பார்கள். இவ்விதமான இந்ததுக்கங்களும் சரீரத்தைத்தொடாதவரும் பலவிதமான அந்த அந்தத்துக்கங்களும் இவ்வுலகில் மனிதனை அடைந்துகொண்டிருக்கின்றன. நிலையற்றபொருள்களுடன்கூடியிருக்கும் லௌகவாழ்க்கையை

1 இகழ்ந்துதள்ளிவிட்டு உறுதியான புத்தியுள்ளவர்களே பெருந்துன்பங்களுக்குப் புத்தியால் பரிகாரத்தைச்செய்துகொள்ளவேண்டும். (பொருள்களை) விடாமல (மனிதன்) ஸுகமடையமாட்டான்; (பொருள்களை) விடாமல் உத்தமகதியை அடையமாட்டான்; (பொருள்களை)விடாமையால் லாதவனாகப்படுக்கமாட்டான்; (மனிதன்) யாவற்றையும்விட்டபின், ஸுகமுள்ளவனுயிருப்பான்' என்றுசொன்னனென்று ஹஸ்தினாபுரமானது முன்காலத்தில் அவந்திபுரத்திலுள்ள சம்பாகனென்னும் பிராம்மணனால் எனக்குக்கூறப்பட்டது. ஆகையால், (பொருள்களைவிடுவதென்னும்) தியாகமானது உத்தமமென்று நான் எண்ணுகின்றேனென்று சொன்னார்.

1 ஸோபாடம்.

நூற்றெழுபத்தாருவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், விரக்தியானது ஸுகத்திற்கு ஸாதனமென்னும் விஷயத்தில் மங்கியினுபதேசத்தையும் போத்யரின் உபதேசத்தையும்கூறியது.)

யுதிஷ்டிரர், "பொருளிலுள்ளபேராசையால் பீடிக்கப்பட்ட மனிதன் பலதொழிலகளைச்செய்தும் பொருளை அடையாமல் போவானுகில் சுதைச்செய்துஸுகமடையக்கூடும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! பாரத! யாவற்றிலும் ஸமமானபுதியும் ஆயாஸமில்லாமையும் ஸத்யவசனமும் ஸுவராக்யமும் கார்யத்தில்விருப்பமில்லாமையும் எவனுக்கிருக்கினறனவோ அந்தமனிதன் ஸுகமுள்ளவனுயிருப்பான். இவ்வைத்துமே மோக்ஷத்திற்காக அடையத்தக்கவைகளென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். ஸாதுக்களுக்கு இவ்வைந்தும், ஸ்வர்க்கமும் தாமமும் மிகஉதமமான ஸுகமுமாகின்றன. இவ்விஷயத்திலும் மங்கியென்பவரால் வைராக்யத்துடன் சொலலப்பட்ட பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். யுதிஷ்டிர! அதனை அறிந்துகொள். பொருளின்விருப்பமுள்ள மங்கியானவர் பலமுறை தொழிலகளைச்செய்து பயனடையாதவரானர். அவர் பழக்கத்தக்க இரண்டுகன்றைச் சிறிதுபொருளைக்கொண்டு வாங்கினர். (ஒரே ஜாதியில்) ஒன்றுகக்கட்டப்பட்டவைகளும் பழக்கமில்லாதற்காக வெளியிலவிடப்பட்டவைகளுமான அந்தஇரண்டுகன்றுகளும் படுத்திருக்கும் மாட்டைத்தை கயிலைவைத்து இருபுறத்திலும் வேகமாகவே ஓடின. அவ்விரண்டுகன்றுகளும் பிடரியின்பக்கத்திற சுச்சரியாகவந்தவுடன் மாட்டைமானது கோபத்துடன் திரும்பிருந்து அந்தஇரண்டுகன்றுகளையும் தூக்கிக்கொண்டு மிகவேகத்துடன் ஓடத்தொடங்கிறது. துன்பப்படுத்துகிற அவ்விரண்டுகன்றுகளாலவரப்பட்டவைகளும் மரிக்கக்கூடியவைகளுமான அந்தஇரண்டுகன்றுகளையும் கண்டதும் மங்கியானவர் இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர்.

"ஸமர்த்தனுனமனிதனும் கம்பீர்யமேகொண்டு முயற்சியுடன் சன்றுகத தொழிலைச்செய்தாலும் விதியால்கிடைக்காத பொருளை விரும்புவதற்கு ஒருபொழுதும் முடியாது. முதலில் பொருள்களில்

லாதவனும் ஜாக்ரதையுள்ளவனும் (பொருளுக்காக) வேலைசெய்கிற வனுமானவனுக்கு ஒட்டகம் இக்கன்றுகளைத் தூக்கிக்கொண்டதால் தெய்வம்செய்த இத்துன்பத்தைப்பாருங்கள். என்னுடைய கன்றுகள் ஒட்டகத்தால்தூக்கப்பட்டுவிடுகிலையடையக் கிளம்பிக்கிளம்பிக் [1]சங்கீ தாளம்போலவும் [2]உன்மாதத்திலகப்பட்ட நரிபோலவும் கஷ்டத்துட னே செல்லுகின்றன. என்னுடையபிரியமானகன்றுகள் ஒட்டகத்திற் கு மணிகள்போலத் தொங்குகின்றன. இது கேவலம்தெய்வத்தாலா கிய காரியந்தான். பலாத்காரமாகச்செய்வதில் பெருஷ்மானது பய னுள்ளதேயுன்று. பெருஷமென்பது ஒருஸமயத்தில்இருக்கக்கூடு மானலும் அதுவும் விசாரிக்கப்பட்டால் தெய்வத்தை அடித்ததாகவே இருக்கும். ஆகையால், ஸுகத்தைஅடைய விரும்புபவனுள்ளமனிதன் இவ்வுலகில் வைராக்கியத்தையே அடையவேண்டும். பொருள்களைத் தேடுவதில் ஆசையில்லாமல் வைராக்கியம்பெற்றமனிதன் ஸுகமாக உறங்குவான். ஜனகருடையவீட்டிலிருந்து பெரிய அரண்யத்திற்குப் புறப்பட்டவரும் எலலாவற்றிலுமிருந்து விடுபட்டவருமான சுகர், 'காமங்கள் எவறறையும் அடைகிறவனும் இக்காமங்கள் எவறறையும் விடுகிறவனுமாகிய (இவர்களில்) எலலாக்காமங்களையும் அடைபவனை விடஅவைகளைவிடுபவன் சிறந்தவனுவான்' என்று கன்றுசச்சொல்லி னர். ஆச்சர்யம்! விரும்பத்தக்க எலலாத்தொழிலகளின்எல்லையை யும் அடைந்தவன் இதுவரையில் ஒருவனுமில்லை. மனிதனுக்குச்சுர த்திலும்பயிரிலும் ஆசைபெருகிக்கொண்டிருக்கிறது. ஆசைபெறற மனிதனே! தொழிலிலிருந்துவிலகு; வைராக்கியம்பெறு; சும்மாஇரு; நீ பலமுறை அவமதிக்கப்பட்டும் வைராக்கியம் எனக்கு வரவில்லையே! பொருளில் ஆசைகொண்டமனிதனே! நீ எவ்வளவுதான் மலிருக்கவிரும்பி என்னுடன் இவ்விதம் வாக்குவாதத்தினிருப்பா யாயின் நீ உன்னை வீணாய்ப்போராசையுடன் சேர்த்துவேண்டாம். சேர்த் துச்சேர்த்து வைக்கபொருளான து உனக்குத் திரும்பவும் திரும்ப வும் நாசமடைகிறதே! மூடனே! பொருளாசையை விண்டவனே! அந்த

1 'சாகதையாவது ஒரேலையை மூன்று வகையாக கொட்டுதல், ஒரு அடியையைந்தாக ஓடுவது சாகம். தெய்வகமாய் ஆடை வகையில் இரண்டாவது துணியை மேலே போர்த்துக்கொள்வது. துணியை மேலே போர்த்துக்கொள்ளுதல் என்பது பழமொழியாகும். இதை சொலல பயிற்சி. இதை 'சாகசோலபுரி' என்றும் சொல்லுவதுண்டு. கல்யோ ழேஷ்டி, நதம், தெய்வகமாய் மேனையாகிய இரண்டாவது பழமொழி சாகதா. பிரிவு அதற்குரிய இரண்டாவது வருகிறது."

2 பிரணயபுத்திகள ஒன்றைபொன்று பொருந்தாத பல பாவங்களைக் கொள்வது ; ஹிஸ், 'மிருகவகளை பிடிக்கும்பொருட்டாக மறைத்தல்' என்பர்.

தப்பொருளாசையை எப்பொழுதுவிடப்போகிறாய்? அந்தோ! என் னுடைய அவிவேகமன்றோ நான் உன்னுடையவிஷயாட்டிற்குத்தக்க மிருகமானேன். நீ தியையில்லாமல்எப்பொழுதும் (என்னைப்) பலவித மான தான்பங்களுடன் சேர்த்துவைக்கிறாய்.மனிதன்பிறரிடம் இவ்வி தமான அடிமைத்தன்மையை ஒருபைமயம் அடையாமலிருக்கமுடியா தோ? முன்னுள்ளவர்களும் பின்னுள்ளவர்களும் ஒருபொழுதும் காம ங்களின்முடிவை அடைந்தவர்களல்லர்.ஆகையால், எல்லாத்தொழில் களையும் தள்ளிவிட்டு நான் அறிவுள்ளவனாகிறேன்; விழித்துக்கொண் டிருக்கிறேன். என்னுடையமனமானது பலதுன்பங்களால் பீடிக்கப் பட்டும் நானுவிதமாகச் சிதறிப்போகாமலிருக்கிறதே! இது நிச்சய மாக வஜ்ரத்தின்னாரத்தால் செய்யப்பட்டு மிகவும் உறுதியாயிருக் கிறது. காமமே! உன்னையும் உனக்கு ப்ரியமாயிருக்கும்வஸ்துவையும் நான் விலக்குகிறேன்.நான்உன்னுடையபிரியத்தைத் தேடிக்கொண்டி ஆத்மாவிற்குரியஸுகத்தை அறியாமற்போனேன். ஏ! காமமே! உனக்குக் காரணத்தைத்தெரிந்துகொண்டேன். ஸங்கல்பத்திலிருந் தன்றோ நீ உண்டாகிறாய். நான் உனக்குக்காரணமான ஸங்கல்பத் தைச் செய்கிறதில்லை. நீ வேருடன் நசிக்கப்போகிறாய். தனத்தை விரும்புவது ஸுகமன்று. ஏதை அடைந்தபின்னும் மிகப்பெரியசிக் தையுண்டாகிறதோ, அடைந்தபொருளின்காரமானது திருதியுவுக்கு ஒப்புாகிறது. அடைபப்பட்டபொருளும் இருக்குமோ இராதோ. சரீரகளைப் பிறவுக்கு அடிமையாகத்தள்ளுவதிலும் அதைஅடைகிற தில்லை அவ்விகமான பொருளைக்காட்டிலும் மிக்க துன்பமானது யாது? அடைந்தபொருளாலும் ஸந்தோஷமடைகிறதில்லை. திரும்ப பவும் அதையேதேடுகிறான். நிரிமையானகங்காஜலம்போல்ப்பொரு ளானது ஆசைகளைப் பெருகவேசெய்யும். இவ்வாசையென்பது என் னைக்கொலுக்குக்க காயிருக்கிறது. நான் அறிவுள்ளவனாகிறேன். காமமே! நான்னைவிடு. என்னுடைய சரீரத்தை அடைந்திருக்கிற (பருநிலி மூதலிய) பூதக்கூட்டமானது நிஷ்டம்போல இச்சரீ ரத்திலிருந்து போகட்டும்; அலைந்து, ஸுகம்போல இதில்லவலிக் கட்டும். காமகுணத்தையும் லோபகுணத்தையும் அனுஸரித்தவைகளும் இச் சரீரத்திலுள்ளவைகளுமான உங்களிடம் எனக்கு ப்ரியமில்லை. ஆகை யால, நான் உங்களெல்லாரையும் தள்ளிவிட்டு ஸத்வகுணத்தையே அடையப்போகிறேன். நான் என்னுடைய சரீரத்திலும் மனத்தி லும் எல்லாப்பிராணிகளிலும் பார்க்கும்படியானகாயாஸத்தில் புகு யையும்பிரம்மஸாரத்திலிருந்ததந்தையும் ப்ரம்மத்திலிடம் மனத்தை

யும் நிலைகிறுத்திக்கொண்டு திரும்பவும் நீ என்னை இவ்
களில் சேர்த்துவைக்காமலிருக்கும்படி பற்றுதலில்லாதவனும் துக்கங்
மில்லாதவனும் ஸுகமுள்ளவனுமாகி உலகங்களில் விளையாடுபாசி
றேன். ஓ! காமமே! உன்னால் ஏவப்படுமிம் எனக்கு வேறுகதியில்லை.
எப்பொழுதும் பேராசைக்கும் சோகதத்திற்கும் சிரமத்திறகும் நீயே
காரணமாகிறாய். பொருள்சேர்க்குங்காலத்திலுண்டாகும் பெரிய துக்க
மானது எல்லாவறறையும்விட மிகப்பெரியதென்று நினைக்கிறேன்.
பொருளிலிருந்துவிலகியமனிதனை ஞாதிகளும் மித்திரர்களும் அவ
மதிக்கிறார்கள். பொருளிலலாதவனுக்குப் பலவாயிரம் அவமதிப்புக்
களாலுண்டாகும் மிகக்கஷ்டமான தோஷங்களுண்டு. பொருளில்
சிறிது ஸுகபாகமிருப்பதும் துக்கங்களாலுண்டுபண்ணப்படுகிறது.
பொருளானது இவனுடையதென்றகாரணத்தால் மனிதனை முதலில்
திருடர்கள் அடிக்கிறார்கள்; பலவிதமான தண்டனைகளாலும் துன்
பப்படுத்துகிறார்கள்; எப்பொழுதும் பயத்தை உண்டுபண்ணுகிறார்
கள். பொருளில்ஆசைபற்றியிருப்பது துக்கமென்று நெடுங்காலமாக
என்னால் அறியப்பட்டது. ஏ! காமமே! நீ எதைஎதைப் பிடிக்கி
றாயோ அதைஅதையே விரும்பிக்கொண்டுசெல்லுகிறாய்; உண்மை
யைஅறியாதவனும் ஸந்தோஷப்படுத்தமுடியாத பாலனும் தீயைப்
போலத் திருப்தியடையாதவனுமாகிறாய். நீ எளிதில் கிடைப்பதையும்
அறியவேயில்லை. கிடைக்கஅரிதையும் நீ அறியவேயில்லை. பூர்
ணம்போலப் பூர்த்தியடையக்கூடாத நீ என்னை துக்கங்களுடன்
சேர்த்துவைக்க விரும்புகிறாய். ஏ! காமமே! திரும்பவும் உன்னால்
இப்பொழுது நான் அடையக்கூடியவனல்லன். யதிருச்சையாக நேர்
ந்த நிரயங்களதகால வெறுப்புமானது நான் பெரிய கிவ்ருத்தியைஅடை
ந்து இப்பொழுது! காமங்களைச் சிந்தியாதவனுமிருக்கிறேன். இவ்
வுலகில மிக்கஆனந்தங்களை நான் பொறுத்திருக்கிறேன். புத்தியில்
லாதநான் தெரிந்துகொள்ளவில்லை. பொருள்காரத்தால் அவமதிக்
கப்பட்டநான் எல்லா அங்கங்களிலும் தாபமிலலாமல் படுத்திருக்கி
றேன். ஏ! காமமே! மனதிலுள்ளயாவற்றையும் விலக்கிவிட்டு
உன்னைத்தள்ளிவிடுகிறேன். ஏ! காமமே! மூக்கில்கயிறுபோட்டு
அடக்கிய காளையுடன் விளையாடுவதுபோல என்னுடன்கூட நீ திரு
ம்பவும் விளையாடப்போகிறதில்லை. சிந்திக்கிறவர்களை நான் பொ
றுத்துக்கொள்ளுவேன். (பிறரால்) ஹிம்ஸிக்கப்பட்ட நான் (அவர்
களை) ஹிம்ஸிக்கப்போகிறதில்லை. பகைக்கும்படி பேசப்பட்ட நான்

---

1 போகங்களை.

அந்தஅப்ரியத்தைப் பாராட்டரமல் பிரியமாகப்பேசுவேன். திருப்தியுள்ளவனும் தன்னிலேயிருள்ள இந்திரியங்களுள்ளவனும் எப்பொழுதும் கிடைத்ததுகொண்டு ஜீவிப்பவனுமான நான் எனக்குச்சத்ருவானஉன்னைத் திருப்தியுள்ளவனாகச்செய்யப்போகிறதில்லே. வைராக்யத்தையும் ஸுகத்தையும் திருப்தியையும் இந்திரியங்களின் அடக்கத்தையும் ஸத்யத்தையும் கர்மேந்திரியங்களினடக்கத்தையும் பொறுமையையும்ஸல்லாப்ராணிகளிடத்திலுமுள்ளதயையையும்சரணமென்றடைந்தவனாக என்னே அறிந்துகொள். ஆகையால், (மோக்ஷத்திற்குச்) செல்லும் என்னைக் காமமும் லோபமும் த்ருஷ்ணையும் கார்ப்பண்யமும் விட்டுவிலகவேண்டும். இப்பொழுது காமத்தையும் லோபத்தையும் கோபத்தையும் க்ரூரத்தனத்தையும் தள்ளிவிட்டு ஸத்வகுணத்திலிருக்கிறேன். இப்பொழுது லோபத்திறகிடானகிலேயை அடைந்து புத்தியிலலாமல் நான் துக்கத்தை அடையமாட்டேன். காமங்களுள் எவன் எதை விடுகிறானே அவனுக்கு அது ஸுகத்தைப் பெருகச்செய்வதாகும். காமத்திறகிபட்டுச்செல்லுகிறவன் எப்பொழுதும் துக்கத்தையேஅடைவான். காமத்தைச்சேர்ந்தவற்றையும் (அதற்குக்காரணமான) ரஜோகுணத்தையும் மனிதன் விலக்கிக்கொள்ளவேண்டும். துக்கமும் லஜ்ஜையிலலாமையும் ஸந்தோஷமில்லாமையும் காமக்ரோதங்களிலிருந்து உண்டாகின்றனவாகும். முதலேவனிறகிலத்தில் குளிர்ந்தமதிலைஅடைவதுபோலப்ரம்மத்தை அடைந்த இந்தநான் கர்மங்களிலிருந்து ஒழிவையடைகிறேன்; துக்கங்களில்லாதவனாகிறேன்; ஸுரேஸுமாயிருக்கிறேன். இவ்வுலகத்திலுள்ள விஷயஸுகமும் நுவோ தேவலோகத்திலுள்ள பேரின்பமும் எதுவோ இவ்விரண்டு ஸுகங்களும் ஆசையைவிடுவதால் உண்டாகும்ஸுகத்திறகுப் பதினறிலொருபாகமாகிறதும் ஒப்பாகா. நான் உத்தமமான சதருபோன்றதும் ஸ்நாலதேஹத்திலிருந்து [1] புழுவாவதுமான காமத்தைக்கொன்று கொல்லமுடியாத ப்ரம்மமென்னும்பட்டணத்தையடைந்து அரசன்போலவஹிக்கிறேன்" என்று சொன்னர். இந்தப்புத்தியையடைந்து வைராக்யம்பெற்ற மந்தியானவர் எல்லாக் காமங்களேயும்தள்ளிவிட்டு ப்ரம்மத்தை அடைந்து பேரானந்தத்தை அடைந்தார். கன்றுக்குட்டிகள் காசமடைந்தகாரணத்தால் மந்தியானவர் மோக்ஷத்தைஅடைந்தார். அவர் காமத்திறகுரலமான

---

1 ' அன்னமயம், பராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், ஸாக்ஷித்வம்' என்று ஏழு; இந்த மஹத்தத்வமே காமமென்று சொல்லப்படும்.

அஜ்ஞானத்தை அறுத்தார்; அதனால் உத்தமமானகதியை அடைந்தார். இவ்விஷயத்திலும் விதேஹதேசத்துக்குஅரசரும் மிக்கஅடக்கமுள்ளவருமான ஜனகரால்பாடப்பட்டதும் மோக்ஷத்தைப்பற்றியதுமான' இந்த ச்லோகத்தையும் உதாஹரிக்கிருர்கள். அதன்பொருளாவது:—'என்னுடைய பொருளானது அளவில்லாததுபோலிருப்பினும் எனக்கு ஒன்றுமில்லை. மிதிலையானது எரிக்கப்பட்டாலும் என்னுடையதொன்றும் எரிக்கப்படுகிறதில்லை' என்பது. இதேவிஷயத்தில் வைராக்யத்தைப்பற்றிப் போத்யரால்சொலலப்பட்ட இந்த ச்லோகத்தையும் உதாஹரிக்கிருர்கள். யுதிஷ்டிர !அதையும் அறிந்துகொள். ஸஹஸ்ரஷன்புத்ரனான அரசன் வைராக்யத்தால் சாந்தியை அடைந்தவரும் சாஸ்த்ராதிவால் த்ருப்தியுள்ளவரும் சாந்தருமான போத்யரென்னும் ரிஷியைநோக்கி, 'ப்ராஜ்ஞர்களிற்பெரியவரே ! நீர் எந்தஅறிவை அடைந்து சாந்தியுள்ளவரும்ஸுகமுள்ளவருமாய் ஸஞ்சரிக்கிறீர்? சாந்தியைப்பற்றிய உபதேசத்தை எனக்கு அறிவிக்கவேண்டும்' என்றுவினவினன். போதயர், 'நான்உபதேசம்பெற்றிருக்கிறேன். இவ்வுலகில் ஒருவனுக்கும் நான் உபதேசஞ்செய்கிறதில்லை. அவ்வுபதேசத்திற்குரியலக்ஷணத்தை நான் சொல்லுகிறேன். அதன் கருத்தைத் தாளுகத் தெரிந்துகொள்ளவேண்டும். பிங்களைஎன்னும் வேசி, அணில், ஸர்ப்பம், வனதிலுள்ள வண்டுகளின்சுழற்சி, லக்ஷ்யத்தை அடிப்பவன், யுவதி இவ்வாறுபேர்களும் எனக்குக் குருக்களாகிருர்கள்' என்று சொன்னர். அரசனே! ஆசையானது பலமுள்ளதாகும். ஆசையில்லாமை பெரியஸுகமாகும். பிங்களையென்னும் வேசியானவள் ஆசையைஆசையில்லாததாகச்செய்துகொண்டு ஸுகமாகஉறங்கினள். மாம்ஸத்துடன்கூடிய அணில்கள்கண்டு மாம்ஸமில்லாதவைகள் அடிக்கடிநடங்கவும் அத்தமாம்ஸத்தைவிட்டதால் அணிலானது ஸுகமாகவளர்ந்தது. வீட்டைஉண்டுபண்ணிக்கொள்வது துக்கத்தின்பொருட்டன்றி ஒருபொழுதும் ஸுகத்தின்பொருட்டன்று. ஸர்ப்பமானது பிறரால் செய்யப்பட்ட வீட்டில்புகுந்துகொண்டு ஸுகமாகவளர்கிறது. மூங்கிளையிருப்பவர்கள் வண்டுகளென்னும் பக்ஷிகள்மீதாலப் பிரயாணிக்குங்கு தோஹமில்லாமலே பிக்ஷையெடுக்கும்விருத்தியை அடைந்து ஸுகமாகஜீவிக்கிறார்கள். மண்டானது எல்லாப்பூக்களிலிருந்தும் ஸாரத்தைஎடுத்துக்கொள்வதுபோல புத்திவுள்ளமனிதன் சிறிதும்பெரியதுமான சாஸ்த்ரங்களிலிருந்துஸாரத்தையெடுத்துக்கொள்ளவேண்டும். மூக்ஷுபதத்தை அடிக்கும் ஒருமுனிதன் அம்பின்லக்ஷியத்தில் கண்ருக்கப்பற்றுதலுள்ள மன

முள்ளவனுகி அருகிற்செல்லும் அரசனையும் அறிகிறதில்லை. பலபேர் களுக்கு எப்பொழுதும் கலகமுண்டு. இரண்டுபேர்களிருந்தால் பேச்சு நிச்சயமாகவரும். ஆகையால், [1]ஒருபெண்ணின்கையிலுள்ள ஜ்ரூறைவளையல்போல ஒருவருக ஸஞ்சரிக்கப்போகிறேன்'' என்று சொன்னர் '' என்றார்.

நூற்றெழுபத்தேழாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பிரபஞ்சம் அநித்யமென்றறிந்துண்டாகும் விரக்தியா னது ஸுகத்தற்குக் காரணமென்னும் விஷயத்தில் பிர மாணமாக பிரஹ்லாதருக்கும் அஜகரவ்ருத்தியுள்ளமுனிவ ருக்கும் நடந்தஸம்பாஷணையைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "ஒழுக்கங்களே அறிந்தவரே! மனிதன் எந்த நடக்கையால் சோகமில்லாமல பூமியில ஸஞ்சரிக்கக்கூடும்? மனி தன் எதைச்செய்துகொண்டு உலகதில உததமமானகதியைப்பெறு வான்?" என்றுகேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

" இவ்விஷயத்திலும் ப்ரஹ்லாதருக்கும் அஜகரவ்ருத்தியிலுள்ள ஒருமுனிவருக்கும் நடந்தஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத் தை உதாஹரிக்கிறார்கள். புத்தியுள்ளவரும் அறிவுள்ளவர்களில மிகச்சிறந்தவருமான ப்ரஹ்லாதராஜா, உறுதியானமனமுள்ளவரும் (ராகத்வேஷங்களின்) துன்பமில்லாதவருமாய ஸஞ்சரிக்கும் ஒரு ப்ராம்மணரைநோக்கி ப்ரார்தனைசெய்யதொடங்கினர். 'ப்ரஹ்மணரே! தம்மிலியிருப்பவரும் சக்தியுள்ளவரும் தனையுள்ளவரும் அடக்கமுள்ளவரும் காரியவிருப்பமில்லாதவரும் அஸூயையில்லாத வரும் ஸத்தியவாகருள்ளவரும் வெகுமானம் பெற்றவருமல்லறிவுள் ளவருமான நீர் உலகதத்ல பாலகன்போல ஸஞ்சரிக்கிறீர். நீர் லாபத் தைவிரும்பவேஇலலை; பொருள் நஷ்டங்களும் சோகமடையவிலலை. எப்பொழுதும் திருப்தியுள்ளவர்போல ஒன்றையும் நினையாதவரா யிருக்கிறீர்; காமதினால்வகத்தால பிரஜைகள் அபஹரிக்கபடும் பொழுது மனம்லலாதவர்போலவும் அறமும் பொருளும் இன்பமுமா

---

1 ஒரு பெண்ணுடைய கட்டுப்பாடுகளுக்குத் தெரியாமல் அதிகம் ஒருவருட்டோஷமுமசெய்யச்சம்மதம் கொண்டுகொண்டிருக்கும்போது கை யிலுள்ளவளையல்களின் பாரமும் மாறி மாறியிருக்கவாய்ப்பு. அப்படி தாங்கள் வசங்களிலுடைதுவிட்டு ஒவ்வொருபடியல வகையிலு வைதுகொண்டி ருப்பதாக ஸ்ரீ பாகவதத்திலும் உதாபடுத்தியுள்ளபடி பழையபுரா.

கியகாரியங்களில் முயற்சியில்லாதவர்போலவும் காணப்படுகிறீர். தர்மத்தையும் தன்த்தையும் நீர் அடையமுயலவில்லை. காமத்திலும் நீர் இருக்கவில்லை; இந்திரியங்களுக்குரிய விஷயங்களை ப்ரியமாக நினையாமல் அவைகளிலிருந்துவிடுபட்டவராய் ஸாக்ஷிபோல ஸஞ்சரிக்கிறீர். முனிவரே! உம்முடையஅறிவு எது? சாஸ்த்ரம் எது? வ்ருத்தி எது? ப்ரார்ம்ஜனரே! இவ்வுலகில் எதை ஸ்ரேயஸென்றுநினைக்கிறீரோ அதை எனக்குச் சொல்லவேண்டும்' என்றுகேட்டார்.

இவ்விதம் கேட்கப்பட்டவரும் அறிவுள்ளவரும் உலகத்திற்குரிய தர்மவிதியையறிந்தவருமான அந்தப்ராம்மணர் எளியதும் பொருளுள்ளதுமான வசனத்தால் ப்ரஹ்லாதரைநோக்கிச் சொலலத் தொடங்கினர். 'ஓ! ப்ரஹ்லாத! காரணமின்றிப் பிராணிகளுக்குண்டாகும் பிறப்பையும் குறையையும் வளர்ச்சியையும் விநாசத்தையும் பார். நான் சந்தோஷமடைகிறதுமில்லை; துர்க்கமடைகிறதுமில்லை. (பிராணிகளிடம்) ப்ரவ்ருத்திகள் ஸ்வபாவத்தாலேயே இருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஸ்வபாவதத்தைப்பறறி உண்டாகும்ப்ரவருத்திகள்யாவும் ஒருவனாலும் செய்யத்தக்கவைகளல்ல. ப்ரஹ்லாத! சேர்க்கைகள் பிரிவையே முக்கியமாகக்கொண்டவைகளென்றும்கூட்டங்கள் முடிவிலநாசமடைகின்றவைகளென்றும் தெரிந்துகொள். ஒன்றிலும் மனத்தைவைக்கக்கூடாது. குணங்களுடன்கூடியவைகளும் நாசமுள்ளவைகளுமான பிராணிகளைப்பார்க்கிறவனும் பிறப்பு இறப்புக்களை அறிந்தவனுமானமனிதனுக்குச் செய்யவேண்டியது என்னஇருக்கிறது? பெரியகடலிலுள்ள ஜலத்திலுண்டானவைகளான பெரியசரீரங்களுக்கும் சிறியசரீரங்களுக்கும் விநாசத்தை முறையே பார்க்கிறேன். அஸுரரிலிருந்தே! பூமியில் பிறந்தவைகளானஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமானபிராணிகளினத்திற்கும் கோரில மிருத்யுவைப் பார்க்கிறேன். ஆகாயத்தில்ஸஞ்சரிக்கிறவர்களும் அதிகபலமுள்ளவர்களுமான அஸுரர்களுக்கும் உத்தமமானபறவைகளுக்கும் காலத்தைமீறுமல் மிருத்யு கிளம்புகிறான். தேவலோகத்தில் ஸஞ்சரிப்பவைகளும் சிறியவைகளும் பெரியவைகளுமான ஒளிகளும் காலத்தைமீறுமல் விழுவதைக் காண்கிறேன். இவ்விதம் மிருத்யுவால் தொடரப்பட்டபிராணிகளை கண்முதலபார்க்கிறவனும் [1]யாவற்றையும்பொதுவாகஅறிந்தவனுமானஎன்செய்யவேண்டியதைச்செய்துகொண்டு ஸுகமாகஇருக்கிறேன்; யாதொன்றையுமே

1 'எல்லாவற்றிற்கும் பொதுவான ப்ரம்ம ஜ்ஞானத்தைஅடைந்தேன்' என்பது மேலுரைபாடம்.

கிடைத்த மிகப்பெரிதானஆகாரத்தையும் புஜிக்கிறேன். திரும்பவும், போஜனமில்லாதவனைவே பலநாள்களும் பீடிக்கிறேன். திரும்பவும், பலருணங்களுடன்கூடியதும் பலவகையுமான அன்னத்தை னீனைக்கும் போஜனம்செய்விக்கிறார்கள். திரும்பவும் சிறிதும், திரும்ப அதிலும்சிறிதும்,மதுரமமயம்ஒன்றும்கிடையாமலுமிருக்கும்.ஒருஸமயம் நொய்யையும்தின்பேன் ; பிண்ணாக்கையுந்தின்பேன் ; [1] சாலியன்னத்தையும் மாம்ஸங்களையும் புஜிப்பேன் ; திரும்பவும் பலவிதமானபக்ஷியங்களையும் பக்ஷிப்பேன். ஒருஸமயம் கட்டிலில்படுப்பேன் ; திரும்பவும் பூமியிலுமுறங்குவேன். ஒருஸமயத்தில் மாடியிலும் எனக்குப் படுக்கை கிடைக்கும் மரவுரிகளையும் சணலால்செய்யப்பட்டவஸ்திரங்களையும் பட்டுக்களையும் தோல்களையும் தரிப்பேன் ; ஒருஸமயத்தில் பெரியவிலைபெற்ற ஆடைகளையும் உடுப்பேன் ; தெய்விகமாய்வந்ததும் தர்மவழிவிட்டு விலகாததுமானபோக்யவஸ்துவை நான் நிராகரிப்பதில்லை; கிடைக்கமிகவரிதானஇவ்விதவஸ்துவைவிரும்புகிறதுமில்லை ; அசைவறறதும் அழிவில்லாததும் சுபமும் சோகமில்லாததும் பரிசுத்தமும் ஒப்பிலலாததும் அறிஞர்கள்விரும்பத்தக்கதில்லையிலிருப்பதும் மூடர்களால்விரும்பப்படாததும் அனுஷ்டிக்கப்படாததுமான இந்த [2] அஜகரவ்ரதத்தைப பரிசுத்தனுகிச் செய்துகொண்டிருக்கிறேன். உறுதியானபுத்தியுள்ளவனும் ஸ்வதர்மத்திலிருந்துதழுவாதவனும் மிகக்குறைந்த உலகவாழ்க்கையுள்ளவனும் பராபரமானப்பிரதத்தைஅறிந்தவனும்பயத்தையும் பேராசையையும் அவிவேகத்தையும் மறுமுள்ளதோஷங்களையும்போக்கியவனும் பரிசுத்தனுமாகி அந்த அஜகரவ்ரதத்தைச்செய்துகொண்டிருக்கிறேன் ; ஒருவசைபடாதகனிகளும் பக்ஷியங்களும் போஜ்யங்களும் குடிக்கத்தக்கவைகளுமுள்ளதும் விதியின்பரிபாகத்தால வெவ்வேறான தேசகாலங்களுள்ளதும் மனதற்குஸுகமும் லோபிகளால் அனுஷ்டிக்கப்படாததுமான இந்தஅஜகரவ்ரதத்தைப பரிசுத்தனுகிச் செய்துகொண்டிருக்கிறேன் ; 'இதுவேண்டும் இதுவேண்டும்' என்ற பேராசையால்பீடிக்கப்பட்டதும் பொருளடையாததும் சோகப்படுவதுமானஉலகதைத நன்றாகக் கவனித்துப்பார்த்து உண்டான ஞானத்துடன் இந்தஅஜகரவ்ரதத்தைப் பரிசுத்தனுகிச்செய்துகொண்டிருக்கிறேன்; பொருளடையவேண்டியகாரணத்தால நானுலகில்

1 சம்பாவெல.

2 அஜகரமென்பதும் ஒரு பாம்பு. அது தன்அருகிலுள்ளதைத் தவிர முயற்சி தலாமல் ஆகாரத்தைத் தேடவே தன்சக்தியைச்செலவுசெய்கிறதில்லை. அதுபோல் செய்வது அஜகரவ்ரதமாகும்.

லாதப்ரபுவை அழித்துப் பலவிதமாகக் கஷ்டப்படுகிம் இந்தஉலகத்தை கன்முகப்பார்த்து வைராக்யத்தில் விருப்பமுள்ளவனும் மனத்தைஜயித்தவனும் நல்லஅடக்கமுள்ளவனும் பரிசுத்தனுமாய் இந்த அஜகரவ்ரதத்தைச்செய்துகொண்டிருக்கிறேன். ஸுகமும் துக்கமும் பொருள நஷ்டமும் பொருள்லாபமும் உத்ஸாஹமும் சோர்வும் மரணமும் ஜீவனமும் தெய்வத்தால் நிலைபெற்றனவாயிருக்குமென்று உண்மையாகத் தெரிந்துகொண்டு நான் பரிசுத்தனுகி இந்த அஜகரவ்ரதத்தைச் செய்துகொண்டிருக்கிறேன். பயமும் ஆசையும் அவிவேகமும் அஹங்காரமும்போனவனும் தைரியத்துடனும் ஆலோசனையுடனும் நிச்சயத்துடனும்கூடியவனும் நல்லஅடக்கமுள்ளவனுமானான் கிட்டவந்து கிடைத்ததைப் புஜிக்கும் மலிப்பாம்புகளைப்பார்த்து இந்த அஜகரவ்ரதத்தைப் பரிசுத்தனுகிச் செய்துகொண்டிருக்கிறேன். படுப்பதிலும் உட்காருவதிலும் நியமமில்லாதவனும், இயற்கையில் இந்திரியங்களின் அடக்கமும் நியமமும் வ்ரதமும் ஸத்யவசனமும் பரிசுத்தியுமுடையவனும், பயன்களின் சேர்க்கையைவிட்டவனும்,நல்லஸந்தோஷமுள்ளவனும், பரிசுத்தனுமான நான் இந்த அஜகரவ்ருத்தியைச் செய்துகொண்டிருக்கிறேன். [1]ஆசைப்படத்தக்கவஸ்துக்களைவிரும்பி முடிவில்துன்பமடைகிறதும் ஆத்மரூபத்தைவிட்டுவிலகியதும் ஆசைகொண்டதும் வரையறையில்லாததுமானமனத்தைக்கண்டு அழிவடைந்த நான் அந்தமனத்தை ஆத்மரூபத்தில்முடிவுபெறுதிருக்கும்படி ஆக்க வேண்டி இந்த அஜகரவ்ரதத்தைப் பரிசுத்தனுகிச் செய்துகொண்டிருக்கிறேன். புத்தியையும்மனத்தையும் ஆஸரித்துச்செல்லாமல் (நிலவறத்திலி) விரும்பத்தக்கஸுகம் அரிதாயிருப்பதும் அவ்விதஸுகம் நிலையற்றதாயிருப்பதுமாகிய அவ்விரண்டையும் கன்முகக்கண்டநான் இந்தஅஜகரவ்ரதத்தைப் பரிசுத்தனுகிச்செய்துகொண்டிருக்கிறேன். இந்த அஜகரவ்ரதமானது புத்திசாலிகளும் கம்மீர்த்தியைவெளிப்படுகிறவர்களும் தம்மதத்தையும்பிறமதங்களையும்பற்றி ஆலோசனைசெய்கிறவர்களும் மிகச்சடினமாகத் தர்க்கங்களைச் சொல்லுகிறவர்களுமான கவிகளாலும் பெரும்பாலும் கொண்டாடப்பட்டிருக்கிறது. செவ்வலில் ஆறியில்லாத மனிதர்களால் வெல்லவேமுடிச்சயஞ்செய்யப்பட்டதும் முடிவுபெறாததும் நிச்சயத்தையும்தோஷங்களின்கலையும் அடையாததுமான இந்தமதியேபோக்கை காசத்திற்குக்காரணமென்று தெரிந்துகொண்டு நான் தோஷங்களையும்பராசையையும் விலக்கி

1 'தூரியாசாகுகளாலும் பலஜன்மங்களாலும் ஸம்பாதிக்கப்' என்பது பழைய உரை.

விட்டு மனிதர்களிடம் விளையாடிக்கொண்டிருக்கிறேன்' என்று சொன்னர். பெரியபுத்தியுள்ளவனுக்தமனிதன் ஆசைய்யவிலக்கிக்கொண்டு இவ்வுலகில்அஜகரத்தால்செய்யப்படும்வ்ரதத்தைச்செய்கிறானே அவன் பயமும் பேராசையும் அவிவேகமும் கோபமும்இல்லாதவனும் ஸுகமுள்ளவனுமாக இவ்விரதத்திற்குரிய ஸந்தோஷத்துடன் ஸஞ்சரிப்பான்' என்று சொன்னர்.

நுற்றெழுபத்தேட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், அறிவுதான் ஸுகத்தைத்தக்காணம் என்னும் விஷயத்தில் இந்திரனுக்கும் காச்யபருக்கும் நடந்த ஸம்பாஷணையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! மனிதனுக்கு (அஜகரவ்ரதத்திலுள்ளதினைமக்கு) பக்துக்களோ கர்மமோ பொருளோ அறிவோ இவ்வுலகில் எதுகாரணமாகும்? கேட்கப்பட்டநீர் இதைஎனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அறிவானது பிராணிகளின் நிலைமைக்குக் காரணமாகிறது. அறிவே பெரியலாபமென்று கருதப்படுகிறது. அறிவு உலகத்திலுள்ள மோக்ஷத்திற்குக் காரணமாகும். அறிவானது ஸ்வர்க்கமென்பது ஸாதாரணமாகச்சொல்லுகிறது. பலியும் ப்ரஹ்லாதரும் கழுதியும் மங்கியும் ஜரூர்வர்யத்திற்கு அழிவுண்டானபோது அறிவாலன்றோ பயனை அடைந்திருக்கிறார்கள். அவ்விதம் அறிவைவிடப்பெரிது என்னவிருக்கிறது? இவ்விஷயத்திலும் இந்திரனுக்கும் காச்யபருக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தைக் உதாரணிக்கிறார்கள். யுதிஷ்டிர! அதனை அறிந்திரு. தனமுள்ளவனும் கர்வமுள்ளவனுமானஒருவனும், கவலையுள்ளவனும்,சிக்கனமாகவும் கருமனஸுமைந்ரியுமுள்ளவனுமான காச்யபனென்பவனுக்கும் நடந்ததான இந்த பழம்பிரதிஹாஸத்தைக் கேட்பாயாக. துன்பப்படும் வக்ரக்காச்யபன் உடனே கோபமடைந்து வைதரியில்லாமல், 'நான் மரித்துப்போகிறேன். இவ்வுலகில் பிராருப்தமல்லாதவனுக்கு உயிர்போவதுபோல் யாதொருபயனும் இல்லை' என்று சொன்னான். இவ்விதஞ்சொல்லிமரிக்கவிரும்பாமலிருக்கவும் பிழைத்திருப்பவனும் பிரார்ப்தமல்லாதவனும், அறிவில்லாதவனும் சிலதினுபயனமாமுள்ளவனுமான காச்யபனைநோக்கி, இந்திரன் கரீஉருவத்துடன்வந்து சொலலத்தொடங்கினன்.

'ஓ! காஸ்யப! எல்லாப்பிராணிகளும் எல்லாவிதத்தாலும் மானிடப்பிறவியைப் விரும்புகின்றன. மானிடப்பிறவியிலும் பிராம்மணத்தன்மையை யாவருமே கொண்டாடுகிறார்கள். நீ மானிடப் பிறவியும், அதிலும்பிராம்மணனும், அதிலும்வேதங்களைக்கற்றவனுமாயிருக்கிறாய். அடைவதற்குமிக்க அரிதான இப்பிறவியையடைந்தும் அறியாமையால் நீ மரிப்பது தகுதியன்று. 'எல்லாம் அபிமானத்துடன்கூடியதானால் நாசமாகும்' என்றுகூறும் வேதம் உண்மையே. காஸ்யப! மிகவும் ஸந்தோஷித்தக்க ரூபமுள்ளவனாயிருக்கிறாய். பேராசைகொண்டு இப்பிறவியை அவமதிக்கிறாயே? அந்தோ! இவ்வுலகில் எவர்களுக்குக் கைகளிருக்கின்றனவோ அவர்களுக்குக் காரியவிந்தியுண்டு. இவ்வுலகில் சதுஷ்பதபிறவிகளுக்குக் கைகளிருக்கின்றனவோ அந்தப்பிறவிகளில் மிக்க ஆசையுள்ளவனாயிருக்கிறேன். உனக்கு ரூப பொருளில்லாதபடியால் எங்களுக்குக் கையுள்ளபிறவிகளில் ஆசையிருக்கிறதுபோலையடைவதைவிட வேறுபெரியலாபம் ஒன்றுமில்லை. பிராமணர் கையிலாதிருப்பதால் காகங்கள் (தைத்த) முள்ளை எடுக்கமுடியாதவர்களாயிருக்கிறோம்; அந்தத்தில் கடிக்கும் பலவிதமானஜந்துக்களைத் தின்னுகிறோம். இவ்விதமின்றி எவர்களுக்குத் தெய்வாதீனத்தால் கைகளிருக்கின்றனவோ அவர்கள் கடிக்கும் புழுக்களைஅங்குத்திலிருந்து எடுத்தெறிந்திடுகிறார்கள்; சொரிந்துகொள்கிறார்கள். மலமூத்ரம் பரிஷ்கரித்துக்கொண்டு கைகளையும் செய்துகொள்ளுகிறார்கள்; ஆஸனமையும் அங்கரக்ஷணத்தையும் பண்ணுதலையும் கார்யத்திலும் மனிதருடனாவது, தெய்வத்துக்குரியதாகவோ; உலகுதிலிபகனைப் போலே (?) நடத்தி ஆயுளைவகிக்கிறார்கள்; கர்மாயைவண்டியிழுக்கும்படி. பிராம்மணர்கள், மற்றும் சில பாபங்களாலும் கமக்கு மேலண்டி யிழுக்கும்படி ஸ்வாமியாலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கர்மவிலாதவைகளும் கர்மங்களைவிட்டு மோக்ஷத்தைவேண்டுகிறவர்களும் ஸர்வபூதங்களையும் தன்போலே பாவிக்கிறவர்களும் ஸர்வபாபங்களையும் நாசஞ்செய்கிறவர்களுமான பிராம்மணர்களைத் தர்மவிரோதமாக நிந்தித்தல் கூடாது. ஸர்வபாபங்களையும் நாசஞ்செய்கிறவர்களுமான பிராம்மணர்களைத் தர்மவிரோதமாக நிந்தித்தல் கூடாது. முனிவனே! நீ பாபங்களை கரிக்கும் புழுவும் எலியும் பாம்பும் தவளையும் மற்றுமுள்ளபலவகைப்பிறவிகளிலும் பலமுறைபிறந்திருக்கிறாய். காஸ்யப! நீயிவ்வளவுபிறவிகளிலும் பிராம்மணனாகப்பிறந்திருக்கிறாய். சூரும்பர்களின் [1] ராஜனாகிய நீ எல்லாப்பிராணிகளுக்கும் (மேலான) தர்மோபதேசம்பண்ணுபவனாயிருக்கிறாய். இந்தப் புழுக்கள் என்

1 'சூரும்பர்' என்பது பாடபேதம்.

னைப் பிடுங்கித்தின்னுகின்றன. இவைகளையெடுத்தெறியத்தக்கசக்தி எனக்கில்லை. கையில்லாமையால் எனக்குள்ள இந்தஅவஸ்தையைப் பார். செய்யத்தகாததாவமாகுமென்றும் இதையும்விட மிகவும்பாவமான வேறுபிறப்பில் விழாமலிருக்கவேண்டுமென்றும் எண்ணிமட்டும் நான் இந்தச்சரீரத்தை விடாமலிருக்கிறேன். பாவப்பிறவிகளின் நடுவில் நான் நரிப்பிறவியை அடைந்திருக்கிறேன். இதைக்காட்டிலும் மிகப்பாவமுள்ளவைகளான வேறுபலகெட்டபிறவிகளிருக்கின்றன. சிலர் பிறவியிலேயே மிக்கசபமுள்ளவர்களாயிருக்கிறார்கள். வேறு சிலர் மிகவும்துக்கமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவ்வுலகில் ஒரிடத்திலும் ஒருவனுக்கும் ஸுகமேஉறுதியாயிருப்பதை நான் காணேன். மனிதர்கள் பிரபுத்தன்மையை அடைந்து பின் ராஜ்யத்தைவிரும்புகிறார்கள்; பிறகு, ராஜ்யத்திலிருந்து தேவத்தன்மையைவிரும்புகிறார்கள். தேவத்தன்மையிலிருந்து இந்திரபதத்தையும் விரும்புகிறார்கள். நீ உன்னிஷ்டம்போல் ப்ரபுவாகவேயாகலாம்; ஆகிலும், ராஜாவாக மாட்டாய்; தேவதையுமாகமாட்டாய்; (ஒருஸமயம்) தேவத்தன்மையையுமடைந்து இந்திரபதவியையும் அடைந்தாலும் ஸந்தோஷமடையவே மாட்டாய். விரும்பியவஸ்துவை அடைந்தும் திருப்தியுண்டாகிறதில்லை. [1]தாகமானது தண்ணீரால சாந்தியடைகிறதில்லை. தீயானது ஸமித்துக்களால் மிகவும்ஜ்வலிப்பதுபோல அந்தஆசை திரும்பவும் அதிகமாகஜ்வலித்தும். உன்னிடத்திலேயே சோகமும் இருக்கிறது. அதுபோல உன்னிடத்தில் ஸந்தோஷமுமிருக்கிறது. ஸுகம்துக்கம்இரண்டுமிருக்கின்றனவே; அவ்விஷயத்தில் அழுகையென்ன? எல்லாவிதமான காமங்களுக்கும் சர்வங்களுக்கும் மூலமானகருவிக்கூட்டத்தையும்புத்தியையும் பறவைகளைக் கூட்டிலடைப்பதுபோலச் சரீரத்தில அடைத்துத்தடைத்துவைத்திருப்பவனுக்குப் பயமிராது. இரண்டாவதுதலை அறுபடுமென்பது ஒரிடத்திலுமில்லை. மூன்றுவதுகையையறுப்பதென்பதுமில்லை. ஆகையால், பயமில்லை. நடுயை அறியாத மனிதனுக்கு ஒருவிஷயத்திலும் ஆசையுண்டாகாது. தொடுவதாலும் பார்ப்பதாலும் கேட்பதாலுமன்றோ ஆசையுண்டாகிறது. கள்ளையும்மட்டவர்களென்றபறவைகளின் மாம்ஸத்தையும் நீ நினைக்கிறவனல்லன். அவ்விரண்டையும்விடச் சிறந்ததானபக்ஷியம் நின்னிடத்திலுமில்லை. காஸ்யப! மூன்று நல்ல புழுக்கப்படாதவைகளும் மற்றுமுள்ளவைகளுமானபிராணிகளிடமுள்ள பக்ஷியங்களும் போஜ்

1 யயாதியானவன் தாகத்தை வதைத்து; அதை நிவர்த்திக்கும் மருந்தெனன்றித் தண்ணீரால்தணிவதில்லை.

யங்களும்எவைகளோ அவைகளின்றினைப்பே உனக்கில்லை. உண்ணு மலிருப்பதும் தொடாமலிருப்பதும் பாராமலிருப்பதுமாகிய இவ்வித நியமமானது மனிதனுக்கு ஸ்ரேயஸென்றுநினைக்கிறேன். ஸந்தேஹ மில்லை. கையுள்ளவர்கள், பலமுள்ளவர்களும் தனமுள்ளவர்களுமா கிறார்களென்பதில் ஸந்தேஹமில்லை. மனிதர்கள் மனிதர்களாலேயே தீஸத்தன்மையை அடையும்படிசெய்யப்பட்டு அடித்தல் கட்டுதல் முதலிய துன்பங்களால் திரும்பவும் திரும்பவும் பீடிக்கப்படுகிறார்கள். அவ்விதமானமனிதாகளும், வியாயாடுகிறவர்களும் ஸந்தோஷிக்கிறவர் களும் சிரிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். மறறுஞ்சிலர், புஜபலமுள்ள வர்களும் கல்வியில்தேர்ச்சியுள்ளவர்களும் பெரிய மனமுள்ளவர்களு மாயிருந்தும் இகழ்ச்சியுள்ளதும் துன்பமுள்ளதுமான பாவவிருத்தி யைஅடித்திருக்கிறார்கள். அவர்கள் வேறுஜீவனத்தையும் அடித்திருப் பதில் உதஸாஹமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அஃது அவர்களின் செய்கையால அவ்விதம்உறுதியாக உண்டாக்கத்தக்கதாகிறது. [1] புல் கஸனும் சண்டாளனுங்கூடத தன்சரீரததை விடவிரும்புகிறதில்லை. அவன்தன்னுடையதான அந்தபபிறவியிலஸந்தோஷமுள்ளவனாயிருக் கிறான். மாயை எவ்விதமிருக்கிறதென்பதைப் பார். காஸ்யப! கை யில்லாதவர்களும் ஒருபக்கம்பீனவர்களும் நோயுள்ளவர்களுமான மனிதர்களைப் பார்க்கும்பொழுது நீ உன்பிறப்பில ஸம்பூர்ணனும் அடையவேண்டியவைகளை அடைந்தவனுமாயிருக்கிறாய். பயமில்லாத தும் பிணியிலலாததுமான பிராம்மணசரீரமும் பூர்ணமான அங்கங்க ளும் உனக்குஇருந்தும் உலகங்களில் அவமதிக்கப்படாமலும் உன் ஜாதிக்குக் குறைவைபண்ணுவதான உண்மையான ஓர்அப வாதத்தாலும் நிந்திக்கப்படாமலுமிருந்தும் நீ சரீரத்தை விடத்துணி வது தகுதியன்று. பிராம்மணரிஷியே! நீ தர்மத்தைச்செய்யவேண்டி எழுந்திரு. ஓ! பிராம்மண! என்னுடையஇவ்வசனத்தை நீ கேட்டு நம்புவாயாகில் மீவதத்துல்ய பதேசிதத்தர்மத்தின் முக்கியமான பய னையே அடைவாய். நீ அஜாக்ரதையிலலாதவனும் வேதமோதுவதை யும் அக்னிஹோத்ர பாலிப்பதையும் ஸத்யத்தையும் இந்திரியங்களின் அடக்கத்தையும் தானதர்மத்தையும் காப்பாறறுகிறவன். நீ ஒருவனையும் கீழாகச்செய்யாமலிருப்பாயாக. கண்முதலி அத்தியாயனஞசெய்தவர்களும் யாகஞ்செய்வதையும் ஸ்ரேயஸ்படைதையும் அடைந்தவர்களுமாயிருக்கிற வர்கள் எவ்வழிச் செல்கிறார்களோ? அல்லது, அசுபமானகாரியத்தை

1 சூத்திரனுக்கு வைசியஸ்திரீயினிடம் பிறந்தவன்.

2 சூத்திரனுக்கு பிராமணஸ்திரீயினிடம் பிறந்தவன்.

யும் சிந்திப்பார்கள்? கல்லதிதியில் கல்லகக்ஷத்திரத்தில் கல்லமுகூர்த்தத்தில் பிறந்தவர்கள் நற்காரியங்களைச்செய்ய விருப்பமுள்ளவர்களாய்ப் பெரியஸுகத்தைப்பெறுவார்கள்; சக்திக்குத்தக்கபடி யாகத்தையும்தானத்தையும்செய்வதிலும் ஸந்ததி உண்டுபண்ணுவதிலும் முயலுவார்கள். ஆஸுரமான நக்ஷத்திரங்களில் கெட்டதிதியில் கெட்டமுகூர்த்தத்தில் பிறந்தவர்களான மறமுஞ்சிலர் யாகங்களும் பிரஜைகளுமில்லாதவர்களாகி ஆஸுரப்பிறவியில் விழுகிறார்கள். ஓ! பிராம்மண! நான், வேதங்களைநிந்திப்பவனும் யுக்திபேசுகிறவனும் பயனற்றதான [1]ஆன்வீக்ஷிகியென்னும் தர்க்கவித்தையில் பற்றுதலுள்ளவனும் யுக்திவாதங்களையேபேசுகிறவனும் ஸ்மிருதிகளில் (சாஸ்திரத்தைவிட்டு) யுக்தியைப்பேசுகிறவனும் வேதவசனங்களைச் சொல்லும்பொழுது பிராம்மணர்களைக் கடுமையாகவும் அதிகமாகவும் பேசுகிறவனும் நாஸ்திகனும் யாவற்றிலும் ஸந்தேஹமுள்ளவனும் மூர்க்கனும் தன்னைபண்டிதனென்று நினைப்பவனுமான போலிப்பண்டிதனுகியிருக்தேன். ஓ! பிராம்மண! அவ்விதமிருந்ததற்குப்பயனுக எனக்கு இந்தநரிப்பிறவியுண்டாயிறறு. நரியானநான் திரும்பவும் மானிடப்பிறவியைஅடைவேனோ? பல நாறுகளானநாட்களாலும் ஒரு ஸமயம் அஃது அவ்விதம்நேருமா? ஸந்தோஷமுள்ளவனும் அஜாக்ரதையில்லாதவனும் யாகதானதிறுட் தானதிறலும் தவத்திலும் பறறுதலுள்ளவனும் சீறியவேண்டியதை அறிந்துகொண்டவனும் அப்படியே விலக்கதக்கதை விலக்கிக்கொள்ளுகிறவனுமாயிருப்பேனோ?' என்றுசொல்லிறறு. உடனே, காஸ்யபனெனனும் அந்தமுனி எழுந்திருந்து வியப்படைந்து அந்தநரியைப்பார்த்து, 'அந்தோ! நீ புத்தியும் ஸமாதியமுமுள்ளதாயிருக்கிறாய் என்றுசொன்னான். (பிறகு) அவன் தீர்க்கமான ஞானக்கண்ணால அந்தநரியைப்பார்த்து, தேவர்களின்தேவனும் சசீதேவியின் பதியுமான இந்திரனென்று கண்டுகொண்டான். உடனே, காஸ்யபன் அவனை மிகவும் பூஜித்தான். பிறகு, அந்தஇந்திரனால அனுமதிகொடுக்கப்பெற்றுத் தன்வீடுபோய்ச்சேர்ந்தான்" என்றுசொன்னார்.

---

1 'ஹேதுவைக்கொண்டு வாதயுக்தியை ஸாதிப்பதற்கு ஸாதனமாவது' என்பது பண்டையுரை.

நூற்றெழுபத்தொன்பதாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பரஞ்ஜோதிஸ்ஸிலே செய்ததநுஷ்டானமும் வேதமும் பரஞ்ஜோதிஸ்ஸை அதற்குரியபரஞ்ஜோதியாகக்கொடுப்பது நிச்சயமாதலால் அவசியம் தர்ம காரியத்தையேசெய்யவேண்டுமென்று சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! தானமும் யாகமும் அப்படியே செயயப்பட்டதவமும் ஆசிரியர்களுக்குச்செய்யும் பணிவிடையும் (பயனுள்ளவைகளாக) இருக்குமாகில் அவறறை எனக்குஉபதேசிக்க வேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

"அரசர்களிலுமிகச்சிறந்தவனே! இவ்வுலகிலுளளதைஅறிவது போல மேலுலகிலிருப்பதையும் நானறிவேன். இவ்வுலகில் கெட்ட கர்மங்களைச்செய்கிறவர்கள் எவ்விதம் கதைச் செய்கிறார்களோ அதையும் அவ்விதகதையுங்கேள். துன்பதிற்குக்காரணமான தாஸ திக்யபுதியால மனமானது பாவத்தில்செல்லுகிறது. மனிதன் பாவ மானசெய்கையைச்செய்தபின் பரிபாகத்தில் நரகத்தில் ப்ரவேசிக்கிறான். பாவகதைச்செய்தமனிதர்கள் துர்ப்பிக்ஷதத்திலிருகது துர்ப்பிக்ஷதுகதை யும், துன்பத்திலிருந்துதுன்பகதையும், பயத்திலிருந்துபயத்தையும், மரணத்திலிருந்துமரணத்தையும் அடைகிறார்கள். ஏழைகளைக்கிறார்கள். ஆஸ் திகர்களும் அடக்கமுளளவர்களும் ஸத்வகுணத்திலிருபவர்களும் புண்யத்தைச்செய்தவர்களுமானமனிதர்கள் உதாஸவத்திலிருகது உத ஸவகதியையும், ஸவர்க்கத்திலிருகது ஸவர்க்கதையும், ஸுகத்திலிரு ந்து ஸுகத்தையும் அடைகிறார்கள். காஸ்துர்கள் கையிலிருகுடன் பாம்புகளாயும்துருடாள்களாயும்பயமுளளவைகளும் துஷ்டயானை களுள்ளவைகளுமான அரண்யங்களிற்செலலுகிறார்கள். இதைவிட வேறுஎன்னகீழ்வண்ணம்? தேவர்களும் பரஞ்ஜோதிஸ்ஸுகளும் ஆதித் தருகுழந்தைகளும் ஸாத்யகணங்களும் ஸப்தரிஷிகளும் விசே ஷமாகத்தானுருவாகியிறவர்களுமான மனிதர்கள், மனதை ஜயித்த யோகிகள், ஆகாயத்தில்நடக்கும் சித்தபுருஷர்கள் யாகம் செய்யப்படும்தானத்தில் அடைகிறார்கள். தேவயானமென்ற வழியை அடைகிறார்கள். எவர்புருஷர்களுக்கு சமமே லகுதருக்கு காரணமென்றுசாஸ்திரஜ்ஞானிகள் சொல்லுகிறார்களோ அவர்களும் பறவைகளுள்ளகைகளுமுடையவர்களும் மனிதர்களுள்ளவர்கள். எந்தமனிதனுல் எந்தவிதத்தர்மம் எந்தவிதத்தில்செய்

யப்பட்டிருக்கிறதோ அந்தஅந்தமுன்செய்தவினையானது அந்தஅந்த மனிதன்மிகவேகமாகஓடினாலும் அவ்வவனைத்தொடர்ந்துஓடும்; படித் திருந்தால்படிக்கும்; நின்றால் அருகில்நிற்கும்; சென்றால்தொடர்ந்து செல்லும்; வேலைசெய்தால் வேலைசெய்யும். முன்செய்தகாமமானது நிழல்போல மனிதனைதொடர்ந்தேநிற்கும். எந்தஎந்தமனிதனால் முன்பிறப்பில எந்தஎந்தக்கர்மம் எவ்விதம்அவ்விதம் செய்யப்பட்ட தோ அந்தஅந்தமனிதன் தன்தன்னாலசெய்யப்பட்ட அந்தஅந்தக் கர்மத்தையே எப்பொழுதும் அப்படிஅப்படி அனுபவிக்கிறான். அதிர் ஷ்டத்தாலபாதுகாக்கப்பட்டதும் தம்தம்மிடம்வைக்கப்பட்டதுமான அவரவர்களின் கர்மங்களுக்குரியபயனைக் காலமானது, உலகிலகாணப் படும் பிராணிக்கூட்டத்திற்கு தான்குபுறத்திலுமிருந்தும் இழுத்துச் சேர்த்துவைக்கிறது. பூக்களும் கனிகளும் ஒருவனாலேவப்படாம லிருந்தாலும் தமக்குரியகாலத்தை எவ்விதம்மீறாமலிருக்கின்றனவோ அதுபோல முன்பிறப்பிலசெய்யப்பட்ட கர்மமும் தனக்குரியகாலத் தைமீறிச்செல்லுகிறதில்லை. ஸம்மானமும் அவமானமும் லாபமும் நஷ்டமும் ஆபத்தும் ஸம்பத்தும் கர்மங்களின்முடிவில திரும்பவும் திரும்பவும் செய்யப்பட்டகர்மங்களே அனுஸரித்துஉண்டாகும். முற பிறப்பில்தன்னாலசெய்யப்பட்டஸுகத்தையும்தன்னால்செய்யப்பட்ட துக்கத்தையும் மனிதன் கர்ப்பமென்னும்படிக்கையைஅடைந்து அனு பவிக்கிறான். இதமையிலோயெனவனதிலோ முதுமையிலோ எந்தச் சுபத்தையும் அசுபதனையும் செய்கிறானே அதை ஒவ்வொருபிறப்பி லும் அந்த அந்தப்பருவத்திலஅனுபவிக்கிறான். கன்றானது ஆயிரம் பசுக்களின்நடுவிலிருந்தாலும் தன்தாயை எவ்விதமடைகிறதோ அது போல முன்பிறப்பிலசெய்யபபட்டகர்மமானது செய்தமனிதனை அடைகிறது. மூதலில நன்றாகஅழுக்கடைந்தஆடையானது பிறகு ஜலத்தால சுத்தமடைவதுபோல முதலில கெட்டகர்மத்தைச்செய்த மனிதனும் பிறகு புண்யகாமத்தால பரிசுத்தியைஅடைவான். சரீர மானது தவத்தாலபரிசுத்தமடைகிறது. தவத்தாலபெரும்மஉண்டா கிறது. உபவாஸங்களால மிகுந்ததாபமடைந்தவாகளுக்கு இடைவிடாத நீண்டகாலங்களாகுமுண்டாகும். தீர்த்தாவனத்தால நீண்டகாலஞ்செய்யப் பட்ட தவத்தாலேயுண்டாகும் புண்ணியத்தால பாபங்களை விலக்கிக் கொண்டவர்களாகிய எல்லா இஷ்டங்களும் கன்றாக லபித்துபெறுகிறார். ஆகாயத்தில பறவைகளின் அடிச்சுவடும் நீரிலமீன்களின் அடிச்சுவடும் எவ்வித்தங்காணப்படுகிறதில்லையோ அதுபோல 1 பிரம்மஜ்ஞானத்தை

1 வேறுபாடம்.

அடைந்தவர்களின்வழியானது காணப்படுகிறதில்லை. வேறுள்ள ஆக்ஷேபங்களைப்பற்றிச்சொல்லுவதாலும்பயனில்லை.(அதை யால்) ஸாமர்த்தியத்துடன்கூடியதும் தனக்குத்தகுந்ததும் விசேஷமான கர்மத்தைச்செய்துகொள்ளவேண்டும்" என்றுசொன்னர்.

நூற்றெண்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிரஹ்மரிஷியானவர் பராசரரைத்தக உலகத்திற்கு ஸ்ருஷ்டிக்ரமத்தைத் கூறியதைத் தெரிவித்தது.)

யுதிஷ்டிரர், "ஸ்காவரஜங்கமங்களுள்ள இவ்வுலகமுழுதும் எதிலிருந்து உற்பத்தியடைகின்றது? ப்ரளயகாலத்தில் எந்தவஸ்துவைஅடைகிறது? ஓ! பிதாமஹரே! அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும். கடல், ஆகாயம், மலை, மேகம், பூமி, அக்னி, காற்று இவைகளுடன்கூடிய இவ்வுலகமானது யாரால் படைக்கப்பட்டது? எவ்விதம் பிராணிகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன? ஜாதிகளின்பிரிவுகள் எவ்விதம்ஏற்பட்டன? அந்த ஜாதிகளுக்குரியசக்தியும் அசக்தியும் தர்மமும் அதர்மமும் எவ்விதமுண்டாயின? உயிரோடிருப்பவர்களின் ஜீவன் எவ்விதமிருக்கிறது? மரித்தவர்கள் எவ்விடத்திற்குச்செல்லுகிறார்கள்? இவ்வுலகிலிருந்து மேலுலகை எவ்விதமடைகிறார்கள்? இவையாவற்றையும் நீர் எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் ப்ரச்னஞ்செய்தபராசரனுக்கு ப்ருகுவால் சொல்லப்பட்டதும் மிகச்சிறந்ததுமான பழையதிவ்விதிஹாஸத்தை உதாரணமாகச்சொல்லுகிறார்கள். கைலாஸபர்வதத்தின்மேற்குத்திக் ஒளியால்ஜ்வலிப்பவர் போல் உட்கார்ந்திருக்கும் ப்ருகுமஹரிஷியைக்கண்டு பராசரனான வர், 'கடல், ஆகாயம், மலை, மேகம், பூமி, அக்னி, காற்று இவைகளுடன் கூடியஇவ்வுலகமானது யாரால் படைக்கப்பட்டது? எவ்விதம் பிராணிகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன? ஜாதிகளின் பிரிவுகள் எவ்விதம் ஏற்பட்டன? அந்த ஜாதிகளுக்குரியசக்தியும் அசக்தியும் தர்மமும் அதர்மமும் எவ்விதமுண்டாயின? உயிரோடிருப்பவர்களின்ஜீவன் எவ்விதமிருக்கிறது? மரித்தவர்கள் எவ்விடத்திற்குச்செல்லுகிறார்கள்? இவ்விதமான ஐயமுற்ற பராசரனால் வினவப்பட்டவரும் பூஜ்யரும்ப்ரம்மதேவர்போன்றவருமான அத்த

ப்ருகுவென்னும் ப்ரம்மரிஷியானவர் பிறகு, அந்தப்பரத்வாஜர்பொருட்டு யாவற்றையும் சொல்லத்தொடங்கினர். 'உலகத்தை உருவமாகக் கொண்டவரும் உள்ளிருக்கும்ஆத்மரூபியும் ஸநாதனரும் விகாரமில்லாதவரும் அழிவில்லாதவரும் ஸூக்ஷ்மரூபியும் பற்றுதலில்லாதவரும் எங்கும்நிறைந்தவரும் ப்ரபுவுமான ஸ்ரீமந்நாராயணரிருந்தார். ப்ரகிருதியைச்சார்ந்தும் வேறானவரும் எப்பொழுதும் பொறிகளுக்குப புலப்படாதவருமான அந்தப்பிரபுவானவர் ஸ்ருஷ்டிக்கவிரும்ப முள்ளவராகித் தம்முடையஆயிரத்திலொருபாகத்திலிருந்து ஒருபுருஷனையுண்டுபண்ணினர். பிராணிகள் எவரிடத்திலிருந்து பிறப்படைக்தனவோ, எவரிடத்தில்கிலேபெற்றிருக்கின்றனவோ, எவரிடத்தில் லயத்தை அடைகின்றனவோ அவ்விதக்காரணரும் அவ்யக்தரென்றுப்ரஸித்திபெற்றவரும் எப்பொழுதுமிருப்பவரும் தமதுபிறப்புஇறப்புக்குக்காரணமானஇடமும் வேற்றுமையும் கிழத்தனமும் மரணமும் குறைவும் இல்லாதவரும் பூர்ணருமானதேவரும் மஹரிஷிகளால்அறியப்பட்டவருமாகிய அந்த மானஸரென்றுஒருவர் முதலிலிருந்தார். அந்தமானஸதேவர் முகலில மஹதஹங்காரமென்னும்பெயருள்ளவரை ஸ்ருஷ்டித்தார். பிறகு, புஜ்யரான அந்தமஹானும் அஹங்காரத்தைப்படைத்தார். எல்லாப்பிராணிகளையும் தரிக்கும்திறமையுள்ள அஹங்காரமென்னும்ப்ரபுவானவர் ப்ரஸித்தமானஆகாயத்தை ஸ்ருஷ்டித்தார். ஆகாயத்திலிருந்து நீரும் நீரிலிருந்து அக்னியும் வாயுவும் உண்டாயின. பிறகு, அக்னிவாயுக்களின்சேர்க்கையால் பூமியானது உண்டாயிறது. அத்தப்பூமியிலிருந்து தானகெலவிவந்த(அஹங்காரமென்ற ப்ரபுவானவர்) ஜலங்கள்சூழ்ந்த தெய்வமான தாமரைமலரை உண்டுபண்ணினர். அத்தத்தாமரைமலரிலிருந்து வேதஉருவமுள்ளவரும் ஆறிவுஜ்ஞானியுமுதலியவற்றின் கிதிபோன்றவருமான ப்ரம்மதேவர் தோன்றினர். தெய்வகர்த்துதத்வரும், அஹங்காரமென்னுப்ரவிருத்தி பெறறவரும் [1]எல்லாவுலகங்களையும் தன்உருவமாகக்கொண்டவராட் புருஷரின பலரைத்தவரும் பெரியதேஜஸுள்ளவருமான ப்ரம்மதேவருடைய உருவங்களேயாகும். மலைகள் அவருடையஎலும்பும், பூமியானது அவருடையமேதஸும் மாம்ஸமுமாகும். கடல்கள் அவருடையரத்தமும், ஆகாயம் வயிறும், காற்றானது மூச்சும், அக்னியானது தேஜஸும், ஆறுகள் அவருடையநரம்புகளுமாகின்றன. ஸூர்யனும் சந்திரனும் அவருடையகண்களென்பது ப்ரஸித்தம். மேலேயுள்ளதேவலோகமானது அவருடையசிரஸும், பூமியானது பாதங்

1 'ஸ்ரீமஹாரூ ஆகாயமுதலியவைகளே சரீரமாகக்கொண்டவரும் காலவகையான பிராணிகளைப்படைத்தவரும்' என்பது பழையஉரை.

களும், திக்குக்கள் (அவருக்குக்) கைகளுமாகின்றன. [1]அளவில்லாத உருவமுள்ள அவர், வித்திபெற்றவர்களாலும் அறியக்கூடாதவரென்பதில் ஸந்தேஹமில்லை. எல்லாப்பிராணிகளின்பிறப்பிற்கும் வேண்டி அஹங்காரத்தைப்படைத்தவர் எவரோ, எவரிடமிருந்து உலகமுண்டாயிற்றோ அவர் அனந்தரென்றுபிரவித்திபெற்றவரும் எல்லாஉலகங்களையும் உருவமாகக்கொண்ட அஹங்காரத்திலிருப்பவரும் மனத்தைஜயியாதவர்களால் அறியக்கூடாதவருமான ஸ்ரீவிஷ்ணுபகவானுகிறார். நீ எதைக்கேட்டாயோ அஃது உனக்குச்சொல்லப்பட்டது' என்றுசொன்னர். பரத்வாஜர், 'இவ்வுலகில் ஆகாயத்திற்கும் திக்குக்களுக்கும் பூதலத்திற்கும் வாயுவுக்கும் அளவுகள்எவை? நான் பிரார்த்திக்கிறேன். நீர் என்னஸ்தேஹமறச் சொல்லவேண்டும்' என்று கேட்க, ப்ருகு சொல்லத்தொடங்கினர்.

'வித்தர்களாலும் சாரணர்களாலும் அடையப்பட்டதும் அழகுள்ளதும் பலலோகங்களால் நிறைந்ததுமான இவ்வாகாயமானது அளவில்லாதது. இதன்முடிவானது அறியப்படுகிறதில்லை. ஸூர்யனுடைய ஒளிசெல்லும் இடத்திற்குமேலும் ஸூர்யனும்சந்திரனும் காணப்படாத இடத்திற்குக்கீழும் ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியுள்ளவர்களும் அக்நியின் தேஜஸுக்கொப்பான தேஜஸுள்ளவர்களும் தாமாகவேவிளங்குகிறவர்களுமானதேவர்களிருக்கிறார்கள். கௌரவத்தைக் கொடுப்பவனே! ப்ரவித்தமான தேஜஸுள்ளஅந்தத்தேவர்களும் செல்லக்கூடாததும் முடிவில்லாததுமாயிருப்பதால் ஆகாயத்தின்முடிவைக் கண்டவர்களில்லையென்று அறிந்துகொள். அளவிடமுடியாததான இவ்வாகாசமானது தாமேவிளங்குகிறவர்களும் ஒன்றுகூடிவிளக்கிறவர்களுமான அந்தத்தேவர்களால் மேன்மேலும் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிறது. (அதுபோல்) பூமியின்முடிவில் கடல்களும் கடல்களின்முடிவில இருளும் இருளின்முடிவில்ஜலமும் ஜலத்திற்குப்பிறகு அக்னியும்இருக்கின்றனவென்று கூறுகிறார்கள். பாதாளத்தின்கடைசியில ஜலமும் ஜலத்திற்குப்பிறகு ஸர்ப்பங்களுக்கதிபர்களும் அவருக்குப்பிறகும்இரும்பவும் ஆகாசமும் ஆகாயத்திற்குப் பிறகு திரும்பவும் ஜலமுமிருக்கின்றன. இவ்விதமாக ஆகாயத்திற்கும் ஜலத்திற்கும் அக்னிக்கும் வாயுவுக்குமுள்ள அளவானது தேவர்களாலும் அறியமுடியாததாயிருக்கிறது. அக்னி வாயு ஜலம் பூதலம் இவைகளின் ரூபங்களும் ஆகாயம்போன்றவைகள்தாம். இவைகள், உண்மையை அறிபவர்களால் மேலுலகத்தேதான்று

1 'திருத்திக்கமுடியாதஉருவமுள்ளஅவர்' என்பது வேறுபாடம்.

கின்றன. மூவுலகமென்னும் கடலுக்கும் விதிப்படி அளவிருப்பது போலப் பலவிதமானசாஸ்திரங்களில் முனிவர்களும் கூறுகிறார்கள். காணமுடியாததாலும் அறியமுடியாததாலும் அளவு எவனும் சொல்லக்கூடும்? ஹித்தர்களும் தேவர்களும் செல்லத்தக்க ஆகாயமானது அளவுள்ளதாயிருக்குமாகில் அப்பொழுது (இவ்வாகாயத்திற்குக்காரணரும்) அனந்தரென்று பெயருள்ளவரும் அப்பெயருக்குச்சரியான பெரியஉருவமுள்ளவருமான மானஸபுருஷருக்கு ப்ரவித்தமான அனந்தரென்னும் பெயரானது பொருளற்றதாகும். எப்பொழுது திவ்யமான அவ்வனந்தருடைய உருவமானது நிரும்பவும் லயத்தையும் வளர்ச்சியையும் அடைகிறதோ அப்பொழுது வேறு எவன் அவ்வுருவத்தை அறியத்தக்கவனுவான்? எவன் அந்த அனந்தபுருஷர் போன்றவனே அவனும் அதன் அளவை அறியத்தக்கவனல்லன். அந்தத் தாமரைமலரிலிருந்து உண்டானவரும் எல்லாமறிந்தவரும் சரீரமுள்ளவரும் ப்ரபுவும் ப்ரஜைகளுக்குப்பதியும் மிக்கஉத்தமரும் தர்மம்நிறைந்தவருமான பிரம்மாவானவர் மூன்றினவராயிருந்தார்' என்று சொன்னர். பரத்வாஜர், 'ப்ரம்மாவானவர் தாமரைமலரிலிருந்துஉண்டானவராயிருப்பாராஞல தாமரைமலரானது (அவருக்கும்) மூன்றினதாகிறது. நீர் ப்ரம்மாவை மூன்றினவராகக்கூறுகிறீர். இதில் எனக்கு ஸந்தேஹமுந்தான்' என்றுசொன்னர். ப்ருகு, 'இவ்வுலகில்மானஸபுருஷருடைய எந்தஉருவம் ப்ரம்மதேவத்தன்மையை அடைந்ததோ அவ்வுருவமிருக்கும் ஆஸனமுறையைக்குறித்துப் பூமியானது தாமரைமலரென்று சொலலப்படுகிறது. ஆகாயத்திற்கிளம்பி நிற்கும் மேருமலையானது அந்தப் பூமியென்னும் தாமரைமலரின்[1] கர்ணிகையாகும். உலகத்திற்கு ப்ரபுவான ப்ரம்மதேவர் அதன் நடுவிலிருந்துகொண்டு உலகங்களையும் மானஸர்களான தேவர்களையும் பலவிதமானபிராணிகளையும் ஸ்ருஷ்டிக்கிறார்' என்றுசொன்னர்.

நூற்றெண்பத்தோராவது அத்தியாயம்.

மே ரு க்ஷே த் ர ம்.

(தொடர்ச்சி.)

(ப்ரதுவானவர் பரத்வாஜருக்கு மேருமலையிலிருக்கும் பிரம்மதேவர் ஜலம்முதலியவற்றைப் படைத்தமுறையைச் சொல்லியது.)

பரத்வாஜர், 'மேருமலையின் அடியிலிருக்கும் அந்தப்பிரம்மதேவர் எவ்விதம் ப்ரஜைகளைஸ்ருஷ்டித்தார்? ப்ரச்னஞ்செய்யும் எனக்கு இதையெல்லாம் உள்ளபடி சொல்லவேண்டும்' என்றுகேட்டார்.

1 தாமரைப்பூவின் நடுவிலிருக்கும்காய்.

ப்ருகு, 'மானஸபுருஷரான அத்தப்ரம்மதேவர் முதலில் பிராணிகளின் படைப்பை மனத்தால் செய்தார். பிராணிகளானவர்களுக்கு ரக்ஷிக்கவேண்டி முதலில் ஜலமானது உண்டுபண்ணப்பட்டது. அத்தஜலமானது எல்லாப்பிராணிகளுக்கும் உயிராயிருக்கிறது. ப்ரஜைகள் அத்தஜலத்தால் வளர்ச்சிஅடைகின்றன. ப்ரஜைகள் அதனால்விடப்பட்டவைகளர்ய் நாசமடைகின்றன. இவ்வுலகம்யாவும் அதனால்சூழப்பட்டிருக்கின்றன. பூமியும் மலைகளும் மேகங்களும் உருவமுள்ளமற்றவைகளுமான யாவும் ஜலத்தாலுண்டானவையென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஜலமே அத்தஉருவங்களுள்ளதாக அசைவற்றுநிற்கின்றது' என்றுசொன்னர். பரத்வாஜர், 'ஜலம் எப்படி உண்டாயிற்று? அக்கியும் வாயுவும் எப்படிஉண்டாயின? பூமியானது எவ்விதம் ஸ்ருஷ்டிக்கப்பட்டது? இவ்விஷயத்தில் எனக்கு ஸந்தேஹம் பெரிதாயிருக்கிறது' என்றுசொன்னர். ப்ருகு சொல்லத்தொடங்கினர்.

'ஓ! ப்ராம்மண! முன்காலத்தில ஒருப்ரம்மகல்பத்தில் ப்ரம்மரிஷிகள் சேர்ந்தபொழுது மஹாத்மாக்களான அவர்களுக்கு உலகங்களின் உத்பத்தியைபபறி ஸந்தேசமுண்டாயிறறு. அத்த ப்ராம்மணர்கள்மௌனத்தைஅடைந்து அசைவற்றவர்களும் ஆகாரத்தைவிட்டவர்களும் காற்றைஉண்பவர்களுமாக நூறுதேவவருஷம் ஞானதிஷ்டையை அடைந்திருந்தார்கள். வேதரூபமானவாக்கானது அவர்களளவர்களின்செவியையும் அடைந்தது. அப்பொழுது ஆகாயத்திலிருந்து திவ்யமானஒருவாக்கு உண்டாயிற்று. முன்காலத்தில் ஆகாசமானது அஸ்தமயத்தை அடைந்ததும், சப்தமில்லாததும், (அசையாத) மூலபோன்றதும், சந்திரனும் ஸூர்யனும் வாயுவும் நாசமடைந்ததுமாகித் தூக்கமடைந்ததுபோலிருந்தது. அவ்விதஆகாசத்திலிருந்து இருளிலிருந்து வேறோர்இருளுண்டானதுபோல ஜலமுண்டாயிற்று. அத்தஜலம்விழுந்ததால வாயுஉணடாயிற்று. இவ்வுலகில் ஓட்டையில்லாதபாத்திரமானது சப்தமில்லாததாய்க்காணப்படும். அப்பாத்திரம் ஜலத்தால்நிறைக்கப்படும்பொழுது அதிலுள்ள வாயுவானது (கிளம்பிச்) சப்தத்தை உண்டாக்குகிறதுபோல ஜலமுண்டுபண்ணுமோ அதுபோல இடைவெளியில்லாமல் ஆகாயத்தின்கடவானது ஜலத்தால் தகையப்படும்பொழுது கடலின்மேற்பரப்பிலிருந்துகொண்டு சப்தத்துடன் வாயுவானது கிளம்பிறது. கடலின்மேற்தலாலுண்டான அக்காற்றானது வீசிக்கொண்டிருக்கிறது. அப்புஆகாயமென்னும் இடத்தை அடைந்து ஓய்வடையாமலிருக்கிறது. அந்தக்காற்றும் ஜலமும் ஒன்றோடொன்றுஉரையும்பொழுது அதிலிருந்து ஜ்வலிக்கும்

தேஜஸுள்ளதும் அதிகபலமுள்ளதும் நீண்டஜ்வாலைகளுள்ளதுமான அக்னியானது ஆகாயத்தை இருளில்லாததாகச்செய்துகொண்டு உண்டாயிற்று. அக்னியானது காற்றுடன்சேர்ந்துகொண்டு ஆகாயத்திலிருந்து ஜலத்தைக் [1]கெட்டியாகச்செய்கிறது. அக்னிவாயுக்களின்சேர்க்கையால் அந்தஜலமானது கெட்டியாயிருக்குந்தன்மையையடைகிறது. அந்தஆகாயத்திலிருந்துவிழுந்த ஜலத்திலுள்ள ஸ்நேஹமென்னும் குணமானது கெட்டியாயிருக்குந்தன்மையை அடைந்து பூமித்தன்மையையடைந்திருக்கிறது. பூமியானது ரஸங்களுக்கும் எல்லாவிதமானமணங்களுக்கும் ஸ்நேஹங்களுக்கும் அட்படியே பிராணிகளுக்கும் காரணமென்றுதெரிந்துகொள்ளவேண்டும். இத்தப்பூமியில் யாவுமுண்டாகின்றன' என்றுசொன்னர்.

நூற்றெண்பத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(மரமுதலிய ஸ்தாவரங்களும் ஐந்துபூதங்களாலும் நிறைந்தனவென்றும் அவைகளுக்கும் ஜீவன்முதலியவை உண்டென்றும் சொல்லியது.)

பராத்வாஜர், 'இவ்வுலகங்கள் எந்தபூதங்களால் வ்யாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, எவைகள் மஹாபூதங்களென்று பெயருள்ளவைகளோ, எவைகளை முன்காலத்தில் ப்ரம்மதேவர் உண்டுபண்ணினரோ அந்தப்பூதங்கள் ஐந்தென்றுசொல்லப்படுகின்றன. பெரியபுத்தியுள்ள அந்தப்ரம்மதேவர் பல்லாயிரம் பிராணிகளைப்படைத்திருக்கும்பொழுது ஐந்தேபூதங்களென்பது எவ்விதம் பொருத்தமுள்ளதாகும்?' என்றுகேட்டார். ப்ருகு, 'மஹத்தென்னும்பதம் கணக்கில்லாதவைகளைச் சொல்லும். பூதமென்றபதந்தாருப் பிறப்படைந்தவைகளென்று பொருளாகும். அக்காரணத்தால மஹாபூதமென்ற இப்பதம் அவைகளுக்குப்பொருத்தமுள்ளதாகும். பிராணிகளின் சரீரம் ஐந்துபூதங்களாலுண்டுபண்ணப்பட்டதாகிறது. இச்சரீரத்திலுள்ள சேஷ்டையானது வாயுவும், துளைவெளியானது ஆகாயமும், சூடானது அக்னியும், த்ரவமானது ஜலமும், கடினமானது பூமியுமாகின்றன. இவ்விதம் ஸ்தாவரஜங்கமங்களெல்லாம் இவ்வைந்துபூதங்களுடன்கூடியவையாயிருக்கின்றன. இந்த்ரியங்களெனப் பெயர்வாய்ந்தவைகளான மூக்கும் மூச்சும் நாக்கும் தலைமுதலும் கண்ணும் ஐந்து

[1] 'ஸமுத்கூர்ணதே' என்பதுபாடம்.

பூதங்களைச்சேர்ந்தவைகள்தாம்' என்றுசொன்னர். பரத்வாஜர், 'ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் ஐந்துபூதங்களுடன்கூடியவைக ளென்றால் ஸ்தாவரங்களின்சரீரத்தில் ஐந்துபூதங்கள் காணப்படவில் லையே? உண்மையில் சூடும் சேஷ்டையுமில்லாதவைகளும் கடினமு மான மரங்களின்சரீரத்தில் ஐந்துபூதங்களும் காணப்படவில்லையே? அவைகள் கேட்பதில்லை; பார்க்கிறதுமில்லை; மணத்தையும் ரஸத்தை யும் அறிகிறதுமில்லை; ஸ்பர்சத்தையும் அறிகிறதில்லை. ஆகையால, அவைகள் எவ்விதம் ஐந்துபூதங்களுடனும் கூடியவைகளாகும்? த்ர வமும் சூடும் பூமியும் வாயுவுமில்லாததாலும், ஆகாயம் அவைகளில் காணப்படாததாலும் மரங்களுக்குப் பஞ்சபூதங்களின் சேர்க்கையில் லையே?' என்றுகேட்டார்.

ப்ருகு சொல்லத்தொடங்கினர். 'கெட்டியாயிருந்தாலும் மரங் களுக்கும் ஆகாயமிருக்கிறது; ஸந்தேஹமில்லை. (அக்காரணம்பற் றியே) அம்மரங்களுக்கு எப்பொழுதும் பூவுங் கனியும் வெளிப்படு வது பொருத்தமுள்ளதாயிருக்கிறது. உஷ்ணதால் நிறமும்வாடு கிறது. பட்டையும் கனியும் பூவும் வாடுகிறதும் உதிர்கிறதுமாயிருக் கின்றன. ஆகையால, இம்மரங்களுக்கு ஸ்பர்சமிருக்கிறது. காற்று, அக்நி, இடிஇலைகளின் அதிர்ச்சிகளால் கனியும் பூவும்உதிர்கின்றன. ஔஷியானது செவியாலன்றோ கேட்கப்படும். ஆகையால மரங்கள் செவியுள்ளவைகளாயிருக்கின்றன. கொடியானது மரத்தைச்சுற்றிக் கொள்ளுகிறது; எல்லாவிடத்திலும் செலலுகிறது. கண்ணில்லாத வனுக்கு வழிகாணப்படுகிறதில்லையே? ஆகையால, மரங்கள் கண் ணுள்ளவைகளாயிருக்கின்றன. அவ்விதம் சுத்தமும் அசுத்தமுமான பலவிதமணங்களாலும் தூபங்களாலும் மரங்கள் தேவிலலாதவைக ளும் பூக்களுள்ளவைகளுமாகின்றன. ஆகையால, மரங்கள் மூக் குள்ளவைகளாயிருக்கின்றன. வேர்களால் எண்ணெய்க்குடிப்பதா லும் வ்யாதிகள்காணப்படுவதாலும் வ்யாதிகளுக்குச் சிகித்ஸையிரு ப்பதாலும் மரங்களுக்கு நாவிருக்கிறது. மனிதன் தாமரைத்தண்டை வாயில்வைத்து நீரைஉயிரோடிருப்பதுபோல மரமானது வேருடன் கூடியதாகி வேர்களால் நீரைக்குடிக்கிறது. மரங்களுக்கு அறிவு தாலும் வெட்டப்பட்டது தளிர்ப்பதாலும் மரங்களுக்குள் ஜீவனை நீர்கிறேன். அவைகளுக்கு ஆறிவில்லையென்பதில்லை. ஆத்மத் தால் குடிக்கப்படும் அந்நீரைக் கழலும் அவ்வாயுவே ஜீர்ணமாகும்படி செய்கின்றன. ஆகாயம் ஜீர்ணமாகுவதாலும் மரங்களுக்கு ஸ்ரோத்ராதும் வளர்ச்சியுமுண்டாகின்றன. ஜங்கமங்களாலறியும்

சரீரத்தில் ஐந்துபூதங்களில் ஒவ்வொன்றும் வெவ்வேறுயிருக்கின்றன. அவைகளால், சரீரம் நடைபெறுகிறது. இந்தச்சரீரத்திலுள்ள தோல் மாம்ஸம் எலும்புகள் மஜ்ஜை நரம்பு என்றஇவ்வைந்தும் பூமியின்உருவமாகும். தேகமூள்ளவனுக்குள்ளதேஜஸும் கோபமும் கண்ணும் சூடும் ஆஹாரத்தை ஜீர்ணமாகச்செய்யும் அக்நியுமாகிய ஐந்தும் அக்னியின் உருவங்களாகும். செவி, மூக்கின்த்வாரம், வாய், ஹ்ருதயம், குடல் என்ற சரீரத்திலுள்ள இவ்வைந்துபாகங்களும் பிராணிகளுக்கு ஆகாயத்திலிருந்துஉண்டாகின்றன. ஜலங்கள் பிராணிகளின்சரீரத்தில் எப்பொழுதும் ச்லேஷ்மம், பித்தம், ரவேர்வை, வஸை, உதிரம்என்னும் ஐந்துவிதங்களாயிருக்கின்றன. பிராணியானது ப்ராணனென்னும்வாயுவால், அசைவுள்ளதாகிறது; வ்யானனென்னும்வாயுவால் பலமாகச்செய்யும் வேலையைச் செய்கிறது; அபானனென்னும் வாயுவால் கீழாகச்செல்லுகிறது ; ஸமானனென்னும் வாயுவால் ஸமமாயிருக்கிறது;உதானனென்னும்வாயுவால் மூச்சுவிடுகிறது. மார்புமுதலிய (வாக்கின்) இடங்களின் வேற்றுமையால் பேசுகிறது. இவ்விதம் ஐந்துவிதமான இந்தவாயுக்கள் இவ்வுலகில் பிராணியைச்சேஷ்டையுள்ளனவாகச்செய்கின்றன.சரீரியானது பூமிரூபமான மூக்கினால் மணமென்னும் குணங்களை அறிகிறது; ஜலரூபமான்நாவால ரஸத்தை அறிகிறது;ஜ்யோதிரூபமானகண்ணால் ரூபங்களைப்பூர்க்கிறது; வாயுரூபமானத்வக்கால் ஸ்பர்சத்தை அறிகிறது. ப்ராணியானது ஆகாயரூபமானசெவியால் சப்தத்தைக்கேட்கிறது. கந்தம், ஸ்பர்சம், ரஸம், ரூபம், சப்தம் (இவவைந்தும்) இவ்வைந்து பூதங்களின் குணங்களென்றுசொலலப்படுகின்றன. மணமென்றஅந்தக்குணததின்விரிவாகச்சொலலப்படும்பேதங்களைச்சொல்லுகிறேன். விரும்பப்படும்மணம், விரும்பததகாதகாற்றம், இனிப்புள்ளது,உறைப்புள்ளது, மற்றவைகளை அடக்குந்திறமையுள்ளது, பலவகைவாஸனைச்சேர்க்கையுள்ளது, ஸ்நேஹகுணத்துடன்கூடியது, காரமுள்ளது, சுத்தமாயிருப்பது என்று இப்படி ஒன்பதுவிதமாகப் பூமியிலுள்ள மணமென்றகுணததின் வேற்றுமையைத் தெரிந்துகொள்ளவேண்டும். கண்களால் (பூமியிலுள்ள) ரூபததைக்காண்கிறான். வாயு ரூபமான 'த்வக்' என்னும்இந்திரியததால் ஸ்பர்சத்தை அறிகிறான். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம்என்றகுணங்களும் (பூமியிலுள்ளனவாகக்) கூறப்படுகின்றன. ரஸத்தின்அறிவையும் உபதேசிக்கிறேன். அதைச் சொல்லுவதை என்னிடமிருந்து கேள். ரஸமானது பிரஸித்தமானபுத்தியுள்ள பண்டிதர்களாலபலவிதமாகக்கூறப்படுகிறது. ஜலத்

தின் உருவமானரஸமானது இனிப்பு, உப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, உறைப்புஎன்று இவ்விதம் ஆறுவிதப்பிரிவுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அக்னியானது சப்தம், ஸ்பர்சம், ரூபம்என்ற மூன்று குணங்களுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அக்னிஉருவமான கண்ணனது ரூபங்களேப்பார்க்கிறது. ரூபமும் பலவிதமாகச்சொல்லப்படுகிறது. அக்னியின்குணமான ரூபமானது குட்டை, நீளம், பருமை, சதுரம், சிறிது, உருண்டை வடிவமுள்ளது, வெளுப்பு, கறுப்பு, சிவப்பு, மஞ்சள், [1] நீலச்சிவப்பு, கெட்டியாயிருப்பது, பிசுக்குள்ளது, மெழுக்குள்ளது, சொரசொரப்புள்ளது, மெதுவாயுங் கெட்டியாயுமிருப்பதுஎன்றுஇவ்விதம் [2]பதினுறுவிதமானவேற்றுமையுள்ளதாகக்கூறப்படுகிறது. வாயுவானது, சப்தம் ஸ்பர்சம்என்ற இரண்டுகுணமுள்ளதாக அறியத்தக்கது. அவைகளில், ஸ்பர்சகுணமானது வாயுவுக்குமுக்கியமாகும். ஸ்பர்சமும் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. சீதம், உஷ்ணம், ஸுகம், துக்கம், [3] ஸ்நேஹமுள்ளது, ஸ்நேஹமில்லாதது, [4] கரடுமுரடு, மிருதுவானது, தீக்ஷ்ணமானது, லகுவானது, [5]மிகவுங்கனமானதுஎன்று இவ்விதம் வாயுவின்குணமான ஸ்பர்சமானது பன்னிரண்டுவகையுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அவ்வைந்துபூதங்களில் ஆகாயமானது ஒரேகுணமுள்ளதாகும். அக்குணமானது சப்தமென்றேசொல்லப்படுகிறது. அந்தச்சப்தத்திறத்துள்ள பலவகைப்பட்டவிரிவைச் சொல்லுகிறேன். ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், தைவதம், பஞ்சமம், நிஷாதம் என்றுஆகாசத்திலிருக்கும்ஏழுண்டாகும்சப்தமென்றகுணம் ஏழுவகையுள்ளதாகச் சொல்லப்படுகிறது.' சப்தமானது [6] எல்லாவிடத்திலுமிருந்தாலும் பேரிமுதலிய வாத்தியங்களில் மூன்றுஸ்வரங்களுடன்கூடியதாக வெளிப்படுகிறது. ம்ருதங்கம், பேரி, சங்கம், மேகம், ரதம், (மற்ற) ப்ராணி, ப்ராணியல்லாதது இவைகளிலுடையதாகக் கேட்கப்படும் சப்தமும் ஷட்ஜமுதலிய இந்தஎலாஸ்வரங்களேயும் சேர்ந்திருந்தே சொல்லப்படுகிறது. ஆகாயத்திலிருந்துண்டான சப்தமானது இவ்விதம் பலவித உருவமுள்ளதாகிறது. ஆகாயத்திலிருந்து உண்டாகும் சப்தத்தை

---

1 மயிலதோகையின் நிறம்போன்றது. 2 வேறுபாடுகளொடுகூடியது.

3 மெய்ப்படுவது. 4 மென்மையற்றது.

5 இங்கு 'குரு தரம்' என்பதுமூலம். இதற்கு 'மிகவும் குருவானது' என்பதுபொருள். 'குரு தரம்' என்றதால், குருவானதுஎன்று ஒன்றுஉண்டென்றும், ஆகையால், வாயுவின் குணம் பன்னிரண்டென்றும் பலரும்உரை கூறுகிறது.

6 'ஓர்யாகமாய்' என்பது வேறுபாடம்.

வெளியிலுள்ள காற்றின் குணமான ஸ்பர்சமானது தடைசெய்யாமலிருக்குமாகில் மனிதன் அறிவான்; வாயுவின்ஸ்பர்சங்கள் சப்தம்தடைப்படும்படி விரோதம்யிருக்குமாகில் அதைஅறியமாட்டான். சரீரத்திறகுக்காரணமான அந்த ஐந்துபூதங்களும் எப்பொழுதும் அந்த ஐந்துபூதங்களாலுமே வ்ருத்தியடைகின்றனவாகும். ஜலமும் அக்னியும் காற்றும் எப்பொழுதும் பிராணிகளிடம் விழித்துக்கொண்டிருக்கின்றன. பிராணன்களே வ்யாபித்துக்கொண்டு இச்சரீரத்திலிருக்கும் இந்தப்பூதங்கள் சரீரத்திறகுமூலமாகின்றன' என்றுசொன்னர்.

நூற்றெண்பத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(சரீரத்திலுள்ள ப்ராணன்முதலியவற்றின் காரியவிசேஷங்கள் கூறச் சொல்லியது.)

பரத்வாஜர், 'சரீரத்திலுள்ள [1] அக்னியானது பார்த்திவமான சரீரத்தைஅடைந்து எவ்விதமிருக்கிறது? வாயுவானது சரீரத்தில் வெவ்வேறான இடங்களிலிருந்துகொண்டு சரீரத்தை எவ்விதம்நடத்துகிறது?' என்றுகேட்க, ப்ருகு சொல்லத்தொடங்கினர்.

'தோஷமில்லாத ப்ராம்மண! பலமூள்ளவாயுவானது பிராணிகளின் சரீரங்களை எவ்விதம்நடைபெறச்செய்கிறதோ அவ்விதம்வாயுவின்கதியையும் நான் உனக்குச் சொல்லுகிறேன். சரீரத்தைரக்ஷித்துவரும் அக்னியானது [2] சிரஸை யுடைந்திருக்கிறது. பிராணவாயுவானது சிரவிலும் அக்னியிலுமிருந்துகொண்டு தன்வேலையைச்செய்கிறது. அந்தப்ராணனானது பிராணியும் எல்லாப்பிராணிகளின் ஆத்மாவான ஸனாதனபுருஷனுமாயிருக்கிறது. அந்தப்பிராணன் மனமும் புத்தியும் அஹங்காரமும் பூதங்களும் மறறவிஷயங்களுமாயிருக்கிறது. இவ்விதம் நீவ்வுலகிலுள்ளபிராணிகளெலலாம் பிராணவாயுவால் பரிபாலிக்கப்படுகின்றன. அந்தவாயுவானதுஸமானரூபியாய்க் [3]கோஷ்டத்திலிருந்துகொண்டு ஸமானனுக்குரிய வேலையைச்செய்துகொண்டிருக்கிறது. மூத்ராசயத்தின் அடியையும் மலாசயத்தையும் அக்நியையும் அடைத்துகொண்டிருக்கும் அபானவாயுவானது மூத்ரம்

---

1 இங்கு, அக்னி என்பதற்கு 'ஜீவாதமா' என்பது பழையஉரை.

2 இங்கு, 'சிரஸை' என்றால் 'பரமாத்மா' என்பது பழையஉரை.

3 கூடலை; அதாவது, இங்கு சரீரத்தில் மத்யபாகம்.

ரத்தையும் மலத்தையும் வெளியிற்செல்லும்படி செய்துகொண்டிருக்கிறது. சரீரசாஸ்திரத்தில் ஸமர்த்தர்களான ஜனங்கள், முயற்சி தொழில் பலம்என்றமூன்றுகாரியங்களிலும் ஒன்றுமிருப்பது எது வோ அது 'உதானவாயுவென்று உபதேசிக்கிறார்கள். அதுபோல மனி தர்களின்சரீரங்களிலுள்ள எல்லாஸந்திகளிலுமிருக்கும் வாயுவானது வ்யானனென்று சொல்லப்படுகிறது. த்வக்குமுதலிய ஏழுதாதுக் களிலும் பரவியிருக்கும் அக்நியானது [1]ஸமானவாயுவால் ஏவப்பட்டு அன்னரஸங்களையும் [2]ஏழுதாதுக்களையும் [3]தோஷங்களையும் பரிண மிக்கச்செய்துகொண்டிருக்கிறது. பிராணவாயுவுக்கும்அபானவாயுவுக் கும்நடுவிலுள்ள இடத்தைஅடைந்து அவ்விரண்டுவாயுக்களுடனும் கூடிய அக்நியானது ஆகாரத்தை நன்றுகப் பாகஞ்செய்கிறது. முக முதல் குதஸ்தானம் [4]வரையிலுள்ள பிராணன்செல்லும் மார்க்க மானது கடைசியில் குதமென்றுபெயருள்ளதாகிறது. இது (பிரா ணன்செல்லத்தக்க) பெரியவழியாகும். அதிலிருந்து பிராணிகளு க்குச் சரீரத்திலுள்ளபிராணன் செல்லத்தக்கவழிகளான எல்லா நாடிகளும் உண்டாகின்றன. பிராணவாயுவின்சேர்க்கையிருப்பதால் (எல்லாவிடத்திலும் அக்நியின்) ஸம்பந்தமுண்டாகிறது.ரூடென்பது எதுவோ அஃது அக்நியென்று தெரிந்துகொள்ளவேண்டும். அந்த அக்நியானது பிராணிகளின் ஆகாரத்தைப் பாகஞ்செய்கிறது.பிராண ஞனது அக்நியின்வேகத்தால் செல்லத்தக்கநிறமையுள்ளதாகிறது. அது குதஸ்தானத்தின்கடைசியில் தடைப்பட்டுத் திரும்புகிறது. அந்தப்பிராணனது உயரவந்து திரும்பவும் அக்நியைப்பரவச்செய்கி றது. நாபியின்கீழ்ப்பாகம் [5]பக்வாசயம் என்றும் அதன் மேல்பாகம் [6]ஆமாசயமென்றும் சொல்லப்படும் சரீரத்திலுள்ளஎல்லாப்பிராணன்

---

1 வேறுபாடம்.

2 ஏழுதாதுக்களாவன:—'த்வக், உதிரம், மாம்ஸம், மேதஸ், எலும்பு, மஜ்ஜை, சுக்லம்' என்பவைகளாகும்.

3 வாதம், பித்தம், கபமென்றமூன்றுமாம். ஜாடராக்நியானது இவ் வேழுதாதுக்களிலிருந்தும் அவைகளில்லுண்டொன்றையும் பாகஞ்செய்து அதிலுள்ளஸாரபாகத்தைப்பிரித்துச் சரீரத்தைப் புஷ்டிபா லிக்கிறது. அவைகளில் 'த்வக்' என்றும்முதலாதாதுவில் உதிரமானது ஸார மாகவும் மலமானது கலணியுள்ளமலமாகவும் வேறுபடுகின்றன. இப்படியே பின்னுள்ளதாதுக்களை முதலிலுள்ளதாதுக்களின் ஸாரமாகும். உதிரத்தின் மலம்கபமும், மாம்ஸத்தின்மலம்பித்தமும், மேதஸின்மலம்வேர்வையும், எலும் பின்மலம்மயிரும், சுக்ரமும், மஜ்ஜையின் மலம் விழிநீருமாகும். இதன் விவரம் சரகஸம்ஹிதை பிஷிதஸ்தானம், முதலாவது அத்தியாயத் தில் தெளிவாகக்கூறப்படுகிறது.

4 வேறுபாடம்.

5 பாகமான ஆகாரமிருக்கும் இடம். 6 பாகமாகாத ஆகாரமிருக்குமிடம்.

களும் நாபியின்நடுவில் இடமுள்ளவைகளாயிருக்கின்றன. ஹ்ருதயத்திலிருந்து மேலுங் கீழும் குறுக்காகவும் வெளிப்படும்நாடிகள்யாவும் [1]பத்துவிதமான ப்ராணவாய்க்களால் ஏவப்பட்டு ஆகாரத்தின் ஸாரங்களை அந்தஅந்தஇடத்தில் சேர்ப்பிக்கின்றன. [2]இது யோகங்களுக்குரியவழியாகிறது. ச்ரமத்தை ஜயித்தவர்களும் [3]ஸமபுத்தியுள்ளவர்களுமான எந்தத்தீரர்கள் தலையில்செல்லும்ஸுஷும்னைஎன்ற நாடியில் மனத்தைச்செலுத்தினார்களோ அவர்கள் இந்தவழியாக ப்ரம்மபதத்தைஅடைகிறார்கள். இவ்விதம் பிராணிகளுடைய எல்லாவிதமானப்ராணவாயுவிலும் அபானவாயுவிலும் அக்நியானது வைக்கப்பட்டிருக்கிறது. அந்தஅக்நியானது ஸ்தாலியில்வைக்கப்பட்டது போல அந்தப்ராணவாயுவுள்ளவிடத்தில் எப்பொழுதுமிருக்கிறது' என்றுசொன்னர்.

நாற்றெண்பத்துநான்காவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

('சரீரத்தைக்காட்டிலும் வேறாக ஜீவன்ஏது' என்று பரத்வாஜர் ஆக்ஷேபித்தது.)

பரத்வாஜர் கேட்கத்தொடங்கினர். 'ப்ராணவாயுவானது ஜீவிக்கச்செய்வதும் அந்தப்ராணவாயுவே சேஷ்டைகளைச்செய்வதும் மூச்சுவிடுவதும் பேசுவதுமாயிருக்குமாகில் அப்பொழுது ஜீவனென்பது பயனற்றதாகும். உஷ்ணமாயிருப்பதென்பது அக்நியின்உருவமாயும் அவ்வக்நியே பாகஞ்செய்வதாயும் அக்நியானது ஆஹாரத்தை ஜீர்ணஞ்செய்வதாயும் இருக்குமாகில் அப்பொழுது ஜீவன் பயனற்றதாகும். மரணத்தைஅடைகிறபிராணியின்ஜீவனைஒரு காணப்படுகிறதேயில்லை. (அச்சமயத்தில்) வாயுமட்டிலும் இச்சரீரத்தைவிடுகிறது. சூடென்பது நாசமடைகிறது. அன்றியும் ஜீவனைத்தாபிராணவாயுவைவிட வேறுபிரிந்திருக்குமாகில் பிராணனை முக்கியமாகக்கொண்டதா? அலலது வேறறுமையிலலாமல பிராணவாயுவுடன் சேர்ந்தைக்யமடைந்ததா? வேறுபிரிந்திருக்குமாகில சுழலுகாற்றும் காணப்படுவதுமில்லப் பிராணவாயுக்கூட்டங்களுடன் சேர்ந்துசெலலுகிறதாகக் காணப்படும்.

1 'பிராண, அபான, வ்யான, உதான, ஸமான, நாக, கூர்ம, க்ருகர, தேவதத்த, தனஞ்ஜய' என்பன.

2 முகம்முதற்கு குதம்வரையிருப்பவழியானது' என்பதுமுழையுரை.

3 வேதபாடம்.

ஜீவன் வேற்றுமையின்றிச் சேர்க்கையடைந்திருக்கின் பிராணவாயு நசிக்கும்பொழுது அதனுடன்கூட ஜீவனும் நாசமடையும். கிணற்று ஜலத்தில் வேறுஜலமும் அக்னியில்தீபமும் சேர்க்கப்படுமாகில் அவ்வி ரண்டும் அவற்றுடன் நசிப்பதுபோல ஜீவனுனது ப்ராணவாயு அக்னி இவைகளினுருவமுள்ளதாஞல் அவைகளுடன் நசிக்கும். அவைகளை விட வேருயிருந்தால் கடலில்போட்டதண்ணீர்க்குடம் அப்பெருங் கடல்விலகியபின் வேருகக்காணப்படுவதுபோலப் பிராணவாயுவை விட வேருகக்காணப்படும். ஐந்துபூதங்களுக்கும்பொதுவான இச் சரீரத்தில் ஜீவனென்பதுவது? அவ்வைந்துபூதங்களுள் ஒன்றில்லா விட்டால் நான்குக்குச் சேர்க்கையிருப்பதில்லை. [1]இருப்பிடமில்லா விட்டால ஜலம்நாசமடைகிறது. மூச்சை அடக்குவதால் வாயுநாச மடைகிறது. [2]குடல்பிளந்துபோவதால் ஆகாசம்நாசமடைகிறது. ஆகாரமில்லாததால் அக்னியானது நாசமடைகிறது. நோய்களாலும் உயிர்போவதாலும் பூமி சிதறிப்போகிறது. (இவ்விதம்) இவ்வைந்து பூதங்களில் ஏதாவதொன்று நாசமடையுமாஞல் சரீரம் மரணத்தை அடைகிறது. அச்சரீரம் மரணத்தைஅடைந்தால ஜீவனுனது எதைத தொடர்ந்துஓடுகிறது? ஜீவன் எதை அறிகிறது? எதைக் கேட் கிறது? எதைப் பேசுகிறது? ஒருமனிதன், 'இந்தப்பசுவானது பர லோகத்திலிருக்குமென்னத் துன்பங்களிலிருந்துமீட்டுவைக்கப்போ கிறது' என்றுகருதிப பசுவைத தானஞசெய்துவிட்டு மரிக்கிறுனே; அந்தப்பசுவானது எவனைப்பிடிவைக்கப்போகிறது? பசுவும் அதைப பெறுவுக்கொண்டவனும் கொடுத்தவனும் இவ்வுலகிலேயே ஸமமாக நாசமடைகிறார்களே; அப்பொழுது அவர்களுக்கு எங்கிருந்து சேர் க்கையுண்டாகும்? பறவைகளாலபுஜிக்கப்பட்டவனுக்கும் மலையின் உச்சியிலிருந்து விழுந்தவனுக்கும் தீயாலஎரிக்கப்பட்டவனுக்கும் திரும்பவும் எதிலிருந்துஜீவனமுண்டாகும்? வெட்டப்பட்டமரத்தின் வேரானது மூலமாமலபோனல அந்தமரததிலுண்டானவிதைகள் மூலைக்கின்றன. மரிததவன் எங்கே திரும்பவும் வருகிருன்? (ஆகை யால,) விதைமட்டும் முன்காலதத்தில் உண்டுபண்ணப்பட்டிருக்கிறது. இந்தவிதையானது சரீரமாய்ப்பரிணமிக்கிறது. மரிததவர்களனைவர் களும் நாசமடைகிறுர்கள்; ஒருவிதையிலிருந்துண்டான வேறொருவி தை முளைத்துக்கொண்டிருக்கிறது' என்றுசொன்னர்.

1 'ஆகாரமில்லாமலிருந்தால்' என்பதுவேறுபாடம்.

2 'வாயுவு தலியவதருவுடனடைகப்பட்டதால்' என்பது பழைய உரை.

நூற்றெண்பத்தைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீருது, சரீரத்தைக்காட்டிலும் ஜீவன் வேறுக இருக்கிறதென்று விளக்கியது.)

பீருகு, 'ஜீவர்களுக்கும் தானத்திற்கும் செய்தகர்மத்திற்கும் நாசமில்லை. ஜீவன் வேறுசரீரத்தை அடைகிறான்; இச்சரீரமட்டும் நாசமடைகிறது. விறகுகள்எரிக்கப்பட்டபின் அக்கியானது நாச மடையாமலிருப்பதுபோலச் சரீரம்நாசமடையும்பொழுது அச்சரீரத் தை அடைந்திருக்கும் ஜீவன்நாசமடைகிறதில்லை' என்றுசொன்னார்.

பரத்வாஜர், 'அக்கிக்குநாசமில்லாததுபோல [1]அந்தஜீவனுக்கு நாசமில்லாதிருந்தால் விறகுஉபயோகமடைந்தமுடிவில அந்த அக் கினி காணப்படுகிறதில்லையே; வழியும் ப்ரமாணமும் இருப்பிடமும் காணப்படாததும் விறகில்லாமல் அவிந்துபோனதுமான அந்தஅக் னியை நாசமடைந்ததென்றே நான்நிகிதோன்' என்றுசொல்ல, பிருகு சொல்லத்தொடங்கினார்.

'ஜீவனுக்கும் விறகிலிருந்த அக்னிக்கும் எப்பொழுதும் நாசங் கிடையாது. விறகுகள் உபயோகமடைந்த பிறகும் அக்னியானது இருந்துகொண்டே காணப்படாமலிருக்கிறது. வேறுஇடமிலலாத அந்தஅக்னி ஆகாயத்தை அடைந்துகொண்டிருக்குங்காரணத்தால் அறியக்கூடாததாயிருக்கிறது. அதுபோலச் சரீரத்தைவிட்டபின் ஜீவன் ஆகாயத்தை அடைந்ததாயிருக்கிறது. அது ஸூக்ஷ்மமாயி ருப்பதால் விறகில்லாதஅக்னிபோல அறியப்படுகிறதில்லை. அக் னிபோல் ப்ரகாசத்தன்மையுள்ளதாக இந்திரியங்களைத் தரிப்பது எதுவோ அது ஜீவன்என்று தெரிந்துகொள்ளவேண்டும். ப்ராண வாயுவினால் தரிக்கப்படும் அக்னியானது அந்தவாயு நாசமடைவதால் நாசமடையும். சரீரத்திலுள்ள அந்த அக்னியானது நாசமடைந்த வுடன் அறிவற்றஅச்சரீரமானது கீழேவிழுந்து பூமியுருவத்தையடை யும். ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமான எலலாப்ராணிகளின் சரீர த்திற்கும் பூமியன்றோ இடமாயிருக்கிறது? காற்றுனது ஆகாயத் தைத் தொடர்ந்துசெல்லுகிறது. அக்கினியானது அந்தக்காற்றைத தொடர்ந்துசெல்லுகிறது. அந்தஆகாயம் காற்று அக்னிமூன்றும் ஒன்றையிருக்குந்தன்மையுண்டு. ஜலம்பூமியென்ற இரண்டும் பூமியில்

[1] வேறுபாடம்.

நிலைபெற்றிருக்கின்றன. ஆகாயமுள்ளவிடத்தில் காற்றும் காற்றுள்ள விடத்தில் அக்னியுமிருக்கின்றன. அவை வடிவமில்லாதவைக ளென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஜலமும் பூமியும் மூர்த்தியுள் ளவைகளாகும்' என்றுசொன்னர்.

பரத்வாஜர் சொல்லத்தொடங்கினர். 'பாபமறறவரே! சரீர மாகப்பரிணமித்த உருவங்களில் பூமியும் ஜலமும் அக்னியும் காற் றும் ஆகாயமும்போல ஜீவனும்இருக்குமாகில் அஃது அந்தச்சரீர த்தில் என்னலக்ஷணமுள்ளதாயிருக்கிறது? இதை எனக்கு உபதே சிக்கவேண்டும். ஐந்துபூதங்களின் உருவமுமுள்ளதும் ஐந்துவிஷயங் களிலும் ஆசையுள்ளதும் அவ்விஷயங்களை அறிவிக்கத்தக்க ஐந்து பொறிகளுடன்கூடியதுமான பிராணிகளின்சரீரத்தில ஜீவன் எவ் விதமாயிருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். உதிர மாம்ஸங்களின் சேர்க்கையுள்ளதும் மேதஸு நரம்பு எலும்புகளின் கூட்டமுள்ளதுமான சரீரமானது பிளக்கப்படும்பொழுது ஜீவன் காணப்படுவதேயில்லை. பஞ்சபூதங்களாலாகிய சரீரமானது ஜீவனில் லாததாயிருக்குமாகில் சரீரத்தைப்பறறியதும் மனதைப்பற்றியது மான துன்பமுண்டாகும்பொழுது அந்தத்துன்பத்தை எவன்அறி கிறவனென்று கேட்கலாம். மஹரிஷியே! மனம்ஸரியாயிருந்தால சொல்லியமொழியை ஜீவன் செவிகளாலகேட்கிறது. மனம் வேறி டம்சென்றிருந்தால் அதைக்கேட்கிறதில்லை. ஆகையால, ஜீவன்பய னற்றதாகிறது; மனத்துடன்கூடிய கண்ணால பார்க்கத்தக்கவாற் றையும் பார்க்கிறது, அந்தமனமானது சிந்தையுள்ளதாயிருக்கும் பொழுது (ஜீவன்) பார்த்துக்கொண்டிருந்தாலும் பார்க்கிறதில்லை. நித்திரையின்வசமடைந்தவன் பார்க்கிறதில்லை; மணத்தையறிகிற தில்லை; கேட்கிறதில்லை; பேசுகிறதில்லை; ஸ்பர்சத்தையும் ரஸத்தை யும் அறிகிறதில்லை. (ஆகையால) இச்சரீரத்தில எது ஸுக்தோஷத்தை யும் கோபத்தையும் அடைகிறது? எது சோகத்தையும் பயத்தையும் அடைகிறது? எது ஸ்ரும்புவதும் தயானம்செய்வதும் பகைப்பதும் வசனத்தைப்பேசுவதுமாயிருக்கிறது?' என்றுகேட்க, ப்ருகு சொல லத்தொடங்கினர்.

'ஓம்புலன்களுக்கும்பொதுவான ஒருமனமானது இச்சரீரத் தில் முக்கியமானதன்று. உள்ளதிலுள்ள ஓர்ஆத்மாவானது சரீரத் தை வஹித்துக்கொண்டிருக்கிறது. அந்தஆத்மா மனதையும் ரஸத் தையும் சப்தத்தையும் ஸ்பர்சத்தையும் ரூபத்தையும் மற்றக் குணங் களையும் அறிகிறது. ஐந்துபூதங்களாலுமாகிய இச்சரீரத்தில் ஐந்து

பூதங்களின் ஸத்வகுணத்தாலுமுண்டான மனத்தையும் பார்த்துக் கொண்டிருக்கும் அந்தராத்மாவானது மனத்தின்வழியாக எல்லாஅங்கங்களிலும் வ்யாபித்திருக்கிறது. அஃது இச்சரீரத்திலுள்ள துக்கங்களையும் ஸுகங்களையும்அறிகிறது. தேகத்திலுள்ள ஆத்மா அந்தமனத்தைவிட்டுப்பிரிந்தால ஒன்றையும் அறிகிறதில்லை. எப்பொழுது ஐந்துபூதங்களின்சேர்க்கையானசரீரத்தில் ரூபமும் ஸ்பர்சமும் சூடும் இல்லாமற்போகுமோ அப்பொழுது சரீரத்திலுள்ளஅக்னியானது அவிந்துபோவதும் ஆத்மாவானது சரீரத்தைத்தள்ளிவிட்டுநாசமடைகிறதில்லை. பிராணிகளுக்குள்ள ஸூக்ஷ்மசரீரமானது ஜலஉருவமாயிருக்கிறது. இந்தச்சரீரமுழுமையுமே ஜலத்தை முக்கியமாகக்கொண்டது. உலகத்தைப்படைத்த ப்ரம்மாவானவர் எல்லாப்ராணிகளிடத்திலும் அந்தஸூக்ஷ்மசரீரத்திலுள்ளமனததில் ஸம்பந்தப்பட்ட ஆத்மாவாயிருக்கிறார்.ப்ரகிருதியைச்சேர்ந்தஸத்வம் ரஜஸ் தமஸ்என்ற குணங்களுடன்கூடிய ஆதமாவானது க்ஷேத்ரஜ்ஞனென்றுசொல்லப்படுகிறது. அந்தக்குணங்களிலிருந்தேவிடுபட்டஆதமாவானது பரமாத்மாவென்றுசொல்லப்படுகிறது. எலலாஉலகங்களையும் பரிணமிக்கச்செய்யும்அதை ஆத்மாவென்று தெரிந்துகொள். அது, ஜலபிந்துவானது தாமரையிலையிலிருப்பதுபோல அந்தச்சரீரத்திலிருந்துகொண்டிருக்கிறது. க்ஷேத்ரஜ்ஞனையிருக்கும்அந்தஆத்மாவை எல்லாஉலகங்களுக்கும் ஹிதத்தைச்செய்யும்பரமாதமரூபியும் அழிவில்லாததுமாகத் தெரிந்துகொள். 'ஸத்வம் ரஜஸ் தமஸ்என்கிறஇவைகளை ஜீவனுடையகுணங்களென்றறிந்துகொள்ளவேண்டும். புத்தியுடன்கூடிய இச்சரீரம் ஜீவனுலஅனுபவிக்கப்படுகிறதென்று சொலலுகிறார்கள். அந்தஜீவன் சரீரம்யாவறையும் சேஷ்டையுள்ளதாகச்செய்கிறதும் சேஷ்டையுள்ளதுமாயிருக்கிறது. [1] க்ஷேத்ரத்ரத்தை அறிந்தவர்கள் ஏழுலகங்களையும்படைத்தவனவனோ அவர் அந்தஜீவரூபத்தைவிட வேறென்றுகூறுகிறார்கள். சரீரத்திற்குநாசமுண்டானலும் ஜீவனுக்குநாசமில்லை. அறியாதவர்கள் ஜீவன்மரித்ததென்றுசொல்வது பொய். ஜீவனே வேறுசரீரத்தைஅடைந்து பிரயாணப்படுகிறது. பஞ்சபூதங்களின்உருவமான சரீரத்தைவிடுவதுதான் இந்தஜீவனுக்கு மரணமென்றுசொலலப்படுகிறது. நுண்ணியதும் ஆதமாவானது எலலாப்பிராணிகளிடங்களிலும் மறைக்கப்பட்டதும் காணப்படாததுமாக ஸஞ்சரிக்கிறது. அஃது உண்மையைக்காணததக்க சக்தியுள்ளவர்களால் கூர்மையுள்ளதும் ஸூக்ஷ்மமுமான புத்தியாலேமட்டும் அறியப்படுகிறது.

---

1 சரீரம்.

லகுவானஆகாரமுள்ளவனும் பரிசுத்தமானபுத்தியுள்ளவனும் இரவுகளின்முதலிலும்கடையிலும் எப்பொழுதும் ஸமாதியிலிருப்பவனுமான அறிவுள்ளவன் அந்தஆத்மாவைப் புத்தியில்பார்ப்பான். மனத்திற்குண்டானதெளிவால் மனிதன் சுபமும் அசுபமுமானகர்மத்தைத் தள்ளிவிட்டுத் தெளிந்தபுத்தியுடன் ஆத்மரூபத்திலிருந்துகொண்டு ஸ்ரீவற்றஸுகத்தைஅடைவான்.மனத்தில்ஸம்பந்தப்பட்ட ஜ்யோதிரூபமானது சரீரங்களில் ஜீவனென்றுசொல்லப்படுகிறது. இந்தஜீவரூபியான ப்ரம்மாவிடமிருந்து இந்தஸ்ருஷ்டியானது உண்டாயிற்றென்பது ஆத்மாவை நிர்ணயஞ்செய்தவர்களின் அபிப்பிராயம்.

நூற்றெண்பத்தாறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ராம்மணர்கள் தம்தம்இஷ்டப்படியானநடக்கைகளால் வர்ணவேறுபாடடைந்ததைச் சொல்லியது.)

ஸ்ருஷ்டியின்தொடக்கத்தில் ப்ரபுவானப்ரம்மாவானவர் தம்முடைய தேஜஸுகளாலுண்டுபண்ணப்பட்டவர்களும் ஸூர்யன், அக்நிஇவர்களின் காந்திபோன்றகாந்தியுள்ளவர்களும் [1]ப்ரம்மரிஷ்டர்களுமான ப்ரஜாபதிகளேயேழுகல்பபடைத்தார். அதற்குபபிறகு ஸ்ருத்யத்தையும் தர்மத்தையும் தவகையும் சாஸ்வதமானவேதத்தையும் (அதன்மூலமான) ஆசாரத்தையும் சௌசத்தையும் உண்டுபண்ணினார். ப்ரம்மாமணர்களிலுமிகச்சிறந்தவனே! தேவர்களையும் தானவர்களையும் கந்தர்வர்களையும் தைத்யர்களையும் அஸுரர்களையும் பெரிய உரகர்களையும் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் நாகர்களையும் பிசாசர்களையும் அப்படியே ப்ரம்மாமணர்கள், க்ஷத்ரியர்கள், வைச்யர்கள், சூத்ரர்கள்என்கிற மனுஷ்யர்களையும் மற்றுமுள்ளபிராணிக்கூட்டங்களின்சிருஷ்டியையும்படைத்தார். ப்ரம்மாமணர்களுக்கு [2]வெண்ணிற

---

1 'பரா மர்ஷர்' என்பதுமூலம்; இந்தஅத்யாயம் முழுதுலோகத்திலுள்ள ப்ராம்மணரை மரியாதைத்தாக வேறு கூறியிருத்தலால் இதற்கு ப்ரம்மரிஷிகளாக மொழிபெயர்கொள்ளப்பட்டது; மேலையரைவும் இப்படியே யிருக்கிறது; ப்ராம்மணர்முதலியோரைச்சொல்லுமிடத்தில் மட்டுமாகவே ரிஷிகளியும் இதை அதிகமாகும்.

2 இவ்விடத்திலிலையை நிறமென்றதால் ஸத்வகுணமும் கெட்டநிறமென்றதால் ரஜோகுணமும் மற்றநிறமென்பதால் தமோகுணமுங்கூறப்பட்டதாகவும் கருதிநம்மவர்களால் தமிழ்க்குணமும் சொல்லப்படுகிறது. மற்றகுணங்களை இவ்விதப்பழமுகுவது எளிதாகிறதால் ப்ரமிக்கும். இவ்வாறு மிடங்களிலும் இம்முறைமேகொள்க.

மும் க்ஷத்திரியர்களுக்குச் செங்நிறமும் வைச்யர்களுக்கு மஞ்சள்நிற மும் சூத்ரர்களுக்குக் கருநிறமும்உண்டு' என்றுசொன்னர். பரத்வா ஜர், 'நான்கு [1]வர்ணங்களுக்கும் [2]வர்ணமானது வர்ணத்தால்பிரிக் கப்படுமாகில் எல்லாவர்ணங்களுக்கும்வர்ணமங்கரமிருப்பதாக்காண ப்படுகிறதே; காமமும் கோபமும் லோபமும் பயமும் சோகமும் நித் தையும் பசியும் ச்ரமமும் (ப்ராம்மணர்களான) நம்மெல்லோர்களுக் கும்உண்டாகின்றன; எதனால் வர்ணம்பிரிக்கப்படுகிறது? வேர்வை யையும் மூத்திரத்தையும் மலத்தையும்ச்லேஷ்மத்தையும்பித்தத்தை யும் உதிரத்தையும் எல்லாப்ராணிகளுடையசரீரமும்பெருகச்செய் கிறது; எதைக்கொண்டு வர்ணம் பிரிக்கப்படுகிறது? ஜங்கமங்களுள் ளும் ஸ்தாவரங்களுள்ளும் கணக்கிடத்தகாதவைகளானஜாதிகளிருக் கின்றனவே: பலவிதமானவர்ணமுள்ள அவைகளுக்கு எதனால்வர்ண நிச்சயம் ஏற்படுகிறது" என்றுகேட்க, ப்ருகுசொல்லத்தொடங்கினர்.

'இவ்வுலகமெல்லாம் [3]ப்ரம்மதேவரிடமிருந்துஉண்டானது. வர் ணங்களுக்குள்ளவிசேஷமில்லை. முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்டப்ராம் மணர்கள் தம்கர்மங்களால் பலவர்ணங்களை அடைந்தார்கள். விஷய போகங்களில் ப்ரீதியுள்ளவர்களும் க்ரூரர்களும் கோபமுள்ளவர்க களும் ஸாஹஸங்களில்பிரியமுள்ளவர்களும் ஸ்வதர்மத்தைவிட்டவர் களும் சிவந்த அங்கமுள்ளவர்களுமான அந்தப்ராம்மணர்கள் க்ஷத் திரியஜாதித்தன்மையை அடைந்திருக்கிறார்கள். பசுக்களைக்கொண்டு ஜீவிப்பவர்களும் மஞ்சள்நிறமுள்ளவர்களும் கிருஷியைக்கொண்டு ஜீவிப்பவர்களும் ஸ்வதர்மங்களை அநுஷ்டியாதவர்களுமான ப்ராம் மணர்கள் வைச்யஜாதித்தன்மையை அடைந்திருக்கிறார்கள். ஹிம் ஸையிலும் பொய்யிலும் ப்ரியமுள்ளவர்களும் லோபிகளும் எல்லாத் தொழில்களையும் அடைந்துஜீவிப்பவர்களும் கருநிறமுள்ளவர்களும் பரி சுத்தியிலிருந்துவிலகியவர்களுமான அந்தப்ராம்மணர்கள் சூத்ர

---

1 ஜாதி; 2 குணம்.

3 இந்த வாக்யத்தில், 'உலகமெல்லாம் ப்ராம்மணஜாதியாகஇருந்தது' என்று ஒருவர் பொருள்சொல்லுகிறார்கள். பழையஉரையிலும் அப்படிதான்காணப்படு கிறது. அதுபொருத்தாது. மூலத்தில், 'ப்ராம்மம்' என்ற பதமிருக்கிறது. அதற்கு ப்ராம்மணஜாதியென்றுபொருள்கொள்ளவது ப்யாகரணசாஸ்த்ரத் திற்குவிரோதமாகும். வ்யாகரணத்தில், 'ப்ராம்மோ ஜாதௌ' என்றஸூத் ரத்தால் ஜாதியென்பதைத்தவிர வேறுபொருளாவிடத்தில்மட்டும், 'ப்ரா ம்ம' என்ற பதமுபயோகப்படாது. ஜாதியைக்கூறுமிடத்தில் 'ப்ராம்மண' என்ற பதமல்லாமல், 'ப்ராம்ம' என்ற நபும்பொருள்தாது என்று கூறப்படுகிறது. ஆகையால், 'ப்ராஹ்மம்' என்ற பதத்திற்கு ப்ரம்மாவிடமிருந்துஉண்டானதென் றே பொருள்கொள்வதுதான் பிரதானமாகும்.

ஜாதித்தன்மையை அடைந்திருக்கிறார்கள். இவ்விதமான இந்தக்கர்மங்களால் வேற்றுமையடைந்தவர்களான பிராம்மணர்கள் வேறுவர்ணத்தைஅடைந்திருக்கிறார்கள். தர்மமும் யாகஞ்செய்வதும் இவர்களுக்கு எப்பொழுதும் தடுக்கப்படுகிறதில்லை. இவ்விதம், (ப்ராம்மணர்களுக்குக்) கர்மத்தின்வேற்றுமையால் இந்தநான்குவர்ணங்களும் ஏற்பட்டிருக்கின்றன.முதலில்பிரம்மதேவரால் வேதமென்றவாக்கானது இவர்களுக்கு அளிக்கப்பட்டது. இவர்கள் பேராசையால் (அந்தவேதத்தை) அறியக்கூடாதகீலமையை அடைந்திருக்கிறார்கள். வேதத்தில்கூறிய தர்மத்திலிருக்கிறவர்களும் வேதத்தையும் விரதங்களையும் நியமங்களையும் எப்பொழுதும் தரிப்பவர்களுமான பிராம்மணர்களுடையதவம் நாசமடைகிறதில்லை. [1]எந்தப்பிராம்மணர்கள் ப்ராம்மணப்பிறவியானது சிறந்ததாகப்படைக்கப்பட்டதென்று [2]தெரிந்துகொள்ளவில்லையோ அவர்கள் கீழானபிராம்மணர்களாகிறார்கள். அவர்களுக்கு அந்த அந்தப்பிறவியிலுள்ள பலவிதமான வேறுஜாதிகளுண்டாகும். அவர்கள் அறிவும் விசேஷஅறிவும் நாசமடைந்தவர்களும் தம்மிஷ்டம்போன்றஆசாரமும்செய்கையுமுள்ளவர்களுமாகிப்பிசாசர்களும் ராக்ஷஸர்களும் ப்ரேதர்களும் பலவிதமானமிலேச்சஜாதிகளுமாகிறார்கள். வேதத்திலுகூறிய ஸம்ஸ்காரங்களைப்பெற்றவர்களும் தம்ஜாதிக்குரியகர்மங்களில் நிச்சயமுள்ளவர்களுமான மனிதர்கள் மூன்றுஸ்திரீகளானரிஷிகளால் தம்தவதத்தால், பின்னுள்ளரிஷிகளாக ஸ்ருஷ்டிக்கப்படுகிறார்கள். தர்மானுஷ்டானத்தைமுக்கியகாரணமாகக்கொண்டதும் மனத்தால்செய்யப்பட்டதுமான அந்தஸ்ருஷ்டியானது ஆதிதேவரானப்ரம்மதேவரிடமிருந்து உண்டானதும் பரம்மத்தை மூலமார்க்கமாகக்கொண்டதும் அழிவிலலாததும் குறைவில்லாததுமாயிருக்கிறது' என்றுசொன்னார்.

நூற்றெண்பத்தேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(பீஷ்மரது, பரத்வாஜருக்கு ப்ராம்மணர்முதலியவர்களின் லக்ஷணத்தையும் வைராக்யமானது மோக்ஷத்திற்குக்காரணமென்பதையும் சொல்லியது.)

பரத்வாஜர், 'ப்ராம்மணர்களில்உத்தமரே! எந்தக்கர்மத்துடனிருப்பவன் ப்ராம்மணனாவான்? எந்தக்கர்மத்துடனிருப்பவன் க்ஷத்

---

1 'ஸருஷ்டிக்கபட்டஉலகத்தை ப்ரம்மருடமென்றியாதவர்கள்' என்பது பழையஉரை.

2 வேறுபாடம்.

திரியனுவான் ? எந்தக்கர்மத்துடனிருப்பவன் வைஸ்யனுவான் ? எந்தக்கர்மத்துடனிருப்பவன் சூத்திரனுவான் ? பேசுகிற்வர்களிற்சிறந்தவரே ! பிரம்மரிஷியே ! அதைச்சொல்லவேண்டும்' என்று கேட்க, ப்ருகு சொல்லத்தொடங்கினர்.

'ஜாதகர்மமுதலிய ஸம்ஸ்காரங்களைப்பெற்றவனும் பரிசுத்தனும் வேதாத்யயனஞ்செய்தவனும் [1]ஆறுகர்மங்களில்நிலைபெற்றவனும் பரிசுத்தியிலும் ஆசாரத்திலும் கண்ணாக இருப்பவனும் அதிதிகளுக்கிட்டமிச்சத்தைப்புசிப்பவனும் குருக்களிடம் ப்ரியமுள்ளவனும் எப்பொழுதும் வ்ரதமுள்ளவனும் ஸத்க்ரியைகளைப்பெரிதாகக் கொண்டவனுமாக எவனிருக்கிறானோ அவனே ப்ராமணனென்று சொல்லப்படுகிறான். ஸத்யமும் தானமும் த்ரோஹமின்மையும் க்ரூரமின்மையும் பொறுமையும் தயையும் தவமும் எவனிடம்காணப்படுகின்றனவோ அவன் ப்ராம்மணனென்று சொல்லப்படுகிறான். க்ஷத்ரியர்களுக்குரிய யுத்தமென்னும் கர்மத்தைச்செய்கிறவனும் வேதாத்யயனமுள்ளவனும் ப்ராம்மணர்களுக்குக் கொடுப்பதிலும் ப்ரஜைகளிடமிருந்து வரியைப்பெறுவதிலும் உத்ஸாஹமுள்ளவனுமாகி எவனிருக்கிறானோ அவனே க்ஷத்ரியனென்று சொல்லப்படுகிறான். க்ருஷியிலும் பசுக்காத்தலிலும் வர்த்தகத்திலும் எப்பொழுதும் பரிசுத்தனுகிப்புதுன்றவனும் வேதாத்யயனமுள்ளவனுமாயிருப்பவன்எவனோ அவன் வைஸ்யனென்று பெரியோர்சொல்லுகிறார். எப்பொழுதும் எல்லாவற்றையும் பகுத்துப்பதில் உத்ஸாஹமுள்ளவனும் எல்லாக்தொழிலிலும் செய்கிறவனும் சுத்தியில்லாதவனும் வேதாத்யயனமில்லாதவனுமாயிருப்பவனெவனோ அவனே சூத்ரனென்று சொல்லப்படுகிறான். முன்கூறிய ஸம்ஸ்காரமுதலியவற்றும் சூத்ரனிடத்திலும் காணத்தக்கனவாகும். இவை ப்ராம்மணன்முதலிய மூன்றுஜாதிகளிடமும் இல்லாமலுமிருக்கும். சூத்ரன் சூத்ரனாகவேயிருப்பானென்பதில்லை. ப்ராம்மணனும்ப்ராம்மணனாகவேயிருப்பானென்பதில்லை. ஆகையால், எல்லாஉபாயங்களாலும் ஆசையையும் தோஷங்களையும் அடக்கவேண்டும். இவ்வடக்கமும் எப்படியே மனத்தைத் தன்வசத்தும் பரிசுத்தமென்று தெரிந்துகொள்ளவேண்டும். ப்ரீதியைஸ்வீகரிப்பதற்காக

---

1 ஸ்வாத்தியாயன்சொன்னது ஸ்வதேயாத்யயனம், யஜனம், தேவபூஜை, அக்நிஹோத்ரம்,வைச்வதேவம் பலிஹரணம் முதலியவைகளாகிய செய்யவேண்டியகர்மங்கள் ஆறு. ஸ்வாத்தியாயத்தையும் ஸ்வதேயாத்யயனம் தேவபூஜாஹோமவைச்வதேவத்தைச்சேர்ந்தபலிஹரணத்தையும் ப்ரீதியில்லாததாகில் ப்ரீதிக்குரிய தெய்வங்களை நினைவுகூர்ந்து; யாகம்செய்தல், யாகம்செய்வித்தல், தானம்ஏற்றல், வேதம்ஓதுவித்தல், தானந்தருதல், தானம் பெறல் எனினுமாம்.

வளர்ச்சியடையும்லோபத்தையும் கோபத்தையும் மிச்சமின்றி விலக்கிக்கொள்ளவேண்டும். எப்பொழுதும் ஸம்பத்தைக் கோபத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும். தவத்தை மத்ஸரத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும். வித்யையை மானம் அவமானம் இவ்விரண்டிலிருந்தும் காக்கவேண்டும். ஆத்மாவை அஜாக்ரதையிலிருந்து காக்கவேண்டும். ஓ! பிராம்மண! எந்தமனிதனுடையமுயற்சிகள் யாவும் ஆசையென்னும் பந்தத்திலிருந்து விலகியிருக்கின்றனவோ, எவன்செய்யும் ஹோமம் யாவும் பயனைவிடக் காரணமாகுமோ அவன் தியாகியும் புத்தியுள்ளவனுமாகிறான். மனிதன் ஹிம்ஸைசெய்யும் ஸ்வபாவமில்லாமல் எல்லாப்ராணிகளுக்கும் மித்ரனாயிருக்கும்வழியில செல்லுகிறவனாயிருக்கவேண்டும். ஆசைப்படத்தக்க பொருளைத்தள்ளிவிட்டுப் புத்தியால் இந்திரியங்களைவென்றவனாயிருக்கவேண்டும். இவ்வுலகம் மேலுலகம் இவ்விரண்டிலும் [1]அசைவில்லாத பதத்தைஅடையவேண்டும். ஜயிக்கமுடியாதபதத்தை ஜயிக்கவிரும்புமுள்ளவன் எப்பொழுதும் தவமும் இந்திரியஙகளைஅடக்கமும் மனவடக்கமுமுள்ளவனும் ஆசைக்குக்காரணமானவைகளில பற்றிலலாதவனும் தயானத்திலிருக்கிறவனுமாயிருக்கவேண்டும். எது எது இந்திரியஙகளுக்குப்புலப்படுகிறதோ அதுஅது வயகதமென்பதுதிண்ணம். இந்திரியங்களுக்குப்புலப்படாததும் லிங்கசரீரமென்றமனத்தால் அலலது ஊஹத்தால் அறியத்தக்கதுமாயிருப்பதை அவயக்தமென்று தெரிந்துகொள்ளவேண்டும். மனிதன் ஸ்வதத்துவும் குருவசனத்துலும் நம்பிக்கையுடனிருக்கும்படி மனதை உறுதிபடுத்திக்கொள்ளவேண்டும். அவநம்பிக்கையிறசெல்லகூடாது. மனத்தைப் பிராணனில அடக்கவேண்டும். பிராணனை ப்ரம்மதத்தில அடக்கவேண்டும். வேறொன்றையும் சிந்தியாமலிருக்கவேண்டும். வைராக்யததாலேயே மோக்ஷமடைய வேண்டும். அவவிதமிருக்கும்பிராம்மணன் அநதவழியாலேயே ஆனநதருபமானப்ரம்மத்தை அடைகிறான். எப்பொழுதும் பரிசுத்தியும் கலலஆசாரமும் பிராணிகளிடம் தயையும் உள்ளவனாயிருக்கவேண்டும். அது ப்ராம்மணர்களின்லக்ஷணமாகும்.

---

1 'கலைவில்லாத ஆத்மாவை தயாளனாய்செய்யவேண்டும்' என்பது பழைய உரை.

நூற்றெண்பத்தெட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரது, உண்மையானது ஸ்வர்க்கத்திற்கும் பொய்யானது நரகத்திற்கும் பரம்பரையாகக்காரணமாதுமென்பதையும் பொய்யாலுண்டாகும் துன்பங்களையும் இவ்வுலகத்திற்கும் ஸ்வர்க்கத்திற் குழள்ளவேற்றுமையையும் பாத்வாஜருக்குக்கூறியது.)

ஸத்யமானது வேதமாகிறது. ஸத்யம் தவமாகிறது. ஸத்யம் ப்ரஜைகளைஉண்டுபண்ணுகிறது. ஸத்யத்தால் உலகம்பரிபாலிக்கப்படுகிறது. ஸத்யத்தால் உலகம் ஸ்வர்க்கலோகத்தை அடைகிறது. பொய்யானது அஜ்ஞானத்தின் உருவமாகும். அஜ்ஞானத்தால் உலகம் கீழேபோகும்படி செய்யப்படுகிறது. அஜ்ஞானத்தால் விழுங்கப்பட்டவர்கள் அஜ்ஞானத்தால்மறைக்கப்பட்ட ஒளியென்னுந் தர்மத்தைப் பார்க்கிறதில்லை. ப்ரகாசமென்பது ஸ்வர்க்கமென்றுசொல்லுகிறார்கள். அஜ்ஞானமென்பதே நரகமென்றும்சொல்லுகிறார்கள். ஸத்யம்,பொய் இவ்விரண்டுசேர்ந்து புருஷர்களால் இரண்டுமுள்ள மனிதப்பிறவியடையப்படுகிறது. உலகத்திலுள்ள அந்தமானிடப்பிறவியில் ஸதயம், பொய், தர்மம், அதர்மம், ப்ரகாசம், அஜ்ஞானம், அப்படியே ஸுகம்,துக்கமென்ற இவ்விதமானஜோடியிருக்கும். அவைகளில் எதுஸத்யமோ அதுதர்மம், எதுதர்மமோ அது ப்ரகாசம், எது ப்ரகாசமோ அதுஸுகமென்றும், அவைகளில் எது பொய்யோ அதுஅதர்மம், எதுஅதர்மமோ அது அஜ்ஞானம், எது அஜ்ஞானமோ அது துக்கமென்றும்சொல்லப்படுகின்றன. இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறதாவது, சரீரத்திலுள்ளவைகளும் மனத்திலுள்ளவைகளுமான துக்கங்களுடனும் துக்கமாய்முடிவடையும் ஸுகங்களுடனுங்கூடிய உலகங்களின்ஸ்ருஷ்டியை நன்முகப்பார்க்கும்பண்டிதர்கள் அவிவேகமடையமாட்டார்கள். அறிவுள்ளவன் அவ்விதப்பிறவியிலுள்ள துக்கத்திலிருந்து விடுபடவேண்டியதற்காக முயலவேண்டும். இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் பிராணிகளுக்குண்டாகும்ஸுகமானது நிலைபெறறதேயன்று. ராஹுவாலவிழுங்கப்பட்டசந்திரனுடையஒளியானது எவ்விதம்ப்ரகாசிப்பதில்லையோ அவ்விதமே அஜ்ஞானத்தால்விழுங்கப்பட்டபிராணிகளின் (பரமார்த்தமான) ஸுகமானது ப்ரகாசியாமல [1]நாசமடைகிறது. அவ்வித

[1] 'நஸ்யதே', என்பதுவேறுபாடம்: இதற்கு 'மறைந்திருக்கிறது' என்பது பழையஉரை.

மான விஷயஸுகமானது சரீரத்தைப்பற்றியதென்றும் மனத்தைப் பற்றியதென்றும் இரண்டுவிதமாகச் சொல்லப்படுகிறது. இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் செய்யப்படும்எல்லாமுயற்சிகளும் ஸுகத்திற்குவேண்டியென்றே சொல்லப்படுகின்றன. அறம்பொருள்இன்பமென்ற த்ரிவர்க்கத்தின்பயன் இவ்விதஸுகத்தைவிட வேறுஅதிகவிசேஷமாகஇருப்பதில்லை. அவ்விதமான இந்தவிஷயஸுகமானது உலகத்திற்கு விரும்பததக்கவிசேஷகுணமாகிறது. அறம்பொருள்களைப்பற்றிய முயற்சியானது அந்தஸுகத்திற்குக் காரணமாகிறது. அறம்பொருள் உண்டாவதும் அவற்றிற்குள்ளமுயற்சியும் ஸுகத்தைப்பயனுகக்கொண்டவை' என்றுசொன்னர்.

பரத்வாஜர்,'ஸுகங்களுக்கு உண்மையானநிலைமையுண்டென்று உம்மால்சொல்லப்பட்டதை நாம்அறியவில்லை. தவத்திலிலிபெறுதிருக்கும்இந்தரிஷிகளுக்கு விசேஷகுணமுள்ளதும் விரும்பத்தக்கதுமான இந்தஸுகமானது அடையக்கூடாததன்றே ; அவர்கள் இந்தஸுகத்தைவிரும்பவில்லையே ; மூன்றுலகங்களையும்படைத்த ப்ரபுவானப்ரம்மதேவர் தனியே தவத்திலிருக்கிறரென்று கேள்விப்படுகிறோம். அவர் ப்ரம்மசாரியாயிருந்துகொண்டு சிறுறின்பஸுகங்களில் மனத்தைவைக்காதவராயிருக்கிறாரே ; அன்றியும், உமாதேவியின்பதியானபகவான்விஸ்வேஸ்வரர் அருகிலவர்தகாமனைச் சரீரமிலலாதவனாகசமடையச்செய்தாரே ; ஆகையால், இந்தப்பயனானது மஹாத்மாக்களால் அங்கீகரிக்கப்படவில்லையென்றும் இதற்குள்ளகுணக்கூட்டமானது அவவளவு விசேஷமுள்ளதென்றும் சொலலுகிறோம். பூஜ்யரானநீர் இதை அறியவில்லையா ? ஸுகங்களுக்குஉண்மையான நிலைமையுண்டென்று பூஜ்யரான உம்மால்சொலலப்பட்டது. புண்யத்தால் ஸுகம்அடையப்படுகிறதென்றும் பாபத்தால் துக்கம்அடையப்படுகிறதென்றும் பயனுண்டாவது இரண்டுவிதமென்றுலகத்தில ப்ரஸித்தியிருக்கிறதே' என்றுகேட்க, ப்ருகு சொல்லுததொடங்கினர்.

' இவ்விஷயத்தில் சொல்லப்படுகிறதாவது, பொய்யிலிருந்து அஜ்ஞானமுண்டாகிறது. பிறகு, அஜ்ஞானத்தால விழுங்கப்பட்டு மனிதர்கள் அதர்மத்தையே தொடர்ந்துசெலலுவார்கள்; தர்மத்தைச் செய்யமாட்டார்கள்; கோபம், ம்பராசை, அவிவேகம், மதமுதலிய தோஷங்களால்மறைக்கப்பட்டஜனங்கள் இந்தஉலகத்திலும் ம்மலுலகத்திலும் ஸுகத்தைஅடையமாட்டார்கள். (அவர்கள்) பலவிதமான நோய்களாலும் புண்களாலும் வலிகளாலும் தாபங்களாலும் வ்யாபிக்கப்படுவார்கள். கொலை, கட்டி, தடை, துன்பமுதலியவைகளாலும்

பசி தாகம் ஸ்ரமங்களாலுண்டாகும்துன்பங்களாலும்வருத்தப்படுவார் கள். பெருங்காற்று அதிகஉஷ்ணம் மிகுகுளிர்இவைகளாலுண்டான பயங்களாலும் சரீரத்தைப்பற்றிய துன்பங்களாலும் தாபமடைவர் கள். பந்துக்களின்நாசததாலும் பொருள்நாசத்தாலும் அவைகளை விட்டுவிலகுவதாலும் உண்டாவனவும், ஜராமரணங்களாலுண்டாவன வும்,மற்றுமுள்ளனவுமான மனததைப்பற்றியசோகங்களாலும் துன்ப மடைவார்கள். சரீரததைப்பற்றியவைகளும் மனததைபற்றியவை களுமான இத்தத்துக்கங்களாலேதொடரப்படாதது எதுவோ அதை ஸுகமென்றறிந்துகொள்ளவேண்டும். இந்தததோஷங்கள் ஸ்வர்க்க லோகத்திலுண்டாவதிலலை. அந்தஸ்வர்க்கலோகத்திலோ கலலஸுக மானகாற்றும் கலலவாஸனையுள்ளமணமும் உள்ளன. அவ்விடத்தில் பசியும்தாகமும்கஷ்டப்புமிலலை; கிழததனமிலலை; பாதகமிலலை. எப் பொழுதும் ஸ்வர்க்கலோகததில ஸுகந்தான். இவவுலகத்தில ஸுகம் துக்கம் இரண்டுமுண்டு. நரகத்தில துக்கம் ஒன்றுதான் என்று சொல்லுகிறார்கள் ஸுகமானது உததமமானபதமாகும். (ஆனால இவ்வுலகில) கலலப்பிராணிகளையும் உண்டுபண்ணததற்கபூமியும் அப் படியே ஸ்தரீகளும் இருக்கிறார்கள். அந்தலோகததில, ப்ரம்மதேவ ரென்றபுருஷரும் தேஜோமயமானபிஜமும் உண்டென்றறிவிக்கிறார் கள்.' இவவிதமாக முன்காலததில பரம்மதேவரால இவ்வுலகம் நிர் மாணஞசெய்யப்பட்டிருக்கிறது. ராஜாள் ததததம்கர்மங்களாலசூழப் பட்டவைகளாயச் சுறறிவருகின்றன' என்றுசொன்னார்.

நூற்றெண்பத்தொன்பதாவது அத்தியாயம்.

பீஷ்மர் கூறியது. (தொடர்ச்சி.)

(ப்ரகருதி பலவர் தாமரதேயரற்றிப்பயனையும் நான்காஆச்ர மதருமங்களதர்மங்களையும் சொலலியது.)

பரதவாஜர், 'தானதருமங்களும் கன்மாக்கள்செய்யப்பட்டகர்மமதுவு மஞ்சும் கன்மாக்கள்செய்யப்பட்டதவதருக்கும் லோகாதியனதருக்கும் தேஹாபிமதருமம் என்னபயன்சொலலப்படுகிறது?' என்றுகேட்டார்.

பரு, 'தேஹாபிமதருமதால் பாபம்வலகுகிறது. லோகாதியனங் களால் உததமமானசாந்தியுண்டாகிறது. தானதருமதால்போகமுண்டா கிறது. தவதருமதால் யாவறறையும்அடைவானென்றுசொலலுகிறார்கள். தானமானது பரலோகதருமமென்றும் இவவுலகதருமமென்றும் இர

ண்டுவிதமென்றுசொல்லுகிறார்கள். ஸாதுக்களின்பொருட்டுக் கொடுக்கப்படுகிறது சிறிதானாலும் அது பரலோகத்திற்கு வந்துசேருகிறது. அஸாதுக்களிடம் அளிக்கப்படுகிற தானமானது இவ்வுலகத்தில் புஜிக்கப்படுகிறது. எவ்விதமான தானஞ்செய்யப்படுகிறதோ அவ்விதமான பயனுண்டாகிறதென்று சொல்லப்படுகிறது' என்றுசொன்னார். பரத்வாஜர், 'எவனுக்கு எந்தத்தர்மம் ஆசரிக்கவேண்டியது? கர்மத்தின் லக்ஷணமென்ன? கர்மம் எத்தனைவிதமாயிருக்கிறது? அதை நீர் சொல்லவேண்டும்' என்றுகேட்டார். ப்ருகு, 'தமக்குரியகர்மத்தைச்செய்வதில் முயற்சியுள்ளவர்களாயிருக்கிற அறிஞர்களுக்கு ஸ்வர்க்கமென்னும் பயன்கிடைக்கும். எவன் வேறுவிதமாயிருக்கிறானோ அவன் அவிவேகமடைகிறான்' என்றுசொன்னார். பாரத்வாஜர், 'முன்காலத்திலுள்ளபிரம்மரிஷிகளால் விதிக்கப்பட்டிருக்கிற நான்குஆஶ்ரமங்களில் அததற்குள்ள ஆசாரத்தை உள்ளபடி நீர்சொல்லவேண்டும்' என்றுகேட்க, ப்ருகு சொல்லத்தொடங்கினார்.

'உலகங்களுக்கு ஹிதத்தைச்செய்கிறவரான பகவான் ப்ரம்மதேவரால், கர்மங்களை நன்றாகக்காக்கவேண்டி முதலிலேயே ஆஶ்ரமங்கள் நான்காக உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுள், குருகுலத்தில்வாஸஞ்செய்வதேமுதலாவது ஆஶ்ரமமென்று உதாஹரிக்கிறார்கள். அந்தஆஶ்ரமத்தில் நல்லகானசௌசம், ஸம்ஸ்காரம், நியமம், வ்ரதம் இவைகளில் நன்றாக அடங்கியமனமுள்ளவனாய் இரண்டு ஸந்த்யாகாலங்களிலும் ஸூர்யனையும் அக்னியையும் மற்றுந்தேவர்களையும் துதிசெய்து தூக்கத்தையும் சோம்பலையும்விலக்கிவிட்டுக் குருவைவணங்குவதாலும் வேதாப்யாஸஞ்செய்வதாலும் வேதார்த்தவிசாரஞ்செய்வதாலும் பரிசுத்தமாகச்செய்யப்பட்ட அந்தராத்மாவையுடையவனும், மூன்றுகாலங்களிலும் ஸ்நானஞ்செய்வது, பிரம்மசர்யம், அக்னியை ஆராதிப்பது, ஆசார்யனுக்குப்பணிவிடை, நித்யம் பிக்ஷையெடுப்பது, அனைத்துமுதலிய ஸத்கர்மங்களையும் அந்தராத்மாவிடம் அர்ப்பணஞ்செய்தவனும், குருவின்வாக்யத்தைச் சொன்னபடிசெய்வதில் வேறுகருத்தில்லாதவனும், ஆசார்யனுடைய உபதேசத்தால் கிடைத்தவேதத்தைப் பெரிதாகக்கொண்டவனுமாயிருக்கவேண்டும். இது விஷயத்தில் ஒருஶ்லோகமிருக்கிறது. அதன்பொருளாவது: 'பிராம்மணன்முதலிய மூன்றுவருணத்தாரில் ஒருவனானவன் குருவை நன்றாகஆராதித்து வேதத்தையடைகிறானோ அவன் ஸ்வர்க்கலோகமென்னும்பயனையடைகிறான். அவன்மனமும் சித்தியடைகிறது' என்பது. 'கார்ஹஸ்த்யம்' என்பது இரண்டாவதானஆஶ்ரமமென்று

சொல்லுகிறார்கள். அந்த ஆஸ்ரமத்தின் கல்ல ஆசாரத்திற்குரியலக்ஷணம்யாவற்றையும், தொடர்ச்சியாகக்கூறுகிறேன். ப்ரம்மசர்யத்தை முடித்து 'ஸமாவர்த்தனம்' என்ற ஸம்ஸ்காரம்பெற்றவர்களும் கல்ல ஆசாரமுள்ளவர்களும் மனைவியுடன்சேர்ந்து செய்யத்தக்கதர்மத்தின் பயனை விரும்புகிறவர்களுமாயிருப்பவர்களுக்கு க்ருஹஸ்தாஸ்ரமம் விதிக்கப்படுகிறது. க்ருஹஸ்தனு யிருப்பவன் அறம்பொருள்இன்பங்களின்பயனுக்காக (இந்த) த்ரிவர்க்கத்திற்கு ஸாதனத்தைவிரும்பி வேதாத்யயனத்தால் கிடைத்தபெருமையாலோப்ரம்மரிஷிகளால்செய்யப்பட்ட வழியாலோ குற்றமில்லாத கர்மத்தால் தனங்களைலம்பாதித்து ஹவ்யகவ்யங்களிலுள்ள நியமங்களுடனும் தேவபூஜை ஸமாதி இவைகளின் அனுக்ரஹத்தால் விதிப்படிகிடைத்தபொருளுடனும்க்ருஹஸ்தாஸ்ரமத்தை நடத்திக்கொள்ளவேண்டும். அஃது எல்லா ஆஸ்ரமங்களுக்கும் மூலமென்று உதாஹரிக்கிறார்கள். எவர்கள் குருகுலத்தில் வஸிக்கிறவர்களும் ஸத்யாவஸிகளும் ஸங்கல்பித்த வ்ரதங்கள் நியமங்கள் என்றதர்மங்களைச் செய்கிறவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களுக்கும் இந்த க்ருஹஸ்தாஸ்ரமத்திலிருந்தே பிக்ஷையும் பலியும் கானங்களும்கிடைக்கின்றன. வானப்ரஸ்தாஸ்ரமத்திலிருப்பவர்களுக்குஸ்த்ரவ்யம் இருப்பதில்லை. ஸாதுக்களான இவர்கள் பெரும்பாலும் குற்றமற்றதும் பத்யமானதுமான அன்னத்தைப்புஜிப்பவர்களும் வேதாப்யாஸம் செய்கிறவர்களுமாய்த் தீர்த்தங்களுக்குச்செல்லவும் கல்லதேசங்களைத் தரிசனஞ்செய்யவும் பூமியில் ஸஞ்சரிப்பார்கள். அவர்களுக்கு வழக்கிருப்பதும் எங்கொண்டு செல்வதும் நமஸ்கரிப்பதாம் ஸஞ்ஜபயின் றி னன்மொழிகூறுதலும் இயன்றவரையில் ஸுகமான ஆஸனமும் ஸுகமானபடுக்கையும் உணவளித்தலும் மர்யாதையும் க்ருஹஸ்தரைச்செய்யத்தக்கவைகள். இதுவிஷயத்திலும் ஒருஸ்லோகமிருக்கிறது அதன்பொருளாவது:—'ஓர் ஆர்திகியானவன் அந்த க்ருஹஸ்தனுடைய வீட்டிலிருந்து தன் ஆசைபங்கமடைந்தவனாகித் திரும்பிச் செல்லுகிறானே அவனுக்குக் கன்பாபத்தைக்கொடுத்துவிட்டு அவன்புண்யகர்மத்தை வாங்கிக்கொண்டுசெல்லுகிறான்' என்பது. அன்றியும், இந்தக்ருஹஸ்தாஸ்ரமத்தில்யாகங்களைச்செய்வதால்தேவர்களும், தர்ப்பணஞ்செய்வதால் பித்ருக்களும், வேதாத்யயனத்தாலும் தேவர்களும் ரிஷிகளும், ப்ரஜையுண்டுபண்ணுவதால் ப்ரம்மதேவரும் ஸந்தோஷமடைகிறார்கள். இந்த க்ருஹஸ்தாஸ்ரமவிஷயத்திலும் (வேறு) இரண்டு ஸ்லோகங்களுமிருக்கின்றன. அவற்றின்பொருளாவது:—'எல்லாப்ராணிகளுக்கும் நேரேயுள்ளவை

களும் செவிக்குஇனிமையுமான மொழிகளைச்சொல்லவேண்டும். இந்த க்ருஹஸ்தாஸ்ரமத்தில் (பிறரைக்) குற்றஞசொல்லுவதும் அபவாதம் பேசுவதும் கடுஞசொல்லும் நிந்திக்கப்பட்டவையாகும். அவமரியாதையும் அஹங்காரமும் டம்பமும் மிகவும் நிந்திக்கப்பட்டவையாகும். ஹிம்ஸையில்லாமையும் கோபமில்லாமையும் ஸத்யவசனமும் எல்லா ஆஸ்ரமங்களுக்கும் பொதுவான தவமாகும்' என்பது. அன்றியும், இந்தஆச்ரமத்தில் மாலை, ஆபரணம், ஆடை, அப்யங்கம் இவைகளின் இடைவிடாதபோகமும் கூத்தும் பாட்டும் வாத்யங்களும் செவிக்கு ஸுகமும், கண்களுக்கு அழகானவஸ்துக்களின்தரிசனமும்கிடைக்கும். 1 பக்ஷ்யம், 2போஜ்யம், 3லேஹ்யம், 4பேயம், 5சோஷ்யம்என்ற பலவிதமான ஆஹாரங்களின்போகமும் தன்னிஷ்டப்படிஸஞ்சாரத்தால் ஸ்பர்சஸுகமும் காமஸுகலாபமும் கிடைக்கும். இந்தவிஷயத்திலும் இரண்டுஸ்லோகங்கள்இருக்கின்றன. அவற்றின்பொருளாவது:-'எந்த மனிதனுக்கு க்ருஹஸ்தாஸ்ரமத்தில் எப்பொழுதும் அறம் பொருள் இன்பம்என்றதிரிவர்க்கமான துறைகளைத்துடன்வளர்த்தியடைகிறதோ அவன் இவ்வுலகில் ஸுகங்களை அனுபவித்தபின் சிஷ்டர்சஞ்சரிக்குரிய கதியைஅடைவான். எந்தக்ருஹஸ்தன் உஞ்சவ்ருத்தையைஜீவனமாகக்கொண்டவனும் தனக்குள்ள கர்மங்களைச்செய்வதில் பற்றுள்ளவனும் காமஸுகத்திற்குள்ள முயற்சியைவிட்டவனுமாயிருக்கிறானோ அவனுக்கு ஸ்வர்க்கம்கிடைப்பது நிச்சயம்' என்பது.

நூறாவத்தாண்ணூறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மபர்வம். (தொடர்ச்சி.)

(பிரகாசமான, பரமாத்மாவுக்கு அபரிச்ஸ்தாச்ரமத்துக்கும் ஸந்யாஸாச்ரமத்திற்குரிய பாலபுணர்ஜன்மதாரணம் பிரம்மவித்பரிவ்ராஜகத்திற்கு வேண்டிய ஸாமர்த்யம் ஸ்வர்க்கத்தைக்காட்டிலுமானதென்றும் ஸந்யாஸாச்ரமத்தைச்செய்வதால் அடையத்தக்க பலனும் சொல்லியது.)

வாஸுதேவருக்கு நமஸ்காரம். நிஷ்களங்கனான கர்மத்தை அனுஸரித்துக் கொண்டிருப்பவர்கள்; பரிசுத்தமான மனஸ்ஸினையும் தூங்கினையும் மஹாயோகிகளையும் அனுஸரிப்பவர்கள்; அவர்கள்

---

1 ருசிக்கத்தகுந்தவஸ்துக்களின்தொகுதி. 2 ஆஹாரத்தொகுதி.
3 தொண்டையில்தடவுவது. 4 பானகத்தொகுதி.
5 முழுங்கத்தகுந்தவை.

விசாலமானவைகளும் மான், எருமை, பன்றி, புலி, [1]ஸ்ருமரம், யானை இவைகளால்கிறைந்தவைகளுமான அரண்யங்களில்தவஞ்செய்துகொண்டு ஸஞ்சரிப்பார்கள்; கிராமத்திற்குத்தக்க ஆடைகளையும் ஆஹாரங்களையும் போகங்களையும்விட்டவர்களும், பலவிதங்களும் கனக்குள்ளவைகளும் வனத்திலுண்டானவைகளுமான ஔஷதிகளையும் கனிகளையும் கிழங்குகளையும் இலைகளையும் உறுதியான ஆகாரமாகக்கொண்டவர்களும், நிற்கிறவர்களும், உட்காருகிறவர்களும், தரையிலும் கல்லிலும் புழுதியிலும் பருக்கைக்கல்லிலும் மணலிலும் சாம்பலிலும் படிப்பவர்களும், ஈணலாலும் சுசக்காலும் கோலாலும் மரவுரியாலும் மறைக்கப்பட்டஅங்கங்களுள்ளவர்களும், சிகையையும் மீசையையும் நகங்களையும் ரோமங்களையும் கரிப்பவர்களும், காலங்களில்நியமமாக ஸ்நானஞ்செய்கிறவர்களும், காலக்கரமல் பலியையும் ஹோமத்தையுஞ்செய்கிறவர்களும், ஸமித்துக்களையும் சுசக்களையும் புஷ்பங்களையும் கொண்டிவருவது பூஜிப்பது இடங்களைச்சுத்திசெய்வது இவைகளின் மூடிவில் ஸ்ரமபரிஹாரஞ்செய்துகொள்ளுகிறவர்களும், குளிர்வெப்பம் மழை காற்றுக்களால் கன்றுகக்காய்ந்தவைகளும் வெடித்தவைகளுமான எல்லாவங்கங்களின்தோல்களையுமுடையவர்களும், பலவிதமானநியமங்களாலும் யோகாப்பாஸங்களாலும் கர்மாநுஷ்டானங்களாலும்குறைத்துபோனவைகளும் கன்றுகக்காய்ந்தவைகளுமான மாம்ஸமுதிரம்தோல் எலும்புநிவைகளையுடையவர்களும், தைர்யத்தைப் பெரிதாகக்கொண்டவர்களுமாகி ஸத்வமிருத்தலால் சரீரங்களைவஹித்துக்கொண்டுமிருப்பார்கள். இக்கவானப்ரஸ்காச்ரமத்தைப்பற்றி ஒரு ஸ்லோகமுமிருக்கிறது. அதன்பொருளாவது:—'பிரம்மரிஷிகளால் விதிக்கப்பட்டஇக்கவானப்ரஸ்தகர்மத்தை எவன் நியமத்துடன் அனுஷ்டிக்கிறானோ அவன் அக்னிபோலவும் சோஷங்களைநிர்ப்பான்; ஜயிக்கத்தகாத உலகங்களையும்ஜயிப்பான்' என்பது. ஆறுரிஷிகளுடையஆசாரமோவென்றால்இவ்விதமாகும். அதாவது:-'பொருளையும் காரத்தையும் படிக்கையுமதலியவறைறையும்கீக்கிவிட்டு ஆசைப்படத்தக்கவஸ்துக்களில் தமக்குள்ள அபிமானமென்னும்பாசங்களைத்தறீவிட்டுமஸ்யாஸம்அடைவார்கள். மண்ணுங்கட்டியையும்கல்லையும்பொன்னையும் ஸமமாகக்கொண்டவர்களாய், ஆரம்பொருள்காமங்களைப்பற்றியவைகளானமுயற்சிகளில் பற்றுதலில்லாதவர்களும், சத்ருவையும் மித்ரனையும், உதாவீனனையும் ஸமமாபாவிப்பார்க்கிறவர்களும், ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் ஜராயுஜம்-அண்டஜம்ஸ்வேதஜம்-உத்பிஜ்

[1] ஒரு கை யுள்ள.

ஜங்களுமானபிராணிகளுக்கு வாக்காலும் மனத்தாலும் கர்மத்தா லும் த்ரோஹஞ்செய்யாதவர்களும், வீடில்லாதவர்களும், வஸிக்க வேண்டி மலையிலும் மணல்திட்டிலும் மரத்தடியிலும் தேவாலயங் களிலும் ஸஞ்சரிப்பவர்களுமாயிருந்துகொண்டிகரத்தையாவது கிரா மத்தையாவது அடையவேண்டும். நகரத்தில்ஐந்துஇரவும் கிராமத்தில் ஒர்இரவும்இருப்பவர்களாய்ப் பிரவேசித்து உயிரைததரிக்கவேண்டி மாறுபடாதகர்மங்களுள்ளவர்களான த்விஜாதிகளின்வீடுகளை அடை யவேண்டும். யாசிக்கப்படாமல பாத்திரததில்விழுந்தபிக்ஷையைப் புஜிப்பவர்களும் காமம் கோபம் கர்வம் லோபம் அவிவேகம் தீனத் தனம் டம்பம் நிந்தை அபிமானம் ஹிம்ஸை இவைகளிலிருந்துவில கினவர்களுமாயிருக்கவேண்டும். இந்த ஸந்யாஸாச்ரமத்தைப்பற்றி ஸ்லோகங்களுமிருக்கின்றன. அவறறின்பொருளாவது:-'எவன் எல் லாப்ராணிகளுக்கும்அபயமளிததுமுனியாய்ஸஞ்சரிக்கின்றாஜோ அவ னுக்கு எல்லாப்ராணிகளிடத்திலிருந்தும் எந்தச்சமயத்திலும் பய மூண்டாகிறதில்லை. எவன் அக்னிஹோத்ரிதரதைத் தன்சரீரததி லேயேமுடிவுபெற்றதாகச்செய்துகொண்டி பிக்ஷைவாங்கிக் கிடைதத அன்னங்களென்னும் ஹவிஸ்களால சரீரத்திலுள்ள அக்னியைத் (திருப்திசெய்யவேண்டிதி) தன்முகத்தில ஹோமஞ்செய்கிறாஜோ அவன் அக்னிசயனமென்ற கர்மததைசசெய்தவனல அடையப்படும் உலகங்களை அடைகிறான். எவன் பரிசுதத்தனுமகலல்றுதியுளளபுத் தியையுடையவனுமாய் விறகிலலாத அகனிபோல மிகவும்சாந்தமா யிருக்கும் மோக்ஷததிற்குரியஸயாஸாச்ரமத்தைச் சொலலியபடி செய்துகொள்ளுகிறாஜோ அநதபரம்மணன் ப்ரம்மலோகத்தை அடைகிறான்" என்பது' என்றுசொன்னர்.

1 பரத்வாஜர், 'இந்தஉலகத்தைவிடவேறுஉலகம்உண்டென்று கேட்கிறோம். அஃதுஅறியப்படுகிறதுமில்லை. அதை நான் அறிந்து கொள்ளவிரும்புகிறேன்' என்றார். அதனை நீர சொல்லவேண்டும்' என்று கேட்க, ப்ருகு சொல்ல,ஸ்தாடங்கினர்.

---

1 "பரத்வாஜா, 'இந்தநியாயகருக்குடபுலபம் இப்புலகததைவிடவேறான பரமாத்ம ஸ்பமானஅது வேதங்களில் சொல்லப்படுகிறது. அதை நான் அறிந்து கொள்ளவிரும்புகிறேன்' என்றார்; அதனை, 'பரமாத்மஸ்பமானதை நீ தெரிந்துகொள்ளுவதானால் முதலில் எல்லாப்ராணிகளுக்குமபயமளிப்பதாகிய இயமனில் யென்றும்மேலுள்ளவையாகும் யோகசாஸ்தரங்களில் சொல்லப்படும் கடலிகை யின் அருகிலுள்ள தும்மானை புற்றுகளுக்குள்ளிருக்கும் வெற்றிலைதானத்தில் புணர்ணியசாலிகளால அடையதக்க அந்த பரமாத்மலோகத்தைத் தெரிந்து கொள்ளப் பிரார்தனை செய்' என்றுசொன்னார்" என்பது பழையஉரை.

'எல்லாக்குணங்களுடனும் கூடியதும் புண்ணியமுமான இமய மலையின்உத்தரபாகத்தில் புண்ணியமும் க்ஷேமமுள்ளதும் விரும்பத் தக்கதுமான அந்தலோகம் பரலோகமென்று சொல்லப்படுகிறது. அவ்வுலகத்திலிருக்கும்மனிதர்கள் பரிசுத்தர்களும் மிகத்தெளிந்தவர் களும் லோபமோகங்களைவிட்டவர்களும் பாவச்செய்கையில்லாதவர் களும் உபத்ரவமில்லாதவர்களுமாயிருக்கிறார்கள். அந்தஉலகம் ஸ்வர்க்கலோகத்திற்குச்சமமானது. சுபமானகுணங்கள் அவ்வுலகத்திலு ள்ளனவென்றுசொல்லப்படுகின்றன. அவ்வுலகத்தில் மிருத்யுஉண்டா கிறதில்லை; வ்யாதிகளும் (மனிதனை) தொடுகிறதில்லை; பரதாரங் களில் ஆசைஉண்டாகிறதில்லை. அங்குள்ளஜனங்கள்தம்தாரத்தில் பற றுள்ளவர்களாயிருப்பார்கள். அவ்வுலகத்திலொருவனை ஒருவன் அடிப்ப தென்பதில்லை; திரவியங்களில் வியப்புண்டாவதில்லை; பரோக்ஷமான பயனுள்ளதர்மமேயில்லை; லக்ஷ்மிகரமுமஉண்டாகிறதில்லை; செய்த கர்மத்தின்பயனை பிரதியக்ஷமாகநன்றாகக்காணப்படுகிறது; சிலர் வாஹனங்களும் ஆஸனங்களும் போஜனங்களுமுள்ளவர்களும் மாடி களுடன்கூடியவீடுகளை அடைந்தவர்களும் எல்லாப்போகங்களாலும் சூழப்பட்டவர்களும் ஸ்வர்ணாபரணங்களால அலங்கரிக்கப்பட்டவர் களுமாயிருக்கிறார்கள். சிலருக்கு உயிரைத்தரிக்கவேண்டியதற்குப் போதுமானமட்டுமிருப்பதாகக்காணப்படுகிறது; சிலர் பெரியஸ்ரமத் துடன் ப்ராணதாரணஞ்செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தஉலகத் தில், சிலர் தர்மத்தைப்பெரிதாகவிரும்பினவர்களாயிருக்கிறார்கள். சிலமனிதர்கள் ஹிம்ஸைசெய்கிறவர்களாயிருக்கிறார்கள். சிலர் ஸுக மூள்ளவர்களும் சிலர் துக்கமுள்ளவர்களுமாய் சிலர் பொருளில்லாதவர் களும் மறறுஞ்சிலர் பொருளுள்ளவர்களுமாயிருக்கின்றனர். இதில சரமமும் பயமும் அவிவேகமும் பசியும் உற்பத்தியாகின்றன; எந்தஆசையால அறிவிலாதவர்கள் அவிவேகமடைவார்களோ பொருளாலுண்டாகும் அந்தலோபமும்மனிதனை நாசமாக்குகிறது. இவ வுலகில் தர்மம்,அதர்மம்என்றகாரணத்தைப்பற்றியவாதத்தினால் துன்பமான துயர வீதமாயிருக்கிறது. கலஅறிவுள்ளவனும் அவனிடத்தில் அறிவுள்ளவனும் அறிகி றானே அவன் பாபத்தாலுற்றப்படமாட்டான். வைசாகம், அவமா னம், திருட்டு, மனஸ்தாபம், அளவுகை, பிரியமானவைகளை விடுதல், துன்பம் ஸுகம், கோட்சொல்லுதல், பொய்ஸாக்ஷிசொல்லுதல் இவைகளை அவன் அடையமாட்டான். அவனுக்கு ஆயுஸ்ஸும் குறைவுபடாது. அறிவுள்ளவனும் ஆரோக்கிய முள்ளவனாயிருக்கிறான். அவனுக்கு ஸுகமும் வளர்ச்சியடையும். தர்மம்,அதர்மம்என்றகாரணத்தைப்பற்றிய பலவாதமானசிக்கை இவ்வுல

கத்திலுண்டு. இதுகர்மத்திற்குரியபூமியாகும். இவ்வுலகத்தில்சுபம் அசுபம்என்றகர்மத்தைச்செய்தபின் செய்தமனிதன் சுபகர்மங்களால் க்ஷேமத்தையும் அல்லாதகர்மங்களால் துன்பத்தையும் அடைகிறான். முன்காலத்தில் ப்ரம்மதேவரும் மற்றதேவர்களும் அப்படியே ரிஷிக்கூட்டங்களும் இவ்வுலகத்திலிருந்துசெய்தயாகத்தாலும் தவத்தாலும் பரிசுத்திபெற்று ப்ரம்மலோகத்தை அடைந்திருக்கிறார்கள். பூமியின்வடபாகமானது எல்லாவற்றையுங்காட்டிலும் மிகுபுண்யமாயும் சுபமாயுமிருக்கிறது. இவ்வுலகத்தில் புண்யத்தைச்செய்தமனிதர்கள் அவவிடத்திலிறப்படைகிறார்கள். வேறுசிலர் கெட்டகர்மங்களைச்செய்து பசு பறவைமுதலியபிறவிகளில் பிறக்கிறார்கள். அதுபோல் பூதலத்திலுள்ளவேறுசிலர் மிலேச்சர்களாகவுடையவர்களும் ஒருவரையொருவர்விழுங்குவதில் ஆசைபுள்ளவர்களுமாய்ஆயுள்முடிந்து நாசமடைகிறார்கள். அவர்கள் இவ்வுலகத்திலேயே சுற்றிக்கொண்டிருப்பார்கள்; வடதிசையைஅடைகிறதில்லை. எவர்கள் நியமமுள்ளவர்களும் ப்ரம்மசாரிகளுமாய்க் குருக்களை உபாஸிக்கிறார்களோ அறிவுள்ளவர்களான அவர்கள் எல்லாஉலகங்களையும்பற்றியவழியை அறிகிறார்கள். இவ்விதம் ப்ரம்மதேவரால் நன்கிபண்ணப்பட்ட இந்தத் தர்மமானது சுருக்கமாக நான்முகத்தினால் உபதேசிக்கப்பட்டது. உலகத்திற்குள்ளதாமதத்தையும் புதர்மத்தையும் எவன்அறிகிறானோ அவன் புத்தியுள்ளவனாகிறான்' என்றுசொன்னார். அர்ஜுனனே! இவ்விதம் ப்ருகுமுனிவியால் உபதேசிக்கப்பட்டவரும் பரதாபமுள்ளவருமான பாரத்வாஜர் மிகச்சுலபமான தர்மபுத்தியுள்ளவரும் வயப்பற்றவருமாய பருகுவைப்புணர்ந்தார். அர்ஜுனனே! உலகத்தின் நிக்கு உதவுகின்றதான உனக்குருமுழுமையும்கூறப்பட்டது. அதற்குஎன்னதெரிவியவேண்டும்! திருப்தியும்எல்லாத்தினிதாகவிளங்கும்புகழும்" என்றுகேட்டனன்.

நூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

பீஷ்மரியுதிஷ்டிரர். (தொடர்ச்சி.)

(பிரம்மா, நல்ல அதர்மங்களைக்கூறியது.)

யுதிஷ்டிரர், "தாதரே! தர்மத்தைப்பற்றி நான்முகத்தின் முறைமையை நீர்சொல்லக் கேட்டோம். பூமனே! நீர் யாவற்றையும் அறிந்தவராயிருக்கிறீர். என்னுடைய ஐயத்தையகற்றும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"அயோக்யர்கள் கெட்டஆசாரமுள்ளவர்களும் கெட்டநடை யுள்ளவர்களும் கெட்டபுத்தியுள்ளவர்களும் ஸாஹஸத்தில்விருப்ப முள்ளவர்களுமாயிருப்பார்களென்பதும் ஸாதுக்கள் ஆசாரத்தை அடையாளமாகக்கொண்டவர்களென்பதும் ப்ரஸித்தம். எந்தமனிதர் கள் ராஜமார்க்கத்திலும் பசுக்களின்நடுவிலும் தான்யதனின் நடுவிலும் சிவாலயத்திலும் அக்னிசாலையிலும் ஜலக்கரையிலும் மலத்தையும் மூத்ரத்தையும் செய்யாமலிருக்கிறார்களோ அவர்கள் நல்லவர்கள். 1 அவஶ்யம்மாகச்செய்துகொள்ளவேண்டிய பரிசுத்தியைச்செய்துகொ ண்டு ஆசமனஞுசெய்தபின் நதியில்இறங்கி ஸ்நானஞுசெய்யவேண் டும். அதன்பிறகு, தேவர்களுக்குறித்துத தர்ப்பணஞுசெய்வது மனி தர்களுக்குத்தர்மமென்று (பெரியோர்கள்) கூறுகிறார்கள். எப்பொழு தும் ஸூர்யனைத் துதிசெய்யவேண்டும். ஸூர்யன்உதிக்குங்காலத் தில் உறங்காமலிருக்கவேண்டும். மாலையிலும்காலையிலும் ஸந்த்யா காலத்தில (காயத்ரியை) ஜபிக்கவேண்டும். முதலஸந்தியிலிருந்துகொ ண்டும் அதுபோலமாலஸந்தியில (உட்கார்ந்துகொண்டும்) ஜபிக்கவே ண்டும். 2ஹந்துஅங்கங்களிலாரமுள்ளவனும் கிழக்குமுகமுள்ளவனும் மௌனத்தைஅடைந்தவனுமாகிப் போஜனத்தைசெய்யவேண்டும். அன்னத்தையும் பக்ஷியங்களையும்நிந்திக்கக்கூடாது. மிக்க ஸியுள்ளனவென்று புழுங்கவேண்டும். 3ஸமானகையுள்ளவனுகி எழுந்திருக்க வேண்டும். இரவில்காலிலாரமுள்ளவனுகிப்படுக்கக்கூடாது. தேவரிஷி யானநாரதராலீவர் இவ்விதம் ஆசாரத்தின்லக்ஷணத்தைச்சொன்னர். அக்னியையும் காளையையும் தேவதையையும் பசுவிருக்குமிடத்தை யும் நாறசந்தியையும் தர்மிஷ்டனுனப்ராம்மணனையும் எப்பொழுதும் ப்ரதக்ஷிணஞுசெய்யவேண்டும். அதிதிகளுக்கும் எல்லாஏவலாளிகளு க்கும் பந்துஜனத்திறகும் தேவர்க்காரனுக்கும் வேற்றுமையில்லாத தானபோஜனம் மனிதனுக்குச் சிறந்ததாகும். மனிதர்களுக்குக் காலையிலும் மாலையிலும் போஜனம் வேதத்தாலவிதிக்கப்படுகிறது. இடையில போஜனம் விதிக்கப்பட்டதாகக் காணுஞ். அந்தவிதிப் படி இருப்பவன் உபவாஸத்தினபயனுள்ளவனுவான். அதுபோல தோமத்திறகுரியகாலத்தில தோமஞுசெய்கிறவனும் 4ருதுகாலத்

1 'யோகக்ஷேமத்' என்கிறவாக்கியம் இரண்டுதரம் வருவதால ஒன்று விடப்பட்டது.

2 காலிரண்டு, கையிரண்டு, முகம்ஒன்று ஆகஐந்து அங்கங்கள்.

3 வேடாடம்; 'போஜனமானமுடிவில் ஆசோசனம் செய்துகொள்ள வேண்டும்' என்பதுகருத்து.

4 ஸ்நாகம்செய்யாதது ஸ்நானம்செய்தபின்பு பன்னிரண்டுநாட் களில விலக்குஸ்த்ரீகமனம்தடுக்கப்படாத ஒருநாள் ருதுகாலமென்று சொல்லப் படும்.

தில்மட்டும்(தாரத்தினிடம்)செல்லுகிறவனும் வேறு ஸ்திரீகளில்லாத வனும் கல்லறிவுள்ளவனுமாயிருப்பவன் ப்ரம்மசாரியேயன்றவனே வான். பிராம்மணர்கள்உண்டிபிச்சமான அன்னமானது காயின்மனம் போலவும் அமிருதம்போலவும் (ப்ரம்மாவினால்) செய்யப்பட்டிருக்கிறது. அந்த அன்னத்தை எந்தஜனங்கள் அன்புடன் அடைகிறார்களோ அந்தஸாதுக்கள் ஸத்யமானப்ரம்மத்தை அடைகிறார்கள். எந்தமனி தன் மண்கட்டிகளை உடைக்கிறவனும் புற்களைக்கிள்ளுகிறவனும் நகத்தைக்கடிக்கிறவனும் எப்பொழுதும் எச்சிலுள்ளவனும் ப்ரசாதைகொண்டவனுமாயிருக்கிறானே அவன் இவ்வுலகில் நீண்டஆயுளை அடையமாட்டான். மாம்ஸத்தைப்புழிப்பதிலிருந்துவிலகி, மந்திரத்தால்பரிசுத்திசெய்யப்பட்டமாம்ஸத்தைமட்டும் புஜிக்கவேண்டும். வீணாக மாம்ஸத்தைப் புஜிக்கலாகாது. [1]புறக்கிலுள்ளமாம்ஸத்தை விலக்கவேண்டும். கன்றைசத்திலோ பரதேசத்திலோ அறியாயிருப்பவனை ஆகாரமில்லாமலிருக்கும்படி செய்யக்கூடாது. காம்யமான கர்மங்களைச்செய்துபயனை அடைக்கால் அகைப் பெரியோர்களிடம் கொடுக்கவேண்டும். பெரியோர்களுக்கு அளனமளிக்கவும் அவர்களைவணங்கி ஆசீர்வதிக்கச்செய்யவும்வேண்டும். பெரியோர்களைப்புஜிக்கால் ஆயுளும் கீர்த்தியும் ஸம்பத்தும்கூடியிருப்பான். உதிக்குங்காலத்திலுள்ள ஸூர்யனைப்பார்க்கக்கூடாது. பரஸ்திரீயையும் அடையில்லாதஸ்திரீயையும் பார்க்கக்கூடாது. புணர்ச்சியென்பதை எப்பொழுதும் தர்மவழிவிட்டுவிலகாமல் ருதுஸ்நாத்திலேயே செய்யவேண்டும். குருவானவர் தீர்க்கங்களுள் ருதுஸ்நாபமானதீர்க்கமாவார். சுத்திகளுள் அக்னியானது உத்தமமான சுத்தியாகும். பெரியோர்களால்செய்யப்படிவனவெல்லாம் கர்மவழிபாகும். பசுவின்வாலைத்தொடுவதும் புண்யமாகும். தினந்தோறும் பார்க்கும்பொழுதெல்லாம் (ப்ராம்மணர்களை) ஸந்தோஷப்படுத்தவேண்டும். காலையிலும்மாலையிலும் ப்ராம்மணர்களுக்கு நமஸ்காரஞ்செய்யவேண்டுமென்று உபதேசிக்கப்பட்டிருக்கிறது. [2]தேவாலயத்திலும் பசுக்களின்நடுவிலும் ப்ராம்மணர்களின்நடுவிலும் கர்மாநுஷ்டானமையத்திலும் வேதாத்யயனகாலத்திலும் போஜனஞ்செய்யும்பொழுதும் வலக்கையை [2]வெளியிலெடுத்துக்கொள்ளவேண்டும். காலையிலும் மாலையிலும் ப்ராம்மணர்களை விதிப்படி புஜிப்பதுவிலேயுள்ளவஸ்துக்களுள் உத்தமமானவிலேயுள்ள

1 'ப்ருஷ்டமாம்ஸம்' என்பதுபாலம்; 'ச்ராத்தத்திலு மிக்கமானமாம் ஸத்தை' என்பதுபழையஉரை.

2 'யஜ்ஞோபவீதியாயிருக்கவேண்டும்' என்பது பழையஉரை.

தாகவிளங்கும்; ஸம்பத்துள்ளகிருஷிகளுள் உத்தமமானகிருஷியாயும்விளங்கும்; அதிகமாகத்தான்யங்களைசேர்ப்பதுபோலவுமாகும். எப்பொழுதும் போஜனமளிக்கும்பொழுது அளிப்பவன் 'ஸம்பக்தம்' என்றுசொல்லவேண்டும். பெற்றுக்கொள்பவன் 'ஸுஸம்பக்தம்' என்று சொல்லவேண்டும். குடிக்கஜலமளிக்கால் அளித்தவன் 'தர்ப்பணம்' என்றும் பெறுக்கொண்டவன் 'ஸுதர்ப்பணம்' என்றும் பாயஸமளிக்கும்பொழுதும் அதுபோல் கருகியையும் சித்ரான்னக்கையும் அளிக்கும்பொழுதும் அளித்தவன் 'ப்ரீதம்' என்றும் பெற்றுக்கொண்டவன் 'ஸுப்ரீதம்' என்றும் சொல்லவேண்டும். க்ஷௌரஞ்செய்கொள்ளுகிறவனையும் அப்படியே தும்முகிறவனையும் ஸ்நானஞ்செய்கிறவனையும் போஜனஞ்செய்கிறவனையும் எல்லா நோயாளிகளையும் காணும்பொழுது, 'ஆயுஷ்யம்' என்றுசொல்வது ஸம்ப்ரதாயிக்கக்கர்தாகும். ஸ்திரியைக்கெடுத்ரமுமாக மூக்கிரம் விடக்கூடாது. கன்யையையலக்கைப்பார்க்கக்கூடாது. புத்திரர்களுடனும் ஸ்த்ரீயுடனும் பகிக்கையையும் போஜனக்கையும்விலக்கவேண்டும். மஹரிஷிகளின் பெயரைச்சொல்லுவதையும் அவர்களைப்பற்றி நீயென்றுசொல்லுவதையும் விலக்கவேண்டும். கீழானமனிகர்களைப்பற்றியும் ஸமமானமனிகர்களைப்பற்றியும் இவ்விரண்டையும் சொல்லுவது குற்றமாகாது. கெட்டகுடையுள்ளமனிகர்களின் மனத்திலுள்ள கெட்டஎண்ணத்தை அவர்களின்முகக்குறி வெளியிட்டுச்சொல்லும். பல்ஜனஸமூஹஸன்னிதியில் கெளிந்துகொண்டே (பாபத்தை) மறைக்கிறமனிகர்கள் காமமடைகிறார்கள். பலகலவிகளைக்கல்லாதமனிதர்கள் கெளரிக்குரியப்பட்ட பாபத்தை மறைக்கிறார்கள். நிகதட்டாபியை மனிதர்கள்காணுவிட்டாலும் தேவர்கள் நிச்சயமாகக்காண்பார்கள். [1]பாபத்தால் மறைக்கப்பட்டபாவமான து பாபிகளை பீடை கொண்டிருக்கும். காமகாலமனைச்சார்ந்திருக்கும் தர்மமான து தர்மாத்மாவினையே தொடர்ந்துகொண்டிருக்கும். இவ்வுலகில் வாழ்வதனால் நான்கெட்டபாவங்களை நீனையாதிருப்பாயாக. அந்தப்பாவமானது சாவதற்கு முன்பு ப்ராயச்சித்தமாயிருப்பவனை அந்தச்செய்தவனிடமே செல்லும். பாவமானவன் பாவிகளைப்பிடிக்கும்பொழுது அவர்களின் பாபத்தைமட்டுமே பிடிக்கிறான். அவர்களின் புண்யத்தை அவன் விடுகிறான். [illegible] அவர்களின் புண்யத்தைமட்டுமே அனுபவிக்கிறது. [illegible] கொண்டு

1 'பாவத்தைஅவ்யாமம் வெளியிடவேண்டாம்' என்றும் 'தாமதமுமத்தை வெளியிடாமலிருக்கவேண்டும்' என்றும் பலபாடமுள்ளன.

டாடுகிறதில்லே. மூணமானது (அதை), எதிர்பாராது. அறிவுள்ளவர்கள் எல்லாப்பாணிகளுகளும் மனத்தால்செய்யப்படுவதைத் தர்மமென்றுசொல்லுகிறார்கள். ஆகையால், எல்லாப்பாணிகளிடங்களிலும் மனத்தால்க்ஷமத்தைச்செய்யவேண்டும். தர்மத்தை ஒருவனுகவே செய்யவேண்டும். தர்மத்திற்கு வேறுஸஹாயமிருப்பதென்பதில்லே. மனத்தில் தர்மமில்லாமலிருக்கையில் வெறுவித்தியையாத்திரம்அடைக்குகிடைத்தஸஹாயமானது என்னசெய்யக்கூடும்? தர்மமானது மனிதர்களுக்குக் காரணமாகிறது; தேவலோகத்திலுள்ள தேவர்களுக்கு அம்ருதமாகிறது. மறுபிறப்பில் தர்மத்தாலுண்டான ஸுகம் அந்தத் தர்மத்தைச்செய்தமனிதர்களால் இடைவிடாமல் அனுபவிக்கப்படுகிறது" என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றிரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், யுதிஷ்டிரருக்கும் தேவஸ்தானகாரியங்களையும் முக்கியமாகவிசாரிக்கவேண்டுமென்பதைப்பற்றிச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! தேவஸ்தானத்தைச்சேர்ந்தவைகளைப் பாதுகாத்துக்கொண்டிருக்கிறதற்காகச் சொல்லப்படுகிற ஆத்யாத்மமென்பது எது? அதை அறிந்துகொள்ளுவதில் எங்களை எவ்விதத்திலாவது ஈடுபடுத்தவேண்டும். ப்ரம்மஹத்தியாதோஷம் ஸ்திரீகளால் வரும்தோஷம் ஜங்கமம்என்ற இவ்வுலகம் பாவம் செய்திருக்கிறதா? உயிர்களைக் கொல்லுகிறதா? ப்ரளயகாலத்தில் எதில் போய்ச்சேருகிறது? எதினுடைய தீர்மானத்தை நாங்களுக்குஉபதேசிக்கவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லுகிறார்.

"அப்பா! பார்த்தனே! நீ என்னிடம் ப்ரச்னஞ்செய்கிறதும் மேன்மைகளைச் சிரத்தையுடனடுத்து விசாரிக்கிறதும் சபதமும் ஆசார்யர்களால் கண்டுபிடிக்கப்பட்ட ஆத்யாத்மமென்ற இந்த விஷயத்தை (உனக்கு) நான் சொல்லுவேன். உயிர்களுடன் கூடி உனக்கு ஹிதமாகச் சொல்லுவேன். உயிர்களில் மனிதனே அதை அறிந்தால் ப்ரீதியையும் ஸுகத்தையும் அடைவான். அவனுக்குஇஷ்டமான பலன்களின்னவையும் உண்டாகும். ஆகையால் எல்லாப்பிராணிகளுக்கும் ஹிதமானதுமாயிருக்கிறது. பாண்டவனே! உறுதியானஜீவியுள்ளதும் மாசற்றதுமான ஆத்மாவை அருளுவானென்னும்இருளானது எப்

பொழுதும் இவ்விதம்மறைத்துக்கொண்டு அந்தஆத்மரூபத்தில் தோன்றுகிறது. சந்திரன் எவ்விதமோ அவ்விதமே அந்த ஆத்மரூபமிருக்கிறது. அதைத்தெரிந்துகொண்டஇந்தமனிதன் பாவங்கள் நசிக்கப்பெற்று ப்ரம்மரூபத்தை அடையத்தக்கவனாகிறான். அண்டத்திற்கு ஆவரணமாயிருப்பவைகளின் அப்புறத்திலுள்ளஇருள்போல அஜ்ஞானமிருக்கிறது. பூமியும் வாயுவும் ஆகாயமும் ஜலமும் ஐந்தாவதானதேஜஸ்ஆனமஹாபூதங்களானவைகள் எல்லாப்ராணிகளுடையஉத்பத்திக்கும் லயத்திற்கும்காரணமாயிருக்கின்றன. அந்தமஹாபூதங்கள் கடலினுடையஅலைகள்போல எந்தப்பூதங்களிலிருந்து உத்பத்தியடைந்தனவோ அந்தப்பூதங்களிலேயே திரும்பவும்திரும்பவும் லயப்படுகின்றன. ஆமையானது தன் அங்கங்களை வெளியில்பரவச்செய்து திரும்பவும் சுருக்கிக்கொள்ளுகிறதுபோல ஐந்துபூதங்களையும் உருவமாகக்கொண்ட ஆத்மாவானது அந்தப்பூதங்களை உத்பத்திசெய்து திரும்பவும் சுருக்கிக்கொள்ளுகிறது. பரதர்களில்சிறந்தவனே! சரீரத்தில் அந்தப்பூதங்களின்குணங்கள் ஒன்றுசேர்ந்துகொண்டிருக்கின்றன. அந்தக்குணங்களானவை எப்பொழுதும் லயமடைகின்றவைகளும் உத்பத்தியடைகின்றவைகளுமாயிருக்கின்றன. (சரீரத்தில்) எஃதுஇல்லாவிட்டால கேட்பதும் பார்ப்பதும் ப்ரகாசிப்பதுமில்லையோ இவை எதைஅடித்திருக்கின்றனவோஅஃது அக்காரணம் பற்றி அத்யாத்மமென்று சொல்லப்படுகிறது. அஃது ஒரே உருவமுள்ளதென்று சொல்லப்படுவதும் பலவிதமானப்ரஜ்ஞைகளுடன்கூடியதுமான அறிவாயிருக்கிறது. அவ்விதமிருக்கும்பொழுது சொல்லுதற்கரிதான அந்தஆத்மாவில் உன்னுடையவாக்கானது பொருத்தமுள்ளதாகாது. புஜிக்கத்தகுந்தவர்களைவிஷயமாக (சப்தமுதலிய) மிகப்பெரியகுணங்கள் ஆகாயத்திலிருந்தலலோ உண்டாகின்றன. இவ்விதம் ஸ்தாவரமும் ஜங்கமமுமான இவ்வுலகம்முழுமையும் அந்த ஆத்மஉருவமாகவேயிருக்கிறது. ப்ரளயகாலத்திலும் அந்தஆத்மாவிற்செல்லுகிறது. திரும்பவும் அதிலிருந்து உத்பத்தியடைகிறது. பூதங்களை உருவமாகக்கொண்டபரமாத்மா மஹாபூதங்களைப்படைத்துத் திரும்பவும் லயமடையச்செய்கிறார். பூதங்களைப்படைத்தபரமாத்மா ஐந்துமஹாபூதங்களையும் எல்லாப்ராணிகளிடத்திலும்உண்டுபண்ணியேயிருக்கிறார். அந்தமஹாபூதங்களிலுள்ளவேற்றுமையை ஜீவனானது பார்க்கிறதில்லை. சப்தமும் செவியும் இடைவெளிகளுமாகிய மூன்றும் ஆகாயத்திலிருந்து உண்டானவை. ஸ்பர்சம், சேஷ்டை, த்வக்குஎன்றமூன்றும் வாயுவிலிருந்து உண்டானவையாகக்கருதப்

படுகின்றன. தேஜஸ், ரூபம் கண் (உணவுமுதலியவை) பாகமாவதற்குக் காரணமானதென்று மூன்றுவிதமாகச் சொல்லப்படுகிறது. ரஸம், ரதம், ஸாரமென்றமூன்றும் ஜலத்தின் குணங்களென்று சொல்லப்படுகின்றன. மஜ்ஜை, மூக்கு, சரீரம் இந்தமூன்றும் பூமியின்குணங்களாகின்றன. மஹாபூதங்கள் ஐந்தே. மனம் ஆறுவதென்றுசொல்லப்படுகிறது. ஓ! பாரத! இந்திரியங்களும் மனமும் இந்தஜீவனுக்கு ஞானத்திற்குக்காரணங்களாயிருக்கின்றன. புத்தியென்பது ஏழாவதென்றும் க்ஷேத்ரஜ்ஞனஜீவனே எட்டாவதென்றும்சொல்லுகிறார்கள். [1] கண்ணானது பார்க்கவேண்டியதற்காகவே. மனமானது ஸங்தேஹத்தை உண்டுபண்ணுகிறது. புத்தியானது நிச்சயத்தைச்செய்கிறதாயிருக்கிறது. க்ஷேத்ரஜ்ஞனஜீவன்ஸாக்ஷிபோலிருந்துகொண்டிருக்கிறது. புதுதியானது சைதன்யசக்தியால் வ்யாபிக்கப்பட்டுச் சேதனமென்று ப்ரவித்திபெற்றதாயிருக்கிறது. அவ்விதமிருக்கும்பொழுது ஜீவனானதுசேதனையைவிடவேறானதாகி அறிந்துகொண்டிருக்கிறதென்றுகாணப்படுகிறது. தமோகுணமென்னும் அஜ்ஞானமானது சரீரத்தைவிடுவதும் விடாததுமாகக் காணப்படுகிறது. ஸாக்ஷியான ஆத்மாவானது அவ்விதமஜ்ஞானத்தை அறிவதும் அல்லது அதைவிலக்குவதுமாயிருக்கிறது. இரண்டுஉள்ளங்கால்களுக்கும்மேலுள்ள இந்தச் சரீரத்தை எது கீழும்மேலும்அறிந்துகொண்டிருக்கிறதோ இந்தஆத்மரூபத்தால உள்ளிலுள்ள இதுயாவும்வ்யாபிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள். இவ்வுலகிலுள்ளபுருஷர்கள் இந்திரியங்களைமுழுமையையும் [2]ஜயிக்கவேண்டும். ஸத்வம், ரஜஸ், தமஸ்என்கிற குணங்களையும்வெல்லவேண்டும். அந்தமூன்றுகுணங்களும் அந்தஇந்திரியங்களை ஆச்ரயித்தவைகளாயிருக்கின்றன. மனிதன் இதைஅறிந்துகொண்டு பிராணிகளுக்குள்ளஉத்பத்தி லயத்தையும் தன்புத்தியால் பார்த்துக்கொண்டால் மெள்ளமெள்ள உத்தமமான ஆத்மானந்தத்தைப் பெறுவான். புத்தியானது, ஸத்வம்ரஜஸ்தமஸ்என்ற மூக்குணங்களாலும் பலவிதமாகஇழுக்கப்படுகிறது. இந்திரியங்கள் ஐந்தும் ஆறுவதானமனமுமாகிய யாவும் புத்தியின்உருவமே. புத்தியில்லாவிட்டால் அம்குணங்கள் எங்கிருந்துஉண்டாகும்? இவ்விதமிருப்பதைப் பார்க்க ஸ்தாவரங்களும், ஜங்கமங்களுமான இவ்வுலகமனைத்தும் புத்திமயமாகவேஆகிறது. (புத்தியானது லயமடைந்தால்) உலகம்

---

1 இந்தபோலமந்த்ரஇந்திரியஜ்ஞானமும் அந்த அந்தவிஷயங்களை அறிவதற்காகவென்றுதெரிந்துகொள்ளவேண்டும்.

2 'அறியவேண்டும்' என்பதுவேறுபாடம.

லயமடைகிறது.(புத்திஉத்பத்தியடைந்தால்) உலகம்உற்பத்திஅடைகி றது. அக்காரணம்பற்றியே புத்தியானது வேதங்களில் இவ்விதம் உப தேசிக்கப்படுகிறது. புத்தியானது எந்தஉருவத்துடன் பார்க்கிறதோ அந்தஉருவம் கண்ணுகிறது. எந்தஉருவங்கொண்டு கேட்கிறதோ அந்தஉருவம் செவியென்று சொல்லப்படுகிறது. மணத்தைஅறியும் பொழுது ஆதை மூக்கென்றுசொல்லுகிறார்கள். நாக்குவடிவுமாக அது ரஸதத்தைஅறிகிறது. த்வக்உருவமாக அது ஸ்பர்சத்தைத்தெரி ந்துகொள்ளுகிறது. புத்தியானது ஏகாலத்தில் பலஇந்திரியங் களின் உருவமான வேறுறுமையைஅடைகிறது. எந்தஉருவத்துடன் ஒருபொருளைநினைக்கிறதோ அந்தஉருவம் மனமாகிறது. ஐந்துவித மான வெவ்வேறுபொருள்கள் புத்தியின்இடங்களாகின்றன. அவை களை ஐந்துஇந்திரியங்களென்று சொல்லுகிறார்கள். அவ்விந்திரியங களைப் புதியானது காணப்படாமல் பிடித்துக்கொண்டிருக்கிறது. புதியானது ஆத்மாவைலயிடிக்கபட்டதாய் ஸத்வமுதலிய மூன் று குணங்களிலும் இருந்துகொண்டிருக்கிறது. அம்மனுஷ்யஜருமையதில ஸுகதோஷத்தையடைகிறது; ஒருஸமயத்தில் சோகப்படுகிறது. ஒரு ஸமயத்தில் ஸுகத்துடன்கூடாமலும் துக்கத்துடன்கூடாமலுமிருக் கிறது. இவ்விதம் மனிதர்களின்மனத்திலுள்ள மூன்றுகுணங்களிலு மிருப்பதும் எல்லாவஸ்துக்களின உருவமுமான அபபடிபபட்டஇந் தபபுத்தியானது,நல்லகளுக்குப்பதியும்பெரியஅலைகளுமானகட லானது அக்கரையின் பெரியஅலையைபோலியிருபபதுபோல மூன்று குணங்களிலும்மீறி ஆதமரூபத்திலிருக்கும். இவ்விதம் வேறறு மையில்லாத ஆதமரூபத்தையடைந்த புதியானது மனமென்றஉரு வத்துலஸுக்ஷுமமாயிருக்கும். பிறகு, (மனத்திலிருந்து) சப்தாதி தொடங்கும் விஜோகுணமானது புதியின் உருவத்தைத்தரிதாடர்ந்து கொண்டிருக்கும். அப்பொழுது விஜோகுணத்தினால்தூண்டபபட்ட அந்தபபுத்தியானது எல்லாஇந்திரியங்களிலும் விளங்கிச்செல்லும்படி செய்யும். பிறகு,இந்திரியங்களின் வஸ்துக்களின்றுலபமான அறிவுமபுருஷன்தானென்னும்அஹங்காரமானது தோன்றுகிறது. (அபாயமானது) பஞ்சமஹாபூதங்களும்தோன்றுகின்றன. பரீதியானது ஸத்வகுணமும் சப்தாதியானது விஜோகுணமும் மஹா னானது தமோகுணமுமாயிருந்து அந்தமூன்றுகுணங்களும் மூன்றுவித மாயிருக்கின்றன. இவ்வுலகில் பிரகிருதியால் உண்டாக்கபட்டிருக்கின்ற வைகளெல்லாம் இந்தபுருஷனுடனேயும் முழுதுமாயறிந்த ஞானமுள்ளவன்பிரகிருதியின்றி இருக்கிறான். ஓ. பரத! இவ்வாறாய பிறப்பிறப்பில்லாத

யனைத்தும் உனக்கு விரிவாகச்சொல்லப்பட்டது. அறிவுள்ளமனிதன் இந்திரியங்களையெல்லாம் வெல்லவேண்டும். ஸத்வம், ரஜஸ், தமஸ் (என்றமூன்றுகுணங்களும்) எப்பொழுதும் பிராணிகளை அடித்தவைகளாயிருக்கின்றன. ஓ! பாரத! ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்ற மூன்றுவிதமான 1வேதனையானது எல்லாப்பிராணிகளிடங்களிலுமே காணப்படுகிறது. ஸுகத்தைத் தொடர்ந்துகொண்டிருக்கும் ஸத்வ குணமும் துக்கத்தைப்பற்றியதான ரஜோகுணமும் தமோகுணத்துடன்கூடி உலகங்களையிழிருந்துகொண்டிருக்கின்றன. அவைகளிலஸ்ரீத்திலோ மனதிலோ எதுபிரியதத்துடன்கூடியதாயிருக்கிறதோ அது ஸத்வகுணத்திலிருந்துண்டானதாம்பாருளாயிருக்கிறதென்று தெரிந்து கொண்டு அதை அவ்விதம் உபேக்ஷைசெய்யவேண்டும். பிறகு, எது துக்கத்துடன்கூடியதும் தனக்கு அப்ரியதத்தைச்செய்கிறதுமாயிருக்கிறதோ அதை ரஜோகுணம்நடைபெறறிருக்கிறதென்றே நினைத்துக் கோபத்துடன்நிந்தியாமலிருக்கவேண்டும். பிறகு, எது மோஹத்துடன் கூடியதும் இந்திரியங்களுக்குப்புலப்படாததும்ஜ்ஞானமில்லாததும் ஊஹிக்கத்தகாததும் அறியக்கூடாததுமாயிருக்கிறதோ அதைத் தமோகுணமென்று நிச்சயஞ்செய்துகொள்ளவேண்டும். ஸந்தோஷம், ப்ரியம், ஆனந்தம், ஸுகம், மனநிம்மல்ய முடன்கூடியதென்றஇந்த ஸாதனிககுணங்களின்மிகுதியாகஉண்டாகின்றன. ல஘ுத்வம்,மில்லாமையும் பரிதாபமும் சோகமும் பேராசையும் பொறாமையும் ரஜோகுணத்தினையடையாளங்களாகும். அவைகளை காரணத்தாலும்காரணமில்லாமலும் காணப்படுகின்றன. அப்மானமும் அவிவேகமும் மோகமும் தூக்கமும் சோம்பலும் மறறும்பலவித்தங்களுமான தாமஸகுணங்கள் நிலவும் பாகயக்குறைவாலுண்டாகின்றன. 2எட்டாதவிஷயத்தில் செலலுவ 3பலவீனமாகச் செலலுத்தன்மையையும் ஹீனமாகயாசபபதையும் ஸுகத்தழுத்தையும் உருவமாகக்கொண்டதுமான மனமானது எவ்வுலக்கு கலலடக்குமுளளதாயிருக்கிறதோ அவன் இவ்வுலகில்லும இறநதபினனும் ஸுகமுளளவனாயிருப்பான். ஸ்ரீயுமானபுத்ரபௌத்ரஜ்ஞானஆதமா இவைபண்டிகமுமுள்ள இதை மேறறுமைமையப பார. இவை எலலாமுளபுதியானது குணங்களை உண்டுபண்ணுகிறது. மறறகுணமானஆதமாவானது அவயக்தா

1 வேதனை = அநுபவம்.

2 ' அடையமுடியாதவிஷயத்தையும் ஆசையால்எட்டவேண்டுமென்னும்.

3 ' பலவீனமாகவும் நிலையாதலும் மனமுள்ளவனாயும் ' எலலாபது பலமுளஉளர.

முதலியகுணங்களைஉண்டுபண்ணிகிறதில்லை. கொசுவும் அத்திமரத்தின்காயும் எப்பொழுதும்சேர்ந்துகொண்டிருப்பதுபோல இந்த ஆத்மாவும் புத்தியும் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டிருக்கின்றன. ஆத்மா புத்தி இவ்விரண்டுகளின்சேர்க்கையானது அத்திக்காய்க்கும் கொசுவுக்குமுள்ள சேர்க்கைபோலாகும். இயற்கையில் வேறான ஆத்மா புத்தி இவ்விரண்டும் எப்பொழுதும் சேர்க்கையை அடைந்து கொண்டிருக்கின்றன. மீனும் ஜலமும் எவ்விதம் சேர்ந்துகொண்டிருக்கின்றனவோ அதுபோலவே அந்தப்புத்தியும் ஆத்மாவும் சேர்ந்துகொண்டிருக்கின்றன. (புதுதியிலுள்ள) குணங்களானவை ஆத்மாவைஅறிகிறதில்லை. அந்தஆதமாவானது (புத்தியிலுள்ள) குணங்களைமுழுதும் அறிகிறது. குணங்களுக்குஸாக்ஷியான அந்தஆத்மாவானது பார்க்கப்படுகிறகுணங்களைத் தன்னுடன்சேர்ந்தவைகளாகநினைக்கிறது. தீபம்போலுள்ளபரமாத்மாவானது சேஷ்டையில்லாதவைகளும்அறிவிலலாதவைகளும்புத்தியைவழாலதாகக்கொண்டவைகளுமான (ஆறு) இந்திரியங்களின் வழியாயத் தீபததின்கார்யமான விஷயப்ரகாசததைச்செய்கிறது. புததியானது குணங்களை உண்டுபண்ணுகிறது. க்ஷேதரஜ்ஞனை ஆதமா அவைகளைப்பார்த்துக்கொண்டிருக்கிறது. புதது க்ஷேத்ரஜ்ஞன்என்னும்அவ்விரண்டுக்குமுள்ள இந்தச்சேர்க்கையானது அஞ்ஞியாயிருக்கிறது. புத்தியென்னும் ஸத்வத்திற்கு இருப்பிடமில்லை. க்ஷேத்ரஜ்ஞனை ஆதமாவிறகும் இடமாயிருப்பதொன்றுமில்லை. புத்தியானது மனததைவெளிப்படுத்துகிறது. ஒருபொழுதும் குணங்களைவெளிப்படுதது கிறதில்லை. எப்பொழுது மனிதன் அந்தக்குணங்களின்கிரணங்கள்போன்ற இந்திரியங்களை மனததால நன்கு அடக்குகிறானோ அபொழுது குடததிலப்ரகாசிக்கும்தீபம்போல இவனுடைய ஆத்மா ப்ரகாசமாகிறது. மனிவன்இயற்கையிலுண்டானகர்மாவைததள்ளிவிட்டு எப்பொழுதும் ஆத்மாவில் ப்ரீதியுள்ளவனும் முனியுமாயிருக்கிறானோ அவன் அந்தக் கர்மத்யாகத்தால் எலலாப்ராணிகளின் ஆத்மரூபியாயுமிருந்துகொண்டு உத்தமமானகதியை அடைவான். ஜலத்திலஸஞ்சரிக்கும்அன்னப்பறவையானது எவ்விதம் (அந்த) ஜலத்துடன் ஒட்டுதலில்லாமலிருக்கிறதோ அவ்விதமே ஆத்மரூபத்திரன் அறிவை அடைந்தவன் ப்ராணிகளிடங்களில பற்றுதலின்றியிருப்பான். இவ்விதம் பறறுதலில்லாதஸ்வபாவமுள்ள இந்தஆதமரூபதைதது தன்புத்தியாலறிந்துகொண்டமனிதன் விளையாடிக்கொண்டிருப்பான். ப்ரீகுபா ராமனும் ஸங்கதாஷப்படாமலும் மாதலீர்யாயில்லாமலும் அவன் ஸஞ்சரித்துக்கொண்டிருப்

பான். ஆத்மஞானத்தின் ஸ்வபாவஅறிவுடன்கூடியஅந்தமனிதன் எப்பொழுதும் வேண்டியபொருள்களை, எட்டுக்கால் பூச்சியானது நூலை உண்டுபண்ணுவதுபோல உண்டுபண்ணுகிறான். குணங்களானவைகள் நூல்கள்போலென்று தெரிந்துகொள்ளவேண்டும். (ஞானத்தால்) நாசமடைந்தகுணங்கள் நிவிருத்தியடைவதில்லை. நிவிருத்தியானது ப்ரத்யக்ஷத்தால்அறியப்படுகிறதில்லை. ஆனது அணுமானத்தால் பரோக்ஷமாகவித்தித்திறது என்று இவ்விதம் [1]சிலவாதிகள்நிர்ணயஞ்செய்கிறார்கள். மற்றுமுள்ளசிலவாதிகள் குணங்களுக்கு நிவிருத்தியென்றேநிச்சயிக்கிறார்கள். இவ்விரண்டையும் நன்றாகவிசாரித்து (இதைத்தன்) புத்திக்குத்தக்கபடி நிர்சயஞ்செய்துகொள்ளவேண்டும். இவ்விதம்உறுதியுள்ளதும் புத்தியால்செய்யப்பட்டவேறறுமையை மூக்யமாகக்கொண்ட நிமான இந்த ஏற்ருதய [2]க்ரந்தியென்னும் அஞ்ஞானத்தைவிலக்கிக்கொண்டு ஸுகமாகஇருக்கவேண்டும். ஸத்தேகங்கள் அறுபட்டவனைப்சோகப்படாமலிருக்கவேண்டும். அழுக்குள்ளமனிதர்கள், நிறைந்தநதியில்இறங்கி ஸ்நானம்செய்து பரிசுத்தியை அடைவதுபோல நிந்தஞானத்தை அடைந்தவர்கள் நல்லறிவுள்ளவர்களாகிறார்களென்றுதெரிந்துகொள். ஆனால், பெரியநதியில்விழுந்தவன் அதன் கரையைக்கண்டு(அதைஅடையவேண்டித்) காபமடைவான். அந்தத்

---

1 'ஆத்மஞானத்தால குணங்களநிக்ஹின்றன' என்றவிஷயத்தில்வெவ் வேறுகொள்கைகளுண்டு. இத்தக்குணங்கள் ததவஞானத்துக்கு புலப்படாமல போனலும் அவைகளில்லாமலபோவதிலலை. இவ்வாமலபோகிலை அந்தக் குணங்களைக் காரணமாகக்கொண்ட உலகம் மற்றஜீவர்களுக்கும் புலப்படாமல் போகவேண்டும். ஆகையால, அவ்விதம்சொலலுவது ப்ரத்யக்ஷத்திற்குவிரோதமாகும். ஞானத்தைஅடைந்தஜீவனிடமும் அந்தக்குணங்கள்இருக்குமாகில் ஞானம் பயனற்றதாகும். ஆகையால, ஞானியானஜீவனிடமிருந்து விலகிக் குணங்கள் மற்றவர்களிடமிருக்கின்றனவென்று யோகமதத்தில்கொளகை. குணங்கள் பலஅசங்களுள்ளனவாகையால் ஞானமுளளஜீவனிடமிருந்து சேர்ந்த குணங்கள இலலாமற்போகின்றன. மற்றஅசங்கள் ஞானமிலலாதஜீவர்களிடம் முன்போலிருக்கின்றன. குணங்களின்நாசமானது நிவிருத்தியென்றும் பாதமென்றும் இருவகைப்படும். இவைகளில், ப்ரளயகாலத்தில் காரியகாரணமடைந்து ஸத்வம், ரஜஸ, தமஸ் என்றவேற்றுமையும் லயித்திருப்பது நிவிருத்தியெனப்படும். நிவிருத்தியிலிருந்து மீண்டும் குணங்கள் திரும்பவும் ப்ரபஞ்சத்தைஉண்டுபண்ணும். ஞானத்தாலுண்டாகுங் குணங்களின்நாசம் பாதமென்றுசொலலப்படுகிறது. இங்கே குணங்கள்இலலாமலேபோகின்றன. திரும்பவும் ப்ரபஞ்சம் உண்டாகிறதென்பதில்லை. இன்னும் வேதாந்திகளின்கொள்கை. இவைகளைத் தெளிவாகவிசாரித்துநிர்ணயஞ்செய்துகொளளவேண்டும் என்பதாகும்.

2 'ஆத்மாவின்பக்கல் 'புத்தியிலலையையென்றும் புத்தியிலலைய குணங்கள் ஆத்மாவிலலையையென்றும் மனத்திலுள்ளதோஷம்' என்பது பழையவுரை.

தாபம்கரையைஅடைந்தாலஇராது. உண்மையாகஆத்மாவைஅறிந்த மனிதனே தாபமடையமாட்டான்;முக்யப்பயனனஆத்மாவைஅறிந்த உடனேயே (ஸம்ஸாரத்தைத்) தாண்டினவனகிறான். இவ்விதம் ஆத்மாவைப்பற்றி எவர்கள்தெரிந்துகொள்ளுகிறார்களோ அவர்கள் அஜ்ஞானஸம்பந்தமில்லாத உத்தமமானஞானத்தைஅடைகிறார்கள். மனிதன் இந்தஜ்ஞானத்தைஅடைந்து பிராணிகளின் உத்பத்தியையும் லயத்தையும் முழுதும் மெள்ளமெள்ளத்தன்புத்தியால்தெரிந்துகொண்டு உத்தமமானவைராக்யத்தைஅடைகிறான். அறம்பொருள் இன்பம்என்றமூன்றும் அறிந்யமென்றுஅறிந்தவன் அந்தமூன்றையும் கன்றாகத்தெரிந்துகொண்டு மனத்தால் (ஆத்மாவை) விசாரித்து த்யானம்செய்கிறவனும் உண்மையானஆத்மரூபத்தைக்கண்டவனும் உலகத்தைப்பறறிய உத்ஸாஹத்திலிருந்துவிலகியவனுமாய் மூக்தியை அடைகிறான். வெவ்வேறானஅந்தஅந்தவிஷயங்களில்விடப்பட்டவைகளும் திருக்கமுடியாதவைகளுமான இந்திரியங்களை அடக்கத்தக்க புத்தியில்லாதவர்களால் ஆத்மாவானது அறியக்கூடியதாகிறதில்லை. இந்தஆத்மாவைஅறிந்தபின் அறிவுள்ளவனுவான். அறிவிற்கு வேறு என்னலக்ஷணமிருக்கிறது? இந்தஅறிவை அடைந்து (உலகத்தை) இல்லாமல்செய்துகொள்ளுகிறான்;வேறுவிதமாகவும் (பிறர்களுக்குக்) காணப்படுவான் புகையால்மறைக்கப்பட்டஅக்னியானது ஜ்வாலையைவெளியிடாததுபோல (புத்தியை) வெளியிடுகிறதில்லையென்றும் எல்லாவிடத்திலும் கடைப்படுகிறதில்லையென்றும் எதைச்சொல்லுகிறார்களோ சரீரத்திற்குப்பயனான அந்தஆத்மாவானது தெளிவுள்ளதாகும்பொழுது மனிதன் இவ்விதமோக்ஷநிலையைப் பார்க்கிறான். [1] இந்திரியங்களுக்குப் புலப்படாததிருப்பதாலும் ஸூக்ஷ்மமாயிருப்பதாலும் மோக்ஷத்தின்வழியான தா வெளிப்படுகிறதில்லை. [2] அந்த ஆத்மரூபத்தைத்தெரிந்துகொண்டபின் அறிஞர்கள் செய்யவேண்டியதைச்செய்துகொண்டதாகஇனைக்கிறார்கள். ஆத்மரூபத்தைஅறிந்துகொள்ளாதவர்களுக்கு மிகப்பெரியபயமுண்டாவதுபோல அதை அறிந்தவர்களுக்குப் பயமுண்டாகிறதில்லை. அதை அறிந்தவர்களுள் ஒருவனுக்குமட்டில் மேலானதியென்பதில்லை. குணமிருக்குமிடத்திலன்றே மைபூசுவதாலுமில்லாதகுற்றமென்றுகூறுகிறார்கள்? எவன் பயனைக் கருதாமல் கர்மத்தைச்செய்கிறானே அவன் முன்பிறப்பிலசெய்யப்பட்டபாபத்தையும் விலக்கிக்கொள்ளுகிறான் முன்பிறப்பிலுள்ளதும்

1 'அந்த ஆத்மாதான்' என்பது மூலம்.

2 இந்தஸ்லோகம் வேறுபட்டது.

இப்பிறவியிலுள்ளதுமாகிய இந்தஇரண்டுகர்மங்களும் ஆத்மாவை அறிந்தஅவனுக்கு எவ்விதத்திலும் [1]அப்ரியத்தைஉண்டுபண்ணத் தக்கனவல்ல; [2] ப்ரியத்தைஎங்கிருந்துஉண்டுபண்ணும்? அறிவுள்ளமனிதன் கோபமுதலியவற்றால் தன்பக்கம்மனிதனே நிந்திப்பான். அறிவுள்ளவனால் நிந்திக்கப்படத்தக்க அந்தமனிதனுக்கு அவன்வினையானது இவ்வுலகில் எல்லாவிதமானபிறவியையும் உண்டுபண்ணும். பலவிதமான அந்தஅந்தவிஷயங்களைப்பற்றிச் சோகப்படுகிறவர்களும் கூச்சலிடுகிறவர்களுமான உலகத்திலுள்ள ஸம்ஸாரிஜனங்களைப் பார். ஸாதுக்கள் அடையத்தக்க [3]இணையற்றஅந்தப்பதத்தை எவர்கள் அறிகிறார்களோ அந்தஅறிவுள்ளவர்கள் அந்தவிஷயங்களில் சோகப்படாதவர்களாயிருப்பதையும் பார்.

நூற்றுத்தொண்ணூற்றுமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிஷ்மர் த்யானயோகத்தை உபதேசித்தது.)

ஏ! பார்த்த! இவ்வுலகிலுள்ளமஹரிஷிகள் எந்தத்யானயோகத்தைஅறிந்துஸாச்வதமானஸித்தியைப்பெற்றிருக்கிறார்களோநான்கு விதமான அந்தத்யானயோகத்தை இப்பொழுது உனக்குச்சொல்லுகிறேன். த்யானமானது எவ்விதம் நன்றாக அனுஷ்டிக்கப்படுமோ அவ்விதம்மோக்ஷத்திற்சென்றமனமுள்ளவர்களும்ஞானத்தில்திருப்தியுள்ளவர்களும் மஹரிஷிகளுமானயோகிகள் செய்கிறார்கள். பார்த்த! பிறப்பென்னுந்தோஷம்நீக்குதலைவடைந்தவர்களும்ஸ்திரமான ஆகமஜ்ஞானத்தில் உறுதியடைந்தவர்களும் ஸம்ஸாரதோஷத்திலிருந்து விடுபட்டவர்களுமாயிருப்பவர்கள் திரும்பவும் பிறப்படையமாட்டார்கள். மனிதர்கள் நேற்றைஇணைமுதலிய த்ருவத்துவங்களிலிருந்து வெளிப்பட்டவர்களாய் எப்பொழுதும் லக்ஷணத்திலிருப்பவர்களும் எப்பொழுதும் மோக்ஷத்தைஆசையித்தவர்களுமாய் ஸ்ருதிமுதலிய விஷயங்களின் ஸம்பந்தமிலாதவைகளும் [4]விரோதிகளில்லாத

---

1 பாதமென்பதும், 2 மோக்ஷமென்பதும் பழையவரையின் கருத்து.

3 உபாஸனைசெய்கிறவர்கள் ப்ரம்மலோகம்சென்று அடையும்தம்மூன்று; இருக்குமிடத்திலேயே நாளிகையால் அடையப்படும் மோக்ஷபதம் ஒன்று.

4 'வ்யாதி, மனத்திற்கு வேறுபட்டதோன்றாமலிருப்பது, ஸம்தேஹம், அஜாக்ரதை, சோம்பல், ஆசை, ப்ராந்தி, ஸமாதியைஅடையாமலிருப்பது, அடைந்தஸமாதியில் உறுதியில்லாமலிருப்பது' என்ற ஒன்பதும் யோகீச்வர்களுக்கு விரோதிகளாகும். (யோகஸூத்ரம், ஸமாதிபாதம், 30 - வது ஸூத்ரம்.)

வைகளும் மனத்திற்குச் சாந்தியை உண்டுபண்ணுபவைகளுமான இடங்களே அடித்தலர்களாயிருக்கவேண்டும். அவ்விடங்களில் த்யானம் பண்ணத்தக்கவஸ்துவுடன் நன்றாகச்சேர்ந்தமனத்தை ஒழிவிஷயத்தில் நிலைபெற்றதாயிருக்கச்செய்யவேண்டும். அந்தவிஷயத்தில் த்யானத்தால் மனத்தை நன்றாகத்தகைத்துநிறுத்துவதால் மனிதன் ஞானமுள்ளவனாகிறான். 1எப்பொழுதும்விஷயத்தில்பற்றுள்ளவனானவன் 2 நான்குநிதமான பூதவஸ்துக்களில் ஸமாதிஅடைகிறானோ அவன் அந்தவஸ்துக்களின்உண்மையையறிந்துகொண்டுஅந்தவிஷயங்களில் சுற்றிக்கொண்டிருப்பான். இந்திரியக்கூட்டத்தைமனத்தில்ஒன்றாகச் சேரும்படிசெய்து கட்டைபோல (ஸமாதியிலிருப்பவனும்) யோகமறிந்தவனுமானமுனியானவன் செவியால் சப்தத்தைக்ரஹிக்கமாட்டான்; த்வக்கால் ஸ்பர்சத்தை அறியமாட்டான்; கண்ணால் ரூபத்தை அறியமாட்டான்; நாவால் ரஸங்களை அறியமாட்டான்; மூக்கால் மோக்கத்தக்கயாவற்றையும் அறியமாட்டான்; (அவற்றை) விலக்கிவிடுவான். யோகபலம்பெற்றவன் ஐந்துஇந்திரியங்களின்வசப்பட்டுத் துன்பப்படுத்துகிறவைகளான சப்தமுதலிய இந்தவிஷயங்களை விரும்பக்கூடாது. பிறகு, ஸமர்த்தியமுள்ளவன் ஐந்துஇந்திரியங்களின்கூட்டத்தையும்மனத்திலொன்றாகச்சேரும்படிசெய்து ஐந்துஇந்திரியங்களுடன்கூட வெளியிலோடுவதானமனதை ஸமாதியிலிருக்கும்படிசெய்வான். தீரனானமனிதன் விஷயங்களில்ஓடும்தன்மையுள்ளதும், பிடிப்பற்றதும், ஐந்து இந்திரியங்களையும் வழியாகக்கொண்டதும்,ஸ்திரமில்லாதவஸ்துக்களிலும்ஸ்திரமாயிருப்பதுமானமனதை முதலில் த்யானவழியில் நிலைபெறும்படிசெய்யவேண்டும். இந்தமனிதன் எப்பொழுது இந்திரியங்களையும் மனதையும்நிறுத்தி ஒன்றாகச் சேரும்படிசெய்கிறானோ அப்பொழுது இது முக்கியமானத்யான வழியாகிறதென்று சொல்லப்பட்டது. ஐந்து இந்திரியங்களுடனும் ஆறுவதானஆத்மாவுடனுங்கூடிய அந்தமனிதனுடைய அந்த மனம் அவ்விதம் முதலில் த்யானத்தில் தகைவிக்கப்பட்டும் மேகத்தில் மின்னல்சலிப்பதுபோல நடுவிலெவெளிக்கிளம்பி சலிக்கத்தொடங்கும். (தாமரை)இலையிலிருக்கும் சஞ்சலமானநீர்த்துளியானது நான்கு

---

1 'எந்தமனிதன் தர்மார்த்தகாமமோக்ஷமென்னும் நான்குநிதமான புருஷார்த்தங்களுள் எப்பொழுதும் பொருளில் பற்றுதலுள்ளவனாயிருக்கிறானோ அவன் அந்தப்புருஷார்த்தங்களின் அவ்விதமான உண்மையை அறிந்தபின்பும் பொருள்களிலேயே சுற்றிக்கொண்டிருப்பான்' என்றும்பொருள்.

2 'ஸ்தூலம், ஸூக்ஷ்மம், ஸ்வரூபதரம், ஸ்வரூபதமம்' என்ற நான்கு விதங்கள்.

புறத்திலும் சலித்துக்கொண்டிருப்பதுபோல த்யானத்திலிருக்கும் இந்தமனிதனுடையமனமானது த்யானவழியில்சலித்துக்கொண்டிருக்கும். மனமானது ஒருக்ஷணம் தியானவழியில் நிலைபெற்றதாகி நிற்கும். திரும்பவும் பிராணவாயுவைப்போல ப்ராணவாயுவின்வழியான நாடியை நாடியதாயிருக்கும். த்யானயோகத்தைத்தெரிக்துகொண்ட மனிதன் (இதில்) வெறுப்பில்லாமலும் வருத்தமில்லாமலும் சோம்பலில்லாமலும் மத்சரமில்லாமலும் திரும்பவும் மனத்தை, த்யானத்துடன் சேர்த்துவைக்கவேண்டும். முதலாவதான த்யானவழியை அடைந்து ஸமாதியிலிருக்கும்யோகிக்கு ஆரம்பத்தில் [1]விசாரஸமாதியும் விதர்க்கஸமாதியும் விவேகஸமாதியுமுண்டாகும். யோகியானவன் மனத்தில் துன்பமுள்ளவனுனும் ஸமாதியைச்செய்யவேண்டும்; வெறுப்பைஅடையக்கூடாது. தனக்கு நன்மையைச்செய்துகொள்ள வேண்டும். புழுதி, சாம்பல், சாணம் இவைகளின் குவிக்கப்பட்ட குவியல்கள் நீரால்நனைக்கப்பட்டவைகளானால் உடனே ஒருவடிவஞ் செய்யக்கூடியநிலையை எவ்விதம் அடைகிறதில்லையோ, இவைகளின் காய்ந்தபொடியானது (நனைத்தும்) ஊறவைக்கப்படாமற்போனால் கொஞ்சம்பிசுக்குள்ளதாய்எவ்விதமிருக்குமோ, க்ரமமாக அதுயாவும் மெள்ளமெள்ள உருண்டைசெய்யதக்கநிலையையும்அடையுமோஅவ்விதமேஇந்திரியங்களின்கூட்டத்தைமெல்லமெல்ல நன்றாக லயமடையச்செய்யவேண்டும். காலக்ரமத்தில்இதைநடக்கும்படிசெய்யவேண்டும். இவ்விதம்செய்யுமவன் மிகவும்நன்றாகச்சாந்தியைஅடைவான். பாரத! மனத்தையும் ஐந்துஇந்திரியங்களின்வகுப்பையும் தாமாகவே இவ்விதம் முதலில த்யானவழியில் நித்யமானயோகத்தால் நிலைக்கும் படிசெய்து சாந்தியை அடையவேண்டும். அது பொருஷத்தாலும் எவ்விதத செய்வந்தாலும் அடையமுடியாது. அவனுக்கு ஸமாதிஸுகம் உண்டாகும். துன்பங்கள் வரமாட்டா. அந்தஸமாதிஸுகத்துடன்கூடியிருப்பவன் த்யானநிஷ்டையில் விளையாடிக்கொண்டிருப்பான். இவ்விதமாக யோகிகள் துன்பமில்லாததான அந்தமோக்ஷத்தை அடைகிறார்கள்" என்றுசொன்னார்.

---

1 பரமாத்மாவைப் பற்றியஸமாதி முன்னறிவிதமாகும்: ஸூக்ஷ்மசரீரத்துடன் கூடிய அவ்யக்தத்தைப் பற்றியது ஸமாதியென்று; அவ்யக்தமில்லாத ஸூக்ஷ்மசரீரமாத்ரத்தை அடைந்ததாயிருப்பதைப் பற்றியதாயுள்ளது; அவ்விரண்டையும்விலக்கி காரணமாயிருப்பதைப் பற்றியஸமாதியென்றும். இவைகளில் முன்னறிவுடன்கூடியஸமாதியைத் தவிர இரண்டாவது விசாரஸமாதியைவும் மூன்றாவதுவிவேகஸமாதியென்றும் சொல்லப்படுகின்றன.

நாற்றுத்தோண்ணூற்றுநான்காவது அத்தியாயம்.

மோ-க்ஷ த ர் ம ம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஜபத்தின்பயனையும் அதன்அனுஷ்டானவிதியையும்கூறியது.)

யுதிஷ்டிரர், "பூஜ்யரே! நான்குஆச்ரமங்களின்தர்மமும் அப்படியே ராஜதர்மங்களும் உம்மால்உபதேசிக்கப்பட்டன. பெரியபுத்தியுள்ளவரே!பலவிடங்களிலுள்ளவைகளும்வெவ்வேறுவிதங்களுமான இதிஹாஸங்களும் தர்மத்துடன்கூடிய கதைகளும் உம்மிடமிருந்து கேட்கப்பட்டன. ஆனால, எனக்கு ஒருஸந்தேகமிருக்கிறது. அதை நீர் சொல்லவேண்டும். பாரதரே! ஜபஞசெய்கிறவர்களுக்குப் பயன் கிடைப்பதைக் கேட்கவிரும்புகிறேன். ஜபஞசெய்கிறவர்களுக்கு என்னபயன் சொல்லப்பட்டிருக்கிறது? ஜபிக்கிறவர்கள் எந்தஉலகில் நீலேபெறுவர்கள்? தோஷமில்லாதவரே! ஜபத்தின்விதியை முழுமையும் நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஜபிக்கிறவர்கள்செய்யும் இந்தவிதியானது ஞானதத்தைச்சேர்ந்ததா? யோகத்தைச்சேர்ந்ததா? கர்மத்தின்விதியா? அல்லது இம்மூன்று ஒருயாகவிதிதானு? இந்தஜபமானது யாதென்றுசொல்லப்படுகிறது? இம்மூன்றையும் நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். நீர் யாவற்றையும் அறிந்தவரென்றுஎன்னுல கருதப்படுகிறீர்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லதொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் ஒருபிராம்மணனுக்கும் [1]யமனுக்கும் காலனுக்கும் மிருத்யுவுக்கும் இக்ஷவாகுவுக்கும் முனகாலத்தில் தர்ம காரணத்தைப்பற்றிய விவாதவிஷயத்திலடந்த பழையஇதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். வேதாந்தத்தில ஜபத்தைவிடவே சொலலப்பட்டிருக்கிறது. [2]ஞானம்யாகத்திலிருந்தும் சாந்தபுருஷர்கள் வேதங்களிலிருந்தும் வேதாங்கங்களிலிருந்தும் விலகி ப்ரம்ம ரூபத்திலிருக்கிறார்கள். ஸமபுத்தியுள்ளவர்களான முனிவர்களால ஞானமென்றும் யோகமென்றும் எவைகள்சொல்லப்பட்டிருக்கின்றனவோ அத்தஇரண்டுவழிகளும் (ஜபயஜ்ஞயை) ஆச்ரயித்தவைகளும் ஆச்ரயிக்காதவைகளுமாயிருக்கின்றன. அதாவது! இந்தவிஷயத்தில்

---

1 புண்யபாபங்களின்பலனைக்கொடுப்பவனை யமன்; ஆயுளின்ன அவைகளைக்கணக்கிடுகிறவனை காலன்; தேஹாந்தரத்தைப் புலப்படுத்துவைவியலைக் கூறுகிறவனை மிருத்யு.

2 'வேதயாகங்களும் மற்றவைகளும் ஸ்ரீதர்மபுத்திரனுக்கும் கண்ணருக்கு தலைமைக்கியமாகவிருந்தனவைகளும் பரிபக்குவமடைந்ததால் பயனற்றனவைகளாயிருக்கின்றன' என்பதுவேதபாடம்.

காரணத்தையும்கேள்விப்பட்டபடி சொல்லுகிறேன். அரசனே! ஜபயஜ்ஞத்தின்இந்த்வீதியானது க்ரமமாகவிதிக்கப்பட்டிருக்கிறது. ஜபயஜ்ஞமென்றசுபமானது மற்றொன்றின் பிடிப்புடன்கூடியதென்று தெரிந்துகொள்ளவேண்டும்.இந்தஇரண்டுவழிகளிலும்மனத்திறருள்ள ஸமாதிநிலையும், இந்திரியங்களின்ஜயமும், ஸத்யவசனமும், அக்னிபூஜையும், [1]ஜனங்களில்லாவிடங்களேஸேவிப்பதும், தயானமும், விஷயங்களிலுள்ளதோஷங்களேஆலோசிப்பதும், அடக்கமும், பொறுமையும், அஸூயையில்லாமையும், கணக்குள்ளஆகாரமும், விஷயங்களேவிலக்குதலும், மிதவசனமும், இந்திரியங்களின்அடக்கமுமாகிய இந்தத்தர்மங்கள் ஜபயஜ்ஞத்திறகுரியபயனைக்கொடுக்கதக்க ஸஹாயங்களாகும். இனி ஜபயஜ்ஞத்தைச்செய்யும்ப்ரம்மசாரிக்கு எவவிதம் [2] கர்மம்விலகுகிறதோ நிவிருத்திக்குக்காரணமான அவ்வித்தத்தர்மத்தைக் கேள். அரசஸரேஷ்டனே! ஜபமும் தயானமும் விருப்பும் வெறுப்பும் ஸந்தோஷமும் அந்தமோக்ஷவிஷயத்தில் தகுதியானவையல்ல. ஏனெனில், அது நன்முறஅறிந்துகொள்ளத்தக்கதாகும். எப்பொழுதும் ஜபத்தைஆவிருத்திசெய்துகொண்டும் ப்ரம்மசர்யத்திறகுரியமந்திரதத்தைஜபித்துக்கொண்டுமிருப்பவன் மோக்ஷமென்றபயனிலபுத்தியுள்ளமனத்துடன்ஜபிக்கிறவனுஞ்ஞல பரமாத்மாவைஅடைவான். ஜபிக்கிறவன்கிலையையும் ஜபத்தையும்கூறும்ம்ந்த்ரப்படி ப்ரணவத்துடன்சேர்க்கப்பட்டகாயத்ரியான ந்து சிறந்ததென்றுசொலலப்படுகிறது. சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும்சொலலப்பட்டும் பரிசுத்தமும் உசிதமுமான மறறுமுள்ளமந்த்ரமும் சிறந்ததாகும். முன்கூறப்பட்ட ஸத்யவசனமுதலிய இந்தத்தர்மம்யாவறறையும் ப்ரயாசமின்றி மோக்ஷத்திறகு ஸாதகமாக மாறறிக்கொள்ளவேண்டும் ஸதா எழும் ஸுக்ஷமமுமான இரண்டுவிதமோகவழியையும்இடைறாதின்றி அடைந்து [3]குசபபுறகூட்டத்திலிருப்பவறறும்கையிலகுசபபுறகளுளளவறறும்

1 'சுத்தமான ஆஹாரக்களேடனே' எனறும்பொருளாம்.

2 வேறுபாடாம.

3 'குசமென்றால குசமென்றபுறகளேபோல அடிபருத்து நுனிசிறுத்த காடிகளாகும். சரீரத்திலுளளறுதியினால் ப்ரம்மசர்யமானது மேலுங்கும் முன்னும்பின்னும் காளருபதாண்டும் அவ்விதகாடிகளால வியாபிக்கபபடடிருக்கிறது. அந்தவிதியாலதான் பூகசதத்தில ப்ரமசாரி காழ்ப்பிக்கிறார். அப்படிதமானபரமாத்மாவைஅடைந்தவருக்கேயெலலம்' எனறபடி இவருக்கு பழையஉரையிலகுறிதது.

தலையில்குசப்புற்களுள்ளவனும் குசப்புற்களால்நான்குபுறத்திலும் சூழப்பட்டவனும் அப்படியே குசப்புற்களால்மறைகக்பட்டு அவற்றின் நடிவிலிருப்பவனுமாயிருக்கவேண்டும். வெளியிலுள்ளவிஷயங்களை நமஸ்கரித்து விலக்கவேண்டும். உள்ளிலுள்ளவிஷயங்களையும் சிந்தியாமலிருக்கவேண்டும். மனத்தால் ஸமிதையைஉண்டுபண்ணிக்கொண்டு மனதிலேயே மனத்தைநிலைக்கச்செய்தவனும் ஹிதமான மந்திரத்தைஜபிப்பவனுமாயிருந்துகொண்டு அந்தஸமபுத்தியுடனே ப்ரம்மத்தை த்யானஞசெய்யவேண்டும். அலலது, மந்திரத்தின்பலத்தைஅடைந்து ப்ரம்மத்தைப்பற்றிய தியானத்தைஉண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். ஸமாதியில் நன்றுகநிலைபெற்றவன் பிறகு மந்திரத்தையும் விலக்கிக்கொள்ளவேண்டும். அல்லது, ஸாமர்த்தியமுள்ளமனிதன் தனக்கிஷ்டமானமந்திரத்தை முதலில்ப்ரணவமுள்ளதாக ஜபிக்கவேண்டும். [1]எந்தவஸ்துவிலேயேமனம்விழுந்துகொண்டிருக்கிறதோ அதில் மனத்தைநிலைக்கச்செய்யவேண்டும். அதுவும் ஸமாதிக்குக்காரணமாகும். மந்த்ரவிஷயத்திலோ, விதிப்படி [2]காயத்ரீ மந்த்ரதை ஜபிக்கவேண்டும். [3]தவத்தால்பரிசுத்திபெற்றமனமுள்ளவனும் [4]அடக்கமுள்ளவனும் [5]பகையும்ஸ்நேஹமும்விலகியவனும் ஆசையும் அவிவேகமுமறறவனும் குளிர்வெப்பமுதலிய த்வந்துவங்களிலிருந்துவிலகியவனுமாயிருப்பவன் சோகத்தையும் விஷயங்களில் பற்றுதலையும்அடையமாட்டான். அவன் செய்யவேண்டியவைகளைச் செய்கிறவனுமலலன், செய்யததகாதவைகளைச் செய்கிறவனுமல்லனென்பதுதிண்ணம். மனத்தைஅஹங்காரத்துடன்சேர்ந்ததாய் எந்த விஷயதிலும் ப்ரயாணப்படச்செய்யாமலிருக்கவேண்டும். பொருளைப்பெறுவதில்முயற்சியுள்ளவனும் (பிறரை) அவமதிக்கிறவனும் காரியமிலலாதவனுமாயிருக்கக்கூடாது. த்யானஞசெய்வதைப்பெரிதாகக்கொண்டவனும் அதில்முயறசியுள்ளவனும் தயானஞசெய்கிறவனும் தயானத்தால்நிச்சயமானஞானமுள்ளவனுமாயிருப்பவன் தயானத்தில் ஸமாந்தியைஉண்டுபண்ணிக்கொண்டு காலக்கிரமத்தில் அந்த

---

1 தனக்கிஷ்டமானவஸ்துவை தயானஞசெய்வதும் ஸமாதியைஅடையத்தக்கஉபாயமானஒருமதியோகமென்று யோகசாஸ்திரதில உபதேசிக்கப்பட்டிருக்கிறது. 'யதாபிமத்யானாத்வா' எனபதுசூத்ரம்.

2 'ஸம்ஹிதாம்' என்பதுசூத்ரவம்.

3 'ஸ்வாத்யாயாத்' எனபதுபதஞ்ஜலியுடையது.

4 'ஜுகுப்ஸிதாஹிம்ஸாதிதோஷவர்ஜனம்' என்பதுபதஞ்ஜலியுடையது.

5 'ஸ்வபாவாதேவ ஜந்தூனாமஹிநகுலாதிவத் பரமமதத்தை அறியவேணுமென்னுமுபதேசமுள்ளவனும்' என்பதுபதஞ்ஜலியுடையது.

த்யானத்தையும் விடவேண்டும். யாவற்றையும்விலகச்செய்துகொண்டவனும் அந்தநிலையில்ஸுகமூலளவுமான ஆத்யோகியானவன் விருப்புவெறுப்பிலாதவனும் ப்ராணன்களை விலக்குவான்; ப்ரம்மரூபமான சரீரத்தை அடைவான். ஸமாதியுள்ளவன்மரணத்தை அடைவதற்காக நினைத்து [1]நிர்விகல்பஸமாதியுள்ளவனுமிருக்கவேண்டும். அவன் எல்லாஉலகங்களையும்மீறிச்சென்று முறையேபரமாத்மாவைஅடைவான். அல்லது, அந்தஸமாதியில்ப்ரம்மரூபத்தின் அனுபவத்தைவிரும்பாமல் போனால் தேவயானமென்னும் மார்க்கத்திலிருந்துகொண்டு (ப்ரம்ம லோகத்திற்குக்) இளம்பிப்போவான். வேறுஎங்கிடத்திலும் பிறப்பை அடையவேமாட்டான். [1](ஆத்மஜ்ஞானத்தை நன்றாகஅடைந்து சாந்தியுள்ளவனும் துன்பமற்றவனும் ரஜோகுணமற்றவனுமாயிருப்பவன்) மோக்ஷரூபமான சுத்தஆத்மாவை அடைகிறான்" என்றுசொன்னார்.

நூற்றுத்தொண்ணூற்றைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், விதிப்படி ஜபம்செய்யாதவனுக்குள்ளபயனைக் கூறியது.)

யுதிஷ்டிரர், "இவ்வுலகில் ஜபம்செய்கிறவர்களுக்கு நற்கதிகளுள் உத்தமமானகதிகிடைக்குமென்பதுசொல்லப்பட்டது. அவர்களுக்கு இக்கலோகமுதானே? அல்லது வேறுகதியையும் அடைகிறார்களா?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லக்கொடங்கினர்.

"ப்ரஹஸ்பதிகளில்சிறந்தவனே! ப்ரபுவே! அரசனே! ஜபம்செய்கிறவர்களுக்குள்ள (வேறு) கதியையும் அதாவது அவர்கள்பலரகத்தை அடையும்முறையையும் கவனத்துடன்கேள். ஜபம்செய்யும் எந்த மனிதன் முன்கூறிய இக்கதியமைக்கைக் கூறியபடி அனுஷ்டிக்கவில்லையோ, இகலோகுரூபாகக்கைமட்டும்செய்கிறானே அவன் நரகத்தை அடைவான். அவமதிப்புடனும் ஸங்கோஷமில்லாமலும் [2]பிரியமில்லாமலும் ஜபம்செய்கிறவன் நரகத்தை அடைவானென்பதிற்கேகமில்லை. அஹங்காரமடைகிறவர்களனைவர்களுமே நரகத்தை அடைவார்கள். பிறர்களை அவமானஞ்செய்யும்மனிதன் வருங்காலத்தில் நரகத்தை அடைகிறவனாவான். அவனிலுங்கடுமூள்ளஎந்தமனிதன் பயனைக் கருதியே ஜபத்தைச்செய்கிறானே அந்தமனிதன் அவனைக்காட்டிலும் எந்தப்பயனில்விருப்பமின்மூழ்கிருக்கிறானோ, அந்த ஆத்மப்பயனுக்குத்

---

1 'எல்லைப்பற்றையும்தாண்டி' என்பதாம். 2 வேறுபாடு.

தக்கபிறவியை அடைவான். மேலும், ஜபஞ்செய்கிறவன் அணிமா முதலியஐச்வர்யங்களில் பற்றதலுடன் எந்தஐச்வர்யத்தில் ஆசை பெற்றிருக்கிறானே அந்தஐச்வர்யத்தின் ஆசையே அவனுக்கு நரகமாகும். அந்தமணிதன் அவ்வாசையிலிருந்துவிடுகிலபெறமாட்டான். ஜபஞ்செய்யும்எந்தமனிதன் அவிவேகமுள்ளவனுடை ஆசையுடன்ஜபத்தைச்செய்கிறானே அவன் எந்தஎந்தவிஷயத்தில் அவனுக்கு ஆசை விழுந்திருக்கிறதோ அந்த அந்தவிஷயத்திற்குத்தக்கபடி பிறப்பான். கெட்ட பக்தியுள்ளவனும்விஷயங்களின்தோஷங்களை அறியாதவனுமாயிருப்பவன் சஞ்சலமானமனத்தைஅடித்துகிற்பான்; பயனின் [1]பெருமையைஅடைவான்; நரகத்தையும் அடைவான். கல்வி அறிவில்லாமல் ஜபஞ்செய்யும்கிறவன் மோஹத்தை அடைவான். அவன் அவிவேகத்தால் எந்தநரகத்தில்சென்றுதோகாட்படிவானோஅந்தநரகத்தை அடைவான். ஜபம்செய்யும்எவன் வைராக்யம்கிரம்பாமல் பலாத்காரமாகப் போகங்களிலிருந்துவிட்டுப் பிடிவாதமுள்ளவனுய்ச் செய்வேனென்று ஜபத்தைச்செய்கிறானே அவன் நரகத்தை அடைகிறான். உத்பத்தியில்லாததும் யாவற்றிலும்மேலானதும் இந்திரியங்களுக்குப்புலப்படாததும் ப்ராணவாயுவிலிருப்பதுமான ப்ரம்மத்தை அடைந்தவனை ஜபிப்பவன் இவ்வுலகில் சரீரத்தை அடையக்காரணமேது? அறிவின் குற்றக்கால் பலநரகங்கள் கூறப்படுகின்றன. கிறந்ததான ஜபமுறையும் அதைப்பற்றிய தோஷங்களும் சொல்லப்பட்டன" என்று சொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றுருவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரஹ்மா, எல்லாத்தேவர்களிலிஸ்தானங்களும் பரமாத்மாவின் ஸ்தானத்தை விட கிகத்தறந்தனவென்று சொல்லிப் பரமாத்மாவின் ஸ்தானத்தைப் புகழ்ந்தது.)

யுதிஷ்டிரர், "ஐயரே! ஜபிப்பவன் எவ்விதநரகத்தை அடைகிறான்? எனக்கு விரிவாகச்சொல்லவேண்டும். எனக்குக் [2]குதூஹலமாயிருக்கிறது. ஆகையால் சொல்லவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

---

1 'உத்தமம்' என்பது பாடாந்தரம்.

2 ஜபமென்றாம் சுத்காரியத்தைச்செய்தவன் நரகத்தை அடைகிறானென்பதைக்கேட்க மிகப்புணர்ச்சிறதென்பதாகருத்து.

"தோஷமில்லாதவனே! தர்மத்தின் அம்சத்தால் பிறவி அடைந்த வனுயிருக்கிறாய்; இயற்கையில் தர்மத்தை அறிந்தவனுமாயிருக்கிறாய். தர்மத்திற்குமூலமான வேதத்தை ஆதாரமாகக்கொண்டவசனத்தைக் கவனத்துடன் கேள். அப்பா! ராஜனே! மரணமில்லாதசரீரமுள்ள தேவர்களுடையவைகளும் பலவிதமான ஆகிருதியும் நிறமுமுள்ளவைகளும் பலவிதமானபயன்களுள்ளவைகளுமான இந்த்ஸ்தானங்களும், இஷ்டம்போல்ஸஞ்சரிப்பவைகளும் திவ்யமுமான விமானங்களும், ஸபைகளும் பலவிதமானஉத்யானங்களும் தெளிவானஜலமுள்ளதாமரைக்குளங்களும், நான்குதிக்பாலகர்கள் சுக்ரன் ப்ருஹஸ்பதி மருத்துக்கள் விச்வேதேவர்கள் ஸாத்யர்கள் அச்வினீதேவர்கள் ருத்ரர்கள் ஆதித்யர்கள் வஸுக்கள் இவர்களுடையஸ்தானங்களும், மற்றத் தேவர்களுடையஸ்தானங்களும்பரமாத்மாவின்ஸ்தானத்தைஅபேக்ஷித்க நரகங்களென்றுசொல்லப்படும். பரமாத்மரூபமானது, விநாசபயமில்லாததும் ஒருகாரணத்தாலுமுண்டாகாததும் அவித்யைமுதலிய 1 ஐந்துக்லேசங்களாலுமுண்டானபயந்தால் சூழப்படாததும் விருப்பு வெறுப்புமுதலியதொடைகளிலிருந்துவிடுபட்டதும் முக்குணங்களிலிருந்தும்விலகியதும் 2புரிபஷ்டகமென்னும்எட்டுக்களாலும் விடப்பட்டதும் அறியப்படுவது அறிவு அறிகிறவன்என்றமூன்றின்தன்மைகளாலும்விடப்பட்டதும் 3தான்குணிதமான அறிவுகளுக்கும் விஷயமாகாததும் வுக்குகான் குத்தும்விஷயமாவதற்குத்தகுந்த 4காரணங்களில்

---

1 அவித்யை, அஸ்மிதை, ராகம், த்வேஷம், அபிநிவேசம்என்பன;இவைகளில் அவித்யையாலும் அஸ்மிதையாலும்க்ஷமாயுமிருக்கும்அக்மாவல்லாத வஸுக்களில் நித்யமென்றும் சுத்தமென்றும் ஸுகமென்றும் ஆத்மாவென்றும் தோன்றுகிற அஞ்ஞானமான அவித்யையென்றும், ஞான கர்மாக்களான ஆத்மாவின் சித்சக்தியும் புத்தியும்மனஸுமான ஒன்றுபோல் தோற்றுவது அஸ்மிதையென்றும், விஷயங்களில் மனஸ்ஸுசெல்வதை அநுபவிப்பதாலுண்டாவதும் அப்படிப்பட்டவிஷயங்களைக் காரணமெதுமு மனத்திலிருந்துவெளிவரத்தக்கதுமானஆசை ராகமென்றும், இந்தஜன்மாநகவுடனே துவேஷம் என்றும், அதிஷ்டாவாகவுகும் இந்தவுகையில்லாதும் மரணபயம் அபிநிவேசமென்றும் சொல்லப்படும்.

2 ஸூக்ஷ்ம பூதங்களும் இந்திரியங்களும் மனஸும் புத்தியும் ப்ராணவாயுவும் கர்மங்களும் அவைகளிலிருவினைவயமும் அடங்கியவுமாம்.

3 தாருவழி, சுருதி, மதி, மனஸினால் அறியகள் தான்காகும். கண் முதலிய இந்திரியங்களாலுண்டாகும் ஞானம் த்ருஷ்டியாகும். சப்தத்தாலுண்டாகும்ஞானம் சுருதியாகும். அநுமானத்தாலுண்டாகும் ஞானம் மதியாகும். மனத்தாலுண்டாகும் ஞானம் விஞ்ஞாநியாகும்.

4 இந்தமாதிரி அறிவுக்கு எட்டாதபடி ப்ரத்யக்ஷஞானத்திற்கு ரூபமுள்ளவஸ்து விரோதமாகும். இரண்டாவதுஞானத்திற்கு ஜாதி குணம் க்ரியை இவைகளிலொன்றுமிராதது விரோதமாகும். காணப்படும் ஸ்ரீருவஸ்துவைக்கொ

லாததும் ஸந்தோஷமில்லாததும் ஆனந்தமில்லாததும் சோகமில்லாததும் சமமில்லாததுமாயிருக்கிறது. காலமானது, அந்தரூபத்தில் [1] முடிவடைகிறது. காலமானது அந்தப்பரமாத்மாவினிடத்தில் ப்ரபுவாகிறதில்லை. அரசனே! அவர் காலத்திற்குப்ரபுவாயிருக்கிறார்; அதுபோல் யாவற்றிற்கும் ஈச்வராயிருக்கிறார். பரமாத்மாவின் இந்தஸ்தானந்தான் ஜபத்தைச்செய்யும் மஹாத்மாவுக்குரியதாகும். அரசர்களிலுத்தமனே! அந்தஸ்தானத்திலுள்ளபரமாத்மாவை த்யானஞ்செய்கிறவரும் நல்லஸமாதிபெற்றவருமான ஹிரண்யகர்ப்பர் அதன் ஸாயுஜ்யத்தைப்பெறுவார். அந்தப்பரமாத்மரூபத்திற்சென்று ஆத்மரூபத்தைத்தவிர வேறில்லாதகதியை அடைந்தவன் சோகப்படமாட்டான். உத்தமமானஸ்தானமானது இவ்விதமாயிருக்கிறது. அவ்விதமானஅத்தத்தேவர்களின்பதங்கள் நரகங்களாகின்றன. அவ்விதமான இந்த நரகங்கள்யாவுமே உள்ளபடிசொல்லப்பட்டன. உயர்ந்ததான அந்தப்பரமாத்மஸ்தானத்திற்கு இவ்வுலகிலுள்ளமற்றஎல்லாம் நரகமென்றுபெயருள்ளவைகளாகின்றன." என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரீஷ்மர், ஜபஞ்செய்யும் ஒருப்ராம்மணனுக்குத் தர்மமறதலிய வர்களுடன் நடந்த ஸம்வாதத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "காலன், ம்ருத்யு, யமன்இவர்களுக்கும் இக்ஷ்வாகுவென்னும்அரசனுக்கும் ஒருப்ராம்மணனுக்கும் விவாதம்நடந்ததாக முன்உம்மால்சொல்லப்பட்டது. அதனை நீர் சொல்லவேண்டும்" என்றுகேட்க, ப்ரீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இவ்விஷயத்திலும் இக்ஷ்வாகுவென்றஅரசனுக்கும் ஸோம்ய குமாரனுமமனுக்கும் ஒருப்ராம்மணனுக்கும் காலனுக்கும் ம்ருத்யுவுக்கும் நடந்தஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதா

ண்டு அதனுடன் ஸம்பந்தப்பட்ட வேறுவஸ்துவை அறிவதென்னும் அபரமான ஞானத்திற்கு ஒருவஸ்துடையஸம்பந்தமானது வேறுவஸ்துவே விஷயமாகும். பரமாத்மாவானது ப்ரமிக்காததும் ஜாதிகுணம், க்ரியை இம்மூன்றுகளில் ஒன்றுமில்லாததும் ஸம்பந்தத்தையடையாத அளவுக்ப்ரமானதாதும் இந்த மூன்றுவித அதி. கரணத்துக்கும் விஷயமாகாததத்தன்று. தானே ப்ரகாசரூபமாயிருப்பதால் தான்காவதான ஞானத்திற்கும் அதுவிஷயமன்று.

1 'உண்டாகிறதென்பது' வேறுபாடம்.

ஹரிக்கிறார்கள். அவர்களுக்கு அந்தஸம்பாஷணையானது எவ்விடத்தில் எக்காரணத்தால் எவ்விதம் தர்மவாதத்துடன்கூடி நடந்ததோ அதை அவ்விதம் என்னிடமிருந்துதெரிந்துகொள். கௌசிககோத்திரத்தில்பிறந்தவனும் பிப்பலாதருடையபுத்ரனும்அறிவுள்ளவர்களிற் சிறந்தவனும் [1]ஆறுஅங்கங்களையும்அறிந்தவனும் பெரிய யசஸுள்ளவனும் தர்மஒழுக்கமுள்ளவனுமான அத்தகைய ஒருப்ராம்மணன் ஜபஞ்செய்துகொண்டிருந்தான். அவனுக்கு ஆறுஅங்கங்களிலும் உண்மையானஞானமிருந்தது. வேதங்களில்சிறமையுள்ள அந்தப்ராம்மணன் இமயமலையின்பக்கத்தைஅடைந்து அடக்கமுள்ளவனாய்க் காயத்ரிமந்த்ரத்தைஜபித்து வேதத்தில்சொல்லிய தவத்தைச்செய்துகொண்டிருந்தான். ஜபித்துக்கொண்டிருக்கும் அந்தப்ராம்மணனுக்கு அவ்விதநியமத்துடன் ஆயிரம்வருஷங்கள்சென்றன. அப்பொழுது 'நான் ப்ரீதியுள்ளவளாயிருக்கிறேன்' என்றுசொல்லி காயத்ரீதேவியால் அந்தப்ராம்மணனுக்கு நேரில் தர்சனமளிக்கப்பட்டது. அந்தப்ராம்மணன் ஜபிக்கப்படும்மந்த்ரத்தை மௌனத்துடன் ஆவிருத்திசெய்துகொண்டு அந்தக்காயத்ரீதேவியைநோக்கிச் சிறிதும்பேசாமலிருந்தான். தேவியானவள் அப்பொழுது அந்தப்ராம்மணனிடத்திலுள்ளகருணையால் மிகப்ரீதியுள்ளவளானாள். பிறகு, வேதங்களின் தாயான காயத்ரீதேவி அந்தப்ராம்மணன்செய்யும் அந்தஜபத்தை மிகச்சிறந்ததாகக்கொண்டாடினாள். [2]அப்பொழுது தர்மபுத்தியுள்ள அந்தப்ராம்மணன் ஜபிக்கவேண்டியதைப்பூர்த்திசெய்தபின் எழுந்திருந்து காயத்ரீதேவியின்கால்களில் தலையால்வணங்கி விழுந்தான். 'தேவி! என்பாக்யத்தால் நீ ப்ரஸாதமுள்ளவளானாய்; எனக்குத்தர்சனமளிக்கவும் வந்தாய். நீ என்னிடம்அன்புள்ளவளாயிருப்பாயாகில் என்மனம் ஜபத்திலேயே விருப்பமுள்ளதாயிருக்கவேண்டும்' என்று இவ்வசனத்தையும் சொன்னான். காயத்ரீதேவியானவள், 'அந்தணரிலியே! நீ எதைவிரும்புகிறாய்? உனக்கிஷ்டமான எதை நான் செய்யவேண்டும்? சொல்லு; ஜபிக்கிறவர்களுள் மிகச்சிறந்தவனே! அதுதானும் உனக்குண்டாகும்' என்றுசொன்னாள். தேவியால் இவ்விதம்சொலப்பட்டவனும் தர்மங்களை அறிந்தவனுமான அந்தப்ராம்மணன் அப்பொழுது ப்ரஹ்மலோகத்தை, 'மங்களமூர்த்தியே! ஜபமுதலிய புண்ணியங்களுக்குள்ளெல்லாம்பெரியபுண்யமானது மேன்மேலும் விரு

1 வேதாங்கங்கள் ஆறு; இவைகள் முறையே, சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் என்று மந்தரங்களுக்கு ஸ்ரீ ஸாயணாசார்யர் கூறுகிறார்.

2 அதிகாலமான ஒருமுஹூர்த்தம் என்பர் நீலகண்டர்.

த்தி அடையவேண்டும். என்மனத்திற்குள்ளமாதிரியானது ஒவ்வொருகாலும் வளரவேண்டும்' என்றுகேட்டுக்கொண்டான். பிறகு, தேவியானவள், அவ்விருப்பம் அவ்விதமே விளித்திச்சும்' என்று இனிமையாகவிடையளித்தாள். பிறகு, அந்தப்பிராம்மணனுக்கு ப்ரியத்தைச்செய்யும்விருப்பத்துடன் தேவியானவள், 'எந்த [1]நரகத்தை ப்ராம்மணச்ரேஷ்டர்கள் அடைந்திருக்கிறார்களோ அந்தநரகத்தை நீ அடையவேமாட்டாய். சோம்பலில்லாமல் சாச்வதமானபரமாத்ம ஸ்தானத்தை நீ அடையப்போகிறாய். இங்கு என்னிடம் உன்னால் எது ப்ரார்த்திக்கப்பட்டதோ அதுவும் உனக்கு நன்குவிளைத்திக்கும். அடக்கமுள்ளவனும் ஒரேபுத்தியுள்ளவனுமாய் ஜபித்துக்கொண்டிரு. தர்மமானது உன்னை வந்தடையும். காலனும், ம்ருத்யுவும், யமனும் உன்னருகில்வருவார்கள். அவர்களுக்கும் உனக்கும் இவ்விடத்தில் தர்மத்தைப்பற்றிய விவாதமுமுண்டாகும்' என்று வேறு இவ்வசனத்தையும்சொன்னாள். இவ்விதம்சொல்லிவிட்டுப் பகவதியானகாத்ரியானவள் தன்னிருப்பிடஞ்சென்றாள். பிராம்மணனும் எப்பொழுதும் அடக்கமுள்ளவனும் கோபத்தைவென்றவனும் ஸத்யமானப்ரதிஜ்ஞையுள்ளவனும் அஸூயையில்லாதவனுமாய் அவ்விதமே நூறு தேவவருஷங்கள் ஜபித்துக்கொண்டிருந்தான். பிறகு, அந்தநியமமானதுகிறைவேறியவுடன், அறிவுள்ள அந்தப்பிராம்மணனிடம்ப்ரீதியுள்ள தர்மமானது அப்பொழுது கோலகத்து அந்தப்பிராம்மணனுக்குத்தர்சனமளித்தது, 'ஓ! ப்ராம்மண! தர்மமானஎன்னைப்பார். நான் உன்னைப்பார்க்கவிரும்பிவந்திருக்கிறேன். தர்தஜபத்தாறுப்பயன் எதுவோ அதுஉன்னால்சன்றாகஅடையப்பட்டது. அதையும்என்னிடமிருந்து கேள். எந்தஉலகங்கள் தேவர்களுக்குரியவைகளோ எந்தஉலகங்கள் மானிடர்களுக்குரியவைகளோ அவ்வுலகங்களாவும் உன்னால்ஜயிக்கப்பட்டன. ஸாதுவே! தேவர்கள்இருக்கும் இடங்களாவதைத்தாண்டி மேலேசெல்லப்போகிறாய். ரிஷியே! உயிரைப்போகவிட்டுக்கொள்; உனக்கிஷ்டமான உலகங்களை அடை. உன்னுடையநோன்பைச்சரியாதனதாகவிலக்கிக்கொண்டு, பிறகு, கூலலோகங்களை நீ அடைவாய்' என்று சொல்லிற்று. ப்ராம்மணன், 'தர்மமே! உலகத்தாலும்மனமுருகுகிறவன் டியாலில்லை. நீ ஸுகமாகப்போ. ப்ரபுவே! பல்குரங்களைப்பொறுத்த சரித்தத்தை நான் விரும்பினேன்' என்றுசொன்னான். தர்மமானது,

---

1 'லவ்கிகதர்மத்தை' என்று ஆரம்பமாகும். பிராம்மணர்களுக்கு ஸாதாரணமாகவும் பொதுவாகவும் ஏற்பட்டதும், தேவர்களுக்கும் பொருந்தியதுமான தர்மத்தை நரகமென்கிறது.

'சிறந்தபுத்தியுள்ளவனே! உன்னுடையமனத்தை உறுதியாகச்செய்து கொண்டு சரீரத்தைவிடு. உனக்கு இச்சரீரத்துடன் சேர்க்கை எதற்காக? நீ எப்படி அவிவேகத்தைஅடைகிறாய்? ஐயா! ரிஷிகளிற சிறந்தவனே! சரீரமானது அவச்யம் உன்னால் விடக்கூடியதாகும். ஓ! பிராம்மண! ஸ்வர்க்கத்திற்கு ஏறு. தோஷமில்லாதவனே! உனக்கு எது ப்ரியமாகஇருக்கிறது?' என்றுசொல்லிறது. பிராம் மணன், 'தர்மமே! என்னசொல்லப்பட்டது? ஏன் (சரீரம்) வேண் டாமென்றுசொல்லுகிறாய்? எனக்கு இந்தச்சரீரமிருக்குமீபொழுது நீ என்னை, 'ஓ! பிராம்மண!' என்றழைத்து, 'சரீரத்தைவிடு' என்று எதற்காகச்சொல்லுகிறாய்? ப்ரபுவே! சரீரமில்லாமல் ஸ்வர்க்கலோ கத்தில் வஸிப்பதில் நான் ப்ரியப்படவில்லை. தர்மமே! நீ போ. சரீர மில்லாமல் ஸ்வர்க்கலோகத்திறகுச்செல்ல எனக்கு விருப்பமில்லை' என்றுசொன்னான். தர்மமானது, 'சரீரதில மனத்தைவைப்பதில் பயனில்லை. சரீரத்தைத்தள்ளிவிட்டு ஸுகமுள்ளவனாயிரு. ரஜோ குணமற்றவைகளான உலகங்களை அடை. அவ்வுலகங்களிறசென்று நீ சோகப்படாமலிருப்பாய்' என்றுசொல்லிறது. ப்ரம்மணன், 'ஓ! மிக்கபாக்யம்பெறறவனே! நான் ஜபஞ்செய்துகொண்டு ஸந்தோஷ மாகஇருக்கிறேன். ஸுகாதனமானஉலகங்கள்வேண்டாம். நான் ஸ்வர் க்கத்தை (அடையவேண்டுமானால்) சரீரத்துடனேஅடையவேண்டும். வேறுவிதமாகவேண்டாம்' என்றுசொன்னான். தர்மமானது, 'ரிஷி களில்மிகச்சிறந்தவனே! உனக்கு இவ்விதம் சரீரத்தில அதிகப்ரிய மிருக்கிறது. ஓ! ப்ரம்மண! நீ சரீரத்தை விடவிரும்பாமலேபோ லும் காலனும் மிருத்யுவும் யமனும் இதோ உன் அருகில வந்திருக் கிறார்கள்; பார்' என்றுசொல்லிறது. ப்ரபுவே! பிறகு யமனும்கால னும் மிருத்யுவுமாகிய மூன்றுபேர்களும் மிக்கபாக்யமுள்ள அத்தப்ர ம்மணனருகிறசென்று இவ்வசனத்தைச்சொல்லத்தொடங்கினர்கள். யமன், 'கன்றுகச்செய்யப்பட்டதும் கலலாகடையுள்ளதுமான இத்தத் தவத்திறகு மிகச்சிறந்ததானபயன் உனக்கு வந்திருக்கிறது. யம னாகிய நான் உனக்குச் சொல்லுகிறேன்' என்றுசொன்னான். காலன், 'உண்மையாகச்செய்யப்பட்ட இத்தபுண்யம் உனக்கடையானபடியால் நீ அடைந்திருக்கிறாய். ஸ்வர்க்கத்தைவிட உனக்கு ஸ்ரேஷ்டமாக கலாகனைநான் உன்னை அடைந்திருக்கிறேன்' என்றுசொன்னான். மிரு த்யுவானவன், 'தர்மமறிந்தவனே! உன்னை முழுமையாகவும் மிகவும் வந்தனமான மிருத்யுவென்று தெரிந்துகொள. ப்ரம்மணனே! நான் இப்பொழுது உன்னை இவ்விடமிருந்து அழைத்துக்கொண்டு

போவதற்காகக் காலனால் ஏவப்பட்டிருக்கிறேன்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'மஹாத்மாவானயமனும் காலனும் ம்ருத்யுவும் தர்மமூ மாகியஉங்களுக்கு நல்வரவா? உங்களுக்கு என்னகார்யத்தை நான் செய்யவேண்டும்' என்றுசொல்லி, அவ்விடத்தில்சேர்ந்துகொண்டிரு க்கும்பொழுது அவர்களுக்கு அர்க்யத்தையும் பாத்யத்தையும் அளி த்து, 'என்சக்திக்குத்தக்கதான எதை உங்களுக்கு நான் செய்ய வே ண்டும்' என்று மிகவும் ப்ரீதியுள்ளவனாகி, 'தம்கார்யங்களில் முயற்சி யுள்ளவர்களும்பிறர்களுக்குஉபத்ரவத்தைஉண்டுபண்ணுகிறவர்களும் உலகத்திற்குப்பொதுவாயிருப்பவர்களும் மிக்கபூஜ்யர்களுமான நீங் கள் எதற்காக வந்தீர்கள்; சொல்லுங்கள்' என்றுகேட்டான். யமன், 'நாங்கள் இவ்விதம் மிகக்குரூரர்களும் ப்ரம்மதேவருடைய கட்டளை யைமுன்னிட்டுச்செலலுகிறவர்களும் (அவரால்)ஏவப்பட்டுஓடுகிறவர் களும் (எங்கள்) கர்மங்களின் விதியைத்தொடர்ந்திருப்பவர்களுமாயி ருக்கிறோம்' என்றுசொன்னான். ப்ரபுவே! பிறகு, அதேஸமயத்தில் தீர்த்தயாத்திரைக்குவந்தவனானஇக்ஷ்வாகுராஜன் அவர்கள்சேர்ந்தி ருக்கிறஇடத்திற்குவந்தான். பிறகு,அரசர்களில்மிகச்சிறந்தஅந்தராஜ ரிஷியானவன்அனைவர்களையும்நமஸ்கரித்துஉன்னுடைப்பூஜைசெய்துஎல் லாரையும் குசலப்ரச்னஞ்செய்தான். பிறகு, அந்தப்ராம்மணன்அந்த இக்ஷ்வாகுராஜனுக்கு ஆஸனத்தையும் அதுபோலவே அர்க்யத்தை யும் பாத்யத்தையும்அளித்தபின் குசலப்ரச்னஞ்செய்து, 'ஓ! மஹா ராஜனே! உனக்கு நல்வரவா? இங்கு எதைஎதை நீ விரும்புகிறாய்? சொல். என்னுடையசக்திக்குத்தக்கபடி எதை நான் இங்கேசெய்ய வேண்டும்; அதை நீ எனக்குச் சொல்' என்றவசனத்தையும்சொன் னான். அரசனவன், 'நான் அரசன். நீர் [1]ஆறுகர்மங்களிலும்உறுதி யாகஇருக்கும்ப்ராம்மணர்.உமக்குச்சிறிதுபொருளைக்கொடுக்கிறேன். எதுவேண்டுமோ அதை எனக்குச்சொல்லும்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'அரசனே! ப்ராம்மணன்ப்ரவ்ருத்தியுள்ளவனென்றும் நிவ்ருத்தியுள்ளவனென்றும் இரண்டுவிதமாவான். அவனுடையதர்ம மும் இரண்டுவிதமாகக்கருதப்படுகிறது. நான் ப்ரதிக்ரஹத்திலிருந்து நிவ்ருத்தியடைந்தவனாயிருக்கிறேன். அரசனே! எவர்கள் ப்ரவ்ருத்தி யிலிருக்கிறார்களோ அவர்கள்பொருட்டுத் தானங்களைக்கொடு. நான் தானத்தைப் பெறாதுகொள்ளுகிறவனல்லன். உனக்கு வேண்டுமே தென்ன? எதை நான் கொடுக்கவேண்டும்? அரசர்களில் மிகச்சிறந்

1 அத்யயனம், அத்யாபனம், யஜனம், யாஜனம், தானம், ப்ரதிக்ர ஹம் என்ற ஆறுகர்மங்கள்.

தவனே! நீ சொல்லு. தவத்தால் எதை நான் ஸாதிக்கவேண்டும்?' என்றுசொன்னான். அரசன், 'நான்க்ஷத்ரியன். ஒரிடத்திலும், 'கொடு' என்றவசனத்தை நான் அறிந்தவனல்லன். ப்ராம்மணோத்தமரே! ஆனால், 'யுத்தத்தைக்கொடு' என்று இவ்விதம் சொல்லுகிறவனுகிறேன்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'அரசனே! நாங்கள்எவ்விதம், ஸ்வதர்மத்தில்ஸந்தோஷமுள்ளவர்களாயிருக்கிறோமோ அதுபோல் நீயும் ஸ்வதர்மத்தால் ஸந்தோஷமடைகிறாய். நமக்கு ஒருவருக்கொருவர் மறுமொழியில்லை. எது இஷ்டமோ அதைச்செய்துகொள்' என்றுசொன்னான். அரசன், 'ஓ! ப்ராம்மணரே! முதலில், 'என்சக்திக்குத்தக்கபடி நான் கொடுக்கிறேன்' என்று உம்மால் சொல்லப்பட்டது.நான் உம்மிடம் யாசிக்கிறேன்.இந்தஜபத்திற்குள்ள பயனை எனக்குக்கொடுக்கவேண்டும்' என்றுகேட்டான். ப்ராம்மணன், 'நீ, 'என்னுடையவாக்கானது எப்பொழுதும் யுத்தத்தைக் கேட்கிறது' என்றுபுகழ்ந்துபேசுகிறாயே. என்னுடன்கூட யுத்தமோகிடையாது. திரும்பவும் எதற்காக யாசிக்கிறாய்?' என்றுசொன்னான். அரசன், 'ப்ராம்மணர்கள் வாக்கை வஜ்ராயுதமாகக்கொண்டவர்களென்றுசொல்லப்படுகிறார்கள். க்ஷத்ரியர்கள் கையால் ஜீவிக்கிறவர்களென்றுசொல்லப்படுகிறார்கள். ஆகையால், ஓ! ப்ராம்மண! உம்மூடன் குரூரமான இந்தவாக்குயுத்தம் எனக்குவேண்டும்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'இப்பொழுது என்சக்திக்குத்தக்கபடி எதைக்கொடுக்கவேண்டும்? என்னுடையப்ரஜ்ஞைஇவ்விதமிருக்கிறது. அரசஸ்ரேஷ்டனே! கேள். கொடுக்கிறேன். சக்தியிருக்கும்பொழுது தாமஸிக்கவேண்டாம்' என்றுசொன்னான். அரசன், 'நீர் கொடுக்கசிறுப்பமுள்ளவராயிருப்பீராஞல் ஜபம்செய்யும்உம்மால் நூறுவருஷங்கள் எதுபூர்ணமாகஜபிக்கப்பட்டதோ அடையப்பட்ட அதன்பயனை எனக்குக் கொடும்' என்றுகேட்டான். ப்ராம்மணன், 'என்னால் எதுஜபிக்கப்பட்டதோ அதன்சிறந்தபயனைப் பெற்றுக்கொள்ளலாம். நீ ஸந்தேஹமில்லாமல் அந்தஜபத்தின்பாதிப்பயனைப்பெற்றுக்கொள்; அல்லது, அரசனே! நீ இந்தஜபத்திற்குள்ளபயன்யாவற்றையும்விரும்புவாயாகில் என்னுடையஜபத்திற்குரியபயன்யாவற்றையுமே இஷ்டப்படி பெற்றுக்கொள்' என்றுசொன்னான். அரசன், 'என்னால் எந்தஜபத்தின்பயன் யாசிக்கப்பட்டதோ அந்தனைத்தும் வேண்டாம். உமக்குச் சுபமுண்டாகட்டும். நான் போகின்றேன். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். அந்தஜபத்திற்குரியபயன் என்ன வென்பதைச் சொல்லும்' என்றுகேட்டான். ப்ராம்மணன், 'என்

ஞல்ஜபிக்கப்பட்டதும் உனக்கு அளிக்கப்பட்டதும் எதுவோ அந்த ஜபத்தின்பயன் என்னகிடைக்குமென்பதை நான றியவில்லை. இந்தத் தர்மமும் காலனும் யமனும் ரிருத்யுவும் இதற்குஸாக்ஷிகள்' என்று சொன்னன்.' அரசன், 'அறியப்படாத இந்தத்தர்மத்தின் பயனுது எனக்கு என்னசெய்யப்போகிறது? ஜபத்தாலுண்டானதர்மத்தின் பயனே நீர் எனக்குச்சொல்லாவிட்டால் அந்தப்பயனே ப்ராம்மணரான நீர்அடையும். ஸந்தேஹத்துடன்கூடியஅதை நான்விரும்புகிறவனல்லன்' என்றுசொன்னன். ப்ராம்மணன் சொல்லத்தொடங்கினன். 'பிறனுக்களித்ததை நான்பெற்றுக்கொள்ளமாட்டேன். ஜபத்தின் பயனுதை என்னுல் வாக்கால்கொடுக்கப்பட்டது. ராஜரிஷியே! இப் பொழுது என்னுடையதும் உன்னுடையதுமானவசனம் ப்ரமாணந் தானே? பாகமானது ஒருதடவைகிடைக்கும். கன்னிகையானவள் ஒருதடவைதான் கொடுக்கப்படுவாள். கொடுக்கிறேனென்பது ஒரே தடவை. இம்மூன்றும் ஒவ்வொருதடவைதான். ஜபிக்கும்விஷயத்தில் ஒருஸமயத்திலும் பயனேப்பற்றியஎண்ணத்தை நான் முந்திச் செய்தவனல்லன். அரசப்புலியே ! ஜபத்தின்பயனே நான் எவ்விதம் அறிவேன். 'கொடு' என்றுஉன்னுல்சொல்லப்பட்டது. என்னுல் பயனுது வாக்கால்கொடுக்கப்பட்டது. வாக்கை நான் பொய்யாகச் செய்யமாட்டேன். ஸத்தியத்தைக்காப்பாற்று; உறுதியுள்ளவனுயிரு. அரசனே! ஆவ்விதம் இல்லாமல்,இப்படிச்சொல்லும்என்னுடையவசனத்தை நீசெய்யாவிட்டால் உனக்குப் பொய்யால் செய்யப்பட்ட பெரியஅதர்மம் உண்டாகும். பகைவர்களே அடக்குகிறவனே! பொய் யானவசனத்தைச்சொல்லுவதுஉனக்கு யுக்தமன்று.அதுபோல் என் னுலும் சொல்லியதைப் பொய்யாகச்செய்யமுடியாது. [1]முதலில்விசாரியாமல், 'கொடுக்கிறேன்' என்று என்னுல் ப்ரதிஜ்ஞைசெய்யப் பட்டது. நீ ஸத்யத்திலுறுதியுள்ளவனுனல் அதை விசாரியாமல் பெறறுக்கொள்ளவேண்டும். அரசனே ! இவ்விடத்திற்குவந்தன்றே என்னிடம் நீ ஜபத்திற்குரியபயனே யாசித்தாய்! என்னுல்கொடுக்கப் பட்ட அப்பயனேப்பெற்றுக்கொள்; ஸத்தியத்தில் உறுதியுள்ளவனுகியும் இரு. அரசனே! பொய்பேசுவதைப்பெரிதாகக்கொண்ட மனிதனுக்கு இவ்வுலகமில்லை: பரலோகமுமில்லை. அவன் தன்முன்னேர்களை (த்தன்பத்திலிருந்து) மீள்விக்கமாட்டான். மறறவர்களே எங்ஙனும் மீள்விப்பான் ? புருஷர்களிற்சிறந்தவனே ! ஸத்யமானது இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் எப்படி மனிதனே மீளச்செய்யுமோஅது போல யாகமும் அத்யயனமும் தானமும் நியமங்களும் மீளச்செய்

யா. நூறுவருஷங்களாலும் ஆயிரம்வருஷங்களாலும் எந்தத்தவங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவோ, எந்தத்தவத்தைச்செய்யப்போகிறார்களோ அவை ஸத்யத்தைவிட விசேஷமுள்ளனவல்ல. ஸத்யம்ஒன்றே பரமாத்மரூபமாகும். ஸத்யம்ஒன்றே பெரியதவமாகும். ஸத்யம்ஒன்றே பெரியயாகமாகும். ஸத்யம்ஒன்றே பெரியசாஸ்திரமாகும். ஸத்யமானது வேதங்களில் விளங்கிக்கொண்டிருக்கிறது. சிறந்தபயனைது ஸத்யத்திலிருக்கிறதென்றுநினைக்கப்படுகிறது. தவமும் தர்மமும் தமமுமாகியயாவும் ஸத்தியத்தில்லேபெற்றிருக்கின்றன. ஸத்யமானது வேதங்களும் அவற்றின் அங்கங்களுமாகின்றது. ஸத்யமானது யாகங்களும் (அவைகளின்) விதியுமாகிறது. ஸத்யமானது வ்ரதாநுஷ்டானமாகிறது. ஓங்காரமானது ஸத்யமாகவேயிருக்கிறது. பிராணிகளின்பிறப்பு ஸத்யமாகவேயிருக்கிறது. ஸந்ததியும் ஸத்யமாகவேயிருக்கிறது. ஸத்யத்தால் காற்றுவீசுகிறது. ஸத்யத்தால் ஸூர்யன்ப்ரகாசிக்கிறது. ஸத்யத்தால் அக்நியானதுஎரிகிறது. ஸ்வர்க்கமானது ஸத்யத்தால் நிலைபெற்றிருக்கிறது. ஸத்யமானது யாகமும் தவமும் வேதங்களும் [1]ஸ்தோபங்களும் மந்த்ரங்களும் ஸரஸ்வதியுமாகிறது. தர்மமும் ஸத்யமும்தராசில்வைக்கப்பட்டனவென்று எங்களுக்குக் கேள்வியுண்டு. ஸமமானநிலையில்தூக்கும்பொழுது எதில் ஸத்யமுள்ளதோ அது [2]தாழ்ந்தது. எதில் தர்மமுள்ளதோ அதுஸத்யமுள்ளது. யாவும் ஸத்யத்தால்வளர்ச்சி அடைகின்றன. அரசனே! நீ எதற்காகப் பொய்யானகார்யத்தைச் செய்யவிரும்புகிறாய்? ஸத்யத்தில்உறுதியானஎண்ணத்தைச் செய்துகொள். அரசனே! பொய்யைச்செய்யாதே. 'நீ, கொடு' என்றவசனத்தைப்பொய்யாகவும் அசுபமாகவும் ஏன்செய்கிறாய்? அரசனே! என்னற்கொடுக்கப்பட்டஜபத்தின்பயனை நீவிரும்பாமல்போவாயாகில் ஸ்வதர்மங்களில்நின்றும் வழுவியவனவாய்; (அதற்குள்ள) உலகங்களை அடைவாய். அங்ஙிகரித்தபின் கொடுக்கவிருப்பமில்லாதவனும் யாசித்தபின் பெற்றுக்கொள்ளவிருப்பமில்லாதவனுமாகிய இருவர்களும் பொய்யுள்ளவர்களாகிறார்கள். ஆகையால், நீ பொய்சொல்லத்தக்கவனல்லன்' என்றுசொன்னன். அரசன், 'ப்ராம்மணரே! யுத்தஞ்செய்வதும் ரக்ஷிப்பதுமன்றே க்ஷத்திரியர்களுக்குள்ளதர்மம்! க்ஷத்திரியர்கள் தானஞ்செய்கிறவர்களென்றுசொல்லப்படுகிறார்கள். நான் உம்மிடமிருந்து எப்படி (தானத்தை) பெற்றுக்

1 ரிக்வேதமில்லாமல் ஸாமவேதத்தின் இடையிலவரும் அக்ஷரங்கள்.

2 'அதிகம்' என்பதுமூலம்.

கொள்வேன்?' என்றுசொன்னன். பிராம்மணன், 'அரசனே! நான் உன்னைப் பெற்றுக்கொள்ளென்று ப்ரார்த்தித்தவனுமல்லன்: உன்னுடையவீட்டிற்கு வந்தவனுமல்லன். நீ இவ்விடத்திற்குவந்துயாசித்துத் திரும்பவும் ஏன்பெற்றுக்கொள்ளாமலிருக்கிறாய்?' என்றுசொன்னன். தர்மம், 'உங்களிருவர்களுக்கும் விவாதமில்லாமலிருக்கட்டும். என்னை இங்குவந்த தர்மமென்றுதெரிந்துகொள்ளுங்கள். ப்ராம்மணன் தானஞ்செய்தபயன்களையுடையவனும் அரசன்ஸத்தியத்திற்குள்ளபயன்களையுடையவனுமாயிருக்கட்டும்' என்றுசொல்லிற்று. ஸ்வர்க்கம், 'அரசஶ்ரேஷ்டனே! என்னை உருவமுள்ளதாக கேரில்வந்த ஸ்வர்க்கமென்று தெரிந்துகொள். உங்களிருவர்களுக்கும் விவாதமில்லாமலிருக்கட்டும். நீங்கள்இருவர்களும் ஸமமானபயனுள்ளவர்களாயிருங்கள்' என்றுசொல்லிற்று. அரசன், 'எனக்கு ஸ்வர்க்கத்தால் செய்யவேண்டியகார்யமில்லை. ஸ்வர்க்கமே! நீ வந்தபடியே திரும்பிப்போகலாம். ப்ராம்மணர் [1] தானஞ்செய்யவிரும்புவாராகில் என்னுற்செய்யப்பட்டகர்மங்களின்பயனைப் பெற்றுக்கொள்ளட்டும்' என்றுசொன்னன். ப்ராம்மணன், 'அறியாமையால் இளமைப்பருவத்தில் என்னால் கைக்கீட்டப்பட்டிருக்குமானாலும் இப்பொழுது காயத்ரியைஜபித்துக்கொண்டு நிவ்ருத்தியென்றுசொல்லப்படும்தர்மத்தை உபாவித்துக்கொண்டிருக்கிறேன். அரசனே! நெடுங்காலமாக நிவ்ருத்தியிலிருக்கும்என்னை எப்படி ஆசையுள்ளவனாகச் செய்வாய். நானே வேண்டியதைச்செய்துகொள்வேன். அரசனே! தவத்தையும் வேதாத்யயனத்தையும் ஸ்வபாவமாகச் செய்கிறவனும் ப்ரதிக்ரஹத்திலிருந்து விலகினவனுமானநான் உன்னிடமிருந்து பயனை விரும்பவில்லை' என்றுசொன்னன். அரசன், 'ஓ! ப்ராம்மணரே! ஜபத்திற்குள்ள உத்தமமானபயனானது உம்மாலகொடுக்கப்பட்டதாகுமானால் நம்மிருவருடைய ஜபத்திற்குமுள்ளபயனெதுவோ அது நம்மிருவர்களுக்கும் சேர்ந்ததாயிருக்கட்டும். ப்ராம்மணர்கள் ப்ரதிக்ரஹத்தில் அதிகாரமுள்ளவர்கள். ராஜகுலத்திலுதித்தவர்கள் தானஞ் செய்கிறவர்களாயிருப்பார்கள். ஓ! ப்ராம்மணரே! தர்மத்தின்பயன் கொடுப்பதாக அங்கீகரிக்கப்பட்டதானால் அந்தப்பயனானது நம்மிருவர்களுக்கும் சேர்ந்ததாகவேயிருக்கட்டும்; அல்லது நம்மிருவர்களுக்கும் சேர்ந்துபுஜிக்கத்தக்கதாயிருக்கவேண்டாம். என்னுடையபயனை நீர் அடையும். உமக்கு என்விஷயத்தில அனுக்ரஹமிருக்குமானால் என்னால் செய்யப்பட்டதர்மத்தைப் பெற்றுக்கொள்ளும்'

1 'பெற்றுக்கொள்ள' என்பது வேறுபாடம். இதுவேபொருத்தமுள்ளது.

என்றுசொன்னான். பிறகு, விகாரமானவேஷமுள்ளவர்களும் ²கிழிந்த ஆடையுள்ளவர்களுமான இரண்டுபுருஷர்கள் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக்கொண்டு வந்தார்கள்; அவர்களில் ஒருவன், 'எனக்கு நீதிகொடுக்கவேண்டியதில்லை' என்றும், மற்றொருவன், 'நான் கொடுக்கவேண்டாம்' என்றும், இவ்விஷயத்தில் நம்மிருவர்களுக்கும் இவ்விதம் விவாதமிருக்கிறது. சிக்ஷைசெய்யத்தக்க அரசன் இதோ இருக்கிறான். நான் ஸத்யம்சொல்லுகிறேன். 'நீ இதைஎனக்குக் கொடுக்கவேண்டாம்' என்றும், 'இவ்விஷயத்தில் நீபொய்சொல்லுகிறாய்; நான் உனக்குக் கடன்கொடுக்கவேண்டும்' என்றும் பேசிக்கொண்டார்கள். அவ்விருவர்களும் மிகவும்தாபமுள்ளவர்களாய் அரசனைநோக்கி, 'நாங்களிருவர்களும் இவ்விஷயத்தில் குற்றமுள்ளவர்களாகாமலிருக்கும்படி பரீக்ஷிக்கத்தக்கவர்களாகிறோம்' என்ற இவ்வசனத்தையும் சொன்னார்கள்.

விரூபனானவன், 'புருஷப்புலியே! நான் ஒருபசுவிற்குள்ள பயனை இந்தவிக்ருதனுக்குக்கொடுக்கவேண்டும். அரசனே! நான் கொடுத்தாலும் இந்தவிக்ருதன் பெற்றுக்கொள்கிறதில்லை' என்று சொன்னான். விக்ருதன், 'அரசனே! இந்தவிரூபனானவன் எனக்கு ஒன்றுங்கொடுக்கவேண்டியதில்லை. அரசனே! இவன் ஸத்யம்போலத் தோன்றும்படி பொய்யை உன்னிடம்சொல்லுகிறான்' என்றுசொன்னான். அரசன், 'ஏ! விரூபனே! இவனுக்கு நீ என்னகொடுக்கவேண்டும்? எனக்குச்சொல்லு. நான்கேட்டு அவ்விதமேசெய்கிறேன். இவ்விதம் எனக்கு மனமிருக்கிறது' என்றுகேட்டான். விரூபன் சொல்லுதொடங்கினான். 'அரசனே! கவனித்துக்கேள். ராஜரிஷியே! நான் இந்தவிக்ருதனுக்கு எதை எவ்விதம்கொடுக்கவேண்டுமோ அதுமுழுமையையுங்கேள். அரசனே! குற்றமில்லாதவனே! ராஜரிஷியே! முன்னொருஸமயத்தில்தர்மத்தைஅடையவேண்டி, தவத்தையும் வேதாத்யயனத்தையும் இயற்கையாகஉடையவனான ஒரு ப்ராம்மணன்பொருட்டு அழகான ஒருபசுவானது இந்தவிக்ருதனால் தானஞ்செய்யப்பட்டது. அரசனே! அந்தப்பசுவின்தானத்திற்குள்ள பயனை நான் இந்தவிக்ருதனிடம்வந்து யாசித்தேன். விக்ருதனும் பரிசுத்தியுள்ளமனத்துடன் அதை எனக்கு அளித்தான். பிறகு, ஆத்ம சுத்திக்காகப் புண்ணியகர்மமானது என்னால்செய்யப்பட்டது. ராஜனே! கன்றுடன்கூடியபலகரும் அடுக்கமாகக்கறக்கும்தன்மையுள்ள வைகளுமான நூறுபல்லிகளைப்பசுக்களை விலைகுறைவாகவும் அப்பசுக்களை உருசவிருத்திசெய்யும் ஒருபலுவுக்குக் கொடுத்தேன். ப்ரபுவே! நான்

இவனிடமிருந்துபெற்றுக்கொண்டு இரட்டிப்பான அந்தப்பயனை இப் பொழுது இவனுக்கு விதிப்பட்டி சரத்தையுடன் 'திருப்பிக்கொடுக்கி றேன். புருஷப்புலியே! இவ்விதம்நடந்திருக்கிறது. இதில்யார்சுத்தி யுள்ளவன்? யார்தோஷமுள்ளவன்? அரசனே! நாங்கள் இவ்விதமான விவாதத்துடன் 'இவ்விடத்திலுள்ளஉன்னை வந்து அடைந்திருக்கி றோம். தர்மத்தைச்செய்வாயோ, அதர்மத்தைச்செய்வாயோ எங்க ளிருவர்களையும் அடக்கி நீ ஸமாதானஞ்செய்யவேண்டும். இவன்கொ டுத்ததைப்போல நான்கொடுப்பதை இவன்விரும்பாமற்போனால் இவ் விஷயத்தில நீ உறுதியுள்ளவனாயிருந்துகொண்டு இப்பொழுது எங் களை நல்லவழியிலிருக்கும்படிசெய்யவேண்டும்' என்றுசொன்னான். அரசன், 'கொடுக்கப்படும்கடனை நீ ஏன் இப்பொழுது பெற்றுக்கொ ள்ளாமலிருக்கிறாய்? அவ்விதம் நீ தாமதியாமல் பெறறுக்கொள். பெற் றுக்கொண்டே உன்னால் அனுமதிகொடுக்கப்படவேண்டும்' என்று சொன்னான். விக்ருதன், 'இவன் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டான். அப்படியே கொடுக்கிறேனென்று என்னால்சொல்லப் பட்டது. இந்தவிஷயத்தில் இவன் எனக்குக்கொடுக்கவேண்டியவ னல்லன். இவன்எவ்விடத்திற்குப்போகவிரும்புகிறானே அங்குபோ கட்டும்' என்றுசொன்னான். அரசன், 'இவன்கொடுக்கும்பொழுது நீபெற்றுக்கொள்ளாமலிருக்கிறாய். இது சரியன்றென்று எனக்குத் தோன்றுகிறது. நீ தண்டிக்கத்தக்கவனென்றே என்னுடையஅபிப் பிராயம். இத்தசந்தேகமேயில்லை' என்றுசொன்னான். விக்ருதன், 'ராஜரிஷியே! என்னால் இவனுக்குக் கொடுக்கப்பட்டது. அதைத் திரும்பவும் நான் எப்படி பெற்றுக்கொள்ளுவேன்? இந்தவிஷயத் தில எனக்கு என்னகுற்றமிருக்கிறது? ப்ரபுவே! விசாரித்துஎனக் குத் தண்டனையைக்கட்டளையிடு' என்றுசொன்னான். விரூபன், 'என் னால் கொடுக்கப்படுகிறதை எவ்விதத்திலும் நீ பெற்றுக்கொள்ளா மலிருப்பாயாகில் தர்மத்தைப்பரிபாலிக்கும் இந்த அரசன் உன்னை அடக்குவான்' என்றுசொன்னான். விக்ருதன் 'உன்னால் வலியயாசிக் கப்பட்டு என்னால் கொடுக்கப்பட்டது. அதனை இப்பொழுது எவ் விதம்பெறறுக்கொள்வேன்? நீ போகலாம்; உனக்கு அனுமதி கொடுக்கிறேன்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'அரசனே! இவர்கள் இருவர்களாலும் சொல்லப்பட்ட இருவசனம் உன்னால் கேட்கப்பட்டதா? என்னால் உனக்கு வழிகொடுப்பதாக ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டதோ அதை விசாரியாமலே பறறுகிறாள்' என்றுசொன் னான். அரசன், 'மிகப்பெரியதும் கடினமுமான இவ்விருவர்களின்

கார்யமும் தொடங்கப்பட்டிருப்பதைப்பார்த்தால், ஜபம்செய்யும் ப்ராம்மணருக்கு உறுதிசெய்துகொடுத்தாகிறது. இஃது எவ்விதமாகப்போகிறதோ? ஜபப்ராம்மணரால்கொடுக்கப்படுவதை நான்பெற்றுக்கொள்ளாமற்போனால் இப்பொழுது நான் பெரியபாபத்துடன் சேர்ந்தவனாமலிருப்பதுஎங்ஙனம்?' என்றுநினைத்தான். அந்தராஜரிஷியானவன் அவ்விருவர்களையும்நோக்கி, 'நீங்கள் கார்யத்தைச் செய்துகொண்டவர்களாகவே போவீர்கள். இப்பொழுது இவ்விடத்திலுள்ள என்னைஅடைந்து அரசர்களுக்குள்ள தர்மமானது பொய்யாகவேண்டாம். அரசர்களுக்குத் தம்தர்மத்தைரக்ஷித்துக்கொள்ள வேண்டுமென்பது நிச்சயம். புத்தியில்லாதஎன்னைக் கடினமான ப்ராம்மண தர்மமானது பிடித்துக்கொண்டது' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'யாசிக்கப்பட்டதைக்கொடுப்பதாக நான் அங்கீகரித்திருக்கிறேன். நான் அதைத் தரித்துக்கொண்டிருக்கிறேன். பெற்றுக்கொள். அரசனே! நீபெற்றுக்கொள்ளாவிட்டால் ஸத்தேஹமில்லாமல உன்னைச் சபிப்பேன்' என்றுசொன்னான். அரசன், 'அரசர்களுக்குரிய தர்மத்தைநிந்திக்கவேண்டும். அத்தத்தர்மத்தைப்பற்றிய கார்யத்தின்நிச்சயம் இவ்விஷயத்தில் இவ்விதமிருக்கிறது. (பெறுக்கொண்டாலும்) எவ்விதம் (ராஜதர்மத்திறகு)ஸரியாகஇருக்குமென்று தெரிந்துகொண்டு நான் பெற்றுக்கொள்ளவேண்டும். ஓ! ப்ராம்மணரே! என்னுடைய இந்தக்கையானது நூதனமாக ப்ரதிக்ரஹத திற்காக நீட்டப்பட்டிருக்கிறது. எனக்காக தைததரித்துக்கொண்டிருக்கிறீரோ அதை இப்பொழுது கொடுக்கலாம்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'காயத்ரியைஜபிக்கும் என்னால் எத்தக்குணம் எவ்வளவுசெய்யப்பட்டிருக்குமோ அது சிறிதும் என்னிடத்திலிருக்குமானால் அதுமுழுமையும் நீ பெற்றுக்கொள்' என்றுசொன்னான். அரசன், 'ஓ! ப்ராம்மணோத்தமரே! என்னுடையகையிலவிழுந்தஇந்த ஜலமானது நமக்கு ஸமமாயிருக்கட்டும்; சேர்ந்ததாகவே இருக்கட்டும். நீர் பெற்றுக்கொள்ளும்' என்றுசொன்னான். விருபன், 'தபஸ்ஸுகளில்உத்தமனே! எங்களை உங்கள்மனத்திலுண்டானதை அறியவிரும்பிய காமக்ரோதங்களெல்லாம் நீ நிராகரித்துகொள். எங்களால் நீ அவமரியாதைசெய்யப்பட்டாய். இப்படியன் சேர்ந்திருக்கட்டுமென்று உம்மால்சொல்லப்பட்டகாரணத்தால உனக்கும்இவனுக்கும்ஸமமானஉலகங்கள் கிடைக்கும். இவன்கிரணத்தைக்கொடுக்கவேண்டியவனல்லன். உனக்காகப் பரீக்ஷைசெய்யப்பட்டது. காலம், தர்மம், விருத்தி, காமம், மிகுந்தஸ்நேஹமுள்ளவர்கள் ஆயிரவாவரும் ஒருவனிடமிருந்து பிரிந்திருப்

பதைப் பகுத்துப்பார்க்கும்பொழுது அறிவுள்ளஉனக்குப் [1]பரீக்ஷை செய்யப்பட்டதாகிறது. எல்லாவற்றிற்கும்மேலுள்ளதும் பிறப்பில்லாதப்ரம்மத்தினுடையதும் ஒப்புயற்றதும் த்வக்துவங்களில்லாததும் அழுக்கிலலாத உருவமுள்ளதுமான ஸ்தானமானது உங்களிருவர்களுக்கும்இருக்கட்டும். நாங்கள் எல்லோர்களும் (எங்களுக்குள்ள) அந்த அந்த உலகங்களுக்குச் செல்லுகிறோம். நீ எந்தஉலகங்களை விரும்புகிறாயோ உன்கர்மத்தால் ஜயிக்கப்பட்ட அந்தஉலகங்களை அடை' என்றுசொன்னன். பிறகு, தர்மம் யமன்முதலியஅவர்கள் அரசனையும் ப்ராம்மணனையும் நோக்கி, 'நீங்களிருவர்களும் எங்களுடைய சிரசென்று சொல்லப்படுவதும் ப்ரம்மலோகமென்று சொல்லப்படுவதுமான பதத்திலிருக்கிறீர்கள். உங்களிருவர்களாலும் நாங்கள் ஜயிக்கப்பட்டோம். உங்களிருவர்களுடையவிருப்பமும் ஸந்தோஷமின்றி விரும்பியதை அடைந்ததாயிறறு' என்றுசொன்னர்கள். ஜபிப்பவர்களடையும்பயனும், ஜபம்செய்பவனுல் நற்கதியும் பதவியும் உலகங்களும் ஜயிக்கப்படுகின்றமுறையும் என்னால் உனக்கு நன்றாகக் காண்பிக்கப்பட்டன. காயத்ரீமந்திரத்தைஜபிப்பவன்உத்தமஸ்தானத்தினுவிருக்கும் ப்ரம்மாவை அடைவான்; அல்லது, அக்னிலோகத்தைஅடைவான்; அலலது, ஸூர்யலோகத்தைஅடைவான். அவன் அந்தஉலகங்களில தேஜோமயமானஉருவத்துடன் விமோயாடிக்கொண்டிருக்கும்பொழுது அந்தததேவர்களுக்குள்ளகுணங்களைக்கண்டு ஆசையால்மோக்ஷமடைந்துநிந்தித்துக்கொண்டிருப்பான், இவ்விதமே சந்தரலோகத்திலும் வாயுலோகத்திலும் அவ்வுலகத்திலுள்ள அந்ததத் தேவர்களினகுணங்களை அடையவிருப்பமுள்ளவனும் ஆசையுண்டையவனும் பூமிபோலகனமானதும் ஆகாயம்போல லகுவானதுமானசரீரத்தைஅடைந்தவனுமாகி வலிப்பான். பிறகு, அவன் அந்தக்குணங்களிலும் ஆசையிலலாமல ஸந்தோஷமின்றிப் பரமாத்மாவை அடைவான். அவன் அழிவற்றதான பரமாத்மரூபத்தைவிரும்பிக்கொண்டு திரும்பவும் அதையே ப்ரவேசிப்பான். மோக்ஷத்திலும்மோக்ஷமானரூபததை அடைந்தவனும் ஆசையடங்கியவனும் அஹங்காரமற்றவனும் ப்ரம்மமானவனுமான அவன் த்வந்துவங்களில்லாதவனும் ஸுகமுள்ளவனும் சாந்தனும் உபத்ரவமில்லாதவனுமாயிருப்பான்; மறுபிறப்பில்லாதும் துன்பமும் அக்ஞானமென்றுபெயருள்ளதுமுக்கமில்லாததும் ஜராயில்லாததும் சாந்தமும் ப்ரம்மத்தின்ஸ்தானமுமான அந்தப்பரமாத்மாவை அடைவான். [2]கோபம்முதலியகுணங்களையும் விட்டு

1 வேறுபாடம். • 2 பரதயசுகம், அஜமானம், சபதம், மனம்என்பன.

விலகியதும் அப்படியே [1]ஆறுதோஷங்களில்லாததும் [2]பதினைவஸ்துக்களிலிருந்துவிலகியதுமான அத்தப்புருஷரூபத்தை அடைந்தபின் எங்கும்நிறைந்தரூபத்தையடைவான். அல்லது, ஆசையுள்ளபுத்தியுடன் இதைவிரும்பாமலிருப்பானில் எல்லாப்போகத்தையும்அடையத்தக்கவனுவான். எதைவிரும்புகிறானோ அதை மனத்தால்அடைவான். அல்லது,எல்லாஉலகங்களையும்நரகம்போலப்பார்ப்பான்.ஆசையில்லாதவனும்எல்லாவற்றிலுமிருக்தும்விடப்பட்டவனுமாய்அந்தப்பரம்மரூபத்திலேயே ஸுகமாகஸஞ்சரிப்பான். மஹாராஜனே ! இவ்விதமாக ஜீபிப்பவனுக்குள்ள இந்தக்கதி எவ்விதமிருக்கிறதோ, இது முழுதும் உனக்குச்சொல்லப்பட்டது. திரும்பவும் எதைக்கேட்க விரும்புகிறாய் ?'' என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றொட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், ஜபப்ராம்மணனும் இக்ஷ்வாகுவும் மோக்ஷமடைந்ததையும் ஜபத்தின்பலனையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், ''பிதாமஹரே! அந்தவிரூபன் அவ்விதம் சொன்னபிறகு, அந்தப்ராம்மணனும் அரசனும் அப்பொழுது என்ன மறுமொழிகூறினர்கள்? அதனை எனக்குச்சொல்லவேண்டும். அல்லது, உம்மால்சொல்லப்பட்ட உலகத்திற்கு அவர்களுள்சென்றார்களோ அவ்வுலகத்தில்அவர்களுக்குஎன்னஸம்பாஷணைஉண்டாயிற்று? அவர்கள் என்னசெய்தார்கள்?'' என்றுகேட்க, பீஷ்மர்சொல்லத்தொடங்கினர்.

''ஜபம்செய்யும் அந்தப்ராம்மணன் (விரூபனுடைய அந்தவசனம்) சரியென்றுஅங்கீகரித்துப் பூஜிக்கத்தக்கவர்களானதர்மத்தையும் யமனையும் காலனையும்மிருத்யுவையும் ஸ்வர்க்கத்தையும் நன்றாகப் பூஜித்து முதலில் அவ்விடத்தில்சேர்ந்தவர்களான மற்றுமுள்ள ப்ராம்மணஸ்ரேஷ்டர்களனைவர்களையும் தலையால்வணங்கிப் பூஜித்து அரசனைநோக்கி, 'ஓ! ராஜரிஷியே! இந்தஜபத்தின்பயனுடன்கூடி முக்கியமானநிலையை அடைந்துகொள். நான் உன்னால் அனுமதிகொடுக்கப்பெற்றுத் திரும்பவும்ஜபித்துக்கொண்டிருக்கிறேன். மிக்க பலமுள்ள அரசனே! எனக்கு மூன்றியே காயத்ரீதேவியால், 'உனக்கு ஜபவிஷயத்தில் எப்பொழுதும் சித்தைஉண்டாகட்டும்' என்று வரம்

---

[1] பஞ்சாகம்என்ற ப்ராணதர்மம் இரண்டும், சோகம் மோகம்என்றமனோதர்மம் இரண்டும், ஜரை மரணம்என்ற சரீரதர்மம்இரண்டுமாம்.

[2] ஞானேந்திரியங்கள்ஐந்து; கர்மேந்திரியங்கள்ஐந்து; ப்ராணவாயுக்கள் ஐந்து; மனம்ஒன்று; ஆகப்பதினைது.

அளிக்கப்பட்டிருக்கிறது' என்றுசொன்னான். அரசன், 'ஓ! ப்ராம்மணரே! உமதுமந்த்ரவித்தியானதுஇவ்விதம் பயனுள்ளதாயிருந்து உமக்கும் ஜபிக்கவேண்டியதற்கு சத்ரத்தையிருக்குமாகில், அதை அடையும். என்னுடன்கூட ஜபத்திற்குரியபயனைப் பெற்றுக்கொள்ளும்' என்றுசொன்னான். ப்ராம்மணன், 'இவ்விடத்தில் எல்லோர்க ளின்ஸந்தியிலும் மிகப்பெரியமுயற்சி செய்யப்பட்டது. நம்மிருவர் களுக்கும் எவ்வுலகத்திற்குச்செல்லத்தக்கதோ அதில் நாமிருவரும் சேர்ந்து ஸமமானபயனுள்ளவர்களாகவே செல்லுவோம்' என்று சொன்னான். அவ்விஷயத்தில் அவ்விருவர்களுக்குமுள்ளஉறுதியைத் தெரிந்துகொண்டு தேவர்களுக்குராஜனானஇந்திரன் திக்பாலகர்களுட னும் மற்றத்தேவர்களுடனுங்கூட அவ்விடத்திற்கு வந்தான். ஸாத் யர்களும் விஸ்வேதேவர்களும் மருத்துக்களும் மிகப்பெரிய [1]வாத் யங்களும் ஆறுகளும் மலைகளும் கடல்களும் பலவிதமானதீர்த்தங்க ளும் தவங்களும் [2]கர்மங்களின்பயனைக்கூறும்விதியும் வேதங்களும் ஸ்தோபங்களும் ஸரஸ்வதியும் நாரதரும் பர்வதரும் விச்வாவஸுவும் ஹாஹாவும் ஹூஹூவும் பரிவாரக்கூட்டங்களுடன்கூடிய சித்ர ஸேனனென்னும் கந்தர்வனும் நாகர்களும் ஸித்தர்களும் முனிகளும் அங்குவந்தார்கள். தேவர்களின்தேவரும் ப்ரஜைகளுக்குப்பதியும் தேவர்களுக்கீச்வரரும் வேதரூபியும் அழிவற்றவருமான ப்ரம்மாவும் வந்தார். ஆயிரந்தலையுள்ளவரும் அறிவிறகெட்டாதவரும் தேவரு மான ஸ்ரீவிஷ்ணுபகவானும் வந்தார். ப்ரபுவே! ஆகாயத்தில பேரி வாத்யங்களும் மருதங்கங்களும் வாசிக்கப்பட்டன. அவ்விடத்தில் அத்தமஹாத்மாக்களுக்கு திவ்யமானபுஷ்பவருஷங்களுமுண்டாயின. அங்கங்கு நான்குபுறங்களிலும் அப்ஸரமடந்தைகளின்கூட்டங்களும் நர்த்தனஞ்செய்தன. பிறகு, உருவமுள்ளஸ்வர்க்கமானது ப்ராம் மணனையும் (அரசனையும்) நோக்கி, 'பெரியபாக்யம்பெறற ப்ராம் மணரே! நீர் நல்லலிங்கியைப்பெறறீர். அரசனே! நீயும் அதுபோல் லிங்கியைப்பெற்றாய்' என்ற வசனத்தைச்சொல்லிற்று. ஓ! அர சனே! பிறகு, ஒருவருக்கொருவர் உபகாரத்தால்சேர்ந்தவர்களான அந்தப்ராம்மணன் அரசன்இருவர்களுமே விஷயங்களைவிலக்கத்தக்க பொறிகளின்லயத்தைச்செய்துகொண்டார்கள். அவர்கள் ப்ராணனை யும் அபானனையும் வ்யானனையும் உதானனையும் ஸமானனையும் மனத்

1 வேறுபாடம்.

2 ஜீவனுக்கும் ப்ரம்மத்திற்குமுள்ள அபேததத்தைச்சொல்லும் வேதாந் தங்கள்' என்பது பழையஉரை.

தில் நிலைக்கும்படிசெய்து மனத்தை ப்ராணனில் நிலைக்கச்செய்து கொண்டார்கள். பிறகு, அவர்கள் பத்மாஸனஞ்செய்துகொண்டு புருவங்களுக்குக்கீழுள்ள மூக்குநுனியைப்பார்த்துக்கொண்டு மெள்ள மெள்ள அப்பொழுது புருவங்களுக்கும் கண்களுக்குமுள்ள ஸ்தி ஸ்தானத்தில்மனத்தைநிலைக்கச்செய்துகொண்டார்கள். பிறகு, அசை வற்றசரீரங்களுடன்கூடியவர்களும் உறுதியானபார்வையுள்ளவர்க ளும் ஸமாதியிலிருப்பவர்களும் ஆஸனத்தைஜயித்தவர்களுமான அவர்கள் ப்ரம்மரந்த்ரஸ்தானத்தில் மனத்தை லயிக்கும்படி செய்து கொண்டார்கள். பிறகு, மஹாத்மாவானப்ராம்மணனுடைய ப்ரம்மரந் த்ரத்தைப்பிளந்துகொண்டு மிகப்பெரிதான ஜ்யோதியின்ஜ்வாலையான து(வெளிவந்து) ஸ்வர்க்கத்திற்குச்சென்றது. அப்பொழுதுஎல்லாத் திக்குக்களிலும் மிகப்பெரிதான ஹா ! ஹா ! வென்னும்சப்தமுண்டா யிற்று. புகழப்படும்அந்தஜ்யோதியானது அப்பொழுது ப்ரம்மதேவரிடம் ப்ரவேசித்தது. அரசனே ! ப்ரம்மதேவரும் உடனேஎதிர்கொண்டு சென்றுஉட்டைஅளவுள்ளபுருஷவடிவமான அவ்வொளியைஉல்லாஸ கூறினர். திரும்பவும் புன்னகைசெய்து, 'ஜபிப்பவர்களுக்கும் யோகிக ளுக்கும் ஸமமானபயனுண்டென்பதிலஸந்தேஹமில்லை. யோகிகளுக் கும் ஜபிப்பவர்களுக்குமுள்ளபயன் ப்ரத்யக்ஷமாகக்காணப்படுகிறது. ஆகிலும், எதிர்கொண்டழைப்பது யோகிகளைவிட ஜபிப்பவர்களுக்கு விசேஷமான பயனென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது' என்று இனி மையான வேறுஒருவசனத்தையும் சொன்னர். பிறகு, அந்தப்ரம்ம தேவரானவர், 'என்னிடத்தில்வஸிக்கலாம்' என்றுசொல்லி வாயைத் திறந்தார். உடனே, ப்ராம்மணன் தன்பாலில்லாமல் இந்தப்ரம்மதேவ ரின் வாயிற்புகுந்தான். ப்ராம்மணஸ்ரேஷ்டன் எவ்விதம்புகுந்தானோ அவ்விதம் அதேவிதிப்படி அரசனும் அப்பொழுது பகவானான ப்ரம்ம தேவரிடம்புகுந்தான். பிறகு, தேவர்கள் ப்ரம்மதேவரைவணங்கி, ' ஜபிப்பவர்களுக்குவேண்டி (எதிர்கொண்டுவருவதென்னும்) இம் முயற்சிசெய்யப்பட்டது. இதை ஆரியவேண்டியே நாங்கள்வந்தோம். இவ்விருவர்களும் ஸமமாகவே உம்மாலபூஜைசெய்யப்பட்டவர்களும் ஸமமானபயனுடன் கூடியவர்களுமானார்கள். யோகிக்கும் ஜபிப்பவ னுக்கும் ஸமமானதும் மிகப்பெரிதுமானபயனானது இப்பொழுது காணப்பட்டது. எல்லாஉலகங்களையுங்காண்டிப் பிரார்த்திக்கத்தக்க ஸுகமுள்ளவிடத்திற்கு இவர்கள் செல்லுவார்கள்' • என்றுசொன்

1 யோகத்திற்குரிய பலவகை ஆஸனங்கள்; 'ஜிதாத்மாகளை' என்பது வேறுபாடம் ; அதற்கு, 'நித்தத்தைஜயித்தவர்கள்' என்பது பழையஉரை.

னர்கள். ப்ரம்மதேவரானவர், 'பெரியஸ்மிருதியைப்படிக்கிறவனும் அப்படியே சுபமான உபஸ்மிருதியைப்படிக்கிறவனுமாகிய அவ்விருவர்களும் இந்தவிதிப்படி என்உலகத்தைஅடைவார்கள். யோகத்தில் பக்தியுள்ளவனுயிருக்கிறவனும் சரீரத்தின்முடிவில் இந்தவிதிப்படி என்னுடைய உலகங்களை அடைவான்; இதில்ஸந்தேஹமில்லை. நான் போகிறேன்; கார்யஸித்திக்காக அவரவர்களின் இடங்களுக்குப்போகலாம்' என்றுசொன்னர். இவ்விதம்சொன்னபின், அந்தப்ரம்மதேவரானவர் அப்பொழுது அவ்விடத்திலேயேஅந்தர்த்தானத்தைஅடைந்தார். பிறகு, விடைபெற்றுக்கொண்டு தேவர்களும் தம்தம்இடத்திற்குச்சென்றார்கள். அரசனே! அவ்விடத்திலுள்ள அந்தமஹாத்மாக்களனைவர்களும் தர்மத்தைப்புகழ்ந்துகொண்டு மிக்கஸந்தோஷமுள்ள மனத்துடன் பின்தொடர்ந்துசென்றார்கள். மஹாராஜனே! ஜபிப்பவர்களுக்குள்ள இந்தப்பயனும் இந்தக்கதியும் சாஸ்திரப்படி சொல்லப்பட்டன. திரும்பவும் எதைக்கேட்கவிரும்புகிறாய்?" என்றுசொன்னர்.

நூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கர்மம் ஞானம் ப்ரம்மம்இவைகளைப்பற்றி ப்ருஹஸ்பதிக்கும் மனுவுக்கும்நடத்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ஞானயோகத்திற்கும் வேதங்களுக்கும் அக்னிஹோத்ரமுதலியகியமத்திறகும்என்னபயன்? ஜீவனை எவ்விதம்தெரிந்துகொள்ளவேண்டும்? அதனை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "இவ்விஷயத்திலும் மனுப்ரஜாபதிக்கும் மஹரிஷியானப்ருஹஸ்பதிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். தேவரிஷிக்கூட்டங்களுள் மிகச்சிறந்தவரும் மஹரிஷியுமானப்ருஹஸ்பதியானவர் சிஷ்யராகி ப்ரஜைகளுக்கு மிகவும் பூஜ்யரும் ப்ரஜைகளுக்குப்பதியுமானமனுவைக் குருவாகவணங்கிப்பழைய தான இந்தப்ரச்னத்தைக் கேட்கத்தொடங்கினர்.

'பகவனே! கர்மகாண்டமானது எதை அறியவேண்டியகாரணத்திற்காக ப்ரவ்ருத்திருக்கிறதோ, எதை ஜ்ஞானத்திற்குப்பயனென்று ப்ராம்மணர்கள் கூறுகிறார்களோ, எது மந்த்ரத்திலுள்ள சப்தங்களால்வெளியிடப்படாததாயிருக்கிறதோ, அதை எனக்கு உள்ளபடி உபதேசிக்கவேண்டும். ஸ்ம்ருதிகளையும் சாஸ்திரங்களையும்

வேதங்களையும் மந்திரங்களையும் அறிந்தவர்களானமஹான்களால் பல விதமானயாகங்களாலும் பசுக்களின்தானங்களாலும் எத்தப்பயன் அடையக்கருதப்படுகிறதோ அப்பயன் என்ன? அஃதுஎவ்விதமிருக்கிறது? அஃது எவ்விடத்தில்கிடைக்கும்? பகவானே! பூமியும் பூமியிலுண்டானபிராணிகளும் காற்றும் ஆகாயமும் ஜலமும் ஜலத்தை இடமாகக்கொண்டப்ராணிகளும் ஸ்வர்க்கமும் ஸ்வர்க்கத்தைஇட மாகக்கொண்டப்ராணிகளும் எதிலிருந்துபிறப்படைந்தனவோ முத லிலுள்ள அந்தக்காரணத்தை எனக்குஉபதேசிக்கவேண்டும். மனி தன் எதைஅடையவேண்டி ஜ்ஞானத்தைவிரும்புகிறானோஅந்தவஸ்து வுக்காக ஜ்ஞானத்தைப்பற்றியப்ரவிருத்தியுண்டாகிறது. நான் புரா தனமான அந்தப்பரவஸ்துவை அறியவில்லே. (ஆகையால், அறியா மல்) பொய்யானப்ரவிருத்தியை நான் எவ்விதம்செய்வேன்? நான், ரிக்ஸாமங்களின்கூட்டங்களையும் யஜுஸுகளையும் சந்தஸுகளையும் [1] நக்ஷத்ரவித்தியையையும் நிருக்தத்தையும் வ்யாகரணத்தையும் கல்ப ஸூத்ரங்களையும் சிக்ஷையையும் கற்றும், உலகங்களுக்குக்காரண மானவஸ்துவை அறியவில்லே. ஆகையால், பூஜ்யரானநீர் இஃதனை த்தையும் எனக்குப் பொதுவானசப்தங்களாலும் விசேஷப்தங்களா லும் உபதேசிக்கவேண்டும். பூஜ்யரானநீர் ஜீவனுனது சரீரத்திலிரு ந்து எவ்விதம்விலகுகிறதோ திரும்பவும் வேறுசரீரத்தை எவ்விதம் அடைகிறதோ கர்மத்திறகு என்னடயனிருக்கிறதோ ஜ்ஞானத்திற் குப்பயனெதுவோ இவற்றையெல்லாம் எனக்கு உபதேசிக்கவேண் டும்' என்றுகேட்டார். மனு, 'எவனுக்கு எதுஎது ப்ரியமுள்ளதோ அவனுக்கு அதைஅதை ஸுகமென்று சொல்லுகிறார்கள். இஷ்ட மில்லாததுஎதுவோ அதையே துக்கமென்றுகூறுகிறார்கள். 'இஷ்ட மாயிருப்பது எனக்குக் கிடைக்கவேண்டும். இஷ்டமில்லாதது என க்கு வேண்டாம்' என்னும்இவ்வாசையை நிறைவேற்றவேண்டிக் கர் மங்களின்விதியானது நடைபெற்றிருக்கிறது. இஷ்டமும் அனிஷ்ட மும் எனக்குவேண்டாமென்ற இந்நிலையைஅடையவேண்டி ஞான த்தின் விதியானது நடைபெற்றிருக்கிறது. வேதத்தில்கூறியகர்மவழி கள் ஆசையுள்ளவனேப்பற்றினவாயிருக்கின்றன. இவ்வாசைகளிலிரு ந்துவிடப்பட்டவன் பரமானபொருளை அடைவான். ஸுகத்தைவி ரும்பும்மனிதன் பலனிதமான கர்மவழியில் ப்ரவிருத்தித்து ஸுகத்தை அடைகிறான்' என்றுசொன்னர். ப்ருஹஸ்பதி, 'வேண்டியதும் வேண் டாததும், முறையே ஸுகமும் ஸுகமில்லாததுமாயிருக்கின்றன.

[1] ஜ்யோதிஷம்.

(ஸுகத்தைவிரும்புவதும் துக்கத்தைவெறுப்பதுமாகிய) இதுதான் (மனிதனுடைய) விருப்பம். 'அதைக் கர்மங்களால்டைகிறான்' என்று சொன்னர். மனு சொல்லத்தொடங்கினர். 'இவ்விதஆசைக்காகக் கர்மங்களின்விதியானது நடைபெற்றிருக்கிறது. இவ்வாசைகள்லிருந்து விடுபட்டவன்பரமான வஸ்துவைஅடைவான்.கர்மவழியானதுஆசையுள்ளபுத்தியுடையவர்களை ஸம்தோஷிக்கச்செய்யும். இவ்வாசைகளிலிருந்து விடுபட்டுப் பரமானவஸ்துவை அடையவேண்டும். ஆசையற்ற மனமுதலியவற்றைக்கொண்டு செய்யப்படும் கர்மங்களால் விளங்குகிறவனும் மனத்தில்ப்ரகாசமென்னும் சுத்தியைஅடைந்தவனுமாய்த் தர்மத்தில்ப்ரவருத்தித்தவன் மோக்ஷஸுகத்தைவிரும்பத்தக்கவனுவான். ஆசையறறவர்கள் எந்தப்பதத்தை அடைகிறார்களோ பரமான அந்தப்பதமானது கர்மங்களுக்குரியபயனிலிருந்து விலகியதாகும். ப்ரஜைகள் மனத்தாலும் கர்மத்தாலும் படைக்கப்பட்டிருக்கின்றன. மனம் கர்மம் இவ்விரண்டுமே உலகங்களால்அனுஷ்டிக்கப்படும் நல்வழிகளாகும். கர்மமானது நிலையற்றபயனுள்ளதானுலும் சாச்வதமானபயனுள்ளதாகவும் (வேதங்களில்) காணப்படுகிறது. அதறகு மனத்தால் கர்மங்களின்பயன்களைவிடுவது காரணமாகிறதல்லாமல்வேறில்லை. விஷயமும் அதன்போகமும் ஆசையின்வடிவங்களாக வேதத்தில்கூறப்படுகின்றன. இவ்வாசைகளிலிருந்துவிடுபட்டவன் பரவஸ்துவைஅடைவான். பலவிதமானகர்மங்களின்பயனில் ஸுகத்தை அடையவிரும்பும்அவிவேகியானமனிதன் பரவஸ்துவை அடையமாட்டான்.அத்தவஸ்துவானது காமஸுகருக்குள்ளபயனிலிருந்துவிலகிய வேருனபயனன்றே ! பரமானப்ரம்மமானது ஆசையறறவர்களுக்கன்றே அடையத்தக்கதாகிறது ? தன்உருவத்தால்மனிதர்களுக்கு நாயகன்போல்விளங்கும்கண்ணனது இரவுபோனவுடன் இருளால் மறைக்கப்படாதஉருவமுள்ளதாய் (விலக்கத்தக்க முள்முதலியவறறை)ப் பார்ப்பதுபோலப புத்தியானது விவேகமென்னும்குணத்துடன்கூடியதாய் விலக்கத்தக்க அசுபமானகர்மத்தைப் பார்க்கிறது. மனிதர்கள் ஸர்ப்பங்களையும் தர்ப்பத்தின்முனைகளையும் கிணறறையும் அறிந்தபின் விலக்கிக்கொள்ளுகிறார்கள். அறியாத காரணத்தால மூடர்கள் அவைகளில்விழுகிறார்கள். அறிவறகுள்ளபயன் எவ்விதம் சிறந்ததாயிருக்கிறதென்று பார். வேதப்படி ப்ரம்மயாகப்பிரமல்லாமல திரமும் கூறியபடிசுருள்ளயாகங்களும் ஹிரண்யகர்ப்பனுள்ளதுகளும் மிகுதியான அளவுதானமும்(யாகம்செய்வதைவைப்பதறறிய)மனத்திறகுள்ளத்யானமுமாகிய ஹரகுஹுமுப்புகளுமுள்ள கர்மத்தைப் பய

னுள்ளதாகச்சொல்லுகிறார்கள். வேதங்கள் கர்மத்தை மூன்றுகுண முள்ளதாகக்கூறுகின்றன. கர்மமானது மந்திரத்தையன்றே மூன்னிட்டதாயிருக்கிறது. அக்காரணம்பற்றி மந்திரமானது மூக்குண முள்ளதாகிறது. (அதன் மூலமான) விதியானது மூன்றுகுணமுள்ளதாகிறது. கர்மமானது அதைச்செய்கிறவன்மனதிலுள்ளகுணத்தால் மூன்றுவிதமாகிறது. அந்தக்கர்மத்தின் [1]பயனைப்புஜிக்கும்ஜீவனும் அதுபோல மூக்குணமுள்ளதாகிறது. அழகும் பரிசுத்தியுமுள்ள சப்தங்கள், ரூபங்கள், ஸ்பர்சங்கள், ரஸங்கள், [2]கந்தங்கள் என்ற கர்மத்திற்குரியஇப்பயனைத நல்வினையாலடையத்தக்க [3]மேலுலகத்தில்வசித்திக்கும். மனிதன் [3]மரணத்தைஅடையாமலிருக்கும் பொழுதே ஞானத்திற்குத்தகுதியுள்ளவனவான். மனிதன் சரீரத்தால் எந்தஎந்தக்கர்மத்தைச்செய்கிறானோ அதனதன் பயனைச் சரீரத்துடன்கூடியவனுகியே அனுபவிப்பான். சரீரமே ஸுகதுக்கத்திற்கிடமாகிறது. சரீரமே துக்கத்திற்குமிடமாகிறது. வாக்கால் ஒருசிறிதுகர்மத்தைச்செய்யினும் அதைமுழுதும் வாக்காலேயே அனுபவிக்கிறான். மனத்தால் ஒருசிறிதுகர்மத்தைச்செய்யினும் அதை அவன் மனத்தையடைந்தே அனுபவிக்கிறான். கர்மங்களின்பயனில் பற்றுதலுள்ள இந்தமனிதன் பயனைவிரும்பி எந்தஎந்தவிதமான குணத்துடன்கூடியகர்மத்தைச்செய்கிறானோ இவன் அந்தஅந்தவிதமான குணத்தால் ஏவப்பட்டுச் சுபமும் அசுபமுமானகர்மத்தின்பயனைப் புஜிக்கிறான். மீளுனது ப்ரவாஹத்தை அனுஸரித்து எவ்விதத்திலாவது அவ்விதம் மனிதன்முதலில்செய்யப்பட்டகர்மத்தைஅனுஸரித்துச் செல்லுகிறான். இந்தஜீவனானவன் சுபமானகர்மத்தின்பயனில் மிகவும்ஸந்தோஷமடைகிறான் ; பாபமானகர்மத்தின்பயனிலோ மிகவும்ஸந்தோஷமில்லாமலிருக்கிறான். இவ்வுலகமானைத்தும் எதிலிருந்து பிறப்படைகிறதோ, புத்தியுள்ளவர்கள் எதைஅறிந்து சாந்தியை அடைகிறார்களோ,எதானது வேதவாக்குக்களாலும் விளங்கச்செய்ய முடியாததோ,, எது பரமானபொருளோ அந்தவஸ்து சொலலப்படுவதைக்கேள். பலவிதமானரஸங்களிலிருந்தும் வாஸனைகளிலிருந்தும் விடுபட்டதும் சப்தமில்லாததும் ஸ்பர்சமில்லாததும் ரூபமில்லாததும்

---

1 ஸுகம், துக்கம், மோஹம்என்ற இம்மூன்றுபயனகளும் முறையேஸத்வம், ரஜஸ், தமஸஎன்ற குணங்களினால்ப்பிறப்பிக்கப்படுபவையாகும். இப்பயன்களைக்குக காரணங்களான்ஸகாமங்களும் அவைகளைஅடைந்தபின்னும் விடாதும் அவ்வப்போது குணமாறுதல்களாலாகப்பிறக்கும் ஸஞ்சலமனதினாலுமாகிய அபூர்வமான குணங்களுமாகும்.

2 வேறுபாடம். 3 வேறுபாடம்.

கர்மேந்திரியங்களுக்கு விஷயமாகாததும் ஞானேந்திரியங்களுக்குப் புலப்படாததும் ஜாதியில்லாததும் ஒன்றுமான அந்தவஸ்துவானது ப்ரஜைகளுக்குவேண்டிச் சப்தமுதலியஐந்துவிஷயங்களையும் உண்டு பண்ணிறது. அது பெண்ணுமன்று ; ஆணுமன்று ; நபும்ஸகமுமன்று ; ஸத்துமன்று ; அஸத்துமன்று ; ஸதஸத்துமன்று; ப்ரம்மத்தைஅறிந்தமனிதர்கள் எதைப்பார்க்கிறார்களோ அந்த அக்ஷரவஸ்துவானது நசிக்கிறதில்லையென்று தெரிந்துகொள்.

இருநூறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ருஹஸ்பதிக்கும் மனுவுக்கும் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

அக்ஷரமானபரமாத்மரூபத்திலிருந்து ஆகாயமும், அவ்வாகாயத்திலிருந்துவாயுவும் அந்தவாயுவிலிருந்துஅக்னியும் அந்தஅக்னியிலிருந்துஜலமும் ஜலத்திலிருந்துபூமியும் உண்டாயின. பூமியிலிருந்து ஸ்தாவரஜங்கமமானஉலகமுண்டாகிறது. இவ்வுலகங்கள் (பார்த்திவமான) சரீரங்களால் ஜலத்தையேஅடைந்து, ஜலத்திலிருந்து அக்னியையும் அதிலிருந்து வாயுவையும் அதிலிருந்து ஆகாயத்தையும் பரமாத்மரூபத்தையும்அடைகின்றன. பரமாத்மரூபத்தை அறியாதவர்கள் அதிலிருந்து திரும்புகிறார்கள். அறிந்தவர்கள் பரமாத்மாவை அடைகிறார்கள். அந்தப்பரமாத்மாவானது சூன்யஸ்துமன்று ; சூன்யருள்ளதுமன்று ; மிருதுவுமன்று; கடினமுமன்று ; புளிப்புமன்று ; துவர்ப்புமன்று; இனிப்புமன்று; கசப்புமன்று; சப்தமுள்ளதுமன்று; மணமுள்ளதுமன்று; ரூபமுள்ளதுமன்று. அந்தப்பரமாத்மாவானது இவைகளை அறியத்தக்க ஸ்வபாவமுள்ளதுமன்று. சரீரமானது ஸ்பர்சத்தையும், நாவானது ரஸத்தையும், மூக்கானதுமணத்தையும், செவி சப்தத்தையும், கண் ரூபத்தையும்அறிகின்றன. ஆத்மாவைப்பற்றியயோகத்தை அறியாதமனிதர்கள் அந்தப்பரமாத்மரூபத்தை அறியமாட்டார்கள். ரஸத்திலிருந்துநாவையும், மணத்திலிருந்து மூக்கையும், சப்தத்திலிருந்துசெவியையும், ஸ்பர்சத்திலிருந்துத்வக்கையும், ரூபத்திலிருந்துகண்ணையும்விலக்கிக்கொண்டு அதன்பிறகு, அந்தப்பரமாத்மாவின்ஸ்வபாவத்தைப்பார்க்கிறான். அதற்காக எதைச்சுருத்து எந்தஸ்தானத்தால் எந்தக்கர்த்தாவானவன் எவ்விடத்தில் எந்தமுயற்சியைச்செய்கிறானோ, அதிலிருந்துபிடித்துக்கொண்டு எந்தக்கர்மத்தைச

செய்கிறானே, அவையாவும் எதைக்காரணமாகக்கொண்டனவோ, அக்காரணத்தைத் தன்னுருவமாகஅடையத்தக்க பரமாத்மாவென்று சொல்லுகிறார்கள். [1]எது வ்யாபகமான ஈசுவரரூபமும் அதைஉபாவிக்கத்தக்க ஜீவரூபமுமாயிற்றோ, எது வேதத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிறதோ, எது உலகத்தில் நிலைபெற்றிருக்கிறதோ,எது எல்லாவற்றிற்கும் காரணமும் [2]உண்மையாகச் செய்வதுமாயிருக்கிறதோ அது காரணமாகும். இதையொழிந்தமற்றவையெல்லாம் காரியமாகும்.ஒருமனிதன் நன்றுகச்செய்யப்பட்டபலகர்மங்களால சுபத்தையும் அசுபத்தையும் விரோதமில்லாமல் எவ்விதம்அடைகிறானோஅதுபோலஇந்த அறிவானபரமாத்மரூபமானது சுபங்களும் அசுபங்களுமான சரீரங்களில் தன்கர்மங்களால்கட்டப்பட்டிருக்கிறது. (மரத்தின்துளையில் நன்றுக விளங்கும்தீபமானது தான்விளங்கிக்கொண்டு எவ்விதம்எதிரிலுள்ள வேறுபொருளுக்கும் ப்ரகாசத்தைச்செய்கிறதோ அதுபோல இச்சரீரத்தில் ஜ்ஞானமென்னும் தீபத்தால் விளக்கமடையும்ஐந்துஇந்திரியங்களென்னும்மரங்கள் தம்மைவிட வேறுனப்ரகாசமுள்ளவைகளாகியே இருக்கின்றன. ஓர் அரசனைச்சேர்ந்த நிறமையுள்ளவர்களான பல அமாத்தியர்கள் யுக்தியுள்ளவர்களாய் எவ்விதம்வெவ்வேறுப்பரமாணத்தைச்சொல்லுவார்களோ அப்படியே சரீரங்களில் ஐந்துஇந்திரியங்களும் ஜ்ஞானரூபியான பரமாத்மாவின் அம்சங்களாயிருக்கின்றன. அந்தப்பரமாத்மாவானவர் அந்தஇந்திரியங்களைவிட மேலானவராயிருக்கிறார். அக்னிக்கு ஜ்வாலைகளும் வாயுவுக்கு வேகங்களும் ஸூர்யனுக்குக்கிரணங்களும் ஆறுகளுக்கு ஜலங்களும் எவ்விதம்போவதும் வருவதும் இருப்பதுமாயிருக்கின்றனவோ அப்படியே ஆத்மாக்களுக்குச் சரீரங்கள் போவதும் வருவதும் இருப்பதுமாயிக்கின்றன. ஒருமனிதன் கோடாலியை எடுத்துவெட்டுவதால் கட்டையிலுள்ளபுகையையும் நெருப்பையும் காணமுடியாததுபோலச் சரீரத்தையும் வயிற்றையும் கையையும் காலையும் அறுப்பதால் அச்சரீரத்தைவிட வேறுனஆத்மாவைக் காண்கிறார்களில்லை. அந்தக்கட்டைகளை யே கடைந்து அவற்றிலுள்ளபுகையையும் அக்னியையும் எவ்விதம் காணமுடியுமோ அதுபோல நல்லபுத்தியுள்ளமனிதன்ஜ்ஞானமடை

---

1 எது எல்லாவற்றையும் வியாபித்ததும் எல்லாவற்றிற்கும் ஆதாரமுமாயிருக்கிறதோ, எது உலகத்தில் மாஹாபொருளாக நிலைபெறதிருக்கிறதோ, எது எல்லாவற்றிற்கும் மூலமோ, எது பிறந்த புருஷார்தத்தத்தைக்கொடுப்பதோ அதுதான் காரணவஸ்து.

2 'பரம் ஆத்மகரீ' என்பது வேறுபாடம்; 'உயர்ந்ததும் தான்ஒன்றே எல்லாவற்றையுஞ்செய்வதும்' என்பது பழையஉரை.

ந்து உபாயத்தால் இந்திரியங்களுக்குப்புலப்படும்விஷயங்களுடன்கூட ஒரேஸமயத்தில் அந்தப்பரமாத்மாவின்ஸ்வபாவத்தைக் காண்கிறான். ஸ்வப்னஸ்ருஷ்டையின்இடையில் 'தன்னுடையசரீரத்தைப் பூமியில் விழுந்ததாகவும் தன்னைவிடவேறானதாகவும் எவ்விதம்பார்க்கிறானோ அதுபோலச் செவிமுதலியபொறிகளுடன்கூடியதும் நல்லமனமுள்ளதும் நல்லபுத்தியுள்ளதுமான ஆத்மாவானது ஒருசரீரத்திலிருந்து அதைவிடவேறானசரீரத்திற்குச் செல்லுகிறது. சரீரத்துடன்கூடிய இந்தப்பரமாத்மாவானது பிறப்பு இறப்பு வளர்ச்சி குறைகளுடன்ஸம்பந்தப்பட்டதன்று. இந்தஆத்மாவானது [1]வேறுசரீரத்தைத்தோன்றச்செய்யத்தக்க கர்மமிருப்பதால் இந்தச்சரீரம் (பிணமானதும்) கானப்படாமலே வேறுசரீரத்தை அடைகிறது. ஆத்மாவின்ஸ்வரூபத்தைக் கண்முதலியபொறிகளால் காணமுடியாது. அது போகங்களில் சிறிதும்பற்றுதலே அடைகிறதுமில்லை.அப்பொறிகளைக்கொண்டு தனக்குள்ளகாரியத்தைச்செய்துகொள்ளுகிறதுமில்லை. அந்தப்பொறிகள் அந்தஆத்மாவைக்காண்பதில்லை. ஆத்மாவானது அப்பொறிகளைப் பார்க்கிறது. (இரும்புமுதலிய) பொருள் தன்னை அடித்து ஜ்வலிக்கும் அக்னியினுடைய மிக்கதாபத்தாலுண்டாகும் அந்தஅக்னிஉருவத்தைஅடைவதும் உண்மையில், அவ்விதமேறானரூபத்தையும் குணத்தையும் அடையாததுமாயிருப்பதுபோலவே இந்தஆத்மாவினுடைய ரூபமானது சரீரத்தில்காணப்படுகிறது. அவ்விதம் மனிதன் சரீரத்தைத்தள்ளிவிட்டுப் பிறர்கள்காணக்கூடாத வேறுசரீரத்தில் ப்ரவேசிக்கிறான். தன்சரீரத்தை மஹாபூதங்களில்தள்ளிவிட்டு வேறுசரீரத்தை அடைந்தஉருவத்தையே பொறுக்கிறான். (மரணமடையும்) சரீரியான வன் காந்துபுறத்திலுள்ள ஆகாயத்தையும் வாயுவையும் அக்னியையும் ஜலத்தையும் அப்படியேபூமியையும் (தன்சரீரத்தால்) அடைகிறான். செவிமுதலிய ஐம்பொறிகளோ, வேறுஇடமில்லாதவைகளாய்க் கர்மங்களிலிருந்துகொண்டு ஐந்துகுணங்களையும் ஆச்ரயிக்கின்றன. அவைகளில், செவியானது ஆகாசத்தின்குணமான சப்தத்தையும், மூக்கானது பூமியின்குணமானமணத்தையும், கண்ணானது அக்னியின்குணமானரூபத்தையும், நாவானது ஜலத்தின்குணமானரஸத்தையும், வாயுவின்குணமானஸ்பர்சமென்னும்குணத்தையும் அடைந்திருக்கின்றன. இவ்வைந்துகுணங்களும் மஹாபூதங்களிலிருக்கின்றன. இந்திரியங்களுக்குப்புலப்படத்தக்க ஐந்துகுணங்களும்

1 'பலலக்ஷணியோகாத்' என்பது வேறுபாடம் 'ஸுகதுக்கங்களைக்கொடுக்கும் கர்மலக்ஷணத்தால்' என்பது பழையஉரை.

அப்படியே இந்திரியங்களுமாகிய எல்லாம் மனத்தைஅடித்துச்செல்லுகின்றனவாம். மனமானது புத்தியையும், புத்தியானது ஆத்மாவையும் அடித்திருக்கின்றன. (பொறிகள்) சுபமானலும் அசுபமானலும் எந்தக்கர்மம் இவனல்செய்யப்பட்டதாயிருக்கிறதோ அதையே மரித்தபின் வேறுசரீரத்தில் எடுத்துக்கொள்ளுகின்றன. ஜலத்தை இருப்பிடமாகக்கொண்டபிராணிகள் ப்ரவாஹம்செல்லுவதை அனுஸரித்துச் செல்லுவதுபோலப் [1]பெரியவைகளும் சிறியவைகளுமான ப்ராணிகள்மனத்தைஅனுஸரித்துச்செல்லுகின்றன.கிலேயற்றபொய்ப் பொருளானது எவ்விதம் உண்மைப்பொருள்போலக் கண்களுக்குப் புலப்படுகிறதோ, நுட்பமானவஸ்து எவ்விதம் பெரியஉருவமுள்ளது போலத்தோன்றுகிறதோ அவ்விதமே தீரபுருஷன் மிக்கதாபமுள்ளவன்போலிருந்தாலும் உண்மையில் மோஹத்தில்விழமாட்டான்; அப்படியே புத்திக்குவிஷயமானபரமாத்மாவையும் அடைவான்.

இருநூற்றுமூன்றாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரஹ்மஸ்பதிக்தம் மனுபுக்தம் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

வெளியிற்சென்ற இந்திரியங்களால் வெகுகாலத்திற்கு முன்தி அறியப்பட்டவிஷயங்களைப் பிறகு அந்த இந்திரியங்கள் [2]லயத்தை அடைந்திருக்கும்பொழுது எதுகன்முகநினைக்கிறதோ புத்தியுடன் ஸம்பந்தத்தை யடைந்த அது பரமாத்மாவாகும். [3]ஒரேஸமயத்திலும் வெவ்வேறுகாலத்திலும் அருகிலிருந்துஅநுபவிக்கப்பட்ட இந்திரியங்களுக்குரியவிஷயங்களே முழுமையையும் ப்ரகாசப்படுத்திக்கொண்டும் அப்படியே நிலையற்றவைகளும் வெவ்வேறுரூபவைகளுமான ஜாக்ரம் ஸ்வப்னம் ஸுஷுப்தியென்றவுமுன்று அவஸ்தைகளையும் அறிந்து

---

1 'விஷயப்பிரதிமுதலியவைகள்' என்பது பழையஉரை.

2 'ஹ்ருத்தாமரையில் ஓர்இந்திரியம்கலக்குமானாலும் முதலில் அதனல் அநுபவிக்கப்பட்டதை ஆத்மாநினைக்கிறது' என்பதாகுமத்து; அலலது, 'எல்லா இந்திரியங்களும் லயத்தை அடைகையமயமான ஸுஷுப்தியவஸ்தையில் எல்லா விஷயங்களையும் ஆத்மாஅறிந்துகொண்டிருக்கிறது' என்றுமாம்.

3 'யாதொருஆத்மாவானது நான்குபுத்திகளிலுள்ள இந்திரியங்களுக்குரிய விஷயங்களே முழுமையையும் ஒரேஸமயத்தில் அறிந்துகொள்ளாமல் முறையாகவே தகுந்தகாலத்தில் அவைகளை அறிந்துகொண்டு லஞ்சரிக்கிறதோ அந்த ஆத்மாவானது அக்காரணத்தால் ஒன்றையும் பரமாத்மாவழியிருக்கிறது' என்பது வேறுபாடம்.

கொண்டு அவைகளில் ஸஞ்சரித்துக்கொண்டுமிருப்பதால் அந்தஆத்மாவானது ஒன்றுமும் பரமாத்மரூபியாயுமிருக்கிறது. அந்தஆத்மாவானது அந்தஉலவ்வோர்அவஸ்தையிலுமுள்ள ரஜஸ் தமஸ் மூன்றுவதானஸத்வம்எனறு வெவ்வேறுனஉருவமுள்ளகுணங்களைப் பற்றுதலின்றி அறிந்துகொண்டிருக்கிறது. அந்தஆத்மாவானது அந்தக் குணங்களால் கட்டப்பட்டதன்று. அஃது உலகத்தைக் கட்டுள்ளதாகச்செய்கிறது. பரமாத்மாவானது இச்சரீரத்திலுள்ளமுக்குணங்களையும் அஜஸரித்துச்செல்லுகிறதன்று. அவ்விதமே, கட்டைகளிலிருந்துகொண்டு அவைகளை எரிக்கும்அக்னியை வாயுவானது ப்ரகாசிக்கும்படிசெய்வதுபோலச் சரீரியானஆத்மாவானது விஷயங்களில் பற்றுதலுள்ள இந்திரியங்களை ப்ரகாசப்படுத்திக்கொண்டிருக்கிறது. இந்திரியங்களை ப்ரகாசிக்கச்செய்யும் இந்திரியம்போன்ற ஆத்மாவின் உருவத்தைக் கண்ணால்காணமுடியாது; த்வக்காலும் அறியமுடியாது. அது செவியை ஸாதனமாகக்கொண்டு அறியப்படுவதுமன்று. (எந்த வேதத்தாலும் மனத்தாலும் ஆத்மாவை அறியவேண்டுமென்று வேதம்உபதேசிக்கிறதோ) அந்தவேதமும் மனமும் முடிவில்காசமடைகின்றன. அவ்விதம், ஆத்மாவை வேதாந்தவிசாரத்தால் இரண்டாவதில்லாததாகத் தெரிந்துகொள்ளுகிறான். செவிமுதலியகருவிகள் தாமே தம்தம்உருவத்தைக்காணத்தக்கவையல்ல. யாவற்றையும் அறிந்ததும் யாவற்றையும்பார்க்கிறதும் ஜீவரூபியுமானபரமாத்மா அவ்விந்திரியங்களைப்பார்க்கிறது. இமயமலையின்பக்கமும் சந்திரமண்டலத்தின்பின்புறமும் எவ்விதமென்று மனிதர்களால்காணப்பட்டதில்லை. அக்காரணத்தால் அவைஇல்லாதனவாமோ? அவ்வாறே எல்லாச்சரீரங்களிலும் ஜந்துஜந்துக்களுக்கும் ஆத்மாவும்ஸூக்ஷ்மமும் அறிவைஉருவமாகக்கொண்டதுமான இந்தப்பரமாத்மா கண்களால் ஒருஸமயத்திலும்காணப்படாததாயினும் அக்காரணத்தால் இஃது இல்லாததாகாது. உலகமானது சந்த்ரமண்டலத்தில் ப்ரதிபிம்பமாகத்தோன்றும் [1]ஜகத்தைக் களங்கமென்றுகண்டுகொண்டாலும் ஜகத்தென்று [2]அறியாததுபோல, ஆத்மாவின் அறிவிருக்கிறது. ஆனால், உண்மையான அறிவுஉண்டாகவில்லை. அந்தஆத்மஜ்ஞானமானதுமுக்யமானபயனில்லாததாகாது. அறிஞர்கள் ரூபமுள்ளவருக்ஷத்தை உத்பத்திகாலத்திலும் முடிவுக்காலத்திலும் உருவமில்லாததால் (அவ்விதத

1 வேறுபாடம்.

2 'ஆத்மாவானது ஜீவரூபமாய்த்தோன்றுகிறது; பரமாத்மரூபமாய்த் தெரிவதில்லை' என்பது கருத்து

ரூபமில்லாததாகப்) புத்தியால் கண்டுகொள்ளுகிறார்கள். உதயாஸ்தமயங்களை அறிந்துகொண்டு ப்ரத்யக்ஷமான ரவியின் கதியையும்தெரிந்துகொள்ளுகிறார்கள். அப்படியே க்ஷுத்ரகத்தெரிந்துகொண்டவர்கள் தூரத்திலிருக்கும்ஆத்மரூபத்தைப் புதுதிவிளங்கும்காரணத்தால் அறிந்துகொள்ளுகிறார்கள். அருகிலிருப்பதும் அறியத்தக்கதுமான ப்ரபஞ்சத்தை ஜ்ஞானரூபமாகச்சொல்லப்படும்ஆத்மாவில் [1] லயிக்கச் செய்யவிரும்புகிறார்கள். உபாயமிலலாமல ஒருபொருளும்வரித்திக்கிறதில்லை. ஜலத்திலுள்ளவைகளைக்கொண்டு ஜீவிப்பவர்கள் பலகயிறுகளுள்ளவலைகளால் மீன்களைப்பிடிப்பதுபோலவும் மிருகங்களால் மிருகங்களும் பறவைகளால் பறவைகளும் யானைகளால்யானைகளும் பிடிக்கப்படுவதுபோலவும் அறியததக்கது அறிவால் க்ரஹிக்கப்படுகிறது. பாம்பின்கால்களைப் பாம்புஉன்னுதான் பார்க்கிறதென்று காணப்படுகிறது. அதுபோல, ஸ்தூலசரீரங்களிலுள்ள ஸூக்ஷ்மசரீரத்திலிருப்பதும் அறியத்தக்கதுமான ஆத்மாவை அறிவால்பார்க்கவேண்டும். இந்திரியங்களை இந்திரியங்களாலேயே அறியமுயற்சியாததுபோலவே இச்சரீரத்தில் கடைசியானபுத்தியானது தன்னை அறியத்தக்கதன்று. அந்தப்புத்தியால (உண்மையில்) பரமாதமரூபதைப் பார்க்கமுடியாது. அமாவாஸ்யாதிதியில் சந்திரனிருந்தாலும் அடையாளமில்லாமையால் காணப்படுகிறதில்லை. ஆனால, அதற்குநாசமென்பதில்லை. அதுபோல, ஆதமாஇருப்பதாகத்தெரிந்துகொள். மண்டலம் நாசமடைந்திருப்பதாலன்றே அமாவாஸ்யையன்று சந்திரன்காணப்படுகிறதில்லை. அதுபோல, சரீரத்தைவிட்டுவிலகிய ஜ்ஞாதமாவானது காணப்படுகிறதில்லை. வேறுமண்டலத்தைஅடைந்து சந்தரனைவன் திரும்பவும் விளங்குவதுபோல ஆத்மாவானது வேறுசரீரத்தை அடைந்து திரும்பவும்விளங்குகிறது. பிறப்பும் வளர்ச்சியும் நாசமும் இந்தச்சரீரதிற்கு ப்ரத்யக்ஷமாகக்காணப்படுகின்றன. சந்ரமண்டலத்திற்குள்ளதான அந்தவளர்ச்சியும் அழிவும் சரீரத்திற்கல்லாமல் அச்சரீரத்திலுள்ள ஆத்மாவிறகில்லை. அமாவாஸ்யையன்று (காணப்படாமற்போனாலும்) திரும்பவும் மண்டலமுள்ளவனாகிச் சந்திரன்தானென்றுகாணப்படுவதுபோல பிறப்பும்வளர்ச்சியும் அழிவுமிருந்தாலும் அதுதானென்றுகாணப்படும். ராகுவானது சந்திரனே உண்மையிலு தொட்டதாயும் விட்டதாயும் காணப்படாததுபோலத் தேகமானது தேஹியான ஆத்மாவைவிலிவதும் தொடுவதுமாயிருக்கிறதில்லையென்று தெரிந்துகொள். அந்தராகுவானது சந்திரனையும் ஸூரிய

[1] வேறுபாடம்.

னுடனும் சேர்க்கைஅடைந்தபொழுது எவ்விதம்கணப்படுகிறதோ அதுபோல ஜ்ஞானரூபியான அந்தஆத்மாவானது சரீரத்துடன் சேர்க்கைஅடைந்து காணப்படுகிறது. சந்திரனையும் ஸூர்யனையும்விட்டு விலகியபின் அந்தராகுவானவன் எவ்விதம்காணப்படுகிறதில்லையோ அதுபோலச் சரீரத்தைவிட்டுவிலகியபின் சரீரியானஆத்மா காணப்படுகிறதில்லை. அமாவாஸ்யையன்று (ஸூர்யனை) அடைந்த சந்த்ரன், பிறகு, எவ்விதம் நக்ஷத்திரங்களுடன் சேருகிறானே அதுபோல் இந்தச் சரீரத்திலிருந்து விடுபட்ட ஆத்மாவானது கர்மங்களின்பயனை வேறுசரீரங்களுடன் சேர்க்கைஅடைகிறது.

இருநூற்றிரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரஹஸ்பதிக்கும் மநுவுக்கும் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

ப்ரத்யக்ஷமான இந்தஸ்தூலசரீரமானது ஸ்வப்னகாலத்தில் உறக்கமடைந்திருக்கிறது. புத்தியெனும்ஸூக்ஷ்மசரீரமானது இச்சரீரத்தில் பற்றுதலிலலாமல் ஸஞ்சரிக்கிறது; நிதுபோல ஸம்ஸாரமுண்டாகிறது. ஸ்வப்னகாலத்தில ஸூக்ஷ்மசரீரமானஇந்திரியங்களுடன்கூடிய ஜ்ஞானரூபியான ஆத்மாவானது ஸுஷுப்தியில்அந்தஸூக்ஷ்மசரீரத்தைவிட்டு விலகியிருப்பதுபோல மோக்ஷமுண்டாகிறது. தெளிந்தஜலத்தில் கண்ணுலபிரதிபிம்பத்தைக்காண்பதுபோலத் தெளிந்தஇந்திரியங்களுள்ளமனிதன் அறிவேண்டியஆத்மரூபத்தை ஜ்ஞானததால்அறிவான். அந்தஜலமானது கலங்கியிருக்கும்பொழுது அம்மனிதனே எவ்விதம்உருவதைக்காண்கிறானில்லையோ அதுபோல இந்திரியங்கள் கலக்கமுள்ளதாயிருக்கும்பொழுது அறியவேண்டியஆத்மாவைப் புத்தியாலஅறியமுடியாது. அவிவேகமானது அஜ்ஞானததாலுண்டுபண்ணப்படுகிறது. அவிவேகத்தால் மனம் தோஷமுள்ளதாகிறது. மனம் குறைமுள்ளதானால் மனதைச்சார்ந்த ஐந்து இந்திரியங்களும் மிகக்குறைமுள்ளனவாகின்றன. அஜ்ஞானம் நிரம்பியவனும் விஷயங்களிலமுழுகியவனுமாயிருப்பவன் ஆத்மாவைஅறியமாட்டான். அவனை பரிசுத்தமான புத்தியுள்ளவனுலை (அறிவுள்ள தோஷங்களைத)தெரிந்துகொண்டே விஷயங்களிலிருந்துவிலக்கமடைவான். இவ்வுலகில் மனிதனுக்குப பாபத்தால விஷயங்களிலுள்ள ஆசைகளும குறைவுடைவதாயில்லை. எப்பொழுது பாபமானது நாசமடைகிறதோ அப்பொழுது விஷயங்களிலுள்ள ஆசை விலகத்

தொடங்கும். சுபங்களையும் அசுபங்களையும் உண்டுபண்ணத்தக்கதும் உள்ளத்திலிருப்பதுமான பாபமானது ஞானத்தால்கொளுத்தப்படுமாகில் அந்தமனிதன் திரும்பவும் பிறப்பை அடையமாட்டான். விஷயங்களில்பற்றுதலாலும் அதில் சாச்வதத்தன்மையைஅடைந்திருப்பதாலும் அதற்குமாறானஸுகத்தை மனத்தால்விரும்பிக்கொண்டிருப்பவன் பரமாத்மாவைஅடையமாட்டான். புருஷர்களுக்குப் பாபகர்மம்நாசமடைந்தபின் ஜ்ஞானமுண்டாகும். பிறகு, கண்ணுடிபோலத் தெளிவடைந்தபுத்தியில் ஆத்மாவைப்பார்க்கிறான். மனிதன் விஷயங்களிற்சென்ற இந்திரியங்களால் துக்கமுள்ளவனாவான்; அதிலிருந்து அடக்கப்பட்ட அவ்விந்திரியங்களாலேயே ஸுகமுள்ளவனாவான். ஆகையால், இந்திரியங்களென்னும் திருடர்களிடமிருந்து ஆத்மாவைப் புத்தியால் அடக்கி ரக்ஷித்துக்கொள்ளவேண்டும். இந்திரியங்களைவிட மனம் முந்தியதாகும். அந்தமனத்தைவிடப் புத்தியானது மிகப்பெரிது. புத்தியைவிட ஜீவன் மிகப்பெரிது. ஜீவனைவிடப் பரமாத்மா மிகப்பெரிது. அவ்யக்தமானபரமாத்மாவிலிருந்து ஜீவனும், அந்தஜீவனிடமிருந்து புத்தியும், அந்தப்புத்தியிலிருந்து மனமும் உண்டாகின்றன. மனமானது செவிமுதலிய இந்திரியங்களுடன்கூடிச்சப்தமுதலியவிஷயங்களைச் சிறந்ததென்றுபார்க்கிறது. சப்தமுதலிய அந்தவிஷயங்களையும் அவைகளுக்கிடமான எல்லாவஸ்துக்களையும் விலக்கிக்கொள்ளுகிறவனும், ஆமையானது தன் அங்கங்களை அடக்கிக்கொள்வதுபோல வெளியில்சென்றஇந்திரியங்களை அடக்கிக்கொள்ளுகிறவனுமானவன் [1] ப்ரக்ருதியிலிருந்து உண்டானவைகளும் மனம்ஸஞ்சரிக்கும் விஷயங்கள்போன்றவைகளுமான அந்தவிஷயங்களை விலக்கிக்கொண்டு மோக்ஷத்தை அடைகிறான். உதயமடைந்தஸூர்யன் கிரணங்களின்கூட்டத்தை வெளியிலிருப்பதுபோலவும் அந்தஸூர்யனுடையமண்டலம் காணப்படுகிறதல்லாமல் மண்டலத்திலிருப்பவர் காணப்படாததுபோலவும் சரீரமானது காணுதற்காதாயும் சரீரத்தைவிடவேறான ஆத்மாவானது எப்பொழுதும் காணப்படாததாயுமிருக்கின்றன. [2] அந்தஸூர்யமண்டலத்தை அடையும்பொழுது அந்தக்கிரணமண்டலத்தைத் தன்னிடத்தில் அடக்கிக்கொள்ளுகிறான். [3] அதுபோல, உள்ளிலுள்ள ஆத்மாவானது சரீரத்தை அடைந்து இந்திரியங்களென்னும்கிரணங்களால் அந்த இந்திரியங்கள் அவைகளுக்குத்தக்க ஐந்துவிஷயங்களையும்அடைந்து பிறகு அந்த ஆத்

1 வேறுபாடம். 2 இங்கு அதிகபாடமான ஒருபதிலைகம்விட்டுவிட்டது.
3 இங்கு அதிகபாடமான அரைபதிலைகம்விட்டுவிட்டது.

மாவானது மறையும்பொழுது அந்தஇந்திரியக்கூட்டங்களைத் தன்னிடத்தில்அடக்கிக்கொண்டு செல்லுகிறது. கிரணத்தொகுதிகளில்லாமல்போனவுடன் அக்காரணம்பற்றி இந்தஸூர்யன் இல்லாமற்போகாது. ப்ரவிருத்திமார்க்கத்திற்குரிய தர்மத்தைஅடைந்தஇந்தஜீவன் கர்மத்தால்காண்பிக்கப்பட்டவழியில் அந்தக்கர்மத்தால் திரும்பவும் திரும்பவும் இழுக்கபபட்டவனைக் கர்மதத்திற்குரியபடியே அடைகிறான். விஷயபோகங்களிலிருந்துவிலகுகிறஜீவனுக்குஆசைஒன்றைத்தவிர விஷயங்கள் விலக்கமடையும். இந்தஜீவனுக்குள்ளஅந்தஆசையும்பரமாத்மாவைக்கண்டதும் விலக்கமடையும். புத்தியானது கர்மங்களைச்செய்யக் காரணமான விஷயஆசைகளைவிட்டுவிலகியதாய் எப்பொழுது மனத்திலிருக்கிறதோ அப்பொழுது அந்தமனமும்ப்ரம்மத்தைஅடைந்து அந்தப்ரம்மத்திலேயே லயத்தைஅடைகிறது. புத்தியானது தொடாததும் கேளாததும் புஜியாததும் பாராததும் மோவாததும்ஆலோசனையில்லாததுமானபரமாத்மாவை அடைகிறது. பரமாத்மாவினிடமிருந்து ஜீவனும் அந்தஜீவனிடமிருந்து புத்தியும்அந்தப் புத்தியிடமிருந்து மனமும்உண்டாயின. ஆத்மாவினிடமிருந்துபுத்தி உண்டாயிற்று. ஞானரூபியானஆத்மா அவ்யக்தமென்றுசொல்லப்படுகிறது. அந்தஆத்மாவினிடமிருந்து புத்தியுண்டாயிற்றென்று அதை அறிந்தவர்கள் நினைக்கிறார்கள். பிறகு, அந்தப் புத்தியிலிருந்துமனம் உண்டாயிற்றென்றுகருதப்படுகிறது. அந்தமனத்திலிருந்து ஐந்தான இந்திரியங்களின்உருவங்கள் உண்டாயின. (இந்திரியங்களைவிட) மனம் சிறந்ததென்று நினைக்கப்படுகிறது. அந்தமனத்தைவிடப் புத்தியானது மிகச்சிறந்ததாகிறது. அந்தப்புதியையும்விட, ஜ்ஞானரூபியானஆத்மா சிறந்ததென்று சொல்லப்படுகிறது. ஆகையால், அவைகளைவிடஆத்மாவானது ஸூக்ஷ்மமாகிறது. அந்த ஆத்மாவைவிடச் சிறந்ததொன்றுமில்லை. இந்தஇந்திரியங்கள்யாவும் மனத்தால விஷயங்களை அறிகின்றன. 1 இந்திரியங்களின்உருவங்கள் மனத்தில் மூழுகியிருக்கின்றன.மனமானது ஸங்கல்பத்தைஅடைந்திருக்கிறது. ஸங்கல்பமானது புத்தியைஅடைந்திருக்கிறது. புத்தியானது மேலானஆத்மஸ்வபர்தை அடைந்திருக்கிறது. இந்திரியங்களால் மனத்தைக்காணமுடியாது. மனமானது புத்தியைஅறிவதில்லை. புத்தியானது ஸூக்ஷ்மமானஆத்மாவைஅறிகிறதில்லை. ஸூக்ஷ்மமானஆத்மாவோ நூவைகளைப்பார்க்கிறது.

---

1 'விஷயங்கள் மனத்தில் முழுகியிருக்கின்றன. மனமானது புத்தியை அடைந்திருக்கிறது. புத்தியானது ஜீவனை அடைந்திருக்கிறது. ஜீவனானது பரமாத்மாவை அடைந்திருக்கிறது' என்பது பழையஉரை.

இருநூற்றுமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ருஹஸ்பதிக்கும் மநுவுக்கும் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

சரீரத்தைப்பற்றியதும் மனத்தைப்பற்றியதுமான துக்கங்களால் துன்பமுண்டாயிருக்கும்பொழுது எந்தத்துக்கத்தைவிலக்கத் தக்கமுயற்சிசெய்ய முடியவில்லையோ அந்தத்துக்கத்தைச் சிந்தியாமலிருக்கவேண்டும். சிந்தியாமலிருப்பதென்பது துக்கத்திற்குமருந்தாகும். துக்கமானது சிந்திக்கப்படுமாகில் (மனிதனைத்) தொடர்ந்துகொண்டிருக்கும்; திரும்பவும்வளர்ச்சியடையும். மனத்திலுண்டான துக்கத்தை அறிவாலும் சரீரத்திலுண்டான துக்கத்தை ஔஷதங்களாலும் விலக்கிக்கொள்ளவேண்டும். இஃது அறிவிறகுள்ளஸாமர்த்தியமாகும். சிறுவர்களுக்குஸமமானநிலையை அடையக்கூடாது. அறிவுள்ளவன் யௌவனப்பருவமும் அழகும் ஜீவித்திருப்பதும் திரவியங்களின்சேர்க்கையும் ஆரோக்கியமும் அன்பர்களுடன்வஸிப்பதும் நிலையில்லாதனவென்று தெரிந்துகொண்டு அவைகளில் ஆசை வையாமலிருக்கவேண்டும். தேசத்திறகுப்பொதுவானதுக்கத்தைப் பற்றிச் சோகப்படுவதற்கு ஒருவன் தகுதியுள்ளவனல்லன். அதை விலக்கத்தக்க உபாயத்தைப்பார்ப்பானில் சோகப்படாமல்பரிஹரிக்க வேண்டும். உயிரோடிருப்பதில் ஸுகத்தைக்காட்டிலும் துக்கமே மிகவும் அதிகமென்பதில் ஸந்தேஹமில்லை. அவிவேகத்தால் இந்திரியங்களுக்குவிஷயமானபொருள்களில் ஆசைபற்றியிருப்பவனுக்குத் துன்பமும் மரணமும் உண்டாகும். ஸுகதுக்கங்களிரண்டையும் எந்தமனிதன்விலக்கிக்கொள்ளுகிறானோ அவன்அழிவில்லாத ப்ரம்மத்தைஅடைவான். அவ்விதமானபண்டிதர்கள் சோகமடையமாட்டார்கள். பொருள்களானவை கஷ்டத்துடன் சேருகின்றன. ரக்ஷிப்பதிலும் அவைகள் ஸுகமில்லாதவை; துக்கப்பட்டாலும் கிடைக்கிறதுமில்லை; இந்தப்பொருள்களின்நாசத்தைச் சிந்தியாமலிருக்கவேண்டும். அறிவானஆத்மாவானது அறியப்படுத்தன்மையை அடைந்திருக்கிறதென்று தெரிந்துகொள். ஆகையால், மனம் ஆத்மாவைச் சேர்ந்ததாகத்தோன்றுகிறது. மனமானது அறிவிற்குக்காரணமான இந்திரியங்களுடன் சேர்ந்ததால் அதிலிருந்து விஷயங்களைப்பற்றியஅறிவு உண்டாகும். கர்மங்களைப்பற்றிய வாஸனைகளுடன்கூடிய புத்தியானது (அந்தவாஸனைகளைவிட்டு) மனனவ்ருத்தியிலிருக்கும் பொழுது த்யானமாகவென்னும் ஸமாதியால் ப்ரம்மம் அறியப்படு

கிறது. இந்தப்புத்தியானது இந்திரியங்களுடன்கூடியதாயிருந்துகொண்டு விஷயங்களைப்பற்றியே செல்லுகிறது. மலையின்சிகரத்திலிருந்து ஜலம்ஓடிவதுபோலப் புத்தியானது அஜ்ஞானத்திலிருந்து நான்கு புறத்திலும்ஓடுகிறது. எல்லாவற்றிற்கும்மூன்றினதும் நிர்க்குணமானதும் த்யானம்பண்ணத்தக்கதுமான ப்ரம்மரூபத்தை மனம்அடைகிறபொழுது உரைகல்லில் பொன்னின்நிறம்விளங்குவதுபோல மூன்றில் ப்ரம்மமானது சுன்னுகவிளங்குகிறது. மனமானது முதலில் அதில் லயமடைந்ததாயிருக்கும். புத்தியுடன்சேர்ந்து இந்திரியங்களுக்கெதிரிலுள்ளவிஷயங்களை அறிவிப்பதும் அதற்குக்காரணமான குணங்களை அபேக்ஷிப்பதுமானமனமானதுகுணமில்லாதப்ரம்மத்தை அறிவிப்பதில் ஸாமர்த்யமுள்ளதன்று. மனத்திறகுவழியான இந்த இந்திரியங்கள்யாவற்றையும் மறைத்து மேலேவருத்தியிலிருந்துகொண்டு அம்மனத்தையும் ஏகாரவஸ்துவைப்பார்க்கத்தக்கசாமையுள்ளதாகச் செய்துகொண்டு அந்தப்பரமாத்மாவைஅறியவேண்டும். ஸூக்ஷ்மமானபூதங்கள் லயமடையும்பொழுது அவைகளின்கார்யங்களான ஸ்தூலபூதங்கள் லயமடைகின்றதுபோலப் புத்தியானது தன் கார்யங்களானஇந்திரியங்களை லயப்படித்திக்கொண்டு அஹங்காரத்தில் லயமடைகிறது. நிச்சயமென்ற தன்குணத்துடன்கூடியதும் உள்ளில்ஸஞ்சரிப்பதுமான அந்தப்புத்தியானது மனத்தில் லயமடைகிறபொழுது மனமாகவேஆகிறது. த்யானத்திறசென்றமனமானது விஷயங்களுடன்கூட மூன்குணங்களுள்ளப்ரக்ருதியில எப்பொழுது லயமடைகிறதோ அப்பொழுது எல்லாக்குணங்களையும் விட்டுவிட்டு நிர்க்குணமானப்ரம்மத்தை அடைகிறது. ஸூக்ஷ்மமானப்ரம்மத்தை அறியும்விஷயத்தில் இவ்வுலகில ஸரியானதிருஷ்டாந்தமில்லை. எந்த விஷயத்தில்சொல்லுதற்கு பதப்ரயோகமில்லையோ அந்தவிஷயத்தை எவன்அறியமுடியும்? த்யானத்தாலும் மனனமென்னும்புத்தியாலும் சமதமாதிகுணங்களாலும் ஜாதிதர்மத்தாலும் வேதாந்தச்ரவணத்தாலும் பரிசுத்திபெற்றமனத்தாலும் ப்ரம்மத்தைஅடைவிரும்பவேண்டும். மூன்குணங்களையும்விட்டுவிலகியவன்,அந்தஜ்ஞானவழியைவெளியிலுள்ளவிஷயங்களும் அடைந்துகொண்டிருக்கிறான். ப்ரக்ருதியிலுள்ளகுணங்கள் உண்மையில் இல்லாததால் அறியவேண்டிய அந்த ப்ரம்மமானது புத்திக்குக்கெட்டாததாகும்.புத்தியானதுகுணங்களில்லாமலிருந்துகொண்டு ப்ரம்மத்தைஅடையும்; குணங்களுடன்கூடியிருப்பதால் ப்ரம்மத்திலிடமிருந்துவிலக்கமடையும். அக்னியானது கட்டைகளிலஸஞ்சரிப்பதுபோலப் புத்தியானது குணங்களில்ஸஞ்

சரிக்கத்தக்கசீவன்முள்ளதாகும். எப்பொழுது ஐந்துஇந்திரியங்களும் தம்வேலைகளிலிருந்து விடுபட்டவைகளாயிருக்கின்றனவோ அப்பொழுது (சூஷ்மங்களால்) விடுபட்டதும் பிரக்ருதியைவிடவேறுனதுமான அத்தப்பரப்ரம்மம் விளங்கும். இவ்விதம் எல்லாஜீவர்களும் ப்ரக்ருதியிலிருந்துஉண்டாகிறார்கள்; ப்ரக்ருதிலிலகியவுடன்விலக்கமடைகிறார்கள்., அப்பொழுது ஸவர்க்கத்துக்கும் போகிறார்களில்லை. ஜீவன் ப்ரக்ருதிபுத்தி [1]விஷயங்கள் இந்திரியங்கள் ஆகாசம் அபிமானம் ஆகிய இவைகளின்கூட்டம் பூதமென்னும்பெயருள்ளதாகிறது. இக்கூட்டத்தின் முதலானஸ்ருஷ்டியானது பரதானமென்றமூலகாரணத்திலிருந்து உண்டாகிறது. இரண்டாவதுஸ்ருஷ்டியானது இரண்டு வஸ்துக்களின்சேர்க்கையால வெளியாகி இந்திரியமுதலிய [2]பொதுவானபொருள்களே அடங்கியடக்கச்செய்கிறது. தர்மத்தைவிட மோக்ஷம் சிறந்ததாகும்.அதுபோலத் தர்மமும் அதர்மத்தைவிடச் சிறந்ததாகும். ஆசையுள்ளவன் ப்ரக்ருதியை அடைவான். வைராக்யம் பெற்றவன் ஞானமுள்ளவனாவான்.

இருநூற்றுநான்காவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ருஹஸ்பதிக்கும் மனுவுக்கும் ஸம்பாஷ---- தொட----.)

ஸர்வஸ்துவானது தருஷ்டாந்தத்துடன் உபதேசிக்கமுடியாததாதலால் அஃது எப்பொழுதும் உபதேசிக்கமுடியாததென்றே நினைக்கிறேன். சரீரத்தைவிடவேறுனதும் அருகிலிருக்கும்ஸாரத்தை எவ்விதத்திலும் அறியாததுமான நிழல்போன்ற இச்சரீரத்தில் இந்த ஆத்மாவானது இருக்கிறது. அந்தச்சரீரத்தின்நிழலானது சரீரமில்லாமலுண்டாகிறதில்லை. சரீரமானது அந்த நிழலன்றிஇருக்கிறது. அதுபோலவே மூலகாரணமில்லாமல் இச்சரீரமிருக்கமுடியாது. இந்தச்சரீரமில்லாமல் காரணமானபரமாத்மாஇருக்கும். பரமாத்மாவை விட்டு இந்தச்சரீரமிராது, இந்த ஆத்மாவானது ஜீவாத்மாவென்றும் பரமாத்மாவென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதனை வான்தலமென்று சிலர்எண்ணுகிறார்கள். மற்றுஞ்சிலர் பொய்யென்று நினைக்கிறார்

1 வேறுபாடம்.

2 தன்மாத்திரைகளாகிய, சாமேந்திரியங்களைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், மனம், அஹங்காரம் இவைகள் பொதுவான பொருள்கள்

கள். அறிவுள்ளவனே! இரண்டுவிகமும் எனக்குஒம்மதமே. மோக்ஷத்திற்குக்காரணமானஞானமுண்டாஞல் இது ஸமாதானமுள்ளதாகும். இந்திரியங்களே நன்ருய்அடக்கிக்கொண்டு முக்திபெற்றவர்களால் அந்தஆத்மாவும் காணப்படுகிறது. எவர்களுக்கும்காணக்கூடியதல்லாத இந்தஆத்மாவானது மின்னல்போல்விளங்கும்.ஆஞல், அந்தஆத்மாவானது ப்ராம்மணனுக்கு நன்குகாணத்தக்கதாகவிருக்கிறது. பரமாத்மாவானவர் சுத்தரும் ஸாக்ஷியாயிருப்பவரும் ஸூர்யன்போலவிளங்குகிறவருமாயிருக்கிருரென்று வேதம் உபதேசிக்கிறது. இந்தவேதம் அழிவில்லாதது. ஆகையால், பரமாத்மா ஒருவரென்றே தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப்பரமாத்மாவின் (ஸ்ருஷ்டிமுதலிய) செய்கையானது பயனைக்கருதிஉண்டாகிறதில்லை. சிறந்தபுத்தியுள்ளவன், அவர் அவ்விதமிருக்கிருரென்று உண்மையைத் தெரிந்துகொள்ளவேண்டும். ப்ராணவாயுவுக்கு அஃதுஇருக்கும்இடங்களின்வேறுமையைக்கொண்டு பேதமிருப்பதுபோல அந்தப்பரமாத்மாவுக்குப் பேதம்இருக்கிறதென்று கூறப்படுகிறது. இடங்களின் வேற்றுமையாலுண்டான அவ்விகபேதந்தான் அவரிடமிருக்கிறது. அறிவுள்ளவனே! அந்தஅந்தக்குணங்களின்விசேஷத்தால் பலபெயர்களுடன்கூடியவரும் அழிவிலாதவருமான பரமாதமாவை இவ்விதம் அறிந்துகொள். அந்தப்பரமாதமா எல்லாவற்றிற்கும் ஈச்வரரும் எல்லாம்தாமாயிருப்பவரும் எலலாவற்றையும்நடைபெறச்செய்கிறவரும் எல்லாஉருவமுமுள்ளவரும் எலலாச்சக்தியுமுள்ளவரும் எல்லாவற்றிற்கும்காரணத்திற்குக்காரணரும் எல்லோர்களுக்கும் பொதுவானவரும் எலலாமஹாத்மாக்களாலும்உபாஸிக்கத்தக்கவரும் ஸாஸ்வதேவரென்றுப்ரஸித்திபெற்றவருமாயிருக்கிருர்.அவரைஅறிந்துமோக்ஷமடையவேண்டும். எப்பொழுது ஐந்துவிஷயங்களுடன்கூடிய ஐந்து ஜ்ஞாநேந்திரியங்களும் மனதுடன்கூட அடங்கியிருக்கின்றனவோ அப்பொழுது மணியில்கோக்கப்பட்டநூல்போல அந்தப்பரமாதமாவைப் பார்ப்பான். அந்ததூலில் தங்கத்திலும் முத்துக்களிலும் பவழங்களிலும் வெள்ளியிலும் மண்ணுல்செய்யப்பட்டதுலுமிருப்பதுபோல அதுபரம்மமானது பசுக்களிலும் குதிரைகளிலும் மனிதர்களிலும் யானைமான்முதலிய ம்ருகங்களாலும் புழுக்களிலும் பறவைகளிலும் [1]தன்கர்மங்களால பறவுதலுள்ள உருவமுள்ளதாயிருக்கிறது. இந்தஆத்மாவாழ்வது எந்தஎந்தச்சரீரத்திறகாக எந்தஎந்தக்கர்மத்

1 உண்மையில் ப்ரம்மமே ஜீவாத்மாயிருப்பதால் ஜீவாத்மாவுக்குள்ள காமகர்மங்களை ப்ரம்மமீதுஉள்ளகர்மங்களென்று சொல்லுவதுண்டு.

தைச்செய்கிறதோ, அந்தஅந்தச்சரீரத்தால் அந்தஅந்தக்கர்மத்தின் பயனே அனுபவிக்கிறது. ஓரோஸ்ரமுள்ளபூமியானது ஓஷதிகளின் ரூபத்தை அனுஸரித்துச்செல்லுகிறதுபோல உள்ளிலுள்ளஆத்மாவை ஸாக்ஷியாகக்கொண்டபுத்தியானது கர்மங்களை அனுஸரித்துச் செல்லுகிறது. விஷயங்களின் அறிவைமுன்னிட்டுஅவைகளில்ஆசை உண்டாகிறது. ஆசையைமுன்னிட்டுமுயற்சியும்முயற்சியைமுன்னிட்டுக்கர்மமும் கர்மத்தைமுன்னிட்டுப் பிறகு அதன்பயனும் உண்டாகின்றன. பயனைத கர்மதநின்உருவமுள்ளதென்றும் கர்மம் அறியப்படும்விஷயங்களின்உருவமுள்ளதென்றும் அந்தவிஷயம் அறியும்புத்தியின்உருவமுள்ளதென்றும் புத்தியானது ஸத்து அஸத்து இவைகளின்உருவமுள்ளதென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். [1]அறிவுகளும் பயன்களும் அறியப்படும்விஷயங்களும்அப்படியேகர்மங்களும் நாசமடைந்து முடிந்தபின்னுள்ளபயன் எதுவோ அஃது அறியத்தக்கபரமாத்மரூபத்தில் நிலைபெறற ஞானமென்று தெரிந்துகொள்ளவேண்டும். ஸமாதியிலிருக்கும்யோகிகள் எங்குமிருப்பதும் எப்பொழுதுமுள்ளதுமான பரமாத்மரூபதத்தை அறிகிறார்கள். [2]மூக்குணங்களிலும் சென்றபுத்தியுள்ளமூடர்கள் புத்தியிலிருக்கும் அந்தப்பரமாத்மாவைப் பார்க்கமாட்டார்கள். இவ்வுலகில் பூமியின் உருவத்தைவிட ஜலத்தின்உருவம் மிகப்பெரிது. ஜலதத்தைவிடத் தேஜஸ் மிகப்பெரிது. தேஜஸைவிட வாயுபெரிது. வாயுவைவிட ஆகாயம்பெரிது. ஆகாயத்தைவிட மனம் மிகப்பெரிது. மனத்தைவிடப் புத்தி பெரிது. புத்தியைவிட காலம்பெரிதென்றுசொல்லப்படுகிறது. இவ்வுலகங்களெல்லாம் அந்தவிஷ்ணுவின்உருவமே. அந்தவிஷ்ணுபகவான் காலத்தைக்காட்டிலும் பெரியவர். அந்தத்தேவருக்கு ஆதியில்லை; நடுவுமில்லை; முடிவுமில்லை. ஆதியும்நடுவும்முடிவுமில்லாத காரணத்தால் அவர் அழிவற்றவராயிருக்கிறார். அவர் எல்லாதத்துக்களையும்தாண்டிச்செல்லுகிறார். அதுகமானது முடிவுள்ளதென்றுசொல்லப்படுகிறது. அவர் பரப்ரம்மமென்றும் (அடையத்தகுந்த) ஸ்தானமென்றும் பரமபதமென்றும் கூறப்படுகிறார். (மனிதர்கள்) [3]அந்தப்பரமபதத்தை அடைந்தபின் காலதத்திற்குள்ளாகும்நிலையிலிருந்துவிடுபட்டு மோக்ஷத்தை அடைந்தவர்களுமாகிறார்கள். இத்தமுக்தர்களுள், குணமில்லாதகாரணத்தால் அந்தக்குணங்களைவிட வேறான

---

1 இங்கு அதிகமாடமான அரைஸ்லோகம்விடப்பட்டது.

2 'விஷயங்களிற்செல்லுகிற புத்தியுள்ளவர்கள்' என்பது பழைய உரை.

3 'அவரை அறிந்தபின்' என்பது பழைய உரை.

ப்ரம்மத்தைஅடைந்து குணங்களிலும் ப்ரம்மரூபமாய் ப்ரகாசிக்கிறார் கள். நிவ்ருத்தியென்றுசொல்லப்படும் தர்மமானது முடிவில்லாத மோக்ஷத்திற்குக் காரணமாகிறது. 1ரிக்குக்களும் யஜுஸ்களும் ஸாமங்களும் சரீரங்களை அடைந்தவைகளாகி காலின் நுனிகளில் கடை பெறுகின்றன. அவைகள் முயற்சியால்ஸாதிக்கத்தக்கவைகளும் அழி வுள்ளவைகளுமாயிருக்கின்றன. ப்ரம்மமானது இவ்விதம் சரீரத்தை அடைந்தபொருளாலுண்டாகிறதென்று கருதப்படுகிறதில்லை. அந்த ப்ரம்மமானது முயற்சியாலஸாதிக்கதக்கதன்று. அது ஆதியும்நடு வும்முடிவுமுள்ளதன்று. ரிக்குக்களுக்கும் ஸாமங்களுக்கும் யஜு ஸ்களுக்கும் ஆதியானது கூறப்படுகிறது. ஆதியுள்ளவைகளுக்கு முடிவும்காணப்படுகிறது. ப்ரம்மத்திற்கு ஆதியானது கூறப்படுகிற தில்லை. ஆதியில்லாததாலும்முடிவில்லாததாலும்அந்தப்ரம்மமானது அழிவில்லாததும் விகாரமில்லாததுமாயிருக்கிறது. விகாரமில்லாதிரு ப்பதால துக்கமில்லாததாயிருக்கிறது. துக்கமில்லாதிருப்பதால பர ப்ரம்மரூபத்தில் மானம். அவமானமுதலிய த்வந்த்வங்களில்லை. 2அது ருஷ்டத்தை அடைந்து உபாயமில்லாமல்போவதாலும் 3கர்மங்களைப்

1 'இவற்றின் அத்யயனமுதலியதாமங்கள்' என்பது பழைய உரை.

2 "முயற்சியில்லாமலே மோக்ஷஸாதனமான ஞானம் கிடைக்குமென்று நினைப்பது 'அதருஷ்டதையடைந்து' என்றுசொல்லப்படுகிறது. இதுகாள்கு விதமாகும். முதலில் பரக்ருதிவேறு ஆதமாவேறுஎன்று சாஸத்ரவிசாரத்தால் நிர்ணயம்செய்து ஞானத்தையடைந்து பிறகு த்யானத்தை அபயவியாமலே பிரத யக்ஷமானஞானம் வரவிடுமென்று ஸங்கல்பம்செய்துகொண்டிருப்பது முதலாவதாகும். இது ப்ரக்ருதிவஷ்டியென்றும் அம்பஸ்தம்பம் சொலைப்படுகிறது. பிறகு, இம்மாடிலடியபலனுண்டாவதாயிருந்தால்ஆயாஸமின்றிஅனைவரும் முத்தர்களாகக் கூடும். ஸ்வாஸவிதியும் அபபொருது பயனற்றதாகும். ஆகையால், ஸ்வாஸவி மிருந்தால்போதும்; த்யானம்வேண்டாம் என்றிருப்பது இரண்டாவதாகும். இது உபாதான துவஷ்டியென்றும் ஸலிலமென்றும் சொல்லப்படும். பிறகு, ஸ்வாஸமும் ஒரு காலவிசேஷத்திலமட்டும் மோக்ஷத்திற்கு காரணமாகும். பர பரப்புடன் வீணனவருத்தமடைவதில பயனில்லையென்று ஸமாதானம்செய்து கொண்டு மௌனமாயிருப்பது துன்றுவதாகும். இது காலதுவஷ்டியென்றும் ஓகமென்றும் சொலலப்படும். பிறகு, கர்மமும் முன் பிறவியிலுள்ளபாக்யவசத தால பயனைகொடுக்கத்தக்கதாகும்; ஆகையால், பாக்யம்வேண்டும்; தயானம் எதற்காகஎன்ற நினைப்புடனிருப்பது நானகாவதாகும். இது பாக்யதுவஷ்டி யென்றும் வாஷமென்றும் சொலலப்படும். இவை நான்காலும் மோக்ஷோ பாயத்திற்கு இடையூறுசெய்யும். இவைகளில நான்காவதான பாக்யதுவஷ்டி யானது மூலதத்தில் அதருவஷ்டமென்றுசொலலப்படுகிறது. இதுகொண்டு முழுலி லுள்ளதென்பையும் தெரிந்துகொள்ளவேண்டும்" என்பது பழையஉரை.

3 "கர்மங்களின்பலதறியவிரீத அபிப்ராயமேன்றால உண்மையானவைரா கயமிலலாமல ஜீவனுக்குதவுதாலுண்டாகும்வைராகயமென்றுபொருள். அது ஜ்ஞானோத்பத்திக்கும். அவதறில, பொருளைத்தேடுவதிலதன்பமிருக்கிறதுஎன்று

பற்றியவிபரீதஜ்ஞாபிப்ராயத்தாலும் மனிதர்கள் அந்தப்பரமத்தை அடையக்கூடியவழியைப் பார்க்கிறார்களில்லை. விஷயங்களிலுள்ளபற்றுதலாலும் சர்ஸ்வதமானபதத்தில் ஸங்தேஹத்தாலும் மனத்தால்வேறுபயனைவிரும்பிக்கொண்டிருப்பவன் பரப்பிரம்மத்தை அடைகிறதில்லை. குணங்களில்விருப்பமுள்ள மறறும்சிலஜனங்கள் இதுவுள்ளகுணங்களைப்பார்த்து விரும்புகிறார்கள் குணமில்லாதகாரணத்தால் பரமாத்மாவைவிரும்புகிறதேயில்லை. எந்தமனிதன் (வெளியிலுள்ள) காரணகுணங்களுடன் இருக்கிறானோ அவன் இந்த (உத்தம)குணங்களைவிதமறிவான்? பரமாத்மாவின் அம்சங்களான குணங்களைக்கொண்டு அனுமானத்தாலன்றோ பரமாத்மாவைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஸூக்ஷ்மமானமனத்தால அதை அறிகிறோம். வசனத்தால அதைச் சொல்ல நாங்கள் திறமையுள்ளவர்களலலோம். மனத்தால அறியத்தக்கபொருளானது மனத்தைப்போன்ற பௌதிகமாயிருக்கிறது. காணப்படும்பொருளானது அதைக்காண்கிறதான ஆத்மரூபமாகிறது. ஆத்மஜ்ஞானத்தாலபுத்தியையும் புத்தியால்மனத்தையும் மனத்தால் பொறிகளின்கூட்டத்தையும் சுத்தமாகச்செய்தபின் அழிவற்றபரமாத்மாவையடைகிறான். ஆத்மவிசாரத்தாலுண்டான அறிவால்நிறைந்தவனும் த்யானத்தால வேறுவஸ்துவில்லாதவனும் அவ்விதமேஆசைகள அற்றவனுமாயிருப்பவன் [1]நிர்க்குணஆத்மாவை அடைகிறான். வாயுவானது கட்டைகளின் உள்ளிலிருக்கும்அக்னியை விட்டுவிலகுவதுபோல உலகத்திலஆசைபற்றியிருப்பவர்கள் பரமாத்மாவைவிட்டு விலகுகிறார்கள். மனமானது விஷயங்களே ஆத்மாவில் லயிக்கச்செய்யும்பொழுது [2]புத்தியைவிட மேலானபரமாத்மாவையடைவதற்கும்

தெரிகதுகொண்டு அக்காரணத்தால அதி லுண்டாகும்வெறுப்பானது முதலாவதாகிறது. இதற்குப் பாரமென்றுபெயர். பிறகு, அரசன் திருடர் முதலிய வர்களால் பொருளுக்குநேரும்நாசம் பெரிய துன்பமாயிருக்கிறதென்றுநினைத்து அதிலுண்டாகும்வெறுப்பு இரண்டாவதாகும். இத்தற்கு ஸுகாரமென்று பெயர். மனித ர் புழுப்பூச்சிகளும் பொருளுக்குக்கடைசியானது துன்பமாயிருக்கிறதென்றுநினைத்து அதிலுண்டாகும்வெறுப்பானது மூன்றாவதாகும். இதற்குப் பாராபாரமென்றுபெயர். பொருட்செலவால் உண்டாகும்போகமும் அழிவுள்ளதாயிருக்கிறதென்று நினைத்து அதிலுண்டாகும் வெறுப்பானது நான்காவதாகும். இதற்கு அலுத்தாசமாம்பஸ்என்றுபெயர். பிராணிகளைத்துன்பப்படுத்தாமல அவ்விதமேபோகம்உண்டாகாதாகையால போகத்தில் நிம்மதியென்ற தோஷமிருக்கிறதென்றுநினைத்து அதிலுண்டாகும் வெறுப்பானது ஐந்தாவதாகும். இதற்கு உத்தமாம்பஸ்என்று பெயர். இந்தஐந்துவைராக்கியங்களும் மோக்ஷோபாயத்திற்கு ஸாதோதமாகும். இலைகள் லாக்ஷையைத்தின் என்றும் க்ரந்தத்தில தெளிவாய்க்கூறப்படடிருகின்றன' என்பது பழைய உரை.

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

அந்தவிஷயங்களை ஆத்மாவைவிட வேறுகப்பார்க்கும்பொழுது எப்பொழுதும் புத்திக்குக்கீழான உலகவாழ்க்கையையடைவதற்கும் தகுதியுள்ளதாகிறது. இந்தவிதியைத்தெரிந்துகொண்டு விஷயங்களை ஆத்மாவில லயிக்கச்செய்யதொடங்கியமனிதன் ப்ரம்மரூபத்தை அடைகிறான். புருஷன், இந்த்ரியங்களுக்குப்புலப்படாத உருவமுள்ளவனும் புலப்படாத கர்மங்களுள்ளவனுமாயிருக்கிறான். அவன் முடிவுக்காலத்திலும் இந்த்ரியங்களுக்குப்புலப்படாத நிலைமையை அடைகிறான். இந்தஆத்மாவானது அந்த இந்த்ரியங்களைவளர்ச்சி அடைந்தாலும் வாட்டமடைந்தாலும் காமமல்லாத உருவமுள்ளதாயிருக்கிறது. இந்தஆத்மாவானது எல்லா இந்த்ரியங்களாலும் நன்குஏவப்பட்டதும் சரீரத்தைஅடைந்ததும் ஐந்துபூதங்களையும் ஆதாரமாய்க்கொண்டதுமாயிருக்கிறது; ஆகிலும், அழிவுறாத அந்தப்பரமாத்மாவைவிட்டுவிலகிக் கர்மத்தாலும் தன்ஸாமர்த்தியத்தாலும் செலலத்தக்கதன்று. மனிதன் இந்தபூமியின்முடிவைப்பார்க்கிறதில்லை. ஆகிலும், இந்தப்பூமிக்கு முடிவிருக்கவேண்டும். (இவ்விதமே துக்கபரம்பரைக்கும் முடிவுஇருக்கவேண்டுமென்று) தெரிந்துகொள். இவ்வுலகில்ஆசைபற்றியிருப்பவன் பரமாத்மரூபத்தைபடையமாட்டான். கடலிலுள்ளஉப்புதத்தைக் காற்றுஎது கலைசேரச்செய்வதுபோல(கலகர்மமானது) பரமாத்மாவையடையச்செய்யும். ஸூர்யஜ்ஞானவன் ஒளிகளால்உலகைபிரம்பச்செய்து பிறகு கிரணங்களின்கூட்டங்களைறவனும் குணமில்லாதவனுமாவதுபோல, இந்த ஆத்மாவானது ஞானமுள்ளதானபின் [1]விசேஷங்களிலலாததாய்க் குணமில்லாததும் அழிவில்லாததுமான பரம்மத்தைஉணர்ந்து, முன்அடையப்படாததும் புண்யசாலிகளுக்குரியநிறைந்ததியும் ஒரு காரணத்தாலுமுண்டாகாததும் (மறறவைகளின்) உறபத்திலயங்களுக்குஇருப்பதும் அழிவிலலாததும் ஸநாதனமும் மோக்ஷஸ்வரூபமும் விகாரமில்லாததும் ஸ்திரமானதுமான பரமாத்மாவை அறிந்தவுடன் வேதத்தில ப்ரஸித்திபெறறதும் உத்தமமுமானமோக்ஷத்தைஅடைகிறான்' என்று சொன்னார்" என்றனர்.

---

1 'நிர்விசேஷமாக' என்பதுமூலம். 'அஹங்காரமறறதாய்' என்பது பழையஉரை.

இருநூற்றைந்தாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், யுதிஷ்டிரருக்கு நிபந்தனென்பவர் தமதுதாய்க்கு ஸம்ஸாரத்தை அரண்யமாகச் சொல்லியதையும் நாரதருக்கும் ஸாவித்ரிக்கும் நடந்த ஸம்வாதத்தையும் நாரதர் தவஞ்செய்து ஸ்ரீவிஷ்ணு பகவானைத் தரிசித்ததையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! அறிஞர்களிற்சிறந்தவரே! துக்கத்தாலும்சோகத்தாலும் துன்பமுள்ளஸம்ஸாரசக்ரத்தில் ஜனங்களுக்கு வெறுப்புண்டாகவில்லையே; இது என்னகாரணம்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசர்களிலுத்தமனே! இவ்விஷயத்திலும் நிபந்தனென்ற முனிக்கும் அவர்அன்னையானபோகவதிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதாரணமாகக்காட்டுகிறார்கள். புதரானநிபந்தனென்றமுனியானவர் முயற்சியறறவரும் ஜீவனமிலலாதவரும் வேலையில்பறறில்லாதவரும் காய்ந்தகரம்புநிறைந்த சரீரமுள்ளவருமாகித் துன்பத்துடனிருப்பதைக்கண்டு அப்பொழுது (அவர்) தாயான போகவதியானவள், 'ஏ! மூட! எழுந்திரு. பொருளை அடையத்தக்க வழியிலபறறுதலில்லாதவனும் மித்ரர்களானஜனிதர்களுடன்நேசமிலலாதவனுமாகி ஏன் தூங்கிக்கொண்டிருக்கிறாய்? உனக்குத் தகப்பனால் ஸம்பாதிக்கப்பட்டபொருள் என்னஇருக்கிறது?' என்றுசொன்னள். நிபந்தனர் சொல்லத்தொடங்கினர். 'அன்னையே! எனக்குத தந்தையால ஸம்பாதிக்கப்பட்டது மிகுதியாயிருக்கிறது. இம்மை இவ்வுலகிலுள்ள துக்கங்களெலலாவற்றிற்கும் இருப்பிடமாயிருக்கிறது. அதைத தொலைக்கவேண்டி முயற்சிசெய்யப்போகிறேன். அத்விஷயத்தில் நீ சோகபபடாதே. மிகச்சூரமானஇந்தச்சரீரமானது தந்தையால் அளிக்கப்பட்டது. ஸந்தேதமிலலை. அந்ததந்தகதையையடைதகாரணத்தாலேயே அழிவிலலாதபொருளிருக்கிறது. பெரிய இதஸம்ஸாரத்திலிருகும்ஒருவன் பொருள்விருப்பதுடன் கொடியவலங்குகளால் நிறைந்ததும் செலலதறகரிதுமான பெரியஅரண்யத்திற்குச்சென்றான். அந்தமனிதன் மிக்கபயங்கரமும் மிகப்புசிபபவையுமான ஸிம்மங்களாலும் வேங்கைகளாலும் யானைகளாலும் நான்குபுறத்திலும் சூழப்பட்டஅந்தஅரண்யததைக்கண்டு பயமடைந்தான். அந்தஅரண்யத்திலஸஞ்சரிக்கும்அந்தமனிதன் இங்குமஙகும்ஓடிக்கொண்டு புக

விடத்தைவிரும்பித் திக்குக்களிலெதையும் பார்த்துக்கொண்டிவிரை வாகலடிஞன். பிறகு, அந்தஅரண்யமானது வளர்ச்சியடைந்தும் நான்குபுறத்திலும் வலியாலமரைக்கப்பட்டுமிருப்பதைக் கண்டான். அந்தஅரண்யத்தின்நடுவில் புறகளால்மறைக்கப்பட்டதும் நிறைந்த கொடிகளால்சூழப்பட்டு நான்குபுறத்திலும் நன்முகமறைக்கப்பட் டதுமான ஒருகிணறு இருக்கது. ஜனங்களில்லாதஅந்தவனத்தில் அந்தப்ராம்மணன் அந்தக்கிணற்றில விழுந்தான்; கொடிகளின் கூட டத்தால் சூழப்பட்டஅந்தக்கிணறில்தொத்திக்கொண்டான். அவன் அவ்விடத்தில்அதிகபலமுள்ளஒருமங்கையால் கைகளாலநன்குஆலிங கனம்செய்யப்பட்டுத் தலைகீழும் கால்மேலுமாகத்தொங்கினன். அதே கிணறறில் ஏற மிகக்கடினமானஒருஆலமரம் கீழேஉண்டாயிருந் தது. அந்தக்கிணறறின்கரையில் பலவிதமானதும் கொடிகளாலும் பூக்களாலும்நிறைந்ததும் ஆகாயத்தையளாவியதுமான அந்தமர தையும் (அதில்) மிகப்பெரியஒருகனியையும் கண்டான். பலஉருவங்க ளுள்ளவண்டுகள் அந்தமர தலிருந்தன. அபபொழுது அந்தவண்டு கள்சேர்ந்ததேன்களின்தாரையானது அதிகமாய்ப்பெருகத்தொட ங்கிற்று. தொடங்கிக்கொண்டிருக்கும் அந்தமனிதன் இடைவிடாமல் அந்தத்தாரையைக்குடித்தான். ஐங்கடத்திலிருந்துகொண்டு அதைக் குடிக்கும் அந்தமனிதனுக்கு ஆசையானது ஒழிவடையவில்லை. திரு ம்பவும்திரும்பவும் திருப்தியடையாத அந்தமனிதன் எப்பொழுதும் அந்தத்தாரையையடைய விருப்பமுள்ளவனுயிருந்தான். இவ்விதம் அந்தப்ராம்மணன் அந்தக்கிணறறில மறுபடியும் மிகவும் துக்கத் துடன் வசிதுகொண்டிருக்கிறன். என்னுல அந்ததஅமானது கொடுக்கத்தக்கதாயிருக்கிறது. நீ விரும்புவாயாகில் உனக்குக்கொடு க்கிறேன்' என்றுசொன்னர். பிறகு, அந்தப்ராம்மணர் அந்தப்பொரு ளைப்பறறிப்பார்த்துக்கப்பட்டு அதைக்கொடித்தபின் முக்தியையடைந் தார். அவனும் பொருளைப்பற்றியஐங்கல்பததை விலக்கிவிட்டு உத் தமமானகதியைப்பெறுன். அரசர்களிலுதமனே! இவ்விதம் ஸம் ஸாரமென்றசக்ரதத்தின் ஸ்வரூபத்தையறிந்தவர்கள் பெரியவைராக்கி யத்தையடைந்து உத்தமமானபதத்தை அடைகிறார்கள்" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ஸம்ஸாரமென்னும்சக்ரத்தின்ஸ்வரூபம் இவ்வித மென்று எனக்கு அறியக்கூடவில்லை. அறிவுள்ளவரே! மஹாத்மா வான அந்தப்ராம்மணரால் தகப்பனுலஸம்பாதிக்கப்பட்ட பொருளை ன்று சொல்லப்பட்ட அது எது? அரண்யமென்றுசொல்லப்பட்டது

எது? யானேயென்பது எது? அந்தக்கிணறு எது? பிதாமஹரே! பெரியமரமும் அதிலுள்ளதேனும்என்ன? என்னுடைய இந்தஸந்தேஹத்தை விலக்கவேண்டும். பொருள்என்றபதத்தால் என்னசொல்லப்படுகிறது? அந்தப்ராம்மணரால் பொருளானது எவ்விதமடையப்பட்டது? இந்தக்கதையிலுள்ளஇது என்ன?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "பாரத! இந்தக்கதைமுழுதும் மோக்ஷத்தை அறிந்தவர்களால் உதாஹரிக்கப்பட்டது. (மனிதன்) இந்தக்கதையால் நல்லஅறிவையடைவான். ஸம்ஸாரபந்தமும் நசிக்கும். அரண்யமென்றுசொல்லப்பட்டது எதுவோ அது பெரியஸம்ஸாரம்தான். அதில்நிலையுள்ளவைகளான துஷ்டயானைகள் நோய்களென்றுசொல்லப்படுகின்றன. ரூபத்தையும்மேனியையும்நசிக்கச்செய்கிறவளும்மிக்க பயங்காரமுள்ளவளுமானஸ்திரீயென்பது கிழத்தனமென்று அறிவிற்சிறந்தவர்கள் சொல்லுகிறார்கள். அந்தக்கிழத்தனத்தால் உலகமானது ஆலிங்கனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக்கிணறறிலிருக்கும்பெரிய பாம்பென்பது காலம்தான். மரமென்பது பிருத்யு. அந்தமரத்தின் அந்தக்கனியானது தன்னுல்செய்யப்பட்டகர்மங்களின்பயனுகும். அரசனே! கறுத்தவைகளும்வெளுத்தவைகளுமான எலிகளென்று சொல்லப்பட்டவைகள் இரவுகளும்பகலகளுமாகும். பன்னிரண்டு கால்களுடன்கூடியதும்ஆறுமுகங்களுள்ளஉருவமுள்ளதுமானயானையானது வர்ஷமென்றுசொல்லப்படுகிறது. பக்ஷங்களும்மாஸங்களும் ருதுக்களும் முகங்களாகின்றன. இது ஸம்ஸாரமென்னும் சக்ரத்தின் ஸ்வரூபமென்று என்னுல்சொல்லப்பட்டது. அரசனே! இவ்விதம் அடையப்பட்ட பொருள்போன்ற அந்தஸம்ஸாரஸ்வரூபத்தை நசிக்கும்படிசெய்துகொள். அரசனே! இதை அறிந்தபின் அந்தப்ராம்மணருடைய தாயானவள் பெரியவளாக்கியத்தையடைந்தாள். அந்தப்ராம்மணர்கூறிய விதிப்படி மிகவும்மேலான சிறந்ததத்தையடைந்தார். இந்தமோக்ஷத்தையடையவேண்டியகாரணத்திற்காகப் பொருளைத்தரிக்கவும் தரிக்கும்படிசெய்பவும்செய்தார். ஆகையால், சுத்தமானமோக்ஷத்தை நீ அடையவேண்டும். ஜ்யோதிரூபமானமோக்ஷமானது தவத்தால்அடையத்தக்கது. தேவர்களிற்சிறந்தவரும் தேவகியின்புத்ரருமான ஸ்ரீகிருஷ்ணபகவான் அந்தமோக்ஷரூபியாயிருக்கிறார், பெருமையைக்கொடுப்பவனே! அந்தக்ருஷ்ணபகவானுடைய அனுக்கிரஹத்தால் துக்கமில்லாதவனுவாய். அந்தக்ருஷ்ணபகவான் ஒருவரே உலகங்களுக்குக்கர்த்தாவும் ஞானிகளுக்குஉத்தமகதியுமாயிருக்கிறார். தேவர்களும் தேவர்களுக்குப்பதியான இந்திரனும் ருத்

கர்களும் அவ்விதமேஅஸ்வினீதேவர்களும் போதத்தையும் மோக்ஷத்தையும்அறிந்த (மற்ற) ஜனங்களும் இந்த ஸ்ரீகிருஷ்ணரூபத்தைச் சரணமடைந்து தம்தம்பதத்தைஅடைந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டஇந்தக்கிருஷ்ணபகவான் ப்ராணிகளின் உள்ளிலுள்ள ஆத்மாவும் அழிவில்லாதபதத்தையுடையவருமாயிருக்கிறார்.உனக்குஇவரைப்பற்றியஉண்மையானஅறிவுஉண்டாகும்படி,இந்தப்பகவானுடைய சிறந்த நிலையைக்கேள். ப்ரபுவானஸ்ரீவிஷ்ணுவானவர் முன்காலத்தில் நாரதருக்குத் தம்ஸ்வரூபத்தைக்காண்பித்துத் தாம் எதைச்சொன்னாரோ அதை நீதெரிந்துகொள். தேவரிஷியும் உண்மையுள்ளவரும் ப்ரபுவும் சோபையுள்ளவருமானநாரதரானவர் முன்காலத்தில் தீர்த்தயாத்ரை செய்துகொண்டு பூமிமுழுமையும்ஸஞ்சரித்தார். அவர் இமயமலைச்சாரலையடைந்து பலமுறைவிசாரித்து அவ்விடத்தில் தாமரைமலர்களாலும் நீலோத்பலங்களாலும்நிறைந்துள்ள ஒருகுளத்தைக்கண்டார். அரசனே! அந்தக்குளக்கரையில் எல்லாஆபரணங்களாலும்அலங்கரிக்கப்பட்டவளும் காந்தியால்விளங்குகிறவளும் நீலோத்பலங்களைக் கொண்டுவிளையாடுகிறவளுமான ஒருகன்னிகையைக்கண்டார். அந்தப் பெண்ணானவள் மஹாத்மாவான நாரதரைக்கண்டு, 'ஓ! நாரத!' என்றழைத்தாள். நாரதரானவர் அந்தப்பெண்ணின் ஸமீபஞ்சென்று மனத்தில்வியப்படைந்துநின்றார். அழகானஆடையுள்ளவளும் பெரிய பாக்யம்பெற்றவளுமான அந்தக்கன்னிகையானவள் பார்த்துக்கொண்டிருக்கும் அந்தநாரதரைக்கண்டு புன்னகையுடன் பலதரம்கொட்டாவிவிட்டாள். அந்த முகத்திலிருந்து புருஷஉருவமுள்ளதும் ரத்நப்புள்ளிகளால் நிறைந்த அங்கங்களுள்ளதும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் ஸௌம்யனுக்கொப்பான உருவமுள்ளதும் தலையில் ஒருமணியைத்தாங்கியதுமானஒன்று உண்டாயிறது. திரும்பவும் அதன்உருவத்திற்குச்சமமானவேறொன்றும் பலவிதஆபரணங்களுடன்கூடிய மூன்றுவதும் உண்டாயின. மஹாராஜனே! பலவிதமான ஒலிகளுள்ள அந்தமூன்றும் அந்தக்கன்னிகையை வலஞ் செய்துவிட்டு நின்றன. பிறகு, ப்ரம்மரிஷியான நாரதர் அழகான அந்தக்கன்னிகையைநோக்கி, 'மிக்கமங்களமுள்ளவளே! தாமரைமலருக்கும்சந்த்ரனுக்கும் ஸமமானமுகமுள்ளவளே! ஏ! மஹாதேவி! நீயார்? உன்னை நான் அறியவில்லை. குற்றமில்லாதவளே! உண்மையைச்சொல்' என்று முற்றும் வினவினார். கன்னிகையானவள், 'ஓ! ப்ரம்மரிஷியே! கேள். நான் ஸாவித்ரியென்று பெயருள்ளவள். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் என்னசெய்யவேண்டும்?

உன்மனத்திலிருப்பதுஎதுவோ அதைச்சொல்' என்றுசொன்னாள். நாரதர், 'ஓ! ஸாவித்ரியே! உன்னைநான் நமஸ்கரிக்கிறேன். குற்ற மில்லாதவளே! நான் பயனுள்ளவனானேன். ஓ! தேவி! அழகுள்ள வளே! நீ என்னுடைய இந்தஸந்தேஹத்திற்கு விடையளிக்கவேண் டும். முதலிலுண்டான புருஷஉருவமுள்ள இது என்ன? ஓ! மஹா தேவி! சுட்டிகள் என்ன? தலையில் ஒளி உருவமுள்ளதாயிருந்தது என்ன?' என்று கேட்டார். கன்னிகையானவள், 'முனியே! முதலில் உண்டானது ருக்வேதமும் வேறொன்று யஜுர்வேத மும் மூன்றாவது ஸாமவேதமுமாகின்றன. உனக்கு ஸந்தேஹம்வில கட்டும். யாகத்தின்பயனை அடைந்த வேதங்கள் (பிறந்து) புள்ளிகளு டன் கூடியிருக்கின்றன. பேரொளியாய்க் காணப்பட்டது (பரமாத்ம) ஜ்யோதியென்று அறிஞர்களால் சொல்லப்படுகிறது. ரிஷியே! அது என்னாலும் அறியத்தக்கது' என்றுசொல்லிவிட்டு அந்தர்த்தானத் தையடைந்தாள். புருஷஶ்ரேஷ்டனே! பிறகு, பெரியபுத்தியுள்ள அந்தநாரதரானவர் ஆச்சர்யமடைந்து நெடுநேரம் த்யானத்துடனிருந் தும் அதைஅறியவில்லை. பிறகு, மிக்ககாந்தியுள்ளவரும் புருஷப் புலியுமான அந்தநாரதரானவர் அந்தஆச்சர்யத்தையறியவிரும்பி ஸ்நா னம்செய்து வாக்கையும் இந்திரியங்களையுமடக்கித் துதிசெய்யத்தொ டங்கினர். பிறகு, நூறுவருஷங்கள் நிறைந்தவுடன், உலகங்களைஉண்டு பண்ணுகிறவரும் உலகங்களை உருவமாகக்கொண்டவருமான விஷ் ணுபகவான் ரிஷியினிடமுள்ள மிக்கஅன்பினால் எதிரிலதோன்றினர். அவ்விதம்வந்தவரும் உலகங்களுக்குப் பதியும் எல்லாவற்றின்காரண த்திற்கும்காரணரும் எல்லாத்தேவர்களின்கிரீடங்களிலுமுள்ளஸுவர் ணத்தால் சிவந்த இரண்டு பாதங்களுள்ளவரும் கருடனுடையகால் பட்ட அடையாளத்தால்விளங்கும் முழங்காலுள்ளவரும் பீதாம்பரத் துடன்விளங்கும்பொன்மாலைகட்டிய இடையுள்ளவரும்ஸ்ரீவத்ஸமுள் ளமார்புள்ளவரும் அழகானகௌஸ்துபமணியணிந்த கழுத்துள்ளவ ரும் புன்சிரிப்புள்ளமுககமலமுள்ளவரும் சலிக்கிறகண்டகண்களுள் ளவரும் வில்லைப்போலவளைந்த இருபுருவங்களால்விளங்குகிறவரும் பலவிதமானசிறந்தரத்நங்களாலும் வைரங்களாலும் விளங்கும் மகர குண்டலமுள்ளவரும் இந்திரநீலமணிக்கொப்பான மேனியுள்ளவரும் தோள்வளைகளாலும் கிரீடத்தாலும்விளங்குகிறவரும்இந்த்ரன்முதலிய தேவர்களாலும் ரிஷிக்கூட்டங்களாலும் துதிக்கப்படுகிறவருமான அந்தஸ்ரீஹரியை நாரதரானவர் ஜயசப்தத்துடன் தலையாலவமஸ்கரித் தார். பிறகு, எல்லாப்ராணிகளுக்கும்மாஸுவரும் லக்ஷ்மியுடன்கூடிய

வருமான அந்தவிஷ்ணுபகவான் பூமியில்விழுந்து சுமஸ்கரித்த நார தரைநோக்கி மேகத்தின்த்வனிபோலக் கம்பீரமானவாக்குடன், 'ரிஷி யே! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நல்லநியமமுள்ளவனே! வரத் தைப்பெற்றுக்கொள். உன்மனத்திலிருப்பதை ஸங்தேஹமின்றிக் கொடுக்கிறேன்' என்றுசொன்னர். அந்தநாரதரிஷியும் பரபரப்புடன் சங்கத்தையும் சக்ரத்தையும் கதாயுதத்தையும்தரித்தவரும் ஏற்ருத யத்தில் தோன்றியிருந்தவருமான அந்தப்பகவானைநோக்கி ஜயசப்தத் துடன், 'உலகங்களுக்குப்பதியே! அச்சுதரே! அனுக்ரஹிக்கவேண்டும். நான்சொல்லவிரும்பியது உம்மால்அறியப்பட்டதுதான். ஓ! ஏற்ருஷீகேசரே! ஆகையால், அனுக்ரஹிக்கவேண்டும். ஹரியே! நான் அதைக்கேட்க விரும்புகிறேன்' என்றுசொன்னர். பிறகு, மஹாவிஷ்ணுவானவர் புன்னகையுடன் நாரதரைநோக்கி, 'வேதங்க களின் தலேயில் உன்னல் காணப்பட்ட அந்தஉருவமுள்ள என்னை த்வ ந்த்வங்களிலிருந்துவிலகியவர்களும் அஹங்காரமற்றவர்களும் பரிசுத் தர்களும் பரிசுத்தமான த்ருஷ்டியுள்ளவர்களுமான யோகிகள் எப் பொழுதும் பார்க்கிறார்கள். இவ்விஷயத்தில எதைவிரும்புகிறயோ அதை அவர்களிடம் கேள். ஓ! தேவரிஷியே! எந்தயோகிகள் ப்ராஜ்ஞர்களிற்சிறந்தவர்களோ, எவர்கள் என்னுடைய அவதாரங்க ளென்றுநிச்சயிக்கப்பட்டவர்களோ அவர்களுடைய அனுக்ரஹத்தை என்னுடைய அனுக்ரகமென்று தெரிந்துகொள்' என்றுசொன்னர். உலகங்களைப்படைப்பவரான அந்தவிஷ்ணுபகவான் இவ்விதம்சொல் லிவிட்டுச் சென்றார். ஆகையால், இந்நியங்களுக்கு ராஜரும் தேவ கியின்புதரருமானஸ்ரீவாஸுதேவரைச்சரணமடை. மஹரிஷிகள் இந் தக்கோவிந்தரை ஆராதித்து மூக்திபெறறிருக்கிறார்கள். இவர் (உல கங்களைப்) படைப்பவரும் ஸம்ஹரிப்பவரும் எல்லாவற்றின்காரணத் திற்கும் காரணருமாயிருக்கிறார். அரசனே! என்னலும் இது நாரத ரிடமிருந்தே கேட்கப்பட்டது; அதை நீ தெரிந்துகொள்; பூஜ்ய ரான நாரதமுனிவர் தாமாகவே சொன்னர். எல்லாவிதமானஸம்ஸார துக்கத்தையும் விலக்கக்காரணமான விஷ்ணுபகவானே வேறுஇடத் தில் மனத்தைச்செலுத்தாமல எவர்கள் ஆராதிக்கிறார்களோ அவர் கள் அடைவதற்கு மிகவும் அரிதான ஸாயுஜ்யத்தை அடைகிறார்க ளென்று எப்பொழுதும் (பெரியோர்கள்) உள்ளத்திலிருப்பதை ஒரி வாய்க்கூறுகிறார்கள்." என்றுசொன்னர்.

இருநூற்றுமூன்றாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(பீஷ்மர், விஷ்ணு உலகங்களைப்படைத்தல்முறையையும் நாரதரால்சொல்லப்பட்ட விஷ்ணுவின் அவதாரமுதலிய பெருமையையும் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பேரறிவுடையவர்களில்பெரியவரே! பரதர்களில்மிகச்சிறந்தவரே! தாமரைமலர்போன்றகண்களுள்ளவரும் அழிவில்லாதவரும் கர்த்தரும் உதபத்தியில்லாதவரும் எங்கும் நிறைந்தவரும் ப்ராணிகளின் உத்பத்திலயங்களுக்குக்காரணரும் இந்த்ரியங்களுக்கு ஈஸ்வரரும் கோவிந்தரும் வெல்லப்படாதவரும் நாராயணருமான ஸ்ரீகேசவரைப்பற்றி உண்மையாய்க்கேட்கவிரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இந்தவிஷயமானது ஜமதக்னியின்குமாரரானராமரும் தேவரிஷியானநாரதரும் வ்யாஸரும் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது கேட்கப்பட்டது. அப்பா! அவிதரும் தேவலரும் பெரியதவமுள்ள வால்மீகியும் மார்க்கண்டேயரும் ஸ்ரீகோவிந்தரிடத்தில [1]பெரிய ஆச்சர்யத்தைச் சொல்லுகிறார்கள். அரசனே! ஸ்ரீகேசவருடையகுணங்களைஎன்னால்வர்ணிக்கக்கூடியவையல்ல. இந்த்ரியங்களுக்குஈஸ்வரரும் பரத்திலும்பெரியருமான ஸ்ரீவாஸுதேவர் இவ்வுத்தமனாவர். [2]ரிஷிகளில் மிகச்சிறந்தவனே! ஸ்ரீகேசவர் [2]பகவானென்றும் [3]ஈஸ்வரரென்றும் [4]ப்ரபுவென்றும் புருஷரென்றும் ஸர்வரென்றும் [5]விபுவென்றும்பல விதமாகவேதத்தில் கேட்கிறோம். மஹாபாஹுவே! யுதிஷ்டிர! ஆனாலும், உலகத்திலுள்ளபெரும்மனிதர்கள், மஹாத்மாவும் சார்ங்கமென்னும்வில்லுள்ளவருமான ஸ்ரீவாஸுதேவரிடத்தில் எந்தக்குணங்களைச் சொல்லுகிறார்களோ அவைகளைக்கேள். மனிதர்களுக்குஇந்திரனே! புராணங்களே அறிந்தஜனங்கள் ஸ்ரீகோவிந்தரிடத்தில் எந்தக் குணங்களைச் சொல்லுகிறார்களோ அவைகளெல்லாவற்றையுங் கேட்டு நான்சொல்லுகிறேன். ப்ராணிகளுக்குஆத்மாவும் மஹாத்

---

1 'ஆச்சர்யமானமாஹாத்ம்யத்தை' என்பது பழைய-ுரை.

2 'கிரகத்தஸ்ரஸ்ரயமும் ஞானமும் யஸஸும் ஸ்ரீயும் வைராகயமும் தாமமுமுள்ளவர்' என்பது பழையவுரை.

3 'அந்தர்யாமி' என்பது பழைய-ுரை.

4 'அரசன்போல வெளியிலிருந்துரகூஷிப்பவர்' என்பது பழையவுரை.

5 'வ்யாபகர்' என்பது பழையவுரை.

மாவுமான புருஷோத்தமரானவர் ஆகாயம் வாயு ஜ்யோதிஸ் ஜலம் பூமிஎன்றமஹாபூதங்களைப்படைத்தார். எல்லாப்பிராணிகளுக்கும்மஸ் வரரும் ப்ரபவும் மஹாத்மாவுமான அந்தப்புருஷோத்தமரானவர் பூமி யைப்படைத்தபின் ஜலத்திலேயே சயனம்பண்ணிக்கொண்டிருந்தார். எல்லாத் தேஜஸுகளின்உருவமுமுள்ளவரும் சுபமான அந்த ஜல மென்றசயனத்தில் சயனித்திருப்பவருமான அந்தப்புருஷோத்தமர் எல்லாப்பிராணிகளுக்கும் முதலிலுண்டானவரும் எல்லாப்பிராணி களுக்கும் இருப்பிடமுமானஸங்கர்ஷணரை மனத்தால் [1]சிந்தித் தாரென்றுகேள்விப்பகிறோம். அவர் நிகழும்உலகங்களையும் சென்ற தும் வரப்போகிறதுமான இரண்டையும்தரிக்கிறார்; அந்தஸங்கர்ஷண ரைப் படைததபின் எல்லாத்தேஜஸுகளையும் விளங்கச்செய்கிறவ ரான ப்ரதயும்னரைப் படைத்தார். பிறகு, எல்லாச்சக்தியுமுள்ளவ ரும் பெரியகாந்தியுள்ளவருமான அநிருத்தர் உண்டானார். ஆகாயத்தை அடைந்தவரும் ஜலத்தில் யோகநித்ரைசெய்பவருமான ப்ரபுவரோ அவரிடமிருந்து மிகப்பெரியதேஜஸுள்ளவர்களும் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம்என்றகார்யங்களுள்ளவர்களுமான ப்ரம்மாவிஷ்ணுமஹே ஸ்வரர்என்ற அந்த மூன்றுதேவர்களும் உண்டானார்கள்.

பிறகு, மஹாத்மாவும் மஹாபாஹுவுமான அந்தஸங்கர்ஷ ணர்உண்டானவுடன், நாபியில்ஸூர்யனுக்கொப்பான ஒருதிவ்யமான பத்மம் உண்டாயிறது. அப்பா! அந்தத்தாமரைமலரில் எல்லாப்பிராணி களுக்கும்பிதாமஹரும் பூஜ்யருமான அந்தப்ரம்மதேவர் திக்குக்களை விளங்கச்செய்துகொண்டு உண்டானர். மஹாபாஹுவும் மஹாத் மாவுமான அந்தப்ரமமதேவர்உண்டானபிறகு, தமோகுணத்திலி ருந்து முதலிலுண்டான மதுவென்னும் பெரியஅஸுரனுண்டா னான். க்ரூரனும் க்ரூரமானசெய்கையுள்ளவனும் க்ரூரமானபுத்தியை அடைந்தவனுமான அந்தஅஸுரனைஸ்ரீபுருஷோத்தமரானவர் ப்ரம்ம தேவருக்குப் பெருமையைச்செய்வதற்காகக் கொன்றார். அப்பா! மதுவென்னும் அந்த அஸுரனைக்கொன்ற காரணத்தால தேவர்கள் அஸுராகளுமனிதர்களுனைவர்களும், பக்தர்களுனைவர்களையும் பாது காக்கும் பகவானை மதுஸூதனரென்று கருதுகிறார்கள். பிறகு, ப்ரம்மதேவரானவர், மரீசி அத்ரி அங்கிரஸ் புலஸ்தியர் புலஹர் க்ரது தக்ஷர் என்ற ஏழு [2]மானஸபுத்ரர்களைப் படைத்தார். அப்பா! அவர் களில முதலிலுண்டானமரீசியானவர் மனத்திலிருந்துண்டானவரும்

1 'ஸருஷ்டிதத்தா' என்பது வேறுபாடம்.

2 மனத்தால்படைக்கப்பட்டவர்கள்.

தோஜோரூபியும் சிறந்தப்ரம்மஜ்ஞானியும் முதலிலுண்டானவரு மான கஶ்யபரென்னும்புத்ரரை உண்டுபண்ணினர். ப்ரம்மதேவரான வர் மரீசிக்கும் முதலிலுண்டானஒருவரைத் தம்பெருவிரலிலிருந்து படைத்தார். பரதர்களில்மிகச்சிறந்தவனே ! அவர் தக்ஷரென்றுப்ர ஸித்திபெற்ற ஸ்ருஷ்டிகர்த்தராயிருந்தார். பாரத! அந்தத்தக்ஷப்ரஜா பதிக்கு முதலில் பதின்மூன்றுகன்னிகைகளுண்டானர்கள். திதி யென்பவள் அந்தக்கன்னிகைகளுள் மூத்தவள். அப்பா ! எல் லாத்தர்மங்களின் விசேஷங்களையும் அறிந்தவரும் டரிசுத்தமான கீர்த்தியுள்ளவரும் பெரியபுகழுள்ளவரும் மரீசியின்புத்ரருமான கஶ்யபரானவர் அந்தக்கன்னிகைகளனைவருக்கும் பதியாயிருந்தார். பெரியபாக்யம்பெற்றவரும் தர்மங்களை அறிந்தவருமான தக்ஷப்ரஜா பதியே அந்தக்கன்னிகைகளுக்குத் தந்தைகளான பத்துப்பெண் களையும்உண்டுபண்ணித் தர்மதேவதையின்பொருட்டுஅளித்தார். ஓ ! பாரத! தர்மத்திற்கு, வஸுக்களும் அளவற்றதேஜஸுள்ளருதரர் களும் விஶ்வேதேவர்களும் ஸாத்யர்களும் மருதவான்களுமானபுத்ரர் கள் உண்டானர்கள். அந்தப்பத்துப்பெண்களைத்தவிர அவர்களுக் குத் தங்கையர் வேறுஇருபத்தேழுபெண்கள் பிறந்தார்கள். பெரிய பாக்யம்பெற்றசோமன் அப்பெண்களனைவருக்கும் பதியானான். [1]மற் றப்பெண்கள் கந்தர்வர்களையும் குதிரைகளையும் ப்ராம்மணர்களையும் பசுக்களையும் கிம்புருஷர்களையும் மத்ஸ்யங்களையும் கொடிசெடிகளை யும் மரங்களையும் உண்டுபண்ணினர்கள். அதிதியானவள் தேவர்க ளில்மிகச்சிறந்தவர்களும் பெரியபலமுள்ளவர்களுமான ஆதித்யர் களை உண்டுபண்ணினள். கோவிந்தரானவிஷ்ணுவானவர் வாமனவ தாரம்செய்து அவர்களுக்குத்தலைவருமானர். அவருடையப்ராக்ரமத் தால் தேவர்களுக்குள்ள ஸம்பத்தானது மிகச்செழிப்படைந்தது. தனுவின்குமாரர்களும் திதியின்குமார்களுமான அஸுரஸந்ததி களும் தோல்விஅடைந்தன. தனுவானவள் விப்ரசித்திமுதலிய அஸுரர்களை உண்டுபண்ணினள். திதியோ பெரியபலமுள்ளஎல்லா அஸுரர்களையும் உண்டுபண்ணினள். பிறகு, விஷ்ணுபகவானவர் உலகங்களுக்குப்பயத்தைஉண்டுபண்ணுகிறவனும் எல்லாப்பிரா ணிகளையும் அபஹரிக்கிறவனுமான ம்ருத்யுவைப்படைத்தார். மது ஸூதனரானவர் பகலையும் இரவையும் ருதுவுக்குத்தக்ககாலத்தை யும் முற்பகலையும் பிற்பகலையும் யாவற்றையுமே படைத்தார். அந்தப் பகவானனவர் [2]ஜலங்களையடைந்து மேகங்களையும் அவ்விதமே ஸ்தா

1 கஶ்யபரின்பத்நிகள். 2 'ஆலோசித்து' என்பதுபாடம்.

வரங்களையும் ஐங்கமங்களையும் உண்டுபண்ணினர். அவர் ! அதிகதேஜ ஸுடன்கூடிய [1]பூமிமுழுமையையும் படைத்தார். யுதிஷ்டிர ! பிறகு, பெரியபாக்கியம்பெற்றவரும் பிரபுவமான ஸ்ரீவாஸுதேவரே திரும்பவும் மிகச்சிறந்த [2]நூறுப்ராம்மணர்களைத் தம்முகத்திலிருந்தே படைத்தார். பரதர்களிற்சிறந்தவனே ! ஸ்ரீகேசவர் கைகளிலிருந்து நூறு க்ஷத்ரியர்களையும் தொடைகளிலிருந்து நூறுவைஸ்யர்களையும் பாதங்களிலிருந்து நூறுசூத்ரர்களையும் படைத்தார். இவ்விதம் பெரிய தவமுள்ள அந்தப்பகவான் நான்குவர்ணங்களையும் உண்டுபண்ணியபின் தாம் வேதவித்தைகளைவெளியிடத்தக்கவரும் அளவற்றகாந்தியுள்ளவரும் எல்லாப்ராணிகளையும்படைப்பவரும் அதிபதியுமானப்ரம்மதேவரைப் படைத்தார். அந்தப்பகவான் பூதங்களுக்கும் [3]ஸப்தமாதாக்களுக்கும் ப்ரமதகணங்களுக்கும்அதிபதியான ருத்ரரையும் படைத்தார்; பாபிகளைச்சிக்ஷிப்பவரும் பித்ருக்களுக்குப்பதியும் ஸமமாயிருப்பவருமான தர்மராஜரையும் படைத்தார். எல்லாப்ராணிகளுக்கும்ஆத்மாவான பகவானுனைவர் நிதிகளுக்குப்பதியானகுபேரனையும் படைத்தார்; ஜலங்களுக்குராசனும் ஜலத்திலுள்ளப்ராணிகளுக்குப்பதியுமானவருணனையும் படைத்தார். ப்ரபுவானவர் எல்லாத்தேவர்களுக்கும்பதியானஇந்த்ரனையும் படைத்தார். மனிதர்களுக்கு எவ்வளவுஎவ்வளவுகாலம் சரீரத்தைத்தரிக்கவேண்டுமென்றஆவலிருந்ததோ அவ்வளவுஅவ்வளவுகாலம் அவர்கள் ஜீவித்திருந்தார்கள். யமன்செய்யும்பயம்உண்டாகவில்லை. பரதர்களிற்சிறந்தவனே ! இவர்களுக்கு ஆண்பெண்களுக்குரிய சேர்க்கையென்னும் தர்மமானது இல்லை. ஸங்கல்பத்தாலேயே இவர்களுக்குக் கர்ப்பமுண்டாயிற்று. பிறகு, த்ரேதாயுககாலத்தில் தொடிவதால ப்ரஜைஉண்டாயிற்று. அரசனே ! அக்காலத்திலுள்ளவர்களுக்கும் ஆண்பெண்களுக்குரியசேர்க்கையென்னும்தர்மமானது இருக்கவில்லை. அரசனே ! ஆண்பெண்களின் சேர்க்கையென்னுந்தர்மமானது ப்ரஜைகளுக்கு த்வாபரயுகத்திலுண்டாயிற்று. அரசனே! அப்படியே கலியுகத்திலுள்ள ஜனங்கள் த்வந்த்வதர்மத்தைஅடைந்தார்கள். அப்பா ! இவ்விதம் உலகங்களைப்படைத்ததிந்தவிஷ்ணுவானவர் ப்ராணிகளுக்குப்பதியென்றும் அவற்றை நன்கு காப்பவரென்றும் சொல்லப்படுகிறார். கௌந்தேய!

---

1 'ப்ருதிவீம்' என்பது மூலம் : 'பூமியிலுள்ளஎல்லாப்பிராணிகளையும்' என்பது பழையஉரை.

2 'சதம்' என்பது மூலம்; 'அனந்தமான' என்பது பழையஉரை.

3 ப்ராம்மீமுதலியஎழுவர்.


1 நரகத்தைஎதிர்பார்ப்பவர்களேயும் சொல்லுகிறேன். அதைக்கேள். உனக்குக் கப்பங்கட்டுகிறவர்களும் தென்தேசத்திற்பிறந்தவர்களுமான ஆந்த்ரர்கள், புளிந்தர்கள், சபரர்கள், சூசுபர்கள், மத்ரகர்கள், அனைவரும் அவ்விதமாகிறார்கள். காம்போஜர்கள், காந்தாரர்கள், கிராதர்கள், பர்ப்பரர்களென்னும் வடதேசத்தில் பிறந்தவர்களேயும் சொல்லுகிறேன். அப்பா! அரசனே! இவர்கள் பாபத்தைச்செய்கிறவர்களும் கொக்கு கழுகு சண்டாளன் இவர்களுக்குச்சமமான தர்மமுள்ளவர்களுமாகி இப்பூமியில் ஸஞ்சரிக்கிறார்கள். அப்பா! இவர்கள் க்ருத யுகத்தில் இப்பூமியில்ஸஞ்சரிக்கிறவர்களல்லர். பரதர்களிற் சிறந்த வனே! த்ரேதாயுகமுதல் அந்தஜனங்கள் வ்ருத்தி அடைகிறார்கள். பிறகு, யுகத்தின்முடிவிலுண்டானதும் மிக்கபயங்கரமுமான அவ்வித ஸந்த்யாகாலம்கேர்ந்தவுடன், (அஸுரர்கள்) ஒருவரையொருவர் அடுத்து அரசர்களானார்கள். தேவரான அந்தப்பகவானே அஸுரர்களைக்கொல்லுவதற்காக இந்த்ரஉருவத்தைஎடுத்துக்கொண்டு பூமியில் சஞ்சரித்தார். பூமியானது (யுத்தமென்னும்யாகத்திற்கு) வேதியென்னும்நிலையைஅடைந்தது. இவ்விதமிருக்கும்பொழுதே பூமியை ரக்ஷிக்கவேண்டி முறையே நரவிம்மமுதலிய ஸ்ரீவிஷ்ணுவின் அவதாரங்கள் உண்டாயினவென்றுகூறப்படுகின்றன. புருஷோத்தமரான ஸ்ரீவிஷ்ணுவானவர் பூமியிலுள்ளதுக்கதைவிலக்குவதற்காக, ப்ரம்மா இந்த்ரன்முதலியவர்களால்துதிக்கப்பட்டு, அந்தஅந்தக்கார்யங்களுக்குத்தக்கஅவதாரதத்தைச்செய்துஹிரண்யகசிபுவென்றஅஸுரனையும் அவ்விதமே ஹிரண்யாக்ஷனென்றஅஸுரனையும் பெரியஅஸுரனுராவணனையும்கொன்றுவிட்டு இதோ மஹாயோகியானஸ்ரீகிருஷ்ணனுயிருக்கிறார். மஹாராஜனே! பெரியதேஜஸ்ஸுள்ளவரும் ஜனங்களால் விரும்பப்படுகிறவரும் கம்பீரபுத்தியுள்ளவருமான ஸ்ரீஹரியானவர் தம்முடையஅங்கத்திலிருந்து வெளுத்ததும் கறுத்ததுமான இரண்டுமயிர்களை எடுத்துவிடுத்தார். உலகத்தைஉருவமாகக்கொண்டவரும் உத்தமருமான இந்தஸ்ரீவிஷ்ணுவானவர் இவ்வுலகில் வஸுதேவருக்குத் தேவகியிடத்திலிறந்து சரீரமுள்ளவராகி உனக்கு ஸம்பந்தியாயிருக்கிறார். ஓ! புருஷப்புலியே! யோகிகளுக்குஈச்வரரும் மனத்துக்கெட்டாதவரும் சிந்திக்கமுடியாதவருமான ஜகத்பதியானவர் அவிர்ப்பவிதத்திருக்கிறார். இவர் ஸாதாரணமனிதரேயல்லர். அவ்யக்தமுதல் விசேஷம்வரையிலுள்ளதும் பலஅளவும் பொருளுமுள்

1 இங்கு மூலத்தில் 'நிரயே ஸ்தாஃ' என்றிருக்கிறது; பழையவுரையில் 'நிரயேக்ஷ்யாஃ' என்றிருக்கிறது; அந்தப்பாடமே கொள்ளப்பட்டது

ளதுமான இவ்வுலகமெல்லாம் ஸ்ரீஹரியினுடையதேயே. இதை நாசமுள்ளதென்றே தெரிந்துகொள்ளவேண்டும். அழிவில்லாத தும் நித்யமுமான ஸ்ரீஹரியின் அந்தஉருவம் வேறுஇருக்கிறது. வெவ்வேறுனஉருவமானது உலகத்தைப்பற்றியதாகும். ஒப்பற்ற தான அந்தஉருவத்தைத் தெரிந்துகொள். மோக்ஷமானது உன்னால் ஜயிக்கப்பட்டதாகும். அந்த ருவம்தான் தசார்ஹகுலத்திலுதித்த வரும் லக்ஷ்மியுடன்கூடியவரும் ஸ்ரீவத்ஸமென்னும்அடையாளமுள் ளவருமான்ஸ்ரீகிருஷ்ணனுகிறது இந்தப்பரமாத்மாவினுடையதேஹ மானது பூதங்களின்உற்பத்தியால்உண்டானஉருவமுள்ளதன்று. இவ் விடத்தில் தேஹமுள்ளவராயிருக்கிற இந்தவிஷ்ணுபசவான் மாயா மயமான ஹரியாகிறார். உன்னுடையபரலோகத்தை ரக்ஷித்துக்கொ ள்ளவேண்டி ஸனாதனமானநித்யரூபதை த்யானம்பண்ணு. எவர் கள் பக்தியில்லாதவர்களோ அவர்களா நான்குவேதங்களாலும் அவை களின்அங்கங்களாலும் மீமாம்ஸையாலும் ந்யாயசாஸ்த்ரத்தாலும் இதிஹாஸங்களாலும் புராணங்களாலும் மனுமுதலியதர்மசாஸ்த்ரங் களாலும் இவரைப்பற்றிக்கூறும்எல்லாவேதாந்தங்களாலும் எவ்விதத் திலும் நித்யரானஇந்தப்பரமாத்மாவை அடையமாட்டார்கள். ப்ரா ணிகளின்ஆத்மரூபியானபகவான் எல்லாப்ராணிகளிடங்களிலும் அவ் வவற்றின்புத்தியை அடைந்திருக்கிறார். ஆகையால், அறிவுள்ள நீ எப்பொழுதும் சோம்பலில்லாதவனுகி இந்தப்பரமாத்மாவையே த்யா னம்பண்ணு. குருக்களில்நிகச்சிறந்தவனே ! பரமாத்மாவின் இந்த அவதாரமானது இவ்விதமானது. எல்லாஉலகங்களையும்கண்ட தேவ ரிஷியான நாரதரானவர் இவ்விதம்சொன்னார். அரசனே ! பிறகு, நாரதரானவர் ஸ்ரீக்ருஷ்ணனுடைய சிறந்தகான சாம்ப்வதத்தன்மை யை உள்ளபடிஅறிந்தார். மஹாபாஹுவே ! பாரதச்ரேஷ்டனே ! இவ்விதம் இந்தவாஸுதேவர் மஹாபாக்யமும் ஸத்யபராக்ரம முள்ளவரும் சிக்ரிக்கத்தகாதவரும் தாமரைமலரைப்போன்ற கண்களுள் ளவருமான ஸ்ரீகேசவராகிறார். இவர் மேலவும் மானிடரல்லர். இவர் இவ்விதமானபுருஷராயிருக்கிறார். இவ்வுலகமுழுவதும் யார் அறி யதக்கவன்? அரசனே ! உனக்கு இதனைச் சொல்லேன். திரும்ப வும் எதைக்கேட்கவிரும்புகிறாய்?" என்று வினவினார்.

இருநூற்றேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)



(பீஷ்மர், மரீசிமுதலிய ஸ்ருஷ்டிகர்த்தர்களையும் ஒவ்வொரு திக்கிலுமுள்ள ரிஷிகளையும் கூறியது.)

யுதிஷ்டிரர், "பரதர்ச்ரேஷ்டரே! எவர்கள் மூன்று ப்ரஜைகளுக்குப்பதிகளாக இருந்தார்கள்? திக்குகள் ஒவ்வொன்றிலும் பெரிய பாக்யம்பெற்ற எந்தரிஷிகள் இருந்தார்கள்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"பரதர்களில்மிகச்சிறந்தவனே! 'எவர்கள் ப்ரஜைகளுக்குப்பதிகள்? எந்தரிஷிகள் திக்குகளிற்கூறப்படுகிறார்கள்?' என்று நீ என்னிடம்வினவியதைக்கேள். தாமாகஉண்டானவரும் பூஜ்யரும் ஸநாதனருமானப்ரம்மாஒருவர் ஆதியிலுள்ளவர். ஸ்வயம்புவான அந்தப்ரம்மதேவருக்கு மரீசி அத்ரி அங்கிரஸ் புலஸ்த்யர் புலஹர் க்ரது பெரியபாக்கியம் பெற்ற வஸிஷ்டர்என்ற மஹாத்மாக்களும் அந்தப்ரம்மாவுக்கு ஒப்பானவர்களுமான ஏழுபுத்ரர்கள் உண்டானார்கள். இவர்கள், ஏழுப்ரம்மாக்களென்று புராணத்தில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்குமேல் ப்ரஜாபதிகளைவர்களையுமே சொல்லுகிறேன். அத்ரிவம்சத்திலுதித்தவரும் ப்ரம்மதேவரைச்காரணமாகக்கொண்டவரும் ஸநாதனரும் பூஜ்யருமான ப்ராசீனபர்ஹி என்பவர் இருந்தார். ப்ரசேதஸனின்புத்ரரான அவரிடமிருந்து பத்துப்பெயர்கள் உண்டானார்கள். அந்தப்பத்துப்பெயர்களுள் தக்ஷனென்று ப்ரஸித்தரான ஸ்ருஷ்டிகர்த்தரும் ஒருபுதரர். அவருக்கு உலகத்தில் 'தக்ஷர்' என்றும், 'க' என்றும் இரண்டுபெயர்களுண்டு. மரீசியின்புத்ரர்கச்யபர். அவருக்கு இரண்டுபெயர்கள் கூறப்படுகின்றன. சிலர் அரிஷ்டநேமியென்றும் மற்றுஞ்சிலர் கச்யபரென்றும் கூறுகின்றார்கள். காந்தியுள்ளவனும் வீர்யமுள்ளவனும் ராஜாவுமானஸோமன் அதரியின் ஔரஸபுத்ரன். அவன் தேவர்களுக்குரியயுகங்களில் ஆயிரம்யுகங்கள் விளங்கிக்கொண்டிருப்பான். பரதரே! பூஜ்யனான அர்யமாவும் இந்த அத்ரியின்புதரர்களான மற்றவர்களும் உலகங்களைப் படைப்பவரகளென்றும் கட்டளையிடுகிறவர்களென்றும் சொல்லப்படுகிறார்கள். உறுதியுள்ளவனே! சசபிந்துவுக்குப் பதினாயிரம்பார்யைகளுண்டு. அப்பொழுது ஒவ்வொருபார்யையிடத்திலும் நூறுநூறு புத்ரர்கள் உண்டானார்கள். இவ்விதம் மஹாத்மாவான அந்தச்சசபிந்து

வுக்கு [1]நூறுலக்ஷம்புத்ரர்களிருந்தார்கள். அவர்கள் வேறுஒருவரையும் ப்ரஜைகளுக்குப்பதியாகவிரும்பவில்லை. முன்னேர்களான ப்ராம்மணர்கள், ப்ரஜைகள் சசபிந்துவிடமிருந்து உண்டாயினவென்று சொல்லுகிறார்கள். அது வ்ருஷ்ணியின்குலத்துக்குக்காரணமானதும் பெரியதுமானப்ரஜாபதியின் குலமாகும். கீர்த்திபெற்றஸ்ருஷ்டிகர்த்தர்கள் இவ்விதம் கூறப்பட்டார்கள். பெரியயோகியும் பெரியமனமுள்ளவரும் ஆத்மரூபத்தைஅறிந்தவருமான சசபிந்துவென்னும் ராஜரிஷியானவர் பதினாயிரம்பார்யைகளின் நடுவிலிருந்துகொண்டிருந்தார். யோகியானஅவர் ஸமாதியை அடைந்து பிறகு ஸாயுஜ்யத்தைப் பெற்றார். இதற்குமேல் மூன்றுலகங்களுக்கும் ப்ரபுவர்களானதேவர்களைச்சொல்லுகிறேன். பகன் அம்சன் அர்யமா மித்ரன் வருணன் ஸவிதா தாதா பெரியபலமுள்ள விவஸ்வான் த்வஷ்டா பூஷா இந்த்ரன் விஷ்ணுஎன்ற இந்தப்பன்னிரண்டு ஆதித்யர்களும் கஸ்யபரின்புத்ரர்களாகிறார்கள். ஸத்யமென்னும் தஸ்ரனென்னும் அஸ்வினீதேவர்கள் இரண்டுபேர்கள். இவர்கள் எட்டாவதுப்ரஜாபதியான மார்த்தாண்டரின்புத்ரர்கள். த்வஷ்டாவின்புத்ரனும் பெரியயசஸ்ஸுள்ளவனும் காந்தியுள்ளவனுமான விஸ்வரூபன் அஜைகபாத் அஹிர்ப்புத்ன்யன் விரூபாக்ஷன் ரைவதன் ஹரன் பஹுரூபன் தேவர்களுக்கு ராஜனான த்ரியம்பகன் ஸாவித்ரன் ஜயந்தன் தோல்வியடையாதபினாகி என்றஇந்தப்பதினொருவரும் மூன்றுலகங்களுக்கும் ராசர்களான ருத்ரர்களென்று சொல்லப்படுகிறார்கள. பெரியபாக்யம்பெற்ற எட்டு வஸுக்களும் முன்னமே சொலலப்பட்டிருக்கிறார்கள். இவ்விதமான இந்தத்தேவர்கள் மனுப்ரஜாபதியிடமிருந்து உண்டானவர்கள்தாம். அவர்கள் தேவர்களென்றும் பிதருக்களென்றும் இரண்டு வகையுள்ளவர்களாக முன்பு கூறப்பட்டிருக்கிறார்கள். [2]தேவர்களின்கூட்டமானது தனித்தனியாக ரிபுக்களென்றும் மருத்துக்களென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் இந்த விஸ்வேதேவர்களும் அப்படியே அஸ்வினீதேவர்களும் சொல்லப்படுகிறார்கள். அந்தத் தேவர்களுள் ஆதித்யர்கள் க்ஷத்ரியர்களென்றும் அவ்வாறே மருத்துக்கள் வைஸ்யர்களென்றும் உக்ரமானதவத்திலிருக்கும் அஸ்வினீதேவர்கள் சூத்ரர்களென்றும் கூறப்படுகிறார்கள் அங்கிரஸ்என்னும் தேவர்கள் ப்ராம்மணர்களென்று கூறப்படுகிறார்களென்பது நிச்சயம். இவ்விதம் எல்லாதேவர்களுக்குமுள்ள இந்தநான்குவர்ணங்களும் சொல்லப்பட்டன. இந்தத்தேவர்களைக் காலையில எழுந்திருந்து

1 'சதஸஹஸ்ரா ணிதூ' என்பதுமூலம். 2இங்கு அரைபாலோகம் விடப்பட்டது.

ஸ்தோத்ரம்செயபவன் தன்னிடம் உண்டானதும் [1]பிறரால்செய்யப் பட்டதுமான எல்லாப்பாவத்திலிருந்தும் விடுபடுகிறான்.

அப்பா ! யவக்ரீதர் ரைப்யர் அர்வாவஸு பராவஸு உசிக்கினு டைய புத்ரரான கக்ஷீவான் ஆங்கிரஸரானபலர் பர்ஹிஷத்தென்னும் மேதாதிதியின்புத்ரரான கண்வமுனிஎன்று மூன்றுஉலகங்களையும் படைக்கத்தக்க இந்தஏழுரிஷிகளும் கிழக்குத்திக்கிலிருக்கிறார்கள். உன்முசர் விமுசர் வீர்யமுள்ள ஸ்வஸ்த்யாத்ரேயர் ப்ரமுசர் இம்ம வாஹர் பூஜ்யரானத்ருடவ்ரதர் மித்ராவருணர்களின்புத்ரரும் ப்ரதாப முள்ளவருமான அகஸ்த்யர்ஆகிய இந்தப்ரம்மரிஷிகள்எப்பொழுதும் தென்திக்கிலிருக்கிறார்கள். உஷங்கு தௌம்யரானகவஷர் வீர்யமுள்ள பரிவ்யாதர் ஏகதர் த்விதர் த்ரிதர் அத்ரியின் புத்ரரும் கல்வியுள்ள ப்ரபுவுமானதுர்வாஸர் இந்தமஹாத்மாக்களான மஹரிஷிகள் மேற் குத்திக்கை அடைந்திருக்கிறார்கள். அத்ரி வஸிஷ்டர் மஹரிஷியான காஸ்யபர் கௌதமர் பரத்வாஜர் குசிககுலத்திலுண்டான விஸ்வா மித்ரர் மஹாத்மாவான ரிசீகரின்புத்ரரும் பூஜ்யருமானஜமதக்நி இந்த ஏழுரிஷிகளும் வடக்குதிக்கை அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு திக்கிலுமிருப்பவர்களும் தீக்ஷணமானதேஜஸுள்ளவர்களும் உலகங் களைப்படைப்பவர்களும் மஹாத்மாக்களும் ஸாக்ஷீபூதர்களுமான இவர்களனைவர்களும் சொல்லப்பட்டார்கள். இவ்விதம் மஹாத்மாக் களான இந்தரிஷிகள் தனித்தனியே திக்குக்களிலிருக்கிறார்கள். இவர் களைக் கீர்த்தனம்செய்பவன் எல்லாப்பாவத்திலிருந்தும் விடுபடு கிறான். எந்தஎந்தத்திக்குகளில இவர்களிருக்கிறார்களோ அந்த அந்தத்திக்கைச் சரணமடைந்தவன், எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான் ; அவ்விதமே க்ஷேமமுள்ளவனுமாகிறான்" என்று சொன்னார்.

---

1 'பிறனுடையசோர்க்கையாலுண்டானது' என்பது பழையஉரை.

[1]இருநூற்றெட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், யுதிஷ்டிரருக்கு ஸ்ரீவிஷ்ணுபகவானுடைய வராஹாவதாரத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ப்ராஜ்ஞர்களில்பெரியவரே! யுத்தத்தில உண்மையானபராக்ரமமுள்ளவரே! அழிவில்லாதவரும் ஸர்வரூமான ஸ்ரீவாஸுதேவரைப்பற்றிய மிகப்பெரிதானபராக்ரமத்தையும் அவர் முன்செய்தசெய்கையையும் முழுதும்கேட்க் விரும்புகிறேன். புருஷர்களிற்சிறந்தவரே! அவையனைத்தையும் உள்ளபடி நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். பெரியபலமுள்ளவரே! ப்ரபு வானவாஸுதேவர் எந்தக்கார்யத்தைஉத்தேசித்து விலங்குகளின் ஜன்மத்தைஅடைந்து எவ்விதம் உருவத்தைத் தரிதிருந்தார்? அதைச்சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"முன்காலத்தில வேட்டைக்குச்சென்றநான் மார்க்கண்டேய ருடையஆச்ரமத்திலிருந்தேன்; அவவிடதத்தில் ஆயிரக்கணக்காக உட்கார்ந்திருக்கும்ரிஷிக்கூட்டங்களைக் கண்டேன். பிறகு, அந்தரிஷிகள் எனக்கு மதுபர்க்கத்துடன் மர்யாதை செய்தார்கள். நான் அந்த மர்யாதையைப் பெற்றுக்கொண்டு ரிஷிகளைச் சந்தோஷிக்கச்செய்தேன். அவ்விடததில கச்யபரென்றமஹரிஷியால இந்தக்கதைசொல்லப்பட்டது. மனததிறகு மிகுந்தசந்தோஷத்தை உண்டுபண்ணத்தக்க சிறந்தஅந்தக்கதையை இப்பொழுது ஒரேமனத்துடன்கேள். முன்காலத்தில் தானவர்களுள் முக்யர்களும் கோபலோபங்களுள்ளவர்களும் பலத்தாலகொழுததவர்களுமான நரகன்முதலிய நூற்றுக்கணக்கான பெரிய அஸுரர்களும் அவ்விதமே யுத்தத்தில் மிகக் கொழுப்புள்ள மற்றுமுள்ளபலஅஸுரர்களும் தேவர்களுடைய மிக உத்தமமான அந்தலம்பததில பொறுமையுள்ளவர்களாயிருந்தார்கள். அப்பொழுது மிகவும்பயங்கரர்களான நரகன்முதலிய அஸுரர்கள் தேவர்களைஅடக்கவேண்டிஹிரண்யாக்ஷனையடைந்து பெரியமுயறசி

1 இத்தஅத்யாயத்திறகு அதாபபூமிவிகீர்தனமென்றுபெயர். 'ப்ராணிகளின்உள்ளததில் உலாவிகொண்டிருகும் காமமுதலியவைகளை விலக்கத்தகஉபாயத்தை உபதேசிகும்காரணததால இப்பெயரஉதது' என்பது பழையஉரை. 'உலததிலுள்ளேசென்ற பூமியைஎடுகவேண்டிச செயத வராஹாவதாரமென்னும் லீலையைக கூறுவதால் இப்பெயர வநதென்று பொருள்கொள்ளலாம்.

யைசெயதார்கள்., அப்பொழுது மிகவும்பயங்கரனனஹிரண்யாக்ஷ னனவன் லக்ஷம்வர்ஷங்கள் காற்றைப் புஜித்துக்கொண்டிருந்தான். பிறகு, ப்ரம்மதேவரிடமிருந்து சிந்திக்கத்தகாதனவும் ஒப்பற்றனவு மான வரங்களை நாற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பெற் ரூன். அரசனே! பிறகு, தானவர்களால் பிடிக்கப்படுகிறவர்களும் ஆங்காங்குதுன்பப்படுகிறவர்களுமான தேவர்களும் அப்படியே தேவ ரிஷிகளும் ஸுகத்தையடையவில்லை. அந்தத்தேவர்கள் பூமியானது பயங்கரமான உருவமுள்ளவர்களும் பெரியபலமுள்ளவர்களுமான அஸுரர்களால் நிறைந்ததும் மிகத்துன்பமுள்ளதும் பாரத்தால்பீடிக் கப்படுவதும் ஸந்தோஷமில்லாததும் துக்கமுள்ளதும் கடலில் மிக வும் முழுகுவதுமாயிருப்பதைக்கண்டார்கள். அப்பொழுது பூமி தேவியானவள் யாவற்றையுமெடுத்துக்கொண்டு பாதாளத்தில் வஹித் துக்கொண்டிருந்தாள். பிறகு, மூன்றுலகங்களும், எங்கும்பயிர்க் கூட்டங்களும் வேதாத்யயனமும் யாகமுமில்லாதவையாயின. பிறகு, தேவர்கள் மிகவும்பயந்து ப்ரம்மதேவரைநோக்கி, 'ப்ரம்மாவே! அஸுரர்களால் செய்யப்படும் துன்பத்தை நாங்கள் எப்படிப் பொறுப் போம்? பகவானே! இந்தப்பூமியானது ஹிரண்யாக்ஷனால் பிடிக்கப் பட்டது. ஜலமிருத்தலால் செல்லத்தகாத அவ்விடத்தில்செல்வதற்கு நாங்கள் திறமையுள்ளவர்களாயில்லை' என்ற இவ்வசனத்தைச்சொன் னார்கள். பூஜ்யரானப்ரம்மதேவரானவர் அந்தத்தேவர்களை நோக்கி, 'பெரியதேஜஸுள்ள இந்தஅகஸ்த்யரானவர் அந்தஜலத்தைத் வேக மாகக்குடிப்பார். அந்தரிஷியையே க்ருபையுள்ளவராய்ச் செய்து கொள்ளவேண்டும்' என்றுசொன்னார். அந்தத்தேவர்களும் அவ் விதமேசெய்கிறோமென்றுசொல்லிவிட்டு ஸந்தோஷத்துடன் அகஸ் த்யமுனிவரைநோக்கி, 'ப்ரம்மரிஷியே! உலகங்களை நீர் ரக்ஷிக்கவேண் டும். இந்தஜலத்தை நசிக்குமம்படிசெய்யும்' என்றுசொன்னார்கள். பூஜ்யரானஅந்த அகஸ்த்யமுனிவர், 'அவ்விதமே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு, ப்ரளயகாலத்திலுள்ள அக்னிக்குஒப்பானகாந்தியுடன் மேகக்கூட்டத்தைத்யானம்செய்துகொண்டு க்ஷணத்தில் அந்தஜலத் தைக் குடித்தார். கடலானது வற்றும்படிசெய்யப்பட்டவுடன் ரிஷி ஸ்ரேஷ்டர்களுடன்கூடியதேவர்கள்,ப்ரம்மதேவரைநமஸ்கரித்து,'ப்ர புவே! அகஸ்த்யமுனிவரால் ஜலமானது சோஷிக்கும்படி செய்யப் பட்டது. திரும்பவும் நாங்கள் என்னசெய்யவேண்டுமென்பதைச் சொல்லவேண்டும்' என்றுகேட்டார்கள். ப்ரம்மதேவரானவர் அந்தத் தேவர்களை நோக்கி, 'இந்தவிஷயத்தில் என்னால் ஒருயுக்தி உண்டு

பண்ணப்பட்டிருக்கிறது. வரமும் பலமும் மதமும்நிறைந்தவர்களும் மிகவும்மூடர்களுமான அந்தஅஸுரர்கள், இந்த்ரியங்களுக்குப்புலப் படாதவரும் தேவர்களாலும் எதிர்க்கத்தகாதவரும் தேவருமான வராஹரூபமுள்ள ஸ்ரீவிஷ்ணுபகவானை அறிகிறார்களில்லை. இந்தப் பகவானுனவர் எவ்விடத்தில் சூரர்களும் அதமர்களுமான அந்த அஸுரர்கள் பூமியின்உள்ளிலிருந்துகொண்டு ஆயிரக்கணக்காக வவி க்கிறார்களோ அவ்விடத்திற்கு வேகமாய்ச்சென்று (அவர்களைக்) கொல்லப்போகிறார்' என்றுகூறினர். அதைக்கேட்டுத் தேவஸ்ரேஷ் டர்கள் ஸந்தோஷித்தார்கள்.

பிறகு, பெரியதேஜஸுள்ள ஸ்ரீவிஷ்ணுவானவர் வராஹரூப த்தையடைந்து பூமிக்குள்புகுந்து அஸுரர்களை எதிர்த்துச்சென்றார். மனிதவடிவமல்லாத உருவத்தைக்கண்டவுடன், அஸுரர்களனைவரும் வேகமாய்ச்சேர்ந்துகொண்டு அலக்ஷ்யம்செய்து [1] காலத்தால் மோஹ மடைந்து நின்றார்கள். பிறகு, அந்தஅஸுரர்கள் அருகில்ஓடி வரா ஹத்தை ஸமமாய்ப்பிடித்தார்கள்; மிக்ககோபத்துடன் அந்தவரா ஹத்தை நான்குபுறத்திலும் பிடித்துஇழுத்தார்கள். ப்ரபுவே! அப் பொழுது பெரியசரீரமுள்ளவர்களும் பெரியவீர்யத்தாலும் பலத்தா லும்உயர்ந்தவர்களுமான அந்தஅஸுரஸ்ரேஷ்டர்கள் அந்தவராஹத் திற்கு ஒன்றையும்செய்யத் திறமையுள்ளவர்களாகவில்லை. பிறகு, அந்த அஸுரத்தலைவர்கள் வியப்பையும் அப்படியே பயத்தையும் அடைந்தார்கள். ஆயிரக்கணக்கான அவர்கள் தம்மை ஸந்தேஹ நிலையைஅடைந்ததாகவும் நினைத்தார்கள். பரதர்களில்மிகச்சிறந்த வனே! பிறகு, தேவர்களுக்கு மேலானதேவரும் யோகருபியும் யோக த்தைநடத்தும்மஹாத்தியுமானஅந்தப்பகவான் [2]தைத்யர்களையும் [3]தான வர்களையும் கலங்கச்செய்து அப்பொழுது யோகத்தையடைந்து பெரியகூச்சலையுண்டுபண்ணினார். அந்தஒலியால் எல்லாஉலகங்களும் பத்துதிக்குகளும் மிக்கஒலியுள்ளனவாயின. அந்தப்பெரியகூச்ச லின் ஒலியால உலகங்களுக்குக் கலக்கமுண்டாயிறறு, எல்லாதிக் குக்களும்இந்த்ரன்முதலியதேவர்களும் மிகுந்தஸ்ரமமடைந்தார்கள். ஸ்தாவரமும் ஜங்கமமுமான உலகமானது அந்தஒலியால் அப் பொழுது மூர்ச்சையடைந்து சிறிதும்அசைவில்லாததாயிருந்தது. பிறகு, அந்தஅஸுரர்கள் அனைவர்களும் அந்தஒலியால் பயமடைந்

1 ஒருசொல் விடப்பட்டது.

2 திதியின்குமாரர்களான அஸுரர்கள்.

3 தனுவின்குமாரர்களான அஸுரர்கள்.

தவர்களும் ஸ்ரீவிஷ்ணுவின்தேஜஸால் மிகவும்மூர்ச்சையடைந்தவர் களும் உயிர்போனவர்களுமாகவே விழுந்தார்கள். பயந்தேதவர் களைப்பரித்துப் பிதாமஹரான ப்ரம்மதேவர், 'ஓ! தேவஸ்ரேஷ்டர் களே! பயமடையாதீர்கள். யோகேஸ்வரரான அந்தப்பகவானுனவர் வராஹரூபத்தையடைந்து கூச்சலிட்டுக்கொண்டு இங்குவருகிறார்' என்றுசொன்னர். இவ்விதம்சொல்லிவிட்டுப் பிறகு பிதாமஹரான ப்ரம்மதேவரும் தேவர்களும் ரிஷிகளும் முக்தியையடையவேண்டி ஸ்ரீவிஷ்ணுவை நமஸ்கரித்தார்கள். பிறகு, பெரியதேஜஸுள்ள வரும் வராஹரூபியுமான ஸ்ரீஹரியானவர் ப்ரம்மதேவரை ஸந்தோ ஷப்படுத்திவிட்டுப் பாதாளம்சென்று, தேவர்களுக்குவிரோதிகளான அஸுரர்களுடைய மாம்ஸங்களையும் மேதஸுகளையும் எலும்புக்கூட் டங்களையும் குளம்புகளால்பிளந்தார். பெரியயோகியும் உலகங்களைப் படைக்கிறவரும் உலகங்களுக்குஆதமாவுமான ஸ்ரீபத்மநாபரானவர் பெரிய அத்தச்சப்தத்தால் 1ஸுதனென்றுகூறப்பட்டார். பிறகு, தேவர்களெல்லாரும் பிதாமஹரிடம் ஓடினர். அவரிடம்போய் உல கங்களுக்குப்பரியும் மஹாத்மாவுமான ப்ரம்மதேவரைநோக்கி, 'தேவ தே! இத்தச்சப்தம் எவ்விதம் உண்டாயிற்று? ப்ரபுவே! இதை நாங்கள் அறியவில்லை. இது என்ன? இத்தச்சப்தமானது யாருடை யது? இத்தச்சப்தத்தால் உலகமானது திடுமாறிநிற்கிறதே? அத னுடையதேஜஸால் தேவர்களும் அஸுரர்களும் மூர்ச்சையடைந் திருக்கிறார்களே?' என்றுகேட்டார்கள். ஓ! மஹாபாஹுவே! இவ் விதமிருக்கும்பொழுது வராஹரூபத்தையடைந்தஸ்ரீவிஷ்ணுவானவர் மஹர்ஷிக்களால் துதிக்கப்பட்டுக் கிளம்பினர். மிக்கதைர்யசாலிக ளான ஹிரண்யாக்ஷனுக்கும் ஸ்ரீவிஷ்ணுவுக்கும் எல்லாவுலகங்களும் மிகவும்கலங்கக்காரணமும் சிறந்ததுமான யுத்தம்உண்டாயிற்று. பூமி யின்உள்ளிலிருக்கும் ஹிரண்யாக்ஷனை ஸ்ரீஹரியானவர் கொன்றார். அதைக்கேட்டுப் பெரியதேஜஸுள்ள ப்ரம்மதேவரானவர் (தேவர் களைநோக்கி) இனிமையாகச் சொல்லத்தொடங்கினர்.

'அஸுரபதிகளைக்கொன்றுவிட்டுப் பெரியசரீரமுள்ளவரும் பெ ரியபலமுள்ளவரும் யோகிகளில்பெரியவரும் உலகங்களுக்கு ஆத்மா வும் உலகங்களைப்படைப்பவரும் எல்லாவுலகங்களுக்கும்ஈஸ்வரரும் யோகியும் முனியும் ஆத்மாவுக்குஆத்மாவுமான தேவரானவர் இதோ இருக்கிறார். ஸ்திரமாயிருங்கள். எல்லாஇடையூறுகளையும் விலக்

1 இங்கு, ஸுதஃ: என்பது, 'ஸுததஃ என்று ஆயிற்று' என்பது பழைய வரை.

கத்தக்கவரும் அளவற்றகாந்தியுள்ளவருமான ஸ்ரீவாஸுதேவர் மிகச் சிறந்ததும் பிறரால்செய்யமுடியாததுமான இக்கார்யத்தைச்செய்து விட்டு இதோ இருக்கிறார். பெரியபாக்யம்பெற்றவரும் -பெரிய காந்தியுள்ளவரும் பெரியயோகியும் புராணரும் புருஷர்களில்உத்த மருமான ஸ்ரீபத்மநாபரானவர் தம்உருவத்தையடைந்திருக்கிறார். தேவஸ்ரேஷ்டர்கள் தாபப்படவேண்டாம்; பயப்படவேண்டாம்; சோகப்படவேண்டாம். இந்தப்பகவானுனவர், விதியும் பெருமை யுள்ளவரும் (உலகங்களுக்கு) நாசத்தைச்செய்யத்தக்க காலமுமாகி ரூர். உலகங்களீனத்தரிக்கிறவரும் மஹாத்மாவுமான அந்தத்தேவ ரால் ஒருநாதம் விடப்பட்டது: மஹாபாஹுவான அத்தகைய இந் தப்பகவான் எல்லாவுலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவரும் அழி வில்லாதவரும் தாமரைமலர்போன்றகண்களுள்ளவரும் எல்லாப்ரா ணிகளுக்கும் முதன்மையானவரும் ஈஸ்வரருமாகிறார்' என்றுசொன் னர்" என்றார்.

இருநூற்றுஎன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் வாஸுதேவரின்பெருமையைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! பிராஜ்ஞர்களில் பெரியவரே! திரு ம்பவுமே மஹாத்மாவான கேசவருடைய மஹிமையை உண்மையாய் நீர் சொல்லவேண்டும். பாரதரே! இந்தஸ்ரீவாஸுதேவரை இவ்விதம் பார்த்தும் கேட்டும் நான் த்ருப்தியடையவில்லை. மஹாபாஹுவே! ஆகையால், எனக்கு இதை நீர் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்குனர்.

"அரசனே! பாவங்களைவிலக்குவதான ஸ்ரீவாஸுதேவருடைய இந்தக்கதையைக்கேள். முன்காலத்தில் நாரதர் எனக்குச் சொல் லியகதையை நான்உனக்குச் சொல்லுகிறேன். தேவரிஷியான நாரத ரானவர் முன்காலத்தில் ஸ்ரீஹரியினுடையதத்வத்தை அறியவேண்டு மென்று சிந்தித்துக்கொண்டு சுபமும் திவ்யமுமான இமயமலையில் மூச்சுவிடாமலும் ஆஹாரமில்லாமலும் நன்முகமனத்தையடக்கிக் கொண்டும் இந்திரியங்களைவென்றும் நூறுதேவவர்ஷம் ஸஞ்தனமான ப்ரம்மத்தை த்யானம்பண்ணிக்கொண்டிருந்தார். பிறகு, முனிஸ்ரே ஷ்டரானஅந்தநாரதரைப்பற்றி ஆகாயத்தில் மேகத்தின்ஒலிபோலக்

கம்பீரமானதும் திவ்யமானதும் வெளியிலுள்ளதும், 'முனிஸ்ரேஷ்டர்களிலுத்தமனே! நீ எதற்காக த்யானத்தைஅடைந்துகொண்டிருக்கிறாய்? நான் உனக்கு ஞானத்தையோ தர்மமுதலியவற்றையோ அளிக்கிறேன். நீ என்னிடம் வேண்டிக்கொள்' என்றதுமான அசரீரிவாக்கானது உண்டாயிற்று. அதைக்கேட்டு அவர் ஆலோசித்துப் பரபரப்புள்ளமனமுள்ளவராகி, 'இது ஏதாயிருக்கலாம்?' என்று சிந்தித்து வேறான அந்தப்புருஷரைக்குறித்து, 'நீ யார்? நீ நடிவிலிருந்துகொண்டு என்னைப்பறறி வார்த்தைசொலலி அண்டத்தை பிளக்கிறாய். வேறுஉருவம் உனக்குக்காணப்படவில்லை. நீ இவ்விதமாயிருந்துகொண்டிருக்கிறாய்' என்றுசொன்னர். அந்தப்புருஷரான வர், திரும்பவும் அந்த நாரதமுனியைநோக்கி, 'நான், மிகப்பெரியவஞான அனந்தன். மூடர்கள் என்னைஅறியமாட்டார்கள். ஞானிகள் மட்டில் என்னை அறிவார்கள்' என்றுசொன்னர். ஸ்ரீமானனாரத முனிவர் நமஸ்கரித்து வணக்கத்துடன் அந்தப்புருஷரைநோக்கி, 'நான் உம்மைத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். உம்முடையஉண்மையை எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுசொன்னர் அந்த நாரதருடைய அந்தவசனத்தைக்கேட்டபின் உலகபதியானவர் நாரதரைநோக்கி, 'ஞானத்தால என்னைத்தெரிந்துகொள். வேறுவிதமாகத் தெரிந்துகொள்ள உனக்குச் சக்திகிடையாது' என்றுசொன்னர். நாரதர், 'ஓ! அனந்தரே! உமமுடையஉருவத்தைத் தெரிந்துகொள்ளத்தக்க அந்தஞானம் எவ்விதமானது? நீர் என்னிடம் அனுக்ரஹமுள்ளவராஞல் அதனை எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுகேட்டார். உலகபதியானவர், 'ஓ! முனியே! அந்தஉருவத்தைப்பற்றிய ஞானமானது வேற்றுமையில்லாததும் பெரியதும் [1]மங்களகரமும் சிறந்ததுமானது. அந்தஞானத்தைக்கொண்டு நீ உனக்குவேண்டிய ஸாதனததைத் தெரிந்துகொள். அந்தஞானமானது இவ்வுலகில் மறைந்துகொண்டிருக்கிறது. அது சுத்தமானது. மற்றது பொய். முனிகளில்மிகச்சிறந்தவனே! சுருக்கமாய் இதுமுழுதும் உனக்குச் சொல்லப்பட்டது' என்றுசொன்னர். நாரதரானவர், 'லோககுருவே! உம்முடையஉண்மை எதுவோ அதை நீர் எனக்கு உபதேசிக்க வேண்டும். அழிவில்லாதவரே! உம்மைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நீர் அவ்விதமாயிருக்கிறீர்?' என்றுகேட்டார். பிறகு, சலனப்பிராணிகளுக்குமாசரான பகவானவர் சிரித்துக்கொண்டு மேகத்தின்ஒலியைப்போலக் கம்பீரமானவாக்கால், 'ஓ! முனியே! என

[1] ஒருசொல விடப்பட்டது.

க்கு வாயுமில்லை; செவியுமில்லை; நாவுமில்லை; மூக்குமில்லை; கண்ணுமில்லை; த்வக்குமில்லை; அவ்விதமிருக்குஞ்போழுது சரீரமில்லாதநான் என்னைப்பற்றி எவ்விதம்சொல்லுவேன்?' என்றுசொன்னார். அதைத்தெரிந்துகொண்டு 'ஆச்சர்யமடைந்த நாரதமுனியானவர் அந்தஉலகபதியை நமஸ்கரித்து, 'முதலில நீர் உம்மைப்பற்றி, 'நான் அனந்தன்; மிகப்பெரியவன்; நான் பலவிதமாயிருப்பவன்' என்று ப்ரீதியுடன் எனக்குச்சொன்னது எப்படி?' என்றுகேட்டார். பகவானுனவர் திரும்பவும் அந்தரிஷியைநோக்கி, 'ஓ! நாரத! உனக்கும்இந்திரியங்கள் இருக்கின்றன. நீ உன்ஆத்மாவைத் தெரிந்துகொள்ளத்திறமையுள்ளவனுனல் இதை எனக்குச் சொல்லு. முனியே! உன்னுடையஆதமா உனக்கு அறியப்பட்டதாகுமானால் அதனால் என்னையும் நீ அறிவாய். நம்மிருவர்களுக்கும்ஸாதனமொன்றே' என்றுசொன்னார். இவ்விதம் சொல்லிவிட்டுத் தேவரானபகவான் பிறகு ஒன்றும்சொல்லாமலிருந்தார்.

அந்தநாரதமுனியும், 'இந்தப்ரபுவானவர் எங்கேபோனார்?'என்று நெடுநேரம் ஆச்சர்யமுள்ளவரும் வருத்தமுள்ளவரும் மிக்கமயக்கமடைந்தமனமுள்ளவருமானார். 'தேவரானபகவான், 'நான் அனந்தன்; மிகப்பெரியவன்' என்று என்னை நோக்கிச்சொன்னார். ஆகையால், எல்லாவற்றிலும் எது அனந்தமும் மிகப்பெரிதுமாயிருக்கிறதென்று நான் அறியவேண்டும். இந்தப்பூமியானவள் யார்? இவள் அனந்தையென்ற பெயருள்ளவளாயிருக்கிறாள். இந்தப்பூமியில் ப்ராணிகள்உண்டாகின்றனவும் லயிக்கின்றனவுமாயிருக்கின்றன. ஆகையால், அந்தப்பூமியானவள் நிச்சயமாய்ப் பெரியவள்தான். ஆகையால், இந்தப்பூமிதேவியைக் கேட்கிறேன். இந்தப்பூமியானவள் நிச்சயமாய் எனக்குச் சொல்லுவாள்' என்று நிச்சயஞ்செய்தார். ஸ்ரீமானுன அந்தநாரதமுனிவர் இவ்விதம் தமக்குள்நிச்சயம்செய்துகொண்டு பூதலத்தில ப்ரவேசித்துப பூமியை நமஸ்கரித்து, 'ஓ! பூமிதேவியே! நீ ஆச்சர்யமாயிருக்கிறாய்; பாக்யமுள்ளவளுமாயிருக்கிறாய். நீ பெரியவள். அழகுள்ளவளே! நீ எவ்விதமிருக்கிறாயோ அவ்விதமானஉன்னை இப்பொழுது நான் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்று சொன்னார். அதைக்கேட்டுப் பூமிதேவியானவள், சிரித்துக்கொண்டு, 'ஓ! பராக்கிரமசாலியே! நான் பெரியவளுமலலவேன். மிகப்பூஜ்யமே! அனந்தையுமல்லவேன். எனக்குக்காரணமான கந்தஸ்வரூபத்தைத்தானே' என்றுசொன்னாள். பிறகு, நாரதமுனிவர் அந்தக்கந்தமென்னும்தத்வத்தை நமஸ்கரித்து இதைக்

கேட்டார். அதி, 'எனக்கும்காரணமானஜலமானது என்னேயும்விட மிகப்பெரிது' என்றுசொல்லிற்று. அந்தநாரதமுனிவர் ஸமுத்ரத்தினிடம்சென்று நமஸ்கரித்து, 'அழிவில்லாதஸமுத்ரமே! நீ ஆச்சர்யமாயிருக்கிறாய். நீ பாக்யமுள்ளவனும் மிகப்பெரியவனும் அனந்தனுமாயிருக்கிறாய். நீ எவ்விதமான உருவமுள்ளவன்? உன்னே நான் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன்' என்றுசொன்னார். நதிகளின்நாதனானஸமுத்ரமானதுஇவ்வசனத்தைக்கேட்டு நாரதமுனியை நோக்கி, 'எனக்குக்காரணமான ரஸஸ்வரூபமானது மிகவும் பெரிதென்று தெரிந்துகொள்ளும். வித்வானே! முனிவர்களில மிகவும் பூஜ்யரே! ஆகையால், நீர மிகப்பெரிதான அந்தரஸஸ்வரூபத்தைக் கேளும்' என்றுசொல்லிற்று. பிறகு, முனிவர் யோகசக்திக்குத் தக்கபடி அந்தஜலத்தின் காரணத்தைத் தெரிந்துகொண்டு ஜலத்தின் தத்வத்திலிருந்து ஜலரூபியானரஸத்தை நமஸ்கரித்து, 'அழிவில்லாத ரஸமே! நீ ஆச்சர்யமயாயும் பாக்யமுள்ளதாயும் இருக்கிறாய். நீ மிகப்பெரிதும் அனந்தமுமாயிருக்கிறாய். நீ எவ்விதஉருவமுள்ளதென்று உன்னைக்கேட்க விரும்புகிறேன்' என்றுசொன்னார். பிறகு, ரஸஸ்வரூபமுள்ள அந்ததத்வமானது முனிவரைநோக்கி, 'ப்ராம்மணரே! எனக்கும் காரணமும் தேஜோரூபியுமான அக்னியைக் கேளும். மிகப்பூஜ்யரே! நான் மிகப்பெரியமல்லேன்; அனந்தமுமல்லேன்' என்று பலதாஞ்சொல்லிறது. பிறகு, வியப்புறமனமுள்ளமுனியானவர் யஜ்ஞரூபியும் பூஜிக்கதக்கஸ்தானமும் எல்லாப்ராணிகளாலும் நமஸ்கரிக்கப்பட்டவருமான அக்னியை நமஸ்கரித்து, 'அழிவிலலாதவரே! நீர் ஆச்சர்யரும் பாக்யம்பெற்ற வருமாயிருக்கிறீர். நீர் அனந்தரும் மிகப்பெரியவருமாயிருக்கிறீர். நீர் எவ்விதஉருவமுள்ளவரென்று உம்மைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றுகேட்டார். பிறகு, அக்னிபகவானுனவர் சிரித்துக்கொண்டு முனிவரைநோக்கி, 'பராம்மணரே! நான் மிகப்பெரியவனுமல்லேன். மிகச்சிறந்தவரே! அனந்தனுமலலேன். முனிகளிற் சிறந்தவரே! என்க்குக் காரணமானரூபம்எதுவோ அதைகேளும்' என்றுசொன்னர். பிறகு, பேசுகிறவர்களிற்சிறந்தவரான அந்நாரதரானவர், யோகமுறைபடியே அறியபபட்ட அந்தரூபதத்வில ப்ரவேசித்து ரூபாதமாவைகமஸ்கரித்து, 'அழிவில்லாதரூபாமாவே! நீ ஆச்சர்யமானவனும் பாக்யம்பெறறவனுமாயிருக்கிறாய். நீ அனந்தனும் மிகப்பெரியவனுமாயிருக்கிறாய். நீ எவ்விதஉருவமுள்ளவனென்று உன்னைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்; என்றுகேட்ட

னர். ரூபாத்மாவானது சிரித்துக்கொண்டு அந்தமுனிவரைநோக்கி, 'ப்ராம்மணரே! வாயுவானது எனக்குக்காரணமாயிருக்கிறது. முனிகளிற்சிறந்தவரே! அதைக் கேளும். அந்தவாயுவானது என்னைவிடமிகப்பெரிதும் அனந்தமும் அதிகபலமுள்ளதும் சக்தியுள்ளதுமாயிருக்கிறது' என்று விடைஅளித்தது. முனிகளில்மிகச்சிறந்தவரும் யோகஸித்திபெற்றவரும் பெரியயோகியும் ஞானம் விசேஷஞானம்இவைகளின்கரையையடைந்தவரும் பூஜ்யருமான அந்தநாரதரானவர் வாயுவைநமஸ்கரித்து, 'அழிவில்லாதவாயுவே! நீ ஆச்சர்யமாயும் பாக்யம்பெற்றவனுமிருக்கிறாய். நீ அனந்தனும் மிகப்பெரியவனுமாயிருக்கிறாய். நீ எவ்வித உருவமுள்ளவனென்று உன்னைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றுகேட்டனர். பிறகு, வாயுவானது முனிகளிற்சிறந்தநாரதரைநோக்கி, 'பூஜ்யரே! இப்பொழுது எனக்குக்காரணமான ஸ்பர்சாத்மாவைக் கேளும். அது என்னைவிடமிகப்பெரிதும் அனந்தமும் சக்தியுள்ளதுமாயிருக்கிறது' என்றுசொல்லிற்று. பிறகு, இந்த வாயுவின்வசனத்தைக்கேட்டு அந்தநாரதரானவர் ஸ்பர்சாத்மாவைநோக்கி, 'அழிவில்லாத ஸ்பர்சாத்மாவே! நீ ஆச்சர்யமுள்ளவனும் பாக்யம்பெறறவனுமாயிருக்கிறாய். நீ அனந்தனும் மிகப்பெரியவனுமாயிருக்கிறாய். நீ எவ்வித உருவமுள்ளவனென்று உன்னைதெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று கேட்டனர். அந்த நாரதருடைய வசனத்தைக்கேட்டு ஸ்பர்சாத்மாவானது முனிவரைநோக்கி, 'ப்ரம்மணரே! நான் மிகப்பெரியவனுமல்லேன். மிகச்சிறந்தவரே! அனந்தனும் அல்லேன். முனிகளிற்சிறந்தவரே! என்னைவிட மிகபபெரிதும் எல்லாவுலகங்களையும் வ்யாபித்தும் அழிவிலலாததும் எனக்குக்காரணமுமான அந்த, ஆகாசத்தைக் கேளும்' என்று சொலலிற்று. வாக்யங்களைக்கேட்பதில் ஸமர்த்தரும் ஸ்ரீமானுமான நாரதரானவர் அந்தவசனததைக்கேட்டு ஆகாயததினருகிறசென்று நமஸ்கரித்து அஞ்சலிசெய்துகொண்டு, 'அழிவிலலாதஆகாசமே! நீ ஆச்சர்யமும் பாக்யம்பெற்றவனுமாயிருக்கிறாய். நீஅனந்தனும் மிகப்பெரியவனுமாயிருக்கிறாய். நீ எவ்விதஉருவமுள்ளவனென்று உன்னைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்று வினவினர். ஆகாசமானது சிரித்துக்கொண்டு அந்தமுனிஸ்ரேஷ்டரைநோக்கி, 'ஓ! ப்ரம்மணரே! நான் மிகப்பெரியவனல்லேன். சப்தமானது எனக்குக்காரணமாகிறது. முனிகளிறசிறந்தவரே! அது என்னைக்காட்டிலும் மிகப்பெரிது. அதைக்கேளும்' என்று சொல்லிறது. பிறகு, ஆகாயத்திலபுகுந்து உயிர்மெய்யெழுத்துக்களுடன்

கூடியதும் பலகாரணங்களால்அலங்கரிக்கப்பட்டதும் மிக்கரஹஸ்ய மும் (உலகத்திற்குக்) காரணமும் அழிவில்லாததும் வேதமென்று கூறப்படுவதுமான சப்தாத்மாவைக் கண்டார். கண்டு, 'அழிவில்லாத சப்தாத்மாவே! நீ ஆச்சர்யமும் பாக்யம் பெற்றதுமாயிருக்கிறாய். நீ அனந்தமும் மிகப்பெரியதுமாயிருக்கிறாய். நீ எவ்விதஉருவமுடை யாயென்று உன்னைக்கேட்க விரும்புகிறேன்' என்றுகேட்டனர். வேதாத்மாவானது முனிஸ்ரேஷ்டரானநாரதரைநோக்கி, 'முனிகளிற் சிறந்தவரே! என்னைக்காரணமாகக்கொண்டு ப்ரம்மதேவரானவர் யாவையும்அறிந்திருக்கிறார். நான் ப்ரம்மதேவரின் புத்திஸ்தானத்தை அடைந்திருக்கிறேன். ஆகையால், தாமரைமலரில்பிறந்தவரான ப்ரம்மாவானவர் என்னைவிட மிகப்பெரியவரும் பெரியபுத்தியுள்ள வருமாயிருக்கிறார். முனிகளிற்சிறந்தவரே! எல்லாக்காரணங்களுக் கும்காரணரான அந்தப்ரம்மதேவரைக் கேளும்' என்றுசொலலிற்று. பிறகு,முனிஸ்ரேஷ்டரானநாரதர் ப்ரம்மலோகம்சென்று ரிஷிஸ்ரேஷ் டர்களால் ஸேவிக்கப்படுகிறவரும் மஹாத்மாவும் தெய்வக்கூட்டங்களாலும் ஸமுத்திரங்களாலும் நதிகளாலும் ஐந்து பூதங்களின் தத்துவங்களாலும் மலைகளாலும் கந்தர்வர்களாலும் அப்ஸரஸ்ஸுகளாலும் ஜ்யோதிக்கூட்டங்களாலும் ஸ்துதிகளாலும் ஸ்தோமங்களாலும் க்ரஹங்களாலும் ஸ்தோபங்களாலும் வேதங்க ளாலும் [1] ஆராதிக்கப்படுகிறவரும் உலகங்களுக்குப்பதியும் பரத்தி னும்பரரும் நான்குமுகங்களால அலங்கரிக்கப்பட்டவரும் உலகங்க ளுக்குஸ்வரரும் ஹிரண்யகர்ப்பருமான ப்ரம்மதேவரை நமஸ்க ரித்து வணக்கத்துடன் கைகட்டிநின்று அவரைநோக்கி, 'அழிவில் லாதப்ரம்மதேவரே! நீர் ஆச்சரியராயும் பாக்கியம்பெற்றவராயுமிருக் கிறீர். நீர் அனந்தரும் மிகப்பெரியவருமாயிருக்கிறீர். நீர் எவ்வித உருவமுள்ளவரென்று உம்மைத்தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றுசொன்னர். அதைக்கேட்டு எல்லா உலகங்களுக்கும்பிதாம ஹரும் பூஜ்யருமான ப்ரம்மதேவரானவர் சிரித்துக்கொண்டு நாரத முனிவரைநோக்கிக் கர்மங்களுக்குமூலமான (அஜ்ஞானத்தை) விலக் கத்தக்க இவ்வசனத்தைச் சொல்லத்தொடங்கினர். 'ப்ராம்மணரே! நான் மிகப்பெரியவனுமல்லேன். மிகப்பூஜ்யரே! அனந்தனுமல்லேன். எனக்கும் எல்லாஉலகங்களுக்கும் பிதாவாயிருப்பவரும் மிகப்பெரிய வரும் எல்லாஉலகங்களையும் ரக்ஷிக்கிறவருமாயிருப்பவர் ஸ்தாணுகோப ரின்குலத்தில் கோபகுமாரர்களால் சூழப்பட்டுக் கோபாலவேஷத்

1 இரட்டித்துவருதலால் இங்கு ஒருசொல் விடப்பட்டது.

துடன் இருக்கிறார். அவர் என் உருவத்தையடைந்து உலகங்களின் ஸ்ருஷ்டியைச்செய்கிறார். ஸ்ரீமானனவர் ராசானஉருவத்தையடைந்து ஸம்ஹரிக்கிறார். இந்த ஸ்ரீவிஷ்ணுவானவர் தம்உருவத்துடனிருந்துகொண்டு எப்போதும் பரிபாலிக்கிறார். அந்தஹரியானவர் எனக்குக்காரணர். ஓ! முனிஸ்ரேஷ்டரே! அந்தஹரியைக் கேளும். அவர் அனந்தரும் மிகப்பெரியவருமாகிறார்' என்றுசொன்னர்.,


பிறகு, ரிஷிகளில் பெரியவரும் பூஜ்யருமான நாரதரானவர் பிரம்மலோகத்திலிருந்து இறங்கி கந்தகோபரின்குலத்திலிருப்பவரும், உலகங்களுக்குப்பதியும், சிறுவர்களுக்குரிய லீலையாட்டில் பற்றுள்ளவரும், கன்றுக்கூட்டங்களால்அலங்கரிக்கப்பட்டவரும், (அவைகளை) ஊட்டவிட்டபின் கட்டுகிறவரும், புழுதிகளால் அழுக்கடைந்தமுகமுள்ளவரும், சிறந்தவரும், ஓடுகிறவர்களும் நகைக்கிறவர்களும் கூத்தாடுகிறவர்களும் கையைக்கொட்டுகிறவர்களும் வேணுகானம் செய்கிறவர்களுமான பலபேர்களால் நான்குபுறத்திலும் சூழப்பட்டவருமான இந்தக்ருஷ்ணரூபியாயிருக்கும் விஷ்ணுபகவானைக்கண்டு நமஸ்கரித்து இந்தப்பகவானைநோக்கி, 'நீர் ஆச்சர்யரும் பாக்யம்பெற்றவருமாயிருக்கிறீர்; அனந்தரும் மிகப்பெரியவருமாயிருக்கிறீர்; (யாவற்றையும்) அறிகிறவரும் அழிவில்லாதவருமாயிருக்கிறீர். உம்மை எவ்விதஉருவமுள்ளவரென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்' என்றுகேட்டார். பிறகு, பகவானுனவர் நகைத்து நாரதரைநோக்கிச் சொல்லத்தொடங்கினர். 'என்னைவிட மிகச்சிறந்தது ஒன்றும் இல்லை. எல்லாம் என்னிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன. என்னைவிட மிகப்பெரியது வேறொன்றுமில்லை. நானே மிகப்பெரியவன். ஆகாயத்திலிருந்துகொண்டும் முதலில் நானே உன்க்குச்சொன்னேன். ஒருமனிதனும் என்னைஅறிகிறானில்லை. என்னுடையமாயையை மீண்டுசெல்வது கடினம். வேறிடத்தில்பற்றில்லாதபக்தியுள்ள யோகிகள் என்னை அறிகிறார்கள். நீ எனக்குப் பிரியனும் பக்தனுமாயிருக்கிறாய். நீ என்னுடையதத்வத்தைப் பார். ஞானத்தால் தத்வத்தைஅறிவாயோ அந்தஞானத்தை உனக்கு அளிக்கிறேன். [1] என்னைஅறிய உபாயமானயோகத்தில் பற்றுள்ளமனமுடையவர்களும் பக்தியுள்ளவர்களுமான மற்றவர்களுக்கும் திவ்யஜ்ஞானத்தைக் கொடுக்கிறேன். அந்தஞானத்தால் அவர்கள் என்னுடையபதத்தை அடைகிறார்கள்' என்றுசொன்னர். இவ்விதம்சொல்லிவிட்டு, ஸ்ரீஹரியானக்ருஷ்ணபகவான் நந்தகோபருடையவீட்டில் சேர்ந்தார்.

[1] ஓநஸ்லோகம் விடப்பட்டது.

அரசனே! மிகஉத்தமமான விஷ்ணுவின் இந்தத்தத்வம் உனக்குச் சொல்லப்பட்டது. மிக்கபுஜ்யனே! நீ, 'ஸ்ரீக்ருஷ்ணே!' என்றுஜபித்துக்கொண்டு நீண்டகண்களுள்ள இந்தப்பகவானைப் பஜனம்பண்ணு. என்னையும் அவ்வாறே உன்னையும் மோகிக்கும்படிசெய்துகொண்டு இந்தப்பகவான் என்றல் சொல்லப்படுகின்றவைகளைக் கேட்கிறார். மஹாபாஹுவே! தர்மாத்மாவான பகவான் பக்தர்களைரக்ஷிக்கிறார். (இதில்) வேறுவிதமில்லை" என்று சொன்னர்.

இருநூற்றுப்பத்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)



(ஸ்ரீ விஷ்ணுவானவர், மனிதன் மரணகாலத்தில் ஜபிக்கத்தக்க மந்திரத்தை நாரதருக்கு உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! ப்ராஜ்ஞர்களிற்பெரியவரே! எல்லாச்சாஸ்திரங்களிலும் மைர்க்தரே! தத்வத்தைவிசாரிப்பவர்களும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களுமாயிருப்பவர்களுக்கு மரணகாலத்தில் ஜபிக்கவேண்டியது எது? குருக்களில்மிகச்சிறந்தவரே! மரணகாலம் வரும்பொழுது எதைநினைப்பவன் உத்தமமான ஸ்திதியைப் பெறுவான்? இதை உண்மையாய்க் கேட்கவிரும்புகிறேன்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"குற்றமறறவனே! உன்னல் கேட்கப்பட்ட கேள்வியானது நுணுக்கமானதும் கஷ்டமானதும் உனக்குத்தகுதியானதுமாயிருக்கிறது. அரசனே! முன்காலத்தில் நாரதரால்கேட்கப்பட்டதைக் ஏகாக்ரசித்துடன்கேள். நாரதரானவர் முன்காலத்தில் ஸ்ரீவத்ஸலக்ஷணத்தை அடையாளமுள்ளவரும் உலகத்திற்குக்காரணரும் உலகத்திற்கு ஸாக்ஷியும் அழிவில்லாதவரும் தேவருமான ஸ்ரீநாராயணரைக் கேட்கத்தொடங்கினர். 'அழிவில்லாததும் ப்ரகிருதியைவிடவேறானதும் குணங்களிலலாததும் உத்தமமானபகமும் ப்ரம்மமேதவருக்குக் காரணமான தாமரைமலருக்கு உற்பத்திஸ்தானமுமான பரப்ரம்மத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார்கள். சென்ற பிறவிகளுக்கும் வருபவைகளுக்கும் ஈசரான பகவானே! நம்பிக்கையுள்ளவர்களும் இந்திரியங்களைவென்றவர்களும் பக்தியுள்ளவர்களும் மோக்ஷத்தை விரும்புகிறவர்களுமான யோகிகளால் நீர் எவ்விதம் த்யானம்பண்ணத்தக்கவராகிறீர்? மனிதன் ஒவ்வொருநாளும் காலை

யில்எழுந்திருந்து எந்தஜபதத்தைஜபிக்கவேண்டும்? பெரியதேஜஸுள்ளவரே! மரிக்கும்பொழுது விசேஷமாய் எதை ஸ்மரிக்கவேண்டும்? ஸமாதியிலிருந்துகொண்டு எவ்விதம் த்யானம்செய்யவேண்டும்? ஸுதனமானதத்வத்தை நீர் சொல்லவேண்டும்' என்று கேட்டார். நாரதர்சொல்லியதைக்கேட்டு, தேவர்களுக்குராசரும் வரங்களை அளிபவரும் பிரபுவுமான ஸ்ரீவிஷ்ணுபகவான் அவரைநோக்கிச் சொல்லத்தொடங்கினர்.

'மனிதன் மரணகாலத்தில் எதைஜபித்து என்னுடையரூபத்தையடையத்தக்கவனாகிறானோ அந்தத்திவ்யமான அனுஸ்மருதியை இப்பொழுது உனக்குச்சொல்லுகிறேன். நாரத! முதலில் ஓங்காரத்தையுச்சரித்துப் பிறகு என்னை நமஸ்கரித்து ஓரேமனமுள்ளவனும் பரிசுத்தனுமாயிருந்துகொண்டு, 'ஓம் நமோபகவதேவாஸுதேவாய' என்னும் இந்தமந்திரத்தை ஜபிக்கவேண்டும்' என்றுசொன்னர். இவ்விதம்சொல்லக்கேட்டநாரதரானவர் நமஸ்கரித்து அஞ்சலிசெய்து கொண்டு எல்லாத்தேவர்களுக்கும்ராசரும் வ்யாபகரும் ஸர்வாத்மாவும் ப்ரபுவுமான ஸ்ரீஹரியைநோக்கிச் சொல்லத்தொடங்கினர். 'அழிவில்லாதவரும் சாஸ்வதரும் உலகங்களைப்படைக்கும்தேவரும் புருஷர்களில்உத்தமரும் குறைவில்லாதவரும் பரமபதரூபியுமான ஸ்ரீஹரியை அஞ்சலிசெய்துகொண்டு சரணமடைகிறேன். புராதனரும் ப்ரபுவும் அழிவில்லாதவரும் உலகங்களுக்குஸாக்ஷியும் தாமரைக்கண்ணரும் அடியார்களுக்கள்பரும் ராசருமான ஸ்ரீவிஷ்ணுவைச் சரணமடைகிறேன். உலகங்களுக்குஆதரும் ஆயிரம்கண்களுள்ளவரும் ஆச்சர்யரும் பரமபதரூபியும் சென்றதுவருவதுமிகழ்வது இவைகளுக்குப்ரபுவுமான ஸ்ரீவிஷ்ணுபகவானை நான் சரணமடைகிறேன். எல்லாஉலகங்களையும் படைப்பவரும் முடிவில்லாதவரும் எல்லாவிடத்திலும்முகமுள்ளவரும் இந்த்ரியங்களுக்குராசரும் உண்மைப்பொருளும் அழிவில்லாதவருமான ஸ்ரீபத்மநாபரைச் சரணமடைகிறேன். ஹிரண்யகர்ப்பரும் பூசர்ப்பரும் அம்ருதரும் ப்ரத்நிலும் பரரும் ப்ரபுவுக்கும்ப்ரபுவும் ஆதியுமந்தமுமில்லாதவரும் ஸூர்யனுடைய ஒளிபோன்றஒளியுள்ளவருமான அந்தஹரியைச் சரணமடைகிறேன். ஆயிரம்தலையுள்ளவரும் மஹரிஷியும் உண்மையாய்ப்பாவிக்கப்படுகிறவரும் ஸூக்ஷுமரும் அசைவற்றவரும் சிறந்தவரும் அபயமளிப்பவருமான புருஷரைச் சரணமடைகிறேன். புராணரிஷியும் யோகரூபியும் ஸுதனரும் எல்லாததத்வங்களுக்கும் இருப்பிடமும் நிலைபெற்றவரும் ராசருமான நாராயணரைச் சரணமடைகிறேன்.

எவர் எல்லாப்ராணிகளுக்கும் ப்ரபுவோ, எவரால் இவ்வுலகெல்லாம் வ்யாபிக்கப்பட்டிருக்கிறதோ மேலானவர்களுக்கும் கீழானவர்களுக்கும் குருவும் தேவருமான அந்தவிஷ்ணுபகவான் எனக்கு அனுக்ரஹம்செய்யவேண்டும். ஸுதனரும் தாமரைமலரைக்காரணமாகக் கொண்டவருமான ப்ரம்மதேவர் எவரிடமிருந்து உண்டானாரோ ப்ரம்மதேவருக்குக் காரணரும் விஸ்வரூபியுமான அந்தவிஷ்ணுபகவான் எனக்கு அனுக்ரஹம்செய்யவேண்டும். முன்பு ப்ரளயம்வந்தபொழுது ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் நாசமடைந்து ப்ரம்மாமுதலானவர்கள் லயமடைந்து மேலானதும் கீழானதுமான உலகம்நாசமடைந்து ஐந்துபூதங்கள்வரையிலுமுள்ளஉலகத்திற்கு அழிவுண்டானபொழுதும் ப்ரகிருதிஸம்பந்தமில்லாதவரும் மஹாத்மரும் விஸ்வரூபியுமான எந்தப்பகவான் ஒருவராயிருந்தாரோ அந்தவிஷ்ணுவானவர் எனக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். [1]நான்குகளாலும் நான்குகளாலும் இரண்டுகளாலும் ஐந்துகளாலும் திரும்பவும்இரண்டுகளாலும் எவர் ஹோமம்செய்து த்ருப்திசெய்விக்கப்படுகிறாரோ அந்த விஷ்ணுவானவர் எனக்கு அனுக்ரஹம்செய்யவேண்டும். பர்ஜன்யரூபியும் பூமியும் ஓஷதியும் காலமும் தர்மமும் க்ரியையும் அக்ரியையும்குணங்களுக்கு இருப்பிடமுமான அந்தப்பொன்வர்ணமுள்ள வாஸுதேவரானவர் எனக்கு அனுக்ரஹம்செய்யவேண்டும். அக்னி சந்த்ரன் ஸூர்யன் நக்ஷத்ரங்கள் ப்ரம்மரிஷிகள் இந்த்ரன் யோகிகள் இவர்களுடைய ஒளிகளை எவர் விளங்கச்செய்கிறாரோ அந்தவிஷ்ணுவானவர் எனக்கு அனுக்ரஹம்செய்யவேண்டும். யோகங்களுக்கு ஸ்தானமாயிருப்பவரே! எல்லாவற்றிற்கும் ஸ்தானமாயிருப்பவரே! வரமளிப்பவரே! உமக்கு நமஸ்காரம். ஓ! யஜ்ஞகர்ப்பரே! ஹிரண்யாங்கரே! [2]ஐந்து யஜ்ஞரூபியே! உமக்கு நமஸ்காரம். [3]நான்குமூர்த்தியுள்ளவரே! பரந்தாமரே! லக்ஷ்மீநிவாஸரே! பெரியோர்களாலபூஜிக்கப்பட்டவரே! எல்லாவற்றிற்குமிருப்பிடமானவரே! ப்ரதானத்தையுண்டுபண்ணினவரே! வாஸுதேவரே! உமக்கு நமஸ்காரம். பிறப்பில்லாதவரும் துன்பமில்லாதமார்க்கரூபியும் மூர்த்தியில்லாதவரும் உலகத்தைத் திருமேனியாகவுடையவருமானவரே! விசித்ரமான உலகங்களைப்

---

1 ஆப்ராவய, அஸ்துஸ்ரௌஷட, யஜ, யேயஜாமஹே, வஷட் என்ற ஹோமமந்த்ரங்களே இவ்விடத்தில் முறையே பொருள்களாகக்கொள்க.

2 தேவயஜ்ஞரும், பித்ருயஜ்ஞரும், மநுஷ்யயஜ்ஞரும், ப்ரம்மயஜ்ஞரும், பூதயஜ்ஞரும் என்பன.

3 ஸங்கர்ஷணர் ப்ரத்யும்னர் வாஸுதேவர் அநிருத்தர்.

படைப்பவரே! [1]ஐந்துகாலங்களையும்அறிந்தவரே! ஞானக்கடலே! உமக்கு நமஸ்காரம். காணப்படும் உலகமானது அவ்யக்தத்திலிருந்து பிறப்படைந்திருக்கிறது. அந்தஅவ்யக்தத்தைவிட எவர் மேலானவரும் அழிவில்லாதவருமாயிருக்கிறாரோ எவரைவிட வேறு பரமில்லையோ அவரை நான் சரணமடைந்தவனாயிருக்கிறேன். ப்ரதானமல்லாதவரும், மஹானும், அறிவுள்ளவனும் உத்பத்தியில்லாதவனுமான [2]புருஷனலலாதவரும், இவ்விரண்டிறகும் மிகவும்மேலானவருமாய் எவர் இருக்கிறாரோ அவரைச் சரணமடைந்தவனாகிறேன். ப்ரம்மா ஈசானர்முதலியவர்கள் எந்தப்ரபுவைப்பற்றி எப்போழுதும் சிந்திப்பவர்களாயிருந்தும் நிச்சயததைத்தெரிந்துகொள்ளவில்லையோ அவரைச்சரணமடைந்தவனாகிறேன். இந்திரியங்களைவென்றவர்களும் ஞானதத்தையும் த்யானத்தையும் மிகப்பெரியனவாகக்கொண்டவர்களுமான மஹாத்மாக்கள் எவரையடைந்து திரும்புகிறார்களில்லையோ அவரைச்சரணமடைந்தவனாகிறேன். எந்தப்ரபுவானவர் உலகமனைத்தையும் தமது ஓர்அம்சத்தால்வ்யாபிததுக்கொண்டிருக்கிறாரோ அறியத்தகாதவரும் குணங்களில்லாதவரும் நித்யருமான அந்தப்ரபுவைச்சரணமடைந்தவனாகிறேன். எவர் சந்தரன் ஸூர்யன் அக்னிஎன்ற மூன்று ஜோதியாயும்நக்ஷத்ரமென்றமூன்றுஜோதியாயும்ஆகாயத்திலவிளங்குகிறாரோ அந்தமஹாத்மாவானவர் அனுக்ரஹிக்கவேண்டும். குணங்களுக்குஆதியும் குணமில்லாதவரும் முதலிலிருப்பவரும் லக்ஷ்மியுடன்கூடியவரும் உத்பத்தியிலலாதவரும் அறிவுள்ளவரும் ஸர்வமும் எல்லாவிடத்திலுமிருப்பவரும் யோகியுமான அந்தமஹாத்மாவானர் அனுக்ரஹிக்கவேண்டும். ஸாங்க்யர்களும் யோகிகளும் மற்றமுள்ளவித்திபெற்றபெரியரிஷிகளும் எவரை அறிந்து முக்திஅடைகிறார்களோ அந்தமஹாத்மாவானவர் அனுக்ரஹிக்கவேண்டும். இந்திரியங்களுக்குபுலப்படாதவரும் நியந்தாவும் சிந்தைக்குஎட்டாதவரும் கார்யகாரணங்களைவிட வேறானவரும் (ஓரிடத்திலும்) இருப்பில்லாதவரும் ப்ரக்ருதியைவிடமிகச்சிறந்தவருமான அந்தமஹாத்மாவானவர் அனுக்ரஹிக்கவேண்டும். எவர் க்ஷேத்ரஜ்ஞராயிருந்துகொண்டு ஐந்து (இந்திரியங்களென்ற) முகங்களால்ஐந்துவிதமாய் ப்ரக்ருதியை அனுபவிக்கிறாரோ, மஹானானவர் குணங்களையுமனுபவிக்கிறாரோ அந்த மஹாத்மாவானவர் அனுக்ரஹிக்கவேண்டும். ஸூர்யனுடையமத்

1 அத்யதனம்அனாதயதனம்என்று இருதகாலம்இரண்டு, நிகழ்காலம் ஒன்று, அதயதலம்அனாதயதனம்என்று வருங்காலம்இரண்டு ஆக ஐந்து.

2 ஜீவன்.

தியில் சந்த்ரனிருக்கிறான். அந்தச்சந்த்ரனுடையகதியில் ஐந்துபூதங்களைவிட வேறான எந்தத்தேஜஸ்விளங்குகிறதோ அந்தத்தேஜோரூபியான மஹாத்மா அனுக்ரஹிக்கட்டும். ஓ! ஸர்வரூபியே! எல்லாவிடத்திலும் கண்களும் தலைகளும் முகங்களுமுள்ளவரே! எல்லாவிடத்திலும் உமக்கு நமஸ்காரம். விகாரமில்லாதவரே! உமக்கு நமஸ்காரம்.நீர் ஸாக்ஷியும் க்ஷேத்ரம்என்றசரீரத்தில நிலைபெற்ற இருப்புள்ளவருமாயிருக்கிறீர். இந்த்ரியங்களின் வழியைக்கடந்த உருவமுள்ளவரே! உமக்கு நமஸகாரம். நீர் காணப்படும் அவயவாளங்களால் அறியப்படுகிறவரலலீர். உம்மை எவர்கள் அறியவில்லையோ அவர்கள் ஸம்ஸாரத்தில் ஸஞ்சரிப்பார்கள். காமத்திலிருந்தும்கோபத்திலிருந்தும் விடுபட்டவர்களும் நேசமும் பகையுமற்றவர்களும் பக்தர்களைப்பூஜிப்பவர்களும் மறுபிறப்பில்லாதவர்களுமான ப்ராம்மணர்கள் உம்மை அறிகிறார்கள். ஏகாந்தபக்தியுள்ளவர்களும்ஸுகம்துக்கமுதலிய த்வந்த்வங்களிலிருந்து விடுபட்டவர்களும் நிஷ்காமமாய்க்கர்மங்களைச் செய்கிறவர்களும் ஞானதபோயால கர்மங்களைநிரித்தவர்களும் விசேஷமாய் த்யானம்செய்கிறவர்களுமாயிருப்பவர்கள் உம்மை அடைகிறார்கள். சரீரத்திலிருப்பவரும் சரீரமில்லாதவரும்எல்லாபராணிகளிடத்திலும் ஸமமாயிருப்பவருமானஉம்மைப் புண்யபாவங்களிலிருந்துவிடுபட்டவர்களான பக்தர்கள் அடைகிறார்கள். மாயையும் புத்தியும் அஹங்காரமும் மனமும் ஐந்துபூதங்களும் இந்த்ரியங்களும் உம்மிடத்திலிருக்கின்றன. அவைகளில நீர் இருக்கின்றீர். (உண்மையில்) அவைகளில நீர் இல்லை. அவைகளும் உம்மிடத்திலிலை. எவர்கள் ஐக்யத்தையும் ப்ருதக்தையும் பலவாயிருத்தலையும் தெரிந்துகொள்ளுகிறார்களோ அவர்கள் ப்ரஹ்மத்தையடைகிறார்கள். நீர் எல்லாப்ப்ராணிகளிடத்திலும் ஸமமாயிருக்கிறீர்.உமக்குப்பகையுள்ளவனுமிலலை. நேசமுள்ளவனுமிலலை. நான் மனம்வேறிடத்தில்செல்லாத பக்தியுடன் ஸமமாயிருக்குந்தன்மையை விரும்புகிறேன். ஸ்தாவரமும் ஜங்கமமுமான இந்தஉலகம்யாவும் நான்குவிதமானப்ராணிக்கூட்டமும் உம்மால் (உண்டுபண்ணப்பட்டு)தூலில்மணிக்கூட்டங்கள் போல அவை உம்மிடத்திலேயே கோக்கபட்டிருக்கின்றன. நீர் படைக்கிறவரும் புஜிக்கிறவரும் கூடஸ்தரும் அதத்வமும் ததவமென்று பெயருள்ளவருமாயிருக்கிறீர். அகர்த்தாவும் காரணரும் அசைவிலலாதவரும் சரீரத்தில்வேறானவருமாயிருக்கிறீர். உமக்குப் பூதங்களில் ஸம்பந்தமில்லை. நீர் பூதங்களென்றபெயருள்களின்குணங்

கீளைவிட மேலானவர். அஹங்காரத்துடனும் புத்தியுடனும் மூன்று குணங்களுடனும் உமக்கு லம்பந்தமில்லை. மோக்ஷத்திற்குரிய தர்ம முமில்லை. முயறசியுமில்லை. பிரியுமில்லை. எங்குமிருப்பவரே! ஜரா மரணங்களிலிருந்து விடுபடவேண்டி உம்மைச் சரணமடைந்திருக் கிறேன். ஓ! ஜகந்நாதரே! நீர் ஈஸ்வராயிருக்கிறீர். ஆகையால், சிறந்தவரென்று கூறபடுகிறீர். தேவரே! தேவர்களுக்கீசரே! பக்தர்களுக்கு எதுஹிதமோ அதை நீர் சிந்திக்கவேண்டும். விஷயங் களுடனும் இந்தரியங்களுடனும் எனக்குத திரும்பவும் சேர்ககை வேண்டாம். மணமானது பூமியையடையட்டும். அவவிதம் ரஸமா னது ஜலத்தையடையட்டும். ரூபமானது அக்னியையடையட்டும். ஸ்பர்சமானது வாயுவையடையட்டும். சப்தமானது ஆகாயத்தை அடையட்டும். மனமானது அஹங்காரததையடையட்டும். இந்தரி யங்களும் கம்தம்காரியங்களிலெலலட்டும். பூமியானது ஜலத்தை அடையட்டும். ஜலம் அக்னியையும், அக்னி வாயுவையும், வாயு ஆகா யத்தையும, ஆகாயம் மனத்தையும்அடையட்டும்.எலலாப்ராணிகளுக் கும் அவிவேகத்தையுண்டுபண்ணும் மனமானது அஹங்காரத்தை அடையட்டும்.ஓ! அச்சுதரே! பிறகு, அஹங்காரமானது புத்தியையும் புத்தியானது ப்ரதானததையும் அடையட்டும். பரதானமானது தன் னிலையையடைந்து குணங்களின் ஸமமானநிலையில்இருக்கும்போது எல்லாஇந்திரியங்களிலிருந்தும் குணங்களிலிருந்தும் பூதங்களிலிருந் தும் நான் விலகுவேன். (உலகங்களுக்குப்) பிதாவே! [1]ப்ரகிருதிஸம் பந்தமற்றதான உமது பரமபதத்தை நான் விரும்புகிறேன்.' எனக்கு உம்முடன் ஏகீபாவமுண்டாகட்டும். எனக்குத் திரும்பவும் பிறப்பு வேண்டாம். உம்மிடத்தில புதியுள்ளவனும் உம்மிடத்தில்சென்ற ப்ராணனுள்ளவனும் உம்மிடத்தில பத்தியுள்ளவனும் உம்மைமிகமுக் யமாகக்கொண்டவனுமான நான் மரணம்வரும்பொழுது உம்மையே நினைக்கவேண்டும். முன்சரீரததால் ஸம்பாதிக்கப்பட்ட நோய்கள் என்னை அடையட்டும். துக்கங்களும்துன்பப்படுத்தட்டும். என்னு டையகடன் என்னை விடவேண்டும்.தேவர்களுக்கீசரே!உம்மைத்தியா னிக்கிறேன். எனக்குத திரும்பவும் பிறவிவேண்டாம். ஆகையால், கர்மங்களென்ற கடனைது எனக்கு வேண்டாமென்று சொல்லுகி றேன். முன்பிறவியில சேர்க்கப்பட்டவ்யாதிகள்யாவும் என்னை வந்து

---

[1] 'நிஷ்கேவலம்' என்பது மூலம்.

1 அடையட்டும். நான் கடனில்லாதவனாகி ஸ்ரீ விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தை அடையவிரும்புகிறேன்' என்று சொன்னர்.

ஸ்ரீபகவான் சொல்லத்தொடங்கினர். 'ஐந்துகர்மேந்த்ரியங்களையும் ஐந்துஞானேந்த்ரியங்களையும் நன்முய் அடக்கிப் பத்துஇந்திரியங்களையும் மனத்திலும் மனத்தை அஹங்காரத்திலும் அஹங்காரத்தைப் புத்தியிலும் புத்தியை ஆத்மாவிலும் எவன் லயிக்கச்செய்கிறானோ பூஜ்யனான அந்தப்புருஷனுக்கு நானும் எனக்கு அவனும் எப்பொழுதுமிருக்கிறவர்களாகிறோம். நான் அவனுக்குக் காணமல் போகிறவனல்லேன். அவனும் எனக்குக் காணமல் போகிறவனலலன். புத்தியையும் பொறிகளையும் அடக்கிக்கொண்டு பார்க்கவேண்டும். பரத்திலும் பரமானபொருளைப் புத்தியால் அறிந்துகொள்ளவேண்டும். இவ்வுலகமெல்லாம்வியாபித்திருக்கிற நான் எவனுக்கு, 'இவர் என்னுடையவர்' என்று புலப்படுகிறேனோ அவன் தன்புத்தியால் ஆத்மாவில்பற்றுதலடைந்து பரமாத்மாவைநினைப்பான். பிறகு, புத்தியையும்விட மேலானஸ்வரூபத்தை அறிந்து திரும்பவும் பிறவியை அடையமாட்டான். மரணஸமயம்வரும்பொழுது எவன் என்னை இவ்விதம்நினைக்கிறானோ அவன் பாவமானஒழுக்கமுள்ளவனாலும் சிறந்தகதியைப் பெறுவான். விஷ்ணுவைப்பற்றியதும் திவ்யமுமான 'ஓம்நமோபகவதேததஸ்மை தேவதேவாம்பரமாத்மனே;நாராயணாய பக்தராம் ஏகாந்திஷ்டாய சாஸ்வதே' என்கிற இந்த ஆனஸ்ம்ருதியை, படித்திருந்தாலும் எழுந்திருந்தாலும் மிகவும்கவனத்துடன் படிக்கவேண்டும்; எங்கிருந்தாலும் நன்முய் அப்யஸிக்கவேண்டும். பௌர்ணமாஸியிலும் அமாவாஸ்யையிலும் துவாதசியிலும் விசேஷமாகப்படிக்கவேண்டும். ஸ்ரத்தையுள்ளவர்களான என்னுடைய பக்தர்களையும் விசேஷமாகக்கேட்கும்படி செய்யவேண்டும். அவ்விதமனிதன் யாகம் தானம் தவம் என்றகர்மங்களை அஹங்காரத்தையடைந்துசெய்தாலும் அதன்பயனையும் மறுபிறவியையும் அடையமாட்டான். பித்ருக்களையும் தேவர்களையும் பூஜிப்பவனும் ஜபிப்பவனும் ஹோமம்செய்கிறவனும் பலியைக்கொடுக்கிறவனும் அக்னியை ஜ்வாலைசெய்கிறவனுமான எவன் என்னைநினைக்கிறானோ அவன் சிறந்தகதியையடைவான். பிராணிகளுக்கு யாகமும் தானமும் தவமும் பரிசுத்தமானவை;ஆகையால், ஆசையற்றவனாகி யாகத்தையும் தானத்தையும் தவத்தையும் செய்யவேண்டும். ஓ! நாரத! சிரத்தையுள்ளவனும் என்னுடைய

1 இங்கு ஒருசொல விடப்பட்டது. .

பக்தனுமான எவன் நமஸ்காரமென்றுமட்டில், சொல்லுகிறானே சண்டாளனானும் அவனுக்கு அழிவில்லாதஉலகம்உண்டாகும். ஸ்ரீ த்தையுள்ளவர்களும் அடங்கிய ஜனமுள்ளவர்களும் என்னை அடுத்த வர்களுமான எந்தப்பக்தர்கள் விதியைமுன்னிட்டு என்னைப் பூஜிக்கி றார்களோ அவர்கள் என்னை அடைகிறார்களென்பதில் ஸந்தேகமுண் டோ? இவ்வுலகில் கர்மங்கள் உறபத்தியும் நாசமுமுள்ளவைகளா கும். என்னிடத்தில் பக்தியுள்ளவன் மோக்ஷமடைவான். தேவ ரிஷியே! ஆகையால், நீ எப்பொழுதும்சோம்பலில்லாமல என்னையே த்யானம்பண்ணு; அதனால், விதியையடைவாய்; என்னுடைய பத தையும் காண்பாய். அறிவில்லாதவனுக்கு ஞானத்தையும் தர்மோப தேசத்தையும் அளிக்கிறவனுடையபயனுக்குப் பூரிமுழுமையையும் தானம்செய்வதாலுண்டாகும் பயனும் சரியானதன்று. ஆகையால், பிறவியென்னும்பந்தத்தாலுண்டாகும்பயத்தை விலக்கததக்கஞான த்தை ஸாதுக்களுக்கு அளிக்கவேண்டும். மனிதர்களிற சிறந்தவனே! இவ்விதம் அளிப்பதால் ஸ்ரேயஸையும் வீர்யத்தையும் அடைவான். எவன் பத்துலக்ஷம் அஸ்வமேதயாகங்களைச் செய்கிறானே அவனும் என்னுடையபக்தர்களால் எந்தப்பதம் அடையப்படுகிறதோ அந்தப் பதத்தை அடையமாட்டான்' என்று சொன்னர்.

நல்லவ்ரதமுள்ளவனே! இவ்விதம் முன்காலத்தில் நாரதரென் னும் அந்தத்தேவரிஷியால வினவப்பட்ட இந்தப்பகவான் எதை உப தேசித்தாரோ அது உனக்குச்சொலலப்பட்டது. நீயும் ஏகமன முள்ளவனுயிருந்துகொண்டு ருணங்களைக்கடந்துநிறரும், அறியத் தக்கபொருளை த்யானம்பண்ணு; அழிவிலலாதபரமாத்மாவை முழு மனத்துடனும் பஜனம்பண்ணு. ஸ்ரீநாராயணரால் சொல்லப்பட்ட திவ்யமான இந்தவசனத்தைக் கேட்டபின் நாரதரானவர் தேவரிடத் திலமிக்கபக்தியுள்ளவராகி ஒரே உறுதியானநிலையையடைந்தார். ரிஷி யும் நேவருமான ஸ்ரீநாராயணரைப் பதுதுவர்ஷங்கள், வேறுகாரியங்க ளிலலாமல் பஜித்துக்கொண்டு இதைஜபிப்பவன் ஸ்ரீவிஷ்ணுவி னுடைய அந்தப்பரமபதத்தையடைவான். எவனுக்கு ஸ்ரீஜனர்த் தனரிடம் பக்தியிருக்கிறதோ அவனுக்குப் பலமந்த்ரங்களால் என்ன பயன்? 'நமோ நாராயணய' என்ற மந்த்ரமானது எல்லாப்பயன்களை யும்கொடுக்கத்தக்கது. ரஹஸ்யமும் சிறந்ததுமான இந்த அனுஸ் மிருதியைக்கறருல்மனிதன், நிலைபெறறஅறிவை அடைவான். அவன் துக்கங்களைத்தள்ளிவிட்டு ஸங்கடத்திலிருந்துவிலகி ஆசையில்லாதவ

னும் தாபமில்லாதவனும் ஸுகமுள்ளவனுமாயிருப்பான்" என்று சொன்னர்.

இருநூற்றப்பதினேராவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், கருடனுல் தமக்கு உபதேசிக்கப்பட்ட ஸ்ரீவிஷ்ணுவின் மாஹாத்மியத்தைச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "தேவர்களிலும் அஸுரர்களிலும் மனிதர்களிலும் ரிஷிஸ்ரேஷ்டர்களிலும் அறிவுள்ளவன் ஸ்ரீவிஷ்ணுவின் அந்த உண்மையைச் சொல்லியபடி அறிந்திருக்கிறன்? இவையனைத்தையும் நீர் எனக்குச் சொல்லவேண்டும். உண்மையில் எனக்கு த்ருப்தியுண்டாகவில்லை. பரதர்களில் மிகச்சிறந்தவரே! நீர் யாவற்றையும் அறிந்தவராயிருக்கிறீரென்பது எனது கருத்து" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"அரசனே! உன்னுல் நான் எந்தவிஷயத்தைப்பற்றிக் கேட்கப்பட்டேனோ அந்தவிஷயத்தில் எனக்கு முன்காலத்தில் நடந்ததைக்கேள். அரசர்களிலுத்தமனே! முன்காலத்தில் கருடனுக்கும் எனக்கும் ஸம்வாதம்உண்டாயிற்று. ஓ! பாரத! முன்பு நான் கங்கா நதியின்தீவிலுட்கார்ந்துகொண்டு தவத்தை படைத்து ஸ்ரீவாஸுதேவரை முக்யகதியாகக்கொண்டு பத்துவர்ஷங்கள் அவரையே த்யானித்து ஸ்தோத்ரம்செய்து நமஸ்கரித்து யாகம்செய்துவந்தேன். அழிவில்லாதவனே! உலகங்களைப்பரிசுத்திபண்ணுகிறவனும் என்னையுண்டுபண்ணினமாதாவுமான அதிதக்ஷகாதேவியும் என்னைரக்ஷிக்கவேண்டி என்னருகில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அத்தலமயத்தில் ஆச்சர்யரும் ஸ்ரீமானும் எல்லாவேதங்களின்உருவமுமானவரும் ப்ரபுவும் பறவைகளிலுமிகச்சிறந்தவரும் மேருமலையையும் மந்தரமலையையும்போன்றவரும் பரிசுத்தமானபுத்தியுள்ளவரும் பெரியபுகழுள்ளவருமான கருடபகவான் கங்கையைப்பார்க்கவேண்டி வந்தார். அப்படிவந்த மஹாத்மாவான அவரை நான் எதிர்கொண்டுசென்று ப்ரார்த்தித்து முறைப்படி நமஸ்கரித்து அஞ்சலிசெய்துகொண்டு நின்றேன். ஸ்ரீமானை அந்தக் கருடபகவானும் பெரியபாக்யம்பெற்ற கங்காதேவியை மகிழ்வித்து அவளால்பூஜிக்கப்பெற்று அருகில் ஆஸனத்தில் உட்கார்ந்தார். பிறகு, பேசிக்கொண்டிருக்கையில், நான்

அந்தக்கருடனேநோக்கி, 'ஓ! வேதரூபியே! வினதைபின்குமாரரே! பெரியவீர்யமும் பலமும் பெற்றவரே! இந்த்ரியங்களுக்குஸ்வரரும் நாராயணருமான ஸ்ரீஹரியை எப்பொழுதும் வஹித்துவரும் நீர், அந்தஜனர்த்தனர் எவ்விதஉருவமுள்ளவரென்பதைச் சொல்ல அறிவீர். மிக்கபூஜ்யரே! அவருடையஉண்மையானநிலையை நீர் எனக்கும் சொல்லவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, வைனதேயர் சொல்லத்தொடங்கினர்.

'ஓ! பீஷ்ம! இவ்விஷயத்தில் முன்காலத்தில்நடந்ததை நீ முறைப்படி கேள். மிக்கபூஜ்யர்களும் மானஸஸரஸின்உத்தரதீரத்தில்வஸிப்பவர்களும் விரித்திபெற்றவர்களும் ப்ராஜ்ஞர்களில்சிறந்தவர்களும் ஸ்ரீவாஸுதேவரைமுக்யதியாகக்கொண்டவர்களுமான பல ரிஷிகள் என்னைநோக்கி, 'ஓ! பக்ஷீந்த்ரனே! வாஸுதேவரின் உண்மையான பரமபதத்தை நீ அறிகிறாய். உனக்குஸமமாய் அவருக்கு அருகிலிருப்பவனும் ப்ரியமாயிருப்பவனுமில்லை. ஆகையால், அதைச்சொல்' என்று கேட்டார்கள். நான் அவர்கள்வசனத்தைக்கேட்டபின் பூஜ்யரான ஸ்ரீஹரியை நமஸ்கரித்து எனக்கும் ஸ்ரீமந்நாராயணருக்கும்நடந்ததை உள்ளபடி சொல்லத்தொடங்கினேன். 'முனிஸ்ரேஷ்டர்களே! கேளுங்கள். முன்காலத்தில் நான் ஸோமலதையை அபஹரித்துக்கொண்டு ஆகாயத்திற்செல்லும் பொழுது அவ்விடத்தில், 'பெரியகையுள்ளவனே! நல்லது! நல்லது! உன்னைக்கண்டதால் நான் ஸந்தோஷமடைந்தேன். பக்ஷீந்த்ரனுனகருடனே! இப்பொழுது என்னிடத்திலிருந்து வரத்தைப்பெறுக்கொள். நான் (உன்னுடைய) உண்மையானபக்தியைத்தெரிந்துகொண்டு உன்னைப்பற்றி உத்தமமானவசனத்தைச்சொல்லுகிறேன்' என்றவசனத்தைக்கேட்டேன். அப்பொழுது, திரும்பவும் பகவானுனவர் என்னைநோக்கி, 'நான் பெரியவீர்யம்பெறற ரிஷி, என்னை நீ அறிவாயில்லை. மூட! என்னைப்பற்றி அஸூயைப்படுகிறாய்' என்று உறுதியாய்ச்சொன்னர். முனிவர்களிற்சிறந்தவர்களே! அதைக்கேட்டுக் கர்வமடைந்தநான் தேவர்கூட்டங்களின்நடுவில், 'ரிஷியே! முதலில் நீர் என்னிடத்திலிருந்து வரத்தைப்பெறுக்கொள்ளும். அதன்பிறகு, நான் உம்மிடத்திலிருந்து வரத்தைப்பெற்றுக்கொள்ளுகிறேன்' என்று இவ்விதம்சொன்னேன். அதனால், பூஜ்யரும் ஸ்ரீமானும் ஸ்ரீவத்ஸமென்றஅடையாளமுள்ளவருமான தேவரானவர், 'பக்ஷீந்த்ரனே! இப்பொழுது [1]முதல நீ எப்பொழுதும் எனக்கு

1 'ப்ரப்ருதி' என்று பாடங்கொள்ளப்பட்டது.

வாகனமாயிருக்கவேண்டும். பறவைக்ளுக்கிசனே ! இப்பொழுது உன்னிடத்திலிருந்து இந்தவரத்தை நான் பெற்றுக்கொள்கிறேன்' என்றுசொன்னர். நான் அவரைப்பார்த்து, 'அவ்விதமே ஆகட்டும்' என்றுசொல்லி அஹங்காரமில்லாமலிருப்பவரும் வ்யாபகரும் மாயையுள்ளவருமான ஸ்ரீஹரியை ஜயிக்கவேண்டுமென்ற விருப்பத்துடன், 'ரிஷிஸ்ரேஷ்டர்களிலுத்தமரே ! இப்பொழுது நான் உம்மிடத்திலிருந்து வரத்தைப்பெற்றுக்கொள்கிறேன். நான் உமக்கு மேலிருக்கவேண்டும். எனக்கு இந்தவரதத்தைக் கொடும்' என்றுகேட்டேன். ப்ரபுவும் ஸ்ரீகாராயணருமான ஹரி சிரித்துக்கொண்டு, 'பக்ஷீஸ்வரனே ! அப்படியே ஆகட்டும். எப்பொழுதும் நீயே எனக்கு த்வஜமாகவுமிரு. பக்ஷீந்த்ரனே ! எப்பொழுதும் எனக்குமேல் நீ இருக்கலாம்' என்றுசொன்னர். இவ்விதம் சொல்லியபின், பூஜ்யரான தேவரானவர், சங்கத்தையும் சக்ரத்தையும் கதாயுதத்தையும் தரிப்பவரும் ஆயிரம் கால்களுள்ளவரும் ஸ்ரீமானும் ஆயிரம்ஸூர்யர்களுக்கு ஒப்பானவரும் ஆயிரம்தலைகளுள்ளவரும் ஆயிரம்கண்களுள்ளவரும் மஹானும் ஆயிரம்கிரீடங்களுள்ளவரும் சிந்திக்கத்தகாதவரும் ஆயிரம்முகங்களுள்ளவரும் ப்ரபுவும், மின்னலகூட்டத்திற்குஒப்பானவைகளும் திவ்யமுமான பலவிதஆபரணக்கூட்டங்களால் விளங்குகிறவருமான புருஷராக ஒரிடத்தில் தோன்றினர். அந்த ஹரியானவர் ஒரிடத்தில் நான்குகைகளுள்ளவராகத் தோன்றினர்; ஒரிடத்தில் சிந்திக்கத்தகாத ஜ்யோதிரூபமாய்த் தோன்றினர்; ஒரிடத்தில், என்தோளிலிருந்துசொண்டிருந்தார். இவ்விதம் எனக்கு விளங்கும் தேவரானவர் அவ்விடத்திலேயே அந்தாத்தானத்தை அடைந்தார். முனிஸ்ரேஷ்டர்களே ! பிறகு, வியப்புற்றவனை நான் மிகஉத்தமமான கார்யத்தைச்செய்து என்னுடன்கூட என்அன்னையை இந்தக் கத்ருவினிடத்திலிருந்துவிடுவித்துத் திரும்பவும், 'மூன்றி என்னைச்சொன்னவர் யார்? என்னால் சிந்திக்கக்கூடாத அவர் யார்? அந்தப்பகவான் எவ்விதமாயிருக்கிறார்?' என்று அவரையே நினைத்துக்கொண்டிருந்தேன். பிறகு, தேவர்களுக்குத் தேவரும் என்தோளில் உட்கார்ந்திருப்பவருமான தாமரைக்கண்ணரை ஆச்சர்யத்துடன் நான் கண்டேன். 'இஃது என்ன!' என்ற சிந்தையுள்ளவனும் வியப்படைந்த மனமுள்ளவனுமான நான், அவர் எந்தஎந்தஇடத்திற்குச் செல்லவிரும்பினாரோ அந்தஅந்த இடத்திற்கு அவருடைய எண்ணப்படி பரவசனாகிச்சென்றேன். திரும்

பவும் பெரியபாக்யம்பெற்றவர்களும் ஒருகல்பட் ஜீவிப்பவர்களும் இந்திரனுடன்கூடியவர்களுமான ப்ரம்மாமுதலிய தேவர்களால் துதிக்கப்படுகிறவனும் அவரவர்களால் வெவ்வேறுகப்பூஜிக்கப்படுகிறவனுமான நானும் ஸர்வரூபியான அந்தப்பகவானைச் சுமந்துகொண்டு ஜலத்தினுள்சென்றேன். ரத்னமயமும் சுபமும் திவ்யமுமான பாற்கடலின் வடகரையில மஹாத்மாவான அந்தஸ்ரீஹரியினுடைய வைகுண்ணிமென்னும் ஆலயத்திற்குச் சென்றேன். அது திவ்யமும், தேஜோமயமும், செல்வம் நிரம்பியதும், தேவர்களாலும் ஸேவிக்கத் தகாததும், பலவிடங்களிலிருப்பவைகளும் தேஜோமயமும் வாயுமயமுமான தூண்களுள்ளதும், காந்தியுள்ளஸ்வர்ணத்தால் எங்கும் அலங்கரிக்கப்பட்டதும், திவ்யமானஒளியுள்ளதும், வாத்யங்களாலும் கானங்களாலும் விளங்குவதுமாயிருந்தது. நான் அவ்விடத்தில் சப்தத்தைக்கேட்டேனேயொழிய வேறுமனிதனையும் இடத்தையும் கால்கள்வைத்தஅடையாளத்தையும் எவ்விடத்தும் காணேன். அவ்விடத்தில் நான் நடிக்கமடைந்து அஞ்சலிசெய்துகொண்டிருந்தேன். பிறகு, ப்ரம்மாமுதலியதேவர்களும் அவ்விதமே திக்பாலர்களும் ஸனத்தனர்முதலியமுனிவர்களும்அவ்விடத்தையடித்துப்பிழைப்பவர்களான மற்றுமுள்ளவர்களும் அந்தஆலயத்திற்கு வந்தார்கள். அப்பொழுது, தேவஸ்ரேஷ்டர்களும் கந்தர்வஸ்ரேஷ்டர்களும்ஸபையின் வாயிற்படியில் ப்ரம்மதேவரை முன்னிட்டுக்கொண்டு அஞ்சலிசெய்துகொண்டிருந்தார்கள். பிறகு, அச்சமயத்தில் பாற்கடலின் திவலைகளால் விழித்துக்கொள்ளும்படி செய்யப்பட்டு விளங்குகிறவர்போல ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் அவ்விடத்தில விளங்கினர். ஆயிரம் படங்களின் வரிசைகளையுடையவனும் ஸூக்ஷ்மமாயிருப்பவனுமான ஆதிசேஷனையும், அவன்மேல் நீண்டுஉருண்டவைகளும் பருமனுள்ளவைகளும் ஸமமாயிருப்பவைகளும் தோள்வளைகளாலும் கங்கணங்களாலும் விளங்குகிறவைகளுமான நான்குகைகளையுடையவரும் பீதாம்பரம்தரித்தவரும் கௌஸ்துபமணியால்விளங்குகிறவரும் லக்ஷ்மீதேவிவலிக்கிறமார்பையுடையவரும் சிறிதுதிறந்தகண்ணுள்ளவரும் எல்லாவற்றின்காரணத்திற்கும் காரணருமான அந்த ஸ்ரீ ஜனார்த்தனரையும் நான் ஆகாயத்தில் ஸந்தோஷத்துடன்கண்டேன். அவர் பாற்கடலின்மேற்பாகத்திலுள்ள சிறந்தகமுத்தமேகம்போலத் தோன்றினர். அங்கு ஒருவனும் பேசுகிறதில்லை.[1] ஒருவனைஒருவன்சொல்லு

1 கூறியதுகூறலால், இங்கு மூன்றுசொற்கள் விடப்பட்டன.

கிறதுமில்லை. ப்ரம்மாமுதல் ஸ்தம்பபர்யன்னும் ஜந்துவரையில் சப்திக்கக்கூடாதென்று கோபத்துடன் புருவங்களை நெரித்துக் கொண்டு, கோணலானகண்ணுள்ள பலவிதப்பூதக்கூட்டங்கள் அங்கு இருந்தன. பிறகு, சிந்திக்கத்தகாத ஸ்ரீமான் ஹரியானவர் ப்ரம்ம தேவரைப்பார்த்து உலகங்களுக்கு ஹிதத்தைச்செய்யும்விருப்பத் துடன், 'நீங்கள் போகலாம்' என்றுசொலலி அவரைப்புறப்படிம்படி செய்துவிட்டு, பிறகு, என்னைநோக்கி, 'கருட!' என்றுசொல்லி அழைத்தார். உடனே, நான் எதிரில்சென்று நமஸ்கரித்து அஞ்சலி செய்துகொண்டு நின்றேன். அவர் என்னை, 'வா' என்றுசொல்லி விட்டு வடகிழக்கானவழியில் செல்லத்தொடங்கினர். அவர் மிகவும் மெதுவாகவே போகிறவர்போலக் காணப்பட்டார். நான், பதினா யிரம் லக்ஷம் பத்துலக்ஷம் அப்படியே கோடியென்னும் யோ ஜனைதூரம் எப்பொழுதும் அங்கங்கு சென்றுகொண்டேயிருந்தேன். பிறகு, 'ஓ! தேவரே! உண்மையில நான் பக்தன். கஷ்டப் படுகிறேன். என்னை ரக்ஷிக்கவேண்டும்' என்றுசொன்னேன். அந்த மாதவரானவர் திரும்பவும், 'கருடனே! வா' என்றுசொன் னர். பிறகு, நானும் திரும்பவும் ஆகாயத்தில் ஓடிக்கொண்டு சென் றேன். பிறகு, நூறுகோடியோஜனைதூரம் மறைவுள்ள கோர மானஇடத்திற்கு வந்தார். அவ்விடத்தில் இருள்உருவமுள்ள வைகளும் மலைபோலவிளங்குகின்றவைகளும் ஒரேவிதமான பத மங்கள்போன்றவைகளுமான பூதங்களைக் கண்டேன். உடனே, நான் பயமடைந்தவனானேன். பிறகு, கோரரூபியான ஒருகிங்கரன் நூறுயோஜனைநீளமுள்ள என்னைக் கையிலெடுத்து அவ்விடத்தி லிருந்து மண்ணுங்கட்டியைப்போல வீசியெறிந்தான். அப்பொழுது நான் அந்த இருளைவிட்டுவிலகி ஆகாயத்தையடைந்தேன். அவ்விடத் தில் இடியின் ஓசைக்கொப்பான ஹுங்காரதவனியானது செவியி னுள் கேட்கப்பட்டது. உடனே, நான் பலபூதங்களால சூழப்பட் டேன். பிறகு, நான், 'தேவர்களின்தேவரே! தாமரைக்கண்ணரே! ஈச்வரரே! நீர் என்னை ரக்ஷிக்கவேண்டும்' என்று சொன்னேன். அப்பொழுது அவ்விடத்தில் ஸ்ரீவிஷ்ணுவும் என்னைப்பற்றிச் சொன் னர். பயங்கரனானஒருவன் என்னையெடுத்து ஒருகுகையின் த்வா ரத்தில் எறிந்தான். ஒருக்ஷணத்தில் நான் அக்னியைவிலகிச்சென்று வாயுமண்டலத்தைக்கண்டேன். அவ்விடத்தில் ஆகாயத்தில் என்னை எறியவேண்டுமென்றவிருப்பத்துடன் வந்தவனைக்கண்டு நான் துக்

கத்துடன் கதறிக்கொண்டு பின்றேன். ஒருக்ஷணத்தில் தன்பக்ஷத்திலிருக்கிறவர்களே விளங்கச்செய்கிறவரும் பயங்கரருமானபரமாத்மாவினால் கண்டு கோபிக்கப்பட்டபயங்கரனான ஒருவன் என்னைவிட்டெறிந்தான். அங்கு ஆயிரம்ஸ்ரீர்யர்களுக்கொப்பான பலகருடக்கூட்டத்தைக் கண்டேன். பிறகு, அவர்கள்என்னைக்கண்டு, 'அந்தோ! அல்ப ஆயுளுள்ளதும் மிகப்பலவீனமுள்ளதுமான பக்ஷியானது வந்திருக்கிறது' என்று என்னைக்குறித்து மனத்தில வியப்படைந்து சொன்னார்கள். நான் அவ்விடத்தில்ஆயிரம்யோஜனைளமுள்ளவரும்ஆயிரம்ஆதித்யர்களுக்குஒப்பான ஒளியுள்ளவரும் ஆயிரம்கருடர்களின்மேல் ஏறிக்கொண்டவருமான ஸ்ரீமந்நாராயணரைக்கண்டேன். பெரியபலமுள்ளவர்களான அந்தக்கருடர்கள், 'ஓ! தேவரே! இது மிகவும்விந்தை. சரீரத்தால எங்கள்குலதத்தில் உண்டானதுபோன்றதும் மிகஅல்பபலமுள்ளதும் மிகஅலபசரீரமுள்ளதுமான இது என்னபக்ஷி இவ்விடத்தில் வந்திருக்கிறது!' என்று சொன்னார்கள். அதைக்கேட்டு, நான் கர்வமழிந்தவனும் பயமுள்ளவனும் லஜ்ஜையுள்ளவனும் விவேகமடைந்தவனும் நடுக்கமடைந்தவனுமானேன். பிறகு, திரும்பவும், 'கருட! வா' என்றசப்தத்தையேகேட்டேன். உடனே, நான் செல்லத்தொடங்கினேன். பிறகு, திரும்பவும் நூறுபரார்த்தயோஜனை தூரம்சென்று அவ்விடதத்தில உததமமானஸ்தானத்திலிருக்கும் ப்ரம்மதேவரைக்கண்டேன், அன்றியும், அவவிடத்தில் நூறுகோடிப்ரம்மதேவர்களையும் கண்டேன். ஸ்ரீவிஷ்ணுபகவானவர் திரும்பவும் 'வா' என்று கம்பீரமாகச்சொன்னர். பிறகு, ஒரு பெரியகூட்டத்தைக் [1] கண்டேன். விளாம்பழத்திறகொப்பானதும் இருளால மூடிச் சூழப்பட்டதுமான பலஅண்டத்தைக்கண்டேன். ஸ்ரீமாஞானஹரியானவர் அந்த அண்டத்திலிருந்துகொண்டு ஓர் அண்டத்தைப் பேதித்தார். திரும்பவும் ஒருபெரியபூதமானது என்னைப்பிடித்து எடுத்தெறிந்தது. அதன்இடையில் ஏழுஸமுத்திரங்களையும் ப்ரம்மதேவரையும் அவ்விதமே தேவர்களையும் எங்கள்கருடக்கூட்டத்தையும் (எங்கள்) தாயையும் அந்தஅந்தவிடத்தில் கண்டேன். உண்மையைத்தேட விருப்பமுள்ள நான் இவ்விதம் அனுபவமடைந்தேன். முனிகளில் மிகச்சிறந்தவர்களே! என்னைப்பல்லக்குக்குஒப்பாகத தெரிந்துகொள்ளுங்கள்' என்று இவ்விதம் முன்காலத்தில எனக்கு எது உண்டானதோ அதை ப்ராம்மணர்களுக்குச்சொன்னேன். மிகப்பூஜ்யனே!

[1] இரணடு சொற்கள் விடபபட்டன.

ஓ! பீஷ்ம! அஃதேனுத்தையும் உனக்கு நியாயப்படி சொன்னேன். யோகிகள், சிறந்தஞானத்தைக்கண்டு அந்த ஸ்ரீஹரியைக் காண்கிறார் கள். ஞானத்தால் அடையத்தக்க இந்தப் பரமபுருஷரானவர் வேறு விதமாய்அடையக்கூடிய உருவமுள்ளவரல்லர். பூஜ்யரான ஸ்ரீஹரி யானவர் ஏகாக்ரியுள்ளபக்தியால் அடையத்தக்கவராவர்' என்று சொன்னர். பூஜ்யரும் பக்ஷிகளுக்கரசரும் ப்ரபுவுமான வைன தேயர் இவ்விதம்சொல்லிவிட்டு என்தாயாரான கங்காதேவியைக் கேட்டுக்கொண்டு அவ்விடத்திலேயே அந்தர்த்தானத்தையடைந் தார். அரசஸ்ரேஷ்டனே! ஆகையால், ஸர்வரூபியும் ப்ரதானத்தை யுண்டுபண்ணினவருமான ஸ்ரீவாஸுதேவர் ஞானத்தாலும் பக்தி யாலும் எளிதில்அடையத்தக்கவர். வேறுவிதமாக அடையத்தக்க வரல்லரென்பது என் அபிப்பிராயம்" என்றுகூறினர்.

இருநூற்றுப்பன்னிரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஒருகுருவானவர் தம்சிஷ்யனுக்கு ஆத்மதத்வத்தை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "தந்தையே! பரதகுலத்திலுதித்தவரே! நீர் மோக்ஷகதிற்குரியமுக்யமானயோகத்தை எனக்கு உபதேசிக்கவேண் டும். பேசுபவர்களிற் சிறந்தவரே! அதை நான் உண்மையாகத் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். மிகப்பூஜ்யரே! ஞானத்தின்உண் மையில நிலைபெறவேண்டித் திரும்பவும் நான் வாஸுதேவரென்று பெயர்வாய்ந்த சிந்திக்கத்தகாத பொருளைப்பற்றி உம்மிடம் கேட் கிறேன். ஆகையால், சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

" இவ்விஷயத்திலும் மோக்ஷத்தைப்பறறியதும் ஒருகுருவுடன் சிஷ்யனுக்குண்டானஸம்பாஷணையுமானபழைய இவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். மேதாவிகளிலசிறந்தவனும் மோக்ஷமத்தைவிரு ம்புகிறவனும் மிக்க அடக்கமுள்ளவனுமான ஒருசிஷ்யனானவன் இந் த்ரியங்களை வென்றவரும் ஸத்யவாக்குரும் மஹாத்மாவும் தேஜஸுக ளின் கூட்டம்போன்றவரும்ரிஷிகளில் மிகச்சிறந்தவருமான உட்கார்ந் திருப்பவரும் ப்ரம்மணருமான ஓர் ஆசார்யரையடைந்து அவர்அடி களைவணங்கிக் கைகூப்பிநின்றுகொண்டு கேட்கத்தொடங்கினன்.

'பூஜ்யரே ! என்னுடைய பணிவிடையால் நீர் ஸந்தோஷமுள்ளவரா யிருப்பீராயின் எனக்குஇருக்கிறஒருபெரியஸந்தேஹத்தை நீர் விரித் துரைக்கவேண்டும். நான் எதிலிருந்து உண்டானேன் ? நீர் எதி லிருந்துஉண்டானீர்? இவ்விஷயத்தில் எது மேலானதோ அதை நன்றாக நீர் சொல்லவேண்டும். ப்ராம்மணர்களில் மிகச்சிறந்தவரே ! எல்லாப்ராணிகளும் ஸமமாயிருக்கும்பொழுது, நன்குதடைபெறு கின்றஉத்பத்திகளும்விநாசங்களும் வெவ்வேறுவிதமாக உண்டாகின் றனவென்பது எவ்விதம்? வேதங்களில் [1]வெவ்வேறுபுள்ளஸாக்யமும் உலகத்திலுள்ளபொதுவான ஸ்ம்ருதிவாக்யமும்எவ்விதம்? அறிவுள்ள வரே ! இவறறையெல்லாம் உள்ளபடி விரிவாக உரைக்கவேண்டும்' என்றுகேட்க, குரு சொல்லத்தொடங்கினர்.

'ப்ராஜ்ஞர்களில்பெரியவனே ஓ ! சிஷ்ய ! வேதரஹஸ்யமும் எல்லாப்ராணிகளின்சரீரத்திலுமுள்ளதும் வேதங்களுக்குகிதிபோன் றதுமான இப்பெரிய தத்வத்தைக் கேள். ஸ்ரீவாஸுதேவரானவர்உல கத்திலுள்ள இவ்வெல்லா உருவமுமுள்ளவரும் வேதத்தின்முகமான ப்ரணவரூபியும் ஸத்யம் தானம் தவம் யாகம் பொறுமை அடக்கம் நேர்மைஇவைகளால்அடையத்தக்கவருமாயிருக்கிறார்.ஸுதனபுருஷ ரான ஸ்ரீவிஷ்ணுவையே(உலகங்களின்)உத்பத்தியையும் ப்ரளயத்தை யும்செய்வதும்ஸூக்ஷ்மரூபியும்சாஸ்வதமுமானப்ரம்மமென்றுவேத மறிந்தவர்கள் கருதுகிறார்கள். இப்படிப்பட்டஇந்தப்ரம்மமானது வ்ரு ஷ்ணிகுலத் திலுதித்ததாயிருக்கிறது. அதைப்பற்றியஇதிஹாஸத்தை என்னிடத்திலிருந்துகேள். பிராம்மணன் ப்ராம்மணர்களால் உப்தே சம் பெறத்தக்கவனகிறான்.க்ஷத்திரியன்க்ஷத்ரியர்களால் கேட்பிக்கத் தக்கவனகிறான். வைச்யன் வைச்யர்களால் கேட்பிக்கத் தக்கவனகி றான். பெரியமனமுள்ள சூத்ரன் சூத்ரர்களால் கேட்பிக்கத்தக்கவனு கிறான். தேவர்களுக்குத்தேவரும் ஒப்பற்றதேஜஸ்ஸுள்ளவருமான ஸ்ரீ விஷ்ணுவினுடையதும் மங்களமும் உத்தமமும் ஸ்ரீகிருஷ்ணனென் னும் ரூபமுள்ளதுமான மஹிமையை நீ கேட்கவேண்டும். ஸ்ரீவிஷ்ணு வின் பரமபதமானது,அழிவற்றதும் சிறந்ததும் நித்யமும் அடையாள ங்களில்லாததும் அழுக்கில்லாததும் மரணமில்லாததும் சோபையுள் ளதுமானமோக்ஷமாயிருக்கிறது.ஸம்ஸாரதசையில் அதுவேற்றுமை யுள்ளதுபோலிருக்கிறது. வேற்றுமையுள்ளதும் முக்குணங்களோடும் உண்டுபண்ணுகிறதுமான ப்ரதானமென்னும் மாயையானது அந்தப்

1 ஒவ்வொருஜந்திகளுக்குமட்டில் ஒவ்வொருகர்மத்தைப் பகுத்துக்கூறு வதாயுள்ளது என்றுபொருள்.

பரமாத்மஸ்வரூபத்தில் எப்பொழுதும் பற்றுள்ளதன்று. அதில் பற்றுள்ள இத்தஜீவனென்னும்புருஷன் வேறானவன். எப்பொழுதும் புருஷனால் அடையப்பட்டதும் வ்யாபகமும் உலகத்திற்குக்காரணமும் காலரூபமுள்ளதுமான ப்ரதானமானது, மிக்கசக்திபெற்ற ஸ்ரீவிஷ்ணுரூபத்தால் விகாரமுள்ளதாகச் செய்யப்பட்டு வெவ்வேறான பலபூதங்களை உண்டுபண்ணுகிறது. புருஷனானவன் ஸாக்ஷியாயிருந்துகொண்டு உண்மையில்லாத அந்த ப்ரதானத்தைப்பார்த்து வேற்றுமையில்லாதவனானாலும் அந்தப்ரதானத்தில்புகுந்து அதன் சேர்க்கைக்குத்தக்கபடி வேறுபட்டலக்ஷணமுள்ளவனைப் போலபெறுகிறான். ஆதியும்அந்தமுமில்லாததும் இருப்பதையும் இல்லாமல்போவதையும் தன்லக்ஷணமாகக்கொண்டதுமான ப்ரதானமென்னும் காலசக்ரமானதுமுன்பு உலகத்திலுமுள்ளஎல்லாப்பிராணிகளிடங்களிலும் உருளைபோலச் சுறறிக்கொண்டிருக்கிறது. புருஷர்களிற்சிறந்தவனே! எந்தப்ரம்மமானது அழிவில்லாததும் ஸூக்ஷ்மரூபியும் மோக்ஷரூபியும் சாஸ்வதமுமாயிருக்கிறதோ அதைப் புருஷோத்தமரான ஸ்ரீகேசவரென்று சொல்லுகிறார்கள். அழிவிலாததும் சிந்திக்கத்தகாததுமான அந்தரூபமானது வேறறுமையுள்ளரூபத்துடன் காணப்படுகிறது. காலமென்றுசொல்லப்படுவதைப் பார். அஃது எப்பொழுதும் சூடுள்ளதுமன்று; மிக்ககுளிர்ச்சியுள்ளதுமன்று. இந்தக்குணங்கள் அதனிடத்திலில்லை. ஆகையினால், (அந்தக்காலம்), அப்படி (குளிரும்வெப்பமும் இல்லாமல்) பிரவர்த்திக்கிறது. 'இதோ குளிர்காலம்வந்தது; இதோ உஷ்ணகாலம் வந்தது' என்று ஸூர்யோதயத்தைப்பற்றி எல்லாப்பிராணிகளும் சொல்லுகின்றன. [1]குணங்களினைத்தும் காலத்தைப்பற்றி வருவதும்போவதுமாயிருக்கின்றன. எக்காலமும் ப்ரக்ருதியிலிருப்பவனும் காலத்துடன்கூடியவனுமான மனிதனால் (அனுபவிக்கப்படுவதும்) குணங்களால் (உண்டுபண்ணப்படுவதுமான) ஸுகமும் துக்கமும் தத்வஜ்ஞானத்தில் ஸமர்த்தனாயிருப்பவனை அடையா. மூலப்ரக்ருதியானது எப்பொழுதும் புருஷனால் ஆஸ்ரயிக்கப்பட்டு (உலகங்களை) உண்டுபண்ணுகிறது. அழிவில்லாத பரமாத்மாவானவர் பித்ருக்களையும் தேவர்களையும் ரிஷிகளையும் யக்ஷர்களையும் ராக்ஷஸர்களையும் நாகர்களையும் அஸுரர்களையும் மனிதர்களையும் மனத்தால் படைக்கிறார். அதுபோலவே வேதங்களையும் சாஸ்த்ரங்களையும் ப்ரளயகாலத்தில் ப்ரக்ருதியையடைந்தவைகளும்

1 'ஸகாலா:' என்று பாடங்கொள்ளப்பட்டது.

சாஸ்வதமுமான உலகத்திற்குரியதர்மங்களையும் கல்பத்தின் ஆதிகாலத்தில் திரும்பவும் படைத்தார். ஒவ்வொரு வர்ஷத்திலும் ருதுக்களில் ருதுக்களுக்குத்தக்க பலஉருவங்களுள்ள அடையாளங்கள் அந்த அந்தவிதங்களாகவே காணப்படுவதுபோல யுகங்களின் ஆதிகாலங்களில் வஸ்துக்கள் காணப்படுகின்றன. கல்பத்தின் ஆதிகாலங்களில் எப்பொழுது காலத்தின் சேர்க்கையால் எதுவது [1]தோன்றுமோ அப்பொழுது அது அதுவும் வ்யவஹாரத்திற்குக் காரணமாயுண்டாகும் ஞானமாகும். அவ்விதஅறிவை உண்டுபண்ணவேண்டி அதற்குக் காரணரூபமாக இந்தவேதம் கூறப்படுகிறது. இந்தவேதங்கள் அத்யயனம் செய்யாத காரணத்தால் மறைவடைந்தனபோலாயின. ப்ரளயகாலத்தில் எலலாப்பிராணிகளும் நசிப்பதால் பலவிதமானசாஸ்த்ரங்களும் நாசமடைந்தனவாகும். ஆயினும், ஜீவர்களின்ஸ்வரூபம் நித்யமாகையால் வேறு அண்டம் இருக்கும்பொழுது சாஸ்த்ரங்களும் நித்யமாயிருக்கலாம். மஹாப்ரளயகாலத்தில் மறைவடைந்தவேதங்களையும் இதிஹாஸங்களையும் உலகுடையின் அதிகாரத்தைவஹித்தவர்களும் பெரியரிஷிகளுமான ப்ராம்மணர்கள் தவத்தால் முதலில் ப்ரம்மதேவரால்அனுக்ரஹிக்கப்பெறறு ப்ரம்மதேவரின்கட்டளையால் அடைந்தார்கள். பூஜ்யரானப்ரம்மதேவர் வேதங்களையறிந்துசொன்னர். வேதாங்கங்களை ப்ருஹஸ்பதியும் உலகத்திற்றிதமான நீதி சாஸ்த்ரத்தைச் சுக்ரரும் கூறினர்கள். ஸங்கீதசாஸ்த்ரமென்னும் காந்தர்வவேதத்தை நாரதரும் தனுர்வேதத்தைப் பரத்வாஜரும் [2]தேவர்களுடையதும் [3]ரிஷிகளுடையதுமான சரித்ரத்தைக் கர்க்கரும் வைத்யசாஸ்த்ரத்தை க்ருஷ்ணாத்ரேயரும் அறிந்தார்கள்! கௌதமரானவர் ந்யாயசாஸ்த்ரமுழுமையையும் உண்மையாய் அறிந்தார். வேதங்களையறிந்தவரும் ப்ரம்மதத்தையறிந்தவரும் ப்ரபுவுமான ஸ்ரீவ்யாஸரானவர் வேதாந்தத்தையும் கர்மயோகத்தையும் அறிந்தார். ப்ருகுவானவர் சிலபசாஸ்த்ரதத்தை அறிந்தார். அந்த அந்த வாதிகளால் பலதர்க்கசாஸ்த்ரங்களும் கூறப்பட்டன. சுருதியுக்தியுடனும் ஆகமத்துடனும் ஸதாசாரத்துடனும் கூறப்பட்டதோ அஃதுஆதரிக்கப்படுகிறது. உதபதரியில்லாத அநுதப்பப்ரம்மத்தைத் தேவர்களும் ரிஷிகளும் அறிகிறார்களில்லை. பூஜ்யரும் உலகத்தையுண்டுபண்ணினவரும் ப்ரபுவுமான ஸ்ரீநாராயணரொருவர் அந்தப்ரம்மத்தை அறிகிறார். ஸ்ரீநாராயணரிடமிருந்து ரிஷிக்கூட்டங்களும் முக்யர்களான

1 வேதவாக்யம். 2. 3 ஜ்யோதிஷம்.

தேவர்களும் அஸுரர்களும் முன்காலத்திலிருந்தராஜரிஷிகளும் துக்கங்களுக்கு மருந்துபோன்ற பரப்ரம்மத்தை அறிந்தார்கள். வ்யாஸமஹரிஷியிடமிருந்து என்னால் எதுஅடையப்பட்டதோ அதை நான் உனக்குச்சொல்லுகிறேன். ப்ரக்ருதியானது எப்பொழுது ராசனென்னும்புருஷனால் ஆலோசிக்கப்பட்டபொருள்களை உண்டுபண்ணத்தொடங்குகிறதோ அப்பொழுது (தர்மம் அதர்மம் என்ற) காரணங்களுடன்கூடிய உலகமானது இந்தப்ரக்ருதியினிடத்திலிருந்து முதலிலுண்டாகிறது. ஒருவிளக்கிலிருந்து வேறுவிளக்குக்கள் ஆயிரக்கணக்காக உண்டாவதுபோல ப்ரக்ருதியானது (உலகங்களை) உண்டுபண்ணுகிறது. தன்பெருமையிலிருந்துகுறைவடைகிறதில்லை. அவ்யக்தமென்னும் ப்ரக்ருதியிலிருந்து கர்மதத்தைக் காரணமாகக்கொண்டு புத்தியென்னும் மஹத்தத்வமுண்டாகிறது. அது அஹங்காரத்தையுண்டுபண்ணுகிறது. அஹங்காரத்திலிருந்து ஆகாசமென்னும் சப்ததன்மாத்ரையுண்டாகிறது. அந்தச்சப்தத்திலிருந்துஸூக்ஷ்மமானஸ்பர்சமுண்டாகிறது. அந்தஸ்பர்சத்திலிருந்து ஸூக்ஷ்மரூபமும் அந்த ஸூக்ஷ்மரூபத்திலிருந்து ஸூக்ஷ்மரஸமும் ரஸதன்மாத்ரையிலிருந்து கந்ததன்மாத்ரையுமுண்டாகின்றன. இந்தஎட்டும் மூலகாரணங்களாகின்றன. உலகமானது இவைகளில் நிலைபெறறிருக்கிறது. இவைகளிலிருந்துஉண்டானவைகளான ஐந்துஞானேந்திரியங்கள் ஐந்துகர்மேந்த்ரியங்கள் ஐந்து விஷயங்கள் மனம்என்று இந்தப்பதினைந்தும் காரியங்களாகின்றன. செவியும் தவக்கும்கண்களும்நாவும் மூக்கும் ஞானேந்திரியங்கள். காலகளும் பாயுவும் உபஸ்தமும் கைகளும் வாக்கும் கர்மேந்திரியங்கள். சப்தமும் ஸ்பர்சமும் ரூபமும் ரஸமும் கந்தமும் விஷயங்கள். அவைகள்இந்தகுணங்களுடைத்தாலுண்டாகின்றன. அவைகளில மனமானது எல்லாவிடத்திலும்செலலுவதும் வயாபகமுமாகிறது. பத்துஇந்த்ரியங்களும் அவைகளின்பற்றுதலுக்குக் காரணங்களானவிஷயங்களும்இவ்விதம்சொலலப்பட்டன. மனமானது இருக்கிறதாஇல்லையாஎன்று இரண்டுவிதமாய்ப் பறறுதலென்னும்விகலபதத்தில்இருக்கிறதென்றுசொலலப்படுகிறது. புத்தியானது நிச்சயமென்னுங்குணமுள்ளது. அஹங்காரமானது அபிமானத்துடன்கூடியது. கர்மானுசாரீரத்தையடைவதற்குஉபாதானகாரணமான அவ்யகதத்தை ப்ரவ்ருத்திக்கச்செய்வதல்லாமல் தான் உபாதானகாரணமாகிறதில்லை. இந்தநாவானது ரஸத்தைப்பறிவதற்குஉபயோகப்படுகிறது. அதுபோலவே வாக்கானது பேசுவதில் உபயோகப்படுகிறது. மனமானது

பலவிதமான இந்த்ரியங்களுடன் சேர்க்கையடைவதும் எல்லா இந்திரியங்களையும் விட்டுவிலகுவதுமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேண்டும். வெவ்வேறான தேவர்களுடன்கூடிய இந்தப் [1]பதினொன்றும் சரீரங்களில்(பரமாத்மவை)உபாவிப்பவனும் அறிவுகளுக்குக் கர்த்தாவுமான ஜீவனை உபாவிக்கின்றன. எல்லாப்ராணிகளிலுமுள்ள அவ்விந்த்ரியங்களுள் எப்பொழுதும் காவானது ஜலத்தின்கார்யமும் மணத்தையறியும்மூக்கானது பூமியின்கார்யமும் செவிகள் ஆகாயத்தின் கார்யமும்,* கண்ணானது தேஜஸ்வின்கார்யமும் த்வக்கு வாயுவின்கார்யமுமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். மனத்தை ஸத்வகுணத்தின் காரியமென்றும் ஸத்வமானது அவ்யக்தத்தின்காரியமென்றும் கூறுகிறார்கள். ஆகையால், அறிவுள்ளவன் எல்லாப்பூதங்களுக்கும் காரணமான அவ்யக்தத்திலிருக்கும் ஈச்வரரை அறிந்துகொள்ளவேண்டும். ரஜோகுணமில்லாத எந்தத்தேவரைப் பரமபதமென்றுகூறுகிறார்களோ அவரை அடித்துநிறுத்தும் அவ்யக்தமுதலிய இப்பொருள்களானவைகள் சராசரங்களுடன்கூடிய உலகமனைத்தையும் வஹிக்கின்றன. இந்தப்பொருள்களுடன்கூடியதும் ஒன்பதுத்வாரங்களுள்ளதும் புண்யமுமான சரீரமென்னும்புரத்தை வ்யாபித்துக்கொண்டு வ்யாபகரான பரமாத்மா சயனம்செய்கிறார். புரத்தில்சயனம்செய்கிறாரென்ற காரணத்தால் அவர் புருஷரென்றுசொல்லப்படுகிறார். அவர் ஜரையில்லாதவரும், மரணமில்லாதவரும், கார்யரூபியென்றும்காரணரூபியென்றும் இரண்டுவிதமாய் உபதேசிக்கப்படுகிறவரும், வ்யாபகரும், குணங்களுடன்கூடியவரும், ஸூக்ஷ்மரும், எல்லாப்பூதங்களின்குணங்களுக்கும் ஆச்ரயருமாயிருக்கிறார். சிறிதோ, எல்லாதுபெரிதோ தீபமானது எவ்விதம் ப்ரகாசஉருவமுள்ளதோ அவ்விதம் எல்லாப்ராணிகளிடங்களிலும் புருஷனே ஞானரூபியென்று தெரிந்துகொள்ளவேண்டும். செவியானது கேட்கவேண்டியதைக் கேட்கும்படி செய்விக்கிறது. அந்தப்புருஷன் கேட்கிறான்; அவன் பார்க்கிறான். இந்தச்சரீரமானது அவனுக்குஸாதகமாயிருக்கிறது. எல்லாக்கர்மங்களையும் செய்கிறவன் அவன். கட்டையிலிருக்கும் அக்னியானது அக்கட்டைபிளக்கப்படுவதால் காணப்படாததுபோலவே சரீரத்திலிருக்கும் ஆத்மாவானது யோகமென்னுமுபாயமில்லாமல காணப்படுகிறதில்லை. உபாயத்தால் கட்டையைக்கடைந்தால் அக்னியானது காணப்படுவதுபோலவே சரீ

---

1 'இந்த்ரியங்களைத்து மனஸ்ஸுடன் ஸஹிதமென்று ஆகப்பதினொன்று' என்பது பழையவுரை. இந்த்ரியங்களைத்து பராணன்கள் ஸஹிதமனம்ஒன்று என்றும் கொள்ளலாம்.

ரத்திலிருக்கும்ஆத்மாவும் யோகத்தாலேயே காணப்படுகிறது. ஆறு களில்ஜலக்களும் ஸரீர்யனிடத்திலகிரணங்களும் சேர்ந்துகொண்டு தொடர்ந்தவைகளாக எவ்விதம் .செல்லுகின்றனவோ அவ்விதம் சரீரிகளுக்குச் சரீரங்கள் செல்லுகின்றன. ஆத்மாவானது கனவுடன் சேர்க்கையடையும்பொழுது சரீரத்தைத்தள்ளிவிட்டு ஐந்துஇந்திரி யங்களுடனும் செல்லுவதுபோலவே வேறுசரீரத்தில்செல்லுகிற தென்று அறியவேண்டும். யாவும் கர்மத்தால வ்யாபிக்கப்படுகின் றன; கர்மத்தாலே உண்டாகின்றன. தன்னுல்செய்யப்பட்டதும் மிக்கபலமுள்ளதுமான கர்மத்தால ஆதமாவானது வேறுசரீரத்தில் கொண்டுபோகப்படுகிறது. அந்தஆதமாவானது ஒருசரீரத்தைத் தள்ளிவிட்டு அதிலிருந்து வேறுசரீரத்தை அடைகிறதுபோலத தன் கர்மங்களால பிறப்படையும் அந்தப்ராணிக்கூட்டத்தைப்பறறியும் கூறுகிறேன்.

இருநூற்றுப்பதின்மூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஒரு குருவானவர் தம்சிஷ்ய னுக்கு ஆத்மதத்வத்தை உபதேசித்தது; தொடர்ச்சி.)

ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும்ஆகிய நான்குவிதப்ராணிகளும் ஸூக்ஷ்மமான பிறப்புடையவைகளென்றும் ஸூக்ஷ்மமான இறப் புடையவைகளென்றும் கூறுகிறார்கள. மனமானது அவ்யக்தமான லக்ஷணமுள்ளதென்றும் ப்ரக்ருதியின்ஸ்வரூபத்தை ஏதன்உருவமா கக்கொண்டதென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். பெரியஅரசமர மானது அரசமரத்தின்வித்திலுள்ளிருந்ததும் அவ்யக்தமாய் உண் டானதுமாகக்காணப்படுவதுபோல அவ்யக்தத்திலிருந்து உலகத்தின் உத்பத்தியுண்டாகிறது. காந்தமணியின்ஸமீபத்திலிருக்கும் இரும் பானது (அந்தமணியை) அனுஸரித்துச்செல்லுதுபோல அவ்யக்தத திலிருந்துண்டான புத்தியானது ஆத்மாவை அனுஸரித்துச்செல்லு கிறது. அதுபோல மனமானது அந்தப்புத்தியைஅனுஸரித்துச் செலலுகிறது. அறிவில்லாததிரும்பானது காந்தமணியையனுஸரித் துச்செல்வதுபோலப் பூர்வவாஸனையைக் காரணமாகக்கொண்ட கர் மங்களாலுண்டாகும் தர்மாதர்மங்களென்னும்பொருள்களும் இவை போன்றமற்றவையும் தேகத்தையனுஸரித்துச்செல்லுகின்றன. அவ் வாறே அஜ்ஞானத்தாலுண்டானபொருள்கள், ஜீவாத்மாவானஜீவனுக்

குக்காரணமானப்ரம்மத்தைஅனுஸரித்துச் செல்லுகிறவைகளும் அறிவில்லாதவைகளும் அறிவுள்ளஜீவனுக்குக் காரணமானப்ரம்மத்தினிடமிருந்து வெளிவந்தவைகளுமாயிருக்கின்றன. முதலில் ஜீவனேத்தரிப் பூமியும் ஆகாயமும் ஸ்வர்க்கமும் பிராணிகளும் [1] ரிஷிகளும் [2]தேவர்களும் அஸுரர்களும் மற்றும் ஒன்றுமில்லை. அவைகள் ஜீவனேயடையவுமில்லை. ஜீவனுக்கு இவைகளுடன் சேர்க்கையானது அஜ்ஞானத்தாலுண்டாகிறதென்று (வேதங்களில்) கூறப்பட்டிருக்கிறது. இந்தச்சேர்க்கை [3]அனுதியும் அஜ்ஞானமுள்ளவரையில அழிவிலலாததும் எல்லாஜீவர்களிடமுமிருப்பதும் மனத்தைக் காரணமாகக்கொண்டதும் உறுதியானலக்ஷணமில்லாததும் ஜன்மாந்தரவாஸனையென்ற காரணத்தால் வேறுபடுகிறதுமாயிருக்கிறது. அந்தஜீவரூபமானது முன்வாஸனைஎன்றகாரணத்துடன் கூடிக்கொண்டு கர்மங்களைச் சேரச்செய்துகொள்கிறது. அந்தக் கர்மத்தால் இந்தவாஸனை தொடர்ந்துவருகிறது. இது முதலும் முடிவுமில்லாத பெரியசக்ரமாயிருக்கிறது. [4]அவ்யக்தமானவாஸனையைக் குடமாகவும் வ்யக்தமானசரீரமுதலியவைகளை ஆர்களாகவும் ஞானம்கர்மமுதலிய கார்யங்களைச் சுறறிலுமுள்ளவடையாகவும் ஆசையென்றபசையுள்ளராஜோகுணத்தை அச்சாகவும்கொண்ட ஸம்ஸாரசக்ரமானது க்ஷேத்ரஜ்ஞனஜீவனால் ஏறப்பட்டு உறுதியாயிருக்கிறது. எண்ணெயென்னும் ஸ்நேகமுள்ளதாயிருப்பதால் எள்ளானது செக்கார்களால் பிடிக்கப்படுவதுபோல இவ்வுலகம்பாவமும் ஆசையென்னும்ஸ்நேகமுள்ளதாயிருப்பதனால அஜ்ஞானத்தாலுண்டாகும்போகங்களால் ஆக்ரமித்து இந்தஸம்ஸாரசக்ரத்தில் பீடிக்கப்படுகிறது. [5]இந்தஉலகமானது போகவிருப்பத்தாலுண்டானஅபிமானத்தால் பிடிக்கப்பட்டுக் கர்மத்தைச்செய்கிறது. அந்தக்கர்மமானது அஜ்ஞானத்திறகும் சரீரத்திறகும் சேர்க்கையுண்டாவதற்குக் காரணமென்று உபதேசிக்கப்படுகிறது. [6]காரணமானது கார்யத்தைப் [7] போய் அடைகிறதில்லை. அதுபோலக் கார்யமும் கார

---

1 'ப்ராணிகள்' என்பது பழையஉரை.

2 'ஸுராஸுரா;' என்பது மூலம்; 'தேவஇயற்கைகுரிகநற்குணங்களும் அஸுரஇயற்கைக்குரியதுர்க்குணங்களும்' என்பதுபழையஉரை.

3 வேறுபாடாம்.

4 அதிகபாடமானஒருஸ்லோகம் விடப்பட்டது.

5 இங்கு அதிகபாடமானமுன்றுஸ்லோகம் விடப்பட்டன.

6 இங்கு அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

7 'கார்யமும் காரணமும் பசுவும் குதிரையும்போல வெவ்வேறான உருவமுள்ளவைகளென்று தார்க்கிகர்கள் கருதுகிறார்கள். சிலர் கார்யகாரணங்களுக்குப் பேதமும் அபேதமும் உண்டென்று கூறுகிறார்கள். இவ்விரண்டும் ஸாஸ்த்ரீயமல்லவென்றும் இவ்விடத்திலுள்ள கருத்து' என்பது பழையஉரை.

ணத்தையடைகிறதில்லை. இக்கார்யங்கள் காரணத்திலிருக்கின்றன. இதரகாரணங்களுடன்கூடிய காலமானது (அவைகளை வெளிபண்ணக்) காரணமாகிறது. எப்பொழுதும் புருஷனை அடையப்பட்ட ப்ரக்ருதி களும் விகாரங்களும் கர்மாவென்ற காரணத்தால் ஏவப்பட்டவை களாகி ஒன்றையொன்று தொடர்ந்துகொண்டிருக்கின்றன. முன் சரீரத்திலிருந்து கழலியஜீவன், ஸத்வம் ரஜஸ் தமஸ்என்ற குணங் களுடன்கூடின (இந்திரியம் மனமுதலிய) பொருள்களுடன்கூடிய வனும் (மறுபிறப்புக்குக்) காரணமான கர்மம் அவித்யை வாஸனை இவைகளின் பலத்துடன்கூடியவனுமாகிப் புழுநியானது வாயுவால் ஏவப்பட்டுச் செல்லுவதுபோல க்ஷேத்ரஜ்ஞனை பரமாதமாவை அனுஸரித்துச் செல்லுகிறான். அந்த ஆதமாவானது மனமுத லிய அந்தப்பொருள்களுடன் சேர்க்கையடைகிறதில்லை. அந்தப் பொருள்களும் மஹாத்மாவான அந்த ஆதமாவுடன் சேர்க்கை அடைகிறதில்லை. அறிவுள்ளவன் புழுதிகளின் சேர்க்கையில்லாத அந்த வாயுவானது எவ்விதம் புழுதிகளுடன் கூடியதாயிருக்கிறதோ அதுபோல மனத்துக்கும் ஆத்மாவுக்குமுள்ள இந்தவேறுபாடு மை யைத் தெரிந்துகொள்ளவேண்டும். மனமுதலியவைகளுடன்கூடிய வனான அந்த ஜீவன் அப்யாஸத்தால் நிரும்பவும் ஸ்வபாவமான ஆத்ம ரூபத்தை அறிபமாட்டான். ஆத்மவிஷயத்திலுண்டாகும் இந்த ஸம்தேஹநிவ்ருத்தைச் சிறந்ததானவேதமானது அறுத்திருக்கிறது. சக்ர வர்த்திலக்ஷணத்தைச் செய்துகொண்ட அரசனுக்குத் தனக்குரிய தர்மத்தைச் செய்யுங்காலத்திலுள்ள அறிவுபோல ஸுகம்பெறவும் துக்கத்தைவிலக்கவும் உபாயங்களை உபதேசிக்கும் கர்மவிதிகளில் அறிவிருக்கவேண்டும். தீயில் எரிக்கப்பட்ட விதைகள் நிரும்பவும் மூளையாததுபோல ஞானத்தால் எரிக்கப்பட்ட [1]கிலேசங்களுடன் நிரும்பவும் ஆத்மா சேர்க்கையடைகிறதில்லை.

---

1 மகுடத்தரித்த அரசனுக்குரிய ராஜஸ்யயாகமென்னுக தாமத்தில் ப்ர வ்ருத்தித்த விரோதியான அரசன் அக்காலத்தில் சரீரத்திலுள்ள ராஜலக்ஷணங் களை ஆத்மாவுக்கிருப்பதுபோலப் பாவிப்பவனுலும் அச்சரீரம் போனபின் உண்டாகும் அதே யாகத்தில் பயனை அடையுங்காலத்தில அதலக்ஷணங்கள் ஆதமாவுகிலில்லையென்று உண்மையை முன்னமேயே தெரிதுகொள்வது போலக் காமங்களைச்செய்யுங்காலத்தில் ஆத்மாவுக்குச சரீராதிகளுடன்சேர்க் கையிருபபதுபோலப்பாவிப்பதிலும் அகாமங்களின் பயனையடையும் காலத் தில் அவ்விதச்சேர்க்கை ஆதமாவுகிலுமேயென்பது உண்மையென்பதிலும் கர்மகாண்டங்களுக்குக் கருதது, என்று தெரிதுகொள்ளவேண்டும்.

2 அவித்தை அகங்காரம் ராகம் த்வேஷம் மரணபயம் இவைகள் கிலே சங்கள்.

இருநூற்றுப்பதிஞன்காவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஒரு குருபரம்பரைவர் தம்சிஷ்யனுக்கு ஆத்மதத்வத்தைக் கூறியது; தொடர்ச்சி.)

ப்ரவ்ருத்திதாமத்நிலிருப்பவர்களுக்கு (வேறுவிருப்பமின்றி) ப்ரவ்ருதநியென்னும் தர்மம் காணப்படுவதுபோல ஞானநிஷ்டையிலுள்ளவர்களுக்கு வேறுபொருளில் விருப்பமிராது. [1]வேதங்களையறிந்தவர்களும் வேதத்தில் கூறப்பட்ட விதிகளில் நிலைபெற்றவர்களும் துர்லபர்கள். அவர்கள் மோக்ஷமென்னும் பயன் பெரிதாயிருப்பதால் அதனைக்கருதி மிகச்சிறந்த ஞானவழியை விரும்புகிறார்கள். சிலர் வேதத்தின்கருத்து ஞானவழியில் நிலைபெற்றிருப்பதை அறியவில்லை. ஸாதுக்களால் ஆசரிக்கப்பட்டிருப்பதால் இந்த ஞானவழியானது இகழதற்கதன்று. எதையடைந்து பரகதியென்னும் மோக்ஷத்தையடைகிறானே அஃது இந்த ஞானமாகிறது. சரீரத்தில் அபிமானமுள்ளவன் அவிவேகத்தால் ராஜஸ தாமஸங்களான காமம் கோபமுதலிய குணங்களுடன்கூடி எல்லாப்பொருள்களையும் அடையமுயல்வான். ஆகையால், சரீரத்தைவிட்டு விலகுவதாகிய மோக்ஷத்தை அடையிரும்புகிறவன் அசுத்தமானகர்மத்தைச் செய்யாமலிருக்கவேண்டும்; கர்மங்களாலுண்டாகும்சித்த சுத்தியென்ற மோக்ஷவழியைச்செய்துகொள்ளவேண்டி அழகான உலகங்களை அடையவிரும்பாமலிருக்கவேண்டும். புடம்போட்ட பொன்னைத்து இரும்புடன்சேர்க்கப்பட்டால் விளங்காமல்போவதுபோல மனத்திலுள்ள அழுக்குப்போகாதவனிடம் உபதேசிக்கப்படும் ஞானமானது விளங்காது. ஆதமாவின்குணத்தையடைந்திலர் ஸம்ஸாரசக்ரமென்ற பந்தத்திலிருந்து விடுபட்டவர்களாகிறார்கள். மற்றவர்கள் கஷ்டமான தவந்தவங்களுடன்கூடியவர்களும் அப்படியே துக்கத்தையே பெரிதாயடைகிறவர்களுமாயிருப்பார்கள். அவர்கள் தம் [1]கர்மத்திற்குஒத்ததானபிறவியில் திரும்பவும் திரும்பவும் பிறக்கிறவர்களும் எப்பொழுதும் கோபத்தாலும் லோபத்தாலும் மதத்தாலும் பிடிக்கப்பட்டவர்களும் அறிவறற மனமுள்ளவர்களுமாயிருப்பார்கள். மரத்தின்வேண்டாதிழலானது நிலையுள்ளதாயில்லாததுபோல (ஸம்ஸாரத்திலுள்ள) குணங்களும் நினைக்கத்தக்கவைகளாயிருக்கின்

[1] ஒருசொல விடப்பட்டது.

றனவென்று அறிஞர்கள் அறிகிறார்கள். பேராசையால் காமத்தையும் கோபத்தையும் தொடர்ந்து தர்மவழியைமீறிச்சென்று அதர்மத்தைச் செய்கிறவன் மூலத்துடன் நாசமடைகிறான். சஞ்சலமான மனமுள்ளவன் உறுதியானஞானத்தையடையாமல் சஞ்சலமான பொருள்களை அடைவான். ஆகையால், சப்தமுதலியவிஷயங்களை மிகஆசையுடன் அடையமுயலாமலிருக்கவேண்டும். (அன்றியும்) கோபமும் ஸந்தோஷமும் துன்பமும் ஒன்றையொன்று அடித்துஉண்டாகும். யாவற்றையும்-அறிந்த மனிதன் குணங்களை அடையவேண்டும். கோபம் ஸந்தோஷம் ஸுகம் துக்கம் விருப்பு வெறுப்புமுதலான த்வந்த்வங்களை வெல்லவேண்டும். ஸத்வம் ரஜஸ் தமஸ்என்ற குணங்களுள்ளதும் ஐந்துபூதங்களையும்உருவமாகக்கொண்டதுமான சரீரத்தில் இந்தமனிதன் எதைத் தூக்கிறான்? இகழ்ச்சியாய்ப்பேசிக்கொண்டு எதை நிந்திக்கிறான்? அறிவில்லாதவர்கள் ஸ்பர்சம் ரூபம் ரஸமுதலியவைகளில் பற்றுதலையடைகிறார்கள். மாறுபட்டஞானத்தால் தம் சரீரத்தைப் பூமியிலிருந்துண்டானகார்யமென்று அறிகிறார்களில்லை. மண்ணால் செய்யப்பட்டவீடானது மண்ணாலேயே எவ்விதம்பூசப்படுகிறதோ அதுபோலப் பூமியிலிருந்துண்டான இச்சரீரமானது பூமியின்கார்யமான அன்னத்தால் நாசமின்றி ஜீவிக்கிறது. தேனும்எண்ணெயும் பாலும் நெய்யும் மாம்ஸங்களும் உப்பும் வெல்லமும் தான்யங்களும் கனிகளும் கிழங்குகளும் ஜலத்துடன்கூடிய பூமியின்கார்யங்கள். அரண்யத்தையடைந்தமனிதன் எவ்விதம் உத்ஸாஹத்தையடையாமலும், ருசியில்லாததும் சரீரயாத்ரைக்குரியதும் அல்பமுமான ஆஹாரத்தைப்பூஜித்துக்கொண்டுமிருப்பானோ அவ்விதமே ஸம்ஸாரமென்னும்அரண்யத்தையடைந்தமனிதன்விசேஷமானஸ்ரமமுள்ளவனும், நோயாளியானவன் மருந்தையுண்ணுவதுபோலச் சரீரயாத்ரைக்குமட்டில் வேண்டியஆஹாரத்தை உண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும். ஸம்ஸாரமார்க்கத்தால் விஷயங்களையடையவேண்டிச்செல்பவன், வழியைவிட்டுமீறி ஸுகசாரம்செய்பவன் துஷ்டமிருகங்களுக்கு இரையாவதுபோலாவான். ஆகையால், விஷயஸுகத்தைக்கருதிக்கொண்டு செல்லாமலிருக்கவேண்டும்; சென்றால் தப்புவழியிற் செல்வான். ஆகையால்; துன்பமில்லாதவழியையடைந்து அதைத் தொடர்ச்சியாய் ஸ்மரிக்கவேண்டும். அரண்யத்தில் பலஇலைகளும் கனிகளுமுள்ளவைகளான பலமரங்களிருக்கின்றன. அவற்றைப் புஜிக்கும் முனிவர்களும் இருக்கின்றனர். ஆகையால், அரண்யமானது மிகச்சிறந்ததாகிறது. சாஸ்திரங்களாலும் யுக்திகளாலும் புக

ழாலும் பராக்ரமத்தாலும் ஸ்த்யத்தாலும் சுத்தியாலும் நேர்மையாலும் [1]த்யாகத்தாலும் தேஜஸாலும் நன்னடக்கையாலும் பொறுமையாலும் தைர்யத்தாலும் புத்தியாலும் மனத்தாலும் ஆலோசனையாலும் முறையாக எல்லாப்பொருள்களையும் கிடைததமட்டில் அனுபவிக்க வேண்டும். சாந்தியைவிரும்பும்மனிதன் கம்பீரமானபுத்தியுடன் இந்த்ரியங்களை நன்முயடக்கவேண்டும். ஜந்துக்கள் ஸத்வத்தாலும் ரஜஸாலும்தமஸாலும் அவிவேகத்தையடைந்து அஜ்ஞானத்தால்மூடிகளை போல மிகவும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஆகையால், அஜ்ஞானத்தாலுண்டாகும் குற்றங்களை நன்முய்ப் பரீக்ஷைசெய்யவேண்டும். அஜ்ஞானத்தாலுண்டாகும் அஹங்காரத்தை எப்பொழுதும் விலக்க வேண்டும். மஹாபூதங்களும் இந்த்ரியங்களும் ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற குணங்களும் சரீரத்திறகுக்காரணமென்று தெரிந்துகொள். ஆகையால், இவைகள் பகவானல்ல. அந்தப்பகவானையும் அருகில் செல்லக்கடினமான ம்ருத்யுவையும் உபாயத்துடன்சொல்லுகிறேன். ராஸ்வரருடன்கூடியமூன்றுலகமும் அஹங்காரத்தில் நிலைபெற்றிருக்கின்றன. ஒரேநிலையுள்ளகாலமானது இவ்வுலகில் அந்தஅந்தருதுக்களுக்குரிய குணங்களைக்காண்பிக்கிறதுபோல ப்ராணிகளிடங்களில் அஹங்காரமானது [2]கர்மங்களைச்செய்விக்கக் காரணமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும். தமஸானது அவிவேகத்தையுண்டுபண்ணுவதும் கறுத்ததும் அஜ்ஞானத்திலிருந்துண்டானதுமாயிருப்பதென்று தெரிந்துகொள்ளவேண்டும். பிறகு, பெரியஅஹங்காரமானது ப்ரக்ருதியின்குணங்களிலிருந்து உண்டாயிற்று. அஹங்காரத்திற்குப்பிறகு நிரும்பவும் ப்ரக்ருதியின்குணங்களிலிருந்து பூதக்கூட்டம்உண்டாயிறதென்று கூறப்படுகிறது. அந்தக்குணங்களையும் கேள். அந்தமூன்றுகுணங்களினாலும் இன்பத்துடனும் துன்பத்துடனும்கூடியவைகளென்று தெரிந்துகொள். ஸத்வம் ரஜஸ தமஸ் என்ற குணங்களின் கார்யங்களைத் தெரிந்துகொள். தெளிவு ஸந்தோஷத்தாலுண்டாகும்ப்ரியம் ஆயாஸமில்லாமை தைர்யம் கிளைப்புஇவைகள் ஸத்வகுணத்தின்கார்யங்களென்றறியவேண்டும். ராஜஸகுணங்களையும் தாமஸகுணங்களையும் கேள். ஸந்தோஷமில்லாமை பொறுமை அதைர்யம் விஷயமுதலியவைகளில் த்ருப்தியில்லாமைஎன்ற இவைகள் ரஜோகுணத்தின்கார்யங்கள். பிறகு, தமோகுணகார்யங்களையும் கேள். அவிவேகம் மயக்கம் தூக்கம் தூக்கம் சோம்பல அஜாக்ரதை வ்ருத்தம் கார்யங்களில்தள்ர்ச்சியாயிருப்பது இவை

1 ' வைராக்யம் ' என்பது பழையஉரை. 2 வேறுபாடம்.

தமோகுணத்தின்தார்யங்கள். காமம் கோபம் அஜாக்ரதை பேராசை அவிவேகம் பயம் சோர்வு வருத்தம் சோகம் ஊக்கமில்லாமை அபிமானம் கர்வம் நாஸ்திக்யம் இவைமுதலான தோஷங்களின்பலாபலத்தைப் பரீக்ஷைசெய்து இவைகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளைத் தொடர்ந்திருப்பதையும் மனத்தில் இவைகளுக்குள்ளநிலையையும் கவனித்துப்பார்க்கவேண்டும். இவ்வுலகம் எதில் நிலைபெறறிருக்கிறதோ எதுழிருக்கும்பொழுது நல்லஅறிவுவெளியில்செல்லுகிறதோ அந்த அறங்காரமானது எல்லாப்பூதங்களையும்விட மேலானதென்று எப்பொழுதும் பார்க்கவேண்டும். ஸூக்ஷ்மமான தன்புத்தியால் எப்பொழுது இவ்விதம்பார்க்கிறவனுகிறனே அப்பொழுதுதான் அதன் உருவம் நிர்மலமாய்த் தானுகத்தோன்றும்' என்றுசொன்னர்.

சிஷ்யன், '(முன்னோர்களால்) எந்தத்தோஷங்கள் மனத்தால் விலக்கப்பட்டன? எவைகள் புத்தியால் பலவீனமாக்கப்பட்டன? எவைகள் திரும்பவும் திரும்பவும் வருகின்றன? எவைகள் அவிவேகத்தால் [1]அசைவற்றனபோலிருக்கின்றன? அறிவுள்ளவன் புத்தியாலும் யுக்திகளாலும் எவைகளின் பலாபலத்தைக்கவனிக்கவேண்டும்? ப்ரபுவே! இவையாவற்றையும் நான் அறிந்துகொள்ளும்படி எனக்கு உபதேசிக்கவேண்டும். அறிவுள்ளவரே! கேட்கவிருப்பமுள்ளஎன்பொருட்டு இதைப் புத்தியில்நிச்சயித்தபடி சொல்லவேண்டும். அறிவுள்ளவர்கள் ஒவ்வொருதோஷத்திலும் தொடக்கத்திலும் முடிவிலும் அதன்நீக்கத்திலும் எவ்விதம் யுக்திசொலலப்படுமோ அவ்விதம்கூறுவார்களே' என்றுகேட்க, குருசொல்லத்தொடங்கினர் 'தோஷங்கள் மூலத்தில்அறுக்கப்படுவதால விசேஷமாய்ச் சுத்திபெற்றமனமுள்ளவனுபிருப்பவன் முக்தியடைவான். இரும்பானதுஇரும்பாலுண்டுபண்ணப்பட்ட விலங்கை எவ்விதம்அறுத்துவிட்டுத் தானும் முனையற்றுப்போகிறதோ அதுபோல ஞானவாஸனையுள்ளபுத்தியானது கூடப்பிறந்தவைகளும்ரஜோகுணத்தாலுண்டானவைகளுமான, தோஷங்களை நாசம்செய்து அவைகளுடன்கூடத்தானும் நாசமடைகிறது. கூடப்பிறந்தவைகளான தாமஸ தோஷங்களால் அழுக்குள்ளபுத்தியுடையவன் நாசமடைவான். பரிசுத்தமானபுத்தியுள்ளப்ராம்மணன் ஸத்வகுணத்திலிருந்துகொண்டு ஸமயங்களிலுண்டாகும் ராஜஸதாமஸதோஷங்களைப் புத்தியாலேயே விலக்கிக்கொள்ளவேண்டும். நலலபுத்தியையடைந்து பரிசுத்தமான மனமுள்ளவனுயிருப்பவன் மனத்தால அந்தப்புத்தியையும் விலக்க

1 'பயனத்தவைகள்போல' என்பது வேறுபாடம்.

வேண்டும். ராஜஸமுதலிய அந்தத்தோஷமெல்லாம் சரீரிகளுக்கு (சரீரத்தையடையக்) காரணமாகிறது. அறிவுள்ளவனுக்கு ஸத்வ குணமானது ப்ரம்மத்தையடையக் காரணமாகிறது. ஆகையால், புத்தியுள்ளவன் ரஜோகுணத்தையும் தமோகுணத்தையும் விலக்க வேண்டும். ரஜஸாலும் தமஸாலும் விடுபட்ட ஸத்வகுணமானது கடற்றநிலையையடையும். ராஜஸதாமஸங்களான உணவுகளையும் எப்பொழுதும் விலக்கவேண்டும். அவிவேசத்திலிருந்து விலகச்செய்யாதவைகளான அந்தஆகாரங்கள் ப்ரம்மத்தை அடையவிடா. மந்திரத்துடன்கூடிய யாகத்திலுள்ள மாம்ஸமுதலியவைகளிலும் பாவமுண்டென்று சிலர் கூறுவார்கள். (அது சரியன்று.) அந்தமாம்ஸமுதலியவைதாம் பரிசுத்தமானதர்மத்தைப் பரிபாலிக்கவும் சித்தசுத்தி வழியாக வைராக்யத்தைப்பெறவும் காரணமாகின்றன. ரஜோகுணத்துடன்கூடிய மனிதன் போகங்களுள்ளவைகளும் பொருள்களுள்ளவைகளுமான கார்ய்ங்களைச்செய்வான்; போகங்களினத்தையும்இடைவிடாமல அனுபவிக்கமுயல்வான். தமோகுணத்தால் (பிறருக்குத்) துன்பத்தையுண்டுபண்ணுவதில் உத்ஸாஹமுள்ளவனும் சோம்பலுடனும் உறக்கத்துடனும்கூடியவனுமாயிருந்துகொண்டு போராசையுள்ளவைகளும் கோபத்தாலுண்டானவைகளுமான கார்யங்களைச் செய்வான். ஸத்வகுணத்திலிருப்பவன் ஸாத்விகமும் பரிசுத்தமுமானபொருள்களையடைவதறகுப் பார்ப்பான். ஸத்வகுணத்தையடைந்த அந்த மனிதன் பரிசுத்தனும் ஸுப்ரத்துள்ளவனும் ப்ரத்தையும்வித்தையுமுள்ளவனுமாயிருப்பான்' என்றுசொன்னர்.

இருநூற்றுப்பதினைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரமாத்மஜ்ஞானமில்லாதவர்கள் படும்துன்பத்தையும் அத்துன்பம்இல்லாதத்தக்க உபாயத்தையும் சொல்லியது.)

1 பரதர்களிற்சிறந்தவனே! ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் 2மோஹம் உண்டுபண்ணப்படுகிறது. கோபம்லோபம் பயம்

---

1 'குருசொல்லத்தொடங்கினார்' என்றபாடம் ஸரியன்று. 'பரதர்ஷப!' என்றுஅழைத்து, உபதேசிக்கப்படும்வசனம் குருவின்உபதேசமாதல் பொருத்தாது.

2 உணமைப்பொருளின உருவம் மறைதல, அது வேறுபொருளின் உருவமாய்த்தோற்றுதல இவ்விரண்டும் மோஹமென்றுகூறப்படும். இவைகளில் முதலிலுள்ளது ஆவரணசக்தியின்காரியமென்றும் இரண்டாவது விக்ஷேபசக்தியினகார்யமென்றும் இவ்விரண்டுசக்திகளும் முறையே தமஸ் ரஜஸ்என்ற பதங்களாலே கூறப்படுகினறனவென்றும் தெரிந்துகொள்க.

கர்வம் இவைகளைவிலக்கிக்கொள்வதால் மனிதன் பரிசுத்தனுவான்.பரி சுத்தர்களானவர்கள் சிறந்தவரும் பரமாத்மாவும் தேவரும்,அழிவில்லா தவரும்குறைவில்லாதவரும் ஸர்வைச்வரமானஸ்திதியுள்ளவரும் தேவர் களில்மிகப்பூஜ்யருமான அந்தவிஷ்ணுவை அறிகிறார்கள். அந்தவிஷ்ணு வின்மாயையால் மறைக்கப்பட்ட அங்கங்களுள்ளவர்களும் ஞானத்தி லிருந்து நழுவினவர்களும் போகங்களில்லாதவர்களுமானமனிதர்கள், பிறகு, புத்தியிலுள்ளபெரியஅவிவேகத்தால் ஆசையைஅடைகிறார் கள்; ஆசையிலிருந்து கோபத்தையடைந்து அதன்பிறகு லோபத்தை யும் மோஹத்தையுமடைகிறார்கள். அவற்றிலிருந்து அபிமானத்தை யும் கர்வத்தையும் அகங்காரத்தையும் அடைகிறார்கள். அந்தஅகங்கா ரத்திலிருந்து கார்யங்கள் உண்டாகின்றன. கார்யங்களால ஸ்நேஹப் பற்றையும் ஸ்நேஹத்திலிருந்து பிறகு சோகத்தையும் அடைகிறார் கள்.அதன்பிறகு, துக்கத்திறகுக் காரணமான முயற்சியுள்ளவர்களும் பிறப்பிலும் கிழத்தனத்திலும் முயற்சிசெய்துகொண்டவர்களுமாகி றார்கள். பிறப்பில், சுக்லத்தாலும் சோணிதத்தாலும் உண்டானதும் மலமூத்திரங்களின்கசிவுள்ளதும்உதிரத்தின் உத்பத்தியால கசடுள்ள தும்மான கர்ப்பவாஸத்தையடைகிறார்கள். ஆசைகளுக்கு வசப்பட்டவ னும் அவைகளால் கட்டப்பட்டவனும் அவைகளேயேதொடர்ந்து ஈன்குபுறத்திலும் ஸஞ்சரிப்பவனும் நரகக்குழியிலிருப்பவனும் ஆசையென்றகயிறுகளால கட்டப்பட்டவனும் புண்யபாவங்களால் ஏவப்பட்டஅங்கங்களுள்ளவனுமாகி அவன் புழுவைப்போலப் பிறக் கிறான். கொசுகுகளாலும் மூட்டுப்பூச்சிகளாலும் கடிக்கப்பட்டவ னும் சித்ரவதைபோன்ற துன்பமுள்ளவனும் பலவிதநோய்களால் நிறைந்தவனுமாகிவருந்தி பௌவனப்பருவத்தை அடைகிறான்.பிறவி களுக்குத்தக்க கர்மங்களுக்கேற்பட்டுச் செல்லுகிறவனை அந்தமனி தன் பெண்ணென்கிறநரகத்தைப் பெறலுக்கொண்டு தன்தன்ஸுகத் தை அடையவேண்டுமென்ற ஆசையால திரும்பவும் கயிறு போலக் கர்மத்தை நீளவிடுகிறான். பட்டனத்திற்கும் நிலத் திற்கும்வேண்டிப் படும்துன்பம் சொலலமுடியாது. அந்தஸம யத்தில் (அவனை) இகழ்ந்துபேசும் மனிதன் யார்? அவன் மிகவும் நரகத்தில் தபிக்கச்செய்யப்படுவான். அதிலிருந்து கிழத் தனத்திற்குச் சென்றால் அதிலும் திரும்பவும் கர்மத்தைச்செய்யத் தொடங்குவான். பிறகும், பகவான் தூங்கப்படுவாரோவெனில் (அஃ தில்லை). உனக்கு அதிகமாய் என்னசொலலப்போகிறேன்? ஸம்ஸார மென்ற யந்த்ரத்தை நடைபெறச்செய்கிறவர்கள் இவைகளென்று

தெரிந்துகொள்ளவேண்டும். அவர்கள் ப்ரக்ருதியென்னும் மாயையி னுடைய க்ஷேத்ரங்களாயிருக்கிறார்கள். அந்தக்ஷேத்ரத்தில் மனிதர் கள் க்ஷேத்ரஜ்ஞரூபியாயிருக்கிறார்கள். ஆகையால்தான், மனிதன் ஸாமான்யமாயும் விசேஷமாயும் அவர்களை விலக்கவேண்டும். [1]க்ருத் யைபோன்ற கோரமானஉருவமுள்ள இந்தப்பெண்கள் அவிவேகி களை மயக்குவார்கள். ஆகையால், ஸகாதனமாயிருக்கும்இந்திரியங் களின்உருவமானது ரஜோகுணத்தில் மூழ்கியிருக்கிறது. பெண் வடிவமுள்ளதான ஆசையென்னும்காரணத்திலிருந்து ப்ராணிகள் ஜனிக்கின்றன. தன்தேகத்திலிருந்துஉண்டானவைகளும் மனித னென்று பெயரில்லாதவைகளுமானகிருமிகளை அங்கத்திலிருந்து விலக்குவதுபோலத் தானல்லாதவைகளும் மனிதனென்றுபெயருள்ள வைகளுமானமக்களாகியகிருமிகளையும் விலக்கவேண்டும். இயற்கையி னலோ கர்மவசத்தினலோ சரீரத்திலுள்ளசுக்லத்திலிருந்தும் வேர் வையிலிருந்தும் ஜந்துக்கள் உண்டாகின்றன. புத்தியுள்ளவன் அவ ற்றைஉபேக்ஷிக்கவேண்டும். ரஜோகுணமானது தமோகுணத்தில லய த்தைஅடைகிறது. ஸத்வகுணமும் ரஜோகுணத்தில் லயப்பட்டிருக்கி றது. (இவ்விதமானலயஸ்தானமும்) புத்திக்கும் அகங்காரத்திற்கும் காரணமுமான அஜ்ஞானமானது ஞானஸ்வரூபத்தில் லயப்படு கிறது. சரீரிகளுக்கு (சரீரமுண்டாகும்விஷயத்தில்) அவ்விதஅஜ் ஞானத்தைக காரணமென்று கூறுகிறார்கள். அந்த அஜ்ஞானத்திற கும் மூலமானஞானமானது ஜீவனென்றுபெயருள்ளதாயிருக்கிறது. காலத்துடன்கூடியகர்மத்தால ஸம்ஸாரத்தில் சுழலுதலுண்டாகிறது. இந்தஜீவன் கனவில சரீரமுள்ளவன்போலமனததால் எவ்விதம்வினை யாடுகிறானோ அதுபோலக் கர்மங்களைஉள்ளிலகொண்டகுணங்களால் (தாயின்) கர்ப்பத்தில் காணப்படுகிறான். (கர்ப்பத்திலிருக்குமிவன்) காரணபூதமானகர்மத்தால் எந்தஎந்தஇந்திரியத்தைநோக்கி ஆசை யுறறமனத்தினலை ஏவப்படுகிறானோ அந்தஅந்தஇந்திரியமானது அகங் காரத்திலிருந்து (இவனுக்கு) உண்டாகிறது. விஷயபாவனையுடன் கூடியமனமுள்ளஇந்தஜீவனுக்குச் சப்தங்களிலுள்ளஆசையால செவி உண்டாகிறது. அதுபோல ரூபத்திலுள்ள ஆசையால் கண்ணும் மனத்தைஅறியும்ஆசையால் மூக்கும், [2]ஸ்பர்சத்திற்காக த்வக்கும் அதுபோலச் சரீரம்நடைபெறவேண்டிப் ப்ராணன், அபா

---

1 துன்பம்செய்யும் ஒருபெண்தேவதை. 'பகைவர்களைக்கொல்வதற்காக மஹாத்மாவினல் படைக்கப்பட்ட ஒருசக்தி' என்பது பழையஉரை.

2 வேறுபாடும்.

னன், வியானன், உதானன், ஸமானன்என்னும் ஐந்துவித மானவாயுவுமுண்டாகின்றன. மனிதன் நன்முகஉண்டானவை களும் கர்மத்தாலுண்டானவைகளும் ஆதியிலும்முடிவிலும்மத்தியி லும்துக்கமுள்ளவைகளும் சரீரத்தைச்சேர்ந்தவைகளும்மனத்தைச் சேர்ந்தவைகளுமான அங்கங்களுடன் [1]ப்ரம்மத்தினற்சூழப்பட்டுப் பிறக்கிறான். (சரீரத்தை) அடைவதால் துக்கமுண்டாகிறதென்று தெரிந்துகொள்ளவேண்டும். அந்தத்துக்கமானது (சரீரத்தில்) அபி மானத்தாலும் சரீரத்தைவிடுவதென்னும்மரணத்தாலும் வளர்ச்சி அடைகிறது. அக்காரணங்களிலிருந்து உண்டாகும் துக்கத்தைத் தடைசெய்துகொள்ளவேண்டும். அதன் தடையை அறிந்தவன் முத்திபெறுவான். இந்திரியங்களுக்கு உற்பத்தி லயம்இரண்டும் ரஜோகுணத்தில்தான்என்று பரீக்ஷைசெய்து சாஸ்திரமென்னும்கண் ணால் உள்ளபடி அறிந்துகொண்டு ஸஞ்சரிக்கவேண்டும். ஞானேந் திரியங்கள் இந்திரியங்களுக்குரியவிஷயங்களே (அடைந்தாலும்) ஆசையற்றமனிதனைப் பற்றுகிறதில்லை. பொறிகள் [2]விலகிப்போ னால் ஜீவனனவன் திரும்பவும் சரீரத்தை அடையத்தக்கவனாக மாட்டான்.

இருநூற்றுப்பதினாறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரமாத்மாவை அறிவதற்கு உபாயமான ப்ரம்மசர்யமுதலியவற்றை விளக்கியது.)

இந்திரியங்களை வெல்லும் விஷயத்தில் உபாயத்தை உள்ளபடி சொல்லுகிறேன். அரசனே! சாஸ்திரமென்னும் கண்ணுள்தத்வஜ்ஞா னத்தை அடைந்து (சமமுதலியகுணங்களை) அனுஷ்டிப்பவன் உத்தம கதியைப்பெறுவான். எல்லாப்பிராணிகளுள்ளும் மனிதன் மிகச் சிறந்தவனென்றுசொல்லப்படுகிறான். மனிதர்களுள்ப்ராம்மணர்களை யும் ப்ராம்மணர்களுள் மந்திரங்களைக்கண்டரிஷிகளையும் மிகச்சிறந்த வர்களென்று கூறுகிறார்கள். அந்தப்ராம்மணர்கள் எல்லாப்பிராணி களுக்கும் ஆத்மாவைப்போன்றவர்களும்எல்லாவறறையும்அறிந்தவர் களும் எல்லாவறறையும்கண்டவர்களும் வேதங்களையும் சாஸ்திரங் களையும் அறிந்தவர்களும் தத்வார்த்தங்களில் நிச்சயமடைந்தவர்களு மாயிருப்பார்கள். கல்யாணில்லாதகுருவன் வழியில் கஷ்டங்களையடை

---

1 'சரீரத்துடன்' என்பது வேறுபாடம். 2 வேறுபாடம்.

வதுபோல ஞானமில்லாதவன் உலகத்தில் கஷ்டங்களை அடைவான். ஆகையால், [1]ஞானத்தையடைந்தவர்கள் மேலானவர்களாகிறார்கள். தர்மத்தில்விருப்பமுள்ளவர்கள் சாஸ்திரத்தில்சொல்லியபடி அந்த அந்தத்தர்மங்களை உபாவலிக்கிறார்கள். அவர்களுக்கு [2]மனமொழிமெய்களின் பரிசுத்தி, பொறுமை, ஸத்யம், தைர்யம் மறதியில்லாமை இந்தக்குணங்களைத்தவிர வேறு [3]பொதுவானபொருளில்லை. தர்மமறிந்தவர்கள் எல்லாத்தர்மங்களிலும் சுபமானகுணங்களை அறிவிக்கிறார்கள். [4]ப்ரம்மதத்தின்ஸ்வரூபம்போன்ற இந்தப்ரம்மசர்யமென்று கூறப்படுகிறதர்மமானது எல்லாத்தர்மங்களையும்விட மேலானது. அதனால் பரகதியென்னும்மோக்ஷத்தை அடைகிறார்கள். அந்தப்ரம்மஸ்வரூபமானது லிங்கசரீரத்தின்பற்றுதலில்லாததும், சப்தமும்ஸ்பர்சமுமில்லாததும், செவியென்னும்உபாதியால் சப்தத்தைப்பற்றியஅறிவுஸ்வரூபமும், கண்ணென்றஉபாதியால் ரூபங்களின் அறிவுமாயிருக்கிறது. வாக்காலசொல்லத்தக்கவிஷயமுள்ளதும்(இந்திரியங்களின்) ஸம்பந்தமில்லாததும் மனத்திலுள்ளதும் கல்மஷமில்லாததுமானப்ரம்மசர்யத்தைப் புத்தியால நிச்சயம்செய்யவேண்டும். (ப்ரம்மசர்யத்தில்) ஒழுங்காகநடப்பவன் ப்ரம்மலோகத்தையடைவான். நடுநிலைமையுள்ளவன் தேவர்களையடைவான். தாழ்ந்தநிலைமையை அடைந்தவன் அறிவுள்ளபிராம்மணஸ்ரேஷ்டனுக்குப்பிறப்பான். ப்ரம்மசர்யத்தையனுஷ்டிப்பது மிகக்கடினமுர். அதற்குத்தக்கஉபாயத்தை என்னிடம் கேள். பிராம்மணன் மிகக்கோபமுள்ளதும் வேகமுள்ளதுமானமனத்தை அடக்கவேண்டும்; பெண்களைப்பறறியகதைகளைக் கேட்கக்கூடாது. ஆடையில்லாதபெண்களைப் பார்க்கக்கூடாது. எவ்விதமாவது இந்தப்பெண்களைக்கண்டால் வன்மையற்றவர்களுக்கு ரஜோகுணத்தால் காமம் உண்டாகும். காமமுண்டானவனுக்குக் க்ருச்ரமென்னும்விரதத்தைச் செய்யவேண்டும். ஒருநாளைக்குமூன்றுமுறை ஜலத்தில் முழுகவேண்டும். ஜலத்திலமுழுகிக்கொண்டேமனத்தால அகமர்ஷணமென்னும்மந்திரத்தை மூன்றுமுறை ஜபிக்கவேண்டும். பண்டிதனானவன் இவ்விதம் உள்ளிலுண்டான ரஜோகுணஸ்வரூபமானபாவத்தை அறிவுடன்கூடியதும் நீண்டஆலோசனையுள்ளதுமானமனத்தால வரிக்கவேண்டும். மலத்துடன்கூடிய குணபமென்

1 'ப்ரம்மதத்தை அறிந்தவர்கள்' என்பது பழையஉரை.

2 'காமமில்லாமை மனதின்சுத்தி, பொய்சொல்லாமை மொழியின் சுத்தி, கொலைசெய்யாமை மெய்யின்சுத்தி' என்பது பழையஉரை.

3 மோக்ஷம் என்பது பழையஉரை.

4 ப்ரம்மத்தையடைய ஸாதனமான என்பது கருத்து.

ணும்பையான தூணிடைவெளியில்லாமல்கட்டப்பட்டிருக்கிறதுபோலச் சரீரத்தைஅடைத்துஆத்மாவானது சரீரமென்ற பக்தமுள்ளதென்று அறிந்துகொள்ளவேண்டும். தூர்க்கந்தமான மலத்துடன்கூடியதும் ஒட்டையில்லாததுமானஒன்றில் கட்டப்பட்டிருந்த ஒருஜந்துவப்படியிருக்குமோ அப்படியிருப்பதாகவே தேகத்தில்புகுந்து அமைக்கப்பட்டிருக்கிறஆத்மாவையும் அறியவேண்டும். மலங்களால்நிறைந்ததும், ஸ்லேஷ்மங்களின் அம்சங்களால்நிறைக்கப்பட்டிருக்கிறதுமான அந்தப்பாண்டத்தை மனிதன் பார்க்கவிரும்பமாட்டான்; தொடமுயல்வானென்பது எங்கே? மலங்களால்நிறைந்ததும் வெளியில்வேர்வை நீரால்சூழப்பட்டதும் அருவருக்கத்தக்கதுமான ஆண்பெண்களுடைய சரீரமென்னும்பாண்டமானது நரகமென்பதுஅறிவுள்ளவர்களுடைய கொள்கை. ஓட்டைக்குடக்கிலுள்ளஜலமானது நிச்சயம் ஒழுகிப்போவதுபோலப் பிராணிகளின்சரீரங்களினுள்ளிருக்கும் ஜலமானது ஒழுகுகிறது. ஸ்லேஷ்மமும் கண்ணீரும் மூத்திரத்தின்பிந்துவும் மலமும் சுக்லமும் பிசுக்குள்ள கபக்கூட்டத்தின்பெருக்கமும்உண்டாகின்றன. மனமே! (இவைகளிலிருந்து) விடுவி. ரஸங்கள், நாடிக்கூட்டங்களின்வழியாக மனிதர்களின் வாதத்தையும் பித்தத்தையும் கபத்தையும் உதிரத்தையும் தோலையும் மாம்ஸத்தையும் நரம்பையும் எலும்பையும் மஜ்ஜையையுமுடைய சரீரத்தைத் திருப்திசெய்கின்றன. ஐந்துஇந்திரியங்களுக்குமுரிய சக்தியை அளிப்பவைகளான [1]பந்துநாடிகள் இச்சரீரத்தில இருக்கின்றனவென்று தெரிந்துகொள்ளவேண்டும். அந்தப் பந்துநாடிகளிலுமிருந்து ஸூக்ஷ்மமானவேறுநாடிகள் ஆயிரக்கணக்காக உண்டாகின்றன. இவ்விதம் ஆறுகள் கடலைத்திருப்திசெய்வதுபோல, ரஸமென்னும் ஜலமுள்ள இந்நாடிகள்எல்லாம்தேகமென்னும்கடலைக் காலத்திற்குத்தக்கபடி திருப்திசெய்கின்றன. அவைகளுள், ஹ்ருதயமென்றமாம்ஸபிண்டத்தின்நடுவில் மனத்தைத்தரிப்பதான ஒருநாடியானது காமத்தாலுண்டாகும்மனிதர்களின்சுக்லத்தை எல்லா அங்கங்களிலிருந்தும் விடுகிறது. எல்லாஅங்கங்களிலும் படர்ந்தவைகளும் அந்தஹ்ருந்நாடியைத்தொடர்ந்தவைகளுமான நாடிகள் பிரகாசமென்னும்குணத்தைத் தாங்கிக்கொண்டு கண்களிற்செல்லுகின்றன. பாலில்மறைந்திருக்கும்நெய்யானது மதனுக்களால் கடைந்து வெளியிடப்படுகிறதுபோலச் சுக்லமானது சரீரத்திலுள்ளஸங்கல்பத்தா

[1] முன்கூறிய வாதமுதலிய பதினுப்பாங்கைத திருப்திசெய்தவைகளான பத்துநாடிகள்.

வுண்டானமத்துக்களால் கடைந்து வெளியிடப்படுகிறது. இவ்விதம் கனவிலும் மனத்திலுள்ள ஸங்கல்பத்தாலுண்டாகும் காமமானது உண்டாகிறபொழுது இந்தமனிதனுடைய மேலுவஹநாடிகள் (ஸ்திரீசரீரத்தின்) பற்றுதலிலலாமலே உண்டாகும்சுக்லத்தைச் சரீரத்திலிருந்து வெளியிடுகின்றன. பூஜ்யரான அத்ரிமஹரிஷியானவர் அந்தச்சுக்லத்தின்உற்பத்தியை அறிகிறார். [1]புருஷர்களின்பீஜமான சுக்லமானது இந்திரனைத் தேவதையாகக்கொண்டது. ஆகையால், அது இந்திரியமென்று சொல்லப்படுகிறது. சுக்லமானது (வேறுஇடத்திற்குச்) செல்லுவதே பிராணிகளின் ஜாதிஸங்கரத்திற்குக்காரணமென்று தெரிந்துகொள்ளுகிறவர்கள் காமமற்றவர்களும்தோஷங்களேஎரிததவர்களுமாகிச்சரீரோற்பத்தியைஅடையமாட்டார்கள். சரீரம்நடைபெறவேண்டியதற்குரிய கர்மத்தைமட்டில் செய்கிறவனும் (யோகசக்தியுள்ள) மனத்தாலேயே முக்குணங்களும் ஸமமாயிருக்கும் நிலைமைக்கு வரும்படிசெய்து முடிவுக்காலத்தில் [2] பிராணன்களே மேலுவஹநாடியில செல்லும்படி செய்கிறவனுமாயிருப்பவன் முக்திஅடைகிறான்.மனத்தான்பலவிதமாயுண்டாகிறதென்னும்அறிவானது மனத்திற்கு உண்டாகவேண்டும். அவ்விதமஹராத்மாக்களின்மனமானது மந்திரவசியத்தியுள்ளதும் பிரகாசமுள்ளதும்நித்யமும் ரஜோகுணமில்லாததுமாகிறது. ஆகையால், அந்தமனத்தைநாசம்செய்யவேண்டிச் சுத்தமானகர்மத்தைச் செயயவேண்டும். சரீரத்திற்குக் காரணமானது இந்தக்கர்மதத்திலுண்டானதாயிருக்கிறது. அறிவுள்ளபுத்திமானுனவன் அவ்விதக்கர்மத்தைநினையாமலும் செய்யாமலுமிருக்கவேண்டும். ரஜஸையும்தமஸையும்விட்டபின்(மனிதன்) இவ்வுலகத்தில் தாழ்ந்ததியைஅடையமாட்டான். இளமைப்பருவத்தில் அடையப்படும்.அறிவானது மிகுத்தனதாலவலியிலலாதநிலையை அடைந்ததாகலாம். நன்றாகப்பக்குவமானபுத்தியுள்ளவன்முன்னுள்ள பாக்கியத்தால் மனத்திலுள்ளபலதத்தை அடைகிறான். மனிதன்இவ்விதம் மக்களிடத்திலும் மனிவிகளிடத்திலும் ஞாதிகளிடத்திலும் ஸம்பந்திகளிடத்திலும் உறவினர்களிடத்திலும் மனதில் ஆசையை அடைகிறான் ; வியாதிமுதலியவைகளால் பீடிக்கப்பட்டு அங்குரிங்கும்ஓடி அல்பஸுகத்தையும் அடையாமல் பலதுயரங்களால கஷ்டப்பட்டுப் பிறகு வெறுப்பைஅடைந்து ஞானமென்னும்மாத்தை அழித்

---

1 'த்ரீபீஜம்' என்று பாடங்கொண்டு, ' ஆன்னங்களின்ரஸம், மஹேவஹநாடி, காமம் இத்தறுன்றையும் காரணமாகக்கொண்ட சுக்லமானது' என்பது பழையஉரை.

2 வேறுபாடம்.

துப் பிறகு ஸுகத்தைப்பெறுவான். மிகவும்கஷ்டமானவழியைத் தாண்டியபின் உறுதியான நற்குணங்களுள்ளஇடத்தைப்பார்ப்பது போலத் தோஷங்களைவிட்டு விலகிச்சென்றவன் மோக்ஷத்தையடைகிறான்.

இருநூற்றுப்பதினேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வைராக்யமுதலிய மோக்ஷகாரணங்கள்.)

பிராணிகள் முடிவில்கஷ்டமானவிஷயங்களில் பற்றுதலுள்ளவைகளாயிருந்துகொண்டு கஷ்டப்படுகின்றன. இவைகளில்பற்றுதலில்லாதமஹாத்மாக்கள் உத்தமமானகதியை அடைகிறார்கள். புத்தியுள்ளவன் உலகமானது ஜனனம், மரணம், கிழத்தனம், துக்கங்கள், நோய்கள், மனத்திலுள்ளதுன்பங்கள்இவைகளால் நிரம்பியிருப்பதைக்கண்டு மோக்ஷத்திற்காக முயலவேண்டும்; வாக்காலும் மனத்தாலும் சரீரத்தாலும்பரிசுத்தனும் அகங்காரமில்லாதவனுமாயிருக்கவேண்டும்; மிக்கஅடக்கமுள்ளவனும் அறிவுள்ளவனும் பிச்சைஎடுப்பவனும் விருப்பமில்லாதவனுமாகி ஸுகமாகஸஞ்சரிக்கவேண்டும். மோக்ஷத்தைபடைத்தவர்களுக்கு ஸம்ஸாரபாசங்கள் அடங்கியஸைகளாயிருக்கின்றன. அந்தப்பாசங்களைவெளியிடத்தக்க (அஜ்ஞானத்தின்) ஸ்வரூபத்தை அறிவது கடினமென்றுதெரிந்துகொண்டிருந்தாலும் அவிவேகமுள்ளமனிதன் அந்தக்ஷணமே அபிமானத்தை அடைவான். இவ்விதம்பார்ப்பதும் பக்குக்களிடத்தில்ஸ்நேகசிந்தையுள்ளதும் பேதரூபதத்துவஜ்ஞர்களுடையதுமான ஆத்மாவை நான் உள்ளபடி இலலாததாகநினைக்கிறேன். அன்றியும், பிராணிகளிடம் தயைபாராட்டுவதாலும் மனத்திற்குஅபிமானமுண்டாகிறதென்றுதெரிந்துகொள்ளவேண்டும். உலகமானது கர்மத்தின்பயனென்றுதெரிந்துகொண்டு பிராணிகளிடம்தயைசெய்வதும் உபேக்ஷைசெய்யவேண்டும். நல்லினையோ தீவினையோ எதுசெய்யப்பட்டிருக்கிறதோ அதை உலகம் அடையும். ஆகையால், புத்தியாலும் செய்கைகளாலும் நல்வினைகளையே செய்யவேண்டும். நிர்மமையில்லாமை உண்மையுரைப்பது ஸகலப்பிராணிகளிடத்திலும்மேன்மை பொறுமை அஜாக்ரதையிலலாமைஇவைகள் எந்தமனிதனிடமிருக்கின்றனவோ அவன்

ஸுகமுள்ளவனுயிருப்பான். [1]சிறந்ததும் எல்லாப்பிராணிகளுக்கும் ஸுகத்தையளிப்பதுமான இந்தத்தர்மமானது தூக்கத்திலிருந்து விலகுவிப்பதென்று தெரிந்துகொள்ளுகிற உண்மையையறிந்தவன் ஸுகமுள்ளவனுவான். ஆகையால், புத்தியால் ஸமாதானமுள்ள மனத்தைப் பிராணிகளிடம் வைக்கவேண்டும். கேடு நினைக்கக் கூடாது. ஒன்றையும் விரும்பக்கூடாது. [2]தகாததையும்நிகழ்ச்சியானதையும் நிந்திக்கக்கூடாது. அன்றியும், பழுதில்லாதமுயற்சியுடன் மனத்தை ஞானத்தில பிரவேசிக்கச்செய்யவேண்டும். நழுவுமொழி கூறுவதால் அழகானஞானம் உண்டாவதைத்தடங்கும். கூறத்தக்க வசனத்தைப் பகுத்தறிந்துகொண்டு தர்மதத்வஸூக்ஷுமத்தையும் தெரிந்துகொண்டு உண்மையுள்ளதும் கேடிலலாததும் பிறர்குற்றத்தைவெளியிடாததுமான வசனத்தைச் சொலலவேண்டும். வஞ்சகமில்லாததும் குரூரமில்லாததும் கேடில்லாததும் பிறர்குறைதைவெளியிடாதும் இவைபோன்றதுமான வசனத்தைச் சலித்தலிலலாத மனத்துடன் மிதமாய்ப் பேசவேண்டும். ஸம்ஸாரத்தின்நீலேயானது சொல்லால் நீலேபெறுகிறதன்றே? வைராகயத்துடன் பேசுவாருகில் நல்லபுத்தியால்அனுக்ரஹிக்கப்பட்ட மனததுடன் தமோகுணத்தாலுண்டான (தன்னுடைய) கர்மத்தைச் சொல்லிக்கொள்ளலாம். ரஜோகுணத்தையடைந்த கருவிகளுடன கர்மங்களையடைகிறவன் இவ்வுலகில் துக்கத்தையநிகூடந்து நகரத்திறகுரியவனுவான். ஆகையால், மனத்தாலும் வாக்காலும் சரீரத்தாலும் தனக்குதவுதையுதை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும். விபரீதமானதிக்கென்று அறிந்துகொண்டும் (அதில்செல்லுகிறவனுடைய) நிறைந்த ஸுகமானது திருடர்களால் அபஹரிக்கப்படுவதுபோல ஸம்ஸாரத்தை அறிந்துகொண்டும் (அதில்செலலுகிறர்) அறிவிலலாதவர்கள் (ஆசைகளால்) அபஹரிக்கப்படுகிறார்கள். ஸம்ஸாரமார்க்கத்தை யடைந்திருப்பவன் விபரீதவழியைவிடவேண்டும். அவ்விதவிபரீததிலிலை (சென்றவனே) திருடர்களைக்கொன்றபின எவ்விதம் சுபமானதிக்கையடைகிறனே அதுபோல (ஸம்ஸாரத்திலிருப்பவன்) ராஜஸதாமஸங்களான கர்மங்களைவிட்டபின் க்ஷேமதத்தையடைவான். சேஷ்டைகளைவிட்டவனும் ஆசைப்படத்தக்க எல்லாப்பொருள்களிலிருந்துவிடுபட்டவனும் ஜனங்களில்லாதவிடத்தில் வஸிக்கிறவனும் ஸ்வதாவாகார

1 அதிகபாடமான இரண்டுஸ்லோகம் பொருத்தமில்லையாலல விடப்பட்டன.

2 'தகாததை நிந்திக்கூடாது. வசனசலனத்தையும்பரதூஷித்சிந்திக்கக்கூடாது' என்பது பழையஉரை.

முள்ளவனும் (மனத்தின்ஏகாக்ரபாவமென்ற) தவமுள்ளவனும் இந்திரியங்களையடக்கினவனும் ஞானத்தால் கிலேசங்களைவிரித்தவனும் ஸமாதிக்குரியஅங்கங்களை அனுஷ்டிப்பதில் உற்சாகமுள்ளவனுமான புத்தியுள்ளமனிதன் அசைவற்றதான மனத்தால் மேலான அத்தப்ரம்மத்தை ஸந்தேகமில்லாமல் அடைகிறான். தைரியமுள்ளவனும் புத்தியுள்ளவனுமானமனிதன் ஸந்தேகமின்றிப் புத்தியை அடக்கிக் கொள்ளவேண்டும். புத்தியால்மனத்தையும் தன்னுடையமனத்தால் விஷயங்களையும் அடக்கிக்கொள்ளவேண்டும். அசைவற்றதான மனத்தை அத்தப்பரமாத்மாவிடத்தில் லயிக்கும்படிசெய்து ஸமாதியில் உறசாகத்துடனிருப்பவனுக்கு அத்தப்ரம்மமானது நன்கு விளங்கும். எல்லாப்பொருள்களின் உட்பொருளுமானபிரம்மத்தில் நிலைபெற்றிருப்பதை ஏகாந்தநிலைஎன்று தெரிந்துகொள். காரணஸ்வரூபமானப்ரம்மத்தின்விசேஷங்களையைக்கூட விசேஷங்களில்லாத சுத்தப்ரம்மரூபமாக (ப்பெரியோர்கள்) அறிகிறார்கள். அல்லது, அவ்விதமானபரமாத்மரூபத்தில் நிலைபெறறிருக்கச்சக்தியறறவனுயிருப்பானுகில ஸமாதியிலபுத்தியுள்ளவனுகி வருங்காலத்தில தத்வதத்தை வெளியிடத்தக்கயோகமுறையைச் செய்யத்தொடங்கவேண்டும். இந்திரியங்களையடக்கிக்கொண்டவனும் மனத்தைத்தன்வசமாகச்செய்துகொண்டவனுமான இந்தயோகிக்கு அகதஇந்திரியதேவதைகள் பிரகாசிக்கிறார்கள். அவர்கள் ஸந்தோஷமுள்ளவர்களாகி அந்தரஸ்வரசைப்பற்றிச் செலலுகிறார்கள். அந்தத்தேவதைகளுடன் ஒன்றுசேர்ந்தமனமுள்ளவனுக்குஅத்தப்ரம்மமானது நன்குவிளங்கும். காலக்கிரமத்தில் ஸத்வகுணமும்விலகியவுடன் அவன் ப்ரம்மபாவத்திற்குத் தக்கவனுகிறான். யோகியானவன் பிறருக்குவெளியாகும்நிலைமையிலிருக்கக்கூடாது. யோகஉபாயங்களைத தொடங்கவேண்டும்; யோக உபாயத்திற்குரியஆசாரம் எதஎதுவோ அதை அதைச் செய்துகொள்ளவேண்டும்; அவல், சுண்டல, பிண்ணுக்கு, காய்கள், பிட்டு, மா, கிழங்கு, கனி, டக்ஷணம் இவைகளைப் பரியாயமாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்; ஸாத்விகருபிருந்துகொண்டு யுக்த யோகாப்யாஸத்திற்கு அனுகூலமாயிருக்கிறதோ அதைப்பரீக்ஷித்துத் தேசத்திற்கும்காலத்திறகும்தக்க ஆகாரியமதனை அனுஸரிக்கவேண்டும். கர்மத்திற்குவேண்டி (யோகத்திறகு) துடைப்பது செய்யக்கூடாது. அக்னியைப்போல ஞானத்தை மெள்ளமெள்ள வளர்க்கெய்யவேண்டும். அவ்விதம் ஞானதத்தாலவிளங்கச்செய்யப்பட்டு ப்ரம்மமானது ஸூர்யன்போல நன்கு பிரகாசிக்கும். ஞானருபியான ஆதமாவை

அடுத்திருக்கும் அஜ்ஞானமானது (ஜாக்ரமுதலான) மூன்று அவஸ்தைகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஞானரூபியான ஆதமாவானது புத்தியால்தொடரப்பட்டு அஜ்ஞானத்தாலுண்டாகும்மயக்கத்தால் பிரகாசமற்றதுபோலிருக்கிறது. மூன்று அவஸ்தைகளைவிட வேறாயிருக்கும் ஆத்மாவை அந்த அவஸ்தைகளுடன் பற்றுதலுள்ளதாகநினைப்பவனும் சாஸ்வதமானசுத்தஆத்மாவைத் தூஷிப்பவனுமானவன் அந்தஆத்மாவை அறியமாட்டான். மூன்று அவஸ்தைகளைவிட வேறான நிலையும் அந்த அவஸ்தைகளுடன் பற்றுதலுள்ளநிலையுமான அவ்விரண்டினுள் மோக்ஷதத்திறகுரியநிலையை அறிந்தவனும்ஆசையற்றவனுமானமனிதன் முக்தியடைகிறான். காலத்தைவென்றவன்கிழத்தனத்தையும்மரணத்தையும்வென்று அழிவில்லாததும் மாறுபாடறதும் மோக்ஷரூபமும் ஸநாதனமுமானப்ரம்மத்தை அடைகிறான்.

இருநூற்றுப்பதினேட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரமாத்மாவை அறியும்வகை.)

கல்மஷமில்லாமல் எப்பொழுதும் ப்ரம்மசர்யமென்றயோகத்தைச்செய்யவிரும்புகிறவனிடத் நித்திரையிலுள்ள குற்றத்தைக்கண்டுகொண்டு நித்திரையை முழுமையும் விலக்கிக்கொள்ளவேண்டும். மனிதன் நித்திரையில் ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் கீழாகச்செய்யப்படுகிறான்; தன்னினைப்பில்லாதவனுடி 'வேறுசரீரத்தையடைந்தவன்போல ஸஞ்சரிக்கிறான். ஆத்மாவைவிசாரிப்பதற்காக இடைவிடாமல் ஞானப்பயிற்சியுடனிருக்தால் மனிதன் விழித்துக்கொண்டிருப்பான். விசேஷமாய் ஞானத்தில்விடாமுயற்சியிருந்தால் அந்தமனிதன் எப்பொழுதும் இரவின்றி விழித்துக்கொண்டிருப்பான். இவ்விஷயத்தில், 'கனவில் விஷயங்களுடன்கூடியது போலுள்ள (தேகமுதலிய) இப்பொருள் எதுவாயிருக்கலாம்? நன்முக லயத்தையடைந்த இந்திரியங்களையுடைய மனிதன் சரீரமுள்ளவன்போலிருக்கிறானே' என்று சிலர் வினவுகிறார்கள். இவ்வினாவிறகு விடை கூறப்படுகிறது. யோகிகளுக்குத்தலைவரான ஸ்ரீஹரியானவர் இவ்விஷயத்தை எவ்விதம் அறிகிறாரோ அவ்விதம் இதையுக்திக்குப் பொருத்தமான்பொருளுள்ளதாக மஹரிஷிகள் கூறுகிறார்கள். இந்திரியங்களுக்குண்டானஸ்ரமத்தால் கனவுண்டாகிறதென்று கூறு

கிறார்கள். (அப்பொழுது) மனமானது எல்லாவிஷயங்களையும் அடைந்ததாயிருக்கிறது. இந்திரியங்கள் அந்தமனதோடுங்களென்று சொல்லுகிறார்கள். அந்தஇந்திரியங்கள் அவ்விதமிலையை அடைந்திருக்கின்றன. சிலர் எப்பொழுதுமுள்ள மூன்றுஅவஸ்தைகளும் உண்மையல்லவென்றுசொல்லுவது கூடாது. மூதலாவதானஜாக்ராவஸ்தையிலிருக்கும் இந்தஜீவன் எப்பொழுதும் மூன்று அவஸ்தையையும் [1]அறிகிறான். வேறுனதிரண்டிஅவஸ்தைகளை அடைந்தபின் எவ்விதத்திலும்அறிவுள்ளவனாயில்லை. ஸ்வப்நாவஸ்தையை அடைந்த இந்தஜீவன் ஸ்வப்நம்என்றுமட்டில் தெரிந்துகொள்ளுகிறானென்றும் சொல்லுகிறார்கள். அது யுக்திக்குச்சரியானதன்று. மூன்று அவஸ்தையும் மோஹரூபமானவை. ஆத்மாவானது மூன்று அவஸ்தையிலிருக்கும் எப்பொழுதுவிடுபடுகிறதோ அப்பொழுது (உண்மையில்) இல்லாதஅவஸ்தைகளுள்ளதாகச் செய்யப்பட்டேனென்று தெரிந்துகொள்ளுகிறது. ஸ்வப்நத்தில் மனத்திற்கு லயமில்லாதிருப்பதால் அதில் அந்த அந்தவிஷயமிருக்கிறது. வேறுகாரியத்திலபற்றுதலுள்ள மனமுள்ளவனுனஜாக்ராவஸ்தையிலுள்ளமனிதனுக்கும் ஸங்கல்பமுண்டாகிறது. அப்பொழுது எவ்விதம் மனத்தில் விரும்பப்படுமோ அவ்விதம் போகமிருக்கிறதோ அதுபோல ஸ்வப்னவஸ்தையிலுள்ள போகம் மனத்தை அடைந்திருக்கிறதென்று திருஷ்டாந்தம் கூறுகிறார்கள். ஆசைபற்றியமனமுள்ளவன் கணக்கில்லாத ஜன்மங்களின்வாஸனையால் அந்தப்போகத்தையடைவான். உத்தமபுருஷனுனஅந்தஆத்மாவை மனத்தில் மறைத்திருக்கும்யாவற்றையும் அறிகிறான். ஸத்வம்ரஜஸ் தமஸ்என்றகுணங்களுள் எந்தக்குணமானது இந்தப்பிராணியின் கர்மத்தால் வெளியாகும்படி செய்யப்பட்டதோ, மனம் எவ்விதவாஸனையுள்ளதாயிருக்கிறதோ அதைஅதைப் பிராணிகள் விரும்புகின்றன. பிறகு,உடனேபயனைஉண்டுபண்ணத்தக்க அவ்விஷயதைதக்காரணத்திற்குத்தக்கபடி ரஜோகுணங்களாவது தமோகுணங்களாவது ஸத்வகுணங்களாவது தொடருகின்றன. பிறகு, ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் உண்டானமனோபாவங்களால் ஸம்பந்தமில்லாதவைகளும் வாதமும் பித்தமும் கபமும் மேலிட்டவைகளுமானசரீரங்களைப் பார்க்கிறார்கள்; அவ்விதமான சரீரத்தையிலக்குவது கடினமென்றும் சொல்லுகிறார்கள். தெரிவுள்ள இந்திரியங்களால் எந்தஎந்தவிஷயத்தை மனத்திலுள்ளதாக ஸங்கல்பிக்கிறானு அதை அதை ஸ்வப்நம்விலகியபின்னும் மனம் [2]ஸங்கோஷமுள்

1 'வேத்தி' என்று பாடம் கொள்ளப்பட்டது. 2 வேறுபாடம்.

ளதாகப் பார்க்கிறது. மனமானது ஆத்மாவின்மகிமையால் எல்லாப்பிராணிகளிடத்திலும் தீபம்போல வியாபகமாயிருக்கிறது. எல்லாத்தேவதைகளும் ஆத்மாவினிடத்திலிருக்கின்றனவென்று அந்த ஆத்மாவைத் தெரிந்துகொள்ளவேண்டும். (ஸ்வப்னத்திற்கு) வழியும் மானிடஉருவமானஸ்தூலசரீரதத்துவமனத்தில்மறைக்கிருக்கும்படி செய்துகொண்டு ஸ்தூலஸூக்ஷ்மங்களுக்குக் காரணமும் இந்திரியங்களுக்குப்புலப்படாததுமான இந்தக்காரணசரீரத்தில் ஸாக்ஷீரூபமாய் ஸுஷுப்தியை யடைகிறான். (அப்பொழுது) இந்தஆத்மாவானது தோற்றப்படும் வேறுறுமைத்தன்மையைவிட்டுவிலகி ஜ்ஞானரூபியாகமட்டில் காணப்படுகிறது. அந்த ஆத்மாவை எல்லாப்பிராணிகளுடையமனத்திலுமிருப்பதும்மனத்திற்கும் ஸத்வமுதலியகுணங்களுக்கும்மேலானதாகவும் அறிகிறார்கள். எவன் ஸங்கல்பத்தால்ஈச்வரருக்குரிய (அணிமாமுதலிய) குணத்தை மனத்தால் அடையவிரும்புகிறானோ அவன் மனநிர்மலத்தியால் அந்தக்குணத்தை அடைவான். எல்லாத்தேவதைகளும் மனத்திலிருக்கிறார்கள். இவ்விதமானமனத்தைத் தவத்தால் ஸுசீர்யமேப்போலத் தமஸைவிட்டுவிலகியிருப்பதாகச்செய்யவேண்டும். மூன்றுலகங்களுக்கும் காரணமான ஜீவன் தமோகுணத்தின்முடிவில் மஹாபுருஷரை அடைகிறான். தவமானது தேவர்களாலும் தவத்தைக்கெடுக்கும் தமோகுணமானது அஸுரர்களாலும்ஆக்ரமிக்கப்பட்டிருக்கின்றன. இத்தப்ரம்மமானது தேவகுணங்களாலும் அஸுரகுணங்களாலும் மறைக்கப்பட்டிருக்கிறது. அந்தப்ரம்மஞானத்தை ஞானஸ்வரூபமென்றுசொல்லுகிறார்கள். ஸத்வம், ரஜஸ், தமஸ்என்பவைகள் தேவாஸுரர்களின்குணங்களென்று அறிவிக்கிறார்கள். (அவைகளில்) ஸத்வத்தைத் தேவர்களின் குணமென்றும் மற்ற இரண்டுகுணங்களையும் அஸுரர்களைச்சேர்ந்தவைகளென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். ஸத்வமும் மனமும் புத்தியும் தேவர்களென்று சொல்லப்படுகின்றன. [1]மறைத்திருக்கும் ஆத்மாவானது கசடுகளால் நன்குமூடப்பட்டால தன்னிலேயிலிருப்பதாகும். உலகங்களுக்குரிய ஸுஷுப்திமுதலியவாகச்சொல்லப்பட்டவை கசடுகளென்று கருதப்படுகின்றன. அவைகளைவிட்டுவிலகியதும் பரிசுத்தமும் சரீரத்தினுள்ளிலும்வெளியிலுமிருப்பதும் எப்பொழுதும் ஆனந்தரூபமும் அழிவில்லாததுமாயிருந்துகொண்டு அந்தப்பரமாத்மாவை அடையவேண்டும். மிகவும் கல்மஷமற்ற ப்ரம்மசர்யமானது

1 இந்த, மூல புஸ்தகத்தில் சிலசொற்களில்லாததால ஒருஸ்லோகம் விடப்பட்டது.

இவ்விதமுபதேசிக்கப்பட்டது. எல்லாவற்றிலும்பற்றுதலில்லாததும் விஷ்ணுவெனப்பெயருள்ளதும் சிந்தைக்கெட்டாததும் உலகத்தில் ஆச்சரியமுமான அந்தப்பரமபதமானது அறிவால் எங்கும் விளங்குகிறது. தியானத்தினால தெளிந்தபுத்தியுள்ளவர்களானவர்கள் ஞானரூபியும் காரணமில்லாததும் ஜோதிரூபியும் குறைவில்லாததுமான அந்தப்பரப்ரம்மத்தைஅறிகிறார்களோஅவர்கள் சிறந்தகதியைப்பெறுகிறார்கள். யுக்தியுடன் இவ்வளவுவரையில் உபதேசிக்கமுடியும். ஞானக்கண்ணாலாவது [1]ப்ரதயாஹாரத்தாலாவது இந்திரியங்களுக்குப் புலப்படாதபிரம்மத்தைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

இருநூற்றுப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரமாத்மாவை அறியும்வகைத்தொடர்ச்சி.)

உதாரமானரிஷியால வ்யக்தமென்றும் அவ்யக்தமென்றும்உபதேசிக்கப்பட்ட தத்வமாகிய [2]அந்தான்கையும் எவன் அறியவில்லையோ அவன் பரப்ரம்மத்தை அறியமாட்டான். வ்யக்தத்தை மிருத்யுவின் வழியென்றும் அவ்யக்தத்தை அழிவில்லாததபதமென்றும் அறிந்துகொள்ளவேண்டும். நாராயணரென்னும் ரிஷியானவர் நிவ்ருத்திமார்க்கத்திற்குரியதர்மத்தைக் கூறினர். ஸ்தாவரஜங்கமங்களுடன் கூடியமூன்றுலகமும் அந்தநிவ்ருத்திதர்மத்தில்தான் நிலைபெற்றிருக்கும். நிவ்ருத்திமார்க்கத்திற்குரிய தர்மமானது இந்திரியங்களுக்குப் புலப்படாததும் சாஸ்வதமுமான ப்ரம்மமாகும். ப்ரவ்ருத்திமார்க்கத்திறகுரியதர்மத்தைப் பிரம்மா கூறினர். ப்ரவ்ருத்தியானது திரும்பவும் பிறப்புள்ளகாரும். நிவ்ருத்தியானது உத்தமகதியான மோக்ஷமாகும். நிவ்ருத்திமார்க்கததைப்பரிதாக்கொண்டவனும் ஞானத்தின்உண்மையில் முயற்சியுள்ளவனும் எப்பொழுதும் சுபாசுபங்களைப் பகுத்தறிபவனுமான முனியானவன் அந்தப்பரமகதியைப் பெறுவான். அந்தவிஷயத்தில் அவ்யக்தமென்னும்பிரதானம் ஜீவன்இவ்விரண்டையும் அவ்யக்தம்புருஷன்இவ்விரண்டைவிட வேறானதும்மிகப்பெரிதுமாயிருப்பது எதுவோ அந்தப்பரமாத்மாவையும்

---

* 1 இந்திரியங்களை உள்ளத்தில்அடக்கி ஒரேமனோரூபமாயிருக்கும்படி செய்தல்; இந்திரியங்களை ஒருவழிப்படுத்தல்.

2 ப்ரக்ருதி புருஷர்களுக்குரியஒற்றுமை வேற்றுமை இரண்டும், ஜீவாத்மா, பரமாத்மாக்களுக்குரிய ஒற்றுமை வேற்றுமைஇரண்டுமாகிய நான்கு.

அறிந்துகொள்ளவேண்டும். ஸமர்த்தனுயிருப்பவன் அந்தவிசேஷத்தை நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ப்ரக்ருதியும் ஜீவனுமாகியஇவ்விரண்டும் அநாதியும் அந்தமுமில்லாதவைகள். இரண்டும் அடையாளமில்லாதவைகள். இரண்டும் அழிவில்லாதவைகளும் தொடர்ந்திருப்பவைகளும் பெரியவைகளைவிட மிகப்பெரியவைகளுமாயிருக்கின்றன. இரண்டிற்கும் இது இவ்விதம் பொதுவானது. வேறுவிசேஷமுமிருக்கிறது. ப்ரக்ருதியானது காரியங்களையுண்டுபண்ணும். தன்மையுள்ளதும் அவ்வாறேமூன்றுகுணங்களையும்உருவமாகக்கொண்டதுமாயிருக்கிறதென்றும் புருஷனுடைய லக்ஷணமானது இதைவிடவேறுனதும் ப்ரக்ருதியினுடையகாரியங்களுக்குஸாக்ஷியும் குணங்களில்லாததுமாயிருக்கிறதென்றும் தெரிந்துகொள்ளவேண்டும். க்ஷேத்ரஜ்ஞனென்னும்ஜீவனைக் கர்த்தாவாகவும் குணங்களால்மறைக்கப்பட்டவனுகவும்கூறுகிறார்கள். [1]ஜீவன்ாஸ்வரனென்ற இந்தப்புருஷர்கள் ப்ரத்யக்ஷமாகப்பார்க்கத்தகாதவர்களும் அணுமானத்திற்குரிய அடையாளமில்லாததால் பற்றுதலில்லாதவர்களுமாயிருக்கிறார்கள். (ஜீவன்) ப்ரக்ருதியின்ஸம்பந்தத்தையேஅடையாளமாயும் பிறப்பிற்குக்காரணமாயும் உடையவன். கர்த்தாவான ஜீவன் கர்மங்களையுண்டுபண்ணக்காரணமானகருவிகளால்எந்தஎந்தக் கர்மத்தை எவ்விதம்செய்கிறானோ அந்தஅந்தக் [2]கர்மத்துடன் அவ்விதம் காணப்படுகிறான். ''நான் யார்? இது என்ன? அது என்ன?'' என்று பலபெயர்களால்கூறப்படுகிறான். என்னுடையசரீரமென்று சொல்லுகிறான். ஆகையால், (ஜீவன்) அறிவில்லாதவனும் எப்பொழுதும் மறைக்கப்பட்டவனுமாயிருக்கிறான். தலைப்பாகையுள்ளவன் மூன்று வஸ்த்ரங்களால் மறைக்கப்பட்டிருப்பதுபோலஇந்தஜீவனுனவன் ஸத்வம்ரஜஸ்தமஸ்என்கிறமூன்றுகுணங்களாலும்மறைக்கப்பட்டிருக்கிறான். அந்தப்புருஷனுனவன் வேறுவஸ்துக்களைவிடமேன்மையானபரமாத்மவஸ்துவை எப்பொழுது வேற்றுமையில்லாமல் தெரிந்துகொள்ளுகிறானோ அப்பொழுதுதான் இவன் பற்றுதலில்லாதபரமாதமாவாகவே ஆகிறான். ஆதமாவானது பேதத்தைஅறிவிக்கும் கர்மயோகத்தில சிலவிடத்தில் வஸுக்கள் ருத்ரர்முதலியகூட்டங்களில தனக்குள்ள அனுபவத்தாலும் போகத்தாலும் பலவிதமாய் வேறுபடுமைப்படுகிறது. இவ்விதம் பலவிதமாயிருக்கும் அந்தப்பரமாதமாவானது பிறகு சுருக்கமாய் ஓரேரூபத்துடனிருப்பதாகக் காணப்படுகிறது.

1 இங்கு அதிகபாடமான ஒருஸ்லோகம் விடப்பட்டது.

2 வேறுபாடம்.

ஆகையால், இந்தக்காரணங்களால் மறைந்திருக்கும் ஞான்கையும் அறிந்துகொள்ளவேண்டும். இந்தஜீவன் ஞன்முய்அவ்விதஅறிவுள் ளவனஞல முடிவுக்காலத்தில் மோஹத்தையடையாமலிருப்பான். 1 தேவலோகத்திலுள்ள ஸம்பத்தை அடையவிருப்பமுள்ள ஜீவன் பரிசுத்தஞகி மனத்தாலும் சரீரத்தைப்பறறிய கடமையானநியமங் களாலும் கடபற்றஞவதைச் செய்யவேண்டும். மூன்றுஉலகங்க ளும் நெள்ளிருந்துபுகைவதனால்வந்தால் சூழப்பட்டிருக்கின் றன. ஸூர்யனும் சந்திரனும் தவத்தால ஆகாயத்தில விளங்குகிறார் கள். மறறுமுள்ளதர்மத்தின்பொதுவிலேயும் தவமென்று சொல்லப்படு கிறது. பிரகாசமான தவத்தினுடையதாகும். உலகத்தில் ஞான மானது தவமென்றுசொலலப்படுகிறது. எதக்காமம் ரஜஸையும் தமஸையும் விலக்கத்தக்கதோ அது தவத்திறகுரிய முக்கியலக்ஷண மாகும். 2பிரம்மசர்யமும் கொலலாமையும் சரீரத்திற்குள்ளதவமென் றுசொல்லப்படுகின்றன. நாவையும்மனதையும் ஞன்முகஅடக்கு தலாவது மனத்தாலசெய்யும்தவமென்று சொல்லப்படுகிறது. சாஸ் திரவிதிகளை அறிந்தபிராம்மணாகளிடமிருந்து ஆகாரத்தைப்பெற்றுக கொள்வது சிறந்ததாகும். ஆகாரத்தின்நியமத்தால் இந்தஜீவனுக்கு ரஜோகுணத்தாலுண்டாகும்பாவமானது விலகும். இந்தஜீவனுடைய கருவிகளும் விஷயங்களில வைராக்யத்தை அடையும். ஆகையால, இந்தச்சரீரத்திற்கு வேண்டியமட்டில பிறறுக்கொள்ளவேண்டும். முடிவுக்காலத்தில பரபரப்பில்லாமல் மெள்ளப் பெருமுயறசியுடன் (தவத்தைச்) செய்யவேண்டும். இவ்விதமுயற்சியுடன்கூடிய மனத் தால ஞானமுண்டாகும். இநத ஜீவனுனவன் 3ரஜோகுணத்தி லிருந்து விலகினவனுனல ஸூக்ஷ்மசரீரமுள்ளவனுகிச் சப்தம் 4 போல ஸஞ்சரிப்பான். வைராக்யத்தால பிறப்புள்ளஸ்தூலஸூக்ஷ்ம சரீரங்களால தடுக்கப்படாதமனமுள்ளவன் காரணசரீரத்திலிருப் பான். சரீரமுள்ளவரையில தவறுதலின்றித் (தவஞ்செய்வதால) மூன்றுசரீரங்களும்விலகி மோக்ஷமடைவான். பிராணிகளின்பிறப பும் இறப்பும் எபபொழுதும் (அஜ்ஞானமென்னும்) காரணமுள்ள வையாயிருக்கும். பரமாத்மாவைப்பறறியஞானமுண்டாகும்பொழுது தான் ஜனனமரணநியமம் 5தொடராமலிருக்கும். எவர்கள் சரீரமுத

---

1 இதை அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

2 இதற்கு அதிகபாடமாக ஒன்றரைஸ்லோகம விடப்பட்டது.

3 ஸ்தூலசரீரத்தைவிட்டு விலகினவனென்றுபொருள.

4 வேறுபாடம். 5 வேறுபாடம்.

லியஅனுத்மாவில் ஆத்மாவென்ற விபரீதஞானக்திலிருக்கிறார்களோ அவர்கள் உலகப்பொருளின்உற்பத்தியிலும் அழிவிலும்சென்ற புத்தியுள்ளவர்களாயிருப்பார்கள். தைரியத்தால் சரீரங்களே உறுதியுள்ளவைகளாகச்செய்துகொண்டவர்களும் புதுதியால அடக்கப்பட்டமனமுள்ளவர்களும் இந்திரியங்களுக்கிருப்பிடமான ஸ்தூலசரீரதுதை விட்டுவிலகினவர்களுமானசிலர் ஸூக்ஷ்மமாயிருப்பதால் அந்தஇந்திரியங்களே உபாவிக்கிறார்கள், அவைபாவதறைபும் சாஸ்திரப்படி அறிந்து [1]அவதறையே தியானம்செய்கிறார்கள். தியானம்பண்ணும் புத்தியுள்ளவனைஒருவன்பரமாத்மாவைததவிரவேறுஇடமிலலாமல தேகங்களின்முடிவிலுள்ளபரமாத்மாவை அவஸரித்துக்கொண்டிருப்பான். ஒருவன் [2]தாரணையுடன்கூடியவனாயிருப்பான், சிலர் [3]பரமாத்மாவை உபாவிக்கிறார்கள். சிலர் விதுதைகளில அக்ஷரமென்றகூறப்பட்டவரும் பரருமானதேவரைத்தொடர்ந்து தியானம்செய்கிறார்கள். தவத்தால் பாவங்களேளரித்தசிலர் முடிவுக்காலத்தில அவரை உபாவிக்கிறார்கள். மஹாத்மாக்களானஇவர்களனைவரும் உததமமானகதியையடைகிறார்கள். அந்தஉபாஸனங்களுக்குள்ள ஸூக்ஷ்மமான வேற்றுமையைச் சாஸ்திரக்கண்ணலைஅறிந்திகொள்ளவேண்டும். காரணசரீரமென்னும்பிரகிருதியைக் கடைசியிலுள்ளதாக அறியவேண்டும். அபிமானம்விட்டுவிலகியவனும்துரதியும்தாரணையில்பறறுள்ளமனமுள்ளவனுமாயிருப்பவனே ஆகாசமென்னும்பரமாதமாவுக்குஅடுத்தபடியிலிருப்பவனுகத தெரிந்துகொள்ளவேண்டும். உபாஸநிகளில கல்லபற்றுள்ளமனமுள்ளவர்கள் மானிட உலகத்திலிருந்து விடுபடுகிறார்கள். பிறகு, ரஜோகுணமறறவர்களும் பிரம்மமானவர்களுமாகி உத்தமமானகதியை அடைகிறார்கள். இவ்விதம்ஓரேபிரம்மதுதை அடையக்காரணமான உபாஸனமுறையை வேதமறிந்தஜனங்கள்கூறுகிறார்கள். அறிவுக்குத்தக்கபடி உபாவிக்கும்அனைவரும் உததமகதியை அடைகிறார்கள். அவர்களுக்குக் கடடறறதும் தெளிவுள்ளதுமானஞானம் உண்டாகிறது. அவர்களும் உத்தமமான உலகங்களே அடைகிறார்கள். ஞானததின்பலதநிறதுத்தக்கபடி சுத்திபெறுகிறார்கள். ஆசையற்றவர்களும் ஞானததால்நிருபாயடைந்தவர்களுமாயிருப்பவர்கள் பரிசுததர்களாகி உறபதநியில்லாதவரும் அவ்யக்தமென்று பெயருள்ளவரும் தேவலோகத்திலிருப்பவருமான

1 வேறுபாடும்.

2 சாஸதிரபடி ஓரிடதிதில மனதைஙுத நிறகவைபபது.

3 ஸகுணபரம்மம்.

ஸ்ரீவிஷ்ணுபகவானை நல்ல எண்ணத்தால் அடைகிறார்கள். அவர்கள் புத்தியிலிருக்கும் ஸ்ரீஹரியை அறிந்துகொண்டு அழிவில்லாதவர்களாகித் திரும்பவும் ஸம்ஸாரத்தை அடைகிறார்களில்லை. குறைவற்றதும் அழிவற்றதும் உத்தமமுமான அத்தப்பரமபதத்தையடைந்து ஆனந்தமடைகிறார்கள். இத்தஞானமென்பது இவ்வளவு தான். இவ்வுலகமானது இருப்பதும் இல்லாததுமாயிருக்கிறது. உலகமனைத்தும் ஆசையால்கட்டப்பட்டு உருளைபோலச் சுற்றிக்கொண்டிருக்கின்றது. நாமமைத்தண்டில் உள்ளிலிருக்கும் அதன் நூலானது எவ்விதம்எல்லாவிடத்திலுமிருக்கிறதோ அதுபோல ஆசையென்னும் நூலானது முழுகலும்முடிவுமில்லாமல் எப்பொழுதும் சரீரத்தை அடைந்திருக்கிறது. தைக்கும்மனிதன் ஆடையில் நூலை ஊசியால் எவ்விதம்ஓட்டுகிறானோ அவ்விதம் ஸம்ஸாரமென்னும் நூலானது ஆசையென்னும் ஊசியால ஓட்டப்படுகிறது; அங்குமிங்கும்எடுத்துச்சேர்த்து ஓர்உருவதையும் உண்டுபண்ணுகிறது. எவன் காரியத்தையும் காரணத்தையும் ஸுதனரானபுருஷரையும் உள்ளபடிஅறிகிறானோ அவன்ஆசையற்று மோக்ஷமடைவான். அவன் வியாபகமும் நிலையுள்ளதுமான ஆதமாவின்உண்மையான ஸ்திதியை எப்பொழுதும் அடைகிறான். (இவ்விதம்) பகவானுனகாராயணரிஷியானவர் உலகதத்திறகுகன்மையும் மோக்ஷத்திறகுக்காரணமுமான இத்தகிவ்ருத்திதர்மத்தைப் பிராணிகளிடத்திலுள்ள அருளால் உபதேசித்தார்" என்றுசொன்னார்.

இருநூற்றிருபதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பஞ்சசிகர் ஜனகருக்கு நாஸ்திகமதமுதலியவற்றைக் கண்டித்துச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "நன்னடக்கையை அறிந்தவரும் ஜனககுலத்திலுதிதகவரும் பிரதிலோகத்தை அதிபதியும் மோக்ஷதர்மங்களை அறிந்தவரும் புத்திமானுமானஜனதேவர் போகங்களைத்தள்ளிவிட்டு எவ்விதநடக்கையால் மோக்ஷதத்தை அடைந்தார்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லதொடங்கினார்.

"மோக்ஷதர்மங்களையறிந்த அந்த ஜனதேவனும் அந்த நடக்கையால் பெரிய ஸுகமான மோக்ஷதத்தை அடைந்தானென்று அவ்விஷயத்திலும்பழையஇவ்விதிஹாஸத்தை உதாரணிக்கிறார்கள். அதுயென்ன! ஜனதேவனென்னும் ஜனகன் மிதிலாபுரியில சரீரம்விடுகின்றபின்காலத்தில

லுள்ள விஷயங்களை நன்றாய் ஆலோசிப்பதில் முயற்சியுள்ளவனாயிருந்தான். அவனுடைய வீட்டில் பலவிதமான பாஷண்டமதங்களைக் கண்டிப்பவர்களும் வெவ்வேறான தர்மங்களைக் காண்பிப்பவர்களுமான நூறு ஆசிரியர்கள் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருந்தார்கள். அவன் அந்த ஆசிரியர்கள்சொல்லுகிறபடி இறந்தபின் ஆத்மா இருக்கின்றதென்ற நிச்சயத்திலும் மறுபிறப்பைபபற்றியநிச்சயத்திலும் மிக்க ஸந்தோஷப்படுகிறதில்லை. அவன்வேதமார்க்கத்திலிருந்துகொண்டு ஆத்மதத்வவிஷயகதில மிகவும் விசேஷமாக ஸந்தோஷப்படுவான். அப்பொழுது பஞ்சசிகரென்று பெயருள்ளவரும்கபிலயின் புத்திரருமான பெரியமுனிவர் பூமிமுழுமையும் சுற்றிஸஞ்சரிதத்துக்கொண்டு பிறகு மிதிலைக்குச்சென்றார். அவர் ஸங்யாஸதர்மங்களைத்துக்கும் தத்வஜ்ஞானத்தின் நிச்சயத்திற்குமுள்ளபயனை நன்கு நிச்சயம்செய்துகொண்டவர்; த்வந்த்வங்களைவிட்டு விலகியவர்; ஸந்தேகமற்றவர்.மநுஷ்யகளுள்அவர்ஒருவரை மனிதர்கள்விஷயதநிலவிருப்பமறதலென்றும் நிலைபெறதலும் அழிவில்லாதலும் அடையதகுமான மோக்ஷஸுகத்தைத் தேடுகிறவரென்றும் சொல்லுகிறார்கள். ஸாங்கியர்கள் அவரை உத்தமரிஷியான கபிலப்பிரஜாபதியென்றுசொல்வார்கள். கபிலர் நேரில் அந்தப்பஞ்சசிகர் உருவத்துடன்வந்து ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறார். அவரைஆஸுரியின்முதல்சிஷ்யரான சிரஜீவியென்றும்கூறுகிறார்கள். அவர் [1]ஐந்துபிரவாகங்களுள்ளவிடதகில் ஆயிரம்வருஷம்செய்யத்தக்க ஸத்ரயாகத்தைச் செய்துகொண்டிருக்கிறார். ஐந்துபிரவாகமுள்ளவிடத்தில் ஸ்நானம்செய்தவரும் ஐந்துகாள்செய்யவேண்டிய [2]பஞ்சராத்திரமென்றயாகத்தில் ஸமர்த்தரும் ஐந்துரோகங்களைப்பற்றிய உபாஸனங்களைச்செய்தவரும் [3]ஐந்துகுணங்களுள்ளவரும் பஞ்சசிகரென்று சொலலப்படுகிறவருமான அவர் கபிலமதத்தைச்சேர்ந்த பெரியமுனிக்கூட்டம் உட்கார்ந்திருக்கும் இடத்தினருகில்வந்து புருஷர்களிடமிருப்பதும் இந்திரியங்களைக்குப்புலப்படாததும் பரமார்த்தமுமானபிரம்மத்தைஅறிவித்தார்.ஸத்ரயாகம்செய்தபின் தவததால திரும்பவும் நன்குவீணவப்பட்டஆஸுரியானவர் திவ்யதிருஷ்டியால கேஷத்ரகேஷதராஜ்ஞர்களைப்பற்றிய பகுத்தறிவிலை அறிவிததார். ஆஸுரியானவர் அந்த முனிக்கூட்டத்தில் ஒரே அக்ஷரமானதும் பலஉருவமுள்ளதாகக்காணப்படுவதும்

1 ஞானேந்திரியங்களொன்றும் ஐந்துபிரவாகங்களுடன்கூடின மனம் எனற இடததில மானஸயாகம்செயதாரென்பது பொருள.

2 'பஞ்சராதரஷிசாரத:' என்பது மூலம்.

3 சமம், தமம், உபரதி, திதிக்ஷை, ஸமாதானம்.

அழிவில்லாததுமானபரம்மத்தை அறிவித்தார். அந்தஆஸுரியி னுடையசிஷ்யரான பஞ்சசிகமுனிவர் மானிடப்பெண்ணின்பாலால் வளர்க்கப்பட்டவர். கபிலையென்றுபிரஹித்திபெறறவனும்குடும்பத்தி லுள்ளவனுமான ஒருபிராம்மணப்பெண் இருந்தாள். அவர் அந்தப் பெண்ணுக்குப் புத்திரராயிருக்கும் தன்மையையடைந்து அவளிடம் ஸ்தன்யபானம்செய்தார். அதனால, அவர் காபிலேயரென்றபிரஹித்தி யையும், ஞானநிலையுள்ளபுத்தியையும் அடைந்தார். இவ்விதம் கபிலே யின் புத்ரரானபஞ்சசிகமுனிவரின்உற்பத்தியையும் அவருக்குள்ள காபிலேயரென்றபிரஹித்தியையும்எல்லாவிஷயங்களையும்பற்றியமிக்க உத்தமமான அறிவையும் எனக்குப் 1பகவான் சொன்னார். அந்தப் பஞ்சசிகரானவர் அருகில்வந்து தர்மமறிந்தவர்களும் மிகச்சிறந்தவ னும் ஜனகவம்சத்தில்பிறந்தவனுமான ஜனதேவன், ஆசிரியர்களிடம் ஸமானமாயிருப்பதைத்தெரிந்துகொண்டு பலயுக்திகளால் நூறுஆசிரி யர்களையும் மோகிக்கும்படிசெய்தார். அரசனே! புதுமையான பஞ்ச சிகமுனிவர் அந்த ஆசிரியாகளனைவரையும் விலக்கவேண்டுமென்று குணமுள்ளபலயுக்திகளை அவர்களுக்குச் சொல்லினர். ஜனகமஹா கபிலையின்புத்ரரான பஞ்சசிகரைக்கண்டதால் அவரிடம் மிகுந்த பக்தியுடன் நூறுஆசிரியர்களையும்தள்ளிவிட்டு அவர்பின்செல்லலா னான். தர்மப்படிநமஸ்கரித்தவனும் மிகவும் ஸமர்த்தனுமான அந்த ஜனதேவன்பொருட்டு 2 ஞானகாண்டத்தில் அறிவிக்கபபடுவது எதுவோ அந்த உத்தமமானமோக்ஷத்தைஅவரும் சொன்னார். ஜன னத்தில் ஆசையிலலாதிருக்கும் முறையைச்சொலலியபின் அவர் கர்ம வழியைப்பறறிய வைராக்யத்தை உபதேசித்தார். கர்மத்தைப்பற் றிய வைராக்யத்தை உபதேசித்தபின் எலலாஉலகங்களைபபற்றிய வைராக்யத்தையும் உபதேசித்தார். கர்மங்களைச்செய்வதும் கர்மங் களினுடையனுண்டாவதும் எதைக் காரணமாகக்கொண்டவையோ அவ் விதமும் நம்பத்தகாததும் நாசமுள்ளதும் சுகுசலமும் நிலையற்றது மான மோஹத்தையும் சொல்லத்தொடங்கினர். 'விகாசமானது ப்ர தயக்ஷமாயிருப்பதாலும் பிரதயக்ஷப்பிரமாணமானது உலகங்களை ஸாக்ஷியாககொண்டதாயிருப்பதாலும் ஆகமப்பிரமாணத்தால் சரீ ரத்தைவிட வேறுஆகமோ இருக்கிறதென்று சொல்லுவிறவாதியும் தோல்வியடைகிறான். எப்பொழுதும் ஆத்மாவிற்குத்துன்பமும் மர

1 அதிகபாடமான அசரமலோகம் விடப்பட்டது.

2 'மாக்கண்டேயர்: அல்லது, ஸுதக்குமாரர்' என்பது பழையஉரை.

3 வேறுபாடம்.

ணமும் கிழகதனமும் கோயும் இயறகையே. , ஆகையால், அவி வேகதகதால் (சரீரத்தைக்காட்டிலும்) ஆத்மாவை வேறுக கினைப் பது தப்பானமதமாகும். மேலும், எது உலகத்தில் யுக்திக்கு ஒத்த தாயிருக்கவில்லையோ அதையும் சொல்லுவதுண்டு. இந்த அரசன் கிழுத்தனமில்லாதவனும் மரணமில்லாதவனுமாயிருக்கவேண்டுமென் று சொல்லுகிறார்கள். இவனும் அப்படியே கினைத்துக்கொள்ளுகி றான். அதுபோல ஆகமமும் அத்மாவேறுஎன்று கூறுகிறது. இருக் கிறதென்றும் இல்லையென்றும் இவ்விதமாகத்தெகத்திலதகககாரணமில் லாதிருக்கும்பொழுது எந்தஅனுமானதைதப்பறறிக்கொண்டி உலகத் தில்எளியவகாரத்திறகு கல்லகிச்சயத்தைச் சொல்லமுடியும் ? ஆக மம் அனுமானம்என இவ்விரண்டுக்கும் பிரத்யக்ஷமன்றே மூலமா யிருக்கிறது ? ஆகமமானது பிரத்யக்ஷத்தால் பாதிக்கப்படுகிறது. அனுமானத்தால உண்டாகும்நிச்சயமோ சிறிதும்இல்லை. ஏதோ ஒருவிதமான இந்த அனுமானதநில் சிக்தைப்படுகிறவனுலும் ஸாதிக் கத்தக்கதொன்றுமில்லை. ஆகையால், சரீரத்தைவிட ஜீவனென்பவன் வேறில்லையென்று நாஸ்திகர்களின்மதத்தில்கூறப்படுகிறது. ஆல மரத்தின்விதையில அதற்குள்ளகாரணமும்,பசுவின் ஆகாரததில வெவ் வேறான பாலும் நெய்யும், வாஸனையுள்ளபலவஸ்துக்களின்பாகத்தில் மதசக்தியும், இரண்டுகட்டைகளின் சேர்க்கையால் தீயின்உற்பத்தி யும், தர்ககமதத்தில் ஆத்மாமனம்இவைகளின்சேர்க்கையால உண் டாகும்ஸ்மிருதியென்ற ஞானமும், இரும்பை அசையச்செய்யும்காந்த மணியும் தகியின்ஒளியுடன்சேர்ந்து தீயைஉண்டுபண்ணும்ஸூர்ய காந்தமென்னும்மணியும் தீயில நீரைக்குடிக்கும்திறமையுமிருப்பது போலச் சரீரமே ஆத்மாவாக இருக்கலாம். ஆனலும், மரணதிறு குப்பின் சரீரத்தில் நான்குபூதங்களுக்குநாசமுண்டாவதும் தேவதை களின்பொார்த்தனையும் மரித்தவும்முன்செய்தகர்மங்கள்பயனற்றுப் போவதும் ஒருபிறப்பிலசெய்யாதகர்மங்களின்பயனுண்டாவதும் சரீ ரத்தைவிட ஆத்மாவேறுஎன்றவிஷயத்தில பிரமாணமென்பது நிச்ச யம். கீழ்ச்சொன்ன திருஷ்டாந்தங்கள் பிரமாணங்களாகிறதில்லை.இந் தச் சிலதிருஷ்டாந்தங்களெல்லாம் ஜடவஸ்துவைப்பற்றியவைகளா யிருக்கின்றன.ஜடமலலாதவஸ்துவிற்கு ஜடவஸ்துவுடன்கூட (காரிய காரணங்களுக்குள்ள) ஒறறுமை பொருததமுள்ளதன்று. சிலர் அவித்தை, கர்மங்கள், சேஷ்டை, தோஷங்கள் இவைகளே ஸேவித் தலேயும் லோபத்தையும் மோகத்தையும் மறுபிறப்பிற்குக்காரண மென்று கூறுகிறார்கள். அவர்கள் அவித்தையை க்ஷேத்திரமென்

றும் அப்படியே மூன்செய்யப்பட்டகர்மத்தைப் பீஜமென்றும் ஆசையை உண்டுபண்ணுவதை ஸ்நேகமென்றும் சொல்லுகிறார்கள். இது அவர்களுடையமதத்தில் மறுபிறப்பிற்குக் காரணமாகும். இந்த அவித்தைமுதலியவை [1]ஸூக்ஷ்மமாயிருக்கும்பொழுது சைதன்யமற்றதும் மரணதர்மமுள்ளதுமான சரீரமானது நாசமடைந்தால் அதிலிருந்து வேறுசரீரமுண்டாகிறது. அவித்தைமுதலியவை ஞானத்தால்நாசமடைந்தால் அது அழிவில்லாத மோக்ஷமென்றும் சொல்லுகிறார்கள்; (இதுவும் ஸரியன்று.) ஸ்வரூபத்தாலும் ஜாதியாலும் [2]சுபகர்மங்களாலும் அவற்றின் பயன்களாலும் இது வேறுயிருக்கிறபொழுது இதில் அதுதான் என்ற [3]பிரத்யபிஜ்ஞை என்றஞானம் எவ்விதம் உண்டாகக்கூடும்? விரும்பப்படாதபயனுண்டாவதும் எவ்விதம் கூடும்? இப்படியிருந்தால் தானத்தாலும் கல்வியாலும் தவத்தாலும் பலத்தாலும் என்ன பிரியமுண்டாகக்கூடும்? எந்தஎந்தக்கர்மம் செய்யப்படுகிறதோ அது அது அனேத்தும் வேறு ஒருவனே அடைகிறதே; இவ்விதமிருந்தால இவன் இவ்விடத்திலேயே வேறு ஒருவன் செய்தகர்மங்களால துக்கமுள்ளவனுகவும் ஸுகமுள்ளவனுகவும் ஆகக்கூடுமென்பது நிச்சயமாய்த் தெரியக்கூடுமே; க்ஷணிகஜ்ஞானரூபியான ஆத்மாவானது தான் நசித்து மேன்மேலும் வெவ்வேறான ஆத்மாவை உண்டுபண்ணுகிறதென்று சொன்னுல் உலக்கைகளால் சரீரத்தை அடிக்கும்பொழுது வேறுசரீரம் உண்டாவதைக் காணுமே; ஆகையால், இந்தமதம் ஸரியானதன்று. திதிகளும் ருதுக்களும் வருஷமும் சீதமும் உஷ்ணமும் விருப்பும் வெறுப்பும் எவ்விதம் சென்றது காணப்படுகிறதில்லையோ அதுபோல மோக்ஷமுமாகும். கிழத்தனத்தாலும் நாசத்தையுண்டுபண்ணும் ம்ருத்யுவாலும் சூழப்பட்டவனுக்கு வீட்டினுடையவஸ்துவைப்போலப் பலவீனமாயிருப்பது முந்தி முந்தி நாசமடையும். இந்திரியங்களும் மனமும் வாயுவும் உதிரமும் மாம்ஸமும் எலும்பும்வரிசையாகவே நாசமடைகின்றன; தம்காரணத்தையும் அடைகின்றன. உலகயாத்திரை நடப்பதும் தானதர்மங்களின் பயனுண்டாவதும் அதற்குள்ளவேதவசனங்களும் லோகவியவகாரங்களும் நிலைக்குமேயென்று இவ்விதமான பல்யுக்திகள் மனத்திலுண்டாகின்றன. [4]'இது உண்மையானது; இதுஉண்மையானது' என்று யாதொன்றும்காணப்

1 வேறு பாடம். 2 வேறு பாடம்.

3 முன்கண்டதைப் பின்னும் காணும்பொழுது முன்கண்டதாகவும் நினைப்பது. 4 வேறு பாடம்.

படுகிறதில்லை. இவ்விதம் ஆலோசிப்பவர்களும் அந்தஅந்தவிஷயத்தைப்பற்றி ஓடுகிறவர்களுமான அவர்களின்புத்தியானது ஓரிடத்தில் பிரவேசஞ்செய்கிறது ; மரத்தைப்போல அதில்தானே ஜீர்ணமடைகிறது. இவ்விதம் நன்மைகளாலும் தீமைகளாலும் கஷ்டப்படும்ஜந்துக்கள்யாவும் யானைக்காரர்களால் யானைகள் இழுக்கப்படுவதுபோல வேதங்களால்இழுக்கப்படுகின்றன. ஆசையானது ஆசைப்படும்வஸ்துக்களைப்புஜிப்பதால் ஒருபொழுதும் சமனமடையாது; அக்னியானது நெய்யால்வளருவதுபோலத் திரும்பவுமே வளரும். 'பெரும்பாலும் இந்தஜனங்கள் அறிவற்றுப் பொருள்களையும் மிகவும் ஸுகத்தைத்தரத்தக்க வேறுவிஷயங்களையும் விரும்புகிறார்கள். அவர்கள் ஸுகத்தைவிட்டு மிகப்பெரிதானதுன்பத்தைஅடைந்து மரித்துவின்வசம்செல்லுகிறார்கள். நிலையற்றஉயிருள்ளவனும் நசிக்கிறவனுமாயிருக்கிறவனுக்குப் பந்துக்களாலும் மித்திரர்களாலும் மற்றப்பொருள்களாலும் யாதுபயன் ? எவன் யாவற்றையுமேவிட்டுச்செல்லுகிறானோ அவன் க்ஷணத்தில்சென்று திரும்பாமலுமிருப்பான். பூமியும் ஆகாயமும் ஜலமும் அக்னியும் வாயுவும் எப்பொழுதும் சரீரத்தைப் பாதுகாக்கின்றனஎன்ற இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டபின் ஆசை எவ்விதம் உண்டாகக்கூடும் ? நசிக்கும்தன்மையுள்ள இவனுக்குச்செய்யவேண்டிய கர்மம் இல்லை' என்று சொன்னார். இவ்விதம் கபடமில்லாததும் வேறுகருத்தில்லாததும் மிகவும்ஸுகமுள்ளதும் தன்னைஸாக்ஷியாகக் கொண்டதுமான வசனத்தைக்கேட்டு ஜனதேவனென்னும் அரசன் வியப்புறறுப் பின்வருமாறு திரும்பவும்வினவத் தொடங்கினன்.

---

[1]இருநூறுதிருபத்திரண்டாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பஞ்சசிகர் கர்மபலன்களே ஜனகனுக்குச் சொல்லியது.)

அரசனனஜனகன் உத்தமரானபஞ்சசிகரிஷியால் அறிவிக்கப்பட்டுத் திரும்பவும் சரீரத்தைவிட்டு விலகியபொழுதுள்ள பிறப்பையும் பிறப்பிலலாத மோக்ஷத்தையும்பறறிக் கேட்கத்தொடங்கினன்.

---

1 இருநூற்றிருபதோராவதுஅத்யாயம், ஒருபுஸ்தகத்திலமட்டுமேகாணப்படுவதாக மூலபுஸ்தகத்தில் கூறியிருப்பதாலும் அதிலபெரும்பாலும் முன்பின் அத்யாயங்களிலுள்ள பலஸ்லோகங்களே ஒருமாதிரி சேர்க்கப்பட்டதாகக் காணப்பட்டதாலும் விடப்பட்டது.

LIBRARY

'பூஜ்யரே! சரீரத்தைவிட்டபின் ஒருவனுக்கும் விசேஷமானஅறிவு இல்லாமல்போனால் இவ்விதமிருக்கும்பொழுது அஜ்ஞானம்தான் என்னசெய்யக்கூடும்? ஞானம்தான் என்னசெய்யக்கூடும்? பிராம்மணஸ்ரேஷ்டரே! இதைப் பாரும். யாவும் விநாசத்தில் முடிவுபெறும். ஜாக்ரதையுள்ளவனே அஜாக்ரதையுள்ளவனேஎன்னவிசேஷத்தைச் செய்யப்போகிறான்? பஞ்சபூதங்களிலபற்றுதலில்லாமையோ அல்லது விநாசத்தையடையத்தக்க அவைகளில்பற்றுதலோ எதற்காகத் தத்வஜ்ஞானத்தை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டும்? இதில் உண்மையானநிச்சயம் எது?' என்று கேட்டான். அஜ்ஞானத்தால்மறைக்கப்பட்டவனும், நோயாளிபோலமயக்கங்கொண்டவனுமான ஜனதேவனைத் திரும்பவும் நன்மொழிகளால்ஸமாதானம்செய்து அறிவுள்ளபஞ்சசிகர் சொல்லத்தொடங்கினார்.'இந்தமோக்ஷவிஷயத்தில் விநாசத்தில்முடிவென்பதில்லை; விசேஷஜ்ஞானத்தில் முடிவென்பதுமில்லை. சரீரம் இந்திரியங்கள் மனம் இவைகளின் இச்சேர்க்கையானது கர்மங்களிலுண்டைஒன்று அடுத்திருந்தாலும்வெவ்வேறுகவிருக்கிறது. ஆகாயம் வாயு அக்னி ஜலம் பூமியென்றஐந்து பூதங்களும் அந்தச்சரீரமுதலியவைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. அந்தஐந்துபூதங்கள் இயற்கையால்சேர்ந்து நிலைபெற்றிருக்கின்றன. ஸ்வபாவத்தால விலகிச்செல்லுகின்றன. சரீரத்திலுள்ள இடைவெளி ஆகாயமும், பிராணன் வாயுவும், சூடு அக்னியும், ஈரமுள்ளது ஜலமும், கடினமானவை பூமியைச்சேர்ந்தனவுமாயிருக்கின்றன. இவ்விதம் ஐந்துபூதங்களின் சேர்க்கையான இச்சரீரமும் பலவிதமாயிருக்கிறது.ஞான என்றபதத்தின்பொருளும் பிராம்மணர்களுக்குஉத்தமமானதும் புத்தியின்உருவத்துடன்சோந்ததும்வாக்குக்களுக்குஎட்டாததும் நித்யமாயிருப்பதும் எதுவோ அது இவ்விதம் தெரிந்துகொள்ளத்தக்கதாகும். ஞானமானது, அறிவு அறியத்தக்கது அப்படியே அறிவிறகுக்காரணம்என்று மூன்றுவிதமாகச் சொல்லப்படுகிறது. கர்மங்களனைத்திற்கும் காரணமானவைகளின் சுருக்கம், புத்தி ஜாடராக்னி பிராணவாயுஎன்று மூன்றுவிதமாகும். இந்தமூன்றிலிருந்தும் இந்திரியங்களும் அவைகளுக்கு விஷயங்களானசப்தமுதலியவைகளும் அந்தவிஷயங்களின் அறிவும் சேதனமென்னும்புத்திவிருத்தியும் மனமும் பிராணனும் அபானனும் மற்றக்காரியங்களும் வெளியாகின்றன. பிராணன் முதலியவைகளின் காரியங்களும் ஞானேந்திரியங்களின்காரியங்களும் ஆத்மாவில் சேர்க்கையை அடைந்தவையல்ல. அவைகள்ஆத்மாவின்புத்திரன்போன்ற

மனத்தைக் காரணமாகக்கொண்டவைகள். பரஞ்ஞ அந்தப்புருஷன் அறிவே வடிவமாயிருக்கிறான். செவி த்வக்கு ஈ கண் மூக்கு என்ற இந்தஐந்து இந்திரியங்களும் மனத்தைக்காரணமாகக்கொண்டி செல்லுகின்றவைகளும் அதற்குட்பட்டவைகளுமாயிருக்கின்றன. அவைகளில் சேதனேயென்னும்புத்தியானது ஆத்மசைதன்யத்துடனிருந்துகொண்டி [1]மூன்றுவிதமாய் நிலேபெற்றிருக்கிறது. அந்தப் புத்தியை ஸுகமென்றும் துக்கமென்றும் ஸுகதுக்கமல்லாததென்றும் கூறுகிறார்கள். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்ற ஐந்தும் அவைகளுக்கிருப்பிடமானதிரவியங்களுமானஆறும்மரணம் வரையில் ஞானத்தை உண்டுபண்ணக்காரணமாக இருக்கின்றன. கர்மவழியும் அதைவிடுகிற ஸங்யாஸவழியும் எல்லாவற்றிலுமுள்ள தத்வப்பொருளின் நிச்சயமும் அந்தஇந்திரியங்களே அடித்திருக்கின்றன. அவைகளில்தத்வநிச்சயமென்பதை உத்தமமென்றும்மோக்ஷத்திற்குக்காரணமென்றும் ரஜோகுணத்தைக் கடந்துநிற்கும் பிரபுவென்றும் கூறுகிறார்கள். எப்பொழுதும் ரஜோகுணத்தில் செல்லும் மனமானது வைராக்யத்தால் அந்த அதத்வவழியிலிருக்கும். அந்தமனமானது தெளிவடைந்தால் புத்தியானது அழிவற்றதும் வியாபகமுமான பிரம்மத்தை ஸன்றுய்ததெரிந்துகொள்ளும். குணங்களின்சேர்க்கையானஇந்தச்சரீரத்தை, 'நான்' என்றஎண்ணத்துடன் பார்க்கிறவனும் நல்ல அறிவில்லாதவனுமாயிருக்கிறவனுக்கு முடிவில்லாத துக்கமானது குறையாமலேஇருக்கும். ஆகையால், அறிவுள்ளபுத்திமானுனவன் இந்தச்சரீரமுதலியவைகளில் பற்றுதலில்லாமலிருக்கவேண்டும். காணப்படுவன எல்லாம் ஆத்மாவல்ல. ஆகையால், அது ஈனென்றவஸ்துவாகவாவது என்னுடையதென்ற வஸ்துவாகவாவது இருக்கவில்லே. ஆகையால், தோன்றும்துன்பங்களின்தொடர்ச்சியானது எதை ஆதாரமாகக் கொண்டதாயிருக்கக் கூடும்? இவ்விஷயத்தில் மனத்தைச்சந்தேகமில்லாமல் தெளிவிப்பதான [2]மோக்ஷசாஸ்திரமானது மிகஉத்தமமாகும். உன்னுடையமோக்ஷத்திற்குக்காரணமாக எது சொலலப்படப்போகிறதோ அதைக் கேள். மோக்ஷத்திற்காக முயறசிசெய்யுமனேவருக்கும் கர்மமுதலியவற்றைவிடுவதுதான் சிறந்ததாகும். விலகாத துன்பத்துடன் கூடியவைகளான பிரபஞ்சங்களின்சேர்க்கையானது துன்பத்தைக்

1 'வேண்டுமென்றும் வேண்டாமென்றும் இரண்டுமில்லாததென்றும் மூன்று விதமாகப் புத்திக்கு உபயோகமுண்டாகின்றது' என்பது பழைய உரை'. இதனடுத்த ஸ்லோகத்தில் சொல்லியபடி மூன்று விதமென்று கொள்வது நலம்.

2 வேறுபாடம்.

கொடுப்பதும் கெட்டதுமாகும். திரவியத்தை விடுவதற்காகக்கூறப் படும் கர்மங்களும் போகங்களைவிடுவதற்காக விதிக்கப்படும் விரதங் களும் ஸுகத்தைவிடுவதற்காக விதிக்கப்படும்தவமும் யோகமும் அனைத்தையும்விடுவதில முடிவடைகின்றன. துக்கத்தை விலக்கிக் கொள்ளவேண்டியதற்காக இரண்டாவதில்லாமல் எல்லாவற்றையும் விடவேண்டுமென்ற தியாகவழியானது இவ்விதம் உபதேசிக்கப்பட் டது. தியாகமில்லாவிட்டால் துன்பமுண்டாகும். புண்ணியமானது நசித்துப் பாவமும்விலகித் தவத்தைக்காரணமாகக்கொண்ட உறுதியுள்ள பயனும்போனால் கிழத்தனம் மரணம் பயம்இவைகளிலிருந்துவிடு பட்டு மனிதன் ஆகாயம்போல விசேஷமற்றவனாகிப் படித்திருப்பான். புத்தியிலிருப்பவைகளும் மனத்தை ஆளுவதாகக்கொண்டவைகளு மான ஐந்துஞானேந்திரியங்களைச்சொல்லியபின் [1]மனத்தை ஆளுவதா கக்கொண்டஐந்துகர்மேந்திரியங்களையும் சொல்லுகிறேன். கைகளைக் கர்மங்களைச் செய்யும் இந்திரியங்களென்று தெரிந்துகொள்ளவேண் டும். கமனத்திற்குரியஇந்திரியம் கால்கள். கர்ப்பத்தை உண்டுபண்ணு வதற்கும் ஆனந்தத்திற்கும் உரியஇந்திரியம் சேபஸ். விடுவதற் குள்ளஇந்திரியம் பாயு. வெவ்வேறுனசப்தங்களைச்சொல்லுவதற்காக வாக்கு. [2]இந்த ஐந்து இந்திரியங்களுடன்கூடியிருப்பது மனமென்று அறிவிக்கிறார்கள். இவ்விதமான இந்தப்பதினோர்இந்திரியங்களையும் புத்தியால் [3]சீக்கிரம் விலக்கிக்கொள்ளவேண்டும். காதுகள் சப்தம் மனம் இந்தமூன்றும் கேட்கிறதற்குக்காரணமாயிருப்பன. அப்ப டியே தொடுவதிலும் அதுபோலப் பார்ப்பதிலும் அதுபோலவே சுவைப்பதிலும் மோப்பதிலும் மும்மூன்றுண்டு. இவ்விதம் இந்த ஐந்துமூன்றுகளான ஸாதனங்கள் அந்தஅந்தஅறிவிற்குக் காரணங் களாகின்றன. மூன்றுவிதமான இந்தஸாதனமானது அந்த ஞான த்தை உண்டுபண்ணுவதற்காகவே முறையே வந்துகொண்டிருக் கிறது. ஸாத்விகம் ராஜஸம் தாமஸமென்று அந்தஸாதனங்கள் மூன்றுவிதம். அவைகளிலிருந்து எல்லாவற்றையும்ஸாதிக்கத்தக்க மூன்றுவிதமான அனுபவங்களுண்டாகின்றன. [4]ஸந்தோஷம், பிரீதி,

1 'பிராணனை' என்பது வேறுபாடம்.

2 வேறுபாடம். 3 வேறுபாடம்.

4 [4]இஷ்டமானவஸ்துவைக கேட்பது பார்ப்பது அடைவது அனுப விப்பது இவைகளிலுண்டாகும் தெதவிருத்திகள முறையே ஸந்தோஷ முதலிய நான்குமாகும். அனுபவித்ததிலும் அனுபவியாததிலும் ஒரேவிதமான மனத்தின்நிலை உபசாந்தியாகும்.

ஆனந்தம், ஸுகம், மனத்திற்குஉபசாந்தி ; இவை காரணமில்லா மலோ ஒருகாரணத்திலிருந்தோ உண்டாவது ஸாத்விககுணமாகும். ஸந்தோஷமில்லாமை பரிதாபம் பேராசை சோகம் பொறுமை இவைகள் ரஜோகுணத்தின் அடையாளங்களாகும். அவைகள் ஸ்வபாவத்தாலும் சிலகாரணங்களாலும் காணப்படுகின்றன. அவிவேகமும் மோகமும் அஜாக்ரதையும் தூக்கமும் சோம்பலும் மற்றும்பலவிதமான தமோகுணத்திலிருந்து உண்டானகுணங்கள் இயற்கையாலும் காரணங்களாலும் உண்டாகின்றன. அவைகளில் சரீரத்திலோ மனத்திலோ ஸுகததைத்தருவதாயிருக்கிறது ஸத்வகுணத்தாலுண்டான பொருளென்று அதை அடையவிரும்பவேண்டும். தாபமுள்ளதும் தனக்கு வெறுப்பைச்செய்கிறதுமாயிருப்பதை அந்தக்காரணத்தால் ரஜோகுணம் உண்டாயிருக்கிறதென்று நினைக்கவேண்டும். அது போலச் சரீரத்திலோ மனத்திலோ எது மோகத்துடன்கூடியதும் இன்னதென்றுஊகிக்கத்தகாததும் அறியத்தகாததுமாயிருக்கிறதோ அதைத் தமோகுணமென்று நிச்சயிக்கவேண்டும். ஆகாயத்தை அடைந்தசெவியும் செவியைஅடைந்திருக்கும்சப்தமும்ஆகாயமென்னும் பூதஉருவந்தாம். சப்தத்தை அறியும்பொழுது ஆகாயம்செவி இவ்விரண்டும் வேறுகஅறியப்படுகிறதில்லை ; அறியப்படாமலிருப்பதுமில்லை. இதுபோல த்வக்கும் கண்களும் நாவும் ஐந்தாவதான மூக்கும் முறையே ஸ்பர்சம் ரூபம் ரஸம் மணம் இவைகள் தாம். அவைகளும் சித்தத்தைவிட வேறல்ல. அந்தச்சித்தமும் மனம் தான். ஐந்துவிஷயங்கள் ஐந்துஇந்திரியங்கள் இவைகளுக்குள்ள கேட்பதுமுதலியகாரியங்களில் ஒரேஸமயத்தில் வியாபிக்கும்திறமை சித்தத்துக்கிருப்பதால் இந்தப்பத்திலும் அதுஇருக்கிறது. சித்தத்தைப் பதிஜ்ஞோபவாதாகத் தெரிந்துகொள். புத்திஎன்பது பன்னிரண்டாவதாகும். இந்தப்பன்னிரண்டின்காரியங்களும் ஒருஸமயமில்லாமலிருப்பது (அதாவதுவிசேஷஞானமில்லாதிருப்பது) தமோகுணத்தாலுண்டானதிதிரையாகும். அப்பொழுது ஆதீமாவிற்குநாசமில்லை. அவைகளின்காரியங்கள் ஒருஸமயத்திலிருக்கும்பொழுது உண்டாவது உலகவியவகாரமாகும். இந்திரியங்களை விலக்கிச்சென்றாலும் ஜாக்ரத்தசையில் முதலில அனுபவிக்கப்பட்ட விஷயங்களின்வாஸனை வந்திருப்பதால் அந்தவிஷயங்களைக்கண்டு சிந்தித்துக்கொண்டுமூன்று குணங்களுள்ளவனாகவே சுற்றுகிறான். (இது ஸ்வப்நம்.) தமோகுணத்தால்அடிக்கப்பட்டசித்தமானது விரைவாக [1]லயத்தைஅடை

[1] வேறு பாடம்.

ந்து சரீரத்தில் நிலையுற்றதானஎந்தஒழிவைச்செய்கிறதோ அதைத் தமோகுணத்தாலுண்டான நித்ராஸுகமென்று சொல்லுகிறார்கள். வேதத்தாலுபதேசிக்கப்பட்டதும் துக்கத்தை [1]அனுபவியாததுமான அந்தமோக்ஷத்திலும் பொய்யானதும் அவ்யக்தமுமான தமஸுடன் கூடிய ஸுஷுப்தியில்போலிருக்கும். இவ்விதம் விலக்கப்பட்டதும் தம்கர்மங்களைக் காரணமாகக்கொண்டதுமான இந்தப்ரபஞ்சமானது (அஜ்ஞானமுள்ள)சிலருக்கு உறுதியாயிருக்கிறது; (ஞானமுள்ள) சிலருக்கு விலகுகிறது. நான்என்னும்இப்பொருளானது வேறுஇடத்தில் நிலையுள்ளதன்று. எவனுக்கு இது எப்பொழுதும் உறுதியாயிருக்கிறதோ அவனே அறிவுள்ளவன்.இதைவிடவேறுஸாரதர்மமானது எல்லாப்ராணிகளிடத்திலும் எப்பொழுதும் உறுதியாயிருக்கிறது. இதேஅனுமானத்தால்அந்தத்தர்மத்தை விலக்கிக்கொள்ளவேண்டும். மனிதன் ஞானத்தால் மோக்ஷமடைகிறான். தர்மபுத்தியுள்ளவன் ஞானமுள்ளவனுவான். உலகமானது தர்மத்தால் நிலைபெற்றிருக்கச் செய்யப்படுகிறது. யாவும் தர்மத்தில் நிலைபெற்றிருக்கின்றன. தர்மமானது எல்லாஇஷ்டங்களையும்உண்டுபண்ணுவதும் யாவற்றிற்கும் காரணமுமாயிருக்கிறது. உலகில் யாவும் காணப்படுகின்றன. எவ்விதத்திலும் அது எல்லோருக்கும் இஷ்டமாகிறதில்லை. ஆகையால், யாவற்றையும்தியாகம்செய்தால் பரமாத்மாவின்அருள்உண்டாகிறது. உலகங்களில்காணப்படும் பொருளைவிடக் காணப்படாததும் ஒப்பற்றதுமான ஒருவஸ்து எங்குமிருக்கிறது. ஆத்மவிசாரம்செய்கிறவர்கள் ஐந்துபூதங்களின் சேர்க்கையான இச்சரீரத்தை க்ஷேத்ரமென்று சொல்லுகிறார்கள். மனத்திலிருந்துகொண்டு விளங்கும்பொருளெதுவோ அது க்ஷேத்ரஜ்ஞனென்று சொல்லப்படுகிறது.அஜ்ஞானமென்னும்ஸ்வபாவத்தால்சேர்ந்துகொண்டிருக்கும் எல்லாப்ராணிகளிடங்களிலும்அவற்றிற்குள்ளகாரணங்களிலும் இவ்விதமிருக்கும்பொழுது (ஆத்மாவிற்கு)நாசமென்பது ஏது ? (பிரபஞ்சமானது) எவ்விதம்நிலையுள்ளதாயிருக்கக்கூடும் ? கடலில்சென்றநதிகளானவை தம்நிலையை வேருகவைத்துகொள்ளமுடியாமல் தம்உருவங்களையும் பெயர்களையும் விடுவதுபோலப் பிரபஞ்சத்திற்கு நாசமுண்டாகிறது. எல்லாவிடத்திலும் ஜீவனுனவன் வேறுவஸ்துவுடன்சேர்ந்து காணப்படுகிறான். இவ்விதமிருக்கும்பொழுது அந்த வஸ்துக்களைவிட்டு விலகியபின் திரும்பவும் விசேஷஅறிவு எவ்விதமிருக்கக்கூடும்?அஜாக்ரதையில்லாமல் ஆத்மாவைத்தேடுகிறவனும் மோக்ஷத்துக்குக்காரணமான இந்த

[1] வேறு பாடம்.

வித்தையைத்தெரிந்துகொள்ளுகிறவனுமானவன் ஜலத்தால் நனைக்கப்பட்டதாமரையிலையானது அதனுடன் பற்றுதலில்லாமலிருப்பதுபோல மேண்டாதவைகளான கர்மங்களின்பயன்களுடன் பற்றுதலில்லாமலிருப்பான். இந்தமனிதன் பிரஜைகளைக் காரணமாகக்கொண்டவைகளும் தேவர்களைப்பற்றியவைகளும் உறுதியுள்ளவைகளுமான பலபாசங்களிலிருந்து விடுபட்டு ஸுகதுக்கங்களை விடுகிறபொழுது [1] லிங்கசரீரமற்றவனும் முக்திபெற்றவனுமாகி உத்தமகதியை அடைகிறான். வேதப்பிரமாணத்தால் வெளியான சமதமாதிகளான மோக்ஷஸாதனங்களால் புண்ணியம் நசித்துப்பாவமும் நீங்க அவைகளைக் காரணமாகக்கொண்டபயனும் நசிக்க, மூப்பு இறப்புப்பயங்களற்றவனாகிப் படித்திருப்பான். இவ்விதம்மஹத்தென்னும்ஸுஷுப்திப்ரம்மத்திலும் வைராக்யமடைந்தவர்களாகிப் பற்றுதலில்லாததும் லிங்கசரீரமில்லாததும் எங்கும்விளங்குவதுமான பரமாத்மாவை அடைந்து அனுபவிக்கிறார்கள். ஊர்ணநாபிஎன்னும் (எட்டுக்கால்) பூச்சியானது நூலால்கட்டப்பட்டவீட்டில் சுற்றிக்கொண்டு எவ்விதம்நிற்கிறதோ அதுபோல அவித்தையால்வீழ்த்தப்பட்டஜீவன் நிற்கிறான். அந்தப்பூச்சியானது அந்த வீட்டைவிடுவதுபோல முக்திபெற்றவன் தூக்கத்தைவிடுகிறான். அவன் தூக்கமானது மலையில்விழுந்தமண்கட்டிபோலச் சிதறுகிறது. குருவென்னும் விளங்கானது பழையதானதன்கொம்பைத்தள்ளிவிட்டுப் பாராமல்செல்லுகிறதுபோலவும் பாம்பானது தன் பழையதோலைத் தள்ளிவிட்டுப் பாராமல்செல்லுகிறதுபோலவும் முக்திபெற்றவன் தூக்கத்தைவிட்டுச் செலலுகிறான். ஜலத்தில்விழுகிறமரத்தைத் தள்ளிவிட்டு அதில்பட்டுக்கொள்ளாமல் பக்ஷியானது ஓடிவதுபோல இந்த முக்திபெறறவன் லிங்கசரீரமற்று ஸுகதுக்கங்களைத் தள்ளிவிட்டுச் சிறந்தகதியைஅடைகிறான். [2]பலவிதமானஎல்லாஸங்கல்பங்களிலிருந்தும் விடுபட்டவன், 'நானே எல்லாஉருவமுமாயிருக்கிறேன். நான் எல்லாப்பொருளிலுமிருக்கிறேன். நானே உள்ளிலுமிருக்கிறேன். நானே ஜீவன்' என்ற இத்தக்கவியைப் பாடிக்கொண்டிருப்பான். அன்றியும்,மிதிலாபதியானஜனகனுடைய தன்னகரமானது தீயால் சூழப்பட்டபோது, 'இதில் என்னுடைய உடையும் எரிக்கப்படவில்லை' என்று பாடப்பட்டிருக்கிறது. அரசனும் தானே இவ்விதம்சொன்

1 பிராணன், ஆகாசம், இதரியம் பத்து, மனம் புத்தி இரண்டு, ஆகப்பதினேழும் சரீரமென்னப்படும்.

2 அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

ஞன்' என்றுசொன்னார். பஞ்சசிகரால்சொல்லப்பட்டதும் மோக்ஷத்தைப்பற்றியதுமான இவ்வுபதேசம்முழுமையையும் தான்நன்குகவனித்துப்பார்த்து அதன்கருத்தை நிச்சயம்செய்துகொண்ட விதேகராஜன் சோகங்களைவிட்டு உத்தமமானஸுகமுள்ளவனுக்களிப்புற்றிருந்தான். அரசனே! மோக்ஷத்தைநிச்சயம்செய்வதான இவ்வுபதேசத்தைப் படிக்கிறவனும் எப்பொழுதும் சிந்திக்கிறவனுமானவன் கபிலரின்சிஷ்யரான பஞ்சசிகாசார்யரைஅடைந்த மிதிலாபதியான ஜனதேவன்போலத் துக்கங்களைஅனுபவிக்கமாட்டான்; துக்கமில்லாதவனாகி முக்தியையும்பெறுவான்" என்றுசொன்னார்.

இருநூற்றிருபத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(மிதிலைஎரிந்ததும் ஜனகன்கவலையற்றிருந்ததும்.)

யுதிஷ்டிரர், "அறிஞர்களில் பெரியவரே! தர்மபுத்தியுள்ள மிதிலாபதியானவன் மிதிலாபுரி எரிக்கப்பட்டதைக்கண்டும் தான் எரிக்கப்படுகிறவனல்லனென்று சொன்னது என்ன காரணம்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"அரசப்புலியே! மிதிலை முன்காலத்தில் எதற்காக எரிக்கப்பட்டதென்பதைக் கேள். பெரியபுதபுத்தியுள்ளவனே! அந்த மிதிலையானது தீயால் எரிக்கப்பட்டது. அதை என்னிடமிருந்துகேள். ஜனதேவனென்னும் அந்தஜனகன் மனத்தில் நன்றுகவிசாரித்துக் கர்மங்களைத் தியானம்பண்ணிக்கொண்டு ஸ்வபாவனைபெற்று அந்த எண்ணத்துடன் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஆத்மாவை அறிந்தவனும் அறிவுடையோர்களிற சிறந்தவனுமானஜனகன் யாகம்செய்யும்பொழுதும் தானம்செய்யும்பொழுதும் ஹோமம்பண்ணும்பொழுதும் இந்தப்பூமியைப்பாதுகாக்கும்பொழுதும் பரமாத்மமயமான நிலைமையுடன் இருந்தான். எல்லாஉலகங்களுக்கும் ராசரான பிரபுவானவர் தாமே அந்த ஜனகன்மனத்திலுள்ளஸங்கல்பத்தை அறியவிருப்பங்கொண்டார். பெரிய புதபுத்தியுள்ள அவர் பிராம்மணஉருவத்துடன் அந்தமிதிலையில் சிறிது வேண்டாதகாரியத்தைச்செய்தார். அவர் பிராம்மணஸ்ரேஷ்டர்களால்பிடிக்கப்பட்டு அரசனிடம் அறிவிக்கப்பட்டார். அரசன் அக்குற்றத்தைக்காரணமாகக்கருதி, 'ஓ! பிராம்மணரே! எவ்விதத்திலும் உமக்குத் தண்டனையை நான்

விதிக்கமாட்டேன். என்னுடையபூமியின் எல்லைஅளவான என்ராஜ்யத்தைவிட்டு வெளியிற்செல்லும்' என்றுசொன்னன். அதைக்கேட்டுப் பிராம்மணரும் அரசனிடம்சென்று, 'அரசனே ! சொன்னபடி செய்கிறேன். எனக்குத்தெரியும்படி சொல். உன்னுடைய பூமிக்கு எல்லை எது ? எனக்கு இப்பொழுது நியாயமாகச்சொல்' என்று கேட்டார். அதைக்கேட்டு மிதிலாபதியான அரசன் அதைத் தத்வஞானத்துடன்தெரிந்துகொண்டு வெட்கத்தால்முகம்கவிழ்ந்து பிராம்மணரைநோக்கி ஒருபேச்சும்பேசாமலிருந்தான். பிராம்மணரானவர், 'ராஜேந்திரனே ! சொல்லு. உன்ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்டவனுகிச் செல்லுகிறேன்' என்று பரபரப்புடன் அரசனைநோக்கித் திரும்பவும்திரும்பவும் வினவினர். பிறகு, அரசன் பின்வருமாறு ஆலோசனை செய்துகொண்டு பிராம்மண ஸ்ரேஷ்டரைநோக்கி, 'ஓ! பிராம்மணரே! இந்தப்பூமியில் எனக்குஇருப்பிடமுமில்லை. அல்லது, பூமிமுழுமையும் என்னுடையது; நீர் சென்றுலும்செல்லும் ; நின்றுலும் நில்லும். என்னுடையபுத்தி இவ்விதநிச்சயத்துடனிருக்கிறது' என்றுசொன்னன். மிதிலாபதியானஅந்தஅரசனுல் இவ்விதம்சொல்லப்பட்டஅந்தப்பிராம்மணஶ்ரேஷ்டமர் மஹாத்மாவும் மந்திரிகளால்சூழப்பட்டவனுமான அந்தஅரசனைநோக்கி, 'நீ எப்பொழுதும்இவ்விதம் ஸ்ரீபத்மநாபருடைய பக்ஷத்தில் நிலையுள்ளவன். அந்தோ ! நீ மிகவும் கிருதார்த்தனுயிருக்கிறாய். நான் போகிறேன். உனக்கு க்ஷேமமுண்டாகட்டும்'என்றுசொன்னர். இவ்விதம் சொலலிவிட்டுப்பிராம்மணர் ஜனகனுடையஎண்ணத்தைப்பிராம்மணஶ்ரேஷ்டர்களுக்குஅறிவிக்க வேண்டுமென்றவிருப்பத்துடன் சென்றார். பகவானுனவர் தாம்அந்த ஜனகனுடைய மிதிலையைத் தீயால் எரித்தார். மிதிலாபுரிஎரிக்கப் படுவதைக்கண்டும் ஜனகராஜன் சலிக்கவில்லை. ஜனங்கள்கேட்கும் பொழுது அந்த அரசன், 'அந்தோ ! என்னுடையதனம்அழிவில்லாதது. எனக்கு வேண்டத்தக்கது ஒன்றுமில்லை. மிதிலாபுரி எரிக்கப் படுவதால் என்னுடையதொன்றும்எரிக்கப்படவில்லை' என்றஇவ்வசனத்தைச்சொன்னன். இவ்விதம்சொல்லுகிற அந்தஅரசனுடையமனத்திலுள்ளஎண்ணத்தைக்கேட்டுக்கேட்டுப் பிராம்மணரானவர் அந்தமிதிலாபுரியைத் திரும்பவும் பிழைக்கும்படிசெய்தார் ; தம்மையும்காண்பித்தார். திரும்பவும், 'ஓ! நாரதனே ! தர்மத்தில் உண்மையானஎண்ணமிருக்கட்டும். உன்னுடையபுத்தி அர்த்தத்தில் இருக்கட்டும். விஷயங்களில் வைராக்யமுள்ளவனுகி ஸத்யத்திலிரு. உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். நான் போகிறேன்' என்றுசொல்லி

அவனுக்கு வரத்தையும்அளித்தார். இவ்விதம் அந்தஅரசனைநோக்கிச் சொல்லியபின் பகவானவர் அவ்விடத்திலேயே அந்தர்த்தானத்தை அடைந்தார். அரசனே! இந்தஜனகன்கதையை உனக்குச் சொன் னேன். திரும்பவும் எதைக்கேட்கவிரும்புகிறாய்?'' என்றுகேட்டார்.

இருநூற்றிருபத்துநான்காவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(இல்லறத்திலிருந்தேமுக்திபெறுவதற்குஉதாரணமான ஸுவர்ச்சலைகதை.)

யுதிஷ்டிரர், "பிரபுவே! ஒருவன், மனைவியுடன் நியமமுள்ளவ னாக இல்லறத்திலிருந்து எல்லாஸம்ஸாரங்களையும் தாண்டினவனும் துவந்துவங்களைனத்தையும் விலக்கிக்கொண்டவனுமாயிருப்பானால் அவனை எனக்குச் சொல்லவேண்டும். பிராஜ்ஞர்களிற்பெரியவரே! அவ்விதமஹானுபுருஷன் அரியன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல் லத்தொடங்கினர்.

"அரசனே! நீ என்னிடம்வினவியதும் ஸம்ஸாரபயத்திற்கு மருந்துபோன்றதும் பரிசுத்தமுமான இந்தஇதிஹாஸத்தை கடந்த படிகேள். எல்லாச்சாஸ்திரங்களின் அர்த்தத்திலும் நிபுணத்தரும் ஆசாரமுள்ளவரும் தர்மமுள்ளவரும் எப்பொழுதும் தேவர்களையும் பிராம்மணர்களையும்பூஜிப்பவருமானதேவலரென்னுமொருபிரம்மரிஷி இருந்தார். அவருக்கு அதிகக்குள்ளமாயிராதவளும் அதிகக்கிருச மாயிராதவளும் அதிகஉயரமாயிராதவளும் கல்லகீர்த்தியுள்ளவளும் அழகானலக்ஷணமுள்ளவளுமான ஸுவர்ச்சலையென்னுமொருபெண் இருந்தாள். அப்பெண் விவாகத்திற்குரியவயத்தையடைந்ததும் தந்தையான ரிஷியானவர் அதைப்பற்றி, 'வேதத்தைக்கற்றவரும்வித் வானும் குடும்பமில்லாதவரும் பிரியமாய்ப்பேசுகிறவரும் பெரியதவம் பெற்றவருமான் சிறந்தவொருபிராம்மணர் இவளுக்கு எங்கிருந்துபதியா ககிடைப்பார்?' என்று சிந்தித்துக்கொண்டிருந்தார்.இவ்விதம்சிந்தித் துக்கொண்டிருக்கும்அவரைப்பார்த்து ஸுவர்ச்சலையானவள், 'அறி ஞர்களிற்சிறந்ததந்தையே! பொட்டையும் பொட்டையில்லாதவருமா யிருப்பவருக்கு என்னைக்கொடுக்கவேண்டும்.'அறிவுள்ளவரே! எப்போ தும் இவ்விதம் நினைத்துக்கொண்டிருரும். ரிஷியே! இது என்னுடைய விருப்பம்' என்று ரஹஸ்யதலிலசொன்னாள். தந்தையானவர், 'குழ ந்தாய்! இப்பொழுது உன்னுடையவிருப்பமானது நிறைவேறறக்கூடி

யதன்றென்று எனக்குத் தோன்றுகிறது. பொட்டைத்தன்மையென்றும பொட்டையிலலாமையென்றும்சொல்லும்இதுஎனக்குவிகாரமாயிருக்கிறது. அழகியகண்ணுளளவளே ! பிதாதக்கொண்டவள்போல அமங்களமானவார்தையைப் பேசுகிறாயே' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, 'நான் பித்துப்பிடித்தவளலலேன். இப்பொழுது ஸரியான புத்தியைமுன்னிட்டு உமக்குச் சொலலுகிறேன். அவ்விதமான பதிஇருப்பாராகில வேதங்களைஅறிந்த அவர் என்னைக்காக்கட்டும். நீர் என்னை ஸ்ரேஷ்டப் பிராம்மணருக்குக் கொடுக்கவிரும்புகிறீரோ அவரை இவ்விடதிறகு அழைத்துவாரும். அவர்களுள் என்னுடைய இஷ்டம்போல அவ்விதமானபிராம்மணரைப் பதியாக ஏறறுக்கொள்ளுகிறேன்' என்றுசொன்னள். ரிஷியானவர், ' அப்படியேஆகட்டும்' என்று அக்கன்னிகைக்குச்சொல்லிவிட்டுச்சிஷ்யர்களைநோக்கி, 'சிஷ்யர்களே ! வேதத்தையறிந்தவர்களும பிறப்பிலும்குலத்திலும் பரிசுத்தியுள்ளவர்களும் தாய்வழியிலும் தகப்பன்வழியிலும் பரிசுத்தர்களும் ஆசாரததில்சுத்தியுள்ளவர்களும் அழகுள்ளவர்களும் நோயற்றவர்களும் கல்லபுதஇயுள்ளவர்களும் சீலமும் பலமும் குணமுமுள்ளவர்களும் கோத்திரங்களின்கலப்பிலலாதவர்களும் வேதாத்தியயனத்திறகுரிய விரதங்களுள்ளவர்களும் பிரம்மசர்யம்முடித்தவர்களும் தாய்தந்தைகளுடன் கூடினவாகளும் என் கன்னிகையை விவாகம் செய்யவிருப்பமுள்ளவர்களுமானபிராம்மணர்களைப்பார்த்துச்சீக்கிரம் அழைததுவாருங்கள்' என்றுகட்டளையிட்டார். அதைக்கேட்டவுடனே,சிஷ்யர்கள்ஆஸ்ரமங்களிலும்அங்குமிங்குமுள்ள கிராமங்களிலும் விரைந்துசென்று பிராம்மணர்களிடம்தெரிவித்தார்கள். அரசனே! அத்தப்பிராம்மணோத்தமாகளான பலமுனிவர்களும் ரிஷியின்பெருமையையும் கன்னிகையின்பெருமையையும் தெரிந்துகொண்டு தேவலரின்ஆஸ்ரமத்தையடைந்தார்கள். சிறநதவரும் (ஸுவர்ச்சலையின்) தந்தையுமானதேவலா அப்பொழுது முனிவர்களையும் முனிகுமாரர்களையும் நியாயம்போலக் கௌரவித்து விதிப்படிபூஜித்துக் கன்னியை நோக்கி, 'பெண்ணே ! இங்குவந்த இந்த முனிவர்கள் ஸந்ததிகளிடத்தில விருப்பமுள்ளவர்களும் வேதங்களும்வேதாங்கங்களும் நிறைந்தவர்களும் நற்குலததிலுதிதவர்களும் கொண்டாடத்தக்க குணமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். கலயாணி ! நீ இவர்களுள் பெரிய விரதமுள்ள எந்தவரிடம் விரும்புகிறாயோ அந்தக்குமாரனை இப்பொழுது வரித்துக்கொள். அழகியே ! அவன்பொருட்டு நான் உன்னைக் கொடுக்கிறேன்' என்றுசொனனார். ' அப்படியேஆகட்டும்' என்று

சொல்லிவிட்டு அப்பொழுது அழகுள்ளவளும் உருக்கினதங்கம் போன்ற மேனியுள்ளவளும் எல்லாலக்ஷணமும்பொருந்தியவளும் கீர்த்தியுள்ளவளுமான ஸுவர்ச்சலையானவள் பிராம்மணர்களின் ஸபையைப்பார்த்துத் தவத்தையே பொருளாகக்கொண்ட அவர்களை நமஸ்கரித்து, 'இந்தஸபையில பொட்டையும்பொட்டையிலலாதவருமானபிராம்மணரிருப்பாராகில், அவர் எனக்கு வரர்' என்றவசனத்தைச் சொன்னாள். அதைக்கேட்டு அங்குள்ளமுனிவர்கள் ஒருவரைஒருவர்பார்த்துக்கொண்டு ஒன்றும் பேசவில்லை. வெவ்வேறானதேசங்களில்வஸிப்பவர்களும் ரிஷிகளில் பிரகச்சிறந்தவர்களும் பெரியபாக்கியம்பெறறவர்களுமான பிராம்மணர்கள் கன்னிகையை அறிவில்லாதவளென்று நினைத்துத் தேவலமுனிவரை மனத்தில இருத்திகொண்டு கோபித்து வந்தபடியே நிரும்பிச்சென்றார்கள். கன்னிகையான ஸுவர்ச்சலியென்னும் பெண்ணும் தகப்பன்வீட்டில்இருந்துகொண்டிருந்தாள். பிறகு, ஒருஸமயத்தில பிராம்மணர்களுக்கு நன்மைசெய்பவரும் வித்வானும் நீதியிலஸமர்த்தரும் [1]ஊஹாபோஹங்களின் முறையைஅறிந்தவரும் பிரம்மசர்யமுள்ளவரும் வேதங்களைக்கற்றவரும் வேதத்தின் உண்மையைஅறிந்தவரும் தர்மானுஷ்டானத்தில் ஸமர்த்தரும் ஆத்மதத்வத்தைபபருகுததறிந்தவரும் தாய்தந்தையுள்ளவரும் நறகுணக்கடலும் ஸ்வேதகேதுவெனப்பிரஸித்திபெற்றவருமான ரிஷியானவர் இந்தவரலாறறைக்கேட்டு ஆதரவுடன்கன்னிகையை விரும்பி வேகமாக அவ்விடத்தில தேவலரிடம்வந்துசேர்ந்தார். உத்தாலகரின்புத்திரரும் பெரியநியமமுள்ளவருமான ஸ்வேதகேதுவைக்கண்டு நியாயப்படி கன்குபூஜித்தபின், தேவலரானவர், 'பெரியபாக்கியம்பெற்றபெண்ணே! இதோ ரிஷிபுதநிரா வந்திருக்கிறார். அறிவுள்ளவர்களில பெரியவரும் வேதங்களிலும்வேதாங்கங்களிலும்கரைகண்டவருமானஇவரை வரித்துக்கொள்' என்றுசொன்னார். கன்னிகையானவள் அதைக்கேட்டுக் கோபங்கொண்டு ரிஷிபுத்திரரை நிமிர்ந்துபார்த்தாள். பிரம்மரிஷியானஸ்வேதகேது அத்தக்கன்னிகையைநோக்கிச் சொலலதொடங்கினார். 'கல்யாணி! நான் வந்திருக்கிறேன். நான் இவ்வுலகில் உண்மையில பொட்டையாயிருக்கிறேன். எப்பொழுதும் அவ்விதமே நினைதுக்கொண்டிருக்கிறேன். அதுபோல ஸந்தேகமின்றி நீண்டகண்ணுள்ளவளுமாக என்னை அறிந்துகொள். பெண்மணியே! என்னை வரித்துக்கொள். குறறமில லாதவளே! நான் உன்னை வரிக்கிறேன். இவ்வுலகமானது எந்

1 ஸபாபாவம் 14 - ம் பக்கம் சூறிப்பிறகாண்க.

தக்கண்ணால் எப்பொழுதும் பார்க்கவும் அடையவும் அதுபோலத்தொடவும் மனத்தைஅறியவும் பேசவும் செய்கிறதோ, எந்தக்கண்ணால் கர்மங்கள்செய்விக்கப்படுகின்றனவோ, எந்தக்கண்ணால் மனம் ஸங்கல்பிக்கவும் புத்தியானது உண்மையைஅறியவும் செய்கிறதோ அவ்வித ஆத்மஞானக்கண்ணிலாதவன் பிறவிக் குருடனென்றுசொல்லப்படுகிறான். எந்தஞானக்கண்ணிருக்கும்பொழுது பார்த்தும் தீண்டியும் தொட்டும் மணத்தையறிந்தும் ருசியைஅறிந்தும் இவ்வுலகம் செல்லுகிறதோ, அதுபோல எப்பொழுதும் எந்தக்கண்ணுடன்கூடியிருக்கிறதோ அந்தக்கண்ணானது எனக்கில்லை. ஆகையால, நான் குருடன். கல்யாணி! அக்காரணத்தால் நீ இப்பொழுது என்னைவரித்துக்கொள். உலகதிருஷ்டியுடன் நித்ய நைமித்திகமுதலியகர்மங்களை நான் செய்கிறேன். அவையாவையும் ஆத்மதிருஷ்டியுடன எப்பொழுதும் பற்றுதலில்லாமலிருக்கும்படி செய்துகொள்ளுகிறேன். காரியமானபிரபஞ்சத்தையும் அதற்குக்காரணமானபரமாத்மாவையும் பாவித்துக்கொண்டு நான் சமையிலலாதவனும் சாந்தனுமாயிருக்கிறேன். கர்மத்தைச்செய்வதால் மிருத்யுவை விலக்கிக்கொண்டும் விதிதையால மோக்ஷரூபமும் முந்தியே அடையப்பட்டதுமான அந்தஆத்மரூபத்தைப்பார்த்துக்கொண்டும் இவ்வுலகில்பொருமையில்லாமல் வவிக்கிறேன். கல்யாணி! உன்னுடையஎண்ணப்படி நீ விலேக்குவாங்கப்பட்டவள். உனக்கு நான் பர்த்தாவாகிறேன். நீ என்னை வரித்துக்கொள்' என்று சொன்னார். பிறகு, ஸுவர்ச்சலையானவள் பிராம்மணேத்தமமான அந்தஸ்வேதகேதுவைப் பார்த்து, 'அறிவுள்ளவரே! நீர் மனத்தால் வரிக்கப்பட்டவராகிறீர். மற்றக்கர்மங்களைச் செய்யவேண்டியவர் எனது பிதா. எனக்கு வேண்டி என்தந்தையைக் கேளும். இது வேதத்தில்கூறிய விதியின்முறையாகும்' என்றுசொன்னாள். அதை அறிந்து அவள்தந்தையும் முனிகளிலமிகச்சிறந்தவருமானதேவலர், அவ்விதமே உத்தாலகருடன்கூட அந்தஸ்வேதகேதுவை கன்குபூஜித்தீ முனிவர்களின் எதிரில தாரையை முன்னிட்டுக் கன்னிகையை அளித்தார். அவ்விடத்திலிருப்பவர்கள் அந்தஸ்வேதகேதுவைக்கண்டு, 'ஹ்ருதய புண்டரீகத்தில்வஸிப்பவரும் எலலாப்பிராணிகளுக்கும்ஆத்மபூதருமான மதுவென்னும் அஸுரனைக் கொன்றவருமான ஸ்ரீஹரிபானவர் ஸ்வேதகேதீஉருவமாகி இதோ கிறகிறார்' என்றுசொல்லிக்கொண்டார்கள். முனிஷ்யர்களிற சிறந்தமேதவலர், 'தேவரானஸ்ரீபாதவர் அருள் செய்யவேண்டும். என்னுடைய இந்தப்பெண்ணானவள் உமக்குப்

பத்னியாயிருக்கட்டும். உம்முடன் சேர்ந்து தர்மங்களைச்செய்யும் பத்னியாக அழகுள்ளகன்னிகையை உமக்கு அளிக்கிறேன்' என்று சொல்லி அந்தப்ரவேதகேதுவுக்குக் கன்னிகையைக் கொடுத்தார். பெரியகீர்த்திபெற்ற ப்ரவேதகேது அந்தக்கன்னிகையைப்பெற்றுக் கொண்டு நியாயப்படிவிவாகஞ்செய்து அதில் விதிபோலத்தொடங்கி விவாஹத்திற்குரியதும் மிகஉத்தமமுமான அனுஷ்டானத்தைமூனிகளால் முடிவுபெறச்செய்து கிருஹஸ்தாச்ரமத்தில் வஸித்துக்கொண்டிருந்தார். கிருஹஸ்தாச்ரமத்தில் வஸிப்பவரும் அறிவுள்ளவருமான அந்தப்ரவேதகேது பார்யையான அந்தஸுவர்ச்சலையைநோக்கி, 'அழகுள்ளவளே! வேதங்களிலெசொல்லப்பட்ட கர்மங்களனைத்தையும் என்னுடையஸஹதர்மசாரியான நீ என்னுடன்கூட நியாயப்படி செய். நான்என்கிறஎண்ணத்துடன் நான் இருக்கிறேன். அதுபோலவே நீயும் இருக்கிறாய். ஆகையால், கர்மங்களைச் செய்; நானும் உன்னுடன்செய்கிறேன். அதற்குப்பிறகு,நீ என்னுடையதன்றென்ற எண்ணத்துடன் அந்தக்கர்மங்களை ஞானமென்னுந்தீயில் லயிக்கச்செய்து பரிசுத்தமாகும்படிசெய்யவேண்டும். இவ்விதம் எப்பொழுதும் உன்னாலும் என்னாலும் செய்யப்படவேண்டும். [1]சிறந்தமனிதன் எதைஎதைச் செய்கிறானோஅதைஅதையே மற்றவர்களும் செய்யத்தொடங்குவர். ஆகையால், உசிதம்வித்தியபெறவேண்டியும் தனக்குவித்தியுண்டாகவேண்டியும் கர்மங்களைச் செய்யவேண்டும்' என்றுசொன்னார். இவ்விதம்சொல்லியபின் பிராஜ்ஞர்களிற்பெரியவரும் எல்லாஅறிவுகளுக்கும் ஒரேஇடமுமான அந்தப்ரவேதகேது வானவர் புத்திக்கும்மேற்பட்டஜ்ஞானக்குமுள்ள ஒற்றுமைபோலத் தமக்குச்சரியான அந்தமனைவியைஅடைந்து அவளிடத்தில் புத்திரர்களைஉண்டுபண்ணி யாகங்களால் தேவர்களைத்திருப்திசெய்தபின் எப்பொழுதும் ஆத்மஜ்ஞானத்தைப் பெரிதாகக்கொண்டவரும் துவக்குவங்களிலிருந்து விடுபட்டவரும் அபிமானிக்கத்தக்கபொருள்களை விட்டவருமாயிருந்தார். ஸத்தோஷத்துடன்கூட இவ்வுலகில் ஸஞ்சரிப்பவர்களும் ஸாக்ஷிபோன்றவர்களுமான அந்தப்பதியும் பார்யையும் வேறுஉலகத்தை அடைந்தவர்கள்போலிருந்தார்கள். பிறகு, ஒருஸமயத்தில் ஸுவர்ச்சலையானவள் பர்த்தாவான ப்ரவேதகேதுவைநோக்கி, 'ஓ! பிராம்மணோத்தமரே! நீர் யார்? அதை எனக்குச் சொல்லவேண்டும்' என்றுவினவினள். பூஜ்யரும் பேசும் நிறமையுள்ளவருமான ப்ரவேதகேது அந்தஸுவர்ச்சலையைநோக்கி,

[1] ஒருசொல விடப்பட்டது.

'நான் உன்னால் அறியப்பட்டவனாயிருக்கிறேன். சந்தேகமில்லை. 'பிராம்மணோத்தம!' என்று என்னை அழைத்துவிட்டுத் திரும்பவும் என்னகேட்கிறாய்?' என்றுசொன்னார். அந்தஸுவர்ச்சலையானவள் மஹாத்மாவான அந்தப்ரவேதகேதுவைநோக்கி, 'மனத்தில்படித்திருக்கும்ஆத்மாவைக் கேட்கிறேன்' என்றுசொன்னாள். அதைக்கேட்டு ப்ரவேதகேது அவளைநோக்கி, 'பெண்ணே! அவர் பேசமாட்டார்' என்று விடையளித்தார். 'ஆத்மாவைப் பெயரும்பிறப்புமுள்ளதாக் நினைப்பாயாகில் அது பொய்யாகும். பிறப்பிருக்கும் பொழுது சரீரமென்னும்பந்தமுமிருக்கிறது. இச்சரீரத்தில், 'நான்' என்னும்இந்தஎண்ணமானது உன்னிடத்திலும் நிலைபெற்றிருக்கிறது. 'நீயும் நான்; நானும் நான்; யாவும் நான்' என்பதே (உண்மையில்) இருக்கிறது. உண்மையான அந்தப்பொருளானது இந்தச் சரீரத்திலில்லை. எதற்காகக் கேட்கிறாய்?' என்றும் சொன்னார். பிறகு, தர்மங்களைச்செய்யும் அந்தஸுவர்ச்சலையானவள் சிரித்துக்கொண்டு மிகுந்தசந்தோஷமடைந்தாள். அரசனே! அச்சமயத்தில் சிரித்துக்கொண்டு பர்த்தாவைநோக்கி, 'பொருத்தமில்லாதபலசொற்களால் யாதுபயன்? பிரம்மரிஷியே! எப்பொழுதும் கர்மக்கூட்டங்களால் ஞானத்தைஇழந்தவராயிருக்கிறீர். அறிவிற்பெரியவரே! நான் எவ்விதம் உம்மைத்தொடர்ந்து நியமமுள்ளவளாயிருக்கிறேனோ அவ்விதம் நீர் அந்தஞானத்தை எனக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுசொன்னாள். ப்ரவேதகேது சொல்லத்தொடங்கினார். 'சிறந்தமனிதன் எதைஎதைச் செய்கிறானோ அதைஅதையே மற்றுமுள்ளஜனங்களும் செய்யத்தொடங்குவார்கள். அந்தக்காரணத்தால் இவ்வுலகம்நிலைபெற்றிருக்கிறது; இல்லாவிடில் ஸங்கீர்ணமாகிவிடும். தர்மமானது ஸங்கீர்ணமானால் ஜாதியும் ஸங்கரத்தையடையும் ஸங்கரமுண்டானால் (பெரியது சிறியதைவிழுங்குவதான) மீன்களுக்குரியநியாயம் நடைபெறும். கல்யாணி! இவ்வுலகைப்படைத்தவரும் மஹாத்மாவுமான ஸ்ரீஹரிக்கு அது அநிஷ்டமாகும். அழகியே! உலகீங்களின் இந்தப்படைப்பானது உத்தமரானகடவுளின் விளையாட்டாகும். உலகத்தில் எவ்வளவுமணல்கள் இருக்கக்கூடுமோ அவ்வளவேஇந்தஸ்ரீஹரியின் விபூதிகளும் உண்டு; மாயைகளும்அவ்வளவு உண்டு; இந்தமாயைகளின்சக்திகளும் அவ்வளவுஉண்டு. இவ்விதம், 'பெருங்காட்டில்ஆத்மா அகப்பட்டதாயிருக்கிறது. அதில்பிறப்புஇறப்பென்னும்ஸம்ஸாரத்தை அறிவென்றகத்தியால் வெட்டிவிட்டு எவன்செல்லுகிறானோ அவனே அறிவுள்ளவன். அவன் எனக்கு நேசமுள்ளவன். அவன்

தானே. ஸந்தேகமில்லை' என்று அந்தஸ்ரீஹரியின் உறுதிமொழி. மூடர்களும் கெட்டபுத்தியுள்ளவர்களும்தர்மங்களுக்குஸங்கரத்தைச் செய்கிறவர்களும் உலகமரியாதையைமாற்றுகிறவர்களுமான நீசர்கள் ஆஸுரப்பிறவியைஅடைந்து நரகத்தில்செல்லுகிறார்களென்று தேவரின்கட்டளை. ஆகையால், பூஜ்யையான உன்னாலேயும் உலகத்தில் ஸந்தேகமில்லாமல் அது காப்பாற்றத்தகுந்தது. உலக மரியாதையைக்காப்பாறறஎவண்டி நான் இவ்விதமிருந்துகொண்டிருக்கிறேன்' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, 'முனிகளிற்சிறந்தவரே! இவ்வுலகில் எது சப்தமென்றுசொல்லப்படுகிறது? அர்த்தமென்பது எது? இவைகளை வெவ்வேறான லக்ஷணத்துடனும் ஸ்வரூபத்துடனும் சொல்லவேண்டும்' என்றுகேட்டாள். ப்ரவேதகேது, 'எழுத்துக்களை மாறுதலுடனுச்சரிப்பதால் வெளியாவது எதுவோ அதைச் சப்தமென்றறியவேண்டும். அந்தச்சப்தத்தால் அறிவிக்கப்படுவது எதுவோ அது அர்த்தமென்றுசொல்லப்படுகிறது' என்று சொன்னர். ஸுவர்ச்சலை, 'இந்தச்சப்தத்திற்கும் அர்த்தத்திற்கும் ஸம்பந்தமிருக்கிறதா? இல்லையா? சப்தமுள்ளவிடத்தில் அர்த்தமுமிருக்குமாகில் அவைகளுக்குள்ளஸம்பந்தத்தை உள்ளபடிஎனக்குச் சொல்லவேண்டும்' என்றுகேட்டாள். ப்ரவேதகேது, 'சப்தத்திற்கும் அர்த்தத்திற்கும் நித்யமானஸம்பந்தமேஇல்லை. தாமரை இலையில் நீரிருக்கிறதுபோல அந்தஸம்பந்தமிருக்கிறதென்று தெரிந்துகொள்' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, 'சப்தத்தின்நிலையானது அர்த்தத்தைப்பற்றியதன்றோ? அந்தநிலையானது ஸம்பந்தமில்லாமல் இராதே? அறிஞர்களில்பெரியவரே! உத்தமரே! அர்த்தத்தின்ஸம்பந்தமில்லாமலிருக்குமாகில் அதைச்சொல்லவேண்டும்' என்றுகேட்டாள். ப்ரவேதகேது, 'அந்தஸம்பந்தமானது விசேஷமாயிருக்குமானால் அர்த்தத்தைஅறிவிக்கும்தன்மைஎன்றஸம்பந்தம் இருக்கிறதென்று சொல்லலாம். எப்பொழுதும் சப்தத்தைஉச்சரிப்பதால் அர்த்தம் அறியப்படுகிறது' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, 'அர்த்தமானது சப்தத்திற்குஇருப்பிடமென்று எனக்குச் சொல்லப்பட்டது. அவ்விதமானஅர்த்தமானது சப்ததுடன்பற்றுதலுள்ளதாயிருந்தும் பற்றுதலில்லாததாயிருக்கிறதென்று இவ்விஷயத்தில் கூறுவது விரோதமாயிருக்கிறது' என்றுசொன்னள். ப்ரவேதகேது, 'இவ்விஷயத்தில் விரோதமாய்ச்சொல்லப்படவில்லை. உலகமானது ஆகாயமின்றி இருக்கமுடியாது. ஆகிலும், அதில் ஸம்பந்தமேயில்லை. இதுவும்அதுபோலென்றுதெரிந்துகொள்ளவேண்டும்' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை,

'நான்என்னும் இந்தப்பதமானது எப்பொழுதும் ஆத்மாவைப் பற்றிக்கொண்டதாயிருக்கிறதென்பது தெளிவாயிருக்கிறது. சப்தங்கள் அந்தஆத்மவஸ்துவைப்பற்றியவையாயிருக்கிறதில்லையென்று கூறுவது பொய்யாகவேண்டும்' என்றுசொன்னாள். ஸ்வேதகேது, 'நல்லவிரதமுள்ளவளே! நான் என்றசப்தமானது அஹங்காரத்தைப் பற்றியதாகும்; ஆத்மவஸ்துவைப் பற்றியதன்று. குணங்களுடன் கூடியபொருளை அறிவிக்குந்திறமையுள்ள சப்தங்கள் சிக்தைக்கெட்டாததும் ''பரமுமான ஆத்மப்பொருளைப் பற்றியவைகளல்ல' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, [1] 'முனிகளிற்சிறந்தவரே! இவ்விஷயத்தில் அஹங்காரமென்பது எது? ஆத்மாவென்பது எது? இவ்விதமிருக்குமாகில் நியாயப்படி அதை எனக்கு உபதேசிக்க வேண்டும்' என்றுகேட்டாள். ஸ்வேதகேது, 'மண்ணால் உண்டுபண்ணப்பட்டபொருளில் எவ்விதம் கடத்தன்மை இருக்கிறதோ அவ்விதம் இந்த ஆத்மவஸ்துவில் அஹங்காரமென்னும்பொருள் கற்பிக்கப்பட்டிருக்கிறது. சிக்தைக்கெட்டாததும் பரமுமாயிருப்பது உண்மையானஆதமப்பொருளாகும். 'நீ, நான், இது' என்பவை எலலாம் பரமானஆத்மவஸ்துவில நம்மால் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால், சப்தங்கள் ஆத்மாவில பறறுதலுள்ளவைகளல்ல வென்பதில் விரோதமேயில்லை. பயந்தஸ்வபாவமுள்ளபெண்ணே! ஆகையால், எல்லாவிதத்தாலும் மனதுடன்கூடிய வாக்குக்கள் ஆத்மாவிலில்லை. ஆகாயத்தைஅடைந்தஉலகமானது (உண்மையில)பற்றுதலிலலாவிட்டாலும் பறறுதலுள்ளதாகக் காணப்படுவதுபோல ஆதமாவைப்பறறியகாரியமுமிருக்கிறது. யாவும் ஆகாயத்தில பறறுதலுள்ளவைகளல்ல. காரியமும் எப்பொழுதும் ஆத்மாவில பற்றுதலுள்ளதன்று. பரிசுத்தமான அந்தப்பரப்ரம்மமானது உபமானமில் லாப்பொருளாதலால அறிவிக்கக்கூடியதன்று; காணப்படுகிறதும் அன்று. ஆகிலும், அது அவசியம் காணப்படுகிறதென்று என் கருத்து' என்றுசொன்னர். ஸுவர்ச்சலை, 'ஆகாயமானது விகாரமில்லாததும் மூர்தநியிலலாததும் அவயவமில்லாததும் எங்குமிருப்பதுமாக எப்பொழுதும் காணப்படுகிறது. நீர்கூறிய சைதன்ய உருவமான ஆதமாவானது காணப்படுகிறதில்லையே' என்று கேட்டாள். ஸ்வேதகேது, 'ஆகாயதிலிருக்கும் வாயுவைத் துவக்கு

1 இங்கு மூலபுஸ்தகதிலுள்ளபிழைகளைப் பழையபுஸ்தகதிலுள்ள உதாரணத்தை பார்த்து, திருத்தி இவ்விதம் எழுதபபட்டது. ப்ரம்மவித்யா பரணமென்ற கிரக்தத்தில 104, 105-ம் பக்கங்களில் பார்க்க.

இந்திரியத்தால் திரும்பவும் திரும்பவும் தொட்டறிகிறான். அதி லுள்ளமணத்தை மோந்துபார்க்கிறான். அதுபோல அதிலுள்ள தேஜஸையும் இருளையும் கிரணக்கூட்டத்தையும் மேகக்கூட்டத்தை யும் மழையையும் நக்ஷத்திரக்கூட்டத்தையும் கண்ணால் காண்கிறான். ஆகாயமோ காணப்படுகிறதில்லை. ஸ்ருபமானப்ரமமோ ஆகாசத் திற்கும்ஆகாசமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அந்தப்ரமத் தில்இவைகளெல்லாம் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப்பரமாத்மா ஸத்யரும் ஸ்ரீவிஷ்ணுவுமாயிருக்கிறார். குணங்களைக்கூறும் பெயர்ச் சொற்களானவை பரமாத்மாவினிடத்தில ஆரோபிக்கப்படுகின்றன. எங்கும்நிறைந்த பரமாத்மாவானவர் கண்ணாலும் மனத்தாலும் வேறு ருவிகளாலும் அறியப்படுகிறவரல்லர் ; வாக்காலும் சொல்லக்கூடி யவரலர் ; ஸூக்ஷ்மமானபுத்தியால் சிந்திக்கப்படுகிறார். பெரிய குடமும் சிறியகுடமும் பூமியில நிலைபெறறவைகளாயிருப்பதுபோல காணப்படும் பிரபஞ்சமுழுதும் மிச்சயின்றி அந்தப்பரமாத்மாவினி டம் நிலைபெறறிருக்கிறது. அது பெண்ணுமன்று ; ஆணுமன்று ; அலியுமன்று. அது ஞானம்ஒன்றையே உருவமாகக்கொண்டது. அதில் எல்லாம் நிலைபெறறிருக்கின்றன. பூமியின்சிலபாகத்தின்சேர் க்கையாலும் சிலவஸ்துக்களின்பாகங்களின்சேர்க்கையாலும் ஜலத தில ருசியின்வேறறுமை தோன்றுகிறதுபோல ப்ரக்ருதியின்ஸம்ப ந்தத்தால ஆத்மாவிற்கு வேறறுமை தோனறுகிறது. தண்ணீரைக் குடிப்பவன் திருப்தி அடைவதுபோல (மனிதன்) அந்தப்பரமாத் மாவை அறிவிக்கும்வேதவாக்கியங்களைத்தெரிந்துகொண்டு எப்பொ ழுதும் எல்லாஅறிவையும் அடைவான். அந்தஅறிவால அந்த ஆத்ம ஸுகமானது பெருகும்' என்று சொன்னார். ஸுவர்ச்சலை, 'சிந் தைக்குஎட்டாதபரமாதமா வேதத்தால் அறியத்தக்கவரென்று பௌ ராணிகர்கள் கூறுகிறார்கள். இந்தச்சொலலால் என்னஸாதிக்கத்தக்க தாருமென்று எனக்குத தோன்றுகிறது. உலகத்தில பொருளில் லாதசப்தம் எவ்விதமிருக்கிறதோ அவ்விதமே இதுவும்இருக்கலா மென்று எனக்குத தோன்றுகிறது. குறறமில்லாதவரே ! இவ்விதம் பார்த்து நியாயப்படி எனக்கு நீர் உபதேசிக்கவேண்டும்' என்று சொன்னாள். ப்ரவேதஸுகது, 'பரிசுத்தமானபரமாதமவஸ்து வேதத் தால் அறியத்தக்கதென்றுகூறும் சிறந்தவேதமானது உண்மையே. வேதமானது விரோதமாயிருப்பதால பரமாத்மாவை, 'இது' என்று உபதேசிக்கிறதில்லை. அதறகு அருகிலுள்ள அடையாளங்களிலிரு ந்துகொண்டு உபதேசிக்கிறது. உத்தமியே ! உலகதிலுள்ளசபத

மும் பொருளறறதாயிருப்பதில்லை. ஒன்றேடொன்றுபொருத்தமில்லாதசப்தங்களைப் பொருளில்லாதவைகளென்று உலகத்திலுள்ளவர்கள் கருதுகிறார்கள். பரமாத்மாவைப்பற்றியசப்தங்கள் அப்படியிருப்பவைகளல்ல. அழகுள்ளவளே ! அதுபோல (பரமாத்மாவிற்கு) வாக்குக்களுக்கு விஷயமில்லாதிருக்குந்தன்மை யுக்தமாகும். ஞாதனத்தைஉபதேசிப்பதாலும் வழியைஸூசனஞ்செய்வதாலும் உபலக்ஷணமுறையுடனும்மறறவைகளைவிலக்கும்முறையுடனும்அவரை அறிவிப்பதாலும் பரிசுத்தரானபரமாத்மா வேதத்தால அறியத்தக்கவராகிறாரென்பது என்னுடைய உறுதியானஎண்ணம். நல்ல ஆசாரமுள்ளவளே ! தெளிவானஞானமானது ஆத்மாவைப்பறறிய தியானத்தாலுண்டாகிறதென்று தெரிந்துகொள். அந்தஞானததால் உத்தமகதியை அடைகிறார்கள். [1]இந்தப்பரமாத்மாவினுடையஐஸ்வர்யமானது பலஉருவமுள்ளதாகக் காணப்படுகிறது. அழகுள்ளவளே ! வாயு அந்தப்பரமாத்மாவை அறிகிறதில்லை. சூரியனும் அவரை அறிகிறதில்லை. அக்னியும் அவரை அறிகிறதில்லை. அந்தப்பரமாத்மாவால் உலகமே நிறைந்திருக்கிறது. அந்தப்பரமாத்மா இந்தமனத்தில்இருந்துகொண்டு விளங்குகிறார். ஆத்மஜ்ஞானமென்பது இவ்வளவுதான். இவ்வளவைததான் நான் அறிகிறேன். நம்மிருவருக்கும் அதில் வேற்றுமையில்லை. ஆகையால், வேற்றுமையானது அஜ்ஞானததால்அகங்காரத்திலுண்டுபண்ணப்பட்டிருக்கிறது' என்று சொன்னார். இவ்விதம் பார்த்தா உண்மையாக உபதேசிக்கக் கேட்டு ஸந்தோஷமுற்றஸுவர்ச்சலை எப்பொழுதும் (அவருக்குப்) பணிவிடைசெய்கிறவளும் தத்வஜ்ஞானத்தை அடைந்தவளுமாயிருந்தாள். ஓ ! அரசனே ! பார்த்தாவான ஸ்வேதகேதுவும் அவளுதவியாகக்கொண்டு நிதியங்ஙவிதிகர்மங்களைநடத்தி எங்கும்நிறைந்துவிளங்குகிறவரும் மஹாத்மாவும் பரமாத்மாவுமான ஸ்ரீ கோவிந்தரிடம் கர்மங்களை அர்ப்பணம்செய்து பரமாதம மயமானபாவனையுடன் நெடுங்காலமிருந்து உத்தம கதியைப்பெறறார். அரசனே ! கிருஹஸ்தாஸ்ரமத்தை அடைந்து தம்பதிகள் உத்தமகதியை அடைந்தார்கள். நீகேட்டபடியால் இதனை உனக்கு உபதேசிததேன்'' என்றுசொன்னார்.

---

[1] ஒருஸ்லோகம் விடப்பட்டது.

இருநூற்றிருபத்தைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)



(அடக்க முள்ளவனுடைய லக்ஷணமும் அடக்கத்தின் சிறப்பும்.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! எதைச் செய்கிறவன் ஸுகமடை பெறுவான்? எதைச் செய்கிறவன் துன்பம் அடைவான்? எதைச் செய்கிறவன் விடுதலைபெற்று உலகில பயமில்லாதவனாகி ஸஞ்சரிப்பான்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"வேதத்தைக்கண்ட பெரியோர்கள் எல்லாஜந்துகளுக்கும் விசேஷமாகப் பிராம்மணனுக்கும் [1]தமம் ஒன்றையே மிகச்சிறந்ததெனக் கூறுகிறார்கள். தமமில்லாதவனுக்குக் கர்மங்களின் பலித்தியானது உள்ளபடி உண்டாகிறதில்லை. கர்மமும் தவமும் தேவர்களும் யாவும் தமத்தில நிலைபெற்றிருக்கின்றன. தமமானது தேஜஸைப்பெருகச் செய்யும். தமமானது பரிசுத்தமென்றுசொலலப்படுகிறது. தமமுள்ள புருஷன் பாவமில்லாதவனும் பயமில்லாதவனுமாகிப் பெருமையை அடைவான். தமமுள்ளவன் ஸுகமாக உறங்குவான்; ஸுகமாகவிழித்துக்கொள்ளுவான்; ஸுகமாக உலகில்உலாவுவான். அவன்மனமும் தெளிவுள்ளதாயிருக்கும். தேஜஸானது தமத்தால் நிலைபெறுகிறது. கொடுமையுள்ளவன் தமத்தைமீறிச் செலலுவான். அவன் வெவ்வேறான காமமுதலிய பலபகைகளை எப்பொழுதும் மனத்தில் காணுவான். மாம்ஸங்களை உண்ணும் கொடிய விலங்குகளிடமிருந்து பயம் உண்டாவதுபோலத் தமமில்லாதவர்களிடமிருந்து பிராணிகளுக்கு எப்பொழுதும் பயமுண்டாகும். அவர்களை அடக்கவேண்டியதற்காக ப்ரம்மதேவர் அரசனைப் படைததார். எல்லா ஆஶ்ரமங்களிலும் தமமேசிறந்ததாகும். [2]அவ்வாஶ்ரமங்களில தர்மத்தால் அடையப்படும் பயன் எதுவோ அது தமமுள்ளவனிடம் அதிகமாக உண்டாகுமென்று உபதேசிக்கப்படுகிறது. எந்தக்குணங்களின் கூட்டம் தமமாகுமோ அந்தக்குணங்களுக்குரிய குறிகளைக் கூறுகிறேன். அவைகளாவன:—இருபணத்தன்மையிலலாமை, பரபரப்பில்லாமை, ஸந்தோஷம், ஶ்ரத்தை, கோபமில்லாமை, நேர்மை, எப்பொழுதும் அதிகவசனம் பேசாமை, கர்வமில்லாமை, பெரியோர்களைப் பூஜிப்பது, அஸூயையில்லாமை, பூததயை, கோட்சொலலாமை,

1 540-ம் பக்கம் குறிப்பிடக்காண்க.

2 அதிகபாடமான அரைஸுலோகம் விடப்பட்டது.

ஊர்வம்பு பொய் புகழாமை இகழாமை இவற்றை விடுதல் ஆகிய இவைகளாம். [1]மோக்ஷத்தில் விருப்பமுள்ளவனும் அனுபவஸமயங்களில வருங்காலத்தை விரும்பாதவனும் பகையைச் செய்யாதவனும் உண்மையான உபசாரமுள்ளவனும் நிந்தையிலும் ஸ்துதியிலும் ஸமமாயிருப்பவனும் நன்னடக்கையுள்ளவனும் நல்லசீலமுள்ளவனும் தெளிந்தபுத்தியுள்ளவனும் தைரியமுள்ளவனும் பரிசுத்தனுமாயிருப்பவன் இவ்வுலகில் பூஜையைப்பெற்று இறந்தபின்னும் ஸ்வர்க்கத்தை அடைகிறான் ; எல்லாப்பிராணிகளுக்கும் அரிதான பொருளை அளிப்பவனும் ஸுகமுள்ளவனுமாகிக் களிப்பான். எல்லாப்பிராணிகளுக்கும் நன்மையைச் செய்வதில முயற்சியுள்ளவனும் மனிதரைப் பகையாதவனுமாயிருக்கிறவன் பெரியமடுவைப்போலக் கலக்கமடையாமல மிக்க அறிவுள்ளவனும் திருப்தியுள்ளவனுமாகித் தெளிந்திருப்பான். பிராணிகளிடமிருந்து எவனுக்குபயமில்லையோ, எல்லாப்பிராணிகளுக்கும் எவனிடமிருந்து பயமில்லையோ புத்தியுள்ளவனும் தமமுள்ளவனுமான அந்தப்புருஷன் எல்லாப்பிராணிகளாலும் பூஜிக்கத்தக்கவனுகிறான். பெரியலாபத்தில ஸந்தோஷமடையாமலும் பெரிய கஷ்டத்தில் சோகப்படாமலும் எப்பொழுதும் விசாலமான புத்தியுடனிருக்கும் பிராம்மணன் தமமுள்ளவனென்று சொலலப்படுகிறான். நல்ல கர்மங்களுள்ளவனும் சாஸ்திரஜ்ஞானமுள்ளவனும் பரிசுத்தனும் எப்பொழுதும் தமமுள்ளவனுமாயிருப்பவன் அந்தத் தமத்திற்குரிய பெரியபயனை அனுபவிப்பான். அஸூயையில்லாமை, பொறுமை, சாந்தி, ஸந்தோஷம், ப்ரியவசனம், ஸத்யம், கொடை, ப்ரமமில்லாமை விருப்பது இவை துஷ்டபுத்தியுள்ளவர்களுடைய வழியல்ல. காமம், கோபம், லோபம், பிறனிடம் அஸூயை, தற்புகழ்ச்சி, ஸந்தோஷமில்லாமை, பொய், அவிவேகம் இவை கெட்டபுத்தியுள்ளவர்களின் வழியாகும். பிராம்மணன் காமததையும்கோபத்தையும் தன்வசதில அடக்கிக்கொண்டு பிரம்மசாரியும் இந்திரியங்களைவென்றவனும் கொடிதான அவிவேகத்தைவென்று மிகக் கூர்மையான நியமமுள்ளவனுமாகிக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு அபாயமில்லாதவன் போலத தைரியத்துடன் உலகங்களில் ஸஞ்சரிக்கவேண்டும்" என்று சொன்னார்.

---

[1] வேறுபாடம்.

இருநூற்றிருபத்தாருவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)



(தவம் உபவாஸாதலியவற்றின்பிறவையும் பயனும்.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிராம்மணர்கள் விதிகளில் கூறிய பயனில் விருப்பங்கொண்டு விரதத்துடன்கூடியவர்களாகித் தேவதைகளுக்கு இட்டமிச்சமான மாம்ஸமுதலியஆகாரத்தைப் புஜிக்கிறார்களே. அது எப்படி?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"யுதிஷ்டிர! வேதமல்லாதவிடத்தில் (அதாவது தந்திரங்களில்) கூறியவிரதமுள்ளவர்களாகிப் புஜிப்பவர்கள் தமக்குஇஷ்டமான காரியத்தைச்செய்யும் குற்றமுள்ளவர்களாவார்கள். வேதத்தில் கூறிய விரதங்களிலிருந்துகொண்டு புஜிப்பவர்கள் கர்மங்களின் பயனில் பேராசைகொண்டவர்களாகிறார்கள்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், "ஓ! மஹாராஜரே! அவிவேகிகள்உண்ணுமலிருப்பதைத்தவமென்று கூறுகிறார்கள். இது தவமா? அல்லது, எது தவமாகும்?" என்றுகேட்க, பீஷ்மர்சொல்லத்தொடங்கினர். "ஸாதாரணஜனங்கள் ஒருமாதமாவது ஒருபக்ஷமாவது உண்ணுமலிருப்பதைத் தவமென்று நினைக்கிறார்கள். ஆத்மவித்தைக்குவிரோதமானஉபவாஸத்தைத் தவமென்று ஸாதுக்கள் கருதுகிறதில்லை. ஸ்யாஸமென்னுந்தியாகமும் பிராணிகளுக்குஉபகாரம்செய்வதும் உத்தமமானதவமென்று உபதேசிக்கப்படுகின்றன. ஓ! பாரத! குடும்பத்திலிருப்பவனுலும் தர்மத்தைப்பரிதாகக்கொண்ட ஆந்தப்பிராம்மணனுவன் எப்பொழுதும் உபவாஸமுள்ளவனும் எப்பொழுதும்பிரம்மசாரியும் எப்பொழுதும் மூனியும் எப்பொழுதும்தெய்வமும் எப்பொழுதும் தூக்கமில்லாதவனும் எப்பொழுதும் மாம்ஸத்தைப்புஜியாதவனும் எப்பொழுதும் பரிசுத்தியுள்ளவனும் எப்பொழுதும் அம்ருதத்தைப் புஜிப்பவனும் எப்பொழுதும் விஷத்தைப்புஜியாதவனும் எப்பொழுதும் விகஸத்தைப்புஜிப்பவனும் எப்பொழுதும் அதிதிகளிடம்அன்புள்ளவனும் எப்பொழுதும் சிரத்தையுள்ளவனும் எப்பொழுதும் தேவர்களையும் பிராம்மணர்களையும் பூஜிப்பவனுமாயிருப்பான்" என்றுசொன்னர். யுதிஷ்டிரர், 'எப்பொழுதும் உபவாஸமுள்ளவனுயிருப்பது எப்படி? எப்பொழுதும் பிரம்மசாரியாயிருப்பது எப்படி? விகஸத்தைப்புஜிப்பவனுயிருப்பது எப்படி? எப்பொழுதும் அதிதிகளிடத்தில் பிரீதியுள்ளவனுயிருப்பது எப்படி?' என்றுகேட்க, பீஷ்மர்

சொல்லத் தொடங்கினர். "காலை ஆகாரத்திற்கும் மாலைஆகாரத்திற் கும்இடைநேரத்தில் திரும்பவும்போஜனம்செய்யாமலிருப்பவன் எப் பொழுதும் உபவாஸமுள்ளவனுகிறன். ருதுகாலத்தில்மட்டும் பாரி யையிடம்செல்லுகிற பிராம்மணன் எப்பொழுதும் பிரம்மசாரியாகி றன். எப்பொழுதும் ஞானமுள்ள அவன் ஸத்யவாதியாகிறன். வீணைமாம்ஸத்தைப் புஜியாமலிருப்பவன் எப்பொழுதும் மாம்ஸத் தைபுஜியாதவனுகிறன். எப்பொழுதும் தானம்செய்கிறவன் எப் பொழுதும் பரிசுத்தியுள்ளவனுகிறன். பகலில் உறங்காமலிருப்பவன் எப்பொழுதும் தூக்கமில்லாதவனுகிறன். ஓ! யுதிஷ்டிர! வேலைக் காரர்களும் அதிதிகளும் போஜனம்செய்தபின் எப்பொழுதும் புஜிக் கிறவன் அம்ருதம்ஒன்றையே புஜிக்கிறவனென்று தெரிந்துகொள். அவர்கள் போஜனம்செய்யாமலிருக்கும்பொழுது புஜிக்கும்பிராம்ம ணன் விஷத்தைப் புஜிக்கிறன். அதிதிகளுக்கு அன்னமளியாமல் போஜனம்செய்யாதவன் எப்பொழுதும் அதிதிகளிடம்பிரீதியுள்ளவ னுகிறன். தேவர்களுக்கு அன்னமளியாமல் புஜியாதவன் தேவதை யாகிறன். தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் அதிதிகளுக்கும் அளித்தமிச்சத்தை எவன் புஜிக்கிறனே அவனே விகஸத்தைப் புஜிக்கிறவனென்றுகூறுகிறர்கள். அவர்களுக்கு ப்ரம்ம தேவருடன்கூட அவரிருக்குமிடத்தில் முடிவில்லாத உலகங்கள் உண்டாகின்றன. அப்ஸரஸ்திரீகளுடன் தேவர்கள்அவனருகில்வந்து சுற்றிக்கொள்வர்கள். எவர்கள் தேவர்களுடனும் பித்ருக்களுடனும் புஜிக்கிறர்களோ அவர்கள் புத்திரர்களுடனும் பௌத்திரர்களுட னும் ஸந்தோஷமடைகின்றனர். அவர்களுக்கு மிக உத்தமமான கதி உண்டாகும்" என்று சொன்னர்.

இருநூற்றிருபத்தேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஸநத்குமாரர் முனிவர்களுக்குப் பகவத்ஸ்வரூபத்தை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "அரசரே! உலகத்தில் சிலர் இரண்டுவிதமும் சிலர் மூன்றுவிதமும் சிலர் பலவிதமுமாகச்சொலலுகிறர்கள். நம்பிக்கை இல்லே. வேறு வழியும் காணப்படவில்லே. அந்தப்பரம்மமும் காணப் படுகிறதில்லே. சாஸ்திரங்களும் பலவிதமாயிருக்கின்றன. சொல்லப் படுகின்றவையும் வெவ்வேறு விதமாயிருக்கின்றன. பிதாமஹரே!

நான் எதைப் பிடித்துக்கொண்டிருப்பேன்? அதை எனக்குச் சொல்ல வேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். தம் தம்தர்மத்தில் முயற்சியுள்ளவர்களும் சாஸ்திரங்களில் விசேஷ ஸாமர்த்தியம்பெற்றவர்களும் மஹாத்மாக்களுமான பண்டிதர்கள் உலகத்திலிருக்கிறார்கள். அவர்களில் யார் வித்வான், யார் தத்வ ஜ்ஞானி என்பதில் எல்லோருடைய உண்மையையும் தெரிந்து கொண்டு எவ்விதம் விருப்பமோ அவ்விதமிருக்கவேண்டும். இவ் விஷயத்தில் முன்காலத்தில் நடந்ததும் ஞானநிஷ்டையிலுள்ள புத்தியுள்ளவர்களான ரிஷிகளின் பெரியவிவாதத்துடன் கூடியதுமான பழைய இதிஹாஸமிருக்கிறது. இமயமலைச்சார்பில் மிகக் கடுமையான நியமமுள்ள பலரிஷிகளிருந்தார்கள். அவர்களில், ஆறுயிரம்பெயர்கள் கூட்டமாகக் கூடியிருந்தார்கள். அக்கூட்டத்தில் சிலர் உலகத்தை நீலையுள்ளதென்றும் சிலர் ஈச்வரனுடன்கூடியதென்றும் ஈச்வரனில்லையென்றும் மூலமானகாரணமில்லையென்றும் இவ்வுலகமெல்லாம் இவ்விதமேஇல்லையென்றும் சொல்லத்தொடங்கினர்கள். சில பிராம்மணர்கள் ஸ்வபாவமென்றும் சிலர் கர்மமென்றும் மற்றும்சிலர் மனிதர்களின்முயற்சியென்றும் சிலர் தெய்வமென்றும் ஸ்வபாவமுதலியதே அதுதானென்றும் கூறினர்கள். அரசனே! பலவிதமாகநூறுயுக்திகளுடன்கூடியவர்களும் பலசாஸ்திரங்களை நடைபெறச்செய்தவர்களுமான பிராம்மணர்கள் ஸ்வபாவத்தால் ஒருவரைஒருவர் வெல்லவேண்டுமென்ற விருப்பங்கொண்டவர்களானார்கள். பிறகு, வாதிப்பவாதிகளுடன்கூடியதும் பாத்திரங்களையும் தண்டங்களையும் அடிக்கஸாதனமாகக்கொண்டதும் மாவுரிகளையும் தோல்களையும் வஸ்திரங்களையும் கிழிப்பதுமான பெரியசண்டையானது ரிஷிகளுள் உண்டாயிற்று. பிறகு, கோபத்தையடைந்த சிலபிராம்மணோத்தமர்கள் சாந்தர்களானார்கள். அனைவரும் வஸிஷ்டரை நோக்கி, 'நீர் ஸநாதனமான பிரம்மத்தை எங்களுக்கு உபதேசிக்கவேண்டும்' என்றுகேட்டார்கள். பிரபுவான அந்த வஸிஷ்டரும் அந்தரிஷிகளைநோக்கி, 'பிராம்மணஸ்ரேஷ்டர்களே! நான் அறியவில்லை' என்று விடைகூறினர். அந்தப் பிராம்மணர்களனைவரும் நாரதமுனிவரைநோக்கி, 'பெரிய பாக்யம்பெற்றவரே! நீர் எங்களுக்கு உபதேசிக்கவேண்டும். நீர் உண்மையை அறிந்தவராயிருக்கிறீர்' என்றுகேட்டார்கள். பிறகு, பூஜ்யரான அந்தநாரதரானவர் அந்தப்பிராம்மணர்களைநோக்கி, 'பிராம்மணர்களே! நானும் அறியவில்லை. நாம் சேர்ந்துகொண்டு எவ்விடத்திற்குச் செல்லு

வோம்? இவ்வுலகில் யார் அறிவுள்ளவர்? எவரிடத்தில் அவிவேக மில்லாமல் ஆச்சரியமானமோக்ஷம் இருக்கிறது?' என்று கேட்டார். அந்தப்பிராம்மணர்கள், 'ஓ! பிராம்மணர்களே! ஸுகன்னும் முனி யின்இருப்பிடம்சென்று கேளுங்கள். அவர் சொல்லுவார்' என்ற அசரீரியினுடைய அந்தச்சொல்லைக் கேட்டார்கள். பிராம்மண ஸ்ரேஷ்டர்களுள் மிகப்பூஜ்யரும் வேதராசிகளால் அலங்கரிக்கப் பட்டவருமான விபாண்டகரென்னும்ஒருமுனிவர் அந்தஅசரீரிபுரு ஷரைநோக்கி, 'நீர் யார்? டலஅர்த்தங்களைப்பற்றிய கலகத்தினிடையில் வார்த்தைசொல்லிக்கொண்டு காணப்படாமலிருக்கிறீர்' என்றுகேட் டார். பிறகு, அந்தப்பூஜ்யரான அசரீரியானவர் அந்தவிபாண்ட கரைநோக்கி, 'ஓ! மஹாமுனிவரே! நீர் பண்டிதர். வேதமறிந்த வர்கள் எவரை எப்பொழுதும் ஒரேஉருவமுள்ளவரும் அழிவில்லாத வருமான புராணரிஷியென்றுகூறுகிறார்களோ அந்தஸுகர் என்னும் ரிஷியென்று என்னை அறிந்துகொள்ளும்' என்ற இவ்வசனத்தைச் சொன்னர். தர்மபுத்திர! மஹாத்மாவான இந்தவிபாண்டகரானவர் திரும்பவும் அந்தஅசரீரிபுருஷரைநோக்கி, 'ஸ்வரூபத்தைப்பற்றிய நிலையைச்சொல்லும். ரிஷிகளிற்சிறந்தவரே! எங்களுக்கு நீர் ஒருவர் இருக்கிறீர். காரணஸ்வரூபமானது ஸத்தா? இலலையா? அல்லது வேறுஎவ்விதமிருக்கிறது?' என்றுகேட்டார். பிறகு, மஹாத்மாவும் அசரீரியுமான ஆதிபுருஷரானவர் மிகவும்கம்பீரமாய்ப் பேசிக் கொண்டு சொல்லத்தொடங்கினர். மனதால் தம்ஸ்வரூபத்தைத் தெரிந்து அனுபவித்தவரான அந்தப்புருஷர் முனிவர்களைப்பார்த்து, 'எனக்குச் செவிகளும் முகமும் வாயுமில்லை. கால்களும்[1] கைகளும் கால்துனிகளுமிலலை' என்று ஸத்யஸ்வரூபத்தைச்சொன்னர். பிறகு, முனிவர்கள், 'ஓ! ரிஷியே! இப்படிப்பட்ட உமக்கு நினைக்கும் திற மையுள்ள மனமும் (மற்ற அங்கங்களும்) இல்லாவிட்டால் எப்படி இவ்வசனத்தைப் பேசுகிறீர்?' என்று கேட்டார்கள். பிறகு, பிராம்ம ணோத்தமர்கள் அதறகு மறுமொழியைக் கேட்கவில்லை. ஆங் காங்கு ஆகாயத்தைப் பார்க்கிறவர்களும் நகைக்கிறவர்களுமான அந்த ரிஷிஸ்ரேஷ்டர்கள் ஆச்சரியமென்றெண்ணிக் கூட்டங்க ளுடன் ஸுத்குமாரரால் விளங்குவதும் உத்தமமுமான இமயமலை யைநோக்கிச் சென்றார்கள். அந்த மலையில் ஏறி, தியானத்திலிருந்து கொண்டு வேதங்களின் முடிவிலிருப்பவரும் பூஜ்யருமான ஸுத் குமாரதேவரைக் கண்டார்கள். அரசர்களுட்சிறந்தவனே! பிறகு, ஒரு வருஷம்நிறைந்தபின் பிராம்மணர்கள் பிரகிருதியிலிருப்பவரும்முனி

களில் பெரியவருமான ஸநத்குமாரரைக்கண்டு நமஸ்கரித்துநின்றார்கள். ஞானத்தால் பாவங்களை விலக்கினவரும் பூஜ்யருமான ஸநத்குமாரரானவர் வந்தமுனிகளைநோக்கி, 'ஓ! முனிக்கூட்டங்களே! அசரீரபுருஷருடைய அந்தவசனமானது என்னால் அறியப்பட்டது. முனிஸ்ரேஷ்டர்களே! இப்பொழுது வேண்டியதைஇஷ்டம்போலக் கேளுங்கள் என்றுசொன்னார். முனிகளிற்பெரியவரும் பிராம்மணத்தமரும் ஞானத்திற்குநிதியும் மிகப்பரிசுத்தருமான அந்தஸநத்குமாரரைநோக்கி முனிவர்கள் கையை அஞ்சலிபந்தம்செய்துகொண்டு, 'ஓ! குமாரரே! ஞானநிதியும் சிறந்தவரும் விஸ்வரூபியுமான ஈசரை நாங்கள் எவ்விதம் பூஜிப்போம்? பகவானே! எங்களுக்குச் சிறிதுஅறிவை அனுக்ரஹிக்கவேண்டும். முனிகளிற்பெரியவரே! ஸாதுக்கள் தேனுக்கொப்பாகவிளங்கும் மோக்ஷஸாஸ்த்திரத்தின்பொருட்டு விஸ்வரூபமானஎந்தவஸ்துவை அடையவேண்டுமென்று கூறுகிறார்களோ அந்தவஸ்துவைப்பற்றிச் சொல்லவேண்டும். மஹாநுபாவரே! அதுஎன்ன?' என்று கேட்டார்கள். பலவாயிரம் கல்விகளுள்ளவர்களுள் ஸதையமானகாரணவஸ்துவை அறிந்தவரும் அதில்பற்றுதலுள்ளவரும் மஹாத்மாவும் பூஜ்யருமான அந்த ஸநத்குமாரர் அந்தமுனிகளாலவினவப்பட்டுப் பரமாத்மாவின் ஆஜ்ஞையுடன், 'பரிசுத்தவஸ்துவான அந்தப்பரமாத்மாவைபபற்றிக்கேளுங்கள்' என்றுசொலலத்தொடங்கினார். 'ஓ! பிராம்மணோத்தமர்களே! அசரீரபுருஷர் முன்பு உங்களிடத்தில எவ்விதம்சொன்னாரோ அந்தவாக்யமானது அவ்விதம் உண்மையே. சொலலியதை நீங்கள் அறியவில்லை. கேளுங்கள். (உலகத்திற்கு) உயர்ந்ததானகாரணம் இருக்கிறது. எவ்விதம்அறியப்படுகிறதென்றால் ஒவ்வொருகாளிலும் [1] பாகவிசேஷமானது காணப்படுகிறது. அவ்வித பாகத்துடன்கூடிய யாவற்றையும் சேர்ததுவைப்பது காரணமாகிறது. எல்லோருக்கும் கண்ணிலுள்ளபுருஷனுவன் இவ்விஷயத்தில் [2]திருஷ்டாந்தமாகிறான். கண்ணிலுள்ளோர்களுக்குக் கண்ணுடியிலகாணப்படுவது திருஷ்டாந்தமாகலாம். (மறறவர்களுக்கும்) ஞானத்தில் அந்தவஸ்வரூபம் ஸாக்ஷியாயிருக்கிறது. அந்தஆதமாவே யாவறறையும் அறிகிறதும் பயமில்லாததும் சலனமில்லாததுமாயிருக்கிறது. (உண்மையில்) பற்

1 சரீரமுதலியவைகட்குஆதாரமும் ருபரஸாதிகளின்வேற்றுமை பாகவிசேஷம் என்று சொல்லப்படுகிறது.

2 கண்ணைவிட அதற்குஸாக்ஷியாயிருப்பது எவ்விதம்வேறானதோ அதுபோல உலகத்தைவிட அதற்குஸாக்ஷியாயிருப்பது வேறென்று அறியவேண்டும்.

துதலுடனில்லாமலிருந்தாலும், 'நான் எங்கு இருக்கிறேன்? நான் யாருடையவனல்லேன்? நான் எதனுடன்சேர்ந்திருக்கிறேன்?' என்று தெரிந்துகொள்ளுகிறது. அது பலயுகங்களுக்குப்பின்காலத்திலும் வியாபித்திருக்கிறது. அந்தஆத்மா வெவ்வேறிருப்பதாகத் தோன்றுகிறது. அது உண்மையன்று. ஒன்றுயிருக்கும்வாயுவானது எவ்விதம் பலவிதமாய்ச்சொல்லப்படுகிறதோ அவ்விதம் சொல்வதற்கு இடத்தின்வேற்றுமை காரணமாகிறது. அது எவ்விதமென்றால் புலியிடத்திலும் மானிடத்திலும் மனிதனிடத்திலும் பிராம்மணனிடத்திலும் மூங்கிலிலும்இருப்பதானவாயுவானது வெவ்வேறுகிறது. ஆகிலும், அது ஒன்றே. அதுபோல இந்தஆத்மாவானது பரமாத்மாவாயிருந்தும் வேறுனதுபோலத் தோன்றுகிறது. இவ்விதம் அந்த ஆத்மாவே யாவற்றையும் அடைந்திருக்கிறது. பார்ப்பதும் கேட்பதுமாயிருக்கிற ஆத்மாவானது மோந்துபார்க்கிறதுமில்லை; பேசுகிறதுமில்லை. சரீரமென்னுஞ்சக்கரத்திலிருப்பதும் பெரியஉருவமுள்ளதுமான அந்தஆத்மாவிறகு ஞான்குபுறத்திலுமுள்ள பதனதுஇந்திரியங்களும் ஸூர்யகிரணங்கள் எவ்விதம் வெளியில்வந்து அந்தஸூர்யனைத் தொடர்ந்துசெலலுகின்றனவோ அவ்விதம் அந்தப்பிரபுவான ஆதமாவைத் தொடர்ந்துசெல்லுகின்றன. ஸூர்யனுனவன் ஒவ்வொருநாளும் அஸ்தமயத்தை அடைகிறான்;திரும்பவும்திக்குக்களில் உதயமாகிறான். உதயம் அஸ்தமயம்என்ற அவ்விரண்டும் ரவியினிடத்திலிருப்பவைகளல்ல; அதுபோலச் சரீரியானஆத்மாவைத தெரிந்துகொள்ளுங்கள். [1]பொன்போல ஜோதிரூபமாக விளங்கும் நிலையுள்ளதும் புத்தியிலிருப்பதுமான ஆத்மாவென்னும் அந்தத்தீபத்தைத் தன்மனத்தாலேயேஅறிந்து பரமபதமென்னும்மோக்ஷத்தை அடையவேண்டும். வண்டானது முந்திமுந்திக்கற்கப்பட்டசுறறுதலேயே அனுஸரித்திருப்பதுபோல ஆதமாவுமிருக்கிறது. எவன் ஆத்மாவைப் பொய்யான அபிமானமுள்ளதென்றுதெரிந்துகொள்ளுகிறானே அவன் அவிவேகத்தையும் குறையையும் அடையமட்டான். இந்தஆதமாவைக் கண்ணுல்காண்பவன் ஒருவனுமில்லை. கறுப்பு வெளுப்பிலாததும் உண்மைபொருளும் புத்தியாகியகுகையிலிருப்பதும் அறிவென்னும்தேவியின்கையிலிருப்பதுமான அந்தஆதம ரூபத்தை மனத்திறகுஅடங்கியபுதியால அறியவேண்டும். யாகம் செய்கிறவனும்மந்திரத்தால் பூஜைசெய்கிறவனுமானபிராம்மணைத்தமனும் பிரம்மதத்தைஅறிந்தவனுக்கொடபான நிலையிலஇருப்பவனல்

[1] ஒரு ஸ்லோகம் விடபபட்டது.

லன். மற்றவர்களைப்பற்றி என்ன? தர்மமுள்ளவனல்லாதவதனும் அதர்மமுள்ளவனல்லாதவனும் துவந்துவங்களைவிட்டுவிலகியவனும் மாத்ஸர்யமில்லாதவனும் ஞானத்தில் திருப்தியுள்ளவனுமாயிருப்பவன் மோக்ஷத்தில் புத்தியைச்செலுத்திக்கொண்டு ஸுகமாக உறங்குவான். ஸந்தேகமில்லை. பிரபுவான இந்தப்பரமாத்மாவானவர் இவ்விதம் மாயையால் உலகங்களின்படைப்பைச் செய்கிறார். இந்தஆத்மாவானது அவிவேகமடைந்தபுத்தியுள்ளதாகித் தனக்குமூலகாரணமானபரமாத்மாவை அறிகிறதில்லை. அந்தஆத்மாவானது தான் பார்ப்பதும் பார்க்கப்பட்டவைகளைத்தியானம்செய்வதும் மனனஞ் செய்வதும் அறிவதுமாயிருக்கிறது. உலகங்களைப் படைத்தவரும் முடிவில்லாதவருமானபரமாத்மாவை அறிகிறவன் யார்? எவ்வளவு சொல்லக்கூடுமோ அவ்வளவு என்னால சொல்லப்பட்டது. முனிஸ்ரேஷ்டர்களே! நீங்கள் போகலாம்' என்றுசொன்னார். இவ்விதம் உபதேசித்தவரும் ஞானக்கடலிலுண்டானவருமான ஸநத்குமாரரைக்கண்டு வணங்கியபின் அநதப்ராம்மணோத்தமர்கள் மகிழ்ச்சியுடன் திரும்பிச்சென்றார்கள். குந்தியின்குமாரனே! ஆகையால், நீயும் ஞானயோகததைப் பெரிதாகக்கொள். அரசர்களிற்பெரியவனே! ஞானமானது இவ்விதம் எலலாத் துர்கங்களையும் நசிக்கச் செய்யத்தக்கதாகும். இது மூன்காலத்தில பெரியமுனிவர்களுள் உத்தமரும் மஹாத்மாவும் புராணபுருஷருமான ரிஷியால் பெரிய துக்கங்களுக்கிருப்பிடமான மனிதாகளைக் காப்பாறறவேண்டி உண்டு பண்ணப்பட்டது. அது நிச்சயம்" என்றுசொன்னர்.

---

[1] இருநூற்றிருபத்தோனபதாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஞானம் மோக்ஷஸாதனமென்பதையும் அதைஅடையும்வகையையும் பற்றி ஜனகருக்கும் ப்ரஹ்லாதருக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! இவ்வுலகில சுபமானவனும் அசுபமானவனும் கர்மமென்பது மனிதனைப் பயனுடன் சேரும்படி செய்கிறது. அந்தக் கர்மத்திற்கு மனிதன் (உண்மையில்) கர்த்தாவாகி

---

[1] இருநூற்றிருபதைதொடர்வாவது அதயாயமுழுமையும் இருநூற்றிருபதாவதுகான்காவதுஅதியாயத்திலுள்ளகதையாகவே இருப்பதாலே விடப்பட்டது.

ரூனு, அலலது, இல்லையா என்பது ஸங்தேகம். பிதாமஹரே ! இதை உண்மையாக உம்மிடத்திலிருந்து கேட்கவிரும்புகிறேன் " என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

" யுதிஷ்டிர! இவ்விஷயத்திலும் ப்ரஹ்லாதருக்கும்இந்திரனுக்கும்நடந்தலம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். விஷயப்பறறிலலாதவரும் பாவங்களிலிலக்கியவரும் நற்குலத்திற்பிறந்தவரும் பலகலவிகளுள்ளவரும்சோம்பலிலலாதவரும் அகங்காரமிலலாதவரும் ஸத்வகுணத்திலிருப்பவரும் இந்திரியங்களை அடக்கியவரும் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஸமமாகக்கொண்டவரும் அடக்கமுள்ளவரும் சூன்யமானவீடுபோன்றசரீரமுள்ளவரும் தாவரங்களும்ஜங்கமங்களுமானபிராணிகளின் பிறப்பையும் இறப்பையும்அறிந்தவரும் வெறுப்புள்ளவைகளில்கோபமிலலாதவரும் விருப்புள்ளவைகளில ஸங்தோஷமிலலாதவரும் பொன் மண் இரண்டிலும் ஸமமானபார்வையுள்ளவரும் ஆத்மஸ்வரூபத்திலும்மோக்ஷத்திலும் ஞானத்திலும் தைரியம்கொண்டவரும் நிச்சயமடைந்தவரும்பிராணிகளுக்குமுன்னுள்ளதையும் பின்னுள்ளதையும் அறிந்தவரும் யாவற்றையும் அறிந்தவரும் எல்லாவற்றையும் கண்டவரும் இந்திரியங்களுக்குப்புலப்படாத உருவத்துடன் எங்கும் நிறைந்துவிளங்கும் மஹாத்மாவான ஸ்ரீகோவிந்தரிடம் மனத்தை நன்குசெலுத்திவரும் எல்லாப்பிராணிகளுக்கும் பிரியததைச் செய்கிறவரும் பாகவதரும் பக்தியுள்ளவரும் எப்பொழுதும் நாராயணரை மிகமேலாகக்கொண்டவரும் பரமாத்மாவைத் தியானம்செய்கிறவரும் ஸ்ரீரண்யகசிபுவின்புத்ரரும் இந்திரியங்களை அடக்கினவரும் ஒரு வருமில்லாவிடத்தில் உட்கார்ந்திருப்பவருமான ப்ரஹ்லாதரிடம் சென்று அவர்புத்தியை அறியவேண்டுமென்ற விருப்பங்கொண்ட இந்திரன் இவ்விதம் சொல்லத்தொடங்கினன். ' எந்தக்குணங்களுள்ளமனிதன் உலகத்திலுள்ளமனிதர்களுக்கு ஸம்மதனாகஇருப்பானோ அந்தக்குணங்கள் யாவும் உம்மிடத்தில் நிலைபெற்றிருப்பதைக் காண்கிறேன். ஆனால், உமதுபுத்தியானது இப்பொழுது சிறுகுழந்தைகளுக்கு ஒப்பாகக் காணப்படுகிறது. ஆத்மாவை அறிந்துகொண்டிருக்கும் நீர் இவ்வுலகில வதை மரியாதையளன்று நினைக்கின்றீர்? பிரஹ்லாதரே! கயிறுகளாலகட்டப்பட்டும் உமதுபதத்திலிருந்து நழுவியும் பகைவர்களுக்குவசப்பட்டும் ஸம்பத்திலிருந்துவிலகியும் சோகப்படும்நிலைமையிலிருக்கும் நீர் சோகப்படாமலிருக்கிறீர். திதியின்வம்சத்தில்பிறந்த ப்ரஹ்லாதரே ! நல்லஅறிவைஅடைந்ததாலோ

அல்லது தைரியமுள்ளவராயிருப்பதாலோ உமக்குள்ளகஷ்டத்தைக் கண்டும் துக்கமில்லாதவராயிருக்கிறீர்' என்றுகேட்டான். இவ்விதம் அந்தஇந்திரனால்கேட்கப்பட்டவரும் தீரரும் நிச்சயமுள்ளவருமான ப்ரஹ்லாதர் மென்மையான சொல்லால் தம்புத்தியை நன்கு வெளிப்படுத்திச் சொல்லத்தொடங்கினர். 'ப்ராணிகளுக்குள்ளபிரவிருத்தியையும் நிவிருத்தியையும் அறியாதவனுக்கு அவிவேகத்தால் தடைஉண்டாகும். அவற்றை அறிந்தவனுக்குத் தடை உண்டாவதில்லை. எல்லாப் பிராணிகளிடமும் ரகஸ்யமாயிருப்பதும் நியானம் பண்ணத்தக்கதும் அழிவில்லாததும் எப்பொழுதுமிருப்பதும் திடுக்கத்தகாததும் உபமானமற்றதும் எல்லா உருவமுமுள்ளதும் பரத்திலும்பரமுமான பிரம்மமானது எல்லாவிடத்திலும் மறைவுள்ளதாயிருக்கிறது. அதிலிருந்து இவ்வுலகம் உண்டாகிறது. அந்தப்ரம்மம்உருவமுள்ளதாயிருந்தும்உலகம் பலலக்ஷணங்களுடன்கூடியிருப்பதைப்பார்.உலகங்களைப்படைத்தவரும் விஷ்ணுவென்று சொல்லப்பட்டவருமான அந்தப்பரமாத்மா பாதுகாக்கிறார். [1]எல்லாப்பொருள்களின்உண்மையும் அவ்வாறே எல்லாவற்றின் இன்மையும் இயல்பாக உண்டானவைகளும் போகின்றவைகளுமாயிருக்கின்றன. மனிதன்செய்துகொள்ளத்தக்க பயன்ஒன்றுமில்லை. மனிதன் செய்யத்தக்கபயன் இலலாமலிருக்கும்பொழுது ஒருவனும் தான் ஒன்றைச் செய்கிறவனுயிலலை. தானே செய்கிறவனுயிருப்பானுகில் அவனுக்கு ஒருஸமயம் அபிமானம் உண்டாகக்கூடும். எவன் நன்மையையோ தீமையையோ தான் செய்கிறதாக நினைகிறானே அவனுடையபுத்தி குற்றமுள்ளதென்றும் உண்மையை அறியாததென்றும் என்னுடைய கருத்து. ஓ! இந்திரனே! மனிதன் தனக்குள்ள க்ஷேமத்தைச்செய்துகொள்ள நிச்சயம் கர்த்தாவாயிருப்பானுகில அவனுடைய முயறசிகள் பயனுள்ளவைகளாகும். ஒருஸமயத்திலும் பயனற்றவையாயிருக்கலாகா. முயற்சிசெய்பவர்களுகும் விருப்பமில்லாதது உண்டாகிறதும் விரும்புவது உண்டாகாமலிருப்பதும் காணப்படுகின்றன; ஆகையால், புருஷன் செய்துகொள்ளத்தக்க பயன் ஏது? முயற்சியிலலாமலே சிலருக்கு வேண்டாதது உண்டாவதையும் வேண்டுவது உண்டாகாமலிருப்பதையும் காண்கிறோம். ஆகையால், அது ஸ்வபாவத்தால் உண்டாகிறது. மிக்க அழகுள்ளவர்களும் மிக்க புத்திசாலிகளுமான சிலர் குருடிகளும் அல்பபுத்தியுள்ளவர்களுமாயிருப்பவர்களிடமிருந்து பொருள்வரவை விரும்புகிறவர்களா

---

1 சிலசொற்கள் இலலாததால் இங்கு அரைஸ்லோகம் விடப்பட்டது.

கக் காணப்படுகிறார்கள். சுபமும் அசுபமுமான குணங்கள்யாவும், ஸ்வபாவத்தால் ஏவப்பட்டிவருகிறபொழுது அதில் அந்த மனிதனுக்கு அபிமானிக்கத்தக்க காரணம் என்னவிருக்கிறது? ஸ்வபாவத்தாலேயே [1]யாவும் உண்டாகின்றனவென்று எனக்கு நிச்சயமாகத் தோன்றுகிறது. என்னுடையபுத்தியானது [2]ஆத்மாவில் நிலைபெற்றிருக்கிறது அதைவிட வேறுவிதமில்லை. இவ்வுலகில் சுபாசுபமான பயனை அடைவது கர்மத்தால்உண்டாவதென்று சிலர் கருதுகிறார்கள். கர்மங்களுக்குரிய விஷயமனேத்தையும் நான் கூறுகிறேன். அதைக் கேள். [3]பாயஸத்தைப் புஜிக்கும் ஒருவன் எவ்விதம் அன்னமிருப்பதை அறிவிக்கிறதோ அதுபோலக் கர்மங்கள்யாவும் ஸ்வபாவத்தையே அறிவிக்கும் அடையாளமாகும். காரியங்களையே அறிந்து காரணமும் பரமுமான ப்ரம்மத்தை அறியாதவனுக்கு அவிவேகத்தால் (மோக்ஷத்திற்குத்) தடையுண்டாகும். பிரம்மத்தையே அறிந்தவனுக்குத் தடையில்லை. இவ்வுலகத்திலுள்ள பொருள்கள் யாவும் ஸ்வபாவத்தால் உண்டாகின்றனவென்று உறுதியாய்த் தெரிந்து கொண்டவனுக்குக் கர்வமாவது அபிமானமாவது என்ன செய்யக்கூடும்? தர்மத்தின்முறைகளையும் பிராணிகளுக்குள்ள அநித்யத்தன்மையையும் நான் அறிகிறேன். ஓ! இந்திரனே! ஆகையால், நான் சோகப்படாமலிருக்கிறேன். இவ்வுலகமனேத்துமே முடிவுள்ளதாகும். மமதையில்லாதவனும் அஹங்காரமற்றவனும் ஆசையற்றவனும் பந்தத்திலிருந்துவிடுபட்டவனும் துன்பமில்லாதவனுமானநான் விலகிஇருந்து கொண்டு பிராணிகளின் இறப்பையும் பிறப்பையும் பார்க்கிறேன். ஓ! இந்திரனே! ஞானதையடைந்தவனும் அடக்கமுள்ளவனும் ஆசையற்றவனும் ஸங்கல்பமில்லாதவனும் யோகநிலையை அடைந்திருப்பதால் (பிரம்மத்தைப்) பார்க்கிறவனுமான எனக்கு வருத்தமில்லை. எனக்குக் காரணத்திலும் காரியத்திலும் விருப்பமில்லை; வெறுப்புமில்லை. இப்பொழுது எனக்கு விரோதத்தைச் செய்கிறவனுன பகைவனையும் காணேன். ஓ! இந்திரனே! ஸ்வர்க்கத்திலும் பாதாளத்தி

---

1 'மோக்ஷம் ஆத்மஜ்ஞானம்யாலும் இயற்கையால் உண்டாவன' என்பது பழையஉரை.

2 இதைக்காட்டிலும் வேறுகத் தையியமாவது நல்லஅறிவாவது எனக்கு இலலைஎன்றும் கொள்ளலாம்.

3 பாயஸத்தைப் புஜித்தேனென்று ஒருவன் சொல்லுமிடத்தில் அதற்கும் மூலமாய் அன்னமிருக்கிறதென்று தோன்றுவதுபோலக் கர்மத்தால் பயன் உண்டாகிறதென்று சொலலுமிடத்திலும் அக்கர்மத்திற்கும் மூலமான ஸ்வபாவமிருக்கிறதென்று தெரிந்துகொள்ளவேண்டுமென்பது கருத்து.

லும் பூமியிலும், நான் விருப்பமுள்ளவனல்லேன். அறியவேண்டிய திலும் அறிவிலும் அறியாமையிலும் (எனக்கு) வேற்றுமைஇல்லை' என்றுசொன்னர். இந்திரன், 'ஓ! ப்ரஹ்லாதரே! இந்தப்புத்தியானது எந்தஉபாயத்தால் அடையப்படுமோ, எந்தஉபாயத்தால் சாந்திஅடை யப்படுமோ அந்தஉபாயத்தைக் கேட்கும்எனக்கு நீர் தன்றுசச் சொல்லவேண்டும்'என்றுகேட்க,ப்ரஹ்லாதர் சொல்லத்தொடங்கினர். 'இந்திரனே! ருஜுவாயிருப்பதாலும் அஜாக்ரதையில்லாதிருப்பதா லும் மனத்தெளிவினாலும் புத்தியுள்ளவனுயிருபதாலும்' ஆசாரியர்க ளுக்குச்செய்யும்பணிவிடையாலும் மனிதன் [1] பெருமையை அடை வான்; ஸ்வபாவத்தால் நல்லபுத்தியை அடைகிறான்; ஸ்வபாவத்தால் சாந்தியை அடைகிறான்; எதைஎதைப்பார்க்கிறானே அவையாவும் ஸ்வபாவத்தாலேயே உண்டாகின்றன. துறவியானவன் வேற்றுமை யையே அறியமாட்டான். குருவின்முகத்திலிருந்து வேதார்த்தவாக்கி யத்தைக்கேட்டு அவ்வாக்கியத்தின்பொருளைப்பற்றியஅறிவை மனத் தால்பார்த்துக்கொண்டு பகுததறிவால் அடையப்பட்டஆத்மாவையே தொடர்ந்துபார்க்கிறான்; பிறகு, வைராக்யத்தை அடைகிறான்; பயத் தால் (தனக்கு) உண்டாகும்எல்லாத்துக்கங்களிலிருந்தும் காப்பாற்று கிறவரானபரமாத்மாவைஅடைகிறான். பிறகு, அந்தப்பரமாத்மஸுகத் தைத் தேடுகிறான்; ஸத்புருஷர்களுடன் சேர்க்கையைச் செய்து கொள்ளுகிறான். ஸத்புருஷர்கள் பரமாத்மஸுகத்தையுண்டுபண்ணு வதற்குப் போதுமானவர்களாகிறார்கள். ஸத்துக்களினருகிலிருந்து லக்ஷணத்துடன் நல்லவழியைத்தெரிந்துகொண்டு எல்லாப்பற்றுதலி லிருந்தும் விடுபட்டுப் பரமாத்மாவை அடைகிறான். விஷயவிருப்பத் தால்செய்யப்படும்தர்மமானது ரஜோகுணமுள்ளதும் பயத்தைத்தரு வதுமாகும். அந்தக்காரியத்தால் மனிதன் முறையே தர்மக்குறைவை அடைவான். திரும்பவும் அச்சுதரானபரமாத்மாவிடத்தில் பக்தியில் லாதவனுகவே இருப்பான். உபதேசிக்கும் ஆசிரியரிடத்திலும் நீலை யற்றவனுகவே விடுபட்டுச் செல்லுவான். எப்பொழுதும் இவனுக் குக் கருவிகளுக்குப்புலப்படும்விஷயத்தில் பிரீதியுண்டாகும்; ஸம் ஸாரத்திலும் பிரீதியுண்டாகும். எப்பொழுதும் அறிவில்லாமையால் அவனுக்கு ஆத்மாவும் விரித்திபெறாது. பித்தனுடைய நிலையுள்ளவனு யிருப்பான். நிரமமாய் இவ்விதமே செல்லுவான். எப்பொழுதும் அசுத்தி வளரும். எவ்விதத்திலும் சாந்தி உண்டாகாது. விஷயத் தைப்பற்றிச்செல்லும் இவனுக்கு மோக்ஷவிருப்பமுண்டாகாது.

1 'மோக்ஷத்தை' என்பது பழையஉரை.

போலியுக்திகளில் மிக்கநம்பிக்கையுடன் விஷயங்களிலுள்ளகுணங்களைத் துதிப்பான். அபிமானமும்கர்வமுமுள்ளவனுக்குச் சாஸ்திரங்களைக் கேட்கவேமாட்டான். போகமும் அவனை அடையாது. அழிவற்றதும் உயர்ந்தஉலகங்களைப்படைத்ததும் ஞானஉருவமுள்ளதும் தாளைவேவிளங்குவதுமான [1]ப்ரம்மத்தையும் அவன் அறியமாட்டான். அக்காரணத்தால் தன்னினைகளால் சுற்றிவிடப்பட்டபலபிறவிகளையடைந்து பெரிய அவிவேகத்துடன்கூடியவனுமாகி ஸம்ஸாரத்தின் கரையைக்கடந்திருப்பவரை அறியமாட்டான். ஆசாரியரை அடைவதால் வணக்கத்தையடைந்து (ப்ரம்மத்தை) அறியவேண்டும். பிறகு, ஆசாரியரென்றுபிரஸித்திபெறறவர் முறையாக இவனை அனுகூலமானதர்மங்களைச்சேர்க்கும்படி செய்வார். பலாஸுரனையும் விருத்திரனையும் கொன்றஇந்திரனே! அந்தத்தர்மத்தால் இந்த மனிதன் உறுதியுடன் கிலேபெற்றிருக்கிறான். அதனால் உண்டாகும் ஞானமென்னும்வாயுவால் முன்பிறவிகளிலுள்ள கர்மக்கூட்டமென்னும் பஞ்சுப்பொதியானது பறக்கும்படி செய்யப்படுகிறது. இவ்விதம் கன்னடக்கையில்முயற்சியுள்ளவனும் ஸம்ஸாரத்தைவிலக்கிக்கொள்ளுகிறவனுமாயிருப்பவன் எப்பொழுதும் ப்ருகுரிஷியைப் போல (உலகத்தில்) விரும்பத்தக்கவிஷயத்தையே அறுத்துவிடுகிறான். ஓ! இந்திரனே! இந்தமனிதன் வைராக்யத்தையடையக்கூடாத அந்தக்காமமானது உள்ளிலிருப்பதாகக் கூறபடுகிறது. அந்தக் காமத்திற்கு ஒத்தநிலையை விலக்கவேண்டும். அதுகாமத்தால் செய்யப்படும்கர்மத்தாலேயே முதலாவதான (ஸுஷுப்தி அவஸ்தையை) அடைகிறான். இரண்டாவதானஸ்வப்னவஸ்தையையும் கர்மத்தால் அடைகிறான். இந்தஜீவன் இந்த இந்திரியங்களுடன் பிரதயக்ஷமென்னும் ஜாக்ராவஸ்தையிலிருப்பவனாகிறான். ஸுஷுப்தியென்ற பெயருள்ளதும் நான்காவதுமான இந்த ஆத்மாவானது ஆவரணமென்னும் மாயையுடன் கூடியதன்று. ஆகிலும், அந்தஆத்மாவானது, கிரியையில்லாததும் பாதநிலும்பரமுமான அந்தப் பரமாத்மாவைப்பற்றி உலகமடைப்படி மனதைஅடக்கத்தக்க யோகவழியுடன் பூஜிப்பதும் ஹோமம்செய்வதும் அடக்கமுள்ளதுமாயிருக்கவேண்டும். யோகத்தின்வளர்ச்சியுண்டாகும்பொழுது பொதுவான தோறறம்இருப்பதால் சைதன்யஉருவமுள்ளபுத்தியின்விருத்தியைப் பரமாத்மாவின் மாயையென்று தெரிந்துகொள்ளுகிறான். தீபென்னும்பொருளானது அதன்பொறிபோன்றதும் அதைவிட வேறுமாக இருக்கிறதுபோல

1 'ஸ்வதஸ்வரித்தம்' என்பது இரண்டுமுறைவருதலால விடப்பட்டது.

அறிவில்லாதசிறுவர்களுக்கு ஆத்மப்பொருளானது வேறுகக் கூறப் படுகிறது. உண்மையில் ஸாதிக்கத்தக்கதொன்றும் இல்லாதிருக்கும் பொழுது கட்புகைமுதலியவைகள் எப்படி? தேவேந்திரனே! அவை களில்லாதபொழுது சோகமுதலியவைகளுமில்லை. பூஜ்யனே! இவ் விதம்தெரிந்துகொள். ஸமமானபுத்தியை அடையவேண்டும். தேவ பதியே! இவ்விதம் உபாயம் உபதேசிக்கப்பட்டது. கோணல்வழியில் செல்லவேண்டாம். உன் அறிவால் பார்த்துக்கொள். கர்மமானது ஞானிகளைப் பிரவிருத்திக்கச்செய்யாது. ஆனால், இந்த ஞானிக்கு இந்தச்சரீரத்திலுள்ள ப்ராரப்தம் இருக்கிறவரையில கர்மம் அடங் காது. அந்தப்ராரப்தத்தின்முடிவில் ஞானியானவன்அந்தக்கர்மத்தை அடையவேமாட்டானென்பது என்னுடையகருத்து. [1]வெவ்வேறான இடங்களிலிருக்கும்இந்தவாகிந்திரியமானது [2]தாலஸ்தானத்தில் நிலை பெற்றிருப்பதுபோலப் பொருள்கள் புத்தியை அடைந்திருக் கின்றன. புத்தியானது எப்பொழுதும் ஆத்மாவை அடைந்திருக் கிறது. பலவிதமானஸங்கல்பங்களினின்றுமிருந்து விடுபட்டதும் பரங்களுக்குப்பரமுமான பரமாத்மரூபியும் வியாபகரும் மஹாத்மாவு மான ஸ்ரீவிஷ்ணுவானவர் வேதாந்தத்தை அறிந்தவர்களால் இவ் விதம் கானம்பண்ணப்படுகிறார். எப்பொழுதும் அவரிடம் குண மிருப்பதில்லை. மஹாத்மாவான அந்தவிஷ்ணுவானவர் உலகங்களில ஜாதிகளிலும் அவதரைஅடிப்பத வ்சேஷணப்பொருளகளிலும்வஹித் துக்கொண்டிருப்பதால வாஸுதேவரென்று கூறபபடுகிறார். குணங் களுக்குதகக்படியும் கர்மங்களுக்குத்தக்கபடியும் எலலாஉலகத்திற் கும் எலலாப்பயனையும் அவரே அளிக்கிறார். இவருடையஉருவமா னது பார்க்கதக்கதலலாயில நிறபதன்று. ஒருவனும் இவரைக் கண் ணால்பார்ப்பதில்லை. இவ்வுலகில ஸமாதிபெறறபுத்தியுள்ளவன் பக்தி யாலும் தைரியததாலும் ஞானஸ்வருபமுள்ளஇவரை எங்கும் பார்க் கிறான். பெரியோரகள் அதை எனக்கு அறிவிக்கிறார்கள். இந்தி ரனே! மஹாத்மாவான அந்தப்பகவானே மறறவிஷயத்தையும்அளித தார். இந்திரனே! எனக்குள்ளஉபாயததை இவ்விதம் தெரிந்து கொள். ஆகையால், எப்பொழுதும் எனக்கு உலகமேஇல்லை' என்று சொன்னார். அஸுரபதியானபரஹ்லாதர் இவ்விதம்சொலல இந்திரன் கேட்டு ஆச்சரியமடைநதான். அரசனே! அப்பொழுது அன்பு மே லிட்டு அவர்வசனததைக் கௌரவிக்கவும்செய்தான். மூன்று உலகங

1 இங்கு ஒருப்லோகம் விடபபட்டது.

2 மோவாய்.

களுக்கும்பதியான அந்தஇந்திரன் அப்பொழுது அஸுரர்களுக்கு அரசரானப்ரஹ்லாதரைப்பூஜித்து அவரிடம்விடைபெற்றுக்கொண்டு தன்னிருப்பிடம்சென்றான்'' என்றுசொன்னர்.

இருநூற்றுமுப்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(இந்திரன் பலியைஜெயித்ததும் காலத்தின்வன்மையைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் ஸம்பாஷணையும்.)

யுதிஷ்டிரர், ''பிதாமஹரே! காலதண்டத்தால்துன்பப்படுத்தப்பட்டவனும் ஸம்பத்துவிலகினவனுமான அரசன் எந்தப்புத்தியுடன் பூமியில் ஸஞ்சரிக்கவேண்டுமென்பதை எனக்கு உபதேசிக்கவேண்டும்'' என்று கேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினர். ''இவ்விஷயத்திலும் இந்திரனுக்கும் விரோசனன்புத்திரனை பலிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழையஇவ்விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். இந்திரன் எல்லா அஸுரர்களையும் வென்றபின் பிரம்மதேவரருகில் வந்து நமஸ்கரித்துக் கைகூப்பிக்கொண்டு பலியைப்பற்றிக் கேட்கத் தொடங்கினன். 'ஓ! பிரம்மதேவரே! எவன் தானம்செய்யும் பொழுது ஒருகாலும்பொருள்குறைந்திலலையோ அந்தப் பலியை நான் அறியவில்லை. பலியை எனக்கு நீர் சொல்லவேண்டும். அந்தப் பலி வாயுவும் வருணனுமாயிருந்தான். அவனே ரவி; சந்திரனும் அவனே; அவன் அக்கினியாய் உலகங்களைத்தபிக்கச்செய்தான்; அவன் ஜலமாயுமிருந்தான். அந்தப்பலியை நான் அறியவில்லை. பிரம்மதேவரே! பலியைப்பற்றி எனக்குச் சொலலும். அந்தப்பலியேஅஸ்தமயத்தை அடைந்தான். அவன் திக்குக்களை விளங்கச்செய்தான் அவன் சோம்பலின்றிக் காலத்துக்குத்தக்கபடி மழைகளைப் பெய்வித்தான். அந்தப்பலியை நான் அறியவில்லை. ப்ரம்மாவே! பலியை எனக்குச் சொலலவேண்டும்' என்றுகேட்டான். பிரம்மதேவர், 'இந்திரனே! அந்தப்பலியைப்பற்றி நீகேட்பது உனக்கு அழகன்று. ஆனல், கேட்டால் பொய்யைசசொலலக்கூடாது. ஆகையால, பலியைப்பற்றி உனக்குச் சொல்லுகிறேன். சசீபதியே! அவன் ஓட்டகங்களிலோ பசுக்களிலோ கழுதைகளிலோ அல்லது குதிரைகளிலோ மிகஉயர்ந்த ஜந்துவாகிப்பாழானவீட்டிலிருப்பான்' என்றுசொன்னர். இந்திரன், 'பிரம்மதேவரே! 'பலி பாழானவீட்டில் சென்றிருப்பானகில்அந்தப்

பலியைநான் கொல்லட்டுமா? அல்லது, கொல்லவேண்டாமா? பிரம்ம தேவரே! அதைப்பற்றி நீர் எனக்கு விடையளிக்கவேண்டும்' என்று கேட்டான். பிரம்மதேவர், 'இந்திரனே! நீ பலியைக் கொல்லாதே. பலியானவன் வதம்செய்யத்தக்கவனல்லன். இந்திரனே! வாஸவனே! ஆனல், நீ இஷ்டம்போல நியாயத்தைக்கேட்கலாம்' என்று சொன்னர். பூஜ்யரான பிரம்மதேவர் இவ்விதம்சொல்லக் கேட்ட மஹேந்திரன் அப்பொழுது ஐராவதத்தின்பிடரியிலேறிக்கொண்டு கர்ஜியுடன் பூமியில் ஸஞ்சரிக்கத்தொடங்கினன். பிறகு, அந்த்இந்திரன் பூஜ்யரானபிரம்மதேவரால் சொல்லப்பட்டபடி பாழானவீட்டில் குடிகொண்டவனும் கழுதைவேஷத்துடனிருப்பவனுமானபலியைக் கண்டு சொல்லத்தொடங்கினன். 'அஸுரனே! கழுதைப்பிறவியை அடைந்து உயிர்வாழ்த தின்பவனுயிருக்கிறாய். இப்பிறவி உனக்குச் சரியானதன்று. நீ சோகப்படுகிறாயா? அல்லது, சோகப்படாமலிருக்கிறாயா? அங்ஙனம்! சத்துருக்களுக்குவசப்பட்ட வனும் ஸம்பத்தையும் மித்திரர்களையும் விட்டுவிலகினவனும் ஐஸ்வரியத்திலிருந்தும் பராக்கிரமத்திலிருந்தும்முழுவிக் காணமல்போனவனுமான உன்னைப்பார்க்கிறேன். நீ ஆயிரம்வாகனங்களுடன் ஞாதிகளால்சூழப்பட்டு உலகங்களைத்தபிக்கச்செய்கிறவனும் உன்னையேதலைமையாகவினைத்து எங்களைவர்களையும் மதியாதவனுமாகச் சென்றாயே. அஸுரர்கள் உன்னை எதிர்பார்த்துக்கொண்டே உன்னுடையகட்டளைப்படிநடந்தார்கள். நீ அரசாளும்பொழுது பூமியானது உழப்படாமலே தான்ய முதலியவைகளைக் கொடுப்பதாயிருந்தது. இப்பொழுது உன்னுடைய கஷ்டம் இவ்விதமாயிருக்கிறது. நீசோகப்படுகிறாயா? அல்லது, சோகப்படாமலிருக்கிறாயா? கடலின்முன்கரையில் விசேஷமாகப் [1]புஜித்துக்கொண்டு ஞாதிகளுக்குப் பொருளை அளிப்பவனுயிருந்தபொழுது உன்னுடையமனம் எவ்விதமிருந்தது? லக்ஷ்மியுடன்விளங்கும் உன்னுடையவீட்டில் ஆயிரக்கணக்கான தேவஸ்திரீகள் அனைவரும் தாமரைமாலையுள்ளவர்களும் பொன்னிறம்போன்ற மேனியுள்ளவர்களுமாகிப் பலவருஷக்கூட்டங்கள் நர்த்தனம்செய்தார்களே. அஸுரவேந்தனே! அப்பொழுதும் இப்பொழுதும் உனதுமனம் எவ்விதம் இருக்கிறது? தங்கத்தாலசெய்யப்பட்டதும் ரத்தினங்களால அலங்கரிக்கப்பட்டதும் மிகப்பெரிதுமான குடை உனக்கு இருந்தது. அவ்விடத்தில் ஆறுபிரம்மர்கள்வர்கள் ஏழுவகுப்பாகி நர்த்தனம்செய்தார்கள். நீ யாகம்பண்ணும்பொழுது முழுமையும் தங்கமும் மிகப்

[1] வேறுபாடம்.

பெரிதுமானயுபம் இருந்தது. ஆயிரம்லக்ஷம்பசுக்களைத் தானம் செய்தாய். அஸுரனே! அப்பொழுது மனம் எவ்விதமிருந்தது? யாகம்செய்கிறவனுகிச் [1]சம்யையென்னும்தடியை எறியும்விதிப்படி பூமிமுழுமையையும் விலக்கித் தொடர்ந்துசென்றபொழுது உனது மனத்தில் என்னஇருந்தது? உன்னுடைய பொற்பாத்திரத்தைக் காணேன்; குடையையும்காணேன்; விசிறியையும் காணேன். அஸுரவேந்தனே! பிரம்மதேவரால்அளிக்கப்பட்டஉன்னுடையமாலையையும் காணேன்' என்றுசொன்னன். பிறகு, வாஸவனுல் சொல்லப்பட்ட மொழியைக்கேட்டு நகைத்து அந்தப்பலியானவன் ஆழ்ந்தஅபிமான முள்ள தேவராஜனைநோக்கிச் சொல்லத்தொடங்கினன். 'தேவக் கூட்டத்தின்தலைவனே! அந்தோ! இவ்விஷயத்தில்உனக்குஎவ்வளவு அவிவேகம்? தேவர்களுக்கு அரசனுனஉனக்கு இவ்விதம்பேசுவது யுக்தமன்று. கஷ்டம்.பொற்பாத்திரத்தையும்குடையையும்விசிறியை யும் நீ பார்க்கிறியிலை. வாஸவ! பிரம்மதேவரால்அளிக்கப்பட்டஎன் னுடைய மாலையையும் நீ காணப்போகிறியில்லை. குகையில்வைக்கப் பட்டஎன்னுடையரத்தினங்களைநீ வினவுகிறுய்.எப்பொழுதுஎனக்கு நற்காலம்வருமோ அப்பொழுது நீ அவைகளைப் பார்ப்பாய். நற்பய னுக்குக்காரணமான உருவமுள்ளலக்ஷ்மியை நீ அறியவில்லை. ஓ! வாஸவ! யாவும் காலத்தாலவரும்; நற்காலத்தில் போகா. மிகநிறைந்த பொருளுள்ள நீ பொருளிலாதஎன்னைப்பற்றிப்புகழவிரும்புகிறுயே. இது உன்னுடையகீர்த்திக்கும் குலதிற்கும் தக்கதன்று. ஞானத் தைக்கற்றவர்களும் ஞானத்தால் திருப்தியுள்ளவர்களும் பொறுமை யுள்ளவர்களும் ஸாதுக்களுமான அறிஞர்கள் துக்கங்களில் சோகப் படமாட்டாகள்; ஸம்பத்துக்களிலும் ஸந்தோஷப்படமாட்டார்கள் புரந்தரனே! நீயோ அவிவேகமுள்ளபுதியால புகழ்ந்துகொள்ளுகி றுய். எப்பொழுது என்னைப்போல நீ ஆவாயோ அப்பொழுது நீ இவ் விதம் பேசமாட்டாய். ஐஸ்வர்யக்கொழுப்பால மதமுள்ள நீ என் னைப்பற்றிச் சிறிதும் தெரிந்துகொள்ளவில்லை. • ராஜ்யதிலிருந்து வெளிவகதப்படியால் நான் வெல்லப்படாதவனென்பதிலை' என்று சொன்னன்.

---

1 'அடிபாதத்து அனிசிறுதது முப்பதாறுஅங்குலம் நீளமுள்ளதடி சம்யைஎன்று சொல்லப்படும். அது பலசாலியான ஒருவனுல எறியப்பட்டு எவ்வளவுதூரம்சென்று விழுகிறதோ அவ்வளவுவரைக்கும் ஒருயாகம்செய்வ தற்குத தகுதியான இடம். இவ்விதம் பலயாகங்களைச்செய்து பூமிமுழுமை யையும் யாகசாலையாக்கி அவற்றைவிட்டு விலகினன்' என்பது பழையஉரை.

இருநூற்றைமுப்பத்தோராவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(காலத்தின்வன்மையைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும் ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

ஓ! பாரத! திரும்பவும் சீறுகின்ற அரவம்போன்ற அந்தப்பலியைநோக்கி இந்திரன் சிரித்துக்கொண்டு நன்கு [1] பேசுவதற்காகப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினன். 'ஆயிரம்வாகனத்துடன் ஞாதிகளால்சூழப்பட்டவனும் உலகங்களே மிகத்தபிக்கச்செய்பவனும் எங்களனைவரையும் பொருட்டாகக் கொள்ளாதவனுமாக நீ செல்லுவாயே. ஓ!பலியே! ஞாதிகளாலும் மித்திரர்களாலும் விலக்கப்பட்டவனை நீ மிக்கதுன்பமுள்ள உன்னுடைய நிந்தஅவஸ்தையைக்கண்டு சோகப்படுகிறாயா? அல்லது, சோகப்படாமலிருக்கிறாயா? முதலில் உலகங்களைத் தன்வசமாக்கிக்கொண்டு ஓப்பறறஸங்தோஷத்தையடைந்து இப்பொழுது இந்தத்துன்பத்தைப்பற்றிச் சோகப்படுகிறாயா? அல்லது, சோகப்படாமலிருக்கிறாயா?' என்றுகேட்டான். பலி சொல்லத்தொடங்கினன். 'தேவர்களுக்கரசனே! கர்வதையும் அபிமானத்தையும் தள்ளிவிட்டு என்னால் முன்செய்யப்பட்ட பெரிய கர்மத்தையும் உன்னைப்பற்றியஸ்திதியையும் வசப்படாதகாலத்தின் வேற்றுமையையும் உலகத்தின்பெருமையையும் அறியாமல் ஜீவன் சுற்றுவதையும் என்னிடமிருந்து கேள். ஓ! இந்திரனே! இவ்வுலகில் காலத்தின் [2] மாறுதலில் எல்லாம் நிலையற்றனவாயிருப்பதைக் கண்டு நான் சோகப்படாமலிருக்கிறேன். இவ்வுலகமனைத்தும் முடிவுள்ளதாயிருக்கிறது. தேவாதிபனே! பிராணிகளுக்குள்ள இந்தச் சரீரங்களும் முடிவுள்ளவையாயிருக்கின்றன. ஓ! இந்திரனே! ஆகையால், நான் சோகப்படாமலிருக்கிறேன். இந்தக்கழுதைப்பிறவியானது என்னுடையகுற்றத்தாலன்று. உயிரும் சரீரமும் பிறவியில் கூடப்பிறந்தவைகளாயிருக்கின்றன. இரண்டும் சேர்ந்து வளருகின்றன. இரண்டும் சேர்ந்து நசிக்கின்றன. இவ்விதம் நான் அறிவுள்ளவனாயிருக்கும்காரணத்தால் இவ்விதமானசரீரத்தைஅடைந்தும் நான் பரவசனுகத் துன்பப்படாமலிருக்கிறேன். அறிவுள்ளனக்குத் துன்பமேது? பிரவாஹங்களுக்குக் கடலானது முடிவாயிருப்பதுபோலப் பிராணிகளுக்குநாசமான து முடிவாயிருக்கிறது. வச்சிரத்

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

தைத்தரிப்பவனே! இதனை நன்குஅறிந்த மனிதர்கள் அவிவேகத்தை அடையமாட்டார்கள். ரஜோகுணத்தாலுண்டாகும் அவிவேகத்தைப் பெரிதாகக்கொண்டு இவ்விதம் அறியாமல் மதிகெட்டவர்கள் துன் பத்தை அடைந்து கஷ்டப்படுகிறார்கள். மனிதன் புத்தியை அடைவ தால் எல்லாப்பாவத்தையும் விலக்கிக்கொள்ளுகிறான். பாவம்வில கியவன் ஸத்வகுணம்பெறுவான். ஸத்வகுணத்திலிருப்பவன் நல்ல தெளிவுள்ளவனுவான். ஆகையால், திரும்பவும் திரும்பவும் உண் டாவனவும் நசிப்பனவுமாயிருப்பவைகளான பொருள்களால் ஏவப் பட்டுக் கிருபணர்கள் துன்பப்படுகிறார்கள். பொருள்வித்திப்பதை யும் பொருள்நாசத்தையும் ஜீவிப்பதையும் மரிப்பதையும் ஸுகத்தை யும் துக்கத்தையும் மற்றப்பயனையும் நான் பகைக்கவுமில்லை; விரும் பவுமில்லை. ஒருமனிதனைக்கொல்லுகிறவனுவன் தான்கொல்லப்பட் டவனுகவே கொல்லப்பட்டவனைக் கொல்லுகிறான். எவன் கொல்லு கிறானே, எவன் கொல்லப்படுகிறானே அவ்விருவரும் அறிகிறார்க ளில்லை. இந்திரனே! [1]கொன்றபின்னும் வென்றபின்னும் பௌருஷ முள்ளவன்போலிருக்கிறமனிதன் உண்மையில் கர்த்தாவேஅல்லன். கர்த்தாவாயிருப்பதுதான் அதைச் செய்கிறது. உலகத்திற்குள்ள இறப்புபிறப்புஇவ்விரண்டையும் யார் செய்கிறார்? உண்டுபண்ணப் பட்டவஸ்துவாலேயே அந்தஉலகம் உண்டுபண்ணப்படுகிறது. அந்த வஸ்துவுக்கும் வேறுஒருவர் கர்த்தாவாயிருக்கிறார். பிராணிகள், பூமி அக்கினி ஆகாயம் ஜலம் ஐந்தாவதானவாயு இவைகளைக் காரண மாகக்கொண்டிருக்கின்றன. அவற்றில் என்னசோகமிருக்கிறது? தன்வலிமையால் பெரிதானகாலமானது அதிகப் படிப்புள்ளவனை லும் அலபப்படிப்புள்ளவனுலும் பலசாலியானுலும் பலவீனனுல லும் அழகுள்ளவனுலும் குரூபியானுலும் நல்லவனுலும் கெட் டவனுலும் எல்லோரையும் தன்வசமாக்கிக்கொள்ளுகிறது. அவ் வுலகம் காலத்தின்வசத்தை அடைந்தால் அறிவுள்ளஎனக்கு என்ன சோகமிருக்கிறது? மனிதன் முதலில் எரிக்கப்பட்டதையே பிறகு எரிக்கிறான்; அடிக்கப்பட்டதையே பிறகும் அடிக்கிறான். நாச மடைந்ததே நசிக்கிறது. அடையவேண்டியதையே அடைகிறான். ஆச்சரியமானவிதியைச் சிந்தித்தால காலமாகிறஇந்தக்கடலுக்குத் தீவு இல்லை. அக்கரை ஏது? இக்கரையும் காணப்படுகிறதில்லை. இதன் முடிவை நான் காணேன். இந்திரனே! காலமானது நான் பார்க்கும்

1 'கொல்பவனும் வெல்பவனும் உண்மையில் ஆத்மாவல்லர். ஆத்மா வானது ஒன்றையும் செய்கிறதில்லை' என்பது பழையஉரை.

பொழுது பிராணிகளை நசிக்கும்படிசெய்யாமலிருக்குமாகில் ஸந்தோஷமும் கர்வமும் கோபமும் எனக்கு இருக்கும். ஜனங்களில் லாதவீட்டில் கழுதையின் உருவத்தை எடுத்து உயிரைத்தின்று கொண்டிருக்கிறஎன்னைத் தெரிந்துகொண்டு நீ வந்து நின்தைபேசுகிறாய். விரும்பினால் நான் என்னுடையஉருவங்களைப் பலவிதமாக மாற்றிக்கொள்ளுவேன். பயங்கரமானஎன்னுடைய அந்த உருவங்களைக்கண்டு நீயே ஓடுவாய். காலம் யாவற்றையும் எடுத்துக்கொள்ளுகிறது. காலம் யாவற்றையும் கொடுக்கிறது. யாவும் காலத்தால் செய்யப்படுகின்றன. இந்திரனே! பௌருஷத்தைக் கொண்டாடாதே. இந்திர! முன்காலத்தில் நான்கோபங்கொண்டால் எல்லாம் மிகநடுங்கும். எல்லாத்தேவர்களும் உன்னுடன்கூட ஓடுவார்கள். இந்திர! இவ்வுலகத்திற்குரியஸனாதனமானதர்மத்தை நான் அறிவேன். நீயும் இவ்விதம் ஆலோசித்துப் பார். நீயாகக் கர்வத்தை அடையாதே. பிரபுத்தன்மையும் பராக்கிரமமும் ஒருபொழுதும் ஆத்மாவில் நிலைபெற்றவையல்ல. உன்னுடையமனம் இளமைப்பருவத்திலேயே இருக்கிறது; முன்போலவே இப்பொழுதும் இருக்கிறது. இந்திரனே! நன்முகப்பார். ஞானத்திற்குரியபுத்தியை அடை. தேவர்களும் மனிதர்களும் பித்ருக்களும் கந்தர்வர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் யாவர்களும் என்வசத்திலிருந்தார்கள். வாஸவனே! அவற்றையெல்லாம் நீ அறிவாய்.புத்தியிலுள்ளமதஸ்ரத்தால் அவிவேகமடைந்தவர்களாலும், 'விரோசனன்புத்திரனைபலி இருக்கிறதிக்குக்கே நமஸ்காரம்' என்றுசொல்லிக்கொண்டு என்னை அடைந்தார்கள். நான் அதைப்பற்றிச் சோகப்படுகிறதில்லை. இந்திரனே! எனக்குண்டான குறையைப்பற்றி நான் சோகப்படுகிறதில்லை. என்னுடையபுத்தியானது இவ்விதம் உறுதியுள்ளதாயிருக்கிறது. நான் தெய்வவசத்தில் நிற்கிறேன். நற்குலத்தில் பிறந்தவனும் அழகுள்ளவனும் பராக்ரமமுள்ளவனுமாயிருப்பவன் தன்இனத்தார்களுடன் துக்கப்பட்டு ஜீவிப்பவனைக் காணப்படுகிறான். அது அவ்விதமிருக்கவேண்டிய தாயிருக்கிறது. இந்திரனே! கெட்டகுலத்தில் பிறந்தவனும் மூடனும் துஷ்டனுமாயிருப்பவன் இனத்தார்களுடன் ஸுகமாய் ஜீவிப்பவனைக் காணப்படுகிறான். அது அவ்விதம் வரவேண்டியவிதியாகிறது. இந்திர! நிறைந்தஅழகுள்ளவளும் லக்ஷணம்பொருந்தியவளுமாயிருப்பவள் பாக்கியமில்லாதவளாகக் காணப்படுகிறாள். லக்ஷணமில்லாதவளும் குரூபியுமான ஒருத்தி நல்லபாக்கியமுள்ளவளாகவும் காணப்படுகிறாள். இந்திரனே! இது என்னால் செய்யப்பட்டதன்று.

இந்திரனே ! இது உன்னால் செய்யப்பட்டதுமன்று. வஜ்ராயுதமுள்ள வனே! நீ இவ்விதநீலையைஅடைந்திருப்பதும் நாங்கள்இவ்விதநீலையை அடைந்திருப்பதும் உன்னுடைய செயலல்ல; மற்றவர்களுடைய செயலுமல்ல; ஓ ! இந்திரனே! என்னுடையசெய்கையென்பது ஏது? ஸம்பத்தோ விபத்தோ காலத்தின்வேற்றுமையாலேயே செய்யப்படு கின்றன. நீ தேவர்களுக்கரசனுயிருந்துவிளங்குறிறவனும் ஸம்பத் துள்ளவனும் காந்தியுள்ளவனும் எனக்குமேல்கர்ஜிப்பவனுமாயிருப் பதைப் பார்க்கிறேன். காலமானது என்னை மீறிநிற்பதாயில்லாவிட் டால் நான் இவ்விதமிருக்கவேமுடியாது. வஜ்ராயுதத்துடன்கூடி யிருந்தாலும் உன்னை இப்பொழுது நான் ஒருருத்தால் வீழ்த்திவிடு வேன். ஆனல், இது பராக்கிரமத்திற்குரியகாலமன்று. சாந்தியை அடையத்தக்ககாலம் இப்பொழுது வந்திருக்கிறது. காலம் எல்லா வற்றையும் நீலைபெறச்செய்கிறது. அப்படியே காலம் யாவற்றையும் பழுக்கச்செய்கிறது. அஸுரர்களுக்கரசனும் பலசாலியும் கர்ஜிப்ப வனும் மிக்கபராக்கிரமமுள்ளவனுமானஎன்னையே காலம் வந்து அடையுமாகில் வேறுஎவனிடம் வராமலிருக்கும் ? தேவராஜனே ! என்னுடையஒருதேஜஸால் மஹாத்மாக்களும் பன்னிரண்டு ஆதித் தியர்களுமான உங்களனைவரின் தேஜஸுகளும் தரிக்கப்பட்டன. ஓ! வாஸவனே ! நானே ஜலங்களைஉறிப்பவனும் விடுதிறவனுமாயிருந் தேன். மூன்றுலகங்களையும் நானே தபிக்கச்செய்தேன். நானே மின்னலைஉண்டுபண்ணினேன். நான் காப்பவனும் அழிப்பவனும் கொடுப்பவனும் வாங்குபவனும் அடக்குபவனும் கட்டளையிடுபவனும் உலகங்களில்பிரபுவும் ஈஸ்வரனுமாயிருந்தேன். அமராதிபனே! என் னுடைய அந்தப்பிரபுத்தன்மையானது இப்பொழுது விலகிவிட்டது. காலத்தின் (பகல் இரவுமுதலியவையான) நேமியால் ஆக்கிரமிக்கப் பட்டஎனக்கு யாவும் தோன்றவில்லை. சசீபதியின்பதியே ! நான் கர்த்தாவல்லேன். நீயும் கர்த்தாவல்லை. மற்றவனும் கர்த்தாவல்லன். இந்திரனே! உலகங்கள் தற்செயலாக வெவ்வேறுகாலத்தில் அனுப விக்கப்படுகின்றன. வேதமறிந்தஜனங்கள் காலரூபியானபிரம்மத்தை, மாஸத்தையும் பக்ஷத்தையும் வீடாகக்கொண்டதும் இரவாலும் பகலாலும் சூழப்பட்டதும் ருதுக்களைத் துவாரமாகக்கொண்டதும் பிராணவாயுவை முகமாகக்கொண்டதுமாகக் கூறுகிறார்கள். சில ஜனங்கள் தம்புத்தியால் இவ்வுலகம்யாவும் தியானம்பண்ணத் தக்கதெனக் கூறுகிறார்கள். [1]இவ்விதத்யானத்திற்கு ஐந்துரு

[1] இங்கு அரைஸ்லோகம் விடப்பட்டது.

வத்துடன்கூடிய ஐந்துகோசங்களேயே விஷயங்களென்று கருதுகிறேன். விருத்திரனைக்கொன்றவனே! பிறகு, முடிவுக்காலத்தில் அவ்வைந்தையும் அவைகளுடன்கூடியிருப்பவனேயும் காணேன். யுக திகளுக்கெட்டாததும் சாஸ்திரங்களாலும்அறியக்கடினமானதும்பெரியகடலபோல எங்கும் நிறைந்ததும் முதலும்முடிவுமில்லாததுமான பிரம்மத்தையே அழிவில்லாதஜீவனென்றும் அழிவுள்ளபிரபஞ்சமென்றும் சொல்லுகிறார்கள். அந்தப்பிரம்மமானது தான்உபாதியின்பற்றுதலில்லாததாயினும் புத்தியின் ஸத்வகுணங்களிலிருந்துகொண்டு தன்னை அறிவிக்கிறதாகிறது. எவர்கள் உண்மையைக்கண்டவர்களோ அந்தஜனங்கள் இந்த ஆத்மாவை நித்தியமானபிரம்மமென்றே நினைக்கிறார்கள். ஐந்துவிதமான இந்திரியங்கள்யாவும் எதைத் தொடர்ந்து அறிகிறதிலலியோ அதைக் காலமென்றுதெரிந்துகொள். இவ்வுலகமனைத்தும் அதன்வசத்திலிருக்கிறது. பூஜ்யமானகாலமானது பூதங்களுக்குள்ள வேறுமுமையைச்செய்கிறதென்று இவ்வளவைக்கூடத் தெரிந்துகொள்ளமுடியாது. காலத்தைக்காட்டிலும் இவ்விதசக்தியுள்ள வேறுபதார்த்தம் இல்லாததாலும் இவ்விதம் கெடுதலே அறிவிக்கக்கூடியவேறுபதார்த்தம் இல்லாததாலும் எல்லாப்பிராணிகளும் அடையத்தக்க அக்காலத்தைஅடையாமலஎங்குபோகமுடியும்? ஒடுகிறவனாலும் அக்காலத்தைத தள்ளமுடியாது. நின்றாலும் அதிலிருந்து விலகமாட்டான். ஐந்துவிதமான இந்திரியங்கள்யாவும் அதைக் காண்கிறதிலலே. சிலர் இக்காலத்தை அக்கினியென்று சொல்லுகிறார்கள்; சிலர் பிரம்மாவென்றுசொல்லுகிறார்கள். மற்றுஞ்சிலர் ஒன்றுபிருக்கும்இக்காலத்தை ருதுக்களென்றும் மாதங்களென்றும் பக்ஷங்களென்றும்தினங்களென்றும்க்ஷணங்களென்றும் காலியென்றும் மாலியென்றும் நடிப்பகலென்றும் முகூர்த்தமென்றும் பலவிதமாகக் கூறுகிறார்கள். இவ்வுலகம்யாவும் எதன்வசத்திலிருக்கிறதோ அதைக் காலமென்று தெரிந்துகொள். சசீபதியான இந்திரனே! உன்னைப்போல வன்மையும்பராக்கிரமமும்பொருந்திய பலவாயிரம்இந்திரர்கள் காலஞ்சென்றார்கள். ஓ! இந்திரனே! தேவர்களுக்கரசனும் மிக்கபலமுள்ளவனும் பயங்கரமானஸேனையுள்ளவனுமானஉன்னையும் காலம்வரும்பொழுது பெரியவீரியமுள்ள அக்காலமானது மிகவும் அடக்கிவைக்கும். அக்காலமானது இவ்வுலகமனைத்தையும் பெற்றுக்கொள்ளுகிறது. ஓ! இந்திரனே! ஆகையால், உறுதியுள்ளவனயிரு. அக்காலமானது என்னாலும் உன்னாலும் முன்னோர்களாலும் மீறிச்செல்லக்கூடியதன்று. மிகஉத்தமமான அக்

ராஜ்யலக்ஷ்மியை அடைந்து, 'என்னிடத்தில் ஸம்பத்து இருக்கிறது' என்று நினைப்பதுபொய். இந்தலக்ஷ்மியானவள் ஓரிடத்திலும் நிலைத்திருக்கிறவளல்லள். உன்னைவிடமிகச்சிறந்தவர்களான பல்லாயிரமிந்திரர்களிடத்தில் இவள் இருந்திருக்கிறாள். தேவர்களுக்குத்திபனே! சஞ்சலமுள்ள இந்தலக்ஷ்மியானவள் என்னையும்விட்டு உன்னை அடைந்திருக்கிறாள். இந்திரனே! இவ்விதம் திரும்பவும்நினையாதே. நீ சாந்தமடையிரு. நீயும் இவ்விதமிருப்பதைக்கண்டால் லக்ஷ்மியானவள் காலத்தால் ஏவப்பட்டு விரைவாக வேறொருவனிடம் செல்லுவாள். ஓ! இந்திரனே! உனக்குக் கர்வம்வேண்டாம். இந்திரனே! பொறுத்துக்கொள். தேவபதியே! அவ்விதமானகாலம்வந்துவிட்டதென்றுதெரிந்துகொள். தேவராஜனே! நீ ஏன் வெட்கமில்லாமல் புகழ்ந்துகொள்ளுகிறாய்? எல்லாஅஸுரர்களுக்குமதிபனும் எல்லாத்தேவர்களையும் நடுங்கச்செய்தவனும் பிரம்மலோகத்தையும் ஜயித்தவனுமாயிருந்தவன் இவ்விதமிருக்கிறான். வருங்காலத்திலுள்ளகதியை எவன் கண்டான்?' என்றுசொன்னான்.

இருநூற்றுமுப்பத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(காலத்தின்வன்மையைப்பற்றி இந்திரனுக்கும் பலிக்கும்ஸம்பாஷணைத் தொடர்ச்சியும் இந்திரனுக்கும் லக்ஷ்மிக்கும் ஸம்பாஷணையும்.)

பிறகு, இந்திரனானவன் அப்பொழுது மஹாத்மாவானபலியின் சரீரத்திலிருந்து வெளியேகிளம்புகிறவளும் தேஜஸுள்ளவளும் தன்னுருவமுள்ளவளுமானலக்ஷ்மியைக் கண்டான். காந்தியால் விளங்கும் அந்த லக்ஷ்மியைக் கண்டவுடன், பாகனென்னும்அஸுரனை அடக்கினவனும்பூஜ்யனுமானஇந்திரன் வியப்பால் மலர்ந்தகண்ணுள்ளவனாகிப் பலியைநோக்கி, 'ஓ! பலியே! தன்காந்தியால்விளங்குகிறவளும் தோள்வளையும் மகுடமும் அழகுமுள்ளவளுமாக உன்னிடமிருந்து வெளியிற்செல்லுகிறஇவள் யார்?' என்றுகேட்டான். பலி, 'இவளை அஸுரப்பெண்ணென்றும்தெய்வப்பெண்ணென்றும்மானிடப்பெண்ணென்றும் நான் அறியவில்லை. நீ இவளைக்கேட்டாலும்ஸரி; கேளாவிட்டாலும் ஸரி. ஓ! இந்திரனே! இஷ்டம்போலச் செய்' என்றுசொன்னான். இந்திரன், 'அழகுள்ளவளும் மகுடமுள்ளவளுமாகிப் பலியினிடமிருந்து வெளியிற்செல்லும் நீ யார்? அழகானசிரிப்புள்ள

வளே! அறியாத'எனக்கு உன்பெயரைச் சொல். நீ யார்? அஸுர ஸ்ரேஷ்டனை பலியைவிட்டுக் காந்தியால் விளங்கிக்கொண்டு இவ் விதம் என்னருகில் நிற்கிறாயே. பெண்ணே! கேட்கும் எனக்கு அதைச்சொல்' என்று கேட்டான். லக்ஷ்மி, 'விரோசனன் என்னை அறியவில்லை. விரோசனனுடைய புத்திரனை இந்தப்பலியும் என்னை அறியவில்லை. ஓ! வாஸவனே! துஸ்ஸஹையென்றும் விதி த்ஸையென்றும் பூதியென்றும் லக்ஷ்மியென்றும் ஸ்ரீயென்றும் என் னைச் சொல்லுவார்கள். ஓ! இந்திரனே! நீ என்னை அறியமாட்டாய். தேவர்களனைவரும் என்னை அறியமாட்டார்கள்' என்றுசொன் னாள். இந்திரன், 'ஓ! துஸ்ஸஹையே! நெடுங்காலம்வஸித்தவளா யிருந்தும் நீ இந்தப்பலியை விடுகிறாயே. இது என்ன? நீ எனக் காக விடுகிறாயா? அல்லது, பலிக்காகவா?' என்று கேட்டான். லக்ஷ்மி, 'பிரம்மாவும் என்னை எவ்விதத்திலும் கட்டளையிடத்தக்கவ ரல்லர்; விதாதாவும் கட்டளையிடத்தக்கவரல்லர். இந்திரனே! கால மானது மாறிற்று. இந்திரனே! இவ்விதம் நீ அவமதிக்கவேண் டாம்' என்றுசொன்னாள். இந்திரன், 'மகுடம்தரித்தவளே! பலி யானவன் உன்னால் எவ்விதம் எதற்காகத் தள்ளப்பட்டான்? என்னை நீ எவ்விதம் விடாமலிருப்பாய்? இனியபுன்னகையுள்ளவளே! அதை எனக்குச் சொல்லவேண்டும்' என்றுகேட்டான். லக்ஷ்மி, 'ஸத்யத் திலும் தானத்திலும் விரதத்திலும் தவத்திலும் பராக்கிரமத்திலும் தர்மத்திலும் நான் நிலைபெற்றவளாயிருக்கிறேன். பலியானவன் அவைகளிலிருந்து விலகினவனனன். இந்தப்பலியானவன் முதலில் பிராம்மணர்களுக்கு கன்மைசெய்பவனும் உண்மைபேசுகிறவனும் இந்திரியங்களை வென்றவனுமாயிருந்து பிறகு பிராம்மணர்களிடம் அஸூயைப்பட்டான். அசுத்தனுயிருந்துகொண்டு நெய்யைத் தொட்டான். எப்பொழுதும் யாகஞசெய்யும் தன்மையுள்ளவ னுயிருந்துகொண்டு என்னையே நேரில் பூஜித்தான். பிறகு, அதை விட்டு மூடபுத்தியுள்ளவனும் காலத்தால் துன்பப்படித்தப்பட் டவனுமானன். ஓ! இந்திரனே! ஆகையால, அவனிடமிருந்து விலகினேன். ஓ! வாஸவனே! உன்னிடத்தில வவிக்கப்போகி றேன். அஜாக்ரதையின்றித் தவத்தாலும் பராக்கிரமத்தாலும் நான் தரிக்கத்தக்கவளாகிறேன்' என்றுசொன்னாள். இந்திரன், 'தாம ரைமலரில் குடியிருப்பவளே! ஒருவனுக உன்னைவகிக்கச் சக்தி பெற்றபுருஷன் தேவர்களிலும் மனிதர்களிலும் எல்லாப்பிராணி களிலும் எவனிருக்கிறான்?' என்று கேட்டான். லக்ஷ்மி, 'புரந்தர!

என்னை ஒருவனுகப் பொறுக்கச் சக்திபெற்றவன் ஒருதேவனு மில்லை; கந்தர்வனுமில்லை; அஸுரனுமில்லை; ராக்ஷஸனுமில்லை'என்று சொன்னுள். இந்திரன், 'அழகுள்ளவளே! நீ என்னிடத்தில் எப் பொழுதுமிருக்கும்விதத்தை எனக்குச் சொல்லவேண்டும். நீ சொல் லுகிறபடி அதை நான் செய்கிறேன். நீ அதை உண்மையாகச் சொல்ல வேண்டும்' என்றுகேட்டான். லக்ஷ்மி, 'தேவேந்திரனே! நான் எவ் விதம் உன்னிடத்தில்எப்பொழுதும் நிலைபெற்றிருப்பேனென்பதைத் தெரிந்துகொள். வேதவிதிப்படி என்னை நான்குவிதமாகப்பங்கிட்டு வைத்துக்கொள்' என்றுசொன்னுள். இந்திரன், 'சக்திக்கும் பலத்தி ற்கும்தக்கபடி நான் உன்னைத்தாங்குகிறேன். ஓ! லக்ஷ்மி! ஆனுல், உன் னருகில் எப்பொழுதும் எனக்கு அபசாரமுண்டாகாமலிருக்கவேண் டும். மனிதர்களைப் பூமிதான் வகிக்கும்திறமையுள்ளவளும் பிராணி களை உண்டுபண்ணுகிறவளுமாயிருக்கிறுள். அவள் உன்னுடைய ஒருபாகத்தைப் பொறுத்துக்கொள்ளட்டும். அவள் திறமையுள்ளவள் தானென்பது என்கருத்து' என்றுசொன்னுள். லக்ஷ்மி, 'பூமியில் நிலைபெற்றதாக, என்னுடையஒருபாகமானது இதோ வைக்கப்பட் டது. ஓ! இந்திரனே! ஆகையால, என்னுடையஇரண்டாவதான பாகத்தை நன்குவைக்கப்பட்டதாகச் செய்துகொள்' என்றுசொன் னுள். இந்திரன், 'மனிதர்களை ஒடுகின்றஜலம்தான் வளர்க்கிறது. அது உன்னுடைய ஒருபாகத்தைப் பொறுத்துக்கொள்ளட்டும். ஜலம் பொறுக்குந்திறமையுள்ளது' என்றுசொன்னுன். லக்ஷ்மி, 'ஜலத்தில் நிலைபெற்றதாக என்னுடையஒருபாகமானது இதோ வைக்கப்பட் டது. ஓ! இந்திரனே! ஆகையால், என்னுடையமூன்றுவதானபாகத் தை நன்கு உறுதியுள்ளதாகச் செய்துகொள்' என்று சொன்னுள். இந்திரன், 'வேதங்களும் யாகங்களும் தேவர்களும் நிலைபெற் றிருக்கிற அக்னியானது உன்னுடைய மூன்றுவதான பாகத்தை நல்ல உறுதியுடன் தாங்கட்டும்' என்று சொன்னுன். லக்ஷ்மி, 'அக்கி னியில் நிலைபெற்றதாக என்னுடையஒருபாகமானது இதோ வைக்கப் பட்டது. ஓ! இந்திரனே! ஆகையால, என்னுடைய நான்காவது பாக த்தை நலலஉறுதியுள்ளதாகச் செய்துகொள்' என்று சொன்னுள். இந்திரன், 'மனிதர்களுள் ஸாதுக்களும் பிராம்மணர்களுக்கு நன்மை செய்பவர்களும் ஸத்யம் பேசுகிறவர்களுமாயிருக்கிறவர்கள் உன்னு டையஒருபாகத்தைப் பொறுத்துக்கொள்ளட்டும்.ஸாதுக்கள் பொறுக் குந்திறமையுள்ளவர்கள்' என்றுசொன்னுன். லக்ஷ்மி,'ஸாதுக்களிடம் நிலைபெற்றதாக என்னுடையஒருபாகமானது இதோ உறுதிபெற்

றது. ஓ! இந்திரனே! என்னைப் பிராணிகளிடம் இவ்விதம்உறுதி பெற்றவளாக எப்பொழுதும் நீ தாங்கிக்கொள்' என்று சொன்னாள். இந்திரன், 'எவர்கள் பூமியின் சுத்தியைச் செய்துகொண்டு பிறகு ஜலங்களால் பிராணிகளைத் திருப்திசெய்கிறவர்களும் அக்னியில் யாகஞ் செய்கிறவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களுக்கு நீ அழிவில்லாதவளாயிருக்கிறாய். [1]இவ்விதம் என்னால் உறுதிசெய்யப்பட்டவளும் பூஜிக்கத்தக்கவளுமான உன்னைப் பிராணிகளுள் எவன் விரோதிக்கிறானோ அவன் எனக்குப் பகையாவான். என் வசனத்தை யாவரும் கேட்கட்டும்' என்றுசொன்னான். 'அப்படியே ஆகட்டும்' என்றுசொல்லிவிட்டு எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்ட அந்தலக்ஷ்மியானவள் (பலியினிடமிருந்து) நழுவினாள். அந்தலக்ஷ்மீதேவியானவள் இந்திரனை ரக்ஷித்தாள். பிறகு, லக்ஷ்மியால் விடப்பட்டவனும் அஸுரர்களுக்கரசனுமான பலியானவன், 'ஸூர்யனானவன் [2]கீழ்த்திசையில் எவ்வளவு பிரகாசிக்கிறானோ அவ்வளவுதென்திசையிலும் அவ்வளவே மேறறிசையிலும் அதுபோல வடதிசையிலும் பிரகாசிப்பான். அவ்வாறு பகல்நடுவில் ஸூர்யன் அஸ்தமயமடையாமலிருக்கிறபொழுது தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் திரும்பவும் யுத்தமுண்டாகப்போகிறது. அப்பொழுது நான் உங்களை வெல்லப்போகிறேன். ஸூர்யன் நடுவிலிருந்துகொண்டு எல்லா உலகங்களையும் பிரகாசஞ்செய்கிறபொழுது தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் உண்டாகும் சண்டையில் நான் உன்னை வெல்லப்போகிறேன்' என்று சொன்னான். இந்திரன், 'ஓ! பலியே! உன்னைக் கொல்லக்கூடாதென்று நான் பிரம்மதேவரால் கட்டளையிடப்பட்டிருக்கிறேன். ஆகையால், நான் உன்தலையில் வஜ்ராயுதத்தைப் போடாமலிருக்கிறேன். அஸுரர்களுக்கரசனே! இஷ்டம்போலப்போகலாம். பெரியஅஸுரனே! உனக்குக்ஷேமமுண்டாகட்டும். ரவியானவன் நடுவிலிருந்துகொண்டு ஒருபொழுதும் பிரகாசிக்கப்போகிறதில்லை. முன்னமே பிரம்மதேவரால் இந்தரவிக்கு ஸமயம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ரவியானவன் ஸத்தியமாகப் பிரஜைகளைப் பிரகாசப்படுத்திக்கொண்டு எப்பொழுதும் சுற்றிக்கொண்டிருப்பான். அவனுக்கு ஆறுமாதங்கள் உத்தராயணமும் ஆறுமாதங்கள் தக்ஷி

1 அதிகபாடமான ஒருஸ்லோகம் விடப்பட்டது.

2 மேருமலையின் மேற்புறத்தின் நடுவில் பிரம்மலோகமும் அதன்கீழ்க்கு முதலிய நான்குதிக்குகளிலும் இந்திரன், யமன், வருணன், குபேரன் இவர்களின் பட்டணங்களுமிருக்கின்றன. இவைகள் மேருமலையைச்சுற்றிவரும் ரவியால்

ணயனமுமாகும். ரவியானவன் அந்தஅயனப்படி உலகங்களில் குளிரையும்வெய்யிலையும் உண்டுபண்ணிக்கொண்டு செல்லுகிறான்'என்று சொன்னன். ஓ! பாரத! இந்திரனால் இவ்விதம்சொல்லப்பட்டவனும் அஸுரர்களுக்கதிபனுமான பலியானவன்தென்திசையைநோக்கிச்சென்றான். இந்திரனே வடதிசையை நோக்கிப்புறப்பட்டான். இவ்விதம் பலியால்பாடப்பட்டதும் அனகங்காரமென்றுபெயரிடப்பட்டதுமான இவ்வசனத்தைக் கேட்டபின் இந்திரனனவன் அப்பொழுது ஆகாயவழியில் சென்றான்" என்று சொன்னர்.

இருநூற்றுமுப்பத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(சோகத்தைவிட்டுப் பரமாத்மாவை த்யானிப்பது மோக்ஷஸாதனமென்பதைப்பற்றி இந்திரனுக்குத்தும்புருசிக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "துயரங்களில் மூழ்கியிருப்பவனுக்கு எதுநன்மையைத்தருவதாகும்? அதை எனக்குச் சொல்லவேண்டும். ஓ! புஜபலமுள்ளவரே! உறுதியாயிருக்கவேண்டித் திரும்பவும் அதனை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! யுதிஷ்டிரனே! இவ்விஷயத்திலும் இந்திரனுக்கும்நமுசிக்கும்நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாகரிக்கிறார்கள். லக்ஷ்மியைவிட்டுவிலகியவனும் கடலைப்போலக்கலக்கத்தகாதவனும் பிராணிகளின் பிறப்பிறப்புக்களை அறிந்தவனுமான நமுசியைக்கண்டு இந்திரனவன், 'ஓ! நமுசியே! கயிறுகளால்கட்டப்பட

பிரகாசிக்கின்றன. அப்படட்டணங்களிலவலிப்பவர்களுக்கு ரவியின் தரிசனம் உதயமும் அவன் காணுமலபோவது அஸ்தமயமுமாகும். அப்பட்டணங்களுள் கிழக்கில ரவிஉதயமானலை மேற்றிசையிலுள்ளவர்களுக்கு அஸ்தமயமும் வடதிசையில நடப்பதலும் தெற்கில இரவின்மத்தியமமுமாக இருக்கும். இது போல மற்றத்திசைகளிலும் தெரிந்துகொள்ளவேண்டும். இவைகளில் பிரம்ம தேவரின் ஒரு பகலுக்குரிய காலங்களைப் பதினாறாப் பங்கிட்டு அவைகளில் ஒரு பாகாலத்தால இந்திராகாதத்திற்கழிவும் இரண்டு காலகு எட்டுப்பாகங்களால் முறையே ஸம்யமனீமுதலியவைகளுக்கழிவும் உண்டாகும். அத்தஸமயத்தில இப்பட்டணங்களில ரவியைக் காண்பதும் காணுதலும் இல்லாமல்போவதுபற்றி உதயாஸ்தமயங்களில்லை. அப்பொழுது ரவி நடுப்பகலிலிருப்பவனுகிறான். அது சிகழும் வைவஸ்வதமனுவின் காலஞ்சென்று ஸாவர்ணிமனுவின் காலமாகும். அச்சமயத்தில் தான் இந்திரபதவியை அடையக்கூடுமென்பது பலியின் கருத்து' என்பது பழைய உரை.

டவனும் ஸ்தானத்திலிருந்துகழுவினவனும் பகைவர்களுக்குவசப் பட்டவனும் ஸம்பத்தைவிட்டுவிலகியவனுமானநீ சோகப்படுகிறாயா ? அல்லது, சோகப்படாமலிருக்கிறாயா ?' என்றுகேட்டான். நமுசி சொல்லத்தொடங்கினன். [1]' விலக்கத்தகாதசோகத்தால் சரீரம் மிக வாடுகிறது. பகைவர்கள் மிகவும்களிக்கிறார்கள். சோகத்தைவிலக்கிக் கொள்ளத் துணையுமில்லை. ஓ ! இந்திரனே ! ஆகையால், நான் சோ கப்படவில்லை. இவையாவுமே முடிவுள்ளனவாகும். தேவர்களுக்கீச னே ! சோகப்படுவதால் உருவம்கெடும். சோகப்படுவதால் ஸம்பத்தி லிருந்து நழுவுவான். சோகப்படுவதால் ஆயுளும் தர்மமும் குறை யும். ஆகையால், அறிவுள்ளவன் வந்த துக்கத்தைத்தள்ளிவிட்டுமனத் திற்குஸுகமும் மனத்திலிருப்பதுமான க்ஷேமத்தை மனத்தால் நினைக்கவேண்டும். மனிதன் மனத்தை எப்படிஎப்படி க்ஷேமத்தில் செலுத்துகிறானோ அப்படி அப்படியே எல்லாப்பொருள்களும் இவ னுக்குநன்குவித்திக்கும். இவ்விஷயத்தில் ஐயமில்லை. கட்டளையிடும் கடவுள் ஒருவரேயல்லாமல் இரண்டாம்கடவுளில்லை. கர்ப்பத்தில்படித் திருக்கும்மனிதனைக் கடவுள்கட்டளையிடுகிறார். நான் அவரால் ஏவப் பட்டுப் பள்ளத்தைநோக்கி ஜலம்செல்வதுபோல அவர்ஏவியபடிசெல் லுகிறேன். [2]உண்மையையும் உண்மையல்லாததையும் அறிந்தநான் [3] ப்ரேயஸை மிகப்பெரிதென்று தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆகி லும்,நான் அதைச்செய்கிறதில்லை. மாடிகளிலும்குழிகளிலும் [4]திக்குக் களிலும் எவ்விதம் ஏவப்பட்டவனுகிறேனோ அவ்விதம்செய்துகொ ண்டு செல்லுகிறேன். இந்தமனிதன் எந்தஎந்தவிதம் அடையவேண் டுமோ அந்தஅந்தவிதமே அடைகிறான். எது எவ்விதம் வரவேண்டு மோ அது அவ்விதமேவருகிறது. தெய்வத்தால் எந்தஎந்தக்கர்ப்பத்தி லேயே திரும்பவும்திரும்பவும் எவப்படுகிறானோ அது அதிலேயே வஸிக்கிறான். எதிலிருக்கத் தான் விரும்புகிறானோ அதிலிருக்கிறதில் லை. 'எனக்குநேர்ந்திருக்கிற இந்தநிலைஎனக்குஇவ்விதம் வரவேண்டி யதே' என்ற எண்ணமானது எப்பொழுதும் எவனுக்கிருக்கிறதோ அவன் ஒருபொழுதும் சோகப்படமாட்டான். காலத்தின்வேற்றுமை யாலுண்டாகும் ஸுகதுக்கங்களால் பீடிக்கப்படுகிறவர்களுக்குத்துன் பமில்லை. ஆனால், துக்கத்திலிருப்பவனுக்கு, 'நான் கர்த்தா' என்

1 வேறு பாடம்.

2 பத்தத்தையும் மோக்ஷத்தையும் என்பது வேறுபாடம்.

3 'மோக்ஷத்தை' என்பது பழைய உரை.

4 'ஆசையைக் கொண்டு' என்பது பழைய உரை.

னும்எண்ணமே துக்கமாகும். உலகத்தில் துன்பங்களானவை, ரிஷிகளையும் தேவர்களையும் பெரியஅஸுரர்களையும் மூன்றுவேதங்களையும் கற்றபெரியோர்களையும் காட்டிலிருக்கும் முனிவர்களையும் மற்ற ஏவர்களையுந்தான் அடைகிறதில்லை? ஆனால், நன்மைதீமைகளை அறிந்தவர்கள் பரபரப்படையமாட்டார்கள். அறிவுள்ளவன் கோபத்தையும் அபிமானத்தையும் அடையமாட்டான். அவன் துக்கமுள்ளவனுமல்லன்; சந்தோஷமுள்ளவனுமல்லன்; பொருள்நஷ்டங்களிலும் துக்கங்களிலும் சோகப்படுகிறவனுமல்லன்; இமயமலைபோல அசைவற்றஸ்வபாவத்துடனிருப்பான். எவனைப் பொருள்களின் பெரியலாபமானது ஸந்தோஷப்படுத்தாமலிருக்குமோ, அப்படியே ஸமயத்திலுண்டாகுந்துன்பமும் அவிவேகத்தை அடையும்படி செய்யாமலிருக்குமோ, எவன் ஸுகத்தையும் அப்படியே துக்கத்தையும் பறறுதலில்லாமல் அனுபவிக்கிறானே அவன் உயர்ந்தமனிதனுவான். மனிதன்எந்தஎந்த அவஸ்தையை அடைவானே அந்தஅந்தஅவஸ்தையிலும் தாபத்தை அடையாதவனுக இருக்கவேண்டும். இவ்விதம் வளருவதும் மனத்திலுண்டாவதும்[1]ஸ்ரமத்தைஉண்டுபண்ணுவதுமான சோகத்தைச்சரீரத்திலிருந்து தூரவிலக்கிக்கொள்ளுகிறவனுயிருக்கவேண்டும். எந்தஸுபையை அடைவதானது எப்பொழுதும் தர்மத்தைப்பறறிய பயத்தை உண்டுபண்ணுகிறதில்லையோ அது நல்ல [2]ஸபையுமன்று; [3]பரிஷத்துமன்று; [4]ஸதஸுமன்று. தர்மத்தின்உண்மையைத் தெரிந்துகொண்டு நடக்கும் அறிவுள்ளவன் சிறந்தமனிதனுவான். அறிவிற்சிறந்தோர்களுடையகாரியங்களின்முடிவைத் தெரிந்துகொள்வது மிகக்கடினம். கிழத்தனமடைந்த கௌதமர் ஸ்தானத்திலிருந்துகொண்டு இவ்வளவு கஷ்டமானஆபத்தை அடைந்தும் அவிவேகமடையாமலிருந்தார். ஆகையால், அறிவிற்சிறந்தவன் அவிவேகமடையத்தக்காலத்திலும் அவிவேகமடையமாட்டான். மனிதன் மந்திரங்களின் பலத்தாலும் வீரியத்தாலும் புத்தியாலும் ஆண்மையாலும் சீலத்தாலும் நன்னடக்கையாலும் ஸம்பத்தாலும் அடையத்தகாததை அடையமாட்டான். இவ்விதம் கறகுலத்தில் பிறந்தவனுக்கு முற்காலத்தில் தெய்வம் எதைக் கட்டளையிட்டிருக்கிறதோ அதையே நான்அனுபவிக்கிறேன். ம்ருத்யுவானவன் எனக்கு என்னசெய்யக்கூடும்? ஸுகங்களோ

1 வேறு பாடம்.

2 லோகலியவகாரங்களை விசாரிக்கும்கூட்டம்.

3 ஸம்ருதிகளைப்பற்றி விசாரிக்கும்கூட்டம்.

4 வேதத்தைப்பற்றி விசாரிக்கும்கூட்டம்.

துக்கங்களோ அடையத்தக்கவைகளையே அடைகிறான். செல்லத் தக்கவிடங்களுக்கே செல்லுகிறான். கிடைக்கத்தக்கவைகளே கிடைக்கின்றன. இதனை முழுதும்தெரிந்துகொண்டு அவிவேக மடையாமலிருக்கிறமனிதன் எல்லாத்துக்கங்களிலும் க்ஷேமமுள்ள வனும் பாக்கியமனைத்து முள்ளவனுமாயிருப்பான்' என்றுசொன் னான்'' என்றார்.

இருநூற்றுமுப்பத்துநான்காவது அத்தியாயம். ௨௩

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஆபத்தில் தைரியமே ஸுகத்துக்குக் காரணமென்பதைப் பற்றி முதிர்நாயுக்கும் பலிக்கும் ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், '' அரசரே ! உறவினர்களின்நாசத்திலோ அல்லது ராஜ்யங்களின் நாசத்திலோ கஷ்டமான ஆபத்தில் மூழ்கின மனித னுக்கு ஶ்ரேயஸ் எது ? பரதர்களிலறிவிறந்தவரே ! இவ்வுலகத்தில் உத்தமமாக உபதேசிப்பவர் நீரன்றோ ? இவ்விஷயத்தை உம்மிடம் கேட்கிறேன். அதனை நீர் எனக்குச் சொல்லவேண்டும்'' என்று கேட்க, பீஷ்மர் சொலலத்தொடங்கினார்.

'' அரசனே ! மக்கள் பெண்டிர் ஸுகங்கள் பொருள் இவைகளை விட்டு விலகியவனும் கஷ்டமானவிபத்தில் மூழ்கினவனுமாயிருப்பவ னுக்குத் தைரியமானது க்ஷேமத்தைச் செய்யத்தக்கதாகும். தைரிய முள்ளவனுக்குச் சரீரமானது அழியாது. சோகமில்லாமலிருப்பது ஸுகத்தைக்கொடுக்கும் ; மிகச்சிறந்த நோயற்றநிலையையுந்தரும். சரீரத்திற்கு ஆரோக்கியமிருந்தால் அந்தமனிதன்திரும்பவும் ஸம்பத் தை அடைவான். அப்பா! ஐஸ்வரியலக்ஷணம்பொருந்திய நிலையைஅடைந் திருக்கிற அறிவிற்சிறந்தவனுக்கு ஸம்பத்தும் தைரியமும் காரியங் களில் உறுதியுமுண்டாகும். ஓ! யுதிஷ்டிர ! திரும்பவும் இவ்விஷயத் திலும் பலிக்கும்இந்திரனுக்கும்நடந்த ஸம்பாஷணையான பழைய இவ் விதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். தேவர்களுக்கும் அஸுரர் களுக்கும்யுத்தமான துமுடிவுபெறவும், தைதேயர்களுக்கும் தானவர் களுக்கும் நாசமுண்டாகவும், உலகங்கள் விஷ்ணுவால் ஆக்கிரமிக்கப் படவும், இந்திரன்தேவர்களுக்கரசனாகவும், தேவர்கள் யாகங்களால் ஆராதிக்கப்படவும், நான்குஜாதிகளும் கலப்பின்றி நிலையிலிருக்க வும், மூன்று உலகங்களும் செழிப்பாயிருக்கவும், பிரம்மதேவர் பிரீதி யுடனிருக்கவுமுள்ளகாலத்தில் ருத்ரர்கள், வஸுக்கள், ஆதித்யர்கள்,

அஸ்வினீதேவர்கள், கந்தர்வர்கள், நாகஸ்ரேஷ்டர்கள், ஸித்தாகள் இவர்களாலும் மற்றரிஷிகளாலும் சூழப்பட்டவனும் பிரபுவுமான இந்திரன் நான்குதந்தங்களுள்ளதும் நன்குபழக்கப்பட்டதும் யானைகளில் சிறந்ததும் காந்தியுள்ளதுமான ஐராவதத்திலேறிக்கொண்டு மூன்றுஉலகங்களையும் (பார்க்கவேண்டிப்) புறப்பட்டான். வஜ்ராயுதமேந்திய அவன் ஒருகால் கடலினருகில் ஒருமலையின் குகையில் விரோசனன்புத்திரனை பலியைக் கண்டு அவனருகில் சென்றான். ஐராவதத்தின் கழுத்திலிருப்பவனும் தேவக்கூட்டங்களால் சூழப்பட்டவனும் தேவர்களுக்கரசனுமான அந்த இந்திரனைக்கண்டு அஸுரபதியானபலியானவன்சோகப்படவுமில்லை; பயப்படவுமில்லை. அந்தப்பலியானவன் பயமில்லாமலும் வேறுவிகாரமில்லாமலுமிருப்பதைக்கண்டு சிறந்தயானையின்மீதுவரின இந்திரனவன் இவ்விதம் சொல்லத்தொடங்கினான்.

'ஓ! அஸுரனே! சூரதன்மையாலா அல்லது பெரியோர்களின் ஸேவையாலா அல்லது தவஞ்செய்திருப்பதாலா நீ பயப்படாமலிருக்கிறாய்? எவ்விதத்திலும் இவ்வாறிருப்பது மிகக்கடினம். விரோசனனின் புத்திரனே! பகைவர்களுக்கு வசமானவனும் மிக உத்தமமான பதத்திலிருந்து நழுவினவனுமான நீ சோகப்படவேண்டிய நிலைமையிலும் எதைக்கொண்டு சோகப்படாமலிருக்கிறாய்? ஜாதிகளுள் மிகமேன்மையை அடைந்து மிக உத்தமமானபோகங்களையும் புஜித்துக்கொண்டிருந்த நீ ரத்தினங்களும் ராஜ்யங்களும் அபகரிக்கப்பட்டும் என்னகாரணத்தால் சோகப்படாமலிருக்கிறாய்? சொல். தகப்பன்பாட்டன்பரம்பரையாகவந்த பதத்தில முன்புராஸீவரனுயிருந்து இப்பொழுது பகைவர்களால் அந்தப்பதவி அபகரிக்கப்பட்டிருப்பதையுங்கண்டு ஏன் நீ சோகப்படாமலிருக்கிறாய்? வருணனுடைய பாசங்களால் கட்டப்பட்டும் வஜ்ராயுதத்தால மிக அடிக்கப்பட்டும் தாரங்களும் தனங்களும் அபகரிக்கப்பட்டும் நீ என்னகாரணத்தால் சோகப்படாமலிருக்கிறாய்? சொல். ஸம்பத்து நசித்தும் வைபவத்திலிருந்து நழுவியும் நீசோகப்படாமலிருபதென்பது அரிது. மூன்று உலகங்களென்னும் ராஜ்யம் அழிந்திருக்கும்பொழுது வேறு எவன் உயிரோடிருக்க விரும்புவான்?' என்று சொன்னான். விரோசனன் புத்திரனை பலியானவன் இவ்விதமும் வேறுவிதமுமாகத் தன்னை அவமதித்துக் கஷ்டமும் குரூரமுமாகப் பேசுவதைக்கேட்டும் பரபரப்பில்லாமல் மறுமொழி கூறலானான். 'ஓ! இந்திரனே! நான் மிகவும் அடங்கியிருக்கும்பொழுது தறபுகழ்ச்சியால் உன

க்கு யாதுபயன்? ஓ! புரந்தரனே! நீ வஜ்ராயுதத்தை எடுத்துக் கொண்டு நிற்பதைக் காண்கிறேன். முன்பு நீ சக்தியற்றவனுமிருந்தாய்; கஷ்டப்பட்டுச் சக்தியுள்ளநிலையை அடைந்திருக்கிறாய். உன்னைத்தவிர வேறு எவன் மிகக்கடுமையான இவ்விதவசனத்தைப் பேசத்தக்கவன்? சத்ருவின் வசதிலிருப்பவனும் தான் கையை அடைந்தவனுமான வீரனுக்குச் சக்தியுள்ளவனுமிருக்கும் தயைசெய்கிறவனையே புருஷனென்று அறிந்துகொள்ளுகிறார்கள். யுத்தங்களில் விவாதப்படும்இரண்டுபேர்களுள் ஒருவனைவெற்றிஅடைவதும் மற்றொருவனே தோல்வியடைவதும் நிச்சயமில்லையல்லவா? அஸுரர்களுள் சிறந்தவனான என்னிடத்தில் உனக்கு இந்த ஸ்வபாவம் வேண்டாம். எல்லாப்பிராணிகளுக்கும் ராஜாயிருந்த நான் பராக்கிரமத்தால் பலாத்காரமாக வெல்லப்பட்டேன். வஜ்ராயுதமுள்ளவனே! நீ இவ்விதநிலையைஅடைந்திருப்பது ஏன்? நாங்கள் இவ்விதநிலையை அடைந்திருப்பதும் ஏன்? இது எங்களால் செய்யப்பட்டதன்று. ஓ! இந்திர! இது உன்னால் செய்யப்பட்டதுமன்று. நான் முன்பு எவ்விதமிருந்தேனோ அவ்விதம் நீ இப்பொழுது இருக்கிறாய். இப்பொழுது நாங்கள் எவ்விதமிருக்கிறோமோ அவ்விதம் நீயும்இருக்கப்போகிறாய். நான் கெட்டகாரியம்செய்ததாக நீ அபமதிக்கவேண்டாம். மனிதன் காலத்தின் வேறுபடுமையால் ஸுகத்தையும் துக்கத்தையும் அடைகிறான். ஓ! இந்திர! நீ கர்மத்தால் இந்திரபதவியை அடைந்தவனல்ல; காலத்தின்வேற்றுமையால அடைந்திருக்கிறாய். காலமானது என்னை இக்காலத்தில் செல்லும்படிசெய்கிறது. உன்னையும் இக்காலந்தான் செல்லச்செய்கிறது. ஆகையால், இப்பொழுது நீ இருப்பதுபோல நான் இல்லை. நாங்கள் இருப்பதுபோல நீயுமில்லை. தாய்தந்தைகளின் பணிவிடையும் தேவதைகளின் பூஜையும் வேறுநற்குணம் பொருந்தியநடக்கையும் மனிதனுக்கு ஸுகத்தைத்தருவனவல்ல. காலத்தால்துன்பப்படுத்தப்பட்ட மனிதனைக் கல்வியும் தவமும் தானமும் நண்பர்களும் உறவினர்களும் காப்பாற்றுதற்றிறமையுள்ளவர்களல்லர். மனிதர்கள் வருங்காலத்திலுள்ள துன்பத்தைப் புத்திவலிமையொன்றினாலல்லாமல் பலநூறுஇடையூறுகள்செய்தும் தடுக்கச்சக்தியுள்ளவர்களல்லர். காலத்தின் வேற்றுமைகளால ஏன்பப்படுத்தப்படுகிறவர்களைக் காப்பாற்றுகிறவனில்லை. ஓ! இந்திரனே! ஆனால், 'நான் கர்த்தா' என்று நினைப்பது தப்பாகமாகும். கர்த்தாவாயிருப்பதுஉண்மையானால கர்த்தாவானவன் ஒருபொழுதும் உண்டுபண்ணப்படமாட்டான. கர்த்தாவானவன்உண்டுபண்ணப்படுகிறகார

ணத்தால் கர்த்தாவும் சக்திபெற்றவனல்லன். காலத்தால் நான் உன்னை ஜயித்தேன். காலத்தால் உன்னால் நான் ஜயிக்கப்பட்டேன். காலமானது போகிறவர்களைப் போகும்படிசெய்கிறது. காலமானது பிராணிகளைக் கணக்கிடுகிறது. ஓ! இந்திரனே! அவிவேகமூள்ளபுத்தியுடன்பிதற்றுகிற நீ அறியவில்லை. சிலர் உன்னை உன்கர்மத்தால் மிகச்சிறந்ததன்மையை அடைந்தாயென்றுநன்குமதிக்கிறார்கள். உலகடைகளை அறிந்தஎன் போன்றவன்காலத்தால்துன்பப்படுத்தப்பட்டு எவ்விதம்சோகமடைவான்? அல்லது, அவிவேகமடைவான்? அல்லது, புத்திக்கேடுள்ளவனுவான்? காலத்தால்சூழப்பட்டஎனக்கோ என் போன்றவனுக்கோ புத்தியானதுதுன்பத்தைஅடைக்துஉடைத்த கப்பல்போல எவ்விதம்கஷ்டமடையும்? ஓ! இந்திரனே! நானும் நீயும் இனிவரப்போகிற வேறுஇந்திரர்களனைவரும் பலநூறு இந்திரர்கள் சென்றவழியில செல்லப்போகிறோம். காலம்வரும்பொழுது சிறந்த ஸம்பத்துடன் இவ்விதம்விளங்குகிறவனும்எதிர்க்கத்தகாதவனுமான உன்னையும் காலமானது என்னைப்போலச் செய்யப்போகிறது. தேவர்களுக்குரியயுகம்தாறும் பலவாயிரம் இந்திரர்கள் காலஞ்சென்றிருக்கிறார்கள். காலமானது மீறிச்செலலத்தகாததன்றே? இந்தப்பதவியைஅடைந்துஉன்னைஎல்லாப்பிராணிகளிடத்தும்இருப்பவரும்அழிவிலாதவருமான பிரம்மதேவரைப்போலக்கொண்டாடிக்கொள்ளுகிறாய். இந்தப்பதவியானது எவனுக்கும் அசைவில்லாததுமன்று; அழிவில்லாததுமன்று. ஆனால், நீ அவிவேகபுத்தியுடன், 'எனக்கு இந்தப்பதவி வந்தது' என்று நினைக்கிறாய். நம்பத்தகாததை நம்புகிறாய். உறுதியிலலாததை உறுதியென்றும்நினைக்கிறாய்! ஓ! ஸுரேச்வரா! காலத்தால்சூழப்பட்டபுதியுள்ளவன் எப்பொழுதும்இவ்விதமிருப்பான். 'இது என்னுடையது' என்று அவிவேகத்தால் நீ ராஜ்யலக்ஷ்மியை அடையவிரும்புகிறாய். உனக்கும் இவள் நிலைபெற்றவளல்லள்; எங்களுக்கும்அலலள்; மற்றவர்களுக்கும்அல்லள். வேறு பலபேர்களைமீறிக்கொண்டு இப்பொழுது இவள் உன்னிடத்திலு வந்திருக்கிறாள். ஓ! இந்திரனே! பசுவானதுதன்னிருப்பிடத்தைவிட்டுத்திரும்பவும் வேறுஇடத்திறகுச் செலவதுபோல உறுதியிலலாத இந்தலக்ஷ்மியானவள் சிறிதுகாலம்உன்னிடத்திலிருந்தபின் திரும்பவும் வேறொருவனிடம் செல்லப்போகிறாள். தேவராஜர்களாயிருந்தும் காலஞ்சென்றிருகிறவர்களை எண்ண நான் சகதியுள்ளவனலலேன். ஓ! இந்திரனே! உன்னைவிட வேறுபலமிபேர்களும் இருக்கப்போகிறார்கள். இந்தப்பூமியானது மரங்கள் கொடிகள் செடிகள்இவைகளுள்

ளதும், ஆறு மலை [1]ஆகரம் இவைகளுள்ளதுமாயிருக்கிறது. முன் காலத்தில் இந்தப்பூமியானது எவர்களாலனுபவிக்கப்பட்டதோ அவர் களை இப்பொழுது காணேன். ப்ருது, ஐலன், மயன், பீமன், நர கன், சம்பரன், அஸ்வக்ரீவன், புலோமா, ஸ்வர்ப்பானு, ஒப்பற்றகாந்தி யுள்ளப்ரஹ்லாதன், நமுசி, கக்ஷன், விப்ரசித்தி, விரோசனன், ஹ்ரீநிஷேவன், ஸுஹோத்ரன், பூரிஹா, புஷ்பவான், வ்ருஷன், ஸத்யேஷு, வ்ருஷபன், பாஹு, கபிலாஸ்வன், விரூபகன், பாணன், கார்த்தஸ்வரன், வஹ்நி, விஸ்வதம்ஷ்ட்ரன், நைருருதி, ஸங்கோசன், வரீதாக்ஷன், வராகாஸ்வன், ருசிப்பாபன், விஸ்வஜித், ப்ரதிரூபன், வ்ரு ஷாண்டன், விஷ்கரன், மது, ஹிரண்யகசிபு, கைடபன் என்ற திதி யின் குமாரர்களும் தனுவின்குமாரர்களுமான அவர்களனைவரும் அஸுரர்களோடுகூட இருந்தார்கள். இன்னும், நாம்கேட்டிருக்கிற வேறுதைத்யபதிகளும் தானவபதிகளும் வேறுபலபேர்களும் முன் னுள்ளவர்களும் அதற்கு முன்னுள்ளவர்களுமான பல அஸுராஜர் கள் பூமியைவிட்டுச் சென்றார்கள். யாவரும் காலத்தால் அடிக்கப்பட் டார்கள். காலமானது மிக்கவலிமையுள்ளதன்றே? யாவரும் நூறு யாகங்களைச்செய்திருக்கிறார்கள். நீ ஒருவன் தான் நூறுயாகம்செய் தவனல்லை. யாவரும் தர்மத்தைப் பெரிதாகக்கொண்டவர்களாயிருந் தார்கள். எல்லாரும் எப்பொழுதும் யாகஞ்செய்கிறவர்கள். எல் லாரும் ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவர்கள். எல்லாரும் எதிர்த்துப் போர் புரியவல்லவர்கள். எல்லாரும் நல்ல சரீரமுள்ளவர்கள். எல்லாரும் பரிகம்போன்ற கையுள்ளவர்கள். எல்லாரும் பலமாயைகளில் வல்ல வர்கள். அவர்களெல்லாரும் விரும்பியபடி உருவமெடுக்கத்தக்கவர் கள். எல்லாரும் யுத்தத்தை அடைந்து தோல்வியடைந்தவர்களாகக் கேட்கப்படவில்லை. எல்லாரும் ஸத்யத்தையே பெரிய விரதமாகக் கொண்டவர்கள். எல்லாரும் இஷ்டம்போல விளையாடிக்கொண்டி ருந்தவர்கள். எல்லாரும் வேதத்திலுகூறிய விரதங்களைப் பெரிதாகக் கொண்டவர்கள். எல்லாரும் பல சாஸ்திரங்களுள்ளவர்கள், எல்லா ரும் ஈஸ்வரர்களாகி வேண்டியஐஸ்வரியதை அடைந்திருந்தார்கள். மஹாத்மாக்களான அவர்களுக்கு ஐஸ்வர்யமிருக்கிறதென்னும் அகங் காரமானது முன்னிருந்ததில்லை. எல்லாரும் தக்கபடி தானமளிப் பவர்கள். எல்லாரும் மத்ஸரமில்லாதவர்கள். எல்லாரும்எல்லாப்பிரா ணிகளிடங்களிலும் நியாயப்படி இருந்தார்கள். எல்லாரும் கச்யப ரின்புத்திரர்களும் தாக்ஷாயணியினிடமுண்டானவர்களும் பெரிய

[1] தங்கம் ரத்தினமுதலியவைகளை வெட்டியெடுக்குமிடம்.

பலமுள்ளவர்களும் விளங்குபவர்களும் மிகவும் தபிக்கச்செய்கிற வர்களுமாயிருந்தார்கள். எல்லாரும் காலத்தால் ஸம்ஹரிக்கப்ப ட்டார்கள். ஓ! இந்திரனே! நீயும் இப்பூமியைஆண்டபின் எப் பொழுது திரும்பவும் விடப்போகிறாயோ அப்பொழுது உனக்கு உண்டாகும்சோகத்தை அடக்கிக்கொள்ளச் சக்தியற்றவனுயிருக்கப் போகிறாய். ஆசைப்படத்தக்கபோகங்களில் ஆசையைவிடு. ஸம் பத்தாலுண்டான இந்த மதத்தை விடு. உன்ராஜ்யத்திறகு அழிவுண் டாகும்போழுது நீ இவ்விதமிருந்தால் சோகத்தை நன்குபொறுப் பாய். சோகம்வரும்பொழுதும் நீ சோகப்படாதே. ஸந்தோஷம் வரும்பொழுதும் ஸந்தோஷப்படாதே. சென்றதையும் வரப்போவ தையும் தள்ளிவிட்டு நிகழ்வதுடன்கூடியிரு. இந்திரனே! காலமா னது சோம்பலில்லாமல் எப்பொழுதும் ஜாக்ரதையுள்ளவனுன என் னையே வந்தடையுமாகில் உன்னையும்வந்தடைய வெகுநேரமாகாது. பொறுத்துக்கொள். ஓ! தேவேந்திரனே! பயப்படுத்துகிறவன் போல வார்த்தைகளால் இப்பொழுது என்னைச் சிறுமைப்படுத்துகிறாய். நான் அடங்கியிருப்பதுகொண்டு நீ உன்னைப் பெருமையுள்ளவனுகக் கருதுகிறாய். ஸந்தேகமில்லை. ஓ! தேவேந்திரனே! காலமானது, முதலில் என்னை அடைந்தது. பிறகு, உன்னைத் தொடர்ந்தோடிவரப் போகிறது. ஆகையால், முதலில் காலத்தால் அடிக்கப்பட்டஎன்னி டத்தில் நீ கர்ஜிக்கிறாய். யுத்தத்தில் கோபங்கொண்டஎன்முன் நிற் கத்திறமையுள்ளவன் உலகத்தில் ஒருவனுண்டோ? ஆனல், வன்மை யுள்ளகாலமானது என்னை அடைந்தது. ஓ! வாஸவ! ஆகையால், நிற்கிறாய். பெரியபராக்கிரமம்பெற்றஎன்னுடைய அங்கங்கள்எல்லாம் சக்தியற்றவைகளாயின. ஆயிரம்வருஷங்களின்முடிவென்பது வேக மாய்உண்டாகத்தக்கதாகும். நான் இந்திரபதத்திலிருந்து நழுவி னேன். நீ இப்பொழுது தேவலோகத்தில் இந்திரனுயிருக்கிறாய். மிக ஆச்சர்யமானஇந்தஜீவலோகத்தில் காலத்தின்வேறுபாடே உபா யிக்கதகுந்தது. எதைச்செய்து நீ இப்பொழுது இந்திரனுனாய்? அல்லது, எதைச்செய்து நாங்கள் நழுவினோம்? செய்வதும் கெடுப்ப தும் காலமே. மறறயாவும் காரணமல்ல. இவ்விதம் அறிவுள்ள வன் கஷ்டத்தையும் மரணத்தையும் ஐஸ்வரியத்தையும் ஸுகத்தை யும்துக்கத்தையும்நன்மையையும்தீமையையும் மிகவும்அடைந்தாலும் ஸந்தோஷப்படாமலும் சோகப்படாமலும் இருக்கவேண்டும். ஓ! இந் திரனே! நீயே எங்களை அறிகிறவனன்றே? ஓ! வாஸவனே! உன்னை யும் நான் அறிவேன். என்னிடத்தில் ஏன் புகழ்ந்துகொள்ளுகிறாய்?

ஏன் காலத்தால் வெட்கமில்லாதவனுயிருக்கிறாய்? யுத்தங்களில்என் னுடையசௌரியத்தையும்என்னுல் மிகயுத்தஞ் செய்யப்பட்டதையும் கேரில் நீயே முந்தி அறிவாயன்றே? ஓ! சரீபநீயே! ஆதித்யர்களும் ருத்ரர்களும் ஸாத்தியர்களும் வஸுக்களும் மருத்துக்களும் முந்தி என்னுல் வெல்லப்பட்டார்கள். ஓ! இந்திரனே! தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் வக்கயுத்தத்தில் ஒன்றுசேர்ந்துவந்ததேவர் கள் என்னுல் விரைவில் பங்கப்படுத்தப்பட்டார்கள். நீயே அறிவாய். காடுகளும் காட்டிலுள்ள ஜந்துக்களும் சிகரங்களுமுள்ள பலமலைகள் பலமுறை என்னுல் யுத்தத்நில உன்தலையில் போடப்பட்டு உடைத் திருக்கின்றன. என்னுல் என்னசெய்யக்கூடும்? காலமானது மீறிச் செல்லத்தகாததன்றே? வஜ்ராயுதத்துடன்கூடியிருக்கும் உன்னையும் நான் ஒருகுத்தால்கொல்ல மனவலியில்லாதவனல்லேன். ஆனுல், இது பராக்கிரமத்திற்குரிய காலமன்று. இது பொறுமைக்குரியகாலம் வந்திருக்கிறது. ஓ! இந்திரனே! ஆகையால், உன்னுல பொறுக்கப் படாதவனுனும் நான் உன்னைப் பொறுக்கிறேன். இந்திரனே! காலமுடிவடைந்ததும், காலத்தியால் சூழப்பட்டவனும் காலபாசத் தால்கட்டப்பட்டவனுமான என்னிடம்வந்து நிச்சயமாகப் புகழ்ந்து கொள்ளுகிறாய். உலகத்தினுல் தாண்டமுடியாதவனும் கறுத்தவ னும் பயங்கரனுமான அந்தக்காலபுருஷன், பசுவைக் கயிற்றால் கட்டி வதுபோல என்னைக் கட்டிக்கொண்டு நிற்கிறான். லாபம், நஷ்டம், ஸுகம், துக்கம், ஆசை, கோபம், பிறப்பு, இறப்பு, கொலை, பந்தம், மோக்ஷம் யாவும்காலத்தால் அடையப்படுகின்றன. நான் கர்த்தாவல் லேன். நீ கர்த்தாவல்லை. எப்பொழுதும் சக்திபெற்றகாலமானது மரநதினுண்டான கனியைப்போல எனைனப் பழுக்கச்செய்கிறது. மனிதன் எவைகளைச்செய்து காலத்தால் ஸுகங்களுடன் சேருகி றனே அவைகளைச் செய்தே திரும்பவும் காலத்தால் துக்கங்களுடன் சேருகிறான். காலத்தைஅறிந்தவன் காலத்தால்தொடரப்பட்டாலும் சோகப்படத்தக்கவனல்லன். ஓ! இந்திரனே! ஆகையால், நான் சோகப்படாமலிருக்கிறேன். சோகம்வந்தால (அதைவிலக்க) ஸஹா யம் கிடையாது. சோகப்படுகிறவனுடையசோகமானது எப்பொ ழுது துன்பத்தைக் குறைக்கவில்லையோ அப்பொழுது சோகப் படுகிறவனுக்கு ஸமர்த்தியமில்லை. ஆகையால், நான் இப்பொழுது சோகப்படாமலிருக்கிறேன்' என்றுசொன்னுன். பலி இவ்விதம் சொலல, ஆயிரங்கண்ணுள்ளவனும் பூஜ்யனும் நூறுயாகங்களைச் செய்தவனுமான இந்திரன் கோபத்தைக் குறைத்துக்கொண்டு பின்

வருமாறு சொல்லத்தொடங்கினன். 'வஜ்ராயுதத்தை ஏந்தியகையையும் வருணனுடையபாசங்களையும்கண்டு எவனுடைய புத்தியானது நடுங்காது? கொல்லவிருப்பமுள்ளயமனுடைய புத்தியும் நடுங்கும். உண்மையைக்கண்டதும் அசைவற்றதுமான உன்னுடையஅந்தப்புத்தியானது நடுங்காமலிருக்கிறது. ஸத்யமான பராக்கிரமமுள்ளவனே! தைரியத்தால் நீ பேசிக்கொண்டு பயமில்லாமலிருக்கிறாய். உலகம் பிரயாணத்துடனிருப்பதைக்கண்டால் உலகத்திலுள்ளஅந்தப்பிராணிதான் பேர்களுக்களிலோ சரீரத்திலோ நம்பிக்கைவைக்க உசாகப்படும்? நானும் இவ்வுலகத்தை நிலையில்லாததென்றும், கோரமும் மறைந்ததும் எப்பொழுதுமிருப்பதும் அழிவில்லாததுமான காலத்தீயில்வைக்கப்பட்டதென்றும் அறிகிறேன். சிறியவைகளானலும் பெரியவைகளானலும் முதிர்ச்சியடையும்பிராணிகளுள் காலத்தால் தொடரப்பட்டஎதற்கும் இவ்வுலகில் பரிகாரமில்லை. தனக்குமேற பட்டதிலலாததும் அஜாக்ரதையில்லாததும் எப்பொழுதும் பிராணிகளைப்பழக்கச்செய்வதும் விலகாததுமானகாலத்தின்முடிவை அடைந்து விடுபடுகிறவனில்லை. பிராணிகள் அஜாக்ரதையாயிருக்கும்பொழுது காலமானது அஜாக்ரதையில்லாமல் விழித்துக்கொண்டிருக்கிறது. சென்றதானகாலமானது எவனாலும் முயற்சியாலும் இதற்குமுன் காணப்பட்டதன்று. பழையதும் நிலையுள்ளதும் எல்லாப் பிராணிகளுக்குஞ்சமமானதும் தர்மமுமானகாலமானது பரிகரிக்கதக்கதன்று. இக்காலத்திற்கு மீறுதலுமில்லை. வட்டிக்கிட்டுப் பிழைப்பவன் வட்டியைச்சேர்ப்பதுபோலக் காலமானது பகல், இரவு, மாஸம், க்ஷணம், காஷ்டை, லவம், கலை இவைகளைச் சேர்க்கிறது. காலம்வந்தால், ஆறறிவின்வேகமானது மரத்தைப் பிடுங்குவதுபோல, 'இதை இப்பொழுது செய்கிறேன், அதை நாளைக்குச் செய்யப் போகிறேன்' என்றுசொல்லிக்கொண்டிருப்பவனை அபகரிக்கிறது. 'இப்பொழுதுதான் இவன் என்னால் பார்க்கப்பட்டான். அதற்குள் எப்படி மரித்தான்?' என்று காலத்தால் அபகரிக்கப்படும் மனிதர்களின் பயனற்றவசனம் கேட்கப்படுகிறது. பொருள்களும் போகங்களும் பதவியும் ஐஸ்வர்யமும் நாசமடைகின்றன. ஜீவலோகத்தின்உயிரானது காலத்தால வக்து கொண்டுபோகப்படுகிறது. உயர்ந்தவைகள் முடிவில விழுதலுள்ளவைகளாகும். உண்மைப்பொருளானது இன்மைப்பொருளாகும். எலலாம் அழிவுள்ளவையும் நிலையில்லாதவைகளுமாயிருக்கின்றன. ஆகிலும், இவ்வித நிச்சயமுண்டாவது கடினம். அசைவற்றதும் உண்மையைக்கண்டதுமான உன்

ஜடைய அந்தப்புத்தியானது பயமில்லாமலிருக்கிறது. 'நானும் முந்திஇருந்தேன்' என்று மனத்திலும் நினைக்கிறவனில்லை. மிகவும் பலமுள்ளகாலமானது பெரியவன்சிறியவனென்பதில்லாமல் இவ்வுல கத்தை ஆக்கிரமித்து நாசஞ்செய்யும்பொழுது நசிக்கிறவன் அறிகி றதில்லை. உலகமானது ஈர்ஷை, அபிமானம், லோபம், காமம், கோபம், பயம், பிரியம், மோஹம், கர்வம் இவைகளிலபறறுதலுள் ளதாகி மிகஅவிவேகமடைகிறது. நீயோ பொருள்களின்உண்மை யை அறிந்தவனும் வித்வானும் ஞானமும்தவமுமுள்ளவனுமாகிக் கையிலுள்ள நெல்லிக்கனியைப்போலக் காலத்தை மிகததெளிவா கப் பார்க்கிறாய். விரோசனன்புத்திரனே ! காலம்செல்லுதலின்உண் மையை அறிந்தவனும் எலலாச்சாஸதிரங்களிலும்ஸமர்த்தனுமான நீ கிருதார்த்தனும் அறிவுளளவர்களால் கொண்டாடததக்கவனுமாக இருக்கிறாய். இவ்வுலகமனைத்தும் உன்னுல் புத்தியால் முழுதும் அறி யப்பட்டதென்று நினைக்கிறேன். யாவற்றிலிருந்தும்விடுபட்டு விளை யாடிக்கொண்டிருக்கும் நீ ஒன்றிலும் வருத்தப்படுகிறவனுமில்லை. இந்திரியங்களென்ற உன்னை ரஜோகுணமும் தமோகுணமும் தொ டரவில்லை. நீ ஸுகமும் துக்கமுமற்றதான ஆதமாவை உபாவிக்கி றாய். எல்லாப்பிராணிகளுக்கும் மித்திரனும் வைரமற்றவனும் அட ஙகியமனமுள்ளவனுமான உன்னைக்கண்டு என்னுடையபுத்தியானது உன்னிடத்தில தயையுள்ளதாயிற்று. இவ்விதமான அறிவுள்ளவனை விலங்குமுதலியவைகளால நான் துன்புறுத்தவிரும்புகிறவனல்லேன். உன்னிடததில தயையும் கொடுமையில்லாதிருப்பதும் எனக்குப் பெரியதர்மம். உன்னிடததிலுளள இந்தவருணபாசங்கள் காளடை யில் விடுபட்டவைகளாகும். பூஜ்யனை அஸுரனே ! பிரஜைகளின் உபசாரததால உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். எப்பொழுது மருமக ளானவள் கிழவியானமாமியைப் பரிசாரகததொழிலில ஏவுவளோ, மகனும் அவிவேகத்தால தந்தையை வேலைகளில் ஏவுவனே, சூத்திரர்களும் , பிராம்மணர்களைக்கொண்டு பாதசுத்தியைச் செய் வித்துக்கொள்வார்களோ, அவர்கள் பயமின்றிப் பிராம்மணப் பெண்ணை மனைவியாகஅடைவார்களோ, புருஷர்கள் சேரக்கூடாத பெண்களுடன் சேருவார்களோ, வெண்கலப்பாத்திரங்களால் குபபை கொட்டிவைதையும் கெட்டபாத்திரங்களால பலியையும் செய்வார் களோ, எப்பொழுது நான்குஜாதிகளும் முழுமையும் வரம்பற றலைவயாகுமோ அப்பொழுது ஓவ்வொருபாசமும் உன்னிடத்தி லிருந்து முறையே விடுதல்பெறும். என்னிடத்திலிருந்து உனக்குப்

பயமில்லை. ஸத்யத்தை எதிர்பார்த்துக்கொண்டிரு. துன்பமில்லாத வனும் கவலையற்றமனமுள்ளவனும் பிணியறறவனும் ஸுகமுள்ள வனுமாயிரு' என்றுசொன்னன். பூஜ்யனனஇந்திரனவன் அந்தப் பலியைப்பார்த்து இவ்விதம்சொல்லிவிட்டு உயர்ந்யானையான ஐராவதத்திலேறிக்கொண்டு திரும்பிச்சென்றான். தேவாதிபனனவன் எல்லா அஸுரர்களையும்வென்று மிகவும்களித்தான்; ஒரே அரசனுயுமிருந்தான். ஸ்தாவரஜங்கமங்களான எல்லாப்பிராணிகளுக்கும் ராசனனஅந்த இந்திரனே மஹரிஷிகள் உடனே போற்றினர்கள். அக்னியும் யாகத்தில் ஹவிஸைப் பொறுததான். அவ்விதம் ராசனன இந்திரனும் அளிக்கப்பட்ட ஹவிஸைப் பெற்றுக்கொண்டான். எல்லாவிடங்களிலுமுள்ள சிறந்த பிராம்மணர்களால துதிக்கப்படுகிறவனும் மிகவும் விளங்கும் தேஜஸுள்ளவனும் தானுயாகங்களைச் செய்தவனும் ராசனுமான இந்திரன் மனம் மிகவடங்கிக் களிப்புற்றுத் தன்னிருப்பிடமான ஸ்வர்க்கத்தை அடைந்து ஸந்தோஷித்தான்" என்றுசொன்னர்.

இருநூற்றமுப்பத்தைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(லக்ஷ்மியானவள் தான் அஸுரரைவிட்டு விலகியகாரணத்தை இந்திரனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "அரசரே! புருஷன் மோக்ஷமத்தை அடைவதற்கும் துன்பத்தை அடைவதற்குமுள்ள முன்குறிகளை எனக்குச் சொலலவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"உனக்கு மோக்ஷமுண்டாகட்டும். மனிதன் மோக்ஷமதை அடைவதற்கும் அவ்விதமே துன்பதை அடைவதற்குமுள்ள முன்குறிகளை மனமே சொலலும். இவவிஷயத்திலும் இந்திரனுக்கும் லக்ஷ்மிக்கும் நடந்த ஸம்பாஷணையான பழைய இதிஹாஸத்தை உதாஹரிக்கிறார்கள். ஓ! யுதிஷ்டிரா! அதைத தெரிந்துகொள். பெரியதவத்தின் விருத்தியால் மேலானதும் கீழானதுமான இரண்டு உலகங்களையும் பார்ப்பவரும், பிரம்மலோகத்தில் வலிப்பவர்களான ரிஷிகளுக்கொப்பான நிலையை அடைந்து பிரம்மதேவரைப்போல மிகஒளியுள்ளவரும், பாவங்கள் விலகியவரும், பெரியதவமுள்ளவருமான நாரத முனிவர் காலத்திறகுதகக்படி மூன்றுலகங்களிலும் ஸஞ்சரித்துக்

கொண்டிருந்தார். ஒருஸமயம் காலையில்எழுந்து பரிசுத்தமான ஜலத்தில்ஸ்நானஞ்செய்யவிரும்பித் துருவமண்டலத்தின் துவாரத்திலிருக்கும் கங்கைக்குச்சென்றார். அவ்விடத்திலிறங்கி மேருமஹலையினருகிலுண்டானதும் ஸ்ரீநாராயணரின்பாதத்திலிருந்து கழுவியதுமான கங்கையைக்கண்டஅந்தநாரதர் மனத்தில களிப்புறறு அவ்விடத்திற்குச் சென்றார். தேவர்களால் நிறைந்ததும் சிறியபொன்மணலுள்ளதும் ஸாலம், தாலம், அர்ஜுனகர்ணம், சந்தனம்என்ற மரக்கூட்டங்களாலும் மறறும்பலமரங்களாலும் பலபுஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் அன்னப்புட்களும் காரண்டவங்களுமுள்ளதுமான கங்கையில் தீவைஅடைந்து நீராடித் தேவர்களுக்குத் தர்ப்பணஞசெய்து தர்மபுத்தியுள்ள அவர் மணறருண்டை அடைந்து ப்ரம்மமயமாய்விளங்கிக்கொண்டு ஜபிக்கத்தக்கமந்திரத்தை ஜபிக்கத்தொடங்கினர். ஆயிரங்கண்ணுள்ளவனும் சம்பராஸுரனையும் பாகாஸுரனையும் கொன்றவனுமான இந்திரனும் தேவர்களாலும் ரிஷிகளாலும் அடையப்பட்ட அந்தக்கங்காநதியின் கரையைநோக்கி வந்தான். பரிசுத்தமானபுத்தியுள்ள அவ்விருவரும் நீராடிச் சுருக்கமாக ஜபத்தைச் செய்து சிறியபொன்மணலுள்ள கங்காநதியின் மண்மூட்டிலிருந்துலலொழுக்கமுள்ள தேவரிஷிகளால் சொல்லப்பட்டகதைகளைப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஏகாக்ரபுத்தியுடன் அவ்விதம் உட்கார்ந்த அவ்விருவரும் மஹரிஷிகளால் சொல்லப்பட்டவைகளும் மூன்லோர்களால் நடத்தப்பட்டவைகளுமான கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பிறகு,கிரணக்கூட்டங்கள் மூன்வெளிவர நிறைந்தமண்டலத்துடன் உதயமாகிறஸூர்யனைக்கண்டு அவ்விருவரும் எழுந்துநின்று துதித்தார்கள். ஜனங்களில்லாத பரிசுத்ததேசத்தில் வீணையாடிக்கொண்டு ஸந்தோஷத்துட னிருந்த அவ்விருவரும் ஸூர்யன் உதித்தஸமயத்தில ஒளிக்கூட்டங்களாலகிறைந்ததும்பலகிரணங்களால் அலங்கரிக்கப்பட்டதும் அந்தஸூர்யனுக்கு காலருபுறத்திலும் ஆகாயத்தில் வேறுஸூர்யன் உதிப்பதுபோன்றதுமான ஜோதியைக்கண்டார்கள். ரவியின் தேஜஸைக்கொடபானதும் மின்னலின் ஒளிபோன்ற காந்தியுள்ளதுமான சோதியானது ஆகாயத்தில காணப்பட்டது ஓ! பாரத! அதுஅவ்விருவருக்குமருகில்வருவதாகவும் காணப்பட்டது. அந்தஒளியாலும் ஸூர்யஞலும் விளங்குவதானஆகாயமானது அப்பொழுது காந்திகளால் ஒப்பிலலாததும் மூன்று உலகங்களையும் பிரகாசிக்கச்செய்வதுமாக விளங்கிற்று. அந்ததேஜஸைக் கண்டு கைகூப்பிக்கொண்டுநின்ற பராக்ரமசாலிகளானஅவ்விருவரும்

சிறிதுநேரத்தில் ஆச்சர்யமான ஒருதிவ்யவிமானத்தைக் கண்டார்கள். அப்பொழுது அந்தவிமானத்திலிருப்பவளும் ஒளியுள்ளவளும் உலகத்தால்விரும்பத்தக்கவளும் உயர்ந்தமங்களரூபியும் உலகத்தைப் படைத்தவளும் அழகுள்ளவளும் உலகத்திற்குத்தாயும் அழிவில்லாதவளும் அருகிலவிளங்கும் அழகுள்ளஅப்ஸரஸுகளால்பூஜிக்கப்படுகிறவளும் பெரியவளும் ஸூர்யன்போலவிளங்குகிறவளும் அக்நியின் ஜ்வாலைபோன்றவளும் நக்ஷத்ரம்போன்ற ஆபரணங்களுள்ளவளும் நக்ஷத்ரக்கூட்டம்போன்றமாலையுள்ளவளும் தாமரைமலரின் இதழில் இருப்பவளுமான லக்ஷ்மிதேவியை கேரில்கண்டார்கள்.பெண்களுள் மிகஉத்தமியான அந்தலக்ஷ்மியானவள் விமானத்தின்மேலிருந்து இறங்கி மூன்றுலகங்களுக்கும்மாசனை இந்திரனையும் நாரதமுனிவரையும் நோக்கிவந்தாள். இந்திரனும் நாரதரால்பின்தொடரப்பட்டு நேரில அந்தலக்ஷ்மியினருகில வந்தான். எலலாம்அறிந்தஅந்தஇந்திரன் அஞ்சலிசெய்துகொண்டி லக்ஷ்மிதேவியினிடம் தன்னைத்தானேதெரிவித்து அந்தலக்ஷ்மிக்கு ஒப்பறறபூஜையையும் செய்தான். அரசனே! தேவராஜனவன் லக்ஷ்மியைநோக்கி, 'அழகானபுன்சிரிப்புள்ளவளே! நீ யார்? என்னகாரியத்திறகாக வந்தாய்? எங்கிருந்துவருகிறாய்? அழகுள்ளபெண்ணே! உனக்கு எவ்விடத்திறகுச்செலலவேண்டும்?' என்று இவ்விதம்கேட்க, லக்ஷ்மி சொலலத்தொடங்கினள். பரிசுத்தமான மூன்றுலகங்களிலுமுள்ள ஸ்தாவரஜங்கமங்களனைத்தும் நான் தங்களிடமிருக்கவேண்டுமென்று விரும்பி மிகவும் முயறசிசெய்கின்றன. தாமரைமலர்மாலை அணிந்தவனும் பத்மையென்றுபெயருள்ளவளுமான அந்தலக்ஷ்மியான நான் ரீவியின் கிரணங்களால்மலர்ந்த தாமரைமலரில எலலாப் பிராணிகளுடைய ஸம்பத்திறகாகவும் உண்டானேன். ஓ! பலாஸுரனைக்கொன்றவனே! நான் லக்ஷ்மி, பூதி, ஸ்ரீ, ப்ரத்தை, மேனதி, வன்னதி, விஜிதி, ஸ்திதி, தருதி, ஸித்தி, ஸம்பூதி, ஸ்வாஹா, ஸ்வதா, ஸம்ஸ்துதி, நியதி, க்ருதி என்ற உருவமுள்ளவளாயிருக்கிறேன். நான், வெல்லும்திறமையுள்ளவர்களும் இயற்கையில்தாமமுள்ளவர்களுமான அரசர்களின்படைமுகத்திலும் தவஜங்களிலும் தேசங்களிலும் நகரங்களிலும் வஸிக்கிறேன்! பலாஸுரனைக்கொன்றவனே! ஜயிக்கும் திறமையுள்ளவனும் சூரனும் போர்களில புறங்காட்டாதவனுமான உத்தமமனிதனிடத்தில் நான் எப்பொழுதும் வஸிப்பேன். எபபொழுதும் தர்மமுள்ளவனும் பெரியபுத்தியுள்ளவனும் பிராம்மணர்களுக்குநன்மைசெய்பவனும் ஸத்யம்பேசு

கிறவனும் அடக்கமுள்ளவனும் கொடுக்கும்ஸ்வபாவமுள்ளவனுமான மனிதனிடத்தில் நான் எப்பொழுதும் வஸிப்பேன். முந்திஉண்மையானதர்மமிருந்தகாரணத்தாலஸுஸுரர்களிடத்தில்வஸித்துக்கொண்டிருந்தேன். அவர்கள் விபரீதமாயிருப்பதைத்தெரிந்துகொண்டு உன்னிடத்தில் வஸிக்கவேண்டுமென்று விருப்பங்கொண்டேன்' என்றீ சொன்னாள். இந்திரன், 'சிறந்தகுமகுமாள்ளவனே! எவ்விதமானகுச்சையுள்ள அஸுரர்களிடம் நீ வஸித்துக்கொண்டிருந்தாய்? எதைக் கண்டபின் அஸுரர்களைத்தள்ளிவிட்டு நீ இங்குவந்தாய்?" என்று கேட்க, லக்ஷ்மி சொல்லத்தொடங்கினாள்.

'ஸ்வதர்மத்தைச்செய்கிறவர்களும் தைரியத்தைவிட்டுவிலகாதவர்களும் ஸ்வர்க்கத்திற்குரியவழியில் செல்லுகிறவர்களுமான பிராணிகளிடத்தில் நான் பற்றுதலுள்ளவள். அந்தஅஸுரர்களுக்குதானமும் அத்யயனமும் யாகமும் பூஜையும் குருக்கள், அதிதிகள், பித்ருக்கள், தேவதைகள் இவர்களின்பூஜையும் எப்பொழுதும் இருந்தன. கன்குசுத்தம்பண்ணப்பட்டகுகைகளாகிய வீடுகளுள்ளவர்களும் மாதர்களேவென்றவர்களும் அக்னியிலேஹோமம்செய்கிறவர்களும் பெரியோர்களுக்குப்பணிவிடைசெய்கிறவர்களும் அடக்கமுள்ளவர்களும் பிராம்மணர்களுக்குஹிதர்களும் ஸதயம்சொல்லுகிறவர்களும் ஸ்ரத்தையுள்ளவர்களும் கோபத்தைவென்றவர்களும் கொடுக்கும்இயற்கையுள்ளவர்களும் அஸூயையற்றவர்களும் மக்களேயும் பெண்டிரையும் இனத்தார்களேயும் காப்பாற்றுகிறவர்களும் ார்வைஇல்லாதவர்களுமாயிருந்தார்கள். அவர்கள் பொறுமையால் ஒருவரைஒருவர் ஒருபொழுதும் (அடக்க)விரும்புகிறதில்லை. தீர்க்கவான அவர்கள் ஒருபொழுதும் பிறர்ஸம்பத்துக்களால் ாபப்படுகிறதில்லை. கொடுக்கிறவர்களும் சேர்க்கிறவர்களும் பூஜ்யர்களும் துக்கத்தை அறிகிறவர்களும் மிக்ககருணையுள்ளவர்களும் நேராயிருப்பவர்களும் உறுதியானபக்தியுள்ளவர்களும் இந்திரியங்களேவென்றவர்களும், வேலைக்காரர்களேயும் மந்திரிகளேயும் ஸந்தோஷப்படுத்துகிறவர்களும் கன்றியறிவுள்ளவர்களும் பிரியமாய்ப்பேசுகிறவர்களும் யோக்யதைக்குத்தக்கபடி வெகுமதியளிப்பவர்களும் வெட்கத்துடன் கூடப்பவர்களும் உறுதியானவிரதங்களுள்ளவர்களும் எப்பொழுதும் பர்வகாலங்களில் கன்முக ஸ்நானஞ்செய்கிறவர்களும் கலல பூச்சுள்ளவர்களும் கலல அலங்காரமுள்ளவர்களும் உபவாஸத்தையும் தவத்தையும் செய்யும் ஸ்வபாவமுள்ளவர்களும் கம்பத்தக்கவர்களும் வேதமோதுகிறவர்களுமாயிருந்தார்கள். ரஷியுத்திக்கும் பொழுது இவர்கள்உறங்கினவர்களல்லர்; விடியற்காலத்தில்படித்துத்

தூங்கினவர்களே அல்லர்; எப்பொழுதும் இரவிற் தயிரையும் ஸத்து மாவையும் (புஜியாமல்) விலக்கினர்கள்; காலையில் நெய்யைப்பார்த் துப் பரிசுத்தர்களும் வேதமோதுகிறவர்களுமாக மங்களவஸ்துக் களைப் பார்த்தார்கள்; பிராம்மணர்களையும் பூஜித்தார்கள். எப்பொழு தும் தர்மத்தைவிட்டுவிலகாமல் கொடுக்கிறவர்களும் எப்பொழு தும் வாங்காதவர்களும் இரவிலாகிற் றங்குகிறவர்களும் பகலிலுறங் காதவர்களும் ஏழைகளுக்கும் கடியறறவர்களுக்கும் முதியோர்க ளுக்கும் பலவீனர்களுக்கும் நோயாளிகளுக்கும் ஸ்திரீகளுக்கும் எப்பொழுதும் இரக்கமுற்றுத் தானத்தை ஸந்தோஷமாகச் செய் கிறவர்களும் தர்மமார்க்கத்தினின்று விலகாதவர்களுமாயிருந்து கொண்டு ஸுகமாகவே அவர்கள் காலத்தைப்போக்கினர்கள். பயந் தவனையும் துன்பமுள்ளவனையும் நடுக்கமுள்ளவனையும் பயத்தால் கஷ்டப்படுகிறவனையும் நோயால்துன்பப்படுகிறவனையும் பொருள்அப கரிக்கப்பட்டவனையும் விசனமுள்ளவனையும் அவர்கள் எப்பொழு தும் தேறறினர்கள்; தர்மத்தையே தொடர்ந்துகொண்டிருப்பார் கள். ஒருவரை ஒருவர் துன்பப்படுத்துகிறதில்லை. காரியங்களில் அனுகூலர்களும் குருக்களையும் பெரியோர்களையும் ஸேவிப்பவர்க ளுமாயிருந்தார்கள்; பித்ருக்களையும் தேவர்களையும் அதிதிகளையும் ஆசிரியர்களையும் பூஜித்தார்கள்; எப்பொழுதும் ஸந்தியத்தியும் தவத்திலும் உறுதியுள்ளவர்களாகி (அதிதிகளுக்கிட்ட) மிச்சத்தை உண்பார்கள்; மிகநிறைந்த அன்னத்தை ஒருவராக உண்பதில்லை; பரஸ்திரீகளிடம்செல்லுகிறதில்லை; தயைவிஷயத்தில் தம்மிடத்தில் போல எல்லாப்பிராணிகளிடத்திலுமிருந்தார்கள். ஆகாயத்திலும் பசுக்களிலும் பர்வகாலங்களிலும் தகுதியில்லாதஇடத்திலும் சுக்கி லத்தைவிட அவர்கள் ஒருபொழுதும் விரும்புகிறதில்லை. எப்பொழு தும் தானமும் ஸமர்த்யமும் எப்பொழுதும் தேர்மையும் உற்சாக மும் அகங்காரமில்லாமையும் மிக்கநேசமும் பொறுமையும்ஸத்யமும் [1] தவமும் சுதியும் தயையும் குரூரமற்ற இன்சொல்லும் மித்திரர் களிடம்கெட்டஎண்ணமில்லாமையுமாகிய யாவும் அவர்களிடமிருந் தன. பிரபுவே! தூக்கமும் சோம்பலும் ஸந்தோஷமில்லாமையும் அஸூயையும் அஜாக்ரதையும் உற்சாகமில்லாமையும் வருத்தமும் ஆசையும் அவர்களைத் தொடாவில்லை. இவ்விதகுணங்களுள்ளஅஸு ரர்களிடம் பிரஜைகளின் ஸ்ருஷ்டிகாலம்முதல (அவர்களுக்கு)குணக் கேடிவரும்வரையில முன்பு நான் வஸித்துக்கொண்டிருந்தேன்.

[1] இரண்டுமுறை வருதலால், ஒருசொல் விடப்பட்டது.

பிறகு, காலத்தின் தீவற்றுமையினலும் குணக்கேட்டாலும் காமக் குரோதங்களுக்குவசப்பட்டமனமுள்ளவர்களான அந்த அஸுரர்க ளுக்குத் தர்மம்போனதைக் கண்டேன். அவர்கள் ஸபையிலிருந்து கொண்டு நல்லகதைகளைச்சொல்லுகிற ஸாதுக்களானபெரியோர் களைப் பரிஹஸித்தார்கள்; எல்லாப்பெரியோர்களிடமும் சிறந்த குரு க்களிடமும் அஸூயைப்பட்டார்கள். ஸாதுக்களானபெரியோர்கள் வரும்போது சிறுவர்கள் முன்போல எழுந்துபூஜியாமல் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தந்தைபிருக்கும்பொழுதே மகன் ஆளுகை அடைவான். விரோதிகளுக்கு அடிமைப்பட்டும் வெட்கமில்லாமல் புகழ்ந்துகொள்ளுவார்கள். தர்மம்விட்டகன்றதும் இகழப்பட்டது மான தொழிலால் மிக்கபொருள்களை அடைகிறவர்களான அந்த அஸுரர்களுக்கு அத்தப்பொருள்களிலஆசையானது உண்டாயிற்று. இரவில் கூச்சலிட்டுப்பேசுவார்கள். அங்கு அக்னியானது குறைந்து ஜ்வலித்தது. புத்திரர்கள் தந்தைகளை மீறிச்சென்றார்கள். பெண் களும் கணவர்களை மீறிச்சென்றார்கள். அண்ணையும் பிதாவையும் பெரியோரையும் ஆசாரியரையும் அதிதியையும் குருவையும் குருக்க ளென்று கொண்டாடவில்லை. சிறுவர்களைக் காப்பாற்றவில்லை. பிச் சையிடாமலும் பலிகொடாமலும் பூஜையில்லாமலும் பிதிருக்கள், தேவர்கள், அதிதிகள், குருக்கள் இவர்களுக்குப்பங்கிடாமலும் தாங் கள் அன்னங்களைப் புஜிப்பார்கள். அவர்களுடைய சமையற்காரர் கள் மனமொழிமெய்களால் பரிசுத்தியைச் செய்துகொள்ளவில்லை. புஜிக்கத்தக்கஸ்துவானது மூடப்படாமலிருந்தது. அவிவேகிக ளானஅவர்கள் சிறுவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது அன் னங்களைப்புஜிப்பார்கள். அவர்களுக்கு ஒவ்வொருவேலைக்காரனும் இரண்டுதாலியுமிருந்தார்கள். சிலஅஸுரர்கள் மூன்றுபசுக்களுள்ள வர்களும் சிலர் நான்குஆடுகளுள்ளவர்களும் சிலர் ஐந்துஎருமை களுள்ளவர்களும் சிலர் ஆறுகுதிரைகளுள்ளவர்களும் சிலர்ஏழுயானை களுள்ளவர்களுமாயிருந்தார்கள். இரவில்தயிரையும் ஸத்துமாவை யும் எப்பொழுதும் விலக்கவில்லை. புத்தியற்றஅவர்கள் ஈன்றபத்து நாள்களுள் பசுக்களின்பாலைக் குடித்தார்கள். கிரமமாகக் கறக்கச் செய்வதில்லை. கன்றுக்குள்ளபால்களையும் குடிப்பார்கள். கதியற்ற வளும் துன்பமுள்ளவளுமானமனைவியை எப்பொழுதும் அடிக்க வும்திட்டவும்செய்வார்கள். பிராம்மணர்கள் சூத்திரர்களின் அன்ன த்தால்போஷிக்கப்படுகிறவர்களும் வெட்கமில்லாதவர்களுமாயிருப் பார்கள். இறைத்துகிடக்கும் தான்யங்களைக் குடும்பத்திலிருப்பவள்

கவனிப்பதில்லை. மனிதர்கள், பூனை கோழி நாய் இவைகளுடன் விளையாடுவார்கள். கெட்டடத்தியுள்ள அவர்களுடையவீட்டில் முள் ளுள்ளமரங்களும் அவரைமுதலியகொடிகளும் அப்படியே யாகத்திற் குரியமரங்களும் இருந்தன. எப்பொழுதும் இணற்றில்முழுகுவதில் பறறுதலுள்ளவர்களும் பர்வகாலத்தில் புணர்ச்சிசெய்கிறவர்களுமா யிருந்தார்கள். இரவில் எள்ளைப் புஜிப்பார்கள்; எண்ணெய்தேய்த்து முழுகிக்கொண்டும் படுப்பார்கள் தான்றி புன்கு இக்கமரங்களின் அடியிலுளள நிழலில் வவிப்பார்கள். அவிவேகங்கொண்ட அவர் கள் அலரிப்பூவைத் தரிப்பார்கள் தாமரைவிதைகளைத் தின்பார்கள். மோஹங்கொண்டு புஷ்பத்தை மோந்துபார்ப்பார்கள். அப்படியே அவிவேகங்கொண்டஅஸுரர்கள் எப்பொழுதும் காலத்திலுண்ண மாட்டார்கள். ஸ்ரீவிஷ்ணுவை எப்பொழுதும் பகைப்பவர்களான அஸுரஜனங்கள் அவர்பெருமையை நிந்திப்பார்கள். அங்கு ஒவ் வொருவீட்டிலும் முன்போல தோமதூமமும் வேதஒலியுமில்லை. அப்படியே யாகங்களும் நடப்பதில்லை. ஆசார்யசிஷ்யமுறையும்இல்லை. [1] பிராம்மணர்களுக்குகன்மைசெய்பவரும் தேவர்களுக்குத்தலைவரு மான ஸ்ரீவிஷ்ணுவைத் தள்ளிவிட்டுப் பாஷண்டனை அடித்தார்கள். ஹவ்யமும்கவ்யமுமில்லாதவர்களும் ஞானமும் அத்தியயனமுமில்லா தவர்களும் தேவஸ்வத்தைஅடிப்பதிலிருப்பமுள்ளவர்களும் பிராம் மணர்களின் பொருள்களில் விருப்பமுள்ளவர்களுமானார்கள். தேவா லயங்களெலலாம் போற்றுதலிலலாதவைகளும் மங்களவாத்யங்களில் லாதவைகளுமாயின. தான்யங்கள் சிதறிக்கிடந்தன. காகங்களும் எலிகளும் புஜிக்கின்றன. பாலானது ஏடுபடாமலிருக்கின்றது. அசுத்தியுள்ளவர்களும் நெய்யைத்தொடுகிறார்கள். குந்தாலி, மண் வெட்டி, கூடை, இறைத்தகான்யம், வெண்கலப்பாத்திரம், மற்றும் உபகரணமாயுள்ள திரவியம் யாவையும் குடும்பத்திலிருப்பவர் கவ னிப்பதிலலை. பிராகாரங்களும் வீதிகளும் பழுதாயிருப்பவைகளை அவர்கள் நன்றாகக் கட்டுவதில்லை. அறபர்களும் ஸம்ஸ்காரமற்றவர் களுமான ஸ்திரீகள் வயிறுவளர்க்கிறவர்களும் பரிசுத்தியும் ஆசார முமற்றவர்களும் வெட்கமிலலாதவர்களும் போகுதால் வஞ்சிக்கப் பட்டவர்களுமாயிருந்தார்கள். அங்குள்ளஸ்திரீகள் வீட்டின் பல கணிகளிலிருப்பவர்களும் இரண்டுகைகளாலுமே தலையைச் சொறி கின்றவர்களுமாயிருந்தார்கள். நறகுலத்திலபிறந்த லக்ஷணமுள்ள ஸ்திரீகளும் மாமிக்கும்மாமனுக்கும் கடுவில்லவெட்கமில்லாமல் பார்த்

[1] இங்கு ஒருபாதம் விடப்பட்டது.

தாவைக் கபடமாகப் பார்க்கிறார்கள். பசுக்களைக் கட்டிவைத்து அவை களைப் புல்லாலும் தண்ணீராலும் ஆகரிப்பதில்லை. சிறுவர்கள் பார்த் துக்கொண்டிருக்கும்பொழுது இன்பண்டத்தைத் தாம் தின்றார்கள். அவர்கள், வேலைக்காரர்கள் யாவரையும் திருப்திசெய்யாமல் புஜித் தார்கள். பாயஸத்தையும் எள்ளன்னத்தையும் மாம்ஸத்தையும் அப் பங்களையும் முறுக்குகளையும் தமக்கு வேண்டிப் பாகம்செய்தார்கள். [1] வீணை மாம்ஸங்களைப் புஜித்தார்கள். ஸூர்யன் உதித்தபிற கும் உறங்குகிறார்கள். அனைவரும் விடியற்காலையில் படுத்திருந்தார் கள். இரவும் பகலும் ஒவ்வொருவீட்டிலும் ஓயாதகலகமுள்ளவர் களாயிருந்தார்கள். தாம் கெட்டவர்களாயிருந்தும் நன்னடக்கை யுள்ளவர்களை அவ்விடத்தில் பூஜிக்கிறார்களில்லை. தீயசெயலகளைச் செய்துகொண்டு ஆஸ்ரமத்திலிருப்பவர்களை மிகவும்பகைத்தார்கள். ஒன்றுக்கொன்று ஸதாகலஹங்களுண்டாயின. பரிசுத்தியில்லை. வேதத்தை நன்குணர்ந்த பிராம்மணர்களும் வேதமில்லாதவர்களும்வெகுமானத் திலும் அவமானத்திலும் சிறிதும் விசேஷமில்லாதவர்களானார்கள். வேலைக்காரர்கள் தூர்ஜனர்களால செய்யப்படும் விதிப்படி நடை, உடை, ஆபரணம், எண்ணம், நிறபது, பார்ப்பது இவைகளைக் கொண்டாடினார்கள். ஸ்திரீகள் புருஷவேஷமும் புருஷர்கள் ஸ்திரீ வேஷமும்பூண்டுவிளையாட்டுகளிலும்போகங்களிலும்பெரியஸந்தோ ஷத்தை அடைந்தார்கள். பிரபுக்களால முந்திப் பெரியோர்களுக்குக் கொடுக்கப்பட்டபாகங்களை இவர்கள் தாஸ்திகர்களாயிருப்பதால் ஸ்ரீ மான்களாயிருந்தும் நிறுத்திவிட்டார்கள். சிலஇடத்தில் மித்திரனால் விரும்பப்படும்நரவியத்தையும்தாமடையவிரும்பித்தொடர்ந்தார்கள். ஓர்உரோமத்தின்முனை அளவுள்ள தம்பொருளுக்காக அந்தமித்திரன் தனத்தைக் கெடுத்தார்கள். பிராம்மணஜாதிகளிலிருப்பவர்கள் பிறர் பொருளைஎடுப்பதில ருசியுள்ளவர்களும் வர்த்தகஞசெய்கிறவர்களு மாகக் காணப்பட்டார்கள். சூத்திரர்களும் தவத்தையேதனமாகக் கொண்டவர்களானார்கள். சிலர் விரதமிலலாமல அத்தியயனஞசெய் தார்கள். மறறுஞசிலா (அதத்தியயனமின்றி) வீணை விரதத்தைச் செய்தார்கள். சிஷ்யன் குருவுக்குப் பணிவிடைசெய்யாதிருந்தான். குருவும் சிஷ்யனுக்குத் தோழனுயிருந்தான். தாயும் தந்தையும் உத் ஸவத்தைமுடித்தவர்களைப்போல ஸ்ரமமுள்ளவர்களும் ஸாமர்த்திய மில்லாதநிலையிலிருப்பவர்களும் கிழவர்களுமாயிருந்துகொண்டு மக்க ளிடம் அன்னத்தைப் பிரார்த்திக்கிறார்கள். அங்கு காம்பீரியத்தில

[1] யாகத்தில் உபயோகிக்கப்படாத.

கடல்போன்றவர்களும் வேதமறிந்தவர்களுமான அறிஞர்கள் கிருஷி முதலிய தொழிலகளில் பற்றுதலுள்ளவர்களாயிருந்தார்கள். மூர்க்கர் கள் ஸுராத்தங்களில் புஜித்தார்கள். சாலியிலும் மாலியிலும் சிஷ்யர் கள் ஏவப்பட்டாலும் ஏவிய வேலைகளையும் ஸுகப்பிரஸன்னத்தையும் வேறுகாரியத்தையும் செய்யவில்லை. அதற்சிஷ்யர்களுக்குக் குருக் கள் வேலைசெய்தார்கள். மருமகள் மாமன்மார்களின்முன்னிலையில் ஏவலாட்களைக் கட்டளையிட்டாள்; பாதத்தாவையும் கட்டளையிடுவாள்; அழைத்தும் பேசுவாள். பிதாவானவன் ஜாக்ரதையுடன் புதல்வன் மனப்படிநடந்துகொண்டிவந்தால்; மிக்கபரபரப்புடன் (தனத்தையும்) பங்கிட்டான்; மிகத்துன்பமான வாஸஸ்தானத்தையும் செய்துவந்தான். நண்பர்களென்று வெகுமதிக்கப்பட்டவர்களும் தீப்பறறியெரிவதா லும் திருடர்களாலும்அரசர்களாலும் பொருள்அபகரிக்கப்படுவதைக் கண்டு துவேஷத்தால பரிஹரவிக்தார்கள். அனேவரும் கன்றிகெட்ட வர்களும் நாஸ்திகர்களும் பாபிகளும் குருவின்தாரதத்தைத்தொடரு கிறவர்களுமாயிருந்தார்கள். புத்திரர்கள் தாய்தகப்பனைத்தள்ளி விட்டு, 'என்கர்மத்தால் நான் உண்டாயினேன்' என்றுசொலலிக் கொண்டு மாமனுரை அனுஸரிப்பவர்களானார்கள். புஜிக்கத்தகாத வைகளைப் புஜிப்பதில உறசாகமுள்ளவர்களும் வரைகடந்தவர்க ளும் சோபைகெட்டவர்களுமானார்கள். பிதாமஹரே! காலம் வேறுபடவும் அந்தஅஸுரர்கள் துவைமுகலியகாரியங்களைச்செய்ய வும் அவர்களிடம் நான்வஸிக்கக கூடாதென்று எனக்குத் தோன்றி றது. சசீபதியே! ஆகையால, வலியவந்தன்னை நீ ஸந்தோஷமாகக் கொண்டாடு. தேவபதியே! உன்னைபூஜிக்கப்படும்என்னைத் தேவர் களும் பூஜிப்பார்கள். நான் வசிகிறஇடத்தில் என்னுடன்கூடஇருப் பவர்களும் என்னிடம்நேசமுள்ளவர்களும் என்னைஅடுத்தவர்களும் எட்டாமவளானஜயாதேவியுடன்கூடியவர்களுமான ஏழுதேவிகளும் வாஸஞசெய்வார்கள். பாகாஸுரனை அடக்கியவனே! ஆசை,ஸ்ரத்தை, த்ருதி, க்ஷமா, விஜிதி, ஸன்னதி, க்ஷமை இவ்வெழுவருக்கும் முன்செலலும்எட்டாமவளானவிருத்தி இந்தஎட்டுத்தேவிகளும் நா னும் அஸுரர்களைத்தள்ளிவிட்டதை தர்மதத்தில்உறுதியுள்ளமனத்து டன் தேவர்களிடம் வலிப்போமென்றுஉங்களிடம்வந்தோம்' என்று சொன்னாள்.

இவ்விதவசனத்தைச்சொன்ன லக்ஷ்மீதேவியைப்பறறித் தேவ ரிஷியானநாரதரும் விருத்திராஸுரனைக்கொன்ற வாஸவனும் பிரீதி யுடன் ஸந்தோஷித்தார்கள். உடனே அக்கினிக்குத்தோழனைவாயு

அழகியமனமும் ஸுகமானஸ்பர்சமுமுள்ளவஸ்துக்களையும் எல்லா இந்திரியங்களுக்கும் ஸுகத்தைக்கொடுப்பவஸ்துக்களையும் தேவர்களின்வழியில் (ஆகாயத்தில்)வீசினான். லக்ஷ்மியுடனிருக்கும்இந்திரனைப்பார்க்கவிரும்பங்கொண்டதேவர்கள் பெரும்பாலும்பிரார்த்திக்கத்தக்கதும் பரிசுத்தமுமானவிடத்தில் நின்றார்கள். பிறகு,லக்ஷ்மியுடனும்பிரியமான நாரதமஹரிஷியுடனும்கூடியதேவபதியானவர் ஐராவதயானைக்குநிகரை கட்டியமேருடன் ஸ்வர்க்கத்தைஅடைந்து தேவர்களால் பூஜிக்கப் பெறுவஸபையில்சென்றான். பிறகு, இந்திரஸபையிலுள்ளஅத்தையும் லக்ஷ்மீதேவியினுடையஎண்ணத்தையும் மனக்காலில்தெரிந்துகொண்டவரும் தேவர்களால்பார்க்கப்படுபவரும் பெருஷ்முள்ளவருமான நாரதரானவர் அங்குமஹரிஷிகளின்மங்களமானவாக்கை லக்ஷ்மீதேவிக்குக் கூறினார்.உடனே,பிரகாசிக்கும்தேவலோகமான சுபிராமஸ்தானான பிரம்மதேவரிருக்குமிடத்தில் அம்ருதத்தைப் பொழிக்கது. துந்துபி வாத்தியங்கள் அடிக்கப்படாமலே சப்திதனை. அப்படியே திக்குகளும் தெளிந்துவிளங்கின. இந்திரனும் ருஷுவுக்குத்தக்கபடி பயிர்களுக்கு மழைபெய்வித்தான். ஒருவனும் கர்மவழியிலிருந்து சலிக்கவில்லை.பூமியானது ரத்தினமுண்டாகும்படிவிளங்கினாள் ஆபரணமாகக் கொண்டதாயிற்று. தேவர்களுக்குண்டானஜயத்தில் அழகானபெரிய கோஷங்களுடன்கூடியவர்களும் நகாரியங்களால் விளங்குகிறவர்களும் பெரியமனமுள்ளவர்களுமானமனிதர்களும் புண்யசாலிகளுக்குத்தக்க கலவழியில் நிலைபெறது விளங்கினார்கள். மனிதர்களும் தேவர்களும் கின்னரர்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் ஸம்பத்து நிறைந்தவர்களும் கலமனமுள்ளவர்களுமாயிருந்தார்கள். ஒரு பொழுதும் காற்றால்அலைக்கப்பட்ட மரத்திலிருந்தும் அகாலத்தில் பூவும் விழுவதுமில்லை. கனிவிழுவதேது? பசுக்கள் பாலைகொடுப்பவைகளும் இஷ்டப்படிகறப்பவைகளுமாயிருந்தன. ஒருவனிடமும் கடுஞ்சொல உண்டாகவில்லை. எல்லாஇஷ்டங்களையும்அளிக்கதத்தக்க இந்திரன்முதலியதேவர்களால் லக்ஷ்மீதேவிக்குச்செய்யப்பட்ட இந்தப்பூஜையைப் பிராம்மணஸ்தலிலிருந்துகொண்டு படிக்கிறவர்கள் இஷ்டபூர்த்தியுடன் லக்ஷ்மியை அடைகிறார்கள். குருக்களிற சிறந்தவனே! ஸம்பத்திறகும் ஆபத்திறகும் பெரியதிருஷ்டாந்தமாக உன்னால்கேட்கப்பட்டதுமுழுதும் இப்பொழுது என்னால சொல்லப்பட்டது. பரீக்ஷைசெய்து நீ உண்மையைத தெரிந்துகொள்ளத்தக்கவனாகிறாய். ஜனங்கள் ஞானேந்திரியங்களுக்கும் புலப்படாதநிலையிலிருப்பவரும் தமக்குவிஷயமானஎல்லாவிடத்திலும் வாஸஞ்செய்கிற

வரும் பெரியபாவங்களைவிலக்குகிறவருமான ஸ்ரீஹரியை மிகுதியாகத்தியானஞ்செய்து பூஜித்துப் பாவங்களை விலகிக்கொண்டவர்களாவார்கள். எப்பொழுதும் யமநியமங்களுடன் கூடியவர்களும் ஸ்ரீவிஷ்ணுவின் உண்மையான ரூபத்தைபபார்க்கிறவர்களும் தேவர்களின்வழியை அனுஸரித்து மோக்ஷமார்க்கத்திலிசெல்லுகிறவர்களுமாயிருப்பவர்கள் உயர்ந்தபதவியை (முக்தியை) அடைகிறார்கள். அரசர்தலைவனே! எப்பொழுதும் இவ்விதம் ஜபத்தையும்ஹோமத்தையும் பெரிதாகக்கொண்டவனும் ஸ்ரீவாஸுதேவரிடம் எப்பொழுதும் பக்தியுள்ளவனும் ஞானதத்தையும் தியானத்தையும் மிகமுக்கியமாகக்கொண்டவனும் எப்பொழுதும்தான்ஞ்செய்வதிலும் உற்சாகமுள்ளவனுமாக நீ பிரஜைகளைப்பரிபாலனஞ்செய். நீ எப்பொழுதும் ஸ்ரீவாஸுதேவரிடம் பறறுதலுள்ளவனுயிருக்துகொண்டு ஞானதத்தையும் தியானத்தையும் முக்கியமாகக்கொண்டவர்களை விசேஷமாகப் பூஜைபண்ணு; எப்பொழுதும் ஆராதிதவா" என்றுசொன்னர்

இருநூற்றுமுப்பத்தாறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரம்மஜ்ஞானிகளின் லக்ஷணத்தைப்பற்றித் தேவலருக்கும் ஜைகீஷவ்யருக்கும் ஸம்பாஷணையும் பார்வதிபரமேச்வரர் ஜைகீஷவ்யரைப் பரீக்ஷித்ததும்.)

யுதிஷ்டிரர், "பிரகிருதியைக்காட்டிலும்மேலானதும் நிலையுள்ளதுமான ப்ரம்மதத்தின்பதம் யாது? அதை எவ்விதமியறையும் எவ்விதஉபாயத்தையும் எவ்விதவிதத்தையும் எவ்விதப்பரயாக்கிரமமுமுள்ளவன் அடைவான்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"மோக்ஷதர்மங்களிலநிலையுள்ளவனும் லகுவானஆகாரமுள்ளவனும் இந்திரியங்களைவென்றவனுமாயிருப்பவன் பிரகிருதியைவிட மேலானதும் என்றும்அழியாததுமான அநாதப்ரம்மத்தின்ஸ்தானத்தை அடைகிறான். ஓ! பாரத! இவ்விஷயத்திலும் ஜைகீஷவ்யருக்கும் ஆவிகருக்கும்நடந்த ஸம்பாஷணையான பழைய இவ்விதிஹாஸத்தை உதாகரிக்கிறார்கள். அரசரிசிறந்தவனே! மஹாதேவருக்கும் தேவிக்கும்நடுவில்நடந்ததும் பாவங்களைவிலக்குவதும் ஞானத்தைக் கொடுப்பதுமான இவ்விதிஹாஸத்தை உள்ளபடி கேள. அவிதரென்னும்தேவலர் பெரியபுத்தியுள்ளவரும் தர்மசாஸ்திரங்களை நன்குஅறிந்

தவரும் கோபமில்லாதவரும் ஸந்தோஷமில்லாதவருமான ஜைகீஷவ்யரைக்கண்டு, 'நீர் துதிக்கப்பட்டாலும் ஸந்தோஷப்படுகிறதில்லை; நிந்திக்கப்பட்டாலும் கோபிக்கிறதில்லை. உம்முடைய அறிவுஎன்ன? இது எங்கிருந்துகிடைத்தது? உம்முடைய அந்தஅறிவிற்கு முக்கியமானஇடம் எது?' என்றுகேட்டார். இவ்விதம் அங்கே கேவலரால் கேட்கப்பட்டவரும் பெரியதவமுள்ளவருமான அந்தஜைகீஷவ்யர் அந்தத்தேவலரைநோக்கி ஸந்தோஷமில்லாததும் பொருள்நிறைந்ததமுள்ளதும் பரிசுத்தமுமான பெரியவசனத்தைச் சொல்லத்தொடங்கினர். 'ஓ! பிராம்மணரே! என்னிடம்கேட்கிறதும் புண்யமான கர்மங்களைச்செய்பவர்களுக்குரியதுமான பெரியநிலையும் சாந்தியுமான அதை நான் உமக்கு உபதேசிக்கிறேன். தேவலரே! நிந்திப்பவர்களிடத்திலும் கொண்டாடுகிறவர்களிடத்திலும் எப்பொழுதும் ஸமமாயிருந்துகொண்டு எவர்கள் அதை விலக்குகிறார்களோ அவர்களின் நடக்கையையும் புண்ணியத்தையும் சொல்லுகிறேன். அவர்கள் அஹிம்ஸமான செய்கையைச்சொன்னலும் சொல்லுகிறவனிடத்திலாதொன்றும் பேசமாட்டார்கள். கல்லபுத்தியுள்ளவர்கள் அடிப்பவனையும் திருப்பி அடிக்க விரும்பமாட்டார்கள்; கிட்டாததுபொருளைப்பற்றிச் சோகப்படமாட்டார்கள்; ஸமயத்தில் கிட்டியதைச்செய்வார்கள்; சென்றவைகளைப்பற்றியும் சோகப்படமாட்டார்கள்; அவைகளை நினைக்கவுமாட்டார்கள். தேவலரே! சக்தியும்உறுதியானவிரதமுமுள்ளவர்கள் பொருள்விருப்பத்துடன்வந்தபெரியோர்களுக்குத் தம்சக்திக்குத்தக்கபடி உபகாரஞ்செய்வார்கள். வித்தையில்முதிர்ச்சிஅடைந்தவர்களும் கோபத்தைஜயித்தவர்களும் இந்திரியங்களைவென்றவர்களும் பிரஜ்ஞர்களில் பெரியவர்களுமாயிருப்பவர்கள் மனத்தாலும் செய்கையாலும் வாக்காலும் ஒருவனுக்கும் விரோதத்தைச் செய்யமாட்டார்கள்; பொறுமையற்றவர்களாயிருந்துகொண்டு ஒருவரைஒருவர் ஒருபொழுதும் துன்பஞ் செய்யமாட்டார்கள். தீரர்கள் பிறர்ஸம்பத்துக்களைக்கண்டு ஒருபொழுதும் தாபப்படமாட்டார்கள்; பிறனைப்பற்றியநிந்தையையும் ஸ்துதியையும் சிறிதும் பேசமாட்டார்கள்; புகழாலும் இகழாலும் ஒருபொழுதும் வேறுபடமாட்டார்கள். எவர்கள் எல்லாவிஷயத்திலும் அடங்கியவர்களும் எல்லாப்பிராணிகளின் ஹிதத்திலும் பிரியமுள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அவர்கள் ஒருவனைப்பற்றியும் கோபிக்கவும் ஸந்தோஷிக்கவும் விரோதஞ்செய்யவுமாட்டார்கள். ஏகாந்தயக்ஞமென்னும் அஜ்ஞானத்தைவிலக்கிவிட்டு ஸுகமாக உலாவிக்கொண்டிருப்பார்கள். மற்றப்பிராணிகளுக்கும்

பந்துக்களாயிருக்கிற இவர்களுக்கு வேறுபந்துக்களில்லை. எவர்கள் ஒருவனுக்கும் விரோதிகளல்லரோ அவர்களுக்கு விரோதிகளுமில்லை. இவ்விதம்நடக்கும்மனிதர்கள் எப்பொழுதும் ஸுகமாக ஜீவிப்பார்கள். தர்மத்தை அனுஸரிக்கிறவர்கள் தர்மமறிந்தவர்களும் பிராம்மணர்களில் மிக உத்தமர்களுமானவர்கள். இந்தவழியிலிருந்து கழுவினவர்கள் ஸந்தோஷத்தையும் துக்கத்தையும் அடைவார்கள். அவ்வழியை அனுஷ்டிக்காதான் எவனைப்பற்றி எப்படி அஸூயைப்படுவேன்? நிந்திக்கப்பட்டாலும் கொண்டாடப்பட்டாலும் என்னகாரணத்திற்காக ஸந்தோஷப்படுவேன்? மனிதர்கள் எதைஎதை விரும்புகிறார்களோ விரும்புங்காரணத்தால அதை அதை அடைகிறார்கள். நிந்தையாலும் ஸ்துதியாலும் குறைவும் வளர்ச்சியும் எனக்கு உண்டாவதில்லை. உண்மையை அறிந்தவன் அம்ருதத்தில்போல அவமானத்தில் மிக்கதிருப்தி அடைவான். அறிவுள்ளவன் விஷத்தில்போல எப்பொழுதும் ஸம்மானத்தில் நடுக்கமடைவான். அவமதிக்கப்படுகிறவன் எல்லாப்பாவங்களிலிருந்தும்விடுபட்டு இவ்வுலகம்மேலுலகமிரண்டிலும் ஸுகமாய்உறங்குவான். எவன் அவமதிக்கிறவனோ அவன் (அதை) அறிவான். பரகதியைவிரும்புகிற அறிவுள்ள சிலஜனங்கள் இந்தவிரதத்தை அடைந்து ஸுகமாகச் செழிப்பார்கள். எல்லாவிஷயங்களிலுமிருந்தும் எல்லாஸங்கல்பங்களையும் அடக்கி இந்திரியங்களை வென்றவன் பிரகிருதியைவிடமேலானதும் அழிபாதமானபிரம்மபதத்தைப் பெறுவான். பரகதியை அடைந்த இவனுடையபதத்தைத் தேவர்களும் கந்தர்வர்களும் பிசாசர்களும் ராக்ஷஸர்களும் அடையத்தக்கவர்களல்லர்' என்று சொன்னர். அந்தஜைகீஷவ்யமுனிவரின் இந்தவசனத்தைக்கேட்ட தேவலர் எல்லாபந்துவங்களிலிருந்தும் விடுபட்டு அவருக்கு அடிமையானசிஷ்யராஞர். அரசனே! எல்லா அறிவையுமடைந்த அறிவுள்ளஜைகீஷவ்யமுனிவருடைய முன்னடந்தவேஷ்டுகதையையும் கவனமாகக்கேள்.

எல்லாஉலகங்களுக்குமாஸுவரும் எல்லாஉலகங்களாலும் பூஜிக்கப்படுகிறவரும் ஜந்துபூதங்கள், சூரியன், சந்திரன், ஆத்மா என எட்டு மூர்த்திகளுள்ளவரும் உலகங்களேச்சரீரமாகக் கொண்டவரும் எட்டுஐஸ்வர்யங்களாலும் அலங்கரிக்கப்பட்டவரும்விரும்பினவற்றையெல்லாம் அடைவதால் விளங்குகிறவருமாக எவரைக் கூறுகிறார்களோ, எவரைஅடைந்தவர்களுக்குத் துன்பமும் சோகமும் பயமும் இல்லையோ ஸ்தாவரஜங்கமமான இவ்வுலகம்இயற்கையாகஎவருடைய சக்தியோ ஸர்வரூபியானஅந்தப்பரமேஸ்வரரானவர் மேருமலையின்

வடகிழக்கில் எல்லாரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் சிந்தைக்குஎட்டாததும் பரிசுத்தமும் எல்லாருதுக்களிலுமுள்ள புஷ்பங்களுடன்கூடியதும்மரங்களால்அலங்கரிக்கப்பட்டதும் எப்பொழுதும் திவ்யமானகாற்றுல்வீசப்பட்டதுமான ஓரிடத்தில்சென்று பலபூதக் கூட்டங்களுடன்கூடியவரும் எல்லாத்தேவர்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவருமாகி விளையாடிக்கொண்டிருந்தார். அவ்விடத்தில் வித்தியாதரர் கந்தர்வர் அப்ஸரஸுகள் இவர்களின்கூட்டங்களும், திக்பாலர்களும் ஸமுத்திரங்களும் ஆறுகளும் மலைகளும் குளங்களும் ரிஷிகளும் வாலகில்யர்களும் யாகங்களும் ஸ்தோபங்களும் ஸ்ருஷ்டிகர்த்தர்களும் தேவரானபரமேஸ்வரரை உபாஸித்துக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்தில் தேவர்களில்பெரியவரும் விருஷபக்கொடியுள்ளவரும் சந்திரன், ஸூர்யன், அக்னி இவர்களைக்கண்ணுக்கொண்டவருமான ஸ்ரீருத்ரரானவர் உமாதேவியுடன்இருந்தார். இவ்விதம் அவ்விடத்திலிருப்பவரும் மேலானாஸ்வரருமான ருத்ரரைநோக்கிப் பூமிரூபியும் காந்தியுள்ளவருமான உமாதேவியானவள் வணக்கத்துடன் வினவலானுள். 'ஓ! பகவானே! பொருள் எது? பொருளின் சக்தி எது? நீர் இதை எனக்குச் சொலல்வேண்டும். பிரார்த்திக்கிறேன்' என்றுகேட்டாள். அந்தஉமாதேவி இவ்விதம்கேட்க, பூஜ்யரான அந்தப்பரமேஸ்வரர் சொல்லத்தொடங்கினர். 'நான் பொருள்; பொருளின்சக்தி நீ. நான் புஜிப்பவன். புஜிக்கத்தக்கவஸ்து நீ. பெரிய பாக்கியம்பெற்றவளே! நீபிரகிருதி. நான் புருஷன். நான் விஷ்ணு. நான் பிரம்மா. நான் யஜ்ஞன். பெண்ணே! ஆகையால், நம்மிருவருக்கும் உண்மையில் வேற்றுமையில்லை. ஆகிலும், உனக்கு வேற்றுமையை அறிகிறேன். நீ என்னிடம் எதைக் கேட்கிறாய்?' என்றுகேட்டார். பிறகு, இவ்விதம்சொல்லக்கேட்டஉமாதேவியானவள், 'இவ்விரண்டனுள் உயர்ந்ததைச் சொல்லவேண்டும். ஓ! மஹாதேவரே! உமக்கு நமஸ்காரம். உயர்ந்ததைச் சொல்லவேண்டும்' என்றுகேட்டாள். அவர்களுக்குநடுவிலிருப்பவரும் அறிவுள்ளவரும் முனிவரிற்பெரியவரும் வஸுரூபமுள்ளவருமான ஜைகீஷவ்யரானவர் சிரித்துக்கொண்டு, 'பொருள்தான் உயர்ந்தது. அதைவிடவேறு சிறந்ததில்லை. வேறுஞசக்தியானது அந்தப்பொருளில் லயப்பட்டது. உருண்டையான பூமியும் அதிலும் பலவிசேஷத்துடன் விரிவடைந்திருக்கிறது' என்று கர்ஜித்துக்கொண்டு சொன்னர். அவ்வசனத்தைக்கேட்டு உமாதேவியானவள், 'யார் இவன்? இப்பொழுது என்னுடைய வசனத்தைத் தடுத்துப்பேசினன்' என்று கோபத்துடன் சங்க

ரிடம் கேட்டாள். அதைக்கேட்டவுடன் புத்தியுள்ளவரும் தேவக் கூட்டத்திலுள் அறிவுள்ளவரும் யோகத்தாலுண்டானஐஸ்வர்யங்க ளுடன்கூடினவரும் முனிவரிற்பெரியவருமானஜைகீஷவ்யர் அவ் விடத்திலிருந்துவெளிப்பட்டுத் தம்ஆச்ரமத்திற்குச் சென்றார்.பிறகு, எல்லாப்பாவங்களையும் அபகரிப்பவரும் பூஜ்யருமானசங்கரரானவர் உமாதேவியைநோக்கி நகைத்து, 'ஜைகீஷவ்யனென்னும்பெரியமுனி வன் மிகவும் சாந்தமானபுத்தியுள்ளவன். ஜைகீஷவ்யனென்று பிரஸித்திபெற்றபெரியமுனியானவன்என்னுடையபக்தனும் தோழ னும் சிஷ்யனுமாகிறான். உழைகுள்ளவளே ! அவன் சொல்லிவிட்டு வெளியிற்சென்றான்' என்று சொன்னார். அதைக்கேட்டபின் மிக்க கோபங்கொண்ட அந்த உமாதேவியானவள், ' அந்தமுனி செய்தது நியாயமன்று. ஓ! தேவரே ! நான் உம்மால் அவமதிக்கப்பட்டேன். முனியாலும் அவ்விதம்செய்யப்பட்டேன். தேவர்களுக்குத்தலைவரே! இடையில்வந்த அம்முனிவசனம் கேட்கப்படவில்லை. ஆகையால், அதனை அழிவிக்கவேண்டும்' என்றுகேட்டாள். பிறகுத்தைத்தரிக் கும்பகவான் ஸ்ரீமஹாதேவர் அதைக்கேட்டு, ' ஆசையறவனும் யோகியுமான அந்தமுனிவன் என்னை அடைந்து எப்பொழுதும்துவக் துவங்களிலிருந்துவிலகியவனும் அறிவுள்ளவனும் ஒரேநிதமானநிய ற்கையுள்ளவனுமாயிருக்கிறான். ஓ ! தேவியே! ஆசையால், அவனைப் பொறுக்கவேண்டும். அவன் உன்னாலும் ரக்ஷிக்கத்தக்கவன்' என்று சொன்னார். இவ்விதம்சொல்லக்கேட்ட அந்தஉமாதேவியானவள், ' அந்தகனை அழித்தவரே! மஹாத்மாவான அந்தமுனியின்ஆசையற்ற தன்மையை நான்பார்க்கவிரும்புகிறேன்' என்றுசொன்னாள். உலகங் களுக்குப்பதியும் தேவக்கூட்டங்களாலும் கந்தர்வக்கூட்டங்களாலும் துதிக்கப்படுகிறவரும்தேவருமானபரமேஸ்வரர் அவளைநோக்கி, 'அப் படியேஆகட்டும்' என்றுசொல்லி விருஷபகதியிலேறிக்கொண்டு பரி சுத்தமானபுத்தியுள்ளவரும் முனிவரிற்பெரியவருமான அந்தஜைகீ ஷவ்யர்இருக்கிறஇடத்திற்கு வேகமாகவந்தார். அப்பொழுது பெரிய புகழுள்ள அந்தமுனிவர் சரீரத்தைமறைத்துக்கொள்ளவேண்டி இங் கும்அங்கும் கந்தைகளைத்தேடிக்கொண்டு ஸஞ்சரிக்கையில் ஸ்ரீமஹா தேவரைக்கண்டு எதிர்சென்று தக்கபடிபூஜித்தபின் திரும்பவும் முன்போலக் கந்தையை ஊசியாலும் நூலாலும் தைத்துக்கொண் டிருந்தார். பகவானுமம்புவும் அவரைநோக்கி, ' முனியே ! உன க்கு நான் எதைக்கொடுக்கவேண்டும்? ஜைகீஷவ்ய ! நீ விரும்புகிற எல்லாவற்றையும் என்னிடமிருந்து பெற்றுக்கொள் ' என்றுசொன்

னர். முனிசளிற்சிறந்தஜைகீஷவ்யரும் தேவர்களின் தேவரானசம்பு வைப்பாராமலே, 'ஓ! வ்ருஷபக்கொடியுள்ளவரே! உம்மிடமிருந்து அடையப்படாததை நான் காணேன். நான் கிருதார்த்தனும் பரிபூர்ணனுமாயிருக்கிறேன். உமக்குக் காரியமிருந்தால போகலாம்' என்று சொன்னர். சங்கரர் சிரித்துக்கொண்டு திரும்பவும் அம்முனிவரைநோக்கி, 'வரத்தைப பெறலுக்கொள். அவசியம் என்னிடமிருந்து வரத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நிகரற்றமஹானவரத்தைக் கேள்' என்றுசொன்னர். ஜைகீஷவ்யரும் அந்தச்சங்கரரைநோக்கி, 'ஓ! மஹாதேவரே! உமதிபிரஸாதத்தால் நூலெத்தொடர்ந்துசெல்லுகிறவனுடைய என்வசனத்தையும் நீர்கேட்கவேண்டும்' என்றுசொன்னர். பிறகு, சங்கரபகவானும் கௌரீதேவியைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு ஸந்தோஷமுள்ளவரும் எல்லாத்தேவர்களாலும்நமஸ்கரிக்கப்பட்டவருமாகிய தம்மிடம்போய்ச்சேர்ந்தார். அரசனே! நீ வினவியகாரணத்தால இக்கதை உனக்குச் சொலலப்பட்டது. அந்த யோகிகள் துவந்துவங்களைவிட்டு விலகியவர்களும் நித்தியர்களும் எல்லாவிதத்தாலும் காமிக சக்திபெறறவர்களுமாயிருப்பார்கள்" என்றுசொன்னர்.

இருநூற்றுமுப்பத்தேழாவது அத்தியாயம்.

மோக்ஷதாமம். (தொடர்ச்சி.)

(நற்குணங்கள் உலகை வசப்படுத்துமென்றும் விஷயத்தில் நாரதர்தன்பெருமையைப்பற்றி உக்ரஸேனனுக்கும் வாஸுதேவனுக்கும்நடந்த ஸம்பாஷணையும், நாரதர் வாஸுதேவனுக்கு உபாயங்கூறியதும்.)

யுதிஷ்டிரர், "எல்லாஉலகத்திற்கும்பிரியனும் எல்லாப்பிராணிகளாலும் கொண்டாடப்படுகிறவனும் எல்லாக்குணங்களுமுள்ளவனுமாகப் பூமியில் யார்தானிருக்கிறார்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லதொடங்கினர்.

"பரதர்களிற்சிறந்தவனே! இவ்விஷயத்தில் கேட்கும்உனக்கு நாரதரைப்பற்றி உக்ரஸேனனுக்கும் ஸ்ரீகேசவருக்கும்நடந்த ஸம்பாஷணையைச் சொல்லுகிறேன். உக்ரஸேனன், 'உலகமானது எவரைப்பற்றிச் சொலலுவதில பிரியப்படுகிறதோ அந்தநாரதர் நற்குணம் நிறைந்தவரென்றுநினைக்கிறேன். கேட்கும்எனக்கு அதைச் சொலல வேண்டும்' என்றுகேட்டான். வாஸுதேவர் சொல்லதொடங்கி

ஞர். 'குருசர்களுக்கு அதிபதியானஅரசரே! நான் அறிந்தமட்டில் சிறந்தநாரதரின்குணங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். என்னிடமிருந்து கேளும். நன்னடக்கையிருக்கிறதென்ற காரணதால் அந்தநாரதருக்குத் தேகத்தைவீழ்த்தததக்க அகங்காரமில்லை. அவர் உற்றுதியானகல்வியும் நன்னடக்கையுமுள்ளவர்; ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். உற்சாகமிலலானமையும் கோபமும் சபலத்தன்மையும் பயமும் நாரதரிடமில்லை. அவர் தாமஸஸ்வபாவமிலலாதவரும் சூரருமாகவர். ஆகையால, அவர் எங்கும் நிச்சயம் பூஜிக்கப்படுகிறார். அவர் உபாஹிக்கத்தக்கவர். காமததாலோ அலலது லோபதாலோ இவர்வாக்கில வித்தியாஸமுண்டாகிறதில்லை. ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். ஆதமவித்தையின்உண்மையை அறிந்தவரும் பொறுமையுள்ளவரும்சக்தியுள்ளவரும்இந்திரியங்களைவென்றவரும் நோயிருப்பவரும் உண்மையைப்பேசுகிறவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். தேஜஸாலும்கீர்த்தியாலும் புத்தியாலும் ஞானத்தாலும் வணக்கததாலும் பிறவிபாலும் தவத்தாலும் அவர் பெரியவர். ஆகையால, எங்கும் பூஜிக்கப்படுகிறார். நல்லஸ்வபாவமுள்ளவரும் ஸுகமாகப்படுபவரும் ஸுகமாகப்புஜிப்பவரும் நலலஅன்புள்ளவரும் பரிசுத்தரும்நலலவார்த்தையுள்ளவரும் பொறுமை இல்லாதவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார்; மிகவும் நன்மையைச் செய்கிறார். அவரிடத்தில பாவமில்லை. அவர் பிறர்துன்பங்களில பிரியப்படுகிறதில்லை. ஆகையால, எங்கும் பூஜிக்கப்படுகிறார். வேதங்களில ஓதப்படும் உபாக்யானங்களிலுள்ள பொருள்களைக் கானஞசெய்கிறார். பொறுமையுள்ளவரும் அவமதிப்பிலலாதவருமாயிருக்கிறார். ஆகையால, எஙகும் பூஜிக்கப்படுகிறார். ஸமஸ்லேயிலிருப்பதால எவ்வி ததிலும் நண்பனுமிலலை; பகைவனுமிலலை. மனத்திறகு அனுகூலமாகப பேசுகிறார். ஆகையால,எங்கும் பூஜிக்கப்படுகிறார். பலகலவிகளுள்ளவரும் ஆச்சரியமானகதைகளுள்ளவரும் பண்டிதரும் சோம்பலிலலாதவரும், கள்ளத்தனமில்லாதவரும் தைன்யமிலலாதவரும் கோபமிலலாதவரும் லோபமிலலாதவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். தனத்திலாவது வேறுபொருளிலாவது காமததிலாவது அவருக்கு இதுவரையில் கலசமுண்டானதில்லை. தோஷங்கள் அவரிடம் நன்கு அறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால, எங்கும்பூஜிக்கப்படுகிறார். உறுதியான பக்தியுள்ளவரும் நிந்திக்கத்தகாத புததியுள்ளவரும் கல்வியுள்ளவரும் கொடுமையறறவரும் அவிவேகமென்னும் தோஷமில்லாதவரு

மாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். பற்றத்தக்க எல்லாவற்றிலும் பற்றுதலற்றவரும் பற்றுதலுள்ள புதுதியுள்ளவர் போலக்காணத்தக்கவரும் ஸந்தேகமில்லாதவரும் நன்கு பேசுகிற வருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். அவருடைய ஸமாதியானது பயனேவேண்டியன்று. எந்தச்சமயத்திலும் தம்மைக்கொண்டாடுகிறதில்லை. பொருமையறறவரும் இன்சொல் சொல்லுகிறவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். அவருக்கு அகங்காரத்தில் பற்றுதலில்லை. புதுதியானது 'கீண்டடக்கையில் உறுதிபெற்றிருக்கிறது. வேதத்தின் அர்த்தங்களைப் பகுத்தறிந்தவரும் யாகத்தை அறிந்தவரும் யோகத்தை அறிந்தவரும் கவியும் பக்தியுள்ளவரும் எப்பொழுதும் அறிவுள்ளவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். மூன்றுகுணங்களுள்ளவரும் குணங்களை அனுபவிப்பவரும்ஐக்யஜ்ஞரூபியுமான பரமாத்மாவை உள்ளபடி அவர் அறிகிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். [1] உலகத்தின் பலவிதமானமனத்தையும் அவர் வெறுத்துக்கொள்ளாமல் பார்க்கிறார்; ஈட்புச்செய்யும்வித்தையில் திறமையுள்ளவர். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். ஒருவிதமான சாஸ்திரத்திலும் குற்றம்பேசுகிறதில்லை. தம் நீதிப்படி ஜீவிக்கிறார். பழுதில்லாதகாலமுள்ளவரும் மனத்தை அடக்கினவருமாயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிக்கப்படுகிறார். ப்ரமப்பட்டவரும் ஞானப்பயிற்சியுள்ளவரும் ஸமாதியிலபோதுமென்றெண்ணுதவரும் விடாமுயற்சியுளளவரும் அஜாக்ரதையில்லாதவருமாயிருக்கிறார்; ஆகையால, எங்கும் பூஜிக்கப்படுகிறார். பிறர்ால கல்லகார்யத்தில தூண்டப்பட்டால் செய்வதில் கூச்சமில்லாதவரும் அதில்ஸ்ரத்தையுள்ளவரும் பிறர்ரஹஸ்யங்களைவெளியிடாதவருமாயிருக்கிறார். ஆகையால, எங்கும் பூஜிக்கபடுகிறார். அர்த்தலாபங்களில ஸந்தோஷிப்பதில்லை. கஷ்டதத்திலும் துக்கப்படுகிறதில்லை. உறுதியுள்ளதும் பறறுதலிலலாததுமான புதுதியுள்ளவராயிருக்கிறார். ஆகையால், எங்கும் பூஜிகப்படுகிறார். எல்லாக்குணங்களும் நிறைந்தவரும் ஸமர்ததரும் பரிசுததரும் துன்பமிலலாதவரும் காலத்தைஅறிந்தவரும் பிரியததை அறிந்தவருமான அந்த நாரதரை யார் பிரியமாகக்கொள்ளமாட்டான்?' என்று சொன்னார.

இவ்விதம் சொலலக்கேட்ட உகரஸேனன் அந்தநாரதரை மிகவும் கொண்டாடிக்கொண்டு வீட்டிலிருந்து (வெளியில) சென்றான். வாஸுதேவர் அவ்விதமே இரத்தினங்களால அலங்கரிக்கப்பட்ட

1 கூறியதுகூறலால் ஒருஸ்லோகம் விடப்பட்டது.

கட்டிலில ஏகாந்தமாயிருந்தார். ஒரு சமயம் பூஜ்யரான நாரதமகா முனிவர் அங்குவந்தார். ஸ்ரீ ஜனார்த்தனர் அவரை முறைப்படி பூஜித்துப் பேசாமலிருந்தார். அந்த ஸ்ரீ வாஸுதேவர் வருத்தமுள்ளவர் போலிருப்பதைக்கண்டு, 'ஓ! தேவதேவரே! ஜனார்த்தனரே! இது என்ன? இவ்வளவாயில் இலலாதமனவருத்தம் உமக்கு இருக்கிறது. கோவிந்தரே! ஆதலினை எனக்கு நீர் விவரமாகச் சொலலவேண்டும்' என்ற வசனத்தைச் சொன்னார். ஸ்ரீவாஸுதேவர் சொலலதைதொடங்கினர். 'ஓ! நாரதரே! இப்பொழுது என்னுடைய முக்கியமான ஒரு விஷயத்தைக் கண்பனலலாதவன் தெரிந்துகொள்ளத்தக்கவனல்லன். பண்டிதனலலாகண்பனும் கட்பில்லாதபண்டிதனும் தெரிந்துகொள்ளத்தக்கவரலலர். கண்பரும் விதவானும் மனத்தைஜயிததவருமான நீரே கேட்கத்தகுவர். மனதிலுள்ள துக்கததையும் நீர்கேட்கத்தக்கவர். ஐஸ்வர்யமென்றசொலலுடன் நான் ஞாதிகளுக்கு அடிமை செய்துகொண்டிருக்கிறேன். ஞாதிகளும் ஸம்பந்திகளும் பந்துக்களும் எப்பொழுதும் கோபங்கொண்டு (என்னைப்) பகைக்கிறார்கள். ஆகிலும், தேவலோகதிலுள்ளபோகங்கள் அவர்களுக்கு வெவவேறாக என்னால் ஏளிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதமிருந்தும் என்னையும் ஒருவா மற்றொருவரையும் பகைததுக்கொண்டிருக்கிறார்கள்' என்றுசொன்னார். நாரதர், 'இரும்பலலாதஆயுததால் தடவிதத்துடைத்து இவர்களின்காவை எடித்துவிடும். அதன்பிறகு, பேசமாட்டார்கள்' என்றுசொன்னார். பகவான், 'சிறநதமுனிவர்களிலுத்தமரே! இவர்களின்காவை அறுக்கதற்க இரும்பலலாத ஆயுதத்தை எப்படிஅடைவேன்? அதனை எனக்கு உளளபடி சொலலவேண்டும்' என்று கேட்டார். நாரதர், 'பசு, பொன், ஆடைகள், ரதத்தினமுதலியதனத்தை விசேஷமாக இவர்களின்வாயில்போடும். இது இரும்பலலாத ஆயுதமாகும். [1]ஸுஹ்ருத்துக்கள், ஸம்பந்திகள், [2]பிதாதுரர்கள, குருக்கள், ஸ்வஜனங்கள் இவர்களுக்கு இது ஆயுதமென்றுசொலலபபடுகிறது. அவவாயுததால் திரும்பவும்திரும்பவும்அறுக்கவேண்டும். இவர்களுக்கு உம்முடையபொருள்களை அளிபபதும்நன்மொழிகளும் சிறந்தனவாகும். உம்மைஸமாததசென்றுதெரிந்துகொண்ட அதமனிதர்களும் மிகமெச்சுவாகள' என்றுசொன்னார். பிறகு, நாரதமுனிவரின்வசனதாலஎவபபட்டவரும்பெரியமதஜஸுள்ளவருமான பகவான் சிரிதது, முனிவரிதபெரியவரானநாரதரை மிகவும் பூஜித்து அவ்விதமேசெய்தார். முனிவர்களிலமிகபபூஜ்யரும்ப்ரம்மரிஷியுமானநாரதரானவர் இவ்

1, 2, 385-ம் பககம் குறிப்பிறகாண்க.

விதமானபிரபாவமுள்ளவர். அரசர்களிற்சிறந்தவனே! நீ என்னிடம் கேட்டது சொல்லப்பட்டது. எல்லாக்கர்மங்களுஞ் சுபமான யிருப்பவர்களும் ஞானத்திலும்விசேஷஞானத்திலும்ஸமர்த்தர்களுமாயிருப்பவர்கள் உலகத்திற்குப் பிரியமானகதியை அடைவார்கள்" என்றுசொன்னார்.

இருநூற்றுமுப்பத்தெட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர்உலகத்தின்உத்பத்திப்ரதலியபற்றைச் சுகாசத்துச்சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! கௌரவரே! எல்லாப்பிராணிகளின்உற்பத்திக்கும் லயத்துக்கும் காரணமாயிருப்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தியானம் கர்மம் காலம் ஒவ்வொருயுகத்திலுமுள்ள ஆயுள் உலகத்தின்தத்வம் பிராணிகளின்ஸ்வபாவத்து ஆபத்து ஆகிய இவைகளை முழுமையும் தெரிந்துகொள்ளவிரும்புகிறேன். இந்த உற்பத்தியும் முடிவும் எதிலிருந்து தடைபெறுகின்றன? [1]ஸாதுக்களிற்சிறந்தவரே! இப்பொழுது எங்கள்விஷயத்தில் உமக்கு அனுக்ரகபுத்தியிருக்குமானால இதை உம்மிடத்தில கேட்கிறேன். இதை நீர் எனக்கு உபதேசிக்கவேண்டும். முதலில் சொல்லப்பட்டதும் உத்தமமுமானபிருகுவின்வசனத்தையும்பிறகு பிரம்மரிஷியானபரத்வாஜரின்வசனத்தையும் கேட்டு என்னுடையபுத்தியானது சிறந்ததும் உயர்ந்ததர்மத்தைப்பற்றியதும் உத்தமமான நிலையிலிருப்பதுமாயிற்று. ஆகையால, திரும்பவும் கேட்கிறேன். அதனை நீர் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொலலலானார்.

"பூஜ்யரானவ்யாஸர் தம்புத்ரர்கேட்டபொழுதுசொன்னஅந்தப்பழையஇதிஹாஸத்தை இவ்விஷயத்தில நான் உனக்குச் சொல்லுகிறேன். வ்யாஸரின்புத்ரரானசுகரானவர் அங்கங்களுடனும் உபநிஷத்துக்களுடனும் எல்லாவேதங்களையும்அத்யயனஞ்செய்தபின் தர்மங்களின் லக்ஷணத்தைத்தெரிந்து மோக்ஷநிஷ்டைக்குரிய கர்மத்தைத்தேடிக்கொண்டு ஆறம்பொருள்களைப்பற்றிய ஸந்தேகங்களை அறுத்தவரான கிருஷ்ணத்வைபாயனரென்னும் வ்யாஸரிடம் சென்று ஸந்தேகமுள்ள இவ்விஷயத்தைக் கேட்கத்தொடங்கினார்.

[1] அதிகபாடமான ஒருஸ்லோகம் விடப்பட்டது.

'காலத்தின் அறிவில்கிரசயமுள்ளவரும் [1]பூதக்கூட்டங்களைப் படைத்தவருமானாரும்வரையும் பிராம்மணன்செய்யத்தக்கதையும்குறித்து கீர்சொல்லவேண்டும்' என்றுகேட்டார். சென்றதையும்வருவதையும் அறிந்தவரும் யாவற்றையும் அறிந்தவரும் எல்லாத்தர்மங்களையும் அறிந்தவரும் பிரானமான வ்யாஸர், கேட்பவரும் புத்ரருமான அந்தச் சுகருக்குச் சொல்லத்தொடங்கினர். 'அருமைப்புதல்வனே! நீ கேட்கிறதை உள்ளபடி சொல்லுகிறேன். கவனமாகக் கேள். முதலில் காரியமென்றும் பிறகு காரணமென்றும் அல்லது முதலில் காரணமென்றும் பிறகுகாரியமென்றும் இரண்டுவிதமாக அறியப்படுவதும் மறைக்கப்பட்டதுமான இவ்வுலகமானது விசாரித்தால் ஸத்யமும் மிகவும்மங்களமுமான பிரம்மமென்று அறிவிக்கப்படுகிறது. அதனை அறிவுள்ளவர்கள் அறிகிறார்கள். ஆதிகாலத்தில் தேஜோரூபியும் உற்பத்தியில்லாததும் உலகங்களுக்குக்காரணமும் ஆச்சரியமுமான பிரம்மமே இருந்தது. ஆதியிலிருக்கும் காரணத்தாலேயே அதை அறிந்தவர்கள் ப்ரதானமென்றுகூறுகிறார்கள். மூன்றுகுணங்களுள்ளதும் ஸ்ரீவிஷ்ணுவினுடையதுமான அந்தமஹாமாயையை ப்ரக்ருதி என்றறிவிக்கிறார்கள். இவ்விதமான அந்தப்ரம்மமானது ஆதியும் முடிவுமில்லாததும் காணப்படாததும் விகாரமில்லாததும் ஸ்திரமானதும் உணர்க்கத்தகாததும் அறியத்தகாததும் காரியங்களுக்குக்காரணமாக மூலத்தில் இருந்தது. அதுதான் மூன்றுகுணங்களையும் உருவமாகக்கொண்டதும் மூன்றுகாலங்களிலும் ஸூக்ஷ்மமுமான பிரதானமென்று சொல்லப்படுகிறது. கன்குசேர்ந்தமாயையின் குணத்துடன்கூடியதும் தன்னிலையிலிருப்பதும்வ்யாபகமுமான அந்தப்ரம்மமானது தன்னிச்சையால் மாறுதலடைந்தது. மூன்றுசக்திகளை உருவமாகக்கொண்டதும் காரணரூபியும் எப்பொழுதும் ஞானரூபியான பரமாத்மாவென்னும் அதிஷ்டானத்துடன்கூடியதும் ஸ்வாதந்த்ர்யமில்லாததும் ஸ்வபாவமென்னும் பெயரை அடைந்ததும் மோகஉருவத்தைத்தரிப்பதுமான அந்தப்ரம்மத்தின்பிரகிருதியானது பலவிதமான ஜீவனுடையபோகத்திற்கும்வேண்டி வெளிவந்தது. மனமானது ஸங்கல்பமாத்திரத்தால் மனத்தைதகரும்இந்திரியத்தைச் சலிக்கச்செய்வதற்குக் காரணமாயிருப்பதுபோலப் பரத்திலும் பரான பரமாத்மாவானவர் யாவற்றுக்கும் காரணரென்று கூறப்படுகிறார். அவர் அந்தப்பிரதானத்தைஉண்டுபண்ணி அதிற்புருஷனை

1 அதிகபாடான இரண்டரை ச்லோகங்கள் பொருளாமையால் விடப்

ஜுள்ளிருந்துகொண்டு அதைச் சலிக்கச்செய்தார். பிரதானமென்ற தத்வத்திலிருந்து ஸாத்விகராஜஸதாமஸமென்னும் மூன்றுவிதமான மஹத்தானது உண்டாயிற்று. அது பெரிதாயிருப்பதால் மஹத் என்றுசொல்லப்படுகிறது. உண்டாணமகத்தத்வமானது காலஉருவத்தால் மறைக்கப்பட்டு ப்ரதானதத்வத்தை கன்முய்மறைத்துக்கொண்டது. அக்காலமானது பரமாத்மாவின் அம்சமாகும். அது புருஷனென்றும் ஷளவிடத்தகாக உருவமுள்ளதென்றும் சொல்லப்படுகிறது. பிரதானதிலிருந்துஉண்டான இந்தமஹத்தான்தூமூன்று குணங்களுள்ளதென்று வேதம் உபதேசிக்கிறது. அந்தமஹத்தத்வத்திலிருந்து ஸாத்விகராஜஸதாமஸமென்னும் மூன்றுஉருவமுள்ளதும் மூன்றுவேற்றுமையுள்ளதுமான இந்த அகங்காரமானது உண்டாயிறது. தாமஸமான இந்த அகங்காரமானது பூதாதியென்று பெயருள்ளதாகிறது. பூதங்களுக்கு ஆதியாயிருப்பதால் தாமஸ அகங்காரமானது பூதாதியென்று சொல்லப்படுகிறது. பிறகு, அந்தப் பூதாதியானது வேற்றுமையை அடைந்து சப்ததன்மாத்திரத்தை உண்டுபண்ணிற்று. அந்தத்தன்மாதிரையானது சப்தத்தைஉருவமாகக்கொண்ட ஆகாயத்தை உண்டுபண்ணிறது. சப்தலக்ஷணமான ஆகாசமானது சப்ததன்மாத்திரத்தை மறைத்தது. அந்த ஆகாயத்தால் நன்முகச் சலிக்கச்செய்யப்படும் சப்தமானது ஸ்பர்சதன்மாத்திரத்தை உண்டுபண்ணிறது. ஸூக்ஷ்மசப்தமுள்ள அவ்வாகாசமானது ஸ்பர்சதன்மாதிரையை மறைத்தது. அவ்வாகாசத்தால சலிக்கும்படி செய்யப்பட்ட ஸ்பர்சமானது வாயுவை உண்டுபண்ணிறது. ஸ்பர்சருபமுள்ளவாயுவானது அப்பொழுது ரூபதன்மாத்திரத்தை உண்டுபண்ணி அதை மறைத்தது. அந்த ஸ்பர்சத்தால் நன்கு சலிக்கச்செய்யப்பட்டரூபமானது அக்கினியை உண்டுபண்ணிறது. பிறகு, ஸூக்ஷ்மமானரூபமானது அக்கினியைஉண்டுபண்ணி நன்குமறைத்தது. அந்தரூபத்தால நன்கு சலிக்கச்செய்யப்பட்ட அக்னியானது ரஸதன்மாத்திரத்தை உண்டுபண்ணிற்று.ஸூக்ஷ்மரூபத்தை அடைந்த அக்னியானது ரஸத்ன்மாத்திரத்தை மறைத்தது. அந்த அக்னியால் நன்கு சலிக்கச்செய்யப்படும் ரஸமானது ஜலத்தைஉண்டுபண்ணிற்று. ஸூக்ஷ்மமான் ரஸமானது திரும்பவும் அந்த ஜலத்தை நன்கு மறைத்தது. அந்த ரஸத்தால் நன்குசலிக்கச்செய்யப்படும்ஜலமானது கந்ததன்மாத்திரையை உண்டுபண்ணிற்று. அந்தஜலமானது பிறகு ஸூக்ஷ்மமானகந்தத்தை மறைத்தது. அந்த ஜலத்தால் நன்முகச் சலிக்கச்செய்யப்படும் கந்தமானது கடினத்தன்மையை

உண்டிபண்ணிற்று. ஸூக்ஷுமமானகந்தகிலிருந்துஉண்டான அந்தக் கடினததன்மையிலிருந்து பூமி உண்டாயிறது. இது முழுதுமே ஜலஉருவமுள்ளதுதான். ஜலம்திரும்பவும்கடினத்தன்மையை அடைந்தது. பிறகு, பூமிமுதலிய இந்தப் பூதங்களுண்டாயின வென்று வேதஞ்சொல்லுகிறது. இந்தப்பூதங்களுடைய சரீரம் அன்னமென்றே ஆதிஞர்கள் கருதுகிறார்கள். அந்தப பூதங்களிலுள்ள ஸூக்ஷுமபாகங்கள் தன்மாத்திரைகளென்று சொல்லப்படுகின்றன. தேஜோரூபமானபதுஇந்திரியங்களைக் காரியத்தன்மையைஅடைந்ததேவர்களென்று சொல்லுகிறார்கள். மனமானது இவைகளில் பதினொன்றாவதாகும். இவ்விதம் விகாரத்தன்மையை அடைந்த (இந்திரியங்களாகிற) தேவர்கள் சொல்லப்படுகிறார்கள். பலவேற்றுமையுடனிருக்கும்காலமானது அந்தஇந்திரியங்களுக்கு மாறுபாட்டைச்செய்யக் காரணமாகிறது. பூதங்களுக்குஆதமாவான பரமாதமாவானவர் குணங்களின் வேறறுமையுள்ளவராயிருக்கிறார். அவர் ஒருவராயிருந்தும் மூன்றுவிதமான வேறறுமையுள்ளவராகிப் பலவிதமானகாரியங்களைச் செய்கிறார். பிரம்மாவாயிருந்து பிராணிகளைப் படைக்கிறார். அழிவறறநாராயணராயிருந்து பரிபாலிக்கிறார். உலகங்களைஉருவமாகக்கொண்டருத்ரரூபியாகி ஸம்ஹரிக்கிறார். காரியங்களில்ஸாமர்த்தியமுள்ளஇவர் காலமாகிறார். ஸ்வரூபியானகாலமும், சிந்தைக்குஎட்டாததும் மூன்றுகுணங்களைஉருவமாகக்கொண்டதும் ஸுஜனமுமாயிருக்கிறது. இது இந்திரியங்களுக்குப் புலப்படாதது. இது சிந்தைக்கு எட்டாதது. இது வெவ்வேறுலக்ஷணமுள்ளதாயிருக்கிறது. வேறறுமையிலலாததாகக் கேட்கப்படும் இவ்வுலகம் காலரூபத்தால் வேறறுமையுள்ளதாகிறது. ஆதியுமந்தமுமில்லாததும் உறபத்தியிலலாததும் ஸ்வபாவமும் ஸூக்ஷுமமும் கிழுதனமில்லாததும் உறுதியுள்ளதும் ஊஹிக்கமுடியாததும் அறியக்கூடாததுமானபிரம்மமானது முதலிலிருந்தது. பதினைந்துநிமிஷங்கள் ஒருகாஷ்டையாகும். முப்பதுகாஷ்டைகளை ஒருகலையென்று கணக்கிடவேண்டும். முப்பதுகலைகளும் ஒருகலையில பதிலலொருபாகமும் கொண்டது ஒருமுகூர்த்தமாகும். முப்பதுமுகூர்த்தங்கொண்டது ஒருபகலும் இரவுமாகுமென்று முனிகளால கணக்கிடப்பட்டிருக்கிறது. முப்பதுஇரவுபகல் ஒருமாஸமென்று கூறப்படும். பன்னிரண்டுமாதங்கொண்டது ஒருவருஷம். தக்ஷிணாயனம் உததராயணம்என்ற இரண்டுசேர்ந்து ஒருவருஷமென்று கணக்கறிந்தவர்கள் கூறுகிறார்கள். மானிடஉலகத்திற்குரியஇரவுபகல்களை லோர்யன்

பகுத்துக்கொடுக்கிறான். இரவானது உறக்கத்திறகாகவும் பகலானது வேலைகளைச்செய்வதறகாகவும் வருகின்றன. ஒருமாதமானது பித்ருக்களுக்குரிய இரவும் பகலுமாகும். அவைகளின் பிரிவுகளை, சுக்லபக்ஷமானது தேவேலைகளைச்செய்கிறதறகுரியபகலும்கிருஷ்ணபக்ஷமானது உறங்குவதறகுரியஇரவுமென்று அறியவேண்டும்.ஒருவருஷமானது தேவர்களுக்குரிய இரவும் பகலுமாகும் அவைகளின் பிரிவோ, உத்தராயணம்பகலும் தக்ஷிணாயனம் இரவுமாகும். முதலில தேவலோகத்துக்குரிய இரவுபகல்களாவுண்டாகும் வருஷத்தின்முடிவின்கணக்கைக்கொண்டுபிரம்மதேவருக்குரிய இரவுபகல்களைச்சொல்லுகிறேன். கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம்கலியுகம் இவைகளிலுள்ள தேவர்களின்வர்ஷங்களை முறையே கூறுகிறேன். கிருதயுகமானது நாலாயிரம்வருஷங்களென்று கூறுகிறார்கள். அந்தயுகத்தின் 1 ஸந்தியாகாலம் நானூறுவருஷங்களும் அப்படியே 2ஸந்தியாம்சம் நானூறுவருஷங்களுமாகும். அதைவிடவேறுமூன்றுயுகங்களிலும் அவைகளின்ஸந்தியைகளிலும் ஸந்தியாம்சங்களிலும் ஒவ்வொன்று குறையக் கூறியஆயிரம்வருஷங்களும்நானூறுவருஷங்களுமாகும்.இந்த யுகங்கள் அழிவறறவையும் ஸநாதனமுமானஉலகங்களைத் தரிக்கின்றன. அபபா ! அழிவற்றசாஸ்வதபிரம்மருபியான இது பிரம்மததை அறிந்தவர்களுக்குத தெரியும். நான்குஅம்சங்களுடன்கூடியதும் பூர்ணமுமான தர்மமும் ஸதயமும் கிருதயுகத்திலிருக்கின்றன. அந்த யுகத்தில அதர்மததுடன்கடைபெறுவதொனறுமில்லை. வேறுயுகங்களில தர்மமானது முறையே ஒவ்வொருபாகமாகக்குறைவடைகிறதென்று வேதததால வெளியாகிறது. ஸதயமும் சௌசமும் ஆயுளும் தர்மமும் ஒவ்வொருபாகமாகக் குறைவடைகின்றன. திருட்டு, பொய், வஞசகம்இவைகளால அதர்மமும் மேலிடுகிறது. கிருதயுகததிலிருபபவர்கள் நோயறறவர்களும் இஷடமானபொருள்களின் வித்தியெலலாம்பெறறவர்களும் நானூறுவருஷங்கள்ஜீவிப்பவர்களுமாயிருந்தார்கள். திரேதாயுகததில இவர்களின்ஆயுள் ஒருபாகம் குறைவடைகிறது. யுகங்தோறும் வேதவாதஙகளும் இவ்வுலகில குறைவடைகின்றனவென்று எஙகளுக்குக் கேள்வி. ஆயுளும் அனுக்ரகசக்திகளும் வேதத்திற்குரியபயனும் குறைவடைகின்றன. கிருதயுகதில தர்மங்கள்வேறு. சக்திக்குத்தக்கபடி செய்யப்படுவது போன்றதாமங்கள் திரேதாயுகத்திலும் துவாபரயுகத்திலும் கலியுகத்

1 யுகத்துககு முன்னுள்ளகாலம்.

2 யுகததுக்குப பின்னுள்ளகாலம்.

திலும் வெவ்வேறுக இருக்கின்றன.கிருதயுகத்தில் தவம் பெரிதாகும். திரேதையில ஸத்யம் உத்தமமாகும். துவாபரயுகத்தில யாகத்தையே சொலலுகிறார்கள். கலியில் தானமே சிறந்தது. இவ்விதம யுகங்களின் கணக்குப்பன்னீராயிரம்வருஷங்களென்று கவிகள் அறிவிக்கிறார்கள். அந்தயுகங்கள் ஆயிரந்தடவை சுறறிறலை அது பிரம்மதேவருக்குரிய ஒருபகலென்று சொலலப்படுகிறது. பிரம்மதேவரின் ராதரியும் அதே கணக்குள்ளதாகும், ராசரான அந்தபரம்மதேவர் இரவின்தொடக்கத தில் உலகத்தைத் தம்மிடம் லயிக்கும்படிசெய்து உறங்கியபின் இர வின்முடிவில விழிதுதுக்கொள்ளுகிறார். ஆயிரம் யுகங்களின் முடி வைப் பிரம்மதேவரின் பகலென்றும் ஆயிரம்யுகங்களின் முடிவையே இரவென்றும் இரவுபகலையே அறிந்தஜனங்கள் அறிவிக்கிறார்கள். விழிதுதுக்கொண்ட பிரம்மதேவர் இரவுசென்றதும் அழிக்தமஹத் தத்துவத்தைப் படைக்கிறார். அதிலிருந்து ஸ்தூலவுருவமுள்ளமன முண்டாகிறது, மனமானது படைக்கவேண்டுமென்ற விருப்பதால் ஏவப்பட்டுப படைப்பைசெய்கிறது. அதிலிருந்து ஆகாயமுண் டாகிறது. ஆகாயத்தின்குணம் சப்தமென்று சொல்லப்படுகிறது; வேற்றுமையை அடைந்த ஆகாயதிலிருந்து எலலாக்கந்தகளையும் கொணர்வதும் பரிசுதமும் பலமுள்ளதுமான வாயு உண்டாகிறது. அந்த வாயுவின் குணம் ஸ்பர்சமென்றுசொலலப்படுகிறது. வேற்று மையை அடைந்த வாயுவினிடமிருந்தும் பிரகாசமுள்ளதும்பரிசுத தமும் அழகுள்ளதுமான அக்கினி உண்டாகிறது. அதன் குணம் ரூபமென்று சொல்லப்படுகிறது. விகாரப்பட்ட அக்னியிடமிருந் தும் ரஸமுள்ள ஜலமுண்டாகிறது. ஜலத்திலிருந்து கந்தமென்றும் குணதைதத்தரிக்கும் பூமி உண்டாகிறது. இவ்விதம் முதலான பூதங் களின்உறபத்தி சொல்லப்படுகிறது. [1] முதலாவது பூதத்தின்குணங் கள் மேன்மேலானபூததை அடைகின்றன. புலவகளுள் ஒவ் வொன்றிலுமுள்ள குணங்களைதத்தும் அதனதன்காரியதைதஅடை யுமென்று சொலலப்படுகின்றன. சிலர் அறியாமைபால மணததை (ஜலத்தில)கண்டி ஜலத்திலிருபபதாகக் கூறுவார்களாயினும் அதைப் பூமியில்மட்டுமிருப்பதாகவும் அதிலிருந்து ஜலத்தையும் வாயுவை யும் அடைந்திருப்பதாகவும் தெரிந்துகொள்ளவேண்டும். ஏழுவித மான உருவமுள்ளவைகளும் வெவ்வேறுகப் பலவிதவீரியங்க ளுள்ளவைகளுமான [2]இவைகள்முழுமையும்ஒன்றுசேராமலபிராணி

---

1 அதிகபாடமான ஏழுஸ்லோகங்கள கூறியதுகூறலால விடப்படடன.

2 மஹத அஹங்காரம் ஐந்துபூதங்கள.

களைப் படைக்கத்திறமையுள்ளவைகளாகவிலை. பெரியஉருவமுள்ள அவைகள் சேர்ந்து ஒன்றொடொன்று கலந்து சரீரங்களை அடைந்தன. அதனால், (ஆத்மா) புருஷனென்றுசொல்லப்படுகிறான். சரீரத்தை அடைந்தகாரணத்தால சரீரியாகிறான். [1]பஞ்சபூதமும் சமுள்ள ஸூக்ஷ்மசரீரமானது மூர்த்தியுள்ளதாயிருக்கிறது. கர்மங்களுடன் மஹாபூதங்களும் அதை அடைகின்றன. ஆதிகாலமாயிருப்பவர் எல்லாப்பூதங்களையும்படைத்துக்கொண்டு தவஞ்செய்யவேண்டி அந்தமஹாபூததேஹத படைக்கிறார். அவரையே ஸருஷ்டிகர்த்தரென்றுசொல்லுகிறார்கள். [2] அவரே பிராணிகளை உண்டுபண்ணுகிறார். அவரே பரமபுருஷர், பிறப்பிலலாத பிரம்மதேவர், தேவகணங்களும் ரிஷிகளும் பித்ருக்களும் [3]மானிடர்களும்மற்றஉலகங்களும் நதிகளும் கடல்களும் திக்குக்களும் மலைகளும் மரங்களும் மானிடர்களும் கின்னரர்களும் ராக்ஷஸர்களும் பசுக்களும் பக்ஷிகளும் மிருகங்களும் பாம்புகளுமாகியஅழிவிலாதனவும் அழிவுள்ளனவுமான ஸ்தாவரஜங்கமங்களிரண்டையும் உண்டுபண்ணுகிறார். அவர்களுள் எவர்கள் எந்தக் கர்மங்களை முன்ஸருஷ்டியில் அடைந்திருந்தார்களோ திரும்பவும் திரும்பவும்ஸருஷ்டிக்கப்படும்அவர்கள் அந்தக் கர்மங்களையே அடையும்படி செய்யப்படுகிறார்கள். அந்தஅந்தவாஸனையுள்ளவர்களாயிருந்துகொண்டு ஹிம்ஸை, அஹிம்ஸை, மென்மை, கொடுமை, தர்மம், அதர்மம், ஸத்யம், பொய்இவைகளை அடைகிறார்கள். ஆகையால, அது அவர்களுக்குப் பிரியமாகிறது. மஹாபூதங்களிலும் இந்திரியங்களுக்குரியவிஷயங்களிலும் சரீரங்களிலுமுள்ள வேற்றுமையையும் பூதங்களுக்குரிய உபயோகத்தையும் பிரம்மதேவரே படைக்கிறார். கர்மத்தை அறிந்தசிலர் மனிதருயறகியென்றும் வேறுசிலர் தெய்வமென்றும் பூதங்களைச்சிருஷ்டிப்பவர்கள் இயறகையென்றும் சொலலுகிறார்கள். [4] பௌருஷமென்னுங்கர்மமும் தெயவமும் இயறகையும் பயனைக்கொடுபபதில ஒன்றுசேர்ந்திருக்கின்றன. இம்மூன்றும் ஏவலசிலரிருப்பவையலல. இவைகளுக்கு எவ்விதத்திலும் பிரிதலிலலை. இவ்விதம் இநதக்கர்மமும் தெயவமும் பூதங்களின் இயற்கையும் இவவுலகதை உண்டுபண்ணுகின்றன. கர்மத்திலிருப்

1 ஞானேந்திரியம் ஐந்து, காமேந்திரியம் ஐந்து, பிராணன்களைந்து, மனம் ஒன்று.

2 'அவரே சரீரத்தில பிரவேசிக்கிறார்' எனபது பழையஉரை.

3 இது இரண்டுமுறை வருகிறது. மழுகுகளென்றும் கொளளலாம்.

4 'முயறசியும் தெயவமும் இயற்கையைசசாராது பலனைகொடுபபவை' என்பது பழையவுரை.

பவர்கள் சந்தேகிக்கத்தக்கபடியே சொல்லுவார்கள். ஸத்வகுணத்தி லிருக்கும்ஞானிகள் எங்கும்ஒன்றுனபிரம்மத்தைக் காரணமாகக்கண் டிருக்கிறார்கள். அந்தப்ரம்மஜ்ஞானத்தால பிராணிகளுக்கு மோக்ஷ மூண்டாகும். அந்தப்ரம்மஜ்ஞானத்திறகுச் சமமும் தமமும் ஸாதக மாகும். மனத்தாலவிரும்புகிற போகங்களெல்லாம் அந்தப்பிரம்ம ஜ்ஞானத்தால அடைவான். உலகங்களை உண்டுபண்ணுகிறப்ரம்மத தைத் தவத்தால அடைவான். பிரம்மதத்தன்மைபெறறமனிதன் எல லாப்பிராணிகளுக்கும் ராஜனிறன். ரிஷிகள் தவத்தால இரும்பக ளும் வேதங்களைக் கறறார்கள். ஆனியும் அதைமுழிலலாதகும் நித் தியமுமான வேதவாக்கானது பிரம்மதேவரால வெளியிடப்பட்டது. ரிஷிகளின்பெயர்களையும் வேதததைப்பறறிய அவர்களின்அறிவுகளை யும் பூதங்களின்காமருபக்ரியைகளையும் வேதங்களிலிருந்தே முதலில அந்தாஸ்வர் உண்டுபண்ணுகிறார். ரிஷிகளுக்குள்ள பெயர்களையும் வேதங்களைப்பறறிய அவர்களின்அறிவுகளையுமே பிரளயகாலத்திறகுப் பின் உண்டான மறறரிஷிகளுக்கு ப்ரம்மதேவர் உண்டுபண்ணுகிறார். வேதங்களில ஆத்மாவுக்குள்ள மோக்ஷவிதநியான து வேதாததிய யனம்,கிருஸ்தாஸ்ரமம்,வானப்ரஸ்தம்,பொதுவானதர்மம்,யாகங்கள், கீர்த்தியைததாததக்குதர்மம், கர்மாங்கங்களைபபறறிய உபாஸ்தியும் சரீரதநிலுள்ளமனமுதலியவைகளை ப்ரம்மமாகப பாவிதுச்செய்யப படும் உபாஸ்தியும் ஆதமருபமாகப் பாவிதுச்செய்யப்படும் பரமாத மோபாஸ்தியுமாகிய மூன்றுவிதஉபாஸ்திகள், மோக்ஷம்என்று பதது வழிகளாக உபதேசிக்கப்படுகிறது. வேதததைஅறிந்தவர்களால அறி யக்கடினமென்று வேதங்களிலெகூறபபடிவதும் வேதாந்தங்களிலிகத தெளிவாய்உபதேசிக்கபபடிவதுமானபிரம்மம் முன்சொன்னகிரமவழி யாகவே அறியப்படும். சரீரியானஜீவனுக்குத துவந்துவங்களுடன் கூடிய இவ்வேற்றுமையானது கர்மததாலுண்டானது. ஆத்மஜ்ஞித் தியென்னும் மோக்ஷரூபியானபுருஷன் பிரம்மஜ்ஞானதத்தால அவ்வேற றுமையை விலக்கிக்கொள்ளுகிறான். பிரளயமென்ற சப்தப்ரம்மம் பரப்ரம்மம்என்ற இரண்டுபிரம்மங்களையும் தெரிதுகொள்ளவேண் டும். சப்தப்ரம்மததைத் தியானிப்பதில ஸமர்த்தனானவன் பரப்ரம் மததை அறிவான். க்ஷத்திரியாசள் ஹோம்ஸையை யாகமாகக்கொண்ட வர்களென்றும்,வைஸ்யர்கள் ஹவிஸை யாகமாகக்கொண்டவர்களென் றும், சூத்திரர்கள் பணிவிடையை யாகமாகக்கொண்டவர்களென்றும், பிராம்மணர்கள தவத்தை யாகமாகக்கொண்டவர்களென்றும் சொல் லப்படுகிறார்கள். யாகங்களைச்செய்வதற்குரிய இவ்வித்தியானது திரே

தாயுகத்தில்உள்ளது. கிருதயுகத்தில் இவ்விரண்டிலுமிலாமலே பிரவ்ருத்திப்பார்கள். துவாபரயுகத்திலும்அப்படியே கலியுகத்திலும் யஜ்ஞங்கள் நாசமடைகின்றன. கிருதயுகத்திலுள்ளமனிதர்கள் வேறுபடாத தர்மமுள்ளவர்களாகிக் காம்யமானயாகங்களைத் தவிர்களால் வேறுகத்தெரிந்துகொண்டு விலக்கிவிட்டிருக்கும், யஜ்ஞம், ஸோமம்என்ற வேதங்களைக் (கூறபதுடன்) தவத்தையுஞ்செய்கிறார்கள். த்ரேதாயுகத்திலோ, வேதங்கள்யாவும் ஸ்தாவரங்களும் ஜங்கமமுமானப்ராணிகளெல்லாம் மிகவலிமையுடன் அடக்குகிறவைகளாகதமோதான்றின. த்ரேதாயுகத்தில சேர்ந்திருக்கும்வேதங்களும் யாகங்களும் 1வர்ணாச்ரமங்களும் ஆயுளின்குறைவால் துவாபரயுகத்தில பிரிவடைகின்றன. கலியுகத்தில தர்மம்நாசமடைவதால யாகங்களுடன் வேதங்கள்யாவும் மிகவும்நாசமடையும். அவைகள் காணப்படுவனவும் காணப்படாதனவுமாயிருக்கும். தர்மமென்பது கிருதயுகத்தில மனத்தைஜயித்தவர்களும் தவமுள்ளவர்களும் சாஸ்த்ரங்களுள்ளவர்களுமானபிராம்மணர்களிடம் நிலைபெறறதாகக் காணப்படுகிறது. அத்தர்மமானது ஒவ்வொருயுகத்திலும் அதர்மத்தின்வளர்ச்சிக்குத்தக்கபடி குறைவடைகிறது. வைதர்மத்தை உபதேசிப்பதற்குள்ளவேதவாதங்களும் சாஸ்த்ரத்தில்சொலலியபடி நாசமடைகின்றன. ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான பிராணிகள்யாவும் மழைக்காலத்தில் மழைக்குத்தக்கபடி எப்படி மிகஅதிகமாகுமோ அப்படியே ஒவ்வொருயுகத்திலும் தர்மங்களும் அதர்மங்களும் உண்டாகின்றன. ஒவ்வொரு ரூபங்களிலும் வெவ்வேறு உருவங்களுள்ள அடையாளங்கள் திரும்பவும்திரும்பவும் தமக்குத்தாமே காணப்படுகிறதுபோலப் பிரம்மா ருத்ரர்முதலானவர்களிடம் முதலும்முடிவுமில்லாதகாலத்தின்வேறறுமையும் வைக்கப்பட்டிருக்கிறது. முதலில் உனக்கு உபதேசிக்கப்பட்டவந்தக்காலரூபியானபிரம்மமே பிரஜைகளை உண்டுபண்ணவும் ஸம்ஹரிக்கவும்செய்கிறது. பெரும்பாலும் இயறகையாகத்வந்துவங்களுடன் கூடியவைகளாயிருக்கிற பிராணிகளைப் போஷிப்பதும் 2தரிப்பதுமாயிருப்பது காலமென்றே சொல்லப்படுகிறது ஸ்ருஷ்டி, காலம், கர்மா, வேதங்கள், கர்மததைச்செய்பவன், கர்மத்திற்குள்ளமுயறசி, கர்மதத்தின்பயன் இவையாவும் காலமே. மகனே ! நீ என்னிடம்கேட்டதை உனக்கு உபதேசித்தேன்.

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

இருநூற்றுமுப்பத்தொன்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் பிராணயாதநலியபற்றைப்பற்றிச் சுகநக்குச்சொல்லியது.)

பிருதிவியானதும் நீரின் தன்மைக்கில் ஸ்பர்சவாயு இவ்வுலகத்தைத் தன்சரீரத்தில் மிகவலிமையாக நிலைக்கச்செய்கிற பிராணயகதைச் சொல்லுகிறார். அப்பொழுது ஆகாயத்தில் ஸஞ்சரிக்கும் அக்னியின் ஸம்ஹாரஜ்வாலைகள் இவ்வுலகத்தை எரிக்கின்றன. அப்பொழுது இவ்வுலகம், ஸஞ்சரிக்கும் அக்னிஇவர்களுடைய ஒளிகளால் முழுமையும் நிறைக்க மிகவும் ஜ்வலிக்கிறது. பூமியிலுள்ள ஜங்கமங்களும் ஸ்தாவரங்களுமானபிராணிகள் முதலில் லயப்படுகின்றன. அவைகள் பூமியின் உருவத்தை அடைகின்றன. பிறகு, ஸ்தாவரமும் ஜங்கமமுமான யாவும்லயமடைந்தபொழுது மாமும்புலனுமில்லாதபூமியானது ஆமையின்முதுகுபோலக் காணப்படுகிறது. பூமியின் குணமானகந்தத்தையும் எப்பொழுது ஜலம் பறந்துபோகிறதோ அப்பொழுது கந்தம்போன பூமியானது லயத்தை அடையத்தக்கதாகிறது. அப்பொழுது ஜலம் ஆலைகளுள்ளதும் பெரிய சத்தமுள்ளதுமாகப பெருகுகிறது. அது இவ்வுலகமனைத்தும் நிறைந்துக்கொண்டு நிற்கவும் ஸஞ்சரிக்கவும் செய்கிறது. அப்பா! எப்பொழுது ஜலத்தின்குணங்களையும் அக்னி எடுத்துக்கொள்ளுகிறதோ அப்பொழுது குணம்போன ஜலம் ஜோதியில் லயப்படுகிறது. எப்பொழுதுஆகாயத்தின்கடலிலிருக்கும்ரவியை அக்னியின் ஜ்வாலைகள் சுற்றிக்கொள்ளுகின்றனவோ அப்பொழுது இவ்வுலகம்பாவும் ஆகாயமும் ஜ்வாலைகளால் நிறைந்து மிகவும் எரிகின்றன. ஜோதியின்குணமானரூபத்தையும் எப்பொழுது வாயுஎடுக்கிறதோ அப்பொழுது ஜோதி மிகவும் அவிந்துபோகிறது. பெரிதானகாற்று மிகவும்வீசுகிறது பிறகு, வாயுவானது தன்பிறவிக்குக் காரணமும் மூலமுமான ஆகாயத்தை அடைந்து திசைகளிலும் கீழும் மேலும் குறுக்குமாக மிகவும் வீசுகிறது. வாயுவின்குணமான ஸ்பர்சத்தையும் எப்பொழுது ஆகாயம் விழுங்குகிறதோ அப்பொழுது காற்று மிகவும் லயப்படுகிறது. ரூபம், ரஸம், ஸ்பர்சம், கந்தம் இவைகளில்லாததும் மூர்த்தியில்லாததுமான ஆகாசம் மிகவும் சப்தமுள்ளதாகி நிற்கிறது. ஆகாயமானது எல்லா உலகங்களிலும்சென்ற சப்தகுணமுள்ளதாகி நிற்கிறது.ஆகாயத்தின்குணமான சபதத்தை ஸ்தூலமாகக் காணத்தக்க உருவமுள்ள மனமானது எப்பொழுது விழுங்கு

கிறதோ அப்பொழுது பிரளயகாலத்தில அவ்வாகாசமும் லயப்படுகிறது. வ்யக்தமானமனத்தின்உருவம் வ்யக்தமும் அவ்யக்தமுமாயிருக்கிறது. இது பிராட்டென்னும் பிரம்மதேவரைப்பற்றிய பிரளயம். அந்தமனத்தை வியாபகமான குணமுள்ள ஸமஷ்டிமனத்தில பிரவேசிக்கும்படிசெய்து சந்திரன்விழுங்குகிறன். மனமானது சந்திரனிடத்தில் லயப்பட்டவுடன் இந்த ஆகாயத்துப் பெருமை உண்டாகிறது ; விசாரமென்னும் விருக்ஷியுள்ளதைவிழுங்குகிற ஸங்கல்ப உருவமான அந்த ஸமஷ்டிமனத்தை வெகுகாலத்தால் யோகியானவன் தன் வசமாக்கிக்கொள்ளுகிறன். ஸங்கல்பத்தை வசமாக்கிக்கொள்ளுவது மிக உத்தமமான ஞானமாகும். அந்த ஞானத்தையும் காலம் விழுங்குகிறது. அக்காலத்தையும் சக்தி விழுங்குகிறதென்று வேதம் உபதேசிக்கிறது. சக்தியைக் காலம்விழுங்குகிறதென்பதில்லை. அக்காலத்தையும் பிரம்மஜ்ஞானமுள்ளவன் தன்வசமாக்கிக்கொள்ளுகிறன். அப்பொழுது பிரம்மஜ்ஞானமுள்ளவன் ஆகாயத்தின்குணமான நாதத்தையும் (அதாவது சப்தப்ரம்மத்தையும்) ஆதமருபத்தில லயிக்கச்செய்கிறன். அந்த ஆத்மருபம் ஸூக்ஷ்மமான பரப்ரம்மமாகும். அது சாஸ்வதமும் மிகஉத்தமமுமாகும். இவ்விதம் ஸலலாவஸ்துக்களையும் பிரம்மமே லயப்படுத்திக்கொள்ளுகிறது. இது இவ்விதமே உண்மையானது. ஸந்தேகமில்லை. பரமாத்மருபிகளானயோகிகளால வித்தையில் மிக ஆவல்கொண்டவனும் உபதேசிக்கத்தக்கவனுமான சிஷ்யனைக்கண்டு உள்ளபடி இது உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸ்ருஷ்டிப்பிரளயங்களும் சப்தப்ரம்மமென்ற பிரணவமும் ஸூக்ஷ்மமான பரப்ரம்மமும்திரும்பவும் திரும்பவும் ஆயிரம் யுகங்களுக்குப்பின் துவக்கத்தில் பகல் இரவுகளும் சொல்லப்பட்டன.

இருநூற்றுநாற்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் பிராம்மணர்களின் தர்மாதலியவற்றைச் சுகருக்குச் சொல்லியது.)

நீ பூதக்கூட்டங்களைப்பற்றிக் கேட்டதை நான் இவ்விதம் சொன்னேன். பிராம்மணனுக்குச் செய்யத்தக்கது எதுவோ அதை இப்பொழுது உனக்கு உபதேசிக்கிறேன். இந்தப்பிராம்மணனுக்கு ஜாதகர்மமுதலிய அக்நிஹோத்ரமுள்ள கர்மங்களைச் செய்யவேண்டும்.

வேதங்களின் கரைகண்ட ஆசிரியரிடம் ஸமாவர்த்தனம்வரையில் வஸிக்கவேண்டும். குருவுக்குப்பணிவிடைசெய்வதில் உறசாகமுள்ள வனாயிருந்துகொண்டு வேலாவேதங்களையும் கற்றபின் வேதத்தின் அர்த்தமானயாகத்தைத் தெரிந்துகொண்டு குருவுக்குரிய கடனைத் தீர்த்தபின்பு ஸமாவர்தனஞ்செய்துகொள்ளவேண்டும். ஆசார்ய ரால அனுமதிகொடுக்கபபெறறும், அவன் பிரஜைகளைஉண்டுபண்ணு வதறகாகத் தாரங்களுடனே அலலது குருவினருகில் பிரம்மசர்யத் துடனே வனத்திலோ அலலது ஸங்யாஸிதர்மத்துடனே காண்கில் ஓர் ஆஸ்ரமததை அடைந்து சரீரததைவிடும்வரையில் விதிப்படி இருக்கவேண்டும். இந்தக்கிருகஸ்தனென்பவன் எல்லா ஆஸ்ரமங் களின் தர்மங்களுக்கும் மூலமென்றுசொலலப்படுகிறான். அந்தக்கிரு கஸ்தாஸ்ரமத்தில பாவஙகளைப்போக்கிக்கொண்டு பரிசுத்தனவன் எலலாஆஸ்ரமங்களிலும்வித்திபெறுவான். பிரஜையுள்ளவனும்வேத ங்களைக்கறறவனும் யாகஞசெய்பவனுமாகி மூன்றுருணங்களிலிருந் தும் விடுபட்டவனும் தன் கர்மங்களால் பரிசுத்தனுமாயிருப்பவன், பிறகு வேறுஆஸ்ரமங்களை அடையவேண்டும்.பூமியிலஎந்தஇடத்தை மிகப்பரிசுத்தமென்று தெரிந்துகொள்ளுகிறானோ அவ்விடத்தில் வஸிக்கவேண்டும். அவ்விடத்தில்இருந்துகொண்டு உத்தமமானகீர்த் தியை அடைவதில கம்பத்தக்கிலையை அடையமுயலவேண்டும். மிகபபெரியதவததாலும் கலவிகளைமுடிவுபெறச்செய்வதாலும் யாகத் தாலும் தானங்களாலும் பிராம்மணர்களுக்குக் கீர்த்திபெருகுகிறது. இந்தமனிதனுக்கு எதுவரையில புகழ்ச்சியை உண்டுபண்ணதக்க கீர்த்தி இவ்வுலகிலிருக்கிறதோ அதுவரையில புண்ணியஞசெய்தவர்க ளுக்குததக்கவையும் அழிவறறவையுமானஉலகங்களைமனிதன்அடை வான். அத்யயனம் செய்யவும் வேண்டும். அத்யயனத்தைச் செய் விக்கவும் வேண்டும். யாகங்களைச்செய்யவும் யாகங்களைச்செய்விக்க வும்வேண்டும். வீணை ப்ரதிக்ரஹத்தைப் பெறலாகாது. வீணை எலலாவிதத்திலும் தானஞசெய்யலாகாது யாகஞ்செய்விக்கத்தக்க மனிதனிடமிருந்தோ சிஷ்யனிடமிருந்தோ கன்னிகையிடமிருந்தோ மிக்க பொருள் வருமாகில் யாகஞ்செய்யவும் தானஞசெய்யவும் வேண்டும். எவ்விதத்திலும் ஒருவனுகப புஜிக்கக்கூடாது. கிருகத் தில் வஸிப்பவனை இந்தப் பிராம்மணனுக்கு வேறு புண் யம் சொல்லப்படவில்லை. தேவர்கள், ரிஷிகள், பித்ருக்கள், குருக்கள் இவர்களுக்கும் கிழவர்கள், நோயாளிகள், பசியுள்ள வர்கள் இவர்களுக்கும் (சத்குருவுக்குப்பயந்து) மறைந்திருப்பவர்

களும் தாபமுள்ளவர்களுமாகத தன்னிடத்திலிருக்கவிரும்புகிறவர் களுக்கும் சக்திக்குத்தக்கபடியோ சக்திக்குமீறியோ திரவியங்களையும் பக்குவமான அன்னத்தையும் அளிக்கவேண்டும். தானத்திற்குத்தகு தியுள்ள பூஜ்யர்களுக்கு அளிக்கததகாதது ஒன்றுமில்லை. மஹரத் மாவானகாச்யபரின்பொருட்டு ப்ரஹ்லாதன் உச்சைச்ரவமென்னும் குதிரையைக்கொடுத்துத் தேவர்களைகொண்டாடத்தக்க உலகங்களை அடைந்தான். உண்மைபேசுகிறவரும் பெரியகியமமுள்ளவருமான சுக்ராசார்யரும் 'நன்மொழிகூறித் தம்உயிரால் பிராம்மணன்உயிரைக் காப்பாற்றி ஸ்வர்க்கத்தை அடைந்தார். ஸங்க்ருதியின்புத்ரனானரந்தி தேவனும் மஹாதபோவன வஸிஷ்டரின்பொருட்டுக் குளிர்ந்ததும் சுவையுமானஜலத்தைக்கொடுத்து ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படி கிறான். அறிவுள்ள ஆத்ரேயனென்னும் அரசன் பூஜ்யரானஇந்த்ர த்ருமிக்குப் பலவகைப்பொருளை அளித்து அழிவில்லாத உலகங்களை அடைந்தான். உசீனரன்புதரனானசிபி பிராம்மணருக்காகத் தன் அங்கங்களையும் ப்ரியனானஔசீநரபுத்ரனையும் அளித்ததால் இங்கிரு ந்து தேவலோகத்தின்மேற்புறத்திறகுச் சென்றான். காசிராஜனான ப்ரதர்த்தனன் பிராம்மணன்பொருட்டுத் தன்கண்களை அளித்து இவ் வுலகிலும் மேலுலகிலும் ஒப்பற்றகீர்த்தியைப் பெறறான். தேவா வ்ருதனானவன் எட்டுக்கம்பிகளுள்ளதும் தங்கத்தால்செய்யப்பட்ட தும் மிகப்பெருமையுள்ளதும் ஆச்சரியமுமான குடையைக்கொடி த்து ராஜ்யத்துடன்கூடத் தேவலோகமடைந்தான். பெரியதேஜஸ்ஸு ள்ளவரும், அத்ரியின்குமாரருமானஸாங்க்ருதியானவர் சிஷ்யர்களு க்கு நிர்க்குணமானப்ரம்மதத்தைஉபதேசித்து மிகஉத்தமமான உலகங் களை அடைந்தார். பராக்ரமமுள்ள அம்பரீஷன் பதினேர் அர்ப்புதம் எண்ணிக்கையுள்ளபசுக்களைப் பிராம்மணர்களுக்குக் கொடுத்து ராஜ யத்துடன் தேவலோகமடைந்தான். பிராம்மணர்களுக்குவேண்டி ஸாவித்ரிஎன்பவள் திவ்யமான குண்டலங்களையும் ஜனமேஜயன் சரீ ரத்தையும் அளித்து உத்தமலோகத்தைப் பெற்றார்கள். எல்லாரத்தி னங்களையும்அளித்த வ்ருஷாதர்ப்பியும், பிரியமானஸ்தீரிகளையும் அழ கானகிருகத்தையும் அளித்த யுவனஸ்வனும் தேவலோகஞ்சென்றார் கள். விதேகதேசத்திறகுஅதிபதியான நிமியானவன் ராஜ்யத்தையும், பரசராமர்பூமியையும், கயன் பட்டணங்களுள்ள பூமியையும் பிராம்ம ணர்களுக்கு அளித்து றகதிபெற்றார்கள். பிராணிகளைப்படைக்கத் தக்க வஸிஷ்டர், பிரம்மதேவர் பிரஜைகளைக் காப்பாறறுவதுபோல, மேகம் மழைபெய்யாதிருக்கும்பொழுது எல்லாப்பிராணிகளையும்

ஜீவிக்கும்படிசெய்தார். கரந்தமன்புதநிரஞன மருத்தனென்னும்அர சன் அங்கிரஸுக்குக் கன்னியைதானஞசெய்து வேகமாகத் தேவ லோகமடைந்தான். புத்தியுள்ளவர்களிறநிறந்தவனும் பாஞசாலதேச த்திறகுஅதிபதியுமான பிரம்மதததனென்னும்அரசன் பிராம்மண ஸ்ரேஷ்டர்களுக்குச் சகஸ்ரகோடிபசுக்களைக்கொடுத்து உததமலோகங்களை அடைந்தான். மித்ரஸஹனென்னும்அரசனும் மதயந்தியென்னும் தன்மனைவியை மஹாதமாவானவஸிஷ்டருக்குஅளித்து அவருடன் ஸ்வர்க்கமடைந்தான். பெரியகீர்த்தியுள்ளவனும் ஸுதாஸனென்னும்ராஜ ரிஷியானவன் பிராம்மணருக்காகப் பிரியமான பிராணனையும்கொடு த்துமிகஉத்தமமானலோகங்களை அடைந்தான். சதத்யும்னனென்னும் அரசன் போக்யவஸ்துக்கள்யாவும்நிறைநததும் ஸ்வர்ணமயமுமான வீட்டை முத்கலருக்குஅளித்து ஸ்வர்க்கலோகஞசென்றான். த்யுதி மானென்னும்பெயருடன் பிரஸித்தனும் பாக்யசாலியுமானஸால வதேசத்தரசன் ரிசிகரின்பொருட்டு ராஜ்யத்தைக்கொடுத்து மிகஉத்தம மான உலகங்களை அடைந்தான். பிரபுவானலோமபாதனென்னும் ராஜரிஷி ரிஷ்யஸருங்கரின்பொருட்டுப் பெண்ணைசாந்தையை அளி த்ததால் பெரியபோகங்களைஅதைதையும் அடைந்தான். மதிராஸ்வ னென்னும்ராஜரிஷிமிகஅழகான இடையுள்ளகன்னிகையைஹிரண்ய ஹஸ்தருக்குக்கொடுத்து தேவர்களால துதிக்கபடும் உலகங்களை அடைந்தான். பெரியதேஜஸ்ஸுள்ள ப்ரஸேனஜித்தென்னும் அரசன் கன்றுகளுடன்கூடியலக்ஷம்பசுக்களைத தானஞசெய்து மிகஉயர்ந்த உலகங்களை அடைந்தான். இவ்விதம் அடங்கியமனமுள்ளவர்களும் இந்திரியங்களை வென்றவர்களுமான இவர்களும் மற்றுமுள்ளவர்களு மான பலமஹாத்மாக்கள் தானததாலும் தவத்தாலும் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். பூமியுள்ளவரையில அவர்களுடையகீர்த்திநிலைபெற் றிருக்கும். தானங்களாலும் யாகங்களாலும் பிரஜைகளை உண்டு பண்ணுவதாலும் இவர்கள் தேவலோகமடைந்தார்கள்.

இருநூறறுகாற்பத்தோராவது அத்தியாயம்.

மோக்ஷ தர்மம். (முதாடர்ச்சி.)

(வ்யாஸர் பிராம்மணர்களின் தர்மத்தையும் ஞானத்தின் சிறப்பையும் சுகருக்குச் சொல்லியது.)

1 உததமமான நிலைமையை அடைந்தவன் வேதங்களில் கூறிய த்ரயீ என்னும் ஏத்தையை விசாரிக்கவேண்டும். ஆறுகர்மங்களிலும்

1 'கமகாலைடஉகளை கன்று அறிந்தவன் ஞானகாண்டத்தைப் பாரக்க வேண்டும்' என்றும் கொளளலாம்.

நிலைபெற்றவனும் பூஜ்யனுமாயிருப்பவன் ருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற இந்த வேதாக்ஷரங்களிலேயே நிலைபெற்றிருப்பான். வேதத்தில்கூறிய விஷயங்களில் ஸமர்த்தர்களும் ஆத்மவிசாரத்தில் ஸமர்த்தர்களும் ஞானமுள்ளவர்களும் பெரியபாக்யம் பெற்றவர்களுமானவர்கள் ஸ்ருஷ்டிபிரளயங்களை அறிகிறார்கள். ஸ்ரேஷ்டிதர்மத்துடனிருக்கவேண்டும். விதிப்படிகாரியங்களைச் செய்யவேண்டும். பிராம்மணன் பிராணிகளுக்குத் தன்பயமின்றி ஜீவனத்தை அடையவிரும்பவேண்டும். ஸாதுக்களிடமிருந்து நலல அறிவுள்ளவனும் சிஷ்டனும் சாஸ்திரங்களில் ஸமர்த்தனும் உலகத்தில் தன் தர்மப்படி கர்மங்களைச் செய்கிறவனும் (தர்மங்களின்) ஸங்கரமில்லாதவனுமாயிருக்கவேண்டும். கிருஹஸ்தனுமிருக்கும் அந்தப்பிராம்மணன் அந்தஆச்ரமகர்மங்களிலும் உறுதியாயிருக்கவேண்டும். எப்பொழுதும் ப்ரத்தையுள்ளவனாக [1]ஐந்துயஜ்ஞங்களையும் செய்யவேண்டும். தைரியமுள்ளவனும் அஜாக்ரதையில்லாதவனும் அடக்கமுள்ளவனும் தர்மமறிந்தவனும் புத்தியுள்ளவனும் ஸந்தோஷத்தையும் மதத்தையும் கோபத்தையும் விட்டவனுமான பிராம்மணன் துன்பமடையமாட்டான். தானம், அத்யயனம், யாகம், தவம், வெட்கம், ருஜுவாயிருப்பது, அடக்கம் இவைகளால தேஜஸ் மிகவும் வளருகிறது. பாவமும் குறைகிறது. பாவத்தைவிலக்கியவனும் புதுநியுள்ளவனும் லகுவான ஆகாரமுள்ளவனும் இந்திரியங்களை வென்றவனுமாகக் காமத்தையும் கோபத்தையும்வசமாக்கிக்கொண்டு பரமாத்மபதத்தை அடையவிரும்பவேண்டும். அக்னிகளையும் பிராம்மணர்களையும் தேவர்களையும் பூஜிக்கவும் நமஸ்கரிக்கவும்வேண்டும். அமங்களமானவார்தையையும் அதர்மமானஹிம்ஸையையும் விலக்கவேண்டும். பிராம்மணனுக்கு மிகவும்பழமையான இந்தவருதநிதி விதிக்கப்படுகிறது. நலலஞானத்தைஅடைவதுடன் கர்மங்களைச்செய்பவன் கர்மங்களில் லிப்தநிபெறுவான். ஐந்துஇந்திரியங்களென்னும் ஜலமுள்ளதும் லோபமென்னுங்கரையுள்ளதும் கோபமென்னும்சேறுள்ளதும் தாண்டமிக்கடினமானதும் எதிர்தப்செலலத்தகாததும் பயங்கரமுமான நதியைப் புத்தியுள்ளவன் தாண்டிவான். மிக்கஅவிவேகத்தை உண்டுபண்ணத்தக்க காலம் எப்பொழுதும் ஜாக்ரதையாயிருப்பதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். பெரியதும் விதிகளில் உபதேசிக்கப்படுவதும் வலிமையுள்ளதும்தடையில்லாததுமானஸ்வபாவமென்னும்பிரமாணத்தால், உண்டானஉலகம்எப்பொழுதும்இழுக்

[1] ஆதிபாவம் 559-ம்பக்கம் குறிப்பிதகாண்க.

கப்படுகிறது. காலமென்னும்ஜலமுள்ளதும் பெரியதும் எப்பொழுது முள்ளவருஷமென்னும் சுழலுள்ளதும் மாதமென்றஅலையுள்ளதும் ருதுவென்றவேகமுள்ளதும் பக்ஷமென்னும் புற்பூண்டிகளுள்ளதும் கண்மூடிவதுநிறப்பதென்னும் நுரையுள்ளதும் இரவுகளென்றவேக முள்ளதும் காமமென்றமுதலையுள்ளதும் பயங்கரமானதும் வேதமும் யாகமுமாகிறதெப்பமுள்ளதும் தர்மமென்றதீவுள்ளதும் போகம்பொ ருள் இவைகளைப்பற்றியபிராணிகளின்கூச்சலுள்ளதும்உண்மையான வேதவார்த்தைகளால்கூறிய மோக்ஷமென்னுங்கரையுள்ளதும் பலவிதமான ஹிம்ஸையென்னும்மரங்களோடிழுப்பதும் பிரம்மத்தால்செய்யப்பட் டதுமான யுகமென்னும்பிரவாகத்தால பிரம்மதேவராலபடைக்கப் பட்டபிராணிகள் யமனிருப்பிடத்திற்கு இழுக்கப்படுகின்றன. அறி வுள்ளவர்களானதீரர்கள் அறிவென்னும்தெப்பங்களைக்கொண்டு இந்த வெள்ளத்தைத் தாண்டுகிறார்கள். தெப்பமில்லாதவர்களான அறிவில் லாதவர்கள் என்னசெய்யப்போகிறார்கள் ? அறிவுள்ளவனே தாண்டு வான். அறிவிலலாத வேறுமனிதன் தாண்டமாட்டானென்பது பொருத்தமே. அறிவிற்சிறந்தவன் எல்லாவிடத்திலும்தூரத்திலுள்ள குணதோஷங்களையும் பார்ப்பான். அறிவில்லாதவனே ஆசையுள்ள மனமுள்ளவனும் சஞ்சலமானசித்தமுள்ளவனும் அற்பபுத்தியுள்ள வனுமாக ஸம்சேகதத்தால இதைத தாண்டமாட்டான். உட்கார்ந்து கொண்டேயிருப்பவன் செல்லமாட்டானன்றோ? அவிவேகமுள்ள வன் ஞானமென்னுந்தெப்பமிலலாமையால பெருங்குற்றத்தையும் அறியமாட்டான். ஆசையென்னும்முதலையாலபிடிக்கப்பட்ட இந்த அவிவேகிக்கு ஞானமும் தெப்பமாகாது. ஆகையால், பகுத்தறிவுள்ள வன் முழுகாமல்கிளம்பவேண்டி முயற்சிசெய்யவேண்டும். பிராம் மணனுக்குரிய தர்மமுள்ளவனேயிருப்பதுவே அவனுக்குக் கிளம்பத் தக்கஉபாயமாகும். மூன்முதலைமுறையாகப் பரிசுத்தமான குலத்தில் பிறந்தவனும் (அத்யயனம் யாகம் தானமென) மூன்றுகர்மங்களைச் செய்கிறவனும் (அத்யாபனம் யாஜனம் ப்ரதிக்ரகமென) மூன்றுகர் மங்களில்ஸந்தேகமுள்ளவனுமாகி ஞானத்தால் தாண்டிச்செல்லும் விதமாக அதிலிருந்து மேலேசெல்லமுயறசிசெய்யவேண்டும். ஸம்ஸ காரங்களோப்பெறறவனும்அடக்கமுள்ளவனும் நியமமுள்ளவனும் மன த்தைஅடக்கியவனும் அறிவுள்ளவனுமாயிருப்பவனுக்குத் தடை யின்றி இவ்வுலகிலும்மேலுலகிலும் விதிதியுண்டாகும். கிருகஸ்தனு யிருப்பவன் கோபமும் அஸூயையுமிலலாதவனாகி அத்ததர்மங் களிலிருக்கவேண்டும். எப்பொழுதும் அதிதிகளுக்கிட்டமிச்சத்தைப்

புஜிப்பவனும் ஐந்துயஜ்ஞங்களையும் செய்பவனுமாயிருக்கவேண்டும். பெரியோர்களின் தர்மப்படி நடக்கவேண்டும். விதிப்படி கர்மத்தைச் செய்யவேண்டும். உலகத்திறகுவிரோதமில்லாததும் இகழ்ச்சியில் லாததுமானஜீவனத்தை அடைய விரும்பவேண்டும். சாஸ்திர ஞானத்தின்உண்மையைத்தெரிந்துகொண்டவனும் பெரியோர்களின் ஆசாரங்களைநன்குஅறிந்தவனும் தன்தர்மப்படிகர்மங்களைச்செய்கிற வனும் கர்மத்தில் ஸங்கரமில்லாதவனும் கர்மமுள்ளவனும் ப்ரத்தை யுள்ளவனும் பெரும்பாலும்அடக்கமுள்ளவனும் அஸூயையில்லாத வனும் தர்மாதர்மங்களின்விசேஷங்களை அறிந்தவனுமாயிருப்பவன் தாண்டக்கடினமானஎல்லாத்துன்பங்களையும் தாண்டுவான். தைரிய முள்ளவனும் அஜாக்ரதையில்லாதவனும் அடக்கமுள்ளவனும் தர் மங்களைஅறிந்தவனும் புத்தியுள்ளவனும் ஸந்தோஷமும் மதமும் கோபமும்அறறவனுமானபிராம்மணன் துன்பப்படமாட்டான்.பழை யதானஇந்தஶ்லோகம் பிராம்மணனுக்கு விதிக்கப்படுகிறது. அறி வின்பெருமையுடன் கர்மங்களைச்செய்கிறவன் எல்லாவிஷயத்திலும் லித்திபெறுவான். அறிவிலலாதவன் தர்மவிருப்பத்துடன் அதர் மத்தைச் செய்வான். தர்மத்தையோ தர்மம்போன்றதையோ அவன் சோகமுள்ளவன்போலச் செய்வான். தர்மத்தைச்செய்கிறேனென்று அதர்மத்தைச் செய்வான். அகர்மதில்விருப்பமுள்ளவனுகித்தர்மத் தைச் செய்வான். அறிவிற்சிறியவனுன.அவன் இரண்டுகாமங்களையும் நன்றுகத்தெரிந்துகொள்ளாமல் பிறப்பவனும் இறப்பவனுமாயிருப்பான்.

இருநூற்றுநாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர்,ஞானம்மோக்ஷகாரணமென்பதைச்சுகருக்குச்சொல்லியது.)

மனிதன் [1] மனத்தால மூழ்குகிறவனும் கிளம்புகிறவனுமாக இழுக்கப்படுகிறான். அவன் ஸாதனத்தை அடைந்தபின் மோக்ஷத் தை அடையவிரும்புவானுகில் ஞானமென்னும் தெப்பமுள்ளவனு யிருக்கவேண்டும். அறிவுள்ளவர்கள் ஞானத்தாலஉண்பெண்ணப் பட்டதெப்பங்களால் அறிவிலலாதவர்களைக் கரையேறச்செய்கிறர் கள். அறிவில்லாதவர்கள் தம்மையோ மற்றவர்களையோ எவ்விதத்தி லும் கரையேறச்செய்யத்தக்கவர்களல்லர். காமமுதலியதோஷங்களை

1 'காலப்ரவாஹத்தால்' என்பது வேறுபாடம்.

அறுத்தமுனியானவன் யோகத்தில் முயற்சியுள்ளவனுகித் *1 தேசம், 2 கர்மா, 3அனுராகம், 4நிரவியம், 5உபாயம், 6அபாயம், 7நிச்சயம், 8 கண்முதலியவை, 9ஆகாரம், 10ஸம்ஹாரம், 11மனம், 12தரிசனம் எனப்பன்னிரண்டினாதனங்களைத் தேடிக்கொள்ளவேண்டும். உத்தம மானஞானத்தைவிரும்புகிறவன் புத்தியினால் வாக்கையும் மனத்தை யும் அடக்கவேண்டும். தனக்குமோக்ஷத்தைவிரும்புகிறவன்ஞானத் தினால் புத்தியை அடக்கிக்கொள்ளவேண்டும். இந்தவாக்குமுதலிய வைகளை அடக்கும்வழியை மனிதன் கண்டானுகில் அவன் மிகக் கொடியவனுனலும், எல்லாவேதங்களையும் அறிந்தவனுனலும், வேத மோதாதபிராம்மணனுனலும், தர்மமறிந்து விதிப்படி யாகத்தைச் செய்தவனுனலும், மிகவும் பாவத்தைச்செய்கிறவனுனலும், புரு ஷப்புலியாகுலும், மிகவும்பயப்படுகிறவனுனலும், தாண்டமிக்கடி னமான ஜராமரணமென்னும்கடலை இவ்விதம் தாண்டுகிறான். இவ் விதயோகமுறைப்படி முழுவதும்அப்பியாஸஞ்செய்பவனுனலும்இதை அறியவிருப்பமுள்ளவனுனலும் அவன் முடிவில சப்தப்ரம்மத்தை மீறிச்செல்லுவான். தர்மத்தைஇருப்பிடமாகக்கொண்டதும் வெட் கத்தை 13வருந்தமாகக்கொண்டதும் (முன்கூறிய) உபாயபாயங்களை மூக்கணையாகக்கொண்டதும் அபானமென்னும்அச்சுள்ளதும் பிராண னென்னும் நுகமுள்ளதும் ப்ரஜ்ஞையென்றஆயுஞள்ளதும் ஜீவ னென்றபிடிப்புள்ளதும் ஜாக்ரதையென்ற சேர்க்கையுள்ளதும் நன்ன டக்கையோடிருப்பதென்னும் கட்டுள்ளதும் பார்ப்பது, கேட்பது, தொடுவது, மோப்பது இவைகளைக் குதிரையாகக்கொண்டதும் (நற் குணங்களைப்பறறிய) அறிவைக் குடமாகக்கொண்டதும்எல்லாச்சாஸ் திரங்களையும் சாட்டையாகக்கொண்டதும் ஞானத்தை ஸாரதியாகக் கொண்டதும் க்ஷேத்ரஜ்ஞனென்னும் ஆத்மாவால் ஏறிக்கொள்ளப் பட்டதும் அழகுள்ளதும் உறுதியுள்ளதும் ஸ்ரத்தையையும் அடக் கதையையும் முன்னிட்டதும் தியாகமென்னும் கடிவாளமுள்ளதும் க்ஷேமத்தைத்தருவதும் பரிசுத்தமானவழியிலசெலலுவதும் தியான

* வேறுபாடம். 1 முக்கலமுதலியன இல்லாதபரிசுத்தமான இடம்.
2 யோகத்திற்குவிரோதமில்லாதகடை. 3 நேசத்துடன்கூடிய விஷயன்.
4 ஜலமுதலியவை. 5 யோகத்திற்கு அங்கமான ஆஸனமுதலியவை.
6 யோகத்திற்கு இடையூறானவைகளை விலக்குதல்.
7 சாஸ்திரத்திலும் குருவின்உபதேசத்திலும் பெரியநம்பிக்கை.
8 அவைகளின் அடக்கம். 9 பரிசுத்தமான உணவு.
10 விஷயபோகங்களிலிருந்து விலகுதல். 11 அதன் அடக்கம்.
12 பிறப்பு இறப்பு முதலியவைகளைத் தே ஷ்மனத் தெரிந்துகொள்வது.
13 ரதத்தைக் காப்பதாகிய ஓர் உறுப்பு.

மென்னும்தேசத்தைநோக்கிச்செல்லுவதும் (மோக்ஷவிருப்பமுள்ள) ஜீவஞல்லூட்டப்படுவதும் திவ்யமுமான யோகரதமானது பரமாத்மாவென்னும் லோகத்தின் அருகில் விளங்குகிறது. இனி, மிகவும் சீக்கிரமாகப் பரமாத்மாவை அடையவேண்டுமென்ற மனமுள்ளவனும் இவ்விதரதத்தைஓட்டவிரும்புகிறவனுமாயிருப்பவனுக்குவிஷ்ணுவாகச்செல்லத்தக்கவிதியை உபதேசிக்கிறேன். வாக்குமுதலியவைகளை அடக்கியவனே முழுமையும் அடைகின்றவனும் [1]தூரத்திலும் அருகிலுமுள்ள, விஷயங்களைப்பற்றியவையுமான [2]ஏழுதாரணைகள் வேறுஇருக்கின்றன. ஆனல, அவைகள் தாமதமுள்ளவைகள். யோகியானவன் ப்ருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் இவைகளைப்பற்றிய ஐஸ்வர்யத்தை முறையே அடைவதுபோல அகங்காரம், புத்தி, அவ்யக்தம் இவைகளைப்பற்றிய ஐஸ்வர்யத்தையும் முறையேஅடைகிறன். யுக்தியுடன் யோகத்தை அப்பியஸிப்பவனுக்குண்டாகத்தக்க அனுபவக்கிரமங்களையும் அப்படியே யோகத்திலிருந்துகொண்டு தன்சரீரத்திலுள்ளிருக்கும் தத்வத்தைப்பார்க்கிறயோகியின்வ்ருத்தியையும் சொல்லுகிறேன். ஆத்மாவிறருடைய இவ்விதரூபங்கள் ஸூக்ஷ்மமாகையால் அவைகளை யோகாப்பியாஸததால ஸ்தூலசரீரத்திலிருந்துவிடுபட்டவனே பார்ப்பான். புகைபோன்றபனியானது எவ்விதம் ஆகாயத்தில் வியாபிக்குமோ அவ்விதம் ஸ்தூலசரீரத்திலிருந்துவிடுபட்ட யோகியின்பார்த்திவமான ஸூக்ஷ்மரூபம்உலகத்தைவ்யாபிப்பதாயிருக்கும். பிறகு, புகைபோன்ற அந்தரூபம் மறைந்தும் இரண்டாவது ரூபம் தோன்றும். அப்போது ஆகாயத்திலுள்ள ஜலரூபத்தைப்போல யோகியானவன் அந்தச் சரீரத்திலேயே ஜலரூபத்தைப் பார்க்கிறன். ஜலரூபத்தின் தோறறத்தையும் மீறிச்செல்லும்பொழுது இந்த யோகிக்குத் தேஜோரூபம் பிரகாசிக்கிறது. இந்தயோகிக்குத்தோன்றும் அந்தத்தேஜோரூபம்விலகினபின் ஸூக்ஷ்மமும் அழிவிலலாததுமான வாயுவின்ரூபம் மஞ்சள்வஸ்ரதிம்போல அந்தயோகிக்குக் குறைவின்றிப் பிரகாசிக்கிறது. அந்தவாயுரூபம்விலகியபின் ஆகாசரூபம்தோன்றுகிறது. ஆகாசரூபம்விலகியபின் அந்தயோகிக்குப் புத்தியின்ரூபம் பிரகாசிக்கிறது. ஆந்தயோகிக்கு ஆட்மெயிரின்ரூபத்திற்குச்சரியானநிறமுள்ளதாகப் புத்தியின்ரூபம் பிரகாசிக்கிறது. பிறகு, பரி

1 சரீரதத்திற்கு வெளியிலுள்ளதும் உளளிலுள்ளதும் என்றுகருத்து.

2 ஐந்துபூதங்கள் அகங்காரம் புத்தி இவைகளைப்பற்றியதாரணைகள் ஏழு. ஏழுஎன்பதற்குப் பலவிதமான தாரணைகளென்று பொருளகொள்ளவேண்டும். 'தாரணைஎன்பது ஒருவிஷயத்தில மனத்தை நிறுத்திவைப்பது' என்பது பழையஉரை.

சுத்தமான ஆகாசஸ்தானத்தில் லயமடைந்து [illegible]ந்த யோகியானவன் அகங்காரத்தில் பிரகாசிக்கிறான். ப்ரம்மத்தை அடைகிறயோகிக்குக் [1]கறுத்தும் அகங்காரத்தின் லயஸ்தானமுமான ஆகாயமும் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வித்தவித்திகளுண்டானபின் உண்டாகும்பிரயோஜனங்களே என்னிடமிருந்துகேள். பூமியையுயித்ததினுலுண்டானஐஸ்வர்யங்களுள்ளவனுக்கு இஷ்டப்படிஸ்ருஷ்டிக்கும் சக்தி உண்டாகிறது. அத்தயோகியானவன் ப்ரம்மதேவரைப்போலக் கலங்கமில்லாதவனுகித் தன்சரீரத்திலிருந்து பிரஜைகளே உண்டுபண்ணுகிறான். வாயுவின்ஜயத்தாலுண்டாகும் ஐஸ்வர்யம்வந்தால் கையாலோ காலாலோ கட்டைவிரல்தனிமாதத்திரத்தாலோ பூமியை நடுங்கச்செய்வான். ஆகாசஜயத்தை அடைந்தவன் ஆகாயத்திறகுச் சரியான ரூபமுள்ளவனுயிருப்பதால் ஆகாயத்தில் விளங்குவான்; தன் ஆகிருதியில [2]அந்தர்த்தானசக்தியுடையவனுமாவான். ஜலத்தை ஜயித்தவன் இஷ்டப்படி தடாகமுதலியவற்றின்ஜலங்களேக்குடிக்கச் சக்தியுள்ளவனுவான். தேஜஸைஜயித்தால இத்தயோகியின் தைஜஸமானரூபமானது காணப்படுவதுமில்லை; அப்படியே அவிவதுமில்லை. அகங்காரம்தன்குஜயிக்கப்பட்டால இத்தஜத்துபூதங்களும் இத்தயோகிக்கு வசமாகச்செலவுவனவாகவிருக்கும். இத்தஆறுக்கும் ஆத்மாவானபுத்தியானது ஜயிக்கப்படுமானால (அணிமாமுதலிய) ஐஸ்வர்யமுடையவனுவான். தோஷமில்லாதஅறிவானது பூர்ணமாக இத்தயோகியை அடைந்திருக்கும். அவ்வித்தமே புத்திமுதலியவைகளுடன்சேர்ந்த ஸ்தூலமாகக்காணப்படும்ஆத்மரூபத்தை வ்யக்தமென்றுபெயர்கொண்ட இவ்வுலகமானது எந்தப்ரம்மத்திலிருந்து வெளிவந்ததோ அந்தஸூக்ஷ்மமான ப்ரம்மரூபமாகத தெரிந்து கொள்ளுகிறான். அவைகளின் ஸூக்ஷ்மமானப்ரம்மதைப்பற்றிய வித்தையை என்னிடமிருந்து விரிவாகக்கேள். அப்படியே [3]ஸாங்க்ய சாஸ்திரத்திலசொல்லியதும் ஸ்தூலமானபிரபஞ்சத்தைப்பற்றியதுமானவிஷயத்தையும் முதலில் என்னிடமிருந்து தெரிந்துகொள். யோகம், ஸாங்க்யம் இரண்டிலும் வேறறுமையின்றி இருபத்தைந்து தத்வங்கள் ஸமமாயிருக்கின்றன. அவைகளிலுள்ள விசேஷத்தை என்னிடமிருந்து கேள். உற்பத்தி, வளர்ச்சி, ஜரை, மரணம்என்ற நான்குலக்ஷணங்களுடன்கூடியதுவ்யக்தமென்றுசொல்லப்படுகிறது. இதைவிட வேறுயிருப்பது அவ்யக்தமென்று சொல்லப்படுகிறது. வேதத்தில கூறிய வித்தாந்தங்களிலும் இரண்டு ஆத்மாக்கள் உதா

1 வேறுபாடம். 2 வேறுபாடம். 3 வேறுபாடம்.

கரிக்கப்படுகின்றன. அவைகளில் முதலானதை (முன்கூறிய) நான்கு லக்ஷணங்களுள்ளதும் அவ்யக்தத்திலிருந்துஉண்டானதும் நான்கு விதமானபுருஷார்த்தங்களுக்குக்காரணமுமான புத்தியென்று சொல்லுகிறார்கள். மற்றொன்றான புத்தியென்னும்ஸத்வம் க்ஷேத்ரஜ்ஞனென்னும்ஜீவன் இவ்விரண்டும் அவ்யக்தலக்ஷணமுள்ளவையாகும். வேதங்களில்சொலலப்படும்இரண்டுஆத்மாக்களும் விஷயங்களில் பற்றுதலுள்ளவைகளாயிருக்கின்றன. விஷயங்களிலிருந்து அவைகளிலிருந்து வேறுக்ஆத்மாவைஅறிவது ஞானமுள்ளவர்களின்லக்ஷணமென்று தெரிந்துகொள். அவன் அபிமானமிலலாதவனும் அகங்காரமில்லாதவனும் துவந்துவங்களிலிருந்து விலகியவனும் ஸந்தேகங்களை அறுத்தவனுமாயிருப்பான்; கோபிக்கவும்மாட்டான்; பகைக்கவும்மாட்டான்; பொய்யானசொறகளைப் பேசமாட்டான்; நிந்திக்கப்பட்டாலும் அடிக்கப்பட்டாலும் ஸ்நேகத்தைப்பாவிப்பதல்லாமல கேடுநினைக்கமாட்டான்; கடுஞசொல், கொடியசெய்கை, மனத்தில்கெட்டஎண்ணம் இம்மூன்றையும்விலக்கினவனும் எல்லாப்பிராணிகளிடங்களிலும் ஒரேநிலையுள்ளவனுமாயிருந்துகொண்டு ப்ரம்மதேவரைப்போன்றவனுயிருப்பான்; விருப்பமுள்ளவனல்லாதவனும் விருப்பமிலலாதவனலலாதவனும் சரீரயாத்ரைமட்டில் நிலையுள்ளவனும் சாபலயமில்லாதவனும் பயமற்றவனும் அடக்கமுள்ளவனும் ஒருவிதவேஷமுமில்லாதவனும் வேஷமில்லாதவனலலாதவனுமாயிருப்பான். இவன்மனம் ஏகாக்ரத்தன்மையிலலாதிராது. புழுதில்லாத ஸங்கலபமுடையவனுயிருப்பான். எலலாப்பிராணிகளிடமும் ஒரேவிதமானஸ்நேகமுள்ளவனும் மண்கட்டியையும் கல்லையும் பொன்னையும் ஸமமாகக்கருதுபவனும் விருப்புவெறுப்புக்களில்ஸமமாயிருப்பவனும் தைரியமுள்ளவனும் தன்னைப்பறறிய நிந்தைஸ்துதிகளைஸமமாகக்கொண்டவனும் எலலாப்போகங்களிலும் விருப்பமற்றவனும் உறுதியானபிரம்மசரியவ்ரதமுள்ளவனும் எலலாப்ராணிகளுக்கும் கேடுசெய்யாதவனுமான இவ்விதஞானியானவன் முக்தியடைகிறான். யோகத்திலிருந்து எந்தக்காரணங்களால் எவ்விதம் முக்தி அடைகிறார்களென்று தெரிந்துகொள். யோகத்தாலுண்டாகும் அணிமாமுதலிய ஐச்வர்யத்தைவிட்டு விலகினவன் முக்தி அடைகிறான். இவ்விதம் (அந்தஅந்தவிதத்தாந்தத்தின்) அபிப்பிராயப்படி உண்டாகும் அறிவானது ஸந்தேகமின்றி உனக்கு உபதேசிக்கப்பட்டது. இவ்விதமிருப்பவன் துவந்துவங்களிலிருந்து விடுபட்டவனுவான்; பரமாத்மாவையும் அடைவான்.

இருநூற்றுநாற்பத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் பிராணிகளின் உயர்வுதாழ்வையும் ஞானத்தின் சிறப்பையும் சுகருக்குச் சொல்லியது.)

குருவின் உபதேசத்தை அடைந்தபின் தீரபுருஷன் ஞானமென்னும் தெப்பத்தைப்பெற்றுக்கொண்டு மூழ்கினாலும் கிளம்பினாலும் தன்னுடையமோக்ஷத்திற்குக் காரணமானவித்தைதன்னையே அடுத்தவனாயிருக்கவேண்டும்' என்றுசொன்னார். சுகர், 'அந்தஞானம் எது? (ஜனனமரணங்கள்) இரண்டையும்விலக்கத்தக்கவித்தை எது? பிரவருத்திநிரூபமானதர்மமா? அல்லது, நிவருத்தியா?' என்றுகேட்க, வ்யாஸர் சொல்லத்தொடங்கினார். 'காரணத்தின் ஸத்தையில்லாமலே ஸ்வபாவத்தால்உலகம்இருக்கிறதென்றுபார்க்கும்மூடனானவன் புத்தியில்லாதவர்களும் [1]யுக்திதெரியாதவர்களுமான எல்லாச்சிஷ்யர்களையும் ஸந்தோஷிக்கச்செய்கிறான். அவன் யாதொருபயனையும் அடையமாட்டான். (ப்ரத்யக்ஷமாகக்காணப்படாததால ஈஸ்வரன் இல்லையென்றும் அந்தஅந்த வஸ்துக்களின்) ஸ்வபாவமே காரணமென்றும் ஒரே உறுதியாக எவர்கள் கருதுகிறார்களோ அவர்கள் [2]மூஞ்சையென்னும் புல்லைச்சோதித்து அதனுள்ளிருக்கும் இதழையும் வேறுஎதையும் அடையமாட்டார்கள். இந்தப்பக்ஷததைப்பிடித்துக்கொண்டு ஸ்வபாவமேகாரணமென்றறிந்து விலகுகிற அற்பபுத்தியுள்ளவர்கள் க்ஷேமத்தை அடையமாட்டார்கள். மூடச்செய்கையுள்ளவர்களின் மனத்திலுதிக்கும் ஸ்வபாவவாதமானது விஞ்சத்திறகே காரணமாகும். ஸ்வபாவவாதம், பரிபாவவாதம்என்ற இவ்விரண்டுவாதங்களிலுமுள்ளகுற்றம் இவ்விதம் பகுத்துக்கூறப்படுகிறது. இவ்வுலகில் உழுதல் முதலியதொழில்களும் பயிர்களைச்சேர்ப்பதும் வாகனம் ஆஸனம் வீடு இவைகளும் அறிவுள்ளவர்களால் சிறந்தனவாகச் செய்யப்படுகின்றன. தோட்டங்கள், வீடுகள், நோய்கள், மருந்து இவைகளைப் பற்றி அறிவுள்ளவர்கள் நன்றாகச்சொல்லுகிறார்கள். அறிவுள்ளவர்களால் இவைகள் செய்யப்படுகின்றன. அறிவானது பொருள்களுடன் சேரும்படிசெய்யும். அறிவானது க்ஷேமத்தை அடையச்செய்யும். அறிவிற்சிறந்த லக்ஷணமுள்ள அரசர்கள் அறிவினால் ராஜ்யத்தை அனுபவிக்கின்றனர். பிராணிகளுக்குள்ளமேன்மையும் தாழ்

[1] வேறுபாடம். [2] வேறுபாடம்

வும் அறிவாலேயே காணப்படுகின்றன. அப்பா! வித்தையால் உண்டு பண்ணப்பட்டபிராணிகளுக்கு இவ்வுலகில் வித்தையுண்மேசிறந்ததி யாகும். பலவிதமானபிராணிகளைத்திரும் ஜராயுஜம், அண்டஜம், உத்பிஜ்ஜம், ஸ்வேதஜம் என்று காண்குவிதமான ஜன்மமிருப்பதாகத் தெரிந்துகொள்ளவேண்டும். ஸ்தாவரங்களைவிட ஜங்கமங்கள் சிறந்த வைகளென்றுஅறியவேண்டும். சேஷ்டையென்பது (அறிவின்)விசே ஷத்தை அறிவித்து ஜங்கமங்களைச் சிறந்தவைகளாகச்செய்யுமென் பது பொருத்தமுள்ளதுதான். இரண்டுகால்களுள்ளவைகளென்றும் பலகால்களுள்ளவைகளென்றும் ஜங்கமங்களை இரண்டுவிதமாகச் சொல்லுகிறார்கள். பலகால்களுள்ளபிராணிகளைவிட இரண்டுகால்க ளுள்ளபிராணிகளெலலாம் சிறந்தவைகளாகும். இரண்டுகாலுள்ள பிராணிகளையும் பூமியிலுள்ளமானிடர்களென்றும் ஆகாயத்தில் ஸஞ் சரிப்பவைகளென்றும் இரண்டுவிதமாகக் கூறுகிறார்கள். அவைக ளில் பூமியில் ஸஞ்சரிப்பவைகள் சிறந்தவைகள். அவைகளே அன் னங்களைப் புஜிக்கின்றன. பூமியிலிருப்பவைகளையும் மத்தியமங்க ளென்றும் உத்தமங்களென்றும் இரண்டுவிதமாகச்சொல்லுகிறார்கள். தம் ஜாதிக்குரியதர்மங்களைச் செய்யுங்காரணத்தால் மத்தியமங்களும் சிறந்தவைகளாகும். மத்தியமங்களும் தர்மத்தை அறிந்தவைகளென் றும் அறியாதவைகளென்றும் இரண்டுவிதமென்றுசொல்லுகிறார்கள். அவைகளில், தர்மமறிந்தவைகள் காரியாகாரியங்களை அறிந்தகாரணத் தால் சிறந்தவைகளாகும். தர்மமறிந்தபிராணிகளும் வேதமறிந்த வைகளென்றும் அறியாதவைகளென்றும் இரண்டுவிதமென்றுசொல் லுகிறார்கள். அவைகளில், வேதம் குருக்களிடம் நிலைபெற்றிருக்கதால் வேதமறிந்தவர்கள் சிறந்தவர்கள். வேதமறிந்தவர்களும் வேதத்தை ஓதுவிப்பவர்களென்றும் அஃதுஇலலாதவர்களென்றும் இரண்டுவித மென்று சொல்லுகிறார்கள். அவர்களில் எல்லாத்தர்மங்களையும்அறி யுங்காரணத்தால ஓதுவிப்பவர்கள் சிறந்தவர்கள். தர்மங்கள் அவை களின்பயன்கள் இவைகளுடன் வேதங்கள் அவர்களாலேயே அறி யப்படுகின்றன. வேதங்கள்யாவும் தர்மங்களுடன் ஓதுவிப்பவர்க ளிடமிருந்து வெளியாகின்றன. ஓதுவிப்பவர்களும் ஆத்மாவைஅறிந் தவர்களென்றும் அல்லாதவர்களென்றும் இருவகையரென்று கூறு கிறார்கள். அவர்களில், பிறப்புபிறப்பிலலாமைகளை நிச்சயஞ்செய்த காரணத்தால் ஆத்மாவைஅறிந்தவர்கள் உயர்ந்தவர்கள். ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியென்னும் இரண்டுதர்மத்தை எவன்அறிகிறானோ அவன் பொதுவாக எல்லாம்அறிந்தவன். அவன் அனைத்தையும் விசேஷ

மாய் அறிந்தவன். அவன் உண்மையானஅனுக்ரஹமுள்ளவனும் பழுதில்லாதஸங்கல்பமுள்ளவனும்உண்மைப்பொருளானவனும் பரிசுத்தனும் ஈஸ்வரனுமாகிறான். சப்தப்ரம்மத்தில் (அதாவது வேதத்தில்) நல்லஸாமர்த்தியமுள்ளவனும் பரப்ரம்மத்தில நிச்சயம்செய்துகொண்டவனும் தர்மத்தின்அறிவில் உறுதியுள்ளவனுமான அவனைத் தேவர்கள் பிராம்மணனென்று அறிகிறார்கள். யஜ்ஞத்திலும் தேவதைகளிடத்திலுமிருப்பதும் உள்ளிலிருப்பதும்வெளியிலிருப்பதுமான ப்ரம்மத்தை அறிகிறவர்களைப் பூஜிக்கிறோம். அவர்கள் தேவர்கள். அப்பா! அவர்கள்தாம் பிராம்மணர்கள். இவ்வுலகமனைத்தும் காரணத்துடன் கூட அவர்களிடம் வைக்கப்பட்டதாயிருக்கிறது அவர்களுடைய பெருமைக்கு ஒப்பானது ஒன்றுமில்லை. அவர்கள், உறபத்தி இருப்பு முடிவுகளையும் கர்மங்களையும் முழுமையும் மீறிச்சென்று நான்கு விதமான பிராணிகளைத்திற்கும் ஈஸ்வரர்களும் ஸ்வதந்த்ரமான ஸாமர்த்தியம்பெற்றவர்களுமாயிருப்பார்கள்.

இருநூற்றுநாற்பத்துநான்காவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் மதம்யுகாதிலியவற்றிலும் வேற்றுமையைச் சுகருக்குச் சொல்லியது.)

ஆனதியான இந்த (ஞானநிலை பெற்றிருப்பதான) விருத்தியானது பிராம்மணனுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. ஞான வான்தான் கர்மங்களைச்செய்கிறவனாகி எல்லாவற்றிலும் விருத்தியையடைகிறான் ஆனால், கர்மாவில் இவ்விதம் ஸந்தேகமற்றபடாமலிருக்குமேயானால் கர்மாவானது [1]விருத்தியைக்கொடுக்கும். (அந்த ஸந்தேகம் எவ்விதமென்றால்) கர்மாவானது ஸ்வபாவமா, அல்லது ஞானஸாதனமாவென்பதுவே. அவ்விதஸந்தேகத்தில் கர்மாவானது ப்ரம்மத்தையுத்தேசித்து ஞானஸாதனமென்கிறபக்ஷத்தில [2]அது வேதவிதியாகும். யுக்தியினாலும் சாஸ்திரத்தில்காணப்பட்டிருக்கிற முறையினாலும் அதை விரிவாகவுரைப்பேன்; கேள். கர்மங்களில் சிலமனுஷ்யர்கள் புருஷனுடைய ஸாமர்த்தியத்தைக் காரணமாகவும், சிலர் தெய்வத்தைக் காரணமாகவும், வேறுசிலர் ஸ்வபாவத்தைக் காரணமாகவும் சொல்லுகிறார்கள். பலப்ராப்தியின்ஸ்வபாவத்தையனுஸரித்துப் பௌ

---

[1] வேறுபாடம். [2] வேறுபாடம்.

ருஷம், கர்மா, தெய்வம் இம்மூன்றும் சேர்ந்து ஸமமானகாரணமென்று சிலர் சொல்லுகிறார்கள். இம்மூன்றிலும் ஒன்று பிரதானமென்றும் மற்றவை அப்ரதானமென்றும் சிலர் சொல்லுகிறார்கள். கர்மத்தையே முக்யமாகக்கொண்ட[1] ஆருகதர்கள் விஷயத்தை இதுவரையமயமிருப்பதால் இவ்விதமென்றும், ஒருஸமயமில்லாததால் இவ்விதமில்லையென்றும், ஒரேஸமயத்தில் இருக்கிறதென்றும் இல்லாததென்றும் ஏற்படாததாலிரண்டுவிதமும் இல்லையென்றும், நிரமமாக இருக்கிறதென்பதும் இல்லையென்பதும் ஏறபடுவதால் இரண்டுவிதமும் இல்லையென்பதில்லையென்றும் சொல்லுகிறார்கள். ஸத்வகுணம் மிகுந்தயோகிகள் ஸகலத்திற்கும் ஸமமான ப்ரம்மத்தையே காரணமாகப் பார்க்கிறார்கள். திரேதாயுகத்திலும் துவாபரயுகத்திலும் கலியுகத்திலும் ஜனித்தவர்கள் ஸங்தேகமுள்ளவர்களாயிருக்கிறார்கள். கிருதயுகத்திலுண்டானவர்கள் தவத்தில்மிகுந்தவாகளும் ஸம்சயமற்றவர்களும் ஸத்வகுணம் பொருந்தினவர்களுமாயிருகிறார்கள். கிருதயுகத்தில எல்லாரும் ருக், யஜுஸ், ஸாமமென்னும் மூன்றுவேதங்களிலும் பேதத்தைப் பாராதவர்களாகிவிருப்புவெறுபபுகளை [2]விலக்கித [3]தவத்தைச்செய்கிறார்கள். தவத்திறகுவேண்டியதர்மமுள்ளவனும் எபபொழுதும்தவஞ் செய்பவனும் நல்லநிச்சயமுடையவனுமானமனிதன் அந்ததவத்தினால் மனத்திலிரும்புகிற ஸகலகாமங்களையும் அடைகிறான். ஜகத்தைஸ்ருஷ்டிக்கிறபூதவஸதுவானப்ரம்மதத்தைத் தவத்தினால் அடைகிறான். அவ்விதமானவனுகி அதனால எலலாப்பிராணிகளுக்கும் பிரபுவாகிறான். அந்தப்ரம்மமானது கர்மகாண்டங்களில சொலலப்பட்டிருக்கிறது. [4]ஆனால, அது காமகாண்டததைமாதத்திரமறிந்தவர்களுக்கு அறியமுடியாது. உபநிஷதங்களிலோவென்றால அந்தப்ரம்மமானது தெளிவாகச் சொலலப்பட்டிருகிறது. [4]அது கர்மம்யாகததால அறியப்படுகிறதில்லை. க்ஷத்ரியாகள ஹிம்ஸாரூபமானயாகமுடையவர்களென்றும் வைசயாகள ஹவிர்ப்பாகமுடையவாகளென்றும் சூதத்திராகள்பணிவிடையையே யஜ்ஞமாகவுடையவர்களென்றும் பிராம்மணர்கள் ஜபயஜ்ஞமுள்ளவாகளென்றும் எண்ணப்படுகிறார்கள. வேதாதாயனதத்திலேயே பிராம்மணர் கிருதார்த்தராகிவிடுவார். மற்றகர்மங்களைச்செய்தாலும் செய்யாவிட்டாலும் (வேதார்த்தமான ப்ரம்ம

1 'கர்மஸ்தர்' என்பது மூலம். 'ஜைனர்கள்' என்பது பழையவுரை.

2 வேறுபாடம்.

3 'தபஸ்' என்பதுமூலம்; 'ஞானம்' என்பது பழையவுரை. மேலே 'தமம்' என்று வருமிடங்களிலும் இங்ஙனமே கொளக.

4 வேறுபாடம்.

ஞானத்தினால்) எல்லாப்பிராணிகளிடத்திலும் அன்பைச் செலுத்தினவன் பிராம்மணனைச்சொல்லப்படுகிறான். திரேதாயுகத்தின் ஆதியில் வேதங்களும் யாகங்களும் வர்ணாச்ரமங்களும் பிரிவற்றிருந்தன. துவாபரயுகத்தில் மனுஷ்யர்களுக்கு ஆயுள்குறைகிறபடியால் அவைகள் பிரிக்கப்படுகின்றன. துவாபரயுகத்தில் வேதங்கள் மிகவும் சிதறிவிடுகின்றன; கலியுகத்திலும் அப்படியே காணப்படுகின்றன. கலியின் முடிவிலோவென்றால் வேதங்கள் (சிலவிடத்தில்) காணப்படும் (சிலவிடத்தில்) காணப்படாமலும் இருக்கின்றன. கலியில் அவரவர்களுக்கு உரியதர்மங்களும் கோக்கள், பூமி, ஜலங்கள், ஓஷதிகள் இவைகளுடைய ரஸங்களும் அதர்மத்தினால் பீடிக்கப்பட்டு நசித்துவிடுகின்றன. வேதங்களும் வைதிகதர்மங்களும் ஆஸ்ரமங்களும் அதர்மத்தால் மறைந்துவிடுகின்றன. ஸ்வதாமங்களும் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும்விகாரத்தையடைகின்றன. [1]மழையானது பூமியிலுள்ள எலலாப் பிராணிகளையும் போஷிக்கிறதுபோல, ஒவ்வொருயுகத்திலும் வேதங்கள் யமமுதலான யோகாங்கங்களைப் போஷிக்கின்றன. காலமானது ஞாஷ்விதமாகவறபட்டிருக்கிறது. என்னால உனக்குமுன்சொல்லப்பட்டதும்பிரஜைகளை[2]உண்டுபண்ணுகிறதும்பக்ஷிக்கிறதுமான (பரமாத்மஸ்வரூபமான) காலமானது ஆதியந்தமற்றது. பூதங்களுடைய உறபத்தியையும பாலனத்தையும் ஸம்ஹாரத்தையும் செய்வதும் நியந்தாவுமாயிருக்கிற அப்படிப்பட்டகாலத்தில ஒன்றுக்கொன்று தொடர்ச்சியாக நிரம்பஸ்ருஷ்டிக்கப்பட்டபூதங்கள் ஸவபாவத்தோடுகூடவே இருக்கின்றன. காலமே ஸ்ருஷ்டி. அதுவே துஷ்டி. அதுவே வேதம். அதுவே கர்த்தா. அதுவே காரியம். அதுவே கர்மாவின் பயன். குழந்தாய்! நீ என்னை எந்தவிஷயத்தைக்கேட்டாயோ அந்த விஷயத்தை உனக்குச் சொன்னேன்' என்று சொன்னார்.

இருநூற்றுநாழபத்தைந்தாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் ப்ரம்மஜ்ஞானத்தை அடையும்வழியைச் சுகருக்குச் சொல்லியது.)

இவ்விதம் சொலலக்கேட்ட சுகமுனிவர், ரிஷிஸ்ரேஷ்டரான வ்யாஸருடைய இந்தஉபதேசத்தைச் சிலாகித்து மோக்ஷதர்மார்த்

---

[1] வேறுபாடம. [2] வேறுபாடம்.

தங்களுடன்கூடினர இவ்விஷயததைக் கேட்கத்தொடங்கினர். 'பிரஜ்ஞையுள்ளவனும் யாகசீலனும் ஞானத்தைச்சம்பாதித்தவனும் அஸூயையில்லாதவனுமாயிருக்கிற ஸ்ரோத்ரியன் பிரத்யக்ஷத்திலும் யுக்தியிலுஞ்ஞும் அறியப்படாததும் வேதங்களாலும் இவனித்மென்று குறிப்பிட்டுக்காட்டமுடியாததுமான ப்ரம்மதத்தை தவத்துலா பிரம்மசர்யத்திலா ஸந்யாஸதத்திலா புத்தியின் சக்தியிலா ஞான மார்க்கம் அலலது யோகமார்க்கத்தில எபபடி அறிகிறான் ? நான் உங்களைக்கேட்கிறேன். நீங்கள் சொலலவேணடும். புருஷர்கள் எந்த உபாயத்திலல் மனத்தையும் இந்திரியங்களையும் ஒமரவஷயத்தில் நிலைத்து நிற்கும்படி செய்கிறார்கள் ? அந்த விஷயததையும் நீங்கள் விரிவாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டார். வயாஸர், 'வித்தை, தவம், ஐம்பொறிகளை அடக்கல, லோபதததின்ஞதல இவைகளிலலாமல் ஒருவனும் வித்தியடையமாட்டான். ஸகலமான மஹாபூதங்களும் ப்ரஜாபதியுடைய முதலஸ்ருஷ்டியிலுண்டானவைகள். அவைகள் பிராணிகளுடைய [1]கூட்டததில சரீராபிமானிகளிடதத்தில அதுகமாகப் பிரவேசிதத்திருக்கின்றன. அது எவவிதமென்றால, சரீரிகளுக்குப் பூமியிலிருந்து தேகமும ஜலததிலிருந்து உதிரமும் மதயவிலிருந்து கண்களுமுண்டாயினவென்று ரிஷிகளால கருதபபடுகின்றன. வாயுவானது பிராணாபானங்களை பபறறியிருக்கிறது. (நாலிகைமுதலான) துவாரங்களில ஆகாயமும், பாததில விஷ்ணுவும், [2]பலததில இந்திரனும் பிரவேசிதத்திருக்கின்றார்கள். உதரதில அகனி பிரவேசித்துப் புஜிக்கவிரும்புகிறான். காதுகளில திகமதவதைகள ஸ்ரோத்ரேந்திரியமாகவும், நாவில ஸரஸவதி வாகிநதரியமாகவுமிருக்கிறார்கள். மெய், வாய், கண், மூககு, செவி இவவைநதும் புருஷனுககு விஷயததினனுபவத்திறகுக் காரணமானதால [3]ஞானேந்திரியங்களென்று சொலலப்படுகின்றன. சபதம், ஸபர்சம், ரூபம, ரஸம, கந்தம் இவ்வைந்தும் இநதிரியங்களுக்கு விஷயங்கள. இந்திரியங்கள் மனததுடன் ஸம்பந்தபபட்டத தனிததனியே தங்கள விஷயங்களைத தெரிவிக்கின்றன. ஸாரதியானவன் தனக்குவசபபட்ட குதிரைகளை ஏவுவதுபோல மனமானது இந்திரியங்களை (விஷயங்களில) ஏவுகிறது. மனததையும், ஐமபுலனததை அடைந்தஜ்வன எபபொழுதும ஏவுகிறான். ஆகையால, இநதிரியங்களையும் விஷயங்களையும் ஸமமாக ரிப்பதிலும் ஸ்ருஷ்டிப்பதிலும் மனமானது அதிகாரமுடையது. அதுபோல மனிதனுடைய ஸம்ஹாரததிலும ஸ்ருஷ்டியிலும் புத

1 வேறுபாடம். 2 'கையில' எனபது பழையஉரை. 3 வேறுபாடம.

திலை உபாதியாகவுடையஜீவன் அதிகாரி. இந்திரியங்கள், விஷயங்கள், உஷ்ணம் சீதமுதலிய இயற்கை, புத்திவ்ருத்தி, மனம், பிராணன், அபானன், ஜீவன் (இவைகளெல்லாம்) எப்பொழுதும் பிராணிகளுடைய தேகங்களிலிருக்கின்றன. [1]புத்திக்குஆதாரமில்லை. இந்தப் பதினாறுகுணங்களும் புத்தியின் விருத்தியே. புத்தியை வாஸனையானது ஸ்ருஷ்டிக்கிறது; குணங்களை ஒருவிதத்தாலும் ஸ்ருஷ்டிக்கிறதில்லை. இவ்விதம் பதினாறு குணங்களால சூழப்பட்ட பதினேழர்வ்தான அந்தர்யாமியை மனத்தையடக்கியவனை வேதியன் மனத்தினால தன்புதியில பார்க்கிறான். இந்தச்சைதன்யமான ஆத்மாவானது கண்ணுக்குப்புலப்படாதது; எல்லா இந்திரியங்களாலும் அறியமுடியாதது. பெருமையுடைய ஆதமாவானது மனமாகிற தீபத்தினால் பிரகாசிக்கிறது. ஆத்மாவானது சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் பூதகுணங்களிலலாதது. (ஆகையால) நாசமற்றது. [2]அது சரீர இந்திரியங்களின்றிச் சரீரங்களிலிருக்து கொண்டு பார்க்கிறது. அது வ்யக்தமிலலாதது. மரிக்கும் தன்மையுள்ள எல்லாச்சரீரங்களிலும் வைக்கப்பட்டதும் மரணமற்றதுமான அவ்யக்தமான ஆத்மாவைச் சாஸ்திரத்தையனுஸரித்துப் பார்க்கிறவன் சரீரநாசத்தின்பிறகு பிரம்மமாகவே ஆகிறதற்குத தக்கவனாகிறான். பண்டிதர்களானவர்கள், விதவானும் கலலவம்சத்திலுதித்தவனுமாயிருக்கிற பிராம்மணனிடத்திலும் பசுவினிடத்திலும் யானையினிடத்திலும் நாயினிடத்திலும் நாயின் மாம்ஸத்தைப் பாகம்செய்யும் நீசனிடத்திலும் ஸமமான ப்ரம்மதிருஷ்டியுடையவர்களாயிருக்கிறார்கள். இவ்வுலகத்தையெலலாம் சூழ்ந்திருக்கிற மிகப்பெரிதான அந்த ஒரே ஆதமாவானது ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான ஸகல பூதங்களிலும் வஸிக்கிறது. எபபொழுது ஜீவனானவன் தன்ஸ்வரூபத்தை எலலாபிராணிகளிடத்திலும் எலலாபிராணிகளையும் தன்னிடத்திலும் பார்க்கிறானோ அப்பொழுது [3]ப்ரம்மமமாகிறான். என்னுடைய

---

1 'அந்தர்யாமிக்கு இதத்தேகாதிரூபமான ஓர் ஆதாரமுமில்லை. இந்த ஞானஸ்வரூபியான ஜீவன் அந்த அந்தர்யாமிக்கு விசேஷணமானவன். அந்தர்யாமி தைஜஸாஹங்காரத்திலிருந்து உண்டான இந்திரியங்களைப படைக்கிறான். தனக்கு விசேஷணமான ஜீவனைப்படைப்பதென்பது இலலை' என்றும் கொளளலாம்.

2 'அது சரீர இந்திரியங்களின்றி இருப்பது. அந்த அந்தர்யாமியைத் தம் தம் சரீரங்களுக்குளளேயே பார்க்கவேண்டும்' என்றும் கொளளலாம்.

3 'ப்ரம்மஸம்பத்யதே' எனபது மூலம்.

ஆத்மாவில் ஆத்மாஎவ்வளவாயிருக்கிறதோ வேறு ஆத்மாவிலும் ஆத்மா அவ்வளவாயிருக்கிறது' என்று எவன் எப்பொழுதும் அறிகிறானோ அவன் முக்தியை அடையத்தக்கவனாவான். எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மபூதனும் எல்லாப் பிராணிகளுக்கும் ஹிதனும் மார்க்கமற்றவனும் பிரம்மமாவதற்கு விருப்பமுள்ளவனுமான ஞானிபிறுடையமார்க்கத்தில் தேவர்களும் மயக்கமுறுகிறார்கள். ஆகாயத்தில் பக்ஷிகளின்கதியும் ஜலத்தில் மத்ஸ்யங்களின்கதியும் அறியப்படாமைபோலப் பிரம்மத்தை அறிந்தவர்களுடையகதியானது அறியப்படுகிறதில்லை. காலமானது ஸகலமானபூதங்களையும் தானுகவே தன்னிடத்திலேயே ஜீரணமாகும்படிசெய்கிறது. அவ்விதகாலமும் எந்தப்பரமாத்மாவினிடத்தில் ஜீர்ணமாகிறதோ அந்தப் பரமாத்மாவை இவ்வுலகில் ஒருவனும் அறியமுடியாது. மேலும் கீழும் குறுக்கிலும் நடுவிலும் போகிறதல்லாததும் ஒரிடத்திலிருந்தும் ஒன்றையும் கிரகிக்காததுமான பரமாத்மாவினுள், இந்த ஸகலலோகங்களும் இருக்கின்றன. இவைகளில் யாதொன்றும் அவனுக்கு வெளியிலில்லை. ஒருவன், மனம்போன்றவேகத்துடன் தாணிலிருந்து விடுபட்டபாணம்போல ஆயிரம்வருஷங்கள்நடந்தாலும் காரணமான ஆத்மாவினுடைய முடிவை அடையமாட்டான். ஸூக்ஷ்மமான அந்த ஆத்மாவைக்காட்டிலும் ஸூக்ஷ்மமானபொருளில்லை; அதைக்காட்டிலும் ஸ்தூலமுமில்லை. அது எங்கும் கால்களும் கைகளும் கண்களும் தலைகளும் முகங்களும் காதுகளுமுள்ளதாயிருக்கிறபடியால், உலகத்திலுள்ள எல்லாவறறையும் வ்யாபித்துக்கொண்டிருக்கிறது. அது அணுவிற்கும் அணு; பெரிதிற்கும்பெரிது. அது ஸகலபூதங்களிலுள்ளேயும் நிலையாயிருந்தும் காணப்படுகிறதில்லை. ஆத்மாவிற்கு அக்ஷரமென்றும், க்ஷரமென்றும் இரண்டுவிதமானபிரிவுகள் ஏறபட்டிருக்கின்றன. அவைகளில் நசிக்கின்ற ஜடமான க்ஷரமானது ஸகலபூதங்களிலுமிருக்கிறது. சைதன்யமான அக்ஷரமானது அழிவறற ஸ்வயம்பிரகாசமான ஸ்வரூபத்திலிருக்கிறது. அந்த அக்ஷரமானது ஸ்தாவரஜங்கமங்களான ஸகலபூதங்களுக்கும்ஆசையும் ஒன்பது துவாரங்களுடைய சரீரத்தைஅடைந்து [1]ஹம்ஸமாயும் சலனமறறதாயும் பரவசமில்லாததாயுமிருக்கிறது. தத்வத்தைஅறிந்தவர்கள் பிறவியில்லாததான அக்ஷரத்திற்குச் சரீரத்தின்நாசத்தைத் தெரிவிக்கும் மாறுதல்முதலியவைகளை அடைவதாலும் புதியசரீரங்களை அடைவதினாலும் ஹம்ஸத்தன்மையென்றுசொல்லுகிறார்கள். ஹம்ஸமாகச்சொல

[1] சலனமுள்ளது.

லப்பட்டஜீவனும் ராசனைஅக்ஷரமும் விகாரமற்றபிரம்மரூபமான அக்ஷரத்தாள். அத்தக்கூடஸ்தமான பிரம்மத்தை அறிந்தவன் அதை அடைந்து ஜனனமரணங்களை விலக்கிக்கொள்ளுகிறான்.

இருநூற்றுநாற்பத்தாறுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்யாஸரீ யோகத்தின்தன்மையைச் சுகருக்குச் சொல்லியது.)

ஸத்புத்ரா! என்னிடம்கேட்டதனக்கு இப்பொழுது வாஸ்தவமான ஞானிகளுடையதர்மத்தை உள்ளபடி சொன்னேன். இனிமேல் யோகத்தின்காரியத்தை முழுவதும் சொல்லப்போகிறேன். அதனையும் கேட்டுக்கடவாய். குழந்தாய்! புத்தி மனம் இந்திரியங்கள்எல்லாம் சேர்ந்து (பிரகிருத்தியதது) ஒன்றாயிருப்பதுவே கெடுதலற்ற ஆத்மாவினுடைய உத்தமமான ஞானஸ்வரூபம். அப்படிப்பட்ட இந்த ஆத்மஸ்வரூபமான மனத்தையும் இந்திரியங்களையும் நிக்ரஹித்தவனும் நியானசீலமுடையவனும் ஆத்மாவில் பற்றுதலுள்ளவனும்(யம நியமமுதலான) சுத்தகாமங்களுள்ளவனுமாயிருக்கிறவிதவானல் அறியக்கூடியது. வித்வான்கள் யோகதோஷங்களாகவினைக்கிற காமம், குரோதம், லோபம், பயம், ஸ்வப்னம்என்ற ஐந்தையும் வேருடன் அறுக்கவேண்டும். (அப்படியெனில்,) தீரஞானபுருஷன் மனஞ்நிக்ரஹத்தால குரோதத்தையும் ஸங்கல்பத்தையும்விலக்கிக் காமத்தையும் வெல்லுவான்; புத்திபிழையாகல்லவிசாரத்தினால நிதநிரையைவெல்ல வல்லவனுவான். தைரியத்தால ஆண்குறியையும் உதரத்தையும் ரக்ஷிக்கவேண்டும். நேத்திரத்தால கைகால்களைக் காக்கவேண்டும். கண்காதுகளை மனததால ரக்ஷிக்கவேண்டும் மனத்தையும் வாக்கையும் செய்கையினால ரக்ஷிக்கவேண்டும். ஜாக்ரதையினால் பயத்தையும் பெரியோர்களின்பணிவிடையினால லோபதத்தையும் விலக்கவேண்டும். இவ்விதம் எப்பொழுதும் சோம்பலில்லாதவனுகி இந்தயோகமலங்களை விலக்கவேண்டும். அக்கினிகளையும் பிராம்மணர்களையும் பூஜிக்கவேண்டும். தேவதைகளையும் வணங்கவேண்டும். அசுபமும் துன்பத்துக்குக்காரணமும் மனத்தைவருத்துகிறதுமான வார்த்தையைச் சொல்லக்கூடாது. ஸ்தாவரஜங்கமமாயுள்ள இந்தவுலகமனைத்தும் எந்தஸுதராத்மாவினுடையவிரிவோ அப்படிப்பட்ட தேஜோமயமான அந்தஸுத்ராத்மாவானது (இவ்வுலகத்துக்குக்) காரணம்.

நியானம், வேதாத்தியயனம், தானம், ஸத்தியம், லஜ்ஜை, நேர்மை, பொறுமை, சுசி, ஆகாரத்தாலுண்டானசுத்தி, இந்திரியங்களின் சிக்ஷை இவைகளால் ஸத்வகுணம் விருத்தியடைகிறது. அது பாவத்தையும் நிவிருத்திசெய்கிறது. இப்படிப்பட்ட குணங்கள்பொருந்திய புருஷனுக்கு ஸகலஜ்ஞாதங்களும் வியக்கின்றன. ஞானமும் விருத்தியடைகிறது. இவன் எலலாப்பிராணிகளிடத்திலும் ஸமபுத்தியுள்ளவனும் தானேகக்கிடைத்ததிரவியத்தினால் ஸந்தோஷிக்கிறவனுமாயிருக்கவேண்டும். இவன் பாவநிவிருத்தியை அடைந்தவனும் ஸத்வகுணம்மேலிட்டவனும் பிதமானஆகாரமுள்ளவனும் இந்திரியங்களை அடக்கினவனுமாயிருந்துகொண்டு காமக்குரோதங்களை வசஞ்செய்து மகத்தத்வத்திற்குக் காரணமானபிரதானத்தை வசஞ்செய்யவேண்டும். மனத்தையும் இந்திரியங்களையும் விஷயங்களிலிருந்துதிருப்பி ஒருமுகபடுத்தி முன்இரவிலும் பின்இரவிலும் ஸமாதியிலிருந்து [1] புத்தியில் மனத்தை நிறுத்தவேண்டும். ஐந்து இந்திரியங்களுள்ள இந்தப்பிராணியினுடையபுத்தியானது, ஓர் இந்திரியம் [2] துவாரமுள்ள தானல அதன்வழியாகத தோணபையினுடைய பாதத்தின்வழியாக ஜலம் ஒடிவதுபோல வெளியில் ஒடுகிறது. ஆகையால, யோகமறிந்தவன், செம்படவன் கெட்டதானமத்ஸ்யத்தை முதலில்பிடிப்பதுபோல மனத்தை முதலில் வசப்படுத்தவேண்டும்; பிறகு, ஸ்ரோத்ரத்தையும், அதன்பிறகு நேத்ரத்தையும், பிறகு ரஸனத்தையும், பிறகு க்ராணத்தையும் வசப்படுத்தவேண்டும். யதியானவன், இவ்விதம் இந்திரியங்களை அடக்கி மனத்தில் நிலைபெறச்செய்யவேண்டும். அவ்விதமே ஸங்கல்பங்களையுந்தள்ளிவிட்டு மனத்தையும் புத்தியில்நிறுத்தவேண்டும். யதியானவன் ஐந்துஇந்திரியங்களையும்சேர்த்து மனத்தில் ஸ்தாபிக்கவேண்டும். எப்பொழுது மனமுதலானஇந்தஆறும் நிலைபெற்றுப் பிறகு புதியில் லயித்துக் கலங்காமலுமிருக்குமோ அப்பொழுது மகத்தத்வமானது பிரகாசிக்கின்றது. அப்படியே (ஞானவடிவமான) ஆதமாவும் ஸூக்ஷ்மமானபுத்தியில் புகையில்லாதஅக்கினிபோலவும் மிகவும் பிரகாசிக்கிறஸூர்யன்போலவும் ஆகாயதலில் மின்னல்ஒளி போலவும் காணப்படுகிறது. அந்தஆதமா வியாபகமாயிருப்பதால எலலாம் ஆத்மாவிடதிலும் ஆத்மா எலலாப்பொருள்களிடத்திலும் காணப்படுகின்றனன். எந்தப்பிராம்மணர்கள் மனத்தை வசீகரணஞ்

1 'ஆதமனி' என்பது மூலம்; இந்தஅத்யாயத்தில ஆதமசப்தம் வரும் இடங்தோறும், 'புதி' என்று பழையவுரை கூறுகிறது.

2 விஷயபபற்றுள்ளதானல என்பது.

செய்தவர்களும் தைரியவான்களும் பேரறிவுள்ளவர்களும் ஸகலமான பிராணிகளுடைய ஹிருதத்திலும் பற்றுதலுள்ளவர்களுமாயிருக்கிறார்களோ அந்த மஹாத்மாக்களே அந்த ஆத்மாவைப் பார்க்கிறார்கள். இவ்விதம் [1]ஓரளவுள்ளகாலம் சுமையானவிரதத்தோடுகூடின்தத்தில் ஒருவனுயிருந்துகொண்டு யோகத்தைஆசரித்தவன் சுத்தமான ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஸமமானநிலையை அடைவான். தத்வவித்தானவன் யோகத்தால் லயம், விக்ஷேபம், கலக்கம், கல்லவாஸனையின் ஆக்ராணம், கேள்வி, பார்வை, ரஸத்திலும் ஸ்பர்சத்திலும் சீதத்திலும் உஷ்ணத்திலும் ஆச்சரியங்கள், வாயுவுக்குச்சமானமான [2]ஆகருஷி, ஸகலசாஸ்திரங்களுடைய அர்த்தஸ்புரணம், திவ்யஸ்திரீஸங்கமமுதலானவைகள் ஆகிய இவைகளை அடைத்தும் லக்ஷியஞ்செய்யாமல் புத்தியிலேயே உபஸம்ஹாரஞ்செய்யவேண்டும். (காலை முன்றாத்திரி பின்றாத்திரி) மூன்றுகாலங்களிலும் நியமமாக மௌனியாயிருந்து யோகத்தில் அப்பியாஸக்கைச்செய்யவேண்டும். பாண்டவங்களில் பற்றுதலுள்ளவன் அவைகளை உள் அங்கணத்தில் சேர்த்துவைப்பது போல யோகாப்யாஸியானவன் இந்திரியக்கூட்டத்தை ஹிருதயத்தில அடக்கிப் பர்வதத்தின்சிகரத்திலோ, அல்லது கோபுரத்திலோ, விருக்ஷத்தின்துணியிலோ யோகத்தைச்செய்யவேண்டும். தினந்தோறும் ஒரேலக்ஷியகதைப்பிடித்துக்கொண்டுதியான ஞ செய்யவேண்டும்.மனத்தை யோகத்தினின்றும் விலகாமலிருக்கச் செய்யவேண்டும். யோகியானவன் எந்தெந்த உபாயத்திலே சஞ்சலமான மனத்தை அடக்கமுடியுமோ அந்த அந்தஉபாயத்தைக் கைக்கொள்ளவேண்டும்; அதிவிருத்தம் சலிக்கக்கூடாது ஏகாக்ரமுள்ளவன் சூன்யமானகுகைகளையும் தேவாலயங்களையும் சூன்யமானக்ருஹங்களையும் தனக்குஇருப்பிடமாகச் செய்துகொள்ளவேண்டும். வாக்கினாலும் செய்கையினாலும் மனத்தினாலும் ஒன்றிலும் பற்றுவைக்கக்கூடாது. எல்லாவற்றிலும் உதாஸீனனும் குறைவான ஆகாரமுள்ளவனுமாயிருந்துகொண்டு லாபாலாபங்களில் ஸமமாயிருக்கவேண்டும். நன்மை நிந்திப்பவன் துதிப்பவன் இருவரிடத்திலும் ஸமமாயிருந்து சுபாசுபங்களை நியாமலிருக்கவேண்டும். லாபத்தில்லஸந்தோஷிப்பதும் லாபமில்லாத காலத்தில கவலிப்படுவதும் ஆகா. வாயுவைப்போல ஓரிடத்திலும் பற்றுதலிலலாதவனுகி ஸகலப்பிராணிகளிடத்திலும் ஸமமாயிருக்க வேண்டும். இவ்விதம் [3]அடங்கினசித்தமுள்ளவனும் ஸாதுவும் எல

1 'ஆறுமாதகாலம்' என்று ஸ்ருதி கூறுகிறது.
2 ஆகாயமுதலியவற்றில் கமனம்.
3 வேறுபாடம்.

லாப்பிராணிகளையும் ஒன்றுபோலப் பார்க்கிறவனும் ஆத்மாதம்விடாமல் யோகாப்பியாஸம் செய்கிறவனுமாயிருக்கிறவனுக்குப் பிரணவமானது தன் அர்த்தத்துடன் நன்கு விளங்குகிறது. (பொருள்விருப்பத்தால்) ஜனங்கள் டக்கவும் வருந்துவதைப் பார்த்தது ஓட்டாஞ்சில்லியையும் பொன்னையும் சமமாபெண்ணி ஞான யோகமார்க்கத்தில் பற்றுதலுடன் (பொருள் விஷயத்தில்) ஒழிவையடையவேண்டும்; தோகத்தை அடையக்கூடாது. ஜாதியில் குறைந்தவனும் தாமதத்தையே விரும்பத்துடன் செய்கிற ஸ்திரீயும் ஞான யோகமார்க்கத்தால் உயர்ந்த கதியை அடைவார்கள். மனதை ஜயித்த யோகியானவன் பிறவியற்றதும் அழுதியும் ஜராயற்றதும் அழிவற்றதுமாயிருக்கிற பரமாத்மாவை அசைவற்ற இந்திரியங்களால் ஊகித்து அறிவான். அணுவிற்கும் அணுவும் மஹத்துக்கும் மஹத்தும் [1]ஒளிறுதிலும் பற்றுதுமான அந்த ஆத்மாவைப புத்தியினால பார்க்கிறான். உள்ளபடி (என்னால) சொல்லப்பட்ட மஹாத்மாவான [2]மஹரிஷியினுடைய வசனத்தைக் குருவினுபதேசத்தையனுஸரித்து மனதினால ஆலோசித்து யுக்தியினால நிச்சயித்து மேன்மேலவசமுள்ளவர்கள பிரம்மப்பிரளயம்வரையில இந்தப பிரம்மாவுக்கு ஒத்த நிலைமையை அடைகிறார்கள்' என்றுசொன்னார்.

இருநூற்றுஇருபத்தேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், கர்மத்யும் ஞானத்தையும்பற்றிச் சுகருக்குச் சொல்லியது.)

சுகர், 'காமாலைவச்செய்யெ ர்நம் விடென்றும் இவ்விதம் வேத வசனமிருப்பதனால மஹரிதர்கள் ஆத்தையினால எந்தக் கதியை புடைகிறார்கள்? கர்மாவினால எந்தக் கதியை அடைகிறார்கள்? இதைக் கேட்க விரும்புகிறேன். இதை நீர் எனக்கு விரிவாகச்சொலலவேண்டும். இவைகள் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையும் விரோதமானவையுமாயிருக்கின்றனவே?' என்றுகேட்டார்.

(சுகர்) இவ்விதம் கேட்க, பராசரபுத்திரரான வ்யாஸர் தம் புத்திரரை நோக்கிப் பின்வருமாறு மறுமொழிசொல்லலானார்: 'முறையே அழிவதும் அழியாததுமான இந்தக் கர்மமார்க்கத்தையும் ஞான

1 வேறுபாடம். 2 பதஞ்சலி மஹரிஷி. 3 வேறுபாடம்.

மார்க்கத்தையும் விரித்துச்சொல்வேன். 'பிதையினால் மனுஷ்யர்கள் எந்தக்கதியை அடைகின்றார்கள், கர்மாவினால் எந்தக்கதியை அடைகின்றார்கள்' என்கிற இரண்டினுடைய வித்தியாஸமான தை அறிதற்கு அருமையானது. ஆகையால், மனத்தை ஸாவதானஞ் செய்துகொண்டு கேட்கக்கடவாய். ஆனால், தர்மமிருக்கிறதென்று சொல்லிவிட்டு இந்தத்தர்மவிஷயதிலேயே இல்லையென்று சொல்லுகிறவனுடைய பக்ஷத்திற்குசசமானமாக என்னுடைய வாக்கியம் தோன்றும். ப்ரவிருத்தி ரூபமான் தர்மம்ஒன்று நிவிருத்திரூபமானதொன்று என வேதங்கள் நிலைபெறுவதற்குக் காரணமான இரண்டுமார்க்கங்கள் உண்டு. பிராணியானது கர்மாவினால பந்தத்தை அடைகிறது ; ஞானதினாலோ விடுபடுகிறது. ஆகையால், ஸம்ஸாரத்தில கஷ்டையைக்கண்டவர்களான யதிகள் கர்மாவைச் செய்கிறதில்லை. காமாவினால மனிதன் மரித்து மறுபடியும் [1]பதினாறு குணங்களுள்ள சரீரதத்தை அடைகிறான். விதையினால் விகாரமற்றவனும நாசமற்றவனுமாகி நித்தியமான பிரம்மமாகிறான். சில மனிதர்கள் அலபுத்தியினால் கர்மாவைச் சிலாகிக்கிறார்கள். அதனால், அவர்கள அனேகர்களைச் சந்தோஷப்படுதிக்கொண்டு வழிபடுகிறார்கள். மிக்க அறிவுபெறுவுத் தர்மத்தின் மேன்மையையறிந்தவாகள் நதியில ஜலபானஞ்செய்தவன் ஸர்வதும் நிறைவதைச் சிலாகிக்கமாட்டானே அவவிதம் கர்மத்தைச் சிலாகிக்கிறதில்லை. மனிதன் ஸுகதுக்கங்களையும் ஜனனமரணங்களையும் கர்மாவிறகுப் பலனாக அடைகிறான். எந்தப பிரம்மதத்தில சேர்ந்து துக்கத்தை அடைகிறதில்லையோ, எதிலசேர்ந்து மரிகிறதில்லையோ, எதிலசேர்ந்து பிறக்கிறதில்லையோ, எதிலசேர்ந்து மூப்பை அடைகிறதில்லையோ, எதில்சேர்ந்து வளருகிறதில்லையோ, எந்த ஸவரூபத்தில்பரமமும் வாக்குக்கும் மனத்திறகும் எட்டாததும் சலனமற்றதும் விகாரமிலலாததும் கேடு, ஆயாஸம், மரணம் இவைகளற்றதும் பேதமில்லாததுமான அந்தப் பிரம்மமானது இருக்கிறதோ, எதில ஸுகதுக்கங்களாலும் மானஸகர்மத்தினாலும் பாதிக்கப்படுகிறதில்லையோ, எதில் சேர்ந்தவர்கள் எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமாகவும் சினேகமுள்ளவர்களாகவும் நன்மையையே செய்பவர்களாகவுமிருக்கிறார்களோ அந்தப் [2]பிரம்ம ஸ்வரூபத்தை விதையினால அடைகிறான். குழந்தாய்! வித்யாமயனை புருஷன் வேறு. கர்மமயனை

---

1 ஞானேந்திரியம் ஐந்து, கர்மேந்திரியம் ஐந்து, பிராணன் ஒன்று, அந்தக்கரணம் ஒன்று.

2 'தத்' என்பது மூலம்; 'மோக்ஷநிலைமையை' என்றும் கொள்ளலாம்.

புருஷன்வேறு, நித்யனும் ஞானமென்னும் குணத்தையே உருவமாகக்கொண்டவனுமான அந்த விதயாமயனை புருஷனை அமாவாஸ்யையில் ஸூக்ஷ்மமான ஒருகலையுடனிருக்கும் சந்திரனென்று தெரிந்துகொள். [1]மஹரிஷியினால் சொல்லப்பட்ட அவ்விதமான இந்த விஷயமானது ஆகாபத்தில் வளைவான நால்போலப் பிரதி தாயுண்டான சந்திரனைப்பார்த்து ஸ்பஷ்டமாக அனுமானிக்கப் படுகிறது. அபபா! [2]அந்தச்சந்திரனை மனதின் ஸமஷ்டிரூபனும் கலைகளின்ஸமூகதத்தினுல பரிபூர்ணனும் மூர்த்திமானுமாயிருக்கிறபடியால் கர்மபலரூபனுக அறியக்கடவாய். பாத்திரத்தில் வைக்கப்பட்டஅக்னிபோல எபபொழுதும் அந்தச் [3]சந்திரனிடத்தில் அமைக்திருக்கிறதேவனை நிதியம ஸர்வஸமகதியாகதத்தினுல மனத்தைஜயித்தவனை ஆதமாவாக அறி. மேகதத்தில ஜலத்தினலைபோல அந்தச் [4]சந்திரனிடத்தலிருக்கினறஅத்தவனை நிதியம் [5]யோகததால மனத்தைஜயித்தவனைஜீவனுகத தெரிந்துகொள். தமஸ்ரஜஸ் ஸத்வங்களேஜீவன்குணமாகவும் ஜீவனேபரிதயகாத்மாவின்குணமாகவும் பிரத்யகாத்மாவைப் பரமாதமாவன்குணமாகவும் அறியக்கடவாய். க்ஷேத்ரஜித்துக்களானவர்கள் அசேஷனத்தை ஜீவன்குணமாகவும் ஜீவனை ப்ரகிருதியுள்ளவனென்றும்எல்லாவற்றையும்சேஷடிக்கும்படிசெய்கிறவனென்றும் ஏழுலோகங்களையும் கறபதவனை ஜீவனேக்காட்டிலும் பரனென்றும் சொல்லுகிறாகள்' என்றுசொன்னர்.

இருநூற்றுநாறபத்தேட்டாவது அத்தியாயம.

மோக்ஷதாமம். (தொடர்ச்சி.)

(வியாஸர் பிரம்மசர்யத்தின்பெருமையைச் சுகருக்குச் சொல்லியது.)

சுகர், 'ஸகலஸாதாரணமாகக் கடவுளிடத்திலிருந்துண்டான பிரதானம்முதற்கொண்டு ஏற்பட்டஸ்ருஷ்டியையும் ஜனனவனுக்கும் தனித்தனியே விஷயங்களுடன்கூடிய இந்திரியங்களுடையரூபமான

---

1 'ப்ருஹதாரண்யகதர்சியான யாஜ்ஞவல்கியரால்' எனபதுபாடையவுரை.

2 'கலைகளின் ஸமூகதத்தினுல நிரம்பினவனை (சதந்திரனை) பதினெரு விகாரங்களே ஸ்வரூபமாகச்சரீரணடையும் சரீரியும காமதத்திறகு வசப்பட்டவனுமான புருஷனுக அறி' என்றும் கொளளலாம்.

3 'புருஷனிடததில்' என்றும் கொளளலாம்.

4 'கர்மபுருஷனிடத்தில்' என்றும் கொளளலாம்.

5 'கர்மதேகத்தில் காமயோகதத்தினுல உட்படுதலிகொளளபபடட' என்றும் கொள்ளலாம்.

புத்தியின் ஸாமர்த்தியத்தினால செய்யப்பட்ட [1]அதிகஸ்ருஷ்டியையும் கேட்டேன். இவ்வுலகில எத்தவிருத்தியைப்பிடித்துக்கொண்டு ஸத்துக்கள் பிரவிருத்திக்கிறார்களோ அதனாக்க காலததிற குரியதான ஸத்துக்களுடைய அத்தவிருத்தியை மறுபடியும் நீங்கள் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். கர்மங்களைச்செய்யென்றும் விட்டு விடென்றும் வேதத்திலசொல்லப்பட்டவசனதை நான் எவ்விதம் அறிவேன்? அதையும் விரிவாக (மறுபடியும்) சொலலவேண்டும். நான் குருவான உங்களுடையகிருபையினால உலகவரலாறறின் உண்மையை அறிந்தவனும் பரிசுத்தனுமாகிய புதிய தோர்சியைக்கு தேகமுடிவில் நிர்விகாரமான ஆத்மாவைப் பார்ப்பேன்' என்று சொன்னார். வ்யாஸர், 'இந்தவிருதியானது முன்காலதலில பிரம்மாவினால ஸ்வயமாக உண்டாக்கப்பட்டது. இதவிருத்தி மிகவும் முன்னோர்களும் ஸத்துக்களுமானமஹரிஷிகளால ஆசரிக்கப்பட்டது. பிரம்மரிஷிகள் பிரம்மசரியதத்தினால உலகங்களை ஸாதிதிருக்கிறார்கள். (ஆகையினால) ஆதமாவினுடைய ஸம்ரயனை மனத்தினால ஹ்ருதயத்திலுள்ள ஆதமாவினிடத்திலநேத்டிக்கொண்டு வனத்திலகனிகிழங்குகளைபபக்ஷிதது மிகபபெரிய தவதனதை அனுஷ்டித்தும், புண்ணியஸதலங்களிலஸஞ்சரிததும், பிராணங்களுக்குததுன்பம்செயயாமலும், புகையிலலாததும் உலக்கைச்சதமிலலாததுமானபோஜனகாலததில்பிக்ஷைசெய்துகொண்டும், வானபரஸ்தாஸ்ரமத்திலிருக்கிறவன் பிரம்மமாவதறகுததக்கவனாகிறான். நீயும் சுபாசுபங்களை விலக்கிவிட்டு ஒருவரையும் துதியாதவனும் நிமஸகரியாதவனும் எதனாலாவது பரிசைநிவ்ருதத்செய்கிறவனுமாயிருந்துகொண்டு வனத்தில ஒருவனாக ஸஞ்சரிக்கக்கடவாய்' என்றுசொன்னார். சுகர், 'இந்த லோதவசனமானது லோகவியவகாரத்தில விரோதிக்கின்றதே? (கர்மாவைச் செயயென்றும் தள்ளென்றுஞ) சொலலுகிறவசனங்கள் பிரமாணங்களாலல ஒன்றுக்கொன்று விரோதமாருப்பதால எவ்விதம் சாஸ்திரங்களாகும்? அப்ரமாணங்களானாலும் எவ்விதம் சாஸதாங்களாகும்? ஆகையால், இவ்விஷயத்தை எபபடி பிரமாணமாகும்? கர்மங்களுக்கு விரோதமிலலாமல மோக்ஷம் எவவிதம் ஏறபடுகிறது? இதைகேட்க விரும்புகிறேன்' என்றார். சுகா இவ்விதம்கேட்க, ஜனகராஜனகர்ஷியின் புத்திரான வ்யாஸமுனிவர் அளவற்றதேஜஸ்ஸுள்ள புதிதிரான சுகருடைய வசனதைப்புகழ்ந்து அவரைநோக்கி மறுபடியும் பின்வருமாறு மறுமொழிகூறலானார். 'பிரம்மசாரி கிருகஸ்தன் வானப்பிரஸ்தன் ஸன்

[1] அதன்அவஸ்தைகளுக்குத் தனித்தனியான ஸ்ருஷ்டி.

யாவரி இவர்களெல்லாரும் சாஸ்திரத்தில் சொன்னபடி அனுஷ்டித்தால உத்தமகதியை அடைகிறார்கள். யாராவது ஒருவனே நான்கு ஆஸ்ரமங்களையும் காமக்குரோதங்களில்லாமல் விதிப்படி அனுஷ்டித்தாலும் அவன் பாலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். இந்நான்கு அஸ்ரமங்களாகிற நான்குபடியுள்ள ஓர் ஏணியானது பிரம்மத்தினிடத்தில் சாத்தப்பட்டிருக்கிறது. இக்க ஏணியில் ஏறினவன் பிரம்மலோகத்தில் பூஜிக்கபடுகிறான் அதிகாரியானவன் பிரம்மசாரியாகித் தன்னுயுளில் நாலிலொருபாககாலம் அஸ்தியையில்லாதவனுக்கும் தர்மார்க்கங்களில ஸமர்த்தனவும் குருவினிடத்திலாவது குருவின் புத்திரனிடத்திலாவது வாஸஞ்செய்யவேண்டும். குருவின்கிருகத்தில் (குரு சயனம்செய்த) பிறகு படுத்து (அவருக்கு) முன்னால எழுந்திருக்கவேண்டும். சிஷ்யனிலேயோ வேலைக்காரனிலேயோ எந்த எந்தக்காரியம் செய்யத்தக்கதோ அந்த அந்தக்காரியத்தையெல்லாம் செய்துவிட்டு, 'செய்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டு குருவின்பக்கத்தில் நிற்கவேண்டும். எலலாக்காரியங்களிலும் ஸமர்த்தனுகி வேலைக்காரனிருந்து எலலாக்காரியங்களையும் செய்யவேண்டும். முன்னுக்குவர விருப்பமுள்ள பிரம்மசாரியானவன் எல்லா வேலைகளையும் செய்தபின் குருவினிடத்தில அதிகியயனஞ்செய்ய வேண்டும். வலப்பக்கமாக ஸமீபத்தில் இருக்கவேண்டும். குரு அழைத்தவுடன் அவரிடம் செல்லவேண்டும். சுத்தனும் ஸமர்த்தனும் குணசாலியுமாயிருந்துகொண்டு ஸமயம்பார்த்துத் தன் இஷ்டத்தைக் குறிப்பாகத் தெரிவிக்கவேண்டும். ஜிதேந்திரியனுயிருந்துகொண்டு நேத்திரத்தினால ஸாவதானமாகக் குருவைப் பார்க்கவேண்டும். குரு புழியாமலிருக்கும்பொழுது (தான்) புழிக்கக்கூடாது. அவர் தீர்த்தபானஞ்செய்யாமலிருக்கும்பொழுது (தான்) தீர்த்தபானம் செய்யக்கூடாது. அவர் உட்காராமலிருக்க, தான் உட்காரக்கூடாது. அவர் நித்திரைசெய்யாமலிருக்க, தான் நித்திரை செயயவுங்கூடாது. [1]நிமிர்ந்தகைகளால அவர்பாதங்களை மெலலப் பிடிக்கவேண்டும். இடப்பாதத்தை இடக்கையினலும் வலபாதத்தை வலக்கையினலும் பிடிக்கவேண்டும். குருவை வணங்கிவிட்டு, 'ஓ! பகவானே! என்னை ஏவுவிக்கவேண்டும்' என்று சொல்லவேண்டும். 'பகவானே! ஓ! குருவே! இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறேன். இதை நான் செய்துவிட்டேன். பின்னும் எதை நீங்கள் சொலலுவீர்களோ அதையும் செய்வேன்' என்று எலலா

[1] உளளங்கைகளால் என்பது.

வற்றையும்தெரிவித்து அனுமதிபெற்றுக்கொண்டு [1]விதிப்படிசெய்ய வேண்டும்; செய்துவிட்டு மறுபடியும் அவற்றையெல்லாம் குருவினிடம் தெரிவிக்கவேண்டும். பிரம்மசாரியானவன் அனுபவியாத கந்தங்களையும் ரஸங்களையும் அவன் பிரம்மசரியவிரதத்தை முடித்துவிட்டு அனுபவிக்கட்டுமென்பது தர்மங்களில் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. பிரம்மசாரிக்கு எந்தவகையானியமங்கள் [2]விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளெல்லாவற்றையும் ஒவ்வொருகாலும் அனுஷ்டிக்கவேண்டும். குருவைவிட்டு அகலவுங்கூடாது. இவ்விதம் சிஷ்யனான அந்தப்பிரம்மசாரியானவன் குருவுக்குத் தன்சக்திக்குதகுந்தபடி பிரியத்தையுண்டுபண்ணி வலலாஆஸ்ரமங்களிலும் இப்படியே யோக்கியமான செய்கையுடனிருக்கவேண்டும். சிஷ்யனானவன் வேதவிரதம் உபவாஸம்இவைகளால தனது ஆயுளில் நான்கிலொன்று சென்றபிறகு குருவுக்குக தக்ஷிணைகொடுத்து விதிப்படி விரதத்தை முடிக்கவேண்டும். பிறகு, விதிப்படிகொள்ளப்பட்ட மனைவியோடு அக்கினிகளை ஆதானஞசெய்து முயறசியுடன் விரதங்களைச்செய்துகொண்டு ஆயுளின் இரண்டாவதுபாகத்தில கிருகஸ்தனாயிருக்கவேண்டும்.

இருநூற்றுநாற்பத்தோன்பதாவது அத்தியாயம்.

ஸ்மார்த்தர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர் ஸுவஸ்துதர்மத்தைக் குருநக்குச் சொல்லியது.)

அக்கினியானவன் ஆயுளினிரண்டாவதுபாகத்தில தர்மமாக அடைந்த தாரத்துடன் அக்கினியை ஆதானஞசெய்து நல்லவிரதமுள்ள கிருஹஸ்தனாயிருந்துகொண்டு நிலலத்தில வஸிக்கவேண்டும். கிருகஸ்தனுக்கு விதவான்களால நான்குபிழைகளும்வழிகள் கருதப்பட்டிருக்கின்றன. அவைகளில் குதிரில தான்யமுடையவன் முதல் விருத்தியுள்ளவன். ஒருகுடம்தான்யமுள்ளவன் இரண்டாவதுவிருத்தியுள்ளவன். ஒருநாள்ஆகாரத்துக்குள்ளவன் மூன்றுவதுவிருத்தியுள்ளவன். புறுவீன்விருத்தியுடையவன் நான்காவதுவிருத்தியுள்ளவன். இவர்களில மேன்மேலசொலலப்பட்டவன் சிறந்தவனாகிறன். அவன் தன்தர்மத்தால எல்லாஉலகங்களையும ஜயித்தவன். ஒருகிருஹஸ்தனான (யாகஞ்செய்தல, யாகஞ்செய்வித்தல், அத்தியயனஞ்

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

செய்தல், அத்தியயணஞ்செய்வித்தல், தானஞ்செய்தல, தானம்வாங்குதல) இவ்வாறுகர்மங்களையும் கடத்துகிறான். மற்றொருவன் (யாகம் அத்தியயனம் தானம்) இம்மூன்றிலை பிரவிருத்திக்கிறான். அவர்களில் மறறவன் (அத்தியயனம், தானம்) இவ்விரண்டினலும் பிரவிருத்திக்கிறான். தான்காமவன் பிரம்மஸத்திரமென்கிற அத்தியயனத்தில் நிலைத்திருக்கிறான். (பெரியோர்கள்) கிருஹஸ்தகர்மங்களே மிகவும் பெரியவைகளாகச் சொல்லுகிறார்கள. கிருஹஸ்தன் தனக்காகப் பாகஞசெய்யக்கூடாது. வீணுகப் பசுவை மிம்ஹிக்கவுங்கூடாது. (பசுமுதலான) பிராணியோ அலலது (அசுமுதலான) ஸ்தாவரவிருக்ஷமோ (சேதன) மந்திரத்தால் ஸம்ஸ்காரத்திற்குத்தக்கவை. ஒருநாளும் பகலிலும் முன்னிரவிலும் பின்னிரவிலும் நித்திரைசெய்யக்கூடாது. இரண்டுகாலதினுமத்தியில போஜனஞசெய்யக்கூடாது. ருதுகாலத்தவிர மறறக்காலதில மனைவியை அழைக்கவுங்கூடாது. கிருஹஸ்தனுடைய வீட்டில(வந்த)பிராம்மணன் ஒருவனும் பூஜிக்கப்படாமலும் போஜனஞசெய்யாமலும் வவிக்கக்கூடாது. அவ்விதமே அவனுடைய ஹவ்ய கவ்பங்களை வஹிக்கிற அதிதிகள் எப்பொழுதும் பூஜிக்கத்தக்கவர்கள். பிராம்மணர்கள் வேதாத்தியயன விரதத்தை அனுஷ்டித்து முடித்துவிட்டு வேதங்களை ஆவருத்தி செய்துகொண்டும் தங்களுக்குரிய கர்மாவிலை ஜீவித்துக்கொண்டும் இந்திரியங்களை அடக்கித் தங்கள் கர்மங்களையும் தவத்தையும் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஹவ்யமும் கவ்யமும் பூஜைக்காகவே விதிக்கப்பட்டிருக்கின்றன இந்தக் கிருஹஸ்தாஸ்ரமத்தில் ஈகம்வளர்த்துக்கொண்டு அலைகிறவனுக்கும் டம்பமாகக் கர்மாவைச் செய்கிறவனுக்கும் (பிறுக் குமாருக) அக்கினிஹோத்ரத்தை விட்டவனுக்கும் குருவினிடத்தில பொய்யாக நடக்கிறவனுக்கும் (சண்டாளன்முதலான) எல்லாப் பிராணிகளுக்கும் விபாகமுண்டு. கிருஹஸ்தன் அவ்விதமான சமையல் செய்யாதவர்களான பிரம்மசாரிகளுக்கும் ஸ்நாயவிகருக்கும் அன்னமளிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் கிருஹஸ்தன் விகஸதைதப புஜிகின்றவனுகவும் அமிருததைப் புஜிக்கிறவனுகவுமிருக்கவேண்டும். யாகத்தின் மிச்சம் அமிருதமாகும். அதைப் புஜிப்பது ஹவிஸுக்கொப்பாகும். வேலைக்காரர்களுக்கு அளிதத மிச்சததைப்புஜிக்கிறவனை விகஸத்தைப் புஜிக்கிறவனுகச் சொல்லுகிறார்கள். வேலைக்காரர் அருந்தினசேஷம் விகஸம். யாகத்தின் சேஷம் அமிருதம். கிருஹஸ்தன் தன் தாரத்தினிடம் ரமித்துக்கொண்டு மனத்தை அடக்கி அஸூயையின்றி

இந்திரியங்களை ஜயித்து ரித்விக், உபாத்தியாயன், ஆசாரியன், அம்மான், அதிதி, தன்னை அடித்தவன், பிராயமுதிர்ந்தவன், இளைஞன், ரோகி, வைத்தியன், ஞாதி, ஸம்பந்தி, பந்து, மாதா, பிதா, ஸமான கோத்ரத்தில் பிறந்தபெண், ஸஹோதரன், புத்ரன், மனைவி, புத்ரி, வேலைக்காரர்கள் இவர்களுடன் கலகஞ்செய்யக்கூடாது. இந்தக் கலகங்களை விட்டால் எல்லாப் பாவங்களாலும் விடப்படுவான். இவர்களால் (பாகவிஷயத்தில்) கலகமில்லாமல் [1]ஜயிக்கப்பட்டவன் எல்லாவுலகங்களையும் ஜயிப்பான். 'ஸந்தேகமில்லை. ஆசாரியன் பிரம்மலோகத்துக்குத் தலைவன். பிதா விருஷ்டிகர்த்தர்களின் லோகத்திற்கு அதிபதி. அதிதி இந்திரலோகத்திற்கும் ரித்விக்குக்கள் தேவலோகத்திற்கும் தன்கோத்ரத்தில் பிறந்த பெண்கள் அப்ஸரஸின்லோகத்திற்கும் ஞாதிகள் விஸ்வேதேவர்களின்லோகத்திற்கும் தன்னைச் சேர்ந்தபந்துக்கள் திக்குக்களுக்கும் தாயும் அம்மானும் பூலோகத்துக்கும் கிழவரும் இளையவரும் ரோகிகளும் இளைத்தவரும் ஆகாசத்துக்கும் [2]பிரபுக்கள். மூத்த தமையன் பிதாவுக்கு ஸமானம். மனைவியும் மகனும் தன்சரீரமே. தொண்டர்கள் தன்னுடைய நிழல். பெண்ணானவள் (தீனன்போல) மிக்க கருணைக்குரியவள். ஆகையால், இவர்களால கடிந்துவிலக்கப்பட்டாலும் வருத்தமின்றி எப்பொழுதும் பொறுக்கவேண்டும். விவாஹானவள் கிருகஸ்தாச்ரமத்தில் ஜாக்கிரதையுள்ளவனும் சிரமத்தைப் பாராட்டாதவனுமாயிருந்துகொண்டு நித்தியமாகத் தர்மத்தையே செய்யவேண்டும். தனத்தில் ஆசையைவைத்துக்கொண்டு தர்மங்களையும் தர்மத்தையும் சிறிதும் செய்யக்கூடாது. கிருஹஸ்தவிருத்திகள் மூவகைப்படும். அவைகளுள் மேன்மேலுள்ளதைப் பரமகதியென்று சொல்லுகிறார்கள். அவ்விதமே அந்தான்கு ஆச்ரமங்களையும் மேன்மேலுள்ளவைகள் உயர்ந்தகதியென்றும் சொல்லுகிறார்கள். மேலே வரவிருப்பமுள்ளவன் (சாஸ்த்ரத்தில்) சொல்லப்பட்ட நியமங்களை லாவற்றையும் செய்யவேண்டும். கும்பத்தில் தானியமுள்ளவர்களும் உஞ்சசிலமென்னும்வ்வொருநாள்விருத்தியையுடையவர்களும் புரு வின்விருத்தியை அடைந்தவர்களுமான பூஜிக்கதக்க இவர்கள் வந்த ராஜ்யத்தில வவஸிக்கிறார்களோ அந்தராஜ்யம் மிகவுஞ் செழிப்புள்ள

---

1 'பாகமிலலாமல செய்யப்பட்டவன்' என்பது பழையவுரை.

2 இவ்விதம் ஆசாரியன்முதலானவர்கள் அந்தஅந்த உலகத்துக்குத் தலைவர்களாயிருப்பதால அவர்களுடன கலகஞ்செய்யாதவன் அந்த எல்லாவுலகங்களையுமடைவான்.

தாகும். எவன் மன்தில வருத்தமின்றி இந்தக் கிருஹஸ்தவிருத்தி களே நடதிவருகிருனே அவன் தனதுபித்ருபிதாமஹர்களான முன்னோர்கள்பதின்மரையும் தன்பின்னுள்ளவர்களானபதின்மரையும் பரிசுத்தர்களாகச் செய்கிருன். அவன் சக்கரவர்த்திகளுடைய உல கங்களுக்குஉப்பானகதியை அடைவான். அலலது, இந்திரியஜய முள்ளவர்களுக்குள்ளதி விதிக்கப்பட்டிருக்கிறது. உதாரமன முள்ளகிருகஸ்தர்களுக்கு நலமுள்ள ஸ்வர்க்கம் விதிக்கப்படுகிறது. விமானத்துடன்கூடியதும் வேதத்தில்காணப்பட்டதுமான ஸ்வர்க்கம் மிகவும் அழகானது. அடக்கமுள்ள மனமுடைய கிருஹஸ்தர்களுக்கு ஸ்வர்க்கலோகத்தில் நிலையானஸ்திதி ஏற்படுகிறது. பிரம்மாவினுல இது படியாகஏற்படுத்தப்பட்டது. முறையாக (இந்த) இரண்டாவது ஆஸ்ரமத்தைஅடைந்துஅனுஷ்டிப்பதனுல் ஸ்வர்க்கத்தில் பூஜிக்கப் படுகிருன். இதற்குமேல் புத்திரமித்திராதிஸங்கததைவிட்டவர்களும் (தவத்தால்) சரீரத்தைவாட்டுகிறவர்களுமான வனவாஸிகளுடைய தும் கிருஹஸ்தாகளைக்காட்டிலும்சிறந்ததும் மிகவும் உதாரமுமான ஆஸ்ரமத்தை மூன்ருவதாகச் சொல்லுகிருர்கள். அதைக் கேள்.

இருநூற்றுமபதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் வானப்ரஸ்த தர்மத்தைச் சுகருக்குச் சொல்லியது.)

ஓ! யுதிஷ்டிர! பெரியோர்களால்சொல்லப்பட்ட கிருஹஸ்தர் களின் விருத்தியானது உனக்குச் சொலலப்பட்டது. அதன்பிறகு சொல்லப்பட்டிருக்கிறதை அறியக்கடவாய். அது முன்காலத்தில் வ்யாஸரால் மஹாணுபாவரானதமதுபுத்திரருக்குச் சொல்லப்பட்டது. வ்யாஸர், 'புத்திரனே! கிரமமாக இரண்டாவதுவிருத்தியைத் தள்ளி விட்டுப் பத்னிமுதலானவர்களுடன்சேர்ந்து நிறைவேற்றக்கூடிய விர தத்தினுல் சிரமத்தைஅடைந்தவர்களும் எலலாஉலகங்களையும்கொடுக் கிற ஆஸ்ரமஸ்வரூபர்களும் நன்குஆலோசித்து நிவிருத்தித்தவர்களும் புண்ணியதேசவாஸிகளுமான வானப்ரஸ்தாஸ்ரமத்தை அடைந்தவர களுடைய உத்தமமான மூன்ருவதுவிருத்தியைக் கேள். உனக்கு மங்களமுண்டாகும். கிருஹஸ்தனுனவன் எப்பொழுது சரீரத்தில் தோற்சுருக்கத்தையும் நரையையும் பௌத்திரனையும் பார்ப்பானே அப்பொழுது வனதையே அடையவேண்டும். ஆயுளின்மூன்ருவது

பாகம் வானப்பிரஸ்தாஸ்ரமத்தில் வஸிக்கவேண்டும். தேவதைகளைப் பூஜித்துக்கொண்டு அந்த அக்கினிகளையே வழிபடவேண்டும். நியம முள்ளவனும் ஒரேவிதமான ஆகாரமுள்ளவனும் [1]ஆறுவகுகாலத்தில் அன்னத்தை அருந்துகிறவனும் தவறிலாதவனுமாயிருக்கவேண்டும்; இவனுக்கும் அக்கினிஹோத்ரம் அதுவே; பசுக்களும் வைகளே; எல்லாயாகஸாதனங்களும் அவைகளே. உழுவின்றி விளைந்தவைகளான கெல, யவம், தினை, சாமை இவைகளை இந்த ஆஸ்ரமத்திலும அக்கினிஹோத்ராதிமுதலான ஸ்ருத்யாகங்களிலும் ஹவிஸ்களாகக் கொடுக்கவேண்டும் இந்தவானப்பிரஸ்தாஸ்ரமத்திலும் இதுதானுங்கு விருத்திகள் கருதப்படுகின்றன. யஜ்ஞவிதியைநடத்துகிறதற்காகவும் அதிதிபூஜைக்காகவும் சிலர் அந்த அந்தஸமயத்தில தேடி உடனே அலம்பிக் கவிழுகிறார்கள். சிலர் ஒருமாஸருதிற்கும் மறறுஞசிலர் ஒருவருஷத்திற்கும் சிலர் பன்னிரண்டு வருஷத்திறகும் தேடிவைத துக்கொள்ளுகிறார்கள். வருஷாகாலத்தில ஆகாயவெளியிலும் பனிக் காலத்தில் ஜலத்திலும் வேனிறகாலதறல பஞசாக்கினிமத்தியிலும் அடிக்கடி தவஞ்செய்கிறார்கள்; பூமியில சயனிக்கிறார்கள்; கால் நனிகளாலும் நிற்கிறார்கள்; நின்றுகொண்டும் (பலவகை) ஆஸனங் களோடுபோட்டுக்கொண்டும் இருக்கிறார்கள்; மூன்றுகாலங்களிலும் ஸ்நானஞசெய்கிறார்கள். சிலர் பற்களையே உரலாகவுடையவர்கள். சிலர் கலலிஞல்தேய்த்து அரிசியாக்குகிறார்கள். சிலர் சுக்லபக்ஷத் தில் ஒருமேளை உஷ்ணமுள்ளகஞசியைப் பானஞ்செய்கிறார்கள். சிலர் கிருஷ்ணபக்ஷத்தில அவ்விதமே பானஞ்செய்கிறார்கள்; அல லது முன்வழக்கப்படி அன்னத்தையாவது புஜிக்கிறார்கள். [2]வைகா னஸமதத்தைஅடைந்து உசிதியான விரதமுள்ளசிலர் கிழங்குகளா லும் சிலர்பழங்களாலும் சிலர்புஷ்பங்களாலும் நியாயமாகக் காலத் தை நடத்துகிறார்கள். மனத்தை வசபடுதினவர்களான அவர்க ளுக்கு இவைகளும் வேறுஅனேகவித வ்ரதநியமங்களும் ஏற்பட்டி ருக்கின்றன. உபநிஷத்தில்சொலலப்பட்ட நான்காவதாஸ்ரமிகளுக் குரிய சாந்திமுதலானதர்மங்கள் எலலாருக்கும் பொதுவாக ஸ்மிருதி களில் சொலலப்படுகின்றன. அப்பா! இருஹஸ்தர்களுக்கும் வானப் பிரஸ்தர்களுக்கும் பொதுவான சமமுதலியவற்றைக்காட்டிலும்விசே ஷமாயிருக்கிறதர்மமானது தத்வததைஉணர்ந்த பிராம்மணர்களால் இந்த யுகத்திலும் நடந்துவருகிறது. அகஸ்தியர், ஸப்தரிஷிகள்,

1 பகல் பதினெட்டுமுக்கால் காழிகைக்குமேல்.

2 வானப்ரஸ்தாஸ்ரமம்.

மதுச்சந்தர், அகமர்ஷணர், ஸாங்க்ருதி, ஸுதிவாதண்டி, முயற்சியுள்ள யதாவாஸர், அக்ருதஸ்ரமர், அதீஹாவீர்யர், காவ்யர், தாண்டியர், மேதாதிதி, புதர், பலவான், கர்ணகீர்வாஹர், சூன்யபாலர், கிருதஸ்ரமா இவர்கள் தர்மத்தில மிக்கபண்டிதர்கள். அவர்கள் கர்மத்தால் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். குழந்தாய்! கூட்டமாகச்சேர்ந்த யாவரும் பிரத்யக்ஷமாகத் தர்மத்தை அறிந்தவர்கள். உக்கிரமான கவமுடையவர்களும் தர்மத்தின் சக்தியை அறிந்தவர்களுமான ரிஷிகளுள் இவர்களும் அளவற்ற வேறு அனேக பிராம்மணர்களும் வனத்தை அடைந்தார்கள். அவர்களில சிலர் வைகாநஸர்கள். சிலர் வாலகில்யர்கள். மற்றவர்கள் ஸைகதர்கள். அவர்கள் தர்மத்தையே நித்தியமாகக்கைக்கொண்டவர்களும் கர்மங்களால் விஷயாணத்தை விட்டவர்களும் இந்திரியங்களை ஜயித்தவர்களுமாகிச் சென்றுவிட்டார்கள். தர்மத்தைப் பிரத்யக்ஷமாய்அறிந்து வனத்தை அடைந்தவர்களான அவர்களெல்லாரும் ஆஸ்வினிமுதலான நக்ஷத்திரங்களைக் காட்டிலும் வேறுனவைகளும் என்றிலும் கெடுக்கமுடியாதவைகளுமான ஜோதிக்கூட்டங்களாகக் காணபடுகிறார்கள். [1]ஜரையிலை தளர்ச்சியடைந்து வியாதியிலை பீடிக்கப்பட்டவன் தனது ஆயுளின் நான்காவதுபாகத்தில வானப்பிரஸ்தாஸ்ரமத்தை விடவேண்டும். பிறரு, எல்லாப்பொருள்களையும் தக்ஷிணையாகக்கொண்டதும் (ஒருநாளில் முடிக்கக்கூடியதுமான) ஸத்யஸ்காரம் (பிராஜாபத்யம் அலலது த்ரைதாதவி) என்னும் இஷ்டியைச்செய்துவிட்டு ஸ்திரீமுதலான யாவரையும் நியாகம்பண்ணி அக்நிகளை ஆதமாவில ஸமாரோபணஞ்செய்துகொண்டு தனக்கு ஜீவஸ்ராத்தம்முதலானவைகளைச்செய்து ஆத்மாவில் பற்றுதலுள்ளவனும் ஆத்மாவில் க்ரீடையுள்ளவனும் ஆத்மாவை ஆஸ்ரயித்தவனுமாயிருக்கவேண்டும். (வைராக்கியம் முறைவிருந்தால்) [2]ஸாத்யஸ்தமென்னும் யாகங்களையும் தர்சாதி இஷ்டிகளையும் எப்பொழுதும் செய்யவேண்டும். எப்பொழுது யாகசீலர்களுக்கு யாகானுஷ்டானத்தால ஆத்மாவில் யோகமானது ஏற்படுகிறதோ அப்பொழுது மூனறுஅக்நிகளையும் சரீராசபரியந்தம் ஆத்மாவிலேயே நன்கு அடக்கிக்கொள்ளவேண்டும். மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு அன்னத்தை நித்தியாமல பிராணன்களின்பொருட்டு ஐந்தாவது அல்லது ஆறு ஆஹுதிகளைச்செய்யவேண்டும். வானப்பிரஸ்தனானமுனிவன் கேசம், ரோமம், நகம் இவைகளை வபனஞ்செய்துகொண்டு கர்மங்களினால பரிசுத்தனாகி அந்த ஆஸ்ரமத்திலிருந்தும் பரிசுத்தமான

1 வேறுபாடம். 2 பரம்மயஜ்ஞமுதலானவை.

ஸந்யாஸாச்ரமத்தை அடையவேண்டும். ஸகலப்பிராணிகளுக்கும் அபயத்தைக்கொடுத்துவிட்டு ஸந்யாஸத்தைஅடைந்த பிராம்மணனுக்குத் தேஜோமயமான உலகங்கள் ஏற்படுகின்றன. அவன் மரித்தபிறகு அழிவற்றபயனேயும் அடைவான். நலலசீலமும் அனுஷ்டானமுமுள்ளவனும் பாவமற்றவனும் ஆத்மஜ்ஞானமுள்ளவனுமான மனிதன் இம்மைமறுமைக்குரிய ஸாதனத்தைச் செய்யவிரும்புகிறதில்லை. கோபமும் மோகமும் கட்டும் பகையுமில்லாமல் உதாஸீனன் போலிருக்கவேண்டும். யதியானவன் தனக்குரியவேதம், ஸ்மிர்தம், ஹோமம், மந்திரம் இவைகளில் சக்தியுடன் நித்தியமாய் நடக்துவருகிற யமமுதலிய யோகங்களில் மனவருத்தமடையக்கூடாது. அப்படிப்பட்ட ஆத்மயோகிக்கு இஷ்டப்படி கதிகிடைக்கும். ஜீதேந்திரியனும் தர்மத்தில் பறறுதலுள்ளவனுமாயிருக்கிற அவன்விஷயத்தில் (நற்கதியடைவதில்)ஸந்தேகமில்லை. இதற்குமேல் நலல குணங்களால் மிகவும் மேலானதும் அதிகமான நியமங்களையுடையதும் சிறந்ததும் மூன்று ஆச்ரமங்களுக்கும் தலைமையானதும் நான்காவதாகச் சொல்லப்பட்டதும் பரமகதிக்குக்காரணமாகச் சொல்லப்பட்டதுமாயிருக்கிற பரமாச்ரமமென்கிற ஸந்யாஸதத்தைச் சொல்லுவேன்; கேட்கக்கடவாய்' என்றுசொன்னார்.

இருநூற்றைம்பத்தோராவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் ஸந்யாஸதர்மத்தைச் சுகருக்குச் சொல்லியது.)

சுகர், 'பரமபதத்தை விரும்புபவன், வானப்ரஸ்தாச்ரமத்தில் போலவே, ஸந்யாஸாச்ரமத்திலிருக்கும் தன்னுத்மாவை எவ்விதம் தன் சக்தியால் அத்தப்பதவியை அடையும்படி செய்யக்கூடும்?' என்று கேட்க, வ்யாஸர் சொல்லலானார்.

'மூன்றின ஆச்ரமங்களிலிரண்டிலுலும் சுதந்திரத்தையடைந்து அதன்பிறகு பரமார்த்தமான மோக்ஷத்திற்காக எந்தக்காரியம் செய்யவேண்டுமோ அதை ஏகாக்ரமனதுடன் கேள் (மூன்றின) மூன்றுபடிகளிலும் மனத்தின் மலத்தை நிவர்த்திசெய்து பிறகு சிறந்ததும் தனக்குமேல ஒரு ஸ்தானமுமில்லாததுமான ஸந்யாஸதத்தை அடையவேண்டும். ஆகையால், நீயும் இவ்விதமே அப்யாஸஞ்செய்யவேண்டும். அந்த விதத்தைச் சொலலுகிறேன்; கேள். ஸந்யாஸியான

வன் வஸித்தியை அடையவேண்டி ஸஹாயமில்லாமல் ஒருவனுகவே தனக்குரிய தர்மத்தை ஆசரிக்கவேண்டும். எவன் ஆத்மாவைப்பார்க் கிறவனுக ஒருவனுகவே ஸஞ்சரிக்கிறானே அவன் ஒன்றையும் விடு கிறதில்லை; குறைவையும் அடைகிறதில்லை. அக்கினியில்லாமலும் கிருகமில்லாமலும் நிருத்துகொண்டு அன்னத்திற்காகக் கிராமத்தை அடையவேண்டும். மௌனத்துடன் ஆத்மாவைச் சிந்தித்துக்கொ ண்டு அந்தத்தினத்திற்குமாத்திரம் ஆகாரம் ஸம்பாதிக்கவேண்டும். அதிலும் ஒருகாளைக்கு ஒருவீடு ஒரேவிதமாக லேசான ஆகாரஞ் செய்யவேண்டும். ஒடி, மரத்தடி, கந்தை, தனித்திருத்தல், எலலாப் பிராணிகளிடத்திலும் உபேக்ஷை இவ்வளவும் பிக்ஷுகனுன ஸந்யா ஸிக்கு லக்ஷணம். எவன்விஷயத்தில் சொல்லப்பட்ட (நிந்தையான) வார்த்தைகள் நிணற்றில் போடப்பட்ட கல்லுகள்போல (உள்ளேயே) போய்விடுகின்றனவோ, சொன்னவனைக்குறித்து மாறிவருகிறதில் லையோ அவன்தான்மோக்ஷாச்ரமமானஸன்யாஸாச்ரமத்தில்வஸிக்க வேண்டும். (ஒன்றையும் ஆவலுடன்) பார்க்கவே கூடாது. ஒருபோ தும் ஒருவனுடைய அபவாதத்தையும் கேட்கவுங்கூடாது. அதிலும் விசேஷமாகப் பிராம்மணர்களுடைய அபவாதத்தைக் கேட்கவே கூடாது; ஒருவிதத்தாலும் சொல்லவுங்கூடாது. பிராம்மணனுக்கு எது கேஷமவார்த்தையாகுமோ அதையே எப்பொழுதும் சொல்ல வேண்டும். தன்னை நிந்திக்கும்பொழுது அதைத் தனக்கு ஔஷத மாகக்கொண்டு மௌனமாயிருக்கவேண்டும். எந்தஒருவனுல், ஆகா சம் எப்பொழுதும் பூர்ணம்போலாகிறதோ, எவனுல சூன்யமான பிரதேசம் ஜனங்கள் நிறைந்ததுபோலாகிறதோ அவனைத் தேவர் கள் பிராம்மணனென்று நினைக்கிறார்கள். எதையாவது உடித்து எத னுலாவது பகியைப் போக்கிக்கொண்டு எங்கேயாவது சயனித் துக்கொண்டிருப்பவன் எவனே அவனைத் தேவர்கள் பிராம்மண னென்று நினைக்கிறார்கள். எவன் கூட்டத்தைக்கண்டால் பாம்பைக் கண்டதுபோலவும் ஸம்மானத்தை அடைந்தால் மரணத்தை அடைந் ததுபோலவும் ஸ்திரீகளைக்கண்டால் பிசாசத்தைப்பார்க்கிறதுபோல வும் பயப்படுகிறானே அவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கிறார் கள். எவன் வெகுமானிக்கப்பட்டும் ஸந்தோஷியாமலும் அவமதிக்கப் பட்டும்கோபியாமலும் எல்லாப்பிராணிகளுக்கும் அபயத்தைக்கொடுக் கிறவனுயிருக்கிறானே அவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கி றார்கள். துறவியானவன் மரணத்தைப் பிரார்த்தியாமலும் ஜீவனத் தையும் பிரார்த்தியாமலும், வேலைக்காரன் யஜமானன்கட்டளையை

எதிர்பார்ப்பதுபோலக் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். யதியானவன் தோஷமற்ற ஹிதமுள்ளவனும் தோஷமற்ற வாக்குள்ளவனும் எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபட்டவனுமாயிருக்கவேண்டும். அதனால் பகைவனிலலாதவனை அவனுக்குப்பயமேது? எவனுக்கு எல்லாப்பிராணிகளிடத்திலிருந்தும் பயமில்லையோ, எவனிடமிருந்து எல்லாப்பிராணிகளுக்கும் பயமில்லையோ மோகமற்ற அவனுக்கு ஒரு நிலையிலிருந்தும் பயமிருக்கிறதில்லை. எப்படி யானையின் காலடியில் மற்றப்பிராணிகளுடைய காலடிகள் அடங்குமோ அப்படியே துறவியினுடையபதத்தில் இந்திரன்முதலானவர்களுடையபதவிகளும் அடங்கியிருக்கின்றன. இப்படியே தர்மநிதமான எல்லாம் கொலலாமையில் சொல்லப்படுகின்றன. எவன் கொலையைச் செய்யாமலிருக்கிறானோ அவன் ஒருகாலும் காசமடையமாட்டான். ஹிம்ஸை செய்யாதவனும் எலலாவற்றிலும் சமமானவனும் ஸத்யவாதியும் தைரியமுடையவனும் இந்திரியங்களை அடக்கினவனும் எலலாப்பிராணிகளுக்கும் ரக்ஷகனுமாயிருக்கிறவன் உத்தமமான கதியை அடைகிறான். இவ்விதம் பேராசையால் திருப்தியடைந்தவனும் பயமறறவனும் ஒன்றையும் விரும்பாதவனுமாயிருக்கிறவனே மிருத்யுவென்பது மீறுகிறதில்லை. அவன் மிருத்யுவை அடைகிறதில்லை. ஸகல ஸம்பந்தங்களும் விட்டவனும் ஆகாயம்போலிருக்கிறவனும் தனமிலலாதவனும் ஸகாயமிலலாமல் நிகிறவனும் சாக்ஷாத்தாயிருக்கிற முனியைத் தேவர்கள் பிராம்மணனாக நினைக்கிறார்கள். எவனுடைய ஜீவனம் தர்மத்திற்காகவோ, எவனுடைய தர்மம் தைரியின் பிரீதிக்காகவோ, எவனுக்கு இரவுபகல்கள் புண்ணியத்திற்காகவோ அவனைத தேவர்கள் பிராம்மணனாக நினைக்கிறார்கள். ஒன்றையும் பிரார்த்தியாதவனும் ஒன்றையும் செய்யாதவனும் ஒருவரையும் ஸம்ஸ்கரியாமலும் துதியாமலுமிருக்கிறவனும் ஸகலபதார்த்தங்களுமற்றவனுமாயிருக்கிறவனைத் தேவர்கள் பிராம்மணனாக நினைக்கிறார்கள். எல்லாப்பிராணிகளும் ஸுகத்தில் ஸந்தோஷமடைகின்றன; துக்கத்திற்கு விகமும் கதிக்குகின்றன. ஆசையால், பரத்தையுடன்கூடிய யதியானவன் பிராணிகளுக்குப் பயத்தையுண்டுபண்ணுவதிலிருந்து முழுவதுமாக விலகுகிறான். ஆகையால், எவன் முதலில் கொலலாதலென்னுமசெய்கையை விடுகிறானோ அவன் பிரஜைகளிடமிருந்து அனந்தமான அபயத்தை அடைகிறான். ஆத்மயாஜியான யதியான

வன் முகக்துவாரக்கினால் கொடுக்கப்படுகிற பிராணகுதிஹவிஸை ஹோமம்பண்ணுகிறான். சராசரமான ஜகத்துக்கு நாபியும் இருப்பிடமுமான [1]வைஸ்வாநரனைவன் தனக்கு அவயவங்களான அவனுடைய அங்கத்தையும் கல்லதும் கெட்டதுமாயிருக்கிற கர்மத்தையும் ஸகலத்தையும் அடைகிறான். சக்தவைஸ்வாநரன் ஹ்ருதயத்தில் ஏர் ஓட்டை அளவில் நாபிக்குக்கீழ் இருக்கிறதே அவனிடத்தில் பிராணவாயு இந்திரியமுதலானவைகளை ஆத்மயாஜியானவன் ஹோமம் செய்கிறான். ஹோமம் செய்யப்பட்ட அவனுடைய அக்நிஹோத்ரமானது தேவர்கள்முதலான எல்லாப்பிராணிகளுடைய ஆத்மாவிலுமிருக்கிறது. ஆகில, ஸுக்ஷ்மபூதங்கள்மூன்றையும்உபாதியாகவுடையஹிரண்யகர்ப்பனையும் பஞ்சீகரிக்கப்பட்டசரீரத்தில்அமர்ந்த மூன்றுகுணங்களோடுகூடியாபாவாயையும்மேலானபரமாத்மஸ்வரூபத்தையும் அறிகிறவர்கள் எல்லாஜகத்துகளிலும் பூஜிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஸமர்த்தர்களானதேவர்கள் அமிருதத்தை அளிக்கிறார்கள். எவன் வேதங்களையும் ஜாகரதையும் கர்மேந்திரியையும் அதன்பலனுளவர்க்கமுதலானவற்றையும்பரமாத்மஸ்வரூபத்தையும்பின்னும் எல்லாவற்றையும் தனதுபிரத்யகாத்மாவினிடத்திலேயே அறிகிறதே அவனை எப்பொழுதும் தேவர்கள் (பூஜிக்க) விரும்புகிறார்கள். பிரகாசமாயிருக்கிறகிரணங்கள்போன்ற இந்திரியவ்யாபாரங்களுள்ள எவன் பூமியிலும் ஆகாயத்திலும் ஸம்பந்தமில்லாததும் அறியமுடியாததும்ஞானவடிவமும்ப்ரம்மாண்டத்தில ஆவிர்ப்பவித்ததும்அங்கதேவதைகளாகிய சிறகுகளுள்ளதுமான அண்டத்தின் கபிவிலுள்ள பஞ்சீபோன்ற பிரதயகாத்ம ஸ்வரூபதத்தைத் தனதுசரீரத்தில் ஹ்ருதயாகாசத்தில் அறிகிறதே அவனைத் தேவர்கள் விரும்புகிறார்கள். எந்தக்காலமாகிற சக்கரத்தினுடையவாயில் இந்த எலலா உலகமும் விழுகிறதோ (எப்பொழுதும்) சுற்றிவருகிறதும் சிதறிப்போகாததும் ஜனங்களுடைய ஆயுளைக்குறுகச்செய்கிறதும் ஆறுருதுக்களாகிற குடத்தையுடையதும் பன்னிரண்டு மாதங்களாகிற ஆரக்கால்களையுடையதும் அமாவாஸை பூர்ணிமை மாதப்பிறப்புக்களாகிற கணுக்களுடையதுமாயிருக்கிற அந்தகாலசக்ரமான ஆத்மஸ்வரூபமானது ஹ்ருதயகுகையில் வைக்கப்பட்டிருக்கிறது. [2]இந்தலோகத்தில ஸுஷுப்திஸ்தானத்தை அடைந்த சந்தஜீவன் ஜகத்திற்குச் சரீரமோ அவன் ஸ்தூலஸூக்ஷ்மமான ஸகலலோகங்களையும் வியாபித்திருக்கிறான். அந்தஜீவனுனவன் தன்னுல்லியாபிக்கப்பட்ட அந்தஇரண்டு

[1] அந்தர்யாமியான ஈச்வரனென்பது. [2] வேறுபாடம்.

சரீரத்திலுமிருந்துகொண்டு பிராணிகளனைத்தினுள் ஹிதமாகத்திருப்திசெய்கிறான். அக்ஷத்ரேவஜ்ஞனும் திருப்தியடைந்து அவனுடையமுகத்தைத் திருப்திசெய்கிறார்கள். பிரம்மத்தை உபாஸிப்பவன் தேஜோமயனும் நித்யனும் பழமையானவனுமாகிப் பயமற்றவனாகும் அழிவற்றவைகளுமாயிருக்கிற உலகங்களை அடைகிறான். எவனிடமிருந்து பிராணிகள் ஒருகாலும் பயத்தை அடைவதில்லையோ அவன் ஒருபிராணியும் ஒருபிராணிக்கும் பயப்படுகிறதில்லை. எவன் மற்றவர்களால் நிந்திக்கப்படாதவனும் மற்றவர்களைத் தானும் நிந்திக்காதவனுமாயிருக்கிறானோ அந்தவேதியன் பரமாத்மாவைப் பிரத்யக்ஷமாகப் பார்ப்பான். (அதனால்) புஜ்ஞானமற்றவனும் களங்கமற்றவனுமாயிருக்கிறவன் [1]திகபரங்களிலுள்ள போக்யத்தை அடைகிறதில்லை. இந்தப்பிரக்ஷ்ணகன் (சோதனையில்லாமலழட்டாருசிலையும் தங்கத்தையும் ஸமமாகக்கருதிச் சோகம்நசித்தப் பற்றுதலும் கலகமுமில்லாமல் நிற்கை ஸ்துதி இரண்டும் நீங்கி விருப்புவெறுப்புக்களற்று உதாஸீனன்போல ஸஞ்சரிப்பான்

இருநூறழைம்பத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

(வியாஸர் ஆத்மாவை அறியும்வகையைச் சுகருக்குச் சொல்லியது.)

(மனம்இந்திரியமுதலான) மாயாவிகாரங்களால ஜீவன் ஸம்ஸாரியாகச் செய்யப்பட்டிருக்கிறான். அவைகள் இவனை அறிகிறதில்லை. இவனும் அவைகளை அறிவான். அந்தஜீவன் இந்தமேலாகத்தில் மனமுதலான ஆறுஇந்திரியங்களாலும் வசப்பட்டவைகளும் பலமுள்ளவைகளுமாயிருக்கிற கலலுருதிறைகளாலே ஸாரதிபோல இந்தஎல்லாக்காரியத்தையும் செய்கிறான். இந்திரியங்களைக்காட்டிலும் விஷயங்கள் மேலானவைகள். விஷயங்களைக்காட்டிலும் மனம் மேலானது. மனத்தைக்காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக்காட்டிலும் [2]ஆத்மா மேலானது. ஆத்மாவைக்காட்டிலும் [3]மூலப்

---

1 இவை அழியுதன்மையவ தலால,எவனும் அழியாத நித்யனைத்தை அடைவான் என்றபடி.

2 'ஹிரண்யகர்ப்பபுத்தி' என்பது பழையவுரை.

3 'அவ்யக்தம்' என்பதுமூலம். 'சரீரம்' என்றுபொருள்கூறுவது ப்ரம்ம ஸூத்ரம் ராமானுஜபாஷ்யம்.

பிரகிருதி மேலானது. அதைக்காட்டிலும் பரமாத்மா மேலானவன். பரமாத்மாவுக்கு மேறபட்டது வேறுஇல்லை. அவன்தான் எல்லை. அவன்தான் மோக்ஷஸ்வரூபன். இவ்விதம் ஆகமா எல்லாப்பிராணிகளிடத்திலும் மறைத்திருக்கிறபடியால் பிரகாசிக்கிறதில்லை. ஆனால், ஸூக்ஷுமதர்சிகளான ஞானிகளால் மேலானதும் ஸூக்ஷுமமுமான புத்தியினால் பார்க்கப்படுகிறான். மனமுதலான ஆறுஇந்திரியங்களையும் விஷயங்களையும் தாரணசக்தியினால் அந்தராத்மாவில் லயிக்கச்செய்து வெகுவானதொரு பயச்சமயமில்லாத நிர்மலமனத்தைப் பழக்கப்பட்ட மனத்தைத் தியானத்தினால் ஒடுக்கிச் சாந்தமானமனமுடையவனுகி [1]ஆத்மாவைத்தவிர வேறுஎதுவானாலும் அறிந்திருக்கிறவன் அதனால மோக்ஷபதமடைவான். எல்லாஇந்திரியங்களுக்கும்வசமானமனத்தையும் சஞ்சலமானஜீவனையுமுடையமனிதன் மேலானவனாகிய (காமத்தில்) ஆத்மாவைக்கொடுத்ததினால் மிருதுவுவை அடைகிறான். எல்லாஎங்கல் பங்களையும்தள்ளிவிட்டுச் சித்தத்தைப் புதுநிலையில் பிரவேசிக்கச்செய்யவேண்டும். சித்தத்தைப புதுநிலையிலேறவுத்திவிட்டுக் காலதைதாகிக்கச் செய்கிறவனுயிருக்கவேண்டும். யதியானவன் சித்தத்தின் நிதானிலை சுபத்தையும் அசுபத்தையும் விடுகிறான். இவ்வுலகில் தெளிவானசித்தமுள்ளவன் ஆத்மாவிலல்லேபெறதுஅழிவுறாஸுகத்தை அடைகிறான். சித்தத்தின் தெளிவினுடைய லக்ஷணமோவென்றால் திருப்தியுள்ளவன் எப்படி ஸுகமாகநித்திரைசெய்வானே, காற்றில்லாதஇடத்தில் தூண்டப்பட்டதீபம் எவ்விதம்அசையாதோ அப்படி முன்இரவிலும் பின்இரவிலும் மனத்தைஆத்மாவில்சேர்ப்பித்துக்கொண்டு லேசான ஆகாரமுள்ளவனும் மிகவும் சுத்தமானமனமுள்ளவனுமாகித் தன்னிடத்தில் தன்னைப்பார்க்கிறானென்பதுவே. ஓ! புதுதிரனே! உபதேசரூபமான இந்தச்சாஸ்திரமானது எல்லாவேதங்களுடைய ரகஸ்யமும் வேதத்தைத்தவிர மற்றச்சப்தங்களாலும் பிரதியக்ஷானுமானங்களாலும் அறியப்படாததும் தன் அனுபவத்தினாலேயே அறியக்கூடியதுமாயிருக்கிறது. திரவ்யம்போன்ற வந்தவஸ்துவானது தர்மத்தைப்பறினை எல்லாச்சரித்திரங்களிலும் விசித்திரமான கதைகளிலும் காணப்படுகிறதோ அந்த அமிருதமானது அனேகரிக்குக்கூடைத்து எடுக்கப்பட்டது. ஓ! புதுதிரனே! தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கப்படுவதுபோலவும் கட்டையிலிருந்து அக்கினி எடுக்கப்படுவதுபோலவும் வித்வான்களுடையஞானமானது ப்ரமாணத்திலிருந்து எடுக்கப்பட்டது. குழந்தாய்! உத்தமாதிகாரிக்கு உபதேசிக்கப்பட்ட இந்த

[1] வேறுபாடம்.

தச்சாஸ்திரமானது ஸுதர்களுக்குச் சொல்லக்கூடியது. அப்படிப் பட்ட இந்தச்சாஸ்திரமானது சமம், தவம், தமம், வேதாத்தியயனம், (குருவை) அனுசரித்தல் இவைகளில்லாதவனும் அஸூயையும் ஒழுங் கின்மையுமுள்ளவனும் சொன்னதைச் செய்யாதவனும் தர்க்கசாஸ் திரத்தால் கெடுக்கப்பட்டவனும் பிசாசொல்லுகிறவனுமாயிருக்கிற வனுக்குச் சொல்லத்தகுதியல்ல. பலலாபையும் புகழ்கிறவனும் எல லாராலும்புகழப்படுகிறவனும் சாந்தனும் தயாளுள்ளவனும் பிரியனுமா யிருக்கிறபுத்திரனுக்கும் தன்னை அனுசரிக்கிற சிஷ்யனுக்கும் இது சொல்லத்தக்கது. இந்தரகஸ்யமானதாமமான இது மற்றவனுக்கு ஒரு விதத்தாலும் சொல்லத்தக்கதில்லை. ஒருகால ஒருமனிதன் இந்தச் சாஸ்திரத்திற்காக பதினைங்ளாலிலிறைந்த இதற்குப்பூமிமுழுமையும் கொடுத்தாலும் தத்வத்தை அறிந்தவன் அதைக்காட்டிலும் இதுவே பெரிதென்று நினைக்கவேண்டும். ஆகையால, மஹரிஷிகளால் சேவி க்கப்பட்ட அந்தச்சாஸ்திரமானது வேதாந்தங்களில சொலலப்பட் டிருக்கிறது.மிகவும்ரகஸ்யமானவிஷயத்தையுடையதும் அந்தஆநமா வைப் பற்றியதுமான சாஸ்திரமானது ஸாதாரண மனிதர்களுக்கு எட்டாததாயிருக்கிறது. இனி எதை என்னை நீ கேட்கிறாயோ அதை உனக்கு நான் சொல்லுவேன். ஓ! குழந்தாய்! இதன்மேல் உன்மனத்தில எது இருக்கிறதோ, எந்தவிஷயத்தில் உனக்குச் சில இடங்களில் ஸந்தேகமிருக்கிறதோ அதைக் கேட்கலாம். இதோ நான் உன்முன்னே இருக்கிறேன். உனக்கு நான் மறுபடியும் என்னசொல்லவேண்டும்!' என்று கினைனர்.

இருநூற்றைம்பத்தைழனூறாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், ஐந்து பூதமுதலியவற்றின் குணங்களைச் சுகருக்குச் சொல்லியது.)

சுகர், 'ஓ! ஸகலகுணங்களும் பொருந்திய முனிசிகாமணியே! ஆத்மாவைப்பற்றிய சாஸதிரத்தை அதிகரிருக்கிறபடி அந்த அத் யாத்மசாஸ்திரத்தை மறுபடியுமே எனகருளிவாகச் சொல்லவேண் டும்' என்றுகேட்க, வ்யாஸர் கூறலானார்.

'குழந்தாய்! இந்தஉலகத்தில் மனிதனுடைய அதயாத்மதத்தை நான் உனக்குச் சொல்லப்போகிறேன். அதனுடைய இந்தவிரிவைக் கேள் பிராணிகளுக்குக் கடலின் அலைகள்போலப் பூமி, அப்பு,

தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து மஹாபூதங்கள் ஏறபடித்தப்பட்டிருக்கின்றன. ஆமையானது தன் அவயவங்களை வெளியிலகீட்டி மறுபடி சுருக்கிக்கொள்ளுகிறதுபோல இவ்வுலகில் அலபமான சரீரங்களில் மஹாபூதங்கள் ஜனனமரணநிவிகாரத்தைச் செய்கின்றன இத்தக்காரணத்தால ஸ்தாவரஜங்கமங்களான இந்த உலகமனைத்தும் மஹாபூதவடிவமாகவே இருக்கிறது. அந்தச் சரீரத்தினுடைய அந்த விதமே ஸருஷ்டிவிஷயத்திலும் பிரளயவிஷயத்திலும் விரிவாகச் சொலலப்படுகிறது. குழந்தாய! மஹாபூதங்களைக்கொண்டு எலலாப்பிராணிகளிலுமிருக்கின்றன. பிராணிகளைப் படைக்கிற பரமாத்மாவானவர் எந்தப்பிராணியின்விஷயத்திலே எதைக்கர்மத்தைப் பார்த்து எதற்காக அதற்குத்தக்கபடி அந்தப் பிராணியிடத்திலும் பூதங்களுடைய விந்யாஸத்தைச்செய்தார்' என்றுசொன்னார். சுகர், 'சரீரங்களில்செய்த விந்தியாஸத்தைப் புருஷன் எவ்விதம் அறியக்கூடும்? சில இந்திரியங்கள்; சில குணங்கள். அவைகளையும் எவ்விதம் அறியமுடியும்?' என்றுகேட்டார். வ்யாஸர், 'இதை உனக்கு உள்ளபடி கிரமமாகச் சொல்லுவேன். அது எவ்விதமாயிருக்கிறதென்பதையும் அதனுடைய தத்வம் எவ்விதமிருக்கிறதென்பதையும் நீ ஒரே மனமாகக் கேட்கக்கடவாய். சப்தம், ஸ்பர்சதரம், துவாரங்கள் என்னும் மூன்றும் ஆகாயத்திலிருந்து உண்டானவை பிராணன், சேஷ்டை, ஸ்பர்சம் என மூன்றும் வாயுவினுடைய தர்மங்கள். தேயுவானது ரூபம், நேத்ரம், உதரத்திலிருக்கும் அக்னி என மூன்றுவிதமாகச் செய்யப்படுகிறது. ரஸம், ரஸஜ்ஞத்தரியம், ஸ்நேகம் என மூன்றும் ஜலத்தின் தர்மங்கள். கந்தம், நாஸிகை, சரீரம் என மூன்றும் பூமியின் தர்மங்கள். ஸ்ரோத்ரம், த்வக், நேத்ரம், ரஸ, நாஸிகைஎன ஐந்தும் இந்திரியக்கூட்டம். பஞ்சபூதங்களின் விகாரமானது இவ்விதம் விவரணம் செய்யப்பட்டது. வாயுவிலிருந்து ஸ்பர்சமும், அப்புவிலிருந்து ரஸமும், தேயுவிலிருந்து ரூபமும்(உண்டாயினவென்று)சொலலப்படுகின்றன. சப்தம் ஆகாயத்திலிருந்து உண்டானது. கந்தமானது பூமியின் குணமாகக் கருதப்படுகிறது. மனம், புத்தி, வாஸனை இம்மூன்றும் மநோமயங்கள். ஸத்வராஜஸதமோகுணங்களுக்குப்பிறகு உண்டான இவைகள் அந்தக்குணங்களை விட்டிருப்பதில்லை.இவ்வுலகில் ஆமையானது தன் அவயவங்களை வெளியில்கீட்டி உள்ளே அடக்கிக்கொள்ளுகிறது மேலமேல புத்தியானது இந்திரியக் கூட்டத்தை ஸருஷ்டித்து (மறுபடியும் தன்னிடத்தில்) ஒடுங்கச்செய்கிறது. பாதத்திற்குமேல் தலைக்குக் கீழுள்ளதை அறிகிறதென்கிற அந்தக்காரியத்தில உத்தம

மான புத்தியானது இருக்கிறது. புத்தியான்து சப்தமுதலான குணங்களின் ஸ்வரூபத்தை அடைகிறது. புத்தியே மனமுதலான எல்லா இந்திரியங்களுமாகிறது. புத்தியிலாத விஷயத்தில் குணங்கள் ஏது? மனிதனிடத்தில் இந்திரியங்களை ஐந்தாகவும் மனம் ஒருவ தாகவும் சொல்லப்படுகின்றன. புத்தியை ஏழாவதாகவும் ஜீவனை எட்டாவதாகவும் சொல்லுகிறார்கள். கண் ரூபத்தை அறிவதற்கே உண்டானது. மனம் ஸம்சயத்தை உண்டாக்குகிறது. புத்தியானது நிச்சயத்தைச் செய்கிறது. ஸாக்ஷாத்ராஜஸன் ஸாக்ஷியாகச்சொல்லப்படுகிறான். ராஜஸ தமஸ ஸத்வ மும் ஜீவனும் (பூர்வஜன்மானியான) தன் காரணத்திலுள்ளவைகளாகின்றன. அந்தக்குணங்கள் எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமாயிருக்கின்றன. அந்தக் குணங்களை ஒளித்து அறியவேண்டும். புலனைந்தும் மனசும் ஆதமாவில் ப்ரீதியும் மிக்க சாந்தியும் சுத்தியுமுள்ளதாகப் பார்ப்பாயே அதை ஸத்வமாக நிச்சயிக்கவேண்டும். எது சரீரத்திலோ மனதிலோ ஸந்தாபத்துடன் ப்ரவர்த்தியுள்ளதாகிறதோ அதை ராஜஸமாகக்கண்டுகொள்ள வேண்டும். எது மோகத்துடன் கூடியதும் ப்ரகாசமற்றதுமான விஷயத்தையுடையதும் எனக்கு ஒழுங்காகாது அறியமுடியாததுமாயிருக்கிறதோ அதைத் தமஸென்று நிச்சயிக்கவேண்டும். ஸந்தோஷம், ப்ரீதி, ஆனந்தம், ஸமாதானம், மனத்தின்திருப்தி இவைமுதலானஸாத்விக குணங்கள் காரண நிஷ்டையிலோ காரணநிலையாமையிலோ உண்டாகின்றன. அபிமானம், பொய்யுரைத்தல், லோபம், மோகம், பொறாமை இவைகள் ரஜோகுணத்தின் அடையாளங்கள். அவைகள் காரணத்தாலும் காரணமில்லாமலும் ஏறட்டிக்கின்றன. அப்படியே மோகம், அஜாக்ரதை, நித்தை, சோம்பல், அறியாமை இவைகள் எப்படியாவது அடிக்கடி உண்டாக்கின்றன. அவைகளை தமஸின்குணங்களாக அறியத்தக்கவை.

இருநூற்றைம்பத்துநான்காவது அத்தியாயம்.

மோக்ஷ தர்மம். (தொடர்ச்சி.)

(வியாஸர், ஆத்மாவே எல்லாமாய் எல்லாவற்றையும்செய்கிற தென்பதைச் சுகருக்குச் சொல்லியது.)

மலமானது (ஸங்கல்பத்தால்) பதார்த்தத்தை உண்டாக்குகிறது. புத்தியானது அதை நிச்சயிக்கிறது. அகங்காரமானது பிரியத்தையும் அப்ரியத்தையும் அறிகிறது. இம்மூன்றும் கர்மத்தினால்

உண்டானவை. இந்திரியங்களைக்காட்டிலும் விஷயங்கள் மேலானவைகள். விஷயங்களைக்காட்டிலும் மனம் மேலானது. மனத்தைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக்காட்டிலும் ஆத்மா மேலானதென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. மஹாத்மாவாகிய புத்தியே ஆத்மா. புத்தியை ஆத்மாவுக்கு ஸாதனம். எது எப்பொழுது பதார்த்தத்தை காணவிரும்பிச்செய்கிறதோ அப்பொழுது மனமாகிறது. இந்திரியங்கள் பலவித்தமாயிருக்கிறபடியால் புத்தி பானது அடிக்கடி விகாரத்தை அடைகிறது. புருஷனானது சப்தத்தைக்கேட்கிறதாக பாவிக்கப்படுகிறது; ஸ்பரிசிக்கிறதாகத்தவறாகச்சொல்லப்படுகிறது; பார்க்கிறதாக பிரகடிக்கப்படுகிறது, ரஸத்தை அறிகிறதாக ரஸனமாகிறது; கந்தத்தை அறிகிறதாகக் கிராணமாகிறது. (இப்படி) புத்தியானது வெவ்வேறுக விகாரத்தை அடைகிறது. புத்தியின்விகாரங்களே இந்திரியங்களென்று சொல்லுகிறார்கள். அவைகளில் புருஷனுனவன் காணப்படாதவனுகஇருக்கிறான். புருஷனிடத்தில் புத்தியானது இருந்துகொண்டு ஸத்வ ரஜஸ்தமோகுணங்களிருத்திகளில் இருக்கிறது. மனிதன் ஒருகால ஸுக்தாஸுத்தை அடைகிறான். ஒரு ஸமயம் துக்கிக்கவுஞ்செய்கிறான். ஒருஸமயம் ஸுகமும் துக்கமும் இலலாமலுமிருக்கிறான். ஸத்வரஜஸ்தமோகுணரூபமான இந்தப்புத்தியானது, நதிகளெல்லாம்வந்தபதும் ஸமுத்திரமானது பெரியகுகையை அடுத்திருப்பதுபோல மூன்றுகுணங்களையும் அடித்திருக்கிறது. எப்பொழுது ஒருபொருளை விரும்புகிறானோ அப்பொழுது அது மனமாகிறது. தனித்தனியான இந்தந்த இந்திரியங்களின் ஆதாரங்களைப் புத்தியேயென்றுணரவேண்டும். இந்தவெல்லா இந்திரியங்களும் முழுதும் மிகமேன்மை ஜயிகரத்தக்கவைகள். எப்பொழுது எந்த இந்திரியமானது புத்தியோடுசேருகிறதோ அப்பொழுது (அதஇந்திரியத்தினுல அறியப்படுகிறவிஷயம்) மனத்தின் ஸங்கல்பரூபமான பதார்த்தத்தில் புகுந்யானது பிரிவுபடாமலிருக்கிறது. பிரவ்ருத்தியில்லாமலான ரஜஸை ஸத்வமும் அணுஸரிக்கிறது. எந்தப் பதார்த்தங்கள் (உலகத்தில்) இருக்கின்றனவோ அவைகளெல்லாம் இம்மூன்றுகுணங்களிலேயே ஆதாரங்கள் வண்டிசக்கரத்தின் வட்டையை அணுஸரிப்பதுபோல அணுஸரித்தவைகளாகச் செல்லுகின்றன. மனமானது, உகாஹீனமுள்ளவைகளும் விஷயங்களின் ஸம்பந்தத்திற்குதகுதக்கபடி வெளியில் ஸஞ்சரிக்கின்றவைகளும் புத்தியை ஸாமாகவுடையவைகளுமான இந்திரியங்களால் தீபம்போலத் தன்னிஷ்டப்படி பிரகாசத்தைச்செய்கிறது. இந்தஜகத்தானது இவ்

விதஸ்வபாவத்துடன்கூடியதென்று அறிந்தவித்வான் ஒருநாளும் மோகம், சோகம், ஸந்தோஷம், மாத்ஸர்யம்இவைகளை அடைகிறதில்லை. விஷயத்திற செலவுகின்றவைகளும் பிரவ்ருத்தியுள்ளவைகளும் நிறுத்தியற்றவைகளும் மனுஷ்யரில்லாதவர்களுக்கு அடங்காதவைகளுமாயிருக்கிற இந்திரியங்களால் ஆத்மாவானது பார்க்கமுடிகிறதில்லை. எப்பொழுது புருஷன் இந்திரியங்களுடைய வியாபாரங்களை மனதுநிறுத்தி அடக்குகிறானோ அப்பொழுது நிவ்ருத்தியுடையஆத்மாவானது திருத்தாய்பிரகாசம்செய்யப்பட்ட உருவம்போலப் பிரகாசிக்கிறது. [1]இருள்நீங்கியபொழுது எல்லாப்பிராணிகளுக்கும் எல்லாப்பொருள்களும் விளங்குவதுபோலவே இதையும் நிச்சயிக்கவேண்டும். எவ்விதம் ஜலத்திலஸஞ்சரிக்கின்றநீர்ப்பறவையானது ஜலத்தின்ஸம்பந்தத்தை அடைகிறதில்லையோ அவ்விதமே முக்தனானயோகியானவன் குணதோஷங்களின்ஸம்பந்தத்தை அடைகிறதுஇல்லை. அப்படியே பண்டிதனானவன் விஷயங்களை அனுபவித்தாலும் எல்லாப்பொருள்களிலும் பற்றுதலறறவனாயிருப்பதால் தோஷங்களை ஒருவிதத்திலும் அடைகிறதில்லை. எல்லாப்பிராணிகளுக்கும் ஆதமபூதனும் விஷயங்களுடையகூட்டத்தில பற்றுதலில்லாதவனுமாயிருக்கிற எவனுக்கு முன்செய்துவந்த கர்மாவைவிட்டு எப்பொழுதும் ஆத்மாவில் பற்றுதலிருக்கிறதோ (அவன் புண்யபாவங்களை அடைகிறதில்லை.) ஆத்மாவானது புத்தியை வியாபிக்கிறது; ஒருகால விஷயங்களையும் வியாபிக்கிறது. விஷயங்கள் ஆதமாவை அறிகிறதில்லை. ஆத்மா விஷயங்களை எப்பொழுதும் அறிகிறது. ஆதமாவானது விஷயங்களைப் பார்க்கிறதும் அந்த அந்தப்படி பண்ணுகிறதுமாயிருக்கிறது. ஸூக்ஷ்மமானகேஷ்தரஜ்ஞேஷ்தரஜ்ஞங்களுடைய இந்தவித்தியாசத்தை அறியக்கடவாய். இவற்றுள் ஒன்று விஷயங்களைப்படைக்கிறது, மற்றொன்று விஷயங்களைப் படைக்கிறதில்லை. இயறகையினுலே இவ்விரண்டிற்கும் வெவ்வேறுபாடுகள்; எப்பொழுதும் சேர்ந்தவைகளாயுமிருக்கின்றன. மத்ஸ்யமானது ஜலத்தைக்காட்டிலும் வேறானதும் ஜலத்துடன்சேர்ந்தே இருக்கிறதுபோல அவைகளும் சேர்ந்தே இருக்கின்றன. ஆற்றுப்பழமும் கொசுவும் சேர்ந்தும் வேறுமாயிருப்பதுபோலவும் ஈர்க்கும் முஞ்சமும் சேர்ந்தும் வேறுமாயிருப்பதுபோலவும் சரீரஆதமாக்கள் சேர்திருந்தாலும் ஒன்று மற்றொன்றில் இருப்பவைகளுமாயிருக்கின்றன.

---

1 வேறுபாடம்.

இருநூற்றைம்பத்தைந்தாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், ஸுலபையின் பெருமையைச் சுகருக்குச் சொல்லியது.)

புத்தியானது ஸத்வரஜஸ்தமோகுணங்களைப் படைக்கிறது. க்ஷேத்ரஜ்ஞன் அவைகளை யுடைகிறான். நியந்தாவான க்ஷேத்ரஜ்ஞனவன் ஜீதாத்மனின்பால ஸகலமான குணங்களையும் விகாரத்தை அடையும்படி செய்கிறான். விஷயங்களைப் படைக்கிற அந்தப் புத்தியானது பூர்வவாஸனையுடன் கூடியது. (ஊர்ணநாபியென்னும்) எட்டுக்காற் பூச்சியானது எவ்விதம் நூலை ஸ்ருஷ்டிக்கிறதோ அவ்விதமே (இந்த க்ஷேத்ரஜ்ஞனவன்) விஷயங்களை ஸ்ருஷ்டிக்கிறான். நாசத்தை அடைந்த பதார்த்தங்கள் இல்லாமற்போவதில்லை. (பின்னேயென்னவென்றால்) அவைகளுடைய பிரவிர்த்தியானது அறியப்படுகிறதில்லை. இவ்விதம் சிலர் நிச்சயிக்கிறார்கள். மறறுஞ்சிலர் [1] நிவிருத்தி என்று தீர்மானிக்கிறார்கள். இவ்விரண்டு விதத்தையும் புத்திக்குத் தக்கபடி விசாரித்துத் தீர்மானிக்கவேண்டும். [2]ஜனனத்தையடைந்த ஆத்மாவும் இவ்விதமே ஆவான். மனிதன் ஆயுர்பலமற்றதும் நித்யமுமான ஆதமாவை அறிந்து எப்பொழுதும் குரோதம், ஸந்தோஷம், மாத்ஸர்யம் இவைகளை அடையாமல் ஸஞ்சரிக்கவேண்டும். இவ்விதம் புத்தி சித்தை நிலைகளால வியாபிக்கப்பட்டதும் உறுதியுள்ளதுமான ஹ்ருதயக்ரந்தியை அறுத்துவிட்டுத் துக்கமும் ஸம்சயமுமில்லாதவனாக ஸுகமாயிருக்கவேண்டும். எவ்விதம் பூமியிலிருந்து தவறிப் பெரிதான பிரவாகமுள்ள நதியில் ஆழ்ந்தவர்கள் துன்பத்தை யடைவார்களோ அவ்விதமே இவ்வுலகில் மூழ்கின அஜ்ஞானிகள் துன்பதத்தை அடைவார்களென்று அறியக்கடவாய். வித்வான் துன்பத்தை அடைவதில்லை. நிர்க்குணமும் ஞானவடிவமுமான தன்னுள்ளிடைய ஆத்மாவை யடைகிற தத்வஜ்ஞானியானவன் கரையில் நடக்கிறான். இவ்விதம் மனிதன் எல்லாவற்றையும் அறிந்து பிராணிகளுடைய ஜனனமரணங்களையும் வைஷம்யதையும் நன்றாக ஆராய்ந்து நிறைந்த அடக்கத்தை அடைகிறான். ஆதம ஜ்ஞானம் அடக்கம் இவ்விரண்டும் விசேஷமாகப் பிராம்மணனுக்கு

---

1 இல்லாமலாபோவது.

2 ஆத்மாவுக்கு நாசமென்பது, அந்தசரீரத்தில் பிரவிருத்தியில்லாமை யென்பது கருத்து.

ஜன்ம ஸாமர்த்தியமாயிருக்கின்றன. அவை குறைவற்ற மோக்ஷஸாதனங்கள். இதனை அறிந்தவன் வித்வானுவான். இதைத்தவிர வித்வானுக்கு வேறு லக்ஷணம் ஏது? வித்வான்களானவர்கள் இதை அறிந்து கிருதார்த்தர்களாகி மோக்ஷத்தை அடைகிறார்கள். அவித்வான்களுக்குப் பரலோகத்தில் உண்டாகிற மிகப்பெரியபயம் வித்வான்களுக்கு உண்டாகிறதில்லை. வித்வானுக்குஉண்டாகிற அழிவற்ற சிறந்தகதியானது மற்றவருவனுக்கும் உண்டாகிறதில்லை. மனிதன் தோஷமுள்ளஉலகதைப்பார்ததுப் பொருமை அடைகிறான்; அதை அதைப்பார்த்துத் துக்கிக்கவும்செய்கிறான். எவர்கள் சோகமானது உண்டுபண்ணப்படுகிறதென்றும் சோகமில்லாமையானது ஸ்வபாவமாயுள்ளதென்றும் அறிகிறார்களோ ஸமர்த்தர்களான அந்தவித்வான்களே அந்தவிஷயத்தில துக்கதைதஅடையாதவர்களாக அறி. வித்வானுனவன் பயனில்லாதிருப்பதின்றி எந்தக்காமாவைச் செய்கிறானோ அந்தக்கர்மாவானது அவனுடையபூர்வகர்மாவை நாசஞுசெய்கிறது. அந்தஇரண்டுவிதகர்மாவும், கர்மாவைச் செய்கிறவனை அவனுக்கு இவ்வுலகில் விருப்பத்தையும் உண்டுபண்ணுகிறதில்லை; வெறுப்பையும் உண்டுபண்ணுகிறதில்லை" என்று சொன்னார்.

இருநூற்றைம்பத்தாறுவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர் ஆத்மஜ்ஞானத்தைச் சுகருக்குச் சொல்லியது.)

சுகர், 'இவ்வுலகில எந்தத்தர்மத்திறகுமேலாக ஒருதர்மமும் இல்லையோ, எலலாத்தர்மங்களையும்காட்டிலும் சிறந்த அந்தத் தர்மத்தை நீங்கள் எனக்கு நன்முகச்சொலலவேண்டும்' என்றுகேட்க, வ்யாஸர் சொல்லலானார்.

"புராதனமும் ரிஷிகளால புகழப்பட்டதும் எலலாத்தர்மங்களையுங்காட்டிலும் சிறந்ததுமானதர்மததை உனக்கு நன்முகச்சொல வேன் அதை இப்பொழுது ஏகமனமாகக் கேட்டக்கடவாய். பலாத்காரமாகச்செலலுகின்றவைகளும் எங்கும்விழுவதையே இயல்பாகவுடையவைகளுமான இந்திரியங்களை புத்தியினால முயற்சிசெய்து தன்தை தனதுசிசுக்களை அடக்குவதுபோலஅடக்கி மனத்தையும் இந்திரியங்களையும் ஒருவழிப்படுத்துவது பெரியதவம். அது மிகவும் உயர்ந்தது. அந்தத்தர்மமானது எல்லாத்தர்மங்களையுங்காட்டிலும்

சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. மனத்தை ஆறுவதாகவுடைய அந்த எல்லா இந்திரியங்களையும் தாரணசக்தியினால் தரித்துக்கொண்டு பல விதநிர்த்தனைகளைச் செய்யாமல் ஆத்மாவில் திருப்தியடைந்தவன்போ லிருக்கவேண்டும். எப்பொழுது விஷயங்களிலிருந்து திரும்பி இந்திரி யங்கள் தம்மிருப்பிடத்தில் இருக்கப்போகின்றனவோ அப்பொழுது நீ உன்னுடைய புத்தியினாலே சாச்வதமான பரமாத்மாவைப் பார்ப் பாய். மனிஷ்யருடையவர்களும் மஹாத்மாக்களுமான பிராம்மணர் கள் எல்லாவற்றிற்கும் ஆதமாவும் புகையில்லாத அக்கினிபோன்றது மாயிருக்கிற அந்தப் பரமாத்மாவைப் பார்க்கிறார்கள். புஷ்பமும் பழமு முள்ளதும் அனேகவிதைகளுடையதுமான பெரியமரமானது ('எனது மலர் எங்கே? கனி எங்கே?' என்று) தன்னுடையமலர்களை அறிகி றதில்லை. அப்படியே புத்தியானது, 'எங்கிருந்து வந்தேன்? எங்கே போகப்போகிறேன்?' என்று அறிகிறதில்லை. இந்தச்சரீரத்தில் இந் தப் புத்தியைக்காட்டிலும் வேறுக அந்தராத்மா இருக்கிறான். அவன் எல்லாவற்றையும் பார்க்கிறான். அவன் தன்னுடைய ஸ்வரூபமாயும் மிகவும்பிரகாசமாயுள்ளதாயிருக்கிறஞானமாகிறதீபத்தினால் ஆத்மாவைப்பார் க்கிறான். எல்லாவற்றையும் அறிந்தவனாயிருக்கிறநீ ஆதமாவினால் ஆத் மாவைப்பார்த்து உபாதியற்றவனும் சட்டைகழற்றிய ஸர்ப்பம்போல எல்லாப்பாவங்களினின்றும் விடுபட்டவனுமாகக்கடவாய். ஓ! குழந் தாய்! இவ்வுலகில் நீ சிறந்தபுத்தியையடைந்து பாவமும், தூபமும் அற்றவனாகி, மாயையிலிருந்து உண்டானதும், எங்கும்பெருகுவ தும், உலகங்களை இழுத்துக்கொண்டுசெலவதும், பயங்கரமும், பஞ சேந்திரியங்களாகிற முதலைகளையும் மனமும் அதன்விருத்தியுமாகிற கரைகளையும் லோபமோகங்களாகிற காணல்களையும் காமக்குரோதங்க ளாகிற நீர்ப்பாம்புகளையும் ஸத்யமாகிற தீர்த்தத்தையும் பொய்யாகிற கலகத்தையும் பெரிய கோபமாகிற சேறறையும் காமமாகிற முதலை களையும் மிக்க வேகத்தையுடையதும், வாஸனையாகிற ஆழத்தால் இறங்கமுடியாததும், மனிஷ்யசமில்லாதவர்களால தாண்டமுடியா ததும், பேச்சுக்களாகிய சுழலுள்ளதும், அணுகமுடியாததும், தனது கர்மத்தினால உண்டானதும், நதிகளில சிறந்ததும், ஸம்ஸார ஸாகரதில் சேருகிறதுமான அந்த மஹாநதியைப் புத்தியினால் தாண்டக்கடவாய். புத்திமான்களும் தைரியசாலிகளும் மனிஷ வசமுள்ளவர்களுமானவர்கள் எந்த நதியைத் தாண்டுகிறார்களோ அதைத்தாண்டிப் பாவங்களற்று எங்கும் பற்றுவிட்டுச் சுதனும் ஆத்மாவை அறிந்தவனுமாகிப் பேரறிவைஅடைந்து பிரம்மமாகப்

போகிறாய். எல்லாத்துன்பங்களையும் தாண்டினவனும் கலக்கமற்றுத் தெளிவான மனமுள்ளவனுமாகி, மலையிலிருக்கிறவன் பூமியிலிருக்கிறபொருள்களைப் பார்ப்பதுபோல எல்லாப்பிராணிகளையும் பார்க்கக் கடவாய். சினமும் களிப்பும் பிறவுயிர்க்குத துன்பம்செய்வதிற் புதந்திமிலாதவனுகிப பிறகு எல்லாப பிராணிகளுடைய ஜனனமரணங்களையும் பார்ப்பாய். இவ்விதமான தர்மத்தை எல்லாப்பிராணிகளுக் கும்உயர்ந்ததர்மமாகத தாமிஷ்டாகளுள் சிறந்தவர்களும் விதுவான் களும் உண்மையை அறிந்தவர்களுமான மஹரிஷிகள் நினைக்கிறார்கள். புத்திரா ! வியாபகனை ஆதமாவினுடைய இந்தஞானமேனுபதேசததைச் சுத்தனும் ஹிதனும் அனுசரிக்கிறவனுமானவனுக்குச் சொல்லவேண் டும். குழந்தாய்! எனது அனுபவமாகூடியானதும் மிகவிரைவாக யான் உனக்குச் சொன்னதுமான ஆதமஜ்ஞானமானது எல்லாரகஸ்யங் களுக்கும் மிகவும் பெரியரஹஸ்யம். இத்தப்பிரம்மமானது பெண்ணு மன்று ; ஆணுமன்று ; அலியுமன்று. அது துக்கமறறதும் ஸுக மறறதும் மூன்றுகாலத்திலுமுள்ள பொருளுமாயிருக்கிறது. இதை அறிந்தால புருஷனுனவன் ஸ்தரீயாகுவும் மறுஜன்மாவை அடைகிற திலலை. ப்ரம்மததை அடைவதறகாக இந்தததாமமானது சொலலப் பட்டது. ஓ! புதரனே! இந்த எல்லாமதங்களும் இருக்கிறபடியே என் னால உண்மையாகச் சொலலபபட்டன. அந்தமதங்கள் உள்ளவையு மாகின்றன; இலலாதவையுமாகின்றன. ஓ! ஸதபுதரனே! ஆகையால்இப் பொழுது சொல்லப்பட்ட இதைப பிரீதியுள்ளவனும் குணசாலியும் இந்திரிய நிக்கிரகமுள்ளவனுமான புதரனுல் கேட்டகப்பட்டு விருப்ப முள்ள மனத்துடன் உண்மையாக அவனுக்குச் சொலலவேண்டும்.

இருநூற்றைமபத்தேழாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், வைராக்யமே மோக்ஷாதனமென்பதைச் சுகருக்குச் சொல்லியது.)

கந்தங்களையாவது ரஸகளையாவது ஸுகதுக்கதையாவது அனு சரிக்கவும்கூடாது ; அதைஅதை மறுக்கவுங்கூடாது. மானம், [2]கீர்

---

1 'நித்யமும் அநித்தியமுமான எல்லாம எபபடி நினைகபபடுகின்றன னோ, (இயற்கையில) எப்படியிருகின்றனவோ அபபடியே என்னுல் சொல்லப் பட்டன' என்றுகொளளலாம்.

2 பராக்ரமத்தால்வந்தது.

த்தி, [1]யசஸ்இவைகளை விரும்பவும்கூடாது. அதுதான் வித்வாஞ் யிருக்கிறபிராம்மணனுடைய ஆசாரம். பிரம்மசரியத்தோடு குருபணி விடைசெய்கிறவனுக்கு ருக்கு, யஜுஸ், ஸாமமுதலான ஸகலவேதங் களையும் அத்தியயனம்செய்யவேண்டும். எவன் வேதவேதாங்க பாரங்கதனும் எல்லாப்பிராணிகளுக்கும் பக்ஷவைப்போலிருக்கிற வனும் எவனாலுமறையும் அறிந்தவனும் காமமற்றவனுமாயிருக்கி றானோ அவன் ஒருபோதும் மரிக்கிறதில்லை. அவன் அதனால் பிராம் மணனெனப்படுகிறதில்லை. பலவிதமான இஷ்டிகளையும் போதுமான தக்ஷிணையுடைய யாகங்களையும் செய்தும் ஞானமில்லாதவிஷயத்தில் பிராம்மண்யத்தை அடைகிறதில்லை. இவன் பயத்தை அடையாமலும் இவனிடத்திலிருந்தும் ஒருபிராணியும் பயமடையாமலும் இவன்விரு ப்பு வெறுப்பற்றவனாகவும் இருந்தால பிரம்மதத்தை அடைகிறான். ஸகலமான பிராணிகளிடத்திலும் காமாவினாலும் வாக்கினாலும் மனத் தினாலும் பாவச்செய்கை செய்யாதபோது ப்ரம்மத்தை அடைகிறான். இது காமதத்தினாலுண்டான பந்தனமேயொழிய வேறு பந்தனம் அன் று. காமபந்தத்திலிருந்து விடுபட்டவன் ப்ரம்மமாவதற்குரியவனாகி றான். புகைகிறமுள்ள மேகத்தினின்றும் விடுபட்ட சந்திரன்போலக் காமதத்திலிருந்து விடுபட்ட தீரன் ரஜோகுணமில்லாமல காலதை எதிர்பார்த்துத தைரியதுடனிருக்கிறான். ஜலமானது எங்கும் நிறை ந்ததும் அசையாத நிலைமையுள்ளதுமான ஸமுத்திரத்தை அடைவது போல எவனிடத்தில ஸகல காமங்களும் அடங்குகின்றனவோ அவன் மோக்ஷததை அடைகிறான். காமங்களை விரும்புகிறவன் மோக்ஷத்தை அடைகிறதில்லை. காமம் அடங்கினவன் விருப்பங்கள் நிரம்பினவனாயிருக்கிறான். காமத்தில பற்றுதலுள்ளவன் அப்படி இருப்பதில்லை. அந்தத தீதகியானவன காமத்தால் ஸ்வர்க்கதை அடைகிறான். [2]வேதத்தினுடைய ரகஸ்யம்ஸதயம்;ஸத்யத்தினுடைய ரகஸ்யம் அடக்கம். அடக்கத்தின் ரகஸ்யம் தானம்; தானதின் ரகஸ்யம் தவம்; தவதின் ரகஸ்யம் ஸந்யாஸம்; ஸந்யாஸதின் ரகஸ் யம் ஸுகம்; ஸுகத்தின் ரகஸ்யம் [3]ஸகுணப்ரம்மபாவம்; அதன் ரகஸ்யம்[4] நிர்குணப்ரம்மபாவம். ஆசை, சோகம், ஸகல்பம் இவை களாலுண்டான பரமத்மதத்தாலுண்டின புதத்யானது ஸங்கோசத்தி னால் உத்தமமான சாந்திலக்ஷணத்தை அடைகிறது. சோகமின்மை, மமதையின்மை, இந்திரியதத்தின் அடக்கம், மனததின் ஒழுங்கு, ஆதம

1 கொடையாலைகதது.
2 வேறுபாடம்.
3 'ஸுகர்கம்' என்பது மூலம்.
4 'சமம்' என்பது மூலம்.

ஜ்ஞானம், சௌசம் இந்த ஆறுலக்ஷணங்களுள்ள மனிதன் மறுபடியும் பூர்ணஞானன். ஸத்வகுணமுள்ள இந்த ஆறிலும் ச்ரவணமனன நிதித்யாஸமென்னும் இம்மூன்றிலும் அறிவுடையோர்களால் அறியப்பட்ட பரமாத்மாவை அறிகிறவர்களைப் பெரியோர்கள் இங்கேயே மூக்தர்களாக நினைக்கிறார்கள். ப்ரதயகாத்மாவை அறிந்து ஞானியானவன் உற்பத்தியற்றதும் அழிவற்றதும் ஸ்வபாவவஸித்தமும் ஸாதனமற்றதும் விகாரமற்றதுமாயிருக்கிற ஸுகத்தை அடைகிறன். மனத்தை ஸஞ்சரிக்கவிடாமல் ஸர்வஸித்தத்தாலும் நிலைக்கச்செய்து அதனால் அடைகிறஸந்தோஷமானது மனதநின்நிலையில்லாவிட்டால தனக்கு ஸம்பாதிக்கமுடியாது. எந்தப்ரம்மத்தினால புஜியாதவனும் திருப்தியடைகிறனே, எதனால் த்ரவயமிலலாதவனும் திருப்தியடைகிறனே, எதனால் சரீரத்தில் பசையற்றவனும் பலத்தை அடைகிறனே, அந்தப்ரம்மத்தை அறிந்தவனே வேதத்தை அறிந்தவன். எந்தச்சிஷ்டனன பிராம்மணன் தன்னுடைய இந்த்ரியத்வாரங்களை அடைத்துப் பறறுதலில்லாதவனைப் பிரமமதயானஞசெய்து கொண்டிருக்கிறனே அவன் ஆத்மரதியென்று சொல்லப்படுகிறன். பரதத்வத்தில ஸமாதியுள்ளவனும் காமமற்றவனும் நிலைபெற்றவனுமாயிருக்கிறவனைச் சந்த்ரமண்டலம்போல மேன்மேலும் விருத்தி அடைகிறஸுகமானது அடைகிறது. ஐந்துபூதங்களின் தன்மாத்திரைகளையும் ஸதவமுதலான குணங்களையும் விட்டவனன முனிக்கு ஸரீர்யனால் இருள்நீங்குவதுபோல ஸுகத்தினால் துக்கமானது நீங்கிவிடுகிறது. கர்மாவைத் தாண்டினவனும் (ஸத்வாதி) குணங்களின் க்ஷயததைத் தாண்டினவனும் விஷயங்களால் ஸம்பந்திக்கப்படாதவனுமான பிராம்மணனை ஜராமரணங்கள் அடைகிறதில்லை. அவன் எலலாவற்றிலிருந்தும்விடப்பட்டு ஸமாதியிலிருக்கிறபொழுது சரீரத்திலிருந்துகொண்டே இந்த்ரியங்களையும் விஷயங்களையும் அதிக்ரமித்துக்கொண்டிருக்கிறன். பரமகாரணத்தை அடைந்து காரியததன்மையை அதிக்ரமித்தவனும் பரதத்திறகுப்பரமானப்ரம்மத்தை கன்றுக அடைந்தவனுமாயிருப்பவனுக்குத் திரும்பிவருதல் இல்லை.

இருநூற்றைம்பத்தேட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், ஐந்துபூதங்களின்குணங்களையும் சுகருக்குச் சொல்லியது.)

[1]தர்மார்த்தங்களையும் (ஸுகதுக்கமுதலிய) த்வந்துவங்களையும் அடைந்திருக்காலும் மோக்ஷத்தில்விருப்பமுள்ளசிஷ்யனுக்குக் குணவானுயிருக்கிறஆசாரியன் முதலில் பெரிதான இந்தஅத்யாத்மவிஷயத்தைச் சொலலவேண்டும். ஆகாயம், வாயு, தேயு, அப்பு, ஐந்தாவதான பிருதிவி, இருப்பு, இல்லாமை, காலம் இவைகளெல்லாம் பாஞ்சபௌதிகமான எல்லாப்பிராணிகளிடத்திலும் இருக்கின்றன. ஆகாசமானது இடைவெளிஸ்வரூபம். ஸ்ரோத்திரேந்திரியமானது ஆகாசத்தின்காரியம். சாஸ்திரத்தின்விதியை அறிந்தமுனியானவன் சப்தத்தை அதனுடையகுணமாகஅறியவேண்டும். கமனதத்தை வாயுவின்ஸ்வரூபமும் பிராணாபானங்களையும் ஸ்பர்சத்தையும்த்வக்கிந்திரியத்தையும் வாயுமயமாக அறியவேண்டும். பிரகாசமும் தாபமும் ஜீர்ணமும் தேஜஸ். புத்திமானானவன் நேத்திரத்தைத் தேஜோமயமாகவும் ரூபதத்தை அதன்குணமாகவும் அது தமஸைநாசஞ்செய்கிறதாகவும் அறியவேண்டும். வேர்வையும் திரவமும் பசையும் அப்புவினுடையவையென்று சொலலப்படுகின்றன. ரக்தமும் மஜ்ஜையும் மற்றும்பசையுள்ளவையும் ஜலவிகாரமென்று அறியவேண்டும். ரஸனேந்திரியமும் நாவும் ரஸமும் அப்புவினுடையகுணமாகச் சொலலப்படுகின்றன். கடினவஸ்துவும் எலும்பும் பறகளும் நகங்களும் பிருதிவியின் பதார்த்தங்கள். மீசை, உரோமம், தலைமயிர், நரம்பு, ஸ்வாஸக்குழாய, தோல் (இவைகளும்) பிருதிவீய. கிராணமென்கிற பெயருள்ள இந்திரியமானது மூக்கென்றுசொலலப்படுகிறது. இதன் விஷயமானகந்தமும் பிருதிவிமயமென்று அறியவேண்டும். மேலுள்ள பூதங்களில கீழ்ப்பூதங்களின்குணங்கள் எல்லாம் இருக்கின்றன. கீழுள்ளபூதங்களில மேலுள்ளபூதங்களின் குணங்கள் இலலை. ஐந்துவிதமான பூதக்கூட்டங்களுடையபரம்பரையை முனிகள் அறிகிறார்கள். இவைகளுக்கு (எலலாம்) மனம்ஒன்பதாவதும் புத்தியானது பத்தாவதுமாகச் சொலலப்படுகின்றன. பதினோராவது அந்தராத்மா. அந்தராத்மாக்களெல்லாம் உயர்ந்தனவாகச் சொலலப்படுகின்றன. புத்தியானது நிச்சயரூபமாயிருக்கிறது. மனம் ஸங்கல்பரூபமாயிருக்கிறது.

[1] வேறுபாடம்.

சரீரத்தைஅறிகிறவனை அந்தஜீவனைவன் கர்மபலரூபமானகாரண த்தினால அறியத்தகுந்தவன். காலரூபமான இந்தக்கொள்கைகளெல்லா வற்றாலும் எல்லாம் வியாபிக்கப்பட்டதாகப் புத்தியினால் கலக்கமின் றிப் பார்க்கிறவன் மோகததை அடைகிறதில்லை.

இருநூற்றைம்பத்தோன்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதாமம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், யோகதர்மத்தைச் சுகருக்குச் சொல்லியது.)

ஸ்தூலசரீரத்தினின்றும் விடுபட்டதும் ஸூக்ஷ்மமுமாயிருக் கிற (லிங்க)சரீரியைச் சாஸ்திரத்தை அறிந்தவர்கள் சாஸ்திரத்தில சொல்லப்பட்ட (யோகமுதலான) கர்மங்களால் நன்முகப் பார்க்கிறார் கள். (நம்மால) பார்க்கப்படுகிற ஸூர்யகிரணங்கள்சேர்ந்து ஸஞ் சரிக்கின்றன; போகின்றன; நிறகவுஞ் செய்கின்றன. அப்படியே ஸ்தூலதேஹங்களால் விடப்பட்ட லிங்கசரீரங்கள் மனுஷ்யர்களுக்கு விஷயமில்லாதவைகளாக லோகங்களில் சஞ்சரிக்கின்றன. யோகி யான சாஸ்திரவித்வானேவென்றால் எப்படி ஜலத்தில ஸூர்யனு டைய பிரதிபிம்பமானது காணப்படுகிறதோ அப்படியே (தன்னு டைய) பிரதிபிம்பமான லிங்கசரீரத்தைப் பார்க்கிறான். ஸூக்ஷ்ம மான அந்தலிங்கங்களை சரீரத்திலிருந்தும் விடப்பட்டவைகளாயிருக் கின்றன. ஆகையினால், இந்திரியவசமுள்ள தத்வஜ்ஞானிகள் (அவை களை) உண்மையாகப் பார்க்கிறார்கள். தம்மால் ஸங்கல்பிக்கப்பட்ட தும் கர்மத்தாலுண்டானதுமான காமமுதலானவற்றை [1]விட்டவர் களும் பிரதானதத்துவத்தினுடைய சேர்க்கையிலிருந்து [2]விடுபட்டவர்களு மான எல்லாப்பிராகிருதருக்கும் தூங்கும்போதும் விழித்துக்கொண் டிருக்கும்போதும் இந்தலிங்காகாவானது பகலிலேபோலவே இரவி லும் இரவில்போலவே பகலிலும் வசதலிலிருக்கிறது. எப்போ தும் [3]நித்யனும் ஜராமரணமற்றவனுமாயிருக்கிற அந்த யோகியினு டையஜீவன் எப்பொழுதும் (மஹத்தத்வம் அஹங்காரம் ஐந்துதன் மாதிரைகள் என்கிற) ஏழுஸூக்ஷ்மகுணங்களுமுள்ளதாகி நித்யம் (ஸகல லோகங்களிலும்) ஸஞ்சரிக்கிறது. மனம், புத்தி இவைகளால ஜயிக்கப்பட்டவனும் கர்மவிலும் தன்தேகம் பிறர்தேகங்களைப்பார்த்து ஸுகதுக்கங்களை அறிகிறவனுகிறான். அந்த ஸ்வப்னத்திலும் துக்

1 வேறுபாடம். 2 வேறுபாடம். 3 'அநித்யனும்' என்பது பழையவுரை.

கத்தை அடைகிறான்; ஸுகத்தையும் அடைகிறான்; அந்தஸ்வப்நத்திலும் குரோதலோபங்களைச்செய்து விசனத்தை அடைகிறான்; அளவற்றபொருள்களைப்பெற்று ஸந்தோஷத்தையும் அடைகிறான்; அந்தஸ்வப்நத்திலும் புண்ணியத்தைச் செய்கிறான்; விழித்துக்கொண்டிருக்கிறவன்போலவும் பார்க்கிறான். இந்த ஜீவன் கர்ப்பத்தை அடைந்து எப்பொழுதும் உதரக்கனலினிடையில்இருந்து பக்குவமாதம் குகையில் வஸித்துக்கொண்டிருந்தும் அன்னம்போல ஜீர்ணமாகிறதில்லை. சரீரங்களில் வ்ருதயத்திலிருக்கிறவனும் பரமேஸ்வரனது அம்சமாயிருக்கிறவனுமான இந்த ஜீவாத்மாவைத் தமோகுண ரஜோகுணங்களால் வியாபிக்கப்பட்டவர்கள் பார்க்கிறதில்லை. யோகசாஸ்திரத்தில் ஸ்ரத்தையுடையவர்களாகித் தம்ஆத்மாவை அடையவிருப்பமுள்ளவர்கள் தமஸ் ரஜஸுகளால்விடுபட்டு அறிவற்ற ஸ்தூலசரீரங்களும் ஸூக்ஷ்மசரீரங்களும் வைரம்போலுள்ள காரணசரீரங்களுமானவைகளில் அந்தஆத்மாவைப் பார்க்கிறார்கள். சாண்டில்யரானவர் தனித்தனியாக ஸ்ருஷ்டிக்கப்பட்ட நான்குஆஸ்ரமங்களின் தர்மங்களிலும் இந்த ஸமாதியோகத்தையே ஸமமாகச் சொன்னார். இந்திரியம், விஷயம், மனம், புத்தி, மகத்தத்வம், அவ்யக்தம், புருஷன் இவ்வேழையும் ஸர்வஜ்ஞனுடையிருக்கை, திருப்தி, அளவுகடந்தஅறிவு, தன்வசமுடையிருக்கை, எப்போதும் அழிவில்லாத ஞானம், அனந்தசக்தி இவ்வாறுகுணங்களுமுள்ள மஹேஸ்வரனையும்அறிந்து பிரதானத்தின்பரிணமங்களையும் அறிந்தவன் பரப்ரம்மத்தைப் பார்க்கிறான்.

இருநூற்றுபதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வ்யாஸர், காமாதிகளையெல்லாம் வெல்வது அவசியமென்று சுகருக்குச் சொல்லியது.)

வ்ருதயத்தில் மோகமான வித்தில்முளைத்ததும் குரோதமானங்களாகிற பெரியஅடிக்கிளைகளுள்ளதும் உலகவிசாரமான பட்டையையுடையதும் ஆச்சரியமுமான காமமாகிற ஒருவிருக்ஷம் இருக்கிறது. அதற்கு அஜ்ஞானமானது மூலம்; அஜாக்ரதையானது பாத்தி. அது அஸூயைகளாகிற இலைகளுடையது; பூர்வபாபமாகிறவைரமுள்ளது; அவா சிந்தையென்கிறபெருங்கிளைகளையுடையது.

சோகங்களாகிற வலார்களை உடையது; பயமாகிறமுனையுள்ளது; மோகத்தை உண்டுபண்ணுகிற காமதாகங்களாகிறகொடிகளால் சுற்றப்பட்டது. (ரதிமுதலியவையாகிற) பலத்தை அளிக்கிற அந்தமஹாவிருக்ஷத்தைச் சூழ்ந்துகொண்டு மிக்கஆசையுள்ளவர்கள் அதன்பலனில் விருப்பமுற்று நீண்டவைகளான (வாசனைகளாகிற) பாசங்களுடன் அதனைப்பற்றுகிறார்கள். அந்தப்பாசங்களைப்பிடித்துக்கொண்டு அந்த விருக்ஷத்தை (க்கட்டி) இழுக்கிறவன் ஜரை, மரணம்இவ்விரண்டிலுண்டான துக்கங்களுடைய முடிவை அடைவான். அறிவில்லாதவன் ஸங்கல்பத்துடன் அதில் ஏறுகிறான்; [1]அந்தவிருக்ஷத்தை அடிக்கிறான். அது அவனால் அடிக்கப்பட்டு, விழுங்கப்பட்ட விஷமானது ரோகியை அழிப்பதுபோல அவனையே அழிக்கிறது. முயற்சியுள்ளவன்வேறுன்றினஅந்தமரத்தின்வேரையோகவித்தியாகிறபலத்துடன் ஸமபுத்தியாகிறசிறந்தகத்தியினால் அறுத்தெறிகிறான். இவ்விதமானகாமத்தின் அதிகமானபரவதலையும் காமத்தைப்பற்றினசாஸ்திரத்தின் இந்தவிஷயத்தையும்அறிபவன் விசேஷதுக்கங்களைத்தாண்டுவான். சரீரத்தை ஒருபட்டணமாகச் சொல்லுகிறார்கள். அதற்குப் புத்தியானது இராணியாகக் கருதப்படுகிறது. அந்தப்பட்டணத்தில் மனமானது சரீரத்திலிருந்துகொண்டு புத்திக்குக் கார்யங்களைச்சிந்திக்கிற மந்திரியாக இருக்கிறது. இந்திரியங்கள் பட்டணத்தின் ஜனங்கள். அவைகளுக்காகவே மனத்திற்குப் பெரிதானபிரவிருத்தி உண்டாகிறது.அந்தப்பட்டணத்தில் தமஸென்றும் ரஜஸென்றும் கமைமையான இரண்டுதோஷங்களிருக்கின்றன. [2]எந்தஅர்த்தத்தைப் பட்டணத்தின் அதிபதிகளுடன் பட்டணத்துஜனங்கள் அடிக்கிறார்களோ அந்தஅர்த்தத்தையே இரண்டுதோஷங்களும் தப்புவழியாகஅடிக்கின்றன. புத்தியானது கெடிக்கமுடியாததாயிருந்தாலும் அர்த்தவிஷயத்தில் மனத்தோடுஒற்றுமையை [3]அடைகிறது. இந்திரியங்களாகிற பட்டணவாஸிகளும் மனத்தால்திருப்தியடைகின்றன.ஆதலால், அவைகளுடைய நிலைமையும் சலித்துவிடுகிறது. எந்தஅர்த்தத்தைப் புத்தி ஹிதமென்று தீர்மானிக்கிறதோ அது கெடுகலிவிளைவித்து நசிக்கிறது. பட்டணவாஸிகளுடைய மந்திராலோசனையில்லாதபுத்தியின்அந்தஅர்த்தமானது கிரமமாகநசிக்கிறது. எந்த அர்த்தத்தை மனம் தனியாகஸங்கற்பிக்கிறதோ அதுவும் நசித்துவிடுகிறது. மனம் புத்தியைக்காட்டிலும் வேறுகித் தனிமையாகிவிடுகிறது. அந்தப்

1 'அறிவுள்ளவன் அதை அழிக்கிறான்' என்றும் கொள்ளலாம்.

2 'யத்' என்று பாடம் கொள்ளப்பட்டது. 3 வேறுபாடம்.

புத்தியில் பிரதிபிம்பித்தவனும் ஒன்றுமில்லாதவனுமான இந்த ஆத்மாவை ரஜோகுணம் சூழ்கிறது. ஆகையால், மனம் ரஜஸுடன் சேர்ந்து ஸ்னேகஞ்செய்துகொள்ளுகிறது. பிறகு, அவனையும் பட்டணத்துஜனங்களையும் எடுத்து ரஜவினிடம் கொடுத்துவிடுகிறது' என்றுசொன்னர்.

இருநூற்றுறுபத்தோராவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் ஐந்துபூதங்களின் குணங்களையும் சொல்லியது.)

"ஓ! புத்திரனே! குற்றமற்றவனே! த்வைபாயனருடையமுகத்திலிருந்து வெளிவந்த பூதங்களின்குணங்களுடைய அளவை மறுபடியும் மிகுதியான [2]ஆதரவுடன் கேட்கக்கடவாய். ஜ்வலிக்கின்றஅக்கினிக்கொப்பான வ்யாஸபகவான் புகைபோன்ற அறிவினர்களிடம் அன்புடன்சொன்னர். ஓ! புத்திர! ஆகையால், நானும் உறுதியான சாஸ்திரத்தை மறுபடியும்சொல்வேன். அசையாமை, கனம், கடினத்தன்மை, உண்டாக்குந்தன்மை, கந்தம், பாரம், (கந்தத்தைஏறறுக்கொள்ளும்) சக்தி, நெருக்கம், ஆதாரமாயிருத்தல், தரித்தல்ஆகிய இவைகள் பூமியினுடையகுணங்கள். குளிர்ச்சி, ரஸம், ஸ்னேஹத்தல்,த்ரவத்வம், பசை, மென்மை, ரஸனேந்திரியம், பெருகுதல், (அரிசிமுதலியவிவகளைப்) பாகஞ்செய்தல்இவைகள் நீரினுடையகுணங்கள். நெருங்கமுடியாமை, பிரகாசம்,உஷ்ணம், சமைத்தல்,பிரகாசிக்கச்செய்தல், சுசி, செங்நிறம், சீக்கிரகமனம், உக்கிரத்தன்மை, எப்பொழுதும் மேலேசெல்லுதல்இவைகள்தேயுவியினுடையகுணங்கள்.சீதமும்உஷ்ணமும் இல்லாதஸ்பரிசம், வாகிந்திரியஸ்தானம், (கமனத்தில்) ஸ்வதந்திரத்தன்மை, வன்மை, வேகம், மூத்திரமுதலானவற்றைவிடுதல், சலனம், சேஷ்டை, ப்ராணனுயிருத்தல, உற்பத்திநாசங்கள் இவைகள் வாயுவின்குணங்கள். சப்தம், வியாபித்திருத்தல், துவாரத்தன்மை, (தான்மற்றொன்றுக்கு) ஆதாரமாயில்லாமை, (தனக்கு) ஓர் ஆதாரமில்லாமை, விளக்கமில்லாதிருத்தல், விகாரமின்மை, தடுக்காமலிருத்தல், ஸ்ரோத்திரம், (சரீரங்களிலுள்ள)துவாரங்கள் இவைகள் ஆகாயத்தின்குணங்கள். (இப்படி) ஐந்துபூதங்களிலும் கண்டறியப்பட்டகுணங்

---

1 தன்னைப்பிறன்போலக் கூறியது.

2 'ஸ்லாகயா' என்பதுமூலம்; 'இத்தகைய ஆத்மவித்தையை அறிந்தோமென்கிற எண்ணத்தோடு' என்பது பழையஉரை.

கள் ஐம்பதென்றுசொல்லப்பட்டன. பயன்விஷயத்தில் ஆராய்தல், நினைத்தல், ப்ரமம், மஹோதம், பொறுமை, வைராக்கியமுதலியவை, விருப்பு வெறுப்புமுதலானவை, வேகம், நீலியில்லாமை இந்த ஒன்பதும் மனத்தின்குணங்கள். இஷ்டாநிஷ்டவிருத்திநாசம், உத்ஸாஹம், சித்தத்தைநிறுத்தல், ஸக்தேகம், யதார்த்தமான அறிவு இவ்வைந்தையும் புத்தியின்குணங்களாகப் பண்டிதர்கள் நினைக்கிறார்கள்'' என்றார்

யுதிஷ்டிரர், ''புத்தியானது எப்படி ஐந்துகுணங்களுடையது? [1] இந்திரியங்களின்ஐந்துகுணங்கள்எப்படி? பிதாமஹரே! ஸூக்ஷ்மமாக அறியக்கூடிய இந்த எல்லாவிஷயத்தையும் எனக்குச் சொல்லவேண்டும்'' என்றுகேட்க, பீஷ்மர், ''ஓ! புத்திரனே! பூதங்கள் புத்தியின்குணங்களுடன்சேர்ந்த அவைகளின்குணங்கள் ஆகஅறுபதையும் மூலப்பிரகிருதியினல்ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளாகவும்பூதங்களேப்பற்றினவைகளாகவும் சொல்லுகிறார்கள். அக்ஷரப்ரம்மத்தாலபடைக்கப்பட்டவைகளேப் ப்ரம்மத்தில்பற்றினவைகளாகச் சொல்லுகிறார்கள். ஆனல், அதை இவ்வுலகில் நித்தியமாகச்சொல்லுகிறதில்லே. புத்திரனே! அது உனக்கு [2] வேதவிருத்தமாகப் பிறரால் சொலலப்பட்டது. ஆராயுமிடத்தில் அது குற்றமுள்ளது. ஆகையால் இப்பொழுது இவ்வுலகில [3]ப்ரம்மததவம்முழுமையையும் அடைந்துப்ரம்மத்தின் ப்ரபாவத்தால் சாந்தமான புதியையுடையவனுக்கடவாய்'' என்றுசொன்னர்.

இருநூற்றுபத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர், ப்ரம்மதேவர் கோபத்தியால் ப்ரஜைகளேஎரித்ததையும் நக்ஷர் அதைத்தணிப்பதற்காக அவரிடம்சென்றதையும் அகம்பனனுக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், ''ஸேனைகளின்நடுவில் உயிர்நீங்கினவர்களாகிப் பூதலத்தில்படுத்திருக்கிற மிக்கவலிமையுள்ள இந்தஅரசர்கள் ஒவ்வொருவரும் பயங்கரமானபடைகளும்பதினுயிரம்யானேபலமுமுள்ளவர்கள். இவர்கள் ஸமமான [4]பராக்ரமமும் பலமுமுள்ளவர்களான மனிதர்

---

1 'பஞ்சேந்த்ரியாகுணஞ்' என்று பாடம் கொள்ளப்பட்டது.

2 இங்கு, 'அநாகமம்' என்று மாற்றப்பட்டது.

3 வேறுபாடம். 4 'வலிமையும் படையும்' என்றும் கொள்ளலாம்.

களால் யுத்தத்தில் அடிக்கப்பட்டார்கள். முன்காலத்தில் யுத்தத்தில் இவ்வித மனிதர்களைக் கொல்லத்தக்கவரை நான் காணேன். இவர்கள் பராக்ரமம் நிறைந்தவர்களும் பிரதாபமும் பலமுமுள்ளவர்களுமாயிருந்தார்கள். ஆயினும் அறிவிறசிறந்தவர்களான இவர்களும் உயிரிழந்து படுத்திருக்கிறார்கள். உயிர்போன இவர்களைப்பற்றி மரித்தவர்களென்றும் ஒருசொல உண்டாயிறறு. பெரும்பாலும் பயங்கரமான பராக்ரமமுள்ள இவ்வரசர்கள் மரிததார்கள். அவ்விஷயத்தில் எனக்கு ஐயமுண்டாகிறது. மரித்தவர்களென்னும் சொல் எந்தக்காரணத்தாலுண்டாகிறது. எதறகு எதிலிருந்து மிருத்யு உண்டாகிறது ? தேவர்களுக்கொப்பானவரே! பிதாமஹரே! மிருத்யு வானவன் இவ்வுலகிலுள்ள பிரஜைகளை ஏன் அபகரிக்கிறான்? அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்று வினவ, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"அப்பா ! முன்காலத்தில கிருதயுகத்தில் அகம்பனனென்னும் ஓர் அரசனிருந்தான். அவன் யுத்தத்தில் பகைவனுக்கு வசப்பட்டவனும் வாகனங்கள் அழிந்தவனுமானன். அவனுக்குப் பலத்தில் ஸ்ரீநாராயணருக்குச்சரியான ஹரியென்னும் ஒரு புத்திரனிருந்தான். அவன் ரோகங்களுடனும் காலாட்களுடனும் யுத்ததில் பகைவர்களால் கொல்லப்பட்டான். பகைவர்களுக்கு வசப்பட்டவனும் புத்திரசோகமடைந்தவனுமான அந்தஅரசன் மிக்க சாந்தியை அடைந்தான். அவன் தற்செயலாகப் பூமியில் நாரதரைக்கண்டான். அவ்வரசன் யுத்தத்தில் பகைவர்கள் தன்னைப்பிடித்துக்கொண்டதையும் புத்திரன் மரித்ததையும்முழுதும் நடந்தபடி அவரிடம் சொன்னன். பிறகு, தவத்தையே தனமாகக்கொண்ட நாரதரானவர் அவனுடைய அந்த வார்த்தையைக்கேட்டு அப்பொழுது புதிதிரசோகத்தை நீக்கக் கூடிய பின்வரும் கதையைச் சொல்லலானர்.

'அரசனே! பூமிக்குஅதிபனே! மிகவிரிவானபெரியஇக்கதையை நடந்தபடியும் நான் கேட்டபடியும் என்னிடமிருந்து கேள். பெரிய தேஜஸ்ஸுள்ள பிதாமஹரானவர் படைப்புக்காலத்தில் பிரஜைகளைப் படைத்தபின் (மிகவும் கிழவர்களும் பலருமான ப்ரஜைகளைப் பார்த்துப்) பொருமையுள்ளவரானர். நிலைமைதவருதவனே ! எங்கும் பிராணிகளால் மறைக்கப்படாதஇடம் சிறிதுமில்லை. அரசனே! மூன்றுஉலகங்களும் மூச்சுவிட இடமில்லாதவையும் மிகநெருங்கியவையுமாயிருந்தன. பூபதியே ! அந்தப்பிரம்மதேவருக்கு உலகத்தின் ஸம்ஹாரத்தைப்பற்றிச் சிந்தை உண்டாயிற்று. சிந்தையை

அடைந்த பிரம்மதேவர் அழித்தற்குரியகாரணத்தை அறியவில்லை. மஹாராஜனே! அந்தப்பிரம்மதேவருடைய இந்திரியங்களிலிருந்து கோபத்தால் அக்கினி கிளம்பிற்று. அரசனே! அந்தப் பிரம்மதேவராலுவர் அந்த அக்கினியால் எல்லாத்திக்குக்களையும் எரித்தார். அரசனே! பகவானுனபிரம்மதேவருடைய கோபத்தாலுண்டான அக்கினியானது பிறகு பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம்என்ற சராசரங்களுடன் கூடியஉலகத்தை எரித்தது. பிரம்மதேவர் கோபங்கொண்டதும், பெரியகோபத்தின்வேகத்தால் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான பிராணிகள் அப்பொழுது எரிக்கப்பட்டன. பிறகு, வேதங்களுக்கும் யாகங்களுக்கும் பதியும் ஜடையுள்ளவரும் ஸ்தாணுவும் பாபத்தை அபஹரிப்பவரும் தேவருமானசிவபெருமான் ஸத்யலோகவாலியான பிரம்மதேவரைச்சரணமடைந்தார். பிரஜைகளின்நன்மையையிரும்பி அந்தஸ்தாணுவானவர் வந்ததும், ஜ்வலிப்பவர்போன்ற பிரம்மதேவர் அப்பொழுது அவரைநோக்கி வானளிக்கவிரும்பி, 'சம்புவே! இப்பொழுது என்னவிருப்பத்தை நான்செயயவேண்டும்? நீர் வரம்பெறத் தக்கவராகிறீரென்று நான் நினைகிறேன். உம்முடையமனத்தில என்னவிருப்பமிருக்கிறதோ அதை நான் செய்வேன்' என்று சொன்னர்.

இருநூற்றுபத்துமூன்றுவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர், ப்ரம்மதேவர் ம்ருத்யுவைப்படைத்துப் பிரஜைகளைக் கொல்லஏவியதை அகம்பனனுக்குச் சொல்லியது.)

ஸ்தாணு, 'பிரபுவே! நான் இங்குவந்தகாரியம் பிரஜைகளின் படைப்புக்காக என்று தெரிந்துகொள்ளும். இந்தப்பிரஜைகள் உம்மால் படைக்கப்பட்டவைகளலலவா? பிதாமஹரே! இந்தப்பிரஜைகளிடத்தில் நீர் கோபிகவேண்டாம். தேவரே! உமது தேஜஸென்னும் தீயால் பிரஜைகள்எல்லாம் எரிக்கப்படுகின்றன. அவைகளைக்கண்டு எனக்குத் தயைஉண்டாகிறது. உலகத்திற்குப் பிரபுவே! இந்தப் பிரஜைகளைபற்றி நீர் கோபிக்கவேண்டாம்' என்று சொன்னர். பிரம்மா, 'நான் கோபிக்கவில்லை. பிரஜைகளிருக்கவேண்டாமென்றவிருப்பமும் எனக்கில்லை. ஆனல், பூமிக்குச் சுமையில்லாமலிருக்கவேண்டியதற்காக ஸம்ஹாரம் விரும்பப்படுகிறது. ஓ! மஹாதேவரே! எப்பொழு

---

1 வேறுபாடம்.


தும் பாரத்தால்துன்பமடைந்து அதனால் ஜலத்தில்முழுகுகிற இந்தப் பூமிதேவியானவள் (பிரஜைகளை) யழிக்கவேண்டி என்னைத் தூண்டினாள். புத்தியால் பலமுறைதமாய் விசாரித்தும், வளர்ந்த இந்தப்பிரஜைகளின் ஸம்ஹாரத்திற்குக்காரணத்தை நானறியாதபொழுது எனக்குச் சினமுண்டாயிற்று' என்று சொன்னார். ஸ்தாணு, 'தேவர்களுக்குத் தலைவரே! நீர் அழிப்பதை விட்டுவிடும். கோபம் வேண்டாம். ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான பிரஜைகளை நாசஞ்செய்வேண்டாம். எல்லாக்குளங்களும் புல்பூண்டுகள்பாவும் ஸ்தாவரஜங்கமங்களும் நான்குவிதமான பிராணிக்கூட்டங்களுமாகிற எல்லாஜகத்தும் அகாலத்தில் பற்றிக்கொண்டு சாம்பலாயின. பூஜ்யரான பகவானே! தயைசெய்யும். என்னால் இந்தவரன் கேட்கப்படுகிறது. இந்தப்பிரஜைகள் நசித்துவிட்டால் எவ்விதத்திலும் திரும்ப வரமாட்டா. ஆகையால், இக்கோபத்தை உம்முடைய தேஜஸிலேயே அடக்கிக்கொள்ளும். ஓ! பிதாமஹரே! பிராணிகளுக்கு ஹிதத்தைச்செய்வதற்காக கன்மையில் விருப்பத்துடன் இந்தப் பிராணிகளெல்லாம் எரிக்கப்படாமலிருக்கும்படியான வேறுஉபாயத்தைக் கருதும். பிரஜைகள் வம்சமில்லாமல் நாசமடையவேண்டாம். நான் புத்திரனை நினைக்கப்படுகிறேன். என்னை ஸம்ஹாரத்தில் ஏவினால் நான் அஸுரர்களுடன் சேர்க்கப்பட்டுத் தபத்தையடைவேன். லோகத்தின் கன்மையை விரும்பினஉம்மால் தேவர்களின்மத்தியில் சேர்க்கப்பட்டிருக்கிறேன். உலகத்துக்குத்தலைவரே! ஸ்தாவரமும் ஜங்கமமுமான இவ்வுலகம் உம்மிடத்திலிருந்து உண்டானதன்றோ? சிறந்ததேவரே! பிரஜைகள் [1] திரும்பவும் உண்டாகும்படி அருள்புரிய உம்மைவேண்டுகிறேன்' என்றுசொன்னர். பிரம்மதேவர் ஸ்தாணுவின் வசனத்தைக்கேட்டபின் வாக்கையும் மனத்தையும் அடக்கி அந்தஅக்கினியைத் திரும்பவும் தம்அந்தராத்மாவில் ஒடுங்கச்செய்தார். பிறகு, உலகங்களில் பூஜிக்கப்படுகிறவரும் பகவானும் பிரபுவுமான பிரம்மதேவர் அந்தஅக்கினியை அடக்கிக்கொண்டு பிறப்பையும் இறப்பையும் உண்டுபண்ணினர். கோபத்தாலுண்டான அந்தஅக்கினியை அவர் அடக்கும்பொழுது கறுப்பும் சிவப்புமான, ஆடைஉடுத்தவரும் கண்களின்நடுவில் கறுத்தவரும் திவ்யமானகுண்டலம் பூண்டவரும் திவ்யமான ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவருமான ஒருபெண் மஹாத்மாவான அவருடைய எல்லாஇந்திரியங்களினின்றும் தோன்றினாள். இந்திரியங்களிலிருந்து வெளியில்வந்ததும் அவள் தென்திசையில் நின்றாள்.

1 'இறந்து இறந்து பிறக்கவேண்டும்' என்பது பழையவுரை.

உலகங்களுக்குத் தலைவர்களான (பிரம்மதேவர், ஸ்தாணு) இரண்டு தேவர்களும் அக்கப்பெண்ணைக் கண்டார்கள். பூபதியே! அப்பொழுது உலகங்களுக்கு ஆதிகாரணரும் ஈசருமான ப்ரம்மதேவர் அந்தப் பெண்ணை, 'ஓ! மிருத்யுவே!' என்று அழைத்து,'இந்தப்பிரஜைகளைக் கொல். கோபங்கொண்டு என்னல் ஸம்ஹாரஞ்செய்யவேண்டுமென்ற புத்தியுடன் நீனைக்கப்பட்டாயன்றே? ஆகையால், அறிவுள்ளவர்களும், அறிவீனர்களுமான எல்லாப்பிரஜைகளையும் நீ ஸம்ஹாரஞ் செய்யவேண்டும். பெண்ணே! வேற்றுமையின்றி நீ பிரஜைகளை ஸம்ஹாரஞ்செய். என்கட்டளையால் நீபெரியநன்மையை அடைவாய்' என்றுசொன்னார். இவ்விதம்சொல்லப்பட்டவளும் தாமரைமாலைபூண்டவளும் சிறியபெண்ணுமான மிருத்யுதேவியானவள் துக்கத்துடன் கண்ணீர்விட்டுக்கொண்டு மிகவும் சிக்கித்தாள். உலகபதியான பிரம்ம தேவர் மானிடர்களின் நன்மைக்காகத் தம்கைகளால் அந்தக் கண்ணீரையேந்தித் திரும்பவும் வேண்டினார்.

இருநூற்றுமூபத்துநான்காவது அத்தியாயம்.

ரே ம ஸ ஹ தர் ம ம். (தொடர்ச்சி.)



(நாரதர், ப்ரம்மதேவரக்கும் மிருத்யுவுக்கும்நட்ந்த ஸம்வாதத்தை அகம்பனருக்குச் சொல்லியது.)

நீண்டகண்ணுள்ள அந்தப்பெண்ணானவள் அப்பொழுது தானுகவே துக்கத்தைவிலக்கிக்கொண்டு எதிர்முகமாய்க்கைகூப்பி ப்ரம்ம தேவரைநோக்கிச் சொல்லத்தொடங்கினள். 'பேசுகிறவர்களிற் சிறந்தவரே! உம்மால்படைக்கப்பட்ட என்னைப்போன்றபெண்ணானவள் எப்படி கொடியசெய்கையுள்ளவளும் எல்லாப்பிராணிகளுக்கும் பயத்தைச்செய்கிறவளுமாகக்கூடும்? நான் அதர்மத்திற்குப் பயப்படுகிறேன். தர்மத்தைவிட்டு நீங்காததொழிலை எனக்குக் கட்டளையிடும். ஈஸ்வரரே! நான் பயப்படுகிறேன். நீர் இனியபார்வையால் என்னைப் பார்க்கவேண்டும். சிறுவர்களோ கிழவர்களோ நடுப்பிராயத்தில் இருப்பவர்களோ குற்றமில்லாதபிராணிகளை நான் கொல்லமாட்டேன். பிராணிகளுக்குத் தலைவரே! உமக்குநமஸ்காரம். எனக்கு அனுக்கிரஹஞ்செய்யவேண்டும். பிரியர்களானமக்களையும் நேயர்களையும் உடன்பிறந்தார்களையும் தாய்களையும் தந்தைகளையும் கொல்லமாட்டேன். இவ்விதம் மரிப்பார்களாகில் அவர்களைச்சேர்ந்தவர்கள்

என்னே வைவார்கள்.' நான் அவர்களிடம் பயப்படுகிறேன். துன்பப் பட்டவர்களின் கண்ணீரின்கரைவானது அளவற்றவருஷங்கள் என் னைத் தபிக்கச்செய்யும். அவர்களிடமிருந்து மிகவும்பயந்து நான் உம்மைச் சரணமடைகிறேன். தேவரே! பாவச்செய்கையுள்ளவர்கள் யமன்வீட்டில் வீழ்த்தப்படுகிறார்கள். ஓ! வரதரே! உமது அனுக் கிரகத்தை வேண்டுகிறேன். பிரபுவே! எனக்கு அனுக்ரஹஞ்செய்ய வேண்டும். உலகங்களுக்குப் பிதாமஹரே! உம்மிடமிருந்து நான் இந்தவரத்தை அடையவிரும்புகிறேன்.மஹேஸ்வரரே! உமதனுக்கிர கத்தால் நான் தவஞ்செய்யவிரும்புகிறேன்' என்றுசொன்னாள். பிதா மஹர், 'கோபங்கொண்ட என்னால் ஸம்ஹாரஞ்செய்யவேண்டுமென் றஎண்ணத்தாலன்றோ நீ சிக்கிக்கப்பட்டாய்? ஆகையால், எல்லாப் பிரஜைகளையும் நீ ஸம்ஹாரஞ்செய். சிக்கிக்கவேண்டாம். இது அவசியம் இவ்விதமே ஆகவேண்டும். இது வேறுவிதமாகாது. குற் றமில்லாதவளே! புகழத்தக்க அங்கமுள்ளவளே! என்வசனத்தைச் சொன்னபடிசெய்' என்றார். ஓ! புஜபலமுடையவனே! பகைவர்க ளின்நகரங்களை வெல்பவனே! இவ்விதம்சொல்லப்பட்டமிருத்யுவான வள் பேசாமல் பிரம்மாவுக்குத்திரில வணக்கத்துடன் நின்றாள். பிறகு,பிரம்மாவினால் அடிக்கடிசொல்லப்பட்டஅத்தப்பெண் வலிமை குன்றி மௌனமாயிருந்தாள். அதன்பிறகு, உலகங்களின் ரஸ்வரர் களுக்கும் ரஸ்வராரான பிரம்மாவானவர் தமக்குள்ளேதாமாகவே கோ பத்தை அடக்கினார். லோகாதாரானஅவர் புன்சிரிப்புடன் எலலா உலகங்களையும் பார்த்தார். ஒருவராலும் ஜயிக்கமுடியாத அத்தப்பக வான் சோபம்தெளிந்தவுடனே அந்தக்கன்னிகையானவள் அவரு டைய ஸபீபத்திலிருந்து சென்றுளென்று நமக்குக் கேள்வி. அரசர் களிற் சிறந்தவனே! அப்பொழுது பிரஜைகளின் ஸம்ஹாரத்தை ஒத் துக்கொள்ளாமல் பிரம்மாவைவிட்டுவிலகி, மிருத்யுவானவள் விரை வாகக் 1கோதீர்த்தத்தைக்குறித்துச் சென்றாள். அவ்விடத்தில் அந் நத் தேவியானவள் மற்றவர்களால் செய்யமுடியாத பெருந்தவத்தைச் செய்தாள். ஆயிரத்தைந்நூறுகோடி லக்கமுள்ளவருஷங்கள் ஒரு காலால் நின்றாள். அவ்விடத்தில் அவ்வாறு மிகவும் செய்யமுடியாத தவத்தைச்செய்கிற அவளைநோக்கி மிக்ககாந்தியுள்ள பிரம்மாவானவர் மறுபடியும், 'ஓ! மிருத்யுவே! நான் சொல்வதைச் செய்' என்று சொன்னார்.

அப்பா! கௌரவத்தை அளிப்பவனே! அதை அவள்அலக்ஷி யஞ்செய்து விரைவுடன் மறுபடியும் இருபது பதுமலக்கமுள்ள வரு

1 ஸப்தபுரிகளில் ஒன்றுகிய மாயாஎன்னும் ஸ்தலத்தில் உள்ளது.

ஷங்கள் அப்படியே ஒருகாலாலேயே நின்றாள். அப்பா! மறுபடியும் அவள் பதினாயிரம்பதாமங்கள் மிருகங்களோடு சஞ்சரித்தாள். மனிதரிற் சிறந்தவனே! சிறந்தபுத்தியுள்ளவனே! அரசனே! பிறகு, மறுபடியும் இருபதினாயிரம்பதாமங்கள் காற்றைப்பக்ஷித்துக்கொண்டு சிறந்தமௌனத்திலிருந்தாள். ஓ! அரசனே! எண்ணாயிரம்வருஷங்கள் ஜலத்தில் தவஞ்செய்தாள். அரசர்களுள்மிகச்சிறந்தவனே! பிறகு, அந்தக்கன்னிகை கண்டகியை அடைந்தாள். அவ்விடத்தில் காற்றையும் ஜலத்தையும் ஆகாரமாகக்கொண்டு மறுபடியும் தவத்தைச்செய்தாள். பிறகு, மகாபாக்கியவதியான அந்தக்கன்னிகை கங்கையையும் மேருவையும் அடைந்தாள். அவ்விடத்தில் பிரஜைகளுக்கு நன்மையைவிரும்பிக் கட்டைபோல அசையாமல் நின்றாள். அரசரிற்சிறந்தவனே! பிறகு, இமயமலையின் கொடுமுடியில் தேவர்கள் எந்தஇடத்தில் யாகஞ்செய்தார்களோ அந்தஇடத்தில ஒருகால் கட்டைவிரலால் நின்றுகொண்டு பதினாயிரம்கோடிவருஷம் தவஞ் செய்தாள். அதில முயற்சியினால பிரம்மாவையும் ஸந்தோஷிக்கச் செய்தாள்.பிறகு, உலகங்களுக்கெலாம் ப்ரபிதாமஹரான ப்ரம்மாவானவர் அவ்விடம்வந்து அவளைநோக்கி, 'பெண்ணே! ஏன் இப்படி நிற்கிறாய்? நான்சொன்னதைச் செய்யலாம்' என்றுசொன்னர். பிறகு, மறுபடியும் ம்ருத்யுவானவள் பகவானைபிதாமஹரைநோக்கி, 'ஓ! தேவரே! நான் பிரஜைகளை ஸம்ஹரிக்கமாட்டேன். திரும்பவும் நான் உம்மைத் தயைசெய்யப் பிரார்த்திக்கிறேன்' என்றுசொன்னாள். அப்பொழுது தேவர்களுக்குத்தேவரான பிதாமஹர் அதர்மத்தில்பயந்தவளும் மறுபடியும் யாசிக்கிறவளுமான அவளைத்தடுத்துப் பின்வருமாறு சொல்லலானர். 'ஓ! ம்ருத்யுவே! உனக்கு அதர்மமில்லை. மங்களகுணமுள்ளவளே! இக்கப்பிரஜைகளை அழிக்கக்கடவை. கல்யாணகுணமுள்ளவளே! இப்பிரபஞ்சத்தில என்னால்சொல்லப்பட்டதொன்றும் பொய்யாகாது. இப்பொழுதே அழிவற்றதர்மமும் உன்னை அடையப்போகிறது. நானும் தேவர்களுமே உன்னுடைய நன்மையில் எப்பொழுதும் நாட்டமுள்ளவர்களாயிருக்கிறோம். இதையோ இதைத்தவிரமற்றதையோ உன்மனத்தாலிச்சிக்கப்பட்டஎல்லாவிருப்பத்தையும் கொடுப்பேன். நோயினாலபீடிக்கப்பட்ட பிரஜைகள் உன்மேல் குற்றஞ்சொல்லமாட்டார். நீ புருஷர்களிடத்தில் புருஷரூபமாகவும் ஸ்திரீகளிடத்தில் ஸ்திரீரூபமாகவும் அலிகளிடத்தில் அலிஉருவமாகவும் ஆவாய்' என்றார். ஓ! மஹாராஜனே! இவ்விதம் சொல்லக்கேட்ட அந்த ம்ருத்யு,அழிவில்லாதவரும் தேவர்களுக்கு ராச

ரும் மஹாத்மாவுமான பிரம்மாவைப்பார்த்து மறுபடியும் கரங்குவித்துக்கொண்டு, 'நான் ஸம்ஹரிக்கமாட்டேன்' என்றுசொன்னாள். அப்பொழுது பிரம்மா அவளைநோக்கி, 'மங்களகுணமுள்ளவளே! ஓ! ம்ருத்யுவே! மானிடர்களை ஸம்ஹாரம்செய்யக்கடவாய். உனக்கு அதர்மம்ஏற்படாதபடி நான் தியானஞ்செய்வேன். பெண்ணே! நீ இந்த (ஸம்ஹாரத்திற்குத்) திறமையுள்ளவளும் தகுதியுள்ளவளும் (அதற்காக) முன்உண்டானவளும் கட்டளையிடப்பட்டவளும் தோஷமற்றவளுமாயிருக்கிறாய். ஆகையால், நான்கருதியதை நீ செய்யக்கடவாய். ம்ருத்யுவே! முன்பு உன்கண்களிலிருந்துவிழுந்தனவும் என்னுல்கைகளில்ஏந்தப்பட்டனவுமான அந்தக்கண்ணீர்த்திவலைகள் காலம்வந்தபோது பயங்கரமான நோய்களாகி மனிதர்களைப்பீடிக்கும். எல்லாப்பிராணிகளிடத்திலும் முடிவுக்காலத்தில நீ காமக்குரோதங்களைச் சேர்த்தலுப்பு. இப்படிச்செய்தால் பயனைக்கொடுக்குந் தர்மம் உன்னை அடையும். (எல்லாரிடமும்) ஒரேவிதமாயிருக்கிற நீ அதர்மத்தையும் அடையமாட்டாய். பிறகு நீ இப்படியே தர்மத்தைக் காப்பாய். உன்னை அதர்மதத்தில முழுகும்படி செய்யவுமாட்டாய். கல்லவளே! ஆகையால், நீ தானுகவந்ததான இஷ்டத்தைத் திருப்தியாக அங்கீகரித்துக்கொள். அப்படிப்பட்டநீ இவ்வுலகில் ஜந்துக்களை ஸம்ஹாரம்செய்' என்றுசொன்னர். அப்பொழுது ம்ருத்யுவென்றுபெயருடைய [1]அத்தப்பெண்ணுனவள் சாபத்திற்குப் பயந்து பிரம்மாவைப்பார்த்து, 'ஸரி' என்று ஒப்புக்கொண்டாள். பிறகு, அவள் எப்பொழுதும் காமக்குரோதங்களை அடையும்படி செய்து முடிவுக்காலத்தில் பிராணிகளுடையபிராணன்களைக் கொல்லுகிறுள். மனிதர்கள் (மற்ற) ப்ராணிகள்ஆகிய எல்லாருடைய முடிவுக்காலத்திலும் சரீரங்கள்அடைகிற அந்தவியாதிகள், ம்ருத்யுவினுடைய கண்ணீர்களே. ஆகையால், புத்தியிஞல்அறிந்து துக்கத்தை அடையாதே. ராஜஶ்ரேஷ்டனே! பிராணிகளின்எல்லாஇந்திரியங்களும் நித்திரைக்காலத்தில் பிரம்மத்தைஅடைந்து மறுபடிதிரும்பும். அப்படியே எல்லாமனிதர்களும் உயிர்முடிவில பரலோகம்சென்று இந்திரியங்கள்போலத திரும்பிலருகின்றனர். பயங்கரனும் பயங்கரமான சப்தமுள்ளவனும் மிக்கதிறமையுள்ளவனும் எல்லாப்பிராணிகளுக்கும் பிராணனுமான வாயுவானவன் பிராணிகளுடைய தேகமுடிவில் திரும்புகிறதில்லை. ஆகையால், வாயுவானவன் சிறந்தவனும்

1 'க்ருதா' என்னும்சொல விடப்பட்டது.

இந்திரியங்களுக்குப்பிரபுவுமாயிருக்கிறவன். [1]எல்லாத்தேவர்களும், 'மர்த்யர்' என்கிற பெயருள்ளவர்களாயிருக்கிறார்கள். எல்லா மர்த்யர்களும்,'தேவர்'என்கிறபெயருள்ளவர்களாயிருக்கிறார்கள். ராஜஸிம்மமே! ஆகையால், புத்திரனைக்குறித்துத் துக்கிக்காதே. உன்னுடைய புத்ரன் ஸ்வர்க்கத்தைஅடைந்து ஸந்தோஷப்படுகிறான். இவ்விதம் பிரம்மதேவரால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ம்ருத்யுவானவள் காலம்வந்தவுடன் தக்கபடி பிரஜைகளை ஸம்ஹரிக்கிறாள். அவளுடைய கண்ணீரான வ்யாதிகளும் இவ்வுலகில் காலம்வந்தவுடன் ஜந்துக்களை ஸம்ஹரிக்கின்றன' என்றுசொன்னார்" என்றார்.

இருநூற்றுபத்தைந்தாவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மத்தின் லக்ஷணம்.)

தர்மபுத்திரர், "பிதாமஹரே! இந்த மனுஷ்யர்களிலெலலாரும் தர்மத்தைப்பற்றி ஸந்தேகிக்கிறார்கள். தர்மமென்பது எது? தர்மம் எங்கிருந்து உண்டாயிற்று? அதை எனக்குச் சொல்லும். இந்தத் தர்மம் இவ்வுலகில் பயனுடையதா? அலலது பரலோகத்தில் பயனுடையதாகுமா? அல்லது இவ்விரண்டு உலகத்திலும் பயனுடையதா? பிதாமஹரே! அதையும் எனக்குச் சொல்லும்' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினார்.

ஸதாசாரம், ஸ்மிருதி, வேதம் இம்மூன்றும் தர்மத்தில பிரமாணம். வித்வான்கள் உபகாரத்தையும் நாலாவது தர்மலக்ஷணமாகச் சொல்லுகிறார்கள். விதியில் சொல்லப்படாதகர்மங்களை, களர்நிலத்தில்விதைக்கப்பட்டவித்தென்று நிச்சயிக்கிறார்கள். இவ்வுலகில் உலக நடைக்காகத் தர்மத்திற்கு நியமம் செய்யப்பட்டிருக்கிறது. தர்மமானது மண்ணுலகம் விண்ணுலகம் இரண்டிலும் ஸுகத்தைக்கொடுக்கிறது. (மூன்) பாவியாயுள்ளவன் நலலதர்மத்தை அடையாமல்பாவத்தில் பற்றுகிறான். பாவத்தைச்செய்கிறவர்கள் பாவத்திலிருந்து விடுபடுகிறநிலலையென்று சிலர் சொலலுகிறார்கள். தர்மத்தைஅறிந்தவன் எப்படி (தர்மத்தைச்செய்தவன்) ஆகிறானோ அப்படி (ஆபத்தில் அதர்மத்தைவாழ்பவனும்) தர்மத்தைச் சொன்னவனாகிறான். தன்னுடைய நன்னடக்கையே தர்மத்திற்குமூலம். (ஆகையால்,) ஆசாரத

---

[1] கர்மதேவர்கள் புண்யம்செய்தது மனிதர்களாவதும் மனிதர்கள் புண்யத்தால தேவர்களாவதும் கருதத்தது.

தையேபற்றிக்கொண்டு வவிக்கவேண்டும். அதர்மத்தையுடையவ னை திருடன் பிறர்பொருளைக்கவர்கிறான். அந்தத்திருடன் பிறர் பொருளைக் கவர்ந்துகொண்டு அராஜகமான ஒருதேசத்தில் (அந்தத் தனத்தால்) ஸுகமடைகிறான். இவனுடைய தனத்தைப் பிறர் கவரும் பொழுது அரசனை நோகிறான். அப்பொழுது அவர்கள் தம்மைசொந் தப்பொருள்களால் ஸந்தோஷிக்கிறார்களோ அவர்களை மேலாகநினைக் கிறான். சுத்தனானவன் பயமும் கூச்சமுமில்லாமல அரண்மனையிலே அடைகிறான். தன்னுள்ளத்தில சிறிதும் தீயசெய்கையிருப்பதாகப் பார்க்கிறதில்லை. (அப்படிப்போலவே) உண்மையைச் சொல்லுவது கல்லது. உண்மைக்கு மேறபட்டதுஇல்லை. எல்லாம் ஸத்யத்தால தரிக்கப்படுகின்றன. எல்லாம் ஸத்யத்தில் நிலைபெறறிருக்கின்றன. குரூர்களானபாவிகளும்மறைவில்செய்தபாவத்தைச்செய்தபடி வெளி யிட்டால் அந்த ஸத்யத்தைக்கைக்கொண்டே துரோகமில்லாமலும் தம்காரியத்திற்குக்கேடில்லாமலும் ஸுகரமாகிறார்கள். அவர்கள் செய் ததை மறைத்துக்கொண்டு தைர்யதையடைவார்களானால நாசத்தை அடைவார்கள். ஸந்தேகமில்லை. பிறர்பொருளைக் கவரக்கூடாதென்று தர்மத்தை உணர்ந்தோர்கள் நினைக்கிறார்கள். பலமுள்ளவர்கள் அந் தத் தர்மத்தைச் சக்தியற்றவர்களால் ஏற்படுதெதப்பட்டதாக நினைக்கி றார்கள். எப்பொழுது அவர்களுக்குத்தெய்வாதீனமாகப் பலக்குறைவு உண்டாகிறதோ அப்பொழுது அந்தத்தர்மம் அவர்களுக்கே விரும்ப மாகிறது. ஸுகிகளாயிருந்தாலும் (ஒருவரும்) எப்பொழுதும் பல வான்களாகிறதில்லை. ஆகையால், நீ ஒருபொழுதும் புத்தியைத் தீய வழியில் செலுத்தக்கூடாது. இப்படியிருப்பவனுக்குத் துஷ்டர்களிட மிருந்தும் பயமில்லை ; திருடர்களிடமிருந்தும்பயமில்லை ; அரசனிட மிருந்தும் பயமில்லை. ஆகையால, ஒருவனுக்கும் ஒருநீங்கும் செய் யாமல் சுத்தனுயிருந்துகொண்டு பயமில்லாதவனாக வவிக்கவேண்டும். திருடனுனவன், கிராமத்தையடைந்தமான்போல எல்லாரிடத்திலிருந் தும் பயத்தை அடைகிறான். பிறர்விஷயத்தில் பலவிதமாகச் செய்யப் பட்டபாவத்தை நினைத்துக்கொள்ளுகிறான். சுததமாயுள்ளவன் எப் பொழுதும் எல்லாரிடத்திலும் பயமில்லாமல ஸந்தோஷத்துடன் போகிறான் ; தன்னால் பிறருக்குச்செய்யப்பட்ட ஒருவிதமான தீங்கை யும் நினைக்கிறதில்லை. தானுசெய்யவேண்டுமென்ற இந்ததர்மமா னது பிராணிகளுடைய நன்மையில விருப்பமுள்ளவர்களால் சொல் லப்பட்டது. பணக்காரர்கள் அந்தத்தர்மத்தை ஏழைகளால் ஏற்படுத் தப்பட்டதாக நினைக்கிறார்கள். எப்பொழுது இவர்களுக்குத் தெய்வ

வசத்தால வறுமை (வருகின்றதோ) அப்பொழுது இவர்களுக்கே (அது) விருப்பமாயிருக்கிறது ஸுகமாயிருந்தவர்களும் கடைசி வரையிலும் பொருளுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். பிறரால் தனக்குச்செய்யப்பட்ட அப்ரியமான ஒருகர்மத்தைவிரும்பாதவன் அப்ரிய மாகினைத்த அந்தக்கர்மத்தைப் பிறருக்குச் செய்யக்கூடாது. எவன் பிறனுடையமனைவிக்கு [1]ஜாரனுவனோ அவன் யாரை என்னசொல்லத்தகுதியுள்ளவன்? பிறனொருவன் தன்மனைவிக்கு ஜாரனுகவற்படி வானனும்' அப்பொழுது அவன் பொறுக்கமாட்டானென்பது என் எண்ணம். எவன் தான்உயிர்வாழவிரும்புகிறனோ அவன் பிறனை எப்படித்துன்பம்செய்யலாம்? எதைஎதைத் தனக்கு விரும்புவானோ அதை அதைப் பிறனுக்கும் நினைக்கவேண்டும். மிக்க செல்வமுள்ளவன் தனது போக்யவஸ்துக்களில தரித்திரர்களான பிறருக்கும் பாகம் கொடுக்கவேண்டும். (ஏழைகளைக் காப்பதான) இந்தக்காரணத்தால் பிரம்மதேவரால் வட்டிஜீவனமானது ஏறபடுத்தப்பட்டது. எந்தகல் வழியில தேவர்கள் மகிழ்ச்சியடைவார்களோ அந்தவழியில் இருக்க வேண்டும். அல்லது, லோபமார்க்கத்திலிருந்தாலும் தர்மமான (லோபமார்க்கத்தில்) இருப்பது நலம். பிறருக்குத்துன்பமின்றிக் கிடைத்த எல்லாவற்றையும் விதவான்கள் புண்யமாகச் சொல்லுகிறார்கள். ஓ! யுதிஷ்டிர! தர்மாதர்மங்களுடைய இந்தலக்ஷணத்தின் விதத்தைபபார். ஸூக்ஷ்மமான தர்மத்திறகாகவே ஏறபட்டதும் உத்தமமானதும் உலகத்துக்கு நன்மையைச் செய்வதுமான பெரியோர்களுடைய ஆசாரமானது முன்காலத்தில பிரம்மதேவரால் விதிக்கப்பட்டது. ஓ! குருகுலத்தலைவனே! இந்ததர்மலக்ஷணதை உனக்குச் சொன்னேன். ஆகையால், ஒருவிதத்தாலும் நீ உன்னுடைய புத்தியை அதர்மத்தில் செலுத்தலாகாது" என்றுசொன்னர்.

இருநூற்றுறுபத்தாருவது அத்தியாயம.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், தர்மத்தின் பிரமாணத்தைப்பற்றிப் பீஷ்மரிடம் ஆலோசித்தது.)

யுதிஷ்டிரர், "ஸூக்ஷ்மமான தர்மலக்ஷணமானது உம்மால நன்குஉரைக்கபபட்டது. எனக்கு ஒருவிதமான எண்ணம் உண்டாயிருக்கிறது. அதை யுக்தியுடன் எடுத்துச்சொலலுவேன். என்

---

1 சோரபுருஷன்

மனதிலிருந்த அநேகம் கேள்விகளுக்கு உம்மால் உத்தரம் சொல்லப்பட்டது. ஓ! அரசரே! இப்பொழுது வேறுஇது ஒன்றைச்சொல்லப்போகிறேன். ஆக்ரகத்திலில், குதர்க்கமாகக்கேட்கவில்லை. ஓ! பாரதரே! இந்தப்பிராணிகள் தங்களைத்தாங்களேயல்லவோ [1]ஜீவிக்கச்செய்துகொள்ளுகின்றன; ஸ்ருஷ்டியையும் மாணக்கையும்செய்துகொள்ளுகின்றன. தர்மமானது வேதத்திலில்மட்டும் அறியக்கூடியதன்று. பொதுவான நிலைபிலுள்ளவனுக்குத் தர்மம்வேறு. ஆபத்திலுள்ளவனுக்குத் தர்மம்வேறு. ஆபத்துக்களேஎவென்றால் எப்படி வேதத்திலில் அறியமுடியும்? பெரியோர்களின்ஆசாரம் தர்மமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பெரியோர்களோ ஆசாரத்தை அடையாளமாகவுடையவர்கள். செய்யக்கூடியதும் செய்யக்கூடாததும் எப்படி அறியமுடியும்? பெரியோர்களின் ஆசாரமானது லக்ஷணமில்லாததாயிருக்கிறது. ப்ராக்ருதனனஒருவன் தர்மரூபமாக அதர்மத்தைச்செய்கிறவனாகக் காணப்படுகிறான். மேலான ஒருவன் அதர்மரூபமாகத் தர்மத்தைச்செய்கிறவனாகவும் காணப்படுகிறான். கவிரவும், சாஸ்திரபண்டிதர்களால் இந்தத்தர்மத்திற்குப்பிரமாணமாகச்சொல்லப்படுகிற வேதவாக்கியங்கள் ஒவ்வொருயுகத்தில் யுகத்திற்குத்தக்கபடி குறைகின்றனஎன்று நமக்குக்கேள்வி. தர்மங்கள் கிருதயுகத்தில் வேறு; திரேதாயுகத்தில் வேறு; துவாபரயுகத்தில் வேறு; கலியுகத்தில் வேறு. (ஆகையால, தர்மங்கள்)சக்திக்குத்தக்கபடி செய்யப்பட்டவை போலிருக்கின்றன. [2]ஆம்னாயவசனம்ஸத்யமென்பது ஜனங்களின் கொள்கை. ஆம்னாயங்களினின்றும் ஸகலவிஷயங்களையும்தெரிவிக்கிற வேதங்கள்வந்தன. அந்தவேதங்கள் எல்லாவிஷயத்திலும்பிரமாணமாஞல், இந்தத்தர்மவிஷயத்திலும் பிரமாணமாயிருக்கின்றனவன்றோ? ஒருபிரமாணம் மற்றொருபிரமாணத்தோடு விரோதித்தால் அது எப்படி சாஸ்திரமாகும்? செய்யப்படுகிற தர்மத்தின்நிலைமையானது எப்பொழுது வலியவர்களான துஷ்டர்களால் விகாரத்தைஅடையும்படி செய்யப்படுகிறதோ அப்பொழுது அந்தநிலைமையும் நசிக்கிறது. இந்தத்தர்மத்தை அறியவும்செய்கிறோம்; ஒருகால் அறிகிறதுமில்லை. (சொன்னால்) அறியவும்முடியும்; அறியவும்முடியாது; கத்திமுனையைக்காட்டிலும் ஸூக்ஷ்மமாயிருக்கிறது; பர்வதத்தைக்காட்டிலும் பெரிதாயுமிருக்கிறது. [3]கந்தர்வ நகரம்போன்ற

1 'அன்னத்திலால ஜீவிகின்றன' என்பது பழையவுரையின் கருத்து.

2 ப்ரத்யக்ஷமாயும் அபரோக்ஷமாயுமிருக்கிற வேதங்கள்.

3 மாயாநகரம்.

தர்மமானது மூதலில் (ஸத்யம்போலக்) காணப்படுகிறது; வித்வான்கள் நுட்பமாகப்பார்த்தால் மறுபடி காணப்படுகிறதில்லை. ஓ! பாரதரே! பசுமந்தையின் அருகிலிருக்கிற சிறுகுளங்களும் கழனிக்குப்பாய்கிறவாய்க்காலிலிருக்கிறமடுக்களும்குறைவதுபோல ஸ்மிருதியில்சாஸ்வதமாகச்சொலலபட்டதர்மமானதுமிகவும்குறைவடைந்ததாகக் காணப்படுகிறதில்லை. சிலர் காமத்தினாலும் சிலர் பயத்தினாலும் அப்படியே சிலர் வேறுகாரணங்களினாலும் தர்மத்தைச் செய்கிறார்கள்: வேறுனபலஅலுத்துக்களும் (டம்பத்துக்காக) ப்ரத்தையில்லாமல் ஆசாரத்தையடைகிறார்கள். அது விரைவில் தர்மமாகிவிடுகிறது. [1]லாதுக்களிடத்திலோவென்றால் அது உலகத்தால் [2]நூற்றப்படுகிறது. இவர்களே மூடர்கள் பித்தர்களாகச்சொல்லுகிறார்கள்; மேலும், பரிஹஸிக்கவும் செய்கிறார்கள். மறைராஜனங்கள் தங்கள் தர்மத்தினின்றும்மாறி ராஜதர்மத்தை அடைந்திருக்கிறார்கள். எல்லாருக்கும் நன்மையாக ஒருவிதஆசாரமும் ஏற்படுகிறதில்லையன்றோ? அந்தஆசாரத்தினாலேயே [3]ஒருவன் ஸமர்த்தனாகிறான். அது [4]மற்றொருவனுக்கு விரோதமாகிறது. அந்த [5]ஆசாரமுள்ளவனே ஸ்வபாவத்தினாலேயே எப்பொழுதும் ஓரேவிதமாயிருக்கிறான். எதனாலேயே ஒருவன் முன்னுக்குவருகிறானோ அதுவே மற்றவர்களைப் பாதிக்கிறது. ஆகையால், எல்லாஆசாரங்களுக்கும் ஓரேவிதமான நிலைமைஇல்லையென்று ஊகிக்கவேண்டும். முறைகாலத்தில வித்வான்களால் நெடுங்காலம் அனுஷ்டிக்கப்பட்டதர்மமானது சொல்லப்பட்டிருக்கிறது. பழமையான அந்தஆசாரத்தினால் சாஸ்வதமான ஒரு மர்யாதை ஏற்பட்டிருக்கிறது" என்றுசொன்னார்.

இருநூற்றுபத்தேழாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜாஜலிமஹர்ஷி தர்மநிச்சயமாகக் கர்வமடைந்து துலாதாரனிடம் சென்றது.)

பீஷ்மர், "இந்தவிஷயத்திலும் தர்மவிதித்தம் ஜாஜலிக்கும் துலாதாரனென்கிற ஒருவைச்யனுக்கும் உண்டான ஸம்வாதரூபமான பழைய ஓர்இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். ஒருவனத்தில் ஜாஜலியென்கிறஒருவேதியர் இருந்தார். வனத்தில் ஸஞ்சரிப்பவ

---

1 வேறுபாடம். 2 'ப்ரலாபம்' என்பது மூலம்.
3 விஸ்வாமித்ரர். 4 பரசுராமர். 5 வஸிஷ்டர்.

ரும் மிகுந்த தவமுடையவரும் புத்திமானுமாகிய அந்த முனிவர் ஸமுத்திரப்பிரதேசத்தையடைந்து அநேக வருஷங்கள் நியமத்தோடும் மிகவும் மிதமானஆகாரத்தோடுமிருந்து மரவுரியையும் மான் தோலையும்உடுத்து ஜடைகளைத்தரித்துச் சரீரத்தில் அழுக்குமிகுதியாகப்படியத் தவஞ்செய்தார். ஓ! பூபதியே! மிகுந்த தேஜஸ்ஸுள்ள ஜலவாஸியும் ப்ரம்மரிஷியுமானஅவர் ஒருகால் உலகங்களைப் பார்ப்பதற்காக மனோவேகமாக ஸஞ்சரித்தார். அந்த முனிவர் ஒரு ஸமயம் ஜலமத்தியிலிருந்துகொண்டு, ஸமுத்திரத்தால் சூழ்ப்பட்டதும் சிறிதும் பெரிதுமான காடுகளுள்ளதுமான பூமியைப் பார்த்தது, 'இவ்வுலகத்தில் சராசரங்களுள் ஜலத்திலும் ஆகாயத்திலும் எனக்குச் சமானமாக என்னுடன் கூடவருபவன் ஒருவனும் இல்லை' என்று நினைத்தார். ஓ! பாரதனே! அப்பொழுது அவர் ஜலமத்தியில் பிசாசங்களால்பார்க்கப்பட்டுக்கொண்டு,'என்னால் தர்மமானது அடையப்பட்டது' என்று ஆகாயத்தில் தோள்தட்டினார். (உடனே)பிசாசுகள் அவரைநோக்கி, 'நீர் இவ்விதம் சொலவதற்கு யோக்கியரல்லீர். வாராணஸியில் துலாதாரனென்னும்ஒருவன் வியாபாரத்தொழிலுள்ளவனும் மிக்கபுகழ்பெற்றவனுமாயிருக்கிறான். பிராம்மணோத்தமரே! அவனும் நீர் சொலவதுபோலச் சொல்லுகிறதில்லை' என்று சொல்லின. பூதங்களால் இவ்வாறுசொல்லப்பட்டவரும் மிக்கதவத்தையுடையவருமான ஜாஜலியானவர், 'ஞானவானும் புகழுடையவனுமானஅந்தத்துலாதாரனை நான் பார்க்கவேண்டும்' என்று மறுமொழி கூறினார். (உடனே,) பூதங்கள் ஸமுத்திரத்தினின்றும் கிளம்பி, இவ்விதம்சொன்ன அந்தமுனிவரைநோக்கி, 'ஓ! பிராம்மணோத்தமரே! இந்தவழியைஅடைந்து நடக்கக்கடவீர்' என்றுசொலலின. பூதங்கள்இவ்விதஞ்சொல்லக் கேட்டஜாஜலியானவர் அப்பொழுது மனவருத்தத்துடன் நடந்தார். வாராணஸியில் துலாதாரனைஅடைந்து பின்வருமாறு சொல்லலானார்" என்றார். யுதிஷ்டிரர், "ஐயா! முன்பு ஜாஜலியினால் ஒருவராலும் செய்யமுடியாத என்னகர்மம் செய்யப்பட்டது? எந்தக்கர்மத்தால மேலானஸித்தியை அடைந்தார்? அதை எனக்கு விரிவாகச் சொலலவேண்டும்" என்று கேட்டனர்.

பீஷ்மர், "அந்த ஜாஜலியானவர் மிகவும் கோரமான தவமுடையவரானார். மிக்கதவமுள்ளவரும் வானப்பிரஸ்தவித்தியை அறிந்தவருமான ஜாஜலிஎன்கிறஅந்தப்பிராம்மணர் காலையிலும் மாலையிலும் அக்நிஸ்நானத்தில் விருப்பமுள்ளவரும் செவ்வையாகஅக்னிகளை ஆராதிக்கிறவரும் வேதாத்யயனமுள்ளவருமாயிருந்துகொண்டு பிரம்ம

தேஜஸால் விளங்கினர். அவர் வனத்தில் தவத்திலிருந்துகொண்டு அதர்மத்தைக் கண்ணுலும் பார்க்கவில்லை. அவர் கார்காலத்தில் வெளியிலபடித்தும் பனிக்காலத்தில் ஜலமத்தியிலிருந்தும் வேனிற்காலத்தில் காற்றையும்வெயிலையும் பொறுத்துக்கொண்டும் அதர்மத்தை அடையாமலிருந்தார். அவர் பூமியில அதிகவித கஷ்டமான இடங்களில் பதிததுப் புரண்டுகொண்டிருந்தார். பிறகு, ஒருகால் அந்தமுனிவர் மழைக்காலத்தில் வெளியிலிருந்துகொண்டு அடிக்கடி ஆகாயத்தில்கின்றுவிழும் மழைஜலத்தைத் தம்தலையில் தாங்கினர். ஓ! பிரபுவே! அப்படிஇருந்ததினுல் அவருடையஜடைகள் ஒனைந்து ஒன்றுயின. பாபமற்றவரானஅவர் நித்யம்வனஸஞ்சாரத்தால்கறுத்துவிட்டார். ஒருகால் அவர் ஆகாரம்விட்டுக் காற்றைப்புசித்து மிருந்த தவத்திலிருந்துகொண்டு ஜாக்ரதையுடன் கட்டைபோல நின்றார். ஒருபொழுதும் சலிக்கவில்லை. ஓ! பரதகுலத்தினுதித்தஅரசரே! கட்டைபோலாகிச் சேஷடையறறிருக்கிற அவருடையதலையில் இரண்டுகுருவிகள் (சேர்ந்து) ஒருகூட்டைக் கட்டின. கருணையுள்ள அந்தப்பிராம்மணமுனிவர் அந்தஜடைகளில புல்லாலும் நூலாலும் கூடுகட்டுகிற ஆணும்பெண்ணுமான அவைகளைக் கவனியாமலே இருந்தார். அவைகள், அவர்கட்டைபோலாகி மிருந்த தவத்துடன் அசையாமலிருந்தபொழுது, எவ்விதலம்பிக்கையடைந்து அந்தக்கூட்டில் ஸுகமாகவஸித்தன. ராஜனே! பிறகு, கார்காலம்சென்று சரத்காலம்வர அந்தப்பக்ஷிகள் காமதகால மோஹித்துக் கர்ப்பாதானஷிதியினுல் அவரிடம்நம்பிக்கையோடு அந்தச்சிரத்தில முட்டைகளை உண்டுபண்ணின. தீவ்ரமான விரதமுள்ளவரும் தேஜஸ்ளவருமான அந்த அந்தணர் அவைகளை அறிந்தார். அறிந்தும், மிருந்தகாந்தியுள்ள அந்தஜாஜலி சலிக்கவில்லை. எப்பொழுதும் தர்மத்தில் மனம் பற்றிய அவர் அதர்மத்தை விரும்பவில்லை. ஓ! பிரபுவே! அதனுல் அவைகள் அபபொழுது ஒவ்வொருநாளும் வந்து அவருடையதலையில இனைப்பாறி ஸந்தோஷதுடன் வஸித்தன. பிறகு, முட்டைகள் முதிர்ந்து குஞ்சுகள் உண்டாயின; அங்கமையே விருத்தியையுமடைந்தன. ஜாஜலியும் அசையாமலிருந்தார். விரதங்கொண்டு தர்மசித்தமுடையஅவர்குருவிகளின்முட்டைகளைக்காப்பதற்காக ஜாக்ரதையுடன் அசைவற்று அபபடியே நின்றார். ஓ! ராஜேந்திரனே! பிறகு, அந்தக் குஞ்சுகளுக்குக் காலத்தில் சிறகுகள் உண்டாயின. அந்தமுனிவரும் அந்தக்குருவிக்குஞ்சுகளுக்குச்சிறகுகளுண்டானதை அறிந்தார். புத்திமான்களிற்சிறந்தவரும் உறுதியான விரதமுடையவருமானஜாஜலி

பிறகு ஒருகால் அத்தப்பக்ஷிகளைப்பார்த்துப் பரமஸந்தோஷமடைந்தார். அப்படியே மேன்மேலும் விருத்தியடைந்துவருகின்ற அவைகளைப்பார்த்தும் ஸந்தோஷத்தை அடைந்தார். பக்ஷிகளும் பயமில்லாமல் குஞ்சுகளுடன் அவர்தலையில் வஸித்தன. அந்தஜாஜலியென்கிற வேதியரும் அவைகள் சிறகுமுளைத்து மாலைதோறும் ஆகாயத்தில் பறந்து திரும்பிவருவதையும் பார்த்தார்; அசையாமலுமிருந்தார். ஒருகால் அவைகள தாய்தந்தைகளால விடப்பட்டு அடிக்கடி வருவதும் போவதுமாயிருந்தன: ஜாஜலியும் அசையாமலே இருந்தார். ஓ! அரசனே! அப்படியே அந்தக்குஞ்சுகள் பகல்முழுவதும்போய்விட்டு மறுபடியும் அங்கேயேவஸிப்பதற்காக ஸாயங்காலம் திரும்பிவந்தன. ஒருஸமயம் பக்ஷிகள ஐந்துநாள் வெளியில்சுற்றிவிட்டு ஆருவதுநாள் வந்தன. ஜாஜலி அசையாமலில்லை. இறகுமுளைத்த அத்தப்பக்ஷிகள் வரவர மிகஅதிகமாட்கள் திரும்பிவராமலே இருந்தன. அரசனே! ஒருஸமயத்தில பறந்துபோன அப்பறவைகள் ஒருமாதம் வரையிலும் திரும்பிவரவேயில்லை. பிறகு, அந்தஜாஜலியும் வேறிடம்சென்றார். அவைகள் பறந்துபோனபிறகு ஜாஜலி ஆச்சரியத்தை அடைந்து, 'நான் வித்தஞனேன்' என்று நினைத்தார். பிறகு, அவரைக் கர்வமானது சூழ்ந்துகொண்டது. உறுதியான விரதமுடையவரும்தம்மைமெச்சிக்கொள்ளுகிறவருமான அவர் அப்படியேவெளிக்கிளம்பின பக்ஷிகளைப்பார்த்துவிட்டு உடனே தம்மை மிகவும்புகழ்ந்துகொண்டு ஸந்தோஷித்தார். பிறகு, சிறந்த தவமுள்ள அவர் நதியில் நீராடி அக்நியைத திருப்திசெய்து உதயமாகிற ஸூர்யனுக்கு எதிரில்வந்தார். ஜபம்செய்கிறவர்களிலுசிறந்தவரான அவர் அப்படிகுருவிகளைத்தலையில் பரிபாலித்ததால், 'என்னுலைதர்மம் அடையப்பட்டது' என்று வெளியில்நின்றுசொல்லித்தோள்தட்டினார். பிறகு, ஆகாயத்தில ஒருவாக்கு உண்டாயிறறு. அதையும் ஜாஜலிகேட்டார். அதென்ன வென்றால், 'ஓ! ஜாஜலியே! தர்மததால நீர் துலாதாரனுக்கு ஒப்பாக மாட்டீர். மஹாபுத்திமானான துலாதாரன் காசியிலிருக்கிறான். ஓ! ப்ராம்மணரே! அவனை நீரெப்படிசொல்லுகிறீரோ அப்படிசொலலத் தக்கவனல்லன்' என்பது. ஓ! அரசனே! (அதைக்கேட்டு) அந்த முனிவர் பொருமைகொண்டு துலாதாரனைபபார்க்கவேண்டுமென்கிற விருப்பத்தால் எவ்விடததில ஸாயங்காலமாகுமோ அவ்விடதில தாமவித்துக்கொண்டு பூமியில் ஸஞ்சரித்தார்; வெகுகாலம்கடந்து காசிப்பட்டணத்தை அடைந்தார். (அவ்விடத்தில்) வியாபாரஞ்செய்கிற துலாதாரனையும் கண்டார். மூலதனத்தாலஜீவிக்கிறஅவனும் வரு

கிறஅந்தவேதியரைப்பார்த்து உடனேஎழுந்து மிகுந்தஸந்தோஷத்துடன் க்ஷேமம்விசாரித்துப் பூஜித்தனன். பிறகு, துலாதாரன், 'ஓ! பிராம்மணரே! நீர்வரும்போதே நான் அறிந்தேன். ஸந்தேகமில்லை. ஓ! பிராம்மணோத்தமரே! நான்சொல்லுகிறவார்த்தையைக் கேளும். ஸமுத்திரப்பிரதேசத்தை அடைந்து நீர் பெரியதவஞ்செய்தீர். நீர் மூன்று ஒருவிதத்தாலும் தர்மத்தின்பேரையும் அறியாமலிருந்தீர். ஓ ! பிராம்மணரே! பிறகு, தவத்தால் வித்தியடைந்தஉம்முடையதலையில் சிக்கிரம் பக்ஷிகள் உண்டாயின. பிராம்மணரே ! அவைகளும் உம்மால் காக்கப்பட்டன. அவைகள் சிறகுமுளைத்து வெளியில் ஸஞ்சரிக்கப் போனபொழுது நீர், அந்தக்குருவிகளாலுண்டான தர்மத்தை நினைத்தீர். பிராம்மணஸ்ரேஷ்டரே! பிறகு என்விஷயமாக ஆகாயத்திலுண்டானவார்த்தையைநீர்கேட்டீர். உடனே நீர்பொறுமைஅடைந்து இங்கேவந்தீர். பிராம்மணஸ்ரேஷ்டரே ! உமக்கு என்னவிருப்பத்தை நான் செய்யவேண்டும்? அதைச்சொல்லும்' என்றுசொன்னன்.

இருநூற்றுபத்தெட்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜாஜலிக்கும் துலாதாரனுக்கும் தர்மநிமித்தமாகநடந்த ஸம்பாஷணை.)

புத்திமானனஅந்தத்துலாதாரன் இவ்விதம்சொல்ல, புத்திசாலியான ஜாஜலியென்றமுனிவர் அபபொழுது அவனைநோக்கி ஒருவார்த்தை சொல்லலானர். 'ஓ ! வைஸ்யபுத்ரா! ரஸமுள்ள எல்லாவஸ்துக்களையும் எல்லாவாஸனைப்பொருள்களையும் விருக்ஷங்களையும் ஓஷதிகளையும் விற்கின்றஉனக்கு, சிறந்ததும் நிலைத்ததுமான இத்தஞானமானது எதனால உண்டாயிறது ? மிக்கஅறிவுள்ளவனே ! இந்தவிஷயத்தையெலலாம்எனக்குச்சொல'என்றுவினவினர். புகழ்பெற்றவேதியர் இவ்விதம் கேட்க, தர்மார்த்தங்களின் உண்மையைஉணர்ந்த துலாதாரனென்கிற வைஸ்யன் தர்மங்களுடைய ஸூக்ஷமங்களைச் சொல்லலானன். 'ஓ! ஜாஜலியே! ஜனங்கள் எல்லாப்பிராணிகளுக்கும்நன்மையும் எல்லாரிடத்திலும் ஸ்நேகத்திற்குக்காரணமும் அனுதியுமாகச் சொல்லுகிறதும், ரகஸ்யமும், ஸநாதனமுமானதர்மத்தை நான் அறிவேன். ஓ ! ஜாஜலியே! எல்லாப்பிராணிகளுக்கும் துரோகமிலலாம

லாவது அல்லது (அவ்சியமானால்) அற்பதூரோகத்துடனாவது இருக்கும்ஜீவனம்தான் சிறந்த தர்மம். அதனால் நான் ஜீவிக்கிறேன். நான் சிறியகுச்சிகளாலும் புற்களாலும் வீடுகட்டிக்கொண்டிருக்கிறேன். ஓ! பிராம்மணரேஷ்டரே! நான் செம்பஞ்சு, பத்மகம், துங்கம், உயர்ந்ததும்தாழ்ந்ததுமானவாஸனைப்பொருள்கள், கள் தவிரப்பலவிதமான அந்தஅந்தரஸபதார்த்தங்கள் இவைகளைஎல்லாம் கபடமின்றிப் பிறரிடமிருந்து விலைக்குவாங்கி விறகிறேன். ஓ! ஜாஜலியே! செய்கையினாலும் வாக்கினாலும் மனத்தினாலும் எல்லாப்பிராணிகளுக்கும் மித்திரனும் அவைகளுடையஹிதத்தில் பறறுதலுள்ளவனுமாயிருக்கிறவன்தான் தர்மத்தையறிந்தவன். ஓ! ஜாஜலியே! நான் ஒருவனையும் அனுஸரிக்கிறதுமில்லை; [1]விரோதிக்கிறதுமில்லை; [2]துவேஷிக்கிறதுமில்லை; விரும்புகிறதுமில்லை; எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமாக இருக்கிறேன். என்னுடையவிரதத்தைப் பாரும். ஜாஜலியே! என்னுடையதாசும் எல்லாவிஷயத்திலும் ஸமமாகவேஇருக்கிறது. நான் பிறருடையசெய்கைகளைப் புகழ்கிறதுமில்லை;இகழ்கிறதுமில்லை; பிராம்மணரேஷ்டரே! (மேகத்தாலுண்டாகும்) ஆகாயத்தினுடைய விசித்திரங்களைப்போல உலகத்தினுடைய விசித்திரங்களைப்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஜாஜலியே! எனக்கு எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமான அருள்இருக்கிறது. இஷ்டவஸ்து, அநிஷ்டவஸ்து (இரண்டும்) அறறவனனஎன்னால் விருப்புவெறுப்புஇரண்டும் வெளியில விலக்கப்பட்டன. இவ்விதம் என்னை நீர் அறியக்கடவீர். ஓ! புத்திசாலிகளிலுத்தமரான ஜாஜலியே! என்னை எல்லாப்பிராணிகளுக்கும் ஸமமாகவும் ஒட்டாஞசில்லியையும் பொன்னையும் ஸமமாக எண்ணுபவனாகவும் நினைக்கக்கடவீர். குருடரும் செவிடரும் பித்தரும் தேவர்களால்அடைக்கப்பட்ட [3]துவாரத்தையுடையவர்களாகப்பிழைப்புமட்டுமே பயனாகவுடையவர்களாயிருப்பதுபோல ஞானியானஎன்நிலைமையும் இருக்கிறது. , பிராயமுதிர்ந்தவர்களும் நோயாளிகளும் வலியற்றவர்களும்விஷயங்களிலவிருப்பமிலலாமலிருப்பதுபோலவேஎனக்கும் அர்த்தத்திலும் காமதத்திலும் போகத்திலும் விருபபமில்லை. ஓ! பிராம்மணரே ! எப்பொழுது புருஷன் ஒன்றினின்றும் பயத்தையடைகிறதில்லையோ, எப்பொழுது இவனிடமிருந்தும் ஒன்றும் பயத்தையடைகிறதிலலையோ, எப்பொழுது ஒன்றையும்விரும்பாமலும் வெறுக்காம

1 வாக்கினாலும் செய்கையினாலும் பகைபாராட்டுவது.

2 மனத்தினால் பகைபாராட்டுவது. 3 இந்திரியங்கள்.

லும் இருக்கின்றானே அப்பொழுது வித்தியைஅடைகிறான். எப்பொழுது காயத்தினலும் வாக்கினலும் மனத்தினலும் ஒருபிராணியிடத்திலும் கெட்டஎண்ணத்தைச் செய்யவில்லையோ அப்பொழுது பிரம்மத்தைஅடைகிறான். எலலாப்பிராணிகளுக்கும் பயத்தைஉண்டுபண்ணும்விருப்பவனுடைய தர்மத்திற்குச்சரியானதர்மம் இதற்குமுன்னும் இப்பொழுதும் இனிமேலும்இல்லை. அவன் அபயமானஸ்தானத்தை(பிரம்மத்தை) அடைவான். குரூரமானவர்த்தையும்கடினமில்லாயுமுடையவனிடமிருந்து எல்லா உலகமும் மிருத்யுவின்வாயைக் கண்டுநடுங்குவதுபோல நடுங்குகிறதோ அவன் பிக்பயத்தை அடைவான். வித்துப்படியிருக்கிறவர்களும் மூடியவர்களும் புத்தபௌத்திரர்களுள்ளவர்களும் ஒருவரையும் துன்பப்செய்யாதவர்களுமாயிருக்கிற பெரியோர்களுடைய நடக்கையை நாம் அனுஷ்டிக்கிறோம். நித்யமானதர்மமான (சிலபாகத்தில்வேறுபட்ட) வைதாசாரத்தால புராண்டி நஷ்டமாகிவிட்டது. அதனல வித்வானும் தவசியும் காமக்குரோதங்களேவென்றபலவானுங்கூட மோகிக்கும்படிசெய்யப்படுகிறார்கள். ஓ! ஜாஜலியே ! புதிதுமான ஆசாரத்திலுள்ளயே விரைவாகத தர்மத்தை அடைவான். கலலகர்மங்களால அடங்கித் தூரோகசிக்தினையில்லாமல் நடந்துவருபவனுக்கு, இவ்வுலகத்தில, நதியில தானுகவே மிதந்துவருகிற ஒருகட்டையானது தானுகவே மிதந்துவருகிற மறறொருகட்டைபுடன் சேருகிறதும், பிறகு அதில் அங்கங்கிருந்து மற்றும் சிலகட்டைகளும் குச்சிருப்பைகூளங்களும் சேரவேண்டுமென்கிற விருப்பமில்லாமல ஒருகால் தாமாகவேவந்துசேருகிறதும்போல(புதுமிததிராதிகளின்சேர்க்கையும் உண்டாகிறது.) ஓ ! முனிவரே ! எவனிடமிருந்து ஒருபோதும் ஒருவித்தாலும் ஒருபிராணியும் பயந்து நடுங்காமலிருக்கிறதோ அவன் எப்பொழுதும் எல்லாப்பிராணிகளிடமிருந்தும் பயமிலலாமையை அடைவான். ஓ! வித்வானே! குரைக்கின்ற செந்நாயினிடமிருந்து எலலாஉலகமும் நடுங்குவதுபோலவும் எல்லாஜலஜந்துக்களும் கரையையடைந்து நடுங்குவதுபோலவும் எவனிடத்தில் எலலாப்பிராணியும் நடுங்குமோ (அவன் அபயத்தை அடையமாட்டான்.) ஆசாரம் இவ்விதம் ஏறபட்டிருத்தலால், எவன் ஜனக்கட்டும் தனமுமுள்ளவனுயிருக்கிறானே அவனே நல்ல பாக்யமுள்ளவன். அப்படியே அவனே உத்தமன். ஆகையால், அற்பப் பயனைச் சிந்தித்தவர்களும் எல்லாம்அறிந்தவர்களும் ஸமர்த்தர்களுமானகவிகள் அவர்களையே கீர்த்திக்காகச் சாஸ்திரங்களில வர்ணிக்கின்றார்கள். தவங்களாலும் யாகத்தாலும் தானங்களாலும் ஞான

மானவர்த்தைகளாலும் இவ்வுலகில் எந்தவந்தப்பயனை அடைகிறார்களோ அந்தப்பயனெல்லாம் அபயதானத்திற்கும் கிடைக்கும். உலகத்தில் எல்லாப்பிராணிகளுக்கும் அபயதக்ஷிணையைக்கொடுக்கிறவன் ஸத்யமென்கிற யாகங்களைச்செய்கிறவனாகி அபயதக்ஷிணையையடைவான். பிராணிகளுக்குத் துன்பம்செய்யாமலிருப்பதைப்பார்க்கிலும் உயர்ந்ததர்மம் ஒன்றும்இல்லை. ஓ! மகாபுனிவரே! எவனிடமிருந்து ஒருபிராணியும் ஒருகாலும் ஒருவிதத்தாலும் நடுங்குகிறதில்லையோ அவன் எல்லாப்பிராணிகளிடமிருந்தும் அபயத்தை அடைகிறான். எவனிடமிருந்து உலகமானது வீட்டிலுள்ள பாம்பினிடம்நடுங்குவதுபோல நடுங்குகிறதோ அவன் இம்மையிலும் மறுமையிலும் தர்மத்தையடைவான. எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மபூதனும் எல்லாப்பிராணிகளையும் (தன்னிடத்தில்) பார்க்கிறவனும் அடையவேண்டியகதியிலலாதவனும் பிரம்மதத்தையடைய விருப்பமுள்ளவனுமாயிருப்பவனுடையமார்க்கத்தில் தேவர்களும் அறியாமல் மயங்குகிறார்கள். ஸகலபூதங்களுக்கும் செய்யும் அபயதானத்தை எல்லாத்தானங்களுக்கும் உத்தமமாகச் சொல்லுகிறார்கள். ஓ! ஜாஜலியே! உமக்கு உண்மையைச் சொல்லுகிறேன். என்னுடைய (வார்த்தையை) நம்பும். ஒருவனே செல்வமுள்ளவனாகிருந்து பிறகு வறுமையை அடைகிறான். வினைகளுடைய நாசத்தைப்பார்த்து ஜனங்கள் எப்பொழுதும் நிந்திக்கிறார்கள். காரணமின்றித் தர்மமானது இலலையன்றே? ஜாஜலியே! தர்மம் ஸூக்ஷ்மமாகவன்றே இருக்கிறது? வேதத்தில விஸ்தத்திற்காகவும் ஸாத்யத்திற்காகவும் தர்மம் சொல்லப்பட்டிருக்கிறது. மிகவும் மறைவானதர்மமானது ஸூக்ஷ்மமானதால் நன்றாக அறியமுடிகிறதில்லை. ஒருவிதமான ஆசாரத்தைக்கண்டு மற்றொருவிதமாக அறிகிறான். எருதின் விருஷணங்களைச் சேதிக்கிறவர்களும், மூக்கைக் குத்துகிறவர்களும், அதைப் பெரியசுமைகளைச் சுமக்கச் செய்கிறவர்களும், கட்டுகிறவர்களும், வசப்படுத்துகிறவர்களும், பிராணிகளைக்கொன்றுதின்னுகிறவர்களுமானவர்களை ஏன் தூஷிக்கிறீரில்லை? மனிதர்கள், மனிதர்களையே தாஸராகச்செய்துகொண்டு அனுபவிக்கின்றார்கள்; நிலமும் பசுவும் அடிமைஜனமும் கட்டிலையும் நிர்ப்பந்தத்தினாலும் வேலைவாங்குகிறார்கள். சுன்னை அடிப்பதும் கட்டுவதிலும் என்னதுக்கம் உண்டாகுமோ அதையும் அறிவான். ஐந்து இந்திரியங்களோடுகூடின பிராணிகளில் ஸூர்யன், சந்திரன், வாயு, பிரம்மா, பிராணன், நிரது, யமன் (முதலிய) எல்லாத்தெய்வங்களும் வஸிக்கின்றன. அந்தஜீவன்களை விற்கிறவனுக்கு இறந்தபிரா

ணிகள்விஷயத்தில் ஆலோசனை ஏது? வெள்ளிடி அக்னி; செம்மறிக்கடா வருணன்; குதிரை ஸூர்யன்; பூமி விராட்; பசுவும் கன்றும் சந்திரன்; இவைகளைவிற்றவன் வித்தியையடையான். ஓ! பிராம்மணரே! தைலத்திலும் நெய்யிலும் தேனிலும் ரஸங்களிலும் ஔஷதிகளிலும் என்னவிசாரம? உலங்குமொசுகுமில்லாதவிடத்தில் ஸுகமாகவளர்க்கப்பட்ட பசுக்களை, அவை தம்தாய்க்கு அன்பானவையென்றுதெரிந்தும், மனிதர்கள் பலவாறு பலாத்காரம்செய்து பல கொசுக்களால்நிறைந்தவையும் மிக்கசேறுள்ளவையுமான இடங்களை அடைவிக்கிறார்கள். சிலகாலைகள் விதியில்லாமலே சுமையால் வருத்தப்பட்டு நடுங்குகின்றன. அந்தச்செய்கையைவிட [1] ப்ரூணஹத்தியும் பெரிதென்று நான் நினைக்கவில்லை. சிலர் பயிர்த்தொழிலை நல்லதென்று நினைக்கின்றனர். அந்தத்தொழிலும் மிக்கதொடர்தாயிருப்பது. கொழுவுடன்சேர்ந்த கலப்பைகளால பூமியையும் அதிலுள்ள ஜந்துக்களையும் உழவன் துன்பம்செய்கிறான்; அப்படியே பசிதாகம்களைப்பு இவைகளால இளைத்தவையும் தூகத்தடியில் பூட்டப்பட்டவையுமான எருதுகளையும் துன்பம்செய்கிறான். கோக்களுக்கு அக்ங்யங்கள் (=கொல்லத்தகாதவை) என்று பெயர். எவன் இவற்றைக் கொல்லத்தக்கவன்? எவன் வீணாகக் கோவைத்துன்புறுத்துகிறானோ அவன் பெரியதீங்கைச் செய்தவனுவான். மோக்ஷத்தில முயற்சியுள்ளரிஷிகள் (தங்கள் பூஜைக்காகப் பசுவையும் விருஷபத்தையும் ஹிம்ஸைசெய்த) ஹரஸ்ஸினிடத்தில், 'மாதாவான பசுவையும், பிதாவான விருஷபத்தையும் கொன்றாய். ஓ! ஹரஸ்ஸே! கெட்டகாரியத்தைச் செய்தாய். உன்னால் நாங்கள் தூக்கத்தை அடையப்போகிறோம்' என்னும் இதைத் தெரிவித்தார்கள். ஓ! ஜாஜலியே! புகழ்பெறறவர்களும் மஹாபாக்யவான்களுமான அந்தரிஷிகள் அந்தப்பாவத்தை நூற்றிருபதுரோகங்களாகச்செய்து எல்லாப்பிராணிகளிடத்திலும் தள்ளினார்கள். உண்மையான அர்த்ததத்தைக்கண்டவர்களும் மஹாத்மாக்களுமான எல்லாமுனிவர்களும் ஹரஸ்ஸினை ப்ரூணஹத்தி செய்தவனைச் சொல்லுகிறார்கள். 'அவன் கிருஹத்தில் நாங்கள் போஜனம்செய்யமாட்டோம்' என்று சொலலிவிட்டியதிகளும் சாந்தர்களுமான ரிஷிகள் ஞானத்தினால் ஹரஸ்ஸினை ஆக்ஷேபித்தார்கள். ஓ! ஜாஜலியே! அவ்வாறு பரம்பரையாகவந்த ஆசாரத்துடனிருப்பதால நீர் ஸமர்த்தராயிருந்தும் இப்பொழுது அமங்களமும் கோரமுமான இப்படிப்பட்ட ஆசாரங்களை அறியவில்லை. காரணத்தி

[1] 4'3-ம் பக்கம் குறிப்பிற் காண்க.

ஞல் தர்மத்தைத் தேடவேண்டும். கேவலம் [1]லோகாசாரத்தை ஆசரிக்கக்கூடாது. ஜாஜலியே! எனக்குத் துன்பஞ்செய்கிறவனும் புகழ்கிறவனுமாகிய இருவர்விஷயத்திலும் கேளும். அவர்களிருவரும் எனக்கு ஸமமானவர்களே. எனக்கு விருப்பும் வெறுப்புமில்லை. இப்படிப்பட்ட இந்தத்தர்மத்தைப் புத்திமான்கள் கொண்டாடுகிறார்கள். இந்தத்தர்மம் யுக்திக்குஒத்தது; எப்பொழுதும் தர்மசீலர்களாலும் யதிகளாலும் கூரியபுத்தியால்அறியப்பெற்று அனுஷ்டிக்கப்படுகிறது' என்றுசொன்னன்.

இருநூற்றுபத்தோன்பதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜாஜலிக்கும் துலாதாரனுக்கும் தர்மநிமித்தமாகநடந்த ஸம்பாஷணைத் தொடர்ச்சி.)

ஜாஜலியானவர், 'தராசுபிடிக்கிறவனுடைய உன்னால் கடைத்தப்படுகிறதர்மமானது பிராணிகளுடைய ஸ்வர்க்கமார்க்கத்தையும் ஜீவனவியாபாரத்தையும் தடைசெய்யும். கிருஷிபிழைத்தலன்றே அன்னமுண்டாகிறது? அதனால் நீயும் ஜீவிக்கிறாய். ஓ! வைஶ்யனே! பசுக்களாலும் பயிர்களாலும் மானிடர்கள் ஜீவிக்கிறார்கள். அவைகளால் யாகமும் உண்டாகிறது. நீ நாஸ்திகவாதமேபேசுகிறாய். இந்தஉலகமானது கிருஷி ஒன்றைமட்டும்விட்டாலே ஜீவியாதே' என்றுசொன்னர்.

துலாதாரன், 'ஓ! ஜாஜலியே! (தர்மமான) பிழைப்பைச் சொல்லப்போகிறேன். ஓ! பிராம்மணரே! நான் நாஸ்திகனல்லேன். நான் யாகத்தையும் நிந்திக்கவில்லை. யஜ்ஞத்தைஅறிந்தவனே மிகவும் துர்லபன். பிராம்மணரே! யஜ்ஞத்துக்கு நமஸ்காரம். எந்தஜனங்கள் யஜ்ஞத்தை அறிந்தவர்களோ அவர்களுக்கு நமஸ்காரம். பிராம்மணர்கள் தங்கள்யஜ்ஞத்தைவிட்டு க்ஷத்ரியர்களுடைய யஜ்ஞத்தை அனுஷ்டிக்கிறார்கள். ஓ! பிராம்மணரே! லோபிகளும் பணத்தில் மிகவும் பற்றுள்ளவர்களுமான நாஸ்திகர்களால வேதவாதத்தை அறியாதவர்களுக்குப் பொய்யானது ஸத்யம்போல ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (அறியாதவன்) 'நீ இது கொடுக்கவேண்டும்; இது கொடுக்கவேண்டும்' என்கிறதைத்தவிர வேறொன்றையும் (அவனுக்குச்) செய்யவிரும்புகிறதில்லை. ஆகையால், (கொடாதவிஷயத்தில் பொருளுக்கு)

---

[1] வேறுபாடம்.

திருட்டி ஏறபடுகிறது. ஓ! ஜாஜலீயே! அவனுடையகர்மங்கள மாறு பட்ட கர்மங்களாகின்றன. முறையாகச்செய்யப்படுகிற ஹவிஸ்ஸில் தேவதைகள் ஸந்தோஷிக்கிறார்கள். கமஸ்காரத்தினாலும் ஹவிஸ்ஸி னாலும் வேதாத்யயனத்தினாலும் தானயமுகலானவைகளினாலும் தேவ தைகளுக்குச் சாஸ்திரப்பிரமாணப்படி பூஜையானது ஏறபடும். [1]இஷ் டம் [2]பூர்த்தமென்னும் இவைகளாலும் தீர்மானருக்குத் [3]தீயஸ்கதி உண்டாகிறது. லோபியிடமிருந்து லோபி உண்டாகிறான். ஸமபுத்தி யுள்ளவனிடமிருந்து ஸமபுத்தியுள்ளவன் உண்டாகிறான். யஜமானர் களும் ரித்விக்குக்களும் எப்படித் தக்ஷிணை (தட்சணை) கொடுக்கிறார் களோ) அப்படியே அவர்களின்ஸ்கதிகளும் உண்டாகின்றன ஆகா யத்திலிருந்து சுத்தமானஜலம்உண்டாவதுபோல யஜ்ஞத்திலிருந்து பிரஜை உண்டாகிறது. ஓ! பிராம்மணரே! அக்னியில்போடப்பட்ட ஆஹுதியானது ஆதித்யனை அடைகிறது. ஆதித்யனிடமிருந்து மழைஉண்டாகிறது. மழைபிறகு அன்னம்உண்டாகிறது. அன்னத் திலை பிரஜைகளுண்டாகின்றன. பலனக்கருதாமல யஜ்ஞத்தைச் செய்துவந்த முன்னோர்கள் அத்தயஜ்ஞ நதியால விரும்பியஅனத்தை யும் அடைந்தார்கள். பூமி உழபடாமலேல பலன்தருவதாயிருந்தது. ஆசீர்வாதங்களாலேயே கொடிகள் உண்டாயின. அந்த முன்னோர் கள் யாகங்களிலும் தங்களிடத்திலும் ஒருபயனையும் கினைக்கவில்லை. யாகபலனில ஸந்தேகப்பட்டுகொண்டு யாகஞசெய்பவர்கள் [4]அஸா துக்களும் டம்பமுடையவர்களும் லோபிகளும் தனத்தையே பிரியோ ஜனமாகவுடையவர்களுமாகிறார்கள். வேதப்பிரமாணத்தைத் 'குதர்க் கத்தினால கெடுக்கிறவன் அபபரமுத்தினால பாவிகளுடைய லோகங் களை அடைவான். ஓ! பிராம்மணரே! அவன் இந்தஉலகத் தில் எப்பொழுதும் அறிவிலலாதவனும் கெட்டசிதரமுள்ளவனுமா வான். பிராம்மணனைனவர், 'இது அவசயம் செய்யதக்கது' என்று செய்யவேண்டிய கர்மாவைச் சொல்லுகிறார், அப்படிச்செய் யாவிடில பயத்தை கினைக்கிறான்; உலகத்தில பிரம்மம் ஒன்றேதானிருக் கிறதென்று கினைக்கிறான்; மறறது அவசயம் செயயக்கூடியதென்று கினைக்கிறதிலலை. இப்படிபபட்டவனுடைய குணமிலலாத கர்மாவும் பெரிதென்று கேட்டிருக்கிறோம். இவனிடத்தில எல்லாப்பிராணிக ளுக்கும் உபகாரமும் பயனளிக்கும்புவதில ஸங்கோசமுமிருக்கின்றன. ஸத்யத்தையும் தமத்தையும் யாகமாகவுடையவர்களும் லோபமற்ற

1 யாகம். 2 குளம்வெட்டுவது முதலியன.
3 வேறுபாடும். 4 வேறுபாடும்.

வர்களும் ஆக்மயாலமுளளவர்களும் அந்தஸமயத்திற்கு வேண்டியதுபோக 1நிச்சதகைகளிலிருந்து கிறபாகுதாயிருக்கிற ஸகலஜனங்களும் மந்ஸரமில்லாதவர்களாவார்கள். சரீரம் ஆகமா இவற்றின் தத்வத்தை அறிந்தவர்களும் தமக்குரிய யஜ்ஞநதில நிஷ்டையுள்ளவர்களும் பிரம்மத்தைச்சேர்ந்த வேதத்தை (பிரணவதத்தை) ஜீபிக்கிறவர்களுமாயிருக்கிறவர்கள் மற்றவர்களையும் ஸந்தோஷிக்கச்செய்வார்கள். அந்தப்பிரணவம் ஸகலதேவதைகளின் ஸ்வரூபமும் பராபரங்களான ஸகலப் பிரம்மஸ்வரூபமும் பிரம்மதத்தப்பதார்த்தியுமாயிருக்கிறது. ஓ! ஜாஜலியே! அந்தப்பிரணவதத்தை உபாஸிக்கிறவன் திருப்தியை அடைகிறபோது தேவர்கள் திருப்தியை அடைகிறார்கள்; 2 ஸகல ரஸங்களாலும் திருப்தியடைந்தவன் பின்பு ஒன்றையும் விரும்பான். ப்ரம்மஜ்ஞானதத்தில தேருப்தியடைந்தவனுக்கு ஸுகத்தைக்கொடுக்கின்ற நித்யதிருப்தியான துஷ்டாகிறது. ஆகையால், அவன் அதைத்தவிர வேறு ஒன்றையும் விரும்பான். தர்மதத்தை ஆதாரமாகவுடையவர்கள் தர்மதாஷ்டான ஸுகத்தையுடையவர்களும் அப்படியே கலாமுயற்சியையுமுடையவர்களுமாயிருக்கிறார்கள். விவேகியானவன், 'உண்மையில் நமக்கு இதறகு மேலானது ஒன்று இருக்கின்றது' என்று நினைக்கிறான். சாஸ்திரஜ்ஞானமும் அனுபவமுமுடைய சிலர் மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கின்றதும் பரிசுத்தமுள்ளதும் பரிசுத்தர்களான பெரியோர்களுடைய பரம்பரையில வைக்கப்பட்டதுமான (ஸம்ஸாரஸமுத்திரத்தின்) அக்கரையை அடையவிரும்புகிறார்கள். அந்தஸாத்விகர்களோ வெனறால் எதில்சென்று சோகத்தை அடைகிறதில்லையோ, (மறுபடி) நழுவுகிறதில்லையோ, வருத்தத்தை அடைகிறதில்லையோ அப்படிப்பட்ட பிரம்மத்தின் பதத்தை இவ்வுலகிலேயே அடைகிறார்கள். அவர்கள் ஸ்வர்க்கத்தை விரும்புகிறதேயில்லை; அதற்காக யாகம் செய்கிறதுமில்லை. பிரம்மத்தையே பொருளாகக்கொண்டு இயன்றமட்டும் ஹிம்ஸையின்றி ஸத்துக்களுடைய மார்க்கத்தையே தொடருகிறார்கள். அவர்கள் விருக்ஷங்களையும் ஓஷதிகளையும் கனிகிழங்குகளையும் அறிகிறார்கள். லோபங்களும் பயனை விரும்புகிறவாகளுமான நிந்திக்குக்கள் இவர்களுக்கு யாகஞ்செய்விக்கிறதில்லை. காமதத்தின் முடிவையடைந்த அந்தப்ப ப்ரம்மனாகள் ப்ரஜைகளை அனுக்கிய

1 'உதபகதயாகிறம்' என்பது மூலம். 'உளளதைகொடுப்பவர்' எனறும் சொலலலாம்.

2 இரண்டுசொற்கள் விடபபட்டன.

கிப்பதில் விருப்பத்தால் தம்மையே திரவியமாகச்செய்துகொண்டி யாகத்தைச் செய்கிறார்கள். ஆகையால், லோபிகளான ரித்விக்குக்கள் ஆசைகொண்ட அவ்விதமனிதர்களுக்கு யாகஞ்செய்விக்கிறார்கள் ஓ! ஜாஜலியே! '(ஸாதுக்கள்) தம்தர்மத்தைச் செய்வதனாலேயே பிரஜாபதிலோகத்தை ஸ்வர்க்கத்தை அடைவிக்கிறார்கள்' என்கிற என்னுடைய புத்தி எல்லாருடைய விஷயங்களிலும் ஸமமாகவிருக்கிறது. ஓ! மஹாமுனிவரே! மனத்தைவசம்செய்த பண்டிதர்கள் எப்பொழுதும் யஜ்ஞத்திலேயிருக்கிற காரணத்தினால் தேவயானமென்கிற மார்க்கத் தினால போகிறார்கள். ஓ! ஜாஜலியே! உள்ளபடியே இருவரும் தேவயானமென்னும் மார்க்கத்தால போகிறார்கள். அவர்களில் ஒரு வனுக்குத் திரும்பிவருவதுண்டு. மனத்தை அடக்கினவனுக்குத் திரும்பி வருதலில்லை. இவர்களுக்கு மனத்தின் ஸங்கற்ப விருத்தி களால் எருதுகள் தாமாகவே வந்துசேருகின்றன; வஸிக்கவும் செய் கின்றன; பசுக்களும் தாமாகவே கறக்கின்றன. அவர்கள் தாங் களே சங்கற்பத்தினால் யூபங்களைப்பெற்று எளிதிலடையப்பட்ட தக்ஷிணையுடன் யாகஞ்செய்கிறார்கள். அவ்வாறு ஆதமத்யானத்தோ டிருப்பவன் கோவை ஆலம்பனம்செய்யத் தருதியுள்ளவன். பிராம் மணரே! ஆனாலும், அவர்கள் தானியங்களால் யாகஞ்செய்வார்கள். அப்படிப்பட்டவர்கள் ஸ்ரத்தையுடன் கோவைக்கட்டி யாகஞ்செய்ய மாட்டார்கள். அந்த உண்மையை உனக்குச் சொல்லுகிறேன். ஒன் றையும் பிரார்த்தியாதவனும் ஒன்றையும் ஆரம்பியாதவனும் ஒருவ ரையும் நமஸ்கரியாதவனும் துதியாதவனும் குறைவற்றவனும் கர் மம் நசித்தவனுமான அவனைத் தேவர்கள் பிராம்மணனாக நினைக்கிறார் கள். ஓ! ஜாஜலியே! அத்யயனம் செய்யாமலும் யாகஞ்செய்யாமலும் பிராம்மணனிடத்தில் தானஞ்செய்யாமலும் காம்யவிருத்தியையடைய விரும்புகிறவன் என்னகதியடைகிறான்? இந்தத் தெய்வயஜ்ஞத் தைச்செய்கிறவனேயென்றால் யஜ்ஞத்திற்குத்தக்கபடி பயனை அடை வான்' என்று சொன்னான். ஜாஜலி, 'ஓ! வைச்ய! முனிகளுடைய தத்வத்தை நாம் கேட்டதில்லை. ஆகையால், இந்தக்கஷ்டமானவிஷ யத்தைஉன்னிடங்கேட்கிறேன். முன்முன்னுள்ளவர்கள் ஆத்மலாபத் துக்குரியதும் பசுக்கள் துன்பத்தை அடையாததுமான இந்தத்தர்மத் தைக் கவனித்ததில்லை. அப்படி கவனித்தவர்களும் இந்தக்கர்மாவுக்கு மேலான அந்தயோகதர்மத்தை நடக்கும்படி செய்யவுமில்லை. இவ் விதமிருந்தால் ஆதமாவாகிற பூமியில செய்யப்படும்யாகத்தை அறி வீனர்கள் செயயமாட்டார்கள். அப்படியிருந்தால் எந்தக்கர்மாவினால்

ஸுகத்தை அடைவான்? ஓ! மகாபுத்திசாலியே! அதைச் சொல். உன்னுடையவார்த்தையை நான் மிகவும் நம்புகிறேன்' என்றுசொன்னார். துலாதாரன், 'யஜ்ஞங்களாலுமும் யஜ்ஞங்களல்லாவிட்டாலும் பசுக்கள் ஒன்றிலும் ஹிம்ஸைக்குரியவைகளில்லை. கோவானது நெய்யினாலும் பாலினாலும் தயிரினாலும் ஏட்டினாலும் தோலினாலும் வாலினாலும் கொம்பினாலும் பாகத்தினாலும் உபகரிக்கிறது. யாகத்தை நிறைவேறறவேசெய்கிறது. (அவைகளை யாகத்தில்) உபயோகித்துப் பத்னீவிரதத்துடன் விதியோடு நன்குசெய்கிறவன் இந்தக்கர்மயாகத்தைச்செய்து அதற்குரியபயனை அடைவான். புரோடாசயாகமானது ஸகலபசுயாகங்களுக்கும் மேலானபரிசுத்தமாகச் சொல்லப்படுகிறது. எல்லாகதிகளும் (யாகத்திற்குரிய) ஸ்ரஸ்வதிநதிகளாகின்றன. எல்லா மலைகளும் பரிசுத்தமே. ஓ! ஜாஜலியே! [1]ஆத்மாவே யாகபூமி. இடத்தைத் தேடவேண்டாம். ஓ! ஜாஜலியே! இப்படிப்பட்ட இந்தத்தர்மங்களை இம்மையில்அனுஷ்டிக்கிறவனும் காரணங்களினால தர்மத்தைத்தேடுகிறவனுமாயிருப்பவன் சுபமானலோகங்களை அடைகிறான்' என்றான். காரணங்களோடுகூடினவையும் எப்போதும் பெரியோர்களால ஸேவிக்கப்பட்டவையுமான இந்தத்தர்மங்களைத் துலாதாரன் பலாகித்தான்.

இருநூற்றெழுபதாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜாஜலிக்கும் துலாதாரனுக்கும் தர்மநிமித்தமாகநடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

துலாதாரன், 'கல்லஸாதனங்களினாலேயோ கெட்டஸாதனங்களினாலேயோ இந்தமார்க்கத்தை அடைந்திருக்கிறீர். (அவ்விஷயத்தில்) அனுபவஞானத்தை உண்மைபண்ணிக்கொள்ளும். பிறகு, அது இவ்விதமென்பதை அறிவீர். உம்முடைய தலையிலுண்டான பருந்துகளும் இதரஜாதிகளுமாகிற பலவிதமான இந்தப்பக்ஷிகள் எங்கும் ஸஞ்சரிக்கின்றனவல்லவா? ப்ராம்மணோத்தமரே! அங்கங்கு குடிகொண்டிருக்கிற இந்தப்பக்ஷிகளை அழைத்துப் பாரும். உம்முடையசரீரத்தில் எங்கும் கைகளாலும் கால்களாலும் பற்றிக்கொண்டிருந்தஇவைகளை யோசியும். உம்மால் பரிபாலிக்கப்பட்டபக்ஷிகள் உம்மைத் தந்தையாகநினைக்கின்றன. ஓ! ஜாஜலியே! பிதாவான

---

1 வேறுபாடம்.

நீர் குழந்தைகளான இவைகளைச் சாந்தோகமின்றி அழையும்' என்று சொன்னான். உடனே அந்தஜாஜலி தர்மநிஷ்ட அந்தப்பக்ஷிகளை அழைத்து, (அவை) தர்மதத்துவத்தறிய வார்த்தைகளால் மதுமொழி சொல்லின. துலாதாரன், 'ஓ! பிராம்மணனே! கொலையானமுத லான்வைகளை இம்சைசெய்யும் மனுஷரும் மோக்ஷமானசர்மம். கொலை யானது ப்ராணிகளைக் கெடுக்கும். அது கெட்டால் அந்தமனித னைக்கெடுக்கும். (மாமிசபக்ஷணம்) மைமதனவர்களும் ப்ரத்தை யுடையவர்களும், நடைகளினவர்களும் சாந்துபுடையவர்களும், 'இது வித்' என்று யாகதானஞ்செய்கிறவர்களுமாயிருப்பவர்களுடைய யஜ் ஞம் ஒருகாலும் அதர்கிகரிக்கப்படாமல் போவதில்லை. ஓ! பிராம் மணரே! ப்ராணிகளையெல்லாம்ரக்ஷிப்பதுவுண்மைள்ளவனும் ஸோம னுடையப்ரியமான தேவதை. ப்ராணியானது ஹிம்ஸை, வாக்கு, மனம்இவ்வைகளை உண்டுபண்ணுகிறது; பரிபாலனமும்செய்கிறது. ஆகையால், வாக்கிலுண்டானமனத்தினுற்பத்தியுமனத்தாலுண்டான தேவதாஸ்தியானதையும் ப்ராணியானது காக்கிறது. ஓ! ஜாஜலியே! ப்ராணிக்குறைவினாலுண்டானதை வாக்கும் மனமும் யஜ்ஞமும் தாங்கிதரத்தக்கவைகளல்ல. இத்தலிஷயத்தில் பூமையை அறிந்தபெரியோர்கள் பிராம்மாவினுலெசொல்லப்பட்ட ஸ்லோகங்களைச் சொல்லுகிறார்கள். (அவற்றின்பொருள்,) ப்ராணியிலலாமல் சுத்தனு யிருப்பவனுடையபொருளையும் சுத்தமில்லாமல் ப்ராணியுள்ளவனு டையபொருளையும் தேவர்கள் மெச்சுகிறதில்லை. சுத்தனுனவோபியினுடையஅன்னத்தையும் வேட்டியினுலீவிப்பவனுடைதாதாவி னுடைய அன்னத்தையும் தேவர்கள் அசாரித்து நிராகரித்தையும் மை மாகச்செய்தார்கள். அந்தத்தேவர்களை நோக்கிப் பிரம்மதேவர், 'நீங் கள் விபரீதமாகசெய்தீர்கள்' என்றுசொன்னார். தாதாவினுடைய அன்னம் ப்ராணியிலைபரிசுத்தம். க்ருபணனுடையஅன்னம் அப்ர தத்தையினுல தெடுக்கப்பட்டிருக்கிறது. வேட்டியினுல் ஜீவிக்கின்ற தாதாவினுடையஅன்னம் புசிக்கத்தக்கது; வேடியினுடைய அன் னம் புசிக்கத்தகாதது. ப்ராணியிலாதவன் ஒருவனை தேவர்க ளுக்கு ஹவிஸைக்கொடுக்கத் தகுதியிலாதவன். அவனுடையஅன் னத்தான் புஜிக்கத்தக்கதல்லவென்று தர்மத்தையறிந்தவர்கள் நினைக் கிறார்கள். அப்ரதத்தையானது கொடியபாவம். ப்ரதத்தையானது பாவத்தினின்றும் விடுவிக்கிறது. ப்ரத்தையுள்ளபருஷன், ஸர்ப்ப மானது ஜீர்ணமானதோலைவிடுவதுபோலப் பாவத்தை விடுகிறான். ப்ரதரதையுடன்கூடின தோஷவிருத்தியானது பரிசுத்தம்செய்கிற கர்

மங்களருக்கெல்லாம் மேலானது எவன் ஆசாரதோஷமில்லாமல் ப்ர த்தையுடனிருக்கிறானோ அவன் பரிசுத்தனே. அவனுக்குத் தவத் தால்செய்யக்கூடியது என்னமிருக்கிறது? அவனுக்குத்திருஷ்டமான என்ன? ஆத்மாவினால்தான் என்ன? இந்தப்புருஷன் ப்ரத்தையை யே உருவமாகவுடையவன். எவன் சுத்தப்ரத்தையோடிருக்கிறானோ அவன் தன்மயமாயுள்ளவன். இவ்விதம் தர்மமானது தர்மார்த்தங் களைக்கண்ட பெரியோர்களால் கண்முதற் சொல்லப்பட்டிருக்கிறது. நாங்கள் தர்மத்தையறியவிரும்பினதுபற்றி தர்மதர்சனர்என்கிற முனிவ ரிடமிருந்து தர்மத்தை அறிந்துகொண்டோம். ஓ! அறிவிற்சிறந்த வரே! ப்ரத்தையையைக்கடைவீர். அதனால எதுபரமோ அதை அடைவீர்" என்றுசொல்ல, ஜாஜலி, 'வைப்யரே! நாங்கள் முனிவர்க ளுடைய இதுவரைதைத் கேட்டதில்லை. இத்தத்துவத்தை மறுமிடம் கேட்கிறேன். முன்னேமுன்னேயுள்ளவர்கள் இதைக் கவனிக்க வில்லை. (கவனிதாலும்) அந்தமுனிவர்கள் மேலான இந்த விஷய த்தை ஸ்தாபனஞ செய்யவில்லை. ஓ! ரியாபாரிய! பசுக்கள் ஸாதன மான (பாலமுதலிய) பரிசுத்த வஸ்துக்களைக்கொடுத்து ஸுகத்தை அடையும். தர்மதத்தில் ஸுவைகளை உபதேயாப்பதி கதுகிறவன் பத்தி யின் விரதத்தோடு விழுப்படி தர்மதலைத்தச் செய்திருன். ப்ரத்தை யுடையவனும் ப்ரத்தையுடன் அஜஞ்டிக்கிறவனுமான அவன் தர் மாத்மாவல்லவோ?' என்று கேட்க, துலாதாரன், 'ஓ! ஜாஜலிரிய! நீ ஸுவை யை மயர்க்குதலில் நிருக்கவேண்டாம் பெரியவர்களுடன்' என்றுசொன் னான். பிறகு, ஸ்வஸ்பகாலத்தில் மஹரிஷிகளான அங்க ஜாஜலியும் துலாதாரனும் விவர்க்கத்தை அடைந்து தங்கள் கர்ம பலதிலால் உண்டுபண்ணப்பட்ட தகுதகள் தகுதள் ஸ்தானத்தை அடைந்து ஸுகமாகக் கனித்தனர்கள். இவ்விதம் துலாதாரனால் பலவிதமான தர்மதத்துவன் சொல்லப்பட்டது; ஆவ், பிறகு கண்ட நிருத்திக்கவும்பட்டது; பரமையான தர்மமும் சொலலப்பட்டது. ஓ! ருதபீபுத்திரா! பிரஹித்தமான வீர்யத்தையுடைய அகஸ்த துலாதார னுடைய வாக்கியங்களை ஜாஜலியானவர் ப்ரத்யக்ஷமாகவே அடைந்தார். [1]இவ்விதம் துலாதாரனால் சொல்லப்பட்டதும் ஓப்புக் கொள்ளப்பட்டதுமான தர்மமும் நிருஷ்டமாகத் உபதேசத்துடனும் உள்ளபடி சொலலப்பட்டது. மறுபடியும் எதைக்கேட்க விரும்பு கிறாய்?" என்று சொன்னார்.

---

[1] கூறியது கூடலால், அதிகபாடமான ஒரு ச்லோகம் விடப்பட்டது.

இருநூற்றெழுபத்தோராவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கொலையையும் சாத்துக்கு வாட்டத்தையும் செய்யாமல் தர்மத்தைச் செய்யவேண்டுமென்பது.)

யுதிஷ்டிரர், "ஒருவிதமான ஹிம்ஸையையுஞ் செய்யாதவர்கள் தம் [1]சரீரத்தையும் ஆபத்துக்களையும் அறிகிறதில்லை. தொழில் இல்லாதவனுக்குச் சரீரயாத்திரை எவ்விதம் நடக்கும்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"சரீரம் வாடாமலும் மிருத்யுவுக்கு வசப்படாமலுமிருக்கும்படி கர்மத்தில் பிரவிருத்திக்கவேண்டும். செய்யும் முறையை அறிந்து தர்மத்தை ஆசரிக்கவேண்டும் இந்த விஷயத்திலும் [2]விசக்யுவென்ற அரசனும் பிராணிகளிடத்தில் தயையினை சொல்லப்பட்ட புராதனமான இதிஹாஸமொன்று சொல்லுகிறார்கள். அந்த அரசன் யஜ்ஞசாலையில் யூபத்தை மூடிகதுக்கொண்டு நிற்க, ரம் விருஷபத்தையும் தொழுவத்தில் (துன்பத்தையடைகையில்) விருஷபங்களுடைய மிகுதியான சப்தத்தையும் பார்த்து, 'கோக்களுக்கு க்ஷேமமுண்டாகவேண்டும்' என்று பிரார்த்தித்தான். அது உலகங்களில் நிலையான வார்த்தையாகிவிட்டது. கோஹிம்ஸை நடத்துகொண்டிருந்தபடியால் இது ஆசீர்வாதமாகக் கற்பிக்கப்பட்டது. வரைகடந்தவர்களும் மிசவும் மூடர்களும் பிரம்மமில்லையென்கிறவர்களும் ஆத்மாவில் சந்தேகமுள்ளவர்களும் பிராணிஹிம்ஸையுள்ள கர்மத்திலேயே புகழைவிரும்புகிறவர்களுமான மனிதர்களால (யாகத்தில்) ஹிம்ஸையானது பெரிதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தர்மாத்மாவான மனு ஸகல கர்மங்களிலும் அஹிம்ஸையையே சொன்னார். தங்கள் இஷ்டப்படி நடக்கிற மனிதர்கள் யாகமில்லாமலும் பசுக்களை வதைக்கிறார்கள். ஆகையால், கெடுகிறதவன் பிரமாணத்தைக்கொண்டு ஸூக்ஷ்மமான தர்மத்தைச் செய்யவேண்டும். (பிரமாணத்தில்) ஸகல தர்மங்களிலும் கொல்லாமையே பெரிதாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகையால், ஸன்யாஸத்துடன் கிராமமதீபத்தில வஸித்துக்கொண்டு உறுதியான நியமத்துடன் கர்மகாண்டத்தில சொல்லப்பட்ட ஹிம்ஸையைத்தள்ளிவிட்டு,'இது ஆசாரம்' என்று ஆசரியாமல்

---

1 'பிறவியையும் துன்பங்களையும் அடையமாட்டார்கள்' என்பது.

2 'விசக்து' என்பது 'வேறுபாடம்.

இருக்கவேண்டும். 'கர்மபலத்தில் விருப்பமுள்ளவர்கள் அற்பர்கள். மனுஷ்யர்கள் யூபங்களுக்காக விருக்ஷங்களை வெட்டுகிறார்கள்; வீணை மாம்ஸங்களைப் பக்ஷிக்கிறார்கள். ஆனல், இந்தத்தர்மம் புக முப்படுகிறதில்லை. தூர்த்தர்களால் கள், மீன், தேன், மாம்ஸம், ஆஸவம் (சாராயம்,) நிலான்னம் இவை (மூதலானவை) உண்ணப் படுகின்றன. இவைகள் வேதங்களில சொல்லப்படவில்லை. காமத் தினலும் லோபத்தினலும் மோகத்தினலும் இவைகளில் விருப்பம் வைக்கப்படுகிறது. பிராம்மணர்கள் எல்லாயாகங்களிலும் [1]விஷ்ணு பகரான பரமாத்மாவே பூஜிக்கத்தக்கவரென்று சொல்லுகிறார்கள். பாயஸங்களாலும் புஷ்பங்களாலுமே அவருடையபூஜை சொல்லப் படுகிறது. வேதத்தில் சொல்லப்பட்ட விருக்ஷங்களும், யாகத்துக்கு உரியவையென்று சொல்லப்பட்ட விருக்ஷங்களும், சிறந்தபலமூள வைகளும் சுத்தியுள்ளவைகளுமான [2]விருஷபங்களால் செய்யவேண் டிய மற்றஎல்லாச்செய்கைகளும் தேவபூஜைக்குரியவையே. (ஆகை யால், ஹிம்ஸையில்லாமல் தேவரைப் பூஜிக்கவேண்டும்)'' என்று சொன்னர். தர்மபுத்திரர், ''ஹிம்ஸைசெய்யாமலிருக்கிறவனுடைய சரீரமும் ஆபத்துக்களும் விவாதிக்கின்றன. ப்ரவ்ருத்தியே இலலாத வனுக்குச் சரீரயாத்ரை எவ்விதம்நடக்கும்?'' என்றுகேட்க, பீஷ் மர், '' சரீரம்வாடாமலும் மரணத்தை அடையாமலும் இருக்கும்படி யான தொழில்களில் இருக்கவேண்டும். செய்யவேண்டிய முறையை அறிந்து தர்மத்தை ஆசரிக்கவேண்டும்'' என்றுசொன்னர்.

இருநூற்றெழுபத்திரண்டாவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(காரியத்தை ஆராய்ந்துசெய்யும் விஷயத்தில் உதாரணமான சிரகாரியின் கதை.)

தர்மபுத்திரர், '' காரியத்தை விரைவாகவோ தாமஸமாகவோ எப்படி பரீக்ஷிக்கவேண்டும்? எலலாவிதத்தினலும் நிச்சயிக்கமுடி யாத இந்தக்கார்யத்தில் எங்களுக்கு நீரே உத்தமமான குரு'' என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

'' இந்தவிஷயத்திலும் (பண்டிதர்கள்) அங்கிரஸகுலத்தினுதித்த சிரகாரியினுடைய பூர்வசரித்திரமாகிய பழைய இதிஹாஸத்தைச்

1 'விஷ்ணுமேவ' என்பது மூலம். 2 'உக்ஷன்' என்பது மூலம்.

சொல்லுகிறார்கள். கௌதமருக்கு அனேகம் புத்திரர்களுண்டானார்கள். அவர்களனைவருள்ளும் இளையவரானபுத்திர சிரகாரியென்பவர். [1] ஓ! சிரகாரியே! உமக்கு மங்களமுண்டாகக்கடவது. ஓ! சிரகாரியே! உமக்கு மங்களமுண்டாகக்கடவது. மேதாவியான சிரகாரியானவர் கர்மங்களில் குறைத்தைச் செய்கிறதில்லை. அறிவிறசிறந்த அந்தச்சிரகாரி கௌதமருடையபுத்ரர். அவர் ஸகலகாரியங்களையும் நெடுங்காலம் நன்முகஆலோசித்துத் தொடங்குவார்; விஷயங்களை நெடுநேரம் யோசிப்பார்; நெடுநேரம் தூங்காமலிருப்பார்; அப்படியே நித்ரைசெய்வார்; நெடுங்காலம் காரியத்தைச் செய்து கொண்டிருப்பார், அதனால அவர் சிரகாரியென்று சொல்லப்படுகிறார். அதனால் அவர், தீர்க்காலோசனையில்லாத புகழ்க்குறைவுள்ள ஜனங்களால் சோம்பேறித்தனத்தை யடைந்தவரென்றும் தூர்ப்புத்திக்காரரென்றும் சொல்லப்படுகிறார். அப்படியிருக்க, ஒருஸமயம் மாதாவான (அதனல்யைக்கு) வியபிசாரமேற்பட்டபொழுது கோபமடைந்த அவர்பிதா மற்றப்புத்திரர்களைவிட்டுச் சிரகாரியைப்பார்த்து, 'உன் தாயைக் கொல்' என்றுசொன்னர். ஜிதேந்திரவர்களுள் ஸ்ரேஷ்டரும் மஹாபாக்கியவானுமான கௌதமரென்னும்பிராம்மணர் இவ்விதஞ் சொல்லிவிட்டு ஆலோசியாமல் உடனே வனத்திற்குச் சென்றார். ஸ்வபாவத்தினாலேயே சிரகாரியான அந்தப்புத்திரர் வெகுகாலம் தாமதித்து, 'அப்படியே யாகட்டும்' என்று சொல்லிவிட்டுச் சிரகாரியான படியால் நெடுங்காலம் ஊன்றி ஆலோசிக்கலானர்.

'பிதாவின் கட்டளையை எப்படி நான் செய்வேன்? மாதாவை எப்படிக் கொல்லாமலும்இருப்பேன்? தூஜனனைப்போல இந்தத தர்மஸங்கடத்தில் எப்படி முழுகாமலிருப்பேன்? பிதாவின்கட்டளையோ பெரியதர்மம். மாதாவைக்காப்பது ஸ்வதர்மம். ஆனல், தாய்தந்தையர்களுக்கதீனமான புத்ரததன்மையானது என்னை விட்டு நீங்காமலிருக்கவேண்டும். ஸ்திரீமாத்ரமன்றித் தாயுமானவளைக்கொன்றுவிட்டு எவன்தான் ஒருபோதாவது நன்மையடைவான்? பிதாவைஅவமதித்து எவன் புகழை அடைவான்? பிதாவை அவமதியாமலிருப்பதுஉசிதம்.மாதாவைரக்ஷிப்பதுஸ்வதர்மம்.உசிதமும்செய்யத்தக்கதுமான இவ்விரண்டுதர்மங்களையும் எப்படி சிறிதும் விடாமலிருப்பேன்? பிதாவானவன் தன்னுடையசீலம் ஆசாரம் [2]கோத்ரம்

---

1 ஆதாவினுல பீஷ்மர் கதையின்தொடக்கத்தில சிரகாரியைப்புகழ்ந்து அவருக்கு மங்களத்தைப பிராத்திக்கிறார்.

2 'பெயர்' என்பது பழையவுரை.

குலம் இவைகளைத்தரிப்பதற்காகத் தன்ஆத்மாவை மனைவியினிடம் வைக்கிறான். அப்படிப்பட்டகாண்மாதாவும்பிதாவுமாகிய புத்திரனைச் செய்யப்பட்டிருக்கிறேன். ஆகையால், எனக்கு விசாரமானது ஏன் ஏறபடாது? இருவரையும் சரீரத்திற்குக் காரணமாக நினைக்கிறேன். ஜாதகர்மத்திலும் [1]உபகர்மதத்திலும் பிதா சொல்லுகிறது பிதாவினுடைய கௌரவத்தை நிச்சயிக்கிற விஷயத்தில் போதுமான பலமாயிருக்கிறது. சரீரத்தைப் போஷித்து ரக்ஷிக்கிறதை ஒதுவிப்பதால் பிதாவானவர் சிறந்தகுரு; அவரே மேலான தர்மம். பிதாசொல்லுகிறதே வேதங்களிலும் நிச்சயிக்கப்பட்ட கர்மமாயிருக்கிறது. புத்ரன் பிதாவின் அன்பிற்குரியவனாயிருக்கிறான். பிதாவோ புத்திரனுக்கு எல்லாமாயிருக்கிறார். பிதாவருவரே சரீரமுதலான தானஞ்செய்யக்கூடிய எல்லாப்பொருள்களையும் கொடுக்கிறார். ஆகையால், பிதாவினுடையவசனம் (அவஸ்யம்) செய்யத்தக்கது; ஒரு போதும் விசாரிக்கத்தக்கதில்லை. பிதாவின்கட்டளையைச் செய்கிறவனுடைய பாதகமானகாரியங்களுங்கூடப் பரிசுத்தமான காரியங்களாகின்றன. பாக்கியத்தின் அனுபவத்திலும் யாகத்திலும் ஸகலமான உலகவியவஹாரத்திலும் [2]கர்ப்பாதானம் சீமந்தோன்னயனமுதலான வற்றிலும் பிதாவே தர்மம்; பிதாவே ஸ்வர்க்கம்; பிதாவன்றோ மேலானதவம்? பிதா ப்ரீதியடைந்தால எல்லாத்தேவதைகளும் ப்ரீதியடைகிறார்கள். பிதா புத்திரனைக்குறித்துச்சொலலுகிற ஆசீர்வாதங்களெல்லாம் அவனை அடைகின்றன. பிதா ஸந்தோஷப்பட்டே புத்ரனுடைய எல்லாப்பாவங்களுக்கும் பிராயச்சித்தம்.புஷ்பமானது காம்பிலிருந்து உதிர்கிறது. பழமானது மரத்திலிருந்து உதிர்கிறது. புத்திரஸ்நேஹத்தினால, க்லேசத்தைஅடைந்தாலும் பிதா புத்ரனை விடுகிறதில்லை. புத்திரனுக்குப் பிதாவினிடத்திலுள்ள இத்தக்கௌரவமானது ஆலோசிக்கப்பட்டது. பிதா அற்பமான ஸ்தானமில்லை. இனி மாதாவைப்பறறிச் சிந்திப்பேன். நான் மனிதத்தன்மையை அடைகையிலுண்டான பஞ்சபூதவிகாரமானகூட்டத்துக்கு (சரீரத்துக்கு) என்னுடைய மாதா அக்னிக்குஅரணிபோலக் காரணமானவள். தாய், ஜனங்களுடையதேகத்திறகு அரணிபோன்றவள். துன்பம்அடைந்த ஸகலப்பிராணிகளுக்கும் மாதா ஸுககாரணம். மாதாவிருந்தால் புத்திரன் [3]ஸுகாதன்; இலலாவிட்டால அகாதன். தன

1 'உபகர்மத்திறகுள் தகுதை தேசாந்தரம போயிருந்து திரும்பினதால புத்ரனுடைய தலையைபபிடித்துக்கொண்டு முபபது' எனபது பழைய உரை.

2 வேறுபாடம். 3 காபபவரையுடையவன்.

மில்லாதவனுனும், 'அம்மா!' என்று அழைத்துக்கொண்டு வீட்டினுள்புகுகிறவன் துன்பத்தை அடைகிறதில்லை. கிழத்தனம் அவனுக்குக் குறைவைச்செய்யாது. மாதாவை அடித்திருக்கிற அவன் புத்திரபௌத்திரர்களுடனிருந்தாலும் நூறுபிராயம் நிரம்பியிருந்தாலும் இரண்டுபிராயக்குழந்தை போன்றவனே. ஸமர்த்தனுனும் ஸாமர்த்தியமிலலாதவனுனும் இளைத்தவனுனும் பருத்தவனுனும் (எப்படியிருந்தாலும்) மாதா புத்திரனை ரக்ஷிக்கிறாள். தாயைத் தவிர மற்றவர்கள் முறைப்படி போஷிக்கமாட்டார்கள். எப்போது மாதாவின் வியோகம் உண்டாகிறதோ அப்பொழுதுதான் புத்ரன் கிழவனுகிறான்; அப்பொழுது துக்கத்தையடைந்தவனுகிறான். அப்பொழுது அவனுக்கு உலகம் (எல்லாம்) சூன்யமாகிறது. மாதாவுக்குச்சமமான நிழலுமில்லை. மாதாவுக்குச்சமமான கதியுமில்லை. மாதாவுக்குச்சமமான ரக்ஷகமுமில்லை. மாதாவுக்குச்சமமான அன்புக்குரியவருமிலை. மாதாவானவள் குக்ஷியில்தரித்ததால், 'தாத்ரீ' என்றும், ஈன்றதால், 'ஜநநீ' என்றும், அங்கங்களை விருத்திசெய்ததால், 'அம்பா' என்றும், [1]வீரனைப்பெறறதால், 'வீரஸூ' என்றும், சிசுவுக்குச் சுச்ரூஷைசெய்வதால, 'சுச்ரூ' என்றும் சொல்லப்படுகிறாள். மாதாவானவள் புத்திரனுடைய மறுரூபதேகம். (கண் முதலிய) துவாரங்களுள்ள தலையையுடையவனும் அறிவுள்ளவனுமான எவன் மாதாவைக்கொல்லுவான்? தம்பதிகளுடைய வீரியஸம்பந்தத்தில் (புத்ரனுண்டாகவேண்டுமென்கிற) விருப்பம் மாதாவுக்கும் பிதாவுக்கும் ஸமம். ஆனல, உண்மையான அர்த்தமானது மாதாவினிடத்திலிருக்கிறது, புத்திரனுடையகோத்ரத்தைத் தாய் அறிகிறாள். அவன் யாருடையவனென்று அவளை மாதாஅறிகிறாள். மாதாவுக்குத் தான்சம்பந்தமுள்ளவளேயே சந்தோஷமும் ஸ்நேகமும் உண்டாயிருக்கின்றன. குழந்தைகள் பிதாவினுடையவைகள். புருஷர்கள் ஸ்திரீகளைத் தாமாகவேபாணிக்கிரகணம்செய்து கூடவேதர்மத்தையும் அனுஷ்டிக்கையில் வேறுஸ்திரீகளை அடைந்தால் அப்போதும் அவர்கள் [2]விடத்தக்கவர்களில்லை. ஸ்திரீயைப்பரிப்பதால் (போஷிப்பதால்) அன்றோ பர்த்தா? அப்படியேபாலனத்தினுல் (காப்பதனுல்) அன்றோ பதி? அந்தத்தர்மங்களில்லாவிட்டால் பர்த்தாவுமல்லன்; பதியுமல்லனே. இப்படியிருக்கையில் ஸ்திரீயானவள் குற்றமுடையவளாகிறதில்லை. புருஷன்தான் குற்றமுள்ளவனுகிறான். (பரதாரகமன

1 ஆண்குழந்தை.

2 'பூஜிகத்தக்கவர்களில்லை' என்பது வேறுபாடம்.

ரூபமான) கொடியபாவத்தைச்செய்கிறபுருஷனுக்கே தோஷம் மிகு தியாயுள்ளது. ஸ்திரீக்கோ பர்த்தாவே சிறந்தவன். அவனே பரம தெய்வமாக நினைக்கப்படுகிறான். அவனுடையரூபத்திறகு மிகவும்ஸம மானரூபத்தைக்கொண்டவனுக்குத் தன்னைக் கொடுத்தாள். ஆகை யால், ஸ்திரீகளுக்குக் குற்றமில்லை. புருஷனே அபராதியாகிறான். ஸகலகாரியங்களிலும் பராதீனைகளாதலால் ஸ்திரீகள் அபராதமுள்ள வர்களல்லர். ஸ்திரீயினுலே இன்பவிருத்திக்காகக் கேட்கப்பட்டவரத தை நினைப்பித்தஇந்திரனுக்கே அதர்மம் நிச்சயம். சந்தேகமில்லை. இவ்விதம் அதிகமான கௌரவத்திலிருக்கிறஸ்திரீகளை அவர்களிலும் மாதாவை வதம்செய்யக்கூடாதென்று விதிவிலக்குக்களிலலாத பசுக் களும்அறியும். பிதாவை ஒன்றுகச்சேர்ந்த தேவதைகளுடைய ஸமூ கமாகநினைக்கிறார்கள். (புத்திரன்) மாதாவை மனிதர்கள் தேவதை கள்ஆகிய இருவரிடத்திலுள்ள ஸ்னேகத்தோடு அடைகிறான்' என்று ஆலோசித்தார். சிரகாரியானதால் அவர் இவ்விதம் வெகுவாக ஆலோசனைசெய்யும்பொழுது நீண்டகாலஞ சென்றுவிட்டது. பிறகு, அவருடைய பிதாவானவர் வந்தார். அதிமேதாவியும் மிக்கஅறி வுடையவரும் தவத்திலிருக்கிறவருமான கௌதமா அவ்வளவுகாலத் திறகுப்பிறகு பத்னியினுடைய அனுசிதமான மரணத்தையோசித் துச் சாஸ்திரஞானத்தினுலும் மனைதைர்யத்தினுலுமுண்டானதெளி வினல் பச்சாத்தாபத்தையடைந்து துக்கத்தால் கண்ணீர்சொரிந்து மிகவும் ஸந்தாபத்தையடைந்து புலம்பினர். 'மூன்று லோகங்களுக் கும் தலைவனுன இந்திரன் பிராம்மணவேஷம்பூண்டு அதிதியின் விர தத்தைக் கைக்கொண்டு என்னுடைய ஆச்ரமம் வந்தான். அவன் என்னல் நல்லவார்த்தைகளால் மகிழ்விக்கப்பட்டுக் குசலப்பிர ச்னத்தினுலும் பூஜிக்கப்பட்டான்; நியாயப்படி என்னல் அர்க்கிய மும் பாத்தியமும் கொடுக்கப்பெற்றான். அப்படிச்சொன்னல் ப்ரீதி யடைவானென்று, 'நான் உன்னைச் சேர்ந்தவன்' என்றும் சொன் னேன். இதில் அனர்த்தம் ஏறபட்டதனல ஸ்திரீயினிடத்தில் குற்ற மில்லை. ஆகையால், ஸ்திரீயும் குற்றம்செய்யவில்லை. நானும் குற் றம்செய்யவில்லை. வழிப்போக்கனை இந்திரனும் குறறம்செய்ய வில்லை. தர்மத்தினுடைய தவறுதலே குற்றம்செய்தது. முனிவர் கள், 'பொறுமையாலுண்டான துக்கதை அஜாக்ரதையால்' என்று சொல்லுகிறார்கள். நான் பொறுமையால் கெடுக்கப்பட்டு, பதிவிர தையும் ஸ்திரீயும் வீட்டுவேலைகளில் கவலையால் கிருகத்தில் வலிக் கும்படி செய்யப்பட்டவனும் பரிக்க (போஷிக்கத்) தக்கவனானதால்

பாரியையுமாயிருப்பவளைக் கொன்றுவிட்டுத் துன்பக்கடலில முழுகி விட்டேன். யார் என்னைக் கரையேறப்போகிறார்? சிரகாரி என்ற எண்ணத்தால் உதாரபுத்தியுள்ள புத்திரன் என்னால் கட்டளையிடப் பட்டான். அவன் இப்பொழுதும் சிரகாரியாயிருப்பானுனால என் னைப் பாவத்திலிருந்து காப்பான். ஓ! சிரகாரியே! உனக்கு மங்கள முண்டாகட்டும். ஓ! சிரகாரியே! உனக்கு மங்களமுண்டாகட்டும். நீ இந்தவ் ஷயத்தில் இப்பொழுது சிரகாரியாயிருந்தால் உள்ளபடி நீ சிரகாரிதான். என்னையும் உன் தாயையும் உன்னால் தேடப்பட்ட தவதனதையும் உன்னையும் பாதகங்களிலின்றும் காபபாறறு. இப்பொ ழுது சிரகாரியாயிருக்கக்கடவாய். நீ மஹாபுத்திமானுகையால் உனக் குத் தாமதிக்குச்செய்வது உடன்பிறந்ததாயிருக்கிறது. உன்னு டைய அந்தந்தன்மை அப்படியே ஸபலமாகட்டும. இப்பொழுது நீ சிரகாரியாயிருக்கவேண்டும். மாதாவினால் நீ வெகுகாலம் பிரார்த்திக் கப்பட்டாய்; கர்ப்பத்தில தரிக்கப்பட்டாய். ஓ! சிரகாரியே! நீ உன் னுடைய சிரகாரித்தன்மதை ஸபலமாகச்செய். வருத்ததால் நம்மி டம்வரத் தாமதிக்கிறீரன். அவன் எங்களிருவரையும் கெடிகாளைக் குண்டான துக்கததை நினைத்து வெகுகாலம் தூங்குகிறானே! நன்று கப்பார்த்துத தாமஸித்துச்செய்கிறவனே!' என்றார். அரசனே! இவ் விதம் மஹரிஷியான கௌதமர் அபபொழுது துக்கத்தை அடைந் தார்; பிறகு பக்கததில நிறகிற சிரகாரியென்கிற புதத்ரரைப்பார்த் தார். சிரகாரியோ பிதாவைப்பார்த்து மிக துக்கதுடன் ஆயுத்தை எறிந்துவிட்டுத் நலேயால் அவரைவணங்கி ஸமாதானத்தைஅடையும் படிசெய்ய எதனித்தார். பிறகு, கௌதமர், பூமியில ஸாஷடாங்கமாக விழுந்துகிடக்கிற புதத்ரரையும் (லஜ்ஜையால கிலேபால) அசைவற் றிருக்கின்ற மனைவியையும்பார்த்து மிகமகிழ்ச்சியை அடைந்தார். அந்த மஹாதமாவானவர் மனைவியைச் சேர்தது்கொள்ளவில்லை. ஜனமில்லாதவிடத்தில் ஆஸரமத்திலிருக்கிறஅவரால் புத்ரனும் ஸமா தானம் செய்யப்படவில்லை. ஆயுதபாணியும் அடக்கமுள்ளவனும் செய்யவேண்டியகார்யததில ஸமர்தனுமான புதத்ரனிடதத்தில, தம் காரியங்களுக்காகவெளியிலபோகும் ஸமயதத்தில், '(மாதாவை) கொல் லக்கடவாய்' என்று ஆஜ்ஞை செய்யப்பட்டது. தமமுடைய பாதங் களில்வணங்கினபுதத்ரனைப்பார்த்துப்பயதத்துனால ஆயுததைப்பிடித் திருப்பதனுண்டான பரபரப்பை மறைக்கிறுனென்றுபிதாவுக்குவண் ணமுண்டாயிறறு. பிறகு, பிதாவானவர் சிரகாரியை நெடுநேரம் புகழ் ந்து நெடுநேரம் உச்சிமோந்து நெடுநேரம் இரண்டுகைகளாலும்

ஆலிங்கனஞ்செய்து, 'நெடுங்காலம் ஜீவிக்கக்கடவாய்' என்று சொன்னார். மிக்கஅறிவுள்ளவரான அத்தக்கௌதமர் இவ்விதம் அன்பையும் சந்தோஷத்தையும் (சாந்திமுதலான) குணங்களையும்அடைந்து புத்திரனைப்புகழ்ந்து, 'ஓ! சிரகாரி! உனக்கு மங்களமுண்டாகுக. வெகுகாள் சிரகாரியாயிருக்கக்கடவாய். பார்க்கஇனியவனே! உன்காரியம்காம்ஸமாயிருக்குமானால் வெகுகாலம்கான்தக்கத்தையடையாமலிருப்பேன்' என்றார்.(இவ்விதஞ்சொலலிவிட்டு) முனிசிகாமணியும்விரும்பானமான கௌதமர் சில ஸ்லோகங்களையும் சொன்னார். (அவற்றின்பொருள்,) 'தாமஸித்துச்செய்கின்ற தீர்மானிடத்தில் குணங்களும் காரியங்களின் முறைகளும் இதரர்களைவிட அடையும்தன்மையும் இருக்கின்றன. வெகுகாள் ஆராய்ந்து (ஒருவனை)மித்ரனாக்கிக்கொள்ளவேண்டும். செய்ததை(விடுகிறதானால்)வெகுகாள் எண்ணிவிடவேண்டும்.வெகுகாலம் ஆராய்ந்து நண்பனைச்செய்யப்பட்டவன் வெகுகாலம் பழகுவதற்குத் தகுதியுள்ளவன். அன்பு, கர்வம், மானம் துரோகம், பாவச்செய்கை, அப்ரியம் இவைகளைச்செய்வதில தாமஸித்துச்செய்கிறவன் சிலாகிக்கப்படுகிறான். உறவினர், நண்பர், வேலைக்காரர்கள், ஸ்திரீஜனம் இவர்களுடைய மறைவானகுற்றங்களில் தாமஸித்துச்செய்கிறவன் சிலாகிக்கப்படுகிறான்' என்பது. ஓ! பாரத! யுதிஷ்டிர! இவ்விதம் அத்தக்கௌதமர் அப்பொழுது புதிதானுடைய செய்கையினாலும் தாமஸித்துச்செய்யும் தன்மையினாலும் பிரீதியை அடைந்தார். ஆகையால், இப்படியே மனிதன் எல்லாக்காரியங்களிலும் நன்குஆலோசித்துப் பொறுத்து நிச்சயித்தால் பரிதாபத்தை அடையமாட்டான். தாமஸமானது கோபத்தைஅடக்கும். தாமஸமானது, 'இது காரியம். இது அகாரியம்' என்று கர்மத்தை நியமனஞ்செய்யும். பச்சாத்தாபத்தைச்செய்கிற ஒருகர்மமும் தக்கதன்று. வெகுகாள் பெரியோர்களை அடுத்திருக்கவேண்டும். வெகுகாலம் இதரர்களைப் பூஜிக்கவும் வேண்டும். வெகுகாலம் தர்மத்தைச் செய்யவேண்டும். ஒருவிஷயத்தைப் பலகாள் ஆராயவேண்டும். நெடுங்காலம் வித்வான்களுடன் பழகி நெடுங்காலம் சிஷ்டர்களை அடுத்து நெடுங்காலம் மனத்தை அடக்கினால் நெடுங்காலம் அவமரியாதையை அடையாமலிருப்பான். தர்மமான வார்த்தையை மற்றொருவனுக்குச் சொன்னாலும் வெகுகாலம் பிரயாணம் செய்யப்பட்டுச் சொல்லவேண்டும். அப்படியானால் வெகுகாலம் பரிதாபத்தை அடையாமலிருப்பான். மிகுந்த நலமுடைய கௌதமர் பலவருஷங்கள் அத்தவானப்பிரஸ்தாஸ்ரமத்தில்ஒழுகிப் பிறகு புத்திரரோடு ஸ்வர்க்கத்தைஅடைந்தார்" என்றுசொன்னார்.

இருநூற்றெழுபத்துமூன்றுவது அத்தியாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிரஜைகளைத் துன்பப்படுத்தாமல் காக்கும்விஷயத்தில் ஸத்யவானுக்கும் த்யுமத்ஸேனனுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! அரசனுவன் (ஹிம்ஸையின்றி) எப்படி பிரஜைகளை ரக்ஷிப்பான்? (பரிபாலித்தால்) எப்படி ஒரு ஜந்துவையும் வருத்தப்படுத்தாமலிருப்பான்? ஓ! ஸாதுக்களில் சிறந்தவரே! உம்மைக் கேட்கிறேன்; அதைச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்த விஷயத்திலும் த்யுமத்ஸேனனுக்கு ஸத்யவானென்கிற அரசனுடன் நடந்த ஸம்வாதரூபமான ஒரு பழமையான இதிஹாஸகதைச் சொல்லுகிறார்கள். பிதாவான த்யுமத்ஸேனனுடைய கட்டளையால் (கொலைக்குயோக்கியமானவர்கள்) கொலைக்குக்கொண்டுபோகப்படும்பொழுது ஸத்யவானனவன் ஒருவாலும் சொல்லப்படாத வசனத்தைச் சொன்னனென்று நமக்குக் கேள்வி. ஸத்யவான், 'தர்மம் அதர்மமாகும். அதர்மமும் தர்மமாகும். கொலையென்பது தர்மமாகுமென்னும் இது பொருந்தாது' என்றான். த்யுமத்ஸேனன், 'ஓ! ஸத்யவானே! (திருடர்களைக்) கொல்லாமை தர்மமென்றால் ஒரு ஸமயமாவது எது அதர்மமாகும்? திருடர்கள் கொலைசெய்யப்படாவிட்டால் (அதுவே அதர்மமாவதால்) தர்மாதர்மங்கள் கலக்திபோகும். ஓ! ஸத்யவானே; கலியுகத்தில், 'இது என்னுடையது. இது இவனுடையது' என்கிற பிரவ்ருத்தி ஏற்படாது; உலகியல் நடவாது. (இந்தவிஷயம்) உனக்குத்தெரிந்தால் எனக்குச் சொல்' என்றான். ஸத்யவான், 'மூன்றுவர்ணங்களான எல்லோர்களுமே பிராம்மணாகளுக்கு அடங்கினவர்களாகச் செய்யத்தக்கவர்கள். தர்ம பாரகதியை கட்டிண்டவர்களுள் அற்பனுக்கூட அபசாரத்தைச் செய்யமாட்டான். அவர்களுள் எவனெவன் அபசாரத்தைச் செய்தானோ அவனவனை அத்தணன் அரசனிடத்தில், 'இவன் என்சொல்லைக் கேட்கவில்லை' என்று சொல்லவேண்டும். உடனே அரசன் அவனுக்கு (சிக்ஷையை) விதிக்கவேண்டும். [1]அதிலும் சரீராசமில்லாத சிக்ஷையே செய்யத்தக்கது. குற்றங்களையும் நீதிசாஸ்திரத்தை

[1] வேறுபாடம்.

யும் விதிப்படி நன்குஆலோசியாமல் வேறுவிதமான (விதமானது) செய்யத்தக்கதன்று. அரசன் திருடர்களையும் குற்றமிலலாதவர்களான பலரையும் கொலலுகிறான். கொலலபபட்ட அந்நபரினதன்மூலமாக அவனுடையமனைவியும் தாயும் தந்தையும புத்திரனும் கெடுக்கப்படுகிறாகள். ஆகையால, பிறன் குறறம்செய்தபோது அரசன் சிகைஷயை நியாயமாகச் செய்யவேண்டும். கெடடாரினிருகூட ஒரு ஸமயம் நலலவனுடைய ஒழுக்கதைதையும் அடைகிறான். நீயோராகளிடத்தினினறும் நல்லஸந்தருயும் உண்டாகிறதன்றோ? ஆகையால், மூலரைசமானது செயயத்தக்கநிலலை இது ஸநாதனமானதர்மமாகாது பயமுறுத்தல், கிறைசெய்தல, அங்கபங்கமுதலானவைகளால் வதமில்லாமலில சிகைஷயானது விதிக்கப்பட்டிருக்கிறது புரோகிதர்களுடையஸபையில அந்தத்திருடர்கள் கொலலபபடினும் சிகைஷயால கிலேசபபடுத்தத்தக்கவர்களலலை அந்தத்திருடர்கள புரோகிதரைச சரணமாகக்கூறி, 'ஓ! பிராம்மணரே! இனிமேல் நாங்கள் ஒருபாவமும்செய்பவரலலோம்' எனறுசொலலிக்கொண்டு அடைகிறபொழுது அவர்களைவிட்டுவிடவேண்டுமென்று பிரம்மாவின் ஆஜ்ஞை தண்டம், மான்தோல் இவைகளைத்தரித்துக்கொண்டு முண்டிதனுயிருக்கிற பிராம்மணஸந்யாஸியும் (குறறஞ்செய்தால) சிகைஷக்குத்தக்கவனாகிறான். பெரியவர்களும் அடிக்கடி குறறஞ்செய்தால பெரிய சிகைஷயை அடையவேண்டும் முதல்கடையரிலபால விடத்தக்கவர்களல்லர்' என்றுசொன்னன். தயமந்தனஸனன்.: 'எந்தஎந்தஸமயத்தில் குடிகளைச் சிகூடிபபது தக்கதாகுமோ, எவ்வளவுவவ்வளவுசிகைஷ குறறத்தின் அளவுக்கு அதிகப்படாமலிருக்குமோ அந்த அந்தஸமயத்தில அவ்வளவு அவ்வளவு சிகைஷ தர்மமாகச சொலலப்படுகிறது கொலலத்தக்கவர்களைக் கொலலாவிட்டால் எலலாருமே அவமதிப்பார்கள். முன்னோர்களும் அவகளுக்கு முன்னோர்களும், மெண்மைக்குண முளளவர்களும் மிகுதலத்யஸ்தாகளும் அற்பதோராகமும் அல்பகாபமுமுள்ளவாகளுமாயிருந்தமையால் எளிதில் சிகூடிக்கக்கூடியவர்களாயிருந்தாகள் முதலில 1'தித்' என்கிற சொல்லே சிகைஷயாயிருந்தது பிறகு, வாயால்வைதல சிகைஷயாயிருந்தது. அதன்பிறகு, பொருளை வாங்குதல சிகைஷயாயிற்று. இபபொழுது கொலையானது சிகைஷயாயிருக்கிறது சிலஜனங்களை வதத்தினலகூடத் திருத்தமுடிகிறதிலலை வேதமானது, 'திருடன் மனுஷ்யர்களுக்கும் நலலவனலன்; தேவர்களுக்கும் நல்லவனலன்;

1 'தி' எனபதுபோன்ற நிங்கைமொழி.

கந்தர்வர்களுக்கும் பிதிருக்களுக்கும் நல்லவனல்லன்' என்று சொல்லுகிறது யார யாரைசசேர்ந்தவன்? ஒருவனும் (ஒருவனையும்) சேர்ந்தவனல்லன். திருடன் மயானத்திலிருந்து பக்குவமானபண்டத்தைக்கூட எடுத்துக்கொள்ளுகிறன்; பிசாசுகளையும் தெய்வமாகக் கொண்டாடுகிறன் கெட்டபுத்தியுள்ள அந்தத்திருடர்கள்விஷயத்தில எவன் ஒருவிதநியமம்செய்வான்?' என்றுசொன்னன் ஸத்யவான், 'அந்தத்திருடர்களைக் கொல்லாமலே ஸாதுக்களாகச்செய்து காப்பதற்குக் கூடாவிட்டால எதாவது ஒருபூதபயமெண்கிற யாகத்தைச் செய்யவிரும்பி அவர்களின்கொலையைச செய் [1]அரசர்கள் உலகம் நடப்பதற்காக மிகச்சிறந்ததவத்தைச செய்கிறார்கள். அபபடிப்பட்டஅரசர்களிடமிருந்தும் அவர்கள் லஜ்ஜையை அடைகிறார்கள்; நடுங்கும்படிசெய்யப்பட்டு அவர்களைபபோலத் தவமுடையவராகளுமாகிறார்கள் ஸுகிருதமுடையவராகள் காமத்தினுலை தீயசெய்கையுள்ளவர்களை ஹிம்ஸிக்கிறதிலலை. அரசர்கள் ஸுகிருதத்தினுலேயே மிகவும் பிரஜைகளைச சிக்ஷிக்கிறார்கள். இவ்விதமிருந்தால் உலகம் மேன்மேலும் நன்மையைக்கொடுக்கக்கூடிய ஒழுக்கத்தை அடையும்' என்றுசொன்னன் தயுமத்ஸேனனை, 'தானை ஸமாதானஞ்செய்துகொள்ளாமல பிறரைஸமாதானஞ்செயயகிணக்கிறவனும் விஷயங்களித்செல்லுகிற இந்திரியங்களுக்குவசமாயிருக்கிறவனுமான வனை மனிதாகள் பரிகாஸம்செய்கிறார்கள. டம்பத்தாலுண்டான மோஹத்தால் அர்சனுக்கு அனுசிதமானகாரியத்தைச செய்கிறவன் எல்லாஉபாயங்களாலும் நிந்திக்கத்தக்கவன். அபபடியானுல அவன் அந்தபாவத்திலிருந்தும் விடுபடுவான் கெட்டசெய்கையுள்ளவனை அடக்கவேண்டுமென்கிற எண்ணமுடையவன் முதலில தன்னையே அடக்கிக்கொள்ள வேண்டும். தனக்கு நெருங்கின பந்துக்களைக்கூடப பெரிய சிக்ஷைகளால சிக்ஷிக்கவேண்டும் லோபத்தாலுண்டான மோகத்தால் ஏதாவது அயோக்பத்தனத்தைசசெய்கிறஅரசனும் எல்லாஉபாயங்களாலும் அடக்கத்தக்கவன். அபபடி அடக்கினுல் அவன் அந்தப்பாவத்திலிருந்தும் விடுபடுவான். எந்தத்தோசத்தில் பாவத்தைச செய்கிறஇழிந்தவன் பெரியதுக்கத்தையுடையவில்லையோ அந்தத் தோசதத்தில் பாவங்கள் விருத்தியடைகின்றன தர்மமும் குறைகிறது

---

1 'அரசர்கள் தம்ராஜ்யத்தில் திருடர்களிருப்பதற்காக லஜ்ஜையை அடைகிறார்கள். அதற்காகவே அவர்கள் தவம்செய்கிறார்கள். அரசனிடமுள்ள பயத்தினுல் குடிகள்நல்லவர்களாகிறார்கள். அரசர்கள் தீமைசெய்பவர்களைத் தம்விருப்பத்திற்காகக் கொல்வதில்லை' என்பது பழைய உரை.

நிச்சயம். இவ்விதம் கருணைசிலரும் வித்வானுமான ஒருபிராம்மணர் எனக்கு உபதேசித்தார அபபா! இபபடியே முன்னோர்களான பிதாமஹர்களும் எனக்குச் சமாதானஞ்செய்து மிகவும்கருணையினால் உபதேசித்தார்கள் அரசன் இந்தபபூமண்டலத்தைக் கிருதயுகத்தில் மூந்தினகல்பத்தினபோல (அதாவது தித்தண்டத்தினபோல) ஜயிக்க வேண்டும் திரேதாயுகத்தில் ஒருபாதம்குறைந்த தர்மத்தினபோலயாவது நடக்கவேண்டுமம துவாபரயுகத்தில இரண்டுபாதத்தோடு கூடின தர்மத்தோடாவது நடக்கவேண்டும் இழிவான கலியுகத்திலோ வெனில கற்பங்குதாமத்தாலாவது நடக்கவேண்டும் கலியுகமுண்டானபிறகு அரசனுடைய கெட்டஒழுக்கத்தாலும் காலவிசேஷத்தாலும் தர்மத்தின்பதினறிலொருபாகமிருக்கும் ஓ! ஸத்யவானே! அலலது முதல்கலபத்தினறிலும் தர்மத்திறகுக் கலபபுண்டாகுமானால ஆபளையும் சக்தியையும் காலத்தையும் பார்த்துச சிகைஷயை விதிக்க வேண்டும் தாமத்தின்பெரிதானபலயானது ஸத்யத்தைக்கைவிடாத படி செய்யவேண்டுமெனறு பிராணிகளிடமுள்ள அருளால் ஸ்வாயம் புவமனு சொன்னர்' என்றுகூறினன்" என்றுசொன்னர்

இருநூற்றெழுபத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பசுவைக்கொல்லாமல் யாகம்செய்யவேண்டுமென்பதைப்பற்றிக் கபிலருக்கும் ஸ்யூமரச்மிக்கும் நடந்தஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! பிராணிகளுக்குவிரோதமில லாதஸன்யாஸமானது (ஐம்வர்யம், ஞானம, ஈர்த்தி, சாந்தி, வைராக்யம், தர்மம்என்றுசொல்லபபட்ட) ஆறுகுணங்களுடையஸமூகத்தைச் செய்கிறது (1ஹிம்ஸையுள்ள தும்ஹிம்ஸையிலலாததுமாகிய) இரண்டையும் அடைந்ததர்மங்களை எனக்குச சொல்லும் பிதாமஹரே! (ஸ்ரேயஸனுக்குக் காரணமானதால) ஒன்றுக்கொன்று நெருங்கினவை களாயிருக்கிற கிருதஸ்ததர்மம் த்யாகதர்மம் இவ்விரண்டிலும் எது சிறந்தது?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"இரண்டுதர்மங்களும் பெரியபாக்கியத்தினால உண்டாகின்றன. இரண்டும்அனுஷ்டிக்க ப்ரமமுள்ளவைகள் இரண்டும் பெரும்பயனை அளிப்பவைகள். இரண்டும் பெரியோர்களால்ஆசரிக்கப்பட்டிருக்கின்

1' இல்லறம் துறவறம்' என்றும்சொன்னலாம்.

றன. அப்படிப்பட்ட இவ்விரண்டினுடையாரொழாண்யத்தையும்உனக்குச் சொல்லுகிறேன். ஓ! குந்தியின்புத்ர! தர்மார்த்தங்களில்ஸந்தேகம்நீங்கும்படி ஒரேமனத்துடன் கேட்கக்கடவாய் இந்தவிஷயத்திலும் கபிலமுனிவருக்கும் ஒருகோவுக்கும் நடந்தஸம்வாதமான பழையஇதிஹாஸத்தைச சொல்லுகிறார்கள ஓ! யுதிஷ்டிர! அதை அறியக்கடவாய். முன்காலத்தில நஹுஷனுடைனவன் பழமையானதும் அழிவற்றதும் உறுதியுள்ளதுமான ஆம்னாயத்தைக் கவனித்துக் கொண்டு த்வஷ்டாவுக்காகக் கோவை [1]ஆலம்பனம்செய்தானென்று நாம் கேட்டிருக்கிறோம் அந்தபடி ஹிம்ஸையில் உபயோகிக்கப்பட்ட அந்தக்கோவை நலலசித்தமுடையவரும் ஸத்குணம்பொருந்தியவரும் தியானத்திலபற்றுள்ளவரும் ஞானவானும் ஆஹாரநியமமுள்ளவருமான கபிலமுனிவர பார்த்தார் சிறந்ததும் நிஷ்டைபொருந்தியதும் ஓரிடத்திலும் பயமற்றதுமான புத்தியையுடைய அந்தக் கபிலமுனிவர் அப்பொழுது, 'வேதங்களே!' என்று தீனமானஸ்வரத்தோடுகூடிய ஸத்யமான வாக்கியத்தை ஒருமுறை சொன்னர ஸ்யூமரஷ்மியென்கிறமுனிவர் அந்தப்பசுவினுள்புகுந்து கபிலரைநோக்கி, 'ஆச்சரியம்! வேதங்கள்நிந்திக்கபடுமானால மற்றத்தர்மங்கள் எதனால ஒபபுக்கொளளப்படும்? தைரியசாலிகளும் வேதஜ்ஞானமாகிற கண்ணுள்ளவர்களுமான முனிவர்கள் எல்லாவேதத்தையும் எந்நாளும் ஆத்மஜ்ஞானமுளள ஈச்வருடையவசனமாக நினைக்கிறார்கள் பயனில ஆசையற்றவரும் விருபபுவெறுப்பில்லாதவரும் ஒருவிஷயத்திலும் முயற்சியிலலாதவருமான ஈச்வருக்கு வேதங்களில இபபடிச் சொல்லவேண்டுமென்கிற எண்ணமானது ஏது?' என்றுசொன்னர் கபிலர், 'நான் வேதங்களை நிந்திக்கவில்லை; ஒருவிஷயத்திலும் விஷமமாகபபேசவுமில்லை தனித்தனியாயிருக்கிற ஆச்ரமிகளுடையகர்மங்கள் ஒரேபயனுடையவைகளென்று நமக்குக்கேள்வி ஸன்யாஸியும் உத்தமகதியை அடையவேசெய்கிறான்; வானபரஸ்தனும் அடைகிறான்; கிருகஸ்தனை பிரம்மசாரி இவரிருவரும் அடைகிறார்கள் தேவயானங்களென்கிற அழியாதமார்க்கங்கள (இவ்விதம்) நான்காக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன இவைகளுக்குப பயன்விஷயத்தில் பலாபலரூபமான உயர்வும் தாழ்வும் சொலலபபட்டிருக்கின்றன இவ்விதமறிந்துகொண்டு எல்லாவிஷயங்களையும் தொடங்கவேண்டுமென்று ஒருவேதவசனமிருக்கிறது மற்றொருரிடத்தில் ஒன்றையும் தொடங்கவேண்டாமென்று நிஷ்டையைத்தெரிவிக்கிற வேதவாக்கிய

---

[1] தர்மத்திற்காக ஏற்படுகிற பசுஹிம்ஸை.

மானது கேட்கப்படுகிறது ஆனால். ஆரம்பியாதவிஷயத்தில் தோஷ மில்லையென்பது ஸித்தம். ஆரம்பித்தலில் பெரியதோஷம் எற்படு கிறது. இவ்விதமிருக்கிறசாஸ்திரத்தின்பலாபலம் அறியக்கூடியதா யில்லை இத்தவிஷயத்தில் வேதசாஸ்திரங்களைவிட்டுக் கொல்லாமை யைகாட்டிலும் மேலானதென்று பரத்யக்ஷமாக ஒப்புக்கொள்ளப பட்டதர்மமுண்டென்று இருந்து அதை அறிவீராஎல் சொல்லும்' என்ன சொன்னர். யுதிஷ்டிரர், 'ஸர்வர்க்கத்திலிருப்பவர்களுள்வன் யாகஞ் செய்யவேண்டுமென்று எப்பொழுதும் வேதம் கூறுகிறது முன் னோர் பயனை எற்படுத்தியன்றோ யாகமானது விதிக்கப்பட்டிருக் கிறது? வெள்ளாடு, குதிரை, செம்மறியாடு, பசு, பக்ஷிக்கூட்டங்கள், கிராமத்திலுண்டாகுஷதிகள், வனத்திலுண்டான ஔஷதிகள் இவைக ளெல்லாம் பிராணனுக்கு ஆதாரமென்று வேதம் கூறுகிறது அப படியே ஒவ்வொருநாளும் காலையிலும் மாலையிலும் அன்னமானது தேடப்படுகிறது பசுக்களும் தான்யமும் யாகத்திற்குஅங்கமென்று வேதம் சொல்லுகிறது பிரம்மா இவைகளை யஜ்ஞத்திற்காடு படைத் தார். அதற்காகத்தினுலை பிரபுவான அவர் தேவர்களைப பூஜித்தார். ஆகையால், எவ்வுழாயிருக்கிற (யாகஸாதனமான) பிராணிகளெல லாம் ஒவ்வொன்றும் பிரானனவைகள் பசு, ஆடு, மனிதன், நாய், குதிரை, கோவேறுகழுதை, கழுதை இந்த எழுபசுக்களும் ஸாதுக்களால க்ராம்யங்களென்று சொல்லப்படுகின்றன ஸிம்மம், புலி, பன்றி, எருமைக்கடா, யானை, மான், முள்ளம்பன்றி இந்த எழும்ஆரண்யங்களாக நிணைக்கப்படுகின்றன யாகங்களில்உபயோ கிக்கபபட்டவையெல்லாம் உத்தமமென்று பெயர்பெற்றவையாகச் சொல்லுகிறார்கள் இந்தத்தான முன்னோர்களாலும் அவர்களுக்கும் முந்தினவர்களாலும் ஒப்புக்கொளளபபட்டிருக்கிறது தன்னுடைய சக்தியையறிந்தவனைவன்தான பிராணிகளை ஒருபோதும் தொடா மலிருப்பான்? யாகத்தில் உபயோகிக்கபபட்டபக்குவமும் மனுஷ்யாக ளும் ஔஷதிகளும் விருக்ஷங்களும் ஸம்வத்ஸரத்தையே : அடைகின்றன. யாகத்தைவிட்டால உயர்ந்த ஸ்வர்க்கம்இல்லை. ஔஷதிகள, பசுக்கள, விருக்ஷங்கள், கொடிகள், நெய், பால், தயிர், ஹவிஸ், பூமி, திக்குக் கள், ப்ரத்தை, காலம் இவைகள பன்னிரண்டும், ருக்கு, யஜுஸ், ஸாமம், ரித்விக்குக்கள்,* இவைகள்சேர்ந்து பதினேறு ஆகின்றன அக்னி, கிருதபதியாக அறியத்தக்கது. அது பதினேழாவதாகச சொல்லபபடுகிறது இவைகள யஜுஞத்திற்கு அங்கங்கள் யஜ்ஞம்

* ' அபிகாங்க்ஷந்தே ' எனபது மூலம்.

மூலமென்று வேதம் சொல்லுகிறது. கோவானது நெய், பால், தயிர், கோமயம், ஆடை, தோல, வால்கள், கொம்பு, கால் இவைகளால் யாகத்தை நிறைவேற்றவே செய்கிறது. இவ்விதம் யாகத்திற்கு விதிக்கப்படுகின்றவையெலலாம் ஓவ்வொன்றும் ரித்விக்குக்களோடும் தக்ஷிணைகளோடும் சேர்ந்து யஜ்ஞத்தை நிறைவேற்றவே செய கின்றன இன்னமும் இவைகளெலலாம் சேர்ந்தும் யஜ்ஞத்தை நிறை வேற்றுகின்றன. யாகங்களுக்காகவன்றே இவைகள் படைக்கப பட்டன? அந்தபபடி உண்மையாகவே வேதம கூறுகிறது இபபடியே முன்னோர்களுக்குப் முனனோர்களான மனிதாகளெலலாரும் செய் திருக்கிறார்கள். எவன் பலத்தை விரும்பாமல யாகங்களால ஆரா திக்கவேண்டுமென்ற யாகம் செய்கிறானை அவன் 'ஒன்றையும் ஹிம்ஸிக்கிறவனும் ஆரம்பிக்கிறவனும் தோராகம்செய்கிறவனுமாகிற திலலை இவைகளெலலாம் விதிவாக்கியததால யாகாஙகங்களாகவே உள்ளபடி சொல்லப்பட்டிருந்தாலும் விதியில் சேர்ந்தவைகளாகி ஒன்றைஒன்று கரையபறச செய்கின்றன காமகாண்டங்களை நிலைநிறுத்துகின்ற மஹரிஷியான பரமேஷ்வரரால் வெளியிடப பட்ட ஆம்னயத்தை (பிரத்யக்ஷாபரோக்ஷ சுருதிஸமுதாயத்தை) நான் அறிகிறேன். வித்வானகள் பிராம்மணத்தை ஆராய்ந்து பார் த்து அந்த ஆம்னயத்தைக்கண்டு நிச்சயிக்கிறாகள யஜனும் பிராம் மணத்தில விதிக்கபபட்டது; பிராம்மணாகளுக்கு அரபபணம் செய் யப்பட்டது எப்பொழுதும் உலகமுமையும் யாகத்தை அடுத் திருக்கிறது யாகமும் உலகத்தை அடுத்திருக்கிறது வேதத்திற் குக்காரணமான ஓம என்பதையும், நம:, ஸ்வாஹா, ஸ்வதா, வஷட் இவைகளையும் (யாகத்தை) தன் சக்திக்குத் தக்கபடி செய்தாவது அதில் பிரயோகிக்கிறவனுக்கு மூன்று உலகங்களிலும் பரலோக பயத்தைப் பெரியோர்கள் நினைக்கிறதிலலை' என்று வேதங்கள் சொல் லுகின்றன; இவவுலகத்தில ஸித்தர்களான பரமரிஷிகளும் சொல்லு கிறார்கள். எவனிடத்தில் விதிவாக்கியத்திலை விதிக்கப்பட்ட ருக்கு, யஜுஸ், ஸாமம், ஸ்தோத்திரம் இவைகளெலலாமிருக்கின்றனவோ அவனே இவவுலகில இருபிறபபுடையவனுவான். ஓ! பிராம்மணரே! அக்னியாதானத்தில எதுஉண்டாகிறதென்றும் ஸோமயாகத்திலும் எது உண்டாகிறதென்றும் மற்றமஹாயாகங்களாலும் எது உண்டா கிறதென்றும் அறிவுள்ளவரான நீரே அறிகிறீர். ஓ! பிராம்மணரே! ஆகையால, யோசிக்காமல் யாகம் செய்யவும் வேண்டும்; செய்விக்க வும் வேண்டும் யாககர்மத்தினால பூஜிக்கிறவனுக்கு மரணத்திற்

குப் பிறகு பெரிதான ஸ்வர்க்கபலம் உண்டாகிறது. யாகஞ்செய்யாதவர்களுக்கு இவ்வுலகமும் இல்லை; பரலோகமும் இல்லையென்பது நிச்சயம். வேதத்திலுண்டான அர்த்தவாதத்தை அறிந்தவனுக்கே அப்பொழுது (யாகஞ்செய்தவனுக்கு ஸ்வர்க்கபலம் யாகஞ்செய்யாதவனுக்கு ஸ்வர்க்கபலம்இல்லை என்ற) இவ்விரண்டும் பிரமாணமாகும்' என்றுசொன்னர்

இரு நூற்றெழுபத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிலருக்கும் ஸ்யூமரச்மிக்கும் நடந்தஸம்பாஷணந்தொடர்ச்சி)

கபிலர், 'இவ்வுலகவையும் ஆராய்ந்து பார்க்கிற தூரதிருஷ்டிகள் ஞானமார்க்கத்தை அடைந்து (மோக்ஷத்தை) அடைகிறார்கள். அவர்களுக்கு எல்லா உலகங்களிலும் ஒருதடையுமில்லை வித்வான்கள் (ஸுகதுக்கமுதலிய) தவந்திலலாதவர்களும் (ஒருவரையும் ஒரு விதமான காரியத்திற்காகவும்) வணங்காதவர்களும் ஸங்கற்பங்களுடைய ஸம்பந்தமில்லாதவர்களும் உலகும் புறமும் சுத்தர்களும் எல்லாபபாவங்களிலிருந்தும் விடுபட்டவர்களுமாகி ஸுஸரிக்கிறார்கள். மோக்ஷத்தையும் ஸங்கியாஸத்தையும் புத்தியில் நிசசயம் பணணுகிறவர்களும் பிரம்மத்தையே தியானஞசெய்கின்றவர்களும் பிரம்மத்தையே இருபபிடமாகவுடையவர்களும் பிரம்மமானவர்களும் (அதனல தமோகுணத்தின் காரியமான) மோகமிலலாதவர்களும் ரஜோகுணமிலலாதவர்களுமாயிருக்கிறவர்களுக்கு நித்யவஸித்தமான உலகங்கள் ஏற்படுகின்றன உத்தமமான கதியை அடைந்த அவர்களுக்கும் கிருகஸ்தாசரமத்தில என்னபயனிருக்கிறது?' என்றுசொன்னர். ஸ்யூமரச்மி, 'இவர்களுக்குப பரமநிஷ்டை இருக்குமானல் இவர்களுக்கே பரமகதி உண்டாகுமானல (ஒருவித்தபரிஷ்ருத்தியும் மற்ற ஆஸ்ரமத்திலிலலாதபடியால) கிருகஸ்தர்களே அடிக்காமல் ஓர் ஆஸ்ரமமும் நடக்கிறதிலலை. எல்லாபபிராணிகளும் தாயைபபடித்து ஜீவிக்கின்றதுபோல மற்றஆஸ்ரமங்களுங்கிருகஸ்தாஸ்ரமத்தை அடித்துக்கொண்டிருக்கின்றன கிருகஸ்தன் தான் யாகஞ்செய்கிறான். கிருகஸ்தனே தவஞ்செய்கிறான். எவ்வளவு தாமங்கள் இருக்கின்றனவோ அவ்வளவு தர்மங்களுக்கும் கிருகஸ்தாஸ்ரமமே மூலம் முனிவீரே!

---

1 'முனே' என்று பாடம் கொள்ளப்பட்டது.

எல்லாப்பிராணிகளும் உற்பத்திமுறையில் ஈண்டாயிருக்கின்றன. அதானது மற்ற ஆச்ரமத்தில் சிறிதும்இல்லையன்றோ? ஓஷதிகளுக்கு வெளிப்பட்டு ஒருபிராணியும் இலலாத காரணத்தினால் 1புல்லுகள் ஓஷதிகள், வெளியிலும் மலியிலுமுண்டான மற்றச செடி கொடி முதலான எல்லாவற்றிற்கும் 2கிருகஸ்தாச்ரமமே மூலம் கிருகஸ் தாச்ரமத்தினால் மோக்ஷமானது கிடையாதென்கிற எவனுடைய வார்த்தைதான் ஸத்யமாகும்? ச்ரத்தையற்றவர்களும் அறிவீனர் களும் ஸூக்ஷ்மமான ஆலோசனையிலலாதவர்களும் சோம்பேறிகளும் (அதனால்) ஒன்றிலும் ஆசையிலலாதவர்களும் ச்ரமத்தையடைந்த வர்களும் தங்கள் பாவச்செய்கையால (கூன்குருடர்களாகிய) கஷ்டத் தை அடைந்தவர்களுமான அவித்வான்களால் சாந்திக்குக்காரண மானஒழிவானது ஸங்யாஸத்திலென்று நிர்ணக்கபபட்டிருக்கிறது. மூன்றுலகங்களுக்குமே 3காரணமும் அனுதியும் ஸ்திரமும் வல்லி யும் பகவானுமான பிராம்மணன் பிறந்ததுமுதல் பூஜிக்கபபடுகிறான். முதலிலேயே த்விஜர்களிடம் கர்பபாதானமந்திரங்கள பிரவருத்திக் கின்றனவல்லவா? வேதமந்திரங்கள் வேதமின்றிநிசசயிக்கமுடியாத வைகளான ஸ்வர்க்கமுதலானவைகளிலும் (மழைமுதலான) பிரத் யக்ஷமானவிஷயங்களிலும் பற்றிக்கொண்டிருக்கின்றன; பித்ருக்க ளுடன்சேர்ப்பதற்காக ஏற்பட்டசரீரதகனத்திலும்சேர்ந்தபிறகுஉண் டான தர்ப்பணச்ராத்தங்களிலும் கோதானம், விருஷபத்தினுத்ஸர் ஜனம், ஜலத்தில் பிண்டங்களைக்கரைத்தல் இவைகளிலும் பிரவருத் திக்கின்றன. அர்சிஷ்மான்கள், பர்ஹிஷத்துக்கள், கிரவயா'தர்கள் முதலானபித்ருக்களும்மந்திரங்களும்மரணத்தை அடைந்தவனுடைய (தகனம்முதலானவற்றை) ஸம்மதிக்கிறார்கள் அவைகளுக்கு மந்தி ரங்கள் காரணம். இவ்விதம் வேதங்கள் முறையிடுகையில ஒருவ னுக்கு மோக்ஷமானது எதலைலஉண்டாகிறது? மனுஷ்யர்கள், பித்ருக் கள், தேவர்கள், அதிதிகள், இவர்கள்விஷயத்தில் கடன்காரர்களா யிருப்பதால் தனமற்றவர்களும் சோம்பேறிகளுமான பண்டிதர்களால் வேதத்தினுண்டானஅர்த்தவாதத்தினுடைய உண்மைஅறிவில்லாமல் ஸத்யம்போல 4ஏற்படுத்தப்பட்டமோக்ஷமானது பொய்யாகும். வேத சாஸ்திரங்களைக்கொண்டு யாகம்செய்கிற பிராம்மணன் பாவங்களால்

---

1 வேறுபாடம்.

2 கிருகஸ்ததர்மத்தால் மழைபெய்து புல்பூண்டுகள் உண்டாகின்றன என்பது கருத்து.

3 வேறுபாடம். 4 வேறுபாடம்.

பற்றப்படுகிறதில்லை? (நரகத்திற்கு) இழுக்கப்படுகிறதுமில்லை. யாகஞ் செய்கிறவன் பசுக்களுடன் உயர்ந்தகதியை அடைகிறான். பிறகு, மறுபடி காமங்களை நினைக்கிறதில்லை. புருஷன் வேதங்களை அவமதித்தலினாலும் வஞ்சனையினாலும் மாயையினாலும் பெரியகதியை அடைகிறதில்லை. [1]பிராம்மணன் பிரம்மத்தை அடைகிறான்' என்றுசொன்னார். கபிலர், 'புத்திமான்களுக்கு, தர்சயாகம் பூர்ணமாஸயாகம் அக்னிஹோத்ரம் சாதுர்மாஸ்யம் இவைகளெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஸனாதனமான [2]தர்மமானது இருக்கிறது. ஒருவிதமானமுயற்சியுமில்லாதவர்களும் நல்லதைரியமுடையவர்களும் உள்ளும்புறமும் சுத்தர்களும் பிரம்மஜ்ஞானமுடையவர்களுமான அந்தப் பிராம்மணர்களே தேவதைகளை அமிருதங்கள் திருப்திசெய்வதுபோலத் திருப்திசெய்கிறார்கள். எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவானவனும் எலலாப்பிராணிகளையும் (ஒன்றுபோலப்) பார்க்கிறவனும் சலனமில்லாதவனும் பிரம்மத்தைவிரும்புகிறவனுமான வித்வானுடையமார்க்கத்தில் தேவாகளுங்கூட மோகத்தை அடைகிறார்கள். கைகளுமுதலான நான்குதுவாரங்களையுடையவனும் சரீரம், இந்திரியம், மனம், புத்தி என்கிற [3]நான்குமுகங்களையுடையவனுமானபுருஷனை [4]வேதவாக்யத்தால் விராட், ஹிரண்யகர்ப்பன், அந்தர்யாமி, சுத்தமென்கிற நான்குவிதமாக ஜீவன் அடைகிறான். கைகளும் வாக்குமூதரமும்குறியும்அந்தத்தேவர்களுக்கு வாயில்கள் அந்தவாயில்களைக் காக்கவிரும்பவேண்டும். புத்திமானானவன் சொக்கட்டான்காய்களால்விளையாடக்கூடாது; பிறனுடையபொருளைக் கவரக்கூடாது; உறவினனல்லாதவனுடையஹவிஸைக் கிரகிக்கக்கூடாது; (அதாவது, அவனுக்குயாகம் செய்விக்கக்கூடாது;) கோபத்தையடைந்து ஒருவரையும் அடிக்கவே கூடாது. அப்படியிருந்தால், இவனுடைய அந்தக்கால்கைகள் நன்கு ரக்ஷிக்கப்பட்டனவாகும் கடுஞ்சொல் சொல்லக்கூடாது. வீண்வார்த்தை சொல்லக்கூடாது கோள்சொல்லக்கூடாது. ஜனங்களைக் குறித்துஅபவாதம் சொல்லக்கூடாது. ஸத்யத்தையே விரதமாகக் கொள்ளவேண்டும். அஜாக்ரதையில்லாமல் மிதமாகப் பேசவேண்டும். அப்படியானால் அவனுடையவாக்கு நன்கு காக்கப்பட்டதாகும். ஆகாரம்செய்யாமல் இருக்கக்கூடாது அதிகஆகாரம்செய்யவும் கூடாது. ஜிஹ்வாசாபல்யமில்லாமலிருக்கவேண்டும் பெரியோர்க

1 வைதிககர்மாவைச் செய்பவன். 2 வேறுபாடம்.
3 யோகஸாதனங்களை. 4 வேறுபாடம்.

ளால் ஆகாரத்திற்காக அடையப்பட்டவனுக இருக்கவேண்டும். சரீர யாத்ரைக்குவேண்டியஆகாரத்தை அடையவேண்டும். அப்படியானால் அவனுடையஉதர்வாயில்கன்குகாக்கப்பட்டதாகும். பிறன்மணீவியை விரும்பக்கூடாது. ருதுவில்லாதகாலத்தில் தன்ஸ்திரீயையும் அழைக்கக்கூடாது. 1தான் பத்நீவிரதமுள்ளவனுக இருக்கவேண்டும். அவ்விதமானால் இவனுடையசூறி ரக்ஷிக்கப்பட்டதாகும். எந்தப்புத்திசாலியினுடையசூறி உதரம் கைகள் நான்காவதானவர்க்கு இந்நான்குவர்யில்களும் முழுதும்நன்குரக்ஷிக்கப்படுகின்றனவோ அவன்தான் இருபிறப்புடையவன். துவாரங்களைக்காப்பாற்றுதவனுக்கு எல்லாம் பயனற்றவை ஆகிவிடும். அவனுக்குத் தவத்தினால் என்ன பயன்? யாகத்தினால் என்ன பயன்? சரீரத்தினால்தான் என்ன பயன்? உத்தரீயமில்லாமல் ஒருவஸ்திரமுடையவனும் விரிப்பில்லாமல் சயனம் செய்கிறவனும் கைகளைத்தலையணையாகவுடையவனும் சமனத்தை அடைகிறவனுமானவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கிறார்கள் எல்லாரும் சீதோஷ்ணமுதலான த்வந்துவங்களில் களித்துக்கொண்டிருக்கும்பொழுது பிறருடைய (ஸுகதுக்கங்களை) நினையாமல் தனியாயிருந்து (ஆத்மாவில்) ஸுகித்துக்கொண்டிருக்கும் முனிவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கிறார்கள். காரணமும் காரியமுமான எல்லாப்பொருள்களையும் எல்லாப்பிராணிகளுடைய கதியையும் அறிந்தவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கிறார்கள். எவனுக்கு எல்லாப்பிராணிகளிடமிருந்தும் பயமில்லையோ, எவனிடமிருந்து எல்லாப்பிராணிகளுக்கும் பயமில்லையோ, எவன் எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவாயிருக்கிறனை அவனைத் தேவர்கள் பிராம்மணனுக நினைக்கிறார்கள. மனிதன் வேதங்களில் சொல்லப்பட்ட கர்மங்களுடைய (சித்தசுத்திரூபமான) பயனைப்பற்றி அறிகிறதில்லை. அதை முழுதும் அறியாமல் வேறபயனை விரும்புகிறன். தம்கர்மாக்களுடன் பற்றிக்கொண்டிருப்பவர்களுடைய தவம் கோரமாகின்றது. மனிதர்கள் ஆச்சரியகரமும் அனுதியும் அவஸ்யம் அனுஷ்டிக்கத்தக்கதும் நிச்சயமாய்ப் பயனைக்கொடுக்கிறதுமான அந்த ஸதாசாரத்தை அனுஷ்டிக்க இயலாதவர்களாயிருக்கிறார்கள். ஆகையால், தர்மங்களில் சிறிது குறிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆபத்தர்மமில்லாமலும் அஜாக்ரதையில்லாமலும் விருப்பு வெறுப்புக்களால்சூழப்படாமலுமிருக்கின்றது ஆசாரம்; கர்மங்களைப் பயனுள்

1விவாஹம்செய்துகொள்ளாதஸ்திரீகளை விலக்கவேண்டுமென்பது.

ளவைகளும் ஐஸ்வரியமுள்ளவைகளும் நிலையுள்ளவைகளும் குணமில்லாதவைகளும் அநேகங்களுமாக யார் பார்க்கமாட்டார்? அவைகளுடையகுணங்கள் ஒருவராலும் சிறிதும் அறியக்கூடாதவைகளாயிருக்கின்றன; அறியப்பட்டாலும் இப்பொழுது அனுஷ்டிக்கமுடியாதவைகளாயிருக்கின்றன; அனுஷ்டிக்கப்பட்டாலும் அழிவுள்ளபயனை அளிக்கின்றனவென்று நீர் அறிகிறீர்' என்று சொன்னர். ஸ்யூமரச்மி, 'கர்மம் ஸன்யாஸம் என்ற இரண்டு மார்க்கங்களும் வெளிப்படையாயிருக்கின்றன. வேதம் பிரமாணமாவதும் ஸந்யாஸம் பயனுள்ளதாவதும் எவ்விதம்? பகவானே! அதை எனக்குச் சொல்லும்' என்றார். கபிலர், 'ஸன்மார்க்கத்திலிருக்கின்ற நீங்கள் பிரத்யக்ஷத்தைக் கவனியுங்கள். நீங்கள் எதை அனுஷ்டிக்கின்றீர்களோ அதில் எது பிரத்யக்ஷமாயிருக்கின்றது?' என்றனர். ஸ்யூமரச்மி, 'ஓ! பிராம்மணரே! ஸ்யூமரச்மி என்கிற நான் தெரிந்துகொள்வதற்காக இவ்விடம்வந்தேன்; சூக்ஷமத்தைவிரும்பி மனவுண்மையினால் எதிர்த்துக் கேட்டேன்; வாதிக்கவேண்டுமென்கிறஎண்ணத்தினால் கேட்கவில்லை. இந்த அரியஸம்சயத்தை எலலாமறிந்தநீர் எனக்குச் சொல்லவேண்டும். ஸன்மார்க்கத்திலிருக்கின்றநீங்கள் இந்தவிஷயதத்தில பிரத்யக்ஷத்தைப பார்க்கின்றீர்கள். நீங்கள் அனுஷ்டிக்கிறதில் மிகவும்பிரத்யக்ஷமாயுள்ளது எது? தர்க்கசாஸ்திரங்களுக்குவேறான ஆகமத்தின்அர்த்தத்தை ஆகமத்திலுள்ளபடி அறிகிறேன் வேதவாதங்களும் [1]ஆகமம்; தர்க்கசாஸ்திரங்களும் ஆகமம் ஆஸ்ரமதருமத்திற்குத்தக்கபடி உபாவலிக்கவேண்டும். அதில ஆகமம் லித்திபெறுகிறது. ஆகமத்தின் நிசசயத்தினால் காரியலித்தியானது பிரத்யக்ஷம்போலக காணபபடுகிறது ஓ! வேதியரே! ஓடத்திலகட்டபபட்டதும் வெள்ளத்தால் அந்தக்கட்டுடன் அடித்துக்கொண்டு போகபபட்டதுமான மற்றோர் ஓடம்போல (குபுத்தியாகிறவெள்ளத்தால் ஆகமநிச்சயமாகிறமூலத்துடன்) இழுக்கப்படுகிறகாரியலித்தியானது (அந்தக்) கெட்டபுத்தியுள்ளவர்களை எபபடி கரையேற்றப்போகிறது? எல்லாமறிந்தநீர் இதைச் சொல்லவேண்டும். உம்மை அடைந்தவனுக இருக்கிறேன். எனக்கு உபதேசம்செய்யும் ஒருவனும் தியாகியாகவுமில்லை ஸந்தோஷமுடையவனுகவுமில்லை; சோகமில்லாதவனுகவுமில்லை; வியாதியில்லாதவனுகவுமில்லை; அறியவிருபபமில்லாதவனுகவுமிலலை; சோக்கையற்றவனுகவுமில்லை; ஒழிவுள்ளவனுகவுமில்லை. நாங்கள் எப்படியோ

[1] சாஸ்திரம்.

அப்படியே நீங்களும் ஸந்தோஷிக்கவும்செய்கின்றீர்கள்; துக்கிக்க வும்செய்கின்றீர்கள். உங்களுடைய இந்திரியவிஷயங்களும் எல்லா ஜந்துக்களிடமும் ஸமமாயிருக்கின்றன. இப்படிப்பட்டநான்குவர் ணங்களுடைய மார்க்கங்களிலும் நான்குஆச்ரமங்களுடையமார்க் கங்களிலும் சிறந்தஒன்றைஅடைகிறவர்களுக்கு முடிவில் எது குறை வற்றதாகும்? எல்லாமறிந்தநீர் இதை எனக்குச சொல்லவேண்டும். உங்களை அடுத்தவனாயிருக்கிறேன். ஓ! எனக்கு உபதேசம்செய்ய வேண்டும்' என்றார். கபிலர், 'இந்தவர்ணஆச்ரமாசாரங்களில் எதை எதை ஆசரிக்கின்றானோ அந்தஎல்லாப்பிரவிருத்திகளிலும் சாஸ்திரம் பயனுள்ளதாகிறது எந்தஆச்ரமத்தில் எவனுக்கு அனுஷ்டானம் ஏற்படுகிறதோ அவனுக்கு அதுவே தோஷமில்லாததாயிருக்கிறது. எவன் ஞானவழியைப் பற்றுகிறானோ அவனுக்கு ஞானமானது எல்லாவற்றையும் அடைவிக்கிறது. ஞானத்தைவிட்டுவிலகியிருக் கின்றவிருத்தியானது பிரஜைகளை நாசஞ்செய்கிறது நீங்கள் எப் பொழுதும் ஞானமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்; எல்லாவற்றிலும் தோஷமில்லாதவர்களாயு மிருக்கிறீர்கள் (அனேககாலில்) ஒருவ னல்லவோ ஏகாத்மாவாயிருக்கும்தன்மையை ஒருபோது அடைகி றான்? சில ஜனங்கள் வாதத்தின்சாஸ்திரபலத்தினால சாஸ்திரத்தை உள்ளபடிஅறியாமல்விருப்புவெறுப்புக்களால்கவரப்பட்டுஅகங்காரத் திற்கு வசமானார்கள்; சாஸ்திரங்களின்உண்மையையறியாமல் சாஸ்தி ரத்திருட்டர்களும் பிரம்மத்திருடர்களும் நன்முயற்சியில்லாதவர்களும் பக்குவமில்லாதமனமுடையவர்களும் அமங்களமுள்ளவர்களுமாகிக் குணமில்லையென்றே நினைக்கின்றார்கள்; குணங்களை மற்றவர்களுக்கு உண்டுபண்ணுவதில்லை. அஜ்ஞானத்தையே சரீரமாகவுடைய அவர்க ளுக்கு அஜ்ஞானமே கதி. எந்த ஜந்துவானது எவ்விதஸ்வபாவ மூள்ளதாயிருக்கிறதோ அது அந்தஸ்வபாவத்தினுடையவசத்தை அடையும். அதனுக்குப் பகை, விருப்பு, சினம், டம்பம், பொய், மதம்என்னும்குணங்கள் அந்தஸ்வபாவத்தினால்உண்டாகி எப்பொழு தும் அனுஸரிக்கின்றன ஸமாதியில்பற்றுதலுள்ளவர்களும் உத்தம கதியைவிரும்பினவர்களுமானயதிகள் அந்தபரமத்தைஅறிந்து தியா னஞ்செய்து சுபாசுபங்களை விலக்கிக்கொள்ளுகிறார்கள்' என்றுசொன் னார். ஸ்யூமரச்மி, 'ஓ! பிராம்மணரே! உம்மால் சாஸ்திரப்படி இவை களெல்லாம்சொல்லப்பட்டன சாஸ்திரத்தின்அர்த்தத்தைஅறியாமல் பிரவ்ருத்திகள் நடப்பதில்லை. நியாயமான ஆசாரமெல்லாம் சாஸ்திர

மென்று வேதம் கூறுகிறது. எது அந்யாயமோ அது அசாஸ்திர மென்றும் வேதம் கூறுகிறது. சாஸ்திரமின்றி ஒரு செய்கையும் இல்லையென்பது நிச்சயம் வேதவாதங்களுக்குவிலக்கானது அசாஸ்திரமென்று ஸ்ருதிசொல்லுகிறது. மிகவும் அகங்காரிகளான அனேகர்கள் சாஸ்திரத்திலிருந்துவிலகினதையே பார்க்கின்றார்கள் சிலர் இகத்திலும் பரத்திலும் ஏற்பட்டசாஸ்திரத்திலுள்ள தோஷங்களைப் பார்க்கிறதில்லை. இந்திரியவிஷயங்களும் உங்களுக்கும் ஸகலஜந்துக்களுக்கும் ஸமமாயிருக்கின்றன. இவ்விதம் நான்குவர்ணங்கள் நான்குஆச்ரமங்கள் ஆகிய இவைகளுடையபிரவருத்திகளில்ஒன்றை அடைகினறவர்களுக்கு முடிவில எல்லாவிதத்திலும் பயனுளளதென் பதைச்சொல்லுகிறவரும் ஸமாதருமானஉம்மால விஜ்ஞானமில்லாதவர்களும் கெட்டஅறிவையுடையவர்களும் குறைவான அறிவுடைய வர்களும் தமோகுணத்தால வியாபிக்கபபட்டவாகளுமாயிருக்கின்றநாங்கள் சித்தத்தால் வசீகரணஞ்செய்யப்பட்டோம் தனித்திருப்பவனும் யோகத்தேதாடுகூடினவனும் எல்லாவிஷயத்திலும் ஸமர்த்தனும் நிறுதும் 1பேசாதவனும் சக்தியுள்ளவனும் மனத்தைஜயித்தவனுமாயிருக்கிறவன் சரீரமாத்திரத்தை அவலம்பித்துக்கொண்டு எல்லாத்திக்கிலும் சஞ்சரிக்கவேண்டி வேதத்தின் அர்த்தவாதத்தை நம்பி மோக்ஷமானது இருக்கிறதென்று சொல்லத்தகும். நியாயம்சாஸ்திரமிவைகளைவிட்டவனும் ஸகலஜனங்களையும் தூஷிக்கின்றவனுமாயிருக்கிறவனுல் குடும்பத்தை ஆச்ரயித்தஇந்தக்கர்மம் செய்யமுடியாதது தானம், அத்தியயனம், யஜ்ஞம், பிரஜைகளுடைய உற்பத்தி, நேராயிருத்தல் இவைமுதலானவைகளைச் செய்துங்கூட ஒருவனுக்கும் மோக்ஷமானது இல்லையென்றிருக்குமானுல் (அவைகளைச்செய்கின்ற) கர்த்தாவையும் கர்மாவையும் நிந்திக்கவேண்டும். இந்தஸ்ரமமும் பயனில்லாததாகும். வேறுவிதமாக நாஸ்திக்கியம் ஏற்படும். வேதங்களும் விலக்கப்பட்டனவாகும். ஓ! ஸர்வஜ்ஞரே! இந்தக் கர்மாவின்நித்யமானபயனியளிக்கும்தன்மையை விரைவில் கேட்கவிரும்புகிறேன். பிராம்மணரே! எனக்கு உண்மையைச்சொல்லும். உம்மை நான் அடைந்தவனுயிருக்கிறேன் எனக்கு உபதேசிக்கவேண்டும். ஓ! பிராம்மணரே! உம்மைஅடுத்த எனக்கு உண்மையை உபதேசிக்கவேண்டும். நீர மோக்ஷத்தை அறிந்தவண்ணம் எனக்கும் கற்பிக்கவேண்டும்' என்றுசொன்னர்.

---

1 'வதமாநர' என்று பாடம்கொள்ளப்பட்டது.

ஸ்ரீ மஹாபாரதம்.

இருநூற்றெழுபத்தாறுவது அத்யாயம்

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கபிலருக்கும் ஸ்யூமரச்மிக்கும்நடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

"கபிலர், 'வேதங்கள் உலகங்களுக்குப் பிரமாணம் வேதங்கள் விலக்கப்படுகிறதில்லை சபதப்ரம்மம் பரப்ரம்மம்என்னும் இரண்டு பரம்மங்களும் அறியத்தக்கவைகள் சப்தபரம்மத்திலஸமர்த்தனுயுள்ளவன் பரப்ரம்மத்தை அடைகின்றான் [1]வேதத்தில்சரீரத்தைஉபயோகப்படுத்துவதென்பதே இந்தச்சரீரத்தின் உபயோகம் சரீரசுத்தியுள்ளபிராம்மணனே பாத்ரனாகிறான் கர்மாக்கள் நித்யமான பயனளிப்பதைஆலோசித்து வேதமாத்திரத்தினால அறியமுடியாததும் புத்தியால நிச்சயிக்கமுடியாததும் இந்திரியத்திற்குப்புலப்படாததும் எல்லாஜனங்களுடைய அனுபவத்தையும் ஸாக்ஷியாகக்கொண்டதுமான அப்பயனை உமக்குச சொல்லுகிறேன் எவர்கள் பயனில்விருப்பமில்லாமல் கர்மமென்றே யஜ்ஞங்களைச செய்கிறார்களோ அவர்களால கிடைத்ததை உடனேசெலவுசெய்கிறவர்களும் லோபமில்லாதவர்களும் விருப்புவெறுப்பற்றவர்களுமாவார்கள். ஸத்பாத்திரங்களில தானம் செய்வதுதான் தனமுள்ளவர்களுக்கு மார்க்கம். ஒருபோதும் பாபகர்மத்தைஅடையாதவர்களும் கர்மயோகத்தையுடையவர்களும் மனத்தின்ஸங்கல்பத்தில் விதியடைந்தவர்களும் சுத்தமான அறிவின் உறுதியையுடையவர்களும் மோபம் அஸூயை அகங்காரம் மாத்ஸரியம் இவைகளற்றவர்களும் ஜ்ஞானஸாதனத்தில்நிஷ்டைபெற்றவர்களும் (உற்பத்தி, கர்மா, வித்தை என்னும்) மூன்றும் சுத்தமாகவுள்ளவர்களும் எல்லாப்பிராணிகளின் க்ஷேமத்திலும்பற்றுதலுள்ளவர்களும் தம்தர்மங்களிலாதரவுடையவர்களும் விதிப்படிநடக்கின்றவர்களுமாயிருக்கின்ற (யாஜ்ஞவல்கியர் முதலிய) பிராம்மணர்களும் (ஜனகர்முதலிய) அரசர்களுமான, அனேகர் கிருகஸ்தர்களாயிருந்தார்கள் ஸமமாயிருப்பவர்களும் ஒழுங்கானதன்மையுடையவர்களும் (எப்பொழுதும்) சந்தோஷத்தையடைந்தவர்களும் ஞானத்தில உறுதியுள்ளவர்களும் பிரத்யக்ஷமாக (சித்த சித்திரூபமான) தர்மபலத்தைஅனுபவிக்கிறவர்களும் சுத்தர்களும்

1 'வேதத்தில்சொல்லியபடி ஸம்ஸ்காரத்துடன் சரீரத்தைஉண்டுபண்ணுவதுதான் சரீரத்தின்சுத்தியாகும்' என்பது பழையவுரை.

பரப்ரம்மத்தில்ஸ்ரத்தையுடையவர்களும் முன்ஜன்மத்திலேயேசுத்த வாஸனையுள்ளமனத்தையுடையவர்களும்உள்ளபடிவிரதத்தைஅனுஷ்டித்தவர்களுமாயிருக்கின்ற அவர்கள் கஷ்டதசையிலும்அஸௌகரியமானஸ்திதியிலும் இருந்தாலும் தர்மத்தை அனுஷ்டிக்கின்றார்கள். அவ்விதம் சேர்ந்து தர்மத்தை அனுஷ்டித்த அவர்களுக்கு முன்கஷ்டத்தில் அது ஸுகமாகத்தானே இருந்தது? அவர்களுக்கு ஒருவிதமாகவும் பிராயச்சித்தமானது செய்யவேண்டியதாயிருக்கலில்லை. ஸத்யமான தர்மத்தைஅடைந்து (ஒருவராலும்) கொஞ்சமும்நெருங்கமுடியாதவர்களாக லுபடுக்கொள்ளபபட்டஅவர்கள் தம்புத்திசென்றவழி செல்லுகிறதில்லை; முடிவாகத் தர்மத்தில் கபடத்தைசெய்கிறதில்லை. தர்மத்தில் எது முதற்கற்பனையோ அதையே அனுஷ்டிப்பவர் பெரியவர். இந்த நிலையிலிருப்பவர்களுக்குப் பிராயசசித்தம்இல்லை துர்பலமானமனமுள்ளவர்களுக்கு பிராயசசித்தம் ஏற்படும். இவ்வித ஆசாரத்தையுடையவர்களும் யாகத்தைநடத்துகிறவர்களும் முன்னோர்களுமான இவர்கள் பின்வருமாறு சொல்லுகிறார்கள் வேதத்தில் சிறந்தவர்களும் சுத்தர்களும் சீலமுடையவர்களும் கீர்த்திபெற்றவர்களுமான வித்வான்கள பயனிரும்பாமல ஒவ்வொருநாளும் யாகங்களைச செய்கிறார்கள அவர்களுடையயாகங்களும் வேதங்களும் மற்றக்காமங்களும் பொருள்வரவுக்குத்தக்கபடி ஏற்படுகின்றன வரவுஸங்கல்பத்தையனுஸரித்தும் ஸங்கல்பமும் விரதத்தையனுஸரித்தும் ஏற்படுகின்றன காமக்ரோதமற்று மற்றவர்களால் அனுஷ்டிக்க அரிய ஆசாரித்தையும் கர்மத்தையுமுடையவர்களும் தங்கள்கர்மங்களால் ப்ரவ்ருத்திபெற்றவர்களும் ஸ்வபாவமாகவே மேலானசித்தமுடையவர்களும் ஒழுங்கானவர்களும் எப்பொழுதும் அடக்கமுள்ளவர்களும் தங்கள்கர்மங்களிலிருக்கின்றவர்களுமானவர்களுக்கு எல்லாம் அழிவற்றபயனுடையவையென்று நமக்குப பலநாளாகக் கேள்வி. உதாரசித்தமுடையவர்களும் மற்றவர்களால் அனுஷ்டிக்கமுடியாத ஆசாரகர்மங்களையுடையவர்களும் தங்கள் கர்மங்களால் பிரவ்ருத்திபெற்றவர்களுமாயிருக்கிறவர்களுடைய தவமானது கோரமாயிருக்குந்தன்மையை அடைந்தது. ஆசசரியகரமானதும் ஆதியிலேயே உண்டானதும் நிலைபெற்றதும் உறுதியுள்ளதுமான அந்தஸதாசாரத்தை அனுஷ்டிக்க முடியாதவர்களாலே தர்மங்களில் சிறிது அறிவிக்கப்பட்டது. ஓ! பிரபுவே! மூன்காலத்தில் ஸகலஜாதிகளிலும் ஆபத்தர்மமேயில்லாத ஆசாரமும் ஜாக்கிரதையும் காமக்ரோதங்களால்

அவமானமில்லாமையுமிருந்த காரணத்தால் ' அவர்களில் ஒருவித வித்தியாஸமும் இல்லாமலிருந்தது. பிறகு, மனிதர்கள் ஒரே தர்மத்தை நானுபாதமாக அடைந்தார்கள். ஸத்துக்கள் அந்தத் தர்மத்தை விதிப்படிசெய்து உத்தமகதியை அடைகிறார்கள் சிலர் கிருகங்களிலிருந்துவெளிக்கிளம்பி வனத்தைஅடைந்து உத்தமகதியை அடைந்திருக்கிறார்கள் சிலபிரம்மசாரிகள் கிருகஸ்தாச்ரமத்தை ஆச்ரயித்து உத்தமகதியை அடைகின்றார்கள். பிராம்மணர்கள் நாலாகப் பகுக்கப்பட்ட ஆச்ரமத்தை ஒன்றுகவே அறிகிறார்கள். இவ்விதமான நீதியையுடைய இந்தமுன்னோர்களான பிரம்மசாரிகள், எல்லா ஆச்ரமங்களிலுமுள்ள எல்லோர்களும் உத்தமகதியை அடைகிறார்களென்றுசொல்லுகின்றார்கள். அப்படிப்பட்ட இந்தப பிராம்மணர்கள் ஸந்தோஷத்தினுல் எல்லையற்ற பிரம்மபாவத்தையடைந்து ஜோதிவடிவமாகி ராசி சக்கரங்களில அச்வினீமுதலான நக்ஷத்திரங்கள்போல அனேகமான நக்ஷத்திரக் கூட்டங்களாகி ஆகாயத்தில் காணப்படுகிறார்களென்பது வேதவசனம் அப்படிபபட்டவர்கள் பூர்வகாமத்தினுல் மறுபடியும் யோனிகளில ஜனித்து ஸம்ஸாரத்தை அடைந்தால் ஒருபோதும் பாபகர்மத்தினுல் வியாபிக்கப்படுகிறதில்லை. வேதாந்த விசாரத்தில் விருபபமுள்ளவனும் உறுதியான நிசசயத்தையுடைய வனுமான பிரம்மசாரியானவன் இப்படியே ஆகிறான். இவ்விதம் ஸதாசாரமுடையவன் பிராம்மணனுவான் மற்றவன் பிராம்மணப் போலியாவான். நல்லவனே, கெட்டவனே என்பதை மனிதனுடைய செய்கையே சொல்லுகிறது. இவ்விதம் பக்குவசித்தமுள்ளவர்களுக்கு வேதாந்தச்ரவணத்தினுலும் அதனுலுண்டான அனந்தமான பிரம்மபாவத்தினுலும் எல்லாவித்திலும் அழிவற்ற தன்மை உண்டாயிற்றென்று நமக்கு அழிவற்றவேதம் கூறுகிறது. ஆசைநீங்கினவர்களும் சுத்தர்களும் மோக்ஷத்தில் விருப்பமுள்ள மனமுடையவர்களுமான அவர்களுக்கு நான்காவதும் உபநிஷத்தில் சொல்லபபட்டதும் எல்லாவர்ணத்தார்களுக்கும் பொதுவானதுமான (சமம் தம முதலான) தர்மமான துஸ்மிருதிகளில்சொல்லபபட்டிருக்கிறது. வித்தி பெற்றவர்களும் மனத்தைவசஞ்செய்தவர்களுமான பிராம்மணர்களால் நித்தியமான பிரம்மஜ்ஞானமானது ஸாதிக்கப்படுகிறது. யதியின் தர்மமானது ஸந்தோஷத்தைக் காரணமாகவுடையதும் தியாகரூபமும் ஞானத்திற்குக் காரணமும் மோக்ஷத்தில் புத்தியை உண்டுபண்ணுகிறதும், அழிவில்லாததும் அனுதியுமாகச சொல்லப்

படுகிறது. அந்த யுகிதர்மமானது தன்வைராக்ய பலத்திற்குத்தக்க படி இதர ஆஶ்ரமதர்மத்துடன் சேர்த்தாவது தனியாகவாவது அனுஷ்டிக்கப்படுகிறது. புத்திவன்மையுடையவர்கள் க்ஷேமத்தை அடைகிறார்கள். புத்திபலமில்லாதவன் இந்த ஸம்ஸாரத்தில் தன் பப்படுகிறான். பிரம்மபதத்தை விரும்புகிற சுத்தஞானபிராம்மணன் ஸம்ஸாரத்திலிருந்து விடுபடுகிறான்' என்று சொன்னர். ஸ்யூமரஶ்மி, 'எவர்கள் தர்மமாக [1]ஸம்பாதிக்கப்பட்டபொருள்களினால் போகத்தை அடைகின்றவர்களும் தானஞ்செய்கின்றவர்களும் யாகஞ்செய்கின்றவர்களும் அத்யயனஞ்செய்கின்றவர்களுமாயிருக்கிறார்களோ?, எவர்கள் ஸன்யாஸத்தை அடைந்தார்களோ, இவர்களுள் எவர் மரணத்தின் பிறகு ஸ்வர்க்கத்தை நன்குஜயித்தவர்கள்? ஓ! பிராம்மணரே! கேட்கின்ற எனக்கு இதை உள்ளபடி சொல்லவேண்டும்' என்று கேட்க, கபிலர், 'ஸகலமான [2]பரிக்ரகத்தையுமுடையதர்மாஶ்ரமங்களும்குணத்தினால் சுபகரங்களாயும் மறுமைப்பயனைத் தருபவைகளாயுமிருக்கின்றன. ஆனாலும் அவர்கள் ஸன்யாஸத்தினாலுண்டானஸுகத்தை அடைந்தவர்களாகஇல்லை இதை நீரும் அறிகிறீர்' என்றுசொன்னர். ஸ்யூமரஶ்மி, 'நீங்கள் ஞானநிஷ்டர்களும் கிருதகஸ்தர்களும் தர்மநிச்சயமுடையவர்களுமாயிருக்கின்றீர்கள். எல்லா ஆஶ்ரமங்களுக்கும் மூஷ்வில் ஒரேபயன் சொல்லப்படுகிறது. (ஆகையால் ஆஶ்ரமம்) ஒன்றுயிருப்பதினும் பலவாகப்பிரிப்பதினும் வேறுவிசேஷம் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகையால், எல்லாமறிந்தநீர் நியாயமாக உள்ளபடி எனக்குச் சொல்லவேண்டும்' என்றார் கபிலர், 'கர்மங்கள் (ஸ்தூல ஸூக்ஷ்ம) சரீரசுத்தியைச் செய்கின்றன. ஞானமோ மோக்ஷஸாதனம் சித்தத்தின் [3]மலமானது பக்குவமான காலத்தில் விஜ்ஞான முண்டாகிறது. உண்மையான ஞானமிருக்கும்பொழுது பூததயை, [4]பொறுமை, [5]சாந்தி, கொல்லாமை, ஸத்யம், நேர்மை, துரோகமில்லாமை, அபிமானமில்லாமை, லஜ்ஜை, சீதோஷ்ணமுதலியவற்றைப் பொறுத்தல், ஒழிவு இவ்விதமான ப்ரம்மமார்க்கங்கள் ஏற்படுகின்றன. இவைகளால் பரப்ரம்மத்தை அடைகின்றான். ஆகையினால், வித்வானானவன் கர்மபலத்தின்நிச்சயத்தை மனத்தினால் உற்றுப்

1 'லப்தாபி:' என்று பாடம் கொள்ளப்பட்டது. 2 சேர்க்கை.
3 'ஹதாயே' என்று பாடங்கொள்ளப்பட்டது.
4 ஒருவர் கோபம்வரும்படி செய்தாலும் கோபம்வராமலிருத்தல்.
5 மனவடக்கம்.

பார்க்கவேண்டும். எல்லாவற்றிலும் அடக்கமுடையவர்களும் விசுத்தர்களும் பிரம்மஜ்ஞானத்தில் உறுதிபெற்றவர்களுமாயிருக்கிறவேதியர்கள் ஸந்தோஷத்தைஅடைந்தஎந்தக்கதியை அடைகின்றார்களோ அதை உயர்ந்தகதியாகச சொல்லுகின்றார்கள். இவ்விதம் வேதங்களையும் வேதத்திலுள் அறியக்கூடிய கர்மப்ரம்மஸ்வரூபத்தையும் அவ்வேதவின் அனுஷ்டானத்தின்ஸ்திதியையும் அறிந்தவன் வேதவித்தாகிறான். இதற்கு வேறுயுள்ளவன் காற்றுநிறைந்த தோல்துருத்தியாகிறானென்று சொலலுகின்றார்கள். வேதத்தை அறிந்தவர்கள் எல்லாவற்றையும் அறிகின்றார்கள். வேதத்தில் எல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கினறன. வேதத்திலலலவோ இப்பொழுது எதுஎது இருக்கின்றனவோ, எதுஎது [1]இல்லையோ அந்தஎல்லாவற்றிற்கும் இருப்பு இருக்கிறதென்பதும் இல்லைஎன்பதுமே எல்லாவஸ்துக்களுக்கும் இயற்கை'' பிரம்மத்தையறிந்தவனுக்கு இது [2]முடிவும் [3]நடுவும் ஸத்தும் அஸத்துமாயிருக்கின்றது. (வேதமானது) ஸன்யாஸமென்று தானே முடிந்திருக்கின்றது? சமமென்றுதானே நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது? ஸந்தோஷமென்று எங்கும் வியாபித்திருக்கின்றது. மோக்ஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது? ஒருகாலமும்பாதிக்கப்படாததும் வ்யக்தாவ்யக்தமும் அறியப்பட்டதும் அறியவேண்டியதும் எல்லாவற்றிற்குமாத்மாவும் ஸ்தாவரஜங்கமரூபமும் முழுதும் ஸுகமும் சிவமும் பரமேஷ்டமும் (ராகிகளுக்குப்) பிரகாசியாததும் ஜகத்தின்உற்பத்திலயகாரணமுமானப்ரம்மமானது தேஜஸ், க்ஷமை, சாந்தி, கெடுதலற்றசுபம், அப்படிப்பட்டவிதாமஸுகாதகம், [4]துருவமென்கிறஇந்தச்சொற்களாலே ஞானக்கண்ணுடையபிராம்மணர்களால் அறியப்படுகின்றது. ஆகையால், பிரம்மரூபமான அந்தப்பிராம்மணனுக்கு நமஸ்காரம்' என்றுசொன்னர்'' என்றார்

---

1 முன்சென்றதும் இனிவருவதும்.

2 மோக்ஷரூபமாயும். 3மத்தியில்தோன்றுகின்றஜகத்தாயும்.

4 நிலையுள்ளது.

இருநூற்றெழுபத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(அறம்பொருளின்பங்களுள் அறமே சிறந்ததென்பதைப்பற்றிய குண்டதாரன்கதை.)

யுதிஷ்டிரர், "ஓ! பாரதரே! வேதங்களை தர்மத்தையும் அர்த்தத்தையும் காமத்தையும் சொல்லுகின்றன இவைகளுள் எதை அடைவது ச்லாக்யம்? ஓ! பிதாமஹரே! அதை எனக்குச் சொல்லவேண்டும்" என்றுகேட்க, பீஷ்மர்சொல்லலானார், "இந்தவிஷயத்தில் முன்பு குண்டதாரன் ப்ரீதியுடன் பக்தனுக்கு உபகாரம்செய்ததாகிய பழமையான கதையை உனக்குச்சொல்லப்போகிறேன். தரித்திரரான ஒரு பிராம்மணர் ஆசையினால் [1]தனத்தைப்பெறுகிறார் அதனால் அவர் யாகத்திற்காகத் தனத்தைவிரும்பி உக்ரமான தவத்தைச் செய்தார். பிறகு, அவர் உறுதிசெய்துகொண்டு தேவதைகளைப் பூஜித்தார்; பக்தியுடன் தேவதைகளைப்பூஜித்தும் தனத்தை அடையவேயில்லை. பிறகு, அவர்,'மனிதர்களால் ஸ்ரமப்படுத்தப்படாததுமானதும் எனக்குச்சீக்கிரத்தில் அருள்செய்யக்கூடியதுமான தெய்வம்எதோ?'என்றுசிந்தையைபடைந்தார். அவர், பிறகு, தெளிவானமனத்தினால் தேவனுக்குப்பின்செல்லுகிறதும் தமதருகிலிருக்கிறதுமான குண்டதாரனென்கிற மேகத்தைப பார்த்தார். மஹாபாஹுவான அந்தமேகத்தையைப பார்த்தவுடனே, 'இவன் எனக்கு மேலுமையைசெய்வான் இந்தமேனி அபபடிப்பட்டதாயிருக்கிறது தேவனுக்குநெருங்கியவனுயிருக்கிறான்; வேறு மனிதர்களால வரிக்கப்படவுமில்லை இந்தத்தேவனை விரைவிலேயே எனக்கு அதிகமான தனத்தைக் கொடுப்பான்' என்று அவருக்குப் பக்தி உண்டாயிற்று பிறகு, அவர் அந்தத்தேவனின்தூபங்களாலும் கந்தங்களாலும் ஏற்றுத்தாழ்வுள்ளமாலைகளாலும் நானாவிதமான பூஜைகளாலும் பூஜித்தார். அப்பொழுது அந்தப்பூஜையினால் அற்பகாலத்தினுலேயே அந்தமேகமானது சந்தோஷத்தையடைந்து, 'பிரம்மஹத்திசெய்தவனுக்கும் ஸுராபானம்செய்தவனுக்கும் திருடனுக்கும் விரதபங்கமுடையவனுக்கும் அறிஞர்களால் பரிகாரம் விதிக்கபட்டிருக்கிறது; செய்தகன்றிமறந்தவன்விஷயத்தில் பரிகாரம் விதிக்கப்படவில்லை. அதர்மம் ஆசையின்புத்திரனாகவும் குரோதம் அஸூ

[1] 'தர்மத்தை' என்பது வேறுபாடம்.

யையின் புத்திரனுகவும் லோபம் வஞ்சனையின்புத்திரனுகவும் எண் ணப்படுகின்றன. நன்றிமறந்தவன் பிரஜைக்கு யோக்கியனில்லை' என்று அவருடைய உபகாரத்தில் உறுதியான இந்தவார்த்தையைச் சொல்லிற்றும். பிறகு, அந்தப்பிராம்மணர் தர்ப்பங்களில் சயனஞ் செய்துகொண்டு அப்பொழுது குண்டதாரனுடைய தேஜஸ்ஸினல் ஸ்வப்னத்தில் எல்லாப்பிராணிகளையும் பார்த்தார். சமத்தினுலும் தவத்தினுலும் பக்தியினுலும் போகத்தை விட்டவரும் சுத்தமன மூள்ளவருமான அந்தப் பிராம்மணர் ராத்திரியில் பக்தியின் உறுதி யைக் கண்டார் யுதிஷ்டிர! அவர் அந்தக்கூட்டத்திலிருக்கிறவனும் தேவதைகளுக்குள்ளே மிக்கஸ்ரியுள்ளவனும் மஹாத்மாவும் பயன் களை அளிக்கிறவனுமான 1மாணிபத்ரனென்பவனைப் பார்த்தார். அங் குள்ளதேவர்கள் சுபகர்மங்களால் முயற்சிசெய்து ராஜ்யங்களையும் தனங்களையும் கொடுக்கின்றார்கள்; அசுபகர்மங்களைச் செய்தால் அப கரிக்கின்றார்கள். பரதசிரேஷ்ட! அப்பொழுது யக்ஷர்களும் தேவர் களும் பார்த்துக்கொண்டிருக்கையில் மிக்கதேஜஸ்ஸுள்ள குண்ட தாரன் ஓடிவந்து தேவர்களினமுன் பூமியில் விழுந்தான். பிறகு, பூமியில்விழுந்த குண்டதாரனைநோக்கி, நல்லமனமுள்ள மாணிபத்ரன் தேவர்களின வசனத்தினுல், 'குண்டதார! நீ எதைவிரும்புகிறாய்?' என்று கேட்டான். குண்டதாரன், 'இந்தப்பிராம்மணர் என்னுடைய பக்தர். தேவர்கள் என்விஷயத்தில் அருள் வைப்பார்களானுல் இவருக்குச் சிறிது ஸுகத்தைத்தரத்தக்க அனுக்கிரகத்தைச் செய்ய விரும்புகிறேன்' என்றுசொன்னன். உடனே, மாணிபத்ரன் தேவர்களுடைய வசனத்தினுலேயே மறுபடியும் மிக்ககர்திபொருந் திய இந்தக்குண்டதாரனை நோக்கி, 'எழுந்திரு; எழுந்திரு உனக்கு மங்களமுண்டாகட்டும். காரியஸித்திபெற்று ஸுகமுள்ளவனவாய். இந்தப் பிராம்மணர் தனத்தைவிரும்பினுல் இவருக்குத் தனம்கொடுக் கலாம். உனக்கு நண்பராயிருக்கிற இந்தப் பிராம்மணர் எவ்வளவு தனத்தை விரும்புகிறாரோ அளவற்ற அவ்வளவு தனத்தை யும் நான் தேவர்களுடைய கட்டளையினல் கொடுக்கிறேன்' என்றுசொன்னன். குண்டதாரன் மனிதர்களின் செல்வமானது சலிப்பதும் நிலையில்லாததுமென்று நினைத்து யக்ஷஸ்ஸுள்ள பிராம்மண ருடைய தவத்தில் புத்தியைச் செலுத்தினன். (அவ்விதம் நிச்ச யித்து மாணிபத்ரனை நோக்கி,) 'தனத்தை அளிக்கின்றவனே!

1 இது, 'மணிபத்ரன்' என்றும் காணப்படுகிறது.

பிராம்மணருக்காக நான் தனத்தை யாசிக்கவில்லை. என்பக்தருக்காக வேறான அனுக்கிரகத்தைச் செய்யவேண்டுமென்று யாசிக்கிறேன். என்னுடைய பக்தருக்காக ரத்தினங்களால் நிறைந்த பூமியையோ பெரிய பொருட்குவியலையோ நான் யாசிக்கவில்லை. பின்னே என்ன வென்றால், இவர் தர்மிஷ்டராகவேண்டும். இவருடையபுத்தி தர்மத்தில் மகிழவேண்டும். இவர் தர்மத்தையே அடுத்து ஜீவிக்கவேண்டும்; தர்மத்தை முதன்மையாகவுடையவராகவேண்டும். இந்த அனுக்கிரகம் எனக்கு ஸம்மதம்' எனறுசொன்னன். மாணிபத்ரன், 'இவர் சரீரஸ்ரமமில்லாமல் எப்பொழுதும் தர்மத்தின் பயனை ராஜ்யத்தையும் நானவித ஸுகங்களான பயனகளையுமே அனுபவிக்கட்டும்'என்று சொல்ல, பிறகு பெருமகிழ்புகழுள்ள குண்டதாரன் அனேகமுறை (முன் யாசிக்கப்பட்ட) தர்மவிஷயத்தில் அப்யாஸத்தையே கேட்டான். தேவர்கள் அதனால் ஸந்தோஷித்தார்கள். மாணிபத்ரன், 'ஸகலதேவதைகளும் உன்விஷயத்திலும் இந்தப்பிராம்மணர் விஷயத்திலும் பரீதியடைந்தார்கள். இவர் தர்மாத்மாவாகப்போகிறார். தர்மத்தில் புத்தியைச் செலுத்தவும் போகிறார்' என்றான். ஓ! யுதிஷ்டிர! அதனால் அந்தமேகம் மற்றவர்களால் அடையமுடியாத மனத்துக்கு விருப்பமான வரத்தைஅடைந்து காரியசித்திபெற்றுஸந்தோஷத்தை அடைந்தது. பிறகு, அந்தப் பிராம்மணப்ரேஷ்டர் தம்முடைய பக்கத்தில் ஸமீபத்தில் வைக்கபபட்ட ஸூக்ஷ்மமான மரவுரிகளைப் பார்த்தார். உடனே ஒழிவை அடைந்து, 'இந்தக்குண்டதாரன் நன்மையை அறியவில்லை. நான் செய்த ஸுகிருதத்தை வேறுயார் அறியப்போகிறார்? இனிமேல் நான் தர்மத்தால் ஜீவிப்பதற்கு வனத்தையே அடைகிறேன்' என்றார். அப்பொழுது அந்தப்பிராம்மணப்ரேஷ்டர் ஒழிவினாலும் தேவர்களுடைய அருளினாலும் வனத்தை அடைந்து பெரியதவத்தைச் செய்யத்தொடங்கினர். ஓ! மஹாராஜனே! அந்தப் பிராம்மணர் தேவதைகளும் அதிதிகளுமருந்திய மீதியான கனிகிழங்குகளைப் பகுத்துக்கொண்டிருந்தார். தர்மத்தில் அவருக்கு உறுதியான புத்தியும் உண்டாயிற்று. பிறகு, பிராம்மணர் கனிகிழங்குகளையெல்லாம் தள்ளிவிட்டுச் சருகுகளைப் பகுத்துக் கொண்டிருந்தார் மறுபடியும் அவர் சருகுகளையும் தள்ளிவிட்டு ஜலத்தைப் பானஞ்செய்துகொண்டிருந்தார். அதன்பிறகு, பலவருஷங்கள் வாயுவைப் பகுத்துக்கொண்டிருந்தார்; இவருடைய பிராணன் குறைவை அடையவில்லை. அது ஓர் ஆச்சரியமாயிற்று. தர்

மத்தில் நம்பிக்கையுடையவரும் உக்கிரமான தவத்திலிருக்கிறவருமான அவருக்கு நெடுங்காலத்துக்குப் பிறகு திவ்ய திருஷ்டியுண்டாயிற்று. அவருக்கு, 'இவ்வுலகத்தில் நான் யாருக்காவது ஸங்கேதாஷத்தோடு தனத்தைக் கொடுத்தால் எனது வாக்கானது வீணாகாது' என்னும் புத்தி உண்டாயிறறு. பிறகு, அவர் மலர்ந்தமுகத்துடன் மறுபடியும் தவத்தைச செய்ய ஆரம்பித்தார மறுபடியும் தவவலிமையைப் பெற்று அவர், 'நான் ஸங்கேதாஷத்துடன் யாராவது ஒருவனுக்கு ராஜ்யத்தை அளித்தால அவன் சீக்கிரத்தில் அழிவானவான். என்னுடையவர்க்கு வீணாகாது' என்று தாம்மேலானதென்றுநினைக்கிறதைப் பற்றி ஆலோசித்தார் பாரத! அப்பொழுது குண்டதாரன் அந்தப்பிராம்மணருடைய தவத்திலும்யோகத்தாலும் ஸ்நேகத்தாலும் ஏவப்பட்டு அவருக்குப பிரத்தியக்ஷமானான் அந்தப் பிராம்மணர் அந்தக்குண்டதாரனைநோக்கிச்சென்று அவனை விதிப்படி பூஜித்தார்; ஓ! அரசனே! அதனால் ஆசசரியபத்தை அடைந்தவருமானார். பிறகு, குண்டதாரன் அவரைநோக்கி, 'உமக்கு உததமமான ஞானக்கண் உண்டாயிருக்கிறது ஓ! பிராம்மணரே! அந்தநேத்திரத்தினால் அரசர்களுடைய கதியையும், உலகங்களையும் பாரும்' என்று சொன்னன். பிறகு, அந்தப்பிராம்மணர் உடனே நரகத்தில் அழுந்தின அனேக அரசர்களைத தூரத்தில் திவ்யதிருஷ்டியினால் பார்த்தார் குண்டதாரன், 'பக்தியுடன் என்னைப்பூஜித்து நீர் துக்கத்தை 'அடைவீரானால் என்னால் உமக்கு என்ன செய்யப்பட்டதாகும்? நான் என்ன அனுக்ரகம் செய்ததாகும்? மறுபடியும் நீர் நினைத்துப்பாரும்; ஆராய்ந்துபாரும் மனிதன் காமங்களை எப்படி இச்சிக்கலாம்? ஸ்வர்க்கத்துவாரமானது மனிதர்கள்விஷயத்தில் விசேஷமாக அடைக்கப்பட்டிருக்கிறது' என்றுசென்னன். பிறகு, அந்தப் பிராம்மணர் மனிதர்களைச் சுற்றிக்கொண்டிருக்கிற காமம், குரோதம், லோபம், பயம், மதம், நித்திரை, மயக்கம், சோம்பல் இவைகளைப்பார்த்தார். குண்டதாரன், 'உலகங்கள் இந்தக் காமமுதலியவைகளால் சூழப்பட்டிருக்கின்றன. தேவர்களுக்கு மனிதனிடமிருந்து பயம். அந்தக் காமமுதலியவைகள் அப்படியே தேவர்களுடையவர்த்தையினால் எல்லாவிஷயங்களிலும் இடையூற்றைச்செய்கின்றன. தேவர்களால் அனுமதி கொடுக்கப்படாத ஒருவனும் தார்மிகனுகிறதில்லை. நான் தவத்தினால் ராஜ்யத்தையும் தனங்களையும் கொடுக்கச் சக்தியுள்ளவனுயிருக்கிறேன்' என்றுசொன்னன். அப்பொழுது தர்மாத்மா

வான பிராம்மணர் மேகத்தைத் தலையால் வணங்கி அதனை நோக்கி, 'எனக்குப் பெரிய அனுக்ரகமானது செய்யப்பட்டது. காம லோபங்களின் தொடர்ச்சியினல் ஸ்னேகத்தை அறியாமல் நான் உன்னிடத்தில் பொறுமைப்பட்டதை நீ பொறுக்கக்கடவாய்' என்றும் சொல்லினர். அப்பொழுது குண்டதாரன், 'என்னை கூஷமிக்கவேபட்டது' என்று சொல்லி, அந்தப்பிராம்மணப்ரேஷ்டரைக் கைகளால் ஆலிங்கனம்செய்துகொண்டு அவ்விடத்திலேயே மறைந்தான். உடனே, அந்தப்பிராம்மணர் குண்டதாரனை அனுக்கிரகத்தினலும் தவத்தினலும் வித்தியடைந்து ஸகலலோகங்களிலும் சஞ்சரித்தார். அவருக்குத் தர்மத்தாலும் யோகத்தாலுமுண்டான சக்தியினல் ஆகாயத்தில் 'கமனமும் நினைத்தபொருள்களை அடைதலும் மேலான கதியும் உண்டாயின தேவதைகளும் ரிதுக்களான பிராம்மணர்களும் யக்ஷர்களும் மனிதர்களும் சாரணர்களும் இவ்வுலகில் தார்மிகர்களைப் பூஜிக்கின்றார்கள்; செல்வவான்களைப பூஜிக்கிறதில்லை; காமிகளையும் பூஜிப்பதில்லை யுதிஷ்டிர! உனது புத்தி தர்மத்தில் பற்றியிருத்தலால் உன்னிடத்தில் தேவர்கள் மிகவும் அருளுடையவர்களாயிருக்கிறார்கள். தனத்தில் ஸுகத்தின் ஓர் அம்சம் இருக்கிறது. தர்மத்திலோ பரமமான ஸுகம் இருக்கிறது" என்றுசொன்னர்.

இருநூற்றெழுபத்தேட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(கோலக்குக்காரணமாதலால் யாகம் இழிந்ததென்பதைப்பற்றி நாரதர் சொல்லிய உஞ்சவருத்தி ப்ராம்மணர்கதை.)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! ஓரேபயனையுடையனவும் பல வகைப்பட்டனவுமான யஜ்ஞம் தவமிவைகளுள் ஸுகத்திற்காகவும், தனத்திற்காகவுமில்லாமல் தர்மத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டது எவ்விதமானது?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இந்த விஷயத்தில் நாரதரால் சொல்லப்பட்ட உஞ்சவிருத்திப் பிராம்மணருடைய யஜ்ஞநிமித்தமான பூர்வசரித்திரத்தை உனக்குச் சொல்லுகிறேன். நாரதர், 'விதர்ப்பதேசத்தில் சிறந்ததான தர்மோத்தரமென்கிற ராஜ்யத்தில் உஞ்சவிருத்திசெய்யும் ஒரு பிராம்மணரிருந்தார். அவர் யாகத்தைச் செய்வதற்கு யத்தனித்தார். அவ்

விடத்தில் [1]ஆகாரம் செய்யக்கூடிய சாமைதானியமும் ஸுரிய்யபர்ணி ஸுவர்ச்சலீ என்னும் சாகங்களும் யாகத்திரவ்யமாக இருந்தன. துவர்ப்புள்ளதும் ரஸமில்லாததுமான கீரையும் தவத்தினால் சுவையுள்ளதாயிற்று. பகைவர்களைக்காப்பவரே! வனத்தில் ஓரிடத்தை அடைந்து ஒருபிராணிக்கும் துன்பம்செய்யாமல் கிழங்குகளினாலும் கனிகளினாலும் செய்யப்பட்டாலும் யாகமானது ஸ்வர்க்கத்தையளிக்கும். விரதத்தினால் இளைத்தவளும் சுசியுள்ளவளும் யஜ்ஞத்தில் பத்னியாக அழைத்துவரப்பட்டவளுமான அவருடைய பத்னியான புஷ்கரமாலினியென்பவள் அந்த ஸத்தியரிடத்தில் அனுஸரிப்பதில்லை அவள் சாபத்தினின்றும்நடுங்கி அவருடையஸ்வபாவத்தை அனுஸரித்தாள். அவளுக்கு மயில்களின் உதிர்ந்த இறகுகளால் வஸ்திரம் செய்யப்பட்டது அவளுக்கு விருப்பமில்லாமலிருந்தும் ரிகூஷிதரானபர்த்தாவின் அனுஸரணத்தினால் அவ்விடத்தில் யாகஞ்செய்யப்பட்டது. தர்மமறிந்ததும் சருகுகளைப்புஜிப்பதுமான ஒரு மிருகமானது [2]சுக்ரர்பலமுறை கட்டளையிட்டதனால் அந்தவனத்தில் அவர்சமீபத்தில் வஸித்துக்கொண்டிருந்தது (அப்பொழுது) அந்தமிருகமானது ஸத்தியரை நோக்கி, 'உம்மால் இந்தத்தீயசெய்கை செய்யப்பட்டது. (பசுவில்லாததால்) அதற்குரியமந்திரரூபமான அங்கக்குறையுள்ள இந்தயாகமானது விபரீதமாகிறது. ஐயா! ஆகையால், நீர் என்னை அக்கினியில் ஆகுதிசெய்து தடையில்லாமல் ஸ்வர்க்கத்தை அடையக்கடவீர்' என்றவார்த்தைகளைச் சொல்லிற்று. பிறகு, ஸாவித்ரியானவள் யாக விஷயத்தில் அவரைக்கண்டு நேரில்வந்து அவரைத் தூண்டினாள். அவர், 'நான் என்னுடன்வஸிக்கும்மிருகத்தைக் கொல்லமாட்டேன்' என்று மறுமொழிசொல்லினர். யாகாக்கினியிலிருந்துகிளம்பின அந்தஸாவித்திரியானவள், 'யஜ்ஞத்தில் என்னகெட்டகாரியம் செய்யப்பட்டது?' என்றுசொல்லிவிட்டுப் பாதாளத்தைப்பார்க்கவிரும்பித் திரும்பிவிட்டாள். மறுபடியும், கலிமான் தைகுவித்துநின்றரஸத்தியரையாசிக்க, அவர் அதை ஆலிங்கனம்செய்துகொண்டு,'போகலாம்' என்றுசொல்லினர். பிறகு, அந்தமான் எட்டுஅடி நடந்து திரும்பி

---

1 'அந்தவனத்தில் சாமைதான்ய ஆகாரமும் மிகவும் பளபளப்பான ஸுரிய்யபர்ணிஎன்கிற இலையும் துவர்ப்பும் ரஸமில்லாததுமானகீரையும் தவத்தினால் அவருக்குச் சுவையுள்ளனவாயிருந்தன' என்றும் கொள்ளலாம்.

2 வேறுபாடம்.

வந்து, 'ஓ! ஸத்தியரே! என்னைத் தடையின்றிக் கொல்லும். உம்மால் கொல்லப்பட்டு நான் நல்லகதியை அடைவேன். என்னால் கொடுக்கப் பட்டஞானக்கண்ணால் ஸ்வர்க்கத்திலுள்ள அபஸரஸுகளைப்பாரும். மஹாத்மாக்களானகந்தர்வர்களுடைய விசித்திரமான விமானங்களை யும் பாரும்' என்றுசொல்லிற்று. பிறகு, அந்தமுனிவர் விருப்பத் துடன் கண்ணால் (அவர்களை) நீண்டகாலம்பார்த்துவிட்டு மிருகத் தையும்பார்த்து, 'ஹிம்ஸையினால் ஸ்வர்க்கவாஸம்' என்றுதீர்மானித் தார் மிருகவடிவுமாகிப் பலவருஷங்கள் வனத்தில்வஸித்துக்கொண் டிருந்த அந்தத்தர்மமானது அந்தப் 1பாவத்திற்குப் பரிஹாரத்தைச் செய்துகொண்டது இது யாகத்திற்கு ஏற்பட்ட நலலவிதியில்லை. அப்பொழுது மிருகஹிம்ஸைசெய்யநினைத்த அவருடைய அவ்வித அபிப்பிராயத்தால் பெரியதவம் நசித்துவிட்டது. ஆகையால், ஹிம் ஸையானது யாகத்திற்கு உரியதன்று பிறகு, அந்தஸத்தியருக்குத் தர்மபகவான் தானே யாகம்செய்வித்தான். பிறகு அவர் தவத்தினால் மோக்ஷபரியஸமாதானத்தையும் அடைந்தார்' என்றார். கொல் லாமையானது மேலானதாமம் ஹிம்ஸாரூபமானதர்மம் ஸ்வர்க்க ஸாதனமானது உனக்கு உண்மையைச சொலலுகிறேன் பிரம்ம வாதிகளுக்கு இது தர்மமன்று" என்றார்

இருநூற்றெழுபத்தொன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(தர்மமே மேன்மைக்குக் காரணமென்பது.)

யுதிஷ்டிரர், "ஒருவன் எப்படி பாவத்தைசசெய்தவனாகிறான்? எப்படி தர்மத்தைச் செய்கிறான்? எதனால் ஒழிவை அடைகிறான்? எதனால் மோக்ஷத்தை அடைகிறான்?" என்று கேட்க, பீஷ்மர் சொல் லத்தொடங்கினார்.

"உனக்கு ஸகலதாமங்களும்தெரியும் (ஆனாலும்) மரியாதைக்கா கக்கேட்கிறாய். மோக்ஷத்தையும் ஒழிவையும் பாவத்தையும் தர்மத் தையும் மூலத்துடன் கேள் ஓ! பரதஸ்ரேஷ்ட! புருஷனானவன்(சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களென்கிற) ஐந்துவிஷயங்களுடைய அனு பவத்திற்காக இச்சையைமுன்னிட்டுப் பிரவர்த்திக்கிறானல்லவா?

1மிருகமாயிருந்ததற்குக்காரணமானபாவம்.

[1]அவைகளில் ஒன்றைபபற்றிக் காமம்மா த்வேஷமோ உண்டாகிறது. பிறகு, அவைகளுக்காக முயற்சிசெய்கிறான். பொிதானகாமாவையும் ஆரம்பிக்கிறான் தன்னைவிரும்பப்படுகிறரூபகந்தாதிகளை அடிக்கடி அனுபவிக்கவும் விரும்புகிறான். அதனால ராகமானது பலமாகிறது. அதுபற்றி த்வேஷமுமுண்டாகிறது அதனால லோபம் பலமாகிறது அதன்பிறகு, மோகமும் உண்டாகிறது லோபமோகங்களால பற்றப்பட்டவனும் விருப்பு வெறுபபுக்களுள்ளவனுமானவனுக்குத் தர்மத்தில புத்தியுண்டாகிறதில்லை கபடத்தினால் தர்மத்தையுஞ் செய்கிறான். கபடமாகத் தாமத்தைப பழக்கபபடுத்துகிறான். கபடத்தினால பொருளை அடையவிரும்புகிறான குருவம்சத்திலுதித்தவனே! கபடத்தினால [2]தனங்கள்வரித்திக்கும்பொழுது அதிலேயே புத்தியைசெலுத்துகிறான். பாரத! பிறகு, நண்பாகளாலும் பண்டிதர்களாலும் தடுக்கப்பட்டாலும் பாவத்தைசெய்ய முயற்சிசெய்கிறான் விதியால்ஏவபபட்டதாவகம்(ஆகாரமியவகாரங்களில லஜ்ஜையை விட்டவன் ஸுகியாவான் என்கிற) நியாயத்துடன்கூடினதாகவும் மறுமொழிசொல்லுகிறான் (அபபொழுது) அவனுக்கு ராகமோகங்களாலுண்டான [3]மூன்றுவிதபாவங்கள் வளருகின்றன பாபகர்மத்தை நிணைக்கிறான்; சொலலுகிறான்; செய்பவும்செய்கிறான் அதாமத்திலிபரவருதத்தித்த அவனுடைய்தோஷங்களை ஸாதுக்கள் கவனிக்கிறாகள பாவசெய்கையுளள அவனுக்கு அவனைப்போன்றபடக்கையுளளவர்களுர் நண்பாகளாகின்றனர். அவன் இம்மையிலேயே ஸுகத்தை அடைகிறதில்லை மறுமையில் எதனால்தான் அடையான்? இவ்விதம் மனிதன் பாவசெய்கையுள்ளவனாகிறான். இனி தர்மாத்மாவைக்குறித்துச சொல்லுகிறேன்; கேள. நல்லதர்மத்தையுடையவன் கேஷமத்தை அடைகிறான்;குற்றமற்றதர்மத்தினாலேயே இஷ்டமானகதியை அடைகிறான். அவன் முன்னதாகவே தன்புத்தியினால இந்தத் தோஷங்களைக் கவனித்துப் பார்க்கிறான். புத்திமானனவன் ஸுகத்திற்காக ஸாதுக்களை அடுத்துப் பணிவிடையுள்செய்கிறான் அவனுக்கு நல்ல ஆசாரத்தினாலும் அப்பியாஸத்தினாலும் (நல்ல கர்மம்) விருத்தியடைகிறது. அந்தப்பிராஜ்ஞன் தர்மத்தில விருப்பமடைகிறான்; தர்மத்தையே அடித்துஜீவிக்கிறான் குருநந்தன! பிறகு, அவன் தர்மத்தால்,தனங்களையடையும்பொழுது நன்

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

3 மனமொழிமெய்களால் உண்டாவன.

மையுண்டானதைப்பூர்த்து அதன்காரணத்தையே 1விரித்திசெய்கிறான்; இவ்விதம் தர்மாத்மாவாகிறான்; நல்லமித்திரனையும் அடைகிறான் அவன், நன்னட்பு தனம் இவைகளுடையலாபத்தால் இம்மையிலும் மறுமையிலும் ஸந்தோஷிக்கிறான் பாரத! ஸ்பரிசத்திலும் சபதத்திலும் ரஸத்திலும் ரூபத்திலும் கந்தத்திலும் பராணியானது 2பிரபுத்தன்மையை அடைகிறது பெரியோர்கள இதைத் தர்மபலமாக நினைக்கிறார்கள் யுதிஷ்டிர! அவனோ தர்மபலத்தை அடைந்து திருபதி அடைகிறதில்லை. குந்தியின்புத்திர! தாமதத்திலிருக்கிறவர்களுடைய ஸகலபோகக்கிரியைகளிலும் திருப்தியடையாமல், ஞானக்கண்ணுலை ஒழிவையே அடைகிறான். சபதத்திலும் ஸ்பர்சத்திலும் ரூபத்திலும் மனத்தைசெலுத்தாமல ஞானக்கண்ணினுலை காமத்திலே தோஷத்தைபபார்ப்பவன் காமத்தினின்றும் விடுபடுகிறான்; தாமதத்தைவிடுகிறதுமில்லை; நசிக்கின்ற உலகத்தைபபாராதது எல்லாவற்றையும்விடுவதிலும் முயற்சிசெய்கிறான்; பிறகு, உபாயத்தினுலை மோகூத்தின் பொருட்டு முயற்சிசெய்கிறான்; உபாயமில்லாமல முயற்சிசெய்யான்; பிறகு, நாளடைவில ஒழிவை அடைகிறான்; பாபகாமதையும் தள்ளுகிறான்; தர்மாத்மாவுமாகிறான்; பரமனமோகூத்தையும் அடைகிறான் அபபா! பாரத! நீ என்னிடம்கேட்ட பாவம் தாமம் மோகூம் ஒழிவு என்கிற இவைகளைப்பற்றி உனக்குச சொனனேன் யுதிஷ்டிர! ஆகையால், எல்லாநிலைமைகளிலும தர்மததில ப்ரவருத்தி செய்யக்கடவாய் குந்தீபுத்திர! தாமத்திலிருபபவர்களுக்கு ஆழிவில லாதவுரித்தி உண்டாகினறது" என்றுசொன்னார்.

இருநூற்றெண்பதாவது அத்யாயம்

மோகூ தர்மம். (தொடர்ச்சி.)

(மோகூத்திற்குரிய உபாயங்கள்.)

யுதிஷ்டிரர், "பாரதரே! பிதாமஹரான நீங்கள், 'உபாயத்தால் மோகூம்; உபாயமில்லாமலில்லை' என்று சொன்னீர்கள். அந்தஉபாயத்தை முறைப்படி கேட்கவிரும்புகிறேன்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்

---

1 'விஞ்சதே' என்பது மூலம்.

2 'இவற்றைஅனுபவிக்கத்தக்கது' என்றுகருத்து.

" பிராஜ்ஞர்களிற்சிறந்தவனே ! குற்றமற்றவனே ! எப்பொழுதும் உபாயத்தினாலேயே எல்லாவிஷயங்களையும் ஆராய்கிறயென்னும் இந்தத்தெளிவானஞானம் உனக்கே தக்கது. குடத்தைச்செய்கையில் எந்தப்புத்தியானது உண்டானதோ அது குடமுண்டான பிறகு வேண்டப்படுவதில்லை. இப்படியே யஜ்ஞாதிதர்மத்தினால் சாந்திமுதலானதர்மங்கள் ஏற்பட்டபொழுது (மோக்ஷத்திற்கு) வேறுகாரணம் வேண்டுவதில்லை. கீழ்ஸமுத்திரத்திற்குஇருக்கிறமார்க்கம், மேற்குஸமுத்திரத்திற்குச் செல்லுகிறதில்லை. மோக்ஷத்திற்கு ஒரேமார்க்கமன்றோ? அதை என்னிடமிருந்து விரிவாகக்கேள். தீரனானவன் பொறுமையால் கோபத்தைத் தொலைக்கவேண்டும்; ஸங்கல்பத்தின் தியாகத்தினால் காமத்தை நாசஞ்செய்யவேண்டும்; ஸத்வகுணத்தைப்பற்றிக்கொண்டு நித்திரையை விலக்கவேண்டும்; ஜாக்ரதையினால் பயத்தில்காக்கவேண்டும்;ஆத்மத்யானத்தினால் பிராணனைரக்ஷிக்கவேண்டும். தைர்யத்தினால் இசசையையும் துவேஷத்தையும் காமத்தையும் மிசசமின்றி நீக்கவேண்டும்; ஐயம் திரிபு அறியாமைகளை அப்யாஸத்தினால் நீக்கவேண்டும். தத்வத்தை அறிந்தவன் ஞானப்யாஸத்தினால் நித்திரையையும் புத்தியின்தோற்றுமையையும் நிவர்த்திசெய்யவேண்டும். உபத்திரவங்களையும் ரோகங்களையும் ஹிதமாயும் ஜரிக்கக்கூடியதாயும் மிதமாயுமிருக்கிறஆகாரத்தினால் நிவர்த்திசெய்யவேண்டும். ஸந்தோஷத்தினால் லோபமோகங்களையும் தத்வதரிசனத்தினால் விஷயங்களையும் தயையினால் அதர்மத்தையும் ஜயிக்கவேண்டும். பரிபாலனத்தினால் தர்மத்தையும் வரவினால்ஆசையையும் ஆசையைவிலக்குவதனால் அர்த்தத்தையும் அநித்தியத்தன்மையினால் ஸ்னேகத்தையும் யோகத்தினால் பசியையும் கருணையினால் தன்னுடையமானத்தையும் ஸந்தோஷத்தினால் 1திருஷ்ணையையும் 2ஸஞ்சாரத்தினால் சோம்பலையும் பண்டிதன் ஜயிக்கவேண்டும். நிச்சயத்தினால் விபரீதஞானத்தை ஜயிக்கவேண்டும். மௌனத்தினால் அதிகவார்த்தையையும் சௌரியத்தினால் பயத்தையும் ஜயிக்கவேண்டும். புத்தியினால் வாக்கையும் மனத்தையும் அடக்கவேண்டும். அந்தப்புத்தியை 3ஞானக்கண்ணால் அடக்கவேண்டும். ஞானத்தை மஹானானஆத்மா அடக்கவேண்டும். மகத்தானஆத்மாவை ஆத்மா

---

1 ஆழ்ந்தபற்று.

2 'உத்தாரோக' என்பது மூலம் ; ' முயற்சியினால் ' என்பதுபழையவுரை.

3 விருத்திஜ்ஞானம்.

வினுடையஞானமானது அடக்கவேண்டும் அப்படிப்பட்ட இந்த ஆத்மா சாந்தனும் சுத்தகர்மமுடையவனுமானவனால் அறியத்தகுந் தது. பண்டிதர்கள் யோகத்திற்குஇடையூறுகளென்று அபிப்பிராயப் படும் காமம், குரோதம், லோபம், பயம், நித்திரை என்னும்ஐந்தையும் விலக்கவேண்டும். அவற்றைவிலக்கிவிட்டுத் தியானம், அத்தியய னம், தானம், ஸத்யம், லஜ்ஜை, கபடமின்மை, பொறுமை, சுத்தி, உணவால்உண்டாகும்சுத்தி, பொறிகளின் அடக்கம் என்னும்யோக ஸாதனங்களை அப்பியஸிக்கவேண்டும் இவைகளால தேஜஸ் விருத்தி யடைகிறது; பாவமூம் தொலைகிறது; இவனுடையஸங்கற்பங்களும் வித்தக்கின்றன; விஜ்ஞானமும் ஏற்படுகிறது பாவம் அகன்றவனும் தேஜஸ்வியும் லகுவான ஆகாரமுள்ளவனும் இந்திரியஜய முடைய வனுமாகிக் காமக்ரோதங்களைவசபடுத்திக்கொண்டு பரம்மத்தின்பத த்தை அடையவிரும்பவேண்டும் மூடனுகாமலிருத்தல், பற்றுதலற் றிருத்தல், காமக்குரோதங்களைவிலக்குதல், தீனனுகாமலிருத்தல், கர் வமில்லாமலிருத்தல், பயமில்லாமை, [1]உறுதியாயிருத்தல், (மற்றப்பய னில்) விருப்பமின்றி மனிவனாக்குக்காயங்களின் அடக்கம் ஆகிய இவை கள் மோக்ஷத்திற்குத் தெளிவும் களங்கமற்றதும் சுத்தமுமான வழி.

இருநூற்றெண்பத்தோராவது அத்யாயம்

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ராணிகளின் ப்ரப்ப்ரப்புக்களைப்பற்றி நாரதருக்கும் தேவலருக்கும்நடந்த ஸம்பாஷணை.)

இந்தவிஷயத்திலும் நாரதருக்கும்அஸிதரென்னும் தேவலருக் கும் நடந்த ஸம்வாதரூபமான பழைய சரித்திரத்தைச் சொல்லு கிறார்கள். உட்கார்ந்திருக்கிறவரும் ப்ராயமுதிர்ந்தவருமான தேவ லரை நாரதர் புத்திமான்களுள் சிறந்தவராக அறிந்து ப்ராணிகளு டைய உற்பத்தி நாசங்களைப்பற்றி, 'ஓ! ப்ராம்மணரே! ஸ்தாவர ஜங்கமஸ்வரூபமான இந்தப ப்ரபஞ்சமானது எதினின்றும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது? முடிவில் எதை அடைகிறது? அதை நீங்கள் என க்கு நன்கு சொல்லவேண்டும்' என்று வினவ, அஸிதர் சொல்லத் தொடங்கினர்.

---

1 'அவ்யவஸ்திதி:' என்றுபிரித்து, 'வீடில்லாமை' ஏன்பது பழைய வுரை.

'காலமானது பிராணிகளின் வாஸனையினால் ஏவப்பட்டு எவை களால் பிராணிகளைப் படைக்கிறதோ அவைகளைப் பஞ்சமஹாபூதங் களென்று பூதவாதிகள் சொல்லுகின்றார்கள். காலமானது பரமாத் மாவால் ஏவப்பட்டு அந்தப்பூதங்களால் பிராணிகளைப் படைக்கிறது எவன் இவைகளைக்காட்டிலும் வேறுஒன்றைச சொல்லுவானோ அவனே பொய்சொன்னவனுவான் ஸ்தேதகரிலலே நாரதரே' இந்த ஐந்தையும், எபபொழுதுமிருபபவையும் சலியாதவையும் ஆதியந்த மற்றவையும் பெரியதேஜஸான மஹத்தத்வத்தினுடைய குணியல் களும் இயற்கையாகவே காலத்தை ஆருவதாகவுடையவையும் அப்பு, ஆகாயம், பிருதிவி, வாயு, அக்நிகளுமாக அறியக்கடவீர். இந்தப் பூதங்களுக்கு மேறபட்டு ஸம்சயமிலலாமல (பதாரத்தம்) 'வஸ்துக்கிற கில்லை அபபடிச சொலலுகிறவன் திருஷ்டாந்தத்துடனும் சொலல மாட்டான்; யுக்தியுடனும் சொலலமாட்டான. ஸம்சயமிலலே. அஸத் தையே சொலலுவான இந்த ஆறையும் எலலாமானவைகளாக அறியக்கடவீர். இவை எதனுடைய கார்யங்களோ அபபடிபபட்ட அஜ்ஞானத்தையும் அறியக்கடவீர் பூதங்கள் ஐந்து, காலம ஒன்று, விஷயசூன்யங்களான வாஸனை அஜ்ஞானமிரண்டு ஆகிய நிலைபெற்ற இந்த எட்டுப பூதங்களும் (ஸ்தாவரஜங்கமங்களான பிராணிகளுக்கு) உற்பத்திநாசகாரணங்கள் [1]அவைகளிலேயே நாசத்தை அடைகின் றன. அவைகளினினறும் உண்டாகினறன. ஜந்துவானது அவைகளை அனுஸரித்து நசித்தாலும் மறுபடி ஐந்துவிதமாகிறது. அந்த ஜந்துவி னுடையதேகம் பூமியின்விகாரம் ஸ்ரோத்ரம் ஆகாயத்தினின்றும் உண்டானது. ஸூர்யனிடமிருந்து நேத்திரமும் வாயுவினின்றும் பிராணனும் ஜலத்தினின்றும் ரக்தமுமுண்டாயின. நண்கள், மூக்கு, காதுகள், துவக்கு, ஐந்தாவதான நா இந்த இந்திரியங்களையும் பார்த்தல், கேட்டல், முகாதல, பரிசித்தல, சுவையறிதல் என் கிற இந்திரியவிஷயங்களுடைய ஞானங்களையும் கவிகள் அறிகி றார்கள். ஒத்திருபபதினாலே ஐந்து இந்திரியங்களின் விஷயத்தினும் ஐந்து குணங்களையும் அறிவாய் ரூபம் கந்தம் ரஸம் ஸ்பரிசம் சப தம் இவைகளே அவைகளின் குணங்கள். ஐந்து இந்திரியங்களாலும் ஐந்துகுணங்கள் ஐந்துவிதமாக அறியப்படுகின்றன ரூப ரச கந்த ஸ்பரிச சப்தங்களான அவற்றின்குணங்களே இந்திரியங்கள் அறிகிற தில்லே. ஜீவனே அவைகளால அவைகளை அறிகிறான். சித்தமானது

[1]வேறுபாடம்.

இந்திரியஸமூகத்திற்கு மேலானது அதைப்பார்க்கிலும் மனம் மேலானது. மனத்தைக்காட்டிலும் புத்தி மேலானது. ஜீவன் புத்தியைக் காட்டிலும் மேலானவன். எந்தபதிராணியானது இந்திரியங்களோடு ஸம்பந்தப்பட்ட விஷயங்களை நிஷ்டத்துத் தீர்மானஞ்செய்கின்றதோ அந்தபதிராணியானது முதலில இந்திரியங்களால் விஷயங்களைத் தனித்தனியாக அறிகிறது பிறகு, மனத்தால விசாரித்து அப்பால் புத்தியால நிச்சயிக்கிறது. ஆத்மவிசாரம் செய்கிறவாகள சித்தம் இந்திரியக்கூட்டம் மனம் எட்டாவது புத்தி இந்தஎட்டையும் ஞானேந்திரியங்களாகச் சொலலுகின்றார்கள பாணி, பாதம், பாயு, மேஹநம்,ஐந்தாவதுமுகம் என்று சொலலபபட்டகர்மேந்திரியங்களையும் கேள். பேசுவதற்கும் ஆகாரம் செய்வதகும் உரிய இந்திரியம் முகமென்று சொலலப்படுகிறது நடப்பதற்குரிய இந்திரியம் பாதங்களாகவும் கர்மாவைச செய்வதற்குரிய இந்திரியம் கரங்களாகவும் புரீஷத்தை விடுவதிலும் காமத்தால் வீரியத்தை விடுவதிலும் ஸமமான தொழிலையுடைய இந்திரியங்கள பாயுவாகவும் மேஹநமாகவும் சொல்லபபடுகின்றன. என்னால் சாஸ்திரத்தைஒத்து மனத்தை ஆளுவதாகவுடையவையும் வாக்குமுதலானவைகளுடன் கூடினவையுமான ஞானேந்திரியங்களும் ஞானம் சேஷ்டையென்கிற எலலா இந்திரியங்களின் குணங்களும் நன்கு சொலலபபட்டன இந்திரியங்களுக்கு எபபொழுது ப்ரமத்தாலதம்செய்கைகளிலிருந்து ஓழிவு ஏறபடுகிறதோ அபபொழுது மனிதன் இந்திரியங்களைத்தியாகஞ்செய்துவிட்டுத் தூங்குகிறான இந்திரியங்கள் ஓழிவடைந்து மனம் ஓழிவடையாமலிருக்குமானால் விஷயங்களையே பறறி நிற்கிறான். அதை ஸ்வபநாநுபவமாக அறியவேண்டும் (ஸ்வபநத்தில்) ஸாத்விகமும் ராஜஸமும் தாமஸமுமான வாஸனைகளபமாகியஸூக்ஷ்ம விஷயங்கள (புண்ணியபாப) கர்மங்களுடன் கூடிக்கொண்டு இருக்கும் (அவைகளில்) ஸாதவிகநகளைச சிலாகிக்கின்றார்கள் அபபடி மற்றவைகளைச சிலாகிப்பதிலலை ஸாதவிகனுடைய கருத்தானது ஆனந்தம், கர்மங்களின் ஹித்தி, ஞானம், உயர்ந்தகதிக்குக் காரணமான தர்மம் என்னும் தனக்குக்காரணங்களாகிய இநத ஜாக்ரத்வாஸனைமயமான விஷயங்களைப்பறறி நிற்கிறது. இவ்விதம் ஸாத்விக ராஜஸ தாமஸர்களில எவன் எபபடிபபட்ட வாஸனையை அடைந்திருக்கிறானோ அவனுடைய நினைவு அந்த வாஸனையைப பற்றுகிறது ஜாக்ரத்ஸ்வப்நங்களிலுண்டான இரண்டு வாஸனைகளு

டைய பிரத்யக்ஷமான நாசமானது நித்தியம் விரும்பப்பட்டதாக இருக்கிறது (மனம் புத்தி சித்தம் பிராணன் ஞானேந்திரிய கர்மேந்திரியங்கள் ஆக) இந்திரியங்கள் (பதினைந்து) (ஸாத்விக ராஜஸ தாமஸ) வாஸனைகள் (மூன்று) (ஆகப்) பதினேழும் குணங்களாக எண்ணப்பட்டிருக்கின்றன. இவைகளுக்குப் பதினெட்டாமவன் தேஹி. எவன் சரீரத்திலிருக்கிறானே அவன் அழிவற்றவன் அல்லது, சரீரத்துடன் அந்தப்பதினேழும் சேர்ந்து ஆகப்பதினெட்டும் சரீரிகளான ஜீவர்களுக்குக் குணங்கள். அவைகள் சரீரியைப்பற்றி நிற்பவை. சரீரிபிரிந்தபொழுது சரீரத்துடன் சேர்ந்த அவைகள் இருப்பதில்லை. அல்லது, பிரிவுபிரிவாகப் பஞ்சபூதவிகாரமான சரீரமொன்றும் கர்மேந்திரியம் அவைகளின் சேஷ்டை ஆகப்பத்தும் ஞானேந்திரியம், சித்தம், மனம், புத்தி ஆகஎட்டும் சேர்ந்து சரீரிகளுடைய குணங்கள்; அல்லது, ஜாடராக்னியுடன் சேர்ந்து இருப்தும் பஞ்சபூதவிகாரமான ஒருகூட்டம். இந்தஸங்கமான சரீரத்தை மஹாஜனை ஆத்மாவானவன் பிராணவாயுவுடன்கூடநன்குதரிக்கிறன். (அந்தப்பிராணன்)உண்மையான திறமையுள்ள ஆத்மாவினுடையதேகத்தை நசிக்கச்செய்வதற்குக் காரணம் ஒருபொருள் எப்படி உண்டாகிறதோ அபபடியே அழிவைஅடைகிறது. இந்தஜீவன் புண்யபாவம் நசித்தவுடன் வேறுபுண்யபாவத்தாலஎவப்பட்டுக் காமாவினுல்ஏற்பட்டசரீரத்தைக் காலத்தால அடைகிறன். எபபொழுதும் ஓர் ஆதாரத்தைப்பற்றியவனை இந்தத்தேஹிகாலத்தினுல்ஏவப்பட்டு,ஜீர்ணமான வீட்டைவிட்டு மறுவீட்டையடைவதுபோல, திரும்பவும் திரும்பவும் ஒருசரீரம்விட்டுமறுசரீரத்தை அடைகிறன். நிசயருானத்தையுடையபண்டிதர்கள் அதைக்குறித்துப பச்சாத்தாபப்படுகிறதில்லை; (சரீரம்) தமதெனனும் அபிமானமுள்ள எளிய அறிவுள்ளஜனங்கள் பச்சாத்தாபப்படுகிறார்கள். இவன் ஒருவஸ்துவுஞ்சேர்ந்தவனல்லன் இவஸ்துச்சேர்ந்தவனும் ஒருவனுமில்லை. இவன் சரீரத்தில் புண்ணிய பாபங்களைச்செய்துகொண்டு எப்பொழுதும் தனியாகவே இருக்கிறன். பிராணியினுடையஆத்மாவானவன் ஒருபோதும் ஜனிக்கிறதேயில்லை; ஒருபோதும் நசிக்கிறதுமில்லை ஒருபோது இவன் தேகத்தைவிட்டு மேலானகதியை அடைகிறன். அந்தஜீவன் புண்யபாபமயமானதேகத்தைக் கர்மநாசத்தினல கூஷயிக்கச்செய்து அப்போது அடைந்திருக்கிறதேகத்தின்முடிவில் பரம்மபாவத்தை அடைகிறன். புண்யபாவங்களுடையநாசத்திற்காகஸாங்கியம்என்னும்ஆத்மஜ்ஞானம் விதிக்கப்படுகிறது. புண்யபாவங்கள்நசித்தபின் பரம்மத்தன்மையுண்டாகிச் சிறந்தகதியானமோக்ஷத்தை மனத்தில் அனுபவிக்கிறார்கள்' என்றுசொன்னர்" என்றுகூறினர்.

இருநூற்றிமுன்பத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜனகர் ஆசையைவிடுவதே ஸுககாரணமென்பதை மாண்டவ்யருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பாவபுத்தியுடையவர்களும் குரூரர்களுமானவங்களால தனத்திற்காகப் பிராதாக்களும் தந்தைகளும் பேரர்களும் ஞாதிகளும் மித்ரர்களும் புத்ரர்களும் கொல்லபபட்டார்கள் ஓ[1] பிதாமஹரே! பொருள்விஷயத்திலுண்டான அவாவை எப்படி நான் நிவிருத்திசெய்வேன்? அவாவினால நாங்கள் பாவங்களைச்செய்யும்படி தூண்டப்பட்டோம்" என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்திலும் விதேஹராஜன் தன்னிடம்கேட்டமாண்டவ்யருக்குச்சொல்லிய புராதனமான இந்தசரித்திரத்தைச் சொல்லுகிறார்கள். விதேஹராஜன், 'மிகவும்ஸுகமாக ஜீவிக்கின்றேன் எனக்கு ஒன்றிலும் பற்றுதலில்லை ஆகையினால், மிதிலைஎரிந்தாலும் என்னுடையதுஒன்றும் எரிக்கப்படவில்லை ஞானிகளுக்கு நிறைந்த பொருளகளும் அதிகமானதாக்கமலலவா? குறைவானபொருள்களுங்கூட அறிவீனர்களை எபபொழுதும் மயக்குகின்றன இவ்வுலகில் காமத்தினுண்டாகும் ஸுகமும் தேவலோகத்திலுள்ளமஹத்தான ஸுகமும் அவாவின்நாசத்தினுண்டான ஸுகத்தினுடைய பதினறில் ஒருபாகத்தைக்கூட அடையயோக்யமாகாதல்லை. பசுவானது காலத்தில் விருத்தியடையும்பொழுது அதன் கொம்பானது விருத்தியடைவதுபோலதனம்விருத்தியடையுமபொழுது அவாவும் விருத்தியடைகிறது. 'என்னுடையது' எனறு அபிமானிக்கப்பட்ட சிறிய பொருளும் நசிக்கும்பொழுது பெரியவருத்தத்தை உண்டுபண்ணுகிறது. விஷயங்களில் பற்றுவைக்கக்கூடாது விஷயங்களிலுண்டான பற்றுதலானது துக்கமன்றோ? அர்த்தத்தை அடைந்தால தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும்; காமங்களை விலக்கவேண்டும் வித்வானவன் எல்லாப்பிராணிகளிடத்திலும் தன்னிடத்திலிருப்பதுபோல இருக்கவேண்டும். பரிசுத்தமானமனமுள்ளவனும் கிருதார்த்தனுமானவித்வான் எல்லாவற்றையும் தானாகவே விடுகிறான் ஆகையினால், [2]மெய் பொய்களையும்ஸுகதுக்கங்களையும்அன்புஅன்பின்மைகளையும் பயம்

1 வேறுபாடம். 2 'விழிப்புஸ்வப்னங்கள்' என்பது பழையவுரை.

பயமின்மைகளையும் தள்ளிவிட்டு மனுஷ்யாதியற்றுச் சாந்தராகக் கடவீர். அறிவில்லாதவர்களால்விலக்கமுடியாததும் உடையவன் ஜீர்ணதசையை அடைந்தாலும் தான்ஜீர்ணதசையடையாததும் மரண பரியந்தமுள்ளரோகமுமான ஆசையைவிட்டவனுக்கே ஸுகம். சந்திரன்போலச்சுத்தனும் குற்றமற்றவனுமான தர்மாத்மாவானவன் தன்னுடையஆசாரத்தைப்பார்த்துக்கொண்டு இம்மையிலும் மறுமையிலும் கீர்த்தியையும் ஸுகத்தையும் அடைகிறான்' என்றான். மாண்டவ்யனென்கிறபிராம்மணர் இவ்விதம் அரசனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு பரீதியுடையவரானார்; அந்தவசனத்தைக்கொண்டாடி மோக்ஷத்தையுமடைந்தார்" என்றுசொன்னார்.

---

*இருநூற்றெண்பத்துமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(காலம்விரைந்துசெல்லுதலால் நற்கதிக்குரியதை உடனேசெய்ய வேண்டுமென்பதைப்பற்றி ஒருதந்தைக்கும் தனயனுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! காலமானது ஸகலப்பிராணிகளுக்கும் பயத்தைக்கொடுத்துக்கொண்டு செல்லும்பொழுது என்ன ப்ரேயஸ் அடையப்படும்? அதனை எனக்குச் சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"யுதிஷ்டிர! இந்த விஷயத்திலும் ஒருபிதாவுக்கும் புத்திரனுக்கும் நடந்த ஸம்வாதமான பழையஇவ்விதிஹாஸத்தை உதாகரிக்கிறார்கள். அதனை அறியக்கடவாய். சுசீபுத்திரா! வேதாத்தியயனத்தில் மிக்கபற்றுதலுள்ள ஒரு பிராம்மணனுக்கு மேதாவியென்று பெயருடைய மேதாவியான புத்திரனொருவன் இருந்தான். மோக்ஷத்திற்குரிய தர்மங்களில்ஸமர்த்தனான அந்தபுத்திரன், மோக்ஷதர்மங்களில் ஸாமர்த்தியமில்லாதவரும் தம்வேதத்தையோதுவதில்பற்றுதலுடையவருமான பிதாவைநோக்கி, 'தந்தையே! மானிடர்களுடைய ஆயுள் விரைவாகச்சென்றுவிடுவதால தீர்க்ஞனவன் எதை நன்குஉணர்ந்து அனுஷ்டிக்கவேண்டும்? ஓ! தந்தையே! நான்செய்யவேண்டியதும் உள்ளபடி பயனளிப்பதுமான தர்மத்தை எனக்கு முறையா

---

*இவ்வத்யாயக்கதை முன் 174-வது அத்யாயத்தில் சிறிதுமாறுபட்டு வந்திருக்கிறது.

கச்சொல்லும்' என்றுகேட்க, பிதா, 'குமாரனே! பிரம்மசரியவிரதங்களிலிருந்து வேதங்களை அத்தியயனஞ்செய்து பிறகு பித்ருக்களைப் பரிசுத்தஞ்செய்யவேண்டிப் புத்திரர்களை உண்டுபண்ணவேண்டும். அக்னிகளை ஆதானஞ்செய்து விதிப்படி யஜ்ஞங்களை அனுஷ்டித்துப் பிறகு வனத்தையடைந்து முனியாவதற்கு விரும்பவேண்டும்' என்று சொன்னார். புத்திரன், 'இவ்விதம் உலகமானது அடிக்கப்பட்டும் எங்கும்சூழப்பட்டும் பழுதுபடாமல்சென்றுகொண்டுமிருக்க நீர் என்ன *தீரர்போலப்பேசுகிறீர்?' என்று சொன்னன். பிதா, 'உலகம் எப்படி அடிக்கப்பட்டிருக்கிறது? எதனால் சூழபபட்டிருக்கிறது? இவ்வுலகில் பழுதற்றவைகளாக எவைகள் விழுகின்றன? என்ன என்னைப் பயப்படுத்துகிறாய்?' என்றுவினவ, புத்திரன், 'உலகம்மிருத்யுவினால் அடிக்கப்பட்டிருக்கிறது; ஜரையினால் சூழபபட்டிருக்கிறது. இராப்பகல்கள் சென்றுகொண்டிருக்கின்றன. இவற்றை ஏன் அறிகிறீரிலலை? மிருத்யுவானவன் நிற்கமாட்டானென்று அறிகையில் நானே ஞானத்தால் காபபாற்றிக்கொள்ளாமல் எங்ஙனம் காத்திருப்பேன்? ஓவ்வோர் இரவும்சென்று ஆயுள்மிகவும்குறைந்துகொண்டு வருவதால் ஆழமில்லாதஜலத்திலிருக்கும்மத்ஸ்யம்போல எவன் ஸுகத்தையடைவான்? எந்தமுதல்இரவிலே கர்ப்பம் மாதாவை அடைகிறதோ அந்தஉருராத்ரிதூங்கிவிட்டுப பிறகு மரணத்திற்கு வழிப்படுகிறது. வேறுவிஷயத்தில் மனத்தைச்செலுத்திக்கொண்டு புஷ்பங்களைத்தேடுகிறவன்போலிருக்கிறமனிதனை விருப்பங்கள்நிறைவேறுமுன்னமே மிருத்யு அடைகிறான். நாளைசெய்யவேண்டியதை இன்றே செய்யவேண்டும். மாலையில்செய்யவேண்டியதைக் காலையிலே செய்யவேண்டும். இவனுடையகாரியம் செய்யபபட்டதையாவது செய்யப்படாததையாவது மிருத்யு எதிர்பார்க்கமாட்டான். ஆகையால், ஸ்ரேயஸைக்கொடுக்கக்கூடியதை இப்பொழுதே செய்யக்கடவீர். உம்மை மகத்தானகாலமானது கடந்துபோகவேண்டாம் யாருக்கு இன்னஸமயம் மரணகாலம்வரப்போகிறதென்று யார் அறிவார்? காரியங்கள்செய்யப்படாமலிருக்கையிலேயே ம்ருத்யு இழுக்கிறான். யௌவனமுள்ளபொழுதே தர்மசீலனாகவேண்டும். உயிர்வாழ்தல் நிமித்தமில்லாததாயிருக்கிறது. தர்மமானதுசெய்யப்பட்டால் இகத்திலும் பரத்திலும் அழிவில்லாதஇன்பமே உண்டாகும். மோகத்தால் மிகவியாபிக்கப்பட்டவனன்றோ மனிஷிமக்கள்விஷயத்தில் முயற்சி

*'அஜ்ஞானத்தில்மறைந்து' என்றும்கொள்ளலாம்.

செய்துசெய்யக்கூடியதையோசெய்யக்கூடாதையோசெய்து இவர்களுக்குப் பிரீதியைக் கொடுபபான்? புத்திரர்களையும்பசுக்களையுமுடையவனும் அதிகமாக விஷயத்தில்அமுந்தினவனுமான அந்தமனிதனை மிருத்யுவானவன்,தூங்குகின்றபுலியைப் பெரியவெள்ளம்போல, எடுத்துக்கொண்டுபோகிறான். காமங்களில்சிறிதும்திருப்தியடையாமல (அவற்றைச்) சேகரிக்கின்றபோதே இவனை மிருத்யுவானவன்பெண்செந்நாய் செம்மறியாட்டைபபிடிப்பதுபோலப்பிடித்துக்கொண்டுபோகிறான் ' இந்தக்காரியம் செய்யப்பட்டுவிட்டது. இது செய்யப்படவேண்டியதாயிருக்கிறது மற்றொன்றுசெய்யப்பட்டதும் செய்யப்படாததுமாயிருக்கிறது' என்றஆசையுள்ளவனை மிருத்யுவானவன் எடுத்துக்கொண்டுபோய்விடுகிறான். செய்யவேண்டியவைகள்நடந்துகொண்டிருக்கையில் செய்யப்பட்டகாரியங்களின்பயனை அடையாதவனும் நிலம், கடை, வீடுஇவைகளில்பற்றுள்ளவனுமாயிருபபவனை மிருத்யு எடுத்துக்கொண்டுபோய்விடுகிறான் பலமற்றவனையும் பலவானையும் புத்திசாலியையும் சூரனையும் மூடனையும் கனியையும் எல்லாக் காமங்களையும அர்த்தங்களையும்அடையாமலிருக்கையிலேயேமிருத்யு எடுத்துக்கொண்டுபோய்விடுகிறான் மரணமும் கிழத்தனமும் வியாதியும் அநேகவிதகாரணங்களுள்ள துக்கமும் மனிதர்களால நலகுவிலக்கமுடியாமலிருக்க ஏன்கவலையற்றவர்போலிருக்கிறீர்? பிறந்த உடனேயே தேகியை மிருத்யுவும் ஜரையும் நாசம்பண்ணுவதற்காக அடைகின்றன; ஸ்தாவரஜங்கமங்களான இந்தபபிராணிகள் இரண்டினாலும் தொடரப்படுகின்றன மிருத்யுவின்னையும்பொழுது ஒருவனாலும் ஒருகாலும் ஸத்தியம்ஒன்றினாலல்லது பலத்தினால் தடுக்கவியலாது ஸத்தியத்திலன்றே *அமிருதமான துணிலைபெற்றிருக்கிறது? 'கிராமத்திலிருக்கிறவனுடையவிஷயப்பற்றுதலென்பது மிருத்யுவின்வீடு வனமென்பது தேவர்கள்கூடுமிடம்' என்று வேதம் சொல்லுகிறது கிராமத்தில்வசிப்பவனுடையவிஷயப்பற்றுனை தகட்டுகிறபாசமாகும். புண்யசாலிகள் இந்தப்பாசத்தை அறுத்துவிட்டுப் போகிறார்கள். பாவிகள் இதை அறுப்பதிலை மனம்மொழிசெய்கையாகியகாரணங்களால் பிராணிகளை ஹிம்லியாதவனையும்பொருளையும்கவரும்பிராணிகளால் கட்டப்படுவதில்லை. ஆகையால், ஸத்தியமானவிரதமும்ஆசாரமுமுள்ளவனும் ஸத்தியமானவ்ரதத்தையேமுக்கியமாசுக்கொண்டவனும் ஸத்யத்தில்விருப்பமுள்ளவனும் எல்லாப்

*மோக்ஷம், மரணமில்லாமை, அல்லது ப்ரம்மம்.

பிராணிகளிடத்திலும் ஸமமானவனும் மனவடக்கமுள்ளவனுமாகி ஸத்யத்திலேயே மிருத்யுவை ஜயிக்கவேண்டும். அமிருதம், மிருத்யு இரண்டும் தேஹத்திலேயே ஸ்தாபிக்கபட்டிருக்கின்றன மோகத்திலை மிருத்யு அடையபடுகிறது ஸத்யத்திலை அமிருதம் அடையபடுகிறது அப்படிப்பட்டதான கொலலாமையைவிரும்புகிறவனும் காமக்ரோதங்களே விலக்கியவனுமாகி ஸத்தியத்தைக்கைப்பற்றி ஸுகமாக கேஷமத்துடன் மிருத்யுவில்லாதவன்போல மிருத்யுவை விலக்கபோகிறேன். சாந்தியாகிற யஜ்ஞத்திலபற்றுதலுடையவனும் இந்திரியங்களைவசம்செய்தவனும்ப்ரம்மத்தியானமுடையவனும்மௌனியும் ஜபம், தியானம், ஸ்ஞானமுதலியவற்றையஜ்ஞமாகவுடையவனுமாகி உத்தராயணமார்க்கத்திற்குரியவனுவேன் என்னைபோன்ற அறிஞன், பிசாசம்போலஹிம்ஸைக்குக்காரணமும் முடிவுள்ளவையும் க்ஷத்திரியஜாதிக்குரியயாகங்களுமான பசுயாகங்களை எப்படி செய்யத்தக்கவனுவான்? பிதாவே! ஆத்மாவில்மனத்தைசெலுத்தி ஆத்மாவிலநிலைபெற்றுப பிரஜைகளை அடையாமல ஆத்மயஜ்ஞமுடையவனைப்போகிறேன். பிரஜையானது என்னைக் கரையேற்றமாட்டாது. எவனுடையவாக்கும் மனமும் தவமும் தியாகமும் யோகமும் எப்பொழுதும் நன்கு உறுதிபடுத்தபட்டவைகளாகுமோ அவன் அவைகளால எல்லாவற்றையும் அடைவான். வித்தைக்குஸமமான நேத்திரமில்லை. வித்தைக்கு ஸமமானபயனுமில்லை. ஆசைக்கு ஸமமான துக்கமுமில்லை. ஸன்யாஸத்திறகுசமமானஸுகமுமில்லை. பிராம்மணனுக்குத் தனிமை, ஸமபுத்தி, ஸத்யம், நல்லசீலம், வாக்கு மனம்காயம்இவைகளை அடக்கல்,கபடமின்மை,ஸகலகாரியங்களிலிருந்தும்ஒழிவு இவைகளுக்கு ஸமமானதனம் இல்லை ஓ! பிராம்மணரே! மரிக்கப்போகின்றஉமக்குத் தனங்களால என்னபயன்? உறவினர்களால்தான் என்னபயன்? மனைவியினலைதான் என்னபயன்? ஹ்ருதய குகையில்புகுந்திருக்கின்ற ஆத்மாவைத்தேடும் உம்முடையபாட்டன்மார எங்கேபோனார்கள்? உம்முடையபிதாவும் எங்கேபோனர்?' என்றான் அரசனே! புத்திரனுடைய இவ்விதமான வார்த்தையைக் கேட்டுத் தந்தையானவர் அப்படியேசெய்தார் ஓ! அரசர்களிலுத்தமனே! நீயும் அப்படியே ஸத்யமானதர்மத்தில பற்றுதலுள்ளவனைக் கடவாய்" என்றுசொன்னர்

இருநூற்றெண்பத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரம்மத்தைஅடைவதற்குரிய ஆசாரமுதலியன.)

யுதிஷ்டிரர், "எவ்வித ஸ்வபாவமும் எவ்வித நல்லஆசாரமும் எவ்விதமானவித்தையும் எவ்விதமான ஆஸ்ரயமுமுள்ளவன் மூலப்பிரகிருதிக்கு அப்புறமுள்ளதும் சலனமற்றதுமான ப்ரம்மத்தின் ஸ்தானத்தை அடைகிறான்?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"மோக்ஷதர்மங்களில் பற்றுதலுள்ளவனும் மிதமான ஆகாரமுடையவனும் இந்திரியங்களை ஜயித்தவனுமானவன் பிரகிருதிக்கு மேற்பட்டதும் சலனமற்றதுமான பரமமானஸ்தானத்தைஅடைகின்றான். யுதிஷ்டிரா! இந்தவிஷயத்திலும் முன்காலத்தில் ஹாரீதரால் சொல்லப்பட்ட பழமையான ஒருசரித்திரத்தைச் சொல்லுகிறார்கள். அதை அறியக்கடவாய் இம்மைக்குரியபொருள்களை வேண்டுமட்டும் அடைந்திருக்கும்போதே ஆசையில்லாமல் தன்னுடையவீட்டினின்றும்கிளம்பிக் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் மனவேறுபாடின்றி மௌனத்துடன் ஸன்யாஸத்தை அடையவேண்டும். நேத்திரத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் பிறரைத் தூஷிக்கக்கூடாது. நேரிலோ அலலதுபுறத்திலோ ஒரிடத்திலும் தூஷணத்தைச் சொல்லக்கூடாது. ஒருபிராணிக்கும் துன்பம்செய்யக்கூடாது. ஸௌரியனுடையகதியே பான்றகதியுடன் ஒரிரவுஒரிடமாய் ஸஞ்சரிக்கவேண்டும். இந்தஜீவனத்தை அடைந்து ஒருவனேனும் வைரத்தைச் செலுத்தக்கூடாது எல்லைகடந்தசொற்களைப் பொறுக்கவேண்டும். ஒருவரைப்பற்றியும் அகங்காரத்தை அடையக்கூடாது கோபிக்கப்பட்டாலும் பிரியவார்த்தைசொல்லவேண்டும். வையப்பட்டாலும் நல்லவார்த்தைசொல்லவேண்டும். [1]கிராமத்தின்மத்தியில் இடமும்வலமுமாகப்போகக்கூடாது. பிக்ஷாடனத்தைச்செய்யாமல் [2]மூன்றியே அழைக்கப்பட்டுப் போகக்கூடாது. [3]புழுதிகளாஉறைக்கப்பட்டாலும் நன்றுக மனத்தைஅடக்கிக்கொண்டு வாக்கினைல்கூட அப்பிரியத்தைச்

---

1 'கிராமப்பொதுக்காரியங்களில் அனுகூலமாகவும் பிரதிகூலமாகவும் நடக்கக்கூடாது' என்பது பழையவுரை.

2வேறுபாடம். 3அமைதிக்கப்பட்டால்.

சொல்லாமலிருக்கவேண்டும். தயையுள்ளவனும் ப்ரதிசெய்யாதவனும் பயமற்றவனும் தோஷமில்லாதவனுமாயிருக்கவேண்டும். புகை அடங்கி உலக்கைசார்த்தித் தணலவிந்து ஜனங்கள் புஜித்துப் பரிமாறுகின்றவர்களுடையஸஞ்சாரம்நின்றபொழுது முனியானவன் பிக்ஷாசரியையடையவிரும்பவேண்டும் ஆகாரங்களின்லாபங்களில் ஆதரவு வையாமல் ப்ராணயாத்திரைக்குமட்டும் ஆகாரமுடையவனுமிருக்கவேண்டும். கிடையாதபொழுது வருத்தமடையக்கூடாது. லாபமும் இவனைமகிழ்விக்கக்கூடாது எல்லாருக்கும்பொதுவான சந்தனம் ஆரமுதலானலாபத்தை விரும்பக்கூடாது. பூஜிக்கப்பெற்றுப் புஜிக்கக்கூடாது. அப்படிபபட்டவன் பூஜித்துக்கொடுப்பதை வெறுக்கவேண்டும். அன்னதோஷங்களை இகழக்கூடாது. குணங்களையும் புகழக்கூடாது. ஏகாந்தமானபடுக்கையையும் இருத்தலையும் எப்பொழுதும் விரும்பவேண்டும் சூன்யகிருகத்தையோ மரத்தின் அடியையோ அல்லது வனத்தையோ குகையையோ ஒன்றை ஒருவருக்கும்தெரியாமல் அடைந்து மற்றோரிடத்தில்போய் வஸிக்கவேண்டும். சலனமற்றவனும் நிலைபெற்றவனுமாகி (பிறர்) அனுஸரித்தாலும் விரோதித்தாலும் ஸமமாயிருக்கவேண்டும் தன்கர்மாவில [1]நல்ல கார்யத்தையோ கெட்டகார்யத்தையோ இரண்டையும் நினைக்கக்கூடாது. எப்பொழுதும்திருப்தியுடையவனும் மிகவும் ஸந்தோஷமுடையவனும்தெளிவானமுகமும்இந்திரியங்களுமுடையவனும் பயமற்றவனும் ஜபிக்கவேண்டிய (ப்ரணவத்) தைமுக்கியமாகக்கொண்டவனும் (மற்ற வார்த்தைகளில்) மௌனமுள்ளவனும் வைராக்யத்தை உறுதியாக அடைந்தவனும் பூதவிகாரமானதேஹம்இந்திரியமுதலானவற்றையும் ப்ராணிகளின் [2]போக்குவரவுகளையும் கவனித்து ஆசசரியமடைந்தவனும் எல்லாவற்றையும்பார்க்கிறவனும் பக்வபதார்த்தத்தினுலும் அபக்வபதார்த்தத்தினுலும்ஜீவிப்பவனும ஆத்மாவில்ரமிக்கிறவனும் மிகவும்சாந்தமானசித்தமுடையவனும் சேஷானஉணவுடையவனும் இந்திரியங்களை, ஜயித்தவனுமாயிருக்கவேண்டும். தவமுடையவனுடைய வாக்கின்வேகத்தையும் மனத்தினுலுண்டான கோபத்தின்வேகத்தையும் பிறருக்குத்துன்பம்செய்தலிலுண்டானவேகத்தையும் உதரம் குறி இவைகளின்வேகத்தையும் விலக்கவேண்டும். பிறர்செய்தகிர்த்தையும் இவனுடையமனத்தைக் கெடுக்கக்கூடாது. புகழ்ச்சி இகழ்ச்சிகளை ஒப்பாகக்கொண்டு மத்யஸ்தனுகவேஇருக்கவேண்டும்.

---

1 புண்யபாபமிரண்டையும். 2ஜனனமரணங்களையும்.

ஸன்யாஸியானவன் பரிசுத்தமாயும் மேலன தாயுமிருக்கிற இந்தஸாத னத்தை அவலம்பிக்கவேண்டும் மகத்தான சித்தமுடையவனும் ஸகல விஷயங்களிலும்அடங்கினவனும் ஒரிடத்திலும் ஸங்கமில்லாதவனும் முன்பழகியவிடத்தில்சேராதவனும் ஸமாதியுடையவனும் மெல்லிய தன்மையுள்ளவனும் தனக்காக ஓரிருப்பிடமில்லாதவனுமாயிருந்து கொண்டு ஒருபொழுதும் ஞானபிரஸ்தன்கிருகஸ்தன் இவர்களுடன சேராமலிருக்கவேண்டும் இன்னவிடமிருந்து லாபங்கிடைக்குமென் பதைக்கருதாமலே உணவு ஆடைமுதலியவைகளை அடையவிரும்ப வேண்டும் (லாபத்தில்) இவனைச் சந்தோஷம் அடையக்கூடாது வித் வான்களுக்கு இந்தஸன்யாஸாச்ரமம் மோக்ஷஸாதனமாகும் அவித் வான்களுக்கு இது துர்ச்ரமமாகும் இவைகளலாவதறையும் வித்வான் களுக்கு மோக்ஷவழியென்று ஹாரீதர் சொன்னர் எவன எல்லாப் பிராணிகளுக்கும் அபயத்தைக்கொடுத்துவிடு வீட்டிலிருந்துவெளி ப்பட்டுசசெல்லுவானே அவனுக்குத் தேஜோமயமான உலகங்கள் வித்திக்கும். அவன் மோக்ஷத்தையடைபத்தகுந்தவனுவான்" என்று சொன்னர்.

இருநூற்றெண்பத்தைந்தாவது அத்யாயம்

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(அறிவேஸ்ரதுக்கங்களுக்குக் காரணமென்பதைப்பற்றிச் சுகாருக்கும் வ்ருத்தாவுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

யுதிஷ்டிரர், "எல்லாஜனங்களும்எங்களை, 'தன்யர்கள், தன்யர் கள்' என்றுசொல்லுகிறார்கள். ஆனல், இவ்வுலகில் எங்களுக்கொப் பாக ஒருவனும் மிகவும்துக்கத்தைஅடைந்தவனில்லை ஓ! குருகுலத் திற்சிறந்தவரே! பிதாமஹரே! உலகத்தாரால்மதிக்கப்பெற்ற தேவர் களாலே மானிடர்களிடத்தில்உற்பத்தியையடைந்தும் நாங்கள் துக் கத்தையடைந்தோம் எப்பொழுது துக்கத்திற்கு ஔஷதமான ஸன்யாஸத்தை நாங்கள் அடையப்போகிறோம்? ஓ! குருஸ்ரேஷ் டரே! சரீரங்களைத் தரிப்பதென்பது துக்ககரமானது. ஓ! பிதா மஹரே! கடுமையான விரதமுடையமுனிவர்கள் (பிராணன்கள்ஐந்து, இந்திரியங்கள் பத்து, மனம் புத்தி இரண்டு ஆகப்) பதினேழாலும் ஸம்ஸாரகதியையுண்டுபண்ணுகிற (காமம் குரோதம் லோபம் பயம்

ஸ்வப்னமென்கின்ற யோகதோஷங்கள்) ஐந்தாலும் (சப்தஸ்பரிசரூப ரஸகந்தங்களென்கிற) இந்திரியவிஷயங்களாலும் (ஸத்வராஜஸ்தமோ) குணங்களாலும் (ஸ்தூலபூதங்கள்ஐந்து, அவித்தை, அஹங்காரம், கர்மம் ஆகிய) எட்டாலும் விடப்பட்டு மறுஜன்மத்தை அடையாமலிருக்கிறார்கள். சத்துருக்களைத் தபிக்கச்செய்பவரே! நாங்கள் ராஜ்யத்தைவிட்டுவிட்டு எப்பொழுது செல்வோம்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! மஹாராஜனே! முடிவில்லாதது ஒன்றுமில்லை. எல்லாம் அளவில் அடங்கியதே. மறுஜன்மமும் அளவிடப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் ஒன்றும் ஸ்திரமானதில்லை ஓ! அரசனே! அதிகப் பற்றுதலினாலே இந்த ராஜ்யதோஷம் அடையப்படுகிறதில்லையென்பதில்லை. ஆனாலும், தர்மத்தை அறிந்த நீங்கள் முயற்சியினாலேயே சிறிதுகாலத்தில் மோக்ஷத்தை அடையப்போகிறீர்கள் ஓ! அரசனே! தேஹியானவன் எப்பொழுதும் புண்ணிய பாவங்களுக்குத் தக்கவனாகிறதில்லை; அவைகளாலேயே கிளம்பின மோகத்தினால் வியாபிக்கவும்படுகிறான். (ரூபமற்ற) வாயுவானது முதலில்அஞ்சனம் பிறகு மனச்சிலையின்பொடி இவைகளின் ஸம்பந்தத்தால் அவ்வவற்றின் வர்ணமுள்ளதாகித் திசைகளை அந்தஅந்தவர்ணமுள்ளனவாகச் செய்வதாகக் காணப்படுவதுபோல ராகத்வேஷாதிகளற்ற ஆத்மாவானவன் மோகத்தால் சூழப்பட்டுக் கர்மபலங்களில் ஆசையை அடைந்து விருப்புவெறுப்புமுதலியவைகளை ஆஸ்ரயித்துத் தேகங்களில் சுற்றுகிறான். பிராணியானது எப்பொழுது அஜ்ஞானத்தினாலுண்டான தமோகுணத்தை ஞானத்தினால் விலக்கிக்கொள்ளுகிறதோ அப்பொழுது ஸநாதனமான ப்ரம்மம் பிரகாசிக்கின்றது. முனிவர்களும் முக்தர்களும் அந்தப்பிரம்மத்தைக் கர்மாவினால் ஸாதிக்கத்தகாததாகச் சொல்லுகின்றார்கள். உன்னாலும் தேவர்களாலும் மற்ற உலகத்தார்களாலும் உபாவிக்கத்தக்க முக்தர்களான மஹரிஷிக்கூட்டங்களும் அந்தப் ப்ரம்மோபாஸ்தியிலிருந்தும் ஒழிவை அடைவதில்லை. அரசனே! பாரத! இந்தவிஷயத்தில் தேவர்களால் ஜயிக்கப்பட்டவனும் ஸஹாயமற்றவனும் ராஜ்யத்தை இழந்தவனும் ஸாமர்த்தியமிழந்தவனும் சத்துருக்களுடைய மத்தியில் கேவலம் புத்தியையேகொண்டு துக்கமற்றவனுமாயிருக்கிற விருத்ராஸுரன் செய்ததைப்பற்றி முன் சொல்லப்பட்ட சரித்திரத்தை ஒரே மனத்துடன் கேட்கக்கடவாய். முன்காலத்தில் ஐசுவரியமிழந்த விருத்ராஸுரனை நோக்கி, சுக்ரர், 'தானவ! பகைவர்களால் வெல்லப்பட்ட உனக்கு இப்பொழுது

வருத்தமில்லையா?' என்று கேட்க, விருத்ராஸுரன் 'நான், ஸத்யத்தினாலும் தவத்தினாலும் உலகத்தின் அழிவை அறிந்து பிராணிகளுடைய வரவையும் போக்கையும்குறித்துத் துக்கிக்கிறதமில்லை; ஸந்தோஷிக்கிறதுமில்லை. ஜீவர்கள் காலத்தினால் ஏவப்பட்டுச் தம்வசமில்லாதவர்களாகி நரகத்தில் முழ்குகிறார்கள். புத்திமான்கள் ஸந்தோஷமுள்ள எல்லாவற்றையும் திவ்யங்களாகச் சொல்லுகிறார்கள். பிராணிகள் காலத்தினால்ஏவப்பட்டுக் கணக்கிடப்பட்ட அந்தக்காலத்தைக்கழித்துவிட்டு மிகுந்தகாலத்தில் உலகங்களில் மாறிமாறிச் சுற்றுகின்றன ஜீவர்கள் காலமாகிறகட்டில்கட்டப்பட்டுத் தம்வசமற்று ஆயிரம்திரியக்ஜன்மங்களையும் நரகத்தையுமடைந்து மறுபடியும் வெளியில்வருகின்றனர் நான் இவ்விதம் ஸம்ஸாரத்தில் உழலுகின்றபிராணிகளைப் பார்த்தவன் வீணைக்குத்தக்கபயனுண்டாகுமென்று சாஸ்திரத்தில் காணப்படுகிறது சிலர் திரியக்ஜன்மத்தையும் சிலர் நரகத்தையும் சிலர் மனுஷ்யஜன்மத்தையும் சிலர் தேவத்தன்மையையும் அடைகின்றனர். எல்லாப்பிராணிகளும் முன்னமே நண்பர்களிடத்திலும் பகைவர்களிடத்திலும் ஸுகதுக்கங்களைச்செய்து யமனுடையகிங்கரையடைந்து செலலுகின்றன. ஸகலபிராணிகளும் எப்பொழுதும் சென்றவழியிலேயே செல்லுகின்றன' என்றான். காலத்தின் அளவினால் அளவிடப்பட்டதாகவும் ஸ்ருஷ்டிஸ்திதிவிஷயமாகவும்சொலலுகின்ற அவனிடம்நாக்கிச் சுக்ரபகவான், 'அபபா! நீ இந்தவார்த்தைகளை ஏன் பிதற்றுகிறாய்?' என்று மறுத்துக்கூறினார். விருத்ரன், 'முன்காலத்தில் நான் ஜயத்தில்விருப்பங்கொண்டு பெருந்தவம்புரிந்ததும்,பூதங்களுடையபலவிதமானகந்தங்களையும்ஸங்களையும்அனுபவித்து எனதுவலிமையினால மூவுலகங்களையும் ஆக்ரமித்து விருத்தியடைந்ததும், ஜ்வாலைகளின்ஸமூகங்களால்வியாபிக்கப்பட்டவனும் ஆகாயத்தில்ஸஞ்சரிபபவனும் எலலாப்பிராணிகளுக்கும் வெல்லமுடியாதவனும் எப்பொழுதும்பயமில்லாதவனுமாயிருந்ததும் உங்களுக்கும் மற்றப்புத்திமான்களுக்கும் வெளிப்படையாகத் தெரியும். தவத்தினால் ஐசுவரியம் அடையப்பட்டது. அது என்கர்மங்களால் நழுவிவிட்டது ஓ! பகவானே! ஆதையால், நான் தைரியத்தைஅடைந்து துக்கிக்காமலிருக்கிறேன் முன்காலத்தில் மஹாத்மாவான இந்திரனோடு யுத்தம்செய்யவிரும்பமுள்ளநான் அவ்விடத்தில் எல்லாப் பாவங்களையும் அபகரிக்கிறவரும் ஸமர்த்தரும் ஓரிடத்திலும் தடையில்லாதவரும் பரிபூர்ணரும் முடிவற்றவரும் சுத்தரும் வியாபகரும் அனுதியும் பழுத்த தர்ப்பைபோலப் பொன்னிறமானதேகசத்

தையுடையவரும் மஞ்சள்நிறமான மீசையையுடையவரும் எல்லாப் பிராணிகளுக்கும் பிதாமஹரும் பகவானுமான நாராயணரைத் தரிசித்தேன். அந்தத் தவத்தின் புண்யம் என்னிடத்தில் நிச்சயமாகமிச்சமிருப்பதால இப்பொழுது கர்மாவின் பயனைப்பற்றி உம்மிடம் கேட்க எனக்கு விருப்பமுண்டாயிற்று. ஓ! பிராம்மணரே! பெரிய ஐச்வரியமானது எந்த ஜாதியில் நிலைபெற்றிருக்கிறது? உத்தமமான ஐச்வரியமானது மறுபடியும் எப்படி நிவருத்திக்கவுஞ்செய்கிறது? எதினின்றும் பிராணிகள் உண்டாகின்றன? எப்படி பிரவ்ருத்திக்கின்றன? ஜீவன் எந்த மேலான பயனை அடைந்து நிலைத்திருக்கிறான்? ஓ! பிரம்மரிஷியே! அந்தப் பயனானது எந்தக் கர்மத்தினால் அடையக்கூடியது? அல்லது, எந்தஞானத்தினால் அடையக்கூடியது? அதை எனக்கு விவரிக்கவேண்டும்' என்றான். ராஜர்ரேஷ்டனே! புருஷர்ரேஷ்டனே! இவ்விதம் இதைப்பற்றிக்கேட்க்க அந்த முனிவீர் அப்பொழுது சொன்னமறுமொழியை நான் சொல்லுகிறேன். அதனை,நீ சித்தத்தை வெளியில்விடாமல் தம்பிகளோடு கேட்கக்கடவாய்" என்று சொன்னர்.

இருநூற்றுமுண்பத்தாருவது அத்யாயம்

மோக்ஷ தர்மம். (தொடர்ச்சி.)

(ஸநத்குமாரர் விஷ்ணுவின் மகிமையையும் பிறப்பின் கணக்கையும் ஜீவர்களின்வர்ணமுதலியவற்றையும் சுக்ரருக்கும் வீருத்ராணுக்கும் சொல்லியது.)

சுக்ராசாரியர், ' ஸர்வாத்மகரும் பகவானுமான அந்தத் தேவருக்கு நமஸ்காரம். ஓ! ஐயனே! அஸுரர்ரேஷ்டனே! எவருடைய பாஹ்யஸ்தானமானது ஆகாயத்தோடுகூடியபருதிவியோ,எவருடைய சிரஸ்தானமானது முடிவற்றமோக்ஷமோ அப்படிப்பட்டவிஷ்ணுவினுடைய உத்தமமான மாஹாத்மியத்தை நான் சொல்லப்போகிறேன்' என்று சொன்னர் இவ்விதம் அவ்விருவரும் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது ஸந்தேகத்தை நிவிருத்திசெய்வதற்காகத் தர்மாத்மாவான ஸநத்குமாரமகாமுனிவர் வந்தார். ஓ! அரசனே! முனிகாமணியான அவர் அஸுரர்ரேஷ்டனாலும் சுக்ரனென்னும் முனிவராலும் பூஜிக்கப்பட்டு மிகச்சிறந்தஆஸனத்தில் உட்கார்ந்தார். உட்கார்ந்திருப்பவரும் மகாப்ராஜ்ஞருமான அவரைநோக்கிச் சுக்ரா

சாரியர், 'இந்த அஸுரஸ்ரேஷ்டனுக்கு விஷ்ணுவினுடைய உத்தமமான மாஹாத்மியத்தைச்சொல்லும்' என்று சொன்னர். ஸந்தருமார் (அந்த) வார்த்தையைக்கேட்டுப் புத்திமானான அஸுரராஜனுக்கு விஷ்ணுவினுடையமாஹாத்மியத்தைதாடுகூடினதும் பயனுள்ளதுமான வார்த்தையைச் சொல்லத்தொடங்கினர். 'திதியின் புத்ரனே! உத்தமமானி இந்த விஷ்ணுவின் மாஹாத்மியத்தை முழுதும் கேட்கக்கடவாய். பகைவர்களைத் தபிக்கச்செய்பவனே! எல்லாஜகத்தும் விஷ்ணுவினிடத்திலிருக்கின்றதென்று அறி ஜகத்திலுள்ளனவெல்லாம் இவரிடத்திலேயே லயமடைகின்றன; இவரிடமிருந்து உண்டாகின்றன; இந்தமஹாபாஹுவானவர் ஸ்தாவரஜங்கமரூபமான பிராணிவர்க்கத்தை ரக்ஷிக்கின்றார்; இவரே ஸமயத்தில் ஸம்ஹரிக்கவும் செய்கின்றார்; ஸமயத்தில் ஸ்ருஷ்டிக்கவும் செய்கின்றார். தானவ! இவர் உன்னுடைய தவத்தினுலும் யாகத்தினுலும் அடையக்கூடியவரல்லர்; ஆனல், இந்திரியங்களை அடக்குவதனலேயே அடையக்கூடியவா வெளியிலும் உள்ளினுமுள்ள யாகயோகாதிகர்மத்தினல நிச்சயத்துடன் மனத்திலிருந்து தன்னை நிர்மலமாகச் செய்துகொள்ளுகிறவன் அபவர்க்கத்தில் அழிவில்லாமையை அடைகிறன். தட்டான் அநேகந்தடவை மிக்க முயற்சியோடு பெரிதான தன்னுடைய செய்கையினல வெள்ளியை அக்னியில் சுத்தம்செய்வதுபோல ஜீவனனவன் சிறிது சிறிதான கர்மத்தினல் அநேகம் ஜன்மங்களால் சுத்தியடைகிறன்; ஒருஜன்மத்தில் பெரிதானுயத்தனத்தினலும் முழுதும் சுத்தனகிறன் விளையாட்டினல்படிந்தஅற்பமானபுழுதியைத் தன்அவயவத்திலிருந்தும் துடைப்பதுபோலப் பெரிதான அனேகம்யத்தனத்தினல பாபங்களிருந்தியைச் செய்யவேண்டும். அற்பமான புஷ்பமாலையினல் வாஸிக்கட்டப்பட்ட [1]கடுகெண்ணெயானது தன்னுடைய கந்தத்தை விடுகிறதில்லை. [2]அதுபோல ஸூக்ஷ்மவஸ்துவின் தரிசனம் எளிதில் உண்டாகிறதில்லை. அந்தத் தலைமை அனேகம் புஷ்பமாலைகளால் அடிக்கடி வாஸிக்கட்டப்பட்டுத் தன்வாஸனையைவிட்டுப் புஷ்பவாஸனையை அடைகிறது. [3]இப்படியே முக்குணங்களால் ஸ்திரீ முதலானவர்கள்

---

[1]'திலஸர்ஷபம்' என்பது மூலம்; 'எள்ளும் கடுகும்' என்றும் கொள்ளலாம். [2]அப்படியே கொஞ்சமாகச்செய்தகாரியத்தை (நிஷ்பலமாக)க் கண்டு கொள்ளுவான் என்றும் கொள்ளலாம். [3]'இப்படியே குணங்களுடன்கூடின ஸம்பந்தத்தையுடையவர்களிடத்தில் அனேகஜன்மங்களினல் ஏற்பட்டதோஷமானது அப்யாஸத்தினலுண்டான ப்ரயத்தனத்தினல் தம்முடைய புத்தியினலேயே விலக்கப்படும்' என்றும் கொள்ளலாம்.

நிமித்தமாக ஏற்பட்ட தோஷமானது புத்தியினால் அனேகஜன்மங்களில் அப்யஸிக்கப்பட்ட யத்தனத்தினால் நிவ்ருத்திக்கின்றது. தானவ! பிராணிகள் தம்முடையகர்மத்தினாலே பற்றுள்ளவைகளும், பற்றற்றவைகளுமாகின்றன. பிராணிவர்க்கங்கள் கர்மவிசேஷங்களே அடைகின்றவிதத்தைக்கேள். [1]எப்படி உண்டாகின்றனவோ எதில் எப்பொழுதுமிருக்கின்றனவோ அதை உனக்கு முறையாக விவரிக்கப் போகிறேன். அதை இப்பொழுது ஒருமனமாய்க் கேள். ஆதியந்த மற்றவரும் ஸ்ரீமானும் ஜனங்களுடைய ஹ்ருதயகுகையிலிருக்கிறவரும் ப்ரபுவும் ஸ்வயம்ப்ரகாசருமான ஸ்ரீஹரியானவர் சராசரங்களான பிராணிகளை ஸ்ருஷ்டிக்கின்றார். [2]இவர் ஸகலப்ராணிகளிடத்திலும் கூரமானதேகமும் அகூரமானஜீவனும் பதிஞ்ஞெருவிகாரங்களான இந்திரியங்களுடைய ரூபமுமாயிருந்துகொண்டு இந்திரிய வியாபாரங்களால் ஜகத்தை அனுபவிக்கின்றார் பூமியை அவருடைய பாதங்களாகவும் ஸ்வர்க்கத்தைச்சிரஸாகவும் அறியக்கடவாய். தைத்தியனே! அவருக்குத் திக்குக்கள் கைகள்; ஆகாயமே ஸ்ரோத்திரம்; சூரியன் நேத்திரம்; சந்திரன் மனம்; மஹத்தத்வம் எப்போதும் விருத்திஜ்ஞானம்; ஜலம் ரஸனேந்திரியம். ஓ! அஸுரர்ரேஷ்டனே! சிகரங்கள் அவருடையபுருவங்களுக்கருகிலிருக்கின்றன. அஸுரனே! நேத்திரத்தை நக்ஷத்திரமண்டலமாகவும் முகத்தை அக்கினியாகவும் அவரை விஸ்வமானவராகவும் விஸ்வத்திற்கு ஆதியாகவும் பரமானஈஸ்வரராகவும்அறியக்கடவாய் ரஜஸையும்தமஸையும் ஸத்வத்தையும் நாராயணரிவரூபமாக அறியக்கடவாய்.ஐயனே! அவர் ஆபத்ரமங்களுக்குக் காரணம். அவரைக் கர்மாவின்பயனை நிணைக்கின்றார்கள். ஸங்யாஸத்தின் சிறந்தபயனனமோக்ஷமும் அழிவற்றவரான அவரே. மந்திரங்கள் எவருடையரோமங்களோ, பிரணவமானது எவருடைய வார்த்தையோ அவர் அனேகம் இருப்பிடங்களுடையவர்; அனேகம் முகங்களுடையவர். அவரே தர்மம். அவர் பிராணிகளின் ஹ்ருதயத்திலிருக்கின்றார். அவரே பரம்மம். அவரே ஞானம். தவமும் அவர். ஸத்தும் அவர். அஸத்தும் அவர். மந்திரம், பிராம்மணம்,

---

1 'எவ்விதம் கர்மாவில் ப்ரவிருத்திக்கின்றனரோ, எதனால் எப்பொழுதும் ஒழிவை அடைகின்றனரோ' என்பது பழையவுரை.

2 'ஸம்ஸாரிஜீவஸ்வரூபரும் முக்தஸ்வரூபருமான அந்தப்பகவான் எல்லாப் பிராணிகளிலும் பதிஞ்ஞெரு விகாரங்களுக்கு ஆத்மாவாயிருந்து தம் கிரணங்களான ஜீவர்கள்வழியாய் ஜகத்தை அனுபவிக்கின்றார்' என்றும் கொள்ளலாம்.

பாத்திரங்கள் இவைகளுடன்கூடியதும் [1]பதினாறரித்விக்குக்களுள் ளதுமானயாகமும் அவரே. பிரம்மாவும் அவர். ருத்திரரும் அவர். அஸ்வினீதேவர்களும் அவர. இந்திரனும் அவர். ஸூரியனும் அவர். வருணனும அவர் யமனும் அவர். குபேரனும் அவர். அந்தபரம்மா முதலான ரித்விக்குக்கள் இவ்விதம்தனியாகப்பா ர்க்கின்றவர்களாயிருந் தாலும் அப்படிமே நாராயணருடைய ஓரே ரூபமாயிருப்பதையும் அறிகின்றீர்கள். இந்த ஸகல ஜகத்தும் அந்த ஓரே தேவருடைய வசத்தில். இருக்கிறதென்று அறி. ஓ! அஸுரஸ்ரேஷ்ட! பலரூப மான அவரே ஒருவராயிருக்கிறரென்றும் சொல்லுகின்றீர்கள். பிராணியான து விஜ்ஞானத்தினல் (அவரைஎல்லாமாகப) பார்க்கிறது. பிறகு, ஓரே ஸத்தாரூபமான ப்ரம்மம் பிரகாசிக்கிறது. சில பிராணி கள் ஆயிரங்கோடி கலபங்கள் ஸ்தாவரங்களாயிருக்கின்றன சில ஜீவாகள் ஜங்கமங்களாயிருக்கின்றீர்கள். அஸுரனே! பிரஜைக ளின் ஸம்ஸாரத்தின அளவைச் சொல்லுகிறேன் ஒவ்வொன்றும் ஒரு யோசனை தூரம் அகலமும் ஐந்நூறு யோசனை நீளமுமுள்ளன வும் ஒரு க்ரோசம் ஆழமாயிருப்பதால் இறங்கமுடியாதனவும் விருத்தியடைந்தனவுமான பலவாயிரம்வாபிகளிலுள்ள ஜலம் முழு மையும் ஒரு மயிரின் நுனியால ஒருநாளுக்கு ஒரேதரமாக இறைத் தால் வற்ற எவ்வளவு காலமாகுமோ அவ்வளவு காலம் பிரஜைகளு டையமுக்கியமான ஒரு ஸ்ருஷ்டியும் ஸம்ஹாரமுமென்று தெரிந்து கொள் .கறுப்பு, தூம்ரம், நடித்தரமான நீலம், மிகவும் ஸுஹிக்கக் கூடிய சிவப்பு, ஸுகமாயுள்ள மஞ்சள்வர்ணம், மிகவும் ஸுகமா யுள்ள வெண்மைஎன்று ஜீவர்களின் ஆறுவர்ணங்கள் உபதிபிர மாணமாயிருக்கின்றன திதியி.ருமாரனே! ஜீவனனவன் ஆயிரக் கணக்காக யோனிகளில் உற்பத்திகளை அடைந்து பிறகு விருத்தியை அடைகிறான்; தேவனன இந்திரன் சுபமானசாஸ்திரத்தையே அபபி யவித்துத் தன் அனுபவரூபமாகச்சொன்னகதியையும் அடைகிறான். கதியோவென்றால் பிரஜைகளுக்கு வாணத்தினல் செய்யப்படுகிறது. அஸுரஸ்ரேஷ்ட! வர்ணமானது (கிருதயுகமுதலான) காலத்தினல் செய்யபபடுகிறது. அஸுர! இகத்தில் ஜீவஸமூகத்திற்கு (க்கர்மேந் திரிய ஜ்ஞானேந்திரிய மனு புத்தி சித்தாஹங்காரங்களென்கிற

1 வல்லாவேதமுமுள்ளப்ரம்மா, ப்ராம்மணச்சம்ஹீ, ஆகரீத்ர், போதா ஆகிய நால்வரும், ருகவேதிகளான ஹோதா, மைத்ராவருணர், அச்சாவாகர், ரொவஸ்தோதா ஆகிய நால்வரும், யஜுர்வேதிகளான அத்வர்யு, ப்ரதிப்ரஸ்தா தா, நேஷ்டா, உன்நேதா ஆகிய நால்வரும், ஸாமவேதிகளான உத்காதா, ப்ரஸ் தோதா, ப்ரதிஹர்த்தா, ஸுப்ரம்மண்யர் ஆகிய நால்வரும் ஆகப்பதினறுவர்.

பதினன்கினுடையவிருத்திகளின்பேதத்தினால்) பதினன்குலக்ஷம்பெரியகதிகள் ஏற்படுகின்றன. அந்தஜீவர்களுக்கு மேலேஏறுதலும் நடுவில்நிற்றலும் கீழேஇறங்குதலும் அவைகளாலே செய்யப்பட்டனவாகவே அறியக்கடவாய். ஆனால், எவன் இந்தமானிடத்தன்மையிலிருந்தும் காலமேயாகத்தினால் நழுவுகிறானோ அவன் எல்லாவற்றிலும்கீழான கிருஷ்ணவர்ணத்திலிருக்கிறான் தைத்யனே! அதில் மிகவும் பற்றினவனாகி நரகத்தையடைந்து ஆங்காங்கு சுற்றிக்கொண்டுமிருக்கிறான். கிருஷ்ணவர்ணத்தினுடைய கதி இழிவானது. அதிலிருக்கின்றவன் நரகத்தில பாகஞ்செய்யப்பட்டு முழுகுகிறான். அவன் கொடிய தூன்பங்களுடன் அனேகம் கல்பங்கள் நரகத்திலிருப்பதாகச் சொல்லுகிறார்கள் அங்கு லக்ஷம்கல்பங்கள் ஸஞ்சரித்துப் பிறகு புகைநிறமான கிரியக்ஜன்மாவைக்கொடுக்கும் தூம்ரவர்ணத்தை அடைகிறான் அவன் தமோகுணம் சூழ்ந்த மனமுள்ளவனும் மேலேவரச்சக்தியில்லாதவனுமாயிருந்து அந்த வர்ணத்திலேயே ஒருயுகத்தின் முடிவுவரை வஸிக்கிறான் அவன் எபபொழுது ஸத்வகுணத்துடன் தன்னுடைய புத்தியினால் தமோகுணதத்தை விலக்கிவிட்டு (மேல பதவிக்கு) யத்தனிக்கிறானோ அப்பொழுது (தேவசரீரத்தைக் கொடுக்கக்கூடிய) சிவப்புவர்ணத்தை அடைகிறான்; நீலவர்ணத்தையடைந்து மானிடலுலகத்திலும் சுற்றுகிறான் அவன் அந்த மானிடலுகத்தில ஒரு கலபகாலம் தன்கர்மங்களாலுண்டான விதிநிஷேதங்களாகிற நிர்ப்பந்தங்களால் (தவத்தினுன்டான கிலேசத்தை) அடைந்து பிறகு (தேவத்தன்மையை அளிக்கின்ற) மஞ்சள்வர்ணத்தை அடைகிறான் நூறுகலபமான வுடன் தேவத்தன்மையைவிட்டு மனிதனாகிறான். தைத்யனே! மஞ்சள்நிறமுடையவனோ ஆயிரக்கணக்கான கலபங்கள் ஸஞ்சரித்தாலும் விஷயத்திலிருந்து விடுபடாமல் பிறகு நரகத்தில் ப்ரளயத்தினால் செய்யப்பட்ட (அவனுக்குள்ள பத்தொன்பது தத்வங்களால ஒவ்வொன்றுக்கும் ஆயிரக் கணக்கான) பத்தொன்பதினாயிரம் ஜன்மங்களையும் அனுபவிக்கிறான். பிறகு, அவனை நரகத்திலிருந்தும் வேறான எல்லா ஜன்மங்களிலிருந்தும் விடுபட்டவனாக அறி. அவன் தேவலோகத்தில் அடிக்கடி ஸுகத்தை அனுபவிக்கிறான் அதினின்றும் நழுவி மனிதத்தன்மையை அடைகிறான். மானிடஜன்மங்களில் (ஞானேந்திரியம் ஐந்து மனம் புத்தி சித்தம் மூன்று ஆகிய இவ்வெட்டால்) ஒவ்வொன்றுக்கும் நூறு நூறாக எண்ணூறு ஜன்மங்கள் இருந்துவிட்டுத் தேவத்தன்மையை அடைகிறான் பிறகு,

அவன் காலவசத்தினால இந்தத் தேவத்தன்மையிலிருந்தும் தவறுகிறான் எல்லாவற்றிலும் கீழான கறுப்புவர்ணமான ஸ்தானத்திலிருக்கிறான். ஓ! அஸுரசிகாமணியே! எப்படி இந்த ஜீவராசியானது மோக்ஷத்தை அடையுமோ அதை உனக்குச் சொல்லுகிறேன். மோக்ஷத்தில் விருப்பமுள்ள ஜீவன் (முறையே சமமுதலான குணங்களை அபிமானிக்கின்ற தேவத்தன்மையுள்ள) சிவப்புநிறமுள்ளவனும் மஞ்சள்வர்ணமுள்ளவனும் சுக்கிலவர்ணமுள்ளவனுமாகிப் புத்தியின் பிரிவுகளான ஞானேந்திரிய மனோபுத்திகளின் செய்கைகளான எழுநூறு தேவயூகங்களை ஆஸ்ரயித்து முடிவில் இந்தச் சுக்கிலவர்ணத்தையே அடைந்து [1]புர்யஷ்டகத்திற்கு மேற்பட்டவையும் மிகவும் பூஜிக்கத்தக்கவையுமான (பிரம்மலோக முதலான) உலகங்களை அடைகின்றான். [2]ஆறுயிரத்தெண்ணூறு விருத்திகளும் சிறந்த பிரம்மஜ்ஞானிகளுடைய மனத்திற்கு விரோதமாயுள்ளவைகள். மஹானுபாவர்[3] ஜாக்ரத் ஸ்வபந ஸுஷுப்தி மூன்றும் தடுக்கப்பட்டால்தான் சுக்லவர்ணத்தின் சிறந்தகதி ஏற்படும். (இவ்விதத் தன்மையுடையவன்) அந்த ஒரு பிறவியில அனிஷ்டத்தை அடைகின்றான் அந்தக் கதியில் அசக்தனாயிருக்கிற யோகியானவன் மற்றும் நான்கு ஜனனங்களையும் அடைகிறான் யோகத்தில் அசக்தனானவன் ஆறாவது வர்ணத்தினுடைய சிறந்தகதியான வித்தியில் நிலைபெறுதவனும் ராகமுதலானக்லேசங்கள் நீங்கினவனுமாயிருப்பவனுடைய கதியும் ஞானேந்திரியமனோபுத்திகளாகிய ஏழாலும் சிறந்தவையுமான நூறு ஜனனமரணங்கள் கர்மவசத்துடன் வலிக்கிறான் மஹானான அவன் பிறகு அதிலிருந்து திரும்பி மானிடவுலகத்தில் மனிதத்தன்மையை அடைகிறான் அவன், பிறகு, அந்த மனிதத்தன்மையிலிருந்து வெளிவந்து வரிசையாக மேலே மேலே பிராணிகளின் ஜன்மத்தையடைய யத்தனிக்கிறான். அவன் ஸமாதியினாலும் அதிலிருந்து வெளிவருதலாலும் செய்யப்

---

1 669-வது பக்கம் குறிப்பிற்காண்க.

2 பூதங்கள் ஐந்து, விஷயங்கள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, பிராணவாயுக்கள் ஐந்து, மனம் புத்தி சித்தம் அஹங்காரம் தேஜஸ் ஐந்து, அவித்தை காமம் காமம் மூன்று ஆக முப்பத்திமூன்றும் ஜாக்ரித ஸ்வப்னமிரண்டுக்குமுண்மையால் அறுபத்தாறு, ஸுஷுப்தியில் அவித்தையால் சூழப்பட்ட ஸ்வரூபானந்தானுபவம், அதற்கு ஸாதனமான அவித்யாவிருத்தி ஆக அறுபத்தெட்டும் அவைகள் தினங்களின் பேதத்தினால் அனேகங்களாதலால் ஒருவிதமான கணக்கினால் ஆறுயிரத்தெண்ணூறுக் சொல்லப்பட்டன. இங்கு பலர் பலவாறுகக் கூறுவர்.

3 கூறியது கூறலால் அரை ஸ்லோகம் விடப்பட்டது.

பட்ட 1ஸாமர்த்தியத்தை அடைந்து ஒருலகத்திற்கு ஒருதரமாக ஏழுதரம் ப்ரம்மலோகம்வரையிலுள்ள ஏழுலகங்களிலும் ஸஞ்சரிக்கிறான். பிறகு, ஏழுவிதமான உபத்திரவங்களையும் தள்ளிவிட்டு அவைகளைத் தக்கமாக நிச்சயித்து ஜீவலோகத்தில் நிலைத்திருக்கிறான். பிறகு, விகாரமில்லாததும் அளவற்றதும் பிரகாசனசக்தியுடையதும் ஈசுவர்களுக்கும் வ்யாபனசக்தியுள்ள விஷ்ணுவுக்கும் விருத்தியடையும் சக்தியுள்ள பரம்மாவுக்கும் ஆதிசேஷனுக்கும் மனிதனுக்கும் ஈசரும் விஷ்ணுவுமான மாயாசக்தியுள்ள பரமேச்வரருக்குமே ஸ்தானமுமான ப்ரம்மத்தை அடைகிறான். பிரஜைகளும் இந்திரியரூபமான தேவஸமூகங்களும் ப்ரம்மலோகத்திலுள்ள அமரர்களும் எப்போதும் ஸம்ஹாரகாலத்தில் ஈச்வரரால் சரீரம் 2தகிக்கப்பட்டவர்களாகி ப்ரம்மத்தை அடைகிறார்களல்லரோ? அந்த ஜீவர்கள், ஸ்ருஷ்டிகாலத்திலோ, அனுபவித்து மிசசமான கர்மத்தோடு தங்கள் தங்கள் ஸ்தானங்களையே அடைகிறார்கள். (மாறிமாறி) ஸமமான நிலையுள்ளவர்களாயிருக்கும் தேவர்கள் மனிதர்கள் ஆகிய யாவரும் மறுபடியும் மிசசமின்றிக் கர்மசேஷத்தின்முடிவில் அந்த ப்ரம்மரூபமான ஸ்தானத்தையே அடைகிறார்கள் எவர்கள் விடுத்தலோகத்திலிருந்தும் க்ரமமாகவழுவினார்களோ அவர்கள் மறுபடியும் அந்தக்க்ரமமாக அவர்களுடைய கதியை அடைகிறார்கள். மற்ற ஜீவர்கள் அதற்கு மாறுதலாகப் பலம் தேவதாரூபமிவைகளை அடைந்து தங்கள் தங்கள் கர்மாவை அடைகிறார்கள அந்த விடுத்தனனவன் எதுவரை சேஷமானபோகத்துடனிருக்கிறானோ அதுவரை பிரஜைகளும் சுத்தமான பராபரவித்தைகளும் அவனுடைய அங்கங்களிலேயே இருக்கின்றன. பிறகு, அவன்சுத்தமானபாவனையை அடைந்துபஞ்சேந்திரியரூபமான இந்த மனத்தை ஸமாதியால் வசஞ்செய்து எப்போதும் சுத்தமான மனத்தினால் ப்ரம்மத்தைத்தியானித்துச் சுத்தமும் மிகவும் உயர்ந்ததுமான ப்ரம்மஸாக்ஷாத்காரரூபமான பரவித்தையை அடைகிறான். சிறந்த புத்தியுள்ளவனே! பிறகு, அவன், விகாரமற்றதும் மற்றவனால் அடையமுடியாததும் அழிவற்றதுமானப்ரம்மஸ்வரூபமானபதத்தை அடைகிறான். இவ்விதம் இப்பொழுது என்னால் உனக்கு நாராயணருடைய இந்த மஹிமையானது சொல்லப்பட்டது' என்றுசொன்னார். வ்ருத்ரன், 'சிறந்தபுத்தியுள்ளவரே! இவ்வாறு இருக்கையில் எனக்கு ஒருவிதமானவருத்தமுமில்லை. இந்தவார்த்தையை நானும் அப்படியே

1 வேறுபாடம். 2'தக்த' என்று பாடம் கொள்ளப்பட்டது.

நன்கு அறிகிறேன் இப்பொழுதோ உம்முடையசொல்லைக்கேட்டுக் கல்மஷமற்றவனும் பாபம்நீங்கினவனுமாயிருக்கிறேன். ஓ! பகவானே! மஹரிஷியே! மிக்ககாந்தியுள்ளவரும் எப்பொழுதும் எங்கும் எல்லாமாயிருப்பவருமான விஷ்ணுவினுடைய அளவற்ற வீரியமுள்ள இந்த ஆஜ்ஞாசக்ரமானது நடந்துவருகின்றது. எந்த ஸ்தானத்தில் எல்லாஸ்ருஷ்டிகளும் ஏற்பட்டிருக்கின்றனவோ அவருடைய அந்த ஸ்தானமானது அழிவற்றதாயிருக்கின்றது அவர் மஹாத்மாவும் புருஷர்களுள் உத்தமருமாயிருப்பவர் அவரிடத்தில் இந்த எல்லா ஜகத்தும் நிலைபெற்றிருக்கிறது' என்றான் குந்தியின்புதல்வனே! அந்த விருத்ராஸுரனவன் இவ்விதஞ்சொலலிவிட்டு அபபடியே தன்மனத்தைப் பரமாத்மாவான நாராயணரிடத்தில் சேரசசெய்து பிராணனை விட்டான்; பரமபதத்தையும் அடைந்தான்" என்றார்

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! முன்காலத்தில் ஸனத்குமார ரானவர் விருத்ராஸுரனுக்கு எந்தப் பரப்பிரம்மத்தைச் சொன்னாரோ பகவானும் தேவருமான அந்த ஜனார்த்தனர் இதோ இருக்கிறார்" என்று சொல்ல, பீஷ்மர், "காரணஸ்தானத்திலிருக்கிறவரும் பெரிய மனமுள்ளவருமான அந்தப பகவான் அளவற்ற தம்முடைய தேஜஸோடு அதிலிருந்து தம்முடைய ஸ்வரூபமான அந்த ஜீவர்களைப படைக்கின்றார். நிலைதவறுத இந்தக்கிருஷ்ணபகவானே அவருடைய நான்கிலொருபாகமாக அறியக்கடவாய். பிரம்மாவையும் மஹாத்மாவான அவருடையநான்கிலொருபாகமாக அறி புத்திமானானபகவான் காலிலொருபாகத்தினாலே மூன்று உலகங்களையும் உண்டுபண்ணுகிறார் கீழேஇருக்கின்ற ஸ்திரமான பகவானுடைய அம்சமானது கல்பத்தின்முடிவில் அவரை அடைந்துவிடுகின்றது. மூலத்திலிருக்கின்ற மிகுந்தபலமுடையபிரபுவான அந்தப்பகவான் அப்பொழுது ஜலங்களில் பள்ளிகொள்ளுகிறார் பிரஸன்னமான மனத்தையுடையவரும் எல்லாவற்றையும்ஸ்ருஷ்டிக்கின்றவருமான் அந்தப்பகவான் சாஸ்வதமான அந்தலோகங்களில் ஸஞ்சரிக்கின்றார். அளவற்றவரும் அழிவற்றவருமான பகவான் எலலாவற்றையும் சூன்யமில்லாமல்செய்கிறார். தடையற்றவரும் மஹாத்மாவுமான அவர் திரும்பவும் ஸ்ருஷ்டிக்கிறார் பற்பலவிதமான இந்தஉலகம்முழுவதும் அவரிடமிருக்கின்றது" என்றார். யுதிஷ்டிரர், "உண்மையுணர்ந்தவரே! ஓ! பிதாமஹரே! விருத்ராஸுரனுல் கன்றுடையகரியானது ஸுலபமாகப் பார்க்கப்பட்டதென்று நினைக்கிறேன் ஆசையால்தான், துக்கப்படாமல் ஸுகமாயிருந்தான். ஓ! குற்றமற்றவரே! பிதாமஹரே! நற்குலத்

திற்பிறந்தவனும் (ரஜஸுடம்தமஸுமில்லாமல் ஸத்வகுணமான) சுக்கிலவர்ணமுடையவனும் விலங்குகதியிலிருந்தும் நரகத்திலிருந்தும்விடுபட்டு ஸாத்தியனென்கிறதேவபாவத்தைஅடைந்தவனுமான அவன் திரும்புகிறதில்லை ஓ! அரசரே! மஞ்சள்வர்ணத்திலாவது சிவப்புவர்ணத்திலாவது இருப்பவன் தாமஸமான தன்கர்மங்களால் சூழப்பட்டுத் திரியக்ஜன்மத்தையே அனுபவிக்கின்றன். மிகவும் ஆபத்தை அடைந்தவர்களும் ரக்தவர்ணமான தால ஸுகத்திலபற்றுள்ளவர்களும் துக்கத்தில்அழுந்தினவர்களுமான நாங்களோ(ரஜஸ் மேலிட்டுத் தமஸுடம்ஸத்வமும்குறைந்த) நீலவர்ணத்தையோ அல்லது (தமஸ்மேலிட்டு ரஜஸுடம்ஸத்வமும்குறைந்த) இழிவானகிருஷ்ண வர்ணத்தையோ எந்தக்கதியையடையப்போகின்றோமோ" என்று சொல்லினர். பீஷ்மர், "ஓ! பாண்டவர்களே! சுத்தமானவம்சத்தில் பிறந்தவர்களும் கடுமையானவ்ரதமுடைவர்களுமானநீங்கள் தேவலோகத்தில் வஸித்துவிட்டு மறுபடியும் மனுஷ்யஜன்மத்தை அடையப்போகின்றீர்கள் ஒருகலபகாலம் உலகத்தில் ஸுகமாக இதர தேகங்களிற்சென்று ஸுகங்களை அனுபவித்துவிட்டு ஸுகமாக வஸித்தர்களின் ஸங்கத்தை அடையப்போகிறீர்கள் உங்களுக்குப் பயம் வேண்டாம் உங்களுக்குப் பாவம் உண்டாகாமலிருக்கட்டும்" என்று சொன்னார்

இருநூற்றெண்பத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(இந்த்ராணுக்கும் விருத்ராணுக்கும் யுத்தம்.)

யுதிஷ்டிரர், "நிகரில்லாதஞானமும் விஷ்ணுபக்தியுமுள்ள அளவற்றபராக்ரமசாலியானவிருத்ராஸுரனுடைய தர்மிஷ்டனுயிருக்குந்தன்மையானது ஆச்சரியம். ஓ! அரசரிற்சிறந்தவரே! இந்த விருத்ராஸுரன் அளவற்றதேஜஸுள்ள அந்தவிஷ்ணுவினுடைய அறியமுடியாதபதத்தை எப்படித்தான் அறிந்தானோ? நிலைதவறுதவரே! உம்மால்சொல்லப்பட்டஇதை நான் நம்பவும்செய்கிறேன். ஆனாலும், மறுபடியும் எனக்குத் தெளிவாகத்தோன்றுதலருபுத்தியானது உண்டாகிவிட்டது. ஓ! பரதர்ரேஷ்டரே! தர்மசீலனும் விஷ்ணுபக்தனும் விஷ்ணுபக்தர்களின்பரம்பரையில்தத்வத்தைஉணர்ந்தவனு

*தேவமனுஷ்யலோகங்களில்.

மான" விருத்ராஸுரன் எப்படி இந்திரனால் கொல்லப்பட்டான்? பரதரேறே! கேட்கின்றனனக்கு இந்தஸங்தேதகத்தைச் சொல்லும். ஓ! ராஜன்ரேஷ்டரே! அந்தவிருத்திரன் இந்திரனால் எப்படி வெல்லப் பட்டான்? ஓ! பிதாமஹரே! யுத்தமும் ஏவ்விதம் நடந்தது? புஜபலமூடையவரே! எனக்குப் பெரியஉற்சாகமிருத்தலால் அதை யும் விரிவாகச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"ஓ! பகைவர்களையடக்குபவனே! முன்காலத்தில் இந்திரனை வன் தேவகணங்களுடன் தெரிலேறிய புறப்பட்டான் அப்பொழுது ஐந்நூறுயோஜனை அளவு உயர்ந்தவனும் எண்ணூறுயோஜனை அகன்ற வனும் மலைபோல அசையாமல்நிற்பவனுமான விருத்ராஸுரனை எதிரில் கண்டான் மூன்றுலகத்தினாலும்ஜயிக்கமுடியாத அப்படிப் பட்ட அந்தவிருத்ரனுடைய உருவத்தைப்பார்த்தஞ் தேவர்கள் நடுங்கித் தேறுதலடையவில்லை அரசனே! அப்பொழுது இந்திரனுக் கோவென்றும், விருத்திரனுடைய உத்தமமான அந்தரூபத்தைபபார் த்தஉடனேபயத்தினால் தொடைகள் அசைவற்றவைகளாயின. பிறகு, போர்தொடங்கியபொழுது ஸகலமான தேவாஸுரர்களுடையகோஷ் மும் வாத்யங்களுடையமுழக்கமும்உண்டாயின குருகுலத்திற்பிறந்த வனே! அப்பொழுது எதிரில் நிற்கின்ற இந்திரனைப்பார்த்து விருத்தி ரனுக்குப் பரபரப்பாவது பயமாவது ஒருவிதமான எண்ணமாவது உண்டாகவில்லை. அதன்பிறகு, தேவர்கோனை இந்திரனுக்கும்பெரிய சரீரமுடைய விருத்திரனுக்கும் கத்திகள், பட்டஸங்கள், சூலங்கள், வேல்கள், தோமரங்கள், இருபுலக்கைகள், நானவிதமான கற்பா றைகள், பெரிய ஒலியுள்ளவில்லுகள், பலவகையான சிறந்தஅஸ்திரங் கள், எரிகொள்ளிகள் இவைகளால மூவுலகத்திற்கும்பயங்கரமான யுத்தம் ஏற்பட்டது பிறகு, தேவாஸுரசேனைகளால் எல்லாம் கலக்கமுற்றவையாயின. அப்பொழுது, பிதாமஹரைத்தலைவராகக் கொண்டஎல்லாத்தேவகணங்களும் மஹாபாக்யவான்களானரிஷிக ளும் அந்தயுத்தத்தைப்பார்க்க வந்தார்கள். மஹாராஜனே! பரதரிற் சிறந்தவனே! லித்தர்களும் தேவதாவலிகளும் கந்தர்வர்களும் சிறந்த விமானத்திலேறிக்கொண்டு வந்தார்கள். தர்மத்தைவகிக்கின்றவர்க ளில் ஸ்ரேஷ்டனான விருத்திராஸுரன் ஆகாயத்தைஅளாவிநின்றுகல் மழையால் இந்திரன்மேல்எங்கும்இறைத்தான். பிறகு,தேவக்கூட்டத் தார்கள் கோபத்தை அடைந்து எங்கும்அம்புமழைகளால்யுத்தத்தில் விருத்திரனுல் விடப்பட்டகல்மழையைவிலக்கினார்கள். குருஸ்ரேஷ்ட னே! மஹாமாயாவியும் மிக்கபலசாலியுமானவிருத்திரனை பலமுறை

மாயாயுத்தத்தினால் இந்திரனை மயங்கச்செய்தான். பிறகு,விருத்திரனால் பீடிக்கப்பட்ட அந்த இந்திரனுக்கு மயக்கம் உண்டாயிற்று. அவ்விடத்தில் வஸிஷ்டர் அவனுக்கு ரதந்தரமென்கிறஸாமத்தினால்தேறுதலீசசெய்தார் வஸிஷ்டர், 'தேவேந்திரா! நீ தேவர்களுக்கெல்லாம் ஶ்ரேஷ்டனாயிருக்கிறாய். தைத்யாக்களையும் அஸுராக்களையும்கொல்லுகின்றவனே! இந்திர! மூவுலகங்களாகிற ஸைன்யத்தைதாடுகூடிய நீ ஏன் தூக்கிக்கிறாய்? இதோ பிரம்மாவும், விஷ்ணுவும், ஜகத்திற்கெல்லாம் அதிபதியும் உமாஸமேதரும் ஸாவர்ஜ்ஞரும் தேவருமான பரமேஶ்வரரும், எல்லாப்பரமரிஷிகளும் மோகத்தை அடைந்தஉன்னைப் பார்த்து உன்னுடைய ஜயத்தின்பொருட்டு, 'ஸ்வஸ்தி' என்றுசொன்னார்கள் இந்திரனே! மற்றொருவன்போல மனக்கலக்கத்தை அடையாதே ஸுராதிபனே! யுத்தத்திற்சிறந்தபுத்தியைசெய்து சத்துருக்களை நாசம்செய் இதோ லோககுருவும் எல்லா உலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவருமான முக்கண்ணரான பகவான் உன்னைப் பார்க்கின்றார். ஓ! ஸுராதிபனே! மோஹத்தைவிடு இந்திரனே! இதோ ப்ருஹஸ்பதிமுதலான பரம்மரிஷிகளும் ஜயத்திற்காக உன்னைச் சிறந்த ஸ்தோத்திரத்தினால துதிக்கின்றார்கள்' என்றுசொன்னார் இவ்விதம் மஹாத்மாவான வஸிஷ்டரால்போதிக்கபட்டவனும் உத்தமமான பலமுடையவனுமான வாஸவனுக்கு மிக்கவலிமையுண்டாயிற்று. பிறகு, பகவானை இந்திரன் புத்தியை அடைந்து பெரியயோகத்துடன்கூடி அந்தமாயையை விலக்கினான். பிறகு, ஶ்ரீமானான ப்ருஹஸ்பதியும் அந்தமஹரிஷிகளும் விருத்திரனுடைய பராக்ரமத்தைபபார்த்துப பரமேஶ்வரரை அடைந்து லோகங்களுடையநன்மையைவிரும்பி விருத்திரனுடையநாசத்தைக்குறித்துத்தெரிவித்தார்கள். பிறகு, ஜகத்திற்கெல்லாம்பதியான பகவானுடையதேஜஸானது ஜ்வரமாகஆகி உடனே உக்ரமாகவிருப்பவனும் லோகங்களுக்குப் பதியுமான விருத்ரனை அடைந்தது அப்பொழுது தேவரும் ஸகலலோகங்களாலும் பூஜிக்கப்பட்டவரும் பகவானுமான விஷ்ணுவானவர் லோகரக்ஷணத்தில் விருப்பமுள்ளவராகி இந்திரனுடைய வஜ்ராயுதத்தில் பிரவேசித்தார் பிறகு, புத்திமானானப்ருஹஸ்பதியும் மஹாதேஜஸ்வியானவஸிஷ்டரும் மற்றமுள்ள எல்லாச்சிறந்தரிஷிகளும், உலகங்களால பூஜிக்கப்பட்டவனும் வரங்களையளிப்பவனும் நூறு யாகங்களைச்செய்தவனுமான இந்திரனிடம் வந்து ஒரே மனமாக, 'பிரபுவே! விருத்திரனைக்கொல்' என்று சொன்னார்கள். பரமேஶ்வரர், 'இந்திரனே! இந்த விருத்திரன் பெரியவன்; பெரிதான சேனை

யால் குழப்பட்டவன்; அனேக ரூபமுடையவன்; எங்கும் செல்லுகிறவன்; அனேக மாயையுடையவன்; பிரவிருத்திபெற்ற, வன். ஸுரஶ்ரேஷ்டா! ஆகையால், மூவுலகங்களாலும் வெல்ல முடியாதவனை இந்தஅஸுரஶ்ரேஷ்டனை நீ யோகத்தை அவலம்பித்துக் கொல்லக்கடவாய். அலக்ஷ்யமாயிராதே! அமரர்கோவே! இவன் பலத்திற்காக அறுபதினாயிரம் வருஷம் தவஞ்செய்தான். தேவேந்திரனே! பிரம்மாவும் இவனுக்கு யோகிகளுள் சிறந்தவனாயிருப்பதையும் பெரியமாயையுள்ளவனாயிருப்பதையும் பெரியபலமுள்ளவனாயிருப்பதையும் உயர்ந்ததேஜஸையும் வரமாக அளித்தார். வாஸவனே! இதோ என்னுடைய தேஜஸானது உன்னை அடைகிறது. இவ்விதம் கொல்லமுடியாத அந்த விருத்ராஸுரனை வஜ்ராயுதத்தால் கொலலக்கடவாய்' என்று சொனனார். இந்திரன், 'பகவானே! தேவஶ்ரேஷ்டரே! உம்முடைய அருளால நெருங்கமுடியாதவனை விருத்ராஸுரனை நீர் பாத்திருக்கும்பொழுதே வஜ்ராயுதத்தினால் கொல்லுவேன்' என்று சொன்னன். திதியின் புத்திரனை பெரிய அஸுரன் வரத்தினால்பிரவேசிக்கப்பட்டஸமயத்தில் தேவர்கள் ரிஷிகள் இவர்களுடைய ஸந்தோஷத்தினால் பெரியசப்தமானது உண்டாயிற்று பிறகு, பேரொலியுள்ள துந்துபிவாத்யங்களும் சங்கங்களும் மத்தளங்களும் டிண்டிமவாத்தியங்களும் ஆயிரக்கணக்காக முழக்கப்பட்டன எல்லா அஸுரர்களுக்கும் மிகவும் ப்ரஜ்ஞாபங்கம் ஏற்பட்டது நிமிஷத்திற்குள் பெரிதானமாயையும் ஒழிந்தது பிறகு, ரிஷிகளும் தேவதைகளும் அந்த அஸுரனிடம்ஜ்வரம்பிரவேசித்தனென்று அறிந்து ஸமர்த்தனை இந்திரனைத்துதித்து (அஸுரனைக் கொலல) ஏவினார்கள் யுத்தகாலத்தில் ரதத்திலிருப்பவனும் மஹாத்மாவும் ரிஷிகளால துதிக்கப்பட்டவனுமான இந்திரனுடைய ரூபம் பார்க்கமுடியாததாயிற்று.

இருநூற்றெண்பத்தேட்டாவது அத்யாயம்

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(இந்திரன் விருத்ரனைக் கொன்றதும், இந்திரனைத்தொடர்ந்த ப்ரம்மஹத்தியை ப்ரம்மதேவர் அக்கினிமுதலிய நால்வருக்குப் பங்கிட்டதும்.)

மஹாராஜனே! எல்லாவிதத்தாலும் ஜ்வரத்தினால் வியாபிக்கப்பட்ட விருத்ராஸுரனுடைய சரீரத்தில் உண்டான அடையாளங்

களைச் சொல்லுகிறேன்; கேள். அவன் ஜ்வலிக்கின்றமுகத்துடன் பயங்கரனனன் நிறம் மிகவும் குன்றிவிட்டது. அரசரே! உடலில் மிகவும்பெரியநடுக்கமும் பெரியமேல்மூச்சுமுண்டாயின. தீவ்ரமான மயிர்க்கூச்சலும் பெரிதான கிழ்மூசசும் உண்டாயின. அவனுடைய முகத்துக்கெதிரில் மிகவும் பயங்கரமும் மிகவும் கோரமும், அமங்களமுமான நரியான்து குதித்தது. பாரத! அவனுடைய நிணவும் நசித்தது. அவனுடைய பக்கத்தில் ஜ்வலிக்கின்றவையும் எரிகின்றவையுமான கொள்ளிகளும் விழுந்தன. பருந்துகளும் கழுகுகளும் கொக்குக்களும் மிகவும் பயங்கரமாகக் கத்திக்கொண்டு அவனுடைய தலைக்கு மேலே கனிப்புடன்சக்கரம்போலச் சுற்றின. பிறகு,யுத்தத்தில் தேவர்களால் உற்சாகத்தைஅடையும்படிசெய்யப்பட்டஇந்திரன் வஜ்ராயுதத்தைத்தகையிலெதாங்கி அந்தரதத்தில்ஏறிக்கொண்டு அந்தவிருத்ராஸுரனை எதிர்த்தான். பிறகு, அந்தப் பெரியஅஸுரன் அமானுஷமாகச சப்தித்தான். ராஜஸ்ரேஷ்டனே! கொடியஜ்வரத்துடன் கொட்டாவிவிட்டான. அவன்கொட்டாவிவிடுமபொழுது இந்திரன் வஜ்ராயுதத்தை எறிந்தான். மிகவும்பெரியபலமுடையதும் காலமிருத்யுவிற் கொபபான்தமான அந்தவஜ்ரம் உடனே பெரியசரீரமுடையவிருத்ராஸுரனைக் கீழேவீழ்த்தியது. ஓ! பரதஸ்ரேஷ்டனே! பிறகு, கொலலபபட்டவிருத்ரனைபபார்த்து மறுபடியுமே எங்கும் தேவர்களுடைய சப்தமான்து உண்டாயிற்று. அஸுரசத்துருவும் மிகபபுகழ்பெற்ற வனுமான இந்திரனவன் விஷ்ணுவுடன் கூடினவஜ்ரத்தினால் விருத்ரனைக் கொன்றுவிட்டு ஸ்வர்க்கமே சென்றான். குருவம்சத்தினுதித்தவனே! பாரத! பரதஸ்ரேஷ்டனே! தாமத்தையறிந்தவனே! பிறகு, விருத்திரனுடையசரீரத்திலிருந்தும் மஹாரௌத்ரமுள்ளதும் ரௌத்ராகாரமானதும் உலகங்களுக்குப்பயத்தைச்செய்கின்றதும் தெற்றிப் பற்களுடையதும் (அதனாலும்) பயங்கரமானதும் விகாரமானதும் கறுத்தும்சிவந்துமிருபபதும் பரட்டைத்தலையையும் கோரமானகண்களையுமுடையதும் [1]கிருத்தியைபோன்றதும் கபாலமாலையுண்டதும் ரத்தத்தினால் நனைந்ததும் மரவுரியுடுத்ததுமான பிரம்மஹத்தியான்து வெளிபபட்டது. ஓ! அரசரிற்சிறந்தவனே! பரதஸ்ரேஷ்டனே! அப்போது, அவ்விதஉருவமெடுத்துப பயங்கரமாயிருக்கின்ற அந்தப பிரம்மஹத்தியான்து வெளிவந்து இந்திரனைத் தேடிற்று. குருநந்தன! பிறகு,ஒருஸமயத்தில்,இந்திரன் உலகங்களுடையநன்மையை விரும்பினதனால் ஸ்வர்க்கத்தைநோக்கிச சென்றான். அப்பொழுது

---

1 762-வது பக்கம் குறிப்பிற்காண்க.

அந்தப்பிரம்மஹத்தி வெளியில்வந்த அதிகதேஜஸுள்ள இந்திரனைப் பார்த்து அவனைக் கழுத்தில்பிடித்து உறுதியாகப்பற்றிக்கொண்டது. இந்திரன் பிரம்மஹத்தியினல் அவ்விதபயம்ஏற்பட்டபொழுது தாமரைத்தண்டின்நடுவிலிருந்து மிகபல்லவருஷங்கள் வாஸஞ்செய்தான். குருகுலத்திற்பிறந்தவனே! அப்பொழுது, இந்திரன் அந்தப்பிரம்மஹத்தியினல் முயற்சியுடன் பின்தொடர்ந்து பிடிக்கப்பட்டு ஒளியிழந்தவனனன் அவன் அந்தஹத்தியைப்போக்குவதற்குப் பெரிய முயற்சியைச செய்தான அவன் அந்தஹத்தியைநிவருத்திக்கச் சக்தனனவில்லை பரதஸ்ரேஷ்டனே! அதனல் பற்றப்பட்டபடியே தேவேந்திரன் பிதாமஹரைஅடைந்து தலியால் வணங்கினன். பரதர்களிற் சிறந்தவனே! அப்பொழுது அந்தப் பிரம்மதேவர் பிராம்மணஸ்ரேஷ்டனுடைய ஹத்தியினல்பிடிக்கபபட்ட இந்திரனைப்பார்த்து ஆலோசித்தார் புஜபலமுள்ளவனே! பாரத! பிறகு, பிதாமஹர் அந்தப் பிரம்மஹத்தியைநோக்கி மெல்லியகுரலோடு நன்மை சொல்லுகிறவர்போல, 'பெண்ணே! தேவர்களுக்கெல்லாம் தலைவனன இவனை விட்டுவிடு. நான்விரும்பியதை நீ செய்யக்கடவாய். இப்பொழுது உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? நீ எதை விரும்புகிறாய் ? சொல்' என்றுசொன்னர் பிரம்மஹத்தி, 'மூவுலகங்களையும்படைத்தவரும் மூவுலகங்களினலும்பூஜிக்கப்பட்டவரும் தேவருமானநீங்கள் பிரீதியடைந்தால்போதுமென்றே நினைக்கிறேன் ஆனல், எனக்கு ஓர்இருப்பிடத்தை ஏற்படுத்தும். உலகரக்ஷணத்தை விரும்பினஉம்மால் இந்தமரியாதை செய்யப்பட்டது. தேவரே! உம்மால் இந்தபெரியமரியாதையானது நடக்கும்படியும் செய்யப்பட்டது. எல்லாஉலகங்களுக்கும் ஈஸ்வரரே! தர்மத்தையுணர்ந்தவரே! பிரபுவே! நீர் பிரீதியை அடைந்தால் இந்திரனைவிட்டு விலகிப்போகிறேன் எனக்கு ஓர்இருப்பிடம் ஏற்படுத்தும்' என்றுசொல்லிற்று. அப்பொழுது அந்தபிதாமஹர் உபாயத்தினல் இந்திரனுடைய பிரம்மஹத்தியைப போக்குவதற்காக அதனை நோக்கி, 'அப்படியேஆகட்டும்' என்றுசொன்னர் பிறகு, மஹாத்மாவான ப்ரம்மதேவர் அந்த இடத்தில அக்கினியை நினைக்க, உடனே அக்கினி வந்து அவரைநோக்கி, 'பகவானே! குற்றமற்றவரே! தேவரே! உம்முடைய ஸமீபம் வந்துவிட்டேன். தேவரே! நான் செய்யத்தக்கது எதுவோ அதை நீர் சொல்லவேண்டும்' என்று சொன்னன். பிரம்மா, 'இப்பொழுது நான் இந்திரனைவிடுவிப்பதற்காக இந்தப் பிரம்மஹத்தியை அநேகமாகப் பிரிக்கப்போகிறேன். நான்கிலொரு

பாகத்தை நீ வாங்கிக்கொள்ளவேண்டும்' என்று சொன்னர் அக்கினி, 'ஓ! பிரபுவே! பிரம்மாவே! நான் விடுதலை அடைதற்கு எல்லை எது? அதை யோகியும் உலகங்களால் ஆராதிக்கப்பட்டவரே! உள்ளபடி இதை அறிய விரும்புகிறேன்' என்றுசொன்னன். பிரம்ம தேவர், 'அக்னியே! தமோகுணத்தினால் சூழப்பட்ட எந்தமனிதன் ஜ்வலிக்கின்ற உன்னை அவனதுவே அடைந்து ஒரிடத்திலும் தானியம் ஸமித்துக்கள் லோமாஸம் இவைகளால யாகஞ்செய்யவில்லையோ அவனே உடனே இந்த ப்ரம்மஹத்தி அடையும்; அவனிடத்திலேயே 'வஹ்னிக்கவும் போகிறது ஹவிஸைவஹிப்பவனே!' 'உன்னுடைய மனக்கவலை போகட்டும்' என்றார் இவ்விதம் சொல்லியதைக் கேட்டு ஹவ்யகவ்யங்களை அருந்துகிற அக்னிபகவான் பிரம்மாவினுடைய அந்தவார்த்தையை அங்கீகரித்தான். பிரபுவே! அதுவும்அப்படியே ஆயிற்று. மஹாராஜனே! பிறகு, பிதாமஹர் மரீஞ்சிமுதற்களை அழைத்து இந்தவிஷயத்தைப்பற்றிச சொல்லத்தொடங்கினர். 'மஹாபயத்தைஉண்டுபண்ணுகிற இந்தப்பிரம்மஹத்தியானது *விருத்திரர்ஸுரனிடமிருந்துஉண்டாகி இந்திரனை அடைந்தது இதில்நான்கிலொருபாகத்தை நீங்கள்வாங்கிக்கொள்ளுங்கள்' என்றார். அரசனே! பிறகு, முன்போலவேஉள்ளபடிசொல்லப்பட்ட மரம்கொடிபுற்பூண்டுகள் வருத்தமுற்று அக்னிபோலவே பிரம்மாவைநோக்கிப் பின்வருமாறு சொல்லின 'உலகங்களுக்கெல்லாம்பிதாமஹரே! எங்களுக்குப பிரம்மஹத்தியின்முடிவு எது? ஸ்வபாவத்தினாலேயேகெடுக்கப்பட்டிருக்கிறஎங்களை மறுபடியும் நீங்கள் கெடுப்பது தகாது ஓ! தேவரே!' நாங்கள் எப்பொழுதும் அக்னியையும் குளிரையும் மழையையும் காற்றினால்அலைக்கப்படுதலையும் வெட்டுதலையும்பிளத்தலையும் பொறுக்கின்றோம். மூவுலகங்களுக்கும் ஈச்வரரே! இப்பொழுது நாங்கள்உம்முடையகட்டளையினால இந்தபரம்மஹத்தியை அங்கிகரிக்கின்றோம். நீங்கள் எங்களுக்கு விடுதலை ஆலோசிக்கவேண்டும்' என்றுசொல்லின. பிரம்மா, 'பர்வகாலம்ஏற்பட்டபொழுது எந்தமனிதன் மோஹத்தினால் உங்களை வெட்டுவதையும் பிளப்பதையும் செய்கிறானோ அவனே இந்தஹத்தி அடையும்' என்றுசொன்னர். பிறகு, மஹாத்மாவால் இவ்விதம் சொல்லப்பட்ட மரம்கொடிபுற்பூண்டுகள் பிரம்மாவைப்பூஜித்துவிட்டு உடனே வந்தபடியே சென்றன. ஓ! பாரத! பிறகு, லோகபிதாமஹரானதேவர் அப்ஸரஸுகளை அழைத்து நன்மொழிசொல்லுகிறவர்போல இன்பமான வசனத்தி

*'விருத்ராத்' என்று பாடம் கொள்ளப்பட்டது.

னால், 'ஓ! பெண்ணரசிகளே! இந்தப்பிரம்மஹத்தியானது இந்திரன் மூலமாக ஏற்பட்டிருக்கிறது. நீங்கள் என்வார்த்தைக்காக இதனுடைய நான்கிலொருபாகமான அம்சத்தை வாங்கிக்கொள்ளுங்கள்' என்று சொன்னர். தேவதாவலிகள், 'ஓ! தேவேசரே! பிதாமஹரே! உம்முடைய ஆஜ்ஞையினால் கிரகிப்பதில் நிச்சயங்கொண்ட எங்களுக்கு நிவிருத்தியின் ஸமயத்தை ஆலோசிக்கக்கடவீர்' என்றுசொன்னர்கள். பிரம்மா, 'எவன் ரஜஸ்வலைகளான ஸ்திரீகளிடத்தில் சேருகின்றானே அவனே உடனே இது அடையும். உங்களுக்கு மனக்கவலை போகட்டும்' என்றுசொன்னர். ஓ! பரதஸ்ரேஷ்டனே! அப்ஸரஸுகளுடைய கூட்டங்கள் மனக்களிப்புடன், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டுத் தங்களிருப்பிடமடைந்து களிப்புடனிருந்தன. பிறகு, மூன்றுலகங்களையும்படைத்தவரும் பெருந்தவமுடைய வருமான பிரம்மதேவர் மறுபடியும் ஜலங்களை நிர்மாணித்தார் உடனே, நிர்மாணக்கப்பட்ட ஜலங்களும் வந்துசேர்ந்தன அரசனே! அந்தஎல்லா ஜலங்களும் வந்து அளவற்ற ஒளியுடைய பிதாமஹரான பிரம்ம தேவரைவணங்கி, 'பகைவரையடக்குபவரே! தேவரே! இதோ நாங்கள் உம்முடையகட்டளையினால் உம்முடைய ஸமீபம்வந்துவிட்டோம். உலகங்களுக்கு ஈசரே! பிரபுவே! எங்களை ஆஜ்ஞைசெய்யும்' என்னும் வசனத்தைச் சொல்லின. பிரம்மா, 'மிகவும் பயங்கரமான இந்த ப்ரம்மஹத்தியானது விருத்திராஸுரனிடமிருந்து இந்திரனை அடைந்திருக்கின்றது. இதனுடைய நான்காவது பாகத்தை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள்' என்று சொன்னர். ஜலங்கள், 'ஓ! பிரபுவே! உலகங்களுக்குத் தலைவரே! எங்களுக்குச் சொல்லுகிறபடியே ஆகட்டும் நாங்கள் விடுதலை அடையும் ஸமயத்தை ஆலோசிக்கத்தக்கவராகிறீர் தேவர்தலைவரே! நீர் எல்லா உலகத்திற்கும் பரமமான கதியல்லவா? உம்மைத்தவிர வேறு யார் எங்களைக் கஷ்டத்திலிருந்து கரையேற்றுவதற்கு வேண்டிக்கொள்ளத்தக்கவர்?' என்று சொல்லின பிரம்மா, 'கொஞ்சமாயிருக்கின்றனவென்றெண்ணி மதிமயங்கி உங்களிடத்தில் கோமுழையையும் மலமூத்திரத்தையும் விடுகிறவனே இது உடனே அடையும்; அவனிடத்திலேயே வலிக்கவும் செய்யும். அவ்விதம் உங்களுக்கு விடுதல் ஏற்படப்போகிறது. இவ்விதம் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்' என்று சொன்னர். ஜனமேஜய! யுதிஷ்டிரனே! பிரம்மஹத்தியானது பிறகு தேவேந்திரனைவிட்டு நீங்கிப் பிரம்மாவினுடைய கட்டளைப்படியே அந்த வாஸத்தை அடைந்தது. அரசனே! இந்திரன் பிரம்மஹத்

தியை அடைந்தது. இவ்விதம். இந்திரன் பிதாமஹரிடம் அனுமதி பெற்றுக்கொண்டு அஸ்வமேதத்தைச் செய்தான். ஓ! மஹாராஜனே! பிரம்மஹத்தியை அடைந்த இந்திரன் பிறகு அஸ்வமேதத்தினால் சுத்தியை அடைந்தானென்று கேள்வி. ஓ! பூபதியே! தேவனான வாஸவன் ஆயிரக்கணக்காகப்பகைவர்களைக்கொன்றுராஜ்யலக்ஷ்மியை அடைந்து ஒப்பற்ற சந்தோஷத்தையடைந்தான். குருநந்தன! விருத்ராஸுரனுடைய ரத்தத்தினாலேயே குமிழிகளுண்டாயின. ஆகையால், ஜலக்குமிழிகள் இருபிறப்போர்களாலும் (விசேஷமாக) தீக்ஷிதர்களாலும் தவத்தையே செல்வமாகவுடையமுனிவர்களாலும் அருந்தத்தக்கவைகளல்ல. நீயும் மலலாதிலைமைகளிலும் இப்படிப்பட்ட பிராம்மணர்களுக்குப் பிரியத்தைச செய்யக்கடவாய். குருநந்தன! அவர்கள் பூமியிலுள்ள தேவர்களென்று பிரகலித்தி பெற்றவர்கள். குருகுலத்தில் பிறந்தவனே! இவ்விதம் அளவற்ற வலிமையுடைய இந்திரன் புத்தியின்கூர்மையினால் உபாயத்தை முன்னிட்டுப் பெரிய அஸுரனை விருத்திரனைக் கொன்றான். குந்தீபுத்திரா! பகைவரைக்கொல்பவனும் தேவனுமான இந்திரன்போல நீயும் பூமியில் பகைவரால் ஜயிக்கப்படாதவனாக இருக்கப்போகிறாய். எவர்கள் பர்வங்கள்தோறும் திவ்யமான இந்த இந்திர சரித்திரத்தை வேதியர்களின் மத்தியில் சொல்லுவார்களோ அவர்கள் பாவத்தை அடையமாட்டார்கள். ஐயனே! இவ்விதம் ஆச்சரியமும் பெரிதும் விருத்திரனைப்பற்றியதுமான இந்திரனுடைய செய்கையானது உனக்குச் சொல்லிப்பட்டது. மறுபடியும் எதைக்கேட்க விரும்புகிறாய்?" என்று வினவினார்.

இருநூற்றெண்பத்தோன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிரமசிவன் தம்மை அழையாமையால் கோபங்கொண்டு தக்ஷயாகத்தை அழித்ததும், தமதுகோபாக்நியைப் பல போருள்களில் ஜ்வரமென்னும் வ்யாதியாக அடைத்ததும்.)

யுதிஷ்டிரர், "பேரறிவினரே! ஸகல சாஸ்திரங்களிலும் வல்லவரே! பிதாமஹரே! ஐயா! இந்தவிருத்ரவதத்தில் எனக்கு ஒரு வார்த்தைசொல்லவேண்டுமென்கிற விருப்பமுண்டாகிறது ஓ! நரஸ்ரேஷ்டரே! குற்றமற்றவரே! ஜ்வரத்தினால் விருத்ரன் மயக்கத்தை அடையும்படி செய்யப்பட்டானென்றும் இவ்வுலகில் இந்திரனால் வஜ்ரா

யுதத்தினால் கொல்லப்பட்டானென்றும் நீங்கள் எனக்குச்சொன்னீர்கள். பெரிய அறிவுடையவரே! இந்த ஜ்வரம் எப்படி உண்டாயிற்று? ஓ! பிரபுவே! ஜ்வரத்தின் உற்பத்தியை நன்முகக் கேட்க விரும்புகிறேன்" என்று வினவ, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"ஓ! அரசனே! உலகத்தில் பிரவிஸ்தமாயிருக்கிற இந்த ஜ்வரத்தின் உற்பத்தியைக் கேள் பாரத! இது உண்டானவகையையும் சொல்லுகிறேன். மஹாராஜனே! பாரதனே! முன்காலத்தில் மூவுலகங்களிலும் பிரவிஸ்தியிபெற்றதும் ஸிர்யனைச்சேர்ந்ததும் எல்லாரத்னங்களினலும் அலங்கரிக்கப்பெற்றதும் அளவிடமுடியாததும் எல்லா உலகங்களிலும் (ஒருவராலும்) அசைக்கமுடியாததும் ஸ்வர்ணதாதுக்களால்அலங்கரிக்கப்பட்டதுமான ஜ்யோதிஷ்கமென்கிற மஹாமேருவினுடைய கொடுமுடியின் பிரதேசத்தில் பரமேஸ்வரர் மஞ்சத்தில் விளங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தார் இவருடைய பக்கத்தில் எப்பொழுதும் பர்வதராஜகுமாரியானவள் இருந்துகொண்டு விளங்கினள். அப்படியே மஹாத்மாக்களான தேவர்களும், அளவற்ற பராக்ரமமுடைய வஸுக்களும், மஹாத்மாக்களும் வைத்யஸ்ரேஷ்டர்களுமான அஸ்வினீதேவர்களும், யக்ஷர்களுக்குத்தலைவனும் ஸ்ரீமானும் கைலாஸவாஸியும் பிரபுவும் சங்கம் பத்மம் என்கிற நிதிகளோடு அளவற்ற செல்வமுடையவனும் குஹ்யகர்களால் சூழப்பட்டவனும் விஸ்ரவஸின் புத்திரனும் அரசனுமான குபேரனும், மஹாகவியான சுக்ராசார்யரும் மஹாத்மாவான பரமேஸ்வரரை உபாஸித்துக்கொண்டிருந்தார்கள். ஸனத்குமாரர்முதலான மஹரிஷிகளும் அங்கிரஸ்முதலான மற்றத் தேவரிஷிகளும் விஸ்ரவஸுஎன்கிறகந்தர்வனும் நாரதபர்வதர்களும் கூட்டம்கூட்டமாகப் பலஅப்ஸரஸுகளும் வந்தார்கள். நானவித வாஸனைகளை வஹிக்கிறதும் பரிசுத்தமுமான காற்றுனது ஸுகமாயும் மங்களமாயும் வீசிற்று புஷ்பமுள்ள மரங்கள் எல்லாருதுக்களிலும் புஷ்பங்களுடையனவாயிருந்தன பாரதனே! வித்யுத்தரர்களும் வித்தர்களும் தபோதனர்களும் பசுபதியானமஹாதேவரைச் சூழ்ந்துகொண்டு உபாஸித்தார்கள் ஓ! மஹாராஜனே! நானவிதமான ரூபங்களுள்ள பூதங்களும் மிகவும் குரூரர்களான ராக்ஷஸர்களும் மிக்கவலிமையுள்ளபிசாசங்களும் பலஉருவங்களைத்தரித்தவர்களும் ஸந்தோஷத்துடன் அனேக ஆயுதங்களைக்கையிலேந்தியவர்களும் அக்கினிபோன்றவர்களுமான மஹாதேவருடையஸேவகர்களும் அவ்விடத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். நந்திபகவானும் தம்முடைய

காந்தியினால் பளபளப்பாயும்ஜ்வலிக்கிறதாயுமிருக்கிற சூலத்தைவகித்துக்கொண்டுமஹாதேவருடையஅனுமதிபெற்றுஅவ்விடத்தில்நின்றுகொண்டிருந்தார். குருநந்தன ! நதிகளுக்கெல்லாம் மேலானகங்கையும் ஸகலகட்டங்களினுமுளள தீர்த்தங்களும்பிரகாசிக்க உருவமெடுத்து அந்தமஹாதேவரை உபாஸித்தாள். மிகப்பெரியதேஜஸ்ஸுள்ளவரும் பகவானுமான அந்தமஹாதேவர் அவ்விடத்தில் முனிஸ்ரேஷ்டர்களாலும் தேவர்களாலும் இவ்விதம் பூஜிக்கப்பட்டார் பிறகு, ஒரு ஸமயத்தில தக்ஷனென்கிற ஸ்ருஷ்டிகர்த்தன் முன் சொலலப்பட்ட விதிபபடி யாகம் செய்பக்கருதி (தேவர்களை) அடைந்தான். பிறகு, இந்திரன்முதலான எல்லாத்தேவர்களும் அவனுடைய யாகத்திற்குப் போவதற்காக ஒன்றுசேர்ந்து அப்பொழுது நிச்சயித்தார்கள் மஹாத்மாக்களான அந்தத் தேவர்கள் ஈஸ்வரருடைய அனுமதியின்மேல் அக்னிக்கும் ஸூர்யனுக்குமொப்பான காந்தியுள்ள விமானங்களில் ஏறிக்கொண்டு கங்காத்துவார மென்கிற க்ஷேத்திரத்தை அடைந்தார்களென்று கேள்வி. அப்போது, பதிவ்ரதையான பர்வதராஜ புத்திரியானவள் (யாகத்திற்காக) தேவர்கள் புறப்பட்டதைப்பார்த்துத் தேவரும் பசுபதியுமானதனது பதியை நோக்கி, 'பகவானே! இந்திரன்முதலான இந்தத் தேவர்கள் எங்கே போகிறார்கள்? உண்மையை அறிந்தவரே! உள்ளபடி சொல்லும். எனக்கு இதில் ஒரு பெரிய ஸந்தேகம் உண்டாகின்றது' என்றாள் பரமேஸ்வரர், 'ஓ! மஹாபாக்யவதி! உத்தமனான தக்ஷனென்கிற ஸ்ருஷ்டிகர்த்தன் அஸ்வமேதயாகஞ்செய்கிறான் அதற்காகத் தேவர்கள் போகின்றார்கள்' என்றார். உமை, 'ஓ! மஹாதேவரே! இந்த யஜ்ஞத்திற்கு நீர் ஏன் போகவில்லை? எவ்விதமான தடையினால் நீங்கள் (யாகத்திற்குப்) போகவில்லை?' என்றாள். பரமேஸ்வரர், 'மஹாபாக்கியவதி! தேவர்களாலேயே இது முன் அனுஷ்டிக்கப்பட்டது. எல்லா யாகங்களிலும் எனக்கு ஏற்பட்ட பாகமானது இப்போது கல்பிக்கப்படவில்லை. சிறந்த மேனியுள்ளவளே! முன்னை கொள்கையின் முறைப்படி தேவர்கள் தர்மமாக ஏற்பட்ட யஜ்ஞத்தினுடைய பாகத்தை எனக்குக் கொடுக்கவில்லை' என்றார். உமை, 'பகவானே! நீர் எல்லாப் பிராணிகளிலும் மிக்க பெருமை வாய்ந்தவர். குணங்களாலும், பராக்கிரமத்தினாலும் யசஸினாலும் ஸ்ரீயினாலும் பிறரால் வெல்லமுடியாதவர். குற்றமற்றவரே! உமக்குப் பாகத்திலுண்டான இந்த அபேக்ஷபத்தினால எனக்குமிகவும் துக்கமுண்டாயிற்று; நடுக்கமும் உண்டாயிற்று' என்று சொன்னாள்.

ஓ! அரசனே! அந்தத் தேவி தேவரும் பசுபதியுமான தன் பதியை நோக்கி இவ்விதம் சொல்லிவிட்டு மனக்கொதிப்புடன் மௌனமாக இருந்தாள். பிறகு, சங்கரர் எது செய்யவேண்டுமென்று தேவியின் மனத்திலிருக்கிறதோ அந்த அபிப்பிராயத்தை அறிந்து நந்தியை நோக்கி, 'நீ (இங்கே) நில்' என்று கட்டளையிட்டார். பிறகு, யோகத்தில் வல்லமையுள்ளவர்களுக்கெல்லாம் தலைவரும் மிக்க காந்தியுள்ளவரும் தேவர்களுக்கெல்லாம் தேவரும் பிறைமென்கிறவில்லை ஏந்தியவருமான அந்த மகாதேவர் யோகபலத்தைச் செய்து கொண்டு அப்பொழுதே பயங்கரமான கணங்களால் விரைவில் அந்த யாகத்தை நாசம்செய்வித்தார். (அந்தக்கணங்களில்) சிலர் சூச்சலிட்டார்கள்; சிலர் சிரித்தார்கள் ஓ! அரசனே! மற்றவர்கள் அந்த யாகத்தில் ரத்தத்தைவாரி அக்கினியில் இறைத்தார்கள் சிலர் முகங்களைவிகாரப்படுத்திக்கொண்டு யூபங்களைப்பிடுங்கித் தூரத்தில் எறிந்தார்கள். மற்றவர்கள் பரிசாரகர்களை வாய்களால் விழுங்கினர்கள். ஓ! அரசனே! பிறகு, நான்குபக்கத்திலும் கெடுக்கப்பட்டஅந்தயஜ்ஞமானது மான்ரூபத்தைத்தரித்துக்கொண்டு உடனே ஆகாயத்தை நோக்கியே சென்றது. அப்பொழுது பிரபுவானஅந்தமஹேஸ்வரர் அந்தயாகம் அந்தவடிவத்துடன்போகின்றதைஅறிந்து பாணத்துடன் வில்லைஎடுத்துக்கொண்டு பின்தொடர்ந்தார். பிறகு, தேவர்களுக்கெல்லாம்ஈசரும் அளவற்றபராக்ரமமுடையவருமான அவருடையநெற்றியினின்றும் கோரமான ஒருவேர்வைத்திவலை கோபத்தால் வெளிப்பட்டது அந்தவேர்வைத்திவலை பூமியில்விழுந்தவுடனே காலர்க்னிக்குச்சமமான மிகப்பெரிய அக்னியானது உண்டாயிற்று. ஓ! புருஷஸ்ரேஷ்ட! அப்பொழுது அந்தஅக்னியில மிகவும்குள்ளருமசிவந்தகண்களையுடையவரும் மஞ்சள்வர்ணமானமீசையுடையவரும் பயங்கரரும்உயரக்ஷளம்பினதலைமயிர்களுடையவரும்ரோமங்களடர்ந்தஅவயவங்களுள்ளவரும் பருந்தையும்கோட்டாணியும்போன்றவரும் பயங்கரமானகரியநிறமுடையவரும் சிவந்தஆடைஉடுத்தவருமான ஒருபுருஷர் உண்டானார். மிகவும்பலசாலியான அவர் அந்தயாகத்தை, தீயானதுஉலர்ந்தகாட்டை எரிப்பதுபோல எரித்துவிட்டார். அவர் எங்கும் சுற்றினார்; தேவர்களையும் ரிஷிகளையும் துரத்தினர். எல்லாத்தேவர்களும் அவரிடம்பயந்து பத்துத்திக்குகளிலும் ஓடினார்கள். ஓ! பிரஜைகளைப்பரிபாலிக்கின்றஅரசனே! பரதஸ்ரேஷ்டனே! அவ்விடத்தில்சஞ்சரிக்கிற அந்தப்புருஷரால் பூமியானது மிகவும் நடுக்கமடைந்தது. அப்பொழுது, 'கூ, கூ' என்றுகதறுகிற ஸகல

ஜகத்தையும்பார்த்து, ப்ரபுவானப்ரம்மதேவர், மஹாதேவனைநோக்கி நேரில்நின்றுகொண்டு சொல்லலானர். 'ஓ! பிரபுவே! தேவர்களெல்லாரும் உமக்குப் பாகத்தைக் கொடுப்பார்கள். ஸகலதேவர்களுக்கும் ஈஸ்வரரே! நீங்கள் கோபத்தீயை அடக்கவேண்டும். பகைவரைவாட்டுகிறவரே! மஹாதேவரே! இந்த ஸகலமான தேவர்களும் முனிவர்களும் உம்முடைய கோபத்தினுல மனத்தில் கலக்கமடைகிறார்கள். தேவ சிகாமணியே! தர்மத்தை அறிந்தவரே! உம்முடைய வேர்வையிலிருந்துண்டான ஜ்வரம் என்கிற பெயருள்ள இந்தப் புருஷன் உலகங்களில் ஸஞ்சரிப்பான். பிரபுவே! ஆனல், ஒன்றுயிருக்கிற இந்தத் தேஜஸைத்தரிப்பதில் இந்தப் பூமி முழுமையும் சக்தியற்றது. ஆகையால், இது அனேகவிதமாகச் செய்யப்படட்டும்' என்றார். பிரம்மாவினல்இவ்விதம்சொல்லப்பட்டதேவர், பாகமுண்டாக்கப்பட்டவுடன், அளவற்ற பராக்கிரமமுடையபகவானைபரம்மாவை நோக்கி, 'அப்படியே ஆகட்டும்' என்று சொன்னர். பிதாமகியானவர் கிரித்துக்கொண்டு மிகுந்த பிரீதியை அடைந்தார். அப்பொழுது, சங்கரர் பிரம்மாசொல்லியபடி பாகத்தையும் அடைந்தார். அப்பொழுது, ஸகல தர்மத்தையும் உணர்ந்த தேவரானவர் ஸகலமான பிராணிகளுக்கும் நன்மையுண்டாவதற்காக ஜ்வரத்தையும் அநேகம் பிரிவாகச் செய்தார் குழந்தாய்! அதனையும் கேள். தர்மமறிந்தவனே! மஹாத்மாவான தேவரால் ஜ்வரமானது யானைகளுக்கு மண்டைக் கொதிப்பாகவும் மலைகளுக்குத் தாதுவாகவும் ஜலங்களுக்குப் பாசியாகவும் பாம்புகளுக்குச் சட்டையாகவும் விருக்ஷங்களுக்குக்குளம்பு ரோகமாகவும் பூதலத்தில் உவராகவும் பசுக்களுக்கு மாலைக்கண்ணைகவும் குதிரைகளுக்குக் கண்டத்திலசதையடைப்பாகவும்மயில்களுக்கு மண்டைவெடிப்பாகவும் குயில்களுக்குக் கண்ணேயாகவும் சொல்லப்பட்டது. செம்மறியாடுகளுக்கெல்லாம் பித்தவிகாரமென்று நமக்குக் கேள்வி. எல்லாப்பிளிகளுக்கும் *விக்கல் என்கிற ஜ்வரமானது சொல்லப்படுகின்றது. தர்மமறிந்தவனே! பின்னும் புலிகளிடத்தில் ஸ்ரமமென்கிற ஜ்வரமானது இவ்வுலகில் சொலலப்படுகின்றது. தர்மமறிந்தவனே! மானிடர்களிடத்தில்ஜ்வரமென்றே இது பிரவலித்தமாயிருக்கிறது. மஹேஸ்வரருடைய இந்தத்தேஜஸாகிற மிக்க கொடிய ஜ்வரம் மனிதனைப் பிறப்பிலும் இறப்பிலும் அப்படியே நடுவிலும் அடைகின்றது. (ஆகையால்) ஈஸ்வரரானவர்எல்லாபபிராணிகளாலும் வணங்கவும் பூஜிக்கவும் தக்கவர் இந்த ஜ்வரம் உட்புகுந்த

*'ஹிக்கா' என்பது மூலம்.

வுடன் தர்மவான்களுள்சிறந்தவனான விருத்ராஸுரன் கொட்டாவி விட்டான். பிறகு, அவனைக்குறித்து இந்திரன் வஜ்ராயுதத்தை ஏவினான். ஓ! பாரதனே! வஜ்ரமும் விருத்ரனை அடைந்து பிளந்து விட்டது. மஹாயோகியான அந்தப் பெரிய அஸுரன் வஜ்ரத்தினால் பிளக்கப்பட்டு அளவற்ற பராக்கிரமமுடைய விஷ்ணுவினுடைய சிறந்த ஸ்தானத்தை அடைந்தான். முன் விஷ்ணுபக்தியினாலன்றோ அவன் இந்த உலகத்தில் வியாபித்தான்? ஆகையால், யுத்தத்தில் கொல்லப்பட்டு விஷ்ணுவினுடைய ஸ்தானத்தை அடைந்தான். இவ்விதம் விருத்ராஸுரனைப்பற்றியிருந்த பெரிய ஜ்வரத்தினுடைய இந்த விரிவான விஷயமானது என்னால சொலலப்பட்டது. புத்திரனே! உனக்கு வேறு என்ன சொல்லவேண்டும்? ஜ்வரத்தினுடைய இந்த உற்பத்தியை விசாலமான மனத்தையுடைய எந்த மனிதன் மிக்க அடக்கத்துடன் எப்பொழுதும் படிப்பானோ அவன் ரோகம் விலகினவனும் ஸுகசாலியும் ஸந்தோஷமுள்ளவனுமாகி விரும்பிய வைகளை அடைவான்" என்றார்" என்றுகூறினர்.

இருநூற்றுத்தொண்ணூருவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரமசிவன் வீரபத்ரரைக்கொண்டு தக்ஷயாகத்தை அழித்ததும், தக்ஷன் ஸ்ஹஸ்ரநாமத்தினால் அவரைத்துதித்ததும், அவர் கோபந்தணிந்து வரமளித்ததும்.)

ஜனமேஜயர், "பிராம்மணரே! வைவஸ்வதமன்வந்தரத்தில் பிரசேதஸினுவம்சத்தில்பிறந்த ஸ்ருஷ்டிகர்த்தனான தக்ஷனுடைய அபவமேதமானது எப்படி நாசத்தை அடைந்தது? ஓ! பிராமணரே! ஸ்ருஷ்டிகர்த்தனுடைய அந்த அபவமேதமானது எப்படி ஏற்பட்டதா? எல்லாரூபமாயுமிருக்கிற பிரபுவானவர் தேவியினுடைய கோபத்தைக் குறித்தன்றோ தாமும் கோபத்தை அடைந்தார்? தக்ஷன் அவருடைய பிரஸாதத்தை அடைந்து அந்தயாகத்தை எப்படி பூர்த்திசெய்தான்? இதை அறியவிரும்புகிறேன். எனக்கு உள்ளபடி சொலலும்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார்.

"முற்காலத்தில் இமயமலையின்தாழ்வரையில் ரிஷிகளாலுமஹரிக்தர்களாலும் அடுக்கப்பட்டதும் கந்தர்வர்களாலும் அப்ஸரஸுகளாலும் சூழப்பட்டதும் அனேகவிதமான விருக்ஷங்களாலும் கொடிக

ளாலும் சூழப்பட்டதுமான கங்காத்துவாரத்தில மங்களகரமான இடத்தில் தக்ஷன் யாகம் செய்தான். அப்பொழுது ஆகாயத்திலும் மண்ணுலகிலும் ஸ்வர்க்கலோகத்திலும் வஸிகின்ற எல்லோரும் அஞ்சலிசெய்துகொண்டு, 'ரிஷிகளுடைய ஸமூகங்களால் சூழப்பட்டவனும் தர்மத்தைத் தரிகின்றவர்களில் சரேஷ்டனுமான தக்ஷனென்கிற ஸ்ருஷ்டிகர்த்தனே ஸ்தோத்திரம்செய்தாகள. உடனே, தேவர்கள் அஸுரர்கள் கந்தர்வர்கள் பிசாசாகள் உரகர்கள் ராக்ஷஸாகள் ஹா ஹா ஹு-ஹு-வென்னும் கந்தர்வர்கள தும்புரு நாரதர் விசவாவஸு விசவஸேனன் கந்தர்வர்களோட சேர்ந்த அப்ஸரஸ்திரீகள் ஆதித்யர்கள வஸுக்கள் ருத்ரர்கள மருத்துக்களுடைய கூட்டங்களோடு கூட ஸாத்யர்கள் ஆகிய யாகத்தில் பாகமுடையவர்களான எல்லோரும் இந்திரனுடன் வந்தார்கள். ஊர்த்வமபர்களும் ஸோமபாகளும் தூமபர்களும் ஆஜ்யபாகளுமான ரிஷிகளும பிதருக்களும பிரம்மாவுடன் வந்தார்கள். மற்றுமுளள அனேகமான *ஜராயுஜம் அண்டஜம் ஸ்வேதஜம் உத்பிஜ்ஜம் என்கிற நான்குவிதபிராணிகளின் ஸமூகங்களும் சீக்கிரமாய வந்தன. ஆலோசனையுடன் அழைக்கபபட்ட எல்லாத்தேவாகளும் பதினிகளுடன் விமானத்திலிருந்துகொண்டு ஜ்வலிக்கின்ற அகனிகள்போல விளங்கினாகள. (அப்பொழுது) தக்ஷி மஹரிஷியானவர் அவர்களைப்பார்த்துக் கோபமூண்டு ஒருவார்த்தை சொன்னார். 'ருத்ரபூஜையில்லாதஇது யாகமுமாகாது; தர்மமுமாகாது. எலலோரும மரணசம்பந்தத்தை அடைந்துவிட்டார்களே? இது காலத்தின் வித்தியாஸமா? அலலது நேரிட்ட விநாசத்தை இவர்கள் மோகத்தினால் அறியவிலலையா? பொதானயாகத்தில் நேரிட்ட கோரமான பயத்தை அறியவிலலையே?' என்றார். இவ்விதம் சொல்லிவிட்டு அந்த மஹாயோகியானவர் ஞானதிருஷ்டியினால் பார்த்தார். அவர் மஹாதேவரான ஈசவரரையும வரத்தை அளிக்கின்றவருமும மங்கள்ஸ்வரூபியுமான தேவியையும் அந்தத் தேவிக்குச் சமீபத்தில மஹாத்மாவான நாரதரையும் பார்த்தார். யோகத்தை அறிந்தவரான அந்தத்தக்ஷியானவர் இவ்விதம் நிசசயம் செய்துமிக்க ஸந்தோஷத்தை அடைந்தார். அவாகளெல்லோரும் ஸோ ஆலோசனையுள்ளவாகளாயிருந்தாகள். ஈசவர அனுமதியாத காரணத்தினால் தக்ஷியானவர் அந்த இடத்தை விட்டு விலகி இருந்துகொண்டு (அவர்களை நோக்கி) மனிதன் பூஜிக்கத்தகாதவைகளைப் பூஜிப்பதினாலும் பூஜிக்கத்தக்கவர்களைப் பூஜியாததினாலும் அடிக்கடி

*அநுசாஸனபர்வம்\771-வது பக்கம் குறிப்பிலிகாண்க.

மனுஷ்யஹத்திக்குச் சமமான பாவத்தை அடைகின்றான். நான் மூன்றியும் பொய்யை சொன்னதில்லை ; இனி ஒருபொழுதும் சொல்லப் போகிறதுமில்லை. தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மத்தியில் நான் உண்மையைச சொல்லுகின்றேன். தாமே வந்தவரும் பசுக்களை வதிக்கின்றவரும் ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறவரும் ரக்ஷிக்கிறவரும் யாகத்தில் எல்லாருக்கும் முதலில் புஜிக்கிறவருமான பிரபுவைப் பாருங்கள்' என்று சொன்னார். தக்ஷன், 'எங்களுக்குக் கரத்தில் சூலாயுதமுடையவர்களும் ஜடாதாரிகளும் பதினொருஸ்தானங்களை அடைந்தவர்களுமான அநேக ருத்ராகளிருக்கின்றார்கள். நான் மஹேசவரரை அறியவில்லை. எல்லோரும் ஆலோசித்துத்தான் இவரை அழைக்கவில்லை' என்று சொன்னான். ததீசி, 'நான் சங்கரருக்குமேல வேறு தெய்வத்தைப் பார்க்கவில்லை யென்பது உண்மையானால் தக்ஷனுடைய பெரிய இந்த யாகமானது (இப்போது) நிறைவேறப் போகிறதில்லை' என்று சொன்னார். தக்ஷன், 'யாகத்தின் தலைவருக்காக ஸ்வாணபாத்திரத்தில் வைக்கப்பட்டதும் விதிப்படி மந்திரத்தினால் பரிசுத்தமுள்ளதுமான இந்த ஹவிஸை, நிகரற்ற விஷ்ணுவினுடைய பாகமாகச சோபிக்கின்றேன். இவர் பிரபுவும் வியாபகரும் ஆராதிக்கத் தக்கவருமானவர்' என்று சொன்னான். தேவியானவள், 'இப்பொழுது பிரபுவும் வியாபகரும் ஆராதிக்கத்தக்க ஸர்வஜ்ஞரும் நினைக்கவும் அரியருமான இந்த என்னுடைய பதியானவர் எல்லாப் பாகத்தையுமாவது பாதிப்பாகத்தையாவது அல்லது மூன்றிலொரு பாகத்தையாவது அடையும்படியான தானத்தையோ விரதத்தையோ தவத்தையோ நான் செய்வேன்' என்று சொன்னாள். இவ்விதம் சொல்லிக் கலக்கமுற்ற தம்முடைபத்தினியை நோக்கி ஸர்வஜ்ஞரான ஈசவரர் அதிக ஸந்தோஷத்தையடைந்து, 'தேவியே! மெல்லிய அங்கமும் இடையுமுள்ளவளே! என்னை நீ அறியவில்லை. யாகத்திற்கு ஈசனை என் விஷயத்தில இந்த வசனமானது உசிதமா? நீண்ட கண்களையுடையவளே! நான் (எல்லாவற்றையும்) அறிகிறேன். அறிவிலலாத அஸுதத்துக்களை ஒன்றையும் அறிகிறதில்லை. இப்பொழுது உன்னுடைய மாயையினாலே இந்திரனும் தேவர்களும் மூவுலகங்களிலுமுள்ளோரும் முழுதும் அஜ்ஞானத்தை அடைந்திருக்கின்றனர். யாகத்தில் என்னை ஹோதாக்களான ருக்வேதிகள் துதிக்கின்றார்கள். என்னைக் குறித்து ஸாமகர்களும் ரதந்தர ஸாமத்தைக் கானஞ செய்கின்றார்கள். என்னைப் 1 பிரம்ம

1 அதர்வவேதிகள்.

வித்துக்களான பிரம்மணர்களை பூஜிக்கின்றீர்கள். எனக்கு அத்வரியுக்களென்கிற யஜுர்வேதிகளை ஹவிர்ப்பாகத்தைக் கொடுக்கின்றீர்கள்' என்று சொன்னர். தேவியானவள், 'மிகவும் இழிந்தவரானலும் எல்லாப் புருஷரும ஸதிரீஜனங்களின் மதியில தம்மைப் புகழ்ந்து கொள்ளுகின்றனர்; காவதையும் அடைகின்றனர். ஸந்தேகமில்லை' என்றுள். சங்கரா, 'தேவாகளுக்கெலலாம் ஈசவரியே! சிறுத்த இடையுளளவளே! நான் என்னைத் துதிகக்கலில்லை. சிறந்த மேனியுடையவளே! உத்தமியே! இந்த யாசநிமித்தம் நான் ஸ்ருஷ்டிபபவனைப்' 'பார' என்றார். அந்தப பகவான பிராணனைக் காட்டிலும் பிரியமானவளும பதிவிரதையுமான உமையைப் பாராதது இவ விதம் சொல்லிவிட்டிச தம்முடைய முகத்திலிருந்து மிகுந்த உற்சாகமுடையதும் கோரமுமான ஒரு பூதத்தை ஸ்ருஷ்டித்தார. அவர் அவனை நோகி, 'தக்ஷனுடைய யாகத்தை அழித்துவிடு' என்று சொன்னர். பிறகு, முகத்திலிருந்து விடிபபட்ட அந்த ஒபபற்ற லிமமம் போனற வீரபதரால தேவியின் கோபதனிவத்றகாகத் தக்ஷனுடைய யாகமானது விளையாட்டாக அழிகக்பபட்டது. I (தேவியினுடைய) கோபத்திலை மிகவும பயங்கரமும மஹாகாளியுமான மஹேசவரியானவள உண்டாகி ஆத்மரூபரான ஈசவருடைய கர்மத்திறகுச் சாக்ஷியாக அவருடன் பின் தொடர்ந்தாள். சௌரியத்தினால ஆதமவான ஈசவருகுச் சமமான பலம் ரூபம் இவைகளுடன் கூடினவரும (ஈசவருடைய) சோபமே வேறு உருவமெடுத்ததுபோன்றவரும் அளவற்ற பலம வீரியங்களுள்ளவரும் அளவற்ற பலமுள்ள ஆண்மைத்தனமுடையவரும் வீரபதரென்று பிரஸித்தி பெற்றவரும் தேவியின் கோபத்தைத் துடைக்கின்றவருமான அந்தப் பகவான் தேவருடைய அபிபராயத்தை அறிந்து ரிஸால் வணங்கிப் பிறகு தம்மயிர்க்கால்களிலிருந்தும் ரௌத்ரமியர்களென்கிற சிறந்த கணங்களை ஸ்ருஷ்டித்தார. பிறகு, ரதகிரருக்குச் சமமானவைகளும் ரத்திரருக்குச் சமமான வீரியமும் பராக்ரமமுமுடையவைகளும் பயங்கரமானவைகளுமான அந்தக்கணங்கள் தக்ஷனுடைய யாகத்தை அழிபபதற்காக விரைவில வந்தன. பிறகு பயங்கரமான ரூபமுடையவைகளும பெரிய சரீரமுடையவைகளும் நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்குமாயிருபபவைகளுமான அவைகள் கிலகிலா சப்தங்களால்

I 'மஹேசுவரியும் மஹாபயங்கரமான மஹாகாளியாகித் தனக்காக உண்டான கார்யத்தை நேரில் பார்ப்பதற்காக அவருடன் பின் சென்றாள்' என்றும் கொள்ளலாம்.

ஆகாயத்தை நிரம்பசெய்தன. பெரிய அந்தச் சப்தத்தினால் அங்குள்ள தேவர்கள் நடுங்கினார்கள்; மலைகளும் சிதறின; பூமியும் அசைந்தது; காற்றும் சுழன்றது; கடல் கலங்கிற்று. அக்னிகளும் ஒளி மழுங்கின; ஸூர்யனுடைய பிரகாசிக்கவில்லை; நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கவில்லை; சந்திரனும் பிரகாசிக்கவில்லை; ரிஷிகளும் பிரகாசிக்கவில்லை; தேவர்களும் பிரகாசிக்கவில்லை; மனிதர்களும் பிரகாசிக்கவில்லை; இவ்விதம் இருளடைந்தபொழுது சில கணங்கள் கர்வத்துடன் எரிந்தன. கோரமுள்ள பற்றவைகள் அடித்தன; யூபங்களையும் பிடுங்கின. மற்றவைகள் இடித்தன. வேறு சில கசக்கின வாயுவேகமுள்ள சில எங்கும் ஓடின. மனோவேகமுள்ள சில குதித்து ஓடின. யாகபாத்ரங்களும் திவ்யமான ஆபரணங்களும் பொடியாச்சப்பட்டன. அவைகள் வாரி இறைக்கப்பட்டு ஆகாய வெளியில் நக்ஷத்திரங்கள போலக் காணப்பட்டன. திவ்யமான அன்னம் பானம் பக்ஷ்யம் இவைகளுடைய குவியல்கள் மலைகளுக்குச் சமானமாயிருந்தன. அப்பொழுது நெடிவிட்ட பாயஸங்களாகிற சேறுகளோடு கூடின பாலாறுகள் காணப்பட்டன. தயிர்பாடைகளாகிற ஜலத்தையுடையவையும் சிறந்த சர்க்கரைச் சட்டிகளாகிற மணல்களுடையவையும் அறுசுவையுள்ளவையும் மனத்திற்கினியவையுமான வெல்லவாய்க்கால்கள் ஓடின. பலவிதமான மாமிஸங்களையும் பலவகையான பக்ஷ்யங்களையும் திவ்யமான பானகங்களையும் [1]லேகியங்களையும் சோஷ்யங்களையும் கணங்கள் நானாவிதமான வாயுக்களால் புஜித்தன; அழித்தன; வாரியுமிழ்ந்தன. ருத்ரருடைய கோபத்தினால் பெரிய சரீரத்தையுடையவைகளும் பிரளயகாலார்க்கினிக்கு ஒப்பானவைகளுமான கணங்கள் நான்கு பக்கத்திலும் தேவஸைன்யங்களைப் பயப்படுத்திக் கலக்கின; அநேக வடிவங்களையெடுத்து விளையாடின; தேவஸ்த்ரீகளை வாரி எறிந்தன. ருத்ரருடைய கோபத்தினின்றும் எல்லாத் தேவர்களாலும் ப்ரயாசத்துடன் நன்கு காக்கப்பட்ட அந்த யாகத்தைக் கொடிய செய்கையுள்ள வீரபத்ரர் எங்கும் விரைவில் "எரித்தனர்; எல்லாப் ப்ராணிகளுக்கும் அசௌக்யத்தை விளைவிக்கும்படி கோரமான சப்தத்தைச் செய்தனர்; யாகத்தின் சிரஸைக் கொய்துவிட்டுக் கர்ஜித்தனர்; சந்தோஷித்தனர். பிறகு, நான்முகன்முதலான எல்லாத் தேவர்களும் ஸ்ருஷ்டிகர்த்தனை தக்ஷனும் அஞ்சலி செய்துகொண்டு, 'நீர் யார்? சொல்லும' என்று கேட்க, வீரபத்ரர், 'நான் ருத்ரருமல்லேன்; தேவியுமல்லேன். இவ்வேக நான் ஹவிஸையருந்தவும்

1. 645 ஆம் பக்கம் குறிப்பிற்காண்க.

வரவில்லை. நீங்கள், தேவிக்குக் கோபம் வரும்படி செய்ததை கினைத்து ஸர்வாத்மாவான பிரபுவானவர் கேர்பத்தை அடைந்தார். பிராமணசரேஷ்டர்களே! ப்பார்க்கவும், வரவில்லை. உத்ஸாஹதனினும், வரவே இல்லை. என்னை உன்யர்க்கத்தை அழிப்பதற்காக இங்கேவந்தவனை அறிந்துகொள். நான் வீரபத்திர னென்று பெயர்பெற்றவன்; ரசவருடையகோபத்தினின் றும் குதித் தவன்; இவள் டத்ரகாளி என்று பெயர்பெற்றவள்; தேவியின் கோபத்தினின்று வெளிப்பட்டனள். நாங்களிருவரும் தேவர்களுக் கெல்லாம் தேவரான அவராலே அனுப்பப்பட்டு யாகளீபத்தை அடைந்தோம். பிராம்மணசரேஷடனே! உமாபதியானதேவதேவ னரச சரணம்டை. தேவருடையகோபமும் மேலானது, மற்றவிடத் திலிருந்து வாதானமும இழிந்தது' என்றுசொன்னர். வீரபத்ரு ருடையவாக்கியத்தையைக்கேட்டு, தர்மத்தைத்தரிக்கிறவர்களில் சிறந்த வனுனதக்ஷன் பரமேசவரைப்பணிந்து ஸ்தோத்திரத்தினுல்ஸந்தோ ஷிக்கசெயயலானன். 'தேவரும்சிக்ஷகரும் சாசவதரும் நிலையுள்ள வரும் அழிவிலலாதவரும் மஹாத்மாவும் எல்லாஉலகத்திற்கும்பதிய மான மஹாதேவரை நான் சரணமடைகிறேன்' என்றான். நன்முகச சேகரிக்கப்பட்ட அந்தத்திரவியங்களோடு கூடின தக்ஷனுடையயாகத் தில் எல்லாதேவர்களும் தபோதனர்களானரிஷிகளும் அழைக்கப் பட்டார்கள். தேவரும் (ஸ்ருஷ்டிமுதலான) எலலாத்தொழில்களையு முடையவருமான மஹேச்வர் அதற்கு அழைக்கப்படவில்லை. அப் பொழுது மஹாதேவியானவள் கோபதத்தை அடைந்தாள். அதனி மித்தம் ரசவர் கணங்களை அனுப்பினார். அப்பொழுது யாகசாலை எரிக்கப்படடும் பிராமமணர்களை ஓடியும் மஹாத்மாவும் பயங்கரரும் ஜ்வலிக்கிறவருமான வீரபதர் தக்ஷத்ரமண்டலத்தை வியாபித்தும் பரிசாரகர்கள் சூலத்தால் மார்புபிளக்கப்பட்டு அலறிக்கொண்டும் யூபங்கள் அசைத்துப் பிடுங்கி எங்கும் எறியப்பட்டும் கழுகுகள் மாம் ஸத்தில் ஆசைகொண்டு உயரக்கிளம்பியும் கீழேஸஞ்சரித்துக்கொண் டும் யக்ஷர்களும் கந்தர்வக கூட்டங்களும் பிசாசர்களும் உரகர்களும் ராக்ஷஸர்களும் அவற்றின் இரதகளின்காற்றினுல் தள்ளப்பட்டும் அதேகம்நரிகளால் ஊளிடப்பட்டும் இருக்கும்பொழுது, அனேக நேத்ரங்களையுடையவரும் சத்துருக்களை ஜயிக்கின்றவரும் தேவ தேவருமான ரசவர் முகஸ்தானத்திலுல் முயற்சியுடன்ப்ராணபா னங்களை அடக்கிக் கண்களால் எங்கும் பார்த்துக் கொண்டு சீக்கிரமாக அக்னி குண்டத்திலிருந்தும் கிளம்பினர். ஆயிரம்

ஸூர்யர்களுடைய ஒளியையவகிக்கிறவரும், ஊழிததிப்போன்ற வருமான அவர் (தக்ஷனைநோக்கிப்) புன்னகை செய்து, 'உனக்கு நான் என்னசெய்யவேண்டும்? சொல்' என்னும வசனத்தைச சொன்னர். பிறகு, சிருஷ்டிகர்த்தனை தக்ஷன் யாகத்தைப்பற்றின அத்யாயத்தைத் தேவகுருவினிட மிருந்து கேட்டபொழுது, அஞ்சலிசெய்துகொண்டு பயமும் சிந்தையும் நடுக்கமுமடைந்து கண்களிலும் முகத்திலும் கண்ணீர்பெருக அந்தத்தேவரைநேக்கி, 'ஸர்வஜ்ஞரானநீர் அருளுளவரும் எனக்குவரமளிப்பவரும் நான் உமக்குப்பிரியனும் அனுக்ரஹிக்கத்தக்கவனுமாயிருந்தால் நெடிநாள் பெருமுயற்சியால் நன்குசேர்க்கப்பட்டதும் எரிக்கவும் கடிக்கவும் குடிக்கவும் தின்னவும் அழிக்கவும பொடிக்கவும் எறியவும் பட்டதுமான இவவிதயாகஸாமக்ரியானது வீணுகவேண்டாம். நான எனக்கு இநதவரதத்தைத் வரிக்கின்றேன்' என்று சொன்னன். ஸர்வஜ்ஞரும் பகனென்கிற சூரியனுடைய நேத்ரத்தைப்பிடுங்கினவரும் தாமஸகளுக்குப் பயனளிக்கின்றவரும் விரூபமான நேத்ரங்களையுடையவரும் முக்கண்ணரும் தேவரும் பிரஜைகளுக்கெலலாம் பதியுமான ஹரர் 'அப்படியே ஆகட்டும்' என்று சொன்னர். தக்ஷனுனவன் முழுங்கால களை பூமியிற்படியநமஸ்கரிநது ஈசவரரிடமிருநது வரதத்தைஅடைந்து விரூஷபத்வஜரான அவரை ஆயிரதெட்டுநாமங்களினல துதிதான்' என்னர்.

யுதிஷ்டிரர், ''ஐயா' குற்றமற்றவரே! பிரஜைகளுக்குப்பதியான தக்ஷன் எநதநாமங்களினல ஈசவரரைத துதிதான்? ஆவற்றை நீர் எனக்குச் சொல்லவேண்டும். எனக்குக் கேட்பதற்கு சரதத்தை உண்டாயிருக்கிறது'' என்று கேட்க, பீஷ்மர் சொலலதொடங்கினர். ''பாரத! ஆசசரியமான செய்கையையுடையவரும் ரகஸ்யமானவரதத்தையுடையவருமான தேவதேவருடைய ரகஸ்யமும் பிரகாசமுமான நாமங்களைக் கேள். தக்ஷன், 1'தேவரே! தேவர்களுக்கெலலாம் ஈசவரரே! தேவர்களின்பகைவர்களினைவன்மையைப் அழிப்பவரே! உமக்கு நமஸ்காரம். தேவேந்திரனுடைய பலத்தைஸ்தம்பம்செய்தவரே! தேவர்களாலும அஸுரர்களாலும் பூஜிக்கப்படவரே! ஆயிரம்கண்களுள்ளவரே! (ஸூர்யசந்திரர்களாகிய) விரூபங்களானகண்களையுடையவரே! மூன்றுகண்களுள்ளவரே! யக்ஷாதிலை வனைக்குபோனை நண்பனுகவுடையவரே! எங்கும் கைகளும்கால்களும்

1 இவற்றில், அநுசாஸனபர்வத்தில் சிவஸஹஸ்ரநாமம் வந்தவிடத்தப பொருள்கூறப்படாத நாமங்களுக்குப் பொருள் கூறப்படுகிறது.

ஸாங்கித்யமு முள்ளவரே! எங்கும் கண்களும் தலைகளும் முகங்களுமுடையவரே! எங்கும்காதுகளுள்ளவரே! உலகத் தில் எல்லாவற்றையும் வியாபித்திருப்பவரே! மூன்றுபோன்ற காதுகளுடையவரே! பெரிய காதுகள உடையவரே! சூடக களபோன்ற காதுகளுள்ளவரே! ஸமுத்ரத்தை இருப்பிட மாகவுடையவரே! பெரிய யானையின் காதுகளுக்கு நிகரான காது களுள்ளவரே! பசுவின்காதுகளை யொத்த காதுகளுள்ளவரே! கை களுக்கு நிகரானகாதுகளுள்ளவரே! நூறு வியிறுகளுடையவரே! நூறுரோமசசுரிகளுள்ளவரே! நூறு நாக்களுடையவரே! உமக்கு நமஸ்காரம். காயத்ரீ மந்திரஜப முடையவர்களை உம்மைக் கானஞ் செய்கிறார்கள. ஸ்ராயணே உபாஸிப்பவர்களை ஸ்ராயணுக்கு அதிஷ் டான தேவதையான உம்மை அர்ச்சனை செயகிறார்கள. உம்மைப் பிரம்மாவாகவும் நூறு அசுவமேதமுள்ள இந்திரனாகவும் Iஊர்த் வராசவும் ஆகாயத்திற்கு நிகராகவும் நினைக்கிறார்கள. பெரிய சரீ ரத்தையுடையவரே! கடலுக்கும ஆகாயத்துக்கும் நிகரானவரே! உம்முடைய இந்தச்சரீரத்தில எல்லாத் தேவதைகளும் கொட்டிலில் பசுக்கள் இருப்பதுபோல இருக்கின்றார்கள. உம்முடைய சரீரத் தில் சந்திரன் அக்நி வருணன ஆதித்யன் விஷ்ணு பிரம்மா பிரு ஹஸ்பதி இவர்களைப் பார்க்கிறேன். நீரே பகவான்; காரணர்; கார் யர்; க்ரியை; கரணா; ஸத்து அஸத்துக்களின் உறபத்தி நாசமாயி ருப்பவர். பவரும் சர்வரும் [2]ருத்ரரும் வரதருமான உமக்கு நமஸ் காரம். பிரம்மாமுதலான பசுக்களுக்குப் பதியும் அந்தகாஸுரனைக் கொன்றவருமான உமக்கு எபபொழுதும நமஸ்காரம். மூன்று விதமான ஜடைகளை யுடையவரும் மூன்றுதலைகளுள்ளவரும் முத் தலைச சூலத்தால யுத்தம் செயயும் தன்மையுள்ளவரும் சாஸ்திரம், குரு, தியானம் ஆகிய மூன்று வித நேத்ரங்களை யுடையவரும் ஸுர்யன் சந்திரன் அக்நி ஆகிய மூன்று கண்களையுடையவரும் முப் புரத்தையழித்த [3]வருமான உமக்கு நமஸ்காரம். [3]ரண்டரும் [4]குண் டரும் [5]அண்டரும் அண்ட த்தைத் தரிக்கின்றவருமான உமக்கு நமஸ் காரம். [6]தண்டியும் நேரும்கோணலுமாயிருப்பவரும் தண்டம் முண் டனம் இவற்றையுடைய யமனாலியுமான உமக்கு நமஸ்காரம். உயரக் கிளம்பின கோரப்பற்களும கேசங்களு முள்ளவரும் [7]சுக்லரும் [8]அவ

1 எல்லாவற்றிற்கும் மேலானவர்.
2 பாவத்தைதவிலக்குபவர்.
3 குரூரரூபி.
4 சட்டிபோன்றவர்.
5 பிரம்மாண்டமாயிருப்பவர்.
6 சிக்கிகிறவர்.
7 ஸத்வகுணத்தால் வெண்மையான
8 எங்கும் வியாபித்தவர். [வர்.

தரும் [1]லோஹிதரும் [2]தூம்ரரும் (ஹாலாஹலத்தினால்) கறுத்த கண்டமுடையவருமான உமக்கு நமஸ்காரம். நிகரற்றவரும் [3]விரூபரும் [4]சிவரும் [5]ஸூர்யரும் ஸூர்யமண்டலத்தில் சயனஞ் செய்பவரும் ஸூர்யன் போல விளங்குகின்ற தீவ்ரஜ்வாலையுமுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். ப்ரமதகணங்களுக்கு நாதரும் விருஷபத்தின் தோளுக்கு நிகரான தோளுள்ளவரும் தக்ஷியும் சத்ருக்களைச் சிக்ஷிப்பவரும் [6]தண்டரும் பூஜ்யவிருக்ஷத்தின் பட்டையையும் மரவுரிகளையும் வஸ்திரமாகவுடையவருமான உமக்கு நமஸ்காரம். ஸுவர்ணத்தைக் கர்ப்பத்திலுடையவரும் ஸுவர்ணமயமான கவசமுடையவருமான உமக்கு நமஸ்காரம். ஸுவர்ணத்தினால் செய்யப்பட்ட கிரீடமுள்ளவரும் ஸுவர்ணகளங்களுக்குப் பதியுமான உமக்கு நமஸ்காரம். [7]ஸ்துதரும் [8]ஸ்துத்யரும் [9]ஸ்தூயமானருமான உமக்கு நமஸ்காரம். ஸர்வரும் எல்லாவற்றையும் பக்ஷிக்கிறவரும் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தராத்மாவுமான உமக்கு நமஸ்காரம். ஹோதாவும் மந்த்ரமும் வெண்மையான கொடி கொடிச்சீலைகளுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். [10]நாபரும் [11]நாப்யருமான உமக்கு நமஸ்காரம். ஆவரணங்களுக்கு ஆவரணரும் க்ருசமான நாசியுள்ளவரும் க்ருசமான அங்கங்களுள்ளவரும் க்ருசருமான உமக்கு நமஸ்காரம். [12]ஸம்ஹ்ருஷ்டரும் [13]விஹ்ருஷ்டரும் [14]கிலகிலருமான உமக்கு நமஸ்காரம். [15]சயமானரும் [16]சயிதரும் [17]உத்திதரும் [18]ஸ்திதரும் [19]தாம்யானரும் முண்டரும் [20]ஜடிலருமான உமக்கு நமஸ்காரம். நடனத்தை ஸ்வபாவமாகவுடையவரும் முகவாத்யம் வாசிப்பவரும் நதியிலுண்டான தாமரை மலர்களாகிற பூஜாஸாதனத்தில் ஆசையுள்ளவரும் கான வாத்யங்களால் விளங்குகிறவருமான உமக்கு நமஸ்காரம். [21]ஜ்யேஷ்டரும் [22]சரேஷ்டரும் பலத்துக்கு அபிமானி தேவதையான இந்திரனைச் சிக்ஷித்தவரும் காலனுக்கும் நியந்தாவும்

1 ரஜோகுணத்தால் சிவப்பு நிறமுள்ளவர்.
2 தமோகுணத்தால் புகைநிறமுள்ளவர்.
3 நானாவிதரூபமுள்ளவர்.
4 மங்களமூர்த்தி.
5 ஸூர்யமண்டல ரூபி.
6 நிக்ரகரூபி.
7 துதிக்கப்பட்டவர்.
8 துதிக்கத்தக்கவர்.
9 துதிக்கப்படுகிறவர்.
10 நாபியில் எல்லா ஜகத்தையும் முடையவர்.
11 நாபிஸ்தானமாயிருக்கத்தக்கவர்.
12 மிக்கமகிழ்ச்சியுள்ளவர்.
13 விசேஷஸந்தோஷமுள்ளவர்.
14 'கிலகில' என்னும் த்வனி வடிவமாயிருப்பவர்.
15 சயனிக்கிறவர்.
16 சயனஞ்செய்தவர்.
17 மேலுந்திருந்தவர்.
18 நிற்பவர்.
19 ஓடுகிறவர்.
20 சடைகளுள்ளவர்.
21 பிராயத்தால் பெரியவர்.
22 குணங்களால் சிறந்தவர்.

1 கல்யரும் 2கூஷ்யரும் 3உபகூஷ்யருமான உமக்கு நமஸ்காரம். அச்சத்தைத் தருவதும் துக்துபியொலிபோன்றதுமான சிரிப்புள்ளவரும் பயங்கரமான விரதத்தைத் தரிப்பவரும் உக்ருமான உமக்கு எப்பொழுதும் நமஸ்காரம். பத்துக்கைகளுடைய உமக்கு நமஸ்காரம். மண்டையோட்டைக் கையிலுடையவரும் சிதையிலுள்ள பஸ்மத்தில் பிரியமுள்ளவரும் 4ஷிபிஷ்டரும் 5பிஷ்டருமான உமக்கு நமஸ்காரம். 6 பீமரே! சமமுதலான விரதங்களைத்தரிக்கின்ற உமக்கு நமஸ்காரம். விகாரமான முகமுள்ளவருமே கதிபோன்ற காவள்ளவரும் 7தப்ஷ்டரியும் யாகத்தில் புக்வமாயும் சமானத்தில் பசுவையாயுமிருக்கிற மாம்ஸத்தில் ஆசையுள்ளவரும் சுரைக்காய் வீணையில பிரியமுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். 8 வ்ருஷரும் 9வ்ருஷ்யரும் நந்திரூபரும் 10வ்ருஷரும் 11கடங்கடரும் தண்டரும் 12பசுபசருமான உமக்கு நமஸ்காரம். எல்லாவற்றிற்கும் மேலானவரும் வரதருமான உமக்கு நமஸ்காரம். சிறந்தவைகளான மாலை கந்தம் வஸ்திரம் இவற்றையுடையவரும் வரத்திற்கெல்லாம் மேலான வரத்தை அளிக்கின்றவருமான உமக்கு நமஸ்காரம். ஆசையுள்ளவர் ஆசையற்றவரென்னும் இரண்டு உருவமாயிருப்பவரும் 13பாவகரும் ருத்ராக்ஷமாலையுள்ளவரும் 14லம்பிங்கரும்15விபிங்கரும் 16சாயரும் 17ஆதபனருமான உமக்கு நமஸ்காரம். கோரமில்லாததும் கோரமுமான ரூபமுள்ளவரும் கோரமாயும் அதிகோரமாயுமிருப்பவருமான உமக்கு நமஸ்காரம். சிவரும் சாந்தரும் மிகவும் சாந்தரும் ஒருகாலுள்ளவரும், அநேகம் கண்களுடையவரும் ஒரு சிரமுள்ளவரும் 18ருத்ரரும் (கபாலமுதலிய) அற்பவஸ்துக்களில் ஆசையுள்ளவரும வேறுகப் பிரிந்திருப்பதில் பிரியமுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். 19பஞ்சாலரும வெளுத்த அங்கங்களுடையவரும் 20சமசமரும்மான உமக்கு நமஸ்காரம். உக்ரமான கண்டாமணியுள்ளவரும் 21கண்டரும் கண்டையில்லாதவராயினும்

1 ஸமர்த்தர்.
2 மஹாப்ரளயமாயிருப்பவர்
3 இடையிலுள்ள பிரளயமாயிருப்பவர்.
4 பயமற்றவர்.
5 பயங்கரர்.
6 பயங்கரர்.
7 கோரப்பற்களுள்ளவர்.
8 மழையைச்செய்பவர்.
9 தர்மத்துக்குஹிதமானவர்.
10 தர்மமாயிருப்பவர்.
11 எப்பொழுதும் செல்லுகிறவர்.
12 எப்பொழுதும் பிராணிகளைப் பாகஞ் செய்பவர்.
13 தியானஞ்செய்கிறவர்.
14 காரணரூபமாக எங்கும் கலந்தவர்.
15 கார்யரூபமாக வெவ்வேறுயிருப்பவர்.
16 நிழலாயிருப்பவர்.
17 வெயிலாயிருப்பவர்.
18 ரோகத்தைநிவருத்திப்பவர்.
19 லீச்வர்மர்.
20 எப்பொழுதும் சமகுணமுள்ளவர்.
21 மணியின் ஓசையாயிருப்பவர்.

கண்டாகரத்துடன் கூடினவரும் ஆயிரம் போர்களால் வாசிக்கப்பட்ட கண்டைகளையுடையவரும் கண்டாமாலையில பிரியமுடையவரும் பிராணனையே கண்டையாகவுடையவரும் கந்தரும் கலகலருமான உமக்கு நமஸ்காரம். குரோதத்தின் முடிவான சமஸ்வரூபரும் பூராதிலோகங்களின் முடிவான பிரம்மரூபரும் நாமரூபபிரபஞ்சத்திற்குக் காரணமான ஈச்வராதிஷ்டான பிரம்மரூபரும் துரியப்ரம்மமூமான உமக்கு நமஸ்காரம். பூராதிலோகம் நாமரூபப்ரபஞ்சம் அதன்காரணமான ஈச்வரர் இவைகளில் பிரியமுடையவரும் மிகவும் சமதத்தை அடைகின்றவரும் எப்பொழுதும் மலைகளையும் விருக்ஷங்களையும் இருப்பிடமாகவுடையவருமான உமக்கு நமஸ்காரம். வைபவில் நிரோல ஆசையுள்ளவரும் [1]தாரகரும் [2]தரும் யஜ்ஞரும் [3]யஜ்ஞியும் [4]ஹ-ஹரும் [5]ப்ரஹ-ஹரூமான உமக்கு நமஸ்காரம். [6]யஜ்ஞவாஹரும் [7]தாங்தரும் [8]தப்யரும் [9]ஆதாகருமான உமக்கு நமஸ்காரம். [10]தடரும் [11]தட்யரும் ஸமுத்திரமுமான உமக்கு நமஸ்காரம். [12]அங்தரும் அன்னத்திற்குப் பதியும் அன்னதானத்தை அருந்துகின்றவருமான உமக்கு நமஸ்காரம். ஆயிரந்தலைகளுடையவரும் ஆயிரம் பாதங்களுடையவருமான உமக்கு நமஸ்காரம். உயரத்தூக்கப்பட்ட ஆயிரம் சூலாயுதமுடையவரும் ஆயிரம் நேத்திரங்களுடையவரும் பாலஸூர்யன் போன்ற நிறமுள்ளவரும் பாலனுடைய ரூபத்தைத் தரிக்கின்றவருமான உமக்கு நமஸ்காரம். [13]பாலர்களான சினேகிதர்களை சகஜிக்கின்றவரும் பாலலீலையாட்டுடன்கூடியவரும் வருத்தரும் [14]லுப்தரும் [15]கூ-ட்டரும் [16]கூரபணருமான உமக்கு நமஸ்காரம். அலைகளால் அடையாளம் செய்யப்பட்ட கேசத்தையுடையவரும் தர்ப்பைபோன்ற கேசத்தையுடையவருமான உமக்கு நமஸ்காரம். யஜனமுதலான ஆறு கர்மங்களிலும் ஸந்தோஷமுடையவரும் யஜனம் அத்யயனம் தானம் என்கிற மூன்றுகர்மங்

---

1 கறையேற்றுபவர்.
2 கரையேறக்காரணர்.
3 யாகஞ்செய்கிறவர்.
4 பிராம்மணன்முகமாக த்ருப்தி அடைகிறவர்.
5 அக்னிமுகமாக த்ருப்திபடைகிறவர்.
6 யஜ்ஞத்தை நிறைவேற்றும் ரித்விக்குமுதலானவர்களாயிருப்பவர்.
7 ஜிதேந்திரியர்.
8 ஸத்வமயர்.
9 ரஜோமயர்.
10 கரையாயிருப்பவர்.
11 நதியாயிருப்பவர்.
12 அன்னமளிப்பவர்.
13 'இதனால் பாலகிருஷ்ணரூபமாக லீலைசெய்தவர் என்பது ஸூசிக்கப்பட்டிருக்கிறது' என்பது பழைபவுரை.
14 ஆசைகொண்டவர்.
15 கலங்கினவர்.
16 கலக்குகிறவர்.

களில் பற்றுதலுள்ளவருமான உமக்கு நமஸ்காரம். விதிப்படி வர்ணசாமங்களுடைய தனித்தனி கர்மங்களிலிருக்கின்ற உமக்கு நமஸ்காரம். [1]குஹ்யரும [2]கோஷ்டரும் கலகலருமான உமக்கு நமஸ்காரம். வெளுப்பாயும் பொன்னிறமாயுமுள்ள கண்களையுடையவரும் கறுப்பாயும் சிவப்பாயுமுள்ள விழிகளையுடையவரும் சவாஸத்தை ஜயித்தவரும் [3]தண்டரும [4]ஸ்போடகரும க்ருசரும தர்மம் காமம் அர்த்தம் மோக்ஷம் இவைகளில் சொலலகூடிய கதைகளையுடையவரும் [5]ஸாங்கிய்ரும் ஸாங்கியர்களில் முக்கியரும வேதாந்தவிசாரத்தையும் தியானத்தையும அனுக்ரஹித்து நடத்துகின்றவருமான உமக்கு நமஸ்காரம். தேர் ஏறவும் தேரிலாதிருக்கவும் தக்கவரும் நான்குமார்க்கங்களிலும் ரதமுடையவரும மான்தோலை உத்தரீயமாகவுடையவரும் ஸாப்பயஜ்ஞோபவீதமுடையவருமான உமக்கு நமஸ்காரம். ருசாங்கரே! வஜ்ரம்போன்ற சரீரசேர்க்கையை உடையவரே! மஞ்சள் நிறமான கேசமுடையவரே! உமக்கு நமஸ்காரம். மூன்று கண்ணுடைய அமபிகைக்கு நாதரான உமக்கு நமஸ்காரம். வயாதரே! [7]அவ்யக்தரே! உமக்கு நமஸ்காரம். காமரே! [8]காமதரே! [9]காமகரே! திருப்தியடைந்த பிரம்மத்தையும் திருப்தியடையாத ஜகத்தையும விசாரிக்கின்ற உமக்கு நமஸ்காரம் ஸர்வரே! ஸர்வதரே! [10]ஸர்வகரே! ஸ்ருஷ்டியாகாலத்திலுண்டாகும் சிவப்புவர்ணமாயிருப்பவரே! உமக்கு நமஸ்காரம். பெரிய பலமுடையவரே! பெரியகைகளுள்ளவரே! விரிவான புத்தியையுடையவரே! பெரிய காந்தியுள்ளவரே! பெரியமேகங்களின் கூட்டத்திறகு நிகரானவரே! மஹாகாலரூபியே! ஸ்தூலரே! ஜீர்ணமான அங்கங்களுடையவரே! [11]ஜடையுள்ளவர்போல முடிப்பவரும் மரவுரியையும் புலித் தோலையும் தரிக்கிறவரும் பிரகாசிக்கின்ற ஸூர்யனும் அக்னியும்போன்ற ஜடைகளுள்ளவரும் மரவுரி மான் தோல்களை ஆடையாகவுடையவருமான உமக்கு நமஸ்காரம். ஆயிரம் ஆதித்யர்களுக்குநிகரானவரே! தவத்தை நித்யமாகவுடையவரே! [12]உக்ரதாரரே! உமக்கு நமஸ்காரம். அதிகமாக சுழிகளுள்ள கபாலஜடத்தினால் கனைத்தகேசமுடையவரே! சந்திரனை மாலி மாலி உண்டாகச

1 கோஷிககோத்தக்கவர்.
2 கோஷ்டரூபி.
3 தண்டமென்னும் ஆயுதரூபி.
4 பிளக்கிறவர.
5 கபிலராயிருப்பவர்.
6 கார்யரூபி.
7 காரணரூபி.
8 காமத்தையளிப்பவர்.
9 மன்மதனைக்கொன்றவர்.
10 எல்லாவற்றையும்ஸம்ஹரிப்பவர்.
11 'ஜடிலே' என்பது மூலம்.
12 மயக்குகிறவர்.

செய்கிறவரே! யுகங்களைத்திருப்புகிறவரே! மேகங்களைத்திரும்பச் செய்கிறவரே! உமக்கு நமஸ்காரம். நீரே அந்நம்; [1] அத்தா; [2] போக்தா; [3] அந்தர்; அந்நபுக்; அந்நத்தைஸ்ருஷ்டிக்கிறவர்; [4] பக்தா; [5] பக்வபுக்; பவநர்; அநலர்; ஜராயுஜங்களர்; அண்டஜங்கள்; ஸ்வேதஜங்கள்; உத்பிஜ்ஜங்களாயிருக்கிறீர். தேவரே! தேவசரே! சாங்குவிதமான பிராணிகளுடைய ஸமூகமாயிருக்கிறவரும் நீரே. ஸ்தாவரஜங்கமங்களை ஸ்ருஷ்டிப்பவரும் ஸம்ஹரிப்பவரும் நீரே. பிரம்மவித்துக்களுள் சிறந்தவரே! உம்மைப்பிரம்மவித்துக்கள் பிரமமமர்கச சொலலு கின்றனர். நீரே மனத்திற்கு முக்கியமான காரணம. ஆகாயமும் வாயுவும் ஒளிகளுக்கு நிதியுமாயிருக்கிறீர். பிரம்மவித்துக்கள் உம்மை ரிக்காகவும் ஸாமமாகவும் ஓங்காரமாகவும் சொல்லுகிறார்கள். தேவ சரேஷ்டரே! உம்மை, 'ஹாயிஹாயி' என்றும், 'ஹாவாஹாயி' என்றும், 'ஹாவுஹாயி' என்றும் பிரம்மவாதிகளானஸாமகர்கள் அடிக்கடி கானஞ் செய்கின்றார்கள். வேதத்திலுள்ள உபநிஷத்ஸமூகங்களான துதிகளால் நீர் யஜுர்வேதமயமாயும் ருக்வேதமயமாயும் ஆருதிமயமாயும் சொலலபபடுகிறீர். பிராம்மணாகளும் க்ஷத்ரியர்களும் வைசயாகளும் சூதரர்களும் ஸங்கரஜாதியாகளும் நீரே. மேகக்கூட்டங்களும் [6] வித்யுத்தும் [7] ஸ்தநித்நுமும் [8] கர்ஜித்நுமும் நீரே. ஸம்வத்ஸரமும் ருதுக்களும் மாஸமும் பக்ஷமும் யுகமும் நிமேஷங்களும் கடிகைகளும் நக்ஷத்திரங்களும் கிரகங்களும் கலைகளும் நீரே. நீர் விருக்ஷங்களுள் முக்கிய விருக்ஷங்களும் பாவதங்களுடைய கொடிமுடிகளும் மிருகங்களுள புலியும் பக்ஷிகளுள் கருடனும் ஸர்ப்பங்களுள்சேஷனும் ஸமுத்திரங்களுள் பாற்கடலும் யக்திரங்களுள வில்லும் ஆயுதங்களுள் வஜ்ரமும் வ்ரதங்களுள் ஸத்யமுமாயிருக்கிறீர். த்வேஷமும் இச்சையும் ராகமும் மோஹமும் க்ஷமையும் அக்ஷமையும் வ்யவஸாயமும் த்ருதியும் லோபமும் குரோதமும் ஜயமும் அஜயமும் நீரே. நீர் [9] கத்தி. நீர் [10] சரி; [11] சாபி; [12] கடவாங்கி; [13] ஜர்ஜ்ஜரி. நீர [14] சேத்தா; [15] பேத்

1 உண்பவர்.
2 போகங்களை அனுபவிப்பவர்.
3 அந்நத்தைக்காப்பவர்.
4 சமைப்பவர்.
5 பக்வமானவைகளை உண்பவர்.
6 மின்னல்.
7 மழையுடன்கூடியமேகஒலி.
8 மழையில்லாதமேகஒலி.
9 கதாயுதமுள்ளவர்.
10 அம்புள்ளவர்.
11 வில்லுள்ளவர்.
12 கட்வாங்கமென்னும் ஆயுதமுள்ளவர்.
13 ஜர்ஜ்ஜரவாத்யமுள்ளவர்.
14 வெட்டுபவர்.
15 பிளப்பவர்.

தா; [1]ப்ரஹர்த்தா; [2]நேதா, [3]மந்தா; பிதாவாகநினைக்கப்பட்டவர். (யமம்ஐந்து நியமம் ஐந்துஆக) பத்துலக்ஷணங்களுள்ள தர்மமும அர்த்தமும் காமமும நீரே. சுவகையும ஸமுத்திரங்களும் நதிகளும் [4]பல்வலங்களும [5]ஸரஸ-ுகளும நீரே [6]லதைகளும் [7]வல்லிகளும் த்ருணங்களும் ஓஷதிகளும் பசுக்களும் மிருகங்களும் பக்ஷிகளும் திரயிகர்மங்களின்ஸமாரம்பமும புஷ்பங்களையும் பலங்களையும் கொடுக்குங்காலமும் நீர. தேவர்களுடைய ஆதியும் அந்தமும் காயத்ரியும் ஓங்காரமும் நீரே. [8]ஹரிதமும ரோஹிதமும் நீலமும் க்ருஷ்ணமும் ரக்தமும் அருணமும் கதருவும் கபிலமும் கபோதமும் மேசகமும் நீர. நீர [9]அவாணரும் [10]ஸ-வாணரும் வர்ணதைச செய்கின்றவரும் மேகத்திற்குங்காரணவரும் ஸ-வர்ணரென்றுபெயருடையவருமான ஸ-வர்ணத்தில பிரியமுள்ளவருமாயிருக்கிறீர. இந்திரனும் யமனும் வருணனும் [11]தநதனும் அநலனும [12]உபபலிவமும சித்ரபாநுவும் [13]ஸ்வரபாநுவும் பாநுவும்நீரே. [14]ஹோத்ரமும [15]ஹோதாவும் [16]ஹோம்யமும [17]ஹுதமும [18]பரபுவும் தர்ஸ-பர்ணமாஸத்ரத்தில துதிக்கப்படடவரும் யஜ-ாவேதத்தில்உள்ள சதருத்ர நாமமான வேதரூபியும் நீரே. நீர பலித்தாங்களுக்குப பலித்தாரும மங்களாங்களுக்கெல்லாம மங்களமும [19]நிதநம [20]ஹிண்டிகரும வநஸ்பதியும ஜீவரும [21]புத்கலமாயிருக்கிறீர. ப்ராணரும ஸத்வமும ரஜஸ-ும தமஸ-ும [22]அபரமதரும பிராணனும் அபாநனும ஸமாநனும உதாநனும விபாநனும் நீரே. [23]உந்மேஷமும [24]நிமேஷமும [25]க்ஷ-ுதமும [26]ஜ்ருமபிதமும நீரே. நீர சிவப்பாயும உள்ளடங்கினதாயுமிருக்கிற திருஷ்டியையுடையவரும பெரிய முகமுடையவரும பெரியவயிறுடையவருமாயிருக்கிறீர. நீர ஊசிபோன்றரோமங்க

---

1 அடிப்பவர்.
2 நடத்துகிறவர்.
3 மனனஞ்செய்பவர்
4 குட்டைகள்.
5 ஏரிகள்.
6 பெரியசெடிகள்.
7 சிறுகொடிகள்.
8 இதுமுதல் பத்துநாமங்கள் வர்ணவிசேஷங்கள்
9 வர்ணமில்லாதவர்.
10 நல்லவர்ணமுள்ளவர்.
11 குபேரன்.
12 நாகணம்.
13 ராகு.
14 அக்னி.
15 ஹோமஞ்செய்கிறவர்.
16 ஹோமத்துக்குத்தக்கஹவிஸ்.
17 ஹோமம்செய்யப்பட்ட ஹவிஸ்.
18 ஹோமபலனையளிக்கும் ஈச்வரர்.
19 மலைபோல ஜடமான சரீரத்தைச் சப்திக்கச்செய்கிறவர்.
20 போதல்வருதலைச் செய்பவர்.
21 சரீரம்.
22 பத்தியில்லாதவர்.
23 கண்ணைத்திறப்பது.
24 கண்ணைமூடுவது.
25 தும்முதல்.
26 கொட்டாவி.

ளுள்ளவர்; செம்மட்டை நிறமான மீசையுள்ளவர்; உயரக்கிளம்பின கேசத்தையுடையவர்; மிகவும் சலிக்கிறவர்; கானவாத்தியங்களின் உண்மையை அறிந்தவர்; கானம் வாத்யம்வாசித்தல் இவைகளில் பிரியமுடையவர். நீர 1மத்ஸ்யரும் 2ஜலசரரும் 3ஜால்யரும் 4அகலரும் லீலைக்காகவே ஸம்ஸாரத்தை அடைகிறவரும் 5கலியும் 6அகாலரும் 7அதிகாலரும் 8துஷ்காலரும் காலரூபமாயிருக்கிறீர். நீர் ம்ருத்யுவும் 9க்ஷுத்பரமும் 10க்ருத்யரும் 11பக்ஷரும் சத்துருக்களை க்ஷயம்செய்கிறவரும் மேககாலரும் பெரியதெற்றிப்பற்களுடையவரும் பிரளயகால மேகரூபமாக இருக்கிறீர். நீர 12கண்டரும் 13அகண்டரும் 14கடியும் கண்டியும் 15சருசேலியும் 16மிலீமீலியும் 17ப்ரம்மமும் அக்னிகளுடைய பாதிசசரீரமான ஸ்வாஹாரூபியும் 18தண்டியும் 19முண்டரும் மூன்றுதண்டமுடைய யதியுமாக இருக்கிறீர்; நான்குயுகமும் நான்கு வேதமும் அத்வர்யுமுதலானவர்களுடைய நான்கு கர்மங்களை நடத்துகிறவரும் நான்கு ஆசரமங்களையும் நடச்சும்படி செய்கிறவரும் நான்கு வர்ணங்களையும் செய்கிறவருமாயிருக்கிறீர். எப்பொழுதும சொக்கட்டானில பிரியமுடையவரும் 20தூர்த்தரும் கணங்களுக்குப்பிரபுவும் கணங்களை ரக்ஷிக்கிறவரும் சிவப்பான மாலையையும் வஸ்திரத்தையும் தரிக்கிறவரும் 21கிரிசரும் சுஷாயகளில் பிரியமுடையவருமாயிருக்கிறீர். நீர 22சில்பிகர்; சில்ப வேலைக்காரர்களில் மேலானவர்; எல்லாச சில்பங்களையும் நடத்துகிறவர்; பகனென்கிற ஸூர்யனுடைய நேத்திரத்திறகு அங்குசமாயிருக்கிறவர்; சண்டர்; பூஷாவென்கிற ஸூர்யனுடைய பறகளை உதிர்த்தவர். நீர் ஸ்வாஹா; ஸ்வதா; வஷட்கார-ம; நமஸ்காரம; நமஸ்காரம ; ஸிஷ்டாகளால் சொல்லப்படும், 'நமோநம :' என்னும் நமஸ்காரமாயிருப்பவர்; ரகஸ்யமான விரதங்களையுடையவர்; ரகஸ்யமான தவத்தையுடையவர்; 23தாரகர்;

1 மத்ஸ்யம்போன்ற ஜீவரூபி.
2 ஸம்ஸார நதி ஜலத்தில் ஸஞ்சரிப்பவர்.
3 ஸம்ஸாரவாஸனையாகியவலையில் கட்டப்பட்டவர்.
4 அடக்கமுடியாதவர்.
5 கலிரூபர்.
6 காலமற்றவர்.
7 காலத்தைத்தாண்டினவர்.
8 கெட்டகாலமாயிருப்பவர்.
9 கூரியகத்தி.
10 வெட்டத்தக்கவர்
11 மித்ரர்.
12 பிரகாசிப்பவர்.
13 மாயையால் மறைக்கப்பட்டவர்.
14 ஜீவர்களைக் கர்மபலன்களுடன் சேர்ப்பவர்.
15 சராசரங்களால் விளையாடுபவர்.
16 எப்பொழுதும் கார்யவர்க்கங்களில் அனுப்ரவேசித்திருப்பவர்.
17 ப்ரணவம்.
18.19 இவற்றுல் பரமஹம்ஸர் சொல்லப்படுகிறார்.
20 சூதாடுகிறவர்.
21 மலையில் சயனிப்பவர்.
22 அல்ப சில்பி.
23 ப்ரணவர்.

நக்ஷத்திரங்களால் ஜியாபிக்கப்பட்ட ஆகாசம்; [1]தாதா; [2]விதாதா; [3]ஸந்தாதா; [4]விதாதா; [5]தாரயர்; [6]அதரர்; [7]ப்ரம்மா; தபஸ்; ஸத்யம்; ப்ரம்மசர்யம்; ஆர்ஜவம்; [8]பூதாத்மா; [9]பூதக்ருத்; [10]பூதர்; சென்றது நிகழ்கின்றது வருவது என்னும் மூன்றையும் உண்டுபண்ணும் மாயா சபலதத்துக்கு உற்பத்தி ஸ்தானமானவர்; * பூ:; * புவ:; * ஸ்வ:; காணப்படும் பொருள்களைக் காட்டியும் சாசவதர்; [11]தாந்தர்; பிரம்மாமுதலான ஈசவர்களைக் காட்டியும் மேலான மஹேச்வரர்; தீக்ஷிதர்; [12]அதீக்ஷிதர்; [13]க்ஷாந்தர்; மற்றவரால் அடக்கமுடியாதவர்; அடங்காதவர்களை நாசஞ்செய்கிறவர்; சந்த்ரனைத்திருப்புகிற மாஸமானவர்; யுகங்களைத் திருப்புகிற கல்பமானவர்; [14]ஸம்வத்ஸர்; [15]ஸம்பரிவத்ஸர்; [16]காமர்; [17]பிங்கள; அணு; ஸ்தூலர்; காணிகாரமாலையில் பிரியமுடையவர்; கந்தியின் முகம்போன்ற முகமுடையவர்; பயங்கரமான முகமுடையவர்; ஸுமுகர்; துர்முகர்; அமுகர்; நான்கு முகமுடையவர்; அனேக முகமுடையவர்; யுத்தங்களில் அக்கிரமுகர்; ஹிரண்யகர்ப்பர்; [18]சகுனி; பெரிய ஸர்ப்பங்களுக்குப்பதி; விராட்; அதர்மதத்தை அழிக்கிறவர்; பெரிதான பக்கபலத்தையுடையவர்; உக்கிரமான சிக்ஷையைத் தரிக்கிறவர்; கணங்களுக்கு அதிபர்; விருஷபம்போலச் சப்திக்கிறவர்; பசுக்களை ஐங்கடங்களினின்றும் காக்கின்றவர்; விருஷபசரேஷ்டத்தை வாகனமாக உடையவர்; மூன்று உலகங்களையும் ரக்ஷிக்கின்றவரும் கோவிந்தரும் கோக்களின் மார்க்கத்தில் செல்லுகின்றவரும் [19]ஆசார்க்கரும் சரேஷ்டரும் ஸ்திரரும் ஸ்தாணுவும் [20]நிஷ்கம்பரும் [21]கம்பரும் மாயிருக்கிறீர்; தடுக்கமுடியாதவரும் கொடிய ஹாலாஹலவிஷத்தையும் அபகரித்தவரும் (யுத்தத்தில்) ஒருவரால்லும் ஸஹிக்கமுடியாதவரும் அதிக்ரமிக்கமுடியாதவரும் பயமுறுத்தவுமுடியாதவரும்

---

1 ஆதிகர்த்தாவான விஷ்ணு.
2 பௌதிகங்களைஸ்ருஷ்டிக்கும் ப்ரம்மா.
3 ஒன்றுசேர்த்து நிலைநிறுத்துபவர்.
4 ஸம்ஹரிப்பவரான மஹேச்வரரும் புண்யபாப ரூபமான கர்மமும்.
5 எல்லாவற்றையும் தரிக்கும் மூல காரணர்.
6 ஆதாரமற்ற சுத்தப்ரம்மம்.
7 ப்ரம்மவித்.
8 பிராணிகளுக்கு ஆத்மா.
9 பிராணிகளைப்படைப்பவர்.
10 நித்யவித்தர்.
* வ்யாஹ்ருதிகள்.
11 ஜிதேந்த்ரியர்.
12 தீக்ஷிதரல்லாதவர்.
13 பொறுமையுள்ளவர்.
14 ப்ரளயமாயிருப்பவர்.
15 ஸ்ருஷ்டிகாரணர்.
16 பெண்ணைசையுள்ளவர்.
17 வீர்யமாயிருப்பவர்.
18 பக்ஷிபோல ஸங்கமற்றவர்.
19 மார்க்கமற்றவர்.
20 அசையாதவர்.
21 ஆடைபவர்.

ஆசைக்கமுடியாதவரும் பிரவேசிக்கமுடியாதவரும் ஜயிக்கமுடியாதவரும் [1]ஜயருமாயிருக்கிறீர்; [2]சரமும் மூயலை அடையாளமாகவுடைய சந்திரனும் [3]சமகரும் குளிர்ச்சி, உஷ்ணம், பசி, ஜரை, மனோவியாதி இவைகளை செய்கிறவரும் ஆதிகளும் [5]வ்யாதிகளும் வியாதிகளை நிவர்த்திக்கின்றவரும் [6]அவ்யாதியுமாயிருக்கிறீர்; என்னுடைய யாசமாகிய மானுக்கு வேடனாயிருக்கிறவரும் வியாதிகளின் உற்பதத்திக்கு இடமானவரும் வியாதிகளின் லயஸ்தானமானவரும் [7]சிகண்டியும் தாபரைபலிகள் போன்ற நேத்திரங்களுடையவரும் தர்மரை ஓடையை இருப்பிடமாக உடையவருமாயிருக்கிறீர். சிக்ஷையைத் தரிக்கிறவரும் வேதங்களாகிய மூன்று கண்களுடையவரும் உக்கிரமான சிக்ஷை செயகிறவரும் அண்டங்களை நாசஞ்செய்கின்றவரும் விஷமூபமான அக்னியை உண்டவரும் தேவசரேஷ்டரும் ஸோமபானஞ்செய்பவரும் பருதபதியும் நீரே. நீர் அமிருதபானஞ் செய்தவர். ஜகதத்திற்கெலலாம் நாதரே! தேவர்களுக்குத் தேவரே! கணங்களுக்கு ஈசவரும் விஷாக்னியினின்று ரக்ஷித்தவரும் மிருத்யுவைப் பானஞ்செய்தவரும க்ஷீரத்தைப்பானஞ் செய்கிறவரும் ஸோமபானம் செய்கிறவரும ஸ்வர்க்காதி ஸுகத்திலிருந்து கழுவினவர்களை முந்திக் காக்கின்றவரும நீரே. தேவர்களுக்கு முந்தின வரான பிரமமாவைக் காக்கின்றவரும நீரே. [8]ஹிரண்யரேதஸும் புருஷரும் நீரே. ஸ்திரீயும் நீரே. புமானும் நீரே. அலியும் நீரே. பாலரும் யுவாவும [9]ஸ்தவிரரும தந்தம் உதிர்ந்தவரும நீரே. ஐராவதமும இந்திரனும் எலலாவறறையும படைப்பவரும் எலலாவற்றிற்கும சர்தாவும நீரே. விசவத்தை ஸம்ஹரிக்கின்றவரும் விசவத்தைச செய்கிறவர்களான பிரமாதிகளுக்கும் பூஜ்யரும் விசவத்தை வஹிக்கின்றவரும விசவரூபியும் தேஜஸ்வியும் எலலாம் முகமுடையவரும ஸூர்ய சந்திரர்களை நேத்திரங்களாக உடையவரும பிரமமணியே ஹ்ருதயமாகவுடையவரும நீரே. நீர் பெருங்கடலும [10]ஸரஸ்வதியும் வாக்கும [11]பலமும அதலமும அகிலமும் பகைவிரவுகளும் பிராணிகள் கண்களை மூடிவது திறப்பதென்னும் கர்மங்களையுடையவருமாயிருக்கிறீர். சிவபெருமானே! உம்முடைய மஹி

---

1 வெற்றிவிடவுமானவர்
2 மூயல்போல வேகமாகச் செல்லுபவர்.
3 யமன்.
4 மனோவியாதிகளாயிருப்பவர்.
5 சரீரவியாதிகளாயிருப்பவர்.
6 வியாதியற்றவர்.
7 மயில்தோகையுள்ளவர்.
8 அக்னி.
9 கிழவர்.
10 ஸரஸ்வதியென்னும் நதி.
11 வைராக்கியம்.

மையை உள்ளபடி அறிவதற்குப் பிரம்மாவும் சக்தரல்லர்; விஷ்ணுவும் சக்தரல்லர்; முன்னோர்களான பிரஸித்திபெற்ற ரிஷிகளும் ஸமர்த்தர்களல்லர். மிகவும் ஸூக்ஷ்மமான உம்முடைய மூர்த்திகள் எனக்குத்தெரியா. ஏன்னை ரக்ஷியும். பிதாவானவன் ஔரஸபுத்திரனை ரக்ஷிப்பதுபோல என்னை எப்பொழுதும் ரக்ஷியும். மாசில்லாதவரே! என்னை ரக்ஷியும். நான் உம்மால் காக்கப்படத்தக்கவன். உமக்கு நமஸ்காரம். பகவானுடைய பக்தர்களிடம் தயையுள்ளவர். நான் உம்மிடத்தில் எப்பொழுதும் பக்தியுள்ளவனுமிருக்கிறேன்.. எவர் அநேகமாயிரம வருஷம் புருஷர்களை அஜ்ஞானத்தினால் மறைத்துப் பார்க்க அரியரும் ஏகருமாகி 1 ஸம்ஸார ஸமுதாயத்தின் அக்கரையில் இருக்கின்றாரோ அவர் என்னை எப்பொழுதும் ரக்ஷிக்க வேண்டும். எங்கள சித்ஜோதியை நித்திரையை விட்டவர்களும சவாஸத்தை ஜயித்தவர்களும ஸத்வகுணத்திலிருப்பவர்களும இந்திரியங்களை அடக்கியவர்களுமான யோகிகள் பார்க்கின்றார்களோ யோக ரூபமான அவருக்கு நமஸ்காரம். ஜடையுடையவர்போல கடிக்கிற வரும் தண்டமுள்ளவரும தொங்குமவயிறுடைய சரீரமுள்ளவரும கமண்டலுவையே அம்பறாத்தூணியாகக் கொண்டவரும சதுர்முக ரூபியுமான அவருக்கு எப்பொழுதும நமஸ்காரம். எவருடைய கேசங்களில் மேகங்களும எல்லா அவயவங்களுடைய ஸந்திகளிலும் நதிகளும் உதரத்தில் நான்கு ஸமுத்திரங்களுமிருக்கின்றனவோ ஜல ரூபியான அவருக்கு நமஸ்காரம. யுகதர்மம் முடிவில் எல்லாப் பிராணிகளையும பக்ஷித்துவிட்டு எவர் ஜலத்தில் சயனஞ செய்கிறாரோ ஜலத்தில சயனித்த அவரை நான் சரணமடைகிறேன். எவர் ராகுவின் வாயில புகுந்து ராதரியில சந்திரனைப் பானஞ செய்கிறாரோ, ராகுவாகி ஸூர்யனையும் விழுங்குகின்றாரோ அவர் என்னை ரக்ஷிக்கடமம. ஸ்ருஷ்டிகளை அழிக்கிற வக்தாக்களும சிவக்கள் போன்றவர்களுமான எவர்கள தமக்குரிய பாகங்களை அடைகின்றார்களோ அவர்களுக்கு நமஸ்காரம. அவர்கள, 'ஸ்வதா, ஸ்வாஹா' என்னும சப்தங்களால் கொடுக்கப்படும ஹவ்யகவ்யங்களால ஸந்தோஷத்தை அடையட்டும. கடைசியில் அனவரத எத்தப் புருஷர்கள் எல்லாத் தேகிகளுடைய தேகங்களிலுமிருக்கின்றார்களோ அவர்கள் என்னை எப்பொழுதும்ரக்ஷிக்கட்டும். எப்பொழுதும்என்னைத் திருப்தி செய்யட்டும். எவர்கள் தேகத்திலிருந்துகொண்டு காம அமர்மல் தேகிகளை அழச்செய்துகொண்டும் அவர்களை மகிழவியாமல் தாம்

1 'காமங்கள் நசித்தபொழுது பிரகாசிக்கிறாரோ' என்பது பழையவுரை.

மகிழ்ந்து கொண்டுமிருக்கின்றார்களோ அவர்களுக்கு நித்யம் நமஸ்காரம். நதிகளிலும் ஸமுத்திரங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் மரத்தினடிகளிலிலும் கொட்டில்களிலும் காட்டிலும் பிரவேசிக்கமுடியாத இடங்களிலும் நாற்சந்திகளிலும் ரதவீதிகளிலும் முற்றங்களிலும் கரைகளிலும் கஜசாலைகளிலும் குதிரைச்சாலைகளிலும் தேர்ச்சாலைகளிலும் அழிந்த தோப்புக்களிலும் இடிந்த ஆலயங்களிலும் எவர்களிருக்கின்றார்களோ, ஐந்து பூதங்களிலும் நிக்குக்களிலும் வீதிக்குக்களிலும் எவர்களிருக்கின்றார்களோ, சந்திரசூரியர்களின் இடையில் எவர்கள் அடைந்திருக்கின்றார்களோ, எவர்கள் 'சந்திர ஸாமிர்யர்களுடைய கிரணங்களிலிருக்கின்றார்களோ, எவர்கள் பாதாளத்தை அடைந்திருக்கின்றார்களோ, எவர்கள் அதற்கும் அப்புறத்தை அடைந்திருக்கின்றார்களோ அவர்களுக்கு எப்பொழுதும் நமஸ்காரம். அவர்களுக்கு நமஸ்காரம். அவர்களுக்கு நமஸ்காரம். எவர்களுக்கு எண்ணிக்கையும் அளவுமில்லையோ, ரூபமுமில்லையோ, எந்த ருத்ரர்கள் எண்ணிக்கையற்ற குணங்களுள்ளவர்களோ அவர்களுக்கு நித்யம் நமஸ்காரம். நீர் எல்லாப் பிராணிகளையும் படைத்கின்றவரும் எல்லாப்பிராணிகளையும் காக்கின்றவரும் ஸம்ஹரிக்கின்றவரும் எல்லாப் பிராணிகளுக்கும் அந்தராத்மாவுமாயிருத்தலால் அழைக்கப்படவில்லை. நீரே நானாவித தக்ஷிணைகளுடைய யாகங்களால் பூஜிக்கப்படுவதனாலும், எல்லாவற்றையும் செய்வதனாலும் நீர் அழைக்கப்படவில்லை. தேவரே! அல்லது, ஸூக்ஷ்மமான உம்முடைய மாயையினால் மயக்கப்பட்டேன். முன்சொன்ன காரணத்தினாலாவது இந்தக்காரணத்தினாலாவது நீர் அழைக்கப்படவில்லை. எனக்கு அருள் செய்யும். உமக்கு மங்களமுண்டு. தியானத்தை அடைந்தவனை எனக்கு நீர் (முன்) வரவேண்டும். தேவரே! என்னுடைய ஹ்ருதயமானது உம்மிடமிருக்கவேண்டும். புத்தியும் உம்மிடமிருக்கவேண்டும். மனமும் உம்மிடமிருக்கவேண்டும்' என்றான்.

இவ்விதம் ஸ்ருஷ்டிகர்த்தனை தக்ஷன் மஹாதேவரைத்துதித்து விட்டு நின்றான். பகவானும் மிகவும் பிரீதியடைந்து மறுபடியும் தக்ஷனை நோக்கிச சொல்லலானார். 'நல்லவ்ரதத்தையுடையவனே! தக்ஷ! உன்னுடைய இந்த ஸ்தோத்திரத்தினால் மிகவும் சந்தோஷமடைந்தேன். இதுவிஷயத்தில் அநேகமாகச் சொல்லுவானேன்? என்னுடைய பக்கத்திலிருக்கப்போகிறாய். பிரஜைகளுக்குப் பதியே! எனதருளால் ஆயிரம் அச்வமேதங்கள் நூறுவாஜபேயங்கள் ஆகிய இவற்றின் பயனை அடைவாய்' என்றார். மேலும், 'உலகத்திற்கு

அதிபதியான ராசவர் இந்தத் தக்ஷனைநோக்கி ஆறுதலைச்செய்வதும் சொல்லக்கூடியதும் வாக்கியத்தை அறிந்தவர்களுடைய வாக்கியத்திற்கு ஸமமுமான ஒரு வசனத்தைச சொல்லலாஞர். 'ஓ! தக்ஷ! தக்ஷ! இந்த விக்னத்தைக் குறித்துக் கோபிக்கவேண்டாம். நான்உன்னுடைய யாகத்தை அழிக்கிறவன். இது முன்சலபத்திலும் நடந்ததாகக் காணப்பட்டது. கல்லல்வரதமுடையவனே! உனக்கு வேண்டியவரையில் வரத்தை அளிக்கிறேன். அதை நீ பெற்றுக்கொள். இப்பொழுது பிரஸன்னமான முகத்தையுடையவனும ஒரே மனமுள்ளவனுமாயிருக்துகொண்டு அதைக் கேள அனுஷ்டிக்க அரிதாயும் விரிவாயுமிருக்கிற தவமானது தேவாகளாலும அஸுராகள்ாலும் ஆறு அங்கஙகளுள்ள வேதத்திலிருந்தும ஸாங்கியத்திலிருந்தும யோகத்திலிருந்தும் யுத்தியிலை எடுத்து நன்முசச செய்யபபட்டது. தக்ஷனே! நாதனமும் செய்யுமகாலம முடிசகுங்காலம ஆகிய எப்பொழுதும் மங்களமும் எல்லாவர்ணசரமங்களுக்கும பொதுவும நசமில்லாதும் அனேகமவருஷம யமநியமஙகளபத்தாகிற யாகஙகளோடு கூடியதும ரகஸ்யமும மூடர்களால நிநதிக்கபபடடதும சிலவிஷயத்தில் வாணசரமதர்மஙகளுக்கு மாறபடடதும சிலவிஷயத்தில் ஒத்ததும ஸித்தாந்தத்தை அறிந்தவர்களால தீரமானிச்சப்பட்டதுமான அத்யாசரமமாகிற இந்தப் பாசுபதமென்கிற சுபமான விரதமானது முன்சாலத்தில என்னால் உண்டுபண்ணப்பட்டது. அது நன்கு அனுஷ்டிக்கபபட்டால் அந்தப்பலன் புஷ்கலமாக உண்டாகிறது. ஓ! மிக்கபாக்கியம பெற்றவனே! அந்தப் பயன் உனக்கு உண்டாகட்டும். மனத்தின் கொதிப்பை விடடுவிடு' என்ஞர். அளவற்றபராக்ரமமுளள மஹாதேவர் இவ்விதம் சொல்லிவிடடுப் பதனியோடும் பரிவாரஙகளோடும் தக்ஷனுக்குத தெரியாமல மறைந்தார். தக்ஷனால் சொல்லப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தைப படிப்பவனும் கேட்பவனுமான மனிதன் ஒருவிதமான அமங்களத்தையும அடையமாட்டான்; தீரக்காயுளையுமடைவான். எலலாததேவர்களிலும் ஸர்வஜ்ஞரான சங்கரர் மிகசிறந்தவராயிருப்பதுபோல வேதத்திற்குச் சமமான இந்த ஸ்தோத்திரம் எலலாஸ்தோத்ரஙகளிலும் மிகசிறந்தது. புகழ், ராஜ்யம், ஸுகம, ஐசவரியம, போகத்துச்சுரிய பொருள், தனம் இவைகளை விரும்பியவாகளாலும விருத்தியை விரும்புகிறவர்களாலும் பக்தியை அடைந்து முயறசியுடன் சேட்கத்தக்கது. நோயுற்றவனை துக்கத்தையடைந்தவனை ஏழையை திருடர்களிடம் அகப்பட்டவனை பயத்தினால் பிடிக்கப்பட்டவனை ராஜகாரியத்தில்

ஸ்ரீ மஹாபாரதம்.

பிரவ்ருத்திததவலே எவனுலும் பெரிய பயத்திலிருந்தும் விடுபடுவான். இந்தத் தேகத்தோடேயே சிவகணங்களுடைய ஸாரூப்யத்தை அடைவான்; தேஜஸ்ஸையும் யசஸ்ஸையுமடைந்து நிர்மலனுவான். எந்தக்கிருகத்தில் இந்த ஸ்தோத்திரம் படிக்கப்படுகின்றதோ அந்தக் கிருகத்தில் ராக்ஷஸர்களும் பிசாசங்களும் பூதங்களும் விநாயகர்களும் விக்னத்தைச செய்யார். பதிவ்ரதையாயிருக்கிற ஸ்த்ரீ சிவபக்தியுடன் (இதைக்) கேட்டால அவள் பிதாவின்வம்சத்திலும் மாதாவின்வம்சத்திலும் ஈசுவரர்போலப் பூஜிக்கத்தக்கவளாவாள். எவன் ஸ்தோத்திரம் முழுமையையும் மனமடங்கிக் கேட்பானே, அல்லது படிப்பானே, அவனுடைய எல்லாக்காரியங்களும் எப்பொழுதும் ஸித்தியை அடையும். இந்தத் தோத்திரத்தை அடிக்கடி படிப்பதனல் மனத்தால் நினைக்கப்பட்டதும வாக்கினல சொலலப்பட்டதுமான எல்லாம் அவனுக்குக் கைகூடும். ஈசவரருக்கும ஸுப்ரமண்யருக்கும் தேவிக்கும் ஹருகேசுவரருக்கும நன்றுக விதிப்படி 1பூஜையைச் செய்து பிறகு அடக்கத்தோடுமே நியமத்தோடுமிருந்து சீக்கிரம் நிரமமாக நாமங்களே ஜபிக்கவேண்டும. அவனிதம்ஜபித்தமனிதன் விரும்பிய பொருள்களேயும் போகங்களேயும் காமங்களேயும் அடைகிறன்; மரித்தபின் ஸ்வர்க்கத்தை அடைகிறன். திர்யக்ஜாதியில் பிறக்கமாட்டான். இவ்விதம பகவானும் பராசரபுதாரும, பிரபுவுமான வேதவ்யாஸர் கூறினர்" என்றனர்.

---

2 இருநூற்றுத்தொண்ணூற்றேராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஆத்மா புத்தி பூதங்கள் இந்திரியங்கள் குணங்கள் முதலியவற்றின்விவரணம்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! இவ்வுலகில் புருஷனுடைய ஆத்ம விஷயமாயிருக்கிற அத்யாத்ம சாஸ்திரமென்பது எது? எதிலிருந்து

---

1 இந்தஸ்தோத்திரத்திற்காகச் செய்யவேண்டிய பூஜையின்கிரமம்:— சுசியாய்த் திருநீறிட்டு ருத்ராக்ஷங்களணிந்து நித்யீக்கடன் முடித்துப் பூதசுத்தி ஸ்தலசுத்தி ஆத்மசுத்திமுதலியன செய்து பஞ்சாக்ஷர விதியால் நியாஸம் தியானங்கள் செய்து குஹர்முதலிய தேவதைகளேப் பூஜித்துப் பலி வைத்து அர்த்தஜ்ஞானத்துடன் ஸ்தோத்திரத்தை ஆவிருத்திசெய்து உத்தர பூஜை செய்யவேண்டும்.

2 இவ்வத்யாயம் பெரும்பாலும் நூற்றுத்தொண்ணூற்றிரண்டாவது அத்யாயத்தை ஒத்திருக்கிறது.

உண்டாயிற்று? அதை எனக்குச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

"குழந்தாய்! எல்லாவற்றையும் அறிவிப்பதும் சிறந்ததுமான எதைப்பற்றி நீ புத்திசாலித்தனத்தால் என்னிடம் கேட்டாயோ அதை உனக்கு விரிவாக உரைப்பேன். அதன் விரிவைக் கேள். ப்ருதிவி வாயு ஆகாயம் அபபு ஜ்யோதிஸ் ஆதான தேயு வென்கிற மஹாபூதங்கள் எல்லாப் பிராணிகளுடைய உற்பத்திகாரணங்களுக்கும் காரணமாயிருக்கின்றன. ஓ! பரதசார்தூலனே! அந்தப் பூதங்களுடைய அந்தக் காரியவாக்கமானது சரீரம். அந்த (ப்ருதிவி முதலான) குணங்களென்று (சொல்லப்படட) காரியங்கள் எப்பொழுதும் லயிக்கின்றன; ஜனிக்கவுஞ் செய்கின்றன. அவைகளிலிருந்து உண்டான பிராணிகள் அவைகளிலேயே லயிக்கின்றன. அடிக்கடி ஸமுத்ரத்தில் அலைகள் உண்டாவதுபோல ப்ராணிகளின் பிறப்பும் மஹாபூதங்கள் உண்டாகின்றன. ஆமையானது தன்னுறுப்புக்களை வெளியில் நீட்டிக் திரும்பச் சுருக்கிக்கொள்வதுபோலப் பெரியபூதங்கள் சிறியபிராணிகளை வெளியிலிழுத்து உள்ளே அடக்கிக் கொள்ளுகின்றன. சரீரத்திலிருக்கிற சப்தம் ஆகாயத்தின் குணமாகவும் கடினமாகம பிருதிவியின்குணமாகவும் பிராணன் வாயுவின்குணமாகவும் உஷ்ணமுதலானதிரவபதார்தம அபபின்குணமாகவும் ரூபமானது தேயுவின்குணமாகவும் சொல்லப்படுகின்றன. இவ்விதம் ஸ்தாவரஜங்கமமான இவையெல்லாம இந்தப பூதமயமாகவேயிருக்கின்றன. இப்பூதம பிரளயதசில அந்த ஆதமாவில் லயிக்கிறது. மறுபடியும் ஆத்மாவிலிருந்து உண்டாகின்றது. பிராணிகளைப படைக்கும் ஆத்மாவானவர் எல்லாபபிராணிகளிடதிலும ஐந்துமகாபூதங்களையே விஷயங்களாகப படைத்தார்; எதில எதைப் பார்க்கிறோம் (அதைக் கேள்.) சப்தம் சரோத்ரம த்வாரங்களை மூன்றும ஆகாயமாகிறகாரணத்தினின்று உண்டாயின. ரஸம பசை நா இவைகள் ஆப்புக்களின் குணங்களாகச் கருதப்படடன. தேயுவானது ரூபம சக்ஷுஸ் சமைத்தல் இம்மூனறுவிதமாகச சொலலப்படுகிறது. கந்தம மூக்கு சரீரம்இவை. ப்ருதிவியின்குணங்களாகக கருதப்படடன. ப்ராணன் ஸ்பர்சம் சேஷ்டை இவைகள் வாயுவின்குணங்களாகக் கருதப்பட்டன. அரசனே! இவ்விதம பஞ்சபூதங்களுடையஎல்லாக்குணங்களும் விரிவாய்ச சொல்லப்படடன. பாரத! ஸத்வம், ரஜஸ், தமஸ், காலம், கர்மம், மனம், புத்தி இவைகளை ஈசவர் இந்தக்குணங்களுள் நன்கு அமைத்தார். உள்ளங்கால்களுக்கு மேலும் தலைக்குக் கீழும்

எதைப் பார்க்கிறாயோ இந்த இடையிலே இந்தப் புத்தி முழுதும் இருக்கிறது. மனிதனிடத்தில் இந்திரியங்களென்றென்றும் மனம் ஆறுவதென்றும் சொல்லப்படுகின்றன. புத்தியையே ஏழாவதாகச் சொல்லுகிறார்கள். க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனே எட்டாமவன். இந்திரியங்களும் கர்த்தாவும் பிரித்து அறியத்தக்கவை. தமஸ் ரஜஸ் ஸத்வங்களும் இதப் பதார்த்தங்களும் அந்தக் கர்த்தாவை அடுத்திருக்கின்றன. நேத்ரமுதலியவை தர்சனமுதலியவற்றின் பொருட்டே. மனம் ஸம்சயத்தைச் செய்கிறது. புத்தியானது நிச்சயத்தின்பொருட்டாகிறது. க்ஷேத்ரஜ்ஞனவன் ஸாக்ஷியாகச் சொல்லப்படுகிறான். பாரதனே! தமஸ், ஸத்வம், ரஜஸ், காலம், கர்மமென்னும் குணங்களால் புத்தியானது மிகவும் விஷயங்களில் கொண்டு போகப்படுகிறது. இந்தக் குணங்களுந்தம் மனத்தை ஆறுவதாகவுடைய எல்லா இந்திரியங்களும் புத்தியே. புதுதியில்லாதகாலத்தில் குணங்கள் ஏது? புத்தியானது பார்பதனால சக்ஷுவாகவும் கேட்பதனால் சோத்ரமாகவும் சொல்லப்படுகிறது; முகாவதனால் க்ராணமாகிறது; ரஸங்களை அறிவதனால ரஸனையாகிறது; ஸ்பாசங்களை உணர்வதனால் த்வக்காகிறது. புத்தியானது அடிக்கடி விகாரத்தை அடைகிறது. எப்பொழுது ஒன்றைப் பிரார்த்திக்கின்றதோ அப்பொழுது அது மனமாகிறது. ஐந்துவிதமான இவைகள் புத்தியினுடைய, தனித்தனியான ஸ்தானங்களலலவா? அவைகளை இந்திரியங்களாகச் சொல்லுகின்றார்கள். அவைகள தோஷத்தை அடைந்தபொழுது புத்தியும் தோஷத்தை அடைகிறது. புத்தியானது சாக்ஷியினிட மிருந்துகொண்டு (சாத்விகமுதலான) மூன்று தன்மைகளை அடைகிறது; ஒருசமயம் சந்தோஷத்தை அடைகிறது; ஒருசமயம் துக்கத்தையும் அடைகிறது; ஒரு சமயம ஸுகமும் துக்கமுமற்றதாயிருக்கிறது. பாவரூபமான இந்தப்புத்தியானது இந்த மூன்று கொள்கைகளிலும் சுற்றிச சுற்றி வருகிறது. நீர்திகளுக்கெல்லாம் பர்த்தாவும அலைகளுள்ளதுமான ஸமுத்ரமானது கரையில் அடங்கியிருப்பதுபோல இவ்விதம் பாவத்தை அடைந்த புத்தியானது பாவரூபமானமனத்திலிருக்கிறது. ப்ரவ்ருத்திக்கின்ற ரஜோவெனில் புத்தியின்தன்மையை அனுசரித்திருக்கிறது: புருஷனிடத்தில் அதிக ஸந்தோஷம், ப்ரீதி, ஆனந்தம், ஸுகம், மிகவும் அடங்கின மனமுள்ளவனாயிருத்தல் என்னும் சாத்விககுணங்கள் பெருமுயற்சியால் உண்டாகின்றன. பெரிதான தாபம், சோகம், மனக்கொதிப்பு, த்ருப்தியில்லாமை, பொறுமையில்லாமை ஆகிய இந்த ரஜோகுணத்தின்

அடையாளங்கள் காரணம்பற்றியும் காரணமில்லாமலும் காணப்படுகின்றன. அஜ்ஞானம், ராகம், மோகம், அஜாக்ரதை, கர்வம், பயம், ஸமிருத்தியில்லாமை, தீனயிருத்தல், அதிக மோகம், ஸ்வப்நம், சோம்பல் என்னும் பலவிதமான தமஸின் குணங்கள் எப்படியாவது உண்டாகின்றன. அவைகளில் சரீரத்திலோ மனத்திலோ ப்ரீதியுடன் உண்டாகுங்காரியத்தை ஸாத்விகபாவமென்று ஊகிக்க வேண்டும். துக்கத்துடன்கூடி ஆத்மாவுக்கு அப்ரியத்தைச் செய்வதை ரஜோகுணமே ப்ரவர்த்தித்ததென்று பரபரப்பின்றி நிணைக்க வேண்டும். மோகத்துடன்கூடிச் சரீரத்திலோ மனத்திலோ உண்டாகிற அதை ஊகிக்க முடியாததும் அறியமுடியாததுமான தமோகுணமாக நிச்சயிக்கவேண்டும். இவ்விதம் புத்தியின் கதிகள் முழுமையும் இப்பொழுது விரித்துரைக்கப்பட்டன. இதை அறிந்தால் வித்வானுவான். இதைத் தவிர வித்வானுக்கு வேறு லக்ஷணம் ஏது? ஸூக்ஷ்மமான புத்திக்குரிய கூர்மதர்ஜனுக்குமுள்ள இந்த வித்யாசத்தை அறியக்கடவாய். இவைகளில் ஒன்று குணங்களைப் படைக்கிறது; ஒன்று குணங்களைப் படைப்பதில்லை மத்ஸ்யமானது ஜலத்தைக் காட்டிலும் வேறுகவும் அதனுடன் சேர்ந்ததாகவுமிருப்பதுபோல (ஆத்மாவும் புத்தியும்) இயற்கையாகவே வேறுனவையும் எப்பொழுதும் ஒன்றோடொன்று சேர்ந்தவையுமாயிருக்கின்றன. குணங்கள் ஆத்மாவை அறிகிறதில்லை ஆத்மாவானது குணங்களெல்லாவற்றையும் அறிகிறது. ஆத்மாவானது குணங்களைப் பார்ப்பதாகவும் நிணைக்கிறபடி அவைகளில் பற்றுள்ளதாகவுமிருக்கிறது. புத்திக்கு ஆச்ரயமில்லை. குணங்களுடைய ஸ்ருஷ்டியிலேயே இதனுடையஸத்வமும் அறிவும் ஏற்படுகின்றன. ஒரு சமயம் மற்றவைகள் குணங்களைப் படைக்கின்றன. இந்தப்புத்தி அறிகின்றது. புத்தியானது குணங்களை ஸ்ருஷ்டிக்கின்றது. ஜீவன் அபிமானிக்கிறான். அந்தப் புத்திக்கும் ஜீவனுக்கும் இந்தச் சேர்க்கையானது நிலையுள்ளது. அசேதனங்களும் அறியாதவைகளுமான இந்திரியங்களால் விஷயத்தின் பிரகாசத்திற்காகப் புத்தியானது இடையில் ஏற்படுத்தப்படுகிறது. [1]இந்திரியங்கள் பெரியதீபம் போன்றவை. அப்படிப்பட்ட இந்த விஷயத்தை இவ்விதஇயற்கையுள்ளதாக நிணைத்து சஞ்சரிக்கும் மனிதன் துக்கமில்லாதவனும் சந்தோஷியாதவனும் மத்சரமில்லாதவனுமாயிருப்பான். இது குணங்களைப்படைப்பது, சிலதியானது நூலைப் படைப்பதுபோல ஸ்வபாவஸித்தமாகவேயுள்ளது.

---

1 புத்தி தீபப்ரகாசத்திற்கு ஒப்பானது.

குணங்கள் தூல்களைப்போல அறியக்கூடியவை. குணங்கள் காசத்தை அடைகின்றன. 1நிவ்ருத்திப்பதில்லை. ஏனெனில், அவைகளின் ப்ரவ்ருத்தியானது அறியப்படுகிறதில்லை. இவ்விதம் சிலர் நிச்சயிக்கின்றனர். மற்றவர்கள் குணங்களுக்கு நிவ்ருத்தியென்று நிச்சயிக்கின்றனர். இவ்விதம் புத்தியின் நிச்சாரூபமாயும் உறுதியாயுமிருக்கிற இந்தவற்றுதயத்தின் முடிச்சை அவிழ்த்துவிட்டுச் சோகமில்லாதவனும் ஸம்சயமற்றவனுமாகி ஸுகமாயிருக்கவேண்டும. மனிதர்கள் மோகமாகிற ஜலத்திலை நிறைந்ததும் பெரிதுமான சப்சாகரத்தியில் விழுந்து ஞானயோகமயமான மேட்டுப்ரதேசத்தை அறியாமல் வாடுவதுபோல ஆத்மஜ்ஞானமுள்ளவர்களும் தீரர்களுமான வித்வான்கள் (மோக) ஜலத்தின் அக்கரையைத் தோணியால் அடைவதால் வாடுவதில்லை. மேலான ஞானமே தோணி. அவித்வான்களுக்கு ஏற்படும் பெரிய பயமானது வித்வான்களுக்கு உண்டாகிறதில்லை. ஒருவனுக்கும் அதிகமான கதியான்தகிடையாது. வேதமானது இந்தமோக்ஷத்தில் ஒரேதரமாக ஸமமான தன்மையைத் தெரிவிக்கிறது. இந்த விதவானவன் அந்தஜன்மத்தில் செய்கிறதும் முன்ஜன்மத்தில் செய்ததுமான மிக்க தோஷமுள்ள கர்மாவை ஒரே ஞானத்தினால் அழிக்கிறான். பிறன்செய்த அநிஷ்டத்தைத் தூஷிப்பது, தான் அதைச் செய்வது ஆகிய இரண்டையும் செய்யான்" என்று சொன்னர்.

(இருநூற்றுத்தோண்ணூற்றிரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(துக்கமுதலியன தொடராமலிருத்தற்குரிய காரணத்தை ஸனங்கர் நாரதருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பிராமஹரே! பிராணிகள் எப்பொழுதும் மனவருத்தத்தினாலுண்டான துக்கத்தினும் மரணத்தினும் நடுங்குகின்றன. அவ்விரண்டும் எங்களுக்கு உண்டாகாமலிருக்கும் விதத்தை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர்சொல்லத் தொடங்கினர்.

"ஓ! பாரதனே! இந்த விஷயத்தினும் நாரதருக்கும் ஸனங்கருக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழைய சரித்திரத்தைச் சொல்லுகின்றார்கள். நாரதர், 'மார்பினால் வணங்குகிறவர்போலவும் புஜங்க

1 நிருபயம் கார்ணரூபமகிலிவேது.

ளால் (ஸம்ஸார நதியைத்) தாண்டுகிறவர்போலவுமிருக்கிறீர். எப் பொழுதும் மனத்தில் மிக்க சந்தோஷமடைந்து சோகமற்றவர் போலக் காணப்படுகிறீர். உம்மிடத்தில் ஒருவித பயத்தையும் சிறி தும் நான் காணவில்லை. நித்தியம் திருப்தியடைந்தவர்போல ஸ்வ ஸ்தராய்ச் சிறுவன்போல வயுவஹரிக்கின்றீரே' என்று சொன் னார். ஸுமங்கர், 'ஓ! நாரதரே! நான் ஸகலமான பிராணிகளிடத்தி லும் நடந்ததையும் நடக்கின்றதையும் நடக்கப்போகின்றதையும் அவைகளின் தத்வங்களையும் அறிகின்றேன். அதனல், நான் மன வருத்தமில்லாதவனுயிருக்கிறேன். நான் உலகத்தில் கார்யங்களின் ஆரம்பங்களையும் மறுபடி பயன்களின் உற்பத்திகளையும் நானுவித மான பயன்களையும் அறிவேன். அதனல் நான் மனவருத்தமில்லாத வனுயிருக்கிறேன். ஓ! நாரதரே! நாதனில்லாதவர்களும் இருப்பிட மில்லாதவர்களும் (கல்விசெல்வமுதலிய) கதியுடையவர்களும் குரு டர்களும் மூடர்களும் ஜீவிக்கின்றார்கள். ஜீவிக்கிறவர்களான கம் மையும் பாரும். முன்செய்த வினேயினலேயே சோகமில்லாத அவ யவங்களுடைய தேவர்களும் பலவான்களும் பலமில்லாதவர்களுமே ஜீவிக்கின்றார்கள். அவ்வாறே கம்மையும் மேலாக நினேயும். ஆயிர மூள்ளவர்களும் ஜீவிக்கின்றார்கள், நூறுள்ளவர்களும் ஜீவிக்கின் றார்கள். சிலர் கீரையினலும் ஜீவிக்கின்றார்கள். ஜீவிக்கின்ற கம்மை யும் பாரும். ஓ! நாரதரே! நாம் துக்கத்தை அடையாமலிருக்கும் போது நமக்குத் தர்மத்தினலோ உலகவியாபாரத்தினலோ என்ன பயன் ஏற்படவேண்டும்? ஸுகங்களும் துக்கங்களும் அழியும்தன் மையுள்ளனவாயிருப்பதால் அவைகள் (கம்மைத்) துன்பப்படுத்தா. [1] மேலான அறிவுடைய மனிதர்கள் இந்திரியங்கள் கலக்கமற்றிருப் பது ப்ரஜ்ஞைக்குக் காரணமென்று சொல்லுகின்றனர். இந்திரியங் கள் மோகத்தை அடைகின்றன; துக்கத்தையும் அடைகின்றன. இந்திரியங்கள் மயங்கியவனுக்கு அந்தப் ப்ரஜ்ஞையின் லாபமானது இல்லை. மூடனுக்கு அந்தமோகமே மறுபடி கர்வமாகின்றது. மூட னுக்கு இந்த லோகமுமில்லை; பரலோகமுமில்லை. எப்போதும் துக் கங்களே உண்டாவதில்லை. எப்பொழுதும் ஸுகத்தின் லாபமு மில்லை. மாறிமாறிக்கொண்டிருக்கின்ற வாஸனேபோன்ற பெரிய ஜ்வரத்தை என்னப்போன்றவன் ஒருபோதும் அடையமாட்டான்; பிரியமான போகங்களையோ ஸுகத்தையோ அனுஸரிக்கமாட்டான்;

---

[1] ஒரு சொல் விடப்பட்டது; இங்கு பழையவுரை சிறிது வேறுபடு கிறது.

நேர்ந்த துக்கத்தையும் கிடைக்கமாட்டான்; மனத்தை ஸமாதானஞ் செய்துகொண்டு பிறருடைய ஸுகமுதலியவற்றில் ஆசைப்படாம விருப்பான். வரப்போகிற லாபத்தைக்குறித்தும் ஸந்தோஷிக்க மாட்டான். தனலாபமானது அதிகப்பட்டபொழுதும் ஸந்தோஷத்தை அடையமாட்டான்; பொருள் அழிவதிலும் துக்கிக்கமாட்டான்; பரலோகத்தில் உறவினர், செல்வம், கல்லகுலம், கல்வி, மந்திரங்கள், பலம் ஆகிய எல்லாம் துக்கத்திலிருந்து காக்கத திறமையுள்ளவையல்ல. ஆனால், மனிதர்கள் நல்ல சீலத்தினால்தான் சாந்திமை அடைகின்றார்கள். யோகமில்லாதவனுக்குப் புத்திபிராது. யோகமில்லாதவன் ஸுகத்தை அடைவதில்லை. [1]மனத்தை வெளியில்விடாமல் தரிபபது துக்கத்தை விலக்குவது ஆகியு இரண்டும் ஸுகம். (விஷயத்தில்) பிரியமானது ஸந்தோஷத்தை உண்டுபண்ணுகிறது. அந்த ஸந்தோஷம் காவத்தை விருத்திசெய்கிறது. கர்வமானது நாசத்துக்கே காரணமாகிறது. ஆகையால், நான் அவைகளை முழுதும் தள்ளி இருக்கிறேன். உலகத்தில் இந்தத் தேகத்தினுடைய சேஷ்டையினால் ஸுகதுக்கங்களில் மோகத்தையுண்டு பண்ணுகிற சோகம், பயம், கர்வம இவைகளை ஸாக்ஷிபோலீப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தனதானியமும் காமத்தையும் தள்ளிவிட்டுச் சோகமில்லாதவனும் கவலையில்லாதவனுமாகி ஆசை மோகங்களையும் தள்ளிவிட்டு இந்தப் பூமியில் ஸஞ்சரிக்கிறேன். அமிருதபானஞ்செய்தவனுக்குப்போல எனககு இகதிலோ பரத்திலோ மரணத்திலிருந்தோ அதாமதத்திலிருந்தோ லோபதிலிருந்தோ ஓரிடத்திலிருந்தும சிறிதும பயமில்லை. ப்ராம்மணரே! பெரிதும் அழிவறறதுமான தவத்தைச செயததால் இதை அறிகிறேன். ஓ! நாரதரே! அதனால் என்னைச சோகம் வந்தடைந்து வருத்துவதில்லை' என்று சொன்னார்" என்றார்.

இருநூற்றுத்தொண்ணூற்றுமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர் மேன்மையடைதற்குரிய காரணங்களைக் காலவருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! சாஸ்திரங்களின் தத்வத்தை அறியாதவனும் எப்பொழுதும் சந்தேகமுள்ளவனும் (ஆத்மஜ்ஞானத்

1 'க்ருப' என்னும் பதம் விடப்பட்டது.

திற்காக) முயற்சிசெய்யாதவனுமாயிருப்பவனுக்கு சரேயஸுக்குக் காரணத்தைச் சொல்லும்' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத் தொடங்கினர்.

"எப்பொழுதும் (மாதாமுதலான) குருக்களுடைய பூஜையும் பெரியோர்களுடைய சேவையும் முகமாகச சாஸ்திரங்களைக் கேட்பதுமேயில்லையான சரேயஸுகருக காரணமாகச சொல்லப்படுகின்றன. இவ்விஷயத்திலும காலவருகுமும தேவரிஷியான நாரதருக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழைய இகாஸதையச சொல்லுகின்றார்கள். இந்திரியங்களை ஜயித்தவரும் மோக்ஷத்தை விரும்புகிறவருமான காலவர் மோஹமும சரமமுமறறவரும எல்லா வேதங்களையு முணர்ந்தவருமு ஞானத்தினால திருபதி அடைந்தவரும மனவடக்க முடையவருமான நாரதரை நோகசி சொல்லலானர். 'உலகத்தில் ஒரு புருஷன் எவ்விதக குணங்களாலே மனிதர்களில ஶ்ரேஷ்டனெனப் பாராட்டப்படுகிறானெ அவ்விதக குணங்களையெல்லாம உம்மிடத்தில் ஸ்திரமாகக காண்கிறோம. இபபடி பபட்டபண்டிதரான நீர வெகுகால மாக மூடர்களாயிருபபவர்களுடைய உலகதனின் ததவத்தை அறியாதவர்களுமான எங்களுடைய சகதேகதையை நிவருத்திசெய்யவேண்டும், பொதுவாகக் காரியங்களைத தெரிந்துகொண்டாலல்லவா இவ்விதம் பிரசிருசதி ஏறபடும? எது செயயவேண்டியதோ அதை நாங்கள் உறுதியாக அறியவில்லை. அதைச சொல்லவேண்டும. ஓ! பகவானே! எல்லா ஆச்ரமங்களும தனிதனி ஆசாரங்களை வெளியிடுகின்றன. எல்லோரும, 'இது சரேயஸ்கரம; இது சரேயஸ்கரம்' என்று போதிக்கப்பட்டிருகிறார்கள். சாஸ்திரங்களைக் கொண்டாடுகின்றவர்களும் சாஸ்திரங்களாலே வெவ்வேறு மார்கங்களில் பிரிவருத்தித்தவர்களுமான அவர்களைப் பார்த்து எங்கள் சாஸ்திரங்களால் ஸந்தோஷமதை அடைந்த நாங்கள் சரேயஸை அறியவில்லை. சாஸ்திரமொன்றிருகுமானால் அப்பொழுது சரேயஸ் ஸ்பஷ்டமாகும். அனேகமான சாஸ்திரங்களாலே சரேயஸானது மிகவும் ரகஸ்யமாக வைக்கப்பட்டிருகிறது. இந்தக காரணத்தினால் சரேயஸானது எனக்கு அறியமுடியாததாகத தோறறுகிறது. ஆகையால், பகவானை நீர் அதை எனக்குச் சொல்லும். நான் உம்மை அடைந்தவன். உபதேசியும்' என்று கேட்க, நாரதர், 'ஓ! காலவரே! ஐயா! தனித் தனியே ஏறபடுத்தப்பட்ட ஆசரமங்கள் நான்கு. அப்படியே அந்த எல்லாவறறையும் உட்புகுந்து நீர் கவனித்துப்பாரும். அந்த அந்த ஆச்ரமங்களுடைய அந்த அந்தவிடத்தில் தனித்தனியாய் விலக்ஷண

மாக ப்ரவிருத்தித்த பலவாருன குணங்களுடைய உத்தேசத்தைப் பாரும். அவர்கள் ஸ்தேகமற நன்முக இஷ்டத்தையடைகிறதில்லை. மற்றவர்கள் ஆச்ரமங்களுடைய மேலான கதியைக் கண்டுகொண் டார்கள். எது நன்முக மோக்ஷசாதனமோ அதுதான் சந்தேக மில்லாத ஸ்வரூபத்தையுடையதாயிருக்கிறது. மித்ரர்களை அனுக் கிரகிப்பதையும் சத்துருக்களை நிக்ரகிப்பதையும் தர்மார்த்தகாம்ங் களைத் தேடுவதையும் புத்திமான்கள் ச்ரேயஸாகச் சொல்லுகிறார்கள். பாபகர்மத்தினின்றும் விலகுவது, எப்பொழுதும் புண்ணியசீலனு யிருப்பது, ஸத்துக்களோடு ஸஹவாஸம் இவைகள் ஸந்தேகமில்லா மல் ச்ரேயஸாகின்றன. எல்லாப் பிராணிகளிடத்திலும் மிருதுவா யிருத்தல், உலக வியவஹாரங்களில் நேராயிருத்தல், 'மதுரமான வாக்கு ஆகிய இவை சம்ஸயமின்றி ச்ரேயஸாயிருக்கின்றன. தேவ தைகளுக்கும் பித்ருக்களுக்கும் அதிதிகளுக்கும் (ஹவிஸ்முதலான வற்றைக்) கொடுப்பதமை வேலைக்காரர்களைக் கைவிடாமலிருப்பதும் ஸம்சயமின்றி சரேயஸாகின்றன. ஸத்யத்தைசொல்வது ச்ரேயஸ். ஸத்யத்தை அறிவதோவென்றால் லேசாயில்லை. பிராணிகளுக்கு மித வும் ஹிதமாயிருக்கின்ற இதை நான் ஸத்யமாகச் சொல்லுகிறேன். அகங்காரத்தைத் தள்ளுவதும் அஜாகரதையை விலக்குவதும் ஸந் தோஷமும் ஒரே விதமான கடக்கையும் நிலைபெற்ற சரேயஸாகச் சொல்லப்படுகின்றன. விதிப்படி வேதாத்யயனமும் வேதாங்கங்க ளுடைய அத்யயனமும் ஞானஸாதனங்களை அறிய விரும்புவதும் ஸந்தேகமின்றி சரேயஸாகின்றன. ச்ரேயஸை விரும்புகின்றவன் நிமித்தமின்றி சப்தம் ஸ்பர்சம் ரூபம் ரஸம் கந்தம் இவைகளை எவ் விதத்தினலும் அதிகமாகப் பற்றக் கூடாது. ச்ரேயஸை விரும்பு கின்றவன் ராத்ரியில் ஸஞ்சரிப்பதையும் பகலில் நித்ரை செய்வதையும் சோம்பலையும் கோட்சொல்லுவதையும் மதத்தையும் ஆகாரமுதலி யதை அதிகமாகக் கொள்ளுகிறதையும் ஆகாரம் செய்யாமலே இருப் பதையும் தள்ளவேண்டும். பிறருடைய தூஷணையினல் தன்னக்கு மேன்மையைத் தேடக்கூடாது. தன்னுடைய குணங்களாலேயே மற்ற வர்களைக் காட்டிலும் விசேஷமான மேன்மையைத் தேடவேண்டும். அநேகமாகக் குணமில்லாமலேயிருக்கிற மூனிதர்கள் தம்மைத்தாமே கௌரவித்துக்கொண்டு தங்களுடைய குணங்களின் குறைவினல் குணசாலிகளான இதரர்களைத் தோஷஞ்சொல்லி விலக்குகின்றார்கள். மறுபடி அவர்கள் (மற்றவர்களால், 'நீங்கள் சொல்வது ஸரிதான்' என்று) அனுஸரித்துச் சொல்லப்பட்டவர்களும் தங்களுடைய

மானத்தினால் கர்வமுடையவர்களுமாகிய மற்றஎல்லாஜனங்களையுங் காட்டிலும் தம்மை மிகவும் குணமுடையவர்களாக நினைக்கின்றார்கள். குணங்களிறைந்த வித்வானனவன் ஒருவனுடைய நிந்தையையுஞ் சொல்லாதவனும் தன் கௌரவத்தை ச்லாகியாதவனுமாகிப் பெரிதான புகழை அடையவேசெய்வான். சுத்தமும் நல்லவாஸனையுள்ளதுமான புஷ்பங்களின் வாஸனையானது சொல்லாமல் தானே வீசுகிறது. அப்படியே ஆகாயத்தில் நிர்மலமானஸூர்யன் சொல்லாமலிருந்துகொண்டே பிரகாசிக்கிறான். இவைமுதலானவைகளும மற்றுமுள்ள அசேதனங்களும் பேசாமலே உலகத்தில் புகழால்விளங்குகின்றன. மூடனனவன் குணமற்றவனனதன்னைப் புகழ்வதனால் உலகத்தில் பிரகாசிக்கிறதில்லை. வித்வானனவன் குழியில வைத்து மறைக்கப்பட்டவனுயிருந்தாலும் பிரகாசிக்கிறான். கம்பீரமாகச சொல்லப்பட்டாலும் அஸத்தான சப்தமானது மறைந்துவிடுகிறது. மெதுவாகச சொல்லப்பட்டாலும் நல்லவசனமானது உலகங்களில் விளங்கவே செய்கிறது. மூடர்களும் கொழுத்தவர்களுமானவர்களுடைய ஸாரமில்லாததும் அதிகமுமாயிருக்கிற வாத்தையானது ஸூர்யன் தன்னை அக்நிரூபமாகக்காண்பிப்பதுபோல அவர்களைக் கொடுமையுள்ளவர்களாகக் காண்பிக்கிறது. இந்தக் காரணத்தினால் பெரியோர்கள் வேறுவேறுயிருக்கிற ஞானத்தைத் தேடுகின்றார்கள். பிராணிகளுக்குப் பிரஜ்ஞையின்லாபமே உத்தமமாக எனக்குத் தோன்றுகின்றது. புத்திமானனவன் தெரிந்தவனுயிருந்தாலும் தன்னைச்சேர்ந்தாமலிருக்கும்பொழுது ஒருவனுகும் சொல்லக்கூடாது. நியாயவிரோதமாய்க கேட்கிறவனுக்கும் மறுமொழி சொல்லக்கூடாது; மூடன்போல உட்கார்ந்திருக்கவேண்டும். ஆகையால், கர்மத்தை நித்தியமாகக்கொண்டவர்களும் ஸாதுக்களும் கொடுப்பவர்களும் தங்களுக்குரிய தர்மங்களில் பற்றுள்ளவர்களுமான மனிதர்களிடத்தில் வாஸத்தைவிரும்பவேண்டும். ச்ரேயஸைவிரும்புகிறவன் எந்த இடத்தில் நான்குவர்ணங்களுடைய தர்மங்களுக்கும் கலப்பு உண்டாயிருக்கிறதோ அந்த இடத்தில் எவ்விதத்தினும் வாஸத்தைச் செய்யக்கூடாது. இவன் ஒருப்ரயத்தனமுமில்லாதவனும் கிடைத்தபடி ஜீவிக்கிறவனுமாயிருந்தாலும் புண்யசாலிகளிடத்தில் சேர்க்கையால் நிர்மலமான புண்யத்தையும் பாவிகளிடத்தில் சேர்க்கையால் பாவத்தையும் அடைவான். ஜலம் அக்னி சந்திரன் இவற்றின் ஸ்பரிசத்தை அனுபவிக்கிறதுபோல நல்லோர்களுடைய ஸம்பந்தத்தை நாம் பார்க்கிறோம். யஜ்ஞசேனத்

தைப் புழிக்கின்றவர்கள் இதரவிஷயத்தைப்பாராமல் புழிக்கின்றார்கள். எவர்கள் இதரவிஷயங்களை (ஆராய்ந்து) புழிக்கின்றார்களோ அவர்களைக் கர்மங்கள் தொடருமென்று அறியும். எந்தத்தேசத்தில் சொன்னபடி நடவாதவர்களும் மரியாதையின்றிக் கேட்கிறவர்களுமாயிருக்கிறவர்களுக்குப் பிரமாதத்வத்தை ஒருவன் சொல்லுவானேல் அந்தத் தேசத்தை நல்ல சித்தமுள்ளவன் தள்ளவேண்டும். எந்தத்தேசத்தில் குருசிஷ்யர்களுடைய செய்கையானது சாஸ்திரப்படி ஏற்பட்டதும் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்குமோ அந்தத் தேசத்தை எவன் தள்ளுவான்? எந்த இடத்தில் வெளியிலுள்ளவர்கள் வித்வான்களுக்கு நிசயமாகத் தாஷததச சொல்லுவார்களோ அந்தத் தேசத்தில் தனக்குக் கௌரவத்தை விரும்புகிறவனை எந்தப்பண்டிதன் வஸிப்பான்? எந்த தேசத்தில் லோபிகளாலே தர்மதத்தின் அணைகள் பெருமபாலும் உடைகசப்பட்டிருக்கின்றனவோ, அந்த தேசத்தை, முன்னாளே பற்றிஎரிகின்ற வஸ்திரத்தைப்போல, யார்தான் விடமாட்டான்? எந்தத்தேசத்தில் அசசமும மத்ஸரமுமின்றி ஜனங்கள் தர்மதத்தை அனுஷ்டிக்கின்றார்களோ அங்கே ஜனிக்கவேண்டும. புண்யசீலர்களான ஸாதுக்களிடத்தில் வஸிக்கவேண்டும். எந்த இடத்தில் ஜனங்கள் தனத்திற்காகத் தர்மதத்தை அனுஷ்டிக்கின்றார்களோ அவர்களிருக்குமிடத்தை அடுத்து ஒருபோதும் வஸிக்கக்கூடாது. அந்த ஜனங்கள் பாபம் செய்கிறவர்களல்லவா? எந்த இடத்தில் ஜனங்கள் பாவத்தொழிலால் ஜீவிக்க விரும்புகிறார்களோ அந்த இடத்திலிருந்தும, ஸர்ப்பத்தோடுகூடிய 'கிருகத்திலிருந்து ஓடுவதுபோல, வேகமாக ஓடவேண்டும். [1]கட்டிலிலேறி வஸிக்கின்றவன், தனக்கு க்ஷேமத்தை விரும்புவானானால் பசசாத்தாபம் அடையக்கூடியகர்மாவை முதலிலேயே செய்யாமலிருக்கவேண்டும். எந்தத் தேசத்தில் அரசனும், அரசனுக்கடுத்த மந்திரிமுதலான புருஷர்களும், குடிம்பிகளுக்கு மூக்கு ஆகாரம செய்கின்றார்களோ மனஸ்வியானவன் அந்தராஜ்யத்தை விடவேண்டும். எந்த ராஜ்யத்தில் வேதாத்நியயனம் செய்தவர்களும் தர்மத்தை நித்யமாகவுடையவர்களும் பரம்பரையாயிருப்பவர்களும் வேள்விசெய்வித்தலும வேதாத்நியயனம் 'செய்வித்தலு முடையவருமாயிருக்கிறவர்கள் மூக்கி போஜனம் செய்கின்றார்களோ அந்தராஜ்யத்தில் வஸிக்கவேண்டும். எந்த ராஜ்யத்தில் ஸ்வாஹாகாரமும் ஸ்வதாகாரமும் வஷட்காரமும் நன்றாக அனுஷ்டிக்

1 ஸ்திரியாயிருப்பவன்.

கப்பட்டு எப்பொழுதும் நடந்துவருகின்றனவோ அந்த ராஜ்யத்தில் விசாரியாமல் வஸிக்கவேண்டும். எந்த ராஜ்யத்தில் ஜீவனத்தினல் சிரமத்தையடைந்தவர்களும் அசுத்தர்களுமான பிராம்மணர்களைப் பார்ப்பானே விஷம் கலந்த மாம்சத்தைப்போலப் 1பக்கத்திலிருக்கிற அந்த ராஜ்யத்தை விடவேண்டும். எந்த ராஜ்யத்தில் மனிதர்கள் யாசிக்கப்படாமலே அன்புடன் கொடுக்கின்றார்களோ அந்த ராஜ்யத்தில் நல்ல மனமுள்ளவன் மனக்கவலையற்றுக் கிருதகிருத்தியன் போல வஸிக்கவேண்டும். எந்த ராஜ்யத்தில் விஷயமில்லாதவர்களிடத்தில் சிலசமயம் சித்தவசமுள்ளவர்களிடத்தில் பூஜையும் நடக்கின்றனவோ அந்த ராஜ்யத்தில் ஸஞ்சரிக்கவேண்டும். அங்குள்ள புண்யசீலர்களான ஸாதுக்களிடத்தில் வஸிக்கவும்வேண்டும். எந்த ராஜ்யத்தில் அடக்கமுள்ளவர்களை கோபிக்கிறவர்களும ஸாதுக்களைத் துன்பஞ்செய்கிறவர்களும் லோபிகளுமான துஷ்டர்களுக்குப் பெரிய சிலசமயம் நடக்கின்றதோ அந்த ராஜ்யத்தில் வஸிக்கவேண்டும். எந்த ராஜ்யத்தில் எல்லா ஸம்பத்துக்களுமுள்ள அரசன் காமங்களை விலக்கித தர்மத்தை நியமமாகக் கொண்டு தர்மமாக ராஜ்யத்தைப் பரிபாலனம் செய்வானே அந்த ராஜ்யத்தில் விசாரியாமல் வஸிக்கவேண்டும். அரசர்கள் சிலதருக்குத்தக்கபடியிருப்பார்களல்லவா? தமக்கு நன்மையமைபட்டபொழுது தேசவாஸிகளான எல்லா ஜனங்களையும் சுகமான சரேயஸாகி சேர்ப்பிப்பார்கள். ஐயா! நீ கேட்டமையால இந்த சரேயஸானது என்னல் உனகுசு சொல்லப்பட்டது. தனக்குரிய முக்கியமான சரேயஸானது அறியமுடியாதது. இந்தப்படி ஜீவனத்தை நடத்திப பிராணிகளுடையநன்மையில் மனதுடனிருப்பவனுகுசு தவசதினலேயே இவ்வுலகில மிகுதியான சரேயஸானது வெளிப்படையாக உண்டாகும்' என்று சொன்னர்" என்றார்.

---

1 பக்கத்தில் வஸிப்பதையும் விடவேண்டுமென்பது.

இருநூற்றுத்தொண்ணூற்றுநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கருடன ஸகரனுக்கு வைராக்கியமுதலிய மோக்ஷோபாயங்களை உபதேசித்தது.)

யுதிஷ்டிரர், "எங்களைப்போன்ற அரசன் எவ்விதமான ப்ரவிருத்தியுடன் உலகில் ஸஞ்சரிக்கவேண்டும்? எப்பொழுதும் எந்தக் குணங்களுடனிருந்தால் பற்றுதலாகிற பாசத்தினின்றும் விடுபடுவான்?' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"இந்தவிஷயத்தில் வைநதேயரால் தம்மையணுஸரித்துக் கேட்ட ஸகரமகாராஜனுக்குச் சொல்லப்பட்ட பழமையான சரித்ரத்தை நான் உனக்குச் சொல்வேன். ஸகரன், 'பிராம்மணரே! இகத்தில் க்ஷேமத்தைத் தருவதும் உத்தமமுமான எந்தக்கார்யத்தைச்செய்து ஸுகத்தையடைகின்றீர்? எப்படி துக்கத்தையடையாமலும் கலங்காமலுமிருப்பான்? இதை அறிவதற்கு விரும்புகிறேன்' என்று கேட்டான். இவ்விதம் கேட்க, எல்லாச் சாஸ்த்ரங்களையும் அறிந்தவர்களில் சிறந்தவரான வைநதேயர் அப்பொழுது அவன் உபதேசம்பெற மிகவும் தக்கவனென்பதையறிந்து இந்த ஸாரமான வார்த்தையைச சொல்லலானர். 'உலகத்தில் மோக்ஷஸுகமே ஸுகம். புத்ரர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் மிகவும் பற்றுள்ளவனும் தனதான்யங்களில் கவலையுள்ளவனுமான மூடன் அதை அறிகிறதில்லை. பற்றுதலுள்ள புத்தியுடையவனும் நிலையில்லாத மனமுடையவனுமான அவன் சீர்திருத்த முடியாதவன். ஸ்நேகமாகிற கயிற்றால் கட்டுண்ட அந்த மூடனனவன் மோக்ஷத்திற்குரியவனாகிறதில்லை. ஸ்நேகத்தாலுண்டான பாசங்களை உனக்குச் சொல்லுகிறேன். அவைகளை என்னிடம் கேள். [1]காதுள்ள தலையால் (கேட்டு) அறிகின்றவனால் (அவைகள்) அறுக்கக்கூடியவைகளாகின்றன. புத்ரர்களையுண்டுபண்ணிக் காலக்கிரமமாக யௌவனப்பிராயமுள்ளவர்களான அவர்களை (க்ருகத்தில்) இருக்கச்செய்து (தங்கள்) ஜீவனத்தில் திறமையுள்ளவர்களாக அறிந்து அவர்களிடமிருந்து விடுபட்டு ஸுகமாக ஸஞ்சரிக்கக்கடவாய். மனைவியைப் புத்ரவதியும் பிராயமுதிர்ந்தவளும் முன் உன்னால் லாலனை செய்யப்பட்டவளும் புத்ரர்களிடத்தில் அன்புள்ளவளுமாகத் தெரிந்து காலக்கிரமத்தால் மேலான

1 'ச்ரோத்ரத்துக்கு வேதாந்த ச்ரவணம் பயன்' என்பது கருத்து.

மோக்ஷவிஷயத்தைக் கவனித்துப்பார்த்து அவளே விட்டுவிடு. புத்திரனுள்ளவனுயிருந்தாலும் இல்லாதவனுயிருந்தாலும் முக்தனுகி ஸுகமாக நட. நீ இந்திரியங்களாலே இந்திரியவிஷயங்களே விதிப்படி அனுபவித்து அந்த விஷயங்களில் உற்சாகத்தை விட்டு முக்தனுகிச் சுகமாக நட. தற்செயலாகக் கிடைத்த விஷயங்களில் (ஓரிருப்பு வெறுப்பின்றி) ஸமமாக இரு. மோக்ஷத்தைப் பயனுகவுடைய இந்தத் தியாகமானது உனக்கு முதலில் என்னல் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. பினி, மறுபடியும் விஸ்தாரமாகச் சொல்லுகிறேன். அதைக் கேள். விஷயத்தினின்றும் விடுபட்டவர்களும் பயம் நீங்கினவர்களுமான மனிதர்கள் உலகத்தில் ஸுகமாக ஸஞ்சரிக்கின்றூர்கள்; பற்றுள்ள மனமுடைய மனிதர்கள் நாசத்தையடைகின்றூர்கள். அந்தவிஷயத்தில் சந்தேகமில்லே. கிருமிகளும் எறும்புகளும் ஆகாரத்தைத் தேடுவதுபோல மனிதர்கள் ஆகாரத்தைத் தேடுவதிலேயே பற்றுள்ளவர்களாயிருக்கிறூர்கள். உலகத்தில் பற்றில்லாதவர்களே ஸுகிகள்; பற்றுள்ளவர்களே நசிக்கின்றூர்கள். மோக்ஷத்தை நாடுகின்ற உன்னுலே ஸ்வஜனத்தின் விஷயத்தில், 'நாளில்லாமற் போனுல் இவர்கள் எப்படி இருப்பார்கள்?' என்று கவலேப்படத் தக்கதில்லே. பிராணியானது தானே உண்டாகிறது; தானே விருத்தியடைகின்றது; தானுகவே ஸுகதுக்கங்களேயும் மரணத்தையுமடைகின்றது. மனிதர்கள் உலகத்தில் போஜனத்தையும் வஸ்திரத்தையும் மாதாவினுலும் பிதாவினுலும் சேகரிக்கப்பட்டதையும் தம் கர்மத்தினுலேயே அடைகின்றனர். முன் செய்யப்படாதது ஒன்றுமில்லே. உலகத்தில் எல்லாப்பிராணிகளும், தெய்வத்தால் ஏற்படுத்தப்பட்ட ஆகாரங்களேயுடைவைகளும் தம் கர்மங்களாலே ரக்ஷிக்கப்பட்டவைகளுமாகிப் பூமியில் ஸஞ்சரிக்கின்றன. மண்கட்டிபோன்றவனும் எப்பொழுதும் பரதந்திரனும் மனஉறுதியில்லாதவனுமான ஜீவனுக்குத் தன்னுடைய ஜனத்தைப் பகைக்கவோ அல்லது காக்கவோ ஏன்ன காரணமிருக்கின்றது? தான் பார்த்திருக்கும்பொழுதே பெரிய முயற்சி செய்யப்பட்டிருந்தும் தன் உறவினனப பூமியில் மிருத்யுவானவன் கொல்லவே செய்கிறுனகையால தானே அறிந்து கொள்ளவேண்டும். இந்த உறவினர்கள் ஜீவித்துக்கொண்டிருக்கையிலும் அவர்களே வளர்த்தலும் காத்தலும் முடிவுபெறுமலிருக்கையிலும் அவர்களே விட்டுவிட்டுச் சாகவே போகிறுய். பிறகு, அவர்கள் மரித்தார்களென்றும் ஸுகத்தையடைந்தார்களென்றும் துக்கத்தை அடைந்தார்களென்றும் நீ அறியமாட்டாய். ஆகையால், தானுகவே

அறிக்துகொள்ளத்தக்கதன்றே? நீ இறந்தாலும் ஜீவித்திருந்தாலும் உன் சுற்றத்தார் தம் கர்மத்தையே அனுபவிப்பார்களாகையால் இவ்விதமறிந்துகொண்டு உனக்கு ஹிதமாயுள்ளதைச் செய்யவேண்டுமன்றே? இவ்விதமறிந்த நீ இவ்வுலகத்தில் எவன் எவனைச் சேர்ந்தவனென்ற நிச்சயத்துடன் மனத்தை மோக்ஷத்தில் செலுத்தி. மேலும் மேலும் மனத்தில் உறுதிசெய்துகொள். இந்த உலகத்தில் எந்தத் தேகிக்குப் பரிதாகமுதலான நிலைமைகளும் குரோதமும் லோபமும் மோகமும் ஜயிக்கப்பட்டிருக்கின்றனவோ நல்லமனமுள்ள அவன் முக்தனே. சூதாட்டத்திலும் பானத்திலும் ஸ்திரீகள் விஷயத்திலும் வேட்டையிலும் மோகத்தினல் தவறியும் பற்றுதலில்லாதவன் எப்பொழுதும் முக்தனே. இரவும் பகலும் எப்பொழுதும் போஜனத்துக்காகவே சரமத்தையடைகின்றவன் தோஷபுத்தியுடையவனுகச சொல்லப்படுகிறன். எப்பொழுதும் ஜாக்ரதையுள்ளவனுகி அடிக்கடி ஸ்திரீகளிடத்தில் உண்டாகும் ஸங்கத்தைத் தன் பிறப்புக்குக் காரணமாக உள்ளபடி அறிகிறவன் முக்தனே. இந்த உலகத்தில் எவன் பிராணிகளுடைய பிறப்பையும் இறப்பையும் செய்கையையும் உண்மையாக அறிகிறனே அவன் முக்தனே. ஆயிரம் கோடி வண்டி தானியங்களில் ஒருபடி தான்யத்தையும், உப்பரிகையில் தன் மஞ்சத்திற்குரிய இடத்தையும் தன் வாழ்க்கைக்குப் போதுமானவாகப் பார்க்கிறவன் மோக்ஷத்தை அடைகிறன். எவன் உலகமானது மிருத்யுவினல் அடிக்கப்படுவதையும் வியாதியினல் பீடிக்கப்படுவதையும் பிழைப்பில்லாமையினல் வருந்துவதையும் பார்க்கிறனே அவன் முக்தியை அடைகிறன். இவ்வுலகத்தில் எவன் இவ்விதம் பார்க்கிறனே அவன் சந்தோஷமுடையவனுவான்; பாரா தவன் கெடுக்கப்படுகிறன். எவன் சிறிது கிடைப்பதாலும் ஸந்தோஷிக்கின்றனே அவனும் முக்தனே. எவன் இவை யெல்லாம் போக்தாவான அக்னி அன்னமான ஸோமன் ஆகிய இவ்விரண்டென்று பார்க்கிறனே அவன் ஆச்சரியமான பதார்த்தங்களாலே பிற்றப்படுகிறதில்லை. அவன் முக்தனே. எவனுக்கு மஞ்சசயனமும் பூமியும் ஸமானமோ எவனுக்கு நெல்லரிசி அன்னமும் இழிவான அன்னமும் ஸமானமோ அவன் முக்தனே. எவனுக்கு வெண்பட்டும் தர்ப்பையாலுண்டான ஆடையும் பீதாம்பரமும் மாவுரிகளும் ஆட்டின் ரோமக்கம்பளமும் தோலும் ஸமானமோ அவன் முக்தனே. எவன் உலகத்தைப் பஞ்சபூதங்களாலுண்டானதாக நன்முகப் பார்க்கின்றனே பார்த்துவிட்டு ஸமமாகவே இருக்கிறனே அவன் இவ்வுலகில்

முக்தனே. எவனுக்கு 'ஸுகதுக்கங்களும் லாபாலாபங்களும் ஜயாபஜயங்களும் விருப்புவெறுப்புக்களும் பயமும் தைர்யமும் ஸமானமாயிருக்கின்றனவோ அவன் எல்லா விதத்தாலும் முக்தனே. இரத்தம், மூத்ரம், அமேத்யம் ஆகிய தோஷங்களுடைய ஸமூகங்களையும் தேஹம் மிகுந்த சரீரத்தையும் பார்த்து (மனிதன்) தானே முக்தியடைகிறான். எவன் கிழத்தனத்தாலுண்டான நரை நிறைகளுடைய ஸம்பந்தத்தையும் சரீரத்தின் இளைப்பையும் நிறம்குன்றிப்போவதையும் கூனலையுமே பார்க்கின்றானே அவன் முக்தனாகிறான். எவன் நடையில் ஆண்மையின் கெடுதலையும் கண் தெரியாமல் போவதையும் செவிடாகப் போவதையும் பலத்தின் குறைவையும் பார்க்கின்றானே அவன் முக்தனாகிறான். எவன் இவ்வுலகத்திலிருந்து பரலோகத்தையடைந்த முனிவர்களையும் தேவர்களையும் சென்றவர்களான அஸுரர்களையும் பார்க்கின்றானே அவன் முக்தனாகிறான். அந்தப் பலவகைச்சிறப்புக்களையடைந்திருந்த ஆயிரக்கணக்கான ராஜரேஷிகள் மண்ணுலகைவிட்டுப் போய்விட்டார்களென்றறிந்தவன் முக்தனாகிறான். எவன் உலகத்தில் நிரயங்களை அடைவது அரிதென்றும் துன்பங்களே அதிகமென்றும் குடும்பத்தின் நிமித்தத்தில் துக்கமே உண்டாவதென்றும் அறிகின்றானே அவன் விடுபடுகிறான். உலகத்தில் புத்திரர்களுடைய விரோதமான குணத்தையும் விரோதமானகுணமுடைய ஜனத்தையும் அதிகமாகக் கவனித்து அறிகின்றவனை எவன்தான் மோக்ஷத்தைப் பாராட்டமாட்டான்? எந்த மனிதன் சாஸ்திரத்தினாலும் உலகத்தினாலும் எல்லாவற்றையுமறிந்து மனுஷ்யஜன்மத்தை அஸாரம்போலப் பார்க்கிறானே அவன் எல்லாவிதத்தாலும் முக்தனே. கிருஹஸ்தாசரமத்திலிருந்து மோக்ஷதத்தில் உன்னுடைய புத்தியானது தளர்ச்சியில்லாமல் செய்யப்படுமானால் என்னுடைய இந்த வார்த்தையைக்கேட்டு முக்தன்போல நடக்கக்கடவாய்' என்று சொன்னார். அப்பொழுது அந்த ஸகரமகாராஜன் அந்தக்கருடபகவானுடைய வார்த்தையை நன்முகக்கேட்டு மோக்ஷதசையிலுண்டான குணங்களோடிருந்து பிரஜைகளையும் பரிபாலனஞ்செய்தான்" என்று சொன்னார்.

ஞானத்தினாலுண்டான குணங்களோடு' என்பது பழைபவுரை.

இருநூற்றுத்தொண்ணூற்றைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(உசநஸ் சுக்ரரென்னும் பேயரை அடைந்தகதை.)

யுதிஷ்டிரர், "ஐயா! என்னுடைய மனத்தில் எப்பொழுதும் இந்த உற்சாகம் இருக்கிறது. கௌரவர்களுக்குப் பிதாமஹரே! ஆகையால், நானும் உம்மிடமிருந்து கேட்கவிரும்புகிறேன். தேவரிஷியும் கவியும் மிக்க புத்திமானுமாகிய உசநஸ் என்பவர் ஏன் எப்பொழுதும் அஸுரர்களுக்குப் பிரியத்தைச செய்கிறவரும் தேவர்களுடைய அனிஷ்டத்தில் சந்தோஷமுடையவருமானர்?* அளவற்ற பராக்ரமமுடைய அஸுரர்களுக்குப் பலத்தை எதற்காக விருத்தி செய்தார்? அஸுரர்கள் ஏன் அவரால் எப்பொழுதும் தேவசரேஷ்டர்களோடு ஸமரமுள்ளவர்களாகச் செய்யப்பட்டார்கள்? தேவர்களின் காந்திபோன்ற காந்தியுள்ள அந்தஉசனஸ் எப்படி சுக்ரராயிருப்பதை அடைந்தார்? அவர் எப்படிசெல்வபெருக்கையுமடைந்தார்? இவை எல்லாவற்றையும் எனக்குச சொல்லும். மிக்க ஒளியுள்ள அவர் ஏன் ஆகாயத்தின் நடுவேபோகிறதில்லை? ஓ! பிதாமஹரே! இதை முழுதும் நான் கேட்கவிரும்புகிறேன்" என்று வினவ, பீஷ்மர் சொல்லதைதொடங்கினர்.

"குற்றமற்றவனே! அரசனே! என்னால் புத்திக்குத் தக்கபடி முன்கேட்கப்பட்ட இவையெல்லாவற்றையும் உள்ளபடி ஜாக்ரதையுடன் கேள். ப்ருகுவம்சத்தில் பிறந்தவரும் பூஜ்யரும் உறுதியான விரதத்தை உடையவருமான இந்தமுனிவர் முன் நடந்த ஒரு காரியநிமித்தமாகத் தேவர்களுக்கு அப்பிரியத்தைச செய்தார். அளவிறந்த செல்வமுடையவனும் ராஜனென்னும் பெயருடையவனும் யக்ஷர்களுக்கும் ராக்ஷதர்களுக்கும் அதிபதியும் எப்பொழுதும் பிரபுத்தன்மையுள்ளவனும் பொக்கசத்திற்கும் உலகத்திற்கும் பிரபுவுமான குபேரனென்றொருவனிருக்கிறான். ஒரு ஸமயம், யோகத்தில் ஸித்தி பெற்ற அந்த மகாமுனிவர் குபேரனுடைய சரீரத்தினுள்புகுந்து தனபதியான அந்தத் தேவனை யோகத்தால் ஒன்றுமறியாமல் மயக்கித் தனத்தை அபகரித்தார். தனத்தைக் கவர்ந்தவுடனே குபேரன் முன்போல ஸுகத்தையடையவில்லை. துக்கமுற்ற அவன் கோடங்கொண்டு தேவர்களுள் மிகசிறந்த ஈசவரரை அடைந்தான். அப்பொழுது அளவற்ற பராக்ரமமுடையவரும் தேவச்ரேஷ்டரும் ஸம்

ஸாரோகத்தை விலக்குகிறவரும் சாந்தரும் அனேகம் ரூபங்களுடையவருமான சங்காரிடம், 'யோகத்தையே உருவமாகக் கொண்ட கவியினுலே என்னைத் ஸ்மித்து என்னுடைய தனம் அபகரிக்கப்பட்டது. மிக்க தவமுடைய அவர் யோகத்தினுல் என்னை மயக்கி வசப்படுத்திக்கொண்டு வெளியிலும் போய்விட்டார்' என்று விஜ்ஞாபனம் செய்தான். ஓ! அரசனே! மகாயோகியான பரமேச்வரர் இதைக் கேட்டு உடனே கோபத்தையடைந்து கண்கள் மிகவும் செங்நிற மடையச் சூலத்தையேந்தி நின்ருர். சிறந்த ஆயுதத்தை எடுத்துக கொண்டு, 'அவன் எங்கே? அவன் எங்கே?' என்று சொல்லினர். அந்த உசனஸ் மகாயோகியும் மஹாத்மாவுமான அவருடைய அப்படிப்பட்ட கோபத்தையும் செய்ய நினைத்திருக்கிற காரியத்தையும் அறிந்து அவருக்குத் தூரத்திலிருந்தார். பிறகு, பிரபுவான சங்கரர் (என்னுடைய) போக்கையும் வரவையும் இருப்பையும் அறிவார் என்று உக்கிரமான தவத்தோடுகூடிய மஹாத்மாவான மஹேச்வரரை நினைத்து யோகசித்தியடைந்த மனத்தையுடைய கவியானவர் ஈச்வருடைய சூலத்தின் முனையில் காணப்பட்டார். அப்பொழுது தவத்தில் லித்திபெற்ற அந்தச சுக்ரர் உடனே ஆயுதபாணியான ஈச்வரால் அறியப்பட்ட ஸ்வரூபத்தையுடையவரானர். தேவர்களுக்கெல்லாம் தலைவரான பரமேசவரர் அறிந்து சூலத்தையும் கையினுல் வளைத்தார். பிறகு, அளவற்ற பலமுடைய பாணியினுலே சூலமானது வளைக்கப்பட்டவுடன் உக்கிரமான ஆயுதத்தையுடைய பிருவானவர் சூலத்தைப் பார்த்து 1பிநாகமென்று சொன்னர். 2தேவசரேஷ்டரும் உமாபதியுமான ஈசர் பாணியின் மத்தியை அடைந்த அந்தச் சுக்கிரரைப் பார்த்து வாயைத்திறந்து கையினுல் (அவரை) வாயில் மெல்லப்போட்டுக்கொண்டார். பிரபுவான சுக்கிரர், உடனே பரமேச்வரருடைய உதரத்தில் பிரவேசித்தார். மஹாத்மாவான இந்தப்பிருகுநந்தனர் அந்த உதரத்தில் ஸஞ்சரித்தார" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "ஓ! அரசரே! மிக்ககாந்தியுள்ள சுக்ரர் தேவதேவரும் புத்திமானுமான அந்த ஈசருடைய உதரத்தில் எதற்காக ஸஞ்சரித்தார்? பிறகு என்ன செய்தார்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "அரசனே! முன்காலத்தில் பெரியவிரதமுடைய

---

1 'பாணி' என்கிறபெயரில் முதல் எழுத்தான பகாரத்தை இகாரம் சேர்த்தும், 'வஹேத்தார்' என்கிற அர்த்தமுடைய, 'அநாமயத்' என்கிற பதத்தின் இரண்டாவது எழுத்தான 'நா' என்பதையும் 'க' என்கிற அதிக எழுத்தையும் சேர்த்தும் பிநாகம் என்பது.

2 வேறுபாடம்.

அந்த ஈச்வரர் ஜலத்தின் மத்தியையடைந்து பத்துலக்ஷம்கோடி வருஷங்கள் கட்டைபோல அசையாமலிருந்தார்; செய்யவரிய தவத்தைச் செய்துவிட்டுப் பெரிதான மடிவிலிருந்தும் வெளியில்வந்தார். அப்பொழுது தேவர்களுக்கெல்லாம் மேலான தேவரான பிரம்மா அவரிடம் வந்தார். அழிவற்ற ப்ரம்மா தவத்தின் விருத்தியையும் க்ஷேமஸ்திதியையும் வினவினர். விருஷபத்துவஜரான ஈச்வரரும், 'தவமானது நன்முக அனுஷ்டிக்கப்பட்டது' என்று சொன்னர். பிறகு, அந்தச் சங்கரர் அவருடைய சேர்க்கையினல் மேண்மையென்றும் நினைத்தார். மகாராஜனே! சிறந்த அறிவுள்ளவரும் அறிபடுஷ்யாத ஸ்வரூபத்தையுடையவரும் எப்பொழுதும் ஸத்யத்திலும் தர்மத்திலும் பற்றுள்ளவரும் மகாயோகியும் வீரியமுள்ளவருமான அந்த ஈச்வரர் அப்படிப்பட்ட தவத்தினலும் தனத்தினலும் நிறைந்த மூவுலகங்களிலும் விளங்கினர். பிறகு, யோகத்தையே உருவமாகக் கொண்ட பிரகாசியானவர் தியானயோகத்தை அடைந்தார். அப்பொழுது சுக்கிரர் மிகவும் வருத்தமுற்று உதரத்தில் மறைந்தார். மகாயோகியான அவர் அங்கிருந்துகொண்டே தேவரான ஈசரை ஸ்தோத்ரமும் செய்தார். அவர் வெளியில் வர விரும்பியும் அந்த ஈசரால் தடுக்கப்பட்டார். பகைவர்களை நாசம் செய்பவனே! பிறகு, மஹாமுனிவரான சுக்ரர் அப்படி உதரத்திலிருந்துகொண்டே, 'எனக்கு அனுக்ரகம் செய்யவேண்டும்' என்று அடிக்கடி சொன்னர். தேவச்ரேஷ்டராகிய மஹாதேவர், எல்லாத்துவாரங்களையுமடைத்துக்கொண்டு அவரை நோக்கி, "சிசனத்தால் வெளியில்போ' என்று சொன்னர். எவ்வும் மறைக்கப்பட்ட அந்த முனிவர் அந்தத்துவாரத்தைக் காணுமல் தேஜஸினல் எரிக்கப்பட்டு இவ்வும் அவ்வும் சுற்றினர். (முடிவில்) அவர் சிசனத்தால் வெளிவந்து சுக்கிரத்தன்மையை அடைந்தார். அந்தக்காரியத்தால் ஆகாயத்தின் நடுவால் போகவில்லை. அதனலேயே மஹாமுனிவரான சுக்ரர் தேவர்களிற்சேராமல் இந்திரனுடையபலத்தின் குறைவிற்காக அஸுரர்களுக்குப் புரோகிதரானர். வெளியில் வந்தவரும் தேஜஸினல் ஜ்வலிக்கிறவருமான அவரைப் பார்த்துவிட்டு ஈசவரர் கோபம்மேலிட்டுச் சூலத்தைக்கையிலேந்திக் கொண்டு நின்றார். (அப்பொழுது) தேவியானவள் கோபத்தையடைந்தவரும் தனக்குப் பதியுமான அந்தப்பசுபதியைத் தடுத்தாள். தேவியினலே சங்கரரானவர் தடுக்கப்பட்டபொழுது சுக்ராசாரியர் தேவிக்குப் புத்திரத்தன்மையை அடைந்தார். தேவியானவள், 'எனக்குப் புத்திரத்தன்மையை அடைந்த இவன் உம்மால் கொல்லத்தக்கவனே

அல்லன். தேவரான் உம்முடைய உதரத்திலிருந்து வெளிவந்த ஒரு வனும் நாசத்தையடையத் தக்கவனல்லன்' என்று சொன்னாள். அரசனே! பிறகு, சங்கரர் தேவியினால் சாந்தஷத்தையடைந்து சிரித்துக்கொண்டு, 'இவன் இஷ்டப்படி போகட்டும்' என்று பலமுறை சொன்னார். பிறகு, புத்திமானும் மகாமுனிவருமாகிய சுக்ராசாரியர் வரத்தையளிக்கின்றவரான தேவரையும் தேவியான உமையையும் நமஸ்கரித்து விரும்பிய இடத்தையடைந்தார். ஐயா! பாதச்சேஷ்டனே! நீ என்னிடம்கேட்ட மஹாத்மாவான பார்க்கவருடைய இந்தச் சரித்திரமானது உனக்குச் சொல்லப்பட்டது" என்று சொன்னார்.

இருநூற்றுத்தொண்ணூற்றுரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

(பராசரகீதை; ச்ரேயஸுக்குரியகாரணங்கள்.)

யுதிஷ்டிரர், "நீண்ட ஆகாயமுடையவரே! இனி எது [1]ச்ரேயஸோ அதை எனக்குச் சொல்லும். ஓ! பிதாமஹரே! அமிருதத்தைப்போல உம்முடைய வார்த்தையைக் கேட்பதில் போதுமென்ற எண்ணம் உண்டாகவில்லை. ஓ! புருஷர்களில் மிகவும் சிறந்தவரே! புருஷனானவன் எந்தச் சுபகர்மத்தைச் செய்து இகத்திலும் பரத்திலும் சிறந்த ச்ரேயஸையடைவானோ அதைச் சொல்லும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்.

"இந்த விஷயத்தில் முன் நடந்தபடி உனக்குச் சொல்லுவேன். பெரும்புகழுள்ள ஜனகராஜர் மஹாத்மாவான பராசரரை நோக்கி, 'இகலோகத்திலும் பரலோகத்திலும் ஸகலப்பிராணிகளுக்கும் எது நன்மையைத் தருவதோ, எது அறியவேண்டியதாகுமோ அதை நீர் எனக்குச் சொல்லும்' என்று கேட்டார். அப்பொழுது தவத்தையுடையவரும் எல்லாத்தர்மானுஷ்டானத்தையுமறிந்தவருமான அந்த முனிவர் அரசரிடம் அனுக்ரஹபுத்தியுடன் பின்வருமாறு சொல்லானார். '(தன்னால்) செய்யப்பட்ட தர்மமே இகலோகத்திலும் பரலோகத்திலும் நன்மையைத் தருவது. வித்வான்கள் சொல்லிய படி அதைப்பார்க்கிலும் மேலானது இல்லை. "மனிதன் தர்மத்தையனுஷ்டித்து ஸ்வர்க்கலோகத்தில் பூஜிக்கப்படுகிறான்" என்று

1 நன்மை.

வித்வான்கள் சொல்லுகின்றனர். ஓ! அரசர்களில் மிகச்சிறந்தவனே! தேகிகளுக்குத் தர்மரூபமான கர்மவிதியானது (ஏற்பட்டிருக்கிறது.) அதனிமித்தம் இவ்வுலகத்தில் அவர்கள் ஆச்சமத்தோடு கூடியவர்களாகித் தங்கள் கர்மங்களைச் செய்கின்றார்கள். ஐயா! இந்த உலகத்தில் நான்குவிதமான ஜீவனோபாயம் விதிக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் எந்த ஜீவனோபாயத்திலிருக்கின்றார்களோ அதுவும் காமத்தால் நடக்கின்றது. நாலுவிதமான முறைகளால் புண்ணிய பாபகர்மத்தைச் செய்து பாஞ்சபௌதிகமான சரீரங்களில் இழிக்கப்பட்ட பிராணிகளுக்குப் பலவிதமான கதியானது ஏற்படுகிறது. பாத்திரமானது ஸ்வர்ணமயமாகவும் வெள்ளிமயமாகவும் பூசப்படுகிறதுபோலப் பிராணியானது பூர்வகர்மங்களின் வசத்தையடைந்து (அவைகளால்) பூசப்படுகிறது. விதையில்லாமல் ஒன்றும் உண்டாகிறதில்லை. (கர்மாவைச்) செய்யாமல் ஸுகமானது உண்டாகிறதில்லை. மனிதன் தேகநாசத்தையடைந்தபிறகு, ஸுகிருதங்களால் ஸுகத்தை அடைகிறான். ஐயா! [1]தெய்வத்தை நான் பார்க்கவில்லை. தெய்வத்திற்குப் பிரமாணமில்லை. தேவர்களும் கந்தர்வர்களும் தானவர்களும் பூர்வகர்மவாஸனையினாலன்றோ மிகவும் ஸித்தியை அடைந்திருக்கின்றார்கள்? ஜனங்கள் இறந்துவிடுகிறார்கள். செய்யப்படாதகர்மத்தை எப்பொழுதும் நினைக்கிறதில்லை. அவர்களோ அந்தக்கர்மாவினுடைய பயனையடையும்பொழுது நான்குவிதமான கர்மாவையும் நினைக்கிறார்கள். உலகவ்யவஹாரத்தையடுத்த சப்தமே மனத்தின் சமாதானத்திற்காக வேதத்தையடுத்ததாகச செய்யப்பட்டிருக்கிறது. ஐயா! இது பெரியோர்களுடைய நினைவுமில்லை. (மனிதன்) [2]நேத்திரத்தினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் கிரியையினாலும் செய்கிற நான்குவிதமான கர்மாவின்பயனை (மறுபடி) அடைகிறான். ஓ! அரசனே! (மனிதன்) புண்யத்தையோ பாவத்தையோ இடைவிடாமலும் கலந்ததாகவும் அடைகிறான். இந்தக்கர்மத்திற்கு நாசம் இல்லை. அப்பா! ஒருஸமயம் ஸம்ஸாரத்தில் முழுகின மனிதனுடைய புண்யமானது (அவன்) தக்கத்தையனுபவித்து விடுபடும் வரையில் [3]அசைவற்றது போலிருக்கின்றது. பிறகு, (அனுபவத்தால்) தக்கநாசத்தைச்செய்து விட்டுப் புண்யகர்மத்தின் பயனை அனுபவிக்கின்றான். புண்ணியத்

---

1 மீமாம்ஸகமதம்.

2 மற்ற இந்திரியங்களையும் உபலக்ஷணமாகக் கொள்ளவேண்டும்.

3 பயனை அளியாமல் உலைக்கூடம்போலிருப்பது கூடஸ்தம். அதுபோல இருப்பதென்றால் பயனளியாமலிருக்கின்றது.

தின் பலன் முடிந்தபிறகு பாவத்தை அனுபவிக்கின்றான். ஓ! அரசனே! அதை அறியக்கடவாய். அடக்கம், பொறுமை, தைர்யம், பலம், ஸந்தோஷம், உண்மையுரைத்தல், லஜ்ஜை, கொல்லாமை, சோர்வில்லாமை, ஸமர்த்தியம் என்னுமிவைகள் ஸுகத்தைக் கொடுக்கின்றன. புண்யத்திலும் பாவத்திலும் பிராணியானது நிலைத்திராது. (ஆகையால்) வித்வானனவன் எப்பொழுதும் மனத்தை [1]ஸமாதானஞ் செய்வதில் முயற்சிசெய்யவேண்டும். இவன் வேறொருவனுடைய புண்யத்தையும் பாபத்தையும் அடைகிறதில்லை. எவ்விதக் கர்மத்தைச் செய்கிறானோ அவ்விதக்கர்மபலனை அடைகிறான். மனிதன் ஸுகதுக்கங்களுக்குக் காரணமான புண்ணிய பாவங்களைச் செய்துவிட்டு வேறு வழியில் செல்லுகின்றான். பூமியில் இவனுடன் சேர்ந்த ஜனங்களெல்லாரும் வேறுவழியினாலேயே போகின்றனர். மனிதன் பிறருடைய எந்தக்காரியத்தை வெறுப்பானோ அதைத் தான் செய்யக்கூடாது. அப்படி வெறுப்பவன் அவ்விதக் காமத்தைசெய்தால் பரிஹாஸத்தை அடைவான். ஓ! அரசனே! பயமுள்ளவனுனை க்ஷத்ரியனும் எல்லாவற்றையும் பக்ஷிக்கின்ற பிராம்மணனும் (தனலாபத்தில) இசசையில்லாத வைசியனும் சோமபேறியான சூத்ரனும் ஒழுக்கமில்லாத விதவானும் ஆசாரகுறைவுள்ள உயாகுலத்தவனும் ஸத்கியத்திலிருந்து தவறினவனுமை உத்ஸாகமுள்ள பிராமணஸ்திரீயும் ஆசையுள்ளயோகியும் தனக்காகச சமையல செய்கின்றவனும் (ஸபையில்) பேசும்மூடனும் அரசனில்லாத ராஜ்யமும யோகமில்லாமல் பிரஜைகளிடம் ஸ்னேகமதைவிடவிரக்தனும ஆகிய இவர்களெல்லோரும் துக்கிக்கப்படத்தக்க நிலைமையை அடைகின்றார்கள்.

இருநூற்றுத்தொண்ணூற்றேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பராசரகீதை; ச்ரேயஸுக்குரிய காரணமுதலியன.)

[2] ஒரு மனிதன் இந்திரியவிஷயங்களாகிற குதிரைகளையுடைய மனத்தின் சங்கற்பமாகிய தேரையடைந்து ஞானத்தாலுண்டான்

---

1 ஓரிடத்திலேயே நிலைக்கச்செய்தல்.

2 'விஷயங்களாகிற குதிரைகள் சங்கற்பமாகிற தேரிலிருக்கிற மனிதனைக் கண்டபடி இழுத்துக்கொண்டு போய்விடும். அறிவாகிறகடிவாளத்தைக் கையிற்பிடித்துக்கொண்டு ஸுவதானமாகச் செல்லவேண்டும்' என்பது.

கஷ்டவாளங்களால் செல்லுகின்றவனே அவன் புத்திமான். [1]ஜீவனில்லாதவனும் (சேவையை) அடைந்த மனமுள்ளவனுமாயிருப்பவனுக்குப் பிராம்மணன் கையால் நிறைவேறின சேவையானது புகழப்படுகின்றது. ஸமானமாயிருக்கிற ஒருவருக்கொருவரிடத்திலிருந்து உண்டாவது சிலாகிக்கப்படுகிறதில்லை. ஓ! அரசனே! மனிதனானவன் அடையமுடியாத ஆயுளை அடைந்து (வீணாகக்) கழிக்கக்கூடாது. புண்ணியகர்மத்தினால் மேன்மையின் பொருட்டு முயற்சிசெய்யவேண்டும். வர்ணங்களினின்றும் கழிவினவன் மேன்மையையடைகிறதில்லை. மேன்மையையடைந்து ராஜஸமான கர்மத்தையனுஷ்டிக்கிற மனிதன் புண்ணிய கர்மத்தாலுண்டாகின்ற வர்ணத்தின் மேன்மையை அடைகிறதில்லை. தாழ்வுபமான வர்ணமேன்மையை அடையாமல் பாவச் செய்கையால் தன்னைக் கெடுத்துக்கொள்வானல்லவா? அறிவுமையால் செய்யப்பட்ட பாவத்தைத் தவத்தினாலேயே போக்கவேண்டும். தன்னால் (அறிந்து) செய்யப்பட்ட பாவச்செய்கையானது பாவத்தையே கொடுக்கின்றது. ஆகையால், துக்கமாகிறபயனை அளிக்கின்ற தீவினையைப் பற்றக்கூடாது. புத்திமானானவன் பெரியபயனுள்ளதாயினும் பாவஸம்பந்தமுள்ள காரியத்தை, பரிசுத்தனாயிருப்பவன் [2]ராஜஸனாயிருப்பவனை எப்படி ஆச்சரியக்கக்கூடாதோ அப்படி ஆச்சரியக்கக்கூடாது. பாவசெய்கைக்குப் பெரியகஷ்டத்தைப் பயனாக நினைக்கிறேன். அந்தப் பாவத்திலிருந்து திரும்பினவனுக்குச் சரீரமே விருப்பமாயிருப்பதில்லை. ஒழிவுண்டாகாத அற்புதத்தியுள்ள மனிதனுக்கும் மரணகாலத்தில் மிகப்பெரிய பரிசுத்தாபமானது உண்டாகிறது. ஓ! அரசனே! சுத்தமானவஸ்திரமானது (அசுத்தமானால்) முயற்சியால் சுத்தம் செய்யப்படுகிறது. கறுப்பு வஸ்திரமோ சுத்தம் பண்ணப்படுகிறதில்லை. [3]பாவமும் இவ்விதமென்பதை என்னிடமிருந்து அறியக்கடவாய். புத்திபூர்வமாகவே பாவத்தைச் செய்துவிட்டுப் பிராயச்சித்தத்தைச் செய்வதற்குச் சுபகர்மத்தையே அனுஷ்டிக்கின்ற மனிதன் இரண்டையும் தனித்தனி

---

1 'தர்மஜ! யோகத்தை அவலம்பிக்காத' மனமுள்ளவனும் விருத்தியற்ற அனுமானவனுக்கு ஞானியிடத்திலிருந்து எற்பட்டபகிமார்க்கமானது புகழப்படுகிறது. தனக்குச் சமமானவனிடத்திலிருந்து உண்டானால் புகழப்படுகிறதில்லை' என்பது பழையவுரை.

2 'குசலிகம்' என்பது மூலம்; 'ஒருவித்தசண்டாளன்' என்பது பழைய உரை; 'லீடனே' என்பர் லெர்.

3 'அஜ்ஞானத்தால் செய்து பச்சாத்தாபமுள்ளவனுக்குப் பரிகாரமுண்டு" என்பது.

யாக அனுபவிப்பான். சாஸ்திரத்தின் வசனத்தினுலே பிரம்மவித்துக்களான பிராம்மணர்கள், 'அறியாமையால் செய்யப்பட்ட ஹிம்ஸையை [1]அஹிம்ஸையானது விலக்குகிறது' என்று சொல்லுகிறார்கள். அப்படிப்போல, 'இவன் விரும்பிச்செய்த ஹிம்ஸையை அஹிம்ஸையானது விலக்குகிறதேயில்லை' என்று பிரம்மசாஸ்திரத்தை அறிந்தவர்களும் பிரம்மவாதிகளுமான பிராம்மணர்கள் சொல்லுகின்றார்கள். நானே பாவமில்லாமல் அறிந்து செய்யுங் காரியத்தைக் குணமுள்ளதாகக் கருதுகிறேன். ஏனெனில், ஸுக்ஷ்மமாயிருந்தாலும் மனத்துடன் விசாரித்துப் புத்தி பூர்வமாய்ச செய்யப்பட்ட கர்மங்கள் அதற்குத்தக்கபடி பயனையளிக்கின்றன. ஓ! தர்மத்தையுணர்ந்தவனே! கர்மமானது அறியாமல் நித்தியமாக அனுஷ்டிக்கப்பட்டு விருத்தியடைந்ததாயிருந்தாலும் அற்பப்பயனுள்ளதாகின்றது. ஆகையால், உக்கிரமானகர்மம் வேண்டாம். தேவதைகளாலும் முனிவர்களாலும் செய்யப்பட்ட கர்மங்களைத் தர்மாத்மாவானவன் செய்யக்கூடாது; கேட்டு நிந்திக்கவும் கூடாது. ஓ! அரசனே! எவன் தன்னுடைய சக்தியை மனத்தினுல் ஆலோசித்துத் தெரிந்து சுபகர்மத்தைச செய்கின்றானே அவன் மங்களங்களைப் பார்க்கின்றான். புதுக்கலயத்தில வைக்கப்பட்ட ஜலமானது குறைந்துவிடுகின்றது. பழையகலயத்தில் வைக்கப்பட்டால் முன்போலவே குறைவின்றியிருக்கிறது. ஜலத்தோடுகூடிய அதிலேயே விடப்பட்ட வேறு ஜலம் [2]விருத்தியை அடைகின்றது. ஓ! அரசனே! அதுபோல இவ்வுலகத்தில் புத்தி பூர்வமாகச் செய்யப்பட்ட கர்மங்கள் (குறையாமல்) ஸமமும் அதிகப் புண்ணியமுமாகின்றன. அரசன் பகைவர்களையும் வணங்காதவர்களையும் ஜயிக்கவேண்டும். மன்னுயிர்களை நன்றுகக் காக்கவேண்டும். அநேக யஜ்ஞங்களால் அக்னியைப் பூஜிக்கவேண்டும். முடிவிலாவது கடவிலாவது வனத்தையடைந்து வஸிக்கவும் வேண்டும். மனிதன் அடக்கமுள்ளவனும் தர்மசீலனுமாயிருந்து மற்றப் பிராணிகளையும் தன்னைப்போலப் பார்க்கவேண்டும். ஓ! அரசனே! பெரியோர்களைச சத்தியத்தோடும் ஒழுக்கத்தோடும் தன் சக்திக்குத் தக்கபடி ஸுகமாகப் பூஜிக்கவேண்டும்.

---

1. இனி ஹிம்ஸை செய்யக்கூடாதென்கிற நிச்சயத்துடனிருத்தல்.
2. மூன்று சொற்கள் விடப்பட்டன.

இருநூற்றுத்தொண்ணூற்றெட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பரசரகீதை; இயன்றவரை தர்மஞ்செய்வதே மேன்மைக்குக் காரணமென்னும் விஷயத்தில் சிலரை உதாகரித்தது.)

யார் யாருக்கு உபகரிக்கிறான்? யார் யாருக்கு (எதை)க்கொடுக்கிறான்? மனிதன் தனக்காகத் தானுகவே எல்லாக் கர்மத்தையும் செய்கிறான். கௌரவமிழந்தவனே ஒரே உதரத்தில் பிறந்த ப்ராதா வாயிருந்தாலும் ஸ்நேகதத்தைப் பாராட்டாமல் தள்ளிவிடுவான். தன்னைச்சேராத மற்றவனைத் தள்ளக்கேடபானேன்? சிறந்தவனுக்குத் தானமிடுசெய்வதும் சிறந்தவனிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதும் சமானமாயிருக்கின்றன. அவைகளில் ப்ராம்மணனுக்குக்கொடுப்பவனுடைய அந்தத் தானமானது மிகவும் புண்ணியமாயுள்ளது. நான்குவர்ணங்களும் நியாயமாகக்கிடைத்த தனத்தை நியாயமாகவே விருத்திசெய்து தாமத்திற்காக முயற்சியுடன் நன்கு காக்கவேண்டுமென்பது உறுதி. தர்மத்தைவிரும்புகிறவன் ஹிம்ஸையுள்ள கர்மத்தினால் தனத்தைத் தேடக்கூடாது. தனவிருத்தியைக்கருதாமல் சக்திக்குத்தக்கபடி எல்லாக்கார்யங்களையும் செய்யவேண்டும். சுத்தமான குளிர்ந்தஜலத்தையாவது அக்னியில்சுடவைத்த ஜலத்தையாவது பசியால்வருந்தின அதிதிக்குச சக்திக்குத்தக்கபடிகொடுப்பவன் பயனையடைகிறான். மகாதமாவான ரந்திதேவன் உலகத்தில் விரும்பினசித்தியை அடைந்தான். அவன் கனிகளாலும் இலைகளாலும் கிழங்குகளாலும் முனிவர்களைப் பூஜித்துவந்தான். அவ்விதமான பழங்களாலும இலைகளாலுமே சைப்யனென்னும் அரசனும் [1]மாடானுடன்கூடின சூரியனைச் சந்தோஷிக்கசெய்தான். அதனால் அவன் மேலானஸ்தானத்தை அடைந்தான். மனிதன், தேவதைகள், அதிதிகள் வேலைக்காராகள் பித்ருக்கள் தான் ஆகிய இவர்களுக்குக் கடனுள்ளவனகப் பிறக்கிறான். ஆகையால், தன்னுடையவேதத்தை ஓதுவதால் மகரிஷிகளினிடமிருந்தும் யாகத்தினால் தேவர்களிடமிருந்தும் சராத்ததானத்தினால் பிதருக்களிடமிருந்தும் பூஜையினால் அதிதிகளிடமிருந்தும் யாகத்தில்மீதியான ஆகாரத்தினாலும் பாலனத்தினாலும் தன்னிடமிருந்தும் கடனில்லாமலிருக்கலே அடையவேண்டும்.

1 ஸூர்யனுடைய பக்கத்திலுள்ளவன்.

பிருத்யவர்க்கத்திற்குமுதலிலிருந்து மூறையாக எல்லாக் காரியத்தை யும் செய்யவேண்டும். தனமில்லாதவர்களும் முயற்சியால் நன்கு ஸித்தியடைந்திருக்கின்றனர். முனிவர்கள் அக்கினியில் நன்குஹோ மம்செய்து ஸித்தியடைந்தார்கள். ஓ! மஹாபாஹுவே! [1]ரிசிகரின் புத்திரனை சுசுசேபன் யஜ்ஞத்திலபாகமுடையவர்களான தேவர் களே ரிக்குக்களால்ஸ்துதித்து விசுவாமித்ரருக்குப் புத்திரனுதலை அடைந்தான். வீரியமாயிருப்பதையடைந்த உசநஸ் தேவியைத்துதித் துத் தேவதேவருக்கு அருள்வரசெய்து ஒளி நிரம்பப்பெற்று ஆகா யத்தில் சந்தோஷிக்கிறார். அஸிதர், தேவலர், நாரதபாவ்தர்கள், கக்ஷீவான், ஜமதகனியின் புத்திரரான பரசுராமர், மனுவசமுள்ள தாண்டியர், வஸிஷ்டர், ஜமதகனி, விசுவாமித்ரா, அத்ரி, பரத்வாஜர், ஹரிசமசரு, குண்டதாரர், சருதச்சவஸ் இந்தமஹரிஷிகள் ஸமாதி யடைந்து ரிக்குக்களாலே விஷ்ணுவைத்துதித்துத் தவத்தினுலே புத்திமானை அவருடைய அருளைப்பெற்று ஸித்தியை அடைந்தார் கள். தாழ்ந்தவர்களும் சிறந்த அவரையே துதித்து மேன்மையை அடைந்தார்கள். இவ்வுலகில் கெடட செய்கையைச செயது மேன் மையைத் தேடக்கூடாது. தாமத்தாலவந்த அர்த்தங்கள் ஸத்யமான வை. அதர்மத்தாலவந்தவைகளை நிராகரிக்கவேண்டும. உலகத்தில் சாசவதமான தாமத்தைத தனதாகில் விரும்பத்தால தளைக்கூடாது. ஓ! ராஜசரேஷ்டனே! பிரபுவே! எல்லாவேதங்களும மூன்றுஅக்னி களிலிருக்கின்றன. ஆதலால அக்னியை ஆதானஞசெய்தார்மாத்மா வே பூண்ணியஞசெய்கின்றவர்களில உத்தமன். அனுஷ்டானம் குறை யாமலிருக்கிற அந்தப பிராமணன்தான் ஆஹிதாக்னியாயுள்ளவன். அனுஷ்டானமில்லாதவன் அநாஹிதாக்னியாயிருப்பது சிறந்தது. அனுஷ்டானமில்லாத அக்னிஹோத்ரம சிறந்ததன்று. ஓ! நரசிரேஷ் டனே! அக்னியும் ஆத்மாவும் பெற்ற மாதாவும பிதாவும் குருவும் அவரவர்களுக்குத் தக்கபடி உபசரிக்கத்தக்கவர்கள். எவன் அபி மானத்தைவிட்டுப் பொரியோர்களை ஸேவித்து வித்வானும் காமமற்ற வனுமாகி ப்ரீதியுடன் (உலகத்தைப்) பார்க்கின்றனனே, ஸாமர்த்திய மில்லாமல் தர்மத்துடன்கூடி (ஒரு பிராணிக்கும்) துன்பஞ் செய்யாம லிருக்கிறனே அந்த ஆரியன் நல்லோர்களால் பூஜிக்கப்படுகிறன்.

---

1 'மூலத்தில், 'அஜீகர்த்தஸுதன்' என்று இருக்கவேண்டும்' என்பது பழைய்வுரை.

இருநூற்றுத்தொண்ணூற்றேன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பராசரகீதை ; வர்ணதர்மங்கள்.)

சூத்ரஜாதிக்கு மூன்றுவர்ணங்களிலிருந்தும் ப்ரீதியுடன்கொடுக்கப்பட்ட ஜீவனமானது சிறந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. (அது அவர்களை) எப்பொழுதும் தர்மத்திற்சிறந்தவர்களாகச்செய்கின்றது. சூத்ரனுக்குத் தன்னுடைய தாதை மூதாதைதொட்டு நிலைத்த ஜீவனமில்லையானால் (மூன்றுவர்ணத்தோர்களுடைய) பணிவிடையையே செய்யவேண்டும். வேறுவழியாக ஜீவனத்தைத் தேடக்கூடாது. எப்பொழுதும் எல்லாநிலைமைகளிலும் தர்மத்தையறிந்த ஸாதுக்களோடு சேர்ந்திருப்பதே சோபிக்கின்றது. அஸத்துக்களோடு சேர்க்கையானது விளங்காதென்பது என் எண்ணம். உதயபருவதத்திலுள்ள திவியமானது (ஸூர்ய) ஸம்பந்தத்தால் விளங்குவதுபோலத் தாழ்ந்த ஜாதியிற்பிறந்தவனும் ஸத்துக்களின் சேர்க்கையால் விளங்குகிறான். வெளுப்பான வஸ்திரமானது எந்த வர்ணத்தினுலே சாயமேற்றப்படுகின்றதோ அந்த ரூபத்தை அடைகின்றது. அப்படியே இதையும் என்னிடமிருந்து அறியக்கடவாய். ஆகையால், குணங்களில் நீ பற்றுதல் செய்யவேண்டும்; ஒருபோதும் தோஷங்களில பற்றக்கூடாது. இவ்வுலகில் மரிக்கும் தன்மையுள்ள ஜனங்களுடைய மிகவும் சஞ்சலமாயிருக்கிற உயிரானது அநித்யமன்றே? ஸுகத்திலேயோ துக்கத்திலேயோ இருந்துகொண்டு ஸமர்த்தனுகிச் சுபகர்மங்களையே தேடுகின்றவன் இவ்விடத்தில் மங்களங்களைப் பார்க்கிறான். பெரியபயனையுடையதாயினும் தர்மத்தினின்றும் விலகிய கர்மத்தைப் புதிசாலியானவன் செய்யக்கூடாது. அது இம்மையில் ஹிதமாகச் சொல்லப்படுகிறதில்லை. சிறுபயனையளிப்பதாயினும் தர்மமுள்ள கர்மமானது சந்தேகமில்லாமல் செய்யத்தக்கது; அது மிகவும் ஸுகத்தைத் தரும். எந்த அரசன் ஆயிரம் பசுக்களையபகரித்து ரக்ஷிக்கமாட்டாமல் தானம் செய்வானே அந்த அரசன் (தோதானஞ் செய்தவனென்கிற) சப்தமாத்திரமானே பயனையடைந்து நிருடனுகிறான். பிரம்மாவானவர் முதலில் உலகங்களால் பூஜிக்கப்பட்டதாதாவைச் சிருஷ்டித்தார். தாதாவானவர் உலகங்களைத் தரிப்பதில் ஸமர்த்தரான (பர்ஜன்யனென்கிற) ஒரு புத்ரரைச் சிருஷ்டித்தார். வைச்யர் அவரைப் பூஜித்து மிகவும் செல்வப்பெருக்கைத்தரும் கிருஷிமுதலிய

வற்றைச் செய்யவேண்டும்; க்ஷத்ரியர்கள் காக்கவேண்டும்; பிராம்மணர்கள் டம்பமும் கபடமும் கோபமுமில்லாமல் ஹவ்யகவ்யங்களைச் செய்துகொண்டு அனுபவிக்கவேண்டும்; சூத்ரர் (பூமியின்) சுத்தி முதலானவற்றைச் செய்யவேண்டும். இப்படியானால் தர்மம் நசிக்கிறதில்லை. ஓ! அரசரிற்சிறந்தவனே! தர்மம் நசியாமலிருந்தால் பிரஜைகள் ஸுகமுடையவைகளாகின்றன. பிரஜைகளுடைய ஸுகித்தால் ஸ்வர்க்கத்தில் தேவர்கள் ஸந்தோஷிக்கிறார்கள். ஆகையால், இவ்விதம் தர்மத்தால் ரக்ஷிக்கின்ற அரசனும், அத்தியயனஞ்செய்கின்ற வேதியனும், பொருள்தேடுவதில் முயற்சியுள்ள வைசியனும், இந்திரியங்களை ஜயித்து எப்பொழுதும் பணிவிடைசெய்கின்ற சூத்ரனும் பூஜிக்கப்படுகின்றார்கள். அரசனே! இதற்கு வேறுவிதமாக நடப்பவன் தன்னுடைய தர்மத்திலிருந்தும் குறைவையடைகின்றான். மனவருத்தத்தோடு கொடுக்கப்பட்ட சோகிகளும் பெரும்பலனுடையவைகள். நியாயமாகச் சம்பாதிக்கப்பட்டவைகளும் ஆயிரக்கணக்காகக் கொடுக்கப்பட்டவைகளுமான மற்றத்திரவியங்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பிராம்மணர்களைத் தினந்தோறும் பூஜித்து அவர்களுக்குத் தானஞ்செய்யும் அரசன் அதற்குத்தக்கபடி நிலத்தை அனுபவிப்பான். (ஏற்பவர்களின்) இருப்பிடம் சென்று கொடுப்பதைத் தர்மமானதும் சிலாக்யமுமாகச் சொல்லுகின்றார்கள். கேட்டபின் கொடுப்பதை மத்திய பலனைச் சொல்லுகின்றார்கள். அவமதிப்போடும் அச்சத்தையோடும் கொடுக்கும் தானத்தை ஸத்யவாதிகளான முனிவர்கள் அதமமாகச் சொல்லுகின்றார்கள். (ஸம்ஸாரஸாகரத்தில்) முழுகுகின்ற மனிதன் எப்பொழுதும் பலவித (உபாய)த்தால் தாண்டவேண்டும். (முக்தி கிடைக்குமோ கிடைக்காதோவென்கிற) ஸம்சயத்தினின்றும் விடுபடுமாறு முயற்சிசெய்யவேண்டும். பிராம்மணன் அடக்கத்தினால் விளங்குகிறான். க்ஷத்ரியன் வெற்றியினால் விளங்குகிறான். வைச்யன் தனத்தினால் விளங்குகிறான். சூத்ரன் நித்யம் வேலைத்திறமையினால் விளங்குகிறான்.

மூன்றாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பாரசரகீதை; முப்புரமெரித்த கதை.)

ப்ரதிக்ரஹத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தனங்கள் பிராம்மணனிடத்திலும் யுத்தத்தில் ஜயத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தனங்கள்

க்ஷத்ரியனிடத்திலும் நியாயத்தால் ஸம்பாதிக்கப்பட்ட தனங்கள் வைச்யனிடத்திலும் பணிசெய்தலால் சம்பாதிக்கப்பட்ட தனங்கள் சூத்ரனிடத்திலும் அற்பமாயிருந்தாலும் தர்மத்தில் உபயோகித்தால் பெரும்பயனுள்ளவைகளாக ச்லாகிக்கப்படுகின்றன. நித்யம் மூன்று வர்ணத்தார்களுக்கும் ஏவினதைச் செய்வோன் சூத்ரனெனச் சொல்லப்படுகிறான். பிழையில்லாத பிராம்மணன் க்ஷத்ரிய தர்மத்தை யடைந்தும் வைச்யதர்மத்தை யடைந்தும் இழிவையடையான். எப்பொழுது பிராம்மணன் சூத்ர தர்மத்தை யுடையவனாவனோ அப்பொழுது இழிவையடைகின்றான். எப்பொழுது ஜீவனமார்க்கம் ஏற்படவில்லையோ அப்பொழுது சூத்ரனுக்கும் வியாபாரம் பசு மேய்த்தல் (கொல்லுதசசு முதலான) சில்பவேலையால் ஜீவனம் ஆகிய இம்மூன்றும் விதிக்கப்படுகின்றன. உலகில் நிந்திக்கப்பட்ட வையான நாடகத்தில் வேஷந்தரித்தலும் [1]பதுமையாட்டலும் மது மாமிசங்களை விற்பதும் உலோஹம் தோல் இவற்றை விற்றலும் (தன் முன்னோர்களால் செய்யப்படாமல்) புதிதாகத் தான் செய்யக் கூடாது. முன்னோர்களால் செய்யப்பட்ட இந்தக் கர்மத்தையுடைய வமசத்திலிருந்தும் இதைத் தள்ளுகிறவனுக்குப் பெரிதான தர்மம் என்று கேள்வி. உலகதத்தில் ஸித்தியடைந்த புருஷன் செருக்குற்ற மனத்துடன் எந்தப் பாவசர்மத்தைச செய்கிறானே அதுவும் (பிறரால) கொள்ளத்தகாததாகச சொல்லப்படுகின்றது. (அப்படியுமேற் படுமோவென்றால்) அடங்கினவர்களும் தர்மத்தைப் பிரதானமாக வுடையவர்களும் நியாயமான தர்மத்தை அனுஸரித்தவர்களுமான ப்ரஜைகள் (குறையைத் தெரிவிக்கிற) தண்டமான ரூபமான சிக்ஷை யுடையவர்களாகப் புராணங்களில் சொல்லப்படுகிறார்களல்லவா? ஓ! அரசனே! மனிதர்களுக்கு எப்பொழுதும் இவ்வுலகில் தர்மந்தான் சிலாகிக்கப்படுகின்றது. உலகத்தில் தர்மத்தால் பெரியோர்களான மனிதர்கள் குணங்களையே அனுஷ்டிக்கின்றார்களல்லவா? ஓ! நரபதியே! அஸாரர்கள் அந்தத் தர்மத்தைப் பொறுக்கவில்லை. அப்பொழுது அவர்கள் வரவர விருத்தியடைந்து பிரஜைகளுள் புகுந்தார்கள். அந்தப் பிரஜைகளுக்குத் தர்மத்தை நாசஞ்செய்கின்ற கொழுப்பானது உண்டாயிற்று. அதன்பிறகு, கொழுத்தமனமுடைய அந்தப்பிரஜைகளுக்குக் கோபம் உண்டாயிற்று. குரோதத்தாலாக்ரமிக்கப்பட்ட பிரஜைகளுடைய நடக்கை லஜ்ஜையைக் கொடுக்கக் கூடியதாயிற்று. அரசனே! பிறகு, லஜ்ஜையும் நசித்தது. மோகம் உண்டாயிற்று. பிறகு,

1 'வேசினால் பிழைப்பது' என்றும் கொள்ளலாம்.

மோகத்தால் சூழப்பட்ட அந்தப்பிரஜைகள் ஒன்றையொன்றுவருத்தி (மோகத்தை) விருத்திசெய்துகொண்டு முன்போல ஸுகமாக (த்தர்மத்தை) ப்பார்க்கவில்லை. பிறகு, அந்தப் பிரஜைகளையடைந்து அந்தத் திக்தண்டமானது (ஆடக்குவதில்) காரணமாகவில்லை. பிறகு, பிரஜைகள் பிராம்மணர்களையும் தேவர்களையும அவமதித்து விஷயங்களை அனுபவித்தன. இந்தச் சமயத்திலேயே தேவர்கள் தேவர்களுக்கெல்லாம் ஈசேஷ்டரும் ஈரரும் அனேக ரூபமுடையவரும் குணங்களால் மேலானவருமான பரமேசுவரரைச் சரணமடைந்தார்கள். பட்டனத்தோடு ஆகாயத்தில் செல்லுகிறவர்களான அந்த அஸுரர்கள் மூவராயிருந்தும் அந்தப் பரமேசுவரரால் தேவர்களால் விருத்தி செய்யப்பட்ட தேஜஸையுடைய ஒரேபாணத்தினாலே (அழித்துப்) பூமியில் தள்ளப்பட்டார்கள். பயங்கரனும் பயங்கரமான பராக்ரமுடையவனுமான அந்த அஸுரர்களுடைய தலைவன் மாத்திரம் இருந்தான். தேவர்களுக்குப் பயத்தையுண்டுபண்ணுகிற அவன் சூலபாணியான பரமேசுவரரால் கொல்லப்பட்டான். அவன் கொல்லப்பட்டபிறகு, மனிதர்கள் தங்கள் நிலைமையை அடைந்தார்கள். வேதங்களும் சாஸ்திரங்களும் பூர்வம்போலப் பிரகாசித்தன. பிறகு, ஸ்வர்க்கத்தில் தேவர்களுடைய ராஜ்யத்தில் இந்திரனுக்கு அபிஷேகம்செய்து ஸப்தரிஷிகளும் மனிதர்களுடைய க்ஷேமத்தையடைத்துவதில் சேர்ந்துகொண்டார்கள். பிறகு, ஸப்தரிஷிகளுக்கு மேலே விப்ருதுவென்கிற அரசனும் சேர்ந்துகொண்டான். பிறகு, க்ஷத்ரியர்களும் ராஜ்யங்களில் தனித்தனி அரசர்களானார்கள். பெரிய குலங்களில் பிறந்தவர்களுக்கும் மிகவும் முன்னேர்களான முதியோர்களுக்கும் இருதயத்திலிருந்து அஸுரத்தன்மையானது விலகவில்லை. ஆகையால், தொடர்ச்சியாய் வந்த அந்த அஸுரத்தன்மையினாலேயே பயங்கரமான பராக்ரமத்தையுடைய அரசர்கள் அஸுரர்களுக்குரிய காரியங்களையே செய்தார்கள். அவைகள் அவர்களிடத்திலேயே இருந்தன. அவர்கள் அவைகளையே நிலைபெறவும் செய்தார்கள். இப்பொழுதும் மிகவும் புத்தியில்லாத மனிதர்கள் அவைகளைச் செய்கின்றார்கள். ஓ! அரசனே! ஆகையால், நான் உனக்குச் சொல்லுகின்றேன். வித்வானனு புருஷன் சாஸ்திரத்தாலாராய்ந்து அநாதி ஸித்தமான பிரம்மஜ்ஞானத்தையடையவேண்டும்; ஹிம்ஸாரூபமான கர்மாவை விடவேண்டும். தர்மத்திற்காக மூறைதவறிக் கலப்பாகத் த்ரவியத்தைச் சம்பாதிக்கக்கூடாது. அது சூக்ஷ்மமாகச் சொல்லப்படுகிறதில்லை. அடக்கமுடையவனும் க்ஷத்ரியனும் இஷ்டர்களான

உறவினர்களையுடையவனுமான நீ அடக்கத்துடன் இவ்வார்த்தைகளைச் சொல்லி பிரஜைகளையும் வேலைக்காரர்களையும் புத்திரர்களையும் உன்னுடைய தர்மத்தோடு கவனித்து ரக்ஷி. இஷ்டர்களுடையவும் பகைவர்களுடையவும் சேர்க்கையில் ஸ்நேகமும் வைரமும் உண்டாகின்றன. அத்தனால், அனேகமாயிரம் பிறவிகளில் சுழலுகின்றான். ஆகையால், குணங்களில் பற்றுதல் வைக்கக்கடவாய். ஒரு விதத்தாலும் தோஷங்களில் பற்றுதல் வைக்காதே. [1]குணமில்லாதவனுயிருந்தாலும் எவன் துர்ப்புத்தியுள்ளவனே அவன் [2]தனக்கு அதிகனுயிருக்கிறான். ஓ! மஹாராஜனே! தர்மாதர்மங்கள் மனிதர்கள்விஷயத்தில் பிரவர்த்திக்கின்றன. மனிதர்களல்லாத மற்றப் பிராணிகள்விஷயத்தில் அப்படிப் பிரவிருத்திக்கிறதில்லை. மனிதனனவன் ஆசையுள்ளவனுயிருந்தாலும் ஆசையற்றவனுயிருந்தாலும் தாமஸிலனுயும் வித்வானுயும் எப்பொழுதும் உலகத்தில் [3]ஆகமபதனுயிருந்துகொண்டு பிராணிகளுக்கு ஹிம்ஸையில்லாமல் நடக்கவேண்டும். எப்பொழுது அவனுடைய மனமானது சங்கற்பம் நீங்கினதாகின்றதோ அப்பொழுது அஸங்கமே ஏற்படாது. க்ஷேமத்தையுமடைவான்.

முந்நூற்றேராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பராசரகீதை; தவத்தின் பெருமை.)

ஐயா! கிருஹஸ்தனுடைய இத்தத் தர்மவிதியானது சொல்லப்பட்டது. (இனி) தவத்தின் விதியைச சொல்லப்போகிறேன். தெளிவாகச் சொல்லுகின்ற என்னுடைய அந்த வார்த்தையைக் கேள். அரசனே! பெரும்பாலும் கிருகஸ்தனுக்கு ராஜஸ தாமஸ விருத்திகளாலும் ஸங்கத்தாலும் வரும் மமதையென்பது உண்டாகிறது. இம்மையில் மனிதனுக்கு விடுகளையடித்துக் கோக்களும் க்ஷேத்ரங்களும் தனங்களும் பத்னிகளும் புத்திரர்களும் வேலைக்காரர்களும் உண்டாகின்றனர். இவ்விதம் பிரவிருத்தித்து அவைகளை நித்யமாக

---

1 'அறிவீனன் நற்குணமற்றவனுயிருந்தாலும் தன்னிடம் மிக்க அன்புள்ளவனுயிருக்கிறான்' எனபது வேறுபாடம்.

2 தன் எண்ணத்தில் (அதாவது) தன்னை அதிகனுகத் தானே நினைக்கிறான்.

3 எல்லா ஜந்துக்களையும் தன்னைப்போலப் பாகுபடுபவன்.

வேறு நினைக்கின்றவனும் அநித்யமாக நினையாதவனுமான அவனுக்கு ராகமும் த்வேஷமும் விருத்தியடைகின்றன. அரசனே! ராகத்வேஷங்களாலாக்கிரமிக்கப்பட்டவனும் தனத்தின் வசத்தையடைந்த வனுமான மனிதனே மோகத்தாலுண்டான பற்றுதலென்பதும் அடைகின்றது. சிற்றின்பத்தை முக்கியமாகக்கொண்ட எல்லாரும் போகத்தை அனுபவிக்கிறவனைக் கிருதார்த்தனாக நினைத்துக் காதலினாலே சிற்றின்பத்தைக்காட்டிலும் வேறு லாபத்தைச் சிந்திக்கிறதில்லை. பிறகு, அவாவினால் பற்றப்பட்ட மனதையடைந்து ஸுகத்தால் (தன்)' குடும்பத்தை விருத்திசெய்கிறான். அந்தக குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகத் தனத்தைத் தேடவிரும்புகிறான். அவன் தெரிந்தே தன்தந்திறமாக அகாரியத்தைப பறறுகிறான். இளமைமுதல் உண்டான ஸ்நேகம மனதில் அதிகரித்தால அந்த ஜனத்தின் நாசத்தால் அனுதாபமுமடைகிறான். பிறகு, அகஸாம் நிரம்பித் தனக்கு அபஜயம் வராமல காக விரும்பி, 'எதனால ஸுகியாவோம்' என்று கருதி அதைச செய்கின்றான். அதனால் நாசத்தையடைகின்றான். ஓ! அரசனே! அஃது அப்படியன்றோ? புத்தியுள்ளவர்களும் சாசவதமான பிரம்மத்தைச சொல்லுகின்றவர்களும் சுபகர்மத்தைத் தேடுகின்றவர்களும் விஷயத்தை வெறுத்தவர்களுமான மனிதர்களுக்கே ஸுகம், மனிதன் அன்புக்குரியவர்களுடைய நாசத்தாலும் தன நாசத்தாலும் ஆதி வியாதிகளாலுண்டான தாபத்தாலும் ஒழிவை அடைகின்றான். ஒழிவினால் ஆத்மநிச்சயமுண்டாகிறது. ஆத்மநிச்சயத்தால் ஆத்மபரதயக்ஷம் உண்டாகிறது. அரசனே! சாஸ்திரார்த்தமான ஆத்மாவினுடைய ப்ரதயக்ஷத்தினால் தவத்தையே கருதுகிறான். மனிதர்ற்கிறதவனே! பிரியமானவிஷய ஸுகம் நசித்தகாலத்தில தவத்தைச செய்வதற்கு முயற்சி செய்கின்றவனும் ஸாராஸார விவேகமுடையவனுமானமனிதன் தூர்லபனல்லனே? எல்லாருக்கும ஸாதாரணமானதும் ஸ்வர்க்கமாக்கத்தை அடைவிக்கிறதுமான தவமானது ஜிதேந்திரியனும் அடக்கமுடைய வனுமான சூத்ரனுக்குக்கூட விதிக்கப்படுகிறது. முன்காலத்தில் பிரபுவும் ஸ்ரீரதத்தில்ஜாகரூகருமான ஹிரண்யகர்ப்பர் சிற்சிலவிடத்தில் விரதங்களையனுஷ்டித்துத் தவத்தால் பிரஜைகளைச்சிருஷ்டித்தார். ஐயனே! ஆதித்யர்களும் வஸுக்களும் ருத்ரர்களும் அக்னியும் அச்வினீதேவர்களும் மாருதர்களும் விசுவேதேவர்களும் ஸாத்யர்களும் பித்ருக்களும் மருத்துக்களுடையகணங்களும் யக்ஷர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் ஸித்தர்களும் மற்றத்தேவர்களும் மற்

முழுள்ளஸ்வர்க்கவாஸிகளும் தவத்தால் ஸித்தியை அடைந்தார்கள். முன்காலத்தில் பிரம்மாவினுல் முதலில் தவத்தால்படைக்கப்பட்ட பிராம்மணர்கள் தவத்தைசெய்துகொண்டு பூமியிலும் தேவலோகத்திலும் ஸஞ்சரிக்கின்றார்கள். பூலோகத்தில் அரசர்களாகவும் பெரிய குலங்களில் மற்றக்ஷத்ரஸ்தர்களாகவும் பிறப்பதெல்லாம் தவத்தின் பயனே. பட்டாடைகளும் சோபனமான ஆபரணங்களும் வாகனங்களும் ஆஸனங்களும் பானங்களுமாகிய இவையெல்லாம் தவத்தின் பயனே. மனத்திற்கொத்தவர்களும் அழகுள்ளவர்களும் ஆயிரக்கணக்குள்ளவர்களுமான ஸ்திரீகளும் உப்பரிகையின்மேல் வாஸமுமாகிய இவையெல்லாம் தவத்தின்பயன். உயர்ந்தவைகளான படுக்கைகளும் பலவகையான ஆகாரங்களும் விரும்பப்படும்மற்றவைகளும் நல்வினைசெய்தவர்களுக்கு உண்டாகின்றன. பகைவர்களை வாட்டுகின்றவனே! பூவுலகங்களிலும் தவத்தாலடையக்கூடாதது ஒன்றுமில்லை. நல்வினைசெயயாதவர்களுக்கு ஸுகங்களில்லாமற்போவதே பயன். ஓ! ராஜரிஷ்டனே! ஸுகியாயிருந்தாலும் துக்கமுடையவனுயிருந்தாலும் மனிதன் மனத்தினுலை சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்து அஸந்தோஷமானது அஸுகத்தின்பொருட்டென்னும் நிசசயத்தால் ஆசையைத்தள்ளவேண்டும். லோபத்தால் இந்திரியங்களுக்கு மயக்கமுண்டாகும். அதனல் இவனுடைய்பிரஜ்ஞையானது அப்யாஸமில்லாத வித்தைபோல நசித்துவிடும். ப்ரஜ்ஞை நசித்தவுடன் நியாயத்தைக் கருதமாட்டான். ஆகையால், ஸுகத்திற்கு ஸாசம் வந்தபொழுது மனிதன் கடிந்தவற்றைச செய்யவேண்டும். இம்மையில் எது இஷ்டமோ அதை ஸுகமாகச சொல்லுகின்றார்கள். வெறுக்கப்படுவது துக்கமாகச் சொல்லப்படுகின்றது. தவம் செய்வதற்கும் தவம் செய்யாமலிருப்பதற்கும் பயன் எவ்விதமாயிருக்கிறதென்பதைப் பார். மனிதர்கள் குற்றமற்றதவத்தைச் செய்து நித்யம் மங்களங்களையும் பார்க்கின்றார்கள்; விஷயஸுகங்களையும் அனுபவிக்கின்றார்கள்; பிரஸித்தியையும் அடைகின்றார்கள். துக்கமானது, அப்ரியமாயும் அவமானமாயும் அனேகவிதமான ரூபமுடையதாயிருக்கிறது. பயனே விரும்புகிறவன் நல்ல வழியைவிட்டு விஷயரூபமான வழியை அடைகின்றன். அவனுக்குத் தர்மதநிலும் தவத்திலும் தானத்திலும் ஸந்தேகமுண்டாகின்றது. அவன் கொடியபாவங்களேபேசெய்து நரகத்தை அடைகிறன். ஓ! அரசனே! ஸுகத்திலிருந்தாலும் துக்கத்திலிருந்தாலும் நல்லொழுக்கத்திலிருந்து சலியாத மனிதன் சாஸ்திரத்தை நேத்ரமாயுடையவன். ஓ! அரசனே! ஸ்திரீஸங்கத்திலும்

உணவிலும் காட்சியிலும் மோப்பதிலும் கேட்பதிலும் (வில்லிலிருந்து விடப்பட்ட) ஓர் அம்பு பூமியில் விழுங்காலம்வரையில் ஸுகமானது கருதப்படுகிறது. பிறகு, அதனுடைய காசத்தினால் இயனுக்கு மிகுதியான துக்கம் உண்டாகின்றது. ஆகையால், வித்வான்கள் மிகவும் மேலான ஸுகரூபமான மோக்ஷத்தைச் சிலாகிக்கின்றார்கள். அதனால், விவேகமுடையு எல்லாருக்கும் பெரிதான ஸுகத்தின் பொருட்டுச் சமமுதலான குணங்கள் உண்டாகின்றன. தர்மம் விருத்தியடைவதால் எப்பொழுதும் பொருள் இன்பங்களால் குறைவை அடையான். முயற்சியின்றிக்கிடைத்தவை கிருகஸ்தர்களால் எப்பொழுதும் அனுபவிக்கத்தக்கவை. தன் தர்மமானது முயற்சியால் அடையத்தக்கதென்பது என் எண்ணம். மானிகளும் கலலகுலத்திற்பிறந்தவர்களும் எப்பொழுதும் சாஸ்திரத்தினார்த்தத்தில் திருஷ்டியுள்ளவர்களுமாயிருக்கிறவர்களுடைய செய்கையானது தர்மத்தினின்றும் விடுபட்டமூடசித்தர்களால்1செய்யமுடியாது. உலகத்தில் மனித முயற்சியால் செய்யப்பட்ட கர்மமானது காசத்தையடைகின்றபொழுது அவர்களுக்குத் தவத்தைத்தவிர வேறுகர்மமானது இல்லை. ஓ! அரசனே! கிருகஸ்தனனவன் ஸாமார்த்தியத்தோடு ஹவ்யகவ்யத்தின் பொருட்டு ஸ்வதர்மத்தில் நடந்துகொண்டு மனோவாக்காயங்களால் கர்மத்தின் நிசயத்தை அனுஸரிக்கவேண்டும். நதீ நதங்களான எல்லா ஆறுகளும் ஸமுத்திரத்தில் நிலைபெறுவதுபோல எல்லா ஆசரமிகளும் கிருஹஸ்தனிடத்தில் நிலைபெறுகின்றார்கள்' என்று சொன்னர்.

மூன்றூற்றிரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பராசரகீதை; வர்ணங்களின் பிரிவுகளும் விசேஷதர்மங்களும் பொதுவான தர்மங்களும்.)

ஜனகர், 'ஓ! மஹரிஷியே! 2ஜாதி விசேஷங்களிலிருந்து வேறு ஜாதியானது எப்படி உண்டாகிறது? இதை அறிய விரும்புகி

---

1 'அகர்யா' என்று மாற்றப்பட்டது.

2 பிராம்மண க்ஷத்ரிய வைச்ய சூத்ர ஜாதிகளைக்காட்டிலும் வேறான அனுலோம பிரதிலோமஜாதிகள் இங்கு விசேஷவர்ணங்களென்று சொல்லப்பட்டன. '286-வது அத்யாயத்தில் சொல்லப்பட்ட கிருஷ்ணவர்ணங்கள்' என்பது பழையவுரை.

மேன். சொல்லுகிறவருள்சிறந்தவரே! அதைச் சொல்லும். பிறக்கும் இக்குழந்தை 1 'அவனே' என்று வேதம் சொல்லுகிறது. பிராம்மணனிடத்திலிருந்தும் உண்டானவன் எப்படி வேறுஜாதியாகக் கொள்ளப்படுகிறான்?' என்று கேட்க, பராசரர் சொல்லலானார்.

'ஓ! மகாராஜனே! இது இப்படியே எவன் எவனுண்டானானே அவன் அவனே. தவத்தின் குறைவினாலே ஜாதிபேதத்தை அடைந்தான். நல்ல க்ஷத்திரத்தினாலும் நல்ல பீஜத்தினாலும் பரிசுத்தமான பிறப்பு உண்டாகிறது. இவைகள் இரண்டிலொன்று தாழ்ந்ததனால் தாழ்ந்தவன் உண்டாகின்றான். உலகங்களைப்படைக்கின்ற ஹிரண்யகர்ப்பனுடைய முகத்திலும் புஜங்களிலும் தொடைகளிலும் பாதங்களிலுமிருந்தே (வர்ணங்கள்) உண்டாயினவென்று தர்மத்தையறிந்தவர்கள் அறிகின்றார்கள். ஐயா! அரசனே! முகத்திலிருந்து உண்டானவர்கள் பிராம்மணர்களாகவும் புஜத்திலிருந்து உண்டானவர்கள் க்ஷத்திரியர்களாகவும் தொடையிலிருந்து உண்டானவர்கள் தனவான்களான வைசியர்களாகவும் பாதத்திலிருந்து உண்டான்வர்கள் பணிசெய்யும் சூத்திரர்களாகவும் நினைக்கப்படுகின்றார்கள். ஓ! புருஷசரேஷ்டனே! நான்கு வர்ணங்களுக்குத்தான் ஹிரண்யகர்ப்பனிடமிருந்து உற்பத்தி. இவைகளைக்காட்டிலும் வேறுக அதிகமான அவர்கள் ஸங்கரஜாதிகளாக நினைக்கப்பட்டனர். க்ஷத்ரியாநிரதர், அம்பஷ்டர, உக்ரர், லவதேஹகர், சுவபாகர், புல்கஸர், க்ஷத்தர, நிஷாதர், ஸுதர், மாகதர், அயோகர, காரணர், விராததியர, சண்டாளர் ஆகிய இவர்கள் நான்கு வர்ணங்களிலிருந்தும் ஒன்றோடொன்று கலந்து உண்டாகிறார்கள்' என்று சொன்னர். ஜனகர், 'ஓ! முனிச்ரேஷ்டரே! ஒரே பரம்மாவினால் உண்டானவர்கள் கோத்திரத்தினால் எப்படி அநேகர்களானார்கள்? இவ்வுலகில் கோத்ரங்கள் அநேகங்களல்லவா? எங்கே வேண்டுமோ அங்கே உண்டான முனிவர்கள் எப்படித் தம்ஜாதியை அடைந்தார்கள்? சிலர் சூத்திர 2ஜாதியிலுண்டானவர்கள். மற்றவர்கள் அயோநிஜர்கள்' என்று கேட்க, பராசரர், 'ஓ! அரசனே! தவத்தால் சுத்தமாகச செய்யப்பட்ட மனத்தையுடைய மகாதமாக்களின் பிறப்பானது இழிவானபிறபுடன் சேர்க்கக்கூடியதாகாது. அரசனே! முனிவர்கள் எங்கேவேண்டுமோ அங்கே புத்திரர்களையுண்டுபண்ணி

---

1 தந்தையே.

2 மூலத்தில் வேறு சொல்லிருக்கிறது. சூத்ர ஸ்திரீயினிடம் பிறந்தவன என்பதுபொருள்.

அத்தப்புத்திரர்களுக்கு மறுபடியும் தங்கள் தவத்தாலேயே ரிஷித்தன்மையைச் செய்கின்றார்கள். அரசனே! வைதேஹ! முன்காலத்தில் ஏன்னுடையபிதாமஹராகவஸிஷ்டர், ரிசயசருங்கர், காச்யபர், வேதர், தாண்டியர், கிருபர், கக்ஷீவான், கடடர்முதலியவர்கள், யயக்ரீதர், பேசுகிறவர்களுள் சரேஷ்டரான த்ரோணர், ஆயு, மதங்கர், தேஜதர், தீருமதர், மாத்ஸ்யர் ஆகிய இவர்கள் தவத்தின்வன்மையால் ரிஷித்தன்மையை அல்டைந்தார்கள். வேதத்தை ஓதியுணர்ந்தவர்களும் தபஸ்தீதாகூடிய தவத்தினாலேயே பிரதிஷ்டையை அடைந்தார்கள். அங்கிரஸ், கச்யபர், வஸிஷ்டர், ப்ருகு என்று மூலகோத்ரகர்த்தாக்கள் நான்கு உண்டாயின. அரசனே! கர்மத்தால் இதர கோத்ரங்கள் உண்டாயின. தவத்தாலுண்டான ஸத்துக்களுடையஅந்தப்பெயர்களும் கிரகிக்கயோக்யமானவைகள' என்றுசொன்னார். ஜனகர், 'ஓ! பகவானே! எனக்குவர்ணங்களுடையதனித்தனிதர்மங்களைச சொல்லும். பிறகு, பொதுவானதர்மங்களையும் சொல்லும. எல்லாவற்றிலும் ஸமர்த்தராயிருக்கிறீர' என்று கேட்க, பராசரர், 'அரசனே! தானம்வாங்குதலும் யாகம்செய்வித்தலும் அத்தியயனம்செய்வித்தலும் பிராம்மணர்களுக்கு விசேஷமானதர்மங்கள். க்ஷத்ரியனுக்கு நன்முகாக்ஷிப்பது உரியதர்மம். வைசயர்களுக்கு உழவும், மாடு மேய்த்தலும், வாணிபமும் உரியதர்மம். அரசனே! இருபிறப்போர்களான மூவருக்கும்பணிசெய்தல் சூத்ரனுக்கு உரிய தர்மம். அரசனே! வர்ணங்களுடைய விசேஷதர்மங்கள் சொல்லப்பட்டன. ஐயனே! பொதுவானதர்மங்களை என்னிடமிருந்து விரிவாகக்கேள். அரசனே! குரூரத்தன்மையில்லாமை, கொல்லாமை, தவறுதலில்லாமை, (உலகத்தில்சேர்ந்தும்) விலகியிருத்தல், சாதாரணகர்மம், அதிதிகளைப்பூஜித்தல், ஸத்தியம், குரோதமில்லாமை, தனக்குப்பத்தியுடன் பழகிக்கிருத்தல், சுசியாயிருத்தல், எப்பொழுதும் அஸூயையின்மை, ஆத்மஜ்ஞானம், பொறுமை ஆகிய இவைகள் பொதுவானதர்மங்கள். பிராம்மணர்கள், க்ஷத்ரியர்கள், வைசயர்கள் இம்மூன்று ஜாதிகளும் துவிஜாதிகள். ஓ! மனிதர்களிலுயர்ந்தவனே! இத்தர்மங்களில் அவர்களுக்கு அதிகாரம். ஓ! அரசனே!. இம்மையில் ஸ்வர்காமங்களைப்பற்றிப் பெரியோர்கள் மேலேபோவதுபோலத் தமக்குத்தகாத கர்மங்களிலிருக்கின்றமூன்றுவர்ணத்தார்களும் கீழ்மையடைகின்றார்கள். க்ஷத்ரியனானவன் பதனத்தையடைகிறதில்லையென்பதும் இம்மையில் ஸம்ஸ்காரத்தையடைய யோக்யனில்லையென்பதும் நிச்சயம். (ஏனென்றால்) வேதத்தால் சொல்லப்பட்ட தர்மம் அவனுக்கு இல்லை.

அவனுக்குத் 1தர்மத்தின் நிஷ்டமுமில்லை. மஹாராஜனே! வேதத்தியயனத்துடன்கூடின த்விஜர்கள் சூத்திரனே (தர்மத்திற்கு உப்யோகமில்லாததுபற்றி ஸ்தூலசரீரமிருந்தும் இல்லாததுபோலானபடியால்) வைதேஹகனுக்குச் சொல்லுகின்றார்கள். ஸகலஜகத்திற்கும்தேவரும் காரணருமான 2விஷ்ணுவாக நான் நினைக்கிறேன். (ஆகையால்) தம்மை உயர்த்திக்கொள்ளவேண்டுமென்கிறசூத்திரர்கள் ஸத்துக்களுடைய (சமூதலிய) ஒழுக்கத்தையடைந்து மிச்ரமில்லாமல் புஷ்டியைச்செய்கின்ற கிரியைகளைச்செய்கிறவர்களாகித் தோஷங்களை அடையார். இதரஜனங்கள் நல்லநடக்கையைப்பற்றிநடப்பதற்கு 3ஏற்ற படிஸுகத்தையடைந்து இகத்திலும்பரத்திலும் ஸுகத்தோஷிக்கின்றார்கள்' என்று சொன்னர். ஜனகர், 'ஓ! மகாமுனிவரே! ஒருவனைத்தோஷமுள்ளவனுகச்செய்வது கர்மமா? அல்லது ஜாதியா? எனக்குச் சந்தேகமுண்டாகிவிட்டது. ஆகையால், எனக்கு விவரித்துச்சொல்ல வேண்டும்' என்றுகேட்க, பராசரர், 'ஓ! மகாராஜனே! கர்மா ஜாதி இரண்டும் ஸம்சயமின்றித் தோஷத்தைசெய்யும். ஆனால், விசேஷத்தைக் கேள். ஜாதியினல் தோஷத்தையடைந்து பாவத்தைச்செய்யாமலிருப்பவன் ஜாதியினலும் கர்மாவினலும் துஷ்டகர்மத்தைப் பற்றுகிறதில்லை. மேலானஜாதியில் பிறந்தவனனலும் நிந்திக்கப்பட்டகர்மத்தைச்செய்தால் அவனை அந்தக்கர்மமானது தோஷமுள்ளவனுகச்செய்கிறது. ஆகையால் கர்மாவானது நல்லதன்று' என்றுசொன்னர். ஜனகர், 'ஓ! பிராம்மணச்ரேஷ்டரே! இந்த உலகத்தில் எந்தக் கர்மங்கள் தர்மத்திலிருந்துவிலகாதவைகளும் செய்தால் பிராணிகளுக்கு எப்போதும் துன்பமுண்டாகாதவைகளுமாயிருக்கும்?' என்று கேட்க, பராசரர் சொல்லத்தொடங்கினர். 'ஓ! மகாராஜனே! என்னை நோக்கி எதைப்பற்றி நீ கேட்டாயோ அதுவிஷயத்தில் ஹிம்ஸையில்லாமல் எப்பொழுதும் மனிதனைக் காக்கக்கூடிய கர்மங்களை என்னிடமிருந்து கேள். அக்னிகளைத் தள்ளிவிட்டு உஞ்ச்ஸீனர்களாயும் மனக்கவலை நீங்கினவர்களாயுமிருக்கின்றவர்கள் கிரமமாகக் கர்மமார்க்கத்திலேறி மோக்ஷமார்க்கத்தைப் பார்க்கின்றார்கள். சரத்தையுள்ளவர்களும் வணக்கமுள்ளவர்களும் எப்போதும் அடங்கினவர்களும் கூரிய புத்தியுள்ளவர்களும் எல்லாக்கர்மங்களி

---

1 'குரூரத்தன்மையில்லாமைமுதலிய பொதுவானதர்மங்கள்' என்பது பழையவுரை.

2 'க்ஷத்திரியனுக்கு ஒப்பானவன்' என்பது பழையவுரையின் கருத்து.

3 வேறுபாடம்.

லிருந்தும் விலகினவர்களுமான (அவர்கள்) ஜரையற்றஸ்தானமான மோக்ஷத்தை அடைகின்றார்கள். ஓ! அரசனே! ஜீவலோகத்தில் எல்லாஜாதிகளும் தர்மநியங்களை நன்றாகச்செய்து ஸத்யவார்த்தைகளையும் சொல்லிக் கொடிய அதர்மத்தையும்விட்டு ஸ்வர்க்கத்தை அடைகின்றன. இந்த விஷயத்தில ஆலோசிக்கவேண்டா.

மூன்நூற்றுமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பாராசரகீதை; மனிதப்பிறப்பின் உயர்வும் அதற்குரிய பல தர்மங்களும்.)

ஓ! அரசனே! உலகத்தில் குணமில்லாதவர்களுக்குத் தந்தையும் நண்பர்களும் குருக்களும் மனிதர்களும் மிக்கஅன்புள்ளவர்களும் இன்சொற்கூறுகிறவர்களும் நன்மைசெய்கிறவர்களும் வசப்பட்டவர்களும் பயன்படுகிறதில்லை. மனிதர்களுக்குப் பிதா மேலானதெய்வம். பிதாவை மாதாவினும் சிறந்தவனைச் சொல்லுகின்றார்கள். ஞானத்தினுடைய லாபத்தைச் சிறந்ததாகச் சொல்லுகின்றார்கள். இந்திரியங்களையும் விஷயங்களையும் ஜயித்தவர்கள் பரமானபிரம்மத்தை அடைகின்றார்கள். ராஜகுமாரனானவன் எப்பொழுது பாணக்கினிபரவினயுத்தகளத்தில் வதத்தையடைந்து கொளுத்தப்படுகின்றானோ அப்பொழுது தேவர்களாலடையமுடியாதலோகங்களை அடைகிறான்; ஸுகமாக ஸ்வர்க்கபலத்தையும் அனுபவிக்கின்றான். ஓ! அரசனே! கீளப்பையடைந்தவனையும் பயந்தவனையும் ஆயுதம்கழுவினவனையும் அழுகின்றவனையும் புறங்காட்டி ஓடுகின்றவனையும் (தேர் கவசமுதலிய) யுத்தஸாதனம் குறைந்தவனையும் யுத்தஸன்னஹம்செய்யாதவனையும் ரோகியையும் யாசிக்கின்றவனையும் இளையவனையும் முதியவனையும் ஹிம்ஸிக்கக்கூடாது. அரசன் யுத்தத்திற்குரிய நல்லஸர்தனங்களையுடையவனும் நன்றாகக்கூடினவனும் யுத்தமுயற்சியுள்ளவனும் தனக்குச் சமமில்லையை அடைந்தவனுமான ராஜகுமாரனை வெல்லவேண்டும். இவ்வுலகில் ஸமமாயுள்ளவனிடமிருந்தும் மேலானவனிடமிருந்தும் வதமானது ச்ரேயஸ்கரமென்பது நிச்சயம். தனக்குக் குறைவானவனிடமிருந்தும் பயந்தவனிடமிருந்தும் தீனனிடமிருந்தும் வதமானது நிந்திக்கப்பட்டிருக்கின்றது. ஓ! நரபதியே! பாவியினிடமிருந்தும் பாவஜுகுப்ஸமுள்ள நீசனிடமிருந்துமுண்

டான இந்தவுதமானது பாவமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது நரகத்திற்குக் காரணமாகுமென்பது நிச்சயம். ஓ! அரசனே! யமன் வசத்தையடைந்தவனை ஒருவனும் காப்பதேயில்லை. ஆயுள்மிச்ச முள்ளவனையும் ஒருவனும் இழுக்கிறதேயில்லை. இவ்வுலகில் தன்னிடம் ஸ்நேகமுள்ளவர்களால் தனக்காகச் செய்யப்பட்ட ஹிம்ஸையைக்கொடுக்கின்ற எல்லாக்கர்மங்களையும் விலக்கவேண்டும். பிற னுடையபிராணனுல் தன்பிராணனைக் காக்கவிரும்பக்கூடாது. அப்பா! மரணத்தை எதிர்பார்க்கின்ற எல்லாக்கிருகஸ்தர்களுக்கும் தமக்குரிய கர்மத்துடன் மணல்திட்டோடுகூடின நதீதீரங்களில் மரிப்பது சோபனம். ஆயுளானது நிச்சத்தகாலத்தில் மரணமானது (தானே) வருகின்றது. அப்படியானுல் காரணமில்லாமல் ஏற்பட்டதாகின்றது. தேகத்தை அடைந்து பலாத்காரமாகச் சரீரத்தைவிடுகிறவனுக்கு ஆத்மஹத்தி முதலியகாரணங்களால் யாதனுசரீரம் உண்டாகின்றது. அவன் மோக்ஷமார்க்கத்தைப்பற்றினவனுலும் இழிந்தவனே. அவன் ஒரு வீட்டைவிட்டு மற்றொரு வீட்டையடைந்தவன்போலாகின்றன். அந்த விஷயததில் இரண்டாவதான வேறு ஒருகாரணமுமில்லை. தேகிகனுடைய அந்தயாதனுதேகமானது மோக்ஷத்தைக் கொடுப்பதற்காக ஏற்பட்ட ருத்திரருடைய பிசாசங்களிடத்தில் சேர்க்கப்பட்டதாயிருக்கிறது. ஆத்மவிஷயமான சிந்தனையுள்ள வித்வான்கள், 'தேகமானது பெருநரம்பு, சிறுநரம்பு, எலும்பு இவைகளுடைய கூட்டம்; நிந்திக்கத்தக்க அமேத்யங்களால் வியாபிக்கப்பட்டது; பஞ்சபூதங்கள் இந்திரியங்கள் விஷயவாஸனைகள் இவற்றின்சேர்க்கை; தோலே மூடிவிலுடைத்து' என்றுசொல்லுகிறார்கள். மரிக்குந்தன்மையையடைந்த சரீரமானது ஸ்வாத்ரியமுதலான குணங்களழிந்து ஜீவனுல்தள்ளப்பட்டுச் செயலற்றதும் அறிவற்றதும் ஆகிவிடுகின்றது. பூதங்கள் தம்காரணத்தையடைந்து உடனே பூமியில் அழிந்துவிடுகின்றன. ஓ! விதேஹகுலத்தரசனே! இந்தச்சரீரம் எந்தனந்த நினைவிலிருந்துகொண்டு மரிக்கின்றதோ அதில் அதில் கர்மயோகத்தால் வாஸனையுடையதாகச் செய்யப்பட்டு ஜனிக்கின்றது.. அந்தச்சரீரம் விழுந்தகாலத்தில் கர்மாவினுல் அப்படிப்போல வேறுசிருஷ்டியானது காணப்பட்டிருக்கின்றது. ஓ! நரபதியே! இவன் மறுபடி சிலகாலம் ஜனிக்காமலுமிருக்கின்றன். மகாணுஜீவன் ஆகாயத்தில் மேகம் சுழலுவதுபோலச் சுழலுகின்றன். [1]ஓ! ராஜனே! அவன் மறுபடியும் இகலோகத்தில் ஸ்தானத்தையடைந்து ஜனிக்கின்றன். ஓ! நரபதியே! ஆத்மாவோ

[1] வேறு பாடம்.

மனத்தைக்காட்டிலும் ஸ்ரேஷ்டன் ; மனம்இந்திரியங்களைக்காட்டிலும் ஸ்ரேஷ்டம். ஓ! அரசனே! அனேகவிதமான பிராணிகளுள் ஜங்கமங்கள் மேற்பட்டவைகள். ஜங்கமங்களுள்ளும் இரண்டுகாலுள்ள ஜீவர்கள் மேலானவர்களாக ஏற்புக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள். இரண்டு பாதமுடையவர்களுள்ளும் பிராம்மணர்கள் மேலானவர்களாகக் கருதப்பட்டிருக்கின்றார்கள். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! வேதியர்களுள்ளும் பிரஜ்ஞையுடையவர்கள் மேலாக ஏற்புக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அறிஞர்களுள்ளே ஆத்மஞானிகள் மேலானவர்கள்; ஆத்மஞானிகளுள் அபிமானம்விட்டவர்கள் மேலோர்கள். மனிதர்களுடைய விஷயத்தில், பிறந்தவனே மரணம் பின்தொடருகிறதென்பது உறுதி. பிரஜ்ஞகளோவென்றால் அழிவுள்ளவைகளான கர்மங்களைக் குணமாகச் செய்கின்றன. ஓ! அரசனே! எவன் இஹலோகத்தில் ஜனத்தைத் தன்பப்படுத்தாமல் தன்னுடைய சக்திக்குத்தக்கபடி தர்மத்தைச் செய்து இயற்கையாக உண்டான மரணத்தினால் பாவத்தை அலம்பிவிட்டு ஆதித்யன் வடக்குத்திக்கையடைந்தகாலத்தில் புண்யகஷத்திரீத்திலும் புண்யமுகூர்த்தத்திலும் மரணத்தையடைவானே அவன் புண்யம் செய்தவன். விஷத்தாலும் தூக்கினாலும் தீயினாலும் திருடன்கையினாலும் கோரப்பற்களுள்ள பிராணிகளாலும் பசுக்களினாலுமுண்டான மரணங்கள் இழிவானவையென்று சொல்லப்படுகின்றன. புண்ணியகர்மமுடையவர்கள் இவைகளோடும் ஒருவித எண்ணத்தாலுண்டான இவற்றைப்போன்றனவாகிய வேறு அநேக விதமானப்ராகிருதவதங்களோடும் கூடுகிறதில்லை. ஓ! நரபதியே! மேலான புண்யவான்களுடைய பிராணன்கள் சிரத்தைப்பிளந்துகொண்டு போகின்றன. நடுநிலையான புண்யசாலிகளுடைய பிராணன்கள் நடுவாலும் பாவிகளுடைய பிராணன்கள் கீழாலும் பேதித்துக்கொண்டு போகின்றன. ஓ! அரசனே! புருஷனுக்கு அஜ்ஞானமொன்றே பகை. அஜ்ஞானத்திற்குநிகராக இரண்டாவதுபகை இல்லை. அந்த அஜ்ஞானத்தால் சூழப்பட்டவன் மிகவும்பிரகிருத்தித்துக் கோரமும் மிகவும் ஹிம்ஸையுள்ளதுமான கர்மங்களைச செய்கின்றான். ராஜகுமாரனே! புருஷனவன் ஞானத்தைத் தனக்கு உண்டுபண்ணுவதற்காக (வேதத்திற்சொன்ன குருசுஸ்ருஷைமுதலான) தர்மத்தோடே பெரியோர்களை உபாஸித்து எந்த அஜ்ஞானசத்துருவின்விஷயத்தில் ஸமர்த்தனுவானே அந்த அஜ்ஞானசத்துரு பிரயாஸத்தால் வெல்லக்கூடியவன். பிரஜ்ஞைபாகிறசரத்தினாலே அடிக்கப்பட்டு நசிக்கின்றான். தர்மத்தை விரும்புகிறபுருஷன் இவ்வுலகத்தில் பிரம்ம

சாரியாகி நியமத்துடன் வேதத்தைஓதிச் சக்தியினல் ஐந்துமகா யஜ்ஞங்களேயும்செய்து தன்னுடையவம்சத்தை ஸ்தாபித்தது ஸ்ரேயஸைவிரும்பி வனத்தையடையவேண்டும். ஸ்திரீமுதலான உபபோகங்களாலே விடப்பட்டும் சரீரத்தை மனிதனவன் நாசஞ்செய்யக் கூடாது. அப்பா! சண்டாளஜாதியாயிருந்தாலும் மானிடத்தன்மையானது எல்லாவிதத்தாலும் மேலானது. ஓ! பூபதியே! எந்தப் பிறப்புயடைந்து சுபமானகர்மங்களாலே ஆத்மாவானது ரக்ஷிக்கமுடிகின்றதோ அப்படிப்பட்ட மானிடப்பிறப்பானது மேலானது. ஓ! பிரபுவே! மனிதர்கள், 'இந்தப்பிறவியிலிருந்து எப்படி மிகவும் நஷ்டமாகாமலிருப்போம்' என்று வேதம் பிரமாணமென்கிற உறுதியினல் தர்மத்தைச் செய்கின்றார்கள். எந்தமனிதன் மிகவும்கிடைக்காததான மனுஷ்யஜாதியையடைந்து (தர்மத்தை) த்வேஷிக்கின்றமனுதர்மத்தை அவமதிக்கின்ற அவன் காமத்தையே உருவமாகவுடையவனுவான். அவன் காமத்தால் வஞ்சிக்கப்பட்டவனுகிறனல்லவா? ஐயனே! தீபத்துக்கு ஒப்பான பிராணிகளே நேயத்தையுடையகண்ணினல் பார்ப்பவனும் அவைகளிலுள்ள (குணதோஷங்களாகிய) எல்லாவிஷயங்களேயும் பாராதவனும் ஸமானதான வார்த்தையினலும் தானத்தினலும் பிரியமான வார்த்தையினலும் அனுசரிக்கின்றவனுமான மனிதன் ஸமமான ஸுகதுக்கங்களேயுடையவனுகிப் ப்ரலோகத்தில் பூஜிக்கப்படுகின்றன். மந்திரபூர்வகமானகொடையும் ஸாதாரணமானகொடையும் மனிதனுக்கு மங்களகரமான [1]சரீரம். மனிதனல் ஸரஸ்வதி நைமிசம் புஷ்கரம்இவைகளிலும், பூமியிலுள்ளவேறு புண்யப்ரதேசங்களிலும் தவத்துடன் தீர்த்தங்களாலே சரீரமானது அடிக்கடி நீராட்டத்தக்கது. கிருதங்களில் எவர்களுடைய பிராணன்கள் விழுகின்றனவோ அவர்களே உடனே வெளிப்படுத்தலும் ஸ்வர்கானத்திற்கு வாகனத்தால் கொண்டுபோதலும் சுத்தமானவிடத்தில் விதிப்படி தகனமும் சிறந்த தர்மம் இஷ்டியும் புஷ்டிகரமாவும் யாகமும் ப்ரதிஷ்டைசெய்வித்தலும் தானமும் புண்யகர்மங்களின் அனுஷ்டானமும் சுத்திக்குதகப்படி பித்ருகர்மமும் மேலானவை. இவைகளெல்லாவற்றையும் இந்தமனிதன் தனக்காகவே செய்கிறன். [2]ஓ! நரபதியே! தர்மசாஸ்திரங்களும் வேதங்களும் (சிகைஷாமுதலான) ஆறு வேதாங்கங்களும் கர்மாவைத் தன்பமென்றறிஞையாத மனிதனுக்கு ஸ்ரேயஸின்பொருட்டு விதிக்கப்படுகின்றன' என்றார். நரா

---

1 வேத பாடம். 2 ஒரு ஸ்லோகம் விடப்பட்டது.

திப! இந்த எல்லாவிஷயமும் மிகவும் மகாத்மாவான பராசரமுனிவர் முன்காலத்தில் விதேஹராஜனுக்கு ஸ்ரேயவினிமித்தத்தில் சொல்லப்பட்டது.

மூந்நூற்றுநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(பராசரகீதை; பலவிதமோக்ஷோபாயங்கள்.)

மிதிலாதிபனை ஜனகன் மறுபடியும் தர்மத்தில் பெரிய நிச்சய முள்ளமஹாத்மாவான பராசரரை நோக்கி, 'ஓ! ப்ராம்மணரே! ஸ்ரேயஸுக்குக்காரணம் எது? கதியாவது எது? எதைச்செய்தால் நசியாமலிருக்கும்? எங்கே சென்றவன் திரும்பாமலிருக்கிறான்? விசாலமான புத்தியுள்ளவரே! அவற்றை எனக்குச் சொல்லும்' என்று கேட்க, பராசரர் சொல்லலானார்.

பற்றற்றிருப்பது ஸ்ரேயஸுக்குக் காரணம். ஞானரூபமான வனே! ஞானமானது பரமானகதி அனுஷ்டிக்கப்பட்டதமானது, ஸ்தபாத்திரதத்தில் செய்யப்பட்ட தானம்போல நசியாது. எப்பொழுது அதர்மமயமான பாசத்தை அறுத்துத் தர்மத்தில் பற்றுகின்றானோ அப்பொழுது அபயதானமென்னும் ஸன்யாஸத்தைச் செய்து விரித்தியை அடைகின்றான். எவன் ஆயிரம் கோக்களையும் நூறு குதிரைகளையும் எல்லாப்பிராணிகளுக்கும் அபயத்தையும் கொடுக்கின்றானோ அவனை எப்பொழுதும் எல்லாப்பிராணிகளிடமிருந்தும் அபயமானது சூழ்கிறது. புத்திசாலியானவன் விஷயங்களின் மத்தியில் வஸித்தாலும் வஸிக்கின்றவனாகிறதில்லை. (பற்றுதலுள்ள) தூர்ப்புத்தியுள்ளவன் விஷயங்களில்லாதபோதும் விஷயங்களிலேயே வஸிக்கிறான். ஜலமானது தாமரை இலையைப்பற்றாதது போல அதர்மமானது அறிவுள்ளவனைப் பற்றுகிறதில்லை. அரக்கானது கட்டையில்பற்றுவதுபோலப் பாவமானது புத்தியில்லாதவனை அதிகமாகப்பற்றுகிறது. பயனையளிக்கவிரும்பாமலிருக்கிற அதர்மமானது செய்தவனை விடுகிறதில்லை. ஆகையால், கர்த்தாவானவன் காலத்தை அனுஸரித்து அந்த அதர்மத்தாலுண்டானபயனை அடைகின்றான்.

---

1 'நல்லநிலத்தில் விதைக்கப்பட்ட விதைபோல' என்றும் கொள்ளலாம்.

2 மோக்ஷம்.

ஆத்மாவின் நிச்சயத்தையுணர்ந்தமனுவசமுள்ளீவர்கள் துன்பத்தை அடைகிறதில்லை. மிகவும் மதத்தையடைந்து ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுடைய (சேஷ்டையை) அறியாதவன் சுபாசுபங்களில்பற்றினமனத்துடன் மிகப்பெரியபயத்தை அடைகின்றன். எப்பொழுதும் ழுற்றும் ஆசைநீங்கினவனும் கோபத்தை வென்றவனுமாயிருப்பவன் விஷயத்திலிருந்தாலும் பாவத்தை அடைகிறதில்லை. வர்ம்பிலே கட்டப்பட்ட தர்மமாகிற அணையானது உடைபடுகிறதில்லை. அணையிலே பெருகின வெள்ளம்போலத் தர்மஸமூஹமானது தானை விருத்திபண்டைதாகின்றது ஓ! ராஜஸ்ரேஷ்டனே! சுத்தமானசூரிய சந்திரமணியானது சூரியனிடத்துள்ளதேஜஸை நியமமாகக்கிரகிக்கிறதுபோல யோகியானவன் தியானதினால் பிரம்மதேஜஸை அடைகின்றன். எள்ளின்குணமானது இவ்வுலகில் பரிசுத்தமானபதார்த்தங்களுடைய சேர்க்கையினால் தனித்தனியாக அவையவைகளுடைய ஔப்புமையை மிகுதியும் அடைகின்றதுபோல யோகிகளானமனிதர்களுடைய ஸத்வகுணமானது ஆஸ்ரயத்திற்குத்தக்கபடி பிரவிருத்திக்கின்றது. மனிதன் மோக்ஷத்தில்விருப்பமுள்ளவனுகி மனவிவிப்பையும் பலவிதமானசெல்வங்களையும் இருப்பிடத்தையும் வாகனத்தையும் பலவிதமானசுபகர்மங்களையும் தள்ளுகின்றபொழுது இவனுடைய புத்தியானது விஷயங்களினின்றும் விலகுகின்றது. அரசனே!. விஷயங்களிற்பற்றினபுத்தியுடன் ஒருவிதத்தினலும் தன்னுடைய நன்மையை அறியாமலிருப்பவன் எல்லா விஷயவாஸனையையுமடைந்த சித்தத்தால் (தூண்டிலிலுள்ள) இறைச்சியால் மீன் இழுக்கப்படுதல்போல இழுக்கப்படுகிறன். ஒன்றையொன்று ஆஸ்ரயித்ததும் வாழைத்தண்டுபோல்ப் பலமில்லாததும் சரீரேந்திரியங்களுடைய கூட்டத்தோடுகூடியதுமான மானிடஜன்மமானது வெள்ளத்தில் முழுகுகிறதோணிபோல முழுகுகின்றது. மனிதனுக்குத் தர்மத்திற்குக்காலமானது (இதுதானென்று) நிச்சயிக்கப்படவில்லை. மிருத்யுவும் மனிதனை எதிர்பார்க்கிறதில்லை. எப்பொழுதும் தர்மத்தைச்செய்வதே நன்மையானது. அப்பொழுதுதான் மனிதன் மிருத்யுவின்வாயிலிருந்து திரும்புவான். குருடன் தன்வீட்டில் ஜாக்ரதையுடன் அப்யாஸத்தினலேயே நடக்கின்றதுபோல அறிஞனவன் யோகத்துடன்கூடிய மனத்தினல் அந்த மோக்ஷகதியை அடைகின்றன். பிறந்தால்இறப்பதும் இறந்தால் பிறப்பதும் சொல்லப்பட்டிருக்கின்றன. மோக்ஷதர்மங்களை அறியாதவன் பந்தத்தைஅடைந்து சக்கரம்போலச் சுழலுகின்றன். ஞானவழியில் சென்றவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் ஸுகமே.

விரிவாயுள்ளவைகள்[1] துன்பத்தைத் தருகின்றன. சுருங்கினவை கூளோ ஸுகத்தையளிக்கின்றன. விரிவானவையெல்லாம் ஆத்மாவைத்தவிர மற்றவைகளுக்காகவென்றும் சுருக்கமென்றதியாகத்தை ஆத்மாவுக்கு நன்மையானதென்றும் (அறிஞர்கள்) அறிகின்றார்கள். இவ்வுலகில் தாமரைத்தண்டில் ஒட்டினசேறு சிக்கிரம் விட்டுப்போகிறதுபோலப் புருஷனுடைய ஆத்மாவானது மனத்தால் விடுபடுகிறது. மனமானது ஆத்மாவை இழுக்கிறது. ஆத்மா மனத்துடன் சேருகிறது. அது யோகத்துடன் கூடுகிறபொழுது அந்தப் பரமாத்மாவைப் பார்க்கிறது. இந்திரியவிஷயங்களில் பற்றுள்ள எவன் ஆத்மாவுக்கு வேறானவைகளின் காரியத்திலிருந்துகொண்டு அதைத் தன் காரியமாக நினைக்கிறானோ அவன் தன் காரியக்குறைவை அடைகின்றன். ப்ராஜ்ஞனுடைய ஆத்மாவும் மற்றவனுடைய ஆத்மாவும் பலமாகச்செய்யப்பட்ட புண்யபாபங்களாலே ஸ்வர்க்கத்தில் மேலான கதியையும் கீழானதிரியக்கதியையும் அடைகின்றன சுட்டமண்பாண்டத்திலுள்ள ஈரம் சுண்டிப்போவதுபோலத் தவத்தால் வாட்டப்பட்ட சரீரம் விஷயங்களில் அழுந்தாது. எவன் விஷயங்களை அதிக்ரமிக்கிறானோ அவன் அவற்றை அனுபவியான்; ஸந்தேகமில்லை. ஆத்மாவை அறியாதவன் பனிபோன்ற அஜ்ஞானத்தால் சூழப்பட்டு ஆகாரத்திலும் சிற்றின்பத்திலும் பற்றினவனுகிப் பிறவிக்குருடன்போல வழியை அறிகிறதில்லை வணிகனவன் ஸமுத்திரத்திலிருந்தும் மூலதனத்திற்குத் தக்கபடி தனத்தையடைகின்றது போலவே ஜந்துவுக்கு மர்த்தியலோகமாகிற ஸமுத்திரத்திலிருந்து கர்மத்திற்கும் ஞானத்திற்கும் தக்கபடி கதி ஏற்படுகின்றது. இரவு பகல்களுடைய விகாரமான உலகத்தில் மிருத்யுவானவன் ஜரையின் உருவமாகி ஸஞ்சரித்துக்கொண்டு ஸர்ப்பம் காற்றைப்புசிப்பதுபோலப் பிராணிகளைப் புசிக்கின்றான் பிறந்த பிராணியானது தன்னால் செய்யப்பட்ட கர்மங்களை அடைகின்றது. இவ்வுலகத்தில் ஒருவனும் தன்னால் செய்யப்படாத பிரியம் அப்ரியமொன்றையும் அடைகிறதில்லை. சுபாசுபங்களான கர்மங்கள் மனிதனைப் படுத்திருக்கையிலும் நடக்கையிலும் இருக்கையிலும் தொழிலைச்செய்கையிலும் எப்பொழுதும் வந்தடைகின்றன. புருஷன் அக்கரையை அடைந்துமறுபடியும் அடைய யத்தனிக்கிறதில்லை. இந்த ஜந்துவுக்கு ஸம்ஸாரமகாஸமுத்திரத்தில் தாங்கமுடியாதகெடுதல் காணப்படுகிறதன்றோ? பெரிய பிரவாஹத்தில் மரக்கலமானது கயிற்றினால் மீகாமனுடைய

1 'யாகமூதலானவை' என்பது பணீழியவுரை.

அபிப்பிராயப்படி செல்லுகின்றதுபோலச் சரீரமானது மனத்தின் அபிப்பிராயப்படி காரியத்தைச் செய்கிறது; ஸமுத்திரத்தைச் சுற்றிலும் அதற்கு வேறுன நதிகள் வந்துவிழுவதுபோல மனத்தின் வாஸனையால் எப்பொழுதும் (ஜந்துவைத்) தன்னியற்கைக்கு வேறுன ஸ்வபாவமானது சுற்றிவளைகின்றது. பலவிதமான ஸ்நேகபாசங்களாலே பற்றுதலுள்ளமனமுடைய மனிதர்கள் ப்ரகிருதியிலிருந்து கொண்டு, ஜலத்தில மணலால் கட்டப்பட்ட வீடுபோலச் சிதறுகின்றார்கள். சரீரமாகிற கிருகத்திலிருப்பவனும் சௌசமாகிற தீர்த்தத்தையுடையவனும் ஞானவழியில் நடப்பவனுமாயிருக்கிற தேகிக்கு இஹத்திலும் பரத்திலும் ஸுகம். விரிவாயுள்ளனவெல்லாம் துன்பத்தைத் தருகின்றன. சுருக்கமானவைகளோ ஸுகத்தைக் கொடுக்கின்றன விரிவானவைகளெல்லாம் தன்னேத்தவிர மற்றவைகளுக்காகவென்றும் தியாகத்தை ஆத்மஹிதமாகவும் வித்வான்கள் அறிகின்றார்கள். தோழர்களின் கூட்டமானது சங்கற்பத்தால் உண்டாகின்றது. ஞாதிகள் காரணத்தை முன்னிட்டு ஏற்பட்டவர்கள். பத்தினியும் புத்திரனும் லோகத்காரனும் தம்முடைய பிரயோஜனத்தை [1]அனுபவிக்கின்றார்கள். தாயும் தந்தையும் எவனிடமிருந்தும் எதையும் அடைகிறதில்லை ஜந்துவானது தான் செய்த தானத்தைக் கட்டமுதாகக்கொண்டு தன் ஜீவிப்பயனை அடைகின்றது. மாதாவும் பிதாவும் புத்திரனும் பிராதாவும் மனைவியும் மித்ர்களின் கூட்டமும், ஸுவர்ணம் வைத்திருக்கும் பெட்டியில் [2]அரக்குமுத்திரைபோலக் காணபடுகின்றார்கள் முன்செய்த நல்வினை தீவினைகளெல்லாம் செய்தவனை அடைகின்றன. அந்தராத்மாவான ஈச்வரர் அப்பொழுது நேரிட்ட கர்மபலனையறிந்து அதற்குத்தக்கபடி புத்தியை ஏவுகின்றார். எவன் முயற்சிசெய்து உதவிகளையடைகின்றானோ அவனுடைய ஒரு கார்யமும் ஒருபோதும் கெட்டுபோகிறதில்லை. சலனமற்றமனமுடையவனும் கார்யதக்ஷ முயற்சிசெய்தவனும் சக்தியுள்ளவனும் மனோதைர்யமுடையவனும் பண்டிதனுமாயிருப்பவனை ஸம்பத்தானது எந்நாளும் கிரணங்கள் சூரியனை விடாததுபோல விடுகிறதில்லை. பரலோகம்பிக்கை, முயற்சி, உபாயத்துடன்கூடிய புத்தி இவற்றோடு காரியத்தை ஆரம்பிக்கிற குற்றமற்றஸ்வபாவமுடையவன் காரியத்திலிருந்தும் கெடுதலடையான். எல்லாப்பிராணிகளும் முன்பு சுபாசுப

---

[1] வேறுபாடம்.

[2] 'விருப்பப்படிவெளிவரவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள்' என்பது கருத்து.

மானகர்மங்களைச் செய்தமையால் கர்ப்பமுதல் தாமாகவே தம்முடைய சுபாசுபகர்மங்களைத் தவறாமல் அடைகின்றன. பரிகரிக்கமுடியாதவனும் (கர்மாவுக்குச்) [1]சமமான கதியையுடையவனுமான மிருத்யுவும் ஆயுளின் முடிவைச்செய்கின்ற தூலத்துடன்சேர்ந்து, வாயு வாளால் அறுபட்ட மரப்பொடியைப்போல, (பிராணிகளை) முடிவை அடையச் செய்வான். எல்லா மனிதனும் தனக்குஏறபட்ட ஜாதிஆசாரத்தையும் தன்னல்செய்யப்பட்ட புத்திரன்முதலானவிஸ்தாரத்தையும் நல்லகுடிப் பிறப்பையும் தனக்குவியலைச்சேர்ப்பதையும் தன்னல்செய்யப்பட்ட சுபாசுபகர்மத்தால் அததற்குத்தக்கபடி அடைகின்றான்' என்றார். அரசனே! தர்மத்தையுணர்ந்தவர்களில் ச்ரேஷ்டனான ஜனகன், மனு வசமுடைய பராசரர் இவ்விதம்சொல்லக்கேட்டு, உண்மையை அறிந்து மிருதியானஸந்தோஷத்தை அடைந்தான்'' என்று சொன்னர்.

முந்நூற்றைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(உண்மைஅடக்கமுதலியவற்றைப்பற்றி ஸாத்யர்களுக்கும் ஹம்ஸத்திற்கும்நடந்த ஸம்பாஷணை)

யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! உலகத்திலுள்ளவித்வான்களானமனிதர்கள் உண்மையையும் அடக்கத்தையும் பொறுமையையும் ஞானத்தையும் புகழ்கின்றார்கள். இதில் உம்முடைய அபிப்பிராயம் என்ன?'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"யுதிஷ்டிரா! இச்சுவிஷயத்தில் ஸாத்யர்களுக்கும் ஹம்ஸத்திற்கும்நடந்த ஸம்வாதரூபமான பழையசரித்திரத்தை இப்பொழுது உனக்குச் சொல்லுகிறேன். ஒருகாலத்தில் ஆதியுமந்தமுமற்றபிரம்ம தேவர் பொன்மயமான ஹம்ஸவேஷங்கொண்டு மூன்றுலகங்களிலும் ஸஞ்சரித்துவந்தார்; அப்பொழுது ஸாத்யர்களிடம் வந்துசேர்ந்தார். ஸாத்யர்கள், 'பகவியே! நாங்கள் ஸாத்யர்களென்றதேவர்கள். உன்னிடம் ஒன்று கேட்கின்றோம். (அதிலும்) மோக்ஷதர்மத்தைப்பற்றி உன்னிடம் வினவுகின்றோம். நீயோ மோக்ஷத்தையறிந்தவனும். நீ பண்டிதனென்றும் தைரியமாகச்சொல்லுகின்றவனென்றும் நாங்கள் கேட்டிருக்கிறோம். பகவியே! உன்னுடைய இனிய

---

[1] 'ஸமகதி' என்பதுமூலம்; 'தர்மத்தையறிந்தவனிடத்தும் தருமமில்லாதவனிடத்தும் ஒருவிதமாயிருப்பவன்' என்றும் கொள்ளலாம்.

சப்தமானது எங்கும் கேட்கிறது. ஓ! பகீதியே! நீ எதை மிகவும் சிறந்ததாக நினைக்கின்றாய்? ஓ! மஹாத்மாவே! உன்மனம் எதில் பற்றுகின்றது? எந்தக்காரியத்தை எல்லாக்காரியங்களுள்ளும் சிறந்ததும் நிகரற்றதுமாக நினைக்கின்றாயோ, !இவ்வுலகில் மனிதன் எதைச்செய்து ஸகலபந்தங்களினின்றும் விரைவில் விடுபடுகின்றானோ அந்தக்காரியத்தை எங்களுக்கு உபதேசம்பண்ணு' என்று வினவ, ஹம்ஸமானது சொல்லதொடங்கிற்று. 'அமிருதத்தை அருந்தும் தேவர்களே ! அந்தக்காரியத்தைக் கேளுங்கள். [2]தவம், [3]தமம், ஸத்யம், மனத்தை அடக்குதல் இவைகள் செய்யதக்கவை. மனத்தினுடைய ஆசைமுதலான எல்லா முடிச்சுக்களையும் விடுத்துப் பிரியம் அப்பிரியம் (இரண்டையும்) [4]தன்வசமாகச செய்யவேண்டும். ரகஸ்யமான குற்றத்தை வெளிப்படுத்தி வருத்தத்தை உண்டாக்கவும் கடிஞ்சொல்சொல்லவும்கூடாது கீழ்ப்பட்டவனிடமிருந்து [5]உயர்ந்த விஷயத்தைக் கிரகிக்கக்கூடாது. பிறருக்கு அசசத்தையுண்டாக்கு தும் அமங்களமும் நரகத்தைக்கொடுபபதுமான வார்த்தையைச் சொல்லக்கூடாது. வாயினின்றும் சொற்களாகிற பாணங்கள் வீழுகின்றன. அவைகளாலடிக்கபபட்டவன் இரவும் பகலும் துக்கிக்கின்றான். அவைகள் பிறனுடைய மர்மங்களுக்கு வேறான இடங்களில் வீழுகிறதில்லை அவற்றைபபண்டிதனனவன் பிறரிடத்தில விடக்கூடாது. பிறன் இவ்வீன அதிகவார்த்தைகளான பாணங்களால் மிகவும் அடிப்பானனல் அதைபபொறுத்தமேல செய்யத்தக்கது. எவன் கோபமூட்டப்பட்டும் சந்தோஷத்தையே அடைகிறானோ அவன் இதரனுடைய புண்யத்தை அடைகிறான். வசையையுண்டபண்ணுவதும் ஆக்கிரகத்தால் அப்பிரியதைச் செய்வதும் ஜ்வலிக்கிறதுமான கோபத்தை அடக்குகிறவனும் கெட்டஎண்ணமில்லாதவனும் சந்தோஷமுடையவனும் அஸூயைபபற்றவனுமாயிருப்பவன் பிறருடைய புண்யத்தை அடைகின்றான். நான் எப்பொழுதும் யைபப்பட்டானும் ஒன்றும் சொல்லுகிறதில்லை; அடிக்கப்பட்டானும் பொறுத்துக்கொண்டிருக்கிறேன் பெரியோர்கள் பொறுமையைச் சிறந்ததாகச் சொல்லுகின்றார்கள்; அபபடியே ஸத்யத்தையும் கபடமின்மை

---

1 இங்கு ஒருசொல் விடபபட்ட கு.

2 தன் தாமத்தையனுஷ்டிப்பது.

3 ஐம்பொறியடக்கம்.

4 அவற்றின்வழியில் தான் செல்லக்கூடாது.

5 'பரம்' ஏன்பது மூலம்; 'சாஸ்திர ரஹஸ்யம்' என்பது பழையவுரை.

யையும் குரூரத்தனமில்லாமையையும் சிறந்தனவாகச் சொல்லுகின்றார்கள். வேதத்திலுடைய ரஹஸ்யம் ஸத்யம். ஸத்யத்தின் ரஹஸ்யம் அடக்கம். அடக்கத்தின்ரகஸ்யம் மோக்ஷம். இதுவே எல்லாருடையஉபதேசமும். எவன் வாக்கின்வேகம் மனத்தின்கோபத்தினுடைய வேகம் அதிக ஆசையின்வேகம் உதரத்தின் வேகம் காமத்தின்வேகம் ஆகிய மிகுகின்றவைகளான இந்தவேகங்களை ஸகிப்பானே அவனையே நான் பிராம்மணனுகவும் முனியாகவும்; நிணக்கின்றேன். கோபத்தையடையாதவன், கோபிக்கின்றவனுக்கு மேலானவன். பொறுமையுள்ளவன் பொறுமையில்லாதவனுக்கு மேலானவன். மனிதன் விலங்குகளுக்கு மேலானவன் அப்படியே, ஞானவான் ஞானமில்லாதவனைக்காட்டிலும் மேலானவன் தன்னை ஒருவன் வைதாலும் தான் திரும்ப அவனை வையக்கூடாது. இவ்விதம் பொறுமையுள்ளவனுடைய சினமானது வைதவனை எரிக்கின்றது இவனுடைய புண்யத்தையும் அவன் அடைகின்றான். எவன் அதிகமாகநிந்திக்கப்பட்டாலும் கடினவார்த்தையையும் அதிகமாகத் துதிக்கப்பட்டாலும் பிரியமானவார்த்தையையும் சொல்லுகிறதில்லையோ, எவன் அடிக்கப்பட்டாலும் தனக்கு வன்மையிருந்தும் பதில் அடியாமலும் அடித்தவனை அவனுக்குக் கெடுதலைபபிரார்த்தியாமலுமிருக்கின்றானே அவனை இவ்வுலகில் தேவர்கள் அடையவிரும்புகிறார்கள். [1]கீழானவனையும் மேலானவனையும் ஸமமானவனையும் அவர்கள் தன்னை அவமதிதாலும் அடித்தாலும் தான் அவர்களைக் கோபியாமல் [2]பொறுக்கவேண்டும் இப்படியிருந்தால், மோக்ஷவித்தியை அடைவான் நான் (எல்லாவற்றலும்) பூர்ணனுயிருந்தாலும் எப்பொழுதும் பெரியோர்களை உபாவிக்கின்றேன் எனக்கு ஆசையும் கோபமும மேலோங்குகிறதில்லை. நான் எதையும் அடையவிரும்பித் தர்மத்தை விட்டு விலகுகிறதில்லை. ஒன்றையும் தீயவழியில் அடைகிறதில்லை. என்னை ஒருவன் சபித்தாலும் நான் திரும்ப அவனைச் சபிக்கிறதில்லை. இவ்வுலகத்தில் அடக்கத்தை மோக்ஷத்திற்கு வாயிலாக நினைக்கின்றேன். [1]அப்படிப்பட்ட இந்த அடக்கத்தை ரஹஸ்யமான [2]பிரம்மமாகச் சொல்லுகிறேன் [1]மானிடஜன்மத்தைக் காட்டிலும் மிகவும்மேலானது ஒன்றுமில்லையன்றே? நீரனைவன் மேகங்களிலிருந்தும் சந்திரன்விடுபடுவதுபோலப் பாவங்களினின்றும்விடுபட்டுக் களங்கமற்றவனும் காலத்தை எதிர்பார்க்கிறவனுமாயிருந்து

1 'பாபீயஸ:' என்பது மூலம்; 'மிக்க பாபமுள்ளவன்' என்பது பொருள்.
2 'குஹ்யம் ப்ரம்ம' என்பது மூலம்; 'பெரியரஹஸ்யம்' என்பது பழையவுரை.

தைரியத்தினால் லஜ்ஜியையடைகின்றான். எல்லாராலும் பூஜிக்கத் தக்கவனும் கர்வித்தற்குரியகாலத்திலும் தாண்போலிருப்பவனும், தன்னிஷயத்தில் ஜனங்களால் சிறிதும் அபஹஸிதம் சொல்லப்படாதவனும் அடங்கின மனமுடையவனுமாயிருப்பவன் தேவர்களை அடைகின்றான். உலகத்தில் விரோதிகளானஜனங்கள் ஒருவனிடத்திலுள்ள கெட்ட குணத்தைச்சொல்ல விரும்புவதுபோல நல்லகுணங்களைச் சொல்லவிரும்புவதில்லை. எவனுடையவாக்கும் மனமும் எப்பொழுதும்காக்கப்பட்டு நன்றுகநிலைநிறுத்தப்படுகின்றனவோ அவன் வேதங்களும் தவமும் தியாகமுமாகிய [1]எல்லாவற்றையும் அடைவான். அறிவுள்ளவன் அறிவில்லாதவர்களை நிந்தையினாலும் அவமானத்தினாலும் அறிவிக்கக்கூடாது; அதனால், அவர்களை [2]விருத்திசெய்யவும்கூடாது. தனக்குத் தான்பம்மீளத்துக்கொள்ளவும் கூடாது. பண்டிதனானவன் அமிருதத்தினால்திருப்திஅடைவதுபோல அவமானத்தால் திருப்தியடையவேண்டும். (அப்படிச்செய்தால்) அவமானிக்கப்பட்டவன் ஸுகமாகத் தூங்குவான்; அவமானம்செய்தவன் நசிக்கின்றான். கோபமுடையவன்செய்கிற யாகத்தையும் தானத்தையும் தவத்தையும் ஹோமத்தையும் முழுதும் யமன் கொண்டு போய்விடுகிறான். கோபமுடையவனதுசிரமமானது வீணாகிவிடுகிறது. ஓ! அமரர்களிலுத்தமர்களே! குறிகள், உதரம், கைகள், நான்காவதானவாக்கு ஆகியஇந்நான்கையும் நன்குகாப்பவனே தர்மமுணர்ந்தவன். உண்மை, அடக்கம், நோயிருத்தல், க்ஷமையில்லாமை, ஸங்கோசமும், பொறுமை இவைகளையுடையவனும் வேதாத்தியயனத்தைநித்யமாகவுடையவனும் பிறரை விரும்பாதவனும் தவறுதல்ல சிலமுடையவனுமாயிருப்பவன் உயர்வானகதியுடையவனுவான். கன்றானது தாயின் நான்குமுலைகளையும் பார்ப்பதுபோல எல்லாவேதங்களையும விசாரித்ததில் ஒரு வேதத்திலும் சத்தியத்தைக்காட்டிலும் மிகவும் பரிசுத்தமானதொன்றையும் நான் அறிந்தில்லை. நான் ஸஞ்சரித்துக்கொண்டு தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் ஸமுத்திரத்திறகுத்தோணிபோல ஸ்வர்கத்திற்கு ஸத்தியத்தைப் படியாகச் சொல்லுகின்றேன். ஒருவன் எப்படிப்பட்டவர்களுடன் வியவஹாரம் செய்கின்றானோ, எப்படிப்பட்டவர்களை ஸேவிக்கின்றானோ, எப்படிப்பட்டவனுவதற்கு விரும்புகின்றானோ அப்படிப்பட்டவனுகின்றான்.

---

1 'இவற்றின்பயனை' என்பது பழையவுரை.

2 அதனால் அவர்களுக்கு அதிகோபமுண்டாகி இவனுக்குத் தன்பம் தான் நேரிடுமென்பது கருத்து.

நல்லவனே அடுத்தாலும் கெட்டவனே அடுத்தாலும் தவமுடையவனே அடுத்தாலும் திருடனே அடுத்தாலும் ஆடையானது சாயத்தின் வசத்தை அடைவதுபோல அவர் அவர்களுடையவசத்தை அடைகின்றனர். எப்பொழுதும் தேவர்கள் ஸாதுக்களுடன் ஒற்றுமையாயிருக்கின்றார்கள். மானுஷவிஷயத்தை விரும்பவில்லை. சந்திரன் ஒரேவிதமாயிருப்பதில்லை. வாயுவும் ஸமமாயிருப்பதில்லை வளர்வதும் தேய்வதுமான விஷயதத்தை எவன் அறிந்தானோ அவனே அறிந்தவன் இருதயத்தினுள்ளிருக்கின்ற புருஷன் தோஷமில்லாமலிருந்தால் ஸாதுக்களுடையம் மார்க்கத்திலிருக்கின்ற அவனிலேதான் தேவர்கள் ப்ரீதி வைக்கின்றார்கள் எப்பொழுதும் குறியிலும் வயிற்றிலும் மிகவும் பற்றுள்ளவர்களும் திருடர்களும் எங்காளும் கடுஞ்சொல்லுடையவர்களுமாயிருப்பவர்களைத் தர்மமிழந்தவர்களென்றறிந்து தேவர்கள் தூரத்தில் விலக்குகின்றார்கள் தேவர்கள், இழிவான புத்தியுடையவனும் (வர்ஜ்யாவர்ஜ்யம் இல்லாமல்) எல்லாவற்றையுமருந்துகிறவனுமாயிருக்கிற பாபகர்மமுடையவனுல் சந்தோஷத்தையடைவதில்லை. எத்தமனிதர்கள் ஸத்தியத்தையேவிரதமாகக்கொண்டவர்களும் நன்றியறிவுடையவர்களும் தர்மத்தில்பற்றுள்ளவர்களுமாயிருக்கின்றார்களோ அவர்களோடுகூடத தேவர்கள் ஸுகத்தைப் பங்கிட்டடைகின்றார்கள். பேசுவதைக்காட்டிலும் பேசாமலிருப்பதைச் சிறந்ததாகச் சொல்லுகின்றார்கள். (பேசினுல்) ஸத்தியமானவார்த்தையைச் சொல்ல வேண்டும். அதை இரண்டாவதாகவும், தர்மத்தினின்றுமிலகாத வார்த்தையைச் சொல்லுவானேயானுல் அதைமூன்றுவதாகவும், பிரியமான வார்த்தையைச்சொல்லுவானுனுல் அதை நான்காவதாகவும் சொல்லுகின்றார்கள்' என்றது. ஸாத்யர்கள், 'இந்தஉலகம் எதனுல் சூழப்பட்டிருக்கிறது? எதனுல் பிரகாசிக்கிறதில்லை? எதனுல் நட்பினரைவிடுகின்றது? எதனுல் ஸ்வர்க்கத்தையடைகிறதில்லை?' என்று கேட்டார்கள். ஹம்ஸம், 'உலகமானது அஜ்ஞானத்தால் சூழப்பட்டிருக்கிறது; மத்ஸரத்தால் பிரகாசிக்கிறதில்லை; லோபத்தால் நண்பர்களைவிடுகிறது. ஸங்கத்தால் ஸ்வர்க்கத்தையடைகிறதில்லை' என்றது. ஸாத்யர்கள், 'பிராம்மணர்களில் எவன் ஸந்தோஷத்தை அடைகிறனன்? எவன் அனேகர்களுடனிருந்தும் மௌனமாயிருக்கின்றனன்? எவன் வலிமையற்றவனுயிருந்தாலும் வலிமையுள்ளவனுயிருக்கிறனன்? எவன் மனிதர்களுடையசண்டையில் சேராமலிருக்கிறனன்? என்றுகேட்டார்கள். ஹம்ஸம், 'பிராம்மணர்களுள் பேரறிவுள்ளவனொருவனே ஸந்தோஷித்துக்கொண்டிருக்கிறனன். பேரறிவுள்ளொருவனுல் அநேகர்களுடனிருந்

தும் மௌனமாயிருக்கிறான். பேரறிவுள்ளவன்ஒருவன் துர்ப்பலனாயிருந்தாலும் பலவானாயிருக்கிறான். பேரறிவுள்ளவன் இவர்களுடைய கலகத்தை அனுஸரிக்காமலிருக்கிறான்" என்றுசொல்லிற்று. ஸாத்யர்கள், 'பிராம்மணர்களுக்கு எது தேவத்தன்மையாகவும் எது ஸாதுத்தன்மையாகவும் சொல்லப்படுகின்றன? எது அவர்களுடைய அஸாதுத்தன்மையாகக் கருதப்பட்டிருக்கிறது? எது அவர்களுக்கு மனிதத்தன்மையாகக் கருதப்பட்டிருக்கிறது' என்றனர். ஹம்ஸம், 'இவர்களுக்கு வேதாத்யயனமானது தேவத்தன்மையாகவும் விரதமானது ஸாதுத்தன்மையாகவும் சொல்லப்படுகின்றன பரநிந்தையானது அஸாதுத்தன்மையாகவும் மரணமானது மனிதத்தன்மையாகவும் சொல்லப்படுகின்றன' என்று சொல்லிற்று. பரமேச்வரும் தேவரும் பகவானும் நித்யரும் விகாரமில்லாதவருமாயிருக்கிற (ஹம்ஸரூபியான) ப்ரம்மாவானவர் இவ்விதம் சொல்லிவிட்டு ஸாத்யர்களான தேவகணங்களோடு ஸ்வர்க்கத்தையடைந்தார் புகழுக்குக் காரணமும் ஆயுளுக்குக்காரணமும் ஸ்வர்க்கத்தைத் தரத்தக்க நிலைத்த புண்ணியமுமாயிருக்கிற இது தேவதேவரும் மேலானவரும் அழிவற்றவருமான ப்ரம்மதேவரால் காண்பிக்கப்பட்டது இவ்விதம் ஸாத்யர்களுக்கும் ஹம்ஸத்திற்கும் நடந்த சிறந்த ஸம்வாதமானது சொல்லப்பட்டது. சரீரமானது கர்மங்களுக்குக் காரணம் (அதில்) ஸாதுத்தன்மையானது ஸத்யமாகச சொலலப்படுகின்றது" என்று சொன்னார்.

முந்நூற்றுமூன்றாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(யோகமுறையும் யோகிகளின் சிறப்பும்.)

யுதிஷ்டிரர், "ஐயா! எனக்கு ஸாங்கியத்திலும் யோகத்திலும் மிருக்கிறவிசேஷத்தைச் சொலலவேண்டும். தர்மத்தையறிந்தவரே! குருக்களுள் சிறந்தவரே! நீர் எல்லாமறிந்தவரன்றோ?" என்று வினவ, பீஷ்மர் சொல்லத்தொடங்கினார்

"ஸாங்கியர்களான பிராம்மணர்கள் ஸாங்கியத்தைச் சிலாகிக்கின்றார்கள். யோகிகளான பிராம்மணர்கள் யோகத்தைச் சிலாகிக்கின்றார்கள். தங்கள் மதத்தின் உத்கர்ஷத்தின்பொருட்டு மேலானகாரணத்தைச் சொல்லுகின்றார்கள் சத்துருக்களை வதைக்கிறவனே! புத்தி

மான்களான யோகிகள் ஈச்வரனில்லாத விஷயத்தில் எப்படி முக்தியை யடைவானென்று இவ்விதம் (இதங்கள்) காரணத்திற்கு நன்முக உத்கர் ஷத்தைச் சொல்லுகின்றார்கள். ஸாங்கியர்களான ப்ராம்மணர்களும் நன்முக இந்தக்காரணத்தைச சொல்லுகின்றார்கள் 'இவ்வுலகில் (ப்ரா ணிகளுடைய) எல்லாக்கதிகளையுமறிந்து விஷயங்களில் விரக்தனுமிரு ப்பவன் சரீரம்நீங்கியபிறகு மிகவும் செவ்வையாக முக்தியடைவான்; வேறுவிதமானால் முக்தியடையான்' என்கிற இந்த ஸாங்கியத்தை மகாப்ராஜ்ஞர்களான அவர்கள் (மோக்ஷத்திற்குரிய) ஞானமா கச் சொல்லுகின்றார்கள். தன்னுடைய பக்ஷத்தில் உறுதி யுடனும் நன்மையைத்தரத்தக்கதுமான வசனமானது காரண மாகக் கொள்ளத்தக்கது சிஷ்டர்களால்ஸம்மதிக்கப்பட்ட உண்மைப் போன்றவர்களாலே சிஷ்டர்களுடையமதமானது கொள்ளத்தக்க தன்றே? யோகிகள் ப்ரத்யக்ஷத்தைக் காரணமாகவுடையவர்கள. ஸாங்கியர்கள் சாஸ்திரத்தினுறுதியுடையவர்கள். அப்பா! யுதிஷ்டிர! இந்த இரண்டு சாஸ்திரங்களும் எனக்கு ஸம்மதங்களே. அரசனே! இவைகளாலுண்டாகிற இரண்டுஞானங்களும் சிஷ்டர்களுக்குச் சம் மதவாக ஏற்புக்கொள்ளப்பட்டவை அவைகள், சாஸ்திரப்படி அனுஷ் டிக்கப்பட்டால் மேலானகதியை அடையும்படி செய்கின்றன குற்ற மற்றவனே! இருவருக்கும்சுத்தியானது ஏகவிதம்தான் பிராணி கள்விஷயத்தில் தயையும் ஒன்றே. விரதங்களைத்தரிப்பதும் ஒன்றே. அவர்களுக்குச் சாஸ்திரமானது ஸமமாயில்லை. அவர்களுக்குமிகவும் ஸூக்ஷ்மவிசாரமில்லாத விஷயத்தில் ஏகசாஸ்திரமேற்படும்'' என்று சொன்னர். யுதிஷ்டிரர், "ஓ! பிதாமஹரே! இவர்களுக்கு விரதமும் மௌனமும் பிராணிதயையும் அப்படியே பயனும் ஸமமேயானால் சாஸ்திரமாத்திரம் என்னகாரணத்தினால் ஸமமில்லை? அதை எனக்குச் சொல்லும்'' என்றுகேட்டார். பீஷ்மர், "அந்தயோகிகள் ராகம், மோகம், ஸ்நேகம், காமம், க்ரோதம் இவ்வைவந்தோஷங்களையும் யோகத்தால் நன்முக அறுத்துவிட்டு மோக்ஷபதத்தை அடைகின்றார் கள். பருத்தமத்ஸ்யங்கள் 'வலையையறுத்துவிட்டு மறுபடியும் ஜலத் தையடைவதுபோலத் தோஷங்களைத் தொலைத்துவிட்டு யோகிகளான வர்கள் அந்தமோக்ஷபதத்தை அடைகின்றார்கள் வேறே! பலமுடை யபிருகங்கள் வலையையறுத்து எல்லாக்கட்டுகளிலிருந்தும் விடுபட் டுத் தடையில்லாதமார்க்கத்தை யடைவதுபோல யோகபலமுடைய வர்கள் லோபத்தாலுண்டானபந்தங்களை யோகத்தாலறுத்துவிட்டு நிர் மலமாயும் மங்களமாயுமிருக்கிற மேலானமார்க்கத்தை அடைகின்றார்

கள். அரசனே! பலமில்லாதமற்றமிருகங்கள் வலிகளில் (சிக்கிக் கொண்டு) நசிப்பதுபோல யோகபலமில்லாதயோகிகள் நசிப்பார்கள். ஸந்தேகமில்லை. குந்தீபுத்திர! ராஜஸ்ரேஷ்ட! பலமில்லாதமீன்களவலியில் அகப்பட்டு நாசத்தை அடைவதுபோலச் சிறிதும்பலமில்லாத யோகிகளும் நாசத்தை அடைவார்கள். பகைவர்களை அடக்குகிறவனே! பக்ஷிகள் துண்ணியவலையை அடைந்து அதில்சிக்கிக்கொண்டு நாசத்தை அடைவதுபோலவும் பலமுள்ளவைகள்விடுபடுவதுபோலவும் கர்மத்தாலுண்டானபந்தங்களால்கட்டுண்ட பலமில்லாதயோகிகள் நசிக்கின்றார்கள். பலமுடையவர்கள் விடுபடுகின்றார்கள். அரசனே! பிரபுவே! அற்பமும் பலமில்லாததுமான அக்னியானது பருத்தவிறகுகளால் நிரப்பப்பெற்றால் அவிந்துபோவதுபோலப் பலமில்லாதயோகியானவன் நசித்துவிடுகிறான். அரசனே! அந்த அக்கினியே திரும்பவும்பலமடைந்து வாயுவுடன் சேர்ந்துகொண்டு பூமிமுழுமையும் சிக்கிரத்தில் எரித்துவிடுவதுபோல பலத்தையடைந்தயோகியானவன் பிரகாசிக்கின்றதேஜஸையும் பெரியபலத்தையுமடைந்து பிரளயகால ஆகித்தியன்போல உலகமனைத்தையும் எரியசெய்வான். அரசனே! பலமில்லாதமனிதன் வெள்ளத்தாலிழுக்கப்படுவதுபோலப் பலமற்றவனனயோகியானவன் தன்வசமின்றி விஷயங்களாலே இழுக்கப்படுகிறான். அதேபெரியவெள்ளத்தை யாணையானது தடுத்துவிடுவதுபோல யோகபலத்தை அடைந்து பலவிஷயங்களை யோகியானவன் விலக்கிவிடுகிறான். குந்திபின்புத்திரனே! யோகபலத்தையுடையவர்கள் சக்தியுடையவர்களும் பிறருக்குலசமாகாதவர்களுமாகி யோகத்தினாலே பிரஜைகளுக்குப்பதிகளான (மரீசிமுதலிய) வர்களிடத்திலும் ரிஷிகளிடத்திலும் தேவர்களிடத்திலும் மஹாபூதங்களிடத்திலும் பிரவேசிக்கின்றார்கள். ஓ! அரசனே! அளவற்றபலமுடையயோகியை அடக்கயமனும் கோபத்தையடைந்த அந்தகனும் பயங்கரமான பராக்ரமமுடையமிருத்யுவுமாகிய எல்லோரும் வல்லவர்களல்லர். பரதஸ்ரேஷ்டனே! யோகியானவன் யோகபலத்தையடைந்து அநேகமாயிரம் சரீரங்களை உண்டாக்கிக்கொள்வான்; அந்த எல்லாச்சரீரங்களாலும் பூமியில் ஸஞ்சரிப்பான். ஐயனே! அவைகளில் ஒன்று விஷயங்களை அனுபவிக்கும். (ஒன்று) மறுபடியும் உக்கிரமானதவத்தைச் செய்யும். சூரியன் தன் கிரணக்கூட்டங்களைச் சுருங்கச்செய்வதுபோல அவன் மறுபடியும் (அந்தச்சரீரங்களை) கிரகித்துவிடுவான். அரசனே! பலமுள்ளவனும் பந்தத்தையறுக்கவல்லவனுமான யோகிக்கு மோக்ஷவிஷயத்தில் வல்லமையானது ஸந்தேகமின்றி உண்

டாகும். அரசனே! நன்கு தெரிவிக்கிறதற்காக யோகத்தால்டையப்பட்ட பலங்களை நான் சொன்னேன். மறுபடியும், உனக்கு உதாரணத்திற்காக ஸூக்ஷ்மங்களைச் சொல்லுவேன். தலைவனே! பரதச்ரேஷ்டனே! மனத்தை ஒருவழிப்படுத்தும் விஷயத்திலும் ஓரே இடத்தில் நிற்கச்செய்கின்ற விஷயத்திலும் ஸூக்ஷ்மமான என்னுடைய திருஷ்டாந்தங்களைக் கேள். வில்லாளியானவன் அஜாக்ரதையின்றி மனத்தை ஒருவழிப்படுத்தி லக்ஷ்யத்தை அடிப்பதுபோல யோகியானவன் மனத்தை நன்கு ஒருவழிப்படுத்தி ஸம்சயமின்றி மோக்ஷத்தை அடைகிறான். அரசனே! ஒருவன் (தலையிலிருக்கிற) எண்ணெய்நிறைந்தகுடத்தில் மனத்தைச் சலியாமல்வைத்துக்கொண்டு ஊன்றியமனத்துடன் ஜாக்கிரதையுள்ளவனுமாகிப் படியில் ஏறுவதுபோலவே இந்த யோகியும் சலியாததானமனத்தை அடைந்து (தன்னுடைய) ஆத்மாவை நிர்மலமும் ஸூர்யனுக்குச்சமமான தரிசனத்தையுடையதுமாகச் செய்கின்றான். குந்தீபுத்திரனே! அரசனே! நரபதியே! ஒடக்காரனைவன் மனத்தை ஒருமுகமாகவே செய்துகொண்டு பெரிய ஸமுத்திரத்தைஅடைந்தஓடத்தை விரைவில் பட்டணம் கொண்டுவந்து சேர்ப்பதுபோலத் தத்வஜ்ஞானியானவன் யோகத்தினால் மனத்தை ஒருவழிப்படுத்திக்கொண்டு இந்தத் தேகத்தைத்தள்ளிவிட்டு அடைதற்கரிய ஸ்தானத்தை அடைகின்றான். புருஷச்ரேஷ்டனே! ஸாதியானவன் நல்லகுதிரைகளைப் பூட்டி ஜாக்ரதையுடன் வில்லாளியை அவனுக்கு இஷ்டமான இடத்தில் சேர்ப்பிப்பதுபோல யோகியானவன் லக்ஷ்யங்களில் மனத்தை ஜாக்கிரதையுடன் ஊன்றச்செய்து விடப்படாபாணம் லக்ஷ்யத்தை அடைவதுபோலப் பரமானஸ்தானத்தை விரைவில் அடைகின்றான். எந்த யோகியானவன் மனத்தை ஆத்மாவில் பற்றச்செய்து சலிக்காமலிருக்கிறானோ அவன் தனது பாவத்தை நாசம் செய்கிறான்; பரிசுத்தமுள்ளவர்களடைகின்ற அழிவற்றபதத்தையும் அடைகின்றான். அளவற்ற பராக்கிரமமுடையவனே! அரசனே! எந்த யோகியானவன் [1]மஹாவிரதமேன்கிற விரதத்தில்பற்றிநின்று ஈயி, கண்டம், சிரம், ஹ்ருதயம், மார்பு, விலாப்புறங்கள், நேத்திரம், ப்ரோத்திரம், க்ராணம் இந்தஸ்தானங்களிலே தானுகவே ஸூக்ஷ்மனை (தனது) மனத்தை நன்கு சேர்ப்பிக்கிறானோ அவன் மஹிமைபோன்ற புண்ணிய

---

1 சாஸ்திர விஹிதமான ஜாதிஹிம்ஸை தேசவிசேஷத்தில் ஹிம்ஸை காலவிசேஷத்தில் ஹிம்ஸை காரியவிசேஷத்தில் ஹிம்ஸைமுதலியவைகளோக் கூட விட்டிருத்தல்.

* L சுடு

பாபகர்மங்களைச் சீக்கிரமாக எரித்துவிட்டு மேலான யோகத்தை அடைந்து தான் விரும்புமபோது முக்தியடைகிறான்'' என்று சொன்னார்.

அ யுதிஷ்டிரர், ''ஓ! பாரதரே! யோகியானவன் எப்படிப்பட்ட ஆகாரங்களை அருந்தி எவைகளை ஜயித்து (யோக) பலத்தை அடைகின்றான்? அதை நீர் எனக்குச் சொல்லக்கடவீர்,'' என்று கேட்டார். பீஷ்மர், ''ஓ! பாரதனே! யோகியானவன் பிண்ணாக்கையும் கொம்புகளையும்பக்ஷிப்பவனும் தைலங்களைத் தள்ளுபவனுமாகி யோகபலத்தை அடைவான். பகைவரையடக்குபவனே! யோகியானவன் உண்ணமுடியாத [1]யவபிஷ்டத்தை நெடுங்காலம் ஒருவேளை உண்பவனும் மிகவும் சுத்தமான மனமுடையவனுமாயிருந்தால் யோகத்தின் வலிமையை அடைவான். யோகியானவன பாசுகங்களோ மாஸங்களோ ருதுக்களோ வருஷங்களோ பகலில் மாத்திரம் பால்கலந்த ஜலத்தை அருந்தி யோகபலத்தை அடைவான அரசனே! மிகவும் சுத்தமான மனமுடைய யோகியானவன் எப்பொழுதும் எல்லாமாம்ஸத்தையும் தள்ளிவிட்டால் யோகபலத்தையடைவான் மன்னருட் சிறந்தவேந்தனே! ஆசையற்றவர்களும் மிக்க அறிவுடையவர்களும் மகாத்மாக்களுமான யோகிகள் தியானம் பிரணவஜபம் இவற்றின் மிகுதியினால் காமத்தையும் குரோதத்தையும் பீதோஷ்ணங்களையும் மழையையும் பயத்தையும் சோகத்தையும் சுவாஸத்தையும் மூளிடமுயற்சியாலடைபடக்கூடிய விஷயங்களையும் ஜயிக்க முடியாதபனசசோர்வையும் கோரமான ஆசையையும் ஸ்திரீஸங்கத்தையும் நித்திரையையும் ஜயிக்க முடியாத சோர்வையும் ஜயித்துவிட்டுப் புத்தியினால் ஸமஸ்தமான ஆத்மாவை பிரகாசிக்கச் செய்கிறார்கள். பாண்டிதர்களான பிராம்மணர்களுடைய இந்த மார்க்கம் செல்வதற்கு முடியாததாகக் கருதபபட்டிருக்கிறது. பரதஸ்ரேஷ்டனே! இந்த மார்க்கத்தில் ஒருவனும் க்ஷேமத்தோடு செல்லுகிறதில்லை. பௌவனாமடைய ஒருவன் பயங்கரமான அனேக நல்லபாம்புகளுடைய இப்பாம்புகளுமுடையதும் ராக்ஷஸர்களோடுகூடினதும் ஜலமற்றதும் பிரவேசிக்கமுடியாததும் அனேகமுள்ளுகளோடுகூடின்தும் ஆகாரவஸ்துவில்லாததும் கொடிகொடிகள்நிறைந்ததும் காட்டுத்தீயால் கருகினவிருக்ஷங்களுள்ளதும் திருடர்கள் நிறைந்ததுமாயிருக்கிற வனமார்க்கத்தில் க்ஷேமமாகச் செல்லுதல்போல யோகமார்க்கத்தையடைந்து செல்லுகிற பிராம்மணன் க்ஷேமத்தோடு அந்த மார்க்கத்தி

1 யவதான்யத்தின் மா.

லிருந்தும் முடிவடையான் அந்த மார்க்கமானது வெகுதோஷங்க ளுடையதாகக் கருதப்பட்டது அரசனே! கூர்மையான கத்தி முனைகளிலும் ஸுகமாக இருக்கமுடியும். மனிவசமில்லாதவர்க ளாலே யோகத்தினுடைய தாரணைகளிலே இருக்கமுடியாது. ஐயா! அரசனே! ஒடக்காரனில்லாத ஓடங்கள் அலைகளிலிருக்கும் மனி தர்களை ஸமுத்திரத்தில் கெட்டகதியை அடையசெய்கிறதுபோல ஆபத்துள்ள தாரணைகள் கெட்டகதியை அடையசெய்கின்றன. குந்தி புத்திர! விதிப்படி தாரணைகளிலிருக்கின்றவன் மரணத்தையும் ஜனனத்தையும் துக்கத்தையும் ஸுகத்தையும்விட்டு விலகுகின்றான். இது அநேக சாஸ்திரங்களிலுமுள்ளதும் யோகசாஸ்திரங்களில் சொல்லப்பட்டதுமாயிருக்கின்றது. யோகத்தினுடைய சிறந்தபய னானது பிராம்மணர்களிடத்தில் நிசயிக்கப்பட்டதாயிருக்கிறது. நல்ல ஸ்வபாவமுள்ளவனே! சிறந்த அந்த யோகபலமானது ப்ரம்மரூபம். மஹானும் பெரியமதியுடையவனுமான யோகியான வன் ரிக்கிரமாக விடுபட்டுப் பரத்திற்கும் பரமான (சுத்த) ப்ரம்மத் தைஅடைந்து ஸ்வதந்திரனாகவும் ப்ரம்மாவையும் வேண்டும்வரத்தை அளிக்கின்ற விஷ்ணுவையும் ருத்ரனையும் தர்மராஜனையும் வஜ் ரமுகரையும் (கபிலர்முதலாகிய) மஹாயோகிகளான ஆறு ப்ரம்ம புத்திரர்களையும் கஷ்டமான தபோநுஷ்டானத்தையும் மிகப் பெரி தான ரஜோகுணத்தையும் சுத்தமான ஸத்வகுணத்தையும் பர மான மூலபிரகிருதியையும் வருணனுக்குப் பதியான லக்ஷ்மிதேவி யையும் [1]எல்லாதேஜஸையும் மிகவும் பெரிதான [2]தைரியத்தையும் நிர்மலமானவனும் நக்ஷத்திரங்களோடுகூடினவனுமான ஆகாயத்தி னுள்ள சந்திரனையும் விச்வேதேவர்களையும் உரகர்களையும் பித்ரு தேவதைகளையும் எல்லாமலைகளையும் பயங்கரமான ஸமுத்திரங்களையும் எல்லாநதிகளையும் ஜலத்தோடுகூடிய மேகங்களையும் நாகர்களையும் விருக்ஷங்களையும் யக்ஷர்களின் கூட்டங்களையும் திக்குக்களையும் கந்தர் வர்களின்கூட்டங்களையும் புருஷர்களையும் ஸ்திரீகளையும் அடைவான். அரசனே! மகாத்மாவான யோகியானவன், எல்லாமனிதர்களுக்கும் மேலாகி நாராயணஸ்வரூபத்தையடைந்து சிறந்தசக்தியும் ஞான முமுள்ள அந்தத்தேவனிடத்தில் ஏற்பட்ட சுபமான ஸ்ருஷ்டிமுத லானவற்றைச் செய்கிறான்'' என்றுசொன்னார்.

---

1 தேயுவின் லக்ஷ்மியையும். 2 பிருதிவியின் லக்ஷ்மியையும்.

மூன்றூற்றேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

———:o:———

(ஸாங்கியத்தின்முறையும் சீறப்பும்.)

யுதிஷ்டிரர், "ஓ! அரசரே! இப்பொழுது சிஷ்யனுக்குநன்மை யைவிரும்புகிற உம்மால் சிஷ்டர்களுக்கு ஸம்மதமான இந்தயோக மார்க்கமானது முறைப்படி நன்கு சொல்லப்பட்டது. இப்பொழுது, ஸாங்கியத்திலிருக்கிறவிதியைக் கேட்பவனை எனக்கு முழுதும் தெரி ல்லும். மூவுலகங்களிலுமுள்ள சாஸ்தரங்களெல்லாம் உம்மால் அறி யப்பட்டனவல்லவா?" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"அரசனே! எவ்விதத்தவறுதலானஞானங்களும் காணப்படாத தும் பலகுணங்களையுடையதும் சிறிதும்தோஷமில்லாததும் எல்லா யதிகளாலும் ஸ்வதந்திரர்களான கபிலர்முதலானவர்களாலும் அறியப் பட்டதுமான ஆத்மஜ்ஞானிகளான ஸாங்க்யர்களுடைய இந்தவிஷ் யத்தை முழுதும் நீ என்னிடம் கேள். அரசனே! பேசுகிறவர்களுள் சிறந்தவனே! பாரத! தோஷமுள்ளவையும் ஜயிக்கமுடியாதவையு மான மனிதர்களுடைய எல்லாவிஷயங்களையும் பிசாசங்களுடையவிஷ யங்களையும் ஞானத்தினல்நிச்சயித்து ராக்ஷஸர்கள், யக்ஷர்கள், உரகர் கள், கந்தர்வர்கள், [1]பித்ருக்கள், விலங்குஜாதிகளில் ஸஞ்சரிப்பவர்கள், கருடர்கள், மருத்துக்கள், ராஜரிஷிகள், ப்ரம்மரிஷிகள், அஸுரர்கள், விஸ்வேதேவர்கள், தேவரிஷிகள், யோகீச்வரர்கள், ப்ரஜைகளுக்குப் பதிகள், ப்ரம்மா இவர்களின்விஷயங்களையும் உலகத்தில் ஆயுளின் பரமமானகாலத்தையும் ஸுகத்தின்மேலானதத்வத்தையும் எப்பொழு தும் விஷயத்தில்பற்றுள்ளவர்களுக்குக் காலம் நேரிட்டபோது உண் டாகும் துக்கத்தையும் விலங்குப்பிறவிகளில் விழுந்தவர்களின் துக்கத் தையும் நரகத்தில் விழுந்தவர்களின் துக்கத்தையும் ஸ்வர்க்கத்தி லுள்ள எல்லாக்குணங்களையும் எல்லாத்தோஷங்களையும் [2]வேத வாதத்திலுள்ள குணதோஷங்களையும் ஞானயோகத்திலும் கேவல யோகத்திலுமுள்ள குணதோஷங்களையும் ஸாங்க்யஞானத்திலு ள்ள குணதோஷங்களையும் பின்னும் மற்றவைகளிலுள்ள குண

---

1 ஒருசொல் விடப்பட்டது.

2 அதிகபாடமான அசைஸ்லோகம் விடப்பட்டது.

தோஷங்களையும் [1]பத்துக்குணங்களுள்ள ஸத்வகுணத்தையும் [2]ஒன்பது குணங்களுள்ள ராஜோகுணத்தையும் [3]எட்டுக்குணங்களுள்ள தமோகுணத்தையும் [4]ஏழுகுணங்களுள்ள புத்தியையும் [5]ஆறுகுணங்களுள்ள மனத்தையும் [6]ஐந்துகுணங்களுள்ள ஆகாயமுதலியவற்றையும் மறுபடியும் [7]நான்குகுணங்களுள்ள புத்தியையும் [8]மூன்று குணங்களுள்ள தமோகுணத்தையும் [9]இரண்டுகுணங்களுள்ள ராஜஸையும் [10]ஒரேகுணமுள்ள ஸத்வத்தையும் ஆத்மாவினுடையஸ்ருஷ்டியையும் உண்மையாகஅறிந்து ப்ரளயவிஷயத்திலும் நன்றுகப்பார்த்துச சாஸ்திரத்தாலுண்டானஞானம் ஸாக்ஷாத்காரம் இவற்றுடன் கூடினவர்களும் மோக்ஷஸாதனங்களால் ஸத்வாஸனையுடையவர்களுமாயிருக்கிற நல்லோர்கள், ஸமக்ஷமவஸ்துக்கள் மேலானஆகாயத்தை அடைவதுபோலச சுபமான மோக்ஷத்தை அடைகின்றார்கள். ராஜனே! பகைவரைத்தபிக்கசெய்கிறவனே! • ஜனங்களைக் காப்பவனே! பூபதியே! நரபதியே! பரதர்ஷபேஷ்டனே! ரூபத்தோடுசேர்ந்த நேத்ரதையும் கந்தமென்னும் குணதையுடைய ரோணத்தையும் சப்தத்தில்பற்றின ச்ரோத்ரத்தையும் ரஸங்களாகிற குணங்களில்பற்றின ஜிஹ்வையையும் ஸ்பர்சத்தில்பற்றினத்வகிந்திரியதையும் ஆகாயத்தில ஆச்ரயித்தவாயுவையும் தமஸில்சேர்ந்த மோஹத்தையும் அர்த்தங்களில்பற்றின லோபத்தையும் விஷ்ணுவினிடம் ஸஞ்சாரத்தையும் இந்திரனிடம்சேர்ந்த பலத்தையும் உதரத்தில் சேர்ந்த அக்நியையும் ஜலததில்சேர்ந்த பூதேவியை

---

1 ஆனந்தம், பரீதி, கெட்டவிஷயத்தில்கடுக்கம, மனத்தின் பிரகாசம், புண்யத்தையேகாடுதல். ஸந்தோஷம், ச்ரத்தை, நேராயிருத்தல், ந்யாயத்தில் நாட்டம், ஐச்வர்யம.

2 ஆஸ்திகத்தன்மை, தயாதவனுபிராமை, ஸுகதுக்கங்களை ஸேவித்தல், பேதப்படுத்தல், புருஷகாரம், காமம், க்ரோதம், மதம், கர்வத்தினாலும் த்வேஷத்தினாலும்உண்டாகும் அதிகப்பேச்சு.

3 தமஸ், மோகம், மகாமோகம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், நித்ரை, அஜாக்ரதை, சோம்பல்.

4 மஹத்தத்வம், அஹங்காரம், ஸூக்ஷ்மபூதங்களான தன்மாத்திரைகள் ஐந்து.

5 வெளிப்புலன்களின் செய்கைஐந்து, ஸங்கல்பம்.

6 சப்தமுதலியவை.

7 ஸம்சயம், நிச்சயம், அகங்காரம், ஸ்மரணம்.

8 ஐயம், திரிபு, அறியாமை.

9 ப்ரவ்ருத்தி, தூக்கம்.

10 ப்ரகாசம்

யும் தேயுவில் சேர்ந்த ஜலத்தையும் வாயுவில்சேர்ந்த தேயுவை யும் ஆகாயத்தில்சேர்ந்த வாயுவையும் பூதத்தத்துவத்தில் சேர்ந்த ஆகாயத்தையும் புத்தியில்சேர்ந்த மகத்தத்துவத்தையும் தமஸில்பற் றின புத்தியையும் ரஜஸில்பற்றின தமஸையும் ஸத்வத்தில் பற் றின ரஜஸையும் ஆத்மாவில் பற்றின ஸத்வத்தையும் ஈசரும் தேவருமாயிருக்கிற நாராயணரிடத்தில பற்றின ஆத்மாவையும் மோகூத்திலபற்றின தேவரான நாராயணரையும் ஒன்றையுமபற்றாத மோகூத்தையும் புத்தியுடன்கூடினதும் பதினாறு குணங்களால சூழப்பட்டதுமான தேகத்தையும் தேகதகதை ஆரம்பமித்த பூர்வவா ஸனையையும் பரஜ்ஞையையும் மானஸிகமான ஸ்வபாவத்தினுண்டான பாபஸம்பந்தமில்லாததால் உதாஸீனனும் விஷயங்களை விரும்பாதின்ற இந்திரியங்களைச்சேர்ந்த இரண்டாவதான ஜாக்ரத்தினுண்டான காம மில்லாதவனும் ஒருவனுமாயிருக்கிற அந்த ஆத்மாவையும் விஷ யத்தைவிரும்புகிறவர்களுடைய இரண்டாவதான கர்மத்தையும் புத் தியில் ஆரம்பித்த எல்லாஇந்திரியங்களையும் இந்திரியவிஷயங்களையும் வேதத்தைமுன்னிட்டு மோகூத்தின் அடைய அரிதானதன்மை யையும் பராணன் அபானன் ஸமானன் வியானன் உதானன் என் னும் வாயுக்களையும் ஆவஹன் பிரவஹன் என்றவாயுக்களையும் ஏழு ஏழு விதமாகசெய்யப்பட்ட மற்ற ஸப்தமருத்துக்களையும் பர ஜைகளுக்குப் பதிகளையும் ரிஷிகளையும் சிறந்தபலவழிகளையும் ஸப்த ரிஷிகளையும் பலராஜரிஷிகளையும் மகான்களான மற்றுந் தேவரிஷி களையும் ஸூர்யனுக்கு ஸமமான பரம்மரிஷிகளையும் பெரியகால த்தினுல் லூர்வர்யத்திலிருந்து நழுவும்படி செய்யபட்டவர்களையும் மகத்துக்களான பூதஸமூகங்களுடைய நாசத்தையும் பாபகர்மத தோடுகூடியவர்களுடைய கஷ்டமானகதியையும் யமனுடைய கிரு கத்தில் பதிதர்களுக்கு வைதரணி நதியிலுள்ள துக்கத்தையும் அநேக விதமான பிறவிகளிலுண்டான கெட்டலஸ்ஸாரங்களையும் உதிர மாகிற ஜலத்துக்கு இருப்பிடமான அசுபமான குஹியிலும் கொ டிய துர்க்கந்தமுள்ள கபத்திலும் மூத்ரத்திலும் மலத்திலும் வி ஸத்தையும் வீர்யம் உதிரம் இவற்றின்சேர்க்கையாலுண்டான்தும் மஜ்ஜைநரம்புகளின் ஸம்பந்தமுள்ளதும் அனேக மெல்லிய நரம்பு களால் நிரம்பியதும் ஒன்பது த்வாரங்களுடையதும் அசுத்தமுள்ள தும் மானசரீரமாகிய புரத்தில் வைக்கப்பட்ட ஆத்மாவையும் தமோகுண முள்ளவைகளும் அழகானவஸ்துக்கள் நிறைந்தவைகளுமான பிரா ணிகளுடைய கூட்டங்களையும் ஸாத்விகமான் பிராணிகளுடைய அவ

மதிபையும் மகான்களும் ஆத்மவித்துக்களுமான ஸாங்க்யர்களுக்கு தனத்தினுலுவாடாரும் நிக்ரதையையும் சந்திரனுக்கும் ஸூர்ய னுக்குமுள்ள கோரமான பயத்தின் உபதரவங்களையும் சிறுகஷ்தரங் கள் விழுவதையும் பெரியகஷ்தரங்களின் (ஒழிவிலலாத) சலனத்தை யும் [1]தூக்கிக்கத்தக்கதான வஸ்திரீபுருஷர்களின் பிரிவையும், பிரா ணிகள் ஒன்றை ஒன்று கொடுமையாகப் பக்ஷிப்பதையும் இளமையி லுள்ளபோகத்தையும் தேகத்தின் அசுபமானகஷ்டத்தையும் ராகமும் மோகமுமுண்டானபொழுது ஸத்வகுணமானது ஒருமூலையில் ஒதுங் குவதையும் அறிந்து ஆயிரவர்களில் ஒரு மனிதன் மோக்ஷத்தியை அடைந்தவனுகிருன் அரசனே! குந்திபுத்ர! பாரத! யுதிஷ்டிர! வேதத்தைமுன்னிட்டு மோக்ஷத்தின் அடைய அரிதானதன்மையை யும் அடையப்படாதவஸ்துக்களில் அதிக ஆதரவையும் அடையப்பட்ட வஸ்துவில் உதாஸீனத்தன்மையையும் விஷயங்களுடைப் துஷ்டஸ்வ ரூபத்தையும் இறந்தவர்களின் அசுபமான தேகங்களையும் வீடுகளில் ஜந்துக்களின் கஷ்டமான வாஸத்தையும் பிரம்மஹத்திசெய்தபதி தீர்களின் மிகக்குரூரமான கதியையும் ஸுராபானசுகில் பற்றுள்ள வர்களும் துஷ்டசித்தமுள்ளவர்களுமான பிராம்மணர்கள் குருபக்தியி டம் விருபபம்வைத்தவர்கள் இவர்களுடைய அசுபமானகதியையும் தாய்விஷயத்தில் ஒழுங்காயிராதவர்கள், தேவர்கள் விஷயத்திலும் மனிதர்கள் விஷயத்திலும் சரியாயிராதவர்கள் ஆகிய கொடுங்செய் கைக்காரர்களின் கதியையும் விலக்குப்பிறவியை அடைந்தவர்களு டைபகனியானகதியையும் பலவிதமான வேதவாதங்களையும் ருதுக் களின் மாறுதல்களையும் வர்ஷங்களுடைய நாசத்தையும் மதங்களு டைய நாசத்தையும் பக்ஷிகளுடையநாசத்தையும் தினங்களுடைய நாசத்தையும் சந்திரனுடைய க்ஷயத்தையும் விருத்தியையும் ஸமுத் ரங்களுடைய வருத்தியையும் மறுபடியும் அவைகளின் க்ஷயத்தையும் தனங்களின் க்ஷயத்தையும் மறுபடியும் வ்ருத்தியையும் கூட்டங்களு டையநாசத்தையும் விசேஷமாக யுகங்களின்நாசத்தையும் மலைகளின் நாசத்தையும் நதிகளின்நாசத்தையும் வர்ணங்களுடைய நாசத்தையும் அடிக்கடி வ்ருத்தியையும் ஜரை, ம்ருத்யு ஜனனம்இவைகளையும் துக் கங்களையும் தேகதோஷங்களையும் தேகங்களின் துக்கத்தையும் தேகத் தின்தவர்சசியையும் ஆத்மாவில்ஆச்ரயித்த எல்லா ஆப்தோஷங்களை யும் தன்தேகத்திலிருந்துண்டாகும் நீயநாற்றங்களையும் மூத்ரம் கபம் மலமுதலியவைகளையும் வேர்வையிலிருந்துண்டாகும் மிகக்கெட்ட

[1] ஒருசொல் வீடப்பட்டது.

பதார்த்தங்களையும் உண்மையாக அறிந்து ஆபிரத்தில் ஒருவன் மோக்ஷ புத்தியை அடைகிறான்'' என்றுசொன்னார்.

யுதிஷ்டிரர், "அளவற்றபராக்ரமமுள்ளவரே! பிராணிகளின் சரீரத்திலுள்ள எந்தத்தோஷங்களைப் பார்க்கிறீர்? எனக்கு இந்த ஸந்தேகத்தையெல்லாம் உண்மையாகசொல்லவேண்டும்'' என்று கேட்க, பீஷ்மர், "ஓ! பிரபுவே! புததிமான்களும் மார்க்கத்தையறிந் தவர்களும் கபிலருடையமதத்தைப் பற்றினவர்களுமான ஸாங்கியர் கள், தேகத்தில் ஐந்துதோஷங்களைச் சொல்லுகின்றார்கள். பகைவர் களைவதைக்கின்றவனே! அவைகளைக் கேள். காமம், க்ரோதம், பயம், நித்தை, ஐந்தாவதாகச சொல்லப்படும் அதிகமூச்சு ஜீவிய இந்தத்தோஷங்கள் எல்லாத்தேகிகளின் சரீரங்களிலும் காணப்படு கின்றன. அரசனே! (வித்வான்கள்) பொறுமையால் கோபத்தை யும் சங்கற்பங்களைத்தள்ளுவதால் காமத்தையும் அறுக்கின்றார்கள். ஸத்வகுணத்தைப்பறறுவதால் நித்தையையும் ஜாக்ரதையால் பயத்தை யும். அற்பமான ஆகாரத்தால் ஐந்தாவதான சுவாஸத்தையும் அறுக் கிறார்கள். அரசனே! மனிதர்களைக்காப்பவனே! பாரத! மகாப்ராஜ் ஞர்களானஸாங்யர்கள் அநேககுணங்களால் குணங்களையும் அநேக தோஷங்களால் தோஷங்களையும் பலவிதமான அநேககாரணங்களால் பலவிதமானகாரணங்களையும் உண்மையாகஅறிந்து உலகத்தை ஜலத் தின் நுரைக்குச்சமமாகவும் விஷ்ணுவினுடைய அநேகமாயைகளா லுண்டுபண்ணப்பட்டதாகவும் சித்திரச்சுவருக்குச்சமமாகவும் கள மென்கிறபுல்லின்பலம்போன்ற பலமுள்ளதாகவும் பயனற்றதாகவும் இருளடைத்தகுழிக்குச்சமமாகவும்பார்த்து மழையாலுண்டானகுமி ழிபோன்றதும் கிலேசத்தால்நிறைந்ததும் ஸுகமில்லாததும் முடி வில்நசிப்பதும் ஸ்வாதீனமில்லாததும் ரஜஸிலும் தமஸிலும்மூழ்கிச் சேற்றில்மூழ்கினயானையைப்போலப் பரவசமானதும் பிரஜைகளுக்கா கச்செய்யப்பட்டதுமான தேகத்தை எங்கும்வியாபித்ததாயும் பெரி தாயுமிருக்கிற ஸாங்யமென்கிற ஞானயோகத்தினால்தள்ளிவிட்டு அசுபமானரஜோகுணத்தின் வாஸனைகளையும் அவித்தமான தாமஸ வாஸனைகளையும் ஸ்பர்சத்தாலுண்டானவைகளும் தேகத்தையண்டின வைகளும் பரிசுத்தமுள்ளவைகளுமான ஸாத்விகவாஸனைகளையும் தவ மாகிறதண்டமுள்ள ஞானமாகிறகத்தியினால் சீக்ரமாக அறுத்துவிட் டுப் பிறகு பயங்கரமானதும் கவலைசோகமாகிறபெரியமடுவுள்ளதும் வ்யாதிமரணங்களாகிற பெரியமுதலைகளுள்ளதும் மிகுந்தபயமாகிற பெரிய நீர்ப்பாம்பையுடையதும் தமோகுணமாகிற ஆமையையுடைய

தும் ரஜோகுணமாகிற மீன்களுள்ளதுமான துக்கமாகிற ஸமுத்ரத்தை நல்ல ஞானத்தினால் தாண்டுகின்றார்கள். பகைவர்களையடக்குபவனே! பாரத! தவிரவும், விவித்தர்களானமுனிவர்கள் ஸ்நேகமாகிற சேறுள்ளதும் ஜரையாகிற செலலமுடியாத இடமுள்ளதும் ஞானமாகிறதீபமுள்ளதும் கர்மமாகிற ஆழமுள்ளதும் ஸத்யமாகிறகரையுள்ளதும் விரதங்களாகிற இருக்குமிடங்களுள்ளதும் ஹிம்ஸையாகிற சீக்கிரமான பெரியவேகமுள்ளதும் பலவித ரஸங்களுக்கிருப்பிடமும் பலவிதமான பிரீதிகளாகிறபெரிய ரத்னங்களுள்ளதும் துக்கமும் ஜ்வரமுமாகிறகாற்றையுடையதும் சோகமும் ஆசையுமாகிற பெருஞ்சுழல் களுள்ளதும் கொடியவியாதிகளாகிற பெரியயாணைகளுள்ளதும் எலும்புகளுடைய கூட்டங்களாகிற [1]பார்களுள்ளதும் கபமாகிறநுரையுள்ளதும் தானங்களாகிற முத்துக்களுக்கு இருப்பிடமானதும் பயங்கரமும் உதிரமடுவாகிற பவழமுள்ளதும் சிரிப்பினுடைய பெரியசப்தமாகிற ஒலியுள்ளதும் அநேகவித அஜ்ஞானங்களாகிற தாண்டமுடியாத இடங்களுள்ளதும் கண்ணீராலுண்டான மலமாகிற உப்புக்களுள்ளதும் ஸங்கத்தை விடுவதாகிற பெரியமார்க்கமுள்ளதும் புத்ரர்களும் பந்துக்களுமாகிற அட்டைகளின் கூட்டங்களுள்ளதும் நண்பர்களும் உறவினர்களுமாகிற பட்டணங்களுள்ளதும் அஹிம்ஸையும் ஸத்யமுமாகிறநல்லகளுள்ளதும் ப்ராணத்யாகமாகிற பெரிய அலைகளுள்ளதும் வேதாந்தவிசாரமாகிற திட்டுள்ளதும் எல்லாப்பிராணிகளிடத்திலும் தயையாகிற (நல்ல) ஜலத்துக்கிருப்பிடமும் மோக்ஷமாகிற அடைதற்கரியபொருளுள்ளதுமான ஸம்ஸாரமாகிற கொடிய சமுத்திரத்தை ஞானமாகிற ஓடத்திலல் தாண்டுகின்றார்கள். தாண்ட மிகவும் அரிதான ஜன்மத்தைத்தாண்டி நிர்மலமான ஆகாயத்தை அடைகின்றார்கள். அரசனே! அந்த ஆகாயத்தில் ஸூர்யனுனவன் தாமரைத்தண்டினுள் நூலிபோலக் கிரணங்களால் பிரவேசித்து அந்தப் புண்யசாலிகளான ஞானிகளைச் (செல்லவேண்டிய) இடங்களுக்குப் பலாதமாராமாகக் கொண்டுபோகிறான். பாரதனே! அவ்விடத்தில் ஆசையற்றவர்களும் வித்தியடைந்தவர்களும் வீரியமுள்ளவர்களும் தவத்தையே தனமாகவுடையவர்களுமான அந்த யதிகளே ஸூக்ஷ்மமானவனும் குளிர்ந்தவனும் நல்லகந்தமுள்ளவனும் ஸுகமானஸ்பர்சமுடையவனுமான ப்ரவஹனென்கிறவாயுவானவன் பிடித்துக்கொள்ளுகிறான். பாரத! சுந்தீபுத்ர! ஏழுமருத்துக்களுள்ளும் சிறந்தவனும் சுபமானலோகங்களில் செல்லுகின்றவனுமான அவன் அவர்

---

[1] 'ஸங்கட்ட:' என்பது மூலம். 'செபபன்' என்றும் சொல்லலாம்.

* L சுசு

களை ஆகாயத்தின் பரமாணுமார்க்கத்தை அடைந்துச்செல்கிறான். பூபதியே! ஆகாயமானது ரஜஸின்பரமகதியான (அஹங்காரதத்வத்தை) அடையச்செல்கிறது. ராஜஸ்ரேஷ்டனே! மஹானானது ஸத்வத்தின் பரமகதியான (சுத்தஜீவஸ்வரூபத்தை) அடையச்செல்கிறது சுத்த ஸ்வரூபமான ஸத்வமானது பரமும் ப்ரபுவுமானநாராயணரை அடையச்செல்கிறது. சுத்தஸ்வரூபரானப்ரபுவானவர் ஸம்மூடையஸ்வரூபத்தின்வழியாய்ப் பரமாத்மாவை அடையச்செய்கிறார். விபுவே! களங்கமற்றயதிகள் பரமாத்மாவை அடைந்து பரமாத்மாவாகி மோக்ஷத்துக்குரியவர்களாகிறார்கள். அவர்கள் திரும்புகிறதில்லை. குந்தீபுத்ர! அது ஸுகதுக்கமுதலிய த்வந்த்வமற்றவர்களும் மஹாத்மாக்களும் ஸத்யத்திலும் நேர்மையிலும் பற்றுள்ளவர்களும் எல்லாப்பிராணிகளிடத்திலும் தயையுள்ளவர்களுமான யதிகளுடைய மேலானகதி'' என்று சொன்னார்.

யுதிஷ்டிரர், "குற்றமற்றவரே! நிலத்த விரதமுள்ள அந்தயதிகள் ஸர்வஜ்ஞராகிய பரமாத்மஸ்வரூபமான உத்தமஸ்தானத்தை அடைந்தபின் பிறப்பிறப்பு முதலானவிஷயத்தை நினைகின்றார்களா? இல்லையா? இதில் உண்மையை எனக்கு நீர் உள்ளபடிசொல்லவேண்டும். குருவம்சத்திலுதித்தவரே! உம்மைத் தவிர வேறு ஒருவரையும் இதைக்குறித்துக் கேட்கமாட்டேன். விஸ்தியடைந்தமுனிவர்களைக் குறித்து மோக்ஷவிஷயதில் இந்தப் பெரிய தோஷமானது (தோன்றுகிறது.) ஸரசனே! மேலானயதிகள் பரமான அந்த மோக்ஷத்திலும் விசேஷஞானதிலிருப்பார்களானால் அவர்களிடத்தில் மிகவும்ப்ரவ்ருத்திரூபமான தர்மமிருப்பதாக நினைக்கிறேன். பரமானஞானத்தில் முழுகினவனுக்கு எது மிகுந்த துக்கமாகாது?'' என்று கேட்க, பீஷ்மர், "அப்பா! உன்னால் நியாயப்படி மிகவும் ஸங்கடமானகேள்வி கேட்கப்பட்டது. பரதஸ்ரேஷ்டனே! இந்தக்கேள்வியில் வித்வான்களுக்கும் பெரியமயக்கம் ஏற்பட்டிருக்கிறது. மஹாத்மாக்களான ஸாங்க்யர்களும் மிகமேலாகமதிக்கின்ற இந்த விஷயதிலும் என்னால் நன்குசொல்லப்பட்ட பரமமானதத்வத்தைக் கேள். அரசனே! தேவர்களுக்குத் தம்மிதேகத்தில் இந்திரியங்களே அறியப்படுகின்றன. அவைகள் ஆத்மாவுக்குச்சாதனங்கள். ஸமஸ்தமனஸ் அவனெனில், அவைகளால் பார்க்கிறான். ஆத்மா இல்லாவிடில் அவை கட்டைக்கும் சவருக்கும் ஒப்பாகப் பெரியஸமுத்ரத்திலுண்டாகும் நுரைகள்போல நசிக்கின்றன. ஸந்தேகமில்லை. புகைவர்களே வாட்டுபவனே! இந்திரியங்களோடு தேகியானவன் நித்திரை செய்யுங்கால் (ஆத்மாவானவன்)

ஸூக்ஷ்மனுகி ஆகாயத்தில் வாயுவைப்போல எங்கும் ஸஞ்சரிக்கிறான். விபுவே! பாரத! அவன் விழித்துக்கொண்டால் முன்போல இவ்வுலகில் எல்லாவற்றையும் நியாயப்படி பார்க்கிறான். ஸ்பர்சங்களை ஸ்பர்சிக்கிறான். இப்பொழுது எல்லா இந்திரியங்களும் விஷமில்லாத ஸர்பங்கள்போலச சக்தியில்லாமையால் தம்தம்ஸ்தானத்தில் விதிப்படி லயிக்கின்றன. தர்மபுத்தியுள்ளவனே! குந்தீபுத்ர! யுதிஷ்டிர! ஆத்மாவானவன், தங்கள்ஸ்தானங்களிலேயேயிருக்கிற எல்லா இந்திரியங்களுடைய ஸூக்ஷ்மமான எல்லாக்குணங்களையும் ஸத்வத்தின் எல்லாக்குணங்களையும், ரஜஸின்குணங்களையும் தமஸின் எல்லாக்குணங்களையும் புத்தியின்குணங்களையும் மனதின்குணங்களையும் ஆகாயத்தின் குணங்களையும் வாயுவின்குணங்களையும் தேஜஸின்குணங்களையும் அபபின்குணங்களையும் பருதிவியின்குணங்களையும் ஆக்ரமித்துக்கொண்டு ஸஞ்சரிக்கிறான். ஜீவர்களிடத்திலிருக்கிறகுணங்கள் எல்லாவற்றிலும் வியாபிக்கப்பட்ட ஆத்மாவும் க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனை அடைகிறான்; புண்யபாபங்களான கர்மங்களும் அடைகின்றன. ப்ரபுவே! மஹாத்மாவான அந்தக்ஷேத்ரஜ்ஞனே இந்திரியங்களும் சிஷ்யர்கள்போல அடைகின்றன அந்த ஜீவனுனவன் ப்ரக்ருதியையும் அதிக்ரமித்து அழிவற்றவரும் தன்னுடைய ஆத்மஸ்வரூபரும் பரரும் ஸ்வயம்ப்ரகாசரும் ஸுகதுக்கங்களானத்வந்த்வமற்றவரும் ப்ரகிருதிக்கு அதீதருமான நாராயணரை அடைகிறான்; பாரதனே! எல்லாப்பாவங்களிலிருந்தும் விடுபட்டவனும் நாசமற்ற நிர்க்குணனை அந்தப்பரமாத்மாவை அடைந்தவனுமாகி மறுபடி திரும்பான். அப்பா! பாரத! அவனிடத்தில் மிச்சமுள்ளமனமும் இந்திரியங்களும் காலத்தை அனுஸரித்து ஸர்வரூடைய ஆஜ்ஞையைச்செய்துகொண்டுவருகின்றன. குந்தீபுத்ர! குணத்தை விரும்புகிறவனும் இவ்விதம் சொல்லப்பட்டவனும் உத்தமமானஞானமுள்ளவனுமாகிய மோக்ஷத்தையடைந்தவனுல் (பராபர நாசத்தில்) அற்பகாலத்தினுலேயே, சாந்தியை (விதேஹமுக்தியை) அடையமுடியும். அரசனே! பெரிய அறிவுள்ளஸாங்க்யர்கள் பரமமானகதியை அடைகின்றார்கள். குந்தீபுத்ரனே! இந்த ஞானத்துக்கு ஒப்பானஞானம் இல்லை. இந்த விஷயத்தில் உனக்கு ஸம்தேஹமிவேண்டாம். ஸாங்க்யஞானமானது சிறந்ததாக ஏற்பக்கொள்ளப்பட்டிருக்கிறது. சாந்தமனமுள்ளவர்கள் எந்தப்ரம்மததை நாசமில்லாததும் சலனமில்லாததும் வ்யக்தமில்லாததும் எங்கும் நிறைந்ததும் அனுதியும் ஆதிமத்யாந்தமில்லாததும் ஸுகதுக்கமுதலிய த்வந்த்வமற்றதும் கர்த்தாவும் எப்

பொழுதுமிருப்பதும் விகாரமில்லாததும் நித்யமுமாகச் சொல்லுகிறார்களோ, எதனிடமிருந்து எல்லாஸ்ருஷ்டி ப்ரளயங்களானவிகாரங்களும் நடக்கின்றனவோ, எதைப் பரமரிஷிகளும் எல்லாவேதியர்களும் தேவர்களும் சாந்தியையடைந்தஜனங்களும் ஸ்லாகிக்கின்றார்களோ, சாஸ்திரங்களிலும் சொல்லுகின்றார்களோ பிராம்மணர்களுக்குஹிதரும் ஸ்ரேஷ்டரானதேவரும் வ்யாபகரும் சிறந்தவரும் அச்சுதருமான அந்தப்பரமாத்மாவைப் பிரார்த்தித்துக்கொண்டு குணங்களில் புத்தியுள்ளப்ராம்மணர்களும் அப்படியே யோகத்தில்தேர்ந்த யோகிகளும் அளவற்ற அறிவுள்ளஸாங்க்யர்களும் சொல்லுகிறார்கள். குந்தீபுத்ர! சரீரமில்லாத அந்தபரமாத்மாவுக்கு ஸாங்க்யஞானம் ஸ்திரமென்று வேதம் சொல்லுகிறது பரதஸ்ரேஷ்ட! பதார்த்தஞானங்களே அவருடைய ஞானமாகச் சொல்லுகிறார்கள். அரசனே! இந்தப் பூமியில் ஜங்கமஸ்தாவரங்களென்று பெயருள்ளவைகளாகப் பிராணிகள் இரண்டுவிதமாயிருக்கின்றன. (அவைகளில்) ஜங்கமம் சிறந்தது. அரசனே! மகான்களிடத்திலும் வேதங்களிலும் ஸாங்க்யங்களிலும் யோகத்திலும் காணப்படுவனவும் புராணத்தில் அநேகவிதமாகக்காணப்படுவனவுமாகிய ஞானங்களெல்லாம் ஸாங்க்யத்திலிருந்து வந்தன. அரசனே! பெரியஇதிஹாஸங்களில் காணப்படுவதும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்ட அர்த்தசாஸ்திரத்திலுள்ளதும் இந்தஉலகத்திலுள்ள மற்றவையுமான பெரியஞானமெல்லாம் ஸாங்க்யத்திலிருந்தும் வந்தன. அரசனே! ஸாங்க்யத்தில் அடக்கமும் காணப்படுகிறது. ஸாங்க்யத்திலுள்ளபரமமானவன்மையும் ஞானமும் உள்ளபடி சொல்லப்பட்டன. ஸூக்ஷ்மமான தவங்களும் ஸுகங்களும் உள்ளபடி விதிக்கப்பட்டிருக்கின்றன. குந்தீபுத்ரனே! ஸாங்கயர்கள் ஞானம்லித்திக்காவிடில் எப்பொழுதும் ஸுகமாகத் தேவர்களை அடைகின்றார்கள். அந்தத்தேவர்களுக்கு அதிகாரிகளாயிருந்துவிட்டுப் பிறகு க்ருதார்த்தர்களாகி மறுபடியும் முயற்சியுள்ளப்ராம்மணர்களிடத்தில் பிறக்கிறார்கள. குந்தீபுத்ரனே! ராஜனே! ஸாங்க்யர்களான அந்தப்ராம்மணர்கள் பெரிய அர்த்தத்தையுடையதும் சிஷ்டர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஸாங்க்யத்தில் இதைக் காட்டிலும் அதிகப் பற்றுள்ளவர்களாகித் தேகத்தைவிட்டுவிட்டுத் தேவர்கள் ஸ்வர்க்கத்தில் பிரவேசிப்பதுபோல மோக்ஷத்தில் பிரவேசிக்கின்றார்கள். அரசனே! இந்த ஞானத்தில்பற்றுள்ளவர்களுக்குப் பாவஞ்செய்தவர்களுக்கிருப்பிடமான. திர்யக்ஜாதியில் பிரவேசம் காணப்படவில்லை. ஸ்தாவரத்தியும் இல்லை. அந்தப்பிராம்மணர்

கள் அறிவில்லாதவர்களுடைய கதியையும்அடையார். ஸாங்க்யஞான த்தை விரிவாகவும் சிறந்ததாகவும் அனுதியாகவும் பெரியஸமுத்ரம் போன்றதாவும் நிர்மலமாகவும்சொல்லுகிறார்கள். அரசனே! மகாத் மாவான நாராயணர் அறியமுடியாததான ஸாங்க்யமானத்தையும் அறிகிறார். மானவர்வேந்தனே! இந்தத்தரமானது ஏன்னால் சொல்லப்பட்டது. புராதனமானஇந்தபரப்ரஹ்மம் நாராயணரே. அவர் பழைப்புக்காலத்தில் படைப்பைசெய்கின்றார்; ஸம்ஹாரகாலத்தில் அதைத் திரும்பப் பகுக்கின்றார். ஜகத்திற்குஅந்தராத்மாவாயிருக் கிறஅவர் எல்லாவற்றையும்ஸம்ஹரித்துத் தாமரைடையில்தங்கிலிருக் கச்செய்து ஜலத்தில் சயனிக்கிறார்'' என்றுசொன்னார்.

முந்நூற்றெட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வஸிஷ்டர் க்ஷராக்ஷராங்களின் லக்ஷணத்தை ஜனகருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், ''ஜீவன், அடைந்தபின் மறுபடியும் திரும்புவதில் லாத அக்ஷரமென்று சொல்லப்படுவது எது? அடைந்து மறுபடி யும் திரும்புகின்றதக்ஷரமென்றுசொல்லப்பட்ட அதுவும் எது? பகைவர் களைக் கொல்லுகின்றவரே! சிறந்த கைகளையுடையவரே! குருவம் சத்தைச் சந்தோஷிக்கச் செய்கின்றவரே! அக்ஷரம் க்ஷரம் இவைக ளுடைய பேதத்தை உண்மையாக அறிவதறகாகக் கேட்கின்றேன். நீரோ வேதத்தின் கரையை அடைந்த வேதியர்களாலும் மஹாபாக் கியவான்களான ரிஷிகளாலும் மஹாத்மாக்களான யதிகளாலும் ஞான நிதியாகச் சொல்லப்படுகிறீர். உம்முடைய காள்களில் மிச்சம் சொற்பமாயிருக்கின்றது. தக்ஷிணைமார்க்கத்தில் பிரகாசிக்கின்றஸூரிய பகவான் திரும்பினவுடன் மேலான கதியை அடையப்போகிறீர். நீர் சென்றபிறகு நாங்கள் யாரிடமிருந்து ப்ரேமானைக் கேட்கபோகி றோம்? குருகுலத்தை விளங்கசெய்யும் நீர் ஞானதீபத்தால் விளங்கு கின்றீர். குருகுலத்தைத் தாங்குகின்றவரே! ஆகையால், இதை உம்மிடமிருந்து கேட்கவிரும்புகின்றேன். ஓ! ராஜேந்திரரே! இப் படிப்பட்ட அமிருதத்தைக்கேட்டு நான இப்பொழுது திருப்தி யடைய வில்லை'' என்று சொல்ல, பீஷ்மர் சொல்லலானார்.

"இந்தவிஷயத்தில் வலிஷ்டருக்கும் கராளஜனகனுக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழைய சரித்திரத்தை உனக்குச் சொல்லப்போகின்றேன். ஜனகராஜன், ரிஷிகளுள் சிறந்தவரும் சூரியனுடைய ஒளி போன்ற ஒளியுடையவரும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றவருமான வலிஷ்டரை அடைந்து, மோக்ஷத்திற்கு ஸாதனமும் சிறந்ததுமான ஞானத்தைக்குறித்து வினவினன். முன்காலத்தில் கராளஜனகனென்ன கிறஅரசன் ஆத்மவிஷயத்தில் மிதமும் குரலரும் ஆத்மானுபவத்தால் நிசசயமுடையவரும் முனிசிகாமணியும் உட்கார்ந்துகொண்டிருபட வருமான வலிஷ்டரை வணங்கி அஞ்சலிசெய்துகொண்டு மெல்லிய குரலோடும் மதுரமாயும் மனக்கதுடனும் கலை அக்ஷரங்களையுடைய வாக்கியத்துடனும், 'ஓ! பகவனே! எதை அடைந்த அறிஞருக்குத் திரும்பவும் பிறவியிலில்லையோ அக்ஷரமென்று கூறப்பட்டதும் ஆனந்த ரூபமும் சேஷமதத்தைத் தருவதும் நிதாக்ஷமற்றதும் ஸகலனமுமான அந்தப்பரப்ரமமதத்தையும் அகில லயிக்கும் அக்ஷரமென்றுசொல்லப் பட்ட ஜகத்தையும் நேட்கவிரும்புகிறேன்' என்று வினவ, வலிஷ் டர் சொல்லத்தொடங்கினர். 'பூபதியே! உலகமழியும் விதத்தை யும் முன்னும் மற்ற எக்காலத்திலும் நடியாத அக்ஷரத்தையும் கேள். பன்னிராயிரம் தேவருகங்கொண்டதும் மனுஷ்யர்களுடைய நான்கு யுகங்களுமான யுகத்தைக் கற்பமாக அறியக்கடவாய். ஆயி ரம் கற்பம் திரும்பிய அது பரம்பரதேவருடைய பகலாக சொல்லப் படுகின்றது ஓ! அரசனே! எதன முடிவில் ப்ரம்மா விழித்துக் கொள்ளுகிறாரோ அபபடிபபட்டராதிரியும் இவ்வளவுள்ளது. வடிவ மில்லாத ஸ்வரூபத்தையுடைய சம்புவானவர் அளவற்ற கர்மாவை யுடையவரும் மஹாபூதமும் எலலாவறறிற்கும் முன்னுண்டானவரும் மூர்த்தியுடன்கூடினவரும் எல்லா பரபஞ்சமுமாயிருக்கிற ப்ரம்மா வைச சிருஷ்டிக்கின்றார். [1] இயற்கையிலமைந்த அணிமா, லகிமா, ப்ராப்தி இவைகளோடையதும் எலலாவறறிற்கும் மியந்தாவும் ஜோதி ரூபமும் விகாரமறறதுமான அந்த ஸ்வரூபமானது எங்கும் கரகால்க ளுடையதும் எங்கும் கண்ணும் தலையும் முகமுடையதும் எங்கும் காதுள்ளதுமாகி உலகத்தில் எல்லாவறறையும் வியாபித்துக்கொண்டி ருக்கின்றது. ஒன்றான அக்ஷரமென்று சொல்லப்பட்டவரும் பலவித மான ஸ்வரூபமுடையவரும் பலவிதமான சரீரமுடையவரும் பரபஞ்ச ரூபரும் உண்மையில் ஜனனமற்றவரும் ஸகலஜீவராசிகளுமுடைய புத்தியென்று சொல்லப்பட்டவருமான இந்த [2] ஹிரண்யகர்ப்பர் யோக

1 வேறுபாடம். 2 ஸூத்ராத்மா.

சாஸ்திரங்களிலும் ஸாங்கியசாஸ்திரத்திலும் மஹத்தத்துவம் விரிஞ்சி என்னும்பெயர்களால் சொல்லப்படுகிறார். எவரால் தம்மாலே அநேக ரூபமாகவிருக்கிற மூன்றுலகமும் படைக்கப்பட்டனவும் சூழப்பட்டனவுமாயிருக்கினறனவோ அவர், எல்லாம் அவருக்கு ரூபமாயிருப்பதால், விச்வரூபரென்று கருதப்பட்டார். விகாரதத்தை அடைந்தவரும் பெரிய தேஜஸ்ஸுள்ளவருமான இந்த ஹிரண்யகர்ப்பர் தாமாகவே தம்மையே அஹங்காரமாகவும் அஹங்காரத்தை செய்கின்ற விராட்டாகவும் ஸ்ருஷ்டிக்கின்றார் (பிரகாசமில்லாததான) அவ்யக்தத்திலிருந்தும் பிரகாசமுடையதான மஹத்தத்வமென்னும் அந்த ஸமஷ்டி அஹங்காரத்தையும் வ்யஷ்டி அஹங்காரத்தையும் வித்யா ஸ்ருஷ்டியாகவும் அவித்யாஸ்ருஷ்டியாகவுமே சொல்லுகின்றார்கள். ஓரிடத்திலுண்டான அபரமென்கிறஜடமான உபாதியும் பரம்என்கிற சைதன்யமும் வேதசாஸ்திரங்களின் அர்த்தத்தை விசாரிக்கின்றவர்களால் வித்தை அவித்தையென்று சொல்லப்படுகின்றன. அரசனே! அஹங்காரத்திலிருந்துமுண்டான ஸூக்ஷ்ம பூதங்களின் ஸ்ருஷ்டியை மூன்றுவிதாக அறியக்கடவாய் ஸாத்விகராஜஸதாமஸங்களாயிருக்கிற எல்லாஅகங்காரங்களிலுமுண்டான ஸ்தூலபூதஸ்ருஷ்டியை நான்காவதாக அறியக்கடவாய். (அந்தப் பூதஸ்ருஷ்டி எவ்விதமென்றால் :—) வாயுவும், தேயுவும் ஆகாயமும் ஜலமும் பிருதிவியும் சப்தமும் ஸ்பரிசமும் ரூபமும் ரஸமும் கந்தமும் ஆகிய இவ்விதமானபத்தின்ஸமூகமும் ஓரே காலத்திலுண்டாயின ஸத்தமமில்லீ. ராஜர்ஷேஷ்டனே! ஸ்தூலபூதங்களிலிருந்துண்டானதும் பயனுடையதுமான ஸ்ருஷ்டியை ஐந்தாவதாக அறியக்கடவாய் ராஜனே! சுரோத்ரம், தவக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, ஐந்தாவதானகிராணம், வாக்கு, கைகள், பாதங்கள், பாயு, குறி இந்த ஞானேந்திரியங்களும் கர்மேந்திரியங்களும் இவ்வுலகில் மனதுடன் கூட ஓரேகாலத்தில் உண்டாயின. எந்தத் தத்வங்களின் கூட்டத்தையறிந்து தத்வவித்துக்களான ப்ராம்மணர்கள் தீக்கிக்கவில்லையோ அடிபடப்பட்ட அந்த இருபத்துநான்கு தத்வங்களின்கூட்டமும் எல்லாவடிவங்களிலுமிருக்கிறது. அரசனே! இது தேவர்கள், அஸுரர்கள், நரர்கள், யக்ஷர்கள், பூதங்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், மகோரகர்கள், சாரணர்கள், பிசாசர்கள், தேவரிஷிகள், ராக்ஷஸர்கள், தேவ்கள, கொசுக்கள், தூர்க்கந்தமுள்ள புழுகுகள், எலிகள், நாய்கள் அதைப் பாகம் செய்கின்ற புலையர்கள், மான்கூட்டத்தின்கின்றநீசர்கள், சண்டாளர்கள், புல்கஸர்கள், யாணிகள, குதிரைகள், கழுதைகள், புலிகள், செந்நாய்கள், கோக்கள்முத

லியவைகளுடன்கூடிய மூன்று உலகங்களிலுமுள்ள எல்லாத் தேகிக னிடத்திலுமிருக்கின்ற தேகமென்று சொல்லப்பட்டதாக அறிய வேண்டும். வடிவமாக[1] இருப்பதெல்லாவற்றிலும் இந்தத்தத்வக்கூட் டம் இருக்கிறதென்று காணக்கூடியது. 'தேகமுடையவர்களுக்கு ஜலத்திலும் பூமியிலும் ஆகாயத்திலும் இருப்பு; மற்றவிடத்திலில்லை' யென்பது உறுதியென்று கேட்டிருக்கிறோம். அப்பா! வ்யக்தமென் கிற பெயருடைய இவையெல்லாம் ஒவ்வொருகாலும் விகாரத்தை அடைகினறன. ஆகையால், (இந்தப்) பூதங்களுக்கு ஆத்மாவான ஜீவன் க்ஷரனென்று கருதப்பட்டான். இந்த ஜகத்து விகாரதத்தை அடைவதாலல்லவா க்ஷரமென்று சொல்லப்பட்டது? வ்யக்தமென்று பெயரடைந்த அவ்யக்தத்தை மோஹமயமான உலகமாகச சொல்லு கின்றனர். (இந்த வ்யக்தங்களில்) எப்பொழுதும் மஹதத்தத்வம் முந்தி உண்டாகிறது. ஓ! மஹாராஜனே! இந்த க்ஷரத்தின் உதாரணமா னது உனக்குச் சொல்லப்பட்டது. எதை அடைந்து மறுபடி திரும்புகிறதில்லையோ தத்வமில்லாதவரும் தத்வமென்றுபெயருள்ள வருமான அந்தவிஷ்ணு இருபத்தைந்தாமவர். வித்வான்கள் இந்த விஷ்ணுவை இருபத்துநான்கு தத்வங்களுக்கும் அதிஷ்டாதாவாக இருப்பதால் தத்வமாகச சொல்லுகின்றனர் வ்யக்தத்தைப்படைத்த தும் நசிப்பதுமான அது அந்தஅந்தமூர்த்தியை அடைகிறது. அது இருபத்துநான்காவதான அவ்யக்தம். இருபத்தைந்தாமவன் சரீர மில்லாதவன்; எல்லா மூர்த்திகளுமுள்ளவனும் (உண்மையில்) மூர்த்தி யில்லாதவனுமான அவனே சேதனவஸ்துக்களுக்கெல்லாம் 'அறி வைக்கொடுத்து எப்பொழுதும் எல்லாமூர்த்திகளிலும் ஹ்ருதயத் தில் ஆத்மாவாக இருக்கிறான்; [1]ஸ்ருஷ்டிப்ரளயமென்கிற தர்மத் தோடுகூடின பிரகிருதியினுலே ஸ்ருஷ்டிப்ரளய தர்மத்தையுடையவ னாகவும் இருக்கிறான். குணமில்லாதவனுயிருந்தும் குணமுள்ளவ னென்கிற பெயருடன் எப்பொழுதும் விஷயமாகிறான். இவ்விதம் இந்த மஹானுபரமாத்மா ஸ்ருஷ்டிப்ரளயங்களில் ஸமர்த்தனுயிருக் கிறான். அவனே பிரகிருதியுடன் கூடி 'விகாரத்தையடைகிறான். அறிந்துகொள்ளுதலில்லாமல் (அந்த விகாரத்தை) அபிமானிக்கின் றான். தமஸ், ஸத்வம், ரஜஸ் இவைகளுடன்கூடி அந்த அந்தப் பிறப்புக்களில் அழுந்துகின்றான். அஜ்ஞானிகளான ஜனங்களு டைய பழக்கத்தினுல் ஆத்மாவையறியாமல் ஸகலாஸம் இருப்பிட மான சரீரம் இவைகளின்மயமாகி, 'நான் வேறு' என்று அறிய

[1] 2வது பாடம்.

வில்லை. 'நான் இப்படிப்பட்டவன்; அப்படிப்பட்டவன்' என்றுசொல்லிக்கொண்டு (பிராணன்முதலான) குணங்களையே அனுஸரித்திருக்கிறான். தமோகுணத்தினால் பலவகையான தாமஸவிருத்திகளையும் ரஜோகுணத்தால் ராஜஸவிருத்திகளையும் ஸத்வத்தின் ஆஸ்ரயத்தால் ஸாத்விகவிருத்திகளையும் அடைகிறான். பிரகிருதியைச்சேர்ந்த இந்தரூபங்களெல்லாம், வெளுப்பு, சிவப்பு, கறுப்பு ஆகிய இம்மூன்றுரூபங்களே. தமோகுணமுள்ளவர்கள் நரகத்தையடைகின்றார்கள். ரஜோகுணமுள்ளவர்கள் மானிடப்பிறப்பை அடைகின்றார்கள். ஸத்வகுணமுள்ளவர்கள் ஸுகத்தையடைந்து தேவலோகத்தைக்குறித்துச் செல்லுகின்றார்கள். பாபமாத்ரத்தினால் விலங்கு ஜன்மத்தை அடைவான். புண்ணியபாபங்களின் சேர்க்கையால் மானிட ஜன்மத்தையும் புண்ணியமாத்ரத்தினால் தேவத்தன்மையையும் அடைவான் இவ்விசித்ரமான அவ்யக்தத்தின் விஷயத்தை வித்வான்கள் ஸுஸ்பஷ்டமாகச் சொல்லுகின்றார்கள். இருபத்தைந்தாமவரான இவர் ஞானத்தினாலேதான் பிரகாசிக்கின்றார்.

மூன்றூற்றேன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(வஸிஷ்டர், ஜீவர்கள் அஜ்ஞானத்தினால்படும்துன்பங்களை ஜனகனுக்குச் சொல்லியது.)

இவ்விதம், ஆத்மபோதமின்மையினாலும் அறிவீனரை அனுஸரித்திருப்பதாலும் ஒருதேகம்விட்டு ஆயிரம்தேகங்களை அடைகின்றான். குணங்களுடைய குறைவினால் ஆயிரம் விலங்குப் பிறவிகளிலும், ஒருகால் குணங்களுடையசேர்க்கையினால் தேவதைகளிடத்திலும் உண்டாகிறான். மனிதப்பிறவியிலிருந்தும் ஸ்வர்க்கத்தையடைகிறான். ஸ்வர்கத்திலிருந்தும் மனிதப்பிறவியையடைகிறான். மனிதப்பிறவியிலிருந்தும் அளவற்ற நரகஸ்தானத்தை அடைகிறான். கூட்டைக்கட்டும்பூச்சிபோனது நித்தியம் நூல்களால் தன்னைக்கட்டிக்கொள்ளுகிறதுபோலவே குணமில்லாதஇந்தஜீவன் குணங்களால் தன்னைக் கட்டிக்கொள்ளுகிறான். துவந்துவமில்லாதவனுயிருந்தும் அந்தஅந்தப்பிறப்புக்களில் தலைவலியிலும் கண்வலியிலும் பல்குத்திலும் கழுத்துப்பிடிப்பிலும் ஜலோதரத்திலும் அதிகதாகரூபமான

ரோகத்திலும் ஜவரகண்டத்திலும் விஷமிசியிலும் வெண்குஷ்டத்தி லும் அக்கினிதக்தமென்கிறரோகத்திலும் காசரோகத்திலும் அபஸ்மா ரத்திலும் த்வர்துவத்தை அடைகிறன். (இவ்வகளைத்தவிர) தேகிக ளிடத்திலுண்டாகிற பிராகிருதங்களான நானவிதமானவேறுத்வர்து வங்களையும் இவன் அனுபவிக்கின்றன். அபிமானத்தால் அப்படியே கல்லகர்மங்களையும் அபிமானிக்கிறன். அறிவில்லாதவனை ஜீவ னனவன் வெளுத்த வஸ்திரமுடையவனும் கெட்ட வஸ்திரமுடையவ னும் நித்தியம் கீழே சயனம்செய்கிறவனும் தவளைபோலச் சயனிக் கிறவனும் வீராஸனத்தை அடைந்தவனும் மரவுரியைத்தரித்தலும் ஆவ ணமில்லாதவிடத்திற்படுக்கையும் இருப்புமுடையவனும் செங்கற் பரப்பினவிடத்திலும் முள்ளுகள்பரந்தவிடத்திலும் சாம்பல்பரப்பின விடத்திலும் படுக்கிறவனும் பூமியில் படுக்கையால் புழுதிபுரண்டவ னும் வீரஸ்தானத்திலும் ஜலத்திலும் சேற்றிலும் பலகைகளிலும் சயனத்தைச் செய்கிறவனும் பயனில் விருப்பத்துடன் அனேக வித மான சயனங்களில் சயனிப்பவனும் தர்ப்பையாலுண்டான கடிஸூத் திரமுள்ளவனும் வஸ்திரமில்லாமலிருப்பவனும் வெண்பட்டுக்கள்மு மான்தோல்கள், சணல், ரோமம், புலித்தோல், விம்மத்தின்தோல், பட்டாடை, பூர்ஜவிருக்ஷத்தின் தோல், இலவமுதலான முள்ளுமரத் தின் பருத்தியால் உண்டான வஸ்திரம், பட்டுப்பூச்சியாலான பட்டு வஸ்திரம்,' சீரவஸ்திரம்இவற்றை உடுப்பவனுமாகி (இவைகளைத்தவிர) வேறு அநேக வஸ்திரங்களையும் விசித்திரமான போஜனங்களையும் அநேகவித ரத்தினங்களையும் அபிமானிக்கின்றன். ஒரு வஸ்திரம் அரையில் தரிப்பதையும் ஒருவேளை ஆகாரத்தையும் அபிமானிக்கின் றன். ஒருகாளில் நான்காவது காலத்திலோ எட்டாவது காலத் திலோ ஆறவது காலத்திலோ புஜிக்கிறவனும் ஆறு ராத்ரிக்கொரு வேளை புஜிக்கிறவனும் எட்டுப் பகலுக்கு ஒரு வேளை புஜிக்கிறவ னும் ஏழு ராத்ரிக்கொருவேளை புஜிக்கிறவனும் பத்துப்பகலுக்கு ஒருவேளை புஜிக்கிறவனும் பன்னிரண்டு பகலுக்கொருவேளை புஜிக் கிறவனும் ஒருமாதமுபவாஸமுடையவனும் வேர்கள், கனிகள், வாயு, ஜலம், பிண்ணாக்கு, தயிர், கோமயம், ரோமூத்திரம், சாகம், புஷ் பம், பாசிக்கொத்து, வடித்தகஞ்சி, உதிர்ந்த சருகுகள், உதிர்ந்த கனிகள் ஆகிய இவற்றைப் புஜிக்கிறவனுமாகி விதித்தியில் விருப்பத் தால் நானவிதமான கிருச்சிரமென்கிறவிரதங்களை அனுஷ்டிக்கிறன். விதிப்படி சாந்திராயணவிரதங்களையும் நானவிதமான (ஜடைமுத லிய) அடையாளங்களையும் நான்குஆச்ரமங்களுடைய மார்க்கத்தை

யும் விருத்தமான காபாலிக முதலானமார்க்கங்களையும் வேறான [1]உபாஸ்ரமங்களையும் பலவிதமான பாஷண்டமதங்களையும் ஆஸ்ரயிக்கின்றான். ஏகாந்தமான குன்றுகளின் நிழல்களையும் அருவிகளையும் ஏகாந்தமான மணற்குன்றுகளையும் ஏகாந்தமான காடுகளையும் பரிசுத்தமான தேவாலயங்களையும் ஏகாந்தமான தடாகங்களையும் ஏகாந்தமும்திவ்யமுமான கிருகங்களுக்கு நிகாயிருக்கிறமலைகளின் குகைகளையும் ஆஸ்ரயிக்கின்றான். விகஸ்யமான மந்திரங்களையும் பலவிதமான விரதங்களையும், பலவிதமான நியமங்களையும் அநேகவிதமான தவங்களையும் அநேகவிதயாகங்களையும் (மூன்றுகாலமும் ஸ்நானமுதலான) பலவித விதிகளையும் வணிகர்களின் வழிபையும் பிரமாணகூத்ரியவைச்யசூத்ரஜாதியையும் தீனர்களிடத்தும் குருடர்களிடத்தும் ஏழைகளிடத்தும் பலவகையான தானத்தையும் ஸத்வம்ரஜஸ்தமஸென்கிற மூன்று குணங்களையும் தர்மார்த்தகாமங்களையும் அறிவில்லாமையால் அபிமானிக்கிறான். ஆத்மாவானவன் தன்னையே அவித்தையினால் இவ்விதம் விபாகஞ்செய்கிறான். தவிரவும், ஸ்வதாகாரம், வஷட்காரம், ஸ்வாஹாகாரம், நமஸ்காரம், அத்யயனம் செய்வித்தல், யாகம்செய்வித்தல், ஈதல், ஏற்றல், வேள்விசெய்தல், வேதமோதல் ஆகியஇவற்றையும் அபிமானிக்கிறானென்று சொல்லுகின்றார்கள். ஜனனத்திலும் மரணத்திலும் விவாதத்திலும் ஹிம்ஸையிலும் மங்களமும் அமங்களமுமானகர்மாவின் பயனை எல்லாவற்றையும் அபிமானிக்கின்றானென்று சொல்லுகின்றார்கள். மூலப்ரகிருதியான தேவியானவள் ஸ்ருஷ்டியையும் ஸம்ஹாரத்தையும் செய்கின்றாள். காலத்தின்முடிவிலே ஆத்மாவானவன் இந்தக்குணங்களைத் தன்னிடம் ஒடுக்கிக்கொண்டு ஒருவனாயிருக்கின்றான். சூரியன் கிரணக்கூட்டத்தை ஒடுக்கிக்கொள்வதுபோல அந்த அந்தக்காலத்தில் ஒடுக்கிக்கொள்ளுகிறான் இப்படியே இந்த ஆத்மா அடிக்கடி லீலையாட்டுக்காகத் தன்னுடையரூபமாயும் அநேகவிதமாயும் மனத்திற்குப் பிரியமாயுமிருக்கிற இந்தக்குணங்களெல்லாவற்றையும் அபிமானிக்கின்றான். இவ்விதம் விகாரத்தையடைகின்றவனும் கர்மமார்க்கத்தில் பற்றினவனும் மூக்குணங்களுக்கும் அதிபதியுமான இவன் உற்பத்தி நாசமென்கிற தர்மத்துடன்கூடின கர்மத்தையும் மூன்று குணங்களையும் அபிமானிக்கின்றான். கர்மமார்க்கத்தையடைந்து கர்மத்தை, 'அது அப்படிப்பட்டது' என்றும் அபிமானிக்கின்றான். அரசனே! இந்த உலகமெல்லாம் பிரகிருதியினாலே குருடாகச் செய்யப்பட்டது. எல்

[1] 'பாசுபதபாஞ்சராத்ராதிகள்' என்பது பழையவுரை.

லாம் ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலும் அநேகவிதமாக வியாபிக்கப்பட்டிருக்கின்றன. ராஜனே! பிறகு, இவ்விதம், 'என்னிடத்தில் எந்நாளும் இந்த ஸுகதுக்கமூலான த்வந்துவங்கள் இருக்கின்றன. இவைகள் எனக்கே உண்டாயிருக்கின்றன. என்னை அவைகள் அதிக்கிரமிக்கின்றன' என்றும், 'ஆனால் இவைகளெல்லாம் அதிக்கிரமிக்கத்தக்கவைகள்' என்றும் இவன் அறிவில்லாமையால் நினைக்கின்றான். அப்படியே, ஸுகிருதங்களையும், 'என்னால் தேவலோகத்தையடைந்து இவைகள அனுபவிக்கத்தக்கவைகள். சுபாசுபமான' பயனையளிக்கின்ற இதை இம்மையிலேயே அனுபவிக்கப்போகிறேன். புண்ணியமே செய்யத்தக்கது. அதைச்செய்து எனக்கு நல்ல ஸுகமுண்டாகவேண்டும். ஒவ்வொரு ஜன்மத்திலும் எனக்கு முடிவுவரை ஸௌக்கியமே உண்டாகும். இம்மையிலும் கர்மத்தினால் 'எனக்கு அளவற்ற துக்கம் உண்டாகப்போகிறது. மனுஷ்யஜன்மமானது பெரிய துக்கம். நரகத்திலழுந்துவதும் உண்டாகப்போகிறது. சில காலத்தினால் நான் மறுபடியும் நரகத்திலிருந்தும் மனுஷ்யஜன்மத்தையுமடைவேன்' என்றும் நினைக்கிறான். மனிதன் மனிதத்தன்மையிலிருந்து தேவத்தன்மையையும் தேவத்தன்மையிலிருந்து மறுபடியும் மனிதத்தன்மையையும் மனிதத்தன்மையிலிருந்தும் நரகத்தையும் கிரமமாக அடைகிறான். ஸ்வரூபமில்லாதவனும் ஆத்மாவினுடைய (ஸத்தைமுதலிய) தர்மங்களால்சூழப்பட்டவனும் இவ்விதம் எப்பொழுதுமநினைக்கிறவனுமான ஜீவனால் தேவரிடத்திலும் மனிதர்களிடத்திலும் நரகத்திலும் ஜன்மமானது அடையப்படுகிறது. எப்பொழுதும் மமதையினால் சூழப்பட்டு அவைகளிலேயே மரணத்தைமுடிவாகவுடைய பிறவிகளில் ஆயிரம்கோடிஸ்ருஷ்டிகாலம் சுழலுகிறான். சுபாசுபமான பயனையளிக்கின்ற இவ்விதமானகர்மத்தைச் செய்கின்றவன் மூவுலகங்களிலும் சரீரமுடையவனாகி இவ்விதமானபயனை அடைகின்றான். சுபமும் அசுபமுமாயிருக்கின்றபயனையே ஸ்வரூபமாகவுடையகர்மத்தை ப்ரகிருதியானது செய்கிறது. ஆசையை அடைந்ததான ப்ரகிருதியே மூன்று உலகங்களிலும் அந்தக்கர்மத்தை அனுபவிக்கவும் செய்கின்றது. விலங்குப் பிறவியிலும் மனுஷ்யஜாதியிலும் தேவலோகத்திலுமுண்டான இந்த மூன்று ஸ்தானங்களையும் பிரகிருதியாலுண்டானவைகளாக அறிய வேண்டும். பிரகிருதியை அடையாளமற்றதாகச் சொல்லுகின்றார்கள். (காரியங்களாகிற) அடையாளங்களால் நாம் அனுமானிக்கின்றோம். அப்படிப்போலவே புருஷனைச்சேர்ந்த (அறிவு ரூபமான)

அடையாளமுமிருக்கின்றது. அனுமானத்தாலல்லவா புருஷன் அறியப்படுகிறான்? அவன் காரியரூபமானலிங்கத்தின்மத்தியை அடைந்து ப்ரகிருதியைச் சேர்ந்தவிகாரமில்லாத லிங்கமாகின்றான். அவன் விகாரத்திற்குவழிகளாயிருக்கின்ற (சுரோத்ரமுதலான) எல்லாவற் றையுமடைந்து கர்மத்தினுல் தன்னிடத்தில் பார்க்கிறான். பிறகு, ஸ்ரோத்ர முதலானயாவும் வாக்குமுதலான ஐந்துகர்மேந்திரியங்க ளும் இவ்வுலகில் குணங்களோடு குணங்களில் ப்ரவிருத்திக்கின்றன. இந்திரியங்களில்லாதவனுயிருந்தும், 'இவைகளெல்லாம் நான்' என் றும், 'இந்த இந்திரியங்கள் என்னிடத்திலுள்ளன' என்றும்; விகார மில்லாதவனுயிருந்தும், 'விகாரமுடையவனுயிருக்கிறேன்' என்றும் நினைக்கிறான். ஆத்மாவை லிங்கசரீரமில்லாததாயினும் லிங்கசரீரமுள் ளதாகவும் காலமில்லாததாயினும் காலமுள்ளதாகவும் (புத்தியாகிற) ஸத்வமில்லாததாயினும் (புத்தியாகிற) ஸத்வமுள்ளதாகவும் தத்வ மாகாததாயினும் தத்வமாகவும் மரணமில்லாதாயினும் மரணமுள்ள தாகவும் ஸஞ்சாரமில்லாததாயினும் ஸஞ்சரிப்பதாகவும் சரீரமில்லாத தாயினும் சரீரமுள்ளதாகவும் உற்பத்தியில்லாததாயினும் உற்பத்தி யுள்ளதாகவும் தவமில்லாததாயினும் தவமுள்ளதாகவும் கதியில்லாத தாயினும் கதியுள்ளதாகவும் ஸம்ஸாரமில்லாததாயினும் ஸம்ஸார முள்ளதாகவும் பயமில்லாததாயினும் பயமுள்ளதாகவும் கர்த்தாவா காததாயினும் கர்த்தாவாகவும் காரணமில்லாததாயினும் காரண முள்ளதாகவும் நாசமில்லாததாயினும் நாசமுள்ளதாகவும் அவித் வான் அபிமானிக்கிறான்.

முந்நூற்றுப்பத்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஸ்ரேஷ்டர் ப்ரபாணிகளுக்குச் சரீரமும் உருவமுதலியவையும் உண்டாதும் வகையை ஜனகருக்குச் சொல்லியது.)

இவ்விதம், அறிவின்மையினுலும் அஜ்ஞானிகளான ஜனங்க ளுடைய, ஸஹஜாஸத்தாலும் மரணத்தை முடிவிலுடைய ஆயிரம் கோடி ஜன்மங்களை அடைகின்றான். தாமாவினுலே திரியக்ஜாதி யிலும் மனுஷ்யஜாதியிலும் தேவலோகத்திலும் பதனத்தை முடி வாகவுடைய ஆயிரம் ஸ்தானங்களை அடைகிறான். இவ்விதம் இந்த அவித்வானவன் அறிவின்மையினுல் ப்ராணிகளுடைய ஆயிரக்

கணக்கான ஸ்தானங்களில் மறுபடியும் சந்திரன்போல லயத்தை அடைகிறான். (பதினாறு கலைகளையுடைய புருஷனது) பதினைந்தாவது கலையானது உத்பத்திகாரணமென்கிற ப்ரகிருதி. அது தாமாவென்று சொல்லப்படுகிறது. பதினாறுவதான கலையை அழிவில்லாத இந்தச் சந்திரஸ்தானமானது அறியக்கடவாய். புத்தியில்லாதப்ராணியானது அடிக்கடி பதினாறுவது கலையுடன் உண்டாகின்றது. அதனுடைய தாமாவைப் பிராணிகள் உபயோகிக்கின்றன. மறுபடியும் அது உண்டாகின்றது. பதினாறுவது கலையோவென்றால் ஸூக்ஷ்மமாயுள்ளது. அது சந்திரஸ்தானமாக நிச்சயிக்கப்படவேண்டும். அது [1] தேவர்களாலே உபயோகிக்கபடுகிறதில்லை. அந்தப் பதினாறுவது கலையானது [2] தேவர்களை உபயோகிக்கின்றது. ராஜரிஷ்டனே! இந்தப் பதினாறுவது கலையை கூணிக்கச் செய்யாமல் பிராணியானது ஜனிக்கின்றது. பதினாறுவதான அந்தக்கலையானது இவனுக்குப் பிரகிருதியாகக் காணப்படுகின்றது. அதனுடைய நாசத்தால் மோக்ஷமானது சொல்லப்படுகிறது. இருபத்தைந்தாமவனான ஆத்மாவானவன் அவனுடைய அஜ்ஞானத்தினாலேதானே இவ்விதம் பதினாறு கலைகளுடையதும் அவ்யக்தமென்று சொல்லப்பட்டதுமான அந்தத்தேகத்தை, 'இது என்னுடையது' என்று நினைத்து அதிலேயே சுழலுகிறான். அரசனே! ஆத்மாவானவன் சுத்தியுடையவர்களையும் அசுத்தியில்லாதவர்களையும் அடுப்பதால் சுத்தியுடையவனும் அசுத்தியில்லாதவனுமாகிறான். சுத்தமான ஆத்மாவையுடையவன் அசுத்தனையடுப்பதால் அவனைப்போல அசுத்தனுகவே ஆகிறான். வித்வானுயிருந்தும் அவித்வான்களை அடுப்பதனாலே அவித்வானுவான். ராஜர்ரேஷ்டனே! ஆத்மஜ்ஞானமில்லாதவனும் [3] அப்படியே அறியத்தக்கவன். மூன்று குணங்களுடைய ப்ரகிருதியை அடைவதால் ப்ராகிருதனுவான்' என்று சொன்னார். கராளஜனகன், 'பகவானே! அக்ஷரம் க்ஷரம் இரண்டிற்கும் இந்தச் சம்பந்தமானது சொல்லப்படுகிறது. அதுபோல ஸ்திரீபுருஷர்களுக்கும் ஸம்பந்தமானது சொல்லப்படுகிறது. இவ்வுலகத்தில் புருஷனில்லாமல் ஸ்திரீயானவள் கர்ப்பத்தைத் தரிப்பதில்லை. அப்படியே புருஷன் ஸ்திரீயில்லாமல் ஒருரூபத்தை உண்டுபண்ணமாட்டான். ஒருவரோடொ

---

[1] 'ஆத்மகலையின் விஷயத்தில் இந்திரியங்களால் அல்லது பிராணிகளால்' என்று கொள்க.

[2] இந்திரியங்களை.

[3] 'அப்படிப்போலவே ஆத்மவித்துக்களின் ஸேவையினால் ஆத்மவித்தாகிறன்' என்பது வேறுபாடம்.

ருவர் சேர்வதாலும், ஒருவர் ஒருவருடைய குணங்களை அடுப்பதாலும் இந்த ரூபத்தை உண்டுபண்ணுகிறார்கள். எல்லாப்பிறவிகளிலும் இப்படியே ஆண்பெண்களுடைய சேர்க்கையினாலும் ஒன்றுக்கொன்று குணங்களுடைய ஆர்ப்பரத்தினாலும் ருதுகாலத்தில் ரூபமானது உண்டுபண்ணப்படுகின்றது. அதன் உதாரணத்தைச் சொல்லுகிறேன். வேதியரே! பிதாவினுடைய குணங்களிலும் மாதாவின் குணங்களிலும் எலும்பு நரம்பு ஊன் இவைகளைப் பிறவின் குணங்களாகவும் தோல் மாமிசம் உதிரம் என்பவைகளை மாதாவினிடமிருந்துண்டானவைகளாகவும் கேட்டு அறிகிறோம். ஓ! ப்ராம்மணர்களே! இது இவ்விதம் வேதத்திலும் சாஸ்திரத்திலும் சொல்லப்படுகின்றது. வேதத்தில் சொல்லப்பட்டதும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதும் பிரமாணமாகச் சொல்லப்படுகின்றன. அந்த வேதம் சாஸ்திர[1] பிரமாணங்களே அனுகியான பிரமாணம். இப்படியே பிரகிருதியும் புருஷனும் அன்னியோன்ய குணங்களின் தடையினாலேயும் அன்னியோன்னிய குணங்களை ஆஸ்ரயித்ததினாலேயும் எப்பொழுதும் சேர்ந்திருக்கிறார்கள். பகவானே! ஆகையால், மோக்ஷதர்மமானது இல்லையென்று நிர்ணயிக்கின்றேன். இல்லாவிடில எதாவது மோக்ஷத்தில் திருஷ்டாந்தமானது உம்மால் கேரில் பார்க்கப்பட்டிருந்தால் அதை உண்மையாக எனக்குச் சொல்லும். எல்லாவிதத்தாலும் நீர் ப்ரத்தியக்ஷமாகப் பார்த்திருப்பீரல்லவா? மோக்ஷத்தில் விருப்பமுடையவர்களான நாங்களும் நாசமற்றதும் தேகமற்றதும் ஜரையற்றதும் நித்தியமும் இந்திரியத்திற்குப்புலப்படாததும் தனக்குஓர்எல்லாவரனில்லாததுமாயிருப்பது எதிலோ அதை 'அறியவிரும்புகிறோம்' என்றுவினவினன்.

வஸிஷ்டர், 'நீசொல்லிய வேதசாஸ்திரங்களிலுள்ள உதாரணமானது இப்படித்தான் ஆனாலும், அதை நீ உள்ளபடி அறியவில்லை. அரசனே! நீ வேதம் சாஸ்திரமிரண்டிலுமுள்ளகிரந்தங்களைப் படித்துமிருக்கிறாய். நீ கிரந்தத்தினுடையதத்வத்தை உள்ளபடி உணரவில்லை வேதத்திலும்சாஸ்திரத்திலுமுள்ளகிரந்தத்தைப்படிப்பதில் மாத்திரம் பற்றுள்ளவனும் கிரந்தத்தின் அர்த்தத்தின் உண்மையை அறியாதவனுமாயிருப்பவனுடைய அந்தப்படிப்பானது வீண் கிரந்தத்தினுடைய அர்த்தத்தையறியாதவன் அதனுடையசுமையைசுமக்கின்றவன். கிரந்தத்தினுடைய அர்த்தத்தின் உண்மையை அறிந்தவனுடைய கிரந்தத்தைப்படிப்பதானுண்டான குணமானது வீணன்று,

1 வேறுபாடம்.

கேட்பவன் கேட்டவுடன் தத்வத்தையறிந்து அதனுடையபயனை அடையும்படி சொல்லவல்லவனே சொல்லுதற்குத்தக்கவன். ஸ்தூல புத்தியுடையவனும் நுண்ணறிவிலாதவனுமானவன், கிரந்தத்தினர்த்தத்தை ஸபைகளில் எங்ஙனம் உறுதியாகச்சொல்லுவான்? அந்தக் கிரந்தநிச்சயத்தை உள்ளபடி சொல்லமீட்டாதமறதியுள்ளவனும் அவனுக்குநூல்களைக்கற்பித்தவனும் பரிஹஸிக்கத்தக்கபுத்தியையுடைய வர்களாகிறார்கள ராஜஸ்ரேஷ்டனே! ஆகையால், ஸாங்கியர்களிடத்திலும் மஹான்களானயோகிகளிடத்திலும் உண்மையாகக்காணப்படுகிறதை உள்ளபடி கேள். யோகிகள் எதைப்பார்க்கின்றார்களோ அதையே ஸாங்கியர்களும் பார்க்கிறார்கள். ஸாங்கியத்தையும் யோகத்தையும் ஒன்றுகப்பார்ப்பவன் புத்திமான். ஐயா! தோலும் மாம்ஸமும் உதிரமும் மேதையும் பித்தமும் மஜ்ஜையும் ஸ்நாயுவும் இந்திரிய ஸமூகம். இதை அப்பொழுது நீ என்னிடம் சொன்னாய். திரவ்யத்திலிருந்தும் திரவியத்திற்குஉற்பத்தி. ஆகையால், இந்திரியத்திலிருந்தும் இந்திரியத்தையும் தேகத்திலிருந்துதேகத்தையும் பீஜத்திலிருந்து பீஜத்தையும் அடைகிறான். இந்திரியமில்லாதவரும் பீஜமில்லாதவரும் திரவ்யமில்லாதவரும் தேகமில்லாதவருமான மகானான ஆத்மாநிர்க்குணராயிருப்பதால் எப்படி குணங்களுண்டாகும்? குணங்கள் குணங்களிலுண்டாகின்றன ; அவைகளிலேயே ஒடுங்குகின்றன. இப்படியிருக்க, குணங்கள் ப்ரகிருதியிலிருந்துண்டாகின்றன ; அங்கேயே ஒடுங்குகின்றன. தோல், மாம்ஸம், உதிரம், மேதை, மஜ்ஜை, பித்தம், எலும்பு, ஸ்நாயு இத்தனட்டையும் வீரியத்தினுலுண்டானவைகளாகவும் ப்ரகிருதியாலுண்டானவைகளாகவும் அறி. புருஷன், புருஷனைக்காட்டிலும்வேறானஸ்த்ரீ, அலி ஆகியமூன்றலிங்கங்களும் ப்ரகிருதியைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட்டன புருஷனுகாதவனும், ஸ்த்ரீயும் அலியுமாகாதவனுமாயிருக்கிற அந்த ஆத்மாவானவன் லிங்கத்துடன்கூடியவனுகச சொல்லப்படுகிறான் லிங்கமற்றவனுனை ஆத்மாவையடைந்து ப்ரகிருதியானது தன்னிடமுண்டானகார்யலிங்கங்களாலே அறியப்படுகின்றது. அப்பா! சரீரமில்லாத ருதுக்கள் புஷ்பங்களாலும் பழங்களாலும் எப்பொழுதும் அறியப்படுவதுபோல லிங்கமில்லாததும் அனுமானத்தினலே அறியப்படுகிறது. இருபத்தைந்தாமவனும் லிங்கங்களின்மத்தியில்நிலையானஸ்வரூபத்தையுடையவனும் ஆதியந்தமற்றவனும் அளவற்றவனும் கெடுதலற்றவனும் எல்லாவற்றையும்பார்க்கிறவனுமான ஆத்மாவானவன் குணங்களில்

அபிமானியாகமாத்திரமிருப்பதால் நிர்க்குணனைச் சொல்லப்படுகிறான். குணமுடையதற்குத் குணங்களிருக்கின்றன. நிர்க்குணனை ஆத்மாவுக்குக் குணங்கள் எப்படி உண்டாகும்? ஆகையால், குணங்களைப்பார்க்கின்றஜனங்களே இப்படி அறிகின்றார்கள். இவன் குணங்களைப் பிரகிருதியினிடத்திலேயே ஊகித்தறிகிறபொழுது [1]குணங்களுடையஸாசத்தால் ஸாங்கியர்களும் யோகிகளும் ஜடங்களை விலக்கியதால் மஹாபிராஜ்ஞனும் எல்லாவற்றையுமறிகின்றவனும் புத்திக்குமேற்பட்டவனுமாகச்சொல்லுகிற பரமாத்மாவைப் பார்க்கின்றான். சாங்கியமென்கிறஞானத்திலும் யோகத்திலும்ஸமர்த்தர்களும் மோக்ஷத்தைவிரும்புகிறவர்களுமான வித்வான்கள் குணத்தை ஜடமாகவும் பிரகாசமில்லாததாகவும் ஸ்வதந்திரமில்லாததாகவும் ஈஶ்வரரை நிர்க்குணராகவும் நித்யராகவும் பிரகிருதிக்கும் குணங்களுக்கும் நியந்தாவாகவும் இருபத்தைந்தாமவராகவும் சொல்லுகிறார்கள். (இளமைமுதலாகவும் ஜாகரணமுதலாகவுமிருக்கின்ற) நிலைமைகளிலும் ஜன்மத்திலும் பயந்தவர்கள் பிரகிருதியை அறிந்தபொழுது அறிகின்றவனை ஆத்மாவை ஞானத்தினாலே ஸமமானப்ரம்மத்தை அடையச்செய்கின்றார்கள். பகைவர்களைக்கொல்பவனே! நல்லஞானமான இதுவும் கெட்டதானவிஷயஞானமும் ஞானிகளுக்கும் அஞ்ஞானிகளுக்கும் தனித்தனியான திருஷ்டாந்தம் (வாதிகளுள்) ஒருவருக்கொருவரால் க்ஷரத்தையும் அக்ஷரத்தையும்பற்றிய இந்த [2]உதாரணமானது சொல்லப்பட்டது. வித்வான்கள் அபேதத்தை அக்ஷரமாகச் சொல்லுகின்றார்கள். [4]பேதமானது க்ஷரமாகச சொல்லப்படுகின்றது. இவன் இருபத்தைந்துதத்துவங்களிலும் நிலைபெற்று நன்றாகப் [5]பிரிவிருத்திக்கிறபொழுது, இவனுக்கு அபேதமானது ஞானமும் பேதமானது அஜ்ஞானமுமாகின்றன. தத்வத்திற்கும் நிஸ்தத்வத்திற்கும் இது தனித்தனியான உதாரணம். வித்வான்கள் இருபத்தைந்துதத்வத்தையும் தத்வமாகச் சொல்லுகின்றார்கள். தத்வமில்லாததென்கிற நிஸ்தத்வத்தை இருபத்தைந்தாவதற்குமேலானதும் (இருபத்தைந்தானலுந்துவர்க்கங்களில்) ஸஞ்சரிப்பதும் (அதனல்) வர்க்கத்திற்குவர்க்கமும் ஸஞ்சரனமும் (அதனல்) தத்வத்தைக் காட்டியும் (மேலான) தத்வமுமானஉதாரணமாகச் சொல்லுகின்றார்கள்' என்றார்.

---

1 வேறுபாடம். 2 'சாஸ்த்ரமானது' என்பது பழையவுரை.
3 'ஏகத்வம்' என்பது மூலம். 4 'நாநாத்வம்' என்பது மூலம்.
5 வேறுபாடம்.

* L சுஅ

முந்நூற்றுப்பதினேராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வஸிஷ்டர் யோகமுறை மற்றுமுள்ள மதமுதலியவற்றை ஜனகருக்குச் சொல்லியது.)

ஜனகர், 'ஓ! முனிசிகாமணியே! உம்மால் இது பேதாபேத மென்று சொல்லப்பட்டது. இந்தப்பேதாபேதங்களுடைய திருஷ்டார்த்தத்தை நான் சங்கேதகமாகவே பார்க்கிறேன். ஓ! குற்றமற்ற வரே! அஜ்ஞானியினாலும் ஞானியினாலும் அறியப்பட்ட ஆத்மாவினுடைய தத்வத்தையும் நான் ஸ்தூலபுத்தியினால் அறியவில்லை. இது உண்மை. ஓ! மாசில்லாதவரே! உம்மால்சொல்லப்பட்ட க்ஷராக்ஷராங்க ளுடையகாரணமும் சஞ்சலபுத்தியுடைமையால எனக்கு நசித்தது போன்றதே ஓ! பகவானே! ஆகையால், இந்தப்பேதாபேதங்களுடைய ஞானத்தையும் ஞானியையும் அஜ்ஞானியையும் உண்மையாக அறியப்படுகிறவஸ்துவையும் வித்தையையும் அவித்தையையும் க்ஷரத்தையும் அக்ஷரதையும் ஸாங்கியத்தையும் யோகத்தையும் பேதத்தையும் அபேதத்தையும் முழுதும் கேட்க விரும்புகிறேன்' என்று சொல்ல, வஸிஷ்டர் சொல்லலானார்.

'ஓ! மஹாராஜனே! கஷ்டம். நீ கேட்கிற இதை உனக்குச் சொல்லுகிறேன். யோகத்தின் காரியத்தை என்னிடம் தனியாகக் கேள். யோகிகளுக்கு யோகத்தில் செய்யவேண்டியதியானமே சிறந்த வன்மை. வேதவித்துக்களான ஜனங்கள் அந்தத்தியானத்தையும் இரண்டுவிதமாகச் சொல்லுகின்றார்கள். (அவைகள்) மனத்தை ஒரு முகமாகச்செய்வதும் பிராணயாமமுமாம். பிராணயாமம் மனத்தின் [1] குணத்தோடுகூடினதும் [2]குணமில்லாததுமாக இருக்கிறது. ஓ! அரசனே! ஜலமலம் விடுத்தலும் போஜனம்செய்தலுமாகிய இவ் விரண்டுகாலத்திலும் யோகம் செய்யக்கூடாது. 'மற்றக்காலமெல்லாம் ஜாக்கிரதையுடன் யோகத்தைச செய்யவேண்டும். புத்திமானான முனிவன் இந்திரிய விஷயங்களிலிருந்தும் இந்திரியங்களை மனத்தினால் திருப்பிப் பிறகு [3] இருபத்திரண்டு ஏவுதல்களாலும் நிலைத்திருப்ப

1 தியானயோகம். 2 ஹடயோகம்.

3 கால்கட்டைவிரல்முதல் தலைவரையிலுள்ள ஆகாயத்தில் பிராணவாயுவை மூதலில் வியாபித்திருக்கச்செய்து பிறகு, அதிலிருந்து நெற்றி, புருவங்களின் நடு, நேத்திரஸ்தானம், நாஸிகாமூலம், ஜிஹ்வாமூலம், கண்டம், ஹ்ருதயமத்யம், நாபிமத்யம், லிங்கம், மூலாதாரம், அபானம், அடித்தொடைகள், நடுத்தொடை

வனும் ஜரையில்லாதவனும் வித்வான்களால் இந்த ஏவுதலுக்கு உரியவனெச் சொல்லப்பட்டவனுமான அந்த ஜீவனே இருபத்துநான்காவதைக்காட்டிலும் மேலான பரமாத்வைக் குறித்து ஏவவேண்டும். மாசற்றமனமுடையவனுக்கு விரைவில ஏவுதல்களால் எப்பொழுதும் ஆத்மா (பரனுடன்) சேர்ப்பிக்கக்கூடியவன் அப்படியில்லாவிட்டால் முடியாதென்பது திண்ணமென்று கேட்டிருக்கிறோம் எல்லா ஸங்கங்களிலிருந்தும் விடுபட்டவனும் லகுவான ஆகாரமுடையவனும் இந்திரியங்களை ஜயித்தவனுமாயிருந்துகொண்டு முன்ராத்ரியிலும் பின்ராத்திரியிலும் ஆத்மாவில் மனத்தை நிறுத்தவேண்டும். ஓ! மிதிலைபதியே! மனத்தால் இந்திரியக் கூட்டத்தை நிலைக்கச்செய்து புத்தியினால் மனத்தை ஸ்திரமாகச்செய்து கல்லுப்போலவும் [1]கட்டைபோலவும் [2]மரம்போலவும் அசையாமலிருப்பவனே (யோகி) விதிகளின் அனுஷ்டானத்தையுணர்ந்த வித்வான்கள் யோகத்தை அடைந்தவனெச் சொல்லுகிறார்கள். (சப்தத்தைக்) கேளாதவனும் (கந்தத்தை) முகராதவனும் (ரஸத்தைச்) சுவையாதவனும் (ரூபத்தைப்) பாராதவனும் (ஸ்பரிசத்தை) அறியாதவனும் மனத்தில் சங்கற்பமில்லாதவனும் ஒன்றையுமபிமானியாதவனும் கட்டைபோல ஒன்றையும் அறியாதவனுமாயிருக்கிற யோகியை வித்வான்கள் பிரகிருதியை அடைந்தவனெச் சொல்லுகிறார்கள். ஸ்ரேயா! லிங்கசரீரமில்லாதவனும் அசைவுற்றவனுமாகிக் காற்றில்லாதவிடத்தில் ஜ்வலிக்கின்றதீபம்போல மேலே பிரகாசிக்கின்றவனும் சனகதியை அடையாதவனுமாயிருப்பவன் பரமாத்மாவைப் பார்ப்பான். பார்த்து, 'அபபா! என்னைபோன்றவர்களால் அறியவேண்டியவனும் (எல்லாவற்றையும்) அறிகிறவனுமான பரமாத்மா இருதயத்திலிருக்கிறான்' என்றுசொல்லுவான். அப்படியே, ஆத்மாவானவன் புகையில்லாத அக்கினிபோலவும் கிரணங்களுள்ள ஸூர்யன்போலவும், ஆகாயத்தில் மின்னலுடைய ஜோதிபோலவும் தன்னிடத்தில் காணப்படுவான். மஹாத்மாக்களும் தைரியமுடையவர்களும் வித்வான்களும் ப்ரம்மத்தைத் தெரிவிக்கின்ற சாஸ்திரத்தில்

கள், மூழங்கால்கள், கணைக்கால் மதயங்கள், முதுகால்கள், காற்கட்டை வீரல்கள், பாதங்கள் இவைகளில் ஒன்றிலின்றும் ஒன்றில் இழுத்து நிறுத்தல் ப்ரத்யாஹாரம். இவை பதினெட்டுச்சோதனைகள் (ஏவுதல்கள்) எனப படும். இவற்றுடனே தாரணை, தியானம், ஸமாதி, பிரகிருதி புருஷர்களின் விவேகஞானம் இவைகளைச் சேர்க்க ஏவுதல்கள் இருபத்திரண்டாகும்.

1 'ஸ்தாணு' என்பது மூலம்.

2 'தாரு' என்பது மூலம்; 'கிரி' என்பது வேறுபாடம்.

3 'நிர்யக்கதி' என்பது மூலம்.

நிஷ்டையுள்ளவர்களுமான பிராம்மணர்கள் (ஜன்னமரணமற்ற ஆத்மா வை நன்முகப் பார்க்கின்றார்கள். அதனையே, அணுக்களைக்காட்டிலும் அணுவாகவும் மகத்துக்களைக்காட்டிலும் (மகத்தாகவும் சொல்லு கின்றார்கள். அந்தப்பிரம்மதத்வமானது எல்லாப் பிராணிகளிடத்தி லும் (ஹ்ருதயத்தில்நிலைபெற்றிருந்தும் காணப்படுகிறதில்லை. உலகத் தைப் படைக்கிற அவர் புத்தியாகிற நெய்புள்ள மனமாகிறதீபத் தால் பார்க்கப்படுவார் ; பெரிதான (அஜ்ஞான) இருளுக்கு அப்புறப் பட்டிருப்பதால் தமோகுணமில்லாதவர். அவர் வேதத்தின்கரை யடைந்ததத்வஜ்ஞானிகளால் [1]மானஸரென்றும் விமலராயிருப்பதால் விதமஸ்கரென்றும் லிங்கமில்லாதவராயிருப்பதால் அலிங்கரென்றும் பெயர்கொண்டாரென்றும் சொல்லப்பட்டார். யோகிகளுடைய இந்த யோகத்தையே யோகத்தினுடைய லக்ஷணமாக நிணைக்கிறேன். யோகி கள் இவ்விதம் ஆத்மஸ்வரூபத்திலிருக்கின்றவனும் ஜரையில்லாத வனும் சிறந்தவனுமான த்ரஷ்டாவைப் பார்க்கின்றார்கள். உனக்கு என் னால் இதுவரையில் யோகஞானமானது உள்ளபடி சொல்லப்பட்டது. இனி, பரிஸங்கியானமென்கிற பிரகிருதிபுருஷர்களை வேறுகப்பார்ப்ப தான ஸாங்கியஞானத்தைச் சொல்லுகிறேன். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! பிரகிருதியைச சொல்லுகின்றவர்கள் அவ்யக்தத்தை மேலானகாரண மாகச்சொல்லுகின்றார்கள். அதிலிருந்தும் இரண்டாவதான மகத்தத் வம் உண்டாயிற்று. மகத்தத்வத்திலிருந்தும் மூன்றுவதான அஹங்கா ரம் உண்டானதென்று நமக்குக்கேள்வி. ஸாங்கியஞானமுடையவர்கள் அஹங்காரத்திலிருந்தும் பஞ்சஸூக்ஷ்மபூதங்களுண்டாயினவென்று சொல்லுகின்றார்கள். இந்தஎட்டும் பிரகிருதிகள். ஐந்துமஹாபூதங் களும் தம்விஷயங்களைப் பிரகாசம் செய்கின்ற இந்திரியங்களுடனென் றுமாக விகாரங்கள் பதினாறு. புத்திமான்களும் ஸாங்கிய சாஸ்திரத்தி லுள்ளவிதியின் தாத்பரியத்தையறிந்தவர்களும் ஸாங்கியமார்க்கத்தில் பற்றுள்ளவர்களுமாயிருக்கிற ஸாங்கியர்கள் தத்வங்களை இவ்வள வாகவே சொல்லுகின்றார்கள். எதிலிருந்து எது உண்டாகின்றதோ அது அதிலேயே லயிக்கின்றது. சிருஷ்டி முறைக்குவிபரீதமாக லயிக் கின்றன. அந்தராத்மாவினுல் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன, ஸமுத்திரத்தி னுடைய அலைகள்போலக் குணங்கள் குணங்களிலே கிரமமாக உண்டா கின்றன ; விபரீதமாக லயிக்கின்றன. ஓ! ராஜசிகமணியே! பிரகிரு தியினுடைய ஸ்ருஷ்டியும் பிரளயமும் இவ்வளவே. இதற்குப் பிர ளயத்தில் ஒன்முயிருக்கும் தன்மையும் ஸ்ருஷ்டிகாலத்தில் அனேகமா

---

1 மனத்தாலறியக்கூடியவர்.

யிருக்கும்தன்மையும் இப்படியேஎன்று அறியத்தக்கதை அறிபவர்கள் அறியவேண்டும். அதிஷ்டாதாவென்று சொல்லப்பட்ட அவருக்கும் [1] இதுவே உதாரணம். அவர் பிரகிருதியினுடைய அபேதத்தையும் பேதத்தையும் அனுஸரித்துத் தத்வத்தோடு கூடினவராயிருக்கிறார். அவருக்குப் பிரளயத்தில் ஒன்றுயிருக்கும் தன்மையும் பிரவிருத்தியினால் அநேகமாயிருக்குந் தன்மையும் எற்படுகின்றன. ஸ்ருஷ்டிஸ்வபாவத்தையுடைய பிரகிருதியானது தன்னை அநேகமாகச்செய்தது. அந்த க்ஷேத்திரத்தில், மகானும் இருபத்தைந்தாமவருமான ஆத்மாவானவர் தலைவராயிருக்கிறார். ராஜஸ்ரேஷ்டனே! அதனால், யதிஸ்ரேஷ்டர்களாலே அதிஷ்டாதாவென்று சொல்லப்படுகிறார். க்ஷேத்திரங்களை ஆள்வதனால் அதிஷ்டாதாவென்று நமக்குக்கேள்வி. ஜடமான க்ஷேத்திரத்தையறிவதால் க்ஷேத்ரஜ்ஞனென்று சொல்லப்படுகிறார். வியக்தமில்லாத (சரீரமாகிற) புரத்தில்சயனித்திருத்தலால் புருஷரென்று சொல்லப்படுகிறார். க்ஷேத்ரம்வேறும் க்ஷேத்ரஜ்ஞன் வேறுமாகச் சொல்லப்படுகின்றன. க்ஷேத்ரமானது அவ்யக்தமென்று சொல்லப்பட்டது. ஞாதா இருபத்தைந்தாமவன் [2]ஞானமும் வேறேயாகும். ஜ்ஞேயமானது வேறுகசசொல்லப்படுகிறது. ஞானமானது அவ்யக்தமென்று சொல்லப்படுகின்றது. ஜ்ஞேயன் இருபத்தைந்தாமவன். க்ஷேத்ரமென்றுசொல்லப்பட்ட அவ்யக்தமானது ஸத்வத்திற்குத்தக்கபடி சக்தியுள்ளது. இருபத்தைந்தாவதான (ஆத்ம) தத்வமானது (க்ரியா) சக்தியில்லாததும் தத்வமில்லாததுமாயிருக்கிறது. ஸாங்கிய ஞானம் இவ்வளவே. ஸாங்கியர்கள் பரிஸங்கியானமென்கிற பிரகிருதி புருஷர்களைப் பிரித்து அறிகின்றார்கள். பிரகிருதியையும் ஜகத்காரணமாகச் சொல்லுகின்றார்கள் ஸாங்கியர்கள் பிரகிருதியுடன் கூடத் தத்வங்களைக்கணக்கிட்டு இருபத்துநான்கு தத்வங்களாகவும் சொல்லுகின்றார்கள். அவன் [3]தத்வமில்லாதவன். இருபத்தைந்தாமவன் ஆத்மாவை அறியாதவனும் அறிகிறவனென்று கருதப்பட்டான். அவன் எப்பொழுது தன்னை அறிகிறானோ அப்பொழுது கைவல்யத்தையடைந்தவனாகிறான். இதுவரை உனக்கு யதார்த்தமாக நல்ல ஞானத்தைச் சொன்னேன். இவ்விதம் இதை அறிகின்றவர்கள் பிரம்மபாவத்தை அடைகின்றார்கள். நல்லஞானமென்பது [4]பிரகிருதியை உள்ளபடியே பார்ப்பது. காணப்பட்ட இந்தப்பொருள்கள் குணத்தன்மையிருப்

1. திருஷ்டியில் பேதமும் பிரளயத்தில் அபேதமும். 2. வேறு பாடம்.
3. தத்வமென்றால் அதுவாயிருத்தல்; அதாவது பிரத்யகாத்மாகாமை.
4. 'ப்ரம்மத்தை' என்பது பழையவுரை.

பதால் எப்படி (நிர்க்குணனுக்கு வேறே) ஒப்பிடியே நிர்க்குணனும (இவற்றிற்கு) வேறுவான். இவ்விதமிருப்பவர்களுக்கு மறுபடி ஜனனம் இல்லே. அந்த நிர்க்குணன் அழிவுற்ற பரார்த்தபரமாய் அகண்ட ரத்தன்மையிலேயே இருக்கிறன். பிரகிருத்திபுருஷர்களே ஒன்றாக நினைத்துப்பார்ப்பவர்களுக்கு நல்லதரிசனம் ஏற்படாது. பகைவர்களே வாட்டுபவனே! அவர்கள் அடிக்கடி அவயக்தத்தை அடைகின்றார்கள். இந்த ஸர்வத்தையுமறிந்து அஸர்வனே அறியாதவர்கள் வ்யக்தர்களாகி வ்யக்தங்களின் வசத்திலிருப்பவர்களாவார்கள். ஸர்வம் அவ்யக்தமென்று சொல்லப்பட்டது. அஸர்வன் இருபத்தைந்தாமவன்; இவனே அறிகின்றவர்களுக்குப் பயம் உண்டாவதில்லே.

மூன்றூற்றுப்பன்னிரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(வஸிஷ்டர், வித்தை அவித்தைகளைப்பற்றி ஜனகருக்குச் சொல்லியது.)

அரசனே! இதுவரையில் உனக்கு ஸாங்கியஞானமானது சொல்லப்பட்டது. இனி, வித்தை அவித்தைகளைக் கிரமமாக என்னிடமிருந்து தெரிந்துகொள். ஸ்ருஷ்டிப்ரளயமென்கிற தர்மங்களையுடைய அவித்தையை அவ்யக்தமாகச் சொல்லுகிறார்கள். ஸ்ருஷ்டிப்ரளய மற்றவித்யாரூபிணி இருபத்தைந்தாமவனென்று சொல்லுகிறார்கள். [1]வெவ்வேறான வித்தையை நீ கிரமமாக அறியக்கடவாய். ஐயா! முனிவர்களாலே இந்த ஸாங்கியஞானத்தினுடைய திருஷ்டாந்தமானது உண்மையாகச் சொல்லப்பட்டிருக்கிறது [2]ஞானேந்திரியமானது எல்லாக்கர்மேந்திரியங்களுடைய வித்தையாகவும் கருதப்பட்டது. அப்படியே ஸ்தூலபூதங்கள் [3]ஞானேந்திரியங்களுடைய வித்தையென்று நமக்குக்கேள்வி. [4]புத்திமான்கள் மனத்தை ஸ்தூலபூதங்களுடைய வித்தையாகச் சொல்லுகின்றார்கள். ஐந்து ஸூக்ஷ்மபூதங்களேயும் மனத்தினுடைய [5]வித்தையென்று சொல்லுகின்றார்

---

1 அதிகபாடமான அசைர்ப்ரலோகம் விடப்பட்டது.

2 கர்மேந்திரிய வியாபாரம் விட்டு ஞானேந்திரியக்களேயே தாஜ்ய பிமானித்திருத்தல். இது இந்திரியோபாஸ்தி.

3 ஞானேந்திரியங்களே விட்டு ஸ்தூல பூதங்களைத் தாஜ்யத் தியானித்திருத்தல். இது விசேஷபூதோபாஸ்தி.

4 மனோமாத்திரமாயிருத்தல். மனத்தின் உபாஸ்தி.

5 ஸூக்ஷ்மபூதத்தின் உபாஸ்தி.

கள். அஹங்காரமானது ஐந்து பூதங்களுடைய [1]வித்தை. இந்த விஷயத்திற்சந்தேகமில்லை. ஓ! ராஜனே! அப்படியே [2]புத்தியானது அகங்காரத்தினுடைய வித்தை. தத்வங்களுக்கெல்லாம் மேலானதும் காரணமுமாயிருக்கிற அவ்யக்தமானது [3]புத்தியின் வித்தையாக அறியதக்கது. ஓ! அரசனே! இது பரமமான வித்தியாகவும் நிஜக்கபபட்டது. இருபத்தைந்தாவதும் பரமபுருஷனான ஆத்மாவை அவ்யக்தத்தினுடைய வித்தையாகச சொலலுகின்றார்கள் அரசனே! எல்லா ஞானத்திற்கும் விஷயமான எல்லாம் அவ்யக்தமென்று சொல்லப்பட்டன. ஞானமானது அவ்யக்தமென்று சொல்லப்பட்டது. [4] ஜேயம் இருபத்தைந்தாவதான ஆத்மா. அபபடியே, ஞானம் அவ்யக்தமென்று சொல்லப்பட்டது அறிகிறவன் இருபதைந்தாமவன். விரும்பியபடியால வித்தையும் அவித்தையும் என்னால உனக்கு வகுத்துசசொலலப்பட்டன. அகஷரமென்றும் கஷரமென்றும் சொல்லப்பட்டதை என்னிடமிருந்து அறி. [5]இருவரும் அகஷரங்களாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இவ்விருவரும் கஷரங்களாகவும் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் காரணத்தைச சொலலுகிறேன். உண்மையானது ஞானத்தினால வெளியாகும். இவர்கள் உற்பத்திநாசமறறவர்களா இருவருமே எப்வர்களாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள் இவ்விருவரும் பிரம்மனித்துக்களாலே தத்வமென்று பெயருடையவர்களாகச சொலலபபடுகிறார்கள ஸ்ருஷ்டிப் பிரளயமென்கிற தர்மங்களையுடையதாயிருப்பதால அவ்யக்தத்தை அகஷரமாகச சொல்லுகிறார்கள அபபடிபபட்ட இந்த அவ்யக்தமானது (மகதாதி) குணங்களுடைய ஸ்ருஷ்டிக்காக அடிக்கடி விகாரத்தை அடைகின்றது. மறறத்தத்வமுதலிய குணங்களுடைய பரம்பரைகள் உறபத்தியடைகினறன அப்படிபபட்ட இந்த இருபத்தைந்தாவதாக ஆத்மாவை ஆகாரமானகேஷத்திரமாகச சொல்லுகிறார்கள். (இரண்டிக்கும் வ்யதரத்தன்மை எபபடியென்றால் போகியான வன்) அந்தக் குணஸ்ரமூகதத்தை அகம்புத்திக்கு விஷயமாகாத [6]சுத்தப்பிரம்மத்தில் லயம் செய்யும்பொழுது அந்த இருபத்தைந்தாவ

---

1 அஹங்காரோபாஸ்தி.

2 புத்தி மகத்தத்துவம். தன்மாத்ரமாயிருபபது மகத்தத்வோபாஸ்தி.

3 அவ்யக்தோபாஸ்தி.

4 புத்திவிருத்திகால் பிரகாசிக்கின்ற போதருே ஞான ஆத்மா.

5 வேறுபாடம் ; பிரகிருதியும் ஜீவாத்மாவும

6 ' அவ்யக்தாத்மநி ' என்பது மூலம்.

தான [1]ஜீவன் அந்தக் [2]குணங்களோடு லயத்தை அடைகின்றான். ஐயனே! (காரிய) குணங்கள் (காரண) குணங்களில் லயத்தை அடைகின்றபொழுது பிரகிருதியென்றே இருக்கும். அதுபோல க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனும் அவனுக்கு அதிஷ்டானமான பரம்மத்தில் லயத்தை அடைகிறபொழுது குணமென்றபெயர்பெற்ற மூலப்பிரகிருதியும் (மகதாதிகுணங்களுடன் சேர்ந்து) நாசத்தை அடைகின்றது. ஓ! விதேஹராஜனே! குணங்களிலேயிருப்பில்லாதிருந்தால் பிரகிருதிக்கு நிர்க்குணத்தன்மை ஏற்படுகிறது இவ்விதமே, க்ஷேத்ரஜ்ஞனை ஜீவனும் 'க்ஷேத்திரத்தின் ஞானம்நசித்தபொழுது க்ஷரத்தன்மையை அடைகிறான் இவன் ஸ்வபாவத்தில் நிர்க்குணனென்று கேட்டிருக்கிறோம். இவன் க்ஷரமாகிறபொழுது குணத்துடன்கூடின பிரகிருதியைக் கலந்து அபிமானிக்கிறான். அப்படியே, ஆத்மாவுக்கு நிர்க்குணத்தன்மை உண்டாகிறபொழுது, பிரகிருதிஸம்பந்தத்தை விடுதலினால் சுதந்தனாகிறான். அறிவுள்ளவன், 'நான் வேறு. இது வேறு' என்று அறிகிறபொழுது இந்தப்பிரகிருதி வேறாகின்றது. கலந்திருக்கும் தன்மையை அடையமாட்டாது. ஓ! ராஜஸ்ரேஷ்டனே! பிரகிருதியோடுகலந்தவனும் வேறில்லாதவனுமாகக் காணப்படுகிறான். பிரகிருதியைச் சேர்ந்தஅந்தககுணஸமூகத்தை நிர்த்திக்குப் பிரகிருதிக்குவேறான த்ரஷ்டாவைப்பார்க்கும்பொழுது பார்க்கிறவனைஅவன் மறுபடி ஸம்பந்திக்கமாட்டான். 'நான் என்ன இவ்விதம்செய்தேன்? இவ்வளவு காலம் மத்ஸ்யஜலஞானத்தை அனுஸரித்து இந்த [3]ஜனத்தை அடுத்திருந்தேனே இவ்வுலகில் மத்ஸ்யமானது (ஜலத்தையும் வலையையும்) பிரிதறியாமையால் வலையை அடுத்திருந்தது. நானும் மிகுந்தமோகத்தால் ஒரு ஜனத்தைவிட்டு மற்றொருஜனத்தை அடுத்திருந்தேன். மத்ஸ்யம் ஜலமென்கிறஞானத்தினால் அடுத்திருந்ததுபோல நானும் அடுத்திருந்தேன். மத்ஸ்யமானது ஜலத்தைக்காட்டிலும் வேறுபிரித்தலை அறிந்து அபிமானியாதபோலவே 'நானும் அஜ்ஞானத்தினாலே ஆத்மாவையும் வேறுபிரித்தலையும் அறியவில்லை. அடிக்கடி மோகத்தினால் ஒருஜனத்தைப்பற்றி வெவ்வேறான இந்த ஜனத்தை

---

1 ஜீவனுக்குக் குணங்களாலுண்டான ஜீவத்தன்மை நசிக்கின்றது; அதுவே லயம்; ஸ்வரூப நாசமில்லை. பிரம்ம ஸ்வரூபமாயிச் சேஷ்டித்து நிற்கிறான்.

2 பிரகிருதிக்கு மகதாதிகளுடன்கூட ஸ்வரூப நாசம் லயம்.

3 'ஜனம்' என்பது மூலம்; 'சரீரம்' என்பது பழையவுரை.

அனுஸரித்திருந்த அறிவினனைனென்னை நிந்திக்கவேண்டும். இவன் இந்தவிஷயத்தில் பந்துவாவான். இவனெடு எனக்கு ஸமமானதன் மையானது தகுதி. நானும் இவனைப்போன்ற தன்மையுள்ளவனகி இவனுடன் ஸமமாயிருக்குந்தன்மையை அடைவேன். இவனெடொப் பான நான் இவன்விஷயத்தில் ஸமபாவத்தைப பார்க்கிறேன். இவனெ க்படமற்றவனுயிருக்கிறன். நானும் ஸ்பஷ்டமாக இவன்போலவே யிருக்கிறேன். ஜடமானபிரகிருதியுடன்சேர்ந்து அஜ்ஞானத்தாலுண் டானமோகத்தினுலே பிரவிருத்தித்தவனும் அஸங்கனுமான நான் ஸங்கத்துடன்கூடிய பிரகிருதியுடன் இவ்வளவு காலம்வரையில் இருந் தேன். இந்தப்பிரகிருதியினுலே நான் வசம்செய்யப்பட்டு இவ்வளவு காலமாக அறியவில்லே. நான் உயர்வானதேவர்களேயும் நடுவானமனி தர்களேயும் இழிவானபசுபக்ஷிகளேயும்சேர்ந்த அந்தப்பிரகிருதியில் ஏன் வலிக்கிறேன் ? (எனக்கு) ஸமானமாயிருக்கிற இதனுடன் அறிவீனத் தன்மையால் நான் ஏன் ஸகவாஸத்தைச் செய்கிறேன் ? இப்பொழுது நான் ஸ்திரனகிறேன். இந்தஸமயமோ வஞ்சிக்குட்பட்டு (நான் இதனுடன்) ஸகவாஸத்தை செய்யமாட்டேன் விகாரமற்றநான் விகாரமுடைய இதனுல்வஞ்சிக்கப்பட்டேனென்பது இதனுடையகுற்ற மன்று. இது என்னுடைய குற்றம்தான். சரீரமற்றநான் பராமுகனுயிரு ந்து இதனிடம்பற்றியிருந்ததனுல் அனேகவிதமானசரீரங்களிலிருந் தவனுகிறேன். நான் சரீரமில்லாதவனுயிருந்தும் பிரகிருதியினுடைய அவிஸயத்தினுல் இதத்தில் அந்தஅந்தப் பிறவிகளில்விழுந்து என தென்னிகமமதைக்குவசப்பட்டுச் சரீரமே நானுனேன். மமதையில் லாதவனனைனக்கு அறிவழிந்ததாயிருக்கிற சித்தத்தினுலே அந்த அந்தப்பிறவிகளில் மமதையையுண்டுபண்ணி என்னகாரியம் செய்யப் பட்டது ? தன்னே அநேகமாகச்செய்துகொண்டு என்னே மறுபடியும் அவைகளில்சேர்ப்பிக்கிறதும் (என்னுடைய) ஆத்மாவை அகங்காரத் தினுல்பட்டுத்தியதுமான இந்தப்பிரகிருதியினுலே இதத்தில் எனக்கு ஒன்றும் செய்யவேண்டியதில்லே மமதையில்லாதவனும் அகங்கார மில்லாதவனுமானநான் இப்பொழுது விழித்துக்கொண்டேன். இந் தப்பிரகிருதியினுலே எப்பொழுதும் மமதையானது அகங்காரத்தை முன்னிட்டுச்செய்யப்பட்ட ஸ்வரூபத்தையுடையதாயிருக்கிறது. நான் இந்தப்பிரகிருதியைவிட்டுவிலகி நாசமற்றதான பரமாத்மாவை ஆச்ர யிப்பேன். நான் இந்தப்பரமாத்மாவுடன் ஸமபாவத்தையடைவேன். ஜடமான இந்தப்பிரகிருதியுடன் ஸமபாவத்தையடையமாட்டேன். எனக்கு இந்தப்பரமாத்மாவுடன் ஐக்யமானது மங்களம் ; இந்தப்பிர

கிருதியுடன்ஐக்யம் சேஷமமன்று' என்று இருபத்தைந்தாவதான ஆத்மா பரமாத்மஞானத்தினாலே இவ்விதமறிந்து க்ஷரமானபிரகிருதியை விட்டுவிட்டு அழிவற்றதான [1]அக்ஷரத்தன்மையை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டும். ஓ! மிதிலாதிப! அவியக்தமும் வ்யக்தமுமாயிருக்கிற (ஸ்ருஷ்டிமுதலிய) கர்மத்தையுடையவனும் ஸகுணனும் நிர்க்குணனுமானபரமேஷ்டி நிர்க்குணஸகுணஸாக்ஷாத்கரித்து அத்தன்மையாகஆகிறான். இப்பொழுது, என்னால் வேதத்தில்சொல்லியபடி ஞானத்துடன்கூட க்ஷராக்ஷரங்களுடைய தத்வத்தின் நிதர்சனமானது சொல்லப்பட்டது. ஸந்தேகமில்லாமலும் நன்குக்கமாகவும் தெளிவாகவும் நன்கு அறியப்பட்டதாகும்படி நான் கேட்டவிதமே திரும்ப உனக்குச் சொல்லுகிறேன். அதை அறிந்துகொள். என்னாலே ஸாங்கியமும் யோகமும் அந்தஇரண்டின் சாஸ்திரங்களின் உதாரணத்துடன் சொல்லப்பட்டன. ஸாங்கியர்களாலே சொல்லப்பட்ட சாஸ்திரமானது யோகசாஸ்திரமே. ஓ! பூபதியே! ஸாங்கியர்களுடைய சாஸ்திரமானது நன்றாக அறிவையுண்டுபண்ணுகிறது. அது அந்தச் சாஸ்திரத்தில் சிஷ்யர்களுடைய நன்மையைக்கருதி மிகவும்தெளிவாகச் சொல்லபடுகிறது ஸமர்த்தர்களான ஜனங்கள் இவ்விதமான இந்தச்சாஸ்திரத்தை வேறுதானென்றும் சொல்லுகிறார்கள். அரசனே! யோகிகளுக்கு இந்தசாஸ்திரத்திலும் வேதத்திலும் ஆதரவிருக்கிறது. (அவைகளில் பிரவிருத்தித்தவன்) இருபத்தைந்தாவதற்குமேலானதத்வத்தைக் காண்கிறதில்லை. ஜடமான அவ்யக்தமும் அறிகிறவனான ஜீவதத்வமும் உள்ளபடி ஸாங்கியர்களுடைய போக்ஷரூபமானபரதத்வமும் எடுத்துரைக்கப்பட்டன. (யோகிகள்) அறிகிறவனஜீவனையும் அறிவான ஆத்மாவையும் யோகத்தின் உதாரணமாகச் சொல்லுகின்றார்கள்.

மூன்நூற்றுப்பதின்மூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(வஸிஷ்டர், ஜாஜலிஞானங்களையும் உபதேசம்பெறத்தக்கவர் தாரதையையும் ஜனகருக்குச் சொல்லியது.)

இனி, ஜடமான அவ்யக்தத்தையும் இந்தக்குணவிதியையும் கேள். இந்தப்பிரகிருதி குணங்களைப் போஷிக்கிறது; படைக்கிறது; அழிக்கிறது. அரசனே! எப்பொழுதும் இவ்வுலகில் விளையாட்டிற்

[1] ப்ரம்மபரிவத்தை.

காகத் தன்னைப் பலவீனஞ் செய்து விகாரத்தையடைகின்றது. ஜீவ னானவன் அவைகளைமே பார்க்கிறான். இவ்விதம் வேறுபாட்டை யடைவதான இதை அறிகிறதில்லை. வயக்தமில்லாமல் அறிவதினாலே தான் அறிகிறவனதவும் சொல்லுகிறார்கள். அவ்யக்தம் ஒருபோதும் குணத்துடன் கூடின விகாரத்தையும் நிர்க்குணமான பரமாத்மாவையும் அறிகிறதேயில்லை. அதனாலேதான், இதை அறிவில்லாத ஜடமாகச் சொல்லுகின்றார்கள். ஒருகால் அவ்யக்தமானது அறிகிறதானாலும் இருபத்தைந்தாவதாயிருந்துகொண்டு அறியும். இந்தத்ராஷ்டாவான வன் சித்ஜடஸங்காத்பனியிருக்கிறானென்று வேதம் சொல்லுகிறது. ஸங்காத்பனபிரகிருக்கும் காரணத்தால் அவ்யக்தனும் அச்சுதனும் இருப த்தைந்தாமவனுமான மகாத்மாவைப் பிரித்தறியாதவனென்று சொல் லுகிறார்கள் அவ்யக்தமாக அறிவதினாலேயும் அறிகிறவனைச் சொல் லுகின்றார்கள். இவன் களங்கமற்றவனும் ஞானஸ்வரூபனும் எப் பொழுதுமிருப்பவனும் அறியமுடியாதவனுமான இருபத்தாறாமவனை அறிகிறதில்லை. அவன் அந்த இருபத்தைந்தாமவனையும் இருபத் தாறான்காமவனையும் அறிகிறான் ஐயா! பார்க்கப்படுகின்றவர்களும் பார்க்கப்படாதவர்களுமான பிரகிருதிபுருஷர்கள் இருவருமே அவ னால் வியாபிக்கப்பட்டுப் பெரியகாந்தியுடையவர்களாயிருக்கிறார்கள். ஆகையால், அவ்யக்தமும் கேவலமுமான அந்தப்ரம்மம் அறிகின் றது. கேவலமானது இருபத்தைந்தாமவனையும் இருபத்தாறான் காவதையும் பார்க்கிறது. ஆகையால், நிரஷ்டாவானவர் எப்பொ ழுது 'தன்னை, 'நான் வேறானவன்' என்று அறிகிறானோ அப் பொழுது பிரகிருதியுடன் கூடின அவன் அவ்யக்தத்தை அறிகிறவனு கிறான். ராஜஸ்ரேஷ்டனே! எப்பொழுது விஷயங்களாலும் ஸ்வரூபத் தாலும் களங்கமற்ற மேலான அறிவை (அடைந்து) இருபத்தாறுமவனை அறிகின்றானோ அப்பொழுது அப்படியே ஞானரூபனாயிருப்பதை அடைகிறான். பிறகு, அவன் ஸ்ருஷ்டிப்பிரளயதர்மங்களையுடைய அவ் யக்தத்தை விடுகிறான். எப்பொழுது நிர்க்குணஞ்சு குணங்களோடு கூடியதும் ஜடமுமாயிருக்கிற பிரகிருதியை அறிந்தானோ அப்பொ ழுது அவ்யக்தத்தைப் பார்த்ததினால் கேவலத்தினுடைய தர்மத்தை யுடையவனாகிறான். கேவலத்துடன் கலந்து விழுத்தனாகி ஆத்மாவை அடைவான். இவனைத் தத்வமற்றதும் ஜராமரணமற்றதுமான; தத்வ மாகவும் சொல்லுகிறார்கள். [1](பாகைவர்களுடைய) கௌரவத்தைக் கெடுப்பவனே! தத்வங்களாயடுத்ததினால் இவன் தத்வங்களையுடைய

1 'ஸத்துக்களுக்கு மரியாதையளிப்பவனே' என்றும் கொள்ளலாம்.

வனுகமாட்டான். வித்வான்கள் இருபத்தைந்து தத்வங்களைச் சொல்லுகிறார்கள். ஐயா! இவன் தத்வமுடையவனே அல்லன். புத்திமானுனு இவன் தத்வமற்றவனே. ப்ராஜ்ஞனும் ஜராமரணமற்றவனும், 'இருபத்தாறுமவன் நான்' என்று கொள்ளப்பட்டவனுமான இவன் புத்தி விருத்திக்கு விஷயமாயிருக்கும் தின்மையானதத்வத்தைச் சீக்கிரம் விடுகிறான். புத்திவிருத்தியுடன் கூடாத திரஷ்டாவானவன் கேவல ஸ்வபாவமான பலத்தினுலேயே பேரறிவுவடிவமான இருபத்தாறும வனுடன் ஸமபாவத்தை அடைகிறான். ஸாங்கியம் சுருதி இவைகளின் உதாரணத்தைக்கொண்டு இவ்விதம் பலவாயிருத்தலென்று சொல்லப்பட்டது. புத்தியினல் அறியாதபொழுது சேதனனுடன் சேர்ந்த இருபத்தைந்தாமவனுக்கு ஒருவனுயிருக்கும் தன்மை ஏற்படுகிறது. மிதிலாதிபனே! இவன் அறிகிறவனுகி ஜடத்துடன் ஸமபாவத்தை அடைகிறபொழுது சேர்ச்கையைத தர்மமாகவுடையவனுகிறான். அரசனே! சேர்க்கையற்ற ஸ்வரூபத்தையுடையவனும் ஜனனமில்லாதவனும் வியாபகனுமான இருபத்தாறுமவனை அடைந்து சேர்க்கையில்லாதஸ்வரூபமுடையவனுகிறான். ஓ! பெரியபாக்கியமுடையவனே! வியாபகனான ஜீவன் இருபத்துநான்காவதான இந்த அவ்யக்தத்தை அறிகிறபொழுது இருபத்தாறுமவனை நன்முக அறிந்து அவ்யக்தத்தை விட்டுவிடுகிறான். ஓ! குற்றமற்றவனே! உனக்குச் சுருதியின் உதாரணத்தினுலே இந்த ஜடமான பிரகிருதியும் ஞாதாவானஜீவனும் ஞானரூபமான பிரம்மமும் உள்ளபடி சொல்லப்பட்டன. சாஸ்திரத்தில் திருஷ்டியுள்ளவர்களால் அநேகத்தன்மையும் ஐக்யமுமி இவ்வளவாகப் பார்க்கத்தக்கன அத்திப்பழமும் அதனுள்ளிருக்கும் கீடமும்போலவே இருபதுதுநான்காவதற்கும் இருபத்தைந்தாவதற்கும் பேதம். மத்ஸ்யத்துக்கும் ஜலத்துக்கும்போலவே இவைகளுக்கும் பேதமானது அறியப்படுகிறது. இப்படிப்போலவே இவைகளுக்கு அனேகத்தன்மையும் ஏகத்தன்மையும் அறியத்தக்கன. அவ்யக்தஞானமென்றுபெயருடைய இதுதான் 'இருபத்தைந்தாமவனுக்கு மோக்ஷமென்று சொல்லப்பட்டது. தேகங்களிலிருக்கிற இவன் அவ்யக்தவிஷயத்திலிருந்தும் விடுவிக்கத்தக்கவனென்று சொலலுகிறார்கள். அப்படிப்பட்ட இவன் இவ்விதம் விடுபடுவான். வேறுவிதமானல் விடுபடானென்பது உறுதி. இவன் பரமாத்மாவோடு சேர்ந்து பரமாத்மாவினுடைய தர்மத்தையுடையவனுகிறான்; சுத்தனுடன் சேர்ந்து விசுத்தனுடைய தர்மமுடையவனுகிறான். அவன் ஞானரூபனுடன்சேர்ந்து ஞானரூபனுகிறான். ஓ! புருஷஸ்ரேஷ்

டனே! முக்தனுடன்சேர்ந்து முக்தனுடையதர்மத்தையுடையவனு கிறான். தவிர, வியோகத்தைத்தர்மமாகவுடையவனுடன் சேர்ந்து வியோகதர்மமுடையவனுகிறான். இகத்தில் மோகூமுடையவனுடன் சேர்ந்து மோகூமுடையவனும் சுத்ததர்மமுடையவனும் சுசியும் அளவற்றபிரகாசமுடையவனுமாகிறான். நிர்மலமான ஆத்மாவுடன் சேர்ந்து நிர்மலமான ஆத்மாவாகிறான் கேவலனுடன்சேர்ந்து கேவ லாத்மாவாகிறான்., சுதந்திரனோடு சேர்ந்து சுதந்திரத்தன்மையை அடைந்து சுதந்திரனாகிறான் மகாராஜனே! யதார்த்தமான தத் வத்தையும் சொல்வதிலுண்டான பயனையும் மாத்ஸரியமில்லா மல், தெரிந்துகொண்டு உண்மையான தும் எப்பொழுதுமிருப்ப தும் மிகவும் சுத்தமும் எல்லாவற்றிற்கும் ஆதியுமான இந் தப் பிரம்மமானது என்னால் உனக்குச்சொல்லப்பட்டது ஓ! அரசனே! பரமமும் அறிவுள்ளவனுக்கு, விசேஷமான அறிவிற்குக்காரணமும் நல்லபோதநிமித்தம் வணங்கினவனுக்குச் சொல்லப்பட்டதுமான இதை நீ [1]வேதத்தில் நிஷ்டையில்லாதவனுக் குச் சொல்லக்கூடாது அப்படியே இது அஸத்யபுத்தியுடையவ னுக்கும் சொல்லத்தக்கதில்லை. ரகஸ்யமாக வஞ்சிக்கிறவனுக்கும் [2]மனந்தளர்ந்தவனுக்கும் கோணலானபுத்தியுள்ளவனுக்கும் சொல் லக்கூடாது. தான் பண்டிதனென்கிற எண்ணத்தால் பிறருக்குத் தாபத்தைச்செய்கிறவனுக்கும் சொல்லக்கூடாது உன்னுலே உப தேசிக்கப்படத்தக்கவனைத் தெரிந்துகொள் மனுஷ்யர்களுள் எப்பொழு தும் ப்ரத்தையுள்ளவனும் நற்குணங்களுள்ளவனும் பிறரை அபவாதம் சொல்லாதவனும் சுத்தமானயோகமுடையவனும் அறிவுடையவ னும் [3]விஹிதகர்மத்தைசெய்கிறவனும் (ஸுகதுக்கங்களை) ஸஹிப் பவனும் ஹிதனும் சுத்தமான சீலமுடையவனும் விஹிதகர்மத்தில் பிரியமுடையவனும் விசேஷமாக வாதம் செய்யாதவனும் அதிகமாக அத்யயனம் செய்தவனும் அறிகிறவனும் அடக்கமும் பொறுமையு முடையவனும் ஓரிடத்தில் மனத்தையடக்குவதில் ஸமர்த்தனுமா யிருப்பவனுக்கே சொல்லத்தக்கது இந்தக்குணங்கள் மிகவும் குறைந்தவனிடத்தில் மிகவும் சுத்தமான இந்தப்பரம்மமானது கொடுக்கத்தக்கதில்லையென்று சொல்லுகின்றார்கள். அப்படிப்பட்ட வனிடம் செய்யப்பட்டது அபாத்திரதானமானதால் தர்மத்தைச் சொன்னவனுக்கு ச்ரேயஸைக்கொடாது ஒருவன் ரத்தினங்களால்

---

1 வேதார்த்தானுஷ்டானம். 2 'க்லீப' என்பது மூலம்.
3 'குருசொல்லியபடிசெய்கிறவன்' என்றும் கொள்ளலாம்.

நிறைந்த இந்தப்பூமிமுழுமையும் கொடுப்பதனாலும் விரதமில்லாத வனுக்கு இது கொடுக்கத்தக்கதில்லை. ஓ! அரசனே! ஸ்ரேஷ்டமான இது இந்திரியங்களை ஜயித்தவனுக்கு நீ கொடுக்கக்கூடியது. ஓ! கராளனே! உனக்குச் சிறிதும் பயம்வேண்டாம். நீ இப்பொழுது இந்தப்பரப்ரம்மத்தைக் கேட்டாய். ஓ! அரசனே! உள்ளபடி என்னால் சொல்லப்பட்டது. ஸ்ரேஷ்டமும் பரிசுத்தமும் சிறிதும்சோகமில்லாததும் ஆதிகடுவில்லாததும் ஜனனமரணமற்ற தும் கெடுதலில்லாததும் பயமில்லாததும் மங்களமும் எல்லா ஞானத்திற்கும் உண்மையான விஷயமுமான இந்தப்பிரம்மத்தை அறிந்து பிரத்யக்ஷமாகப்பார்த்து இப்பொழுதாவது மோகத்தை விடு. ஓ! நரஸ்ரேஷ்டனே! இப்பொழுது உன்னால் என்னிடமிருந்து அடையப்பட்டதுபோலவே நான் ஸநாதனரும் ப்ரம்மத்தை ஆராதிக்கிறவரும் உக்ரமானதேஜஸையுடையவருமான ஹிரண்யகர்ப பரை முயற்சியுடன்மகிழ்வித்து அவரிடமிருந்து ஸநாதனமான இந்தப் பிரம்மத்தை அடைந்தேன். ஓ! நரஸ்ரேஷ்டனே! நீ என்னைக்கேட்ட படியே நான் இதனை உனக்குச்சொன்னேன். ஓ! அரசனே! மோக்ஷ. வித்துக்கெல்லாம் பரமஸாதனமான பெரியஞானமானது என்னால பிர ம்மாவினிடமிருந்து அடையப்பட்டது' என்று சொன்னர். மஹாராஜ னே! இருபத்தைந்தாமவன் எதைஅடைந்து மறுபடி திரும்புகிற தில்லையோ அந்தப்பரப்ரம்மமானது பரமரிஷியானவஸிஷ்டருடைய உதாரணத்தைக்கொண்டு சொல்லப்பட்டது. மேலானப்ரம்மஞானத் தையடைந்து மறுபடிதிரும்புவானால் ஞாதாவானவன் ஜராமரண மற்றபிரம்மத்தை உள்ளபடி அறியவில்லை. ஐயா! அரசனே! தேவரிஷியான நாரதரிடமிருந்துகேட்டு மோக்ஷத்தையளிக்கின்ற சிறந்தஇந்தஞானமானது என்னால் உனக்கு உள்ளபடி சொல்லப்பட் டது. ஹிரண்யகர்ப்பரிடமிருந்தும் மஹாத்மாவான வஸிஷ்டமுனிவ ரால் அடையப்பட்டது. முனிசிகாமணியாகியவஸிஷ்டரிடமிருந்து இதை நாரதரடைந்தார். நாரதரிடமிருந்தும் ஸநாதனமான இந்தப் பிரம்மமானது என்னால் அறியப்பட்டது. கௌரவர்களிற்சிறந்தவனே! நீ இந்தப்பரமபதத்தைக்கேட்டு இனி சோகத்தையடையாதே. க்ஷரா க்ஷரங்களை அறிந்தவனுக்குப் பயமில்லை. அரசனே! இதைஅறியாத வனுக்குப் பயமுண்டு. மூடபுத்தியுடையவன் அறியாமையினாலே அடிக்கடி துன்பத்தை அடைவான். மரித்தபின் மரணத்தைமுடி வாகவுடைய அநேகமாயிரம்ஜன்மங்களை அடைகின்றான். தேவலோ கத்தையும் (பசுமுதலான) விலங்குஜாதியையும் மனிதஜன்மத்தையும்

அடைகிறான். நாளடைவில் சுத்தியை அடைந்தால் அந்தச்சுத்தியி னாலே அவன் அகாதமான இந்தஅஜ்ஞானமாகிற ஸமுத்திரத்தினின் றும் கரையேறி மேலானமங்களத்தை அடைகின்றான். பாரதனே! பிராணிகள் ஒவ்வொருநாளும் முழுகுகின்ற அந்தஅஜ்ஞானக்கட லானது கோரமும், அகாதமும், ஸ்பஷ்டமில்லாததுமாகச சொல்லப் படுகிறது. வேந்தனே! அகாதமும் ஸ்பஷ்டமில்லாததும் ஸநாதனமு மான அஜ்ஞானஸமுத்திரத்திலிருந்து மனமேறிவிட்டமையால் நீ ராஜஸில்லாதவனும் காமஸில்லாதவனுமாயிருக்கிறாய்

மூன்றூற்றுப்பதினொன்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஒருமனிவர் நன்மைக்குரியவழியை வஸுமனுக்குச் சொல்லியது.)

ஜனகருடைய புத்திரனை ஒருவன் வேட்டையாடிக்கொண்டு நிர்ஜனமானஒருவனத்தில் ப்ருகுவினுடைய வம்சத்திற்பிறந்த பிராம் மணர்ரேஷ்டரான ஒருமுனிவரைக் கண்டான் வஸுமானென்கிற (அவன்) உட்கார்ந்திருக்கிற அந்த முனிவரைத் தலையால்வணங்கி அரு கிலிருந்து அவரால் அனுமதிகொடுக்கப்பெற்று, 'ஓ! பகவானே! நில யில்லாததேகத்தில் காமதத்தின்வசத்திலிருக்கின்றபுருஷனுக்கு இவ் வுலகிலும் பரலோகத்திலும் எது [1]நன்மையாகும்?' என்றுவினவினான். பெரியதவமுடையமகாத்மாவானவர் பூஜிக்கப் ப்ரஸ்னஞ் செய்யப்பட்டுப் பிறகு அவனுக்கு நன்மைக்குக்காரணமான பின்வரும் வார்த்தையைச் சொல்லலானார்

'இதத்திலும் பரதத்திலும் மனத்துக்கு விபரீதமாயுள்ளவைகளை விரும்பாமலிருப்பதாலே இந்திரியங்களை அடக்கிய பிராணிகளுக் குப் பிரதிகூலங்களாயிருக்கிறகார்யங்களிலிருந்தும் ஒழிவை அடை. எப்பொழுதும் தர்மம் புருஷர்களுக்கு நன்மையானது. ஸத்துக் களுக்குத் தர்மமே ஆதாரம். ஐயா! ஸ்தாவரஜங்கமங்களோடு கூடிய மூன்றுலகங்களும் தர்மத்தினாலே பிரவிருத்தித்தவைகள் ருஷியா யுள்ளதில் ஆசையுள்ளவனே! காமங்களில்வெறுப்பை ஏன் அடை யவில்லை? தூர்புத்தி கொண்டவனே! தேனைப்பார்க்கிறபோது தவிர (தலைகிதற) விழுவதை கவனிக்கவில்லையே? ஞானத்தின் பயனை விரும்புகிறவன் ஞானத்தில் அப்யாஸம் செய்யவேண்டுவதுபோலத்

1 'ஸ்ரேயஸ்' என்பது மூலம்; 'நன்மை' என்று வருமிடம்தோறும் இவ் வனமே கொள்க.

தர்மத்தின்பயனை விரும்புகிறவன் தர்மத்தில் அப்பியாஸஞ்செய்யவேண்டும். தர்மத்தைவிரும்புகிற அளத்தினுலே மிகவும் சுத்தமானகர்மமானது செய்யஇயலாது. தர்மத்தில்விருப்பமுள்ளஸத்தினுல் செய்யஇயலாதகர்மமும் எளிதிற்செய்யஇயலும். விஷயஸுகத்தில் ஆசையுள்ளவன் காட்டிலிருந்தாலும் நாட்டிலுள்ளவனே. விஷயஸுகத்தை விட்டவன் நாட்டிலிருந்தும் காட்டில்வஸிப்பவனே. நிவிருத்தியிலும் பிரவிருத்தியிலுமுள்ள குணதோஷங்களை நன்றுகத்தெரிந்து மனமொழிமெய்களின் தர்மத்தில் உறுதியுடன் ஸ்ரத்தைவைக்கக்கடவாய். எப்பொழுதும் புண்ணியதேசத்திலும் புண்ணியகாலத்திலும் அஸூயையில்லாமல் ஸாதுக்களான பிராம்மணர்களுக்குப் பிரார்த்தித்து மரியாதைசெய்து மிகுதியாகத் தானம்செய்யக்கடவாய். நல்லவழியில் அடையப்பட்டதைத் தக்கோர்களுக்குக் கொடுக்கவேண்டும். கோபமில்லாம்ல்கொடுத்துப் பிறகு பச்சாத்தாபத்தை அடையாமலிருக்கவேண்டும் கொடுத்ததைச் சொல்லக்கூடாது. துன்பம் செய்யாதவனும் சுசியும் அடக்கமுடையவனும் உண்மைஉரைக்கின்றவனும் நேர்வழியிலிருக்கின்றவனும் [1]பிறப்பினுலும் செய்கையினுலும் மிகவும் சுத்தனும் வேதவித்துமாயிருக்கிறப்ராம்மணன் தக்கபாத்திரமாவான். ஸம்ஸ்கரிக்கப்பட்டவளும் ஒருவனுக்கே பத்தியும் (ஸமான) ஜாதியுளவளுமாயிருப்பவள் இவ்விடத்தில் சுத்தமானபிறப்புக்கிடமானவள் என்று ஒப்புக்கொள்ளபடுகிறுள். நிக்குயஜுஸ்ஸாமங்களையுடையவனும் வித்வானும (யஜனமுதலான) ஆறுகர்மங்களையுடையவனுமானவன் பாத்ரமாகச் சொல்லப்படுகிறுன். [2]பாத்ர விசேஷத்தினுலும் [3]அகர்மவிசேஷத்தினுலும் தேசகாலங்களைப்பார்த்தும் அந்த அந்த மனிதனைக் குறித்து அதுவே தர்மமாகும்; அதுவே அதர்மமுமாகும். ஒருமனிதன் விளையாட்டினுல் (உண்டான) அற்பமான தூளியைத் (தன்னுடைய) சரீரத்திலிருந்து துடைப்பதுபோல மிகுந்த முயற்சியினுல் பெரியபாவஙவிருத்தியைச் செய்யவேண்டும். [3]விரேசனம்செய்தவனுக்கு நெய் நல்ல மருந்தாவதுபோலத் தோஷத்தைப் பரிகரித்துக்கொண்டவனுக்குத் தர்மமானது மரணத்திறகுப் பிறகு ஸுகத்தைக் கொடுக்கும். எல்லாப்பிராணிகளிடத்திலும் மனம் சுபமாயும் அசுபமாயுமிருக்கிறது. (ஆகையால்,) மனத்தை அசுபங்களிலிருந்தும்திருப்பிச சுபங்களிலேயே நிலைக்கச்செய்து எல்லாவிஷயத்தி

1 'யோநிகர்மவிசுத்தः' என்பது மூலம்.

2 தனக்கு விதிக்கப்படாத கர்மம்.

3 எண்ணெயையுண்டதனுல் மல்சோதனம்.

லும் எல்லாராலும்செய்யப்படும் எல்லாவற்றையும் கௌரவிக்கக்கடவாய். உனக்குவிருப்பமான ஸ்வதர்மத்தை விரும்பியவண்ணமே செய். நிலையில்லாத மனமுடையவனே! நிலையில் நில்லு. தூர்ப்புத்திகொண்டவனே! புத்திமானைக் இருக்கக்கடவாய். சாந்தகுணமில்லாதவனே! நீ சாந்தகுணமுள்ளவனாயிருக்கக்கடவாய். பிரஜ்ஞையில்லாதவனே! பிராஜ்ஞன்போல நட. கூடவேஸஞ்சரிக்கிற ஞானஜ்ஞரியினால் இகத்திலும் பரத்திலும் நன்மையைத்தரத்தக்கஉபாயத்தை அடையலாம். அதற்குமூலம் பரமானமேனதைரியம். தைரியமில்லாத மஹாபிஷனென்கிறராஜரிஷி ஸ்வர்க்கத்திலிருந்து விழுந்தான். புண்ணியம் நசித்தும் யயாதி தைரியத்தினால் லோகங்களை அடைந்தான். தவமுடையவர்களும் தர்மவான்களுமான வித்வான்களுடையசேர்க்கையால் விரிவானபுத்தியை அடைவாய். அப்படியே நன்மையையும் அடைவாய்' என்றுசொன்னர். அந்தவஸுமான் முனிவருடைய அந்தவார்த்தையைக்கேட்டு நல்லஸ்வபாவத்தையடைந்து காமத்திலிருந்து மனத்தைத்திருப்பித் தர்மத்தில் புத்தியைச செலுத்தினன்'' என்று சொன்னர்.

மூன்றூற்றுப்பதினேந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

———:o:———

(யாஜ்ஞவல்கீயர் பிராகிருதிகளையும் படைப்புமுறையையும் ஜனகருக்குச் சொல்லியது)

யுதிஷ்டிரர், " தர்மாதர்மங்களினின்றும்விடுபட்டதும் ஸகலஸங்கதேகத்திலிருந்தும் விடுபட்டதும் ஜனனமரணங்களிலிருந்தும் விடுபட்டதும் புண்ணியபாபங்களிலிருந்தும் விடுபட்டதும் மங்களமானதும் எப்பொழுதும் பயமில்லாததும் எப்பொழுதுமவிகாரமில்லாததும் அழிவற்றதும் சுகியானதும் எப்பொழுதும் ஆயாஸமில்லாததுமானது எதுவோ அதை நீர் சொல்லவேண்டும்'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"பாரதனே! இந்தவிஷயத்தில் யாஜ்ஞவல்கியருக்கும் ஜனகருக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழையசரித்திரத்தை உனக்குச் சொல்லுவேன். பெரியபுகழ்பெற்றவரும் வேதவிதிகளை அறிந்தவர்களுக்கெல்லாம் மேலானவரும் தேவராதனுடைய புத்திரருமான ஜனகராஜர் முனிஸ்ரேஷ்டரான யாஜ்ஞவல்கியரைநோக்கி, 'ஓ! பிரம்மரிஷியே!

இந்திரியங்கள் எத்தனை? பிரகிருதிகள் எவ்வளவு? அவ்யக்தமென்பது எது? அதைக்காட்டிலும் மேலான பரப்ரம்மம் எது? ஓ! ப்ராம்மணஸ்ரேஷ்டரே! உம்முடைய அனுக்ரகத்தைவிரும்புகிற எனக்கு (இவைகளையும்) உற்பத்தியையும் நாசத்தையும் காலத்தின்கணக்கையும் சொல்லவேண்டும். அறியாமையினால் கேட்கிறேன். நீர் ஞானமயமானவரே. ஆதையால், நான் இந்த எல்லாவற்றையும் சந்தேகமறக் கேட்கவிரும்புகிறேன்' என்று வினவ, யாஜ்ஞவல்க்யர் சொல்லலானார். 'நீ னெவிய யோகிகளுடையஞானத்தையும் ஸாங்கியர்களுடைய ஞானத்தையும் விசேஷமாகச் சொல்லுகிறேன்; கேள். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. நீ என்னை(பரிக்ஷித்து)அறியவிரும்புகிறாய். ஆனாலும், கேட்டால் சொல்லவேண்டுமென்பது பழமையான தர்மம். எட்டுப்பிரகிருதிகளும் பதினாறுவிகாரங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த எட்டுப்பிரகிருதிகளுள் ஆத்மவிஷயத்தில் சிந்தையுள்ளவர்கள் ஏழுகளை வ்யக்தங்களாகச சொலலுகின்றார்கள். [1]அவ்யக்தம், மஹத்தத்வம், அஹங்காரம், பிருதிவீ, வாயு, ஆகாயம், அப்பு, ஐந்தாவதானதேயு இந்த எட்டும் பிரகிருதிகள். விகாரங்களையும் என்னிடமிருந்து கேள் ராஜேந்திரனே! ஸ்ரோத்ரம், த்வக்கு, சக்ஷுஸ், ரஸனம், ஐந்தாவதானகிராணம், சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம், வாக்கு, பாணிகள், பாதங்கள், பாயு, குறி ஆகிய இவை ஐந்து மஹாபூதங்களினுண்டான விசேஷங்கள். ஓ! மிதிலாபதியே! ஆனால், ஆத்மாவின்கதியைச் சிந்திக்கின்றவர்களும் தத்வபுத்தியில்லாதார்த்தர்களுமான நீயும் மற்றவர்களுமான வித்வான்கள் [2]விசேஷங்களுடன்கூடிய ஞானேந்திரியங்களையும் பதினோராவதான மனத்தையும் (விகாரங்களாகச) சொல்லுகின்றீர்கள். ஓ! அரசனே! அவ்யக்தத்தினின்றும் [3]மஹானனாகமானது உண்டாயிருக்கின்றது. பண்டிதர்கள் இந்த முதல்ஸ்ருஷ்டியைப் பிரதானமென்று சொல்லுகிறார்கள். அரசனே! பின்னும் மஹத்திலிருந்தும் அஹங்காரம் உண்டாகிறது. இரண்டாவதுஸ்ருஷ்டியான இது புத்திஸ்வரூபமாகக் கருதப்பட்டதென்று சொல்லுகிறார்கள். அஹங்காரத்திலிருந்தும் பூதங்களுடையும் குணமயமானமனம் உண்டாயிற்று இந்தமூன்றாவது ஸ்ருஷ்டியானது ஆகங்காரிகமென்று சொல்லப்படுகிறது ஓ! அரசனே! மனத்திலிருந்து மஹாபூதங்களுண்டாயின. இந்த நான்காவதுஸ்ருஷ்டியை ஸங்

---

1 ப்ரதானம் 2 காரியங்கள்.

3 ஹிரண்யகர்ப்பரின் உபாதியான மஹத்தத்வம்.

கல்பரூபமான மானஸமென்று சொல்லுகின்றார்கள். சப்தஸ்பரிச ரூபரஸகந்தம் என்கிற ஐந்தாவதுஸ்ருஷ்டியைப் பூதங்களைச் சிந்திக்கின்றவர்கள பௌதிகமென்று சொல்லுகின்றார்கள். ஸ்ரோத்ரம், த்வக்கு, சக்ஷுஸ், ரஸனம், கிராணம் என்கிற ஆறாவது ஸ்ருஷ்டி அனேகசிந்தைகளின் ரூபமாகக் கருதப்பட்டதென்று சொல்லுகிறார்கள். ஓ! அரசனே! ஸ்ரோத்ரமுதலிய (ஞானேந்திரியங்களுக்குக்) கீழிருக்கிறஇந்திரியஸமூகமானது உண்டாயிற்று. எழாவது ஸ்ருஷ்டி ஐந்திரியமாகக் கருதபடுகிறதென்று சொல்லுகிறார்கள் வேந்தனே! பிறகு, மேலேசெல்லும்பிராணவாயுவும் குறுக்காகசெல்லும் வியான உதான ஸமானனும் உண்டாயின. எட்டாவது ஸ்ருஷ்டியான இது (விசேஷமில்லாமல் ருஜுவான விருத்தியுடன் கூடியிருப்பதால்) ஆர்ஜவமாகக் கருதப்படுகிறதென்று சொல்லுகின்றார்கள். அரசனே! பிறகு, கீழேயுள்ள பிரவாகமான அபானவாயுவும் கீழே குறுக்கேசெல்லும் வியானஸமானஉதானனும் உண்டாயின ஒன்பதாவது ஸ்ருஷ்டியானஇதுவும் ஆர்ஜவமென்று வித்வான்கள சொல்லுகின்றனர். பூபால! இந்த ஒன்பதுஸ்ருஷ்டிகளும் இருபதுதாகான்கு தத்வங்களும் வேதத்தில்சொன்னபடி சொல்லபட்டன. மஹாராஜனே! இதற்கு மேல் உள்ளபடி மஹரிமாக்களால் கிரமமாகசசொல்லப்பட்ட இந்தக் குணத்தினுடைய காலக்கணக்கை என்னிடமிருந்து அறி.

மூன்றூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(யாஜ்ஞவல்கியர் அவ்யக்தமுதலியவற்றின் காலக்கணக்கையும் ஸ்ருஷ்டியையும் ஜனகருக்குச் சொல்லியது)

அரசனே! (உபாஸனத்தினால்) அவ்யக்தத்தன்மையடைந்தவருடையகாலத்தின்கணக்கை என்னிடமிருந்து அறி. அவ்யக்தருக்குப் பதினாயிரம்கல்பங்கள் பகலாகச சொல்லப்படுகின்றன. ராத்திரியும் இவ்வளவே. ஓ! அரசனே (பிறகு) அவர் விழித்துக்கொண்டு முதலில் எல்லாப்பிராணிகளுக்கும் ஜீவனமாயிருக்கிற [1]ஒஷதியையே படைக்கிறார். பிறகு, ஸர்வாத்மையமான [2]அண்டத்திலிருந்தும் உண்டான பிரம்மாவைப் படைத்தார் அவர் எல்லாப்பிராணிகளுக்

1 அன்னத்தின்காரியமான மனம் என்பது பழையவுரை.

2 பிரம்மாண்டம்.

கும்சரீரமென்று கேட்டிருக்கிறோம். அரசனே! 'பிரஜைகளுக்குப் பதியும் மகாமுனியுமான பிரம்மாவானவர் ஒருவருஷம் அண்டத்தில் வலித்து வெளியில்வந்து ஸ்வர்க்கம்பிருதிவி இவைகளுள் முழுதும் பிருதிவியான ஒருபாதியையும் ஸ்வர்க்கமான ஒருபாதியையும் சேர்த்தார்' என்று வேதங்கள் கூறுகின்றன. பிரபுவான பிரம்மா அவ்விரண்டு பாதிகளுடையநடுவை ஆகாயமாகச் செய்தார். இவருடைய கணக்கையும் வேதவேதாங்கங்களின் கரைகண்டவர்கள் பகல் ராலி லொருபாகம் குறைவான பதினுபிரம் கல்பங்களென்று சொல்லுகிறார்கள். ஆத்மத்யானஞ்செயகின்றவர்கள் இவருடைய ராத்திரியையும் இவ்வளவாகச் சொல்லுகின்றார்கள். ஞானவானான அவர் முதலில் தேஜோமயமான அஹங்காரமென்கிற [1]பூதத்தைப் படைக்கிறார். மகரிஷியான அவர் முதலில் தம் சரீரத்திலிருந்தும் வேறுகான்கு புத்திரர்களையும் படைக்கிறார். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! அவர்கள் பித்ருக்களுக்கும் பித்ருக்களாகக் கேட்கப்படுகிறார்கள். தேவர்கள் பிதிருக்களுடைய புத்திரர்கள். ஓ! அரசனே! சராசரங்களான பிராணிகள் தேவர்களால் சூழப்பட்டனவென்று கேட்டிருக்கிறோம். மேலான ஸ்தானத்திலிருக்கிற அஹங்காரம் பிருதிவி, வாயு, ஆகாயம், அப்பு, ஐந்தாவதானதேயு என்னும் ஐந்துவித பூதங்களையும் படைத்தது. மூன்றுவதான ஸ்ருஷ்டியைச செய்கின்ற இந்த அஹங்காரத்தினுடைய ராத்திரியையும் ஐயாயிரம் கற்பங்களாகச சொல்லுகின்றார்கள். பகலும் அவ்வளவாகவே சொல்லப்படுகிறது. ஓ! ராஜஸ்ரேஷ்டனே! சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், ஐந்தாவதான கந்தம் ஆகிய இவை ஐந்து மஹாபூதங்களிலுமுள்ள குணங்கள். ஓ! அரசனே! நாசமற்றவைகளான பிராணிகள் தங்களைச்சூழ்ந்து தங்கள்மனதை அபகரிக்கின்ற அந்தக்குணங்களால் தினந்தோறும் ஒன்றைஒன்று விரும்புகின்றன; ஒனறற்கொன்று தீங்கு செய்தலில் பற்றுள்ளவைகளாகின்றன; ஒன்றுக்கொன்று மேலேபோகின்றன; ஒன்றோடொன்று சண்டைசெய்கின்றன; ஒன்றைஒன்று கொல்லுகின்றன; இவ்வுலகிலேயே பசுபக்ஷி முதலான பிறவிகளிலகப்பட்டுச் சுழலுகின்றன. ஓ! அரசனே! [2]இவைகளுக்கும் மனத்திற்கும் பகல் மூவாயிரம் கல்பங்களாகச் சொல்லுகிறார்கள். ராத்திரியும் இவ்வளவே. ஓ! ராஜஸ்ரேஷ்டனே! இந்திரியங்களாலே செய்யப்பட்ட

---

1 ஐந்து பூதங்களுக்கும் காரணமானதால் அஹங்காரமென்கிற பூதம் என்றது.

2 'இவைகள்' என்பது பூதங்கள், அல்லது குணங்கள்.

எல்லாவற்றையும் மன்னிசெய்கின்றது இவைகளில் இந்திரியங்கள் யார்க்கிறதில்லை. மனமே பார்க்கின்றது நேத்திரமானது ரூபங்களே மனத்தினாலேதான் பார்க்கின்றது. (மனம்) நேத்திரத்தாலே பார்க்கின்றதில்லை. மனம் கலங்கியிருக்கும்பொழுது நேத்திரம் பார்க்கிறதாயிருந்தாலும் பார்க்கிறதில்லை ஆனால், எல்லாஇந்திரியங்களும் பார்க்கின்றனவென்று சொல்லுகின்றார்கள் ஓ! அரசனே! மனம் ஒழிவடைந்தபொழுது இந்திரியங்களுக்கு ஒழிவு ஏற்படும் இந்திரியங்கள் ஒழிவடைந்தபொழுது மனத்திற்கு ஒழிவு ஏறபடாது. இவ்விதம் இந்திரியங்கள் மனத்தைப்பிரதானமாகவுடையவைகளென்று கருதவேண்டும். எல்லா இந்திரியங்களுக்கும் மனம் தலைமையாகச் சொல்லப்படுகின்றது மிக்கபுகழுள்ளவனே! இவ்வுலகத்தில் எல்லாபூதங்களும் இந்தமனத்தில் பிரவேசிக்கின்றன.

மூன்றூற்றுப்பதினேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(யாஜ்ஞவல்கியர் பிரளயத்தின்முறையை ஜனகருக்குச் சொல்லியது.)

தத்வங்களுடையஸ்ருஷ்டியின்கணக்கும் காலத்தின்கணக்கும் என்னால் கிரமமாகச சொலலபபட்டன. ஸம்ஹாரத்தையும் என்னிடமிருந்து கேள். ஆதியந்தமற்றவரும் நித்யரும் விகாரமேயில்லாத வருமான பிரம்மதேவர் பிராணிகளே அடிக்கடி ஸ்ருஷ்டிக்கவும் ஸம்ஹரிக்கவும்செய்தார். பகலின்முடிவை அறிந்து ராத்திரியில்நித்திரை செய்யஎண்ணிய பகவானும் அவ்யக்தருமானஅவர் அஹங்காராபிமானியாயிருக்கிற (காலாக்னி) ருத்ரரை அவவிதம் (ஸம்ஹரிக்கும் படி) ஏவினர். பிறகு, ஹிரண்யகர்பரால்ஏவபபட்ட ஆதித்யரூபியான அவர் நூறுயிரம்கிரணங்களுடன் தம்முருவத்தைப் பன்னிரண்டுவிதமாகச்செய்து அக்னிபோல ஜவலித்தார். ஓ! அரசனே! அவர் ஜராயுஜம், அண்டஜம், ஸ்வேதஜம், உத்பிஜஜமென்கிற நான்குவிதமானபிரஜைகளின்ஸமூகத்தைத் தம்முடையதேஜவினால்விரைவில் எரித்தார். இவர் நேத்திரத்தைத்திறந்தவுடன் ஸ்தாவரமும் ஜங்கமமும் நசித்துவிட்டன. பிறகு, பூமியானது நான்குபக்கத்திலும் ஆமைமுதுகிற்குநிகராய்விடுகிறது. அளவற்றபலமுள்ள ருத்ரர் ஜகத்தைஎரித்து

விட்டு வெறுமையான பூமியைப் பிறகு வேகமுள்ள ஜலத்தினுல் சிக்கி ரமாக எங்கும் நிரப்புகிறார். பிறகு, அந்தஜலமானது பிரளயகாலக்கனலை அடைந்து நாசத்தை அடைகிறது. ராஜஸ்ரேஷ்டனே! ஜலமானது நாசத்தையடைந்தபொழுது அக்னியானது வீசர்ந்து மிகவும்ஜ்வலிக்கின்றது. அளவற்றஅதிகபலத்தையுடையதும் ஜ்வலிக்கிறதும் எல்லாப்பிராணிகளுக்கும் உஷ்ணமானதும் ஏழுஜ்வாலைகளையுடையதுமான அந்தஅக்னியைப் பிறகு [1]எட்டுவிதமானரூபமும் பலமும் அளவற்றவேகமுடைய வாயுபகவான் கீழும் மேலும் குறுக்குமாக ஸஞ்சரித்துக்கொண்டு சீக்கிரம்பக்ஷித்துவிட்டான். [2]நிகரற்றபலமுடையவனும் பயங்கரனுமான அந்தவாயுவை ஆகாயம் விழுங்கியது. ஆகாயத்தையும் எங்கும்சஞ்சரிக்கின்ற ஸ்வபாவமுடையமனமானது பெரியசப்தத்தைசெய்துகொண்டு விழுங்குகின்றது எல்லாரூபமாயும் பிரஜைகளுக்குப்பதியாயுமிருக்கிறஅஹங்காரமானது மனத்தை விழுங்குகிறது. அஹங்காரமானது சென்றவைநிகழ்பவைவருபவைகளை அறிந்தவனும் மஹானுமான ஆதமாவாகிறது. நிகரற்ற ஸ்வரூபமுடையவனும் எல்லாமாயிருப்பவனும் மஹானுமான அந்த ஆத்மாவையும் பிரஜைகளுக்குபதியானசம்புவானவர் விழுங்குகிறார். அணிமா, லகிமா, ப்ராப்திமுதலானவிபூதிகளுடையவரும் நியமனசக்தியுடையவரும் ஜ்யோதிஸ்வரூபரும் நாசமற்றவரும் எங்கும்கைகாலுகளுடையவரும் எங்கும் நேத்திரமும் தலையும் முகமுமுடையவரும் எங்கும்காதுகளுடையவரும் எங்கும்வியாபித்திருக்கிறவரும் எல்லாப் பிராணிகளுக்கும் ஹிருதயத்திலிப்பவரும் ஒருபாகத்தினுல்கட்டை விரலளவுடையவரும் அணுவாயிருப்பவரும் அளவற்றவரும் மஹராத்மாவுமான அந்தஈஸ்வரர் எல்லாவற்றையும் விழுங்குகிறார். பிறகு, குறைவும் நாசமும் விகாரமுமற்றவரும் சென்றவையும் இருக்கின்றவையும் வருபவையுமான பிராணிகளைஸ்ருஷ்டிக்கிறவரும் தோஷமில்லாதவருமான அவரை அடைந்து எல்லாம் தன்மயமாகின்றன. ராஜஸ்ரேஷ்டனே! ஸம்ஹாரமானது உள்ளபடி உனக்கு நன்கு சொல்லப்பட்டது. அத்யாதமத்தையும் அதிபூதத்தையும் அதிதெய்வத்தையும் கேள்

---

1 எட்டுத்திக்குகளிலுமிருந்து எட்டுஉருவங்கொண்டு.

2 'மஹாத்மாவென்கிறஹிரண்யகர்ப்பரிடம் லயிக்கிறது' என்றுரைத்தது.

முந்நூற்றிப்பதினேட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(யாஜ்ஞவல்க்கியர் அத்யாத்மமுபயவற்றையும் முந்நூணங்களையும் ஜனகருக்குச் சொல்லியது.)

தத்வங்களைத் தெரிவிக்கின்றவதியர்கள், 'பாதங்கள் அத்யாத்மம்; மார்க்கம் அதிபூதம்; விஷ்ணு அதிதெய்வம்' என்றுசொல்லுகின்றனர் உள்ளபடி தத்துவார்த்தங்களைத் தெரிவிக்கிறவர்கள், 'பாயு அத்யாத்மம்; விடுதல் அதிபூதம்; மித்திரன் அதிதெய்வம்' என்று சொல்லுகின்றனர் உள்ளபடி யோகத்தைத் தெரிவிக்கின்றவர்கள், 'குறி அத்யாத்மம்; ஆனந்தம் அதிபூதம்; பிரஜாபதி அதிதெய்வம்' என்று சொல்லுகின்றனர். ஸாங்கியபடி தெரிவிக்கின்றவர்கள், 'கைகள் அத்யாத்மம்; செய்யக்கூடியது அதிபூதம்; இந்திரன் அதிதெய்வம்' என்றனர். வேதத்தை அனுஸரித்துத் தெரிவிக்கின்றவர்கள், 'வாக்கு அத்யாத்மம்; சொல்லவேண்டிய விஷயம் அதிபூதம்; அக்னி அதிதெய்வம்' என்றனர். வேதத்தை அனுஸரித்துத தெரிவிக்கின்றவர்கள், 'நேத்திரம் அத்யாத்மம்; ரூபம் அதிபூதம்; ஸூர்யன் அதிதெய்வம்' என்றுசொல்லுகின்றனர்கள். வேதத்தை அனுஸரித்துச் சொல்லுகின்றவர்கள், 'ப்ரோத்ரம் அத்யாத்மம்; சப்தம் அதிபூதம்; திக்குக்கள் அதிதெய்வம்' என்று சொல்லுகின்றனர்கள். வேதத்தை அனுஸரித்துச்சொல்லுகிறவர்கள, 'ரஸனை அத்யாத்மம்; ரஸம் அதிபூதம்; அப்பு அதிதெய்வம்' என்றுசொல்லுகிறார்கள வேதத்தை யனுஸரித்துசசொல்லுகிறவர்கள, 'சரீரத்தில் கிராணம் அதயாத்மம்; கந்தம் அதிபூதம்; பிருதிவி அதிதெய்வம்' என்றுகூறுகிறார்கள். தத்வஞானத்தில்ஸமர்த்தர்கள், 'தூவக்கு அத்யாத்மம்; ஸ்பரிசம் அதிபூதம்; வாயு அதிதெய்வம்' என்று சொல்லுகிறார்கள. உள்ளபடி சாஸ்திரத்தில் ஸமர்த்தர்கள், 'மனம் அத்யாத்மம்; நினைக்கக்கூடியவிஷயம் அதிபூதம், சந்திரன் அதிதெய்வம்' என்றுசொல்லுகிறார்கள். தத்வங்களைத் தெரிவித்கின்றவர்கள், 'அஹங்காரம் அத்யாத்மம்; கர்மம் அதிபூதம்; புத்தி அதிதெய்வம்' என்றுசொல்லுகிறார்கள். உள்ளபடி தெரிவிக்கின்றவர்கள், 'புத்தி அத்யாத்மம்; அறியக்கூடியவிஷயம் அதிபூதம்; க்ஷேத்ரஜ்ஞன் அதிதெய்வம்' என்றுசொல்லுகிறார்கள். தத்வங்களையுணர்ந்த அரசனே! ஸ்ருஷ்டியிலும் ஸ்திதியிலும் முடிவிலும் உள்ளபடி ஸ்பஷ்டமாக

உனக்கு இந்த (தத்வங்களின்) விபூதியானது தெரிவிக்கப்பட்டது. பிரகிருதியானது இஷ்டப்படி ஆத்மாவின் விருப்பத்திலல் க்ரீடைக்காகக் குணங்களை நூறறுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் மிகவும் படைக்கிறது. மானிடர்கள் ஒருதீபத்திலிருந்தும் ஆயிரந்தீபங்களை உண்டுபண்ணுவதுபோலவே பிரகிருதியானது மனிதனுக்கு அநேக குணங்களைச் செய்கிறது. தைரியம், ஆனந்தம், அபிவிருத்தி, பிரீதி, மேலானவிஷயத்தில் விருப்பம், ஸுகம், மனத்தின்சுத்தி, ஆரோக்கியம், ஸந்தோஷம், ப்ரத்தை, எளிமையில்லாமை, பரபரப்பில்லாமை, பொறுமை, ஞாபகசக்தி, ஹிம்ஸைசெய்யாமலிருத்தல், ஸமமாயிருத்தல், உண்மைபுரைத்தல், கடனில்லாமை, நேராயிருத்தல், லஜ்ஜை, சபலமில்லாமை, சரீரசுத்தி, மேன்மை, ஆசாரம், விஷயத்திலாசையில்லாமை, மனத்தில் பரபரப்பில்லாமை, இஷ்டபராபதிகளையும் அநிஷ்டநிவிருத்திகளையும் செய்தகர்மங்களையும் புகழாமலிருத்தல், தானத்தால் பிராணிகளை வசப்படுத்தல், வைராக்கியம், பரோபகாரம், எல்லாப் பிராணிகளிடத்திலும் தயை இவைகள் ஸத்வத்தின் குணங்களாகக் கருதப்பட்டன. [1]அழகு, செல்வம், கலகம், ஈயாமை, தண்பயில்லாமை, ஸுகதுக்கங்களை அடுத்தது ஸேவித்தல், பிறர்தாஷ்ணயில் விருப்பம், விவாதங்களைச் செய்தல், அகங்காரம், பெரியோர்களைப் பூஜியாமலிருத்தல், கவலை, விரோதத்தைப்பாராட்டல், பரிதாபம், எல்லாவற்றையும் கிரகித்தல், லஜ்ஜையில்லாமை, ஒழுங்கில்லாமை, பேதப்படுத்தல், கடுமையாயிருத்தல், காமம், குரோதம், மதம், கர்வம், துவேஷம, அபிமானம் இவைகள் ரஜஸின்குணங்களாகச் சொல்லப்பட்டன. தாமஸகுணங்களுடைய ஸமூகங்களைச சொல்லுகிறேன்; ஞாபகத்தில் வைக்கக்கடவாய். அவை மோகம், பிரகாசமில்லாமை, தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம் என்பன. மரணம் அந்ததாமிஸ்ரமாகவும் குரோதம் தாமிஸ்ரமாகவும் சொல்லப்படுகின்றன. தமஸின் அடையாளங்களாவன: பகுத்தறிவுதலானவைகளில் அபிருசி, போஜனங்களில் திருப்தியடையாமை, பானங்களில் திருப்தியடையாமை, எப்பொழுதும் வஸ்திரந்திலும் கந்தத்திலும் கேளிகளிலும் சயனங்களிலும் ஆஸனங்களிலும் பகல்தூக்கத்திலும் விவாதத்திலும் அஜாக்ரதைகளிலும் பறறுதல், அறியாமையால் நடனவாத்தியகானங்களில் பற்றுதலுடனிருத்தல், விசேஷமானதர்மங்களில் துவேஷம் ஆகிய தமஸின் குணங்களான இவைகளே.

---

1 இங்கு இரண்டுசொற்கள் விடப்பட்டன.

முந்நூற்றுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

———:o:———

(யாஜ்ஞவல்க்கியர் தணங்கஞக்தும் வினகஞக்தும்உரியகதிகளை ஜனகருக்குச்சொல்லியது.)

புருஷச்ரேஷ்டனே! பிரகிருதியினுடைய இந்தமூன்றுகுணங்களும் எப்பொழுதும் எல்லாஉலகத்தையும்விட்டு விலகாமலிருக்கின்றன. அவ்வுக்தருபமானபகவான் பிரகிருதியினுல நாறவிகமும் ஆயிரம் விதமுமாகிறார் இவர் பிரகிருதியினுலே நற்பைத காமாகவே நாறுவிதமாகவும் ஆயிரம்விதமாகவும் தாழ்ருபிரம்விதமாகவும், தோடிக்கணக்காகவும் செய்கிறார் ஆத்மவிசாரம் செய்கின்றவர்கள் ஸத்வகுணமுடையவனுக்கு உத்தமமானஸ்தானத்தையும் ரஜோகுணமுடையவனுக்கு இம்மையில் நடுவானஸ்தானத்தையும் தமோகுணமுடையவனுக்குக் கீழானஸ்தானத்தையும் சொலலுகின்றார்கள். இதில் மனிதன் புண்யமாத்ரத்தினுல் மேலானகதியையும் புண்யபாபங்கள் கலந்ததினுல் மானிடஜன்மத்தையும் பாவமாத்ரத்தினுல தாழ்ந்தகதியையும் அடைவான். ஸத்வம், ரஜஸ், தமஸ்வென்கிற இம்மூன்றனுள் இரண்டின்சேர்க்கையையும் மூன்றின்சேர்க்கையையும் உண்மையாக என்னிடம் கேள். ஸத்வத்தில் ரஜஸும் ரஜஸில் தமஸும் தமஸில் ஸத்வமும் ஸத்வத்தில் அவ்யக்தமும் காணபடுகின்றன. அவ்யக்தனை ஜீவன் ஸத்வத்தோடுகூடிய தேவலோகத்தை அடைவான் ரஜஸ்ஸத்வமிவைகளோடுகூடினவன் மனிதர்களிடத்தில் பிறக்கிறான். ரஜஸ்தமஸ் இவைகளையுடையவன் விலங்குப்பிறவிகளில் பிறக்கின்றான் ராஜஸதாமஸ குணங்களோடுகூடிய ஸத்வங்களால் மனுஷ்யஜன்மத்தை அடைவான் புண்யபாவங்கள் விலகினபெரியோர்களுக்கு நிலைத்தும் விகாரமில்லாததும் குறைவில்லாததும் மரணமற்றதுமான அப்படிப்பட்டஸ்தானத்தைச் சொல்லுகிறார்கள். ஞானிகளுக்கு எப்படுகிற ஸ்தானமானது சிறந்ததும் கெடுதலில்லாததும் கழுவாததும் இந்திரியங்களுக்குப்புலப்படாததும் காரணமற்றதும் ஜனனத்தையும் மரணத்தையும் அஜ்ஞானத்தையும் போக்குகின்றதுமாயிருக்கிறது. ஓ! அரசனே! நீ என்னைக்கேட்ட அவ்யக்தத்திலிருக்கிற பரம்பொருளான பிரம்மம் பிரகிருதியிலிருந்தாலும் அவ்யக்தத்திலிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஓ! அரசனே! பிரகிருதியானது அசேதன

மென்று ஒப்புக்கொளளப்பட்டது. இத்தப்புருமாத்மாவினுலே வியாபிக்கப்பட்டு ஸ்ருஷ்டிக்கவும் ஸம்ஹரிக்கவும்செய்கிறது' என்று சொன்னர்.

ஜனகர், 'சிறந்தஅறிவுள்ள ரிஷிஸ்ரேஷ்டரே! இவ்விரண்டுமே ஆகியந்த மற்றவைகளும் சரீரமற்றவைகளும் அசைவற்றவைகளும் அசைக்கமுடியாத அஸங்கமென்கிறகுணமும், ஸங்கமென்கிறதோஷ முழுள்ளவைகளும் அறியமுடியாதவைகளுமாயிருக்கின்றன. (அப்படியிருக்க) ஒன்று ஜடமென்றும் மற்றொன்று அறிவுடன்கூடின க்ஷேத்ரஜ்ஞனென்றும் எப்படி சொல்லப்பட்டன? ஓ! பிராம்மண ஸ்ரேஷ்டரே! மோக்ஷதர்மத்தை முழுதும் அனுஷ்டிக்கின்றீர். நான் மோக்ஷதர்மமுழுமையையும் உள்ளபடி கேட்கவிரும்புகிறேன். (ஆகையால்,) தத்வமில்லாமலிருப்பவனையும் நிர்க்குணத்தன்மையையும் பிரகிருதியைவிட்டிருப்பதையும் தேகத்தை அடைந்திருக்கின்ற தேவதைகளையும் எனக்கு நன்றாகச சொல்லும். மரணத்தைஅடைந்து சரீரம்விட்டுக்கிளம்பினதேகிக்கு காளடையில் அடையக்கூடியஸ்தானத்தை எனக்குச் செவ்வையாகச் சொல்லும். உள்ளபடி ஸாங்கிய ஞானதையும் தனிமையாகயோகத்தையும் மரணத்தைத்தெரிவிக்கின்ற குறிகளையும் எனக்குச் சொல்லவேண்டும். ஓ! சிறந்தவரே! இவற்றைஎல்லாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல அறிந்திருக்கிறீர்' என்று கேட்டார்.

முந்நூற்றிரண்டாவது அத்யாயம்

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(யாஜ்ஞவல்கியர் ஸாங்கியமதத்தை ஜனகருக்குச் சொல்லியது.)

யாஜ்ஞவல்கியர் சொல்லத்தொடங்கினர். 'ஐயா! அரசனே! நிர்க்குணனனவன் குணமுள்ளவனுகச செய்யப்படான். குணவானுயிருப்பவனும் குணமில்லாதவனுகச்செய்யப்படான். உள்ளபடி என்னிடமிருந்து தெரிந்துகொள். தத்வத்தையுணர்ந்தவர்களும் மகாத்மாக்களுமானமுனிவர்கள், 'குணங்களையுடையவன் குணவானுகவே இருக்கின்றன். அப்படியே நிர்க்குணனும் குணமற்றவனுகவே இருக்கின்றன்' என்று இவ்விதம்சொல்லுகின்றார்கள். குணங்களை இயற்கையாகவுடையபிராகிருதன் குணங்களிலேயே சுழலுகின்றன். இயற்கையாகவே அறிவீனனுயிருக்கிற அவனே குணங்களை

உபயோகிக்கிறான். இயற்கையாகவே அறிவீனனான பிராகிருதபுருஷன் தன் ஆத்மாவை அறிகிறதில்லை. 'என்னைக்காட்டிலும் மேலானவனில்லை' என்று எப்பொழுதும் அபிமானிக்கின்றான். (பிரகிருதியுடன்கூடினவன் அறிவதில்லை) என்கிற இத்தக்காரணத்தினால் பிரகிருதி ஜடமாகும். (பிரகிருதியைசேர்ந்தபுருஷன்) நித்தியனும் நாசமில்லாதவனுமாயிருப்பதாலும் (பிரகிருதி) நாசமுடையதாயிருப்பதாலும் அது ஜடத்தன்மைக்கு வேறுகிறதில்லை. அஜ்ஞானத்தால் அடிக்கடி குணங்களுடைய படைப்பைச்செய்து ஆத்மாவை அறியாமலிருக்கும்பொழுது ஆத்மாவானது விடுபடுகிறதில்லை. ஸ்ருஷ்டிகளுக்குக் கர்த்தாவாயிருப்பதால் ஸ்ருஷ்டிதர்மமுடையவனைச் சொல்லப்படுகிறான்; யோகங்களுக்குக்கர்த்தாவாயிருப்பதால் யோகதர்மமுடையவனைச் சொல்லப்படுகிறான்; [1]பிரகிருதிகளையுண்டுபண்ணுவதால் பிரகிருதிதர்மமுடையவனைக் சொல்லப்படுகிறான்; பீஜங்களுக்குக் கர்த்தாவாயிருப்பதால் பீஜதர்மமுடையவனைகவும் சொல்லப்படுகிறான். விமுக்திபெற்றவர்களும் ஆத்மஜ்ஞானிகளும் மனக்கவலை நீங்கினவர்களுமானயதிகள் குணங்களுக்கு உற்பத்திஸ்தானமும் லயஸ்தானமுமாயிருப்பதாலும் [2]உதாவீனனாயிருப்பதாலும் இரண்டற்றவனாயிருப்பதாலும் குணங்களில் அபிமானமாத்திர ஸம்பந்தமுடையவனாயிருப்பதாலும் ஆத்மாவை நிர்க்குணனை நினைக்கின்றார்கள். இந்தப்பிரகிருதியை (ஞானமில்லாதவரையில்) நித்தியமாயும் (ஞானத்தால்) நசிப்பதாயும் (காரணரூபத்தால) அவ்யக்தமாயும் (கார்யரூபத்தால்) வியக்தமாயும் இருப்பதாகக் கேட்டிருக்கிறோம். எல்லாப்பிராணிகளிடத்திலும் தயையுடையவர்களும் ஞானத்தையே அடைந்தவர்களுமான புருஷர்கள் (இவ்விதம் அபிமானத்தால்) அவ்யக்தத்துடன் ஐக்யத்தையும் (ஸ்வபாவமாக) பேதத்தையும் சொல்லுகிறார்கள். நிலையுள்ளவனென்று பெயருடைய அந்தப்புருஷன் வேறு. நிலையற்றபிரகிருதி வேறு, நடுவிலிருக்கிற நாணற்குச்சிகளுக்குத் [3]தர்ப்பை போலவே இது ஏற்படுகிறது. தர்ப்பத்தின் சேர்க்கையினால் குருத்தானது அதைச் சேர்ந்ததாகவே அறியப்படுகிறதில்லை. மசகத்தை வேருக்கும் அத்திப்பழத்தை வேருக்கும் அறியவேண்டும். அத்திப்பழத்தின் சேர்க்கையினால் மசகம் அதில் சேருகிறதில்லை. அப்படியே,

---

1 'பிரஜைகளை' என்பது பழைய வுரை.

2 இங்கு அதிகபாடமான ஒன்றரைசலோகங்கள் பொருத்தமில்லாமையால் விடப்பட்டன.

3 'முஞ்சம்' என்பதிலிருந்து.

மத்ஸ்யம்வேறுகவும் ஜலம் அதைக்காட்டிலும்வேறுகவும் கருதப்பட்டன. ஜலத்தின் ஸம்பந்தத்தினால் மத்ஸ்யம் சுத்தவிதத்திலும் பற்றப்படுகிறதில்லை. எப்பொழுதும் அக்னி வேறு ; [1]உதை வேறு. இவ்விதம் அறியக்கடவாய். அந்த அக்கினியானது உஷ்ணயின் சம்பந்தத்தினால் பற்றப்படுகிறதில்லை. தாமரையில்லை வேறுகவும் ஜலம் வேறுகவும் கருதப்பட்டன. ஜலத்தின்ஸம்பந்தத்தினால் தாமரையில்லை அதில் ஸம்பந்திக்கிறதில்லை. பிராகிருதஜனங்கள் நித்யமாயிருக்கிற இந்தக் குணங்களுடைய ஸஹவாஸத்தையும் அவைகளினிருப்பிடத்தையும் எந்நாளும் உண்மையாகப் பார்க்கிறதில்லை வேறுவிதமாகப் பார்க்கிறவர்களுக்கு நலஞானமில்லை. அவர்கள் அடிக்கடி நிச்சயமாகக் கோரமானநரகத்தை அடைகிறார்கள் குணங்களைப்பிரித்து அறியப்படுவதும் உத்தமமுமான இந்த ஸாங்கியஞானமானது உனக்குச் சொல்லப்பட்டது. ஸாங்கியர்கள இவ்விதம் குணங்களைப்பிரிதத்தறிந்து கைவலயத்தை அடைந்தாகள. தத்வங்களில் ஸமர்த்தர்களான மற்ற வர்களுடைய உறுதியும் இதுவே இதற்குமேல் யோகிகளுடைய ஞானத்தைச சொலலபோகிறேன்.

மூந்நூற்றிருபத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(யாஜ்ஞவல்கியர் யோகத்தை ஜனகருக்குச் சொல்லியது.)

ஓ! ராஜர்ரேஷ்டனே! என்னால் ஸாங்கியஞானமானது சொல்லப்பட்டது. (இனி) நான் கேட்டறிந்தபடி யோகஞானத்தை என்னிடமிருந்து அறி. ஸாங்கியத்திற்கு நிகரான ஞானமில்லை. யோகத்திற்கு நிகரான பலமுமில்லை. அவ்விரண்டும் ஒரே அனுஷ்டானத்தையுடையவைகளாகவும் இரண்டும் மரணத்தையிழுருத்திக்கின்றவைகளாகவும் கருதப்பட்டன. ஞானத்தில பற்றில்லாமலிருக்கிற மனிதர்கள் அவைகளைத் தனித்தனியாகப் பார்க்கின்றார்கள். ஓ! அரசனே! நாம் உறுதியினால் ஒன்றுவே பார்க்கின்றோம். யோகிகள் எதைப் பார்க்கிறார்களோ அதையே ஸாங்கியர்களும் பார்க்கிறார்கள். யோகத்தையும் ஸாங்கியத்தையும் ஒன்றுகப் பார்க்கிறவன் தத்வமுணர்ந்தவன். சத்துருக்களைச சிக்ஷிக்கிறவனே! பிராணன்முதலியவைகளைப் பிரதானமாகவுடைய மற்றப்பாகிகளையும் அறியக்கடவாய். அவர்

---

1 உலோகங்களை உருகுதற்குரிய ஒருவகைப்பாத்திரம்.

கள் அந்தச்சரீரத்தேரிலே பத்துத்திக்குக்களிலும் ஸஞ்சரிக்கிறார்கள். ஓ! குற்றமற்றவனே! அப்பா! பிரளயகாலம்வரையில் அணிமாதிகளான எட்டுக்குணங்களுடைய ஸூக்ஷ்மதேஹத்தால் (ஸ்தூலதேகத்தை) விட்டுவிட்டு ஸுகமாய் உலகங்களில் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிறான். புத்திமான்கள் எட்டுஅங்கங்களுள்ளயோகத்தைச சொல்லுகின்றார்கள் ராஜர்ஷிச்ரேஷ்டனே! எட்டுஅங்கங்களுள்ளயோகத்தை ஸூக்ஷ்மமாகச சொல்லுகின்றார்கள் மற்றதைச் சொல்லுகிறதில்லை. யோகிகளுடையஉத்தமமானயோகாசார்யத்தைச சாஸ்திரவசனப்படி ஸகுணம் நிர்க்குணம்என இரண்டுவிதமாகச சொல்லுகிறார்கள். ஓ! அரசனே! மனதை (மூலாதாரமுதலானவிடத்தில்) தரிப்பதும் பிராணவாயுநிரோதமும் மனம்ஒருமுகமாயிருப்பதும் இந்திரியநிக்ரகமும் சொல்லப்பட்டிருக்கின்றன பிராணநிரோதமானது ஸகுணயோகமாகும் ஆகையால், மனத்தை [1]நிர்க்குணமாயிருக்கும்படி நிலைக்கச் செய்யவேண்டும் சிறந்தபுத்திமானே! (தியானத்தால் இஷ்டதேவதையைப) பாராமரிக்கும்போது (கேவலயோகத்தைச் செய்து) பிராணன்களைவெளியிலவிட்டால் வாதரோகம் அதிகரிக்கவே செய்யும் ஆகையால், அதை அனுஷ்டிக்கக்கூடாது ராத்ரியின் முதல்யாமத்தில பன்னிரண்டு (மனத்தின்) ஏவுதலகள் கருதப்பட்டன. நடுராத்ரியில நித்திரைசெய்து பின்யாமத்திலும் பன்னிரண்டுஏவுதல்களே கருதபபட்டன. ஆகையால், இவ்விதம் மனத்தின் சமனத்தையடைந்தவனும் வெளிபபுலன்கள் அடங்கினவனும் தனித்திருக்குந்தன்மையுள்ளவனும் ஆத்மாவில் பற்றுள்ளவனும் ஞானியுமாயிருபபவனுல் மனமானது சோபபிக்கத்தக்கது ஸந்தேகமில்லை. மிதிலாதிபனை அரசனே! (யோகிகள்) சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற ஐந்துஇந்திரியங்களுடைய ஐந்துவிதமான தோஷங்களையும் விலக்கி [2]விசேஷபத்தையும் [3]யதையும் நிவிருத்தி செய்து எல்லாஇந்திரியஸமூகத்தையும் மனத்திலடக்கி மனத்தை அஹங்காரத்தில்ஸ்தாபித்து அஹங்காரத்தைப் புத்தியென்கிறமஹத்தத்வத்திலும் புத்தியைப் பிரகிருதியிலும் இவ்விதம்விலக்கி, பிறகு, கேவலமும் ரஜோகுணம்சிறிதுமில்லாததும் நித்தியமும் அளவற்றதும் சுத்தமும் செறிதலில்லாததும் ஸ்திரமும் பூர்ணமும் எப்பொழுதும்பேதிக்கமுடியாததும் மூபபிறப்பற்றதும் அழிதியும் விகாரமில்லாததும் (எல்லாவற்றிற்கும்) நியந்தாவும் நாசமில்லாததுமான

1 செய்கையற்றிருக்கும்படி. 2 வெளிக்கினம்பல்.
3 தானாவுண்டான லயம்.

பிரம்மத்தைத் தியானம்செய்கின்றார்கள். டிஹ்ராஜனே! யோக முள்ளவனுடைய லக்ஷணங்களை மனத்தில் தரித்துக்கொள். யோகப் பிரஸாதத்தின் லக்ஷணம் திருப்தியடைந்தவன் ஸுகமாக நித்திரைசெய்வதுபோன்றது. காற்றில்லாதவிடத்தில் எண்ணெய்நிரம்பிய தீபமானது அசையாமல் உபரக்கிளம்பினஜ்வாலையுடன் ஜ்வலிப்பதுபோல யோகியும்இருப்பானென்று புத்திமான்கள் சொல்லுகிறார்கள். மேகத்திலிருந்துண்டானஜலத்திவலைகளாலே அடிக்கப்பட்டும் நிலையானது சிறிதும் அசைக்கப்படாதது அதுபோலிருப்பது யோகியினுடைய லக்ஷணம். ஊதப்பட்டசங்கம், துந்துபிஇவைகளுடைய பெரியசப்தங்களாலும் பலவிதமானகானவாத்தியங்களாலும் (மனம்) சலியாமலிருப்பது யோகியின்லக்ஷணம். ஒருவன் எண்ணெய்நிறைந்தபாத்திரத்தைக் கைகளாலெடுத்துக்கொண்டு, கையில் கத்தியுடையவர்கள் அதட்ட அவர்களிடமிருந்துண்டானபயத்தினால் மனத்தைச் சலியாமல்வைத்துக்கொண்டு, ஒருதுளியும் பாத்திரத்திலிருந்துசிதறவிடாமல் படியிலேறுவதுபோல, யோகியானவன் மிகவும் சிறந்தயோகத்தையடைந்து இந்திரியங்களுடைய நிலையினும் அப்படியே (மனத்தின்) நிலையினும் ஒருமுகப்பட்டமனமுடையவனாயிருப்பான். இவ்விதம் யோகியானமுனிவனுடைய லக்ஷணங்களைக் கண்டுகொள்ளவேண்டும். ஆத்மயோகத்தோடுகூடினவன் மிகவும் சிறந்ததும் அழிவற்றதும் பெரிய அஜ்ஞானத்தின் இடையிலிருந்ததும் அக்னிக்கொப்பானதுமான அந்தப்பிரம்மத்தைப பார்க்கின்றான். ஓ! அரசனே! அவன் இந்தஞானத்தினால் ஸாக்ஷியானஜீவன்விலகின்தாயிருக்கிற தேகத்தைவிட்டுவிட்டு நாளடைவில் கைவல்யத்தை அடைகிறான். இந்தப்படி அனுதியானவேதம் கூறுகிறது இதுவே யோகிகளுடையயோகம். யோகத்தின் லக்ஷணம் வேறில்லை. புத்திமான்கள் அதையறிந்து (தங்களை) கிருதார்த்தர்களாக நினைக்கின்றார்கள்.

மூன்நூறழிருபத்தீரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(யாஜ்ஞவல்க்யர் ஜீவன்வெளிப்படும்உபாயத்தையும் மரணக்குறிகளையும் ஜனகருக்குச் சொல்லியது.)

ஓ! அரசனே! அப்படியே, சரீரத்திலிருந்துமேலேகிளம்புகிற வர்களின்ஸ்தானத்தையும், ஜாக்கிரதையுடன் கேள். பாதங்களின்

வழியே · ழரித்துசெல்லுகிறவனுக்கு விஷ்ணுவின் ஸ்தானமானது சொல்லப்படுகிறது கணக்கால்களால ழரித்துசெல்லுகிறவன் வஸுக்களென்கிறதேவர்களை அடைவானென்று நமக்குக் கேள்வி. முழங்கால்களால், மஹாபாக்கியம் பெற்றஸாத்யர்களென்கிற தேவர்களை அடைவான். பாயுவினுல் மேலேஸஞ்சரிக்கிறவன் மித்ரனுடைய ஸ்தானத்தை அடைவான். பின்தட்டுவழியாய் உத்க்ரமிக்கிறவன் ப்ருதிவியையும் தொடைகளால்செல்லுகிறவன் ப்ரம்மாவையும் அடைவார்கள. பார்ச்வங்களால் மருத்துக்களென்கிற தேவர்களையும் நாவிகைகளால் சந்த்ரனையும் கைகளால் இந்த்ரனையும் மாபால ருத்ரரையும் அடைவானென்றுசொல்லுகிறார்கள் கழுத்தினால, மீசையும் சிறந்தவனும் முனிச்ரேஷ்டனுமானநாரதனை அடைகின்றான் முகத்தினல் விச்வேதேவர்களையும் காதினல் திக்குக்களையுமடைவான். க்ராணத்தால் வாயுவையும் நேத்ரங்களால் ஸூர்யனையும் புருவங்களால அச்வினிதேவதைகளையும் நெற்றியினல் பிதிருக்களையும் அடைவான் தலையினல தேவர்களுக்கெல்லாம் முன்னுண்டானவரும் விபுவுமாயிருக்கிற ப்ரம்மாவை அடைகின்றான். மிதிலாதிபனே! இந்தஉத்க்ரமாந்தி ஸ்தானங்களை சொல்லப்பட்டன வித்வான்களாலவிதிக்கபபட்ட [1] அரிஷ்டங்களைச் சொல்லுவேன். முன்பார்க்கபபட்ட அருந்ததீநக்ஷத்ரத்தையும் த்ருவநக்ஷத்ரத்தையும் பிறகு ஒருபொழுதும்பாராமலிருந்தால் அந்தசரீரிக்கு ஒருவருஷத்தில் சரீரவியோகம் ஏற்படுமென்று சொல்லுகிறார்கள். பூர்ணசந்த்ரனையும் தென்பாகத்தில் தீபத்தையும் இரண்டு பிரிவானபிரகாசமுடையனவாகப் பார்க்கிறவர்களும் ஒருவருஷம் ஆயுளுடையவர்கள். ஓ! அரசனே! பிறருடைய நேத்ரத்தில் தம்முடையசாயாரூபத்தைக் காணுதவர்களும் ஒருவருஷம் ஆயுளுடையவர்கள். அதிகசுகந்தியும் அதிகப்ரஜ்ஞையும் ப்ரஜ்ஞையில்லாமையும் காந்தியில்லாமையும் ஸ்வபாவமாறி விகாரத்தையடைதலும் ஆறு மாதத்திலேற்படும் மரணத்திற்கு லக்ஷணமான தேவதைகளை அவமதிப்பதும் ப்ராம்மணர்களைவிரோதிப்பதும் புகைபோன்றகாந்தியும் ஆறு மாதத்திலேற்படும் மரணத்தின் அடையாளம் குடும்பிசுறின உருளை போலச் சந்த்ரனையும் சூர்யனையும் தவாரமுடையனவாகப் பார்க்கின்றவன் ஏழுமாதத்திரியில் மரணத்தையடைவான். தேவாலயத்திலிருக்கிறவன் கல்லவாஸஜனயை அடைந்தும் சவத்தின் வாஸனையாகக் கிரகித்தால் ஏழுமாதத்திரியில் மரணத்தையடைவான். காதுமூக்குக்கள் வளைதலும் பற்களிலும் நேத்ரங்களிலும் பசையற்றுப்போவதும்

1 மரணஸூசகமான தீர்மித்தங்கள்.

பிரஜ்ஞையின்நாசமும் உஷ்ணமில்லாமையும், உடனே உண்டாகும் மரணத்திற்கு லக்ஷணம். ஓ! அரசனே! இடக்கண் காரணமில்லாமல் கண்ணீர்விடுகிறதும் தலையிலிருந்தும் புகைகிளம்புகிறதுமாகிய இவ்விரண்டும் உடனே உண்டாகும் மரணத்திற்கு அடையாளம். நல்ல மனமுடையமனிதன் இவ்வளவு அரிஷ்டங்களையும் அறிந்து எந்தக் காலம் மரணத்திற்கேற்பட்டதாகுமோ அந்தக்காலத்தை எதிர்பார்த்து இரவிலும் பகலிலும் மனத்தைப் பரமாத்மாவிடம் சேர்ப்பிக்கவேண்டும். ஆனால், இவன் மரணத்தில் இஷ்டமில்லாமல் உயிருடனிருக்கவிரும்புவானைல் இந்தக்கிரியையைச் செய்யவிரும்பவேண்டும். எல்லாக்கந்தங்களையும் ரஸங்களையும் ஸமாதியுடன் ஜயிக்கவேண்டும். [1]ஓ! அரசனே! ஸாங்கியயோகங்களுடன் (ஆத்மாவை) அறிந்து பரமாத்மத்தில்பற்றினமனதுடன் யோகத்தினால மரணத்தை ஜயிக்கவேண்டும். அவன் க்ஷயமில்லாததும் ஜனனமில்லாததும் ஸர்வமும் நாசமில்லாததுமான மங்களவஸ்துவையடைந்து சாச்வதமும் சனனமற்றதும் மனுஷ்யசமில்லாதவர்களாலடைய அரியதுமான ஸ்தானத்தை அடைவான்.

முந்நூற்றிருபத்தமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(யாஜ்ஞவல்க்கியர் விப்ரவாலஸ்ருஷின் கேள்விகளுக்குத் தாம்விடையளித்ததை ஜனகருக்குச் சொல்லியது.)

அரசனே! அவ்யக்தத்திலிருக்கிறதும் பரமுமான ஒன்றை நீ என்னிடம் கேட்டாய் அரசனே! பரமும் ரகசியமுமான இந்தக் கேள்வியை ஜாக்கிரதையுடன் கேள் ஓ! மிதிலாதிபதியே! இவ்வுலகில் ரிஷிகளுக்குரியவிதிபுடன் ஸஞ்சரிக்கிறவனும் குருவினால் அவமதிக்கப்பட்டவனுமான நான் ஆதித்யனிடமிருந்தும் யஜுஸ்களை அடைந்தேன். நான் காபக்தேய கோத்ரமாகவுடைய தேவரைப் பெரியதவத்தினால் ஆராதித்தேன். குற்றமற்றவனே! அப்பொழுது, பிரியமடைந்தவரும் பிரபுவுமான ஸூர்யர் என்னை நோக்கி, 'ஓ! பிரம்மரிஷியே! உனக்கு எது இஷ்டமோ அந்தவரத்தைக்கேள். நான், அடையமிகவுழைத்தாயிருப்பினும் அதனை உனக்குப்

1 இங்கு அதிகபாடமான அரைர்ஸோகம் விடப்பட்டது.

பிரியத்துடன் கொடுப்பேன். என்னுடையஅருள் அடையமிகஅரியது' என்று சொன்னர். தபிக்கசெய்பவருட்சிறந்தஅவரை நான் தலைபால்வணங்கி, '(இதற்குமுன் ஒருவராலும்) உபயோகிக்கப்படாதயஜுஸ்ஸுகளை விரைவில் அறியவிரும்புகிறேன்' என்று சொன்னேன். பிறகு, அந்தப்பகவான் என்னை நோக்கி, 'ஓ! பிராம்மண! உனக்கு (அப்படியே) கொடுப்பேன். இப்போது ஸரஸ்வதியானவள் சுத்தரூபத்துடன் உன்னுடையசரீரத்தில்புகுவாள்' என்றுசொன்னர். பிறகு, என்னை நோக்கிப் பகவானைஅவர், 'உன் வாயைத்திற' என்று சொன்னர். 'அப்பொழுது, திறக்கப்பட்ட என்னுடைவாயில் ஸரஸ்வதியானவள் புகுந்தாள். குற்றமறறவனே! அதனால், எரிக்கப்படுகிறவனை நான் மஹாத்மாவான ஆதித்பரை அறியாமையினாலும் (அவருடையதாபத்தைப்) பொறுமையினாலும் உடனே ஜலத்தில் விழுந்தேன். பிறகு, சூரியபகவான், எரிக்கப்படுகிறவனை என்னை நோக்கி, 'ஒருமுகூர்த்தம் தாபத்தைப் பொறுத்துக்கொண்டிரு. பிறகு குளிர்ந்துவிடும்' என்று சொன்னர். குளிர்ச்சியடைந்தவனை சின்னப்பார்த்துவிட்டு ஸுர்யபகவான், 'ஓ! பிராம்மண! உனக்குக் [1]சில மந்திரங்களுடன்கூடியதும் உபநிஷத்துக்களுடன்கூடியதுமான வேதமானது தோன்றும். ஓ! பிராம்மணச்ரேஷ்ட! சதபதமென்கிற பிராம்மணம் முழுமையும் வெளியிடப்போகிறாய். அதன்முடிவில் உன்னுடையபுத்தியானது மோக்ஷத்தை நாடப்போகிறது. ஸாங்கியர்களாலும் யோகிகளாலும் விரும்பப்பட்டதும் உனக்கு இஷ்டமானதுமான அந்த (ப்ரம்ம) பதத்தை அயடையவும்போகிறாய்' என்று சொன்னர். இவ்வளவு சொல்லிவிட்டுப் பகவானை அவர் அஸ்தமனத்தை அடைந்தார். தேவரான ஆதித்பர் சென்றபிறகு, நான் அவருடையவார்த்தையைக்கேட்டு வீட்டுக்கு வந்து ஸந்தோஷத்துடன் ஸரஸ்வதியைத் தியானித்தேன். அப்போது, எனக்கு அதிமங்களையும் உயிரெழுத்து மெய்யெழுத்துக்களாலலங்கரிக்கப்பட்டவரானமான ஸரஸ்வதிதேவியானவள் ஓங்காரத்தை முன்னதாகச் செய்துகொண்டு வெளிப்பட்டாள். உடனே, நான் ஸரஸ்வதிக்கு விதிப்படி அர்க்கியத்தையளித்தேன். சிறந்த முயற்சியைச் செய்து அந்த ஸரஸ்வதியையே முக்கிய ஆகாரமாய்க்கொண்டு உட்கார்ந்திருந்தேன். பிறகு, மிக்க சந்தோஷத்துடன் உபநிஷத்துக்களோடும் சுருக்கமான வாக்கியங்களோடும் சேஷவாக்கியங்களோடும் கூடின சதபதம் முழுமையும் செய்தேன். மஹாராஜனே! சிஷ்யர்களுடன்

1 விரும்பிஉபயோகிக்கப்படும் வேறுசாகைகளின்மந்திரங்கள்.

கூடினவரும் மகாத்மாவுமான [1]மாமாவினுடைய விரோதத்திற்காகச் சிறந்தவர்களான நூறுசிஷ்யர்களுக்கு அத்யயனம் செய்வித்துப பிறகு கிரணங்களோடுகூடின ஸூர்யன்போன்ற சிஷ்யர்களுடன் கூடினஎன்னுலே மகாத்மாவான உன்னுடைய பிதாவின் யாகமானது விபாகிக்கப்பட்டது. பிறகு, மாதுலரோடுகலகம்ஏற்பட (அவரைச சேர்ந்த)தேவலர் பார்த்திருக்கையில் என்னுடைய வேததக்ஷிணையின்நிமித்தம் பாதிபபணத்தை அபகரித்தேன். பிறகு, நான் அதனுல் ஸுமந்துவினுலும் பைலராலும் ஜைமினியினுலும் உன்னுடைய பிதாவினுலும் முனிவர்களாலும் வெகுமானிக்கப்பட்டேன். ஓ! குற்றமற்றவனே! என்னுல் ஸூர்யரிடமிருந்து [2]பதினேந்துயஜுஸுகள் அடையப்பட்டன. அப்படியே ஸுதராலே (இந்தவேதத்திற குரிய) புராணம் தெரிந்துகொள்ளப்பட்டது ஓ! அரசனே! இந்தக் காரணத்தைக்கொண்டு ஆதித்யருடைய பிரபாவத்தாலும் ஸரஸ்வதி தேவியைமுன்னிட்டும் நான் சதபதப்ராம்மணத்தைச்செய்யத் தொடங்கினேன் என்னுல புதிதானஇது [3]செய்யபபட்டது. அப்படியே, இஷ்டமானமார்க்கப்படி அது கொடுக்கப்பட்டது. சிஷ்யர்களெல்லோரும் ஸுத்ரவாக்யங்களோடுகூடின சதபதமுழுமையும் உபதேசிக்கப்பெற்றார்கள். எல்லாசிஷ்யர்களும் பரிசுத்தர்களாயும் மிகுந்த ஸந்தோஷமடைந்தவர்களாயும் சென்றார்கள். ஸூர்யரால்உபதேசிக்கப்பட்ட பதினேந்து சாகைகளான இந்த வித்தைகளை இஷ்டப்படி நிலைக்கச்செய்துவிட்டு அதன்பிறகு பொருளைச சிந்தித்தேன். அரசனே! 'இதில் பிராம்மணர்களுக்கு ஹிதமும் ஸத்யமுமாயுள்ளது எது? மேலானபொருளும் எது?' என்று சிந்தித்துக்கொண்டிருக்கும் பொழுது, வேதாந்தஞானத்தில்வல்லவனான விச்வாவஸுவென்கிற கந்தர்வன் அவ்விடம் வந்து என்னை நோக்கி, வேதத்தைச் சேர்ந்த இருபத்துநான்கு கேள்விகளைக் கேட்டான். அரசனே! அப்பொழுது மனுவுமென்கிற யுக்திவிஷயமாய் இருபத்தைந்தாவதுகேள்வியைக் கேட்டான் ஓ! அரசனே! புருஷஸ்ரேஷ்ட! விச்வாவிஸ்வம், புருஷன், பிரகிருதி, மித்திரன், வருணன், ஞானம், [4]ஜ்ஞேயம், [5]ஞன், [6]அஜ்ஞன், [7]கம், [8]தபஸ், [9]அதபஸ், ஸூர்யாதிஸூர்யர்கள்,

1 வைசபாயனர்.
2 சாலகன்.
3 வெளியிடப்பட்டது.
4 ஞானவிஷயம்.
5 அறிகின்றவன்.
6 அறியாதவன்.
7 ஆனந்தம்.
8 ஆலோசனை.
9 ஆலோசியாமை.

வித்யாவித்யைகள், [1]மே'தயாவேத்யம், சலம், அசலம், [3]அவ்யயம், [4]அக்ஷரம், க்ஷேத்ரம் ஆகிய இவறறைப்பற்றி மிகவும் சிறந்த கேள்வியைக் கேட்டான் மஹாராஜனே! பிறகு, கந்தர்வஸ்ரேஷ்டனான அரசனைப்பார்த்து நான், 'நீ கிரமமாக அர்த்தமுள்ளதும் உத்தமமுமான கேள்வியைக் கேட்டாய் ஒரு முகூர்த்தகாலம் இருக்கவேண்டும். இதைப்பற்றி ஆலோசிக்கிறேன்' என்று சொன்னேன் அந்தக்கந்தர்வன், 'ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு மௌனமாயிருந்தான் பிறகு, மறுபடியும் நான் ஸரஸ்வதிதேவியைத் தியானித்தேன் என்னுடைய மனத்தினுலே 'அந்தக்கேள்வியானது தயிரிலிருந்து நெய்போல எடுக்கப்பட்டது. ஓ! அரசனே! அப்பொழுது, உபநிஷத்தையும் பரிசேஷமென்கிற மிசசவாக்கியத்தையும் மனத்தால ஆராய்ந்தேன். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! ஐயா! சிறந்தயுக்திரூபமான வித்தையைப்பார்த்துவிட்டு மோக்ஷத்திற்கு நன்மையும் இருபத்தைந்தாவதான ஆத்மாவை அடைந்தவனான நான் உனக்குச்சொல்லியதும் (வேதம்வார்த்தைதண்டநீதி இவைகளை அபேக்ஷித்து) நான்காவதுமாயிருக்கிற இந்த வித்தையைச் சொன்னேன். அரசனே! பிறகு, உடனே நான் விஸ்வாவஸு-வென்கிற கந்தர்வராஜனைப்பார்த்து, 'நீ என்னிடம் இப்பொழுது கேட்ட கேள்வியைசசொலலுகிறேன்; கேள். ஓ! கந்தர்வஸ்ரேஷ்டனே! நீ கேட்ட விஸ்வாவிஸ்வமென்பதில் விசுவத்தைப் பரமாயும் சென்றதும் இனி வருவதுமான ஸம்ஸாரபயத்தைச செய்கிறதாயும் குணங்களைச் செய்கிறடியால் மூன்றுகுணங்களுடையதாயுமுள்ள அவ்யக்தமாக அறிய வேண்டும். அவிஸ்வம் நிஷ்களனான ஆத்மா., விசுவாவிசுவமென்கிற இரட்டையானது இப்படியே காணப்படுகிறது அவ்யக்தத்தைப் பிரகிருதியென்றும் நிர்க்குணத்தைப் புருஷனென்றும் சொல்லுகிறார்கள். வருணனைப்பிரகிருதியாகவும் மித்திரனைப்புருஷனாகவும் ஞானத்தைப்பிரகிருதியாகவும் ஞேயத்தைப்புருஷனாகவும் சொல்லுகிறார்கள். [5]அஜ்ஞமானது அவ்யக்தமென்று சொலலப்பட்டது. ஞானே நிஷ்களனாகச் சொல்லப்படுகிறான். கமென்றும் தபஸென்றும் அதபஸென்றும் உம்மால் சொல்லப்பட்டவற்றில் இந்தப் புருஷன் '[6]க' என்று சொல்லப்படுகிறான். தபஸைப் பிரகிருதியாகச் சொல்லுகின்றார்கள். அதபஸென்பவன் நிஷ்களனாகக் கருதப்பட்டான். [7]ஸௌம்யம் அவ்

1 அறியக்கூடியது அறியக்கூடாதது.
2 ஒருசொல் விடப்பட்டது.
3 நாசமற்றது.
4 குறைவற்றது.
5 அறியாதது.
6 ஸ-ஸ்ருபன்.
7 ஜனங்களே விஷயத்தில் வருகின்றது.

யக்தமென்று சொல்லப்பட்டது. [1]அதிஸம்ரீன் [2]நிஷ்களஸ். அவ்யக்தமானது அவித்தையாகச் சொல்லப்பட்டது. புருஷன் வித்தையாகச் சொல்லப்படுகிறான். அவ்யக்தம் [3]அவேத்யமாகவும் புருஷன் [4]வேத்யனாகவும் சொல்லப்படுகிறார்கள். நீ சொல்லிய சலாசலம் என்பதையும், என்னிடம்கேள். ஸ்ருஷ்டிப்ரளயங்களுக்குக்காரணமானபிரகிருதியைச் [5]சலமாகச் சொல்லுகிறார்கள். ஸ்ருஷ்டிப்ரளயங்களுக்குக் கர்த்தாவாகாத புருஷன் [6]அசலனென நிணைக்கப்பட்டான். இருவரும் [7]அஜர்கள். [8]நித்யர்களாயுள்ளவர்கள். இருவரும் [9]க்ஷயமில்லாதவர்கள். இருவரும் ஜனனமில்லாதவர்கள். நாசமுமில்லாதவர்களென்று ஆத்மாவின்கதியில் உறுதியுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இவ்வுலகில் சிலர் ஸ்ருஷ்டியில் ஜனியாததை க்ஷயமில்லாததால் அவ்யயமாகச் சொல்லுகிறார்கள். வித்வான்கள் இவனுக்கு க்ஷயமில்லை என்கிற காரணத்தால் புருஷனை அக்ஷயனெகவும் (அவ்யக்தத்தைக்) குணங்களுக்கு க்ஷயமேறபடுவதால் பிரகிருதியாகவும் கர்த்தாவாயிருப்பதால் அக்ஷயமாகவும் சொல்லுகிறார்கள். உனக்கு மோக்ஷத்திற்குரிய நான்காவதான இந்த நியாயவித்தை சொல்லப்பட்டது. ஓ! விஸ்வாவஸுவே! வேதவாதிகளெல்லாரும் [10]கர்மாவினுலே வித்தையோடுகூடத் தனத்தைத்தேடி நித்யமான கர்மத்தில் ஒரே திருஷ்டியுடையவர்களாக நிணைக்கப்படுகிறார்கள். கந்தருவஸ்ரேஷ்டனே! இந்தப்பிராணிகள் இருப்பதற்கு இடமும் அவைகளால் சூழுவப்பெற்றதும் வேதத்தின் பொருளுமான (அந்த) வேத்யத்தை எவர்கள் அறியவில்லையோ அவர்கள் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றார்கள. அங்கங்களுடனும் உபாங்கங்களுடனும் வேதங்களை அத்தியயனம் செய்தும் வேதத்தாலறியவேண்டியதை அறியாதவன் வேதங்களாகிற சுமைகளைச் சுமக்கிறவனே. ஓ! கந்தருவஸ்ரேஷ்ட! நெய்யில் விருப்பத்துடன் கழுதைப்பாலைக்கடைபவன் அதில் அசுத்தமான

---

1 சூரியனை அதிக்ரமித்தவன்.
2 நிராக்குணன்.
3 அறியக்கூடாதது.
4 அறியக்கூடியவன்.
5 சலிக்கிறதாக.
6 சலிக்காதவனுக.
7 ஒன்று ஜடம்; மற்றவன் ஞானருபனையன்றி ஞானமுள்ளவனல்லன்.
8 அனுதிகள்.
9 ஒன்று பரிணமத்தால்; மற்றவன் ஸ்வபாவத்தால்.
10 '[வேதவித்தையாகிற] தனத்தை நியாய சாஸ்திரத்துடன் சேர்த்து [குருவேவை முதலிய] கர்மத்தினுல் எல்லா வேதங்களும் நித்ய கர்மத்திலேயே திருஷ்டியுள்ளவைகளாக நினைக்கப்பட்டவைகள் என்று அறியத்தக்கன என்பது பழையவுரை.

பொருளேயேயல்லாமல் 'ஆடையாவது செய்யையாவது காணுதது போல வேதங்களேயுணர்ந்து வேத்யத்தையும் அவேத்யத்தையும் அறியாதமூடபுத்தியுள்ளவன் கேவலம் வேதமாகிறசுமையைசசுமக்கிறவனுக்கு கருதப்படுகிறான். தனக்கு அடிக்கடி ஜனனமரணங்களேற்படாதபடி இந்தவேத்யாவேத்யங்களே அவைகளிலேயே மனத்தைநிலேக்கச்செய்து எப்போதும் பார்க்கவேண்டும். ஓ! காசியப! நித்யமானஜனனமரணங்களே ஆலோசித்து இந்தவேதத்தையும் (விசாரித்து) இதில் நசிக்கிறதானதர்மத்தைத்தள்ளிவிட்டு, அழிவில்லாத (மோக்ஷ) தர்மத்தைப்பற்றிக்கொண்டு ஒவ்வொருகாலும் இடைவிடாமல் (வேத்யாவேத்யங்களே) நன்றுகபார்த்தால் அவன் கேவலனுகி இருபத்தாறுவதானபரமாத்மாவைப் பார்க்கின்றான். சாசுவதனை அவ்யக்தன் வேறு. இருபத்தைந்தாமவனை ஜீவன் வேறு. ஸாதுக்கள் அந்தஜீவலவுரூபத்திலிருக்கிற அந்த ஈசனே ஒருவனென்று பார்க்கிறார்கள் ஆகையால், பரமபதத்தை விரும்புகின்றயோகிகளும் ஞானிகளும் ஜனனமரணபயத்தினலே அழிவில்லாதவனுயிருந்தும் இருபத்தைந்தாமவனைஜீவனேச சிலாகிக்கிறதில்லே' என்றுசொன்னேன் விசுவாவஸு, 'ஓ! பிராம்மணேத்தமரே! உம்மால்சொலலப்பட்ட இந்தஇருபத்தைந்தாமதை நான் அப்படிஅறியவில்லே. அதை நீர் சொல்லவேண்டும். ஜைகீஷவ்யர், அவிதர், தேவலர், பிரம்மரிஷியானபராசரர், புத்திமானுனவார்ஷகண்யர், ஸங்யாவியானபஞ்சசிகர், கபிலர், சுகர், கௌதமர், ஆர்ஷ்டிஷேணர், மஹாத்மாவான கர்க்கர், நாரதர், ஆஸுரி, புத்திமானுன புலஸ்தியர், ஸநத்குமாரர், மகாத்மாவானசுக்கிரர் இவர்களிடம் நான் கேட்டிருக்கின்றேன். பிதாவானகசியபரிடமும் முன்னமேகேட்டிருக்கிறேன். அதன்பிறகு, விசுவரூபரும் புத்திமானுமான ருத்ரர், தேவர்கள், பிதிருக்கள், அஸுரர்கள் இவர்களிடமிருந்தும் முழுதுந் தெரிந்துகொண்டேன். அவர்களும் வேத்யத்தை நித்தியமாகசசொல்லுகிறார்கள். ஓ! பிராம்மணரே! ஆகையால், அதை உம்முடையபுத்தியால் கேட்கவிரும்புகிறேன். நீர் சாஸ்திரங்களில் தேர்ந்தவர்; சொல்லவல்லமையுள்ளவர்; மிக்கபுத்திமான். உமக்குத்தெரியாதது ஒன்றுமில்லே. நீர் வேதநிதியாக நிணேக்கப்படுகிறீர். ஓ! பிராம்மணரே! நீர் தேவலோகத்திலும் பித்ருலோகத்திலும் புகழப்படுகிறீர். பிரம்மலோகத்தையடைந்த மகரிஷிகளுமே உம்மைக் கொண்டாடுகிறார்கள். ஜோதிகளுக்கெல்லாம்பதியான ஆதித்யர் உமக்குப் பலமுறை சொன்னவர். ஓ! பிராம்மணரே! ஸாங்கிய

[1] ஞானம்முழுதும் நீர் கேட்டிருக்கிறீர். யாஜ்ஞவல்கியரே! அப்படியே விசேஷமாக யோகசாஸ்திரத்தையும் அறிந்திருக்கிறீர். நீர் ஐய மற உணர்ந்தவர்; சராசரங்களையறிகின்றவரி. தயிரிலிருந்து வெண்ணெயைக் திரட்டியெடுப்பதுபோல அந்தஞானத்தைக் கேட்கவிரும்புகிறேன்' என்றுசொன்னன் நான், 'கந்தருவர்ரேவஷ்டனே! நான் உன்னை எல்லாவறறையுமறிந்தவனுகவே நினைக்கிறேன். ஓ! அரசனே! என்னைப் பரீக்ஷிக்கவிரும்புகிறாய். ஆகையால், நான் கேட்டபடி (சொல்லுகிறேன்;) தெரிந்துகொள். அறிகிறவனுயிருப்பதால் இருபத்தைந்தாமவன் பிரகிருதியை அறிகிறன் ஓ! கந்தருவ! பிரகிருதியோ இருபத்தைந்தாமவனை அறிகிறதில்லை ஸாங்கியயோகங்களுடைய அர்த்தத்தின்தத்வத்தையுணர்ந்தவர்கள் வேதத்தில்சொன்னபடி ஞானம்பிரதிபலிபபதால் அதைப பிரதானமாகசசொல்லுகிறார்கள். குற்றமற்றவனே! இவன் எபபொழுதும் பார்க்கிறவனும் பாராதவனுமாயிருந்துகொண்டு பார்க்கிறன். வேறொருவன் எபபொழுதும் இருபத்தாறுமவனுனதன்னையும் இருப்பத்தைந்தாமவனையும் இருபத்துநான்காவதையும் பார்க்கிறன். இவனை அறித்துப் பார்க்கிறவன் பார்க்கிறவனுயிருந்தும் (இவைகளைப்) பார்க்கிறதில்லை. இருபத்தைந்தாமவனுன ஜீவன், 'எனக்குமேலே வேறு ஒருவனுமில்லை' என்று அபிமானிப்பான். ஞானக்கண்ணுடையவர்களாலே இருபத்துநான்காவது (தாமென்று) பார்க்கத்தக்கதில்லை. மத்ஸ்யமானது ஜலத்தைஅனுஸரித்துசசெல்வதுபோல ஜீவனுனவன் செலுத்தபடுகிறபடி (பிரகிருதியை அனுஸரித்து) பிரவிருத்திபபான். மத்ஸ்யம்அறிவதுபோல ஜீவனும் எப்பொழுதுமுள்ளஸ்னேகத்தாலும் ஸஹவாஸத்தாலும் அபிமானத்தாலும் பிரகிருதியையும் தன்னையும் ஒன்றுகவேஅறிகிறன். ஒருவனுயிருக்தில்லை அறியாதவரையில் ஸம்ஸாரத்தில் முழுகுகிறன். [2]பிரம்மபாவத்தை அடையும்போது ஸம்ஸாரத்திலிருந்தும் வெளிப்படுகிறன். ஒருபீராம்மணன், 'நான் வேறு; இந்தப்பிருகிருதி வேறு' என்று நினைக்கிறபொழுது கேவலனுகி இருபத்தாறுவதான பரமாத்மாவைப் பார்க்கிறன். ஓ! அரசனே! பரமன் வேறு. இருபத்தைந்தாமவன் வேறு. அந்த ஜீவனிடத்திலிருப்பதால் ஸாதுக்கள் அவனை ஒருவனென்றே அறிகிறார்கள். ஓ! காஸ்யபா! அதனல் ஜனனமரணத்துக்குப் பயந்தவர்களும் இருபத்தாறுமவனைப்பார்க்கிறவர்களும் அவனையே பற்றியிருப்பவர்களும் சுத்தர்களும் ஸாங்கியர்களும் யோகிகளும், அச்சதனு

1 சாஸ்திரம். 2 'ஸமத்வேந' என்பது மூலம்.

யிருந்தும் இந்த இருபத்தைந்தாமவனைச் சிலாகிக்கிறதில்லை. அவன் தேவலனுக்குப் பிரம்மத்தைப பார்க்கும்பொழுது எல்லாவற்றையும் அறிந்த வித்வானுகி மறுஜன்மத்தை அடைகிறதில்லை ஓ! களங்க மில்லாதவனே! இவ்விதம் ஜடமான பிரகிருதியையும் அறிகிறவனுன ஜீவனையும் [1]ஞானரூபமானபரப்ரம்மத்தையும் வேதத்தின்திருஷ்டார்த் தத்தைக்கொண்டு உள்ளபடி சொன்னேன் ஓ! காஸ்யப! பார்க்கிற தும் பாராததும் பிரகிருதிக்கு ஹிதகாரணதத்வத்தைப பாராததும் ஜடமற்றதானசுத்தமும் ஜடத்துடன்கூடியதுமான இருபத்தைந்தா வதும் பரமானஇருபத்தாறுவதும் சொல்லப்பட்டன' என்று சொன் னேன். விப்ரர்வசஸ், 'ஓ! பிரபுவே! உபாயல் உண்மையும் சுபமும் க்ஷேமத்திற்குரியதும் தேவதைகளுக்கு ஆகியுமான இவ்விஷயம் உள்ளபடி நன்கு சொல்லப்பட்டது உமக்கு எப்பொழுதும் அழி வில்லாதக்ஷேமம் உண்டாகட்டும் அறிவுதிறந்தஉம்மை எப்பொழு தும் புத்திபூர்வமாக நமஸ்கரிப்பேன்' என்று சொன்னான். இவ்விதம் சொல்லிவிட்டு, [2]சோமபொருந்தியரூபத்தால்விளங்குகின்றவனும் பரம ஸ்தோஷமுள்ளவனுகக் காணப்பட்டவனும் மகாத்மாவுமான அந்தக்கந்தருவன் புகழ்ந்து என்னைப் பிரதக்ஷிணம் செய்துவிட்டு ஸ்வர்க்கத்தை நோக்கிச் சென்றான் ஓ! அரசனே! பிரம்மாமுதலான தேவர்களுக்கும் பூமியிலும் பாதாளத்திலும்வஸிக்கிறவர்களுக்கும் க்ஷேமத்திற்குரியமார்க்கத்தை அடைந்திருக்கின்றவர்களுக்குமே அந் தச சாஸ்திரத்தை நன்றுகவெளியிட்டான் ஞானத்தால் காணப் பட்ட இந்தசசாஸ்திரம் ஸாங்கியதர்மத்தில் பற்றுள்ள எல்லாஸாங்கி யர்களுக்கும் யோகதர்மத்தில்பற்றுள்ள யோகிகளுக்கும் மோக்ஷத் தில் விருப்பமுள்ள மற்றமனிதர்களுக்கும் உரியது. ராஜஸ்ரேஷ் டனே! 'ஞானத்தால் மோக்ஷமுண்டாகிறது; அஜ்ஞானத்தாலுண் டாகிறதில்லை' என்று இவ்விதம் சொல்லுகின்றர்கள். ஆகையி னல், ஆத்மாவை ஜனனமரணங்களிலிருந்தும் விடுவிக்கக்கூடியஞான த்தை உண்மையாகத் தேடவேண்டும் ப்ரதத்தையுள்ளவன் பிராம் மணனிடமிருந்தோ க்ஷத்ரியனிடமிருந்தோ வைச்யனிடமிருந் தோ சூத்ரனிடமிருந்தோ நீசனிடமிருந்தோ எப்பொழுதும் ஞான த்தையடைந்து ப்ரதத்தைவைக்கவேண்டும் ப்ரதத்தையுடையவனே ஜனனமரணங்கள் தொடருகிறதில்லை. பிரம்மத்தினிடமிருந்துண் டான எல்லா வர்ணதாரர்களும் பிராம்மணர்களே. எல்லாரும்

1 வேறு பாடம்.

2 'சிறந்தசாஸ்திர ஞானத்தால்' என்றும் கொள்ளலாம்.

எங்காவும் பிரம்மத்தைச் சொல்லுகிறார்கள்[1]. பிரம்மஞானத்தினால் உண்மையானசாஸ்திரத்தைச் சொல்லுகிறேன். ஸகலஜகத்தும் எல்லாமாயிருக்கிற இந்தப்பிரம்மமே. பிரம்மாவின்முகத்திலிருந்தும் பிராம்மணர்களுண்டானார்கள்; கைகளிலிருந்தும் அரசர்களுண்டானார்கள்; காபியிலிருந்தும் வைசியர்களுண்டானார்கள்; பாதங்களிலிருந்தும் சூத்ரர்களுண்டானார்கள். எல்லாவர்ணங்களையும் வேறுவிதமாக அறியக்கூடாது. அரசனே! அவர்கள் அஜ்ஞானத்தால் அந்தஅந்த வினைக்குரியபிறவியைஅடைந்து கெட்டுப்போகிறார்கள். அப்படியே அறிவீனமானவர்களில் மிகுந்த அஜ்ஞானத்தால் பிராகிருதமான பலபிறவிகளில் விழுகின்றன. ஆகையால், ஞானமானது [2]அவ்விதமாகவாவது தேடத்தக்கது இந்தப் [3]பிரம்மமானது எங்குமிருக்கிறதென்பது என்னால் உனக்குச் சொல்லப்பட்டது. ஓ! அரசனே! [4]பிரம்மாவானாலும் மற்றவனானாலும் அந்தப்பிரம்மத்திலிருக்கிறவனுக்கு நிலைபெற்ற மோக்ஷமுண்டென்று சொல்லுகிறார்கள். அரசனே! நீ கேட்டதை நான் உனக்கு உண்மையாக உபதேசித்தேன். சோகமற்றவனாகி அதை அடையக்கடவாய். இந்தஅர்த்தத்தினுடைய முடிவை அடையக்கடவாய் நன்றாகச் சொன்னேன். உனக்கு எப்பொழுதும் க்ஷேமமுண்டாகுக' என்றுசொன்னார். இவ்விதம் புத்திமானுனயாஜ்ஞவல்கியரால் மிதிலாதிபதியான அரசர் உபதேசிக்கப்பட்டு உடனே பிரீதியுள்ளவரானார். தேவராதனுடைய புத்திரரும் மோக்ஷத்தைஅறிந்தவருமான ஜனகராஜர் முனிவரிற்சிறந்தஅந்த யாஜ்ஞவல்கியரை ப்ரதக்ஷிணம்செய்ய, அவர் சென்றனர். பிறகு, அந்தஅரசர் அவ்விடத்திலிருந்து கோடிப்பசுக்களையும் கோடி ஸுவர்ணங்களையும் தானஞ்செய்தார். அப்பொழுது, வேதியர்களுக்கு ரத்னங்களைக் கையினால் அள்ளிக்கொடுத்தார். உடனே, அவர் புத்திரனிடம் ராஜ்யத்தை வைத்துவிட்டு யதிகளுடைய தர்மத்தை அநுஷ்டித்துக்கொண்டு வவிலித்தார். ராஜஶ்ரேஷ்டனே! அவர் ஸாங்கியசாஸ்திரத்தையும் யோகசாஸ்திரத்தையும் முழுதும் அத்யயனம் செய்துகொண்டு [5]பிராகிருதமான தர்மா

---

1 அதிகபாடமான அரைஸ்லோகம் விடபபட்டது.

2 'யாரிடத்திலிருந்தும்' என்றும் கொள்ளலாம்

3 'ஞானம்' என்றும் கொள்ளலாம்.

4 'அந்தஞானநிஷ்டையுள்ளவனே ப்ராம்மணன். எவனுயிருந்தாலும் ஞானநிஷ்டையுள்ளவனுக்கு நித்யமானமோக்ஷமுண்டென்று சொல்லுகிறார்கள்' என்றும் கொளளலாம்.

5 அவித்தையாலுண்டான.

தர்மங்களை, நிந்தித்து, நித்யனும் சேவலனுமாயிருக்கிற தன்னை அனந்தனென்றுகருதித் தர்மாதர்மங்களையும் புண்ணியபாபங்களையும் ஸத்யாஸத்யங்களையும் ஜனனமரணங்களையும் பிராகிருதமாகநிச்சயித்து அந்தப்பிரம்மத்தையே சிந்தித்தான். ஓ! மன்னரிற்சிறந்த அரசனே! தங்கள்சாஸ்திரத்தில்பிரவிருத்தர்களான ஸாங்கியர்களும் யோகிகளும் இந்தத்தர்முதலானவை அவித்தையின் காரியமென்று ளி்பொழுதும் பார்க்கிறார்கள். பரதத்திற்கும் பரமானபிரம்மமானது இஷ்டாநிஷ்டங்களால்விடப்பட்டு (அவனிடம்ஸ்திரமாய்) இருந்ததல்லவா? அந்தப்ரம்மத்தை வித்வான்கள் எப்பொழுதும் சுத்தமுள்ளதாகச் சொல்லுகின்றார்கள். ஆகையால், நீ சுசியுள்ளவனுகக்கடவாய். அரசனே! கொடுக்கப்படுவதும் அடையப்படுவதும் கொடுக்கப்பட்டதைஸம்மதிப்பதும் அவ்யக்தத்தாலென்று நினை. வேறுவிதமாக நினையாதே. கொடுப்பதும் வாங்குவதும் 'அவ்யக்தமே. 'அவ்யக்தன் கொடுக்கிறான் அவ்யக்தன் கிரகிக்கிறானென்றிருப்பதால் ஆதமாவைச்சேர்ந்தவன் ஆத்மாவருவனே அவனைக்காட்டிலும் வேறாயவன் சிறந்தவனுவான?' என்று எப்பொழுதும் நினை. வேறுவிதமாக நினையாதே ஸகுணமான அவ்யக்தத்தையும் நிர்க்குணத்தையும் அறியாதவனும் பண்டிதனுமானவன் புண்ணிய தீர்த்தஸ்நானங்களையும் யாகங்களையும் செய்யவேண்டும். குருவம்சத்திலுதித்தவனே! ஒருவன் தன்னுடைய வேதங்களாலும் தவங்களாலும் யாகங்களாலும் அவ்யக்தஸ்தானத்தை அடைகிறதில்லை. அவ்யக்தத்தை அறிந்தவன் பூஜிக்கப்படுகிறான்; அப்படியே, மகத்தத்வத்தின் ஸ்தானத்தையும் அஹங்காரத்தின் ஸ்தானத்தையும் அஹங்காரத்திற்குமேலுள்ள ஸ்தானங்களையும் அடைவான். சாஸ்திரத்தில் பற்றுதலுடையவர்களும் அவ்யக்தத்தைக்காட்டிலும் வேறுவதும் நித்ய மூமாயிருக்கிற ப்ரம்மத்தை அறிகிறவர்களுமானவர்கள் ஜனன மரணமற்றதும் எப்பொழுதும்டங்தமற்றதும் ஸதஸதரூபமான பிரபஞ்சமுமாயிருக்கிற (அதையடைகிறார்கள்.) ஓ! அரசனே! நான் இந்தப் பிரம்மஜ்ஞானத்தைப் முன்காலத்தில் ஜனகரிடமிருந்து அடைந்தேன். அவரும் யாஜ்ஞவல்கியரிடமிருந்து அடைந்தார். ஞானமானது சிறந்தது. யாகங்கள் அப்படியல்ல (மனிதன்) ஞானத்தினால் துர்க்கத்தைத் தாண்டுகிறான்; யாகங்களால் தாண்டுகிறதில்லை. ஓ! அரசனே! ஞானத்தை அறிந்தவர்கள் ஜனனத்தையும் மரணத்தையும்

---

1 இடம் காலம் பொருள்மூன்றும் அனவிடற்கரியவன்.

2 தாண்டுவதற்கு அரியது.

தர்க்கமாகச் சொல்லுகின்றார்கள். [1]பௌதிகமான தர்க்கத்தைத் தர்க்கமாகச் சொல்லுகிறதில்லை. (மனிதர்கள்) யாகங்களாலும் தவங்களாலும் நியமங்களாலும் விரதங்களாலும் ஸ்வர்க்கத்தையடைந்து (திரும்பவும்) பூமியில் ஜீவிக்கின்றார்கள். ஆகையால், மகத்தும் சுத்தமும் புண்களாலும் மோக்ஷரூபமும் நிர்மலமும் பரிசுத்தமுமான படியும் பொருளே உபாஸிக்கத்தக்கவாய். ஓ! அரசனே! [2]க்ஷேத்ரத்தை அறிந்து உண்மையான ஞானமாகிற யாகத்தையுபாஸித்து ரிஷியாவாய். முன்காலத்தில் அந்தியாஜ்ஞவல்கியர் ப்ரம்மத்தைப்பற்றிய உபதேசத்தை ஜனகராஜருக்கு உபதேசித்தார். அந்தஜனகர் (வித்வான்களால்) தியானம்பண்ணப்பட்டதும் அனைதியும் அழிவற்றதும் சுபமும் சோகமற்றதும் மோக்ஷரூபமுமான அந்தப்பிரம்மத்தை அடைந்தார்" என்று சொன்னர்.

மூன்றூற்றிருபத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பஞ்சசிகர் முப்பு இறப்புக்களைத்தாண்டும் வகையை ஜனகருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "ஓ! பரதஸ்ரேஷ்டரே! மிகுந்த வல்லமையை அடைந்தோ, அதிகமான தவத்தையடைந்தோ அல்லது ஞாபகசக்தியை யடைந்தோ எப்படி மிருத்யுவைத்தாண்டலாம்? பௌதிகதவத்தினாலேயா? அல்லது கர்மாவினாலேயா? அத்தியயனத்தினாலேயா? ரஸாயனங்களை உண்பதினாலேயா? எந்த உபாயங்களால் ஜராமரணங்களை அடையாமலிருப்பான்?" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானர்.

"இவ்விஷயத்திலும் பஞ்சசிகரென்கிற ஸன்பாவிக்கும் ஜனகருக்கும் நடந்த ஸம்வாதரூபமான பழையசரித்திரத்தைச் சொல்லுகிறார்கள். விதேஹகுலதிலதித்த ஜனகமஹாராஜர், வேதத்தை நன்றாய் அறிந்தவரும் தர்மார்த்தங்களில் ஸம்சயமற்றவருமான, பஞ்சசிகரென்கிற மஹரிஷியைநோக்கி, 'ஓ! பகவானே! ஒருமனிதன் தவத்தினாலேயா அல்லது வேதாத்தியயனத்தினாலேயா மதியினாலேயா அல்லது கர்மாவினாலேயா எந்த நடக்கையினால் ஜராமரணங்களைத் தாண்டவேண்டும்?' என்று வினவினர். இவ்விதம் வினவ, (எல்லாவற்

1 மனில் அகம்முதலிவை. 2 சரீரம்.

றையும்). ப்ரத்யக்ஷமாய்ணர்ந்த அந்தப் பஞ்சசிகர் விதேஹராஜரை நோக்கி, 'இந்தஜராமரணங்களுக்கு நிவிருத்தியில்லை. ஒருவிதத்தா லும் இவைகளை மீறிச்செல்லமுடியாது. சென்றபகல்கள் மறுபடியும் திரும்புகிறதில்லை. மாளங்களும் திரும்புகிறதில்லை. ராத்ரிகளும் திரு ம்புகிறதில்லை. எல்லாப்பிராணிகளையும் நாசஞ்செய்வதும் நிலையாதது மான இந்தக்காலமானது நெடுநாளாக நீலையானமார்க்கத்தை அடை கின்றது. (அதனால்) பிராணியானது பிரவாஹத்தாலிழுக்கப்படுவது போல இழுக்கப்படுகிறது. (இவ்விதம்) இழுக்கப்பட்டவனும் ஜராமர ணங்களாகிற பெரிமுதலைகளையுடையதும் ஓடமில்லாததுமான கால மாகிற ஸமுத்திரத்தில் முழுகுகின்றவனுமான ஒருவனும் மீறுகிறது மில்லை. ஒருவனும் இவனைச சேர்ந்தவனில்லை; இவனும் ஒருவனையும் சேர்ந்தவனுகிறதில்லை. மனைவியோடும், மற்றஉறவினர்களோடுமுண் டான சேர்க்கையானது மார்க்கத்திலுண்டானசேர்க்கைபோன்றது. ஒருவனுலும் இது நெடுநாள் ஸஹவாஸமாக முன்னமே அடையப் பட்டதில்லை. அடிக்கடி அதனோடு சேர்ந்தும் விடப்படுகிறார்கள். கால த்தால்சென்றுகொண்டிருக்கிற பிராணிகள், கர்ஜிக்கின்ற மேகங்கள் காற்றினல் பிரிக்கப்படுவதுபோல, அந்தஅந்தக்காரணங்களால் அடிக் கடி பிரிக்கப்படுகின்றன. ஜராமரணங்கள் சேங்நாய்கள்போல வலி மையுள்ளவைகளும் சிறியவைகளும், பெரியவைகளுமான எல்லாப் பிராணிகளையும் விழுங்குகின்றன. எப்பொழுதுமுள்ளவைகளும் நிலை யில்லாதவைகளுமாயிருக்கிற இவ்விதப்பிராணிகள்பிறக்கும்போது எப்படி ஸந்தோஷிக்கலாம்? மரிக்கும்காலத்திலும் வருத்தத்தை அடை யக்கூடாது. 'நான் எங்கிருந்துவந்தேன்? நான் யார்? எங்கே போ கப்போகிறேன்? எவனைச்சேர்ந்தவன்? எவ்விடத்திலிருந்தேன்? எத னல் எங்கே உண்டாகப்போகிறேன்?' என்று ஏன் வருத்தப்படுகிறாய்? ஸ்வர்க்கத்தைப் பார்த்தவனுமில்லை. அப்படியே நரகத்தைப்பார்த்த வனுமில்லை. வேதங்களை அதிக்ரமியாமல் தானஞ்செய்யவும் 'வேண் டும்; யாகஞ்செய்யவும் வேண்டும்' என்று மறுமொழிகூறினர்'' என்று சொன்னர்.

———

ஸ்ரீ மஹர் பாரதம்.

மூன்றூற்றிருபத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஜனகருக்கும் ஸுலபைக்கும் முக்தலக்ஷணமுதலியவற்றைப்பற்றி நடந்த ஸம்வாதம்.)

யுதிஷ்டிரர், "ஓ! குருவம்சத்திய ராஜரிஷிகளிற்சிறந்தவரே! இருகஸ்தாஸ்ரமத்தைவிடாமல் எந்த அரசன் ஸித்தியை அடைந்தான்? மோக்ஷதத்வத்தை எனக்குச் சொல்லும். ஓ! பிதாமஹரே! இந்த லிங்கசரீரமும் வ்யக்தமான ஸ்தூலசரீரமும் எப்படிவிலக்கப்படுகின்றனவென்பதையும் மோக்ஷத்தின் பரமார்தத்வத்தையும் எனக்குச் சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர். "பாரத! இக்கவிஷயத்திலும் ஜனகருக்கும் ஸுலபைஎன்பவளுக்கும் நடந்தஸம்வாதரூபமான ஒரு பழையசரித்திரத்தைச் சொல்லுகின்றார்கள். முன்காலத்தில், ஸன்யாஸத்தின்பயனை அடைந்தவரும் மிதிலாதிபதியும் தர்மத்வஜரென்று பிரஸித்திபெற்றவருமான ஜனகரென்கிற ஓர் அரசர் இருந்தார். [1]வேதத்திலும் மோக்ஷசாஸ்திரத்திலும் தம்முடையசாஸ்திரமான ராஜநீதியிலும் தேர்ச்சிபெற்றஅவர் இந்திரியங்களை அடக்கிக்கொண்டு இந்தப்பூமியை ஆண்டுவந்தார். உலகங்களிலுள்ள வேதவித்துக்களும் பிராஜ்ஞர்களுமான மற்றமனிதர்கள் அவருடைய அந்தஸல்லடக்கையைக்கேட்டுப் புருஷர்களிற்சிறந்த அந்தஜனகரை விரும்பினார்கள். பிறகு, தர்மத்தைப்பிரதானமாகவுடைய அந்தயுகத்தில் யோகதர்மத்தைஅனுஷ்டிக்கின்ற ஸுலபையென்கிற ஒருபிக்ஷுகியானவள் (பூமிமுழுமையும்) ஸஞ்சரித்தாள். இந்தஉலகமுழுமையும்ஸஞ்சரிக்கின்ற அந்தஸுலபையானவள் அங்கங்கே திரிதண்டிகளானயதிகள், 'மிதிலாதிபதி மோக்ஷசாஸ்திரத்தில்நிபுணன்' என்றுசொல்வதைக்கேட்டாள். அவள், மிகவும்ஸூக்ஷ்மமான ஜனகருடையசரித்திரத்தைக் கேட்டு உண்மையா அன்றுவென்று ஸந்தேஹித்து அவரைப் பார்க்க விரும்பினாள். அப்பொழுது, குற்றமற்ற அங்கங்களுடையஅவள், உடனே யோகசக்தியினால் தன்னுடையபழையரூபத்தைத்தள்ளிவிட்டு மிகவும்உத்தமமானவேறுரூபத்தை எடுத்தாள். அழகானபுருவங்களும் தாமரைமலர்கள்போன்றகண்களுமுடைய அந்தஸுலபையானவள் வேகமுள்ள அஸ்திரத்தின்கதிபோல நடந்து இமைப்பொழுதில்

1 சர்மகாண்டத்திலும்.

விதேக அரசர்களுடைய பட்டணத்தை அடைந்தாள். அவள் செல்வ வான்களால் நிரம்பியதும் அழகுள்ளதுமான மிதிலையை அடைந்து பிக்ஷாடனமென்கிற வியாஜத்தினுல் மிதிலாதிபதியான ஜனகரைக் கண் டாள். அப்பொழுது, அரசர் அவளுடைய சிறந்த அழகைப் பார்த்து, 'இவள் யார்? யாரைசசேர்ந்தவள்? எங்கிருந்து வருகிறாள்?' என்று ஆச்சரியத்தை அடைந்தார்; பிறகு, அவளுக்கு நல்வரவுகூறி உத் தமமான ஆஸனங்கொடுத்துப் பாதபரக்ஷாளனம் செய்து பூஜித்துச் சிறந்த அன்னத்தினுல் திருப்தியடையும்படி செய்தார். பிறகு, அர சர் மந்திரிகளால் சூழப்பட்டுப் போஜனம் செய்தவளும் பிரீதியடைந் தவளுமான அந்தபிக்ஷுகியை ஸர்வபாஷ்யங்களுமுணர்ந்த பண்டிதர் களின் நடுவில் சிலகேள்விகளைக் கேட்டார் ஓ! அரசனே! யோகத் தை அறிந்தஸுலபை, 'யோகதர்மங்களில இவன் முக்தனே அல் லனே' என்றஸம்சயத்துடன் அவருடைய புத்தியினு தன்னுடைய புத்தியினுல் பிரவேசித்தவளானுள். அந்த ஸுலபையானவள் இவ ருடைய நயனங்களின் கிரணங்களைத் தனது கிரணங்களோடு சேரச் செய்து நேத்ரங்களால் அவரை எவி யோகத்தினுலுண்டான (மனே) பந்தங்களால் கட்டினுள். ராஜர்ஷேவ்டனே! ஜனகராஜரும் சிரித் துக்கொண்டு இவளுடையஅபிப்பிராயத்தை (தம் அபிப்பிராயத்துடன் கலவாமல்) வேறுபடுத்தித் தம்முடைய அபிப்பிராயத்தினுல் அவளு டைய அபிப்ராயத்தைத் தாம் கிரகித்தார். அபபொழுது, குடைமுத லானவைகளில்லாத ஜனகருக்கும் திரிதண்டமுதலானவையில்லாத ஸுலபைக்கும் ஒரு சரீரத்தில் ஒருஸம்வாதம் உண்டாயிற்று. அதனைச் சொல்லுகிறேன்; கேள். பூபதியானஜனகர், 'பூஜிக்கத்தக்கவ ரான (உன்னுடைய) இந்தயோகானுஷ்டானமானது எவ்விடத் தில் அப்யஸிக்கப்பட்டது? எங்கே போகிறாய்? நீ யாரைச்சேர்ந்த வள்? எங்கிருந்துவருகிறாய்? [1]சாஸ்திரவிஷயத்திலும் பிராயத் தின்விஷயத்திலும் ஜாதிவிஷயத்திலும் உண்மையானது அறியப் படவில்லை. ஆகையால், இந்தவிஷயங்களில் என்னுடன் சேர்க்கையின் நிமித்தம் விடைகூறவேண்டும். என்னை நீ குடைமுதலான (பேதங்ய) விசேஷங்களில் முக்தனென்று உன்னுமையாக அறியக்கடவாய். நீ என்னுல் பூஜிக்கப்படத்தக்கவளென்று தோன்றுவதனுல் நான் உன்னை நன்றாய் அறியவிரும்புகிறேன். முற்காலத்தில் வைசேஷிகசாஸ்திர ஜ்ஞானத்தை எனக்கு உபதேசித்தவரும் மோக்ஷசாஸ்திரத்தை நன்று

---

[1] இதனுல் தன்னுடையபுத்தி அவளுடைய புத்தியினுல்பிரவேசிக்கப்பட வில்லை என்று காண்பித்தார்

கச்சொல்வதில் ஒப்பற்றவருமான எனது ஆசார்யர் யார் என்பதைக் கேள். நான், பராசரமஹரிஷிக்கு ஸமானகோத்ரமுடையவரும் பிராய முதிர்ந்தவரும் மஹாத்மாவும் ஸன்யாஸியுமான பஞ்சசிகருக்கு மிக்க ப்ரியனானசிஷ்யன். நான் ஸாங்கியஞானம் (யோகம் ராஜநீதி ஆகிய (ஞானம் உபாஸனம் கர்மம் என்கிற) இந்தமூன்றுவிதமான மோக்ஷ தர்மத்திலும் வெகுதூரஞ்சென்று ஸந்தேகந்தெளிந்தவன். அந்தப் பஞ்சசிகர் (ஸன்யாஸியானதால்) சாஸ்திரத்தில்கண்டபடியான மார்க் கத்தினால் இவ்வுலகத்தில ஸஞ்சரிக்கையில முன்னொருகாலத்தில் என் னிடத்தில் மழைக்காலமான நான்குமாதங்கள் ஸுகமாக வஸித்தார். ஸாங்கியர்களில் சிறந்தவரும் அர்த்தத்தை நன்றகப் பார்த்தவருமான அவர் மூன்றுவிதமான மோக்ஷதர்மத்தையும் எனக்கு உண்மையாக உபதேசித்தார். ராஜ்யத்திலிருந்து விலகும்படி செய்யவுமில்லை நான் மேல்னைபதத்திலிருந்துகொண்டு மோக்ஷத்தை அடுத்த மூன்று விதமான அந்த எல்லாவிருத்தியையும் ஆசையற்றவனும் ஒரு வனுமாயிருந்து அனுஷ்டிக்கின்றேன் வைராக்யமோ இந்த மோக்ஷத் திற்கு உயர்ந்தஸாதனம் முக்திபெறுவதற்குகாரணமான வைராக்ய மும் ஞானத்தினல்தான்உண்டாகிறது. ஞானத்தினல் [1]யத்னத்தைச் செய்கின்றன். யத்னத்தினல் [2]பெரியஅறிவு அடையப்படு கிறது. மஹத்தான ஞானமே ஸுகதுக்கமுதலான இரட்டைகளுடைய நாசத்திற்குக் காரணமாகின்றது. அந்த இம்மூன்றின் வ்ருத்தியா னது, [3]பிராயத்தை அதிக்ரமித்தது. துவந்துவமில்லாத இந்த மேலான வ்ருத்தியானது இவ்வுலகத்திலேயே ஸங்கல்பிட்டு மோஹமும் நீங்கி ஸஞ்சரிக்கிறவனை என்னல் அடையப்பட்டது. (உழவு முதலியவற் றல்) மிருதுவானதும் ஜலத்தினல் நனைக்கப்பட்டதுமான பூமியானது மூளையை உண்டாகசெய்வதுபோல மனிதர்களுடைய கர்மமானது மறுஜன்மத்தை உண்டாகசெய்கின்றது. ஒட்டிலாவது அல்லது வேறு எதிலாவது நன்றக வறக்கப்பட்ட வித்தானது மூளைக்குக்கா ரணமாயிருந்தும் மூளைக்குந்தன்மையில்லாமையால் மூளைக்கிறதில்லை. சிஷ்யனென்கிறவர்த்தையுடன் கூடின பெயரைபுடையவரும் பிரஹ்மவு மான அந்தப்பகவானுலே (ஸாஸனியாகிற) வித்தில்லாமல் செய்யப்பட் டமையால் என்னுடையஞானமானது விஷயங்களில் செல்லுகிறதில்லை ;

1 முயற்சி; 'யோகாப்யாஸம்' என்பது பழையஉரை.
2 'மஹத்' என்பது மூலம்; 'ஆத்மஜ்ஞானம்' என்பது பழையவுரை.
3 மிருத்யுவைஜயித்தது.

திலும் பற்றுகிறதில்லை; ஸ்திரீமுதலானஇடத்திலும் பற்றுகிறதில்லை. பீயனில்லாமையால் இவற்றின் விஷயத்திலுண்டான விருப்புவெறுப் புக்களிலும் பற்றுகிறதில்லை. என்னுடைய வலக்கையைச் சந்தனத் தினால்நீண்டப்பவனும் இடக்கையை வாளாலேவெட்டுபவனுமாகிய இவ் விருவரும் எனக்குசமானமானவர்கள். அடிபடப்பட்டநான், ஸுதி யும் பயனையடைந்தவனும் ஓட்டாஞ்சில்லியும் கல்லும் பொன்னும் ஸமமானவனும் பற்றற்றவனும் மற்றபதிமனோநிக்ரஹமுடியவனுமாகி ராஜ்யதத்திலிருக்கின்றேன். மோக்ஷதர்மத்தையறிந்தவர்களிலுத்தமர் களால மோக்ஷதர்மதத்தில் மூன்றுவிதமானநிஷ்டைகள் காணப்ப டுகின்றன. மோக்ஷசாஸ்திரத்தையறிந்தவர்களான கிலஜனங்கள் உலகத்தில் உத்தமமானஞானத்தையும் எல்லாக்கர்மங்களையும்விடு வதையும் ஞானநிஷ்டையாகச் சொல்லுகின்றார்கள். நுணுக்கமா கப்பார்க்கின்றவர்களான மற்றபதிகள் கர்மநிஷ்டையைச சொல்லு கின்றார்கள். மஹாத்மாவான அந்தப்பஞ்சசிகர் கேவலஞானமும் கேவலகர்மமுமாயிருக்கிற அந்தஇரண்டையுமே தள்ளிவிட்டு இந்த மூன்றுவது நிஷ்டையை நன்றுகச சொல்லியிருக்கிறார். யமமும் நியமமும் காமமும் துவேஷமும் ஸ்திரீமுதலான பரிச்சிரகமும் கவ மும் டம்பமும் ஸ்நேகமும்அகிய இவைகளில் இருக்கும் விஷயத்தில் அந்தயதிகள் கிருகஸ்தர்களோடொப்பபானவர்களே. திரிதண்டமுத லானவையிருக்கையில் ஒருஞானத்தினால் மோக்ஷமிருக்குமேயானால் குண்டமுதலானவைகளிருந்தால் என்மோக்ஷமேற்படாது? பற்றிதலா னது இருவருக்கும் ஸமம்தானே இவ்வுலகத்தில் எவனுக்கு எந்த எந்தக்காரணத்தால் கர்மத்தில் பயன் எற்படுகின்றதோ அவன் தன் னுடையபயனுக்காகக் கொள்ளப்பட்ட எல்லாத் திரவியத்திலும் அதைஅதைப் பற்றுகின்றான். கிருகஸ்தாச்ரமத்தில் தோஷத்தைப் பார்த்து வேறு ஆச்ரமத்தில் பிரவேசிக்கின்றவன் ஒன்றைவிட்டு மற்றொன்றைக்கிரகித்தவனைலும் [1]ஸங்கத்தினின்றும் விடுபடுவ தில்லை. அப்படியே, (சிஷ்யர்கள்முதலானவர்கள் விஷயத்தில்) நிக்ர ஹானுக்ரஹரூபமான அதிகாரமானது ஸமானமாயிருந்தலால் அரசர் களுக்கொப்பான பிக்ஷுக்கள் எந்தக்கர்மத்திலை விடுபடுகிறார் கள்? இதத்தில் யஜமானத்தன்மையானது இருந்தாலும் கேவலம் ஞானத்தினாலேயே விடுபடுகிறார்களென்றால் மேலான ராஜ்யஸ்தானத் திலிருப்பவர்கள் ஏன் விடுபடுகிறதில்லை? காஷாயதரித்தல் முண்ட னஞ்செய்துகொள்ளுதல் மூன்றுதண்டம்சேர்த்துதரித்தல் கமண்

1 'ஸங்கமிருத்தலால்' என்றும் கொள்ளலாம்; ஸங்கம்=அபிமானம்.

டதுஆகிய மோகஷமார்க்கத்திற்குரிய வெளிப்படையான (இந்த) அடையாளங்கள் மோகஷத்திற்குக்காரணமாகாவென்பது என்னுடைய எண்ணம் இந்த அடையாளமிருந்தாலும் இந்தவுலகத்தில் துக்கத்தின் நிவிருத்திக்கு ஞானமேகாரணமானால் அடையாளம் மாத்திரம் பயனற்றது அல்லது, துக்கத்தின்குறைவை ஆலோசித்து அடையாளத்தில புத்திவைக்கப்பட்டதேயானால் குடைமுதலானராஜலக்ஷணங்களிலும் அந்தப் [1]பொதுவானப்யன்தானே காண்ப்படுகிறது? ஒன்றுமில்லாமலிருப்பதில் மோகஷமிருக்கிறதென்பதில்லை. ஏதாவதிருப்பதில பந்தமிருக்கிறதென்பதுமில்லை. செல்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் பிராணியானது ஞானத்தினால் முக்தியை அடைகிறது. ஆகையால், பந்தத்துக்கிருப்பிடமான தர்மார்த்தகாமங்களும் ராஜ்யபாரமும் இருக்கையிலும் பந்தமற்ற ஸ்தானத்திலிருப்பவனுக ள்ன்னை அறியக்கடவாய் இவ்வுலகில ராஜ்யம்அதிகாரமிவைகளின்ஸ்வரூபமும் ஸ்நேகத்திற்கிருப்பிடமான (ஸ்திரீமுதலான வர்களிடத்தில்) கட்டுகிறதுமான பாசமானது என்னுலே மோகஷமாகிறபாறையில்மோட்டப்பட்ட தியாகமென்கிற கத்தியால அறுக்கப்பட்டது. பிகூஷுகியே! இவ்விதமானதன்மையை அடைந்தவனும் முக்தனுமானநான் உன் விஷயத்தில் ஆதரவுடையவனுயிருக்கிறேன். உன்னுடைய ரூபமோ உண்மையானதன்று. அதைச சொல்லப்போகிறேன். என்னிடம் கேள். உனக்கு மார்த்தவம் அழகு மேன்மை பொருந்தியசரீரம் (தருண) வயது இவையனைத்துமிருந்தும் நியமமும்உண்டென்பதில் சந்தேகம் உண்டாயிருக்கிறது. உன்னுடைய செய்கையும் இந்தவேஷத்திற்குப் பொருந்தாதது. 'இவன் முக்தனுயிருப்பானேன்? இராவேன்?' என்ன என்னுடையசரீரமானது அவமதிக்கப்பட்டதாகும். மூன்றுதண்டமுடையவளே! யோகியாயிருந்தாலும் ஆசையுள்ளவனிடத்தில் (முக்தனுடையலக்ஷணமானது) இருக்கிறதுமில்லை. இந்தமுக்தலக்ஷணமானது உன்னால் ரக்ஷிக்கப்படவுமில்லை. முக்தனுக்கு [2]மறைவானவ்யவஹாரமில்லை என்னுடைய சரீரத்தை உன்னுடைய இச்சையினுலே அடைந்தாய். அபபடி என்னுடைய [3]பாகஷத்தை அடைந்ததால் உனக்குண்டானதோஷத்தைக் கேள். நீ என்னகாரணத்தினால் என்னுடையராஜ்யத்திலும் பட்டணத்திலும் பிரவேசித்தாய்? யாருடையஸம்பந்தத்தால் நீ என்னு

---

1 தாரித்ரியத்தாலுண்டான துக்கம்குறைதல்.

2 'பிறனோகிக்கிறசெயலும் வேண்டுவதில்லை' என்றும் கொள்ளலாம்.

3 சரீரத்தை.

டையமனத்தில் புகுந்தாய்? நீ வர்ணங்களுள் சிறந்த ப்ராம்மணஸ்திரீயாயிருக்கிறாய். நானோ க்ஷத்ரியன். நம்மிருவருக்கும் ஒரு சேர்க்கையுமில்லை. நீ வர்ணங்களுடைய [1]ஸங்கரத்தைச் செய்யாதே. நீ மோக்ஷதர்மமுள்ளவளாயிருக்கிறாய். நான் கிருகஸ்தாச்ரமத்திலிருக்கிறேன். ஆச்ரமஸங்கரமான இதுவும் உனக்கு இரண்டாவது தோஷம். நீ ஸமானகோத்ரமுடையவளோ வேறுகோத்ரமுடைய வளோவென்று நான் அறியவில்லை. நீயும் என்னை அறியவில்லை. (ஒருபோது) ஸமான கோத்ரமுடைய என்னை அடைந்தவளானால் உனக்கு மூன்றுவதான கோத்ரஸங்கரம் ஏற்படுகிறது. தவிரவும், உன்னுடையப்தியானவர் ஜீவித்திருக்கிறாரோ; அல்லது எங்கேயாவது போயிருக்கிறாரோ பிறனுடைய மனைவி சேரக்கூடாதவளென்றிருப்பதால் நான்காவதானதர்மஸங்கரம் ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட நீ காரியத்தை அபேக்ஷித்து இந்தக் கெட்டகாரியங்களைச் செய்கிறாயா? அல்லது, அறியாமையினாலா? அல்லது, பிராந்தியினாலா? அல்லது, இப்பொழுது ஏதாவது உன்னுடையமோக்ஷத்தினால் ஸ்வதந்திரையாயிருக்கிறாயா? அப்படியானால், உனக்குஇருக்கிற கிறிது சாஸ்திரஞானமும் முழுதும் பயனறறதாகிவிட்டது உன் சித்தத்தை என்சித்தத்துடன் சேர்த்தென்பது மூன்றுவதுதோஷம் இது துஷ்டையென்பதற்கு அடையாளமாக உன்னால் வெளியிடப்பட்டதென்று தெரிகிறது. ஜயத்தை விரும்புகிறவளான நீ என்னைமாத்திரம் ஜயிக்கவிரும்பவில்லை. என்னுடைய இந்தஉடலையும் அழைத்தையும் ஜயிக்கவிரும்புகிறாய். அப்படியே, பூஜ்யர்களையும் ஜயிக்கவிரும்புகிறாய். ஆகையினாலேதான், நீ என்பக்ஷத்தைக்கெடுப்பதற்கும் உன்பக்ஷத்தை மேன்மைப்படுத்துவதற்கும் (உன்னுடைய) பார்வையை ஒவ்வொருவரிடத்திலும் செலுத்துகிறாய். அப்படிப்பட்ட நீ பொறுமையாலும் யோகவித்தியின் மோகத்தாலும் மயங்கி மறுபடியும் விஷத்தையும் அமிருதத்தையும் சேர்ப்பதுபோல (என் புத்தியுடன் உன்புத்தியைச) சேர்க்கிறாய். இவ்வுலகில், (பரஸ்பரம்) ஆசையுள்ள ஸ்திரீபுருஷர்களுடைய சேர்க்கையானது அமிருதத்திற்கொப்பாகும். 'தன்னைவிரும்புகிற புருஷனைப்படவில்லை' என்கிற அந்தத்தோஷமும், விஷத்திற்கொப்பாகும். (ஸ்வதர்மத்தை) [2]விடாதே. நன்றாக ஆராய்ந்துபார். [3]உனக்குரிய (யதி) சாஸ்தி

---

1 கலப்பு.

2 'மாத்யாகூடீ:' என்பது மூலம்? 'என்னைவிட்டுவிடு' என்றும் கொள்ள

3 யதிகளுக்குரிய உன்னுடைய சாஸ்திரத்தை. [லாம்.

* 1. எச

சத்தைக் காப்பாற்று. '(இவன்) முக்தனா?' 'அல்லனா?' என்று என்னை அறியவேண்டுமென்னும் விருப்பத்தை நிறைவேறற்கு. உன்னுடைய மறைவான செய்கைகளை எல்லாம் நீ என்னிடம் மறைக்கக் கூடியவளல்லை. அப்படிப்பட்ட நீ உன்காரியத்திற்காகவாவது வேறு அரசனுடைய கார்யத்திற்காகவாவது [1]வேஷம்மாறிக்கொண்டு என்னிடம் உண்மையை மறைக்கத்தக்கவளல்லை. அரசனைக் கள்ளத்தனமாக அணுகக்கூடாது. பிராம்மணனை எவ்விதத்திலும் அப்படி அடையக்கூடாது. பெண்களுக்குரிய குணங்களையுடைய மனைவிகளையும் கள்ளத்தால் அடையக்கூடாது. இவர்களைக் கபடமாக அணுகுகிறவர்கள் நாசமடைவார்கள். அரசர்களுக்கு ஐச்வர்யம் பலம். பிராம்மணர்களுக்கு வேதம் பலம். பெண்டிர்களுக்கு அழகும் யௌவனமும் கற்பும் மிகச்சிறந்தபலம் ஆகையால், தன்னுடையஸ்வபாவத்தைவிரும்புகிறமனிதன் இந்தமூன்றையுமே பலமாகக்கொண்ட இவர்களை நேர்வழியால் அடையவேண்டும். கோணலானவழியானது கெடுதலுக்குக்காரணமாகும். (ஆகையால்,) நீ உன்ஜாதி, வித்தை, ஆசாரம், அபிப்பிராயம், ஸ்வபாவம், வரவின்நோக்கம் இவ்வளவையும் உள்ளபடி சொல்லவேண்டும்' என்றுகேட்டார். இவ்விதம் ஸாதமில்லாதவைகளும் யோக்யமில்லாதவைகளும் பொருந்தாதவைகளுமான வார்த்தைகளைக்கூறி அரசர் விலக்கவும் ஸைலபை சலிக்கவில்லை. அரசர்சொல்லிமுடித்தபிறகு, அழகானரூபமுடையஸைலபை அவரை நோக்கித் தன் சரீரத்தைக்காட்டியும் அழகான வார்த்தையைச் சொல்லத்தொடங்கினள்.

'ஓ! அரசனே! சொல்லின்குற்றம் ஒன்பதும் புத்தியின்குற்றம் ஒன்பதுமில்லாததும் உசிதமான அர்த்தத்தையுடையதும் பதினெட்டுக்குணங்களுள்ளதும் ஸூக்ஷ்மம், ஸாங்கியம், க்ரமம், நிர்ணயம், பிரயோஜனம் இவ்வைந்துவிஷயங்களுள்ளதுமான சொற்றொடர் வாக்கியமென்று சொல்லப்படுகிறது 'பதத்தின்பொருள், பதம், வாக்கியமிவைகளைக் கொண்டு [2]பிரவிருத்திக்கும்படிசெய்யப்பட்ட ஸூக்ஷ்மத்தன்மைமுதலிய இந்த விஷயங்களின் லக்ஷணத்தைக்கேள். வெவ்வேறுவிஷயங்களில் ஞானமானது வெவ்வேறுபப்பிரவிருத்திக்க அவைகளில் புத்தியைப்புகுவிப்பது ஸூக்ஷ்மத்தன்மையாகும். ஓர் அர்த்தத்தைக்குறிக்கும் குணங்களையும் தோஷங்களையும் அளவிட்டுப் பிரித்தறிவது ஸாங்கியமாகும். 'இது முன் சொல்லத்தக்கது. இது பின்சொல்லத்தக்கது' என்றுபொருள்தோன்

1 வேறுபாடும். 2 பரவும்படி செய்யப்பட்ட.

முச்சொல்லப்பட்ட வாக்கியம் கிரமமுள்ளதென்று வாக்கியலக்ஷணம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளில் ஒன்றைபபிரதிஜ்ஞைசெய்து வாக்யத்தின் முடிவில், 'இதுதான அது' என்று சொல்லப்பட்டது நிர்ணயமாகும். ஓ! அரசனே! இச்சையாலுண்டாகிற துக்கத்திலும் த்வேஷத்தாலுண்டாகிறதுக்கத்திலும் (முறையே இதை அவசியம் செய்வேனென்கிற) ப்ரவிருத்தியும் (இந்த அவசியம் விலக்குவேனென்கிற) நிவ்ருத்தியும் பிரயோஜனமாகும். ஓ! அரசனே! ஒரே அர்த்தத்தில இப்படிப்பட்ட ஸமக்ஷமத்தன்மை முதலானவைகள் சேர்ந்திருப்பதே வாக்கியம் என்று நான் சொல்வதைக்கேள். தொடர்ந்த அர்த்தங்களையுடையதும் அநேக அர்த்தமில்லாததும் யுக்தியுள்ளதும் சுருக்கமுள்ளதும் [1]பொருத்தமுள்ளதும் ஸந்தேகமில்லாததும் சிறந்த பொருளுள்ளதுமான வாக்யத்தைச் சொல்லபோகிறேன். கடினமான அக்ஷரங்களில்லாததும் (அர்த்தத்தைத் தெரிவிப்பதில்) வெறுபபைத் தரும் பதங்களில்லாததும் பொய்யில்லாததும் தர்மார்த்தகாமங்களுக்கு விரோதமில்லாததும் (வியாகரண சாஸ்திரப்படி) ஸம்ஸ்காரமில்லையென்பதில்லாததும் வாக்கியக்குறைவில்லாததும் பதக்குறைவில்லாததும் முறைத்தவறுகச் சொல்லப்படாததும் [2]லக்ஷணையிலலாததும் பயனற்றதாகாததும் யுக்தியில்லாததாகாததுமான வாக்கியத்தைச சொல்லப்போகிறேன். காமத்தினாலும் குரோதத்தினாலும் பயத்தினாலும் லோபத்தினாலும் ஏழைத்தன்மையாலும் அயோக்யதையாலும் லஜ்ஜையாலும் தயையினாலும் கர்வத்தினாலும் ஒருவித்தத்திலும் சொல்லமாட்டேன். ஓ! அரசனே! சொல்லவிரும்புங்கால் சொல்லுகிறவனும் கேட்கிறவனும் வாக்கியமும் முழுதும் ஒத்திருந்தால் அந்த அர்த்தம் பிரகாசிக்கும். வார்த்தை சொல்லுகிறவிஷயத்தில் சொலலுகிறவன் எப்பொழுது கேட்கிறவனை அவமதிக்கிறானோ அபபொழுது அந்தவார்த்தை தனக்குமாத்திரம் விளங்குவதேயன்றி (அது எவ்வளவுசிறந்ததானாலும்) பிறரால் ஏற்றுக்கொள்ளபடுவதில்லை. தவிரவும், தன் விஷயத்தைவிட்டுப் பிறர் விஷயத்தைச சொல்லும் மனிதனிடம் சங்கையுண்டாகிறது. ஆதையால், அந்த வாக்கியமும் தோஷமுடையது. ஓ! அரசனே! கேட்கிறவனும் சொல்லுகிறவனுமான இருவருக்கும் விரோதமில்லாத அர்த்தத்தைச் சொல்லுகிறவனே சொல்லுகிறவன். மற்ற

---

1 'ஸ்ரேலேஷ முதலிய எட்டுக்குணங்களையுடையது' என்பது பழைய வுரை; 'கடுஞ்சொற்களில்லாதது' என்றும் கொள்ளலாம்.

2 பரம்பரையாக அர்த்தத்தைத் தெரிவிக்கும் சப்த விருத்தி.

வன் சொல்லுகிறவனல்லன். ஓ! அரசனே! ஆகையால், அர்த்த மூள்ளதும் வாக்கியலக்ஷணம் நிரம்பியதுமான இந்தவாக்கியத்தை மனத்தைவெளியில்விடாமலும் மனத்தை ஒருவழிப்படுத்தியுமிருந்து கேட்கவேண்டும். ஓ! அரசனே! 'நீ யார்? யாரைசசேர்ந்தவள்? எங்கிருந்து வருகிறாய்?' என்று கண்ணே நீ கேட்டாய். அதற்கு விடையான இந்தவார்த்தையை ஏகமனத்துடன் கேள். அரசனே! அரக்கும் கட்டையும் புழுதிகளும் ஜலத்தில்கலந்தும் நன்குசேர்ந்திருப்பதுபோன்றது இவ்வுலகில் பிராணிகளின் இருப்பு. சப்தம், ஸ்பரிசம், ரஸம், ரூபம், கந்தம், ஐந்து இந்திரியங்கள் ஆகிய வெவ்வேறான இந்தப்பத்தும் அரக்கும்கட்டையும்போல ஒரு சரீரத்தில் பொருந்தியிருக்கின்றன. இவைகளைக்குறித்து, 'நீ யார்?' என்று கேட்பவரில்லை என்பது உறுதி. அப்படிப்பட்ட தோஷமிருந்தாலும் இவைகளுள் ஒவ்வொன்றும் தன்னையும் அறிகிறதில்லை; மற்றவற்றையும் அறிகிறதில்லை. நேத்திரம் தன்னைப்பார்க்கிறதில்லை. ஸ்ரோத்திரம் தன்னை அறிகிறதில்லை. ஜலமும் புழுதியும் சேர்ந்திருந்தும் ஒன்றையொன்று அறியாததுபோல இவைகளும் சேர்ந்திருந்தும் அறிகிறதில்லை. வெளியிலுள்ள மற்றக்குணங்களையே அபேக்ஷிக்கின்றன. அவைகளையும் என்னிடம் கேள். ரூபம் நேத்திரம் பிரகாசம் மூன்றும் பார்க்கும் விஷயத்தில காரணங்கள். இதில்போலவே மற்றஞானஞேயங்களிலும் காரணங்களிருக்கின்றன. ஒருமனிதன் நன்மைதீமைகளை ஆராய்ந்துபார்க்கிறதற்குரியமனம் இந்தஞானஞேயங்களுக்கிடையிலிருக்கிறது. முதலில் சந்தேகிக்கப்பட்ட விஷயங்களில உறுதிபசெய்வதற்குரிய புத்தி என்கிற பன்னிரண்டாவதான வேறுகுணமும் கொள்ளப்படுகிறது. பன்னிரண்டாவதான அதில் ஸத்யமென்கிற வேறுகுணமிருக்கிறது. அதனால், அவன் மஹாஸத்வமுள்ளவனென்றும் அற்பஸத்வமுள்ளவனென்றும் ஊகிக்கப்படுகிறான். 'இவன் என்னைச்சேர்ந்தவன்; இவன் என்னைச்சேராதவன்' என்று அபிமானிக்கிற [1]அகங்காரமென்னும் பதினொன்காவதுகுணம் வேறு இருக்கிறது. ஓ! அரசனே! அந்த அகங்காரத்தில் பதிணைந்தாவதான (பூர்வ வாஸனை என்கிற) வேறுகுணமானது [2]ருதப்பட்டிருக்கிறது. இவ்வுலகில் அது தனித்தனியான (ரூபமுதலான) [3]கூறுகளின் ஸமூகத்தினுடைய சேர்க்கையாகச் சொல்லப்படுகிறது. அதில் [3]ஸங்காதமென்னும் பதினாறாவது வேறொருகுணமானது இருப்பதாகக் கருதப்படுகிறது.

1 வேறு பாடம். 2 வேறு பாடம்.

3 ஸத்வமுதலானவற்றின் ஸமுதாயம் அவித்தை.

அதை [1]ஜாதிவ்யக்தியினும்இரண்டுகுணங்களும் ஆஸ்ரயித்திருக்கின்றன. [2]சுகதுக்கங்கள் ஜனனமரணங்கள் லாபாலாபங்கள் பிரியாப்ரியங்கள் என்பவை [3]தூவந்துவயோகமென்னும்பத்தொன்பதாவதான் குணமென்று நிணக்கப்படுகின்றன. பத்தொன்பதிற்குமேல் காலமென்றவேறொருகுணம் உண்டு. இவ்விதம் பிராணிகளுடையஉற்பத்திநாசங்கள் இந்தஇருபத்திநான்குமென்று அறியக்கடவாய். இந்தக்கூட்டமான இருபது, மகாபூதங்கள்ஐந்து, இருப்பது இல்லாதது இவைகளுடைய ஸம்பந்தமுடையவைகளும் பிரகாசரூபங்களுமான (யதார்த்தஞானம், பிரமமென்கிற) வேறுஇரண்டுகுணங்கள் ஆக இவ்விதம் குணங்கள் இருபத்தேழு. புண்ணியபாபங்கள், வீரியம், பலமென்று இவைகள்வேறுமூன்றுகுணங்கள இவ்விதம் முப்பதென்று கணக்கிடப்பட்ட கலைகள் பூர்ணமாகநிரம்பியது சரீரமென்று நிணக்கபட்டது. இந்தக்கலைகளுக்கு அவ்யக்தமானது காரணமென்று ஒருவன் கருதுகிறான். ஸ்தூலபுத்தியான மற்றொருவன் [4]வியக்தமென்கிற ஸ்பஷ்டமானவஸ்துவைக் காரணமாகப் பார்க்கிறான். ஆத்மவிசாரம்செய்கிறவர்கள் அவ்யக்தமோ வ்யக்தமோ இரண்டோ அல்லது நான்கோ எல்லாப்பிராணிகளுக்கும்காரணமென்று நிணக்கிறார்கள். ஸ்பஷ்டமில்லாதஇந்தப்பிரகிருதி கலைகளால ஸ்பஷ்டமாயிற்று. ராஜப்ரேஷ்டனே! நானும் நீயும் மற்றசரீரிகளும் அவைகளிலிருந்து வந்தோம். வீரியபிந்துவைக்கர்ப்பத்திலவைத்தல் முதலான அவஸ்தைகள் வீரியம் உதிரமிவைகளிலிருந்து உண்டாகின்றன. அவைகளுடைய் சேர்க்கையினல் கலலமென்பது உண்டாகிறது. கலலத்திலிருந்து புத்புதமென்பது உண்டாகிறது. புத்புதத்திலிருந்தும் பேசி (என்கிறமாம்ஸபிண்டமானது) உண்டாகிறது பேசியிலிருந்தும் அவயவங்கள் உண்டாகின்றன அவயவத்திலிருந்தும் நகங்களும் ரோமங்களும் உண்டாகின்றன ஓ! மிதிலாதிபனே! ஒன்பதாவதுமாதம்நிறைந்தபின் பிறந்ததானஜந்துவுக்கு அடையாளத்தைக்கொண்டு ஸ்திரீயென்றோ புருஷனென்றோ பெயரும் ரூபமும் உண்டாகின்றன. பிறந்தவுடன், (சிசுவானதீ) சிவந்தநகங்களும் விரல்களுமுடையதாகக் காணப்படுகிறது. பிறகு, குமாரனுக்குரியரூபத்தை அடைந்ததும் அதைவிட்டு வேறுரூபமுள்ளவனுகி யௌவனத்தையும் யௌவனம்

---

1 'ஆக்ருதி' என்பது மூலம் ; 'ஜாதிக்கு ஆதாமான சரீரம்' என்பது [பொருள்.
2 இரட்டைகளின் சேர்க்கை.
3 'பரமாணு' என்பது பழையவுரை.
4 அவ்யக்தம், வ்யக்தம், ஜீவன், ஈச்வரன்.

விட்டுக் கிழத்தன்மையையும் அடைகிறான். இந்தமுறையாக முன் முன்உண்டானரூபம் காணப்படுகிறதில்லை. எல்லாப்பிராணிகளிடத்திலும் க்ஷணந்தோறும் தனித்தனியனுள்ளகலைகளுடையமாறுதலானது இருக்கிறது. ஸூக்ஷ்மமாயிருப்பதால் அறியப்படுவதில்லை. அரசனே! ஒவ்வொருநிமையிலும் இந்தக்கலைகளுடைய உற்பத்தியும் நாசமும் தீபஜ்வாலையினுடையதுபோலக் காணப்படுகிறதில்லை. இவ்விதமான தன்மையையுடையஎல்லாஉலகமும் நல்ல குதிரைபோல எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கையில் 'யார் எங்கிருந்துவந்தவன்? எங்கிருந்துவரவில்லை? இது யாருடையது? இது யாருடையதில்லை? இது எங்கிருந்துவந்தது? இது எங்கிருந்து வரவில்லை? இதத்தில் பிராணிகளுக்குத் தம்மவயவங்களோடுதான் என்ன ஸம்பந்தமிருக்கிறது? ஸூர்யன், ஸூர்யகாந்தமணி, கொடி இவைகளிலிருந்து " அக்கினிஉண்டாகிறதுபோல இவ்வுலகத்தில் கலைகளுடையசுட்டத்திலிருந்தும் பிராணிகள் உண்டாகின்றன நீ உன்னுடையசரீரத்தில மனத்திலுள் ஆத்மாவைப பார்ப்பதுபோலவே பிறனிடத்தில் நீயே ஆத்மாவை ஏன் பார்க்கவில்லை உன்னிடத்திலும் பிறனிடத்திலும் ஸமமானதன்மையை நிச்சயிக்கிறயானால் அப்பொழுது என்னை, 'நீ யார்? யாரைசசேர்ந்தவள்?' என்று ஏன் கேட்கிறாய்? ஓ! மிதிலாதிப! இது எனக்கு வேண்டும்; இது வேண்டாம்' என்கிற விருப்புவெறுப்புக்களான துவந்துவங்களால் விடப்பட்டவனுக்கு, 'நீ யார்? யாரைசசேர்ந்தவள்? எங்கிருந்துவருகிறாய்?' என்கிறகேள்விகளால் என்னபயன்? சத்குருவினிடத்திலும் மிதத்திரனிடத்திலும் உதாஸீனனிடத்திலும் ஜயத்திலும் ஸந்தியிலும் கலகத்திலும் (அதறகுஉசிதமான) செய்கையுளவை பூபதியினிடத்தில் முக்தனுக்குரியலக்ஷணம் ஏது? இவ்வுலகத்தில கர்மங்களில் தர்மமும், அர்த்தமும், காமமும், (தர்மமும் அர்த்தமும், தர்மமும் காமமும், அர்த்தமும் காமமும், தர்மம் அர்த்தம் காமம் மூன்றும்) ஆக ஏழுவிதமாகவைக்கப்பட்ட தர்மார்த்தகாமங்களை அறியாமல் அவைகளில் பற்றுள்ளவனுபிருப்பவனிடத்தில் முக்தனுடையலக்ஷணம் ஏது? எவனுடைய்பார்வை ப்ரியனிடத்திலும் அப்ரியனிடத்திலும் பலமில்லாதவனிடத்திலும் பலவானிடத்திலும் ஸமமாயில்லையோ அவனிடத்தில் முக்தனுக்குரியலக்ஷணம் ஏது? அரசனே! ஆகையால், யோகமில்லாதஉனக்கு மோக்ஷத்தில் அபிமானம் ஏற்படுவது பத்தியமில்லாதவனுக்கு மருந்தைவிலக்குவதுபோல நண்பர்களால் தடுக்கத்தக்கது. ஓ! சத்துருக்களைசகிப்பவனே! (ஸ்திரீ

முதலான) அந்தஅந்த ஸ்தானங்களுக்குரிய ஸ்தானங்களை நன்றாக ஆராய்ந்து ஆத்மாவினிடத்திலே நீயே பார். இதைத்தவிர முக்தனுக்குரியலக்ஷணம் வேறுயாது? மோக்ஷத்தைஉத்தேசித்து ஸாங்க்ஷ்யர்களும் சயனம், மற்றஸாதனங்கள், போஜனம், வஸ்திரமென்கிற நான்கு அங்கங்களிலுண்டானவைகளுமான வேறுஇந்தச் [1]சிலஸங்கதிகளைச் சொல்லுகிறான் கேள். இப்படிபூமிமுழுமையும் ஒரேகுடையின்கீழிருந்துஆளுகிறஅரசன் ஒரேபட்டணத்தில் வஸிக்கிறான்; அந்தபட்டணத்திலும் ஒரேகிருஹத்தில் வஸிக்கிறான்; அந்தக் கிருஹத்திலும் இரவில் ஒரேசயனத்தில் படுத்துக்கொள்ளுகிறான். அதிலும் ஸ்திரீயுடன்சயனித்தால் பரிக்ரையின்பாதிதான் அவனுக்குச்சேர்ந்தது. ஆகையால், இந்தஸம்பந்தத்தினாலே அரசன் போகஸாதனங்களிலும் போஜனம் வஸ்திரமுதலிய அளவறறகுணங்களிலும் அற்பபயனுள்ளவனாகிறான். சிலசமயம் சாதனவிஷயத்திலும் அரசன் எப்பொழுதும் தன்வசமற்றவன்; அவ்விதமிருந்தும் மிகவும் அற்பத்திலும் பற்றுதல்வைக்கிறான். ஸமாதானம் முக்தம் இவைகளின் ஸம்பந்தத்தில் அவனுக்கு ஸ்வதந்திரியம் ஏது? ஸ்திரீகளிடம் போகங்களிலிவைகளிலும் இவன் எப்பொழுதும் ஸ்வதந்திரமில்லாதவன். மந்திரிகளுடன் சேர்ந்து ஆலோசிப்பதில் இவனுக்கு ஸ்வதந்திரம் ஏது? இதரர்களை ஆஜ்ஞைசெய்கிறதிலுமாத்திரம் இவனுக்கு ஸ்வதந்திரம் இருக்கிறது அந்தஅந்த [2]க்ஷணத்திலும் அவசனியிருந்து கார்யங்களைச செய்கிறான் நித்திரைசெய்யவிரும்பமூள்ளவனுமிருந்தும் தன்னிடம் கார்யநிமித்தம் ஜனம்வருதலால் நித்திரைசெய்ய அவகாசம்அடைவதில்லை சயனத்தில்தூங்கினாலும் தன் ஏவலால் அவசனாக எழுப்பப்படுகிறான். 'ஸ்நானம்செய். பூசிக்கொள். பானம்செய். போஜனம்செய். ஹோமம்செய். யாகம் செய்' என்றும், 'சொல்லு, கேளு' என்றும் பிறர்சொல்ல அவசனாகக் கார்யங்களைச் செய்கிறான் இப்படியே ஜனங்கள் வந்துவந்து எப்பொழுதும் யாசிக்கிறார்கள். தனத்தைக்காபாற்றுகிற அரசனும் அந்த ஜனக்கூட்டத்திற்குத் தானம்செய்ய உத்ஸாஹப்படுகிறதில்லை. கொடித்தால் இவனுடைய பெரிக்ரஹமும், நகித்துவிடும். கொடுப்பவனை இவனுக்கு (சேர்ந்தவர்களுடைய) விரோதமும் ஏறபடும். க்ஷணத்திற்குள் இவனுக்கு வெறுப்பையுண்டுபண்ணுகிற தோஷங்களும் நேரிடுகின்றன. ஒரே இடத்திலிருக்கிறவர்களானாலும் பிராஜ்ஞர்களையும் ஸ்ரார்களையும் வைத்தியர்களையும் சங்கிக்கிறான். தன்

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

வேலைக்காரர்களிடத்திலும் பயத்துக்குக்காரணமில்லாமலே பயப்படு கிறான். அரசனே! அப்படியிருப்பதால் முன் என்னால்சொல்லப் பட்டஇவர்கள் தோஷமுள்ளவர்களாகிறார்கள். அப்படியானால் இவ னுக்கு அவர்களிடமிருந்து எவ்வளவுபயமுண்டாகுமென்பதைப் பார். எவனும் தன்தேசத்திலே அரசனே. ஜனக! தம்தம் விருதத்தில் சிஷைரக்ஷணங்களைசெய்கிற விருகஸ்தரனைவரும் அரசர் களுக்கு நிகரே. புத்திரர்கள், பத்னிகள், சரீரம், பொக்கசம், மித் ரர்கள், ஸாதனங்கள்முதலிய இவைகள் அந்தஅந்தக்காரணங்களால் அரசனுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாயிருக்கின்றன. ' 'தேசம் கெட்டுவிட்டது. பட்டணம் எரிந்துவிட்டது. பட்டத்துயானை இறந்துவிட்டது' என்று உலகங்களுக்குப்பொதுவான இவைகளில், 'எனது' என்கிற அபிமானத்தால தாபத்தை அடைகிறான். இச்சை, துவேஷம்; பயமிவைகளாலுண்டான மனுஜதக்கங்களாலே விடு படாதவனும் சிரோரோகமுதலிய ரோகங்களாலும் தீங்கைவிளைவிக் கிற அந்தஅந்தத்வந்துவங்களாலும் கெடுக்கப்பட்டவனும் எங்கும் சங்கையுடையவனுமாயிருந்து அநேகர்களால் விரும்பப்பட்ட ராஜ யத்தை ராத்திரிகள் முழுதும் கணக்கிட்டுக்கொண்டு ஆளுகிறான். ஆகையால், அற்பஸுகமுடையதும் மிகுந்த துக்கமுடையதும் சிறிதும்ஸாரமில்லாததும் வைக்கோலில்பற்றிய தீக்குலுப்பானதும் தூரைக்கும் குமிழிக்கும் நிகரானதுமான ராஜ்யத்தை எவன் அடை வான்? அடைந்தும் (எவன்) சாந்தியை அடைவான்? ஓ! அரசனே! இந்தப்பட்டணத்தையும் ராஜ்யத்தையும் பொக்கசத்தையும் சேனை யையும் மந்திரிகளையும் உன்னுடையவையென்று நினைக்கிறாயே. இவைகள் யாருடையவைகளல்ல? மித்திரர்கள், மந்திரிகள், பட்ட ணம், தேசம், ஸைன்யம், பொக்கசம், அரசன்எனஏழுஅங்கங்களு டையஇந்தக்கூட்டபானது ராஜ்யமென்று சொல்லப்படுகிறது. ஏழு அங்கங்களையுமுடைய இந்தராஜ்யம், ஒன்றோடொன்று கயிற்றினால் சேர்ந்ததாக நிற்கின்றமுக்காலிபோல ஒன்றுக்கொன்று ஸகாயமு ஸ்தாயிருக்க, குணத்தினால் யார் யாஸுரக்காட்டிலும் அதிகம்? அந்தஅந்தக்காலங்களில் ஆந்த அந்த அங்கம் அதிகமாகிறது. ஒன்றி னால் ஒரு காரியம் நிறைவேறறப்படுகிறபோது அதுபிரதானமாகிறது. ஏழு அங்கங்களுமுள்ள ஸம்பூர்ணமும் (அபிவிருத்தி, க்ஷயம், இரண்டுமில்

---

1 வேறுபாடம். 2 'புரம்' என்பது மூலம்: 'அதற்கு வேண்டிய வாஸ்து' என்பது பொருத்தம்.

லாமையென்கிற) வேதமூன்றுசேர்ந்து [1]பத்தும்அடங்கியஇந்தக் கூட்டபானது ராஜ்யத்தை ஆளுகிறது. மிகுந்தஉத்ஸாஹத்துடன் ராஜதர்மத்தில் பற்றுள்ளவனுயிருக்கிறஅரசன் பத்தப்பாகத்தாலும் ஸந்தோஷிப்பான். அவனிடத்தவிர வேறுஎவரும் குறைந்தபாகங்களால் ஸந்தோஷிப்பான். அரசனென்றுதனியே ஒருவனில்லை. அரசனில் லாமல் ராஜ்யமில்லை. ராஜ்யமில்லாவிடில் தர்மமேது? தர்மமில்லா விட்டால் பரலோகமேது? இவ்விடத்தில் அரசனுக்கும் ராஜ்யத்திற் கும் பரிசுத்தத்தைத்தருவதும் சிறந்ததும் பூமியைத் தக்ஷிணையாக வுடையதுமான அச்வமேதமென்கிற தர்மமுமில்லை. ஓ! மிதி லாதிபதியே! நான் அரசர்களுக்குத் தூக்கத்தைவிலக்கக்கூடிய செய்கைகளை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் சொல் லத்திறமையுள்ளவள். எனக்கு என்சரீரத்தில் அபிமானமில்லை; பிற சரீரத்தில் அபிமானமேது? இப்படிப்பட்டவளும் யோகமுடைய வளுமான என்னிடம்நோக்கி நீ இவ்விதம் சொல்லத்தகாது. நீ (தியானமாகிற) உபாயம் [2]உபநிஷத்து (யமமுதலான) தியா னங்களால் வித்தாந்தம் இவற்றோடுகூடிய மோக்ஷத்தைப பஞ்சசி கரிடமிருந்து முழுதும் கேட்டிருக்கிறயன்றே? அரசனே! ஸம் பந்தம்விட்டவனும் (காமமுதலான) பாசங்களைஜயித்தவனுமான உனக்குத், தடைமுதலானவிசேஷவஸ்துக்களில் மறுபடியும் அபிமா னம் எதற்கு? [3]உன்னுடையசாஸ்திரவிசாரத்தை நான் விசாரமாக நினைக்கவில்லை. அல்லது, டம்பத்துக்காக ச்ரவணம்செய்திருக்க லாம். இல்லாவிட்டால், சாஸ்திரம்போன்ற வேறுசாஸ்திரத்தை ச்ர வணம்செய்திருக்கவேண்டும். நீ ச்ரவணம்செய்திருந்தும் ஸாதா ரணமனிதனைப்போல விருப்புவெறுப்புக்களால்கட்டப்பட்டு இம்மைக் குரியஇந்தஞானங்களிலேயே பிரவ்ருத்திக்கிறாய் நீ எல்லாவிஷயத் திலும் பற்றில்லாதவனுனல் நான் உன்னிடத்தில் புத்தியினுல்பிரவே சித்ததில் உனக்கு என்ன அபகாரம்செய்ததாகும்? சூன்யமானவீடத் தில்வலிப்பது யதிதர்மங்களுள் நியமமல்லவா? [4]சூன்யமான உன் னுடையஹ்ருதயத்தில் நான் வலிப்பதினுல் யாருக்கு என்னதீங்கு செய்யப்பட்டதாகும்? ஓ! மறுவற்றவனே! கைகளாலும் புஜங்களா லும் பாதங்களாலும் தொடைகளாலும் மற்ற அவயவங்களாலும் நான்

---

1 தசவர்க்கம். 2 ச்ரவணமனனங்கள், அல்லது ரகஸ்யம்.

3 இதனுல் அரசனுல்சொல்லப்பட்ட ஞானகர்மங்களின் சேர்க்கை தூஷிக்கப்பட்டது.

4 குறிப்பால் இகழ்ந்தபடி.

உன்னைத்தொடவில்லை. பெரியகுலத்திற்பிறந்தவனும் லஜ்ஜையுள்ள வனும் தீர்க்காலோசனையுள்ளவனுமாயிருப்பவன் நல்லதானாலும் தீதானாலும் சகஸ்யதத்தில்செய்ததை ஸபையில் சொல்லலாகாது. இந்தப்பிராம்மணர்கள் உனக்குக் குருக்களும், குருக்களிலுஞ்சிறந்தவர் களும் பூஜ்யர்களுமாயிருக்கின்றனர். நீயோ (சிலகூஷாயகூஷணம்செய்வ தால்) இவர்களுக்கும் குருவாயிருக்கிறாய். ஒருவருக்கொருவருடைய மேன்மை இவ்விதமிருக்கிறது. அதை இவ்விதம் நன்குஆராய்ந்து பார்த்துச் சொல்லக்கூடியதையும் சொல்லக்கூடாததையும் பரீக்ஷித் திறவனனஉன்னைப் ஸ்ரீபரஞ்சுர்களுடையஇந்தசரித்ரசேர்க்கையானது ஸபையில் சொல்லத்தக்கதில்லை ஓ! மிதிலேஸ்வரனே! காமரை இலையிலிருக்கிறநன்னீர் அந்த இலையைப்பற்றாமலிருப்பதுபோல நான் உன்னைத்தொடாமேல் உன்னிடத்தில் வலியிப்பேன். (அல்லது,) இப்பொழுது என்னுடையஸ்பரிசத்தை நீ அறிகிறாயானால் அந்தப் பஞ்சகிரியாஷ்டவினால் உன்னுடையஞானமானது ஸம்ஸாரகாரண மற்றதாக மாற்படிச் செய்யப்பட்டதாகும்? அப்படிப்பட்ட நீ கிருகஸ் தாச்ரமத்திலிருந்தும் தவறி அடைய அரிதான மோக்ஷத்தையும் அடையாமல் மோக்ஷவார்த்தையைப்பேசிக்கொண்டு இரண்டிற்கும் நடுவிலிருக்கிறாய் ஆத்மாவின்ஒன்றாயிருக்கும் தன்மையையும் சரீ ராதிகளின் பிரிவையுமுணர்ந்தமுத்தனுக்கு மற்றொருமுத்தனோடு ஆத்மாவுக்கும் பிரகிருதிக்குமுண்டாகிறசேர்க்கையில் வர்ணத்தின் கலப்பு உண்டாகிறதில்லை சரீரமும் ஆத்மாவும்ஒன்றாயிருப்பதால் அனித்தனியாக விஷயங்களைப்பார்க்கிறவனுக்கு வர்ணங்களும் "ஆச்ர மங்களும் ஏற்பட்டன" ஒன்று மற்றொன்றாகிறதில்லையென்று அறிந் தால ஒன்று மறறொன்றிலிருக்கிறதில்லை. கையில்தாழியும் தாழியில் பாலும் பாலில்தயிராக ஆசாரரூபஸம்பந்தத்தால் வேறாகஇருந்து கொண்டே ஆரோபித்திருக்கின்றன தாழியில் பாலின்தன்மையில்லை. பால தயிராகிறதில்லை இந்தப்படிதார்த்தங்கள் தம்தன்மையை அடை யுமேயன்றி மற்றொன்றின்தன்மையை அடைகிறதில்லை ஆச்ரமங்கள் வேறாயிருப்பதாலும் வர்ணங்கள் வேறாயிருப்பதாலும் ஒன்றுக் கொன்று தனித்தனியாயிருப்பதாலும் உனக்கு வர்ணத்தின்கலப்பு எப்படிவரும்? நான் ஜாதியினால் உனக்கு மேலானவனுமல்லேன்; வைச்யஜாதியுமல்லேன்; சூத்ரஜாதியுமல்லேன் அரசனே! உன க்குஸமானஜாதியும் சுத்தமானபிறப்புமுடையவளும் தோஷமில்லாத வளுமாயிருக்கிறேன். பிரதானரென்கிற ராஜரிஷியிடத்தில் நீ நன்றாகக் கேட்டிருப்பாய். அவருடைய குலத்திற்பிறந்தவளும் ஸுலபை

என்றபெயருடையவளுமாக (என்னைத்) தெரிந்துகொள் துரோண பர்வதமும் கந்தமாதனபர்வதமும் [1]வக்ரத்வாரமென்கிற பர்வதமும் மஹேந்திரமும் என்னுடைய முன்னோர்களால் யாகங்களில் [2]அக்னி சயங்களாகச் செய்யப்பட்டன. அந்தக் குலத்திலுண்டான நான் எனக்குசரியான கணவனில்லாமையால் மோக்ஷதர்மங்களில் கற் பிக்கப்பட்டுத் தனியே முனிவிரதத்தை அனுஷ்டிக்கிறேன். நான் வேறு வேஷம்தரிக்கவில்லை; பிறர்பொருளில் பற்றுவைப்பதுமில்லை; தர்மலங்காரத்தைச் செய்யவுமில்லை. ஸ்வதர்மத்தில் உறுதியான விரதமுடையவளாயிருக்கிறேன். என்னுடைய பிரதிஜ்ஞையில் உறுதியிலாமலில்லை. நான் ஆலோசியாமல் செலவுசெய்பவளல்லேன். ஜனங்களுக்கதிபதியே! இப்பொழுது நான் ஆலோசியாமல் உன்னிடம் வரவில்லை. உன்னுடையபுத்தி மோக்ஷதர்மவிஷயமுடையதென்று கேள்விப்பற்றி சூக்ஷமத்தைவிரும்பிவந்து நான் உன்னுடைய மோக்ஷத்தைப் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளும் விருப்பத்தால் இங்கு வந்தேன். தன் பாக்ஷம்பிறர்பாக்ஷங்களுள் ஒரு கூட்டத்தில் சேர்ந்துகொண்டு இதைச் சொல்லவில்லை. பற்றுக்களை அறுத்துஅடக்கத்தைனிடாமலிருப்பவனை மூக்தன். யதியானவன் பட்டணத்தில் சூன்யமான கிருகத்தில் ஒரு ராத்திரிவஸிப்பதுபோல உன்னுடைய இந்தசரீரத்தில் இந்த ஒருராத்திரி வஸிக்கப்போகிறேன். மிதிலாதிபனே! கௌரவத்தையளித்தலாலும் இன்சொலசொலுதலாலும் அதிதிபூஜைசெய்தலாலும் பூஜிக்கப்பட்டவளான நான் கலைகிருகத்தில் நித்திரைசெய்து பிறகு யடைந்து நாளைப்போய்விடுகிறேன்' என்று சொன்னவள் அந்த அரசர் இவ்விதம் யுக்தியுள்ளவைகளும் பாபனுள்ளலைகளுமான வார்த்தைகளைக்கேட்டு இதற்குமேல் வேறுஒன்றையும் சொலல அறியவில்லை'' என்று சொன்னர்.

---

1 'சக்ரத்வாரம்' என்பது வேறுபாடம்.

2 மலைகளே கல்லுகளாயின என்பது.

[1]மூன்றூற்றிருபத்தாறுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஆஸுரி அவ்யக்தழதலிய்வற்றைச் சொல்லும்படி கபிலரைக் கேட்டது.)

யுதிஷ்டிரர், "ஓ! பரதர்ஶ்ரேஷ்டரே! அவ்யக்தம் வ்யக்தம் தத்வம் இவைகளுடைய உறுதியையும் ஜனனமற்ற தேவருடைய கர்மாவையும் சொல்லவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார். "இந்த விஷயத்திலும் குருசிஷ்யர்களான கபிலருக்கும் ஆஸுரிக்கும் நடந்த தும் துக்கத்தை எல்லாம் நிவிருத்திக்கின்றதுமான ஸம்வாதத்தைச சொல்லுகின்றார்கள. ஆஸுரியானவர், 'ஓ! அளவற்ற அறிவுடைய பகவானே,! நான் உம்மைப் பிரார்த்திக்கிறேன். நீர் எனக்கு அவ்யக் தம் வ்யக்தம் தத்வநிலைகளில் உறுதியான உமது புத்தியின் நிசசயத் தைச சொல்லவேண்டும் வியக்தமென்பது எது? அவ்யக்தமென் பது எது? அவ்யக்தமும் வ்யக்தமுமாயிருப்பது எது? தத்வங்கள் யாவை? தத்வங்களுடைய ஆதியும் நடுவும் எவை? அத்யாத்மம் அதி பூதம் அதிதெய்வமென்பவை யாவை? ஸ்ருஷ்டிப்பிரளயமென்பவை யாவை? ஸ்ருஷ்டிகள் எத்தனை? பூதம் எது? பவ்யம் எது? பவிஷ் யம் எது? ஞானம் எது? ஞாதா யார்? அறியப்பட்டது எது? ஜடம் எது? அறியப்படுகிறது எது? கணுக்கள் எத்தனை? பிரவா கங்கள் எத்தனை? கர்மஜன்மங்கள் எத்தனை? ஏகத்தன்மை எது? அநேகத்தன்மை எது? ஸஹவாஸம் எது? வஸிக்கும்ஸ்தானம் எது? வித்தை எது? அவித்தை எது?' என்று கேட்டனர்.

மூன்றூற்றிருபத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கபிலர் அவ்யக்தழதலிபவற்றை ஆஸுரிக்குச் சொல்லியது.)

கபிலர், 'நீர், 'வ்யக்தமென்பது எது? அவ்யக்தமென்பது எது?' என்று கேட்டீரன்றே? அதைச் சொல்லுகிறேன். அவ்யக்த மானது (கர்மேந்திரியங்களால்) கிரகிக்கமுடியாததும் (புத்தியினல்)

1 இதமுதல் மூன்று அத்யாயங்கள் அதிகபாடம்.

விசாரிக்கமுடியாததும் (ஞானேந்திரியங்களால்) யதார்த்தமாக அறிய முடியாததுமாயிருக்கிறது. அவ்யக்தம் வ்யக்தமாகக் காணப்படுகிறது. ருதுக்கள் சரீரமில்லாதவைகளாயிருந்தும் அவைகளிலுண்டாகும்புஷ்பங்களாலும் பழங்களாலும் அவற்றின்ஸ்வரூபம் அறியப்படுகிறதுபோல வியக்தமான குணங்களால அவ்யக்தம் அறியப்படுகிறது. கீழ்த்திசையை அடைந்ததும் மேற்றிசையை அடைந்ததும் மேலேயுள்ளதும் கீழேயுள்ளதும் குறுக்கேயுள்ளதுமாக அறியக்கூடியதாயிருப்பதால் கிருதி, [1]வியக்தம், உத்தமம், ரஜஸ், ஸத்வம், சுத், பிரதானம், தத்வம், அக்ஷரம், அஜரம் இவைமுதலானவை அவ்யக்தத்திற்குப் பெயர்கள். இப்படி (ஆசார்யர்) சொல்லுகிறார். அதாவது, 'அவ்யக்தமானது வித்தின்தன்மையுடையது; [2]பெரிதான முதலேபோன்றது; ஜடமானது அதிலிருந்து ஒருகுணமுடையது பிறந்தது. அது வ்யக்தத்தத்வமான ஈச்வரன்' என்பது. அப்படிப்பட்ட இந்த அவ்யக்தம் பெருகுதல், தரித்தல், கொடுத்தல்இவைகளே ஸ்வபாவமாகவுடையது பெருக்கால் அபபுக்களாகிறது. குணங்களைத்தரிப்பதிலும் உண்டுபண்ணுவதிலும் கொடுப்பதிலும் அது மூலகாரணம். அப்படிப்பட்ட இந்த அவ்யக்தம் இந்தக்காரியங்களைசெய்வதில் மிகவும்ஜாக்ரதையுள்ளது வயக்தமென்பதைச சொல்லுகிறேன். ஓ! ஆஸுரியே! முதலில் அவ்யக்தத்திலிருந்துண்டானதும் நியமனசக்தியுள்ளதும் அறியப்படாத குணங்களுள்ளதுமானது வ்யக்தம். இது புருஷனென்று பெயருடையது; மகத்தென்றும் புத்தியென்றும்சொல்லப்பட்டது. [3]ஸ்ருதை, ஸ்மிருதி, [5]த்ருதி, [6]மேதை, [7]வியவஸாயம், [8]ஸமாதிப்ராப்தி முதலானபெயர்களே வயக்தசப்தத்திற்குப் பரியாயமாகச் சொல்லுகிறார்கள் இப்படி (ஆசார்யர்) சொல்லுகிறார். பெரியஸமாதியும் மேலான ஸ்ருஷ்டியும் (ஆத்ம) பிரகாசதத்திற்காக மிக்கஉற்சாகமுமுண்டாயிருத்தலால் மேன்மேலும் (ஸ்ருஷ்டிப) பெருக்குக்களால் பெரிதாயிருப்பதினாலும் ஜடமாயிருப்பதினாலும் அவ்யக்தமாயும் அவ்யக்ததரமாயுமிருக்கிற அகங்காரத்தை ஆத்மாவுக்கு உண்டுபண்ணுகிறது வியக்தத்திலிருந்துமுண்டான வுத்தி ஏஸுஷ்ணு வந்துவிட்டது. இப்படி ஆசார்யர் சொல்லுகிறார். வியக்தாவ்யக்ததர

---

1 வியக்தத்தில் இனம்புலிறது.

2 முதலேபோல நல்லாவற்றையும் கிரகிக்கிறது.

3 இருத்தல், 4 நினைத்தல். 5 தரித்தல். 6 புத்தியில்வஹித்தல். 7 முயற்சி. 8 ஸமாதிபெறுதல்.

மென்பதைச் சொல்லுகிறேன். [1] 'வியக்தாவ்யக்ததரமென்பது மூன்றாவது புருஷனென்று பெயர்கொண்டது அப்படிப்பட்டது இது விராட் சன், வைராஜ்சம் என்னும் இவ்விராண்டினுடைய ஒவ்வொன்றில் உற்பத்தி. (என்னவென்றால்) விராட்சம், அபிமானியினிடமிருக்கிற அவிவேகம், பொறாமை, கர்வம், சூதாடுதல், லோபம், மதம், கர்வம், மமதை இவைகள் அஹங்காரசபதத்திற்குப் பரியாயநாமங்கள்; இவ்விதம் (ஆசாரியர்) சொல்லுகிறார். ஈச்வரர், 'நான் கர்த்தா' என்ற அஹங்காரமடைந்து ஜகத்தை ஸ்ருஷ்டித்தார். அபிமானமாகிறகுணமுடைய இவரை மூன்றாவதுபுருஷராக அறிகிறார்கள். அஹங்காரத்திலிருந்து ஓரளவையபத்தில் சப்தஸ்பரிசரூபரஸகந்தங்களே ஸூக்ஷ்மாணுக்களாகவுடைய ஐந்துமஹாபூதங்களை [2]உண்டுபண்ணினார். [3]அவைகள் தாம் அறியப்படுகின்றன இவ்விதம் (ஆசாரியர்) சொல்லுகிறார். பூதஸூக்ஷ்மத்தை அஹங்காரத்திலிருந்தும உண்டானதாக அறிகிறவித்வான் அபிமானத்தைக்கடந்து மஹத்தத்வத்தில் நிலைத்திருக்கிறான். பூதங்களிலும் அஹங்காரத்தைச் சொல்லுகிறவன் [4]குதிரையின் ஸ்வரூபம்போன்ற ஸ்வரூபமுடையவனைச சொலலப்படுகிறான். திரும்பவும் அவன் விஷயத்தையறிவதில் ஹேதுவாவதால் மனமென்றபெயருடையவனைக் கருதப்படுகிறான். அகங்காரி விகாரனென்கிற அச்வரூபத்தினிடமிருந்தும் வைகாரீக இந்திரியங்களுடன் ஓரளவையபத்தில் உண்டுபண்ணுகிறான் சுரோத்திரம், கிராணம், நேத்திரம், ரஸனை, த்வக்கு என்கிற இவைகளைச சப்தஸ்பரிசரூபரஸகந்தங்களே அறிகிறதினால் ஐந்துஞானேந்திரியங்களாகச சொல்லுகிறார்கள் இவ்விதம் (ஆசாரியர்கள) சொல்லுகிறார்கள வாக்கு, பாணி, பாதம், பாயு, குறி என்னும் ஐந்தும் இந்திரியங்கள். விசேஷம், ஆதித்யம், அசுவினிகள், நக்ஷத்திரங்கள என்கிற இவைகளே இந்திரியங்களுக்கு வேறுபெயராகச சொல்லுகிறார்கள். இவ்விதம் (ஆசாரியர்) சொல்லுகிறார். அஹங்காரத்திலிருந்தும் பூதங்களை உண்டுபண்ணிப் புத்தி ஆத்மா இவைகளுக்கு வைகாரத்தன்மை வந்தது. அந்தவைகாரனிடமிருந்தும் விஷயாபிமானியான வைகாரிமனென்கிற [5]ராஜன் உண்டா

---

1 'வ்யக்தாவ்யக்ததரம்' என்று பாடம் கொள்ளப்பட்டது.

2 'உத்பாதயாமாஸ' என்று பாடம் கொள்ளப்பட்டது.

3 எது அறியப்படுகிறதென்கிற வினவுக்கு விடை.

4 குதிரைபோல வேகமுடையவன்.

5 'ராஜ்ஞா' என்பது மூலம! 'ராஜா' என்று பாடம் கொள்ளப்பட்டது; சரீரத்தையும் விஷயங்களையும் அபிமானித்தமனிதன்.

னும். அகங்காரத்தின்[1] விகாரத்திலிருப்பதாக அறிந்தமனிதன் சந்திரனும் நக்ஷத்திரங்களுமுள்ளளவும் பெரியஸ்வர்யத்தை அடைகின்றான்.

மூநூறுறுபத்தேட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கபிலர் தத்வங்களின்முதலியவற்றை ஆஸுரிக்குச் சொல்லியது.)

'தத்வங்கள் எவ்வளவு?' என்று நீ கேட்டார் பலவிஷயமாகச் சொல்லப்பட்டனவைபோ தத்துவங்கள். இவ்விஷயம் ஆசார்யர் சொல்லுகிறார். சொல்லப்பட்டதத்வங்களை அறிந்து (ஞானக்காட்டினும்வேறாக) நிரயமாய்அறிகிறவன் ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய சேர்க்கையிலிருந்தும் விடுபடுவது பாவதத்தை பற்றார்ட்டான். இப்பொழுது, 'தத்வங்களுடைய முதலிலும் இடையிலும் உண்டானவை எவை?' என்றுகேட்டவிஷயத்திலும் சொல்லுகிறேன். 'புத்தியை முதலிலுடையவைகளும் ஸ்தூலபூதங்களை முடிவிலுடையவைகளுமான இருபத்துமூன்றுதத்வங்கள் அறியவேண்டியவைகளாகின்றன' என்று என் ஆசார்யரால சொல்லப்பட்டது ஆகையால், இந்தவிஷயத்தில் விரிவாக நான் சொன்னேன். தத்வமானது அந்தப்பிரதானமே (தேவி) தத்தன், பிராம்மணன், க்ஷத்ரியன், வைச்யன், சூத்திரன், சண்டாளன், புல்கஸனமுதலானவர்கள் உண்டாகும்பொழுது புத்திமுதல் ஸ்தூலபூதம்வரையிலுள்ள தத்வங்களும் (தேவதை) அறியத்தக்கவைகளாகவும், மனனம்பண்ணத்தக்கவைகளாகவும் த்யானிக்கத்தக்கவைகளாகவும் சொல்லப்பட்டன. இது ஆதியும் மத்யமுமாம். இந்தப்பிரதானத்திலிருந்தும் தத்வங்களுடைய உற்பத்தி உண்டாகிறது. இதில், தத்வங்களை வைத்தைபடைகின்றன. சில ஆசார்யர்கள் சொல்லுவதாவது, 'நான்என்கிறஸ்வரூபத்தையுடையதும் சரீரத்தேதாடுகூடினதுமான தத்வஸங்காதமான நரன் (புருஷன்) ஸ்ரீவஸுதேவனிலும் விஷயத்தமாயும் அவ்யக்தத்திலிருந்துப்பதாயுமுள்ளது. இது தேவதத்தனென்கிறபெயருடையது' என்பது. பிறகும் [2]தசமபுருஷ (திருஷ்

---

1 'மஹதி' எனறு கொள்ளப்பட்டது.

2 'ஆற்றில் பத்துமனிதர்கள் இறங்கிக்கடையேறி ஒவ்வொருவனும் தன்னைவிட்டுவிட்டு ஒவ்வொருவனை எண்ணிப்பார்த்து எல்லாருமுவருதமுறை அப்பொழுது அவ்விடமவந்தஒருவனுடைய உபதேசத்தால் தன்னை அறிந்து கொண்டதுபோல் ஆசாரியனுபதேசத்தால் தன்னைத்தெரிந்துகொள்ளுகிறான்' என்பது; உபதேசத்தால் ஆத்மஸாக்ஷாத்காரம்வருவதற்கு இது திருஷ்டாந்தம்.

டாந்தத்தாலுண்டான) அறிவு இவைகளையுடையவர்களுக்கு இருபத்தைந்தத்துவங்களுள் அறியப்பட்ட (பிரதானபுருஷர்களுவிஷயத்தில் ஒன்றுக்கொன்று) சுத்தமாயும் மிகவும்விலகினதாயுமிருக்கிற பேதபுத்தியுண்டாகிறதென்று ஆசார்யர் சொல்லுகிறார். இருபத்து நான்குதத்வங்களையறிந்தவன் அவியக்தத்தில் நிலைத்திருக்கிறான் இருபத்தைந்துதத்வங்களையுணர்ந்தவனும் அவ்யக்தத்திற்குமேலான வனுயிருக்கிறனென்று (ஆசார்யர்) சொல்லுகிறார்' என்றுசொன்னர்'' என்றார்.

முந்நூற்றிருபத்தொன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

———:o:———

(வ்யாஸர் உலகம் அநித்யமென்பதையும் ப்ரம்மஜ்ஞானத்தினல் மோக்ஷம் பெறுவது அவசியமென்பதையும் சுகருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "முன்காலத்தில் வ்யாஸருடையபுத்திரரான சுகமுனிவர் எப்படி வைராக்யதசையடைந்தார்? இதை நான் கேட்க விரும்புகிறேன். எனக்குக்கேட்பதில் மிகஆவலிருக்கிறது'' என்று கேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்

"பிதாவானவ்யாஸர், உலகத்துக்கொத்தகல்லலுழுக்கத்துடன் ஸஞ்சரிக்கிறவரும் ஒன்றிலிருந்தும்பயமில்லாதவருமான புத்திரருக்குத் தமக்குரியவேதமுழுமையும் அத்யயனம்செய்வித்து உபதேசிக்கலானர். 'புத்திரா! தர்மதசை அனுஷ்டிக்கக்கடவாய். இந்திரியங்களைஜயித்து மிகவும்நடுமையானபனிவெய்யில்களையும் பசிதாகங்களையும் காற்றையும் எப்பொழுதும் ஜயிக்கக்கடவாய். ஸத்யம், ருஜுவாயிருத்தல், குரோதமில்லாமை, அஸூயையில்லாமை, தமம், தவம், தூன்பம்செய்பாமை, குரூரத்தனமில்லாமைஇவைகளை விதிப்படி காப்பாற்று. கபடத்தையெலாம்விட்டுத் 'தர்மத்தைப்பற்றி உண்மைவழியில் நில். தேவதைகளையும் அதிதிகளையும் ஆராதித்துச் சேஷத்தால் பிராணயாத்திரையான ஆகாரத்தை அருந்து. குழந்தாய்! நீ நூரைக்குநிகரானதேஹத்தில் ஜீவன் பனிபோலிருக்கையிலும் இஷ்டர்களுடையஸகாயம் அநித்யமாயிருக்கையிலும் எப்படி[1] நித்திரைசெய்கிறாய்? (காமமுதலான) பகைகள் மிக்கஜாக்ரதை

---

1 மோக்ஷத்திற்கு யத்தனியாமலிருக்கிறாய் என்பது.

யுள்ளவைகளும் எப்போழுதும் (தர்மகார்யத்தில்) முயற்சியுள்ள ஜீவகளும் ஸமயத்தையடையவிரும்புகிறவைகளுமாயிருப்பதைச் சிறு வனை நீ அறியாமலிருக்கிறாய். நாள்கள் கணக்கிடப்படுகின்றன. அப்படியே, ஆயுள் நிச்சயமாகிறது வாழ்நாள் (இவ்வளவென்று) எழுதப்படுகிறது. ஏன் எழுந்திருந்து ஓடாமலிருக்கிறாய்? மிகவும் நாஸ்திகர்களாயுள்ளவர்கள் பரலோகத்திற்குரியகார்யங்களில் தூங்கு கிறவர்களாகி மாம்ஸரக்தமிவைகளை வளர்த்தற்குவேண்டிய இம் மைக்குரியகார்யங்களை விரும்புகிறார்கள் புத்திமோகத்தையடை ந்து தர்மத்தில்அஸூயையடைகிறவர்களும் கெட்டமார்க்கத்தில் செல்லுகின்றவர்களுமானமனிதாகளை அனுஸரிக்கிறவனும் துன்பத் தையடைகிறான். மிக்கவலிமையுடையவர்களும் வேதத்தையேமுக் கியமாகக்கொண்டவர்களும் ஸந்தாஷத்தையடைந்தவர்களும் தர்மத் திலிருந்தும் விலகாதமார்க்கத்தையடைந்திருக்கிறவர்களுமான பெரி யோர்களை உபாலித்துக் கேட்கக்கடவாய் வித்வான்களும் தர்மத் தைப்பார்ச்சிறவர்களுமான அவர்களுடையகொள்கையை (மனத்தில்) தரித்து மேலானபுத்தியினால மார்க்கத்திலிருந்துவிலகிசெல்லு கின்றமனத்தை அடக்கக்கடவாய் நிகழ்காலத்தைமாத்திரம் பார்க் கிறபுத்தியினால நாளையென்பது தூரத்திலென்றிணைத்துப் பய மற்றவர்களும் எல்லாவற்றையும் பகழிக்கிறவர்களும் அறிவில்லாதவர் களுமாயிருப்பவர்கள் கர்மாவுக்குரியபூமியைப பார்க்கிறதில்லை தர்ம மாகிற ஏணியைஅடைந்து சிறிதுசிறிதாகஏறு தன்னைசுற்றிக்கூடு கட்டுகிறபூச்சிபோல ஆத்மாவை (காமாதிகளால்) சுற்றச்செய்து அறியாமலிருக்கிறாய நாஸ்திகனும் மர்யாதையைமீறினவனும் [2]கரை யையிடிக்கிறபிரவாகம்போலிருப்பவனுமான மனிதனைத் தடையற்ற வகை (வழியில்) பிடிங்கப்பட்ட [3]மூங்கிலைபோல இடப்பக் கத்தில்செய் தைரியமாகிற ஓடத்தைசெய்து, காமக்ரோதங்க ளாகிறமுதலைகளையுடையதும் ஐந்துஇந்திரியங்களாகிறஜலத்தையு டையதுமான (ஸம்ஸார) நதியையும் (அதிலுள்ள), ஜனனங்களாகிற மடுக்களையும் தாண்டக்கடவாய். உலகம் மிருத்யுவினல்சொல்லிப் பட்டும் ஜராவினல் துன்பப்படுத்தப்பட்டுமிருத்தலாலும் (ஆயுளை

---

1 'நித்யத்தையாவது குருவையாவது அடையாமலிருக்கிறாய்' என் பது கருத்து.

2 'வெள்ளத்தால்தாக்கப்படும் கரையின்மேலே கட்டப்பட்டவீடுபோன் றவனும்' என்பதும்,

3 'மூங்கில்போலவணங்காதவனும்' என்பதும் சிலர்கருத்து.

4 'விலச்சிவிடு' என்பது கருத்து.

* L எசு

யபஹரிப்பதால்) வீணாகாதஇரவுகள் வந்துகொண்டிருக்கலாலும் (ஸம்ஸாரமாகிறஅதியைத்) தர்மமாகிற [1]ஓடத்தால் தாண்டக்கடவாய். நிற்கிறவீணையும் படுத்திருக்கிறவீணையும் மிருத்யுவானவன் அகாரண மாகக்கொலுகையில் (எவன்) எப்படி ஸுகத்தையடைவான்? ஒருவன் கர்மங்களில் திருப்தியடையாமல் அவைகளைத் தேடிக்கொண்டிருக்கையிலே பெண்செந்நாய் செம்மறிக்கிடாயை எடுத்துக்கொண்டு [2]போவதுபோல மிருத்யு அவனை எடுத்துக்கொண்டு போய்விடுகிறான். அந்தகாரத்தில் பிரவேசிக்கவேண்டியிருக்கையில், வளர்க்கப்பட்ட ஜ்வாலையையுடையதும் தர்மபுத்திமயமும் பெரியதுமான தீபத்தை நாளடைவில் முயற்சியுடன் தரிக்கவேண்டும். பிராணியானது அநேக ஜன்மங்களையெடுத்து ஒருஸமயம் இந்தமனுஷ்யஜன்மத்தில் பிராம்மணத்தன்மையை அடைகிறது புத்திரனே! அதைக் காப்பாற்று இவ்வுலகில் பிராம்மணனுக்கு இந்தசரீரம் காமத்திற்கும் அர்த்தத்திற்குமாக உண்டாகிறதில்லை; கிலேசத்திற்கும் தவத்திற்குமே உண்டாகிறது. மரிதபிறகு நிகரற்றஸுகமுண்டாகிறது. பிராம்மணஜன்மமானது அநேகமானதவங்களால் அடையப்படுகிறது. அதை அடைந்து கிரீடையில்பற்றுவைத்து விளையாடக்கூடாது. தன்வேதத்திலும் தவத்திலும் இந்திரியங்களையடக்குவதிலும் எப்பொழுதும் பிரவிருத்தித்து மோக்ஷத்தைவிரும்பி நல்லகார்யங்களில்பற்றுடன் எப்பொழுதும் முயற்சிசெய் அவயத்தத்தைக்காரணமாகவுடையதும் கல்கிலேசரஹிதமாகவுடையதும் ஸூக்ஷ்மமான ஸ்வரூபமுடையதும் க்ஷணங்களும் த்ருடிகளும் இமைப்பொழுதுகளுமாகிற ரோமங்களுடையதும் [3]ஸமமானசக்தியுள்ள சுக்லகிருஷ்ணபக்ஷங்களான கண்களுடையதும் மாஸங்களாகிறஉறுப்புக்களுடையதுமான மனிதர்களுடைய பிராயமாகிறஇந்தக்குதிரையானது ஓடுகிறது. எப்பொழுதும் புறப்பட்டதும், கடியவேகத்துடன்போகிறதுமான அதைப்பார்த்து எப்பொழுதும் இம்மையில் நன்றாகப்பார்க்கிற உன்கண்ணானது மற்றொருவன்வழிகாட்டி அழைத்துக்கொண்டுபோகவேண்டாததாயிருந்தால் பரலோகத்தைக்குறி உன்மனம் தர்மத்தில் பற்றிநிற்கட்டும். தர்மமும் காமமும் சீலமும்குன்றியிவர்கள் எப்பொழுதும் அனிஷ்டத்தின் ஸம்பந்தத்தால் அலறுகிறவர்களும்" அதர்மங்களாகிற அநேகவலைகளாலே மிகவும் கிலேசத்தையடைந்தவர்களுமாகி யாதனைசரீ

1 வேறு பாடம். [லசம்.

2 கூடபென்கிறகாலம்; 'பிராணன்முதலானகலைகள்' என்றும் கொள்ள

3 இங்கு இரண்டுசொற்கள் விடப்பிட்டன.

ரத்தை அடைகின்றார்கள். எப்பொழுதும் தர்மத்தில் பற்றினவனும் உத்தமராஜாதியை நன்றாகப்பரிபாலித்துக் காப்பவனுமான அரசன் புண்ணியவான்களடைகிற உலகங்களை அடைகிறான்; அவைகளில் பலவித மாகவும் ஸஞ்சரிக்கிறான்; இதற்குமுன் அடையப்படாததும் குற்ற மற்றதுமான (போகஸ்) ஸுகத்தையும் அடைகிறான் குருக்களுடைய வார்த்தையைக்கொளாதவன் மரணத்தையடைந்தபோழுது, [1]நரகத்தில் பயங்கரமான சரீரமுடைய நாய்களும் இரும்புபோன்ற மூக்குக்களையுடைய பக்ஷிகளும் வலியகழுகு குராமுதலான பக்ஷிகளுடைய கூட்டமுமான உதிரத்தை அருந்தும் துஷ்டஜந்துக்கள் வந்து சூழுகின்றன: இவ்வுலகத்தில், மனம்போனவழியேசென்று [2]பிரம்மாவினால் நியமிக்கப்பட்டவைகளும் (சுசியாயிருத்தல், ஸந்தோஷம், தவம், வேதாத்தியயனம், ஈச்வரத்தியானம், கொலலாமை, பொய்சொல்லாமை, திருடாமை, ப்ரம்மசர்யம், பிரதிக்ரகம்செய்யாமைமென்கிற) பத்துக்குணங்களுடையவைகளுமான இந்தமரியாதைகளைப் பேதிக்கிற பாபியானவன் யமனுடையராஜ்யத்திலுள்ள (அவிபத்திர) வனத்தையடைந்து மிகவும் கஷ்டத்துடன் வெலிக்கிறான். லோபமுடையவனும் பொய்சொல்லுவதில் மிக்கபிரியமுள்ளவனும் எப்பொழுதும் அவமானத்திலும் வஞ்சனையிலும் பற்றுதலுடையவனும் வியாஜகர்மங்களால் பிறருக்குக்கஷ்டத்தைச் செய்தவனும் பாபகர்மமுடையவனுமான மனிதன் கொடிய நரகத்தையடைந்து மிக்கதுக்கத்தை அனுபவிக்கிறான்; (தவிரவும்,) கொதிக்கின்ற வைதரணியென்கிற பேராற்றில் முழுகினவனும் அவிபத்திரவனத்தாலறுக்கப்பட்ட சரீரமுடையவனும் கோடாலிக்காட்டில் படித்தவனுமாகிப் பெரியநரகத்தில்விழுந்து துன்பத்துடன் வலிக்கின்றான், (பிரம்மலோகமுதலான) பெரியஸ்தானங்களைப் புகழ்கிறாய்; பரப்ரம்மத்தைச் சிந்திக்கவில்லையே? சிலகாலத்தில் மரணத்தை வீளைவிக்கிற கிழத்தனம் வருவதை நீ அறியவில்லையே. புறப்படு. ஏன், இருக்கிறாய்? பெரிதும் மிகவும் வருத்துகிறதும் கொடியதுமான பயம் உண்டாகிவிட்டது. ஸுகத்திற்கு வழியைத் தேடு. நீ மரித்து யமனுடைய கட்டளையினாலே கொடியவர்களான யம படர்களால் யமனிடம் கொண்டுபோகப்படுவாய். (ஆகையால்,) நீ நல்வழியில் முயற்சிசெய். பிறர் துக்கத்தையறியாத பிரபுவானவன் பந்துக்களோடி ஸமூலமாக அபகரிப்பான். உன்னுடைய இந்த உயிர் எவ்வளவு? பூமண்டலத்திலக்குகிறவன் இல்லை. யமன் வருவதற்கு முன்

1 'நரகமும்' என்பது மூலம்; 'நரர்களுக்கு வருத்தத்தைக்கொடுப்பது' என்பது.

2 'வேதத்தினால்' என்பது பழையவுரை.

வீசுங்காற்றினது உண்டாகப்போகிறது. நீ [1]ஒருவனையே கொண்டு போகப்படுவாய். பரலோகத்திற்குரிய ஸாதனத்தைச செய்துகொள். மூடிவைச் செய்கிற காற்று ஒன்றே உனக்கு வீசப்போகிறது. பெரிய பயம்வரும்பொழுது உனக்குத் திசைமயக்கம் உண்டாகப்போகிறது. குழந்தாய்! இதத்தில் கலக்கத்தை அடைந்த உனக்குக் காதும் அடைக்கப்படப்போகிறது (ஆகையால்,) உத்தமமான ஸமாதியைச் செய். அஜாக்கிரதையாலுண்டான கர்மத்தினால் சித்தின் பூர்வபுண்ணிய பாவங்களை நினைத்துப் பச்சாத்தாபத்தை அடையப்போகிறாய். தனிமையான (கர்மமாகிற) நிதியையே தேடக்கடவாய். பலம், அங்கம், அழகு இவைகளைக்குறைக்கிற ஜரையானது உன்னுடைய சரீரத்தைத் தளர்ச்சியுள்ளதாகச் செய்யப்போகிறது. கேவலம் புண்ணியநிதியைத் தேடக்கடவாய் அந்த அந்தகனனவன் உயிர்நீங்கும்போது ரோகங்களாகிற பாணங்களாலே பலாத்காரமாகச சரீரத்தைப் பிளக்கப்போகிறான். பெரியதவத்தைசசெய்ய யத்தனம் செய் மனுஷ்யதேகங்களில விருப்பமுள்ள பயங்கரமான [1]செந்நாய்கள் எங்கும் ஓடிவரப்போகின்றன. புண்ணியத்தைவிடாமல் அனுஷ்டிப்பதில் யத்னம்செய். ஒருவனை இருளைப் பார்க்கப்போகிறாய் (ஆகையால்,) விரைந்து செய். [2]மலியினுசசியில் ஸ்வர்காமயமான விருக்ஷங்களைப பார்க்கப்போகிறாய். உன்னுடைய கெட்ட சேர்க்கைகளும் நண்பர்கள் போன்ற பகைவர்களும் உன்னை நரலோகத்திலிருந்தும் சலிக்கச்செய்வார்கள். புத்திர! (ஆகையால்,) பிரம்மத்தையடைய முயற்சிசெய். அரசனிடமிருந்தும் பயமில்லாததும் திருடனிடமிருந்தும் பயமில்லாததும் மரித்தவனைக் கூடவிடாததுமான அந்த வித்யாதனத்தை ஸம்பாதனம் செய். அந்த யமலோகத்தில் தங்கள் கர்மங்களாலுண்டான கர்மப்பயனுகிற தனமானது ஒருவரோடொருவர் விபாகம் செய்துகொள்ளப்படுகிறதில்லை. எவனுக்கு எது விவாகத்தில் கொடுக்கபபட்ட [3]யௌதகம்போலுள்ளதோ அதையே அவ்விடத்தில் அவன் அனுபவிக்கிறான். புத்திரனே! பரலோகத்தில் எந்தத்தனத்தினால் ஜீவிக்கலாமோ அதனையே தேடு. எந்தத்தனம் நசியாமல் நிலைத்ததாயிருக்குமோ அதனையே தேடு. ஜனங்கள் யவையாவைப் பூக்குவஞ்செய்கிற அளவுக்குள் விரைவாக நசிப்பாய் மரணமெங்கடத்தில் ஒருவனுக்கவேஎல்லுகிற

---

1 'காமமுதலானவை' என்பது பழையவுரை.

2 இது மரணகுறிப்பு

3 விவாக காலத்தில் கன்னிஸையேயு கொடுக்கப்படுவதில் இதில் மர்த்தவர்களுக்குப பாகமில்லை

வீன அன்னியும் புத்திரர்களும் உறவினர்களும் தொடர்ந்து செல்வ திலீல. நண்பூஉபசரிக்கப்பெறற அன்பர்களும் தொடர்ந்து செல்லுவ திலீல. புத்திரனே! முன்ஜன்மத்தில செய்யப்பட்டபுண்ணியபாப கர்மமாத்திரம் போகிறவனுக்குப பரலோகத்தில பௌதகம்போலாகி றது. நல்வினைதீவினைகளால் ஸம்பாதிக்கப்பட்ட பொன் மணி இவை களுடையகுவியல்கள் அவனுக்குச சரீரகாசம் நேரிடும்போது ஒரு காரியத்தையும் ஸாதிக்கிறதில்லை புத்திரா! உன்னுடையபுண்ணிய பாபகர்மத்திற்கு [1]முடிவுஇல்லை மனுஷ்யர்களுக்கு இந்தப்புண்ணிய பாபகர்மத்தில ஆத்மாவுக்குச்சமமான ஒருஸாக்ஷியும் இல்லை. பரலோ கத்தில் செல்லுகிறவனுக்கு மனுஷ்யர்களுக்கு சூன்யமாய்விடுகிறது. (பரலோகத்திற்குசெல்லுகிற ஆகமா ஞானியினை) புத்தியாகிற நேத்திரத்தினால் பிரவேசித்து முழுதும்பார்க்கப்படுகிறது. இதத்தில் அக்னி, ஸூர்யன், வாயுமூவரும் சரீரத்தை ஆஸ்ரயித்திருக்கிறார் கள். தர்மத்தைப்பார்க்கின்றஅவர்களே அதற்குஸாக்ஷிகளாகின்ற னர். அவர்கள் இரவும்பகலும் எலலாரிடங்களிலும் ஸ்பரிசிக்கிறவர் களும் ஸஞ்சரிக்கிறவர்களுமாயிருத்தலால வெளிப்படையும் ரகஸ்யமு மானசெய்கைகளில உன்தர்மத்தையே காபபாறறு பரலோகமானது அநேக சத்ருக்களையுடையதும் விகாரரூபமுள்ள பயங்கரமான ஈக் ஷ்ளையுடையதுமாயிருத்தலால் தனக்குரியகர்மமே ரக்ஷிக்கபபட வேண்டும். தான்செய்ததர்மம் பரலோகத்தில்வரும் அவ்விடத் தில் தங்கள்கர்மங்களை ஒருவருக்கொருவர் பிரித்துக்கொள்வதில்லை. தான்செய்ததர்மத்தாலுண்டானபாபீன அபபடியே அனுபவிக்கவேண் டும். அப்ஸரஸ்ஸுகளுடையகூட்டங்கள் மகரிஷிகளுடன் விமானத்தி லேறி இஷ்டமானவிடம்சென்று தம்கர்மத்தாலுண்டான இன்பப் பயீன அனுபவிப்பதுபோல, இவ்வுலகில் பாவமில்லாதவர்களும் சரீ ரத்தாலாகும் பயீனயுடையவர்களும் சுத்தமான பிறப்புள்ளவர் களுமானமனிதர்கள் எந்தசகபாமம் எவ்விதம் செய்யப்பட்டதோ அதை அவ்விதமே அடைகிறார்கள் அவர்கள், கிருகஸ்தர் மங்களாகிறஅக்னிகளாலே பிரம்மா, பிருஹஸ்பதி, இந்திரன் இவர் களுடைய திருந்தலோகங்களை அடைகிறார்கள். திரும்பவும் மதி மயக்கத்தைச்செய்யாதவிஷயத்தை ஆயிரம்விதமாகவும் அநேகவித மாகவும் சொல்லுவதற்கு உத்ஸாஹப்படுகிறேன். ஆகையால், நீ பரிசுத்தமாகசெய்கிறகர்மமே உனக்குப் பிரபு. இருபத்துநான்கு பிராயங்கள் சென்றுவிட்டன. நிசயமாக இருபத்தைந்தாவது

1 பயனில்லாமல்போகாது.

பிராயம் நடக்கிறது. தர்மத்தை ஸம்பாதிப்பாய். உனக்குப் பிராயம் சென்றுவிடுகிறதே. அந்தயமன் உன்தவறுதலைத் தன்சேனைக்குக் [1]கோமுகமாகச செய்யப்போகிறான். (ஆகையால்,) [2]முயற்சியுடன் தர்மத்தைகூப்பதில் விரைவாய்; முன்னும்பின்னும் ஒரு வருமின்றித் தனியேசெல்லப்போகிறஉனக்குச சரீரத்தாலும் பிறரலும் என்னஉபயோகம்? பரலோகத்தில் தனித்துச்செல்லுகிறவர்களுக்குப் பயகாலங்களில் நன்மைசெய்யக்கூடிய அந்தநிதியைமாத்திரம் தேடக்கடவாய். ஒருவரிடத்திலும் அபிமானமில்லாதவனும் யாராலும்தடுக்கமுடியாதவனும் பிரபுவுமானமிருத்யுவானவன் [3]தனிமுதல் அடிவரையுமுள்ளபந்துக்களுடன் அபகரிப்பான். (ஆகையால்,) தர்மமாகிறநல்லநிதியைத தேடு. புத்திரா! நான் இம்மையில் (எல்லாராலும்) ஸம்மதிக்கப்பட்டஉதாரணத்தை எனது அனுபவத்தாலும் அனுமானத்தாலும் உனக்கு எடுத்துரைத்தேன் அவ்விதம்செய். தனதுகர்மத்தால்ஸமபாதிக்கப்பட்ட தனங்களைக்கொடுப்பவன் ஒருவனே புத்திமோகத்தாலுண்டாகாத குணங்களையுடையவன். அவன் சுபகர்மங்களைச செய்கிறவனுக்குள்ள எல்லா நன்மைகளையும் அடைகிறான். அப்படிப்பட்ட இந்தஅர்த்தஞானமானது கிருதஜ்ஞனுக்குப் பயன்தரத்தக்கதாயிருக்கிறது கிராமத்தில்வஸிப்பவனுக்குப் பற்றுதலென்பது கட்டுமகயிறு. புண்ணியசாலிகள் இதை அறுத்துவிட்டுச செலலுகிறார்கள் பாவிகள் இதை அறுப்பதில்லை. புத்திரனே! மரிக்கப்போகிறஉனக்குத் தனத்தாலும் உறவினர்களாலும் புத்திரர்களாலும் என்னபயன்? ஏற்றுதயருகையைஅடைந்த ஆத்மாவைத்தேடு. 'உன்னுடையபிதாமஹர்களெல்லாரும் எங்கே போனார்கள்? நாளைசெய்வதை இன்றுசெய்யவேண்டும். சாயங்காலத்தில்செய்வதை முற்பகலிலே செய்யவேண்டும் மிருத்யுவானவன் இவனுடையகாரியம்முடிந்ததையும் முடியாததையும் எதிர்பார்க்கமாட்டான். மரித்தவுடன் பந்துக்களும் ஜ்ஞாதிகளும் ஸ்நேகிருத்துக்களும் பின்தொடர்ந்துவந்து மனிதனை அக்னியில்போட்டுவிட்டுத் திரும்பிவிடுகிறார்கள் (ஆகையால்,) பாமாத்மாவை அடையவிரும்பமுடையவனும் சோம்பலில்லாதவனுமாகி நாஸ்திகர்களும் தயையில்லாதவர்களும் பாபபுத்தியுள்ளவர்களுமானமநிதர்களைத் தடையின்றி இடப்பக்கமாகச செய். இவ்விதம், உலகம் கெடுக்கப்பட்டும் காலத்தால்பீடிக்கப்பட்டுமிருத்தலால் மிகுந்த தைரியத்தையடைந்து

1 ஒருவித வாத்யம். 2 ஒருசொல் விடபபட்டது.
3 வேறுபாடம்.

எல்லாவிதத்தாலும் கர்மத்தைச செய். ஆனால், இந்தஞானயோ
யத்தை நன்கறிந்த அறிகிறவனிதன் இம்மையில் நன்கர்மத்தை நன்முகச்
செய்து பரலோகத்தில் ஸுகத்தை அனுபவிக்கிறான் அறிந்தவர்
களுக்குத் தேகம்விழுவதும் மரணமில்லை நன்முகக்காக்கப்பட்ட
(தர்ம) மார்க்கத்தில நாசமுமில்லை. தர்மத்தைவிருத்திசெய்கின்ற
வனே பண்டிதன் தாமதங்கிலிருந்துமமுடிகிறவன் காபத்தை
அடைகிறான். கர்மமார்க்கத்திலிருந்து தள்புணியபாபமங்களைச்
செய்தால அவற்றைசசெய்தவன் முறைப்படி பரிஹாரத்தை அடைகிறான்.
இழிந்தகர்மத்தைசசெய்தவன் நரகத்தை அடைகிறான் தர்மத்தின்
கரையையடைந்தவன் ஸ்வர்க்கத்தை அடைகிறான். ஸ்வர்க்கத்திற்குப்
படிபோன்றதும் அடையவரியதுமான மநுஷ்யஜன்மத்தையடைந்
தவன் தன்னைத் திருப்பவும் நழுவாமலிருக்கும்படி செய்துகொள்ள
வேண்டும் ஸ்வர்க்கமார்க்கத்தை அனுஸரித்துத் தாமதத்தைவிடாமல்
லிருக்கிற புதிதையபுடையவனாய புரிணியபாரமுடையவனென்றும்
மித்திரர்களாலும் பந்துக்களாலும் நமக்கிப்படித் தகாதவனென்றும்
சொல்லுகிறார்கள். விஷயங்களால் கெடுக்கப்படாததும் உறுதியில்
பற்றிநிற்பதுமான புத்தியையுடையவனும் ஸ்வர்க்கத்தில இடத்தைத்
தேடிக்கொண்டவனுமானவனுக்குப பெரியபயமில்லை தீபாவளங்
களில் பிறந்தவர்களும் அவ்விடத்திலேயே மரணத்தையடைந்தவர்க
ளும் காமபோகங்களையறியாதவர்களுமான அவர்களுடையதர்மமா
னது மிகவும்[1] சிறிதாகும் போகங்களைத்தள்ளிவிட்டுச சரீரத்தி
னுல்தவத்தைச் செய்பவனுல் அடையப்படாதது ஒன்றுமில்லை. அந்தப்
பயணத்தான் நான் நன்குமதிக்கிறேன் அதிகமாயிரம் தாய்தந்தை
களும் பெண்டுபிள்ளைகளும் உண்டானார்கள ; இனியும் உண்டாவார்
கள். அவர்கள் யாரைச்சேர்ந்தவர்கள் ? நாம் யாரைசசேர்ந்தவர்கள் ?
நான் ஒருவனே. எனக்கு ஒருவருமில்லை நான் வேறு ஒருவனையும்
சேர்ந்தவனில்லை. நான் எவனைச சேர்ந்தவனை அவனைப் பார்க்க
வில்லை. எவன் என்னைச்சேர்ந்தவனே அவனையும் பார்க்கவில்லை.
அவர்களுக்கு உன்னால் செய்யக்கூடியதுமில்லை. உனக்கு அவர்களால்
செய்யக்கூடியதுமில்லை. நீங்கள் கர்மங்களால அவர்களுண்டானார்
கள் நீயும் மீபிரயாணப்போகிறப் இந்த உலகத்தில் துயருள்ளவர்
களுக்குப் பிறனும் தம் ஜனம்போலாகிவிடுகிறான். உபாத்யாயனிருக்
கையிலும் தரித்திரர்களுக்கு ஸ்வஜனங்களிருந்தும் இல்லாதவர்

---

1 ' அவைசாஸ்மாத்ஸ்ரேயம் புண்டரீகாக்ஷ ' என்றபடி ; ' அதர்மஃ ' என்று பதம்பிரித்து, ' அதர்மம் மிகச்சிறிதாகும் ' என்றும் கொள்ளலாம்.

களாகிறார்கள். மனிதன் களத்திரத்தை அபேக்ஷித்துத் தீவினைகளைச் செய்கிறான்; அதனால், இம்மையிலும் மறுமையிலும், துன்பத்தை அடைகிறான்; தன் கர்மத்தினாலே பந்துஜனங்கள் விலகினவர்களா யிருப்பதைப பாரப்பான் புத்திரனே! (சொல்லியவற்றையெல்லாம் சொல்லியபடியே செய்வாய். இதை நன்குதெரிந்துகொண்டு பூமியைக் கர்மாவுக்குரியதென்று கண்டவன் பரலோகத்தைவிரும்பிச சுபகர்ம கர்மங்களைச் செய்யவேண்டும். மாதங்களருதுக்களென்னும் பெய ருள்ள தூண்டுகோலுடையதும் இரவுபகல்களாகிற விறகுகளுள தும் அவரவர்களுடைய கர்மங்களாகிற பாலனுக்குஸாக்ஷிபூதமாகிற ஸூர்யனுகிற அக்கினியினால் காலமானது பிராணிகளை வலித்து பாகம்செய்கிறது கொடாததும் அனுபவியாததுமான தனத்தால் என்ன பயன? பதைவர்களைவருத்தாத வண்மையால் என்னபயன்? தர்மத்தைத் அனுஷ்டியாத சாஸ்திரஞானததால் என்ன பயன்? இந்திரி யங்களை ஜயியாததும் மனோவசமற்றதுமான அந்த ஆத்மாவினால் என்னபயன்?' என்றுசொன்னர். வ்யாஸருடைய நன்மைபைத்தரத தக்க இந்த வார்த்தையைக்கேட்டு, சுகர் மோக்ஷத்தை உபதேசித்த பிதாவைவிட்டு நீங்கிச சென்றார்'' என்று சொன்னர்.

மூன்றூற்றுமுப்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(வினை செய்தவனையே சென்றடையுமென்பது முதலியன.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! தானம், யாகம், செய்யப்பட்ட தவம், குருபணிவிடை இவற்றின் பயனை எனக்குச சொலலும்'' என்று கேட்க, பீஷ்மர் சொலலலானர்

"அனர்த்தத்தோடுகூடியபுத்தியால மனம் பாவத்தில் செல்லுகி றது. அவன் தீவினையைசெய்து பெரியதுன்பத்தை அடைகிறான். தீவினைசெய்தவர்கள் தரித்திரர்களும் பிரேதங்களைக்காட்டினும் பெரிய பிரேதங்களுமாகித் துர்பபிக்ஷத்திலிருந்தும் அதிக துர்பபிக்ஷத்தை யும் துன்பத்திலிருந்தும் அதிகத் துன்புத்தையும் பயத்திலிருந்தும் அதிகப்பயத்தையும் அடைகிறார்கள். புண்ணியகர்மமுடையவர்கள் ஸ்ரத்தையுடையவர்களும் அடக்கமுடையவர்களுமாகி [1]உத்ஸவத்திலிருந்தும உத்ஸவத்தையும் தனமுடையவர்க ளாகி ஸ்வர்க்கத்திலிருந்

1 ஸந்தோஷத்தை விளைவிக்கக்கூடிய கார்யம்,

தும் ஸ்வர்க்கத்தையும் ஸுகத்திலிருந்தும் ஸுகத்தையும் அடைகி றார்கள். தயாளுக்களிருப்பதால் உட்புகமுடியாதவைகளும் ஸர்ப்ப பயமும் சோரபயமுமுள்ளவைகளுமான இடங்களில் நாஸ்திகர் கள் கைவிலங்குடன் செலுலுகிறார்கள் இதைக்காட்டிலும் வேறு என்னவேண்டும்? தானத்திலிருந்தவர்களும் தேவர்களிடம் பிரீதி யுடையவர்களும் விருத்தினர்க்கினியவர்களும் ஸாதுக்களிடம் பிரிய முடையவர்களும் கைகளிலதஷ்ணியுடையவர்களுமான மனிதர்கள் ஸுகமத்திற்குக்காரணமும் மனத்தை ஜயித்தியோகிகளுக்குரியதுமான மார்க்கத்தை அடைந்தவர்களாவார்கள எவர்களுக்குத் தர்மம் காரணமாகத தோற்றவில்லையோ அவர்கள, நான்பங்களில் பதர்க ளும் பகுதிமுட்டைகளுள் அழுகினமுட்டைகளும்போல மனிதர்க ளில இருக்கிறார்கள் அதிகமேகமாகழுகிறவனுயிருந்தாலும் செய்த கர்மம் அவனைப் பின்தொடருகிறது எவன்எவனுல் எந்தஎந்தவிதம் எந்தஎந்தக்கர்மம் செய்யப்பட்டதோ அவன்அவனை அந்தஅந்த விதம் அந்தஅந்தக்கர்மம் படுக்கையில படுத்தும் நிற்கையில் நின் றும் ஓடுகையில் ஓடியும் ஒருதொழிலைசெய்கையில தொழிலைசெய் தும் நிழல்போலஅனுஸரிக்கிறது எவன்எவனுல் எப்படிஎப்படி எந்த எந்தக்கர்மம் முன்செய்யப்பட்டதோ அவன்அவரை அப்படி அப் படி அதுஅதுவே எப்பொழுதும் அனுபவிக்கபடுகிறதென்பது நிச் சயம் காலமானது அதிருஷ்டத்தால்காக்கப்பட்ட பொதுவானகர்ம நிதியைக்குறித்து இந்தப்பிராணிகளின் ஸுகதுகத்தை நான்குபக்கத் திலும் இழுக்கிறது மலர்களும் கனிகளும் பிறர்நீண்டதலின் றியே தங்களுக்குரியகாலத்தை அதிக்ரமியாததுபோல முன்செய் யப்பட்டகர்மமும் தனக்குரியகாலத்தை அதிக்கிரமிக்கிறதில்லை ஸம் மானமும் அவமானமும் லாபமும் நஷ்டமும் ஜயமும் அபஜயமும் அடிக்கடிஉண்டாகிப் பயணக்கொடுப்பதில தவறுகிறதில்லை. ஒருவன் முன்சரீரத்தில் தன்னை செய்யபபட்டதுக்கத்தையும் ஸுகத்தை யும் கர்ப்பமாகிறசயனத்தை அடைந்தமுதல் அனுபவிக்கிறான் பாலனுகவும் தருணனுகவும் விருத்தனுகவுமிருந்து எந்தஎந்தப் புண்ய பாவத்தைச் செய்கிறானே அதை அதை அந்தஅந்த நிலைமை யில் ஜன்மந்தோறும் அனுபவிக்கிறான். ஆரம்பசக்களுள் கன்றானது தன்னுடையதாயைத்தேடி அடைவதுபோலவே முன் ஜன்மத்தில் செய்யப்பட்டகர்மமானது செய்தவனைச் சென்றடைகின்றது. அழுக் கான வஸ்திரமானது பிறரு ஜலத்தினுல் சுத்தமாகிறதுபோல உப வாஸங்களாலே தாபத்தையடைந்தவர்கள் நீண்டதும் அழிவற்றது

மான ஸுகத்தை அடைகிறார்கள் மீண்டுகாலம் தபோவனத்தில் அனுஷ்டிக்கப்பட்டதவத்தினால் தர்மத்தால்பாவங்களைத்தொலைத்தவர் கள் தங்கள்மனோரதங்களை அடைகிறார்கள். ஆகாயத்தில் பகூகிகளும் ஜலத்தில் மீன்களும் சென்றவழியானது, காணப்படாததுபோலப் புண்ணியசாலிகளுடைய கதியும் காணப்படுகிறதில்லை பிறரை நிந்திப பதும் அவர்களுடைய தவறுகளைசொல்லுவதும் வேண்டா. நல்ல தும் தகுதியுள்ளதும் ஆத்மாவுக்குஹிதமுள்ளதுமானவிஷயைச் செய்யவேண்டும்'' என்று சொன்னர்.

———

மூன்றூறுமுப்பத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

——:o:——

(வ்யாஸர் புத்ரனுக்காகத் தவஞ்செய்ததும், சங்கரர் வரமளித்ததும்.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! வ்யாஸருக்குத் தர்மாத்மாவும் மிக்கதவமுடையவருமான சுகர் பிறந்தவரலாற்றையும் அவர் மேலான வஸித்தியை அடைந்ததையும் எனக்குச சொல்லும். தவத்தையே தன மாகவுடைய வ்யாஸமுனிவர் சுகரை எந்த ஸ்திரீயினிடத்தில் உண்டு பண்ணினார்? மஹாத்மாவான இந்தச சுகருடைய மாதாவை நாங்கள் தெரிந்துகொள்ளவில்லை; உந்தமமான இவருடைபஜன்மத்தையும் அறி யவில்லை. இவர் பாலராயிருந்தபோதே இவருடைய புத்தியரீன ஸுமஷ்மமான ஞானத்தில் எவ்விதம் பறறியது? இவ்வுலகத்தில் வேறொருவருக்கும் இவ்விதம்உண்டானதில்லை. விசாலமானபுத்தி யுடையவரே! இதை நான் விவரமாகக் கேட்கவிரும்புகிறேன். இப்பொழுது, உத்தமமான கதாபிரஸ்தாபத்தைக்கேட்டு எனக்குப் போது மென்கிற திருப்தியானது உண்டாகவில்லை. ஓ! பிதாமஹரே! ஆகை யால், சுகருடையபெருமையையும் ஆத்மயோகத்தையும் பிரம்மஜ்ஞான த்தையும் உள்ளபடி விரிவையாகச சொல்லும்" என்றுவினவ, பீஷ்மர் சொலலத்தொடங்கினர்.

"ரிஷிகள் பிராயங்களால் தர்மத்தைச செய்வதில்லை; நரை களாலேயுமில்லை; தனங்களாலேயுமில்லை; பந்துக்களாலேயுமில்லை. எவர் கற்றுணர்ந்தவரோ அவர் நமக்குப் பெரியவர். பாண்டுபுத்திரா! நீ என்னிடம்கேட்டவையெல்லாம் அவ்விதையே காரணமாகவுடையன. அந்தத்தவமானது இந்திரியங்களை அடக்குவதால் உண்டாகிறது;

வேறுவிதத்தால் உண்டாகிறதில்லை. மனிதன் இந்திரியங்களுடைய ப்ரவிருத்தியினால் சந்தேகமில்லாமல் தோஷத்தையடைவான்; அந்த இந்திரியங்களை அடக்கியே விருத்தியை அடைகிறான். ஐயா! ஆயிரம் அஸ்வமேதங்களுக்கும் நூறு வாஜபேயங்களுக்கும் யோகத்தினுடைய வீசத்திற்குள்ள பலனைத இல்லை. இந்த விஷயத்தில் உனக்குச் சுகருடைய பிறப்பையும் யோகபலனையும் மனத்தை வசம் செய்யாதவர்களால் அடையமுடியாத மேலானகதியையும் சொல்லப்போகிறேன். முன்காலத்தில் நான்கு பக்கமும் கொன்றை வனங்களோடுகூடிய மேருவின் சிகரத்தில் மகாதேவர் பயங்கரமான பூதகணங்களால் சூழப்பட்டு விளையாடிக்கொண்டிருந்தார். மலையரசன்மகளான தேவியும் அங்கேயே இருந்தாள். அவ்விடத்தில், பிரபுவான கிருஷ்ணத்வைபாயனரானவர் கிறந்த தவத்தைச் செய்துகொண்டிருந்தார் குருஸ்ரேஷ்டனே! யோகதிலும் தர்மத்திலும் பற்றுடையவரான அவர் யோகத்தால் ஆத்மாவான ஈசுவரரிடம் பிரவேசித்துத் தாரணையைச்செய்து புத்திரனுக்காகத் தவம் செய்தார் ஓ! விபுவே! 'அக்னிக்கும் பூமிக்கும் அப்புக்கும் வாயுவுக்கும் ஆகாயத்திற்கும் ஒப்பான வீர்யமுள்ள புத்திரன் எனக்கு உண்டாகவேண்டும்' என்கிற ஸங்கற்பத்தோடும் மௌனத்தோடும் மனோவசமில்லாதவர்களால் அடையவரியதும் உத்தமமுமானதவத்தை மேற்கொண்டு தேவர்களுக்குத்தலைவரான மகாதேவரைப் பிரார்த்தித்தார். ஸமர்த்தரான அவர் வாயுவை ஆகாரமாகக்கொண்டு, அநேக ரூபங்களுடையவரும் உமாபதியுமான மகாதேவரை ஆராதித்துவந்தார் அவ்விடத்தில், ப்ரம்மரிஷிகளனைவரும் தேவரிஷிகளும் லோகபாலகர்களும் வஸுக்களும் ஸாத்யர்களும் ஆதித்யர்களும் ருத்ரர்களும் ஸூர்யசந்திரர்களும் வாயுவும் ஸப்தமருத்துக்களும் ஸமுத்திரங்களும் நதிகளும் அஸ்வினீதேவர்களும் தேவகந்தர்வர்களும் நாரதபர்வதர்களும் விஸ்வாவஸுவென்கிற கந்தர்வனும் வஹித்தர்களும் அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் லோகேசரான அவரை ஆராதித்தார்கள். அவ்விடத்தில் ருத்ரரான மஹாதேவர் கொன்றைமலர்களால் கட்டப்பட்டதும் மங்களகரமுமான மாலையைத்தரித்துச் சந்திரன் சந்திரிகையோடு விளங்குவதுபோல விளங்கினார். திவ்யமும் பார்ப்போர் மனத்தைக் கவர்வதும் தேவர்களாலும் தேவரிஷிகளாலும் நிரம்பியதுமான அந்த வனத்தில் வ்யாஸமுனிவர் புத்திரனுக்காகச் சலியாமல் மேலான யோகத்திலிருந்தார். இவருக்குச் சக்தி குறையவில்லை; களைப்பும் உண்டாகவில்லை. மூவுலகங்களுக்கும் ஆச்சரியமாயிருந்தது. யோகத்தைச் செய்பவரும்

அளவற்ற தேஜஸ்ஸுள்ளவருமான அவருடைய ஜடைகள், ஒளியால் அக்னிஜ்வாலைகள்போல மிகவும் ஜ்வலித்துக்கொண்டு விளங்கின பகவானான மார்க்கண்டேயர் எனக்கு இதைச் சொல்லினர். அவர், அப்பொழுது இவ்விஷயத்தில் எனக்குத், தேவசரித்திரங்களைச் சொன்னார். ஐயா! மஹாத்மாவான வ்யாஸருடைய அந்தத்தவத்தால் ஜ்வலிக்கும்படி செய்யப்பட்ட அவருடைய ஜடைகள் இப்பொழுதும் அக்னிக்குச் சமமான வர்ணமுடையவைகளாகப் பிரகாசிக்கின்றன. பாரத! அவருடைய இவ்விதத்தவத்தாலும் பக்தியினாலும் மஹேச்வரர் மனத்தில் திருப்தியுற்று அனுக்ரகம் செய்யலானார். பிறகு, மஹாதேவர் அவருக்கு அம்பிகையோடு பிரத்யக்ஷமானார். பகவானை முக்கண்ணர் புன்னகையுடன் அவரைநோக்கி, 'த்வைபாயனரே! உமக்கு இப்படிப்பட்ட புத்திரன் உண்டாகப்போகிறான். அக்னியும் வாயுவும் பூமியும் ஜலமும் ஆகாயமும்போல சுத்தனும் மஹானுமான புத்திரன் உண்டாவான். உம்முடைய புத்திரன் 'ப்ரம்மபாவத்தைத்யாணிக்கிறவனும் ப்ரப்பத்தில் உறுதியுடையவனும் ப்ரம்மதத்தினிடம் ஆதரவுள்ளவனும் ப்ரம்மத்தை ஆஸ்ரயமாகவுடையவனுமாகித் தேஜஸால் மூவுலகங்களையும் வியாபிக்கசெய்து கீர்த்தியை அடையப்போகிறான்' என்று சொன்னார்.

மூந்நூற்றுமுப்பத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

(சுகருடையபிறப்பும் உபநயனமுதலியனவும்.)

வ்யத்யவதியின் புத்திரரான அந்தவ்யாஸர், சங்கரரிடமிருந்து உத்தமானவரதானத்தையடைந்து, பிறகு, அக்னியையுண்டுபண்ணவேண்டுமென்கிறவிருப்பத்தால் அரணியை எடுத்துக் கடைந்தார். அரசனே! பிறகு, பகவானான வ்யாஸமுனிவர், தன்னுடைய தேஜஸினால் உத்தமமானஸுபத்தைத்தரிக்கின்ற கிருதாசியென்று பெயருடைய அப்ஸரஸைக் கண்டார். யுதிஷ்டிரனே! பகவானான அவர், அந்தவனத்தில் அந்த அப்ஸரஸைப்பார்த்து உடனே காமத்தால் மோஹத்தை அடைந்தவரானார். மஹாராஜனே! அப்பொழுது, அந்தக்கிருதாசியும், காமத்தால் வருந்தமுற்ற மனத்தையுடைய வ்யாஸரைப்பார்த்துப்

1 'தத்பாவபாவி' என்பது மூலம்; 'தான் ப்ரமமம் என்னும் தியானம்' என்பது பழையவுரை. 'பரம்மத்தினிடத்தில் பக்தியுள்ளவர்' என்பர் சிலர்.

பெண்கிளியாகிக் கிட்டவந்தாள். அவர் வேறுரூபத்தால்மறைக்கப் பட்ட அந்த அப்ஸரஸைப பார்த்துச சரீரமுழுதும் காமத்தினால் வியா பிக்கப்பட்டார் அந்த வ்யாஸமுனிவர், மிக்தைரியத்தால் காமத் தை அடக்கியும், மிகவிப்பறறின அந்தமனத்தை அடக்கக்கூட லில்லை. வருவதுவந்தேவிடுமானதினால், அவர் கிருதாசியினுடைய வடிவத்தின்அழகினால் இழுக்கப்பட்டார் அந்தமுனிவர் அக்கினியை உண்டுபண்ணவிருப்பத்தால் முயறறிசெய்து மனதைதையடக்கும் பொழுது, உடனே அவருடைய வீரியமானது அரணியிலேயே விழுந் தது. அரசனே ! பிராம்மணசிரேஷ்டரான அந்தப்பிரம்மரிஷியானவர் சங்கையில்லாதமனதுதிடன் அபபடியே அரணியைக் கடைந்தார். அந்த அரணியில சுகர்உள்ளானார் சுக்கிரமானது கடையப்படும் போது, பெருந்தவமுடையவரும் பரமரிஷியும் மஹாத்மாகியும் அர ணியின் கர்பபத்தில உற்பத்தியையுடையமருமான அந்தச் [1]சுகர் பிறந்தார் ; யாகத்தில விருத்திசெய்யப்பட்டவனும் ஜ்வலிஸைத்தாங்கு கிறவனுமான அக்னியானவன் விளங்குவது போலத தேஜஸினால் விளங்கினர். குருவம்சத்தரசனே ! அப்பொழுது, அவர் பிதாவினு டைய மிகசகிறந்தரூபத்தையும் நிறத்தையுமுடையவரும் ஆத்ம ஸ்வரூபத்தை தயானம்செய்கிறவரும் புகையிலலாத அக்கினிபோல ஜ்வலிக்கிறவருமாக விளங்கினர் அரசனே ! அப்பொழுது, மகா மேருவின் சிகரத்தில் அவரை நதிகளுள்சிறந்த கங்காதேவியா னவள் தன் வடிவதுடன் வந்தடைந்து ஜலத்தினால நீராட் டினாள். குருவம்சத்தினுதித்த ராஜப்பிரேஷ்டனே ! மஹாத்மாவான சுகருடைய நிமிதததில் ஆகாயதலிருந்தும் தண்டமும் கிரு ஷ்ணஜினமும் பூமியில் விழுந்தன. (அபபொழுது,) கந்தர்வர்கள் தானம் செய்தார்கள் ; அபஸரஸுகளின் கூட்டங்களும் நடனம் செய் தன ; தேவதுந்துபிகளும் ஆயிரக்கணக்காக வாசிக்கப்பட்டன. விப் ராவஸுவென்கிற கந்தருவனும் தும்புருநாரதர்களும் ஹாஹா ஹூஹூவென்கிற கந்தர்வர்களும் சுகருடைய உற்பத்தியைத் துதித்தார்கள். அவ்விடத்தில் இந்திரன்முதலான லோகபாலர்களும் தேவர்களும், தேவரிஷிகளும் பிரம்மரிஷிகளும் வந்தார்கள். வாயுவும் தேவலோகத்திலுள்ள எல்லாப்புஷ்பங்களையும் வருஷித்தான். ஜங்கம மும் ஸ்தாவரமுமான ஜகத்தானது மிகவும் ஸந்தோஷத்தையடைந் தது. மிக்கசாந்தியுடையவரும் மஹாத்மாவுமான (ஸ்ரீவரர்) தேவி

1 சுக்ரமென்றால் வீரியம் சுக்ரமென்கிறபதத்தில் ரகாரத்தைத்தள்ளிச் சுகரென்று பெயர்கொண்டார

யோடுகூடச் தாமாகவே பிரீதியுடன் அந்த்வ்யாஸமுனிவருடையபுத் திரருக்குப் பிறந்தவுடனே விதிப்படி உபநயனம்செய்வித்தார். தேவர் களுக்கெல்லாம் தலைவனை இந்திரன் பிரீதியுடன் அவருக்குத தேவ லோகத்திலுள்ளதும் பார்க்க ஆசசரியமுமான கமண்டலுவையும் தேவர்களுக்குரிய வஸ்திரங்களையும் கொடுத்தான் பாரதனே! அநேக மாயிரம் ஹம்ஸங்களும் ஸாரஸபக்ஷிகளும் நாறுசிறகுகளுடைய ஹம் ஸவிசேஷங்களும் கிளிகளும் அவரை வலம்வந்தன். திவ்யமான ஜன் மதையடைந்து மகாகாந்திமானும் தேஜஸ்வியும் பிரம்மசாரியும் அர ணியிலுண்டானவருமான சுகானவர் ஸகாதியையடைந்து அப்பொ ழுது அவ்விடத்திலேயே வஸித்தார் மஹாராஜனே! வேதங்கள் உபநிஷதத்துக்களுடனும் ஸேதிஹாஸங்களுடனும் அவருடையபிதாவை வந்தடைந்ததுபோலவே பிறந்தவுடனேயே அவரை வந்தடைந்தன. மகாராஜனே!, வேதங்களையும், வேதாங்கங்களையும் அவற்றின்பாஷ்யங் களையும் அறிந்தவராயிருந்தும் அந்தச்சுகர் தர்மத்தையே ஆலோசித் துக்கொண்டு பிருகஸ்பதியை உபாத்தியாயராக வரித்தார் மகாமுனிவ ரான அவர் உபநிஷதத்துக்களோடும் ஸேதிஹாஸங்களோடும்கூடிய எல் லாவேதங்களையும் இதிஹாஸத்தையும் தர்மசாஸ்திரங்களையும் முழு தும் அத்யயனம்செய்துவிட்டுக் குருவுக்குத் தக்ஷிணைகொடுத்து ஸமாவர்த்தனமென்கிற வித்தையின்முடிவை செய்துகொண்டு பிரம்ம சாரியும் ஸமாதியுடையவருமாயிருந்து உக்ரமான தவம்செய்ய யத்தனித்தார். சிறு பிராயத்திலேயே பெரியதவத்தையுடைய அவர் ஞானத்தினாலும் தவத்தினாலும் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் ஆலோசிக்கத்தக்கவரும், பூஜிக்கத்தக்கவருமானார். அரசனே! மோக்ஷ தர்மங்களை ஆராய்ந்து பார்க்கின்ற அவருடைய புத்தியானது கிருகஸ் தாஸ்ரமமுதலான மூன்று ஆஸ்ரமங்களிலும் பற்றவில்லை.

முந்நூற்றுமுப்பத்துமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(சுகர் பிதாவான கடலளையால் ஜனகபுரை அண்டநத்தது.)

அந்தச் சுகர் [1]மோக்ஷத்தை ஆலோசித்தக்கொண்டே பிதாவை வந்தடைந்தார். மோக்ஷத்தை விரும்புகிற அவர் [1] விநயத்துடன்

---

1 'மோக்ஷசாஸ்திரத்தை உபதேசம் பெறவேண்டுமென்றெண்ணி' என் பது பழையவுரை.

பிதாவைவணங்கி, 'ஓ பிரபுவே! என்னுடைய மனத்திற்கு மேலான சாந்தியானது உண்டாகும்படி மோக்ஷதர்மங்களில் ஸ்மர்த்தருமும் பகவானுமான நீர் எனக்குச்சொல்லவேண்டும்' என்றுகேட்டார். பரம ரிஷிப்பானவ்யாஸர் புத்திரனுடைய வார்த்தைகளைக்கேட்டு அவரை நோக்கி, 'புத்திர! நீ சாந்தியும் அதிகப்பிரயாசையுமடைவாயாக' என்ன பிரமவாதிகளான பாண்டவர்களினால் திருதராஷ்டிரனுடைய கட்டளையினால் பீமசாஸ்திரத்தையும் முழுமையும் அறிந்தார் அந்தவியாஸர் பிறகு ஜனமேஜயனுடைய பிரம்மாவுக்குச்சமமான பராக்கிரமமுடையவராயிருக்கிற அந்தபுத்திரரை மோக்ஷதர்மங்களில் ஸமர்த்தராக நினைத்து மறுபடி, 'பிருதிவிபதியான ஜனகனை அடையக்கடவாய்' அந்தவிதியை நீயே உபதேசிப்பாய் விஷயம் எல்லாவற்றையும் சொல்லுவான்' என்று சொன்னார். (அப்பொழுது) சுகர் பிதாவினுடைய கட்டளையினால் தர்மத்தினுடைய நிஷ்டையையும் மோக்ஷத்தினுடைய பரமாவஸ்தானத்தையும் தேர்ந்து பிதாவைப்பிரதக்ஷிணம்செய்து (அவரிடமும்,) வியாஸர், 'நீ மனிதர்களை செலுத்துகின்றவழியில் கர்மமில்லாமல் போகவேண்டும். (யோக) பரபாவத்தாலுண்டான ஆகாயகமனத்தால் போகக்கூடாது. ருஜுவாகச்செல்லவேண்டும் ஸுகத்தைத்தேடிக்கொண்டு போகக்கூடாது விரோதபதார்த்தங்களினிடத்தில் தேடக்கூடாது விரோதபதார்த்தங்கள் பற்றுதலுக்குக்காரணம் என்னுடைய சிஷ்யனான அந்த அரசனிடத்தில் அகங்காரம் அடையத்தக்கதில்லை. அவனுடைய வசத்தில் இருக்கவேண்டும் அவன் உன்னுடையஸந்தேகத்தை நிவிருத்திசெய்வான் அந்த அரசன் தர்மத்தில் ஸமர்த்தன்; மோக்ஷசாஸ்திரத்தில் வல்லவன்; எனக்குச்சிஷ்யன் அவன்சொல்லுவது சங்கையின்றிசெய்யத்தக்கது' என்று சொல்லினார் இவ்விதம் சொல்லக்கேட்ட தர்மபுத்திரனுடைய அந்தமுனிவர் கடல்சூழ்ந்தபூமியை ஆகாயத்தால்காண்டிவதற்கு ஸமர்த்தராயிருந்தாலும் மிதிலைக்குக் காலால் நடந்து சென்றார். அவர் மலைகளையும் ஆறுகளையும் பூஞ்சோலைகளையும் அநேகமதகபாணகளாலும் நிரம்பியகாடுகளையும் ரம்யசோலைகளையும், கடந்து, பிறகு, மேருவைச்சார்ந்தஇளாவிருதவருஷம் ஹரிவருஷமிரண்டையும், பிறகு இமயமலையைச்சேர்ந்த கிம்புருஷவருஷத்தையும் இவ்விதம் கிரமமாகதாண்டிப் பாரதவருஷத்தை அடைந்தார். அந்தமகாமுனிவர் சீனர்களாலும் ஹூணர்களாலும் வசிக்கப்பெற்ற அநேகவிதமான தேசங்களைப் பார்த்துக்

கொண்டே ஆரியாவர்த்தமென்கிற இந்தத்தேசம் வந்தார். அவர் பிதாவின் வசனத்தை யறிந்து அந்த அர்த்தத்தையே பூலோசித்துக் கொண்டு ஆகாயத்திலசெல்லுகின்றபகஷிபோல மார்க்கத்தைத்தாண்டினார்; ரமணீயமான பட்டணங்களையும், ஜெழிபபுள்ள நகரங்களையும் விசித்திரமான ரத்தினங்களையும் பார்த்தும் பாராதவரானார். பிறகு, மார்க்கத்திலசெல்லுகிற அந்தணர் அழகிய பூந்தோட்டங்களையும் தேவாலயங்களையும் புண்ணியதீர்த்தங்களையும் காண்டிச சென்றார். அவர் சிறிதுகாலத்தில் தர்மமான ராஜபரிபாலனத்தினாலும் மகாத்மாவுமானஜனகராலே பரிபாலிக்கப்பட்ட விதேஹதேசத்தை அடைந்தார் அவர அந்தத்தேசத்தில பலவகை அன்னங்களும் சுவைபொருந்திய உணவுகளுமுள்ள கிராமங்களையும் மிகவும் செழிப புள்ளவைகளும் அநேகம்பசுக்கூட்டங்களால் நிரம்பியவைகளுமான இடைச்சேரிகளையும் பார்த்துக்கொண்டு, நெறபயிர்களாலும் யவப் பயிர்களாலும்செழித்ததும் ஹம்ஸங்களும் ஸாரஸபக்ஷிகளும்வஸிக்கப் பெற்றதும் சோபைபொருந்திய அநேகம்காமதைனுகைகளால் அலங்கரிக்கப்பட்டதும் மிகவும்செழிப்புடையஜனங்களால் ஸேவிக்கப் பட்டதுமான விதேகதேசத்தைக் கடந்து அழகுபொருந்தியதும் செழிபபுடையதுமான மிதிலையின் உபவனத்தை அடைந்தார் யானைகளாலுமதகுதிரைகளாலும் தேர்களாலும் நிறைந்ததும் ஆயுதம்தாங்கினரும் கள்நிரம்பியதுமான அதை அவர் பார்க்கிறவராயிருந்தும் பாராத வர்போலச சலியாதவராய்த் தாண்டிசசென்றார். மனத்தினுலே (பிதாவின்வசனமாகிற) அந்தப்பாரத்தைத்தாங்கிக்கொண்டு (மோக்ஷ விஷயமான) அந்தஅர்த்தத்தையே சிந்திக்கிறவரும் ஆத்மாவில் ரமிக்கிறவரும் தெளிவான மனத்தையுடையவருமாகி மிதிலையை அடைந்தார் அந்தமிதிலையின்வாயிலைடைந்து வாயில்காப்பவரால் தடுக்கபபட்டுத் தியானம்செய்துகொண்டிந்த, இன்னரென்று அறிந்தபின்விடப்பட்டு உள்ளேபிரவேசித்தார் அவர், 'செல்வவான்களான ஜனங்களால் நிரம்பிய ராஜமார்க்கத்தின் வழியே ராஜகிருஹத்தையும் அடைந்து சங்கையிலாமல் பிரவேசித்தார். அவ்விடத்திலும் தூரை பாலகர்கள் கடிந்சொல்லினால் அவரைத்தடுத்தார்கள அவ்விடத்தில் சுகர் முன்போலவே கோபமில்லாமல் நின்றார். வெய்யிலால் வழியில் மிகவும் தாபத்தையடைந்தவரும் பசிதாகங்களாலுண்டான சிரமத் தையுடையவருமாகியும் களைப்பும் வாட்டமும் அடையவில்லை; வெய் யிலினின்றும் விலகவுமில்லை. அந்தத்துவாரபாலகர்களில் ஒருவன் (ஆகாய) மத்தியையடைந்த ஆதித்யன்போலநிற்கிற சுகரைப்பார்த்துச்

சோகமடைந்து மூன்றுப்படி வணங்கிப பூஜித்து அஞ்சலிசெயது கொண்டி, அவ்விடமிருந்து ராஜகிருகத்தினுடைய முதற்கட்டில் பிரவேசிக்கச்செய்தான். ஐயா! நிழலிலும் வெயிலிலும் ஸமமான பார்வையும் ஸமமானதயர்யமுடைய தகர், மோக்ஷத்தையே சிந்தித் துக்கொண்டு அவ்விடத்திலேப நின்றார். பிறகு, ஒருமூகூர்த்தத் திற்குள் அரசனுடையமந்திரி வந்து அஞ்சலிசெய்துகொண்டு அவரை அங்கிருந்தும் ராஜகிருகத்தின் இரண்டாவதுகட்டில் கொண்டுவந்துவிட்டான். அவ்விடத்தில் அந்தப்புரத்திலிருப்பதும் பெரியதும் சைத்ரரதமென்கிற குபேர னுடைய உத்யானத்திற்கு நிகரானதும் அழகானதும் பூத்தமரங்களையுடையதும் நன்குஅமைக்கபபட்டஜலமுள்ளதுமான உத்யானத்தை அந்தமந்திரியானவன் அத்தசசுகருக்குக்காண்பித்து உத்தமனான அந்தஜனகரையும் காண்பித்துத் தருதியான ஆஸனமும்கொடுத்துவிட்டுத் திரும்பவும் அங்கிருந்து வெளியிலசென்றான் (அபபொழுது,) அழகான வேஷமுடைய வர்களும் [1]தருணவயதுள்ளவர்களும் பிரியமான தோற்றமுடைய வர்களும மெலலியசிவபபுவஸ்திரந்தரித்தவர்களும் புடம்வைத்த பொன்னபரணமுடையவர்களும் [2]சலலாபம் [3]ஆலாபவிவைகளில் ஸாமார்த்தியமுடையவர்களும் நாட்டியம் கானம் இவைகளில் தேர்ச்சிபெற்றவர்களும் சிரித்துக்கொண்டேபேசுகிறவர்களும் அழகிய அப்ஸரஸுகளுக்கொபபானவர்களும் அந்தரங்கத்துடன் உபசரிப் பதில் சக்தியுள்ளவர்களும் அபிபிராயத்தை அறிகிறவர்களும் ஸ்ருங் காரசேஷ்டைகளில் தேர்ந்தவர்களும் தாவிகளிற்சிறந்தவர்களுமான ஐம்பதற்கு மேற்பட்டஸ்திரீகள் அவரிடம் வந்தார்கள்; பாத்ய முதலானவைகள் கொடுத்துச் சிறந்த பூஜையினல் உபசரித்தார்கள்; அப்பொழுது, அந்தஸமயத்துக்குத்தகுந்த ருசியானஅன்னத்தினல் திருப்தியும் அடைவித்தார்கள். ஐபா! பாரத! அவர் போஜனம்செய்த பிறகு, ஒவ்வொருத்தியாக மிக்கஅழகான அந்தப்புரத்தோட்டத்தைக் காண்பித்தார்கள். (பிறர்) மனத்தைஅறிகின்றவர்களான ஸ்திரீகள் விளையாடுகிறவர்களும், நகைக்கிறவர்களும் இனிமையாகக் கானம் செய்கிறவர்களுமாகி உதாரமனமுடைய அவருக்குப் பணிவிடைசெய் தார்கள். சுத்தமனமுடையவரும் ஸந்தேகமற்றவரும் ப்ரவண மனனரித்தியாஸனமென்கிற மூன்றுகர்மங்களும்செய்தவரும் இந்

---

1 ஒருசொல் விளக்கப்பட்டது.

2 ஒருவரோடொருவர் மனங்கலந்து பேசுதல்.

3 ஒருவரே கதைமுதலியன சொல்லுதல்.

*L எஅ *

திரியவசமுடையவரும் கோபத்தைஜயித்தவரும்' அரணியிலுண் டானவருமானசுகர் ஸந்தோஷிக்கவுமில்லை; கோபிக்கவுமில்லை. சிறந் தவர்களான அந்தஸ்திரீகள் அவருக்குச் சிறந்ததும் சிறந்தவர்க ளுக்குரியதும் ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும் உயர்ந்ததான விரிப்புவிரித்ததும் படுக்கையாக்கியமுமான ஆஸனத்தைக்கொடுத் தார்கள். சுகர் பாதசுத்திசெய்துகொண்டு ஸந்தியை உபாவிஷித்து விட்டு அந்தஅர்த்தத்தையே சிந்தித்துக்கொண்டு' பரிசுத்தமான ஆஸனத்தில் உட்கார்ந்தார். ஸமர்த்தரானஅந்தசுகர் அதில் மூன் ராத்ரியில் தியானத்திற்பற்றி[1] யிருந்துவிட்டு நடுராத்திரியில் 'முறை ப்படி நித்திரைசெய்தார். பிறகு, ஒருமுகூர்த்தம்சென்று ஏழுந்திரு ந்து சுத்திசெய்துகொண்டு புத்திமானஅவர் ஸ்திரீகளால்சூழப் பட்டும் தியானத்தையேஅடைந்தார். பாரத! (மனம்) சலியாதவரான வ்யாஸபுத்திரர் இந்த விதியுடன் ராஜகருகத்தில அந்தமீதிப்பகலி யும் அந்தராத்ரியையும் போக்கினர்.

மூன்றூற்றுமுப்பத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஜனகர் சுகரைப்பூஜித்து அவருக்கு ப்ரம்மஜ்ஞானத்தை உபதேசித்தது.)

பாரத! பிறகு, அந்தஜனகராஜர் மந்திரிகளுடன் புரோஹி தரைமுன்னிட்டுக்கொண்டும் எல்லாஅந்தபுரஸ்திரீகளாலும் ஆஸ னத்தையும் பலவிதமானரத்தினங்களையும் எடுப்பித்துக்கொண்டும் சிரஸால் அர்க்கியதானஞ்செய்துகொண்டும் குருபுத்ரரைவந்தடைந்தார். அப்பொழுது, அந்தஅரசர் அநேகரத்தினங்களால்அலங்கரிக்கப்பட் டதும் உயர்ந்தவிரிப்பால் விரிக்கபபட்டதும் எல்லாவிஷயத்திலும் மங்களகரமும் செழிப்புடையதும் புரோகிதரால்கிரிக்கப்பட்டதும் சிறந்ததும் பூஜிக்கபபட்டதுமான ஆஸனத்தைதவாங்கிக் கையால் தடைத்துக் குருபுத்திரரானசுகருக்குக்கொடுத்தார். அந்தஆஸனத் திலுட்கார்ந்த வ்யாஸபுத்திரரான அந்தச்சுகரைச் சாஸ்திரப்படி பூஜி த்து முதலில் [2]பாத்தியத்தைக்கொடுத்துப் பிறகு அர்க்கியத்தையும் கோவையும் [3]கொடுத்தார். அவரும் மந்திரத்தையுடைய பூஜையை

---

1 வேறு பாடம். 2 கால் கழுவ நீர்.
3 'ந்யவேதயத்' என்பது மூலம்.

விதிப்படி ஏற்றுக்கொண்டார். ராஜஸ்ரேஷ்டனே! பிராம்மணஸ்ரேஷ்டரும் மிக்கதேஜஸுள்ளவருமான சுகர் ஜனகரிடமிருந்தும் அந்தப் பூஜையை ஏற்றுக்கொண்டு பசுவைக் (கொண்டுபோகும்படி) கட்டளையிட்டு அரசரையும் மந்திரவைப்படுத்திய பரிவாரங்களையுடைய அரசரிடம் அழிவில்லாத மோக்ஷமுக்தியும் ஆத்ராக்கியத்தையும் வினவினார். பிறகு, உதாரமான மனமும் வம்சமுமுடைய அந்த அரசர் அவரால் அனுமதி செய்யப்பட்டுப் பரிவாரங்களுடன் அஞ்சலி செய்துகொண்டு பூமியிலுட்கார்ந்தார். பூபதியான அரசர் வ்யாஸபுத்திரரைநோக்கிக் குசலத்தையும் குறைவிலாமையையும் வினவி, 'வந்ததென்ன?' என்றும் பிரச்னம் செய்தார். சுகர், 'உமக்கு மங்களம். 'மோக்ஷதர்மங்களின் விஷயத்தை அறிந்தவனும் விதேஹ தேசத்து அரசனும் என்னுல்யாகம் செய்விக்கத்தக்கவனுமான ஜனகனென்பவன் பிரவிருத்தனுயிருக்கிறன். பிரவிருத்தியிலோ நிவிருத்தியிலோ உனக்கு மனத்தில் ஸந்தேகமிருக்குமானுல் சீக்கிரம் அவனிடம் செல்லு. அவன் உன்னுடைய ஸந்தேகத்தை நிவிருத்திசெய்வான்' என்று என்பிதா எனக்குச சொன்னர். நான் பிதாவின் கட்டளைப்படி உம்மைப் பிரச்னம் செய்ய இங்கு வந்தேன். தர்மிஷ்டர்களில சிறந்தவரே! அதனை உள்ளபடி எனக்குச் சொல்லவேண்டும். இவ்வுலகில் பிராம்மணனுல் எது செய்யத்தக்கது? மோக்ஷரூபமான புருஷார்த்தமானது என்ன ஸ்வரூபமுடையது? மோக்ஷமானது எப்படி அடையத்தக்கது? ஞானத்தினுலேயா? தவத்தினுலேயா?' என்று கேட்டார். ஜனகன், ''பிராம்மணனுலே ஜன்மம் தொடங்கி எது செய்யத்தக்கதோ அதைக்கேளும். ஐயா! உபநயனம் செய்யப்பட்டு வேதத்தில் ப்ற்றுதலுடையவனுயிருக்கவேண்டும். பிராம்மணரே! தவத்தோடும் குருசுச்ரூஷையோடும் பிரம்மசரியத்தோடும் தேவதைகளுடைய கடனும் ரிஷிகளுடைய கடனும் தீர்ந்தவனும் அஸூயையில்லாதவனும் நியமமுடையவனுமானுல் வேதங்களை அத்யயனம்செய்து குருவுக்குத் தக்ஷிணைகொடுத்துவிட்டு (அவருடைய) அனுமதிபெற்றுக்கொண்டு பிறகு ஸமாவர்த்தனம்செய்யவேண்டும். ஸமாவர்த்தனம் செய்துகொண்டு கிருகஸ்தாச்ரமத்தில் தன்னுடைய பத்னியிடமேபற்றுள்ளவனுய் வஹிக்கவேண்டும். அஸூயையில்லாதவனும் நியாயப்படி அக்கினியை ஆதானம் செய்தவனும் கபடமற்றவனுமாகிப் புத்திரபௌத்திரர்களை உண்டுபண்ணிப் பிறகு வானப்பிரஸ்தாச்ரமத்தில் சாஸ்திரப்படி அந்த அக்கினிகளையே ஆராதித்துக்கொண்டு அதிதிகளிடம் பிரியமுடையவனுக வஹிக்கவேண்டும். தர்மத்தையுணர்ந்த அந்த வானப்பிரஸ்தன்

வனத்தில் அக்கினிகளை முறைப்படி ஆத்மாவில் ஸமாரோபணம் செய்துகொண்டு துவந்துவமில்லாதவனும் ஆசையொழிந்தமனமு, டையவனுமாகி ப்ரம்மாச்ரமமென்கிற ஸந்யாஸாச்ரமபதத்தில் வஸிக்கவேண்டும்' என்று சொன்னார். சுகர், 'சாஸ்த்ரஜ்ஞானமும் அனுப்வமுமுண்டாகி இருதயத்தில் சாச்வதமான ப்ரம்மம் பிரத்யக்ஷமாயிருக்கையில் அவச்யமாக [1]ஆச்ரமங்களிலாவது வனங்களிலாவது இருக்கவேண்டுமா? அதனை உம்மிடம் கேட்கிறேன். அதனை நீர் சொல்லவேண்டும். அரசரே! வேதார்த்தத்தின் உண்மையை அனுசரித்து நீர் எனக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்டார். (அப்போழுது) [2]ஜனகர், [3]ஞானமும் விஜ்ஞானமுமில்லாமல் மோக்ஷப்ராப்தி உண்டாகாது. குருவின்ஸம்பந்தமிலலாமல் ஞானலாபமில்லையென்று கருதப்படுகிறது. இவ்வுலகில் குருவை ஓடக்காரனுகவும் அவனுடைய ஞானத்தை ஓடமாகவும் சொல்லுகிறார்கள் விஜ்ஞானத்தையடைந்து கிருதகிருத்யனும் (ஸம்ஸாரஸாகரத்தைத்) தாண்டினவனுமாகி அந்த [4]இரண்டையும் தள்ளவேண்டும். உலகங்களும் கர்மங்களும் நசியாமலிருப்பதற்காக முன்னோர்களாலே நான்கு ஆச்ரமங்களையும் பற்றியதர்மமானது அனுஷ்டிக்கப்பட்டது இம்மையில், இந்தக்கிரமப்படி கர்மங்களுக்குரிய அநேகம் பிறப்புக்களில், புண்யபாபகர்மங்களை விட்டு மோக்ஷமென்பது அடையப்படுகிறது. இந்த ஜீவன் அநேக ஸம்ஸார ஜன்மங்களிலே சுத்திசெய்யப்பட்ட (புத்திமுதலான) காரணங்களாலே சுத்தமனமுடையவனகி முதலாச்ரமத்திலேயே மோக்ஷத்தையடைகிறான். அந்தமுதலாச்ரமதையடைந்தே முக்தனும் அனுபவிக்கப்பட்ட புருஷார்த்தத்தையுடையவனும் பரமாத்மாவையே அடைய விருப்பமுள்ளவனுமாயிருக்கும் பண்டிதனுக்கு மூன்று ஆச்ரமங்களினும் என்ன பயன் உண்டாகும்? எப்பொழுதும், ரஜோகுணத்தாலும் தமோகுணத்தாலுமுண்டான தோஷங்களை விலக்கவேண்டும். ஸாத்விகமார்க்கத்தையடைந்து புத்தியினால் தன் ஆத்மாவைப் பார்க்கவேண்டும். தன் ஆத்மாவை எல்லாப்பிராணிகளிடத்திலும், எல்லாப் பிராணிகளையும் தன்னுத்மாவிடத்திலும் பார்க்கிறவன் ஜலத்தில் ஹம்ஸமிருப்பதுபோல ஸம்பந்தப்படமாட்டான். சமனத்தை அடைந்தவனும் துவந்துவமற்றவனுமான அவன் (ஸ்தூலஸூக்ஷ்மகாரண)

---

1 'ஆச்ரமேஷ்வநாத்ரிஷு' என்பது வேறு பாடம்; 'மூன்று ஆச்ரமங்களிலும்' என்பது பொருள்.

2 சாஸ்திரத்தினுல் உண்டானது. 3 அனுபவ ஞானம்.

4 ஓடத்தையும் ஓடக்காரனையும். 5 வேறு பாடம்.

தேகங்களைவிட்டுத் [1]தாழ்ந்தகதியிலிருந்து பகுதிபோல ஊர்த்வ கதியை அடைந்து முக்தனாகி மோக்ஷத்தில் அளவற்றதன்மையை அடைகிறான். ஐயா! இந்த விஷயத்தில் முன் யயாதிராஜனுல் சொல்லப்பட்டவையும் மோக்ஷசாஸ்திரத்தில தெளிந்தவர்களான பிராம்மணர்களாலே தரிக்கப்படுகின்றவையுமான ஸ்லோகங்களைக் கேளும். (அவற்றின்பொருள்,) 'ஜோதியானது ஆத்மாவிலிருக்கிறது. மற்ற விடத்திலில்லை. அது எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமாயிருக்கிறது. மிகவும் ஸமாதியுடன் கூடிய சிதாத்மாவானவனே அதை நேரில் பார்ப்பதற்குத்தக்கவன். எவனிடமிருந்து மற்றவன் பயப்படவில்லையோ, எவன் மற்றவனிடமிருந்து பயப்படுகிறதுமில்லையோ, எவன் (ஒன்றையும்) விரும்புகிறதில்லையோ, வெறுக்கிறதுமில்லையோ அவனே பரம்மமாகிறான். எப்பொழுது, எல்லாப்பிராணிகளின் விஷயத்திலும் செய்கையினாலும் மனத்தினாலும் சொல்லினாலும் கெட்டஎண்ணத்தைசெய்யவில்லையோ அப்பொழுது பரம்மமாகிறான். மனத்துடன் ஆத்மாவைசேர்த்து மோகத்தையுண்டுபண்ணுகிற பொருமையை விட்டுக் காமத்தையும் மோகத்தையும் விட்டுவிட்டுப பிறகு பிரம்மமாயிருப்பதை அடைகிறான். எபபொழுது, இவன் கேட்கத்தக்கதிலும் பார்க்கத்தக்கதிலும் எல்லாப்பிராணிகளிடத்திலும் ஸமமாகிறானோ அபபொழுது துவந்துவமறறு ப்ரம்மமாகிறான். எபபொழுது, துதியையும் நிந்தையையும் தங்கத்தையும் இரும்பையும் ஸுகத்தையும் துக்கத்தையும் குளிர்ச்சியையும உஷ்ணத்தையும் அர்த்தத்தையும் அனர்த்தத்தையும் பிரியத்தையும் அபரியத்தையும் பிறப்பையும் இறபபையும் ஸமமாகவேபார்க்கிறானோ அபபொழுது பிரம்மமாகிறான். இவ்வுலகில் ஆத்மையானது (தன்னுடைய) உறபபுக்களை வெளியில் நீட்டித் திரும்பவும் சுருக்கிக்கொள்வதுபோல யதியானவன் மனததால் இந்திரியங்களை அடக்கிக்கொளளவேண்டும். இருட்டால் நிரம்பியவீடு தீபத்தால் பார்க்கபபடுவதுபோல அஜ்ஞானத்தால் நிரம்பிய ஆத்மாவான்து புத்தியாகிற தீபத்தைக்கொண்டு பார்க்கக் கூடியது' என்பது. புத்திமான்களில் சிறந்தவரே! உம்மிடத்தில் இந்த எல்லாவற்றையும் பார்க்கிறேன். என்னால் சொல்லப்படாமலிருக்கிறதையும் நீர் உண்மையாக அறிவீர். ஓ! பிரம்மரிஷியே! நீர் உம்முடைய பிதாவின்அருளாலும் உம்முடையசிதாத்மாவினாலும் விஷயங்களின்முடிவையடுத்தவராக அறியப்பட்டீர். அந்தமகாத்மாவினுடைய அனுக்ரகத்தினாலேயே எனக்கும், இந்தத்திவ்யஞானமானது உண்

1 வேஹ பாடம.

டாயிற்று. அதனால், நான் உம்மை அறிந்தேன். உமக்கு விஜ்ஞா னம் அதிகமாயிருக்கிறது. உம்முடையகதியும் அதிகமாயிருக்கிறது. உம்முடையயோகைச்வரியமும் அதிகமாகவிருக்கிறது. அதனை நீர் அறியவில்லை. இளமையினாலேயோ லீலாத்தகத்தினாலேயோ பயத்தி லிருந்தும்விடுபடாமையினாலேயோ அனுபவமுண்டாயிருந்தும் அந் தக்கதியை அறியவில்லை. என்னைப்போன்றவர்களாலே ஸம்சயமறுக் கப்பட்டுச் சுத்தமானமுயற்சியுடன் இருதயமுடிச்சுக்களைவிட்டுவிட்டு அந்தக்கதியை அடைகிறான் ஓ! பிராம்மணரே! நீர் அனுபவமுண் டானவரும் ஸ்திரபுத்தியுடையவரும் ஆசையிழிந்தவருமாகி முயற் சியில்லாமலே அந்தப்பரப்ரம்மத்தை அடைகிறீர். உமக்கு ஸுக துக்கங்களில் வேறுபாடில்லை. அவாவுடையவராகவில்லை. ஆடல் பாடல்களில் உத்ஸாகமில்லை. ஸ்திரீகளிடத்தில இச்சை உண்டா கிறதில்லை. பந்துக்களிடத்தில் உமக்குப் பற்றுதலில்லை. பயங்க ளுண்டாகும்பொழுது உமக்குப் பயமில்லை மஹாபாக்கியமுள்ளவரே! நான் உம்மை ஒட்டாஞ்சில்லியினும் ஸ்வர்ணத்தினும் ஸமமாயிருக்கிற வராகப் பார்க்கிறேன். நானும் மற்றப்புதுதிமான்களும் உம்மை நிந்த மற்றதும் கெடுதலற்றதும் பரமமான அந்தமார்க்கத்தை அடைந்தவ ராகப் பார்க்கிறோம். இவ்வுலகில் பிராம்மணனுக்குரிய பயனை மோக்ஷபுருஷார்த்தத்தில் நீர் இருக்கிறீர். வேறு எதைக் கேட்கிறீர்?' என்று சொன்னர்.

முந்நூற்றுமுப்பத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

—:o:—

(ஸுப்ரம்மண்யர் உலகை அவமதித்துக்கூறியதும், விஷ்ணு சக்தியை அசைத்ததும், ஸுமந்துமுதலியோர் வ்யாஸரிடம் வேதமோதியதும்.)

மனத்தை ஜயித்தகதர் இந்த வார்த்தையைக்கேட்டு உறுதிசெய் துகொண்டு மனத்தை ஆத்மாவினிடம் செலுத்தி புத்தியினால் ஆத் மாவைப்பார்த்துச செய்யவேண்டியதைச் செய்தவரும், ஸுகியும் சாந் தருமாகி இமயமலையைநோக்கி வாயுவுக்குச் ஸமமாக மௌனதது டன் வடக்குமுகமாகச் சென்றார். இந்தஸமயத்திலேயே தேவரிஷி யானநாரதரும் லலித்தர்களாலும் சாரணர்களாலும் அடுக்கப்பட்ட தும், அப்ஸரஸுகளுடைய கூட்டங்களால் சூழப்பட்டதும், கானசப் தத்தால் நாதமுடையதும், அநேகமாயிரம்கின்னரர்களாலும் சிறந்த

வண்டுகளாலும் நீர்க்காகங்களாலும் கருங்குருவிகளாலும் பலவித மான மனோகரபக்ஷிகளாலும் விசித்திரவர்ணமுடையவைகளும் அநேக கோகாசப்தங்களால் விளங்குகின்றவைகளுமான மயில்களாலும் ராஜ ஹம்ஸஸமூகங்களாலும் மனத்தோஷத்தைப்படைத்த குயில்களாலும் வியாபிக்கப்பட்டதுமான அந்த இடமெல்லாம் பார்ப்பதற்குப்புறப் பட்டார். பக்ஷிகளுக்கெல்லாம் அரசனுமிருக்கிறதருடனும் நித்தியம் வஹிக்கிற அந்தமலையில் நான்குலோகபாலர்களும் ரிஷிகளங்களோடு கூடினதேவர்களும் உலகத்தினுடைய ஹிதத்தில் விருப்பத்தால் நிததியம்வருகின்றார்கள். மஹாதபோவனவிசேஷத்தினால் புத்திரனி மித்தம்அந்தமலையில் தவம்செய்யப்பட்டது. அந்தமலையில்லிய ஸுப் ரம்மண்யரால் பால்யதசையில் தேவர்கள் அவமதிக்கப்பட்டார்கள் மூன்று உலகத்தையும்அவமானம்செய்து சக்தியானது பூதலத்தில் வைகுகப் பட்டது அந்தஇடத்தில அப்பொழுது லோகத்தானவர் ஜகத்தைநிந் தித்து, 'என்னைவிடமேலானவனும் அந்தஸபையில் அதிகஅன்புள்ளவ னும் அவருக்குநன்மைசெய்பவனும் மூவுலகங்களுள்ளும்வீரனுமான வேறுஇரண்டாமவனிருந்தால அவன் இந்தசக்தியைத் தாக்கட்டும்; அல்லது அசைக்கவாவதுசெய்யட்டும்' என்றுசொன்னர். அதைக் கேட்டு உலகத்திலுள்ளவர்கள், 'எவன் இதைத் தாக்குவான்' என்று மனவருத்தமடைந்தார்கள். பிறகு, பகவானனை விஷ்ணுவானவர் [1]பிரமத்தைப்படைந்த இந்திரியங்களையும் மனத்தையுமுடையதும் அஸுரர்களை இராக்ஷஸர்கள் இவர்களுடன்கூடினதுமான எல்லாத்தேவ கணமும் அவமதிக்கபபட்டதைப் பார்த்தார்; இந்தவிஷயத்தில் எது நல்லகாரியமாகுமென்று ஆலோசித்து அவரிடமிருந்து அவமானத் தைபபொறுக்காமல் ஸ்கந்தரையும் பார்த்தார் மிகவும்சுத்தமான மனமுடையபுருஷோத்தமர் அபபொழுது மிகவும்ஜ்வலிக்கிறதான சக் திமீ இடக்கையால் பிடித்தது அசைத்தார் பலசாலியான விஷ்ணுவி னுமேல சக்தியானது. அசைக்கப்பட்டபோது மலைகளும் தோப்புக் களும் காடுகளும் நிரம்பினபூமிமுழுமையும் நடுங்கியது. தாக்கச்சக்தி யுடையவராயிருந்தும், அவரால் அப்பொழுது அது அசைக்கப்பட்ட தாயிற்று. ஸமர்த்தரானவிஷ்ணுவினுமேல குமாரராஜனுக்கு அவமதி ப்புவராமல் முடிக்கப்பட்டது. பகவானனவர் அதைஅசைத்துவிட்டு ப்ரஹ்லாதரிடம்சொல்லி, 'குமாரனுடையவீரியத்தைப் பார் மற்றவன் இதைச் செய்யமாட்டான்' என்று சொன்னர். அப்பொழுது, அவன்

---

1 சுழலுகின்ற

2 ஸ்கந்தரை அவமதிக்கக்கூடாதென்று அவ்விதஞ்செய்தார்.

அந்தவார்த்தையைபொறுமல் அந்தத்தூக்க நிசசயம்செய்துஅந்தச் சக்தியைபடிடித்தான் அதை அசைக்கமுடியவில்லை ஹிரண்யகசிபுவி னுடையபுத்திரனை அவன் பெரியசபதத்தைவெளியிட்டு மஹியினுசசி யில் மூர்சசையடைந்து தளர்சசியுற்றுத தரையில் விழுந்தான் மனத் தைஜயிக்காதவர்களாலே அடையமுடியாததும் ஆதித்யபர்வதமென்று பெயருடையதுமான ஈசுவருடைய ஆஸ்ரமமானது ஜ்வலிக்கிறஅக்னி யினால் சூழப்பட்டிருக்கிறது ஐயா! விருஷபதவஜரான அந்தஈசுவ ரர் அந்தவிடத்தில வடதிக்கையடைந்து இமயமலையினுடையபக்கத் தில் மாற்றமுடியாததவத்தை எப்பொழுதும்செய்தார். அவவிடத் தில, யகூஷர்களாலும் ராகஷஸர்களாலும் தானவர்களாலும் செல்லஇயலாது. அவ்விடத்திலவரியமுள்ள அக்னிபகவான் தானே ஆபரம்தேவரு ஷம்ஒருகாலால்நிற்பவரும் புத்திமானுமாகியமகாதேவருடையஎலலா விக்னங்களையும் நிவிருத்திசெய்துகொண்டு பத்துயோஜனவிஸ்தாரம் அக்னிஜ்வாலைகளால சூழப்பட்டதாயிருக்கும்படி நிறகிறான். அந்த விடத்தில் பெரியவ்ரதமுடையமஹாதேவர் தேவர்களைத் (தவத்தால்) தபிக்கும்படி செய்தார். புத்திமானுனை ஹிமவானுடைய கீழ்த்திசையை அடைந்து ஏகாந்தமானதாழ்வரையில் பெரியதவமுடையவரும் பரா சரபுத்திருமான வ்யாஸமுனிவா மஹாபாக்கியவானுன ஸுமந்து, வைசம்பாயனர், மகாப்ராஜ்ஞரானஜைமினி, தவமுடையவரானபை லர்என்னும்சிஷ்யர்களுக்கு வேதங்களை அத்தியயனம் செய்வித்தார். மிக்கதவமுடையவ்யாஸர் இந்தசசிஷ்யர்களால் சூழபபெற்றிருந்தார். ஆகாயத்தில்சூரியன்போலச சுத்தஸ்வரூபமுடையவரும் அரணியி லுண்டானவருமான சுகர் அவ்விடத்தில் ரமணீயமும் உத்தமமான பிதாவின் ஆஸ்ரமத்தைக்கண்டார். அப்பொழுது, வ்யாஸர் அசைக்கப் பட்டதும் ஜ்வலிக்கின்றதுமான அக்னிக்குசிகாரானவரும் ஸூர்யனுக் குசமமானதேஜஸ்ஸுடையவரும் யோகத்துடன்கூடினவரும் மஹா த்மாவுமானபுத்திரர் நாணிலிருந்துவிடப்பட்டபாணம்போல விருசஷங் களிலும் மலைகளிலும் தேசங்களிலும் பற்றுமல் வருகிறதைப் பார்த் தார்.- அந்தசசகர் ஸமீபம்வந்து பிதாவின்பாதங்களில் வணங்கினார். மகாமுனியானஅவர் பிரீதியுடன் அந்தசசிஷ்யர்களுடன் சேர்ந்து கொண்டார். பிறகு, அவர் மனத்திலழிழ்சசியடைந்து பிதாவினிடம் ஜனகராஜருடன்நடந்தஸகலஸம்வாதத்தையும் குறைவின்றித் தெரி வித்தார். இவ்விதம் பராசரர்புத்திரரும் வீரியவானுமான வ்யாஸமகா முனிவர் சிஷ்யர்களுக்கும் புத்திரருக்கும் அத்தியயனம் செய்வித் துக்கொண்டு ஹிமயமலையின்மேலே வஸித்தார். பிறகு, ஒருஸமயம்

வேதாத்தியயனத்தில்தேர்ந்தவர்களும் சாந்தமானமனமுடையவர்க ளும் இந்திரியங்களைஜயித்தவர்களுமான அந்தச்சிஷ்யர்கள் அவரைச் சுற்றிஇருந்தார்கள். அப்பொழுது, உடனே தவமுடையவர்களாயிரு க்கிறஅந்தச்சிஷ்யர்கள், வேதங்களிலும் வேதாங்கங்களிலும்தேர்ச்சி அடைந்து குருவானவ்யாஸரைநோக்கி, அஞ்சலிசெய்துகொண்டு, 'மிக்கதேஜஸையுடையவர்களும் யசஸினல்விருத்திசெய்விக்கப்பட்ட வர்களுமாயிருக்கிறோம். இப்பொழுது, குருவான நீர் ஓர்அனுக்ரகம் செய்யவேண்டுமென்றுவிரும்புகிறோம்' என்றுசொன்னர்கள். பிரம்ம ரிஷியான வ்யாஸர் இவ்விதமான அவர்களுடைய வார்த்தையைக் கேட்டு அவர்களைநோக்கி, 'குழந்தைகளே! உங்களுக்கு நான் செய்யக்கூடியவிருப்பத்தைச் சொல்லுங்கள்' என்று சொன்னர். ராஜனே! அந்தச்சிஷ்யர்கள் குருவினுடைய அந்தவார்த்தையைக் கேட்டு மனத்தில் சந்தோஷத்தையடைந்து திரும்பவும் அஞ்சலி செய்துகொண்டு குருவைச சிரத்தால்வணங்கி எல்லாரும்சேர்ந்து, 'ஓ! முனிசிகாமணியே! உபாத்தியாயரானநீர் பிரீதியுள்ளவரா னால் நாங்கள் தன்யர்களாகிறோம். ஆனலும், நாங்களெல்லாரும் குருவான உம்மால் வரம் கொடுக்கப்பட விரும்புகிறோம். உம் முடைய ஆறுவதுசிஷ்யன் கியாதியை அடையக்கூடாது. இந்த விஷயத்தில் எங்களுக்குக் கிருபைசெய்யவேண்டும். உமக்கு நாங்கள் நாலுசிஷ்யர்கள்; ஐந்தாமவர் குருவான உமதுபுத்திரர். இந்தஸ்லவரிடத்திலும் வேதங்கள் நிலைத்திருக்கவேண்டும். இது எங்களால் விரும்பப்பட்டவரம்' என்று இந்தஉத்தமமானவார்த்தை யைச் சொன்னர்கள். சிஷ்யர்களுடையவார்த்தையைக்கேட்டு வேதா ர்த்தத்தின் உண்மையையுணர்ந்தவரும் பராசரரின்புத்திரரும் புத்தி மானும் பரலோகவிஷயத்தைச் சிந்திக்கிறவரும் தர்மாத்மாவுமாகிய வ்யாஸமுனிவர் சிஷ்யர்களைநோக்கித் தர்மத்தைவிட்டுவிலகாதசுகமும் மோகஷத்திற்குஸாதனமுமான ஒரு வசனம் சொல்லலானர். '(இந்த வேதமானது) பிரம்மலோகத்திலுள்ளதானவாஸத்தை நன்குவிரு ம்புகிறவனும் பரப்ரம்மதீதைவிசாரிக்கவிரும்புபமுடையவனுமான பிரா ம்மணனுக்கு எப்பொழுதும் உபதேசிக்கதக்கது. நீங்கள் (சிஷ்யர் களால்) பிரகாசிக்கவேர்கள், இந்தவேதத்தைப் பரவும்படிசெய்யுங் கள். சிஷ்யனுகாதவனிடத்திலும் விரதமில்லாதவனிடத்திலும் மன த்தைவெல்லாதவனிடத்திலும் (இதைக்) கொடுக்கக்கூடாது. சிஷ் யனுக்குரியஎல்லாக்குணங்களும் உண்மையாக அறியத்தக்கன. நட க்கையைப்பரீக்ஷியாமல் ஒருவிதத்தாலும் வித்தையை உபதேசிக்கக்

கூடாது. சுத்தமானஸ்வர்ணத்தைக் காயசசுதலாலும் வெட்டுதலாலும் உரைத்தலாலும் பரீக்ஷிப்பதுபோலச் சிஷ்யர்களையும் குலம் குணமுதலியவைகளால் பரீக்ஷிக்கவேண்டும். நீங்கள் சிஷ்யர்களை ஏவக்கூடாதமிக்கபயமுள்ளகாரியத்தில் ஏவக்கூடாது. புத்திக்கும் படிப்புக்கும்தக்கபடி வித்தை பயன்படும். எல்லாரும் ஸங்கடங்களைத் தாண்டட்டும். எல்லாரும் மங்களங்களைப் பார்க்கட்டும். பிராம்மணனை முன்னேவைத்துக்கொண்டு நாலுவர்ணங்களையும் கேட்கும்படிசெய்ய வேண்டும். இது வேதத்தின் அத்யயனமன்றே? அதுவோ பெரிய காரியமாகக் கருதப்படடது. பிரம்மாவினுலே தேவதைகளுடைய ஸ்துதியின்பொருட்டு இவ்வுலகில் வேதங்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. வேதத்தினகரையையடைந்தவனைபிராம்மணன் மகிமயங்கி நிந்திபவன் பிராம்மணவமானத்தால் ஐயமற அவமானதையடைவான். அதர்மமாக உபதேசம்செய்பவனும் அதர்மமாக ப்ரச்னம் செய்பவனுமான அவர்களில் ஒவ்வொருவனும் மரிப்பான்; அதிகமான பாபையையும் அடைவான். வேதாத்யயனத்தின்விதியைப்பற்றின இதுஎல்லாம் உங்களுக்குச சொல்லப்பட்டது. சிஷ்யர்களுக்கு உபகரிக்கவும் வேண்டும். இது உங்களுடையஇருதயத்தில் இருக்கவும்வேண்டும்' என்றுசொன்னர்.

மூன்றூற்றிமுப்பத்தாறுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ஸுமந்துமுதலியோர் வ்யாஸரிடம் விடைபெற்றுச் சென்றதும், நாரதர் எதுஎதற்கு எதுஎது தோஷமென்பதையும் பிதாசின்கதையையும் சொல்லி வ்யாஸரை வேதமோதச்சொல்லியதும், வ்யாஸர் பெருங்கர்ம்றடிக்கையில் வேதமோதக்கூடாதகாரணத்தைச் சுருக்கச்சொல்லியதும்.)

மிக்கதேஜஸுள்ள வ்யாஸருடையசிஷ்யர்கள் குருவினுடைய இந்தவார்த்தையைக்கேட்டு உடனே மனத்தில் ஸந்தோஷத்தையடைந்து ஒருவரைஒருவர் ஆலிங்கனம்செய்துகொண்டார்கள் 'பகவானுனை குரு அந்தஸமயத்திற்கும் வருங்காலத்திற்கும் மிகவும்ஹிதமான ஒன்றைச் சொல்ல நாம் கேட்டோம். அது நம்முடையமனத்தில் நன்றுகப் பதிந்துவிட்டது. அதை அப்படியே செய்வோம்' என்று இவ்விதம் ஒருவரோடொருவர் ஸம்பாஷணம்செய்துகொண்டு மனத்

தில் மிகவும் பிரீதியடைந்து மறுமொழியில் ஸமர்த்தர்களான அவர்கள் திரும்பவும் குருவை நோக்கி, 'பிரபுவே! உமக்கு இஷ்டமிருக்குமானால் வேதங்களைப்பரவச்செய்வதற்கு, இந்தமலையிலிருந்து பூமிக்குச்செல்ல நாங்கள் விரும்புகிறோம்,' என்று தெரிவித்தார்கள். ஸமர்த்தரான பராசரபுத்திரர் சிஷ்யர்களுடைய வார்த்தையைக்கேட்டு, பிறகு, 'இஷ்டமிருக்குமானால் பூமிக்கோ தேவலோகத்துக்கோ போகலாம். வேதத்திற்குப் பலகெடுதிகளுண்டு. நீங்கள் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்' என்று அறம்பொருள்களுடன் கூடினதும் ஹிதமுமான வார்த்தையைசொன்னர். பிறகு, அவர்களெல்லாரும் ஸத்யவாதியானகுருவினலே அனுமதிகொடுக்கப்பெற்று அவரைப்பிரதக்ஷிணம் செய்து தலையால்வணங்கிவிட்டுச சென்றார்கள். உடனே, அவர்கள் பூமியிலிறங்கிப் பிராம்மணர்களையும் அரசர்களையும் வைசியர்களையும் யாகம் செய்யும்படி செய்து அக்னிஹோத்ரமுதல் ஸோமயாகபரியந்தமான நான்கு கர்மாவைச் செய்வித்தார்கள்; எப்பொழுதும் இருபிறப்போர்களாலே பூஜிக்கப்பட்டவர்களும் ஸந்தோஷிக்கிறவர்களும் கிருகஸ்தாச்ரமத்தில பற்றுதலுள்ளவர்களும் வேள்விசெய்வித்தலிலும் ஒதுவித்தலிலும் பற்றுதலுள்ளவர்களும் ஸம்பத்தையுடையவர்களும் உலகத்தில பிரவலித்திபெற்றவர்களுமாயிருந்தார்கள். சிஷ்யர்கள், (பூமியில) இறங்கியபுடன், புத்திமானும் புத்திரரை ஸுகாயமாயுடையவருமான வ்யாஸர் மௌனமாகத் தியானஞ்செய்துகொண்டு ஏகாந்தத்திலிருந்தார். இந்தசமயத்தில், தேவரிஷியான நாரதர் லித்தராலும் சாரணராலும் ஆஸ்ரயிக்கப்பட்ட இமயமலையைப் பார்க்கவந்தார். (அப்பொழுது,) மிகபபெரிய தவதீதையுடைய நாரதரானவர் ஆஸ்ரமஸ்தானதீதில அந்தவ்யாஸரைக் கண்டார். பிறகு, அவரை ஸமயத்தில் மதுரமான அக்ஷரங்களையுடைய வார்தையினால், 'ஓ! மகரிஷியே! வஸிஷ்டகுலத்தில் பிறந்தவரே! வேதகோஷமானது இல்லையே. ஒருவராகத் தியானம்செய்துகொண்டு ஆலோசிக்கிறவர்போல ரீன் மௌனமாகவிருக்கிறீர்? வேதகோஷங்களில்லாத இந்தப் பர்வதமானது ராஜஸினாலும் தமஸினாலும், ராகுவினால் பிடிக்கப்பட்ட சந்திரன்போலச் சோபிக்கவில்லை. வேதகோஷமில்லாமையால தேவர்களின் கூட்டங்களாலும் ரிஷிகளின் கூட்டங்களாலும் அடையப்பட்டிருந்தும் முன்விளங்கியதுபோலில்லாமல் வேடர்களுடைய கிருகம் போலிருக்கிறது. ரிஷிகளும் தேவர்களும் பெரியகாந்தியுடைய கந்தருவர்களும் வேதகோஷமில்லாதவர்களாகி முன்போல விளங்கவில்லை' என்று சொன்னர். (அப்பொழுது,) வ்யாஸர் நாரதருடைய

வார்த்தையைக்கேட்டு அவரை நோக்கி, 'வேதத்தைச்சொல்வதில் ஸமர்த்தரான மகரிஷியே! நீர் சொல்லிய இது என்மனத்திற்கு அனுகூலமானதே. நீர் எனக்குச்சொல்லவேண்டும். நீர் (எனக்குச) சொல்லத்தக்கவராகிறீர். நீர் சொல்லாம் அறிந்தவர்; எல்லாவற்றையும் பார்த்தவர்; எல்லாவற்றிலும் உறசாகமுடையவர். மூவுலகங்களிலுமுள்ள ஆசாரமும் உம்முடைய கொள்கையிலிருக்கிறது. பிரம்மரிஷியே! ஆகையால், நான் உமக்கு என்ன செய்யவேண்டும்? அதைக்கட்டளை யிடும். பிரம்மரிஷியே! நான் அனுஷ்டிக்கவேண்டியதைச் சொல்லும். இவ்விடத்தில் சிஷ்யர்களைவிட்டுப் பிரிந்திருப்பவனென எனனுடைய மனமானது சிறிதும் ஸந்தோஷத்தையடையவில்லை' என்று சொன்னர். நாரதர், 'வேதங்களுக்கு ஆவிருத்தியில்லாமை தோஷம். பிராம்மணனுக்கு விரதமில்லாமை தோஷம். பிருதிவிக்குப் [1]பாஹ்லீக தேசத்து ஜனங்கள் தோஷம். ஸ்திரீகளுக்கு உத்ஸாஹம் தோஷம். (ஆகையால்,) நீர் புத்திமானை புத்திரரோடு ராக்ஷஸ பயத்தாலுண்டான தமஸை வேதகோஷத்தால் விலக்கிக்கொண்டு வேதங்களை அத்யயனம் செய்யவேண்டும்' என்று சொன்னர். பரமமான தர்மத்தை உணர்ந்தவ்யாஸர் நாரதருடைய வசனத்தைக்கேட்டு, 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லிவிட்டு ஸந்தோஷத்தையடைந்தவரும் வேதாப்பியாஸத்தில் உறுதியான விரததையுடையவருமாகித் திரும்பவும் மஹாப்பிராஜ்ஞரான நாரதரை நோக்கி, 'பேசுகிறவர்களுள் சிறந்தவரே! உம்மால் இப்பொழுது பிருதிவிக்குப பாஹ்லீகதேசம் தோஷமென்று சொல்லப்பட்டது. பாஹ்லீகர்கள் எப்படிப்பட்டவர்கள்? எனக்குச் சொல்லும்' என்று கேட்டார். நாரதர், 'இந்தப்பூமியில் நான்குதேசங்கள் பாவிகளான ஜனங்களால்' சூழப்பட்டவைகள். அவைகளில் முதலாவது யுகந்தரம். பூதிலகமென்பது (இரண்டாவது தூரத்தில்) கருதப்படுகிறது. மூன்றாவது அச்சுதச்சலமென்று சொல்லப்படுகிறது. அது மிகவும் பாவமுள்ளது. நான்காவது கொடியபாவமுள்ளதும் பாஹ்லீகமென்று பெயருள்ளதுமானது. இந்த யுகந்தரத்திலுள்ள ஜனங்கள் மான் ஒட்டகம் கழுதை இவற்றின் பாலைப் பானம் செய்கிறார்கள். அச்சுதசலத்திலுள்ள ஜனங்கள் ஒரேசெவியுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். பூதிலகத்திலுள்ள பாவிகள் ஜலத்தில் மலமூத்திரங்களை விடுகிறார்கள். தினந்தோறும் அதிகமான ஆஹாரத்தையும் அந்த ஜலத்தையுமே அருந்துகிறார்கள். பாஹ்லீகதேசத்திலு

---

1 'வாஹீகர்:' என்பது வேறுபாடம்; 'மூட்டைதூக்குபவர்' என்பது பொருள்.

ள்ளஜனங்கள் ஹரியைவிட்டுவிலகினவர்களாகி ஒருபொழுதும் ஹரியை நினைக்கிறதில்லை. பாஹ்லீகர்களென்றுபிரஸித்திபெற்ற அவர்கள் இவ்வுலகல்லாத்தையே மோக்ஷமாகக்கொண்டவர்களும் மூம்ஸத்தையும் ரக்தத்தையும் விரும்திசெய்கிறவர்களுமாகி வீணுகப்பிறந்தவர்களாவார்கள். ஓ! மஹாமுனிவரே. புஷ்கரக்ஷேத்திரத்தில் ஆகாரத்தில் ஆவலுள்ள ஒரு பெண்பேயானது கோடியஉலக்கையைவைத்துக் கொண்டு என்னசொல்லிற்றென்பதைக் கேளும். நிர்த்தத்தைக் காத்துக்கொண்டிருக்கிற (அந்தப்) பெண்பேயானது அனேகம்புத்திரர்களுடையவளும் புஷ்கரத்தில ஸ்னானம்செய்யவந்தவளுமான ஒரு பிராம்மணஸ்திரீயைநோக்கி, 'நீ யுகக்ஷேத்ரத்தில் ஜலயானம்செய்து அச்சுதச்சலத்தில் வாஸம்செய்து பூதிலகத்தில்ஸ்னானம்செய்து பாஹ்லீகர்களைப்பார்த்துவிட்டு அப்படியே ஸ்னானம்செய்வதற்கு வந்திருக்கிறாய். ஏன் ஸ்வர்க்கத்தை அடையமாட்டாய்?' என்று (பரிஹாஸமாகச) சொல்லி, இருப்புலக்கையினால பிராம்மணஸ்திரீயின் பாத்திரத்தைஉடைத்துத்தள்ளிவிட்டுக் கோபத்தால் கண்சிவந்து, 'உனக்குப் பகலில் இந்தவேலை. பிறகு, இரவில் வேறுவிதமான வேலை. போ. நீ பாஹ்லீகர்களுடைய சேர்க்கையால அசுத்தமானவள். சந்தேகமில்லை. மஹாத்மாவான அசசுதரை த்வேஷிக்கிறவர்களுக்கும் நிஷேயாதவர்களுக்கும் அவர்களுடையசேர்க்கையுடையவர்களுக்கும் புண்யதீர்த்தங்களில [1]கதி கிடையாது' என்று சொல்லிற்று. இவ்விதம் அந்தப்பேய்சொல்லப் பிராம்மணஸ்திரீயானவள் பயமடைந்து புத்திரர்களுடன்திரும்பிசென்று தன்தேசத்திலிருந்து தியானித்தில்பற்றி நின்றமுடிவில்லாதவரான ஹரியினுடைய சுத்தமும் பன்னிரண்டு அக்ஷரங்களுள்ளதுமானநாமத்தைப் புத்திரர்களுடனே ஜபம்செய்தாள். மூன்றுவருஷம்சென்றபிறகு, அந்தப்பிராம்மணஸ்திரீ மீண்டும் புத்திரர்களோடு புஷ்கரக்ஷேத்திரத்தின்வாயிலில் வந்தாள். அப்படிவந்த அவளைநோக்கிப் பிசாசமானது, 'மங்களகுணமுள்ளபிராம்மணியே! உனக்குநமஸ்காரம். உன்னுடைய தரிசனத்தினால் நான் பரிசுத்தமானேன். பாபமறறவளான நீ புத்திரர்களுடன் தீர்த்தத்தில் ஸ்நானத்தையும் செய்யக்கடவாய். பதிவ்ரதையான நீ ஹரிநாமத்துடன் என்னையும் ஜலத்தினால் புரோக்ஷிக்கவேண்டும்' என்றுசொல்லிற்று. இவ்விதம் சொல்லக்கேட்டவளும் சுபமானவிரதமுடையவளுமான பிராம்மணஸ்திரீயானவள் புத்திரர்களோடு ஸந்தோஷத்தை அடைந்து பன்னிரண்டு அக்ஷரங்கொண்டநாமத்துடன் ஜலத்தினால் புரோக்ஷித்தாள்.

1 ஈடேற்றம்; மோக்ஷம்.

அந்தக்ஷணத்திலேயே பிசாசானது பரிசுத்தமாகிவிட்டது; திவ்யமான ரூபமுடைய அப்ஸரஸென்னும் தெய்வப்பெண்வடிவத்துடன் உத்தம மானஸ்வர்க்கலோகத்தை அடைந்தது. வாஸுதேவரைப்பரகதியாகக் கொண்டபிராம்மணியும் காலக்கிரமத்தில் யுத்திரர்களுடன் சுபமும் பரமுமான அச்சுதருடையஸ்தானத்தை அடைந்தாள் ஓ! வித்துவாஞகியமுனிவரே! இந்தவிஷயம் உமக்குசசொல்லப்பட்டது. (புறப்பட வேண்டிய) நேரமாகிவிட்டது. ஓ! பாரதிவாளரே! நான் போகிறேன். மறுபடியும் வருகிறேன்' என்றுசொன்னர். பேசுகிறவர்களுள்சிறந்தவரான அந்தகாரதர் இவ்விதம் சொல்லிவிட்டு உடனே சென்றார். பகவானுவ்யாஸர் முனிஸ்ரேஷ்டரிடமிருந்தும் அந்த வார்த்தையைக்கேட்டு, பிறகு புத்திரரானசுகரோடு சிஷ்யருடன் கூடினதும் உயர்ந்ததுமான ஸ்வரத்தினுல் உலகங்களைநிரப்புகிறவர் போல வேதாப்பியாஸத்தைசசெய்தார் அவர்கள் நானாவிதமான தர்மங்களைவிசாரிக்கிறவர்களும் வேதாப்பியாஸம் செய்கிறவர்களுமாயிருக்கையில், ஒருபெருங்காற்று ஸமுத்திரக்காற்றுடன் வேகமாக அடித்தது. உடனே, வ்யாஸர் அத்தியயனம்செய்யக்கூடாதகாலமென்று அந்தப்புத்திரரைத் தடுத்தார். தடுக்கப்பட்டவுடன், சுகர், குதூஹலத்துடன் பிதாவைநோக்கி, 'ஓ! பிராம்மணரே! இந்தவாயு எங்கிருந்து உண்டாயிற்று? நீர் வாயுவினுடைய செய்கைஎல்லாவற்றையும் சொல்லிவேண்டும்' என்று கேட்டார் மேலான தர்மத்தை அறிந்த வ்யாஸமுனிவர் சுகருடையஇந்தவார்த்தையைக்கேட்டு அத்தியயனம் இல்லாமைக்குநிமித்தமான இந்தவிஷயத்தில் பின்வருமாறு சொல்லலானர். 'உனக்குத் திவ்யநேத்திரமுண்டாகிவிட்டது. உன்னுடையமனம் நிச்சலமாகக் கவலையற்றிருக்கிறது. தமோகுணத்தாலும் ரஜோகுணத்தாலும்விடப்பட்டு ஸத்வகுணத்திலிருக்கிறாய். கண்ணாடியில் தன்னுடைய பிரதிபிம்பத்தைப்பார்ப்பதுபோலப் புத்தியினுல் ஆத்மாவைப் பார்க்கிறாய். ஆத்மாவில் நீயாகவே மனத்தை வைத்துப் புத்தியால் நன்றாக ஆலோசித்துப்பார். தேவயானமார்க்கத்திலிருப்பவர் விஷ்ணு. பித்ருயானமார்க்கத்திலிருப்பவன் ஸூர்யன். இந்தஇரண்டு மார்க்கங்களையும்அடைந்து தேவலோகத்திலும் கீழேயும் செல்லுகிறார்கள். பிருதிவியிலும், ஆகாயத்திலும் வீசுகிற வாயுவின்மார்க்கங்கள் ஏழு. அவைகளைக் கிரமமாக அறியக்கடவாய். [1]அவ்விடத்தில் மிக்கபலசாலிகளான ஸாத்தியர்களென்கிறதேவகணங்கள் உண்டாயின. ஜயிக்கமுடியாதவனுன ஸமானனென்கிறபுத்

[1] அவைகளிடத்தில்.

திரன் அவைகளுக்கு உண்டானனர். அவனுக்கு உதானனென்கிற புத்திரனுண்டானன். அவனுக்கு வியானன் என்கிற புத்திரனுண்டானன். அவனிடமிருந்து அபானன் உண்டாயினன். அவனுக்கும் பிராணனென்கிறபுத்திரன உண்டானன் மெலலறமுடியாதவனும் பகைவர்களைவாட்டுகிறவனுமானபிராணன் புத்திரனிலலாதவனனன். அந்த வாயுக்களுடைய தனிதனியானசெய்கைகளையும் உண்மையாகச் சொல்லுகிறேன். வாயுவானது பிராணிகளுக்கு எங்கும்இயக்கத்தை உண்டுபண்ணுகிறது முதல் மார்க்கத்தில் புகைகளாலும் உஷ்ணங்களாலுமுண்டான மேகக்கூட்டங்களைச சமப்படசெய்வதும் முதலாவதுமான ஆவஹனென்கிறவாயு பிராணிகளை பிழைக்கபண்ணுவதால் பிராணனென்று சொலலப்படுகிறது. அடிக்கடி சந்திரன் முதலான சோதிகளுக்கு உதயத்தைச செய்கிறதும் புதுதிமான்களால சரீரங்களில் உதானனன்என்று சொலலபபடுவதுமான இரண்டாவதுமான பிரவஹனென்பது மேகங்களினின்று ஸ்னேகத்தையும் மின்னல்களிலிருந்து பெரியகாந்திபையும் அடைந்து ஜலத்தைவருவிக்கிற மேகங்களுடன் கூடிக்கொணடு ஆகாயத்தில் வீசுகிறது நான்காவதுமுத்திரங்களிலிருந்தும் ஜலத்தைஎடுப்பதும் ஜலத்தை எடுதது ஆகாயத்தில் மேகங்களுக்குக்கொடுப்பதும் மேகங்களை ஜலத்துடன்சேர்த்துப் பர்ஜன்யனுக்குக்கொடுப்பதும் மிகவிருத்தியடைந்ததுமான உத்வஹனென்பது மூன்றாவதுவாயு அந்தமேகங்களை வஹிப்பதும் அநேகவிதமாகத் தனித்தனியாக (அங்கங்கு) கொண்டு போவதும் ஜலங்களைவிடுவதில் ஆரம்பம்செய்விப்பதும் கனமுள்ளவையும் லேசானவையுமாகச் செய்வதும் அடிக்கப்பட்டவையும் சேர்க்கப்பட்டவையும் குழுறுகளுள்ளே உடையவையுமாகச செய்வதும் (உலக) ரக்ஷணைத்தின்பொருட்டுச் சேர்ந்து ஜலத்தைவருவிக்கும் தன்மையை அடையச்செய்வதும் ஆகாயத்தால் தேவர்களுடைய விமானங்களைத்தாங்குவதும் பர்வதங்களையும் உடைப்பதுமான ஸம்வஹனன்என்பது நான்காவது வாயு. விரைந்துசெல்வதும் கொடிதும் ரஜங்களைவற்றசசெய்வதும் மேகங்களை அடித்து வலாஹகங்களாகசசெய்யாததும் ஆகாயத்தில் பயங்கரமும் அபத்திற்கு நிமித்தமுமான ஸஞ்சாரத்தையுடையதும் மேகங்களோடு கூடியதும் பெரியவேகமுள்ளதுமான [1]விவஹனென்பது ஐந்தாவதுவாயு. தேவலோகத்திலுள்ள ஜலங்களை ஆகாயத்தில் ஓடும்படிசெய்வதும், பரிசுத்தமான ஆகாசகங்கையின் ஜலத்தைத் தாங்கிக்கொண்டிருப்பதும், பூமியைப் பிரகாசிக்கச் செய்பவனும் ஜீவப்பிரம்கிரணங்களுக்கு ஆதாரனுமான

1 மேகங்களை விஷமமாசவஹிப்பவன்.

ஸூர்யனைத் தூரத்தில் அடித்து ஒரே கிரணமுள்ளவன்போலச் செய்வதும், அமிருதத்திற்குக்காரணனும் பிரகாசமுடையவனுமான சந்திரனைப் பூரணம்செய்வதுமான பரிவஹனென்பது [1]வெற்றியடைகிறவர்களில்சிறந்த ஆறுவதுவாயு. [2]ஆத்மவிசாரம்' செய்கிறவரே! கல்பத்தின்முடிவில் எல்லாப்பிராணிகளுடைய பிராணன்களையும் வெளியாக்குவதும் மிருத்யு யமன் இருவரும் அனுஸரித்திருக்கும் மார்க்கமுள்ளதும் சாந்தமான புத்தியினலே கன்முகஆலோசிக்கிறவர்களும் தியானத்தின் அப்பாஸத்தில் பற்றுள்ளவர்களுமாயிருப்பவர்களுக்கு மோக்ஷத்தைச்செய்வதும் தன்னிடம் அகப்பட்டவர்களும் ஸ்ருஷ்டிகர்த்தனான தக்ஷனுடைய புத்திரர்களுமான பதினயிரவரை வேகத்தினல் திக்குக்களின் முடிவை அடையச்செய்வதும் தன்னல்தொடப்பட்ட வீண அவமானத்தையடைவித்துத் திரும்பாமலே போகச்செய்வதுமான பராவஹனென்பது (ஒருவராலும்) அதிக்ரமிக்கமுடியாத மேலான (ஏழாவது) வாயு. இவ்விதம் மிகவும்ஆச்சரியமான இந்தவாயுக்கள் அதிதியின்புத்திரர்கள். அவர்கள், எப்பொழுதும் எங்கும் செல்லுகிறவர்களும் எல்லாவற்றையும் தரிக்கிறவர்களுமாகி வீசுகிறார்கள். அதிகமாக வீசுகிற அந்தவாயுவினலே மலைகளுட்சிறந்த இந்தமலையானது சீக்கிரமாக அலக்கப்பட்டதென்பது பெரிய ஆச்சரியம். குழந்தாய்! இந்தவேதமானது விஷ்ணுவினுடைய மூச்சுக்காற்றுயிருக்கிறது. காற்றனது வேகததால் தூண்டப்பட்டுச் சீக்ரமாகக் கிளம்பும்பொழுது உலகம் பீடையடைகிறது. ஆகையால், அதிகக்காற்றடிக்கையில் வேதவித்துக்கள் வேதத்தை அத்தியயனஞ்செய்வதில்லை. வாயுவுக்கு வாயுவினிடமிருந்து பயமானது சொல்லப்பட்டதல்லவா? ஆகையால், வேதமானது பிடிக்கப்பட்டதாகும்' என்றார். இவ்வளவு வார்த்தையைப் பிரபுவான பராசரபுத்திரர் சொல்லிப் புத்திரரை '(கற்றின்றபின்) வேதத்தை அத்தியயனம்செய்' என்றும் சொல்லிவிட்டு, அப்பொழுது தேவகங்கையை அடைந்தார்.

---

1 பலசாலிகளில்.

2 'சுகரிடத்திலுள்ள உயிரினல் இங்ஙனம் பண்ணையாகவிளித்தார்' என்பது பழையவுரை.

முந்நூற்றமுப்பத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாரதர் சுகருக்கு உலகியல்புஞ்சொல்லி மோக்ஷோபாயத்தை உபதேசித்தது.)

இந்தஅவகாசம்ஏற்பட்டபொழுது, நாரதரானவர் வேதாத்தியயனத்தில் . பற்றினவராயிருக்கிறசுகரிடம் வேதார்த்தங்களைக்கேட்கும்விருப்பத்தால் திரும்பவும் வந்தார். அப்பொழுது, சுகர் தம் ஸமீபத்தையடைந்த தேவரிஷியான நாரதரைப்பார்த்து, வேதத்தில் சொல்லப்பட்ட அர்க்கியமுதலான விதியினால் பூஜித்தார். பிறகு, நாரதர் பிரீதியடைந்து (சுகரைநோக்கி) ஸந்தோஷத்துடன், 'ஓ! பிரம்மவித்துக்களுள் சிறந்தவனே! குமுந்தாய்! நான் உனக்கு என்னநன்மையைச செய்யவேண்டும். சொல்' என்று கேட்டார். ஓ! பாரதனே! சுகர் நாரதருடையவார்த்தையைக்கேட்டு (அவரைநோக்கி) இந்தஉலகத்தில் எது ஹிதமோ அதை எனக்குச் செய்யும்' என்றுசொன்னர். நாரதர், 'முன்காலத்தில் தத்வத்தை அறிய விருப்பமுடையவர்களும் ஆத்மதத்யானமுள்ளவர்களுமான முனிவர்களுக்குப் பகவானனஸநத்குமாரர் பின்வருமாறு சொன்னர். 'வித்தைக்குச்சமமான நேத்ரமில்லை. ஸத்தியத்திற்குநிகரான தவமில்லை. ஆசைக்குநிகரான துக்கமில்லை. தியாகத்திற்கு நிகரான ஸுகம் இல்லை. பாபச்செய்கையிலிருந்து விலகுதல், எப்பொழுதும் புண்ணியசீலனுயிருத்தல், நல்லஜீவனம், நல்லஆசாரம் ஆகியஇவைகள் மிகச்சிறந்தற்றேயஸ். [1]ஸுகமற்ற மனுஷ்யஜன்மத்தையடைந்து ஏவன் (விஷயங்களில்) பற்றதலுற்று விடுபடவில்லையோ அவன் துக்கத்திலிருந்து விடுதலடைவதற்கு ஸமர்த்தனல்லன். [1]சோக்கையானது துக்கத்திற்குக் காரணம். (விஷயத்தில்) பற்றுள்ளவனுக்கு மோகமாகிறஜீலையைவிருத்திசெய்து புத்தியானது சலிக்கிறது. மோகவசியால் சூழப்பட்டஅவன் இவ்வுலகத்திலும் பரலோகத்திலும் துக்கத்தை அனுபவிக்கிறன். சிரேயஸைவிரும்புகிறவன் எல்லாஉபாயத்தினலும் தாமக்குரோதங்களை விடக்கவேண்டும். அவைகள் நன்மையைக்கெடுப்பதற்கு முயற்சிசெய்பவைகள். எப்பொழுதும் குரோதத்திலிருந்து தவத்தைக்காக்கவேண்டும். மாற்சரியத்திலிருந்தும் தனத்தைக் காக்கவேண்டும். மானவமானங்களிலிருந்தும் வித்தையைக்

1 'இடைக்க அரிதான' என்றும் கொள்ளலாம்.

காக்கவேண்டும். அஜாக்ரதையிலிருந்தும் ஆத்மாவை ரக்ஷிக்கவேண்டும். ஹிம்ஸைசெய்யாமலிருப்பது மேலானதர்மம். பொறுமை மேலானபலம். ஆத்மஜ்ஞானம் மேலானஞானம். ஸத்தியத்திற்குமேலானது ஒன்றுமில்லை. உண்மையை உரைத்தலே இறந்தது. ஸத்தியத்தைக் காட்டிலும் ஹிதத்தைச் சொல்லவேண்டும். பிராணிகளுக்கு மிகவும் ஹிதமாயுள்ளதே ஸத்யமாக நான் நினைக்கிறேன். எல்லாப் பொருள்களையும் அவற்றிற்காக எல்லாப்பிரவிருத்திகளையும் தள்ளினவனும் பிரார்த்தனையில்லாதவனும் ஒன்றையும் தனதாகக்கருதாதவனுமான அவன் வித்வான். அவனே பண்டிதன். இவ்வுலகில், இந்திரியங்களைத் தன்வசப்படுத்திக்கொண்டு இந்திரியவிஷயங்களில் ஸஞ்சரிப்பவனும் [1]பற்றுதலில்லாதவனும் சாந்தமான மனமுள்ளவனும் விகாரமற்றவனும் ஸமாதியுடையவனும் தான் இந்திரியங்களாகாதவனும் தானனஇந்திரியங்களோடுகூடியும்கூடாமலுமிருப்பவனுமானஅவன் விடுபட்டு விரைவில் பரமானஸ்ரேயஸை அடைகிறான். எப்பொழுதும், பிராணிகளுடன் கலந்து பார்த்தலும் தொடுதலும் ஸம்பாஷித்தலும் செய்யாதவன் மேலானஸ்ரேயஸை அடைகிறான். எந்தப்பிராணிகளுக்கும் துன்பஞ்செய்யக்கூடாது. மித்திரத்தன்மையை அடைந்து ஸஞ்சரிக்கவேண்டும். இந்தஜன்மத்தை அடைந்து ஒருவனோடும் பகைகொள்ளக்கூடாது. மனத்தைஜயித்த ஆத்மஜ்ஞானிக்கு ஒன்றுமில்லாமலிருத்தல், மிகுந்தஸந்தோஷம், ஒன்றையும்பிரார்த்தியாமலிருத்தல், சபலகாமமில்லாமலிருத்தல் இவைகளை மேலானஸ்ரேயஸாகச் சொல்லுகிறார்கள். ஐயா! எனதென்கிற எண்ணத்தைவிட்டு இந்திரியங்களை ஜயிக்கக்கடவாய். சோகமற்றதும் இகத்திலும் பரத்திலும்பயமற்றதுமானஸ்தானத்தை அடையக்கடவாய். பண்டமில்லாதவர்கள் சோகத்தையடைவதில்லை. தன்னுடையபண்டத்தைத் தள்ளவேண்டும். பார்க்கப்பிரியமாயுள்ளவனே! பண்டத்தைத்தள்ளிவிட்டால் துக்கம் தாபமிவைகளிலிருந்தும் விடுபடுவாய் முழுயானவன் தவத்தைநித்தியமாகக்கொண்டவனும் பொறிகளைவென்றவனும் மனத்தைஅடக்கினவனும் ஜயிக்கப்படாததைஜயிக்கவிரும்பினவனும் (விஷய) ஸம்பந்தங்களில்ஸம்பந்திக்காதவனுமாயிருக்கவேண்டும். குணிங்களுடையஸம்பந்தங்களில்பற்றில்லாதவனும் எப்பொழுதும் ஒருவனுஞ்ஸஞ்சரிப்பதில்பற்றுள்ளவனுமானபிராம்மணன் விரைவில் மிகச்சிறந்த ஸுகத்தை அடைகிறான். பிராணிகள் சேர்ந்து களித்துக்கொண்டிருக்கையில் எந்தமுனிவன்

1 வேறுபாடம்.

ஒருவனுகவேயிருந்து ஸந்தோஷத்திலிருக்கிறானே அவனே உத்தமமானஞான த்தால்திருப்தியடைந்தவனுக அறியக்கடவாய். ஞானத்தால் திருப்தி யடைந்தவன் சோகத்தையடைகிறதில்லே. (ஜீவனுனவன்) தன்வசமற றுச் சுபகர்மங்களால்தேவத்தன்மையையும் சுபாசுபகர்மங்களால் மனு ஷ்யஜன்மத்தையும்அசுபகர்மங்களால் கீழானஜன்மத்தையும் அடைகி றன். அவைகளில், ஜந்துவானது மிருத்யுவின்வசத்தை அடைந்ததும் துக்கங்களாலே எப்பொழுதும் தாபத்தப்பட்டதுமாகி ஸம்ஸாரத்தில் தஹிக்கப்படுகிறது. அதை ஏன் நீ அறியவில்லே? நீ அஹிதத்தில் ஹிதபுத்தியுடையவனும் நிலேயில்லாததில் நிலேயுள்ளதென்கிறபுத்தி யுடையவனும் அனாத்மத்தில அத்மனென்கிறபுத்தியுடையவனுமாகி ஏன் அறியாமலிருக்கிறுய்? தன்னிடமிருந்துமுண்டானபலதூல்க ளால் சுற்றப்பட்ட தன்னே மோகத்தால் அறியாத பட்டுப்பூச்சிபோல ஆசாபாசங்களால்சுற்றிக்கொண்டு உன்னே அறியாமலிருக்கிறுய். இவ் வுலகத்தில் (எனதென்கிற) அபிமானம் வேண்டாம். அபிமானமானது தோஷமுள்ளதன்றே? கோசகாரமென்கிறபூச்சி அபிமானத்தினுல் கட்டப்படுகிறதன்றே? மக்கள்பெண்டிர்என்னும்குடும்பங்களில்பற் றினஜந்துக்கள் குளத்தின் மிக்கசேற்றில் முழுகினவைகளும் முதிய வைகளுமானகாட்டுயானேகள்போலக் கஷ்டத்தை அடைகின்றன. பெரிதானவலேயினுலிழுக்கப்பட்டவைகளும் கரையில்தூக்கியெறியப் பட்டவைகளுமானமீன்களேப்போல மோகவலேயினுல்இழுக்கப்பட் டவைகளும் மிகவும்துக்கத்தை அடைந்தவைகளுமான ஜந்துக்களேப் பார். குடும்பம், மக்கள், மனேவி, சரீரம், பண்டங்கள்ஆகியஎல்லாம் பிறரைச்சேர்ந்தவையும் நிலேயில்லாதவையுமானவை இவற்றுல் என்ன பயன்? புண்ணியமும் பாவமும் தன்னேசசேர்ந்தவை எல்லாவற் றையும்விட்டுத் தன்வசமில்லாமல் போகவேண்டியதாயிருத்தலால் நீ தீயசெய்கையில் ஏன்பற்றுகிறுய்? நல்லகார்யத்தை ஏன் அனுஷ்டிப் பில்லே? சிரமபரிஹாரமில்லாததும் ஆகாரமற்றதும் தேசத்தைஅடை யாததும் கட்டுசோறற்றதும் இருளடைந்தகாடுகளுள்ளதுமான மார்க் கத்தில் எப்படி தனியே போகப்போகிறுய்? செல்லுகின்ற உன்னேப் பின்தொடர்ந்து ஒருவனும் வரப்போகிறதில்லே. புண்ணியமும் பாவ மும், செல்லுகின்றஉன்னேப் பின்தொடர்ந்துவரும். வித்தை, கர்மம், சுசியாயிருத்தல், மிகவீரவானஞானம் ஆகிய இவைகள் பயனுக்காக அனுஸரிக்கப்படுகின்றன. அர்த்தவஸித்தியுடையவன் விடுபடுகிறுன். (கிராமத்தில்வஸிப்பவனுக்குப்) பற்றுதலானது கட்டுகிறதாயிருக்கும். புண்ணியம்செய்தவர் இதை அறுத்துவிட்டுச் செல்லுகின்றனர். துஷ்

கர்மத்தைச்செய்தவர்கள் இதை அறுப்பதில்லை. ரூபமாகிறகரையும் மனமாகிறபிரவாஹமும் ஸ்பர்சமாகிறதிட்டும் ரஸமாகிறபெருக்கும் கந்தமாகிறசேறும் சப்தமாகிறஜலமுமுள்ளதும் ஸ்மர்க்கமார்க்கத்தை அடைவியாததுமான ஸம்ஸாரமாகிறநதியைப் பொறுமையாகிற தடுப்புக்களுடையதும் ஸத்யஸ்வரூபமும் தர்மமும் ஸ்திரபுத்தியுமாகிற கயிறுகளுள்ளதும் ஸன்யாஸமாகிறகாற்றின்மார்க்கத்தால் செல்லுகிறதும் (நீவகமுடையதுமான தோணியால் தாண்டவேண்டும். தர்மம் அதர்மம் இரண்டையும்தள்ளு. ஸத்தியம் அஸத்தியம் இரண்டையும் தள்ளு. ஸத்தியம் அஸத்தியம் இரண்டையும் எதனால் தள்ளினீயோ அதையும் தள்ளு. ஸங்கற்பத்தைத்தள்ளின்தனால் தர்மத்தைத் தள்ளு. பயனவிரும்பாததால் அதர்மத்தைத் தள்ளு. மெய் பொய் இரண்டையும் புத்தியினால் தள்ளு. புத்தியைப் பரமமான (ஆத்ம) நிச்சயத்தால் தள்ளு. எலும்பாகிறதூணுள்ளதும் நரம்புகளுள்ளதும் மாம்ஸரக்தங்களால் பூசப்பட்டதும் தோலினல்மூடப்பட்டதும் துர்க்கந்தமுள்ளதும் ஜலமலங்களால்நிரம்பியதும் ஜராயாலும் சோகத்தாலும் அடையப்பட்டதும் நோய்களுக்கு இருப்பிடமும் மனோவியாதியுள்ளதும் மலினமும் அசித்தியமும் பிராணியாகிறபிசாசத்திற்கு இருப்பிடமுமான இந்தச்சரீரமாகிறகிருகத்தை விட்டுவிடு. ஜங்கமமும் ஸ்தாவரமுமான எலலாஉலகமும் மஹத்தும் ஆகிய எல்லாம் பஞ்சபூதஸ்வரூபம். ஆகாயம், வாயு, அக்னி, அப்பு, பிருதிவிஎன்பவை மஹாபூதங்கள். சித்தமென்பது ஆறாவது. அகங்காரமானது ஏழாவதாகச் சொல்லப்படுகிறது. எட்டாவது மனமென்று அறியவேண்டும். புத்தி ஒன்பதாவதாகக் கருதப்பட்டது. இந்திரியங்கள் ஐந்து, ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகப்பதினேழுசேர்ந்த இந்தக்கூட்டமானது அவ்யக்தமென்று பெயருடையது. வ்யக்தங்களும் அவ்யக்தங்களும் இந்திரியவிஷயங்களுமாகத்தும் சேர்ந்து [1]இருபத்துநான்கு என்கிற இந்தக்கூட்டமானது வ்யக்தம் அவ்யக்தம் இவைகளின் ஸ்வரூபமாயிருக்கிறது. இவைகளெல்லாவற்றுடனும்கூடினவன் புருஷனென்று சொல்லப்படுகிறான். தர்மாதர்த்தகாமங்கள், ஸுகம், துக்கம், ஜீவனம், மரணம்இவைகளை உள்ளபடி அறிந்தவன் ஸ்ருஷ்டிப்பிரளயங்களை அறிந்தவனாவான். இவ்வுலகில் உள்ளவற்றையெல்லாம் ஞானங்களுடைய பரம்பரையால் அறிய வேண்டும். எது எது இந்திரியங்களால் கிரகிக்கப்படுகிறதோ

1 மூலப்பிரகிருதி, மஹத்தத்வம், மனம், ஸூக்ஷ்மபூதம்ஐந்து, இந்திரியங்கள் பத்து, ஸ்தூலபூதங்கள்ஐந்து, பிராணன்.

அது அது வ்யக்தமென்பது உறுதி. இந்திரியங்களுக்கெட்டாமல் ஏது வினால் அறியத்தக்கதானது அவ்யக்தமென்று அறியத்தக்கது. தேக முடையவன் ஐம்பொறிகளை அடக்குவதனால் தண்ணீரினால் திருப்தி யடைவதுபோலத் திருப்தியடைகிறான். ஆத்மாவை உலகத்தில் வியாபித்ததாகவும் உலகங்களை ஆத்மாவினிடத்தில் வியாபித்தவையாகவும் பார்த்துப் [1]பராவரத்தை அறிந்தவனுடைய ஞானமூலமான சக்தியானது நசிக்கிறதில்லை. எல்லா நிலைமைகளிலும் எப்பொழுதும் எல்லாப் பிராணிகளையும் பார்ப்பவனும் பிரம்மமுமானவனுக்கு அசுபத்துடன் ஸம்பந்தம் ஏற்படுகிறதில்லை. உலகத்தில், புத்தியின் தெளிவாலுண்டான ஞானத்தினால் மோகத்தாலுண்டான பலவிதமான கிலேசங்களை விலக்கிக்கொண்டு நடப்பவனுக்கு உலகங்களுடைய மார்க்கமானது நசிக்கிறதில்லை. [2]சாஸ்திரத்தை அறிந்த பகவானைவர் யுகியந்தமற்ற தையறிந்தவனை அவனே ஆத்மாவிலிருக்கிறவனாகவும் நாசமில்லாதவனாகவும் கர்த்தாவாகாதவனாகவும் சரீரமில்லாதவனாகவும் சொன்னார். தான் செய்த வினையினால் எப்பொழுதும் துக்கத்தையடைந்த பிராணியானது தன் துக்கத்தை விலக்கிக்கொள்வதற்குப் பலஜந்துக்களைக்கொல்லுகிறது; அதனால், வேறு பல புதியவினைகளை அடைகிறது; பிறகு, நோயாளி அபத்தியத்தால் வருத்தமடைவதுபோல அந்த வினையினால் திரும்பவும் வருத்தமடைகிறது. எப்பொழுதும் மோகத்தால் அந்தனும் துக்கங்களை ஸுகமென்று நினைப்பவனுமானவன் (கயிற்றினால்) மத்துக் கட்டுப்படுவதுபோல வினைகளாலே கட்டப்படுகிறான்; கடையவும்படுகிறான். பிறகு, கர்மங்களின் உதயத்தினாலே இம்மையில் தனக்குண்டான பிறவியில் கட்டப்பட்டுப் பல துன்பங்களையடைந்து ஸம்ஸாரத்தில் சக்கரம்போலச் சுழலுகிறான். அப்படிப்பட்ட நீ பந்தநிவிருத்தியுடையவனும் வினையினின்றும் நீங்கியவனும் எல்லாவற்றையுமறிந்தவனும் எல்லாவற்றையும் ஜயித்தவனும் (ஒன்றிலும்) விருப்பமில்லாதவனுமாகி வீதிருயிலிருக்கக்கட்வாய். அனேகர்கள் (இந்திரியங்களுடைய) அடக்கத்தால் புதிதாகு பந்தத்தை நிவிருத்தித்துவிட்டுத் தவத்தின்வன்மையினால் கெடுதலில்லாததும் ஸுகத்தை விளைவிப்பதுமான வீதியை அடைந்திருக்கிறார்கள்.

---

1 ப்ரம்மம்.

2 'தீர்த்தவித்' என்பது மூலம். 'மோக்ஷோபாயத்தை அறிந்தவன்' என்பது பழையவுரை.

மூந்நூற்றுமூப்பத்தெட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(நாரதர் சுகருக்கு உலகஇயல்புகளைச்சொல்லி மோக்ஷோபாயத்தை உபதேசித்தது. (தொடர்ச்சி.)

மனிதன், சோகமற்றதும் சோகநாசத்தைப் பயனுகவுடையதும் சாந்தியைச் செய்வதும் மங்களகரமுமான சாஸ்திரத்தைக்கேட்டுப் புத்தியை அடைகிறன் ; புத்தியை அடைந்து ஸுகமாக் விருத்தி யை அடைகிறன் அநேகமாயிரம் சோககாரணங்களும் அநேகபய காரணங்களும் தினந்தோறும் மூடனை வந்தடைகின்றன ; பண்டிதனை அடைவதில்லை. ஆகையால், அனிஷ்டநாசத்திற்காக என்னிடமிரு ந்து இதிஹாஸத்தை அறியக்கடவாய். புத்தியானது வசத்திலிருக்கு மானால் (புருஷன்) சோகநாசத்தை அடைகிறன். புத்திக்குறைவுள்ள வர்கள் அனிஷ்டத்தின் சேர்க்கையாலும் இஷ்ட வஸ்துவின் பிரிவாலும் மனத்தில் துக்கத்தை அடைகிறார்கள். திரவியங்கள் நஷ்டமான பொ ழுது அவற்றின்குணங்களைச சிந்திக்கக்கூடாது. அவைகளை ஆதரிக் கிறவனுக்கு ஸ்நேகபந்தம் விடுகிறதில்லை. ஆசைபற்றியிருப்பதில் தோஷத்தைப் பார்க்கவேண்டும். ஹிதத்தை அவிஷ்டம்போலப் பார் க்கவேண்டும். அப்படியிருந்தால், விரைவில் வைராக்கியத்தை அடை வான். சென்றதைக்குறித்துத் துக்கிப்பவனுக்கு அர்த்தமுமில்லை ; தர்மமுமில்லை ; புகழுமில்லை. (அவன்) வறுமையையும் அடைகிறன். அவனுக்கு அது திரும்பி வருவதுமில்லை. எல்லாப்பிராணிகளும் விரும்பியவற்றை அடைவதும் உண்டு ; பிரிவதும் உண்டு இந்தச்சோக காரணம் ஒருவனுக்குமாத்திரம் உண்டாகுமென்பதில்லை. இறந்த வனைக்குறித்தோ நஷ்டவஸ்துவைக்குறித்தோ அல்லது சென்றதைக் குறித்தோ பச்சாத்தாபமடைகிறவன் துக்கத்தினுல் துக்கத்தையடை கிறன். (ஆகையால்,) இரண்டுஅனர்த்தங்களை அடைகிறன். உலகங் களில் ஜனபரம்பரையைப் பார்த்துப் புத்தியை அடைந்தவர்கள் கண் ணீர்விடமாட்டார்கள். எல்லாவற்றையும் நன்முகப் பார்க்கிறவனுக்குக் கண்ணீருக்குரிய செய்கை ஏற்படுகிறதில்லை ; சரீரத்தைப் பற்றியவை யும் மனத்தைப்பற்றியவையுமான துக்கங்கள் உண்டானுல் பரிகரிக்கக் கூடாத விஷயத்தில் கவலையடையக்கூடாது. இந்தத்துக்கத்தை நினை யாமலிருப்பது அதற்கு மருந்தாகும். நினைப்பதனுல் துக்கம் விலகு கிறதில்லை ; அதிகமாகவும் விருத்தியடைகிறது. புத்தியினுல் மனத்

தின் துக்கத்தை விலக்கவேண்டும். மருந்துகளால் சரீரத்தைப்பற்றின துக்கத்தை நிவிருத்திக்கவேண்டும் இதுவே அறிவின்திறம். இளைஞர்களுக்குச் சமமாயிருப்பதை அடையக்கூடாது. யௌவனமும் அழகும் உயிரும் பொருட்குவியலும் ஆரோக்கியமும் விரும்பியதையடைதலும் நிலையற்றவை அறிவுள்ளவன் அவைகளில் ஆசைவைக்கக் கூடாது தேசத்திற்குண்டான துக்கத்தைக் குறிப்பது ஒருவன் துக்கிக்கக்கூடாது. (நிவிருத்திக்கும்) உபாயத்தை அறிவானுலை துக்கப்படாமல் அதை விலக்கவேண்டும் ஜீவித்திருப்பதில ஸுகத்தைக் காட்டிலும் துக்கமே மிகுதியாயுள்ளது. இந்தவிஷயத்தில் ஸங்தேக மில்லை மோகத்தால் இந்திரியவிஷயங்களில் விருப்பமும் மரணத்தில் வெறுப்பும் உண்டாகின்றன ஸுகம்துக்கம் இரண்டையும் தள்ளுகிறவன் திரும்புதலில்லாத பிரம்மபதத்தை அடைகிறான் அவனைக்குறித்துப் பண்டிதர்கள் துக்கிக்கிறதில்லை அர்த்தங்களைவிடுவீதும் துக்கம். அவைகளைக்காப்பதும் துக்கம் அவைகளை அடைவதும் துக்கமே. (ஆகையால்,) அவைகளின் நாசத்தைக்குறித்தும் கவலையடையக் கூடாது. மனிதர்கள் வேறு வேறுயிருக்கிற பெருஞ்செல்வத்தையடைந்தும் திருப்தியடையாமலே நாசத்தையடைகிறார்கள். பண்டிதர்கள் ஸந்தோஷத்தை அடைகிறார்கள். கூட்டங்களெல்லாம் அழிவை முடிவாகவுடையன. மிகமேலேயுயர்தல் விழுதலே முடிவாகவுடையது. சேர்ந்தைகள் பிரிவை முடிவாகவுடையன உயிர் மரணத்தை முடிவாகவுடையது. ஆசைக்கோ முடிவென்பது இல்லை. ஸந்தோஷம் மேலான ஸுகம் ஆகையால், அறிஞர்கள் இம்மையில ஸந்தோஷத்தையே தனமாகக்கருதுகின்றார்கள் நடந்துகொண்டிருக்கிற பிராயமானது இமையளவும் நிற்பதில்லை. நிலையில்லாத சரீரங்களில் எதை நிலையுள்ளதாகவினைக்கலாம் ? பிராணிகளின் தன்மையை ஆலோசித்து மனத்திற்கெட்டாத ஆத்மாவை அறிந்தவர்களும் (ஸம்ஸார) மார்க்கத்தைக் கடந்தவர்களுமானவர்கள் துக்கமடையமாட்டார் காமங்களைத் தேடுகிறவனும் திருப்தியடையாதவனுமாயிருக்கையில் புலியானது தன்னை எடுத்துக்கொண்டு போவதுபோல அவனை மிருத்யுவானது எடுத்துக்கொண்டுபோகிறது. அப்படியிருந்தாலும், துக்கத்தைவிலக்குவதற்குரிய உபாயத்தைத் தேடவேண்டும் துக்கியாமலே ஆரம்பிக்கவேண்டும். முயற்சிசெய்வதனால் வியஸனமில்லாதவனுகவேண்டும். சப்தத்திலும் ஸ்பரிசத்திலும் ரூபத்திலும் கந்தத்திலும் ரஸத்திலும் தனவானுக்கும் தனமில்லாதவனுக்குள் அணுபவிப்பதைப் பார்க்கிலும் வேறுஎன்றும்இல்லை. பிராணிகளுக்குச் சேர்க்கையில்லாவிட்டால்

துக்கமென்பதில்லை. (ஆகையால்,) எல்லாவற்றினுடைய பிரிவிலும் இயற்கைமாறுதல் தம்மியாமலிருக்கவேண்டும். தைரியத்தால் குறியையுடீ வயிற்றையும் காக்கவேண்டும்; கண்ணால் கைகளில்லாமல் காக்க வேண்டும். கண்ணையும் காதையும் மனத்தால் காக்கவேண்டும். மனத்தையும் வாக்கையும் வித்தையால் காக்கவேண்டும் மித்திரர்களிடத்திலும் மற்றவர்களிடத்திலும் ஸ்நேகத்தை விலக்கிக்கொண்டு கர்வமில்லாமல் ஸஞ்சரிப்பவனே ஸுகமடைவான். அவனே பண்டிதன். ஆத்மாவில் பற்றுதலுடையவனும் விருப்பமற்றவனும் ஒருபொருளுமில்லாதவனுமாகி ஆத்மாவாகிற துணையோடு ஸஞ்சரிப்பவன் ஸுகம் அடைவான்.

மூன்றூற்றுமுப்பத்தோன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

——:o:——

(சுகர் வைராக்கியமடைந்து கைலை சென்றது.)

ஒருவனுக்கு ஸுகதுக்கங்களில் வேறுபாடான புத்தியானது உண்டாகுமானால் அவனே ப்ரஜ்ஞையுடையவனாவது அல்லது நல்லநீதியாவது ரக்ஷிக்கிறதில்லை; சக்தியும் ரக்ஷிக்கிறதில்லை (அவன்) இயற்கையால் முயற்சியைச் செய்யவேண்டும். முயற்சியுடையவன் கெடுதலில்லையடையமாட்டான். பிரியமான ஆத்மாவை ஜரை மரணம் நோய்கள் இவற்றினின்றும் காப்பாற்றவேண்டும். சரீரத்தைச் சேர்ந்தவைகளும் மனத்தைச்சேர்ந்தவைகளுமான நோய்கள் கூரியமுனையுடையவைகளும் வலியவில்லாளிகளால் விடப்பட்டவைகளுமான பாணங்கள் போலச் சரீரங்களைப் பிளக்கின்றன. ஆசைகளாலே வருத்தமுற்றவனும் நிகர்த்தை அடைந்தவனும் ஜீவித்திருப்பதில் ஆசையுள்ளவனும் தன்வசமில்லாதவனுமாயிருப்பவனுடைய சரீரமானது நாசத்திற்கு இழுக்கப்படுகிறது. இராப்பகல்கள் மனிதர்களுடைய ஆயுளையெடுத்துக்கொண்டு மேலேமேலே நதிகளுடைய பிரவாகங்கள்போலப் போகின்றன; திரும்புவதில்லை சுக்லகிருஷ்ணபக்ஷங்களுடைய இந்தமாறுதலானது பிறந்தவர்களானமனிதர்களை மிகவும் ஜீர்ணமாகச்செய்கிறது. ஒருநிமிஷமும் நிற்கிறதில்லை. ஸமர்யன் ஜரையில்லாதவனுகி உதித்தும் அஸ்தமித்தும் பிராணிகளுடைய ஸுகதுக்கங்களை ஜீர்ணமாகச்செய்கிறான். முன்பார்க்கப்படாதவைகளும் (போய்விடுமோவென்று) சங்கிக்கப்படாதவைகளுமான மனிதர்களுடைய இஷ்டங்

களும் அனிஷ்டங்களுமான பொருள்களே இரவுகள் எடுத்துக்கொண்டுபோய்விடுகின்றன. புருஷனுக்கு விணியின்பயனானது பாதீனமாக இல்லாமலிருந்தால் எவன் எதை விரும்புவானோ அதை முயற்சியில்லாமல் விரும்பியபடி அடைவான். மிக்கமுயற்சியுள்ளவர்களும் ஸாமர்த்தியமுள்ளவர்களும் புத்திமான்களுமான மனிதர்களும் எல்லாக்கர்மங்களாலும்குறைவடைந்து பயனடையாதவர்களாகக் காணப்படுகிறார்கள். மற்றவர்களானபுருஷாதமர்கள புத்திஹீனர்களும் குணமில்லாதவர்களும் மற்றத்தீமைகளையுடையவர்களுமாயிருந்தும் விரும்பினவற்றையெல்லாம் அடைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். மற்றொருவன் பிராணிகளுக்குத்துன்பஞ்செய்வதிலும் உலகத்தைவஞ்சிப்பதிலும் எப்பொழுதும் முயற்சியுள்ளவனுயிருக்கிறான். அவன் (விஷய) ஸுகங்களிலேயே ஜரித்துவிடுகிறான். ஒருவிதமானபிரயத்தியுமில்லாமல் உட்கார்ந்திருக்கிறஒருவனை ஸம்பத்தானது (தானே) வந்தடைகிறது. வேறொருவன் வேலைகளைச்செய்தும் அடையமுடியாததை அடைகிறதில்லை. மனிதனிடத்தில் இயற்கையாயுள்ளகுற்றத்தைச் சொல்லு. ஓரிடத்திலுண்டானவீரியம் திரும்ப வேறிடம்போகிறது. கருப்பையில்விடப்பட்டவீர்யத்திற்குக் கர்ப்பம் உண்டாகிறதோ, இல்லையோ. வீர்யத்தினுடையபரிணமமானது மாம்பூவுக்குநிகராகக் காணப்படுகிறது. புத்திரனைவிரும்புகிறவர்களும் பின்ஸந்ததியைவிரும்புகிறவர்களும் (கார்ய) வித்தியில்முயற்சிசெய்கிறவர்களுமான சிலருக்குக் [1]கர்ப்பம் உண்டாகிறதேஇல்லை. கோபமுள்ள ஸர்ப்பத்தின்டம் நடுங்குவதுபோலக் கர்ப்பத்தினிடம்நடுங்குகிறவர்களுக்கு மரித்தவனை அவர்களுடையதந்தை திரும்பிவந்ததுபோல ஆயுளோடுகூடிய புத்திரன் உண்டாகிறான். தேவர்களைப்பூஜித்துத் தவத்தைச்செய்து அத்திரனைவிரும்புகிறதீனர்களுக்கே பத்துமாஸங்கள் சுமக்கப்பட்டுக் குலத்தைக்கெடுக்கின்றபுத்திரர்கள் பிறக்கிறார்கள். தேவபூஜைமுதலானமங்களகார்யங்களாலே அடையப்பட்டசிலபுத்திரர்கள் பிதாவால்ஸம்பாதிக்கப்பட்ட மிகுந்ததனதான்யங்களோடும் போகங்களோடும் பிறக்கின்றனர். ஒன்றுக்கொன்றுஸம்பந்தப்போகத்திற்காகச்சேர்ந்து கர்ப்பமானது கருவில் உபத்திரவம்பிரவேசிப்பதுபோலப் பிரவேசிக்கிறது. வேறுசரீரங்களில்சிதறினதும் (ஸ்வர்க்கநரகங்களுக்குக்) காரணமற்றதும் சரீரத்தோடுகூடியதும் பிராணனுக்குத் தடைஉண்டாகுங்காலத்தில் மாம்ஸசிலேஷ்மங்களோடு புழுஞ்சின்றதுமானபிராணியை வேழுசரீரங்கள் அடைகின்றன. [2]சோக்

1 'அண்டம்' என்பது மூலம். 2 ஒருஸ்லோகம் விடப்பட்டது.

கையினால் வயிற்றில்வைக்கப்பட்டதும் அசேதனமுமானபிந்துவானது எந்தஉபாயத்தால் ஜீவனுள்ளகர்ப்பமாயிருக்கிறதென்று நீ அறிகிறாய்? அன்னபானங்களும் பக்ஷிக்கப்பட்டபதார்த்தங்களும் ஜீர்ணமாகிறஅந்தஉதரத்திலேயே கர்ப்பமானது ஏன் அன்னம்போல ஜீர்ணமாகிறதில்லை? உதரத்திலிருக்கிறமலமூத்திரங்களுக்கு (வெளியில்) போக்கானது ஸ்வபாவத்தாலே அமைந்திருக்கிறது. ஸ்வாதீனமற்ற ஜீவன் தரிப்பதற்கும விடுவதற்கும் கர்த்தாவாகிறதில்லை. சிலகர்ப்பங்கள் உதரத்திலிருந்தும் கரைந்துவிடுகின்றன. சில வெளியில் வரும்போது மரிக்கின்றன. சில (பூர்ணமாகவே) ஜனிக்கின்றன. இந்தக்கருவின்ஸம்பந்தத்திலிருந்தும் விடுபடுகிறஜீவன் ஒருபிரஜையையும் அடைகிறான். (அப்படியிருந்தும்) மறுபடியும் துவந்துவங்களில் பற்றுகிறான். அவன் ஒருவனுக்குப்பிறகு கூடப்பிறந்தமையால் அவனிடமிருந்து உண்டான [1]ஐந்தும், [2]ஏழாவதான அவஸ்தையையும் ஒன்பதாவதான அவஸ்தையையும் அடைகின்றன; நூறு பிராயம் இருப்பதில்லை மனிதர்களுடைய [3]சேர்க்கைகள் மேல்வருவதற்கு நிமித்தமாகா. இதில் ஸந்தேகமில்லை வேடர்களாலே அற்ப மிருகங்கள் துன்பமடைவதுபோல மனிதர்கள் வியாதிகளாலே பீடிக்கப்படுகிறார்கள். வியாதிகளால துன்பப்படுகிறவர்களும் அதிகமான தனத்தைக்கொடுப்பவர்களுமாயிருப்பவர்களுடைய துன்பத்தை வைத்தியர்கள் முயற்சிசெய்தும் போக்குவதில்லை. மிக்கஸமர்த்தர்களும் பூர்ணமானமருந்துகளையுடையவர்களுமான அந்தவைத்தியர்களும் வேடர்களாலே மிருகங்கள் துன்பமடைவதுபோல வியாதிகளால் துன்பமடைகிறார்கள். அவர்கள் கஷாயங்களையும் பலவிதமான கிருதங்களையும் பானம்செய்தும் பெரிய யானைகளால் மலங்கள் முறிக்கப்படுதல்போல ஜரையினால் முறிக்கப்படுகிறவர்களாகக் காணப்படுகின்றனர். பூமியில் நோயினால் பீடையடைந்தமான்களுக்கும் பறவைகளுக்கும் கொடியவிலங்குகளுக்கும் தரித்ரர்களுக்கும் எவர்கள் வைதியம்செய்கிறார்கள்? அனேகமாக அவர்கள் (வியாதியால்) துன்பமடைவதில்லை. பட்டணத்திலிருப்பவர்களும் (ஒருவ்யாதியும்) கெருங்கமுடியாதவர்களும் உக்ரமானபராக்ரமமுடையவர்களுமாயினும்

1 'பூதங்கள்' என்பது பழையவுரை

2 ஜீவனுக்குள்ள பத்து அவஸ்தைகளாவன:—கர்ப்பவாஸம், ஜன்மம், பால்யம், கௌமாரம், பௌகண்டம், யௌவனம், ஸ்தாவிர்யம், ஜரை, பிராணரோதம், நாசம் என்பவை.

3 'யோகம்' என்பது மூலம்; 'ஸாமர்த்தியங்கள்' என்பது பழையவுரை.

அரசர்களை நோய்கள் வியாபித்துப் புலியர் விலங்குகளைப் பக்ஷிப்பது போலப் பக்ஷிக்கின்றன. இவ்விதம், வேதனையால் அழிவற்றதும் சோக மோகங்களால் நிரம்பியதுமான உலகம் வலிய (ம்ருத்யுராப்) பிரவாஹத் தால் சிதறடித்து, திசைகளில் இழுக்கப்படுவதைப் பார். விதியி லகப்பட்டவர்கள் தனத்தாலும் ராஜ்யத்தாலும் உக்ரமான தவத்தா லும் அமைப்பை மீறுகிறதில்லை முயற்சிக்கேற்றபயன் கிடைக்குமா னால் எல்லாரும் மரிக்கமாட்டார்கள்; மூப்படையமாட்டார்கள்; விரும்பியவற்றையெல்லாம் அடைந்தவர்களுமாவார்கள்; அப்பிரியத் தைப் பார்க்கமாட்டார்கள் எல்லாரும் உலகில் மேலே மேலே இருப்பதற்கே ஆசைப்படுகிறார்கள்; சக்திக்குத்தக்கபடி முயற்சியும் செய்கிறார்கள். அது அப்படியே ஆகிறதில்லை. தனமதத்தால் மயக்க மடைந்தவர்களையும் மதுபானத்தால் மயக்கமடைந்தவர்களையும் சூரர் களும் பராக்கிரமமுடையவர்களும் தவறுதலில்லாதவர்களும் உபாவிக் கிறார்கள். சிலருக்கு நன்றாகப்பார்க்கப்படாமலே துன்பங்கள் விலகி விடுகின்றன மற்றவர்களுக்குத் சம்முடையபொருளும் அடையப்படு கிறதில்லை. கர்மவஸித்திகளில் பயன்கள் வெவ்வேறாகக் காணப்படு கின்றன. எல்லாரும் செல்வத்தைவிரும்புகையில் சிலர் பல்லக்குச் சுமக்கின்றனர்; சிலர் பல்லக்கேறிச் செல்லுகின்றனர்; சிலர் தேருக்கு முன் போகின்றனர். சேர்ந்துமகிழும்மனிதர்களில் அநேகர்கள் ஸ்தி ரீயை இழந்தவர்களாயிருக்கின்றனர். அநேகமனிதர்கள் தனிதனி பலவிதமானஸ்திரீகளை அடைகின்றனர். (இதற்கு) வேறுனஇந்தப்பர வஸீதுவைப் பார். இவைகளில் மோகத்தை அடையாதே; தர்மம் அதர்மம் இரண்டையும் விடு. ஸத்தியம்அஸத்தியம் இரண்டையும் விடு. ஸத்தியம்அஸத்தியம் இரண்டையும்விட்டு எதனால்விட்டாயோ அதையும் விடு. ரிஷிகளில் சிறந்தவனே! தேவர்கள் பூலோகத்தை விட்டு ஸ்வர்க்கத்தையடையக்காரணமானதும் பிரகாசிக்கிறதும் ரஹஸ்யமுமான இதனை உனக்குச்சொன்னேன்' என்றுசொன்னார்.

சிறந்தபுத்திமானும் தீரருமான சுகர் நாடுதருடையவர்தீதை யைக்கேட்டு மனத்தில்ஆலோசித்து நிச்சயத்தையடையவில்லை. 'புத் திரர்களாலும் மனைவிகளாலும் பெரியகிலேசம் உண்டாகும். வித்தை யைக்காட்டிலும் பெரியதாமிருக்கிறது. அப்படமானவருத்தமுடைய தும் பெரிய பயனுடையதும் சாஸ்வதமானஸ்தானத்திற்குஸாதனமு மாயிருப்பது எதுவாகும்?' என்று எண்ணினார். பிறகு, [1]மிகவும் மேலானதர்மத்தையுணர்ந்தஅவர், ஆத்மாவுக்குக்கியாகநிச்சயிக்கப்

1 'தர்மத்தில் பெரிதையும் சிறிதையும் அறிந்த' என்றும்கொள்ளலாம்.

பட்டதும் மேலானதும் மோக்ஷத்தைச்சார்ந்ததுமான கதியை ஒரு முகூர்த்தகாலம்ஆலோசித்து, 'நான் எப்படி பந்தமற்றவனாகி உத்தம மானகதியை அடைவேன்? மறுபடியும் பிறவிக்கடலில் திரும்பாமலி ருப்பேன்? மறுபடியும் திரும்புதல்இல்லாத மேலானதன்மையை விரும்புகிறேன். எல்லாஸங்கங்களையும்விட்டு மனத்தினால் கதியைநிச் சயித்து எவ்விடத்தில் என்னுடைய ஆத்மாவானது ஸுகத்தை அடையுமோ அவ்விடத்தில் செல்லுவேன். எதில் குறைவில்லாதவ னும் ராகமில்லாதவனும் விகாரமில்லாதவனுமாயிருப்பேனோ அந்த மேலானகதியை என்னால் யோகமின்றிச சக்தியினால் அடையமுடி யாதே. எந்தயோகத்தால் முக்தியடைந்தவனுக்குக் கர்மஸம்பந்த முண்டாகிறதில்லையோ அப்படிப்பட்ட யோகத்தையடைந்து கிரு கத்தையும் சரீரத்தையும் விட்டுவிட்டு வாயுரூபமாகித் தேஜஸு களுடைய ஸமூகமாயிருக்கிறஸூர்யனிடம் பிரவேசிப்பேன். சந் திரன் தேவகணங்களால் கூடியதை அடைவதுபோல இந்த ஸூர்யன் கூடியதை அடைவதில்லை. சந்திரலோகத்தையடைந்தவன் நடுக்கத்துடன் பூமியில் விழுகிறான்; திரும்பவுமே ஏறுகிறான். சந்திரன் எப்பொழுதும் குறைவையடைகிறான்; திரும்பவும் நிரம்பு தல் அடைகிறான். அடிக்கடி (உண்டான) இந்தவிருத்திகூடியங் களை அறிந்து (இந்தச்சந்திரனிறபிதிருலோகத்தை) நான் விரும்ப மாட்டேன். ஸூர்யனென்றால், உக்கிரமானகிரணங்களால் உல கங்களைத் தபிக்கசெய்கிறான். எந்நாளும் குறைவற்றமண்டலமு டையவனாகி மற்றவற்றின்ஒளியைக் கவர்கின்றான். ஆகையினால், எனக்கு மிகவிளங்குகின்றஒளியையுடைய ஸூர்யனை அடைவதில் விருப்பமிருக்கிறது. (என்றாலும்) ஆக்கிரமிக்கமுடியாமல் ஸம்பந்த மற்ற அந்தராத்மாவுடன் இந்த ஸூர்யனிடம் வலியப்போன். ஸூர்ய னுடையஸ்தானத்தில் இந்தசரீரத்தைவைத்துவிட்டு ரிஷிகளோடு நான் மிகவும்பொறுக்கமுடியாத ஸூர்யனுடைய (அந்தர்யாமியான) தேஜஸில் [1]வலியப்போன். விருக்ஷங்கள், மலைகள், பூமி, பத்துதிக்குக் கள், தேவர்கள், அஸுரர்கள், கந்தர்வர்கள், பிசாசங்கள், உரகர்கள், ராக்ஷஸர்கள ஆகியஇவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். உலகங் களில் எல்லாப்பிராணிகளிடத்திலும் பிடிவேஷக்கப்போகிறேன்; ஸந் தேகமில்லை. எல்லாத்தேவர்களும் ரிஷிகளோடுகூட என்னுடைய யோகத்தின்வீர்யத்தைப் பார்க்கட்டும்' என்றுசொல்லிவிட்டு, உடனே, உலகங்களில் பிரவிக்திபெற்ற அந்தராத்மமுனிவருக்கு அனுமதிகொடு

1 'பாஸ்யாமி' என்பது வேறுபாடம்; 'அடைவேன்' என்பது பொருள்.

த்து அவரிடமிருந்து அனுமதிபெற்றுக்கொண்டு பிதாவினிடம் சென்றார். அந்தச்சுகமுனிவர் மஹாத்மாவான கிருஷ்ணத்வைபாயனரென்கிற (வ்யாஸ) முனிவரை நமஸ்கரித்துப் பிரதக்ஷிணம்செய்து அவரிடம் விடைபெற்றுக்சென்றார். (அப்பொழுது,) மஹாத்மாவான (அந்த) முனிவரும் சுகருடைய அந்தவார்த்தையைக் கேட்டுப் பிரீதியடைந்து திரும்பவும் அவரைநோக்கி, 'ஓ! புத்திர! இப்பொழுது, உன்விஷயத்தில் நேத்திரத்தைத் திருப்திசெய்விக்கும் அளவு நில்' என்று சொன்னார். சுகர் அபேக்ஷையில்லாதவரும் ஸ்நேஹமில்லாதவருமாகி ஸந்தேஹமில்லாமல் மோக்ஷத்தையே நிஜத்துப போவதற்கே மனத்தைச் செலுத்தினார் முனிவர்களில் சிறந்தவரான அந்தச்சுகர் பிதாவைவிட்டுவிட்டு வித்தர்களுடைய ஸங்கங்களால் அடையப்பட்ட விசாலமான கைலமலையின் உச்சியை அடைந்தார்.

மூன்றூற்றுஏற்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(சுகர் யோகத்தைச்செய்து ஸ்வர்க்கத்துக்குப்புறப்பட்டதும், தம்பிதா அழைத்தால் மறுமொழிசொல்லும்படி தேவர்களுக்குச் சொல்லியதும்.)

ஓ! பாரத! அந்த வ்யாஸருடைய புத்திரரானவர் கைலமலையின்கொடுமுடியிலேறி ஸமமும் ஏகாந்தமும் புற்களில்லாததுமான இடத்தில் உட்கார்ந்தார். முறைப்படி யோகத்தை அறிந்த அவர் சாஸ்திரப்படியும் அனுஷ்டானப்படியும் பாதமூலமான அங்கங்களில கிரமமாக ஆத்மாவை நிறுத்தினர். பிறகு, வித்வானான அவர் ஸமர்யன் நன்றாக உதயமாயிருக்கையில கிழக்கு முகமாகத் தைகால்களை மடக்கிக்கொண்டு வணக்கத்துடன் உட்கார்ந்திருந்தார். புத்திமானான அவர் யோகத்தைச்செய்ய முயற்சிசெய்தவிடத்தில், பக்ஷிஸஞ்சாரம் இல்லை; ஒலி இல்லை; கண்ணுல்பார்க்கக்கூடியதுஒன்றும் இல்லை. அப்பொழுது, அவர் எல்லாஸம்பந்தமும்விட்டுவிலகின ஆத்மாவைப் பார்த்தார். அவர் ப்ரமாணமான அந்த ஆத்மஸ்வரூபத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர் திரும்ப மோக்ஷமார்க்கத்தையடைவதின்பொருட்டு யோகத்தையடைந்து பெரியயோகியாகி ஆகாயத்தை அதிக்கிரமித்தார். அதன்பிறகு, தேவரிஷியான நாரதரைப்பிரதக்ஷிணம்செய்து பாமரிஷியான அவருக்குத் தம்முடையயோகத்தைத் தெரிவிக்கலானர். 'தவத்தையே தனமாகக்கொண்டவரே! மார்க்

கத்தைத் தெரிந்துகொண்டேன். பிரவிருத்தித்துவிட்டேன். உமக்கு க்ஷேமமுண்டாகட்டும். மிக்கதாந்தியுள்ளவரே ! உம்முடைய அனுக்கிரகத்தால் இஷ்டமானகதியை 'அடையப்போகிறேன்' என்றார். வ்யாஸபுத்திரரானசுகர் நாரதரால் அனுமதிசெய்யப்பட்டு (அவரை) வணங்கி மறுபடியும் யோகத்தையடைந்து ஆகாயத்தில் சென்றார். கைலாஸத்தின் பின்பாகத்திலிருந்துகிளம்பி ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறவரும் காந்தியுள்ளவரும் நல்ல நிச்சயமுடையவருமான அந்த வ்யாஸபுத்திரர் அப்பொழுது ஸ்வர்க்கத்தைக்குறித்துக் கிளம்பினர். மேலேகிளம்பினவரும் கருடனுக்குச் சமமான காந்தியுடையவரும் மனத்துக்கும் வாயுவுக்கும் சமமான வேகமுடையவரும் மிராக்ஷ மணஸ்ரேஷ்டருமான அவரை எல்லாப்பிராணிகளும் பார்த்தன. பிறகு, அக்ஷினிக்கும் ஸூர்யனுக்கும் நிகரான காந்தியுடைய அவர் எல்லாம் தாமாயிருக்கிற நிச்சயத்தால் மூன்றுலகங்களிலுமுள்ள எல்லாவற்றையும் நிந்தித்துத் தேவலோகத்தைச்சேர்ந்த மார்க்கத்தைத் அடைந்தார். ஒரேமனமாகப்போகிறவரும் பற்றில்லாதவரும் ஓரிடத்திலிருந்தும் பயமில்லாதவருமான அவரை ஜங்கமஸ்தாவரங்களான எல்லாப் பிராணிகளும் பார்த்தன ; அப்பொழுது, சக்திக்குத்தக்கபடி நியாயமாகப் பூஜிக்கவும்செய்தன. தேவர்கள் அவரைத் தேவலோகத்திலுள்ள புண்யவர்ஷங்களாலே அலங்கரித்தார்கள். அவரைப்பார்த்துக் கந்தர்வர்கள் அப்ஸரஸுகள் இவர்களுடைய எல்லாக்கூட்டங்களும் ஆச்சரியத்தையடைந்தன. வித்தியை அடைந்தரிஷிகளும், 'தவத்தால் வித்தியைப்பெற்றவரும் ஆகாயத்தையடைந்தவருமான' இவர் யார் ? கீழேஉடலும்' மேலே நிமிர்ந்தமுகமுமுடையவராய் நேத்திரங்களாலே நன்றாக [1]வகிக்கப்படுகிறார் ' என்று மிகுந்தஆச்சரியத்தை அடைந்தார்கள். பிறகு, சிறந்ததாமத்தில் மனமுடையவரும் மூவுலகங்களிலும்பிரவிதிதிபெற்றவருமான அவர் ஆதித்தியனே நன்றாகப்பார்த்து மௌனமாக (வேகத்தாலுண்டான) சப்தத்தால் அகண்டமான ஆகாயமுழுமையும் பூர்ணம்செய்கிறவர்போலக் கிழக்குமுகமாகச் சென்றார். ஓ ! அரசனே ! அவர்வருகிறதைப் பஞ்சசூடைமுதலான எல்லா அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் பார்த்து உடனேபரபரப்புளகமனமுடையவைகளும் மிகவும் மலர்ந்த கண்களுடையவைகளும், ; இது எந்தத்தெய்வதம் உத்தமகதியையடைந்ததும் பலமானநிச்சயமுடையதும் ஆசையற்றதும் முக்தியடைந்ததுபோன்றதுமாகி இங்கேவருகிறது ?' என்று மிக்க ஆச்சரியமுடையவைகளுமாயின. பிறகு,

1 'எல்லாரும் பார்க்கின்றனர்' என்பது கருத்து.

அவர் ஊர்வசியும் பூர்வசித்தியும் எப்பொழுதும் வலிப்பதாகிய மலய மென்கிற பர்வதத்தைத் தாண்டினர். அவர்களும் பிரம்மரிஷிபுத்திர ரான அவர்விஷயத்தில் மிக்க ஆசரியத்தை அடைந்தார்கள். 'புத்தியின் னுடைய நிலைமையானது ஆசரியம். வேதியரானவவாஸர் வேதாப்பி யாஸருதில் பற்றினவராயிருந்த, இவர் கிறபிரபாதகிலேயே சுகரன் போல ஆகாயத்தில ஓஷ்பரிக்கிறார் இவர் பிதாவின் பணிவிடை யினல் மிகவும் சிறந்தபுத்தியை அடைந்தார பிதாவினிடம் பக்தி யுடையவரும் பலமான தவமுடையவரும் பிதாவுக்கு இஷ்டமான புத்திரருமான இவர். (இவ்ரைதருவிர) மற்றவிடதில் மனமில்லாதவரான அந்தபிதாவினலே எபபடிவிடப்பட்டார்?' என்கிறஹர்வசியினுடைய வார்த்தையை மேலான தர்மத்தையறிந்த சுகர் கேட்டு அந்த வார்த்தையில் மனம் பற்றினவராய் எல்லாத்திக்குக்களையும் பார்த்தார். அவர், அப்பொழுது ஆகாயத்தையும் மலைகளும் சோபபக்களும் காடுகளு மூள்ள பூமியையும் தடாகங்களையும் ஆறுகளையும் பார்த்தார். அவ் விடத்தில் அவரைசுற்றி எலலாததேவதைகளும் வெகுமானித்து அஞ் சலிசெய்துகொண்டு பார்த்தார்கள். அபபொழுது, பரமதர்மத்தை யறிந்தசுகர் அந்தத்தேவதைகளை நோக்கி, 'பிதாவானவர், 'சுகா' என்று கூபபிட்டுக்கொண்டு என்னைப பின்தொடர்ந்து வருவாரானல் நீங்களெல்லாருமே ஜாக்கிரதையுடன் அவருக்கு விடைகூறவேண் டும். நீங்களெலலாரும் ஸ்நேகத்தால் என்னுடைய சொற்படி செய்ய வேண்டும்' என்று சொன்னர் சுகருடைய வார்த்தையைக்கேட்டு ஜல மும் காடும் நிரம்பிய திக்குக்களும் ஸமுத்திரங்களும் நதிகளும் மலைகளும், 'ஓ! வேதியரே! அப்படியே நீர் கட்டளையிடுகிறபடி ஆகட்டும். ('சுகா' என்று) அழைக்கிற வ்யாஸமுனிவருக்கு நாங்கள மறுமொழி சொல் லுகிறோம்' என்று நானுபகத்திலும் சுகரை நோக்கி சொல்லின.

மூன்றூற்றுநாற்பத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

———:o:———

(சுகர் தென்றபின் வ்யாஸர்வருத்தியதும், பரமசிவன் வாயிலிருந்ததும்).

பிரம்மரிஷியும் மிகப்பெரியதவமுடையவருமான சுகர் இவ் விதமான வார்தையைச்சொல்லி [1]நான்குவிதமான தோஷங்களையும்

---

1 **ஸத்வகுணத்தாலுண்டானவைகளும் மோக்ஷதிற்குத் தடையாயுள்ள வைகளுமான தர்மம், ஞானம், வைராக்கியம், ஐச்வர்யம் என்பவைகள்.**

தள்ளிவிட்டு யோகவித்தியில் நிலையடைந்தார்; [1]எட்டுக்குணமுள்ள தமஸையும்விட்டு [2]ஐந்துவிதமான ரஜஸையும் விட்டார். பிறகு, புத்தி மானனை அவர் ஸத்வகுணத்தையும் விட்டார். அது ஆச்சரியமாயிருந்தது. பிறகு, அவர் நித்தியமும் நிர்க்குணமும் லிங்கசரீரமற்றதும் பரமரூபமுமான அந்தப்பதத்தில் புகையில்லாத அக்னிபோல ஜ்வலித்துக்கொண்டிருந்தார். (அப்பொழுது,) அந்தகூபத்தில் [3]கொள்ளிகள் விழுந்தன; திக்குக்கள் எரிந்தன; பூமி நடுங்கிற்று; அஃது ஆச்சரியமாயிருந்தது; மரங்களின்கிளைகள் ஒடிந்துவிழுந்தன; மலைகளின் கொடுமுடிகள் சரிந்தன; பேரிடிகளுடைய சப்தங்களாலே பூமி பிளந்ததுபோலாயிற்று; ஸுமர்யன் பிரகாசிக்கவில்லை; அக்னி ஜ்வலிக்கவில்லை; குளங்களும் ஆறுகளும் ஸமுத்திரங்களும் கலங்கின; இந்திரன் சுவையும் நல்லமணமுமுள்ள ஜலத்தை வருஷித்தான்; திவ்யமானகந்தத்தை வகிப்பதும் சுசியுள்ளதுமான காற்று வீசியது. ஓ! பாரத! அந்தச்சுகர் வடதிக்கையடைந்து நிகரற்றவைகளும் திவ்யங்களும் இமயமலைக்கும் மேருவுக்கும் ஒப்பானவைகளும் மிகநெருங்கினவைகளும் வெளுத்தவைகளும் பொன்னிறமானவைகளும் ரஜதமயமானவைகளும் ஸுவர்ணமயமானவைகளும் சுபமானவைகளும் உயரத்திலும் குறுக்கிலும் நூறுயோசனை விரிவுள்ளவைகளும் அழகுபொருந்தியவைகளுமான இரண்டுகொடுமுடிகளைக் கண்டார். அவர், சங்கையற்றமனத்துடன் அப்படியே பாய்ந்தார். ஓ! மஹாராஜனே! பிறகு, மலையினுடைய இரண்டு முடிகளும் சீக்கிரமாகவே இரண்டாகப் பிளக்கப்பட்டவைகளாகக் காணப்பட்டன. அஃது ஆச்சரியமாயிருந்தது. பிறகு, பர்வதத்தின் கொடுமுடிகளிலிருந்தும் விரைவில் வெளியில்வந்தார். அந்த உத்தமமான மலையானது இவருடையகதியைத் தடுக்கவில்லை. பிறகு, ஆகாயத்தில் தேவர்கள், கந்தர்வர்கள், முனிவர்கள், மலையில் வசிக்கிற மற்றவர்கள் ஆகிய இவர்களுடைய பேரொலியானது உண்டாயிற்று. ஓ! பாரத! (மலையைக்) கடந்து சென்றசுகரையும் இரண்டாகச் செய்யப்பட்ட மலையையும்பார்த்து அப்பொழுது எங்கும், 'நல்லது, நல்லது' என்ற சப்தமானது உண்டாயிற்று. அவர், தேவர்களாலும் கந்தர்வர்களாலும் முனிவர்களாலும் யக்ஷர்களாலும் ராக்ஷஸர்களாலும் வித்யாதரர்களுடைய கணங்களாலும் பூஜிக்கப்பட்டார். ஓ! மஹாராஜனே! சுகர்சென்ற

1 புர்யஷ்டகரூபம்; 669-ம் பக்கம் குறிப்பிற்காண்க.
2 ஐந்து விஷயங்களில் பிரவிருத்திக்கச் செய்வன.
3 மஹாபுருஷர் பூமியை விட்டமையால் தர்மிமித்தங்கள் உண்டாயின.

போது, ஆகாயமானது நானகுபக்கத்திலும் திவ்யமானபுஷ்பங்களால் நிறைந்ததாயிற்று. அங்கிருந்தும் மேலேகிளம்பித், தர்மாத்மாவான சுகர் ரமணீயமும் புஷ்பித்தவிருக்ஷங்களோடுகூடிய வனங்களையுடையதுமான தேவகங்கையைக் கண்டார் அந்தக்கங்கையில் (ஜலக்கிரீடையில்) பறறுதலுடையவர்களும் வஸ்திரமில்லாதவர்களுமான அப்ஸரஸுகளுடையசூட்டங்கள் மனத்தில்விகீல்பமிலலாத சுகரைப்பார்த்தும் விகல்பமில்லாமலே விளையாடின; ஸ்நானமும்செய்தன. சுகர் போகிறதைஅறிந்து ஸ்நேகத்தோடுகூடியபிதாவானவர் வேகமான நடையுடன் பின்னலே தொடர்ந்தார் சுகரோ வாயுவைக்காட்டிலும் மேலான ஆகாயகமனத்தைசெய்து தம்முடையபெருமையைக்காண்பித்துக்கொண்டு அப்பொழுது எல்லாமாகிவிட்டார் மிக்கதவமுடையவ்யாஸர் மகாயோகத்தாலுண்டாகிய சிறந்தகதியையடைந்து அடுத்தநிமிஷத்தில் சுகர்புறபபட்ட இடத்தை அடைந்தார். சுகர் பர்வதத்தின் கொடுமுடியை இரண்டாகச்செய்துவிட்டுப்போனதை அவர் பார்த்தார். அப்பொழுது, அவ்விடத்திலுள்ள ரிஷிகள் (வ்யாஸ) புத்திரருடைய (அந்தர்) செய்கையைப்பற்றிப் புகழ்ந்தார்கள். பிறகு, பிதா பெரியகுரலோடு மூவுலகங்களும் எதிரொலியிடும்படி, 'சுகா!' என்கிறநீண்டஒலியால் அழைத்தார் தர்மாத்மாவான சுகர் அபபோது எங்கும் வியாபித்து எல்லாஸ்வரூபமுமாகி எங்கும் பிரவிருத்தித்தவராயிருந்து, 1'போ:' என்கிறசப்தத்தினால் (எல்லாவற்றையும்) சப்திக்கசெய்துகொண்டு விடைசொன்னர் பிறகு, 'போ:' என்ற ஒரேஅக்ஷரத்தையுடைய உயர்ந்ததான நாதத்தைச்சொல்லி ஸ்தாவரஜங்கமமானஎல்லாஜகத்தையும் ஒன்றுசேர்த்தார். 2அதுமுதல் இப்பொழுதும் மலைகள்குகைகள் இவைகளுடைய பக்கங்களில் தனித்தனியாகஉச்சரிக்கப்பட்டசப்தங்களைச் சுகர்விஷயத்தில் (அவைகள்) சொல்லுகின்றன. அப்பொழுது, சுகர் மறைந்திருந்து கமதுபிராபவத்தைக்காண்பித்துச் சப்தமுதலான குணங்களைத் தள்ளிவிட்டுப் பரமபதீத்தை அடைந்தார் அளவற்றதேஜஸ்ஸுள்ள அந்தரருடைய அப்படிப்பட்டமஹிமையைப்பார்த்து (வ்யாஸமுனிவர்) பர்வதத்தின்தாழ்வரையில் புத்திரரையே சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்தார். பிறகு, தேவகங்கையின்கரையில்விளையாடிக்கொண்டிருந்த அப்ஸரஸுகளுடைய கூட்டங்கள் அந்தரிக்ஷியையடைந்து எல்லாரும்

---

1 மரியாதையாகஎழுளிப்பது

2 'சுகருக்காகச்சப்தித்ததுமுதல் அவருடைய கீர்த்தியின்தொடர்ச்சிக்காக இப்பொழுதும் வார்த்தைக்கு விடைகூறுகின்றன' என்பது.

* L' அ

பரபரப்பையடைந்தவர்களும் பிரஜ்ஞை தவறினவர்களுமானார்கள். முனிச்ரேஷ்டரான அவரைப்பார்த்துவிட்டுச் சிலர் நீரில் அமுங்கினார்கள்; சிலர் புதர்களில் தழைந்தார்கள்; சிலர் வஸ்திரங்களீர்த் தரித்தார்கள். அப்பொழுது, வ்யாஸமுனிவர் பூர்ணிரருடையமுக்தியையும் தம்முடையபற்றுதலையுமறிந்து ஸந்தோஷத்தையும் லஜ்ஜையையும் அடைந்தார். தேவர்களாலும் கந்தர்வர்களாலும், சூழப்பட்டவரும் மகரிஷிகளுடையஸங்கங்களால்பூஜிக்கப்பட்டவரும் பிரகாசமென்கிற வில்லைக்கையிலுடையவருமாகிய பகவான்சங்கர் அவரை அடைந்தார். அப்பொழுது, மஹாதேவர், புத்திரசோகத்தால்தாபத்தையடைந்த அந்தவ்யாஸரைநோக்கி, 'முன்காலத்தில் நீர் வீரியத்தால் அக்னி, பூமி, அப்பு, வாயு, ஆகாயமிவைகளுக்குநிகரானபுத்திரனை என்னிடம் வரித்தீர். அப்படிப்பட்ட லக்ஷணத்துடன் உமக்குப்பிறந்தவனை அந்தப்புத்திரன் உம்முடையதவத்தினாலும் என்னுடைய அனுக்கிரகத்தினாலும் நன்றாக நிரம்பினவனும் பிரம்மதேஜோமயனும் சுசியுள்ளவனுமானான். அவன், தேவர்களாலும் இந்திரியங்களை ஜயிக்கமல் அடையமுடியாத பரமமானகதியை அடைந்தான். ஓ! பிரம்மரிஷியே! அவனைக்குறித்து நீர் ஏன் துக்கிக்கிறீர்? எவ்வளவுகாலம் பர்வதங்களிருக்குமோ, எவ்வளவுகாலம் ஸமுத்திரங்களிருக்குமோ அவ்வளவுகாலம் உமக்கும்புத்திரனுக்கும் அழிவறறகீர்த்தியானது உண்டாகும். ஓ! மகாமுனிவரே! நீரும் என்னுடைய அனுக்கிரஹத்தால் இந்தஉலகத்தில் எங்கும் எப்பொழுதும் (உம்மைவிட்டு) விலகாத உம்முடையபுத்திரனுக்குச்சமமான நிழலைப் பார்ப்பீர்' என்று ஸமந்தானபூர்வமாக இந்தவசனத்தைச் சொன்னர். ஓ! பாரத! அந்த முனிவர் பகவானை ருத்திரரால் நேரில்ஸமர்தானம்செய்யப்பட்டுச் சாயையைப்பார்த்துக்கொண்டே பரமஸந்தோஷத்தோடு திரும்பினர். பரதஸ்ரேஷ்டனே! இவ்விதம், சுகருடைய பிறப்பையும் கதியையும், நீ என்னைக்கேட்டமையால், விரிவாகச் சொன்னேன். அரசனே! இதனை எனக்கு முன்காலத்தில் தேவரிஷியானநாரதர் சொன்னர். மகாயோகியான வ்யாஸரும் அடிக்கடி ஸல்லாபங்களில் சொல்லியிருக்கிறார். பரிசுத்தமும் மோக்ஷதர்மத்தைச்சேர்ந்த அர்த்தங்களோடு கூடினதுமான இந்தஇதிஹாஸத்தைச் சாந்தியில்பற்றுடன் கேட்பவன் பரமகதியை அடைவான்'' என்று சொன்னர்.

மூன்றூற்றைம்பத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

———:o:———

(நாராயணரிஷி தான் பூஜிப்பவரை நாரதருக்குச் சொல்லியது.)

யுதிஷ்டிரர், "பிதாமஹரே! கிருஹஸ்தனனும் பிரம்மசாரியானும் வானப்பிரஸ்தனனும் அல்லது ஸந்யாஸியானும் வித்தியை அடையவிரும்புகிறவன் எந்தத்தேவதையை ஆராதிக்க வேண்டும்? இவனுக்கு எதனால் நிலைத்ததான ஸ்வர்க்கம் ஏற்படும்? எதனால் பரமான மோக்ஷமுண்டாகும்? எந்தவிதியினால் தேவகார்யத்திலும் பிதிருகார்யத்திலும் ஹோமம்செய்யவேண்டும்? முக்தன் எந்தக்கதியை அடைவான்? மோக்ஷந்தான் என்ன தலையுடையது? ஸ்வர்க்கத்தையடைந்தவனும் தான் அதினின்றும் நழுவாமலிருப்பதற்கு எதைச செய்யவேண்டும்? தேவர்களுக்குத்தேவரும் பித்ருக்களுக்குப்பிதாவுமாயுள்ளவர் எவர்? அவரைக்காட்டிலும் எது மிகவும் சிறந்ததோ அதையும் எனக்குச சொல்லும்" என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! குற்றமற்றவனே! கேள்வியை அறிந்த நீ என்னைநோக்கி இப்பொழுது ரகஸ்யமானகேள்வியைக் கேட்கிறாய். அரசனே! இது தேவருடைய அருளில்லாமலும் ஞானப்ராப்தியில்லாமலும் தர்க்கத்தினால் நூறுவர்ஷங்களானாலும் சொலலுவதற்கு இயலாது. சத்ருக்களைஸம்ஹாரம்செய்பவனே! அறிதற்குஅருமையான இந்தச் சரித்திரமானது உனக்கு விவரணம்செய்யத்தக்கது. இந்தவிஷயத்திலும் நாரதருக்கும் ரிஷியான நாராயணருக்கும்நடந்த ஸம்வாதரூபமான இந்தப்பழையசரித்திரத்தைச் சொல்லுகின்றார்கள். மஹாராஜனே! எல்லாவற்றிற்கும் ஆத்மாவும் ஸநாதனருமானநாராயணர் முன்காலத்தில் ஸ்வாயம்புவமன்வந்தரத்தில் கிருதயுகத்தில் தர்மருக்குப்புத்திரராகி நரரென்றும் நாராயணரென்றும்ஹரியென்றும்கிருஷ்ணரென்றும் நான்குமூர்த்திகளுடையவரானர். இவ்விதம் பிதாவானவர் எனக்குச்சொன்னர். அவர்களுள்ளே அழிவற்றவர்களானநரநாராயணர்களிருவரும் பதரிகாச்ரமத்தையடைந்து ஸ்வர்ணமயமானவண்டியிலிருந்துகொண்டு தவத்தைச செய்தார்கள். அந்தவாகனம் எட்டுச் சக்ரங்களுள்ளதும் பூதங்கள்கட்டியதும் மனத்திற்குஇனியதுமானது. அதில், ஆதியிலுண்டானவர்களும் உலகங்களுக்குநாதர்களுமான அவர்கள் (தவத்தால்) இவ்வுத்தவர்களும் நரம்புகளால்வியாபித்தவர்

களும் தவத்தாலும் தேஜஸாலும் தேவர்களுக்கும்பார்க்கமுடியாதி வர்களுமாயிருந்தார்கள். (அவர்கள்) எவனுக்கு அனுக்ரஹத்தைச் செய்கிறார்களோ அவனே அவர்களைப்பார்க்கத்தகுதியுள்ளவனாகிறான். ராஜனே! நிசசயமாக அவர்களுடைய ஸங்கல்பத்தினால் நாராயணனவர் இருதயத்தில் அந்தர்யாமியால்ஏவப்பட்டு மஹாமேருபர்வதத்தினு டைய கொடுமுடியினின்றும் மிகபபெரிதானகந்தமாதனபர்வதத் தைக்குறித்துக்கிளம்பி விரைவாக எல்லா உலகங்களிலும் ஸஞ்சரித் தார். அவர் அவர்களுடைய அனுஷ்டானகாலத்தில அந்தப்பதரிகாச்ர மதேசத்தை அடைந்தார். அபபொழுது, அவருக்குக் குதூஹல முண்டாயிறறு. 'இது, எவரிடத்தில் தேவர்கள், அஸுரர்கள், கந்தர் வர்கள், கின்னரர்கள், பெரியஉரகர்கள் இவர்களுடன்கூடியஉலகங் களெல்லாம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவோ அவருடைய இருப் பிடம். முன் ஒன்றுயிருந்த இந்தமூர்த்தியானது தர்மருடையகுலபரம் பரையைவிருத்திசெய்வதற்காகத் தர்மரிடமிருந்து நான்குவிதமாயுண் டாயிற்று. இவர்களால் தர்மர் விருத்திசெய்யபபட்டார். ஆசசர்யம்! இவ்விடத்தில இபபொழுது தர்மரானவர், நரநாராயணர்கள் கிருஷ் ணர் ஹரியென்கிற இந்தத்தேவர்களால் அனுக்கிரஹிக்கப்பட்டார். இந்தவிடத்தில் தர்மரின்புத்திரர்களான ஹரியும் கிருஷ்ணரும் வேறு ஒருகாரணத்திற்காகத் தவத்தில் நிலைத்திருந்தார்கள அவர்கள் பரமமானஸ்தானம். அவர்களுக்கு ஆண்னிகங்களின் அனுஷ்டானம் ஏது? எல்லாப்பிராணிகளுக்கும் தந்தைகளும் தேவர்களும் புகழு ள்ளவர்களும் மிக்கபுத்திமான்களுமான இவர்கள் எந்தத்தேவதை யை ஆராதிக்கிறார்கள்? எந்தபபித்ருக்களைத்தான் பூஜிக்கிறார்கள்?' என்று மனத்தினால் ஆலோசித்து நாராயணரிடத்தில் பக்தியோடு சீக்கிரமாக அப்பொழுது அந்தத்தேவர்களுடையஸமீபம்வந்தார். தேவ கர்மாவையும் பித்ருகர்மாவையும்செய்தபிறகு அவர்கள் பார்த்துச் சாஸ்திரத்தில்சொல்லியவிதிப்படி பூஜித்தார்கள். ;; பகவானைநாரத மூனிவர் பெரியஆசசரியமும் அபூர்வமுமான அந்தஅனுஷ்டானத்தின் விஸ்தாரத்தைப்பார்த்து ஸமீபத்திலுட்கார்ந்து மிகப்பிரீதியடைந்து தெளிந்தமனத்துடன் மஹாதேவரானநாராயணரைத்தரிசித்து நமஸ் கரித்துப் பின்வருமாறு சொல்லலானார்.

'புராணங்களோடும் அங்கங்களோடும் உபாங்கங்களோடுங்கூடிய வேதங்களில் நீர் உற்பத்தியில்லாதவரும் சாஸ்வதரும் உலகங்களைச் சிருஷ்டிக்கிறவரும் உலகங்களுக்குபகாரமும் உத்தமமான மோக்ஷ ஸ்வரூபமுமாகச் சொல்லப்படுகிறீர். உண்டானதும் உண்டாவதுமான

இந்த எல்லா உலகமும் உம்மிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஓ! தேவரே! கிருகஸ்தாச்ரமத்திலிருந்தேமூலமாகவும் உமது நான்குஆச்ரமத்தார்களும் பலமூர்த்திகளிலிருக்கிறஉம்மை ஒவ்வொருகாலும் பூஜிக்கின்றனர். நீர் எல்லா [1]உலகத்துக்கும் தந்தையும் தாயும் சார்ப்வதானகுருவுமாயிருக்கிறீர். இப்பொழுது, நீர் எந்தத்தேவதை ஆராதிக்கிறீர்? எந்தப்பித்ருதேவதையை ஆராதிக்கிறீர்? எனக்குத் தெரியவில்லை. ஓ! மஹாபாக்கியமுடையவரே! யாரைப் பூஜிக்கிறீர்? கேட்கிறவனுனெனக்கு அதனைச சொல்லும்' என்றுகேட்டார் பகவான், 'ஓ! பிராம்மணரே! தன்னிடத்திலேயே ரகஸ்யமாகஇருக்கவேண்டுவதும் ஸ்ருதனுமுமான இது சொல்லக்கூடாதது ஆனாலும், பக்தியுள்ள உமக்கு உண்மையாகச சொலலுகிறேன் அந்தவஸ்துவானது ஸுசிஷ்மமும், அறியவரிதும், காரியமற்றதும், சலியாததும், நிலைத்ததும், இந்திரியங்களும் இந்திரியவிஷயங்களும் எல்லாபபூதங்களும் இல்லாததுமாயிருக்கிறது. அது, (எல்லாப்)பிராணிகளுக்கும் அந்தராத்மாவும் ஜீவனுமாகச் சொல்லப்படுகிறது அது மூன்றுகுணங்களுக்கும் வேறான புருஷனென்றும் சொல்லப்பட்டது. ஓ! பிராம்மணர்களில் சிறந்தவரே! அதனிடமிருந்தும் மூன்றுகுணங்களுள்ள அவ்யக்தமானது உண்டாயிற்று. அவ்யக்தமும் வ்யக்தமானபதார்த்தங்களில் இருப்பதுமான அது அழிவற்றபிரகிருதியென்று சொல்லப்படுகிறது. அந்தப்பிரகிருதியை எங்களுக்குக் காரணமாகஅறியும். (பிரகிருதியுடன்கூடிக்) காரியகாரணரூபமானஅவர் எங்களால் பூஜிக்கப்படுகிறார். எவர் தெய்வகர்மத்திலும் பித்ருகர்மத்திலும் கல்பிக்கப்பட்டிருக்கிறாரோ அவரைக்காட்டிலும்மேலானவனும் மேலானவனுமான பித்ருதேவதையும் தெய்வமுமில்லை. அவர் எங்களுக்கு ஆத்மாவாக அறியத்தக்கவர். ஆகையால், அவரைப் பூஜிக்கின்றோம் ஓ! பிராம்மணரே! அவரால உலகங்களைக்காக்கிறஇந்தமரீசியானது பிரவிர்த்திசெய்யப்பட்டது தேவகர்மாவும் பித்ருகர்மாவும் செய்யவேண்டியவையென்பது அவருடையஆஜ்ஞை. பிரம்மா, ஸ்தாணு, மனு, தக்ஷன், ப்ருகு, தர்மர், யமர், மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர், க்ரது, வஸிஷ்டர், பரமேஷ்டி, ஸூர்யன், சந்திரன், கர்த்தமர், குபேரர், விக்ரஹர் என்று [3]இருபத்தோருவர் உண்டானார்கள். அவர்கள், ஸ்ருஷ்டிகர்த்தர்களாகக் கருதப்பட்டார்கள். பிராம்மணர்களில் சிறந்த அவர்கள் அவருடையதெய்வகர்மத்தையும் பித்ருகர்மத்தையும் எப்

---

1 வேறு பாடம். 2 ஒருசொல் விடப்பட்டது.

3 மூலத்தில் இருபதுபெயராகவே காணபபடுகின்றனர்.

பொழுதும் உண்மையாகத்தெரிந்துகொண்டு அந்தத்தேவருடைய ஸுஜனமானமர்யாதையைப்பூஜித்துப் பிறகு தங்களாலடையப்பட்ட பயன்களையும் அறிகின்றார்கள். ஸ்வர்க்கத்திலிருப்பவர்களெல்லாம் வணங்குகின்றதேகிகள் அவர்களுடைய பிரஸாதத்தால் அவரால் கொடுக்கப்பட்டபயனையுடையகதியை அடைகின்றார்கள். எவர்கள் [1]பதினேந்துகலைகளையும்விட்டுப் [2]பதினேழுகுணங்களும் கர்மங்களு மற்றவர்களாகின்றார்களோ அவர்கள் முக்தர்களென்பது உறுதி. ஓ! பிராம்மணரே! முக்தியடைந்தவர்களுக்குக் கதியானது கேஶத்ரஜ்ஞ னென்கிறசிதாத்மாவென்று கல்பிக்கப்பட்டது. (அவன் எல்லாருக்கும் கதியாகவும் நிர்க்குணனாகவுமே சொல்லப்படுகிறான். நாங்கள் இருவ ரும் அவனிடமிருந்துவந்தவர்களென்று ஞானயோகத்தால தெரிகி றது. இவ்விதம்அறிந்துகொண்டு ஸுஜனனை அந்தஆத்மாவைப்பூஜிக் கிறோம். ' அநேகம்சரீரதாரணைஆஸ்ரயித்தஅவரை வேதங்களும் ஆஸ்ர மங்களும் இப்பொழுது பக்தியுடன் நன்றாகப்பூஜிக்கின்றன. அவரும் இவைகளுக்குக் கதியைக் கொடுக்கின்றார் உலகத்தில் எவர்கள் அவ ரையே தியானம்செய்துகொண்டு (மற்றதை நிஷேப்பதில்லையென்கிற) ஏகாந்தியாயிருப்பதை நன்றாகப்பற்றினார்களோ அவர்கள் அவரையும் அடைவார்களென்பது அவர்களுக்குஅதிகமாயுள்ளது. ஓ! நாரதரே! இவ் விதம் ரஹஸ்யமான விஷயமானது நம்முடைய பக்தியினாலும் அன்பி னாலும் உமக்குச சொல்லப்பட்டது. ஓ! பிரம்மரிஷியே! நீரும் எங்களி டம் பக்தியுடன் கேட்டீர்' என்று சொன்னர்.

மூன்றூற்றுநாற்பத்துமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி)

(நாரதர் ஸ்வேதத்வீபஞ்சென்றதும், பாஞ்சராத்ர சாஸ்திரத்தின் வரலாறும்.)

புருஷர்களில்சிறந்தவரான அந்தநாரதர், புருஷோத்தமரானநார யணர் இவ்விதம் சொல்லக்கேட்டுப் புருஷப்ரேஷ்டரும் உலகங்களு டையநன்மைக்குஇருப்பிடமுமான நாராயணரைநோக்கி, 'உலகங் களுக்குநாதராயிருப்பவரே! தமக்குத்தாமே காரணமானவரே! நீர்

---

1 பிராணன், ஸ்ரத்தை, ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி, மனம், அன்னம், வீர்யம், தவம், மந்திரம், கர்மம், லோகங்கள், நாமம்.

2 பிராணேந்திரு, இந்திரியம் பத்து, மனம், புத்தி.

இந்தஉலகத்தில் தர்மருடைய கிருதத்தில் நான்குவிதமாக உத்தம ஜன்மத்தைஎடுத்தது உலகங்களின்நன்மைக்கே ஆகுக. இப்பொழுது, நான் உமக்கு ஆதியானகாரணத்தைப பார்ப்பதற்குப் போகிறேன். என்னில் வேதங்களை நன்குஅத்தியயனம்செய்யப்பட்டன ; தவம்செய்யப்பட்டது ; இதற்குமுன் அஸ்தியம் சொல்லப்படவில்லை. எப்பொழுதும் குருக்களுடைய பூஜையைச செய்கிறேன் ; பிறனுடைய ரஹஸ்யத்தை வெளிப்படுத்தினதில்லை என்னுடைய சாஸ்திரபடி (மைகால் வயிறு குறி) நான்கும் காக்கப்பட்டன. எப்பொழுதும் சத்துருவினிடத்திலும் மித்திரனிடத்திலும் ஸமமாயிருக்கிறேன். ஆதிதேவரான அந்தப் பரமாத்மாவையும் எப்பொழுதும் ஒரேபரமாத்மாபோல அடைந்து எப்பொழுதும வரிக்கிறேன். இந்த விசேஷங்களாலே மிகவும் சுத்தமானமனமுடையவனான நான் என் அளவற்றவரான ஈசரைப் பார்க்கமாட்டேன் ?' என்றுசொன்னர். பிரம்மபுத்திரரான நாரதருடைய அந்தவார்த்தையைச சாஸ்வதமானதர்மங்களைக் காக்கிறவரான அந்தநாராயணர் கேட்டு விதிப்படி கர்மங்களால நாதரை நன்றாகப் பூஜித்து அவரை, 'போம்' என்று சொன்னர் பிறகு, அனுப்பப்பட்ட பிரம்மபுத்திரரான அந்தநாரதர் ஸநாதனரான அந்தரிஷியைப் பூஜித்து உத்தமமான யோகத்திலிருந்துகொண்டு ஆகாயத்தில் கிளம்பினர் ; பிறகு, சீக்கிரமாக மகாமேருவின்மேல் இறங்கினர். அந்தமுனிவர் அந்தப்பர்வதத்தின் கொடுமுடியில் ஏகாந்தஸ்தலத்தை அடைந்து ஒரு மூகூர்த்தகாலம் இருந்தார். (பின்) வடமேற்காகப்பார்த்துப் பாற்கடலின் வடதிக்கிலிருப்பதும் ஆச்சரியகரமும் (சாஸ்திரத்தில்) சொல்லப்பட்ட ரூபத்தையுடையதுமான ஒருதீவைக் கண்டார். விசாலமான அந்தத் தீவானது ச்வேதமென்கிற பெயரால் பிரகாசித்திபெற்றது. மகாமேருவிலிருந்தும் முப்பத்தீராயிரம் யோஜனைகளுக்கு உயரத்திலிருப்பதாகக் கவிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கேஇருக்கிற அந்தப்புருஷர்கள் இந்திரியங்களில்லாதவர்களும் ஆகாரமில்லாதவர்களும் சலனமற்றவர்களும் மிகவும் நல்லகந்தமுள்ளவர்களுமாயிருக்கிறார்கள். வெண்ணிறமுடையவர்களும், ஸகலபாவங்களுமற்றவர்களும், பாவங்களைச செய்தவர்களான மனிதர்களுடைய கண்களைக் கவர்கின்றவர்களும், வஜ்ரம்போன்ற எலும்புகளுள்ள சரீரமுடையவர்களும், ஸமமானஅளவுடையஉயரமுள்ளவர்களும், திவ்யமான அவயவலெக்ஷணர்யமுடைய வர்களும், சிறந்தவலிமையுடையவர்களும், குடைபோன்றவடிவமுள்ள தலைகளையுடையவர்களும், மேகங்களுடைய கூட்டங்களின் தொனி போன்றதொனியுடையவர்களும், நான்கு கைகளையுடையவர்களும்,

தாமரையிதழ்போன்றபாதங்களுடையவர்களும, மிண்மையான அறு பதுபற்களும், எட்டுத்தெற்றிப்பற்களுமுடையவர்களும், ஜகத்துக் களேமுகமாயுடையவரும் ஸூர்யனுக்கு நிகரான காந்தியுடையவரும் தம்மிடமிருந்தும் உண்டானஜனத்தையுடையவருமான தேவரை நாவி னல் சுவைபார்க்கின்றவர்களுமானஅந்தப்புருஷர்களைப் பார்த்தார் எவரிடமிருந்து எல்லாஉலங்களும் உண்டாயினவோ, எவருடைய சரீரங்களும் ஸூக்ஷ்மங்களோ (வியாகரணமுதலான) அங்கங்களோடு கூடியவேதங்களும் தர்மங்களும் சாந்தியுள்ள முனிவர்களும் எல்லாத் தேவர்களும் அவருடைய பிரயாஸையில்லாத ஸ்ருஷ்டியென்றுநினைத் தார்'' என்று சொன்னர்

யுதிஷ்டிரர், "ஓ! பரதவம்சத்தில் சிறந்தவரே! இந்திரியமில்லாத வர்களும் ஆகாரமில்லாதவர்களும் சலனமில்லாதவர்களும் மிகவும் நல்லகந்தமுடைவர்களுமான அந்தப் புருஷர்கள் எப்படி ஜனித்த னர்? அவர்களுடைய உத்தமமானகதியானது எப்படிப்பட்டது? இங்கு முக்தர்களுக்குள்ள லக்ஷணமென்ன? ப்ரவேதத்வீபவாஸி களுக்குஉள்ளது? ஆகையால், என்னுடைய ஸந்தேகத்தை நிவிர்த் திசெய்யும். எனக்கு அதிகமான ஊக்கம் உண்டாயிருக்கிறது. நீரோ எல்லாக் கதைகளுமிருக்கிறதோட்டம் நாங்களும் உம்மையே அடுத்தவர்கள்'' என்றுசொல்ல, பீஷ்மர் சொல்லலானர். "ஓ! அர சனே! இது விரிவானகதை; பிதாவின் முன்னிலையில் நான்கேட்டேன். உனக்குச் சொல்லத்தக்க இது கதைகளின் ஸாரமாகக்கருதப்பட்டது. முனிவர்களில் சிறந்தவரான நாரதர் சநத்னுவுக்குச் சொன்னர். அந்த நாரதர் முன்காலத்தில் அரசர் கேட்டமையால் சொல்லினர். அப்பொ ழுது நான் நேரில்கேட்டேன். (முன்காலத்தில்) இந்திரனுக்குருண் பனும் பிரவிர்த்திபெற்றவனும் ஹரியான நாராயணரிடம்பக்தியுள்ள வனும் தர்மசீலனும் பிதாவினிடம் நித்தியபக்தியுடையவனும் எப் பொழுதும் சோம்பலில்லாதவனுமான உபரிசரனென்கிறஅரசன் பூமி ஆகு அதிபதியாக இருந்தான். முன்காலத்தில் அவன் நாராயண ருடையவரத்தினால் ஸாம்ராஜ்யத்தை அடைந்தான். அவன் முன்பு ஸூர்யனுடைய முகத்திலிருந்து வெளிவந்தான பாஞ்சராத்ரவிதி யை அனுசரித்துத் தேவர்களுக்கெல்லாம் ஈசரான நாராயணரையும் அந்த மதியால் பிதாமஹர்களையும் பிதருக்களுடைய பிச்சத்தால் வே தியர்களையும் (பிச்சமுள்ளதை) விபாகம்செய்து அடித்தவர்களையும் ஆராதித்தான். பூஜையின்மிச்சமாஞ அன்னத்தைப் புஜிப்பவனும் ஸத் யத்தைப் பெரிதாகக்கொண்டவனும் எல்லாப்பிராணிகள் விஷயத்தி

லும்ஹிம்ஸைசெய்யாதவனுமான அவன் தேவர்களுக்கெல்லாம்தேவ ரும் ஆதிமத்தியாந்தரஹிதரும் உலகங்களைப்படைத்தவரும் விகார மற்றவருமான ஜனார்த்தனரைக்குறித்து மூன்றுகரணங்களாலும் பக்தி செய்தான். நாராயணரிடம்பக்தியைசெய்பவனும் சத்துருக்களைத் தன்பம்செய்பவனுமான அவனுக்குத் தேவர்களுக்கெல்லாம் அரச னான்தேவேந்திரன் தன்னுடைய ஒரே ஆஸனத்தையும் படுக்கையையும் அளித்தான். அவனுக்கு தன்னுடையராஜ்யம், தனம், மனைவி, வாக னம்ஆகியஎல்லாம் பகவானைசேர்ந்தனவென்று எப்பொழுதும் அர்ப்பணம்செய்யப்பட்டன. ஓ! அரசனே! அவன் காம்யங்களும் நை மித்திகங்களும் யஜுஸ்தைசரேர்ந்தவைகளுமானஎல்லாக்கர்மங்களை யும் பாஞ்சராத்ரவிதியைஅனுசரித்துச் செய்தான். மஹாத்மாவான அவனுடையகிருகத்தில் பாஞ்சராத்ரத்தையறிந்தபெரியோர்கள் பக வானுக்குநிவேதிக்கப்பட்ட சிறந்ததான அன்னத்தை முந்தினபோஜ னமாயிருக்கும்படியே புஜித்தனர். தர்மத்துடன் அரசுசெலுத்துகிற வனும் சத்துருக்களைதைக்கின்றவனுமான அவன் பொய்யாலாவார்த் தையைச சொன்னதில்லை மனமும் தோஷமுள்ளதாகவில்லை. சரீ ரத்தாலும் அவன் ஓர் அணுவளவும் பாவத்தைச்செய்ததில்லை. 1 சித்ர சிகண்டிகளென்று பிரஸித்திபெற்ற ஏழுமுனிவர்களால் ஒரேவிதமான அபிப்பிராயத்துடன் சொல்லப்பட்டதும் உத்தமமும் நான்கு வேதங்களையும் ஒத்ததுமான சாஸ்திரமானது மேருவென்கிறமகாபர் வதத்தில் செய்யப்பெற்றது. உதாதமமானதும் உலகதர்மங்களையுடை யதுமான அந்தச்சாஸ்திரமானது ஏழுமுகங்களால் வெளியிடப்பட் டது. மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலஹர், க்ரது, மிக்க தேஜஸையுடையவசிஷ்டர்என்கிற அவர்களே சித்ரசிகண்டிகள். அவ ர்களெழுவரும் உலகத்திற்குக் காரணபுருஷர்கள். பிரம்மபுத்திரரான மனு எட்டாவது பிரகிருதி. அவர்களால் உலகம் தரிக்கப்படுகிறது. அவர்களிடமிருந்து சாஸ்திரமானது வெளிவந்தது. ஒருவழிப்பட்ட மனமுடையவர்களும் அடக்கமுள்ளவர்களும் (தியானம்தாரணையூ தியென்கிற) ஸம்யமத்தில் பற்றுள்ளவர்களும் சென்றதும் நிகழ்கிற தும் வருவதுமானபதார்த்தங்களையறிந்தவர்களும் ஸத்தியம் தர்மம் இவைகளைவிரும்புகியமார்க்கமாகவுடையவர்களுமான அந்தமுனிவர் கள் இந்தஸ்ரேயஸையும் இந்தப்பிரம்மத்தையும் உத்தமமானஇந்த நன்மையையும் உலகங்களையும் மனத்தால்சிந்தித்துப் பிறகு சாஸ்திர த்தைச் செய்தார்கள். அதில் தர்மார்த்தகாமங்களும் பிறகு மோக்ஷ

1 சித்திரமானமயில்தோகையுள்ளவர்கள்.

* L அரு

மும் தேவலோகத்திலும் பூலோகத்திலும் நிலைத்திருக்கிற அனேக விதமானமரியாதைகளுமே சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வகளெல் லோரும் பிரகாசிப்பவரும் பாவங்களைப்போக்குகிறவரும் பிரபுவுமான நாராயணரை மற்றரிஷிகளோடு ஆயிரஞ்சேவருஷம் தவத்தால் ஆராதித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, ஸரஸ்வதீதேவியான வள் உலகங்களுடையநன்மையைவிரும்பி நாராயணரால் கட்டளையிட்டப் பட்டு அந்தஎல்லாரிஷிகளிடத்திலும் பிரவேசித்தாள். பிறகு, தவத் தையநிந்தவர்களானபிராம்மணர்களாலே முதல் ஸ்ருஷ்டியில்உண் டான இந்தஸரஸ்வதி சப்தத்திலும் அர்த்தத்திலும் ஹேதுவிலும் நன்றுகப்ரவிருத்திக்கச்செய்யபபட்டாள். முதலிலேயே, அந்தச்சரஸ் திரமானது அந்தமுனிவர்களாலே ஓங்காரத்தின் ஸ்வரத்தால் கௌர விக்கப்பெற்றுக் கருணைபொருந்தினவரான இந்தநாராயணரிருக்கிற இடத்தில் ' சொல்லப்பட்டது. அதனால், பகவானுனபுருஷோத்தமர் பிரஸாதத்தையடைந்து சுட்டிச்சொலலப்படாத சரீரத்தையடைந்த வரும் பார்க்கத்தகாதவருமாகி அந்தமுனிவர்களையெல்லாம்நோக்கி, ' வேதியர்களே ! தர்மம்நடத்தற்குக்காரணமானவையும் பிரவிருத்தி யிலும்நிவிருத்தியிலும்காரணமாகபபோகின்றவையும் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம்என்னும் வேதங்களோடுகூடினவையும் உலகச் செய்கைகளுணத்துக்கும்ஹிதமும் உத்தமமுமான நூறுயிரம் ச்லோ கங்கள் செய்யபபட்டனவல்லவா ? (என்னுடைய) அருளில் உண் டானபிரம்மாவும் கோபத்திலுண்டான ருத்ரரும் என்னல் [1]பிரமாண மாகச்செய்ப்பட்டதுபோலவே, பிரதான புருஷர்களான நீங்களும் பிரமாணம். ஓ! பிரம்மவாதிகளே! ஸூர்யனும் சந்திரனும் வாயுவும் பூமியும் அப்பும் அக்னியும் எல்லாகூஷத்திரக்ரூட்டங்களும் பூதங் களும் தங்கள்தங்கள் அதிகாரத்திலிருக்கின்றன. எல்லாரும்பிரமாண மாயிருப்பதுபோல உத்தமமான அந்தச்சாஸ்திரமும் பிரமாணமாகும் இது 'என்னுடைய கட்டளை. பிரம்மாவின்புத்திரரானஸ்வாயம்புவ மனு தாமாகவே அதிலிருந்தும் தர்மங்களை 'எடுத்துச்சொல்லுவார். சுக்ரரும் பிருஹஸ்பதியும் உண்டாகும்பொழுது அவர்கள் உங்களு டையபுத்திகளாலெடுக்கப்பட்ட சாஸ்திரத்தைச சொல்லுவர்கள். பிராம்மணர்ரேஷ்டர்களே ! ஸ்வாயம்புவமனுவினல்சொல்லப்பட்ட தர்மங்களும் சுக்கிரரால் செய்யப்பட்டசாஸ்திரமும் பிருகஸ்பதியின் மதமும் உலகங்களில்பரவும்பொழுது வஸுவென்கிற அரசன் உங் களால் செய்யப்பட்ட இந்தச்சாஸ்திரத்தைப் ' பிருஹஸ்பதியினிட

1 கார்யத்தைத்தீர்மானிக்கிறவர்கள்.

மிருந்து அடைவான். அவன் என்னுடைய தியானத்தில் பற்றிநின்று என்னுடைய பக்தனுமாவான்; அந்தச்சாஸ்திரத்தைக்கொண்டே உலகங்களில் எல்லாக்கிரியைகளையும் செய்வான். இது உங்களுடைய சாஸ்திரங்களுள்ளே உத்தமமென்று பெயருடைய சாஸ்திரமன்றே? இது அர்த்தத்திற்கு நலமாயும் தர்மத்திற்கு நலமாயும் ரகஸ்யமாயுமுள்ளது. இது உத்தமமானது இதைப்பிரவிருத்திக்கச் செய்வதினாலேயே பிரஜைகளையுடையவர்களாவீர்கள். அந்த வஸுவானவன் ராஜஸ்ரீயும் பெருமையுமுள்ளவனுவான். அந்தஅரசன் மரித்தகாலத்தில் ஸனாதனமான இந்தச் சாஸ்திரமானது முழுதும் மறைந்துவிடும். இது எனக்கு நீங்களுக்குச் சொல்லப்பட்டது' என்று சொன்னார். இவ்வளவு வார்த்தையைச்சொல்லிவிட்டுக் காணமுடியாதவராயிருந்த புருஷோத்தமரானவர் அந்த முனிவர்களையெல்லாம் விட்டுவிட்டு ஏதோ ஒருதிக்கில் சென்றுவிட்டார். பிறகு, உலகங்களுக்குத் தந்தைகளும் உலகங்களுடைய எல்லாக்காரியங்களையும் விசாரிக்கிறவர்களுமான அவர்கள் தர்மத்திற்குக் காரணமும் ஸனாதனமுமான அந்தசாஸ்திரத்தைப் பிரவிருத்திக்கச்செய்தனர். முந்தினதான (அந்த) க்ருதயுகத்தில் அங்கிரவஸின் புத்திரரான பிருஹஸ்பதி உண்டானவுடன் எல்லா உலகங்களையும் தரிப்பவர்களும் எல்லாத்தர்மங்களையும் நடக்கும்படி செய்பவர்களுமான அவர்கள் அவரிடம் அங்கங்களோடும் உபநிஷத்துக்களோடும் கூடின சாஸ்திரத்தை ஸ்தாபனம்செய்துவிட்டுத் தவத்தில் உறுதியுடன் இஷ்டமான தேசத்திற்குச் சென்றார்கள்.

---

[1]மூன்றூற்றுநாற்பத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(உபரிசாவஸு யாகஞ்செய்ததும் ஏகதர்ஷதலியோர் நாராயணரூடைய மகிமையைப் ப்ருஹஸ்பதிக்குச் சொல்லியதும்.)

பிறகு, சென்றதான் மஹாகல்பத்தில் அங்கிரஸுக்குப்புத்திரருண்டாகித் தேவர்களுக்குப் புரோஹிதரானபொழுது தேவர்கள் ஸுகத்தையடைந்தார்கள். பிருஹத், பிரம்ம, மஹத்என்கிற சொற்கள் ஒரே அர்த்தத்தையுடையவைகள். ஓ! அரசனே! குணங்களாலே இந்தப் பெயர்களையுடையவரும் வித்வானுமாயிருப்பவர் பிருகஸ்பதி. அவருக்குச் சிறந்தவனுன உபரிசரவஸுவென்கிற அரசன் சிஷ்யனுயிருந்தான்.

1 இதுமுதல் நாராயணீயம் என்பது.

அவன் அப்பொழுது சித்ரசிகண்டிகளிடமிருந்து உண்டான சாஸ்திரத்தை நன்றாக அத்தியயனம் செய்தான். அந்தவஸு முதலில் தெய்வ கர்மத்தால் பூஜித்துக்கொண்டு இந்திரன் ஸ்வர்க்கத்தைக்காப்பது போலப் பூமியைப் பரிபாலனம் செய்தான். மஹாத்மாவான அவன் அப்ரமேயமென்கிற பெரிய யாகத்தைச் செய்யத்தொடங்கினான். அந்த யாகத்தில் உபாத்தியாயரான பிருஹஸ்பதியானவர் ஹோதாவானார். அந்தயாகத்தில் ஏகதர் த்விதர் த்ரிதரென்ற பிரம்மாவின்புத்திரர்களான மூன்றுமஹரிஷிகளும் ஸபையோர்களானார்கள். தனுஷர், ரைப்யர், அர்வாவஸு, பராவஸு, மேதாதிதி, தாண்டியர், மஹர்பாக்கியவானஸாந்திமுனிவர், வேதசிரஸ், ஸாலிஹோத்ரிருக்குப் பிதாவாகக் கருதப்பட்டவரும் முனிஸ்ரேஷ்டருமான கபிலர், முதல்வரான கடர், வைசம்பாயனருக்கு மூத்தவரான தைத்திரி, கண்வர், தேவஹோத்ரர் ஆகிய இந்தப் [1]பதினறுவரும் ஸபையோர்களாகச் சொல்லப்பட்டார்கள். ஓ! அரசனே! பெரிதான அந்த யாகத்தில் எல்லாஸாமக்ரிகளும் நன்றாக சேர்ந்திருந்தன. அதில் பசுவதமானது ஏற்படவில்லை. இவ்விதமிருந்த அந்த அரசன், ஹிம்ஸையில்லாதவனும் சுசியும் பெருந்தன்மையுள்ளவனும் வேண்டுதலில்லாதவனும் (நல்ல) கர்மங்களால் துதிக்கப்பட்டவனுமானன். அதில வனப்பிரதேசத்திலுண்டான பதார்த்தங்கள் ஹவிர்ப்பாகங்களாக அமைக்கப்பட்டன. அப்பொழுது, தேவதேவரும் புராதனருமான பகவான் அவனிடம் பிரீதியடைந்து பிரத்யக்ஷமாக அவனுக்குத் தரிசனம் அளித்தனர். அவர், மற்ற ஒருவராலும் பார்க்கமுடியாதவராய்த் தாமாகவே [2]புரோடாசமான பாகத்தை ஆக்ராணம்செய்து கிரகித்தார். தேவரான ஹரியானவர் ஒருவராலும் பார்க்கப்படாமல் பாகத்தைக் கிரகித்தார். அதனால், பிருஹஸ்பதியானவர் கோபத்தையடைந்தவரும் வேகமுடையவருமாகி ஸ்ருக்கென்கிற யாகபாத்ரத்தைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்து ஸ்ருக்குக் கீழேவிழுந்தவுடன் ரோஷத்தால் கண்ணீரைச் சொரிந்தார். உபரிசரனை நோக்கி, 'அரசனே! என்னால் எடுக்கப்பட்ட இந்தப்பாகமானது, தேவரால் எனக்குப்பிரத்யக்ஷமாகி நேரில் கிரஹிக்கத்தக்கது. ஸந்தேஹமில்லை. இந்தயாகத்தில் என்னால் தெரிவிக்கப்பட்ட யஜ்ஞபாகங்களை தேவர்களாலே பிரத்யக்ஷமாகவே கிரகிக்கப்பட்டனவல்லவா? எதற்காக இந்த யாகத்தில ஹரியானவர் என் கண்ணுக்குத் தோன்றவில்லை' என்றும் சொன்னர். அப்பொழுது, மகானை

1 முன்னுள்ள மூவரும் சேர்ந்த பதினறுவர்.
2 மாலினால் செய்யபபட்ட ஹவிஸ்.

வஸுவென்கிறஅந்தஅரசனும் ஸபையோரனைவரும் மிகவும் கோபம் கொண்டு அந்தமுனிவரைச சமாதானம் செய்தார்கள். வஸுராஜன், 'இப்பொழுது இந்தயாகத்தில் உம்மால் புரோடாசத்தினுடைய எவ் வளவுபாகமானது ஹோமஞ்செய்யப்பட்டதோ 'அவ்வளவும் என்னை திரில் தேவதேவரானபகவான்கிரகித்துக்கொண்டார்; ஸந்தேகமில்லை' என்று இவ்விதம்சொன்னபொழுது, குருவானவர் (திருப்பவும்) கோபத்துடன், 'அரசனே! இந்தயாகத்தில நான் இனி யஜிக்கமாட் டேன். உன்னால் அவமானம்செய்யப்பட்டேன். உன்னால் பசுவானது தடுக்கப்பட்டது. மனிவினால்உண்டாகும்பசுவானது செய்யப்பட்டது. நீ எந்தரனும் தேவரைப் பார்க்கிறுயானால நான் ஏன் பாராமலிருப் பேன்?' என்றுசொன்னர். வஸுவானவன், 'பசு ஹிம்ஸையானது யஜுர்வேதமுதலானமந்திரத்தால் தடுக்கப்பட்டது. ஹிம்ஸையை நான் தடுக்கலில்லை. [1]ஏகாந்திகனுகைபால நான் ஹரியையப் பார்க்கவே போகிறேன். ஆகையால், குருவானநீர் என்னைக் கோபிக்கலாகாது' என்று சொன்னன். (உடனே) பிருஹஸ்பதியானவர் கோபத்துடன் இவ்விதம்சொல்லுகின்றவஸுவையும் ரித்விக்குக்களையும் தடுத்து, 'நம க்கு ஏன் கர்மா?' என்றுசொன்னர். அப்பொழுது, ஏகதர், த்விதர், த்ரிதர் என்கிறமஹாமுனிவர்கள் பரபரப்பிலலாமல் அவரைநோக்கிச் சொல்லலானார்கள். 'புத்திர! நீ கோபத்தை அடையலாகாது. நீ நாங் கள்சொல்லும்வார்த்தையைக் கேள். நீ இப்பொழுது ரோஷத்தைச் செய்வது கிருதயுகத்திறகுரியதாமமில்லை எவருக்கு இந்தப்பாகமானது னடுக்கப்பட்டதோ அந்தத்தேவர் ரோஷத்திற்குவிஷயமில்லாதவர். ஓ! பிருஹஸ்பதியே! அவர் உன்னாலும் எங்களாலும் பார்ப்பதற்குமுடி யாதவர். எவனுக்கு அவர் அருள்செய்கிறாரோ அவன் அவரைப்பார்ப் பதற்குத் தக்கவன். நாங்களோ பிரம்மாவின்மானஸபுத்திரர்களாகச் சொல்லப்பட்டவர்கள். நாங்கள் ஒருஸமயம் மோக்ஷத்திற்காக உத் தரதிக்கையடைந்தோம்; ஒருகாலால்நிற்கிறவர்களும் ஸமாதியிலிள்ளவர் களுமாகி நாலாயிரம்வருஷங்கள் உத்தமமானதவத்தைசெய்து மூட் டைபோலானோம். 'வரிக்கத்தக்கவரும் வரங்களையளிப்பவரும் தேவர் களுக்குத்தேவரும் ஸனதனரும் தேவருமானநாராயணரை நாம் எப் படி பார்ப்போம்?' என்று மிகவும்கடுமையானதவத்தை நாங்கள்செய்த இடம் மஹாமேருவுக்குவடக்கே பாற்கடலின்கரையை அடுத்திருக்கி றது. ஓ! விபுவே! பிறகு, விரதத்திலுடைய அவபிருதத்தில் ஸ்நே ஹத்துடன்கூடியதும் கம்பீரமுமான வாக்கினலுண்டானதும் மிகவும்

1 பக்தியில்லியமமுள்ளவன்

ஸந்தோஷத்தைச்செய்கிறதுமான அசரீரிவாக்கானது, 'ஓ! வேதியர்களே! நீங்கள், தெளிந்தமனத்துடன் தவத்தை நன்றுகச்செய்தீர்கள். ஓ! பக்தர்களே! நீங்கள் பார்க்கவிரும்புபமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். அந்தப்பிரபுவை எவ்விதம் பார்ப்பீர்கள்? க்ஷீராற்கடலின்வடபாகத்தில் பெரியகாந்தியுள்ள ஸ்வேதத்வீபமானது இருக்கிறது. அங்குள்ளமனிதர்கள் சந்திரனுக்குநிகரானகாந்தியுள்ளவர்களும், நாராயணரைப்பரமாகக்கொண்டவர்களுமாயிருக்கின்றனர். அந்தப்பக்தர்கள் புருஷோத்தமரை ஏகாந்தபாவனையுடன் அடைந்தவர்கள். அவர்கள் ஆயிரம் கிரணங்களுள்ளவரும் ஸனாதனருமானதேவரிடம் பிரவேசிக்கிறார்கள். ஸ்வேதத்வீபத்தில் வஸிக்கின்ற அந்தப்புருஷர்கள் [1]இந்திரியமில்லாதவர்களும் ஆஹாரமில்லாதவர்களும் சலனமில்லாதவர்களும் நல்லகந்தமுடையவர்களும் ஏகாந்திகளுமாயிருக்கின்றார்கள். ஓ! முனிவர்களே!, அங்கே செல்லுங்கள் அங்கே என்னுடையஆக்ஞாவானது பிரகாசிக்கிறது' என்றுசொல்லிற்று. பிறகு, நாங்களெல்லோரும் அசரீரியான அந்தவார்த்தையைக்கேட்டுச சொல்லப்பட்ட மார்க்கத்தினுலே அந்தத்தேசத்தை அடைந்தோம். அவரிடம் சித்தமுடையவர்களும் அவரைப்பார்க்க விருப்பமுள்ளவர்களுமாகப் போன நாங்களெல்லோரும் ஸ்வேதமென்கிற பெரியத்வீபத்தை அடைந்து உடனேஅதனுடையஒளியினுல் மோகத்தையடையும்படி செய்யப்பட்டோம். அதனுல், அப்பொழுது எங்களுடையநேத்திரங்களின்விஷயமானது கெடுக்கப்பட்டதாயிற்று. அந்தத்வீபத்தினுளெளியினுல் கெடுக்கப்பட்டதிருஷ்டியையுடையநாங்கள் புருஷரான (பகவானைப்) பார்க்கவில்லை. பிறகு, தவம்செய்யாதவனுல் சீக்கிரமாகப் பார்க்கமுடியாதென்கிற விசேஷஞானமானது தெய்வயோகத்தால் எங்களுக்கு உண்டாயிற்று. பிறகு, நாங்கள நூறுவருஷம் அந்நஸமபத்திற்குரிய பெரிய தவத்தைச்செய்து விரதத்தின்முடிவில் வெளுப்புவர்ணமுடையவர்களும் சந்திரனுக்குநிகராயிருப்பவர்களும் ஸ்ரீலாலக்ஷணங்களும்பொருந்தியவர்களும் எப்பொழுதும்அஞ்சலி செய்பவர்களும் ஜபத்தைஜபிப்பவர்களும் வடக்கேயும்கிழக்கையும் நோக்குபவர்களும் சுபர்களுமானமனிதர்களைப் பார்த்தோம். அந்த மகாத்மாக்களாலே மானஸமென்கிற அந்தஜபமானது ஜபிக்கப்படுகிறது. அதனுல், அவர்கள் ஒருமுகமானமனத்தையுடையவர்களாயிருப்பதால் ஹரியானவர் பிரீதியடைந்தவராகிறார். ஓ! முனிசிரேஷ்

---

1 'அநிந்த்ரியா:' என்பது மூலம்; "ஸ்தூலதேகஸம்பந்தமில்லாதவர்கள்" என்பது பழையவுரை.

டனே ! யுகாந்தகாலத்துஸூர்யனுடைய ஒளிபோல ஒவ்வொருமனித னுக்கும் காந்தியானது உண்டாயிற்று. அந்தத்வீபமானது தேஜஸ்ஸு களுக்கிருப்பிடமென்று நாங்கள் நிஜித்தோம். அவ்விடத்தில் ஒரு வனும் அதிகவிலேல. எல்லோரும் ஸமமான தேஜஸ்ஸுடையவர்கள். ஓ! பிருஹஸ்பதியே! மற்றபடியும் ஒரேகாலத்திலுதித்த ஆயிரம்ஸூர் யர்களுடைய காந்தியைச் சீக்கிரமாகப் பார்த்தோம். உடனே, அந்தமனிதர்கள் சேர்ந்தவர்களும் அஞ்சலிபந்தமுடையவர்களும் ஸந்தோஷமுள்ளவர்களும் நமஸ்காரமென்கிற சொல்லுகிறவர்களு மாகி விரைவாக ஓடினார்கள். பிறகு, அவர்கள் பேசுகிறதினுல் உண் டான ஒலியைக் கேட்டோம். அந்தத்தேவருக்கு அந்தப்புருஷர் களாலே பூஜைக்குரியபொருள் கொண்டுபோகப்படுகிறது. நாங் களோ அவருடைய தேஜஸினுலே விரைவாகச் சித்தங்கலங்கப்பட்ட வர்களும் நேத்திரமுதலான இந்திரியங்களின் பலம்குறைந்தவர் களுமாகி ஒன்றையும் பார்க்கவில்லே சிக்ஷையோடுகூடின அக்ஷ ரங்களையுடையதும் ஆகாயமுழுமையும் நிரப்பியதும் உன்னதமாகச் சொல்லப்பட்டதும் விஸ்தாரமுமான ஒருசப்தத்தை நாங்கள் கேட் டோம். 'ஓ! செந்தாமரைக்கண்ணு! உனக்கு ஜயம். உலகங்களேப படைத்தவனே! உனக்கு நமஸ்காரம் இந்திரியங்களுக்கு ஈசனே! ஓ! மஹாபுருஷ! எல்லாருக்கும்முன்னுண்டானவனே! உனக்கு நமஸ் காரம்' என்று சிக்ஷையுடன்கூடின அக்ஷரங்களேயுடைய சப்தமானது எங்களால் கேட்கப்பட்டது. இந்தஸமயத்தில் கந்தங்களேயெல்லாம் வஹிப்பதும் சுசியுமான வாயுவானது திவ்யமானபுஷ்பங்களேயும் அப் படியே கர்மாக்களுக்குரிய ஔஷதிகளேயும் கொண்டுவந்தது. [1]ஐந்து காலங்களேயுமறிந்தவர்களும் ஏகாந்திகளும் பரமபக்தியுள்ளவர்களு மான அந்தமனுஷ்யர்களால் அப்பொழுது ஹரியானவர் மனத்தினு லும் வாக்கினுலும் செய்கையினுலும் பூஜிக்கப்பட்டார். அவர்கள் வார்த்தைசொல்லியபடியே அவ்விடத்தில் பகவான் வந்தாரென்பது நிச்சயம். நாங்கள் அவருடையமாயையினுல் மோகத்தையடைந்து அவரைப் பார்க்கவில்லே. ஓ! ஆங்கிரஸர்களில் சிறந்தவனே! வாயுவும் நின்றுபூஜையும் செய்யப்பட்டபிறகு, நாங்கள் கவலையால் மனக்கலக்க மடைந்தோம். சித்தமான ஜன்மத்தையுடைய அந்த அநேகமாயிரம் மனிதர்களில் ஒருவரும் எங்களேக் கண்ணுலாவது மனத்தினுலாவது மதிக்கவில்லே ஸ்வஸ்தர்களும் ஒரேபாவனேயை அடைந்தவர்களும் பிரம்மபாவனேயை அனுஷ்டிக்கிறவர்களுமான அந்தமுனிக்கூட்டத்

1 உஷக்காலம், காலஸந்தி, உச்சிக்காலம், ஸாயங்காலம், அர்த்தயாமம்.

தார்களும் எங்களை நிணக்கவில்லை. பிறரு, தவத்தால் மிகவும் சிரமத்தை அடைந்தவர்களுநம் மிகவும் இளைத்தவர்களுமான எங்களைநோக்கி அவ் விடத்தில் ஆகாயத்திலிருக்கிறதும் சரீரமில்லாததுமான ஒருபூதமா னது சொல்லத்தொடங்கிற்று. 'வெளுத்தவர்களும் எல்லா இந்திரியங் களுமில்லாதவர்களுமான புருஷர்களே நீங்கள் பார்த்தீர்கள். நீங்கள் பார்த்த இந்தப் பிராம்மணஸ்ரேஷ்டர்கள் தேவேசனை பகவானைப் பார்த்திருக்கிறார்கள். ஓ! முனிவர்களே! 'எல்லோரும் இவ்விடம் விட்டு விரைவில் வந்தபடி செல்லுங்கள். பக்தனுகாதவனுலே அந்தத் தேவர் எவ்விதத்தாலும் பார்க்கமுடியாதவர். 'பிரபைகளில்மண்ட லத்தால் பார்க்கமுடியாதவரான' அந்தப்பகவான் நெடுங்காலம் ஏகாந்தி யாயிருப்பவர்களால் இப்படிப்பட்டபடி பார்க்கக்கூடியவராவார். ஓ! பிராம் மணஸ்ரேஷ்டர்களே! உங்களால் பெரியகாரியமானது செய்யத்தக்க தாயிருக்கிறது. வேதியர்களே! இதறகுப்பிறகு, கிருதயுகம்சென்று மாறுதலையும் அடைந்து வைவஸ்வதமன்வந்தரத்தில் மீண்டும் திரேதா யுகம்வரும்பொழுது தேவர்களுடைய காரியவிர்த்திக்காக நீங்கள் ஸகா யர்களாவீர்கள்' என்றது பிறகு, ஆசசரியமும் அமிருதத்திற்கு நிகரானதுமான அந்த வார்த்தையைக்கேட்டு அவருடையபிரஸாதத் தால் சீக்ரத்தில் இஷ்டமானதேசத்தை அடைந்தோம். இவ்விதம் நல்லதவத்தைச் செய்தும் ஹவ்யகவ்யங்களைச் செய்தும் நாங்கள் அந் தத்தேவரைப் பார்க்கவில்லை. நீ எபபடி பார்ப்பதற்குத் தக்கவனு கிறாய்? நாராயணரானவர் ஹவ்யகவ்யங்களைப்புஜிப்பதும் எல்லாவற் றையும் ஸிருஷ்டிப்பதுமான மஹத்தான பூதம்; ஆகியந்தமற்றவரும் அவ்யக்தரும் தேவர்களாலும் அஸுரர்களாலும் ஆராதிக்கப்பட்ட வருமாயிருக்கிறார்' என்றனர். இவ்விதம் ஏகதருடைய வார்த்தை யாலும் த்விதத்ரிதர்களுடைய ஸம்மதத்தாலும் ஸபையோர்களாலும் ஸாதானம்செய்யப்பட்டுக் கம்பீரமான புத்தியுள்ள பிருகஸ்பதியான வர் பிறகு யஜ்ஞத்தை நிறைவேற்றினார்; தெய்ஷ்டியையும் நன்முகப் பூஜித்தார். வஸுவென்கிற அரசனும் யாகத்தைநிறைவேற்றிப் பிர ஜையைப் பரிபாலித்துவந்தான். பிறகு, பிராம்மணர்களுடைய சாபத் தால் ஆகாயத்திலிருந்து நழுவிப் பூமியில் விழுந்தான். ஓ! ராஜ ஸ்ரேஷ்டனே! ஸத்யத்தையும் தர்மத்தையும் பரகதியாகவுடையவனும் எப்பொழுதும் தர்மத்தில் அன்புள்ளவனுமான அந்த அரசன் பூமியி னிடத்தையடைந்து நாராயணரைப் பரமாகக்கொண்டு நாராயணமந் திரத்தையே ஜபித்து அவருடைய அருளாலேயே திரும்பவும் கிளம் பிப் பூப்பிரதேசத்திலிருந்தும் பிரம்மாவுக்கு அடுத்தஸ்தானத்தை

அடைந்து மேலானகதியை அடைந்தானென்பது நிசயம்'' என்று சொன்னர்.

மூன்றூற்றுஎற்பத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

---:o:---

(உபரிசாவஸு சாபமும் விமோசனமும் பெற்றது.)

யுதிஷ்டிரர், 'மகாஜனவஸு'வென்கிறஅரசன் பகவானிடத்தில் பக்தியுள்ளவனுயிருந்தபொழுது எதற்காக நிழலிப் பூமியின்புதரில் பிரவேசித்தான்?'' என்றுகேட்க, பீஷ்மர் சொல்லத்தொடங்கினர்

"ஓ! பாரத! இந்தவிஷயத்திலும் ரிஷிகளுக்கும் தேவர் களுக்குமுண்டான ஸம்வாதரூபமான இந்தப்பழம்பசரித்திரத் தைச சொல்லுகிறார்கள். இது கர்மாவுக்குரிய பூமியாகும் ஸ்வர்க் கமானது போகத்தின்பொருட்டு உண்டாக்கப்பட்டது. ஆகையால், இந்திரனவன் பூமியைஅடைந்து யாகத்திற்குக் நிகைசெய்து கொண்டான். ஸவநீயபசுவினுடையகாலானது வந்தபொழுது, பிரு ஹஸ்பதியானவர், 'இப்பொழுது பசுவுக்காக மாவைக் கொண்டுவர லாம்' என்றுசொன்னர். அதைக்கேட்டுத்தேவர்கொல்லாரும் மாம் ஸத்திலாசையுள்ளவர்களாகி ப்ராம்மணஸ்ரேஷ்டரான பிருஹஸ்ப தியையும் மற்ற ப்ராம்மணஸ்ரேஷ்டர்களையும் நோக்கி, 'அஜத்தால் யாகம் செய்யவேண்டும் அந்த அஜமும் வெள்ளாடென்று அறிய வேண்டும். மற்றவை பசுவல்லவென்பது முறை' என்று இந்தவார்த் தையைத் தனித்தனியே சொன்னர்கள். ரிஷிகள், 'யாகங்களில் தான் யங்களால் பூஜிக்கவேண்டுமென்று வேதவிதியிருக்கிறது. அஜமென்று பெயருடையவை தான்யங்களே. நீங்கள் வெள்ளாட்டைக்கொல்லு தல் தகுதியன்று. ஓ! தேவர்களே! எதில் பசுவானது வதைக்கப்படு கிறதோ அது ஸத்துக்களுடையதர்மமாகாது. இது சிறந்ததான கிருத யுகம். பசுவானது எப்படி வதைக்கப்படலாம்?' என்றுசொன்னர் கள். தேவர்களோடு அந்தமுனிவர்கள்விவாதம்பண்ணிக்கொண்டிருக் கையில் அந்தவழியில்வந்தவனும் அரசர்களிலசிறந்தவனும் ஆகாயத் தில்சஞ்சரிப்பவனும் ஸ்ரீபொருந்தியவனும் பலமுடைய ஆயிரம்வாக னங்களுள்ளவனுமான வஸுவானவன் அந்தஇடத்திற்கு வந்தான். வேகமாகவருகிறவனும் ஆகாயத்தையடைந்தவனுமான அந்தவஸு

---

1 யாகத்துக்குரியது.

வைப்பார்த்து, அந்தப்பிராம்மணர்கள் தேவர்களைநோக்கி, 'யாக சீலனும் தானங்களுக்குப்பதியும் 'சிறந்தவனும் எல்லாப்பிரா'ணி களுடையநன்மையிலும்பிரியமுள்ளவனுமான இவன் 'ஸந்தேஹத் தை நிவர்த்திசெய்வான் மநுஷ்யனை இந்தவஸு-வானவன் ஒருவித த்திலும் 'தவறுதலானவார்த்தையைச்சொல்லமாட்டான்' என்று சொன்னார்கள். இவ்விதம் அந்தத்தேவர்களும் முனிவர்களும் ஸங் கேதத்தைசெய்துகொண்டு, எல்லாரும்சேர்ந்து வஸு-வென்கிற அரசனுடையஸபீபம்வந்து, 'ஓ! அரசனே! அஜத்தினால், அல்லது தான்யங்களாலா எதனால யாகம்செய்யவேண்டும்? எங்களுடைய இந்தஸங்தேஹத்தை நிவிருத்திசெய் 'நாங்கள் உன்னைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கிறோம்' என்றுகேட்டார்கள். அந்தவஸு அவர் களைநோக்கி அஞ்சலிசெய்துகொண்டு, 'ஓ! பிராம்மணச்ரேஷ்டர்களே! யாருக்கு எந்தபதார்த்தம் ஸம்மதம்? ஸதத்தியத்தைசொல்லுங்கள்' என்றுகேட்டான். ரிஷிகள், 'ஓ! அரசனே! தான்யங்களால்யாகம் செய்யவேண்டுமென்பதே எங்களுடையபதார்த்தம். தேவர்களுக்கோ பசுவினால்யாகம்செய்கிறபதார்த்தமே ஸம்மதம் ஓ! அரசனே! எங் களுக்குச் சொல' என்றுசொன்னார்கள் அப்பொழுது, வஸு, தேவர்களுடைய அபிப்பிராயத்தையறிந்து அவர்களுடையபதார்த்தை ப்பற்றி, 'சாகமென்கிற அஜத்தினாலே யாகம்செய்யவேண்டும்' என் கிறவார்த்தையைச் சொன்னான். அதனால், ஸூர்யனுக்குநிகரான காந் தியுள்ள அந்தமுனிவர்களெல்லாரும் கோபத்தையடைந்து விமான த்திலிருபவனும் தேவபதார்த்தின்விஷயத்தைச் சொல்லுகிறவனு மான வஸு-வைநோக்கி, 'தேவர்களுடையபதார்த்தை நீ கொண்ட காரணத்தால் ஆகாயத்திலிருந்து விழக்கடவாய் அரசனே! இதுமுதல் உன்னுடைய ஆகாயகமனமானது கெட்டுப்போகட்டும். அரசனே! வேதங்களுக்கும் [1]ஸ்மிருதிகளுக்கும் மாறுக நீசொல்லியிருந்தால் எங்களுடையசாபமாகிற அடியால் நீ பூமியைப்பிளந்துகொண்டு விழுவாய். நாங்கள் விரோதமானவார்த்தையைச் சொல்லியிருந்தால் அவ்விடத்தில் விழுகிறோம்' என்றுசொன்னார்கள் ஓ! அரசனே! அப்பொழுது, உடனே, அந்தசாபத்தினால் அந்தக்ஷணத்திலேயே உபரிசரனென்கிறஅரசன் விரைவில் பூமியின்துவாரத்தையடைந்து கீழேயிருப்பவனானன். அவ்விதமிருந்தும் அப்பொழுது நாராயண ருடைய ஆஜ்ஞையினால் நிஷ்வ விலகாமலிருந்தது. தேவர்களெல் லோரும் சேர்ந்துகொண்டு வஸு-வினுடையசாபமோசனத்தைக்

1 வேதத்திலுள்ள சுருக்கமான விதிவாக்கியங்கள்.

குறித்து ஜாக்ரதையோடு ஆலோசணைசெய்தார்கள். அது அரச னுடையபுண்ணியமன்றே ? 'மஹாத்மாவான அந்த அரசன் நம்முடைய நிமித்தத்தில் சாபத்தையடைந்தான் ஓ! தேவர்களே! நாம் சேர்ந்து இவனுக்குப் பிரதியுபகாரம் செய்யவேண்டும்' என்று ஈச்வரர் களான அந்தத்தேவர்களீர் புத்தியினல் ஆலோசித்து விரைவில்நிச்ச யித்தையடைந்து ஸந்தோஷமுள்ள மனத்துடன் அப்பொழுது அரச னை உபரிசரணென்றார்கி, 'ஓ! அரசர்களில் உத்தமனே! நீ பிராம் மணர்களுக்கு அனுகூலரான தேவருக்குப்பக்தன். அந்தஹரியான வர் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் குருவாயிருப்பவர். அவர் உன்னுடைய் விஷயத்தில மனத்தில் மிக்கஸந்தோஷதையடைந்து சாபமோசனத்தைச செய்வார். மஹாத்மாக்களான பிராம்மணர்களுக் கும் மரியாதை செய்யவேண்டும் அவர்களுடைய தவமானது அவ ச்யம் பலிக்கவேசெய்யும் நீ சீக்கிரமாக ஆகாயத்திலிருந்தும் பூப்பிரதேசத்தில் விழுந்ததனல், நன்மையையிரும்புகிறவன் 'வேதத் திற்கும் ஸ்த்திரங்களுக்கும் விரோதமாகச சொல்லக்கூடாது எங்க ளுடையபக்ஷத்தின் நிமித்தத்தினல் இப்படிபபட்ட துன்பத்தை அடைந்தாய். ஓ! ராஜஸ்ரேஷ்டனே! நாங்கள உனக்கு ஒருவரத்தைக் கொடுக்கிறோம். குற்றமில்லாதவனே! எவ்வளவு காலம் நீ சாபதோ ஷத்தினல் பூமியின் துவாரத்தை அடைந்திருப்பாயோ அவ்வளவு காலம் நீ யாகங்களில் மனம்பற்றியவர்களான வேதியர்களால நன்றாக ஆகுதிசெய்யப்பட்ட வஸோர்த்தாரை யென்கிற ஆஜ்யதாரையை எங் களுடைய அனுக்கிரகத்தால அடைவாய். எங்களுடைய அனுக்கிரகத் தால் உன்னை ஸ்வர்மமானது அடையாமட்டாது ஓ! ராஜஸ்ரேஷ்டனே! பூமியின் துவாரத்தில் வஸோர்த்தாரையை அருந்துவதனலும் விருத்தி செய்யப்பட்ட பலத்தினலும் பசியும் தாகமும் உண்டாகா. எங்களு டையவரதத்தினல் அந்தப் பகவான் பிரீதியடைந்து பிரம்மலோகத்தை அடையும்படி செய்வார்' என்றனர். இவ்விதம் அந்தத்தேவர்களெல் லாரும் அரசனுக்குவரத்தையளித்து அப்பொழுது முனிவர்களுடைய வசனத்தினல் மோவினுலேயே யாகத்தை நிறைவேற்றிவிட்டு இருப்பி டம் சேர்ந்தார்கள் தவத்தையே தனமாகவுடைய முனிவர்களனைவரும் தக்ஷிணையைப்பெற்றுக்கொண்டு தாங்கள் ஆஸ்ரமங்களை அடைந்தார் கள். இந்திரனும் வஸுவையே நினைத்துக்கொண்டு அமராவதியை அடைந்தான். வஸுவும் அப்பொழுது பெரியபொய்சொன்னதன்பய னுகப் புதரை அடைந்தான் ஓ! பாரத! பிறகு, வஸுவானவன் விஷ் வக்ஸேநருக்குப் பூஜையைச் செய்தான் ; எப்பொழுதும் நாராயணரு

டையவாக்கிலிருந்து வெளியான மந்திரத்தையும் ஜபித்தான். ஓ! பகை வரைச்சிக்ஷிப்பவனே! அப்பொழுதும், பூமியின் துவாரத்தை அடைந்திருந்தும் ஐந்துகாலங்களிலும் ஐந்துயஜ்ஞங்களால் தேவர்களுக்குப் பதியானி ஹரியைப் பூஜித்தான். பிறகு, பகவானும் பாவங்களைப்போக்குபவருமான நாராயணர் அநந்யபக்தனும் தம்மிடமே பரகதியாகவுடையவனும் மீனத்தை ஜயித்தவனுமான அவனுடைய பக்தியினல்ஸந்தோஷத்தை அடைந்தார். அப்பொழுது, வரத்தையளிப்பவரும் பகவானுமானவிஷ்ணுவானவர் தமதருகிலிருப்பவரும் மிக்கவேகமுள்ளவரும் பக்ஷிகளுட்சிறந்தவருமான வைநதேயரை நோக்கித் தம்விருப்பத்தைச் சொல்லலானார். 'ஓ! மிக்கபாக்யமுள்ளபக்ஷிராஜனே! என்வார்த்தையால் பார்க்கலாம். ஸம்ராட்டும் தர்மாத்மாவும் கடுமைபானவிரதமுள்ளவனுமான வஸுவென்னும் அரசன் பிராம்மணர்களுடைய பெரியகோபத்தாலே பூமியினுள் பிரவேசித்துவிட்டான் அந்த ப்ராம்மணஸ்ரேஷ்டர்களும் கௌரவிக்கப்பட்டார்கள். பக்ஷிராஜனே! நீ போ. ஓ! கருடனே! இப்பொழுது, எனதாஜ்ஞையினலே, பூமியின்துவாரில் மறைந்திருப்பவனும் கீழேஸஞ்சரிப்பவனுமான ராஜஸ்ரேஷ்டனை ஆகாயத்தில் ஸஞ்சரிப்பவனைச் செய். தாமவியாதே' என்று சொன்னர். பிறகு, வைனதேயர் சிறகுகளேஉதறி வாயுவுக்கு நிகரான வேகததுடன் வஸுவானவன் மௌனமாகவவஹிக்கிற அந்தப் பூமியினுடைய துவாரத்தில் பிரவேசித்தார் அவர் விரைவில் அவனை அங்கிருந்து உயரத்தூக்கி வேகமாக ஆகாயத்தில் கிளம்பி அங்கே அவனை விட்டுவிட்டார். அந்தமுகூர்த்தத்தில் அரசன் மீண்டும் உயிரி சரனனன். அரசரிற்சிறந்த அவன் சரீரத்தோடு ப்ரம்மலோகததையும் அடைந்தான். குந்திபுத்ரனே! இவ்விதம் மகாத்மாவான அவனும் தேவர்களின் கட்டளைப்படி பொய்சொன்னதற்காக ப்ராம்மணசாபத்தால் அதோகதியை அடைந்தான். அவன் எல்லாச்சரீரங்களிலும் வஹிப்பவரும் ஈஸ்வரருமான ஹரியைமாத்திரம் உபாஸித்துவந்தான்; அதனல், விரைவில் சாபத்தினின்றும் விடுபட்டான். பிரம்மலோகத்தையும் அடைந்தான். இதையெல்லாம் உனக்குச் சொன்னேன். அரசனே! மனிதர்களுண்டானதையும் நாரதமுனிவர் ஸ்வேதத்வீபத்தையடைந்ததையும் உனக்கு முழுதும் சொல்லுவேன். ஓரமனத்துடன் கேட்கக்கடவாய்.

முந்நூற்றைம்பத்தாருவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

—:o:—

(நாதர் நாராயணரைத் துதித்தது.)

பகவானுரை நாரதமுனிவர் சிறந்ததான ப்ரவேதத்வீபத்தை யடைந்து வெண்ணிறமுள்ளவர்களும் சந்திரன்போன்றகாந்தியுள்ள வர்களுமான அந்தமனிதர்களையே கண்டார்; அவர்களைத் தலையால் வணங்கிப் பூஜித்தார் அவர்களாலும் மனத்தால் பூஜிக்கப்பெற்றுப் பகவானைப்பார்க்கவிரும்பி மந்திரத்தை முக்கியமாக ஜபித்துக்கொண்டு சில ஸ்தோத்ரமங்களையும் அடைந்திருந்தார் அந்தவேதியர் ஒருவழிப் பட்டமனமுடையவரும் மேலதாகப்பட்ட கைகளையுடையவரும் ஸமாதியுள்ளவருமாயிருந்து எல்லாமாயும் நிர்க்குணமாயும் குணஸ் வரூபமாயுமிருக்கிற பகவானைக்குறித்துத் துதிக்கலானார்.

"ஓம். [1]தேவதேவரே! [2]நிஷ்க்ரியரே! நிர்க்குணரே! [3]லோக ஸாக்ஷியே! [4]சேஷதரஜரே! [5]புருஷோத்தமரே! அநந்தரே! புரு ஷரே! [6]மஹாபுருஷரே! [7]புருஷோத்தமரே! [8]க்ரிகுணரே! [9]ப்ரதா நரே! [10]அம்ருதரே! [11]அம்ருதாக்ஷரே! [12]அநந்தாக்ஷரே! [13]வியோ மரே! [14]அம்ருதாத்மாவே! [15]ஸநாதநரே! [16]ஸதஸத்வ்யக்தாவ்யக்

பின்வரும் நாமங்களில் விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் வந்துள்ளவற்றின் அர்த்தவிசேஷங்களை அங்கே கண்டுகொள்க.

1 இந்திரியங்களால் வியாபாடும் ஜீவனுக்கு அந்தர்யாமி.
2 வியாபகமாயிருப்பதால் செய்கையில்லாதவர்.
3 உதாவீனமான ஞானரூபமாதலால் உலகங்களுக்கு ஸாக்ஷி.
4 'ஸ்தூலஸூக்ஷ்மசரீரங்களை அறிகின்ற ஜீவஸ்வரூபர்' எனினுமாம்.
5 சரீரஜீவேஸ்வரர்களைக் காட்டிலும் சிறந்தவர்.
6 ஸ்தூலசரீரஸமஷ்டிகளில் சயனித்திருப்பவர்.
7 அன்னமயன் முதலான புருஷர்களுக்கெல்லாம் உத்தமர்.
8 மூன்று குணங்களுள்ளவர்.
9 மூன்று குணங்களை சேர்ந்த வடிவமானவர்.
10 அம்ருதரூபமாயிருப்பவர்.
11 தேவரீரைனிகிற பெயர்பெற்றவர்.
12 ஆதிசேஷனை அநந்தனென்னும் பெயருள்ளவர்.
13 அவ்யார்த்த ஆகாசரூபர்.
14 அழிவற்றரூபமுள்ளவர்.
15 அநாதியாயிருப்பவர்.
16 கார்யகாரணரூபமாகிக்ரிக்கத்கூடியவரும் கூடாதவருமாயிருப்பவர்.

தரே! [1]ருததாமரே! [2]ஆதிதேவரே! [3]வஸுப்ரதரே! ப்ரஜா பதியே! [5]ஸுப்ரஜாபதியே! [6]விஸ்பதியே! [7]மஹாப்ரஜாபதியே! [8]ஊர்ஜஸ்பதியே! [9]வாசஸ்பதியே! [10]ஜகத்பதியே! [11]மநஸ்பதியே! [12]திவஸ்பதியே! [13]மருத்பதியே! [14]ஸலிலபதியே! [15]ப்ருதிவீபதி யே! [16]திக்பதியே! [17]பூர்விவாஸரே! [18]குஹ்யரே! [19]ப்ரம்மபுரோ ஹிதரே! [20]ப்ரம்மகாயிகரே! [21]ராஜிகரே! [22]மஹாராஜிகரே! [23]சா துர்மஹாராஜிகரே! [24]ஆபாஸுரரே! [25]மஹாபாஸுரரே! [26]ஸப்த மஹாபாகரே! [27]ஸப்தமஹாஸ்வரரே! [28]யாம்யரே! [29]மஹாயாம்யரே!

---

1 விகாரமில்லாத பிரகாசமுள்ளவர்.

2 'நாராயண' என்பது பிழையுமுரை.

3 காமபலனைக் கொடுப்பவர்.

4 தக்ஷன்முதலான ஸ்ருஷ்டிகர்த்தர்களின் வடிவமானவர்.

5 மோக்ஷகுருவான ஸனகாதிஸ்வரூபர்.

6 அரசுமுதலான வ்ருக்ஷரூபர்.

7 நான்முகராயிருப்பவர்.

8 ப்ரம்மாமுதலான ஜீவர்களுக்குப பதியாயிருப்பவர்.

9 தேவகுருவாயிருப்பவர்.

10 உலகங்களுக்குப் பதியான இந்திரா.

11 ஸூர்த்ராத்மாவாயிருப்பவா.

12 ஸூர்யரூபர்.

13 பிராணவாயுரூபர்.

14 வருணரூபர்.

15 ஆசாரமாயிருப்பவர்.

16 திக்பாலராயிருப்பவர்.

17 மஹாப்ரளயத்தில் உலகங்களுக்கு ஆதாரமாயிருப்பவா.

18 வெளியிடக்கூடாதவர்.

19 பரமாமாவுக்கு வேதங்களை உபதேசித்தவர். [ணவைடாயிருப்பவர்.

20 ப்ராம்மண சரீரத்தால் நிறைவேற்றக்கூடிய யாகம் அத்யயனமுதலா

21 ராஜகாரியமான பாலன முதலியவைகளாயிருப்பவர்.

22 மஹாராஜிகமென்னும் தேவக்கூட்டமாயிருப்பவர்.

23 சாதுர்மஹாராஜிகமென்கிற தேவக்கூட்டமாயிருப்பவர்.

24 ஆபாஸ்வரரென்கிற தேவக்கூட்டமாயிருப்பவர.

25 மஹாபாஸ்வரரென்கிற தேவக்கூட்டமாயிருப்பவர்.

26 காயத்ரீமுதலான ஏழு மந்திரங்களால் ஆபபணம் செய்யக்கூடிய பெரிய ஏழுயஜ்ஞபாகங்களையுடையவர்.

27 பெரிய ஏழுஸாமஸ்வரங்களையுடையவர்.

28 யமகணஸ்வரூபர்.

29 சித்திரபதன்முதலானவராயிருப்பவர்.

[1]ஸம்ஜ்ஞாஸ்யம்ஜ்ஞரே! [2]துஷிதரே! [3]மஹாதுஷிதரே! [4]ப்ரமர்த்தரே! [5]பரிகர்மிதரே! [6]அபரிகர்மிதரே! [7]வசவர்த்திந்! [8]அபரிகர்த்திதரே! [9]அபரிகிதரே! [10]வசவர்த்திந்! [11]ஆவசவர்த்திந்! [12]யஜ்ஞரே! [13]மஹாயஜ்ஞரே! [14]அஸம்பாயஜ்ஞரே! [15]யஜ்ஞஸம்பவரே! [16]யஜ்ஞயோநிமே! [17]யஜ்ஞாபாஜரே! [18]யஜ்ஞஹ்ருதயரே! [19]யஜ்ஞஸ்துதரே! [20]யஜ்ஞபாகஹ்ருரே! [21]பஞ்சயஜ்ஞரே! [22]பஞ்சகாலோத்ருபதியே! [23]பாஞ்சராத்ரிகரே! [24]வைருண்டரே! [25]ஆபராஜிதரே! [26]மான

---

1 ஸாஜ்ஞரெனும் பெயருடையவர்

2 துஷிதரென்கிற தேவகணஸ்வரூபர்

3 மஹாதுஷிதரென்கிற தேவக்கூட்டமாயிருப்பவர்

4 மிருத்யுரூபராயுள்ளவர்.

5 மிருத்யுவுக்குஸஹாயமாகஏற்படுத்தப்பட்ட காரியாதிஸ்வரூபர்.

6 காமம்போகமுதலியவற்றிற்குஎதிரான சமம் ஆரோக்யமுதலியனவாயிருப்பவர்.

7 சமமுதலானவற்றின்வசத்திலிருப்பவர்.

8 சமமுதலியவையுள்ளவராயிருப்பதால் நிந்திக்கப்படாதவர்.

9 எல்லாஜாதிகளின்ரூபங்களிலும் அடங்காதவர்.

10 சிகைக்குஉள்பட்டவர்.

11 சிகைக்கின்றவர்.

12 அக்னிஹோத்ரமுதலியனவாயிருப்பவர்.

13 ப்ரம்மயஜ்ஞமுதலியனவாயிருப்பவர்.

14 யஜ்ஞத்திற்குஎதிரானகர்மமாயிருப்பவர்

15 யஜ்ஞத்திலேற்பட்ட ரிதவிக்முதலானவராயிருப்பவர்.

16 யஜ்ஞத்திற்குக்காரணமான வேதஸ்வரூபர்.

17 யஜ்ஞத்தைக்காப்பாற்றுவதிலுடைய அகனிபாயிருப்பவர்

18 யஜ்ஞாகுகத்தின் உபாஸன ஸ்வரூபர்.

19 யஜ்ஞத்தில் ஆஹிக்கப்பட்டவர்.

20 யஜ்ஞத்தில் பாகத்தைக் கிரகிப்பவர்

21 பஞ்சயஜ்ஞஸ்வரூபர்.

22 பூகலிரவு, மாதம், ருது, அயனம், வருஷமென்கிற ஐந்தாலிங்களுக்கும் நிதிஷ்டானம்: காத்து, காரணம், கிரியை, அதிர்ஷ்டமென்கிற ஐந்தார்த்தாக்களுக்கும் பிரியாயுள்ளவர்.

23 பாஞ்சராத்ரமென்கிற ஆகமத்தால் அறியக்கூடியர்

24 மடங்குதலில்லாதவர்; அல்லது, விருண்டையின்புத்ரர்

25 பிறரால் ஜயிக்கப்படாதவர்.

26 மனத்தை உபாதியாகவுடையவர்.

ஹிகரே ! [1]நாவமிகரே ! [2]நாமநாமிகரே ! [3]பரஸ்வாமியே ! [4]ஸுஸ்நாதகரே ! ஹும்ஸரே ! [5]பரமஹம்ஸரே ! [6]மஹாஹம்ஸரே ! [7]பரம ஜ்ஞேயரே ! [8]பரமயாஜ்ஞிகரே ! [9]ஸாங்க்யயோகரே ! [10]ஸாங்க்யமூர்த்தியே ! [11]அம்ருதேசயரே ! [12]ஹிரண்யேசயரே ! [13]வேதேசயரே ! [14]தேவேசயரே [15]குசேசயரே ! [16]பிரம்மேசயரே ! [17]பத்மேசயரே ! [18]விஸ்வேஸ்வரரே ! [19]விஷ்வக்ஸேநரே ! உமக்கு நமஸ்காரம். நீர் [20]ஜகதங்வயர். நீர் [21]ஜகத்ப்ரக்ருதி. உமக்கு அக்நி வாய். [22]வ்ரீ வையின்முகத்திலிருந் தும்உண்டான அக்னியும் ஆஹுதியும் நீர். ஸாரதியென்கிற அக்னியும் நீர். வஷட்காரம் நீர் ஓங்காரம் நீர். தவம் நீர் மன்மும் நீர். பூர்ணமான அங்கங்களையுடைய சந்திரன் நீர். நீர் [23]சஷ்ராஜ்யம். நீர் ஸ ம்ராட்ன். நீர் திக்கஜம். [24]திப்பாதவே ! [25]விதிக்பாதவே ! [26]ஹயசிரஸே ! நீர்

---

1 புதிதாய் அறியக்கூடியவர்.
2 ஒவ்வொருநாமத்தினாலும் அறிவிக்கப்பட்டவர்
3 பரனென்னும் பிரம்மாவுக்கு ஸ்வாமியாயிருப்பவர்.
4 வேதவ்ரதத்தைமுடித்தவர்.
5 மூன்றுதண்டமுடைய யதியாயிருப்பவர்.
6 ஒருதண்டமுள்ள யதியாயிருப்பவர்
7 தண்டமுதலான வையில்லாதமஹாஹம்ஸரென்கிறயதியாயிருப்பவர்.
8 பரமமான ஜ்ஞேயபரம்மஸ்வரூபர்.
9 மஹாயாகம்செய்கின்ற தீக்ஷிதராயிருப்பவர்.
10 ஸாங்கியயோகஸ்வரூபர்.
11 ஸாங்கியமான அதாவது கல்பிதப்பிரபஞ்சநீக்கினஸ்வரூபமுடையவர்.
12 அம்ருதர்களென்கிற தேவாகளிடம் சயனித்திருப்பவர்.
13 ஹிரண்யமென்கிற ஹ்ருதயத்தில் சயனித்திருப்பவர்.
14 வேதத்தில் சயனித்திருப்பவர்.
15 இந்திரியங்களில் சயனித்திருப்பவர்.
16 குசமென்கிறஸமுத்ரஜலத்தில் சயனித்திருப்பவர்.
17 வேதத்தில் சயனித்திருப்பவர்.
18 பிரம்மாண்டமாகிற பத்மத்தில் சயனித்திருப்பவர்
19 எல்லாருக்கும் ஈச்வரராயிருப்பவர்.
20 பக்தரைப்பாதுகாக்க எங்கும செல்லுகின்றமையுள்ளஸேனையுள்ளவர்
21 ஜகத்தில் ஸத்தாரூபமாக ஸம்பந்தித்தவர்.
22 ஜகத்திற்கு உபாதானகாரணம்.
23 யாகத்தில் (பத்தினியின்) நேத்ரத்தால் பார்க்கப்பட்டு அதனால் சுத்தியடைந்த நெய்.
24 திசைகளை பிரகாசிகசெய்கிறவர்.
25 விதிக்குக்களைப் பிரகாசிக்கச்செய்பவர்.
26 ஹயக்ரீவர்.

[1]ப்ரதமத்ரிஸுபர்ணர்; [2]வர்ணதார [3]பஞ்சாக்நியே; [4]த்ரிணசிகேதரே! [5]ஷடங்கநிதாநரே! [6]பிராக்ஜோதிஷரே! [7] ஜ்யேஷ்டஸாமகரே! [8] ஸாமிக்வ்ரதரே! (நீர்) [9]அதர்வசிரஸ். [10]பஞ்சமஹாகல்பரே! [11]பேஙபாசார்யரே! [12]வாலகில்யரே! [13]வைகாநஸரே! [14]அபக்ருயோகரே! [15]அபத்நவ்ரதரே! [16]அபக்நபாஸங்க்யாநரே! [17]யுகாதியே! [18]யுகமத்யரே! [19]யுகநிதநரே! [20]ஆகண்டலரே! [21]ப்ராசீநகர்ப்பரே! [22]கௌசிகரே! [23]புருஷ்டுதரே! [24]புருஹூதரே! [25]விஸ்வகிருத்தே! [26]விஸ்வஜித்தே! [27]விஸ்வரூபரே! [28] அநந்தகதியே! [29]அநந்த

---

1 முன்னதான த்ரிஸுபர்ணமந்த்ரத்தால் சொல்லபபட்ட ஆதித்யரூபர்.

2 ப்ராம்மணர்முதலான ஜாதிகளைத் தரிப்பவர்.

3 கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணம், ஸப்யம், ஆவஸத்யம் என்கிற ஐந்து அக்னிகளாயிருப்பவர்.

4 நாசிகேதமெனகிற அக்னியை மூன்றுதரம சயனமெய்த்தால் த்ரிணசிகேதரென்று பெயருள்ளவர்.

5 ஆறு அங்கங்களுள்ள வேதஸ்வரூபர்.

6 ப்ராக்ஜோதிஷமென்கிற ஸாமரூபர்.

7 ஜ்யேஷ்டமென்கிற ஸாமத்தைக் காணம்செய்பவர்.

8 ஸாமகர்களுடைய வ்ரதத்தைத் தரிப்பவர்.

9 அதர்வசிரஸென்கிற உபநிஷத்தின் ஸ்வரூபர்.

10 ஸௌரம், சாக்தம், காணபத்யம், சைவம், வைஷ்ணவம் என்கிற ஐந்துபெரிய ஆகமங்களால் தெரிவிக்கப்பட்டவர்.

11 நூரையை அருந்துகின்ற முனிவர்களுக்கு ஆசார்யராயிருப்பவர்.

12 வாலகில்யரென்கிற முனிவராயிருப்பவர்.

13 வைகாநஸவ்ரதமுடையவர்

14 கெடுக்கபபடாத யோகமுடையவர்.

15 கெடுக்கப்படாதவ்ரதமுள்ளவர்.

16 கெடுக்கபபடாத விசாரமுடையவர்.

17 யுகத்தின் ஆதிபாயிருப்பவர்.

18 யுகத்தின் மத்தியமாயிருப்பவர்.

19 யுகத்தின் முடிவாயிருபபவர்.

20 இந்திரனுயிருபபவர்.

21 ப்ராசீனகர்பபரென்கிற முனிஸ்வரூபர்.

22 கௌசிகமுனிரூபர்.

23 வெகுவாகத் தூதிக்கப்பட்டீர்.

24 வெகுவாக (யாகத்தில்) கூபபிடபபட்டவர்.

25 எல்லாவற்றையும் செய்தவர்.

26 எல்லாவற்றையும் ஜயித்தவர்.

27 எல்லாரூபமாயுமிருபபவர்.

28 அளவற்ற கதியுடையவர்.

29 அளவற்றசரீரமுடையவர.

* L அநு

போகரே! [1]அநந்தரே! [2]அநாதியே! [3]அமத்யரே! [4]அவ்யக்த மத்யரே! [5]அவ்யக்தநிதரே! [6]வ்ரதாவாஸரே! [7]ஸமுத்தீர்தி வாஸரே! [8]யசோவாஸரே! [9]தபோவாஸரே! [10]தமர்வாஸரே! [11]லக்ஷ்மாவாஸரே! [12]வித்யாவாஸரே! [13]கீர்த்திவாவாஸரே! [14]ஸ்ரீவாஸரே! [15]ஸர்வாவாஸரே! வாஸுதேவரே! [16]ஸர்வச்சந்தரே! [17]ஹரிஹயரே! [18]ஹரிமேதரே! [19]மஹாயஜ்ஞபாகஹரரே! [20]வரப்ரதரே! [21]ஸுகப்ரதரே! [22]தனபரதரே! [23]ஹரிமேதரே! [24]யமரே! [25]நியமரே! [26]மஹாநியமரே! [27]க்ருச்சரரே! [28]அதிக்ருச்சரரே!

---

1 அளவற்றவர்.

2 ஆதியற்றவர்.

3 மதியமற்றவர்.

4 ஸ்பஷ்டமில்லாத மத்தியதையுடையவர்.

5 அவ்யக்தமான மூடிவையுடையவர்.

6 வ்ரதங்களுக்கு இருபபிடமாயுள்ளவர்.

7 ஸமுத்திரத்தை இருபபிடமாகவுடையவர்.

8 யசஸுக்கு (தனக்குத் தெரியாத புகழுக்கு) இருபபிடமானவர்.

9 தவத்திற்கிருபபிடமானவர்.

10 அடக்கத்திற்கிருபபிடமானவர்.

11 லக்ஷுமிக்கு இருபபிடமானவர்.

12 வித்தைக்கு இருபபிடமானவர்.

13 கீர்த்திக்கு (தனக்குத் தெரிந்த புகழுக்கு) இருபபிடமானவர்.

14 ஸ்ரீதேவிக்கு இருபபிட மானவர்.

15 எல்லாவற்றிற்கும் ஆதாரமானவர்.

16 எல்லாருடைய இஷ்டத்தையுமளிபபவர்.

17 ராமாவதாரத்தில் வானரரே அரவமாகவுடையவர்.

18 அரவமேதஸ்வரூபர்.

19 மஹாயஜ்ஞமாகிற யோகத்தில் ஹவிர்பபாகமாயிருக்கிற ஜீவஸ்வரூபத்தைக கிரஹிபபவர்.

20 வரத்தையளிபபவர்.

21 ஸுகத்தையளிபபவர்.

22 தனத்தையளிபபவர்.

23 ஹரியினிடத்தில் புத்தியையுடைய பக்தஸ்வரூபர்.

24 யமமென்கிற யோகாங்கஸ்வரூபர்.

25 நியமமென்கிற யோகாங்கஸ்வரூப

26 பெரிதான நியமரூபர்.

27 க்ருச்சரமென்கிற வ்ரதஸ்வரூபர்.

28 அதிக்ருச்சரரூபர்.

[1]மஹாக்ருச்ரமே! [2]ஸர்வக்ருச்ரமே! [3]நியமதரமே! [4]நிவ்ருத்தப்ர
மமே! [5]நிவ்ருத்திதர்மபரவாகதமே! [6]ப்ரவசகதமே! [7]ப்ருச்நி
கர்ப்பப்ரவ்ருகதமே! [8]ப்ரவ்ருக்த வேதவிக்ரியமே! [9]அஜமே!
[10]ஸர்வதமியே! [11]ஸர்வதர்ஜியே! [12]நக்ஷாத்ரியமே! [13]அகூடயமே! [14]அச
லமே! [15]மஹாவிபூதியே! [16]மஹாத்ம்யசரிமே! [17]பவித்ரமே! [18]மஹா
பவித்ரமே! [19]ஹிரண்யமயமே! [20]ப்ருஹத்தேஜ! [21]அப்ரதர்க்யமே! [22]அவி
ஜ்ஞேயமே! [23]ப்ரம்மாதிகியே! [24]ப்ரஜாஸர்க்கரமே! [25]ப்ரஜாஹிதகரமே!
[26]மஹாமாயாதரமே! [27]வித்யாதரமே! [28]யோகதரமே! [29]விசித்ரசிகண்

---

1 மஹாக்ருச்ரரூபர்.
2 எல்லாக்ருச்ரமாயுமிருப்பவர்
3 வ்ரதங்களைத் தரிப்பவர்.
4 பரம்மமில்லாதவர்.
5 சிறந்த நிவ்ருத்திதர்மங்களையடைந்தவர்.
6 வேதார்த்யயனத்தையடைந்த பரம்மசாரி.
7 (வேதத்தைக்கர்ப்பத்திலுடையவராகி) ப்ருச்நிகர்ப்பராகிப் பி
விருதஜித்தவர்.
8 வேதகர்மத்தை நடத்திவருகிறவர்.
9 ஜனனமற்றவர்.
10 எல்லாக்கதிபுருள்ளவர்; அல்லது, எல்லாருக்கும் கதியாயிருப்பவர்.
11 எல்லாவற்றையும் பாடபவர்.
12 கர்மேந்திரியங்களால் க்ரஹிக்கமுடியாதவர்.
13 கூடயமற்றவர்.
14 சலனமற்றவர். [வர்
15 ஆகாயமுதலியவைகளின் ஸ்ருஷ்டிரூபமான, பெரியஜப்வர்யமூ...ய
16 மஹிமைபொருந்திய விராட்சரீரமுடையவர்.
17 சுக்ரியமென்கிற ஆரண்யகமந்த்ரஸ்வரூபர்.
18 பாவமானீஸூக்தமுதலான மந்த்ரஸ்வரூபர்.
19 மண்டலப்ராம்மணமுதலிய மந்த்ரஸ்வரூபர்.
20 வேதஸ்வரூபர்.
21 புத்தியால் ஊஹிக்கமுடியாதவர்.
22 (ரூபமுதலானவைஇல்லாததினால்) அறியமுடியாதவர்.
23 காரியகாரணமஹாகாரணங்களுள் சிறந்தவர்.
24 ப்ரஜைகளின்ஸ்ருஷ்டியைச் செய்கின்றவர்.
25 ப்ரஜைகளின்நாசத்தைச்செய்கின்றவர்.
26 பொய்தானமாயையைத் தரிப்பவர்.
27 வித்தையைத் தரிப்பவர்.
28 யோகத்தைத் தரிப்பவர்.
29 விசித்ரமான கொண்டைகளையுடையவர்.

டியே! [1]வரப்ரதரே! [2]புரோடாசபாகஹரரே! [3]கதாத்வரரே! சிங்க த்ருஷ்ணரே! [5]சிங்கஸம்சயரே! [6]ஸர்வதோவ்ருத்தரே! [7]நிவ்ருத்தரூபரே! [8]ப்ராம்மணரூபரே! [9]ப்ராம்மணபரியரே! [10]விஸ்வமூர்த்தியே! [11]மஹா மூர்த்தியே! [12]பாந்தவரே! [13]பக்தவத்ஸலரே! [14]ப்ரம்மண்யதேவரே! பக்தஜனநான் உம்மைத் தரிசிக்கவிரும்புகிறேன். [15]நிர்வகல்பகஜ்ஞா னத்தின்பொருட்டு உமக்கு நமஸ்காரம்; நமஸ்காரம்' என்று துதித் தார்.

முந்நூற்றுநாற்பத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்ம்ம். (தொடர்ச்சி.)

—:o:—

(நாராயணர் நாரதருக்குக் காட்சியளித்துத் தாம்செய்தஸ்ருஷ்டி முதலியவற்றைச் சொல்லியது.)

இவ்விதம், ரகஸ்யமும் உண்மையுமானநாமங்களால் துதிக்கப் பட்டவரும் எல்லாமறிந்தவரும் எல்லாவற்றையும்படைப்பவருள்சிறந் தவரும் எல்லாமூர்த்திகளின்ஸ்வரூபரும் ப்ரபுவும் ஹரியுமான அந்தப் பகவான் சிறந்த அந்தரூபதத்தை நாரதமுனிவருக்குக் காட்டினர். ஓரிட த்தில் சந்திரனைக்காட்டியும் மிகவும் சுத்தமானரூபமுடையவரும் ஓரி டத்தில் சந்திரனைக்காட்டியும் விசேஷத்தோடுகூடியவரும் ஓரிடத் தில் அக்நியினிறமுடையவரும் ஓரிடத்தில் ஆதித்யனுக்குநிகரானரூப

---

1 ஸ்ரேஷ்டமானஸ்தானத்தை அளிப்பவர்.
2 புரோடாசதனின்பாகத்தைக் கரகிப்பவர்.
3 யாகத்தையடைந்தவர்.
4 ஆசையை அழித்தவர்.
5 ஸம்சயமறுத்தவர்.
6 எங்குமிருப்பவர்.
7 விலகினஸ்வரூபத்தையுடையவர்.
8 ப்ராம்மணரூபராயிருப்பவர்.
9 ப்ராம்மணர்களிடம் ப்ரியமுள்ளவர்.
10 ஜகத்தைச் சரீரமாகவுடையவர்.
11 பெரிதான சரீரமுடையவர்.
12 பந்துவாயிருப்பவர்.
13 பக்தர்களிடம் அன்புள்ளவர்.
14 ப்ராம்மணர்களுக்கு ஹிதமானவர்.
15 'ஏகாந்ததர்சாய என்பது' மூலம்.

முடையவரும் ஓரிடத்தில் கிளியின் நிறமுக்குநிகரானவரும் ஓரிடத்தில் படித்துக்குநிகரானவரும் ஓரிடத்தில் மைம்மீலிக்குநிகரானகாந்தியுடையவரும் ஓரிடத்தில் பொன்னிறமுடையவரும் ஓரிடத்தில் பவளக்கொடிக்கு நிகரானவர்ணமுடையவரும் ஓரிடத்தில் வெண்ணிறமுடையவரும், ஓரிடத்தில் வைடூர்யத்துக்குநிகரானவர்ணமுடையவரும் ஓரிடத்தில் வைடூர்யத்துக்கொப்பானவரும் ஓரிடத்தில் நீலவைடூர்யத்துக்கொப்பானவரும் ஓரிடத்தில் இந்திரநீலத்துக்கொப்பானவரும் ஓரிடத்தில் மயிலின்கழுத்துக்குநிகரானவர்ணமுடையவரும் ஓரிடத்தில் முத்துமாலைக்கொப்பானவரும் ரூபங்களாலே பலவித்தமாக இந்தவர்ணங்களைத்தரித்திருக்கிறவரும் அநாதியும் ஆயிரங்கண்களுடையவரும் ஸ்ரீபொருந்தியவரும் [1]ஆயிரம்கலசமுடையவரும் ஆயிரம்பாதங்களுடையவரும் ஆயிரம்உதரங்களும்கைகளுமுடையவரும் ஓரிடத்தில்இவ்விதமென்றுவிளக்கலாகாதவரும் பரபுவும் வாயினாலே ப்ரணவத்தையும அதனுடன்சேர்ந்தகாயத்ரீமந்த்ரத்தையும் உச்சரிப்பவரும் மற்றமுகங்களாலே பலவிதமானகான்குவேதங்களையும் சொல்லுகிறவரும் பாவங்களை ஹரிப்பவரும் இந்திரியமுழுவல்வரும் தேவருமான நாராயணர் உபதேசித்ததைக் கானம்செய்தார். அப்பொழுது, யஜ்ஞங்களுக்குப்பதிபானதேவேசர் வேதி, கமண்டலு, தர்ப்பங்கள், சிறந்த (ஜப) மணிகள், குசங்கள், மான்தோல, தண்டம் இவற்றையும் ஜலத்தில்விடுகின்ற அக்நியையும் கைகளால தரித்துக்கொண்டிருந்தார். தெளிவானமனமுள்ளவரும் வேதியரிற்சிறந்தவருமானநாரதர் ப்ரஜன்னரான அந்தப்பரமேஸ்வரரை மௌனத்துடன் வணங்கிநமஸ்கரித்தார். தேவாலவணங்கின அந்தநாரதரைநோக்கித் தேவர்களுக்கெல்லாம்அதிபதியும் விகாரமற்றவருமானபகவான், 'ஏகதர், த்விதர், தரிதர்என்னும்மகாமுனிவர்களும் என்னுடைய தர்சனத்தில் விருப்பத்துடன் இந்தஇடத்தை அடைந்தார்கள். அவர்களும் என்னைப்பார்க்கவில்லை ஏகாந்திகளிற்சிறந்தவன்றித்துவிர என்னை ஒருவனும் பார்க்கமாட்டான். நீயும் ஏகாந்திகளில்உத்தமன். ஓ! ப்ரம்மண! சிறந்தவைகளான என்னுடையஇந்தசசரீரங்கள் தர்மமுடையகிருதத்தில் உண்டாயினன. நீ எப்பொழுதும் அவைகளைப் பழி. வந்தபடி போ. ஓ! அந்தண! இப்பொழுது நீ விரும்புகிறவரத்தை என்னிடமிருந்து கேட்டுக்கொள். விப்ரவரூபனும் விகாரமற்றவனுமானநான் இப்பொழுது இவ்விடத்தில் உனதுவிஷயத்தில் அருளுள்ளவனாயிருக்கிறேன்' என்று சொன்னார்.

---

1 'சத' என்பது மூலம்.

நாரதர், 'ஓ! தேவரே! பகவானுனீர் என்னுல்பார்க்கப்பட்ட மையால் இப்டிழுது என்னுடைய தவம், யமம், நியமம்இவற்றின் பயன் உடனே அடையப்பட்டது. ஓ! பகவானே! அனுதியும் எல்லா வற்றையும்பார்த்தவர்களில் சிறந்தவரும், எல்லாமூர்த்தியுமுள்ளவ ரும் மகானும் பிரபுவுமானீர் பார்க்கப்பட்டீரென்பதே எனக்கு மேலானவரம்' என்றசொன்னர் (பகவான்), இவ்விதம்தரிசனம் கொடுத்துவிட்டு ப்ரம்மபுத்ரரானநாரதரைநோக்கி, மறுபடியும் ஒரு வார்த்தை சொல்லலானர். 'நாரத! போ தாமதிப்பாதே. இந்திரியங்க களும் ஆஹாரமுமில்லாதவர்களும் சந்திரனுக்குநிகரானகாந்தியுள்ள வர்களுமான என்னுடையஇந்தப்பக்தர்கள் ஒருமுகமாக எண்ணத் தியானஞ்செய்வார்கள் இவர்களுக்கு விக்நம் உண்டாகவேண்டாம். மகாபாக்யவான்களான இந்தவித்தர்கள் முன்காலத்தில் ஏகாந்திக ளாயிருந்தார்கள்; தமஸுகளாலும் ரஜஸுகளாலும்விடப்பட்டு என்னை அடையப்போகிறார்கள் ஸந்தேகமில்லை. நேத்திரத்தால்பார்க்கமுடி யாதவரும் க்வக்கினல்பரிசிக்கமுடியாதவரும் (மூக்கினல்) முகரமுடி யாதவரும் கந்தமும்ரஸமுமில்லாதவரும் ஸத்வம்ரஜஸ்தமஸென்கிற குணங்களடையாதவரும் எங்கும்வியாபித்தவரும் ஸாக்ஷியும் உல கத்துக்கு ஆத்மாவென்று சொல்லப்படுகிறவரும் பிராணிவர்க்கங்களு டைய சரீரங்கள் நசிக்கையிலும் நசியாதவரும் ஜனனமில்லாதவரும் நாசமில்லாதவரும் எங்காலுமிருப்பவரும் நிர்க்குணரும் [1]நிஷ்கள ரும்' இருபத்துகான்குதத்வங்களைக்காட்டியும் பிரவிஷ்டமான இரு பத்தைந்தாமவரும் புருஷரும் கிரியையில்லாதவரும் ஞானத்தால் பார்க்கக்கூடியவராகச சொல்லப்படுகிறவரும் இவ்வுலகில் பிராம்மண ரிஷேஷ்டர்கள் தம்மைஅடைந்து முக்திர்களாகப்காரணரும் ஸநாதன ரும் பரமாத்மாவுமான அந்தவாஸுதேவர் அறியத்தக்கவர். ஓ! நாரத! சுபகர்மங்களாலும் அசுபகர்மங்களாலும் ஒருபோதும் பற்றப்படாத இந்தத்தேவருடையவியாபகத்தன்மையையும் மஹிமையையும் பார். ஸத்வம்ரஜஸ்தமஸென்னுமிவைகளைக் குணங்களாகச் சொல்லுகிறார் கள். இவைகள் எல்லாசரீரங்களினுமிருக்கின்றன; ஸஞ்சரிக்கவுஞ் செய்கின்றன. இந்தக்குணங்களை க்ஷேத்ரஜ்ஞன் அனுபவிக்கிறான். இவைகளால் அவன் அனுபவிக்கப்படுகிறதில்லை அவன் நிர்க்குணனும் குணங்களைப்புஜிக்கிறவனும் குணங்களைப்படைக்கிறவனும் குணங்க ளை அதிக்ரமித்தவனுமாயிருப்பான். ஓ! தேவரிஷியே! ஜகத்துக்கு ஆதாரமானபருதிவியானது அப்பில் லயத்தை அடைகிறது. அப்புதேயு

1 பராணன் முதலியகளில்லாதவர்.

விலும் தேயு வாயுவிலும் வாயு ஆகாயத்திலும் ஆகாயம் மனத்திலும் லயிக்கின்றன. பரமபூதமான அந்தமனமும் அவயத்தத்தில் லயிக்கிறது. ஓ! பிராம்மண! அவ்யக்தமானது கிரியையற்றவனான புருஷனிடம் லயிக்கிறது. ஸத்துவனான அந்தப்புருஷனுக்கு மேலானவன் இல்லை. ஸத்துவனரும் புருஷருமான அந்தவாஸுதேவர் ஒருவரைத் தவிர உலகத்தில் சராசரமும் நித்யமுமான பூதமானது இல்லையென்றே? மகாபலமுள்ள வாஸுதேவர் எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவன்றே? ப்ருதிவியும் வாயுவும் ஆகாயமும் அப்புர் தேயுவுமாகிய பெரிய ஸ்வரூபமுள்ள இவைகள் சேர்ந்து சரீரமென்று பெயரிடப்பட்டன. ஓ! பிராம்மண! அதில் பிரவேசித்திருப்பவரும் சிறந்த பராக்ரமமுள்ளவருமான அவர் பார்க்கத்தக்கவரல்லர் பிரபுவானவர் சரீரத்தைச் சேஷ்டிக்கசெய்து உண்டானவராகவே அறிவீர். தாதுக்களுடைய சேர்க்கையின்றி ஒரிடத்திலும் ப்ரபுவானது உண்டாகிறதில்லை ஓ! பிராம்மண! தவிரவும், ஜீவனிலலாவிட்டால வாயுக்கள் சேஷ்டிக்கும் படி செய்கிறதில்லை. அந்தஜீவன் சேஷ்டரும் பரபுவுமான ஸங்கர்ஷணராகச சொல்லப்படுகிறான் அவர் தம்முடைய (நியானமுதலான) கர்மத்தினாலே (ஜீவன்முக்தரான) ஸநத்குமாரராயிருப்பதை அடைந்தார். அந்தஸங்கர்ஷணரிடமிருந்தும் பிரளயத்தில் எல்லாபபிராணிகளுடையஸ்ருஷ்டிக்கும் ஆதாரமும் எல்லாபபிராணிகளுடைய மனமுமாயிருக்கிற பரத்யும்னர் (உண்டானரென்று) சொல்லப்படுகிறார். அவரிடமிருந்தும் கர்த்தாவும் காரணமும் காரியமுமாயிருப்பவர் உண்டானார். அவரிடமிருந்து சராசரமான ஜகமுண்டதும் உண்டாகிறது. அவர் அநிருத்தர் அவர் ஈசானர். அவர் எல்லாக்கர்மங்களிலும் அதிகாரி. [1]பகவானும் க்ஷேத்ரஜ்ஞரும் நிர்க்குணமான ஸ்வரூபமுடைய சிறுமான வாஸுதேவரே பிரபுவான ஸங்கர்ஷணரென்கிற ஜீவனுக அறியத்தக்கவர். ஸங்கர்ஷணரிடமிருந்து உண்டான பரத்யும்னர் மனமாகசசொல்லப்படுகிறார் பரத்யும்னரிடமிருந்துமுண்டான அநிருத்தர் அகங்காரம்; அவர் ஈச்வரர். ஓ! நாரத! அக்ஷரமான ஜீவனும் க்ஷரமென்கிற பிரகிருதியும் காரணமும் காரியமும் சராசரமான ஸல்லாஜகத்தும் என்னிடமிருந்து உண்டாகின்றன இவ்வுலகில் எவர்கள் என்னுடைய பக்தர்களோ அவர்கள் என்னிடம் பிரவேசித்து முக்தர்களாகின்றார்கள். நானே பூரணனும் கிரியையற்றவனும் இருபத்தைந்தாமவனும் நிர்க்குணனும் நிஷ்களனும் (ஸுகதுக்கமுதலிய) த்வந்த்வமற்றவனும் ஒன்றையும் என்றென்றும் கருதாதவனுமாக அறியத்தக்கவன்.

1 ஒருசொல் விடபபட்டது.

நீ என்னை ரூபமுள்ளவனாக நினைக்கவேண்டாம். ஜகத்துக்குக்குருவும் ஈசனுமான நான் விரும்பினால் ஒருக்ஷணத்தில் மறைத்துவிடுவேன். காரத! எல்லாப் பூதகுணங்களுடனுங்கூடினவனாக நீ இப்பொழுது பார்ப்பது என்னால் படைக்கப்பட்டமாயை. நான் இவ்விதமிருப்பதாக நீ நினைக்கவேண்டா. என்னால் உனக்கு இந்த நான்கு மூர்த்திகளும் நன்கு சொல்லப்பட்டன. 'நானன்றோ ஜீவனென்னும் பெயருள்ளவன்? என்னிடம் ஜீவன் [1]கற்பிக்கப்பட்டவன். ஆகையால், இப்பொழுது உனக்கு, 'ஜீவன் என்னால் பார்க்கப்பட்டான்' என்னும்புத்தி வேண்டா. ஓ! பிராம்மண! நான் எங்கும் வியாபித்தவன்; பிராணிவர்க்கங்களுக்கு அந்தராத்மா. பிராணிவர்க்கங்களுடைய சரீரங்கள் நசிக்கும்பொழுது நான் நசியாமலிருக்கிறேன். வித்தர்களும் மகாபாக்யமுள்ளவர்களுமான அந்த மனிதர்கள் ஏகாந்திகளாகிறார்கள். ஓ! முனிவ! தமஸாலும் ரஜஸாலும் விடுபட்டு என்னிடம் பிரவேசிக்கப்போகிறார்கள். காரத! நான் கர்த்தாவும் காரணமும் காரியமுமாயிருப்பவன். தேவனான நான் கண்ணால் பார்க்கத்தக்கவனல்லேன்; த்வக்கால் பரிசிக்கத்தக்கவனல்லேன்; (மூக்கால்) முகரத்தக்கவனுமல்லேன்; கந்தமும் ரஸமுமில்லாதவன் ஸத்வம்ரஜஸ்தமஸ் என்னும் அந்தக்குணங்கள் என்னிடம் இல்லை எங்கும் நிறைந்தவனும் ஸாக்ஷியுமான நான் உலகத்துக்கு ஆத்மாவென்று சொல்லப்படுகிறேன் ஹிரண்யகர்ப்பரும் உலகங்களுக்கு ஆதியும் நான்கு முகங்களுடையவரும் சொல்லமுடியாதமூர்த்தியை அடைந்தவரும் ஸநாதனருமான ப்ரம்மதேவர் என்னுடைய பலகாரியங்களை விசாரிக்கிறவர் குரோதத்திலிருந்துண்டானவரும் தேவருமானருத்ரர் என்னுடைய நெற்றியின்வழியே வெளிவந்தார். என்னுடைய வலப்பக்கத்தை அடுத்திருக்கிற பதினொரு ருத்ரர்களையும் பார். இடப்பக்கத்தை அடுத்திருக்கிற பன்னிரண்டு ஆதித்யர்களையும் பார். என்னுடைய முன்னிலையில் தேவர்களிற் சிறந்த ஸ்ட்டு வஸுக்களையும் பார். என்னுடைய பின்பாகத்தில் ஸாத்யனென்றும் தஸ்ரனென்றும் சொல்லப்படும் வைத்யர்களையும் பார். ஸ்ருஷ்டிகர்த்தர்களெல்லோரையும் பார். ஸப்தரிஷிகளையும் பார். வேதங்களையும் அநேகமான யாகங்களையும் அமிருதத்தையும் ஔஷதிகளையும் பார். தவங்களையும் நியமங்களையும் வெவ்வேறான விதமான யமங்களையும் எட்டுவிதமான ஐஸ்வர்யமும் மூர்த்திகரித்து ஓரிடத்திலிருப்பதையும் பார். ஸம்பத்தையும் லக்ஷ்மீதேவியையும் கீர்த்தியையும் கோரூபமான பூமியையும் வேதங்களுக்கு மாதாவும் என்னிடமிருப்பவனுமான ஸரஸ்

1 'ஸமாஹித:' என்பது மூலம்; 'என் அதீனன்' என்றும் கொள்ளலாம்.

வதியென்கிற காயத்ரீதேவியையும்பார். நாரத! ஜோதிகளுள்மிகச்சிறந்ததும், (ஆகாயத்திலஸ்தமிப்பதுமான) தருவகஸத்ரத்தையும் பார். சிறந்தவனே! மூர்த்திகரித்தமேகங்களையும் ஸரஸ்வதிகளையும், தடாகங்களையும் நதிகளையும், சமீபம்பொறுதான்குறித்தகங்களையும் பார். சரீரமில்லாமல் என்னிடமிருக்கிற இந்தமூன்றுகங்களையும்பார். ஓ! முனியே! தேவகாரியத்தைக்காட்டிலும் பிதருகாரியமானது சிறந்தது. தேவர்களுக்குப்பித்ருக்களுக்கும்அதியானகால்ஒரியபிநா கான் ஹய க்ரீவனுகி வடமேற்குஸமுத்திரதில் (இருந்தகொண்டு) கன்குமோஹா டம்செய்யப்பட்டவையும் ப்ரத்தையுடன்கூடியவையான ஹவ்யத்தையும் கவ்யத்தையும் புஜிக்கிறேன். ஆதியில் என்னால் ஸ்ருஷ்டிக்கப் பட்டப்ரம்மாவானவர் யஜ்ஞபுருஷனை என்னை நான் பூஜித்தார். அதனால், நான் பிரீதியடைந்து கலபத்தின்ஆதியில அவருக்குச் சிறந்த வரங்களையும் எனக்குப புத்ரராயிருக்கும்தன்மையையும் உலகங்களுக்கு யஜமானராயிருக்குந்தன்மையையும் அகங்காரதால் செய்யப் பட்டபெயரையும் கொடுத்தேன். 'உப்பால செய்யபட்டவரைய றையை ஒருவனும் பிறமாடடான் நீரும் வரதனைவிரும்புகிறவர் களுக்கு வரதனை அளிப்பவராவீர், தபோதனரே! மிக்கபராக்யமுள்ள வரே! கடுமையானவிரதமுடையவரே! தேவகணங்களுக்கும் அஸுர கணங்களுக்கும் ரிஷிகளுக்கும் பித்ருக்களுக்கும் பலவகையான பிராணிகளுக்கும் நீர் எபபொழுதும் உபாஸிக்கத்தக்கவராவீர். ஓ! பிரம்மாவே! தேவகாரியங்களினிமித்தம் அவதாரத்தைஅடைந்தநான் எபபொழுதும் உம்மாலே புதரன்போல உபதேசிக்கவும், (கார் யங்களில்) ஏவவும்தக்கவன்' என்றும்சொன்னேன். நான் அளவற்ற தேஜஸ்ஸுள்ளபிரம்மாவுக்கு இந்தநல்லவரங்களையும் மற்றவரங்களையும் கொடுத்து இபபடியே ருத்ரருக்கும் மனுவுக்கும் அளவற்றதேஜஸ்ஸுள்ள இந்திரனுக்கும் வரங்களைக்கொடுத்துவிட்டு ப்ரீதியடைந்து நிவ்ருத்தியைப் பற்றினவனானேன். [2]ஸுகருபமானநிவ்ருத்தியான து எல்லாதர்மங்களிலும் சிறந்ததாகக் கருதப்பட்டது. ஆகையால், நிவ்ருத்தியைஅடைந்தவனும் எல்லா அங்கங்களிலும்ஸுகத்தையடைந்தவனுமாக ஸஞ்சரிக்கவேண்டும். ஜித்தையை ஸகாயமாகவுடையவனும் ஸுகாயமானடத்திலிருப்பவனும் ஸநாதனனுமான என்னை ஸாங்கியசாஸ்திரத்தின் நிசசயத்தையே உறுதியாகவு

---

1 குதிரைத்தலையுள்ளவன்.

2 'எல்லாத்தர்மங்களுண்டையபரமோனநிவ்ருத்தியும் மோக்ஷமாகக் கருதப்பட்டது' என்றும் கொள்ளலாம்.

டையஆசார்யர்கள் கிலராகச சொல்லுகிறார்கள். ஓ! பிரரம்மண! பகவானனை இந்த ஹிரண்யகர்ப்பர் வேதத்தில் துதிக்கப்பட்டிருக்கிறார். அப்படிபட்டஹிரண்யகர்ப்பனைகான் யோகசாஸ்திரங்களில் யோகநிபாநத செலலப்படடேன் இந்தச சாஸ்வதனை நான் சரீரத்தைபெறித்துகொணடு ஸ்வர்க்கத்தில் இருகிறேன். பிறகு, ஆரிபப்யகஞ்களுடைபமுடிவில திரும்பவும் உல்கத்தை ஸீம் ஹரிப்பேன். திரும்பவும் சராசரங்களானபிராணிகளையும் உலகத்தையும் என்னிடமிருக்கசசெய்துகொணடு ஒருவனரி வித்தைபுடன்லீலை செய்வேன். பிறகு, எலலாஉலகத்தையும் பஞடபபேன் இவைகளில் நான்காவதுமூர்த்தியானது அழிவற்றசேஷபை படைத்தது. அவர் ஸங்கர்ஷணராகசசொலலபபட்டார். அவரும் பிரத்யும்னரைப் படைத்தார். பிரத்யும்னரிடமிருந்தும் அநிருத்தனைநான் உண்டானேன்; என்னுடைபஸ்ருஷ்டி அடிக்கடி உண்டாகிறது. அநிருத்தரிடமிருந்தும் அவருடையநாபிகமலவழியாக ப்ரம்மா உண்டானர் பிரம்மாவினிடமிருந்தும் ஸ்தாவரங்களும் ஜங்கமங்களுமான எலலாப் பிராணிகளும் உண்டாயின ஆகாயத்திலிருந்தும் ஆதித்யனுக்கு உதயமும் அஸ்தமனமும் எப்படிவதுபோலக் கற்பங்களின் ஆதிகளில் அடிக்கடி இவ்வுலகில இந்தஸ்ருஷ்டி உண்டாகிறதை அறி. அளவற்ற காந்தியுள்ளவனே! திரும்பவும் நாசதசையடையும்பொழுது காலமானது பலாத்காரமாக (உலகத்தைத்) திருபபுகிறது' என்றசொன்னர்.

முந்நூற்றுநாற்பத்தெட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாராயணர் தன் அவதாரங்களை நாரதருக்குச் சொல்லியது.)

நாரதர், ஜனார்தனரான பகவானைநோக்கி, 'ஓ! மகாப்ரபுவே! மிகவும்கோரமானசாரணவத்தில் சராசரங்கள் நாசத்தையடைந்த பொழுது எந்தஎந்தபபொருள்களில காணப்படுகிறீர்?' என்றவினவ, பகவான் சொலலலானர்.

'ஓ! நாரதமாமுனியே! (என்னுடைய) அவதாரங்களில் உள்ள படி கேள். மதஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்மம், வாமனன், பரசுராமன், தாசரதிராமன், பலராமன், [1]புத்தன், கல்கிஎன்று பத்து

---

1 'க்ருஷ்ணஸ் கல்கி' என்பது வேறுபாடம்.

அவதாரங்கள். நான் முதலில் மீனமாக அவதரித்துப் பெரியகடலில் மூழ்குகின்ற உலகங்களை வெளிப்படுத்திப் பிரஜைகளை கிலேகிறுத்து வேன். பிராமணர்ப்பிரஷ்டை! தேஹமகூடபர்வதத்துக்கொப்பாகக் கருதப்பட்ட இரண்டாவதான கூர்மாவதாரஞ்செய்து அமிருதத்துக் காக மந்தரகிரியைத் தரிப்பேன். ஓ! வித்வானே! பிறகு, நான் வராஹரூபத்தைத் தரித்துகொண்டு கோமானஸமுதரத்தில் முழு கினதும் பாரத்தால்கிறைந்ததும் பிராணிகளால் வியாபிக்கபட்ட எல்லா அங்கங்களையுமுடையதும் ஸமுத்ரத்தை ஒப்பலியாகவுடைய தும் மறைந்ததுமான பூமியை எல்லாபிராணிகளுடைய நன்மைக்காக வும் மீண்டும் பலததினுலே தன்னிடத்திலொழுங்கைவைத்து நிர்மாபிபேன். பலத்தால்கர்வங்கொண்ட ஹிரண்யாக்ஷனென்கிற அஸுரனைக் கொல் லபோகிறேன். திருப்பவும் நரஸிம்மாவதாரத்தைஎடுத்து யாகத் தைக்கெடுக்கின்றஹிரண்யகசிபுவென்கிற அஸுரனையும் தேவகாரியத் துக்காகக் கொலவேன் தேவர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள்முதலிய எல்லாராலும் கொல்லமுடியாதவனும் பலவானும் வீரோசனனுடைய புத்ரனுமான பலியென்கிற பெரியஅஸுரன் உண்டாவான். அவன் இந்திரனையும் அவன்ராஜபத்திலிருந்து நழுவசெய்வான். அனைல் மூவுலகமும் அபகரிக்கப்பட்டு இந்திரனும் விலகியிருக்கும்பொழுது, காச்யபரிடமிருந்து அதிதியினிடத்தில் பன்னிரண்டாவதுபுத்திர னகப பிறப்பேன் பிரம்மசாரியாகி யாகசாலையடைந்து உத்தமர் களானவேதியர்கள்துதிக்க (அவனுடைய) யாகத்தைத் தூண்டுவேன். (அதைக்) கேட்டுப்பலியானவன் பிரீதியடைவான் (பிறகு அவன்,) 'ப்ரம்மசாரியே! எதை விரும்புகிறீர்? சொல்லும்' என்றுமேட்க, ஒரு பெரியவரத்தை யாசிப்பேன் 'மூன்றடி அளவாளவேண்டிய கொடுக்க வேண்டும்' என்று (அந்த) மகாஸுரனை யாசிப்பேன். அவன் மந்திரி களால் தடுக்கப்பட்டும் என்னிடம் மிகவும்பிரீதியுடன் கொடுப்பான். பிறகு, தானஜலமானது என்கையில்விழுந்தவுடன் மூன்று அடிகளுக் குள்ளடங்கிய ராஜ்யத்தை அவன்பற்றபராக்ரமமுள்ள இந்திரனுக்கு அளிப்பேன். ஓ! நாரத! தேவர்களை அவரவர் அதிகாரங்களில் நிலைக் கசெய்வேன். எல்லாத்தேவர்களாலும் கொல்லமுடியாதவனும் பல வான்களுள்சிறந்தவனுமான பலியென்கிற அஸுரனையும் பாதாளத தில் வலிக்கச்செய்வேன். திரேதாயுகத்தில பிருகுமகரிஷியின் குலத்தைவகிக்கின்ற பரசுராமனுக்க அவதரிப்பேன். வேஜைகளும் வாகனங்களும் நிறைந்த க்ஷத்ரிய ஜாதியையும் நாசம்செய்வேன். திரேதாயுகத்துக்கும் துவாபரயுகத்துக்கும் ஸந்திஏற்படும்பொழுது

தசரதபுத்ரனுனராமனுகிப் பூமண்டலாதிபதியாவேன். ஸ்ருஷ்டிகர்த்தரின் புத்ரர்களும் ரிஷிகளுமான ஏக்தரும் த்விதரும் த்ரிதருண்டரு சாபத்தால் தம்உருவமிழந்து வானரத்தன்மையை அடைவார் ஓ! பிராம்மண! அவர்களுடையவம்சத்தில பிக்கபலசாலிகளும் பெரிய வீரத்தன்மையுள்ளவர்களும் இந்திரனுக்கு நிகரானபராக்ரமமுள்ளவர்களுமாகப்பிறக்கும்வானரர்கள் எனக்குத் தேவகார்யநிமித்தம் துணையாவார்கள். அந்தஸஹாயத்தால் ராக்ஷஸராஜனும் பயங்கரனும் புலஸ்தியவம்சத்தைக் கெடுபவனும் கொடியவனுமம் உலகத்துக்குத துன்பஞ்செய்பவனுமானராவணனை பரிவாரத்துடன் கொல்லுவேன. அவனுடையராஜ்யபதவியை கிழமபபடி விபீஷணனுக்குக் கொடுப பேன். நான் அயோதயில் வவலிக்கின்ற எல்லாரையும் அழி வற்றலோகத்தை அடையச செய்வேன் த்வாபரயுகத்துக்கும் கலியுகத்துக்கும் ஸந்திபானது முடியும்பொழுது (என்னுடைய) அவதாரமானது மதுராபட்டணத்தில கம்ஸனுக்காக உண்டாகும். நான் அந்த அவதாரத்தில தேவகண்டகர்களான அரிஷ்டம் அஸுரர்களைக்கொன்று சூரஸ்தலியென்கிறத்வாரகாநகரத்தை இருப்பிடமாகச செய்வேன். அந்தநகரத்தில்வவலித்துக்கொண்டு அதிதிக்கு அநிஷ்டத்தைச்செய்கிற பூமிபுத்ரனுன நரகன், முரன், பீடனென்கிற அஸுரர்களைக் கொல்லுவேன். மிக்கபொருளுள்ளதும் அழகுள்ளதுமான ப்ராக்ஜோதிஷநகரத்திலுள்ள அஸுரச்ரேஷ்டர்களைக் கொன்று அதன்செல்வங்களைக் சூரஸ்தலிக்குக் கொண்டுவருவேன். தவிரவும், ஜனனகப்பிறந்த ந்ருகனென்பவனை திருப்பவும் (சாபத்தினின்று) விடுவிப்பேன். அந்தஅவதாரத்தில பிரஜுன அதிருத்தனுக்காகச சோணிந்புரமென்கிற பாணஸுரனுடைபநகரத்தையடைந்து பெரும்போர்புரிவேன் (அபபொழுதும்,) பாணஸுரனுக்கு நன்மையைசெய்வதில் பற்றுள்ளவர்களும் (என்னுடன்போருக்கு) முயன்றவர்களும் தேவர்களும் உலகங்களால் வணங்கப்பட்டவர்களுமான சங்குரையும் ஸுப்ரமண்யரையும் ஜயிபபேன் பிறகு, பலியின்புத்ரனும் ஆயிரங்கைகளுள்ளவனுமான பாணனை ஜயித்து உடனே ஸௌபமென்கிறநகரத்திலவலிப்பவர்களெல்லாரையும் கொல்லுவேன், ஓ! பிராம்மணச்ரேஷ்ட! கர்க்கமஹரிஷியின்தேஜஸால் சூழப்பட்டவனும் (உலகத்தில்) பிரவலித்திபெற்றவனுமான காலயவனனுடையவதமும் என்னலேயே நடக்கும். கம்ஸனையும் கேசியையும் சூரஜனன அரிஷ்டனென்கிற மகாஸுரனையும் மிக்கவீர்ப்முள்ள சாணூரனையும் பெரிய பலமுள்ளமுஷ்டிகனையும் பூதலிபனையும் தேதனுகனையும் காலவடிவ

மெமித்த · அரிஷ்டணேயும் கொலவேன் யமுனையின் பெரியமமி விலை காஸ்யனவசஞ்செய்து அதன்பிறகு கோகுலங்களில் இந்திரன் வர்ஷிக்க (அப்பொழுது) பசுக்களின் க்ஷேமத்துக்காக ஏழுமாத்திரி (கோவர்த்தனமென்கிற) பெரியமலையையும் தரிபேன் ஓ! பிராம் மண! பிறகு, மழைநின்றபொழுது பர்வதத்தின் உசியிலிருந்துகொ ண்டு உடனே இந்திரனுக்கூட ஸம்வாதம் செய்வேன். பௌண் ட்ரகவாஸுதேவனையும் சக்கிரம் எலலாதகரனியத்தையும் அபகரித் துக் கொலவேன் கிருவராஜ்தில பலவானும் எலலா அரசர்களுக்கும் விரோதத்தைசசெய்கிறவனும் செழிபபுற்றவனுமான ஜராஸந்தனென் னும் அஸுரன் அரசனுவான் என் னுடைய புதகியின் ஆலாசனையி னல் அவனுடைபதம் உண்டாகும தர்மபுத்திரருடைய யாகத்தில் சிசுபாலனைக் கொலவேன் துர்யாதனனுடைய குறறத்தினலும் யுதிஷ்டிரருடைய குணத்தினலும் பூமியில பலசாலிகளான் எல்லா அரசர்களும் (யுத்தத்திற்காக) சேர்ந்திருக்கையில எனக்கு இந்திர புத்ரனை அர்ஜுனனெருவனே நலல ஸகாயனுவான் (அப்பொழுது,) யுதிஷ்டிரரைத் தம்பிகளோடு அவருடைய ராஜயத்தில ஸ்தாபிப்பேன். 'ஈஸ்வரஸ்வரூபர்களான நரநாராயணர்களென்கிற இரண்டுரிஷிகளும் லோககார்யத்துக்காக முயறசிசெய்துகொண்டு க்ஷத்ரியக்கூட்டத்தை எரிக்கிறார்கள்' என்று உலகதஜனங்கள் சொலலுவார்கள். எல்லா அரசர்களும் ஆயுதங்களால கொலலபபட்டு ஸ்வர்க்கத்தை அடைவார் கள். சிறந்தவனே! இஷ்டபபடி பூமியின்பாரத்தை இறக்கிவிட்டு ஆக்நேயஞானத்தை ஆப்ரயபிதது ஸாந்வதகர்களில முக்கியமானவர்களெல் லோருக்கும் துவாரகைக்கும் சோரமான பிரளயத்தைச செய்வேன். ஆக்மாநீனமாகசசெய்து த்வாரகையை ஸமுத்ரத்தில் முழுகச் செய்வேன். பிராம்மணரஸ்ரேஷ்ட! பிறகு, [1]கலியுகத்தின் ஆதியில காஷாயவஸ்திரதாரியும் முண்டனஞ்செய்துகொண்டவனும் சுத்த மானதந்தங்களுடையவனும் சுத்தோதனனென்பவனுக்குப் புத்ரனு மான புத்தனுகி (தவத்திற்காக) வ்ருக்ஷத்தை அடுத்தும் எனனி டம்பயத்தோடு கூடிய மனததோசத்தரசனுடன் தர்மராஜனை அவன் கிருகத்தில் வலவித்துக்கொண்டும் ஜனங்களை மோகிக்கசசெய்வேன். நான் புத்தனுயிருக்கையில் க்ஷத்ரியர்கள் சுத்தர்களிடத்தில் புகழ்ப்பார் கள். மனிதர்களெலலோரும் காஷாயந்தரிதப் புத்தர்களாவார்கள். பிராம்மணர்கள் அத்யயனஞ்செய்யாதவர்களும் யாகமில்லாதவர்களு மாவார்கள். ; அக்நிஹோத்ரங்களு நாசமடையும். குருவின் ஆரா

1 இந்தவரலாறு முழுதும அதிகபாடம்.

தனமும் நசித்துவிடும். பிதாவின் (வார்த்தையைப்) புத்ரர்களும் புத்ரர்களின் பத்நிகளும் கேட்கமாட்டார்கள். ஜ்யேஷ்டர்களின் (வார்த்தைகளைக்) கநிஷ்டர்களும் (பிதாமஹர்களின வார்த்தைகளை) பௌத்ரர்களும் (பதியின்வார்த்தைகளை) பத்நிகளும் கேட்கமாட்டார்கள். கீழோர்கள் மேலோர்களும் (மேலோர்கள் கீழோர்களும்) ஆவார்கள் கலியானது பூர்ணமாகையில் உலகமெல்லாம் இவ்விதம் வேதமும் ஸ்மிருதியுமற்றதாகும். அசுத்தமாகத்[1] தர்மத்தின் ஸங்கரமும் ஏற்படும். அவர்களுடைய பரீக்ஷித்திலிருந்து தர்மமுணர்ந்தவர்களும் தேவதைகளையும் பரபரம்மத்தையும் அறிந்தவர்களுமான 'மனிதர்கள் அசுத்தர்களும் பொய்வழக்குரைக்கின்றவர்களுமாவார்கள். தர்மம், நஷ்டமானவர்களிடமிருந்து கேட்பவர்கள் பாவத்தை நிசயமாகச் செய்யும்பொழுது (நஷ்டதர்மத்தைச சொல்லுகிறவர்களுக்குச) சமமானவர்களே. ஆகையால, நன்மையை விரும்புகிறவர்கள் அவர்களோடு ஸம்பாஷத்தாது (அவர்களைத்) தொடவுங்கூடாது அவர்களுடன் ஸங்கமாகாதிருக்கிறதற்காக மூன்று நாள் உபவாஸமிருக்கவேண்டும். பிறகு, கலியுகத்தின் முடிவில் பிராம்மணனும் பசசைநிறமும் பொன்னிறமுமுடையவனும் விஷ்ணுயசஸென்கிற பிராம்மணனுக்குப்புத்ரனும் [2]யாகரூபமான கடிவாளமுள்ளவனும் (எல்லாருக்கும்) பூர்வாஹ்நிதனுமான கல்கியாக அவதரிப்பேன். உயர்ந்த மூக்குள்ள அந்த அச்வம் ஆசுவனமென்கிற (விஷ்ணுயசஸ்வலிக்கிற) அந்தப்ராமத்தில் இருக்கும். பிராம்மணர்களெல்லோரும் அச்வமுள்ளவர்களாயிருப்பார்கள். நானும் அந்தப்பிராம்மணர்களுடன் சேர்ந்து சங்கு முள்ளமிலேசசர்களையும் பாஷண்டர்களையுமே நாசஞ்செய்வேன். கலியில், அப்பொழுது (என்னுடைய) மாயையினாலேயே பாஷண்டமதம் நசிக்கும். அந்தப்பிரளயத்தில நான் முடிவுவரை பாஷண்டர்களைக்கொன்றழிக்கிறேன்' அதன் பிறகு எப்பொழுதும் யாகங்களில் பற்றுள்ளவனுவேன் தவிரவும், குந்தியின்புத்திரரான தர்மபுத்ர ராஜ்யத்தை ஆளும்பொழுது நான்கு சரீரங்களுடைய நான் அளவற்ற கர்மங்களைச்செய்து பிரம்மதேவரால பூஜிக்கப்பட்ட என்னுடைய லோகங்களை அடைவேன். ஓ! பிராம்மணரிரேஷ்ட! [3]ஹரிஸம்,

---

1 நஷ்டதர்மத்தைச் சொல்லுகிறவனுக்குமட, கேட்கிறவனுக்கும் பாவம் ஸமமென்பது.

2 'யாஜ்ஞவல்க்ய:' என்பதுமூலம; 'யாஜ்ஞவல்க்யரின் வமசத்தில் உதித்தவனும்' என்றும் கொள்ளலாம்.

3 இது, முன்சொல்லப்படவில்லை.' இங்கே பலராமாவதாரம் சொல்லப்படவில்லை.

மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்மம், வாமனன், பரசுராமன், தாசரதிராமன், க்ருஷ்ணன், கலகியென்பவை என்னுடைய அவதாரங்கள். [1]வேதமும் [2]ஸ்ருதியும் நூலுடன்தையடைந்து பிரழுது திரும்பவும் என்னை கொண்டுவரும்படி [illegible] முதலில் கிருதயுகத்தில் (எல்லாரும்) வேதமும் கருதிப்புராணமாகக் [illegible] சென்றவைகளான அவதாரங்கள் உன்னை புராணம்வரில் கேட்கியாவது கேட்கப்பட்டிருக்கின்றனவா? வெண்மையுள்ள சிறந்தவைகளுமான என்னுடைய பலஅவதாரங்களை உலகம் நியந்தனை செய்துவிட்டு மறுபடியும் எனதுபிரகிருதியை அடைந்தனை ஒரே உறுதியான புத்தியுள்ளாரே இப்பொழுது இவ்விடத்திலிருக்கிற இப்படிப்பட்ட இந்த என்னுடையதர்சனமானது [illegible] பிரம்மமே! கிருஷ்ணனே! [illegible] நடந்ததும் நடப்பதுமான இந்தவிஷயமாவது [illegible] என்னால் முழுதும் சொல்லப்பட்டது' என்றனன்னர். தேவரும் எல்லாமூர்த்திகளோடும் தரிப்பவரும் விகாரமற்றவனான அந்தபடியான் இவ்வளவுவார்த்தையையும் சொல்லிவிட்டு நிருமலமும் அவ்விடத்திலேயே அந்தர்த்தானமானது மிகுந்தபுலன்களையுடைய பாரதரும் இப்படியான அனுக்ரஹத்தை அடைந்து [illegible] தகாரியமாய் மீளாதிருப்பதற்காகப் பதரிகாசிரமத்தை அடைந்தார் அப்பா! நான் பூவெகங்களுடன்கூடியதும் ஸாங்கியயோகங்களுடன்செய்யப்பட்டதும் அதனால் [3](ஐந்துதினங்களாலசொல்லப்பட்டதால) பஞ்சராத்ரமென்று சொல்லப்பட்டதும் நாராயணருடையவாக்கினை வெளியிடப்பட்டதுமான இந்தமஹோபநிஷத்தை நாரதர் திரும்பவும் பிரம்மாவின் கிருகத்தில் கேட்டுஉணர்ந்தபடி உபதேசித்தார்" என்று சொன்னர்.

யுதிஷ்டிரர், "புத்திமானான அந்தபகவானுடையமகிமை ஆச்சரியமாயிருக்கிறது பிரம்மாவானவர் இதை ஆறியாதவரா? நாரதரிடமிருந்து கேட்டனரே அந்தந்தேவருக்கிருந்தவரும் பிதாமஹரும் எல்லாமறிந்தவருமாயிருந்தும் அந்தப்பிரம்மா அவனற்பரமமுள்ளவிஷ்ணுவினுடைமகிமையை ஏன் அறியவில்லை?" என்றனபடி, பீஷ்மர் சொல்லலானார். "ஓ! ராஜர்ஷிசிரேஷ்டனே! ஆதியும்பிசாசுகளும் தூறுகளும்காலிலங்களும் ஸ்ருஷ்டிகளும் பிரளயங்களும் சென்று

---

1 கர்மகாண்டம்; அல்லது மூன்றுவேதங்கள்.

2 கர்மம், உபாஸநம், ஞானம் ஆகிய மூன்றுகாண்டங்கள்; அல்லது வேதார்த்தவிசாரம்.

3 நான்குவேதங்களுக்கும் நான்குநாள்; ஸாங்கியயோகங்களுக்கு ஒருநாள்.

விட்டனவல்லவா? ஓ! அரசனே! ஸ்ருஷ்டியின் ஆதியில் ஸங்கல்பத்தால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவரும் பிரஜைகளுடைய ஸ்ருஷ்டிகீயசெய்கிற வரும் பிரபுவுமான ப்ரம்மதேவர் பரமருக்மாவும் நியந்தாவும் தமக்குக் காரணரும் தேவர்களிலேஷ்டருமான நாராயணரை நாரதரைக்காட்டிலும் மிகவும் அதிகமாக அறிகிறார் ஆதலால், பிரம்மலோகத்தில்வந்திருந்த மற்றவித்தர்களின்கூட்டங்களுக்கு வேதத்திற்குநிகரான் அந்தபுராணத்தைக் கேட்கசெய்தார். பிரம்மாவானவர் ஆத்மாவையறிந்தவர்களும் ஆத்மத்யானமுடையவர்களுமான [1]இருபத்தெண்ணாயிரம் முனிவர்களை உள்ளபடி கேட்பித்தார். இவ்விஷயம் நாரதமுனிவரால் சொல்லப்பட்ட இது முன்காலத்தில் ஆதிதயனால் அடைபடப்பட்டது. உலகங்களுக்குத் தாபத்தைசெய்கின்றஸூர்யனுக்கு [1]அறுபத்தாறாயிரம்வருஷம் முன்செல்லவேண்டியவர்களாகப படைக்கபபட்டவர்களும் ஆத்மபாவனையுடையவர்களுமான எல்லாருக்கும் ஆதித்யன் உபதேசித்தான். ஐயனே! ஸூர்யனைதொடர்ந்து செல்லுகிறவர்களும் மகாத்மாக்களுமான அந்த முனிவர்களாலே மேருவில்கூடின தேவர்களுக்குச் சிறந்ததான இது சொலலப்பட்டது ஓ! ராஜர்ரேஷ்டனே! பிறகு, முனிசிகாமணியாகிய அலிதனென்கிற பிராம்மணர் தேவர்களிடமிருந்துகேட்டுப [2]பிதாவுக்குச சொன்னார் ஐயா! சந்தனுவென்கிற பிதாவும் எனக்குசொன்னர் ஓ! பாரத! அவரிடமிருந்து நான் கேட்டு உனக்கும் சொன்னேன். தேவர்களானலும் முனிவர்களானலும், இந்தப்புராணத்தைக் கேட்டவர்களெல்லாரும் எங்கும் பரமாத்மாவைப் பூஜித்தவர்களாவார்கள் ஓ! அரசனே! ரிஷிபால சொல்லப்பட்டதும் பரம்பரையாகவந்ததுமான இந்தக்கதையை வாஸுதேவரிடம்பக்தியில்லாதவனுக்கு நீ ஒருவிதத்தாலும் சொல்லக்கூடாது அரசனே! உத்தமமான இந்தசரித்திரத்தை எவன் எப்பொழுதும் பக்தியுடன் சொல்லுவானோ அந்தமனிதன் அப்பொழுதே சுத்தனும் ஸமாதியுள்ளவனுமாகி விரைவில நிலைபெற்றவிஷ்ணுலோகத்தையும் அடைவான் அரசனே! எண்ணிடமிருந்து நீகேட்ட வெவ்வேறான அநேகசரித்திரங்களுள் இது ஸாரமாக எடுக்கப்பட்டது ஓ! அரசே! தேவாஸுரர்கள்மேலே (கடலைக்) கடைந்து அமிருதமெடுக்கப்பட்டது போல முன்காலத்தில் வேதியர்களால் இந்தக்கதையாகிற அமிருதம் எடுக்கபபட்டது. ஒரேமுடிவானதியானத்துடன் ஏகாந்தத்தில் நன்

---

1 *'ஸூர்யனுக்குமுன் செல்லுப்படிபடைக்கப்பட்ட அறுபத்தாறுயிரம் ரிஷிகள்'* என்பது வேறுபாடம்.

2 *'பித்ருர்'* என்பது மூலம்; *'பித்ருதேவதைகளுக்கு'* என்பர் சிலர்.

முகஇருந்து இதை எப்பொழுதும் படிக்கிறவனும் கேட்கிறவனுமான மனிதன் பெரியஸ்வேதத்வீபத்தையடைந்து சந்திரன்போன்ற காந்தியுள்ளவனாகி ஆயிரம்கிரணங்களுள்ள ஸ்வயம்பிரகாசரானநாராயணரை அடைவான். இதில் ஸந்தேகமில்லை ரோகியானவன் இந்தக்கதையை ஆதிமுதல்கேடடால் ரோகத்திலிருந்தும் விடுபடுவான். தூரியவேண்டுமென்றுவிரும்புகிறவன் விரும்பியவற்றைஅறிவான். பக்தன் பக்தனுக்குரியகதியை அடைவான். வேந்தனே! உன்னனும் புருஷோத்தமரானபகவான் எப்பொழுதும் பூஜிக்கப்படதக்கவர். அவமீரா, ஸகல ஜகத்துக்கும் தாயும் தந்தையும் குருவுமாயிருக்கிறவர் கைவன்மையுள்ள யுதிஷ்டிர! 'பிராம்மணர்களுக்கு ஹிதகரானவரும் ஸாதனரும் மகாபுத்திமானும் பகவானுமானஜனார்த்தனர் உன்னிடம் ப்ரீதியடையக்கடவர்'' என்று சொன்னர் ஜனமேஜயமகாராஜரே! தர்மராஜரும் அவருடைய ஸஹோதரர்களுமவரும் சிறந்த இந்தக்கதையைக்கேட்டு நாராயணரையே கதியாகக்கொண்டார்கள் பாரதரே! 'பகவானை அந்தப்புருஷரே ஜயமுள்ளவர்' என்று எப்பொழுதும் இந்தஜபத்தைசெய்துகொண்டு ஸரஸ்வதியினஸாரமான புராணத்தைப் படித்தார்கள். எங்களுக்குக்குருவும் சிறந்தவரும் சிறந்ததும்ஜபிப்பதற்கு உரியதுமான இதைசசொன்னவருமான கிருஷ்ணத்வைபாயனரென்கிறமுனிவர் நாராயணரைத்துதித்துக்கொண்டு எபபொழுதும் அமிருதத்துக்கிருப்பிடமான பாற்கடலை ஆகாயமார்க்கமாக அடைந்து தேவர்களுக்கெலலாம் ஈசரானபகவானைப் பூஜித்துவிட்டு மறபடியும் தமதாஸ்ரமத்திற்கு வருவார். பீஷ்மர், '' நாரதரால் சொல்லப்பட்ட இந்தச்சரித்திரமுழுதும் உனக்கு என்னல கொலலப்பட்டது. பரம்பரையாகவந்த இது முன்காலத்தில் என்னுடைய பிதாவினல் எனக்குச் சொல்லப்பட்டது'' என்று சொன்னர்'' என்றர் வைசம்பாயனரால் சொலலப்பட்ட இந்த எலலாசசரித்திரமும் உங்களுக்குச சொல்லப்பட்டது. அந்தசசரித்திரத்தைக்கேட்டு ஜனமேஜயர் விதிப்படி நன்றாக அனுஷ்டித்தார். நீங்களெல்லோரும் தவருசெய்தவர்களும் விரதத்தை அனுஷ்டித்தவர்களுமாயிருப்பவர்கள். மைமிசாரண்யவாவிகளான நீங்களெலலோருக்கும் வேதவிததாக்களும் முக்கியர்களுமாயிருக்கிறீர்கள். சௌனகருடைய மஹாஸத்ரத்தையடைந்த பிராம்மணர்களான நீங்களெலலாரும் நன்குமஹாமஙசெய்யபபட்டவர்களால் சார்வதரானபரமேஸ்வரரைப பூஜியுங்கள். பரம்பரையாகவந்த இது என்னுடைய பிதாவால் முன்காலத்தில் எனக்குசசொல்லப்பட்டது'' என்று சொன்னர்.

* L அள

முந்நூற்றுநாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ரம்மாழதலியோர் தவப்புரிந்ததும் நாராயணர் வாமளித்ததும்.)

சௌனகர், "ஸூதபுத்ரரே! யஜ்ஞங்களில் முந்தினபாகத்தைக்கிரஹிப்பவரும் பிரபுவும் வேதவேதாங்கங்களை அறிந்தவரும் பகவானுமான அந்தத்தேவர் எப்படி எப்பொழுதும் யஜ்ஞங்களைச் செய்கிறவராகிறார்? கூர்மமுள்ளவரும் பகவானுடைய அம்சமும் பிரபுவுமான அவர் எப்படி நிவ்ருத்திதர்மத்தையும் அடைந்தார்?, பகவானுடைய அந்தப்ரபுவே எப்படி நிவ்ருத்திதர்மங்களைச் செய்தார். தேவர்கள் எப்படி பிரவ்ருத்திதர்மங்களில் பாகத்துக்கு உரியவர்களாகச் செய்யப்பட்டார்கள்? (விஷயத்திலிருந்தும்) திரும்பின புத்தியுள்ளவர்கள் எப்படி நிவ்ருத்திதர்மங்களையுடையவர்களாகச் செய்யப்பட்டார்கள். வெகுநாளாயிருப்பதும் ரஹஸ்யமுமான எங்களுடைய இந்தச்சந்தேகத்தை நிவிருத்திசெய்யும். தர்மத்தைத்தருகின்ற நாராயணருடைய கதைகளை நீர் கேட்டிருக்கிறீர்" என்றுகேட்க, ஸூதபுத்ரர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! உத்தமரானசௌனகரே? புத்திமானை வ்யாஸருடைய சிஷ்யரிடம் ஜனமேஜயர்கேட்டதும் புராணத்தைச்சேர்ந்ததுமான அதை உமக்குச் சொல்லுவேன். தேஹிகளுக்கு அத்தராத்மாவான பகவானுடைய மாஹாத்ம்யத்தைக்கேட்டு மிக்கஅறிவையுடைய ஜனமேஜயர் வைசம்பாயனரைநோக்கி, "பிராம்மணரே! பிரம்மாமுதல் தேவர்கள், அஸுரர்கள், மானவர்கள்வரையிலுள்ள இந்த உலகங்கள் எல்லாம் அபிவிருத்தியின்பொருட்டுச் சொல்லப்பட்ட கர்மங்களிலே பற்றினவைகளாகக் காணப்படுகின்றன. மோக்ஷமோ உம்மால் சாந்தமும் பரிமுமாயிருக்கிறதாகச்சொல்லப்பட்டது. எவர்கள் இம்மையில் புண்ணியபாவமற்றவர்களாகி முக்தர்களாகின்றார்களோ அவர்கள் ஆயிரம்கிரணங்களுள்ள ஸூர்யாந்தர்யாமியான தேவரை அடைகின்றார்களென்று கேட்டோம். எல்லாத்தேவர்களும் (அந்த மோக்ஷதர்மத்தைச்செய்ய அரிதென்று) விட்டுவிட்டு ஹவ்யகவ்யங்களை அருந்துகிறவர்களானார்கள். அப்படிப்பட்ட ஸனாதனமான மோக்ஷதர்மமானது அனுஷ்டிக்க அரியது. மேலும், தம்காலத்தின் அளவை நிஜத்தும் (ஸ்ருஷ்டிமுதலான) பிரஜாபிருத்தியை அடைந்தவர்களான பிரம்மா, ருத்ரர், வஸிஷ்டரானைக்கொன்றவரும் பிரபுவுமான இந்தி

ரன், ஸூர்யன், சந்திரன், வாயு, அக்கினி, வருணன், ஆகாயம், பிருதிவி, மற்றமுள்ளதேவர்கள் ஆகிய இவர்கள் தமக்கு ஏற்பட்ட நாசத்தை அறியவில்லையா ? அதனால்தான் அவர்கள் நிலையுள்ளதும் நாசமில்லாததும் கெடுதலில்லாததுமான மோக்ஷமார்க்கத்தை அடையவில்லையா ? கிரியையுள்ளவர்களுக்குக் காலத்தின்பரிமாணமென்கிற இது பெரிதான தோஷம். வேதியரே !* என்னுடைய இருதயத்தில் முளையடிக்கப்பட்டதுபோலிருக்கிற இந்தஸந்தேகத்தை இதிஹாஸத்தைச்சொல்லி நிவிருத்திசெய்யும். இதைக்கேட்பதில் எனக்குப் பெரியஞ்தூஹலம் உண்டாயிருக்கிறது. ஓ! பிராம்மணரே! தேவர்கள் யாகங்களில் ஏன் பாகத்தைக்கிரஹிப்பவர்களாகச சொல்லப்பட்டார்கள்? ஓ! பிராம்மணரே ! எதற்காகத் தேவர்கள் யாகத்தில் பூஜிக்கப்படுகிறார்கள் ? ஓ! பிராம்மணர்ரேஷ்டரே ! எவர்கள் யாகங்களில் பாகத்தைக் கிரஹிக்கின்றார்களோ அவர்கள் பெரிய யாகங்களாலே (யாரைப்) பூஜித்து யாருக்குப் பாகத்தைக் கொடுக்கின்றார்கள் ?" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

" ஓ! அரசரே! ஆச்சரியம். உம்மால் மிகவும் ரஹஸ்யமானகேள்வியானது கேட்கப்பட்டது. இந்தக்கேள்வியானது தவம் செய்யாதவனும் வேதத்தையறியாதவனும் புராணங்களே அறியாதவனுமாயிருப்பவனால் ருஜுவாகச்சொல்லமுடியாது. ஸந்தோஷம். முன்காலத்தில் கிருஷ்ணத்வைபாயனரும் வேதங்களைப்பிரித்தவரும் மகாமுனிவரும் எனக்குத்குருவுமான வ்யாஸரிடம் நான்கேட்டதை உமக்குச் சொல்லுகிறேன். எல்லோரும் சேர்ந்தவர்களும் அடக்கமுள்ளவர்களும் சுத்தர்களும் ஆசாரமுள்ளவர்களும் கோபத்தைவென்றவர்களும் இந்திரியங்களை ஜயித்தவர்களுமான ஸுமந்து, ஜைமினி, பலமானவிரதமுடைய பைலர், நான்காவதுசிஷ்யனானான், ஐந்தாமவராகக் கருதப்பட்டசுகர் ஆகிய இந்த ஐந்து சிஷ்யர்களுக்கும் நான்கு வேதங்களையும் ஐந்தாம் வேதமான பாரதத்தையும் அழகுள்ளதும் விஸ்தாரமானும் சாரணர்களாலும் சேவிக்கப்பட்டதும் பர்வசங்கிகளில் சிறந்ததுமான மஹாமேருவில் அத்தியயனம் செய்வித்தார். வேதங்களை அப்யாஸம் செய்துகொண்டிருக்கிற எங்களுக்கு ஒருஸமயம் நீர்கேட்டதான இந்த ஸந்தேகம் உண்டாயிற்று. அவர் எங்களுக்கு நன்றாகச் சொல்லினர். ஓ! பாரதரே! உமக்கு இப்பொழுது சொல்லவேண்டிய விஷயமானது அவரிடமிருந்து நான் கேட்டது. எல்லாருடைய அஜ்ஞானஇருளையும் நிவிருத்திக்கிறவரும் பராசரருக்குப்புத்திரரும் காந்திபொருந்தியவருமான வ்யாஸர் சிஷ்யர்

களுடைய வார்த்தையைக்கேட்டு, பிறகு, ஒருவார்த்தை சொல்ல லானர். 'ஓ! பிகசசிறந்தவர்களே! நிகழ்ந்ததையும் நிகழ்கின்றதை யும் நிகழ்வதையும் அறியவேண்டுமென்று என்னால் பிகப்பெரிதும் கடுமையுள்ளதுமான தவமானது செய்யப்பட்டது. பாற்கடலின்கரை யில் தவம்செய்தவனும் இந்திரியங்களை அடக்கினவனுமான எனக்கு நாராயணருடைய அனுக்கிரகத்தால் விரும்பியபடி மூன்றுகாலங்க ளிலுமுள்ள பதார்த்தங்களை அறிகிறதான இந்த ஞானமான்து உண் டாயிற்று. ஆகையினால், உத்தமமான ஸாங்கேதகத்தோடு நியாயத்தை அனு ஸரித்துச் சொல்லுவேன்; கேளுங்கள். கல்பத்தின் ஆதியில் நடந்தபடி நான் ஞானக்கண்ணால் பார்த்தேன். ஸாங்கியத்தையும் யோகத்தை யும்அறிந்தஜனங்களால் பரமாத்மாவென்று சொல்லப்படுகிற அவர் தம் முடைய கர்மத்தினால் மஹாபுருஷரென்கிற பெயரை அடைகிறார். அவரிடமிருந்தும் அவ்யக்தமுண்டாயிற்று. பண்டிதர்கள் அந்த அவ் யக்தபுருஷனைப் பிரதானமாகச சொல்லுகிறார்கள். அவ்யக்தனை ஈச்வரனிடமிருந்தும் உலகஸ்ருஷ்டிக்காக வ்யக்தமுண்டாயிற்று. வ்யக்தமாயிருப்பதையடைந்து பிதாமஹரைஉண்டுபண்ணின அந்த அனிருத்தரோ உலகங்களில் மகானை ஆத்மாவென்று சொல் லப்படுகிறார் அகங்காரமென்று சொல்லப்படுகிற அவர் எல்லாத் தேஜஸின்ஸ்வரூபமுமாயுள்ளவர். பிருதிவி, வாயு, ஆகாயம், அப்பு, ஜ்தாவதான தேயுவென்கிற ஐந்துவிதமான மகாபூதங்கள் அஹங் காரத்தாலுண்டுபண்ணப்பட்டன மகாபூதங்களைப படைத்துவிட் டுப் பிறகே அந்தக்குணங்களைப்படைத்தார். சரீரமுடையவர்கள் பூதங்களிலேருந்தும் உண்டானார்கள். அவர்களைத் தெரிந்துகொள். மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர், க்ரது, மகாத்மாவான வஸிஷ்டர், ஸ்வாயம்புவமனு ஆகிய எண்மரும் உலகங்கள் நிலைத்திருப் பதற்குப் பிரதானமான் காரணங்கள். உலகங்களுக்குப் பிதாமஹரான பிரம்மாவினவர் உலகங்களின்வித்திக்காக வேதாங்கங்களோடும் யஜ் ஞங்களோடும் யஜ்ஞாங்கங்களோடுங்கூடின வேதங்களைச் சிருஷ்டித் தார். எட்டுப்பிரகிருதிகளிடமிருந்தும் இந்த எல்லா ஜகத்துமுண்டா யிற்று. கோபஸ்வரூபரானருத்ரர் உண்டானர் அவர், வேறுப்பின் மரைத் தாம் சிருஷ்டித்தார். இந்தப்பதினொரு ருத்திரர்களும் விகார புருஷர்களாகக் கருதப்பட்டார்கள். உலகங்களின் வித்திக்காக உண் டான அந்த ருத்ரர்களும் தேவரிஷிகளான எல்லாப்பிரகிருதிகளும் பிரம்மாவினிடம்சென்று, 'ஓ! பகவானே! ஸமர்த்தரான உம்மாலே நாங்கள ஸ்ருஷ்டிக்கப்பட்டோம்.' ஓ! பிதாமஹரே! யார் எந்த

அதிகாரத்திலிருக்கவேண்டும்? உம்மால் நியமிக்கப்பட்டகார்யத்தைப் பார்க்கிறதென்கிற அதிகாரத்தை அஹங்காரத்தையுடைய ஒருவன் எப்படி பரிபாலிக்கலாம்? அதிகாரத்தில்விஷயத்தைப்பார்க்கிறவனுக்குப் பலத்தைக்கொடும்' என்று சொன்னார்கள். இவ்விதம் சொல்லப்பட்ட மகாதேவரான் பிரம்மாவானவர் அந்ததேவர்களை நோக்கி, 'ஓ! தேவர்களே!, நான் உங்களால் சங்குகெரிவிக்கப்பட்டேன். உங்களுக்கு மங்களமுண்டாகட்டும். 'உலகங்களுடையஎல்லாவியவஹாரத்தினுடையஅதிகாரமும் எபபடி செய்யத்தக்கது? உங்களுக்கும் எனக்கும் எப்படி பலக்குறைவு உண்டாகாமலிருக்கும்?' என்கிற இந்தச்சிந்தையானது உங்களுக்குண்டானதுபோல எனக்கு முண்டாயிற்று. (ஆகையால்,) இபபொழுது நாம்எல்லாரும் உலகங்களுக்குஸாக்ஷியும் அவயக்கருமான மஹாபுருஷரைச சரணமடைவோம் எது நன்மையோ அதை நமக்கு அவர் சொல்லுவார்' என்று சொன்னர். பிறகு, அந்தரிஷிகளும் தேவர்களும் பிரம்மாவுடன் உலகங்களின்ஹிதத்தைவிரும்பிப பாற்கடலின்வடகரையை அடைந்தார்கள். அவர்கள் வேதத்தில்விதிக்கப்பட்டதும் பிரம்மாவினல்சொல்லப்பட்டதுமான தவத்தைச செய்தார்கள் மஹாநியமமென்கிற அந்தத்தவத்தினனுஷ்டானமானது மிகவும் கடுமையுள்ளது. எல்லோரும் மேல்நோக்கினபார்வையும் பாஹுவுமுடையவர்களும் ஒற்றைக்காலால்நிறகிறவர்களும் கட்டைபோலானவர்களும் ஸமாதியுடையவர்களுமாகி ஒருவழிபபட்டமனத்தையுடையவர்களாஞர்கள். அவர்கள் ஆயிரம் தேவவருஷங்கள மிகவும்கடுமையானதவத்தைச் செய்து, 'ஓ! ஓ! பிரம்மாவுடன்கூடின தேவர்களே! தவத்தையேதனமாக்வுடைய முனிவர்களே! உங்களெல்லாரையும், 'ஸ்வரவா' என்ற பிரஸ்னத்தினுல் பூஜித்துச் சிறந்தஒருவார்த்தை சொல்லுகிறேன். உங்களுடைய காரியத்தை நான் அறிந்தேன். அதுவும் உலகங்களுக்குப் பெரியநன்மையும் பிரவிருத்திமார்க்கத்துக்குரியதுமானது. (ஆகையால்,) உங்களுக்குப பலத்தின்விருத்தியானது செய்யத்தக்கது. ஓ! தேவர்களே! எனதுஉயஆராதனத்திலவிருப்பத்தால் நீங்கள் மிக்க தவத்தைசசெய்தீர்கள். ஓ' பெரியபலமுடையவர்களே! இந்ததவத்தின் உத்தமமானபயனை அனுபவிப்பீர்கள். உலகங்களுக்கெல்லாம் குருவும் பிதாமஹருமான இந்தபபிரம்மாவும் தேவர்களிற்சிறந்தவர்களான நீங்களும் ஸமாதியுடன் ஆராதியுங்கள். எல்லோரும் எங்காலும் யஜ்ஞங்களில் எனக்குப பாகங்களை ஏற்படுத்துங்கள். ஓ! ஈஸ்வரர்களே! அபபொழுது, அதிகாரதாதிற்குத்தகபடி சோமபத்தைச

சொல்லுவேன்' என்னும் வேதவேதாங்கங்களால்அலங்கரிக்கப்பட்ட இன்பமானவசனத்தைச் செவியுறுவார்கள். தேவர்களுக்கும்தேவரான பகவானுடைய இந்தவார்த்தையைக்கேட்டு உடனே அந்தஎல்லாத் தேவர்களும் பிரம்மாவும் அந்தமகாமுனிவர்களும் உடல்புளகித்து வேதத்தில்காணப்பட்டவிதிப்படி விஷ்ணுவைத்தேவதையாகவுடைய யாகத்தைச்செய்தார்கள். அந்தஸத்திரமென்கிறயாகத்தில் எப்பொழுதும் பிரம்மாவானவர் தாமே பாகத்தைக் கல்பித்தார். தேவர்களும் தேவரிஷிகளும் பகவானுக்குரித்தைத் தங்கள்தங்கள் பாகங்களைக் கல்பித்தார்கள். கிருதயுகத்திலுள்ளதர்மங்களையுடைய அந்தப்பாகங்கள் மிகவும் கௌரவிக்கப்பெற்று ஆதித்யனுக்கு நிகரான நிறமுடையவரும் தமஸுக்கு அப்புறபட்டவருமான அந்தப்புருஷரைப் பெரியவரும் எங்கும் வியாபித்தவரும் பிரகாசிக்கின்றவரும் நியமனம் செய்கிறவரும் வரமளிப்பவரும் பிரபுவுமாகத் தெரிவிக்கின்றன. அதன்பிறகு வர்த்தையளிப்பவரும் தேவருமான மஹேஸ்வரர் சரீரமில்லாதவரும் ஆகாயத்திலிருப்பவருமாகி (யாகத்தில்) இருக்கிறவர்களான அந்தததேவர்களையெல்லாம் நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார். 'யாரால் எந்தப்பாகமானது கல்பிக்கப்பட்டதோ அது அப்படியே என்னை அடைந்தது. ப்ரீதியடைந்தவனை நான் இப்பொழுது ஆனிருக்திரூபமான பயனை அளிக்கிறேன். ஓ! தேவர்களே! இது உங்களுக்கு என்னுடைய அனுக்ரகத்தாலுண்டான அடையாளம். நீங்கள் பூர்ணமான சிறந்ததக்ஷிணைகளையுடைய யாகங்களாலே யுகந்தோறும் (என்னைப்) பூஜித்துப் ப்ரவிருத்திக்கும்படியு பயனை அடையுங்கள். ஓ! தேவர்களே! எல்லா உலகங்களிலும் எந்தமனிதர்கள், யஜ்ஞங்களால் ஆராதிப்பார்களோ அவர்கள் உங்களுக்கு வேதத்திலேற்படுத்தப்பட்ட பாகங்களைக் கல்பிப்பார்கள். இந்தப் பெரியயாகத்தில், எவன் எந்தப்படி எனக்குப் பாகத்தைக் கல்பிப்பானோ, அவன் அந்தப்படியே யாகத்தில் பாகத்திற்கு யோக்யனாக வேதஸ்திதியுள்ள விதிவாக்கியத்தில் என்னால் செய்யப்பட்டிருக்கிறான். நீங்கள் யஜ்ஞபாகத்தின் பயனுக்குயோக்யர்களும் என்னாலே அதிகாரத்தில் நியமிக்கப்பட்டவர்களும் உலகத்தில் எல்லாவிஷயங்களையும் பார்க்கிறவர்களுமாகி உலகங்களை விருத்திசெய்யுங்கள்; ப்ரவிருத்தியின் பயனால் கௌரவிக்கப்பட்டு நடக்கப்போகின்ற கர்மாக்களாலே விருத்திசெய்யப்பட்ட பலத்தையுடையவர்களாகி உலகங்களைத் தரிப்

---

1 தாங்கள்கல்பிக்கவேண்டியதைக்கல்பித்தார்கள்என்றபடி. [யத.

2 செய்தபடிதான்பெறுதல், அல்லது ஒன்றுக்கேற்கமடங்கியாகவுடை

பீர்கள். நீங்கள் மனிதர்களாலே எல்லாயாகங்களிலும் ஆராதிக்கப் பெற்று, அதனால் என்னைச் சிந்திப்பீர்கள். இதுதான் எனக்கு நீங்கள் செய்கிறபூஜை. இதற்காகவே வேதங்களும் ஔஷதிகளோடு யஜ்ஞங்களும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. பூமியில் நன்முகச்செய்யப்பட்ட இந்தயாகங்களாலே தேவர்கள் திருப்தியை அடைவார்கள். ஓ! தேவர்களில் சிறந்தவர்களே! உங்களுக்குப் பிரவிருத்தியின் குணத்தால் கல்பிக்கப்பட்ட இந்த சிருஷ்டியானது இவ்வுலகத்தில் கல்பதத்தின்முடிவு வரையில் என்னால் செய்யப்பட்டது. ஓ! சர்வராத்மாளே! அதிகாரத்திற்குத் தக்கப்டி உலகங்களின் ஹிதத்தை ஆலோசியுங்கள். மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்தியர், புலஹர், க்ரது, வஸிஷ்டர் என்ற இந்த ஏழுவரும் மனத்தினால் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள். இவர்கள் வேதவித்துக்களும் முக்கியர்களான வேதாசாரியர்களுமாகக் கல்பிக்கப்பட்டார்கள். பிரவிருத்திதர்மமுடையவர்களாகி ஸ்ருஷ்டிகர்த்தர்ஸ்தானத்திலும் கல்பிக்கப்பட்டார்கள். அநிருத்தரென்றுசொல்லப்பட்ட இவர் கிரியையோடு கூடினவர்களுக்கு மார்க்கமும் வியக்தமானவரும், ஸகாதனரும் பிரஜைகளின் ஸ்ருஷ்டியைச்செய்கிறவருமாய பிரபுவுமாயுள்ளவர். ஸநர், ஸநத்ஸுஜாதர், ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், கபிலர், ஏழாமவரான ஸநாதனர் ஆகிய இந்த ஏழுரிஷிகளும் பிரம்மாவினுடையமானஸபுத்திரர்களாகச சொலலபபட்டார்கள். அவர்கள், தானுகஉண்டான ஞானத்தையுடையவர்களாகி நிவிருத்திதாமத்தை அடைந்தார்கள். அவர்கள் யோகத்தை அறிந்தவர்களும் முக்கியர்களும் ஸாங்கியசாஸ்திரத்தில் வல்லவர்களும் தர்மசாஸ்திரங்களில் ஆசாரியர்களும் மோகூதர்மத்தைப் பிரவிருத்திச்கச செய்கிறவர்களுமானவர்கள். அவ்விடத்திலிருந்தும் முதலில மூன்று குணங்களையுடையவனும் மகானுமான நான் வெளியில வந்தமையால் அவ்யக்தத்தைக்காட்டிலும் மிகவும் மேலான கேஷத்திரஜ்ஞனென்று எண்ணப்பட்டேன். அப்படிப்பட்ட நான் கிரியையுள்ளவர்களுக்கு மறுபடி திரும்புதலில்லாத மார்க்கமாயுள்ளவன் எந்த ஜந்துவானது பிரவிருத்தியிலோ நிவிருத்தியிலோ எந்தளந்தக்கர்மத்தில் ஏப்படி படைக்கப்பட்டதோ அது ஸ்வாதீனமில்லாமல் அபபடியே அதன் அதன் பயனை அனுபவிக்கிறது. ஜகத்தினுற்பத்தியைச் செய்கிறவரும் பிரபுவுமான இந்தப்பிரம்மாவானவர் உலகங்களுக்குக் குருவாயிருக்கிறவர். இவர் உங்களுக்கு மாதாவும் பிதாவும் பிதாமஹருமானவர். இவர் என்னால் உபதேசிக்கப்பட்டு எல்லாப்பிராணிகளுக்கும் வரமளிப்பவராவார். இவருடைய நெற்றியிலிருந்துமுண்டானவரும் இவருக்குப்

புத்திரருமான ருத்ரரானவர் பிரம்மாவினால் உபதேசிக்கப்பட்டு எல்லாப் பிராணிகளையும் காக்கின்ற பிரபுவானார். செல்லுங்கள்! விதிப்படி உங்கள் அதிகாரங்களைப் பாருங்கள். எல்லா உலகங்களிலும் எல்லாக் கிரியைகளும் நடக்கட்டும். தாமதிக்கவேண்டாம். ஓ! தேவஸ்ரேஷ்டர்களே! பிராணிகளுக்குக் கர்மங்களையும் கதிகளையும் இகத்தில் ஆயுள்வரையறையையும் கொடுங்கள். கிருதயுகமென்கிற சிறந்த இந்தக்காலமானது நடக்கிறது. இந்தயுகத்தில் பாகத்தில் பசுக்களை ஹிம்சிக்கக்கூடாது அது வேறுவிதமாக மாறுகிறதில்லை. ஓ! தேவர்களே! இந்தயுகத்தில் தர்மமானது நான்குபாதங்களோடு பூர்ணமாகவே இருக்கிறது பிறகு, திரேதாயுகம் வரும். அதில் (வேதம்) மூன்றாக பிரியும் யாகத்தில் பசுக்கள் கொல்லப்பட்டு மரணத்தையடையும் தர்மத்திற்கு நான்காவது பாதம் குறைந்து போம். பிறகு, துவாபரமென்கிற (புண்ணியபாபங்கள் ஸமமாகக்) கலந்தகாலமானது வரும். அந்தயுகத்தில தர்மமும் இரண்டு பாதம் குறைந்ததாகும். பிறகு, கலியுகஷீண முன்னிட்ட கலியுகம் வந்தவுடன், தர்மமானது எங்கேயாவது ஒரிடத்தில் ஒருபாகத்துடனிருப்பதாகும்' என்று சொன்னார் தேவர்களும் தேவரிஷிகளும், இவ்விதம் சொல்லுகிறவரும் குருவுமான பகவானைநோக்கி, 'ஓ! பகவானே! தர்மமானது ஒருபாதத்துடனிருந்து எங்கேயாவது ஒரிடத்தில் ஒதுங்கினகாலத்தில் நாங்கள் என்னசெய்யவேண்டும்? அதை எங்களுக்குச் சொலலும்' என்று கேட்டார்கள் ஸ்ரீபகவான், 'எந்த இடத்தில் நல்ல ஆசாரத்தையுடையகுருக்கள் பூஜிக்கப்படுகிறார்களோ, எந்தவிடத்தில் தர்மமானது குறையாமலிருக்கிறதோ அவ்விடத்தில் நீங்கள் வசிக்கவேண்டும் தேவஸ்ரேஷ்டர்களே! எந்தவிடத்தில் வேதங்களும் யஜ்ஞங்களும் தவமும் ஸத்யமும் இந்திரியநிக்ரஹமும் அஹிம்ஸையும் தர்மத்துடன் சேர்ந்துநடக்குமோ அந்த இடத்தை நீங்கள் அடையுங்கள் அதர்மமான து உங்களைப பரித்தால் ஸ்பரிசிக்காமலிருக்கட்டும்' என்று சொன்னார் அந்தப்படி பகவானாலே உபதேசிக்கப்பட்ட ரிஷிஸமூகங்களோடு கூடின அந்தத்தேவர்கள் பகவானுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு இஷ்டமான இடங்களை அடைந்தார்கள். தேவர்கள் சென்றபிறகு, பிரம்மாவருவர்மாதத்தம் "அதிருத்த சரீரத்திலிருக்கிற அந்தப்பகவானைப் பார்க்கவிருப்பமுடையவராயிருந்தார். (அப்பொழுது,) தேவராவவர் பெரிய அர்க்யசிரஸைச் செய்துகொண்டு ஸாங்கமான வேதங்களை ஆவிர்பூதி செய்கிறவரும் கமண்டலுவையும் தர்ிதண்டத்தையும் தரிக்கிறவருமாகி அவருக்குத்

தரிசனம்கொடுத்தார். பிறகு அப்வத்தின்சிரஸையுடையவரும் அள வற்றதேஜஸ்ஸுடையவருமான அவரைப் பார்த்து உலகங்களுக்குக் கர்த்தாவும் பிரபுவுமானபிரம்மாவானவர் உலகங்களுடைய நன்மையை விரும்பி வரத்தையளிக்கின்றவரான அவரைத் தலையால் வணங்கி அஞ் சலிசெய்துகொண்டு மூன்று நின்றார். அப்பொழுது பகவான் அர் தப்ரிம்மாவை ஆலிங்கனம் செய்துகொண்டு ஒருவார்த்தைசொல்லி னர். 'நீர் விதிப்படி உலகங்களின் காரியங்களுடையஎல்லாநிலைமை களையும் விசாரியும். நீர் எல்லாப்பிராணிகளையும் தரிக்கிறவர். நீர் பிரபு. நீர் ஜகத்திற்குக் குரு. ஆகையால், நான் உம்மிடம் பாரத்தைவைத்து விட்டு உடனே ஸந்தோஷத்தையடைவேன். தேவர்களுக்குவேண் டியகாரியமான்று உமக்கு ஸாத்யமில்லாததாகிறபொழுது நான் [1]ஆத் மஜ்ஞானத்தைக்கொடுத்துக்கொண்டு அவதாரத்தை அடைவேன்' என்று சொன்னார். இவ்விதம்சொல்லிவிட்டுப் பகவான் அவ்விடத்தி லேயே மறைந்தார். அவரால்உபதேசிக்கப்பட்டப்ரம்மாவும் சீக்கிரமா கத் தம் உலகத்தை அடைந்தார். இவ்விதம் மஹாபாக்கியவானும் ஸநாதனருமான அத்தப்பத்மநாபர் எப்பொழுதும் யாகங்களில் முதற் (பாகத்தை) கிரஹிக்கிறவரும் யாகங்களைத் தரிப்பவருமாகச்சொல்லப் பட்டார். அக்ஷயமான தர்மத்தையுடையவர்களுக்கு ஸாதனமான நிவி ருத்திதர்மத்தையுமடைந்தார்; உலகத்தினுடையவிசித்திரத்தன்மை பைச்செய்து பிரவிருத்திதர்மங்களையும் செய்தார். பிரஜைகளுக்கு அவர் ஆதி; அவர் மத்தியம்; அவர் முடிவு; அவர் தரிப்பவர்; அவரே தரிக்கத்தக்கவர்; அவரே கர்த்தா; அவரே கார்யம்; யுகத்தின்முடிவில் உலகங்களைத் தம்மிடமொடுக்கிக்கொண்டு நித்திரைசெய்து யுகத்தின் ஆதியில் விழித்து ஜகத்தைப் பலவிதமாய் ஸ்ருஷ்டித்தார். நிர்க்குண ரும் மஹாத்மாவும் உற்பத்தியில்லாதவரும் விஸ்வரூபரும் எல்லாத் தேவர்களுக்கும் ஸ்தானமும் மகாபூதங்களுக்கு அதிபதியும் ருத்ரர்க ளுக்குப் பதியும் அஸ்வினிதேவர்களுக்குப்பதியும் வஸுக்களுக்குப் பதியும் வாயுக்களுக்குப்பதியும் ஆதித்யர்களுக்குப்பதியும் வேதங்க ளுக்கும் யஜ்ஞங்களுக்கும்பதியும் வேதாங்கங்களுக்குப்பதியும் எப் பொழுதும் ஸமுத்திரத்தில் வஸிப்பவரும் (பாவங்களை) ஹரிப்பவரும் தர்ப்பைபோன்ற கேசங்களையுடையவரும் சாந்தியுடையவரும் எல் லாப்பிராணிகளுக்கும் மோக்ஷதர்மத்தை உபதேசிப்பவரும் தவங்க ளுக்கும் தேஜஸ்ஸுகளுக்கும் யஸஸ்ஸுகளுக்கும்பதியும் எப்பொழு

---

1 'அமானுஷகரீமத்தால் என்னைத் தெரிந்துகொள்ளும்படிசெய்து கொண்டு' என்றுகருத்து.

தம் வாக்குக்களுக்குப்பதியும் நதிகளுக்குப்பதியும் ஜடைகளுள்ள வரும் ஒருகொம்புள்ள வராகமானவரும் புத்திமானும் ஸூர்யரூபரும் அஸ்வத்தின்சிரம்போன்ற சிரத்தையுடையவரும் எப்பொழுதும் (வாஸுதேவர், ஸங்கர்ஷணர், பிரத்யும்நர், அநிருத்தர் என்கிற) நான்கு மூர்த்திகளைத்தரிப்பவரும் ஸூக்ஷ்மமாயிருப்பவரும் ஞானத்தால் பார்க்கக்கூடியவரும் ஜரையற்றவரும் நாசமற்றவருமான அந்தத்தேவருக்கு நமஸ்காரம் செய்யுங்கள். அழிவற்ற அந்தத்தேவர் எங்கும் கமனமுள்ளவராக ஸஞ்சரிக்கிறார். அவர் இத்தப் பரப்ரம்மம்; சாஸ்திரஞானமாகிறநேத்ரத்தால் பார்க்கத்தக்கவர். இவ்விதமான இது முன்காலத்தில் என்னுள் ஞானநேத்ரத்தால் க்ரணப்புட்டது. நீங்கள் கேட்டமையால் நான் அவற்றையெல்லாம் உள்ளபடி சொன்னேன். ஓ! சிஷ்யர்களே! நான் சொல்வதைச் செய்யுங்கள். ஸ்வயானஹரியை உபாஸியுங்கள். வேதங்களிலுள்ளசப்தங்களால் துதியுங்கள். விதிப்படி பூஜியுங்கள்' என்று சொன்னார். இவ்விதம் புத்திமானான அந்தவேதவ்யாஸர், அவருடையசிஷ்யர்களான நாங்கள் சிறந்ததர்மத்தையுணர்ந்த புத்திரரான சுகர்ஆகிய எல்லோருக்கும் சொன்னார். அரசரே! எங்களுடைய உபாத்தியாயரான அவரும் எங்களோடு நான்குவேதங்களிலுமிருந்துண்டான ரிக்குகளாலே அந்தஹரியைத் துதித்தார். நீர்என்னிடம்கேட்ட இவற்றையெல்லாம் உமக்குச் சொன்னேன். ஓ! அரசரே! இந்தப்படி முன்காலத்தில் த்வைபாயனரென்கிறகுருவானவர் எனக்குச் சொன்னார். எந்த மனிதன் ஒவ்வொருநாளும் பகவானுக்குநித்து நமஸ்காரம் செய்து விட்டுப் புத்தியை நன்றாகச்செலுத்தி இதைக்கேட்பானோ, எவன் படிப்பானோ அவர்கள் நோயில்லாதவர்களும் புத்திமான்களும் பலமும் ரூபமுமுடையவர்களுமாவார். நோயாளி நோயினின்றும் விடுபடுவான். கட்டப்பட்டவன் கட்டினின்றும் விடுபடுவான். விஷயஸுகத்தைவிரும்புகிறவன் விஷயஸுகத்தையும், நீண்டஆயுளையும் அடைவான். பிராம்மணன் எல்லாவேதங்களையுமறிந்தவனாவான். க்ஷத்ரியன் விஜயமுள்ளவனாவான். வைச்யன் அதிகமானலாபமுடையவனாவான். சூத்திரன் ஸுகத்தை அடைவான். புத்ரனில்லாதவன் புத்ரரை அடைவான். கன்னிகையும் இஷ்டனானகணவனை அடைவாள். கர்ப்பம்சிக்கினவள் (அதிலிருந்தும்) விடுபடுவாள். (அந்தக்) கர்ப்பிணி புத்ரரைப் பெறுவாள். மலடியானவள் புத்ரபௌத்ரர்களுடைய அபிவிருத்திக்குக்காரணமான குழந்தையை அடைவாள். எவன் இதை வழியில்செல்லும்போது சொல்லுகிறானோ

அவன் க்ஷேமத்தோடு மார்க்கத்தில் செல்லுவான். எவன் எந்தப் பொருளை விரும்புகிறானோ அவன் அதை நிச்சயமாக அடைவான். மகாத்மாவான புருஷோத்தமரிடம் ரிஷிகளும் தேவர்களும் வந்ததையும் அவருடைய உபதேசத்தையும் இந்தப்பக்தர்கள் கேட்டுப் பரம ஸுகத்தை அடைவார். இது வ்யாஸமகரிஷியின் உறுதியான வார்த்தை" என்றார்.

மூன்றாற்றைம்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணன் தமதுமகிமையையும் தமதுநாமங்களின் அர்த்தவிசேஷத்தையும் அர்ஜுனனுக்குத் சொல்லியது.)

ஜனமேஜயர், "பகவானே! வ்யாஸரானவர் சிஷ்யர்களோடு வேதத்திலுண்டான பலவிதமான எந்தநாமங்களாலே பகவானைத் துதித்தாரோ பிரம்மாவுக்குப்பதியான ஹரியினுடைய அந்த நாமங்களுடைய அர்த்தத்தின்விவரணத்தைக் கேட்கவிரும்புகிறேன். எனக்குச் சொல்லவேண்டும். அதைக்கேட்டுக் களங்கமற்றசரத்கால சந்திரன்போலப் பரிசுத்தனாவேன்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! அரசரே! பிரஸன்னமானமனத்துடன் பிரபுவான ஹரியானவர் குணங்களாலும் கர்மாவினாலுமுண்டான தம்முடைய நாமங்களுடையஅர்த்தவிஸ்தாரத்தை அர்ஜுனனுக்குச்சொன்னபடி (சொல்லுகிறேன்;) கேளும். ஓ! அரசரே! பகைவீரர்களைக்கொல்லுகிறவனான அர்ஜுனன், மஹாத்மாவான அந்தவாஸுதேவருடைய முன்சொல்லப்பட்டநாமங்களைக்கொண்டு அவரைநோக்கி, 'ஓ! பகவானே! சென்றவைகளுக்கும் (இப்பொழுது) இருப்பவைகளுக்கும் தலைவரே! ஸகலப்ராணிகளையும் படைக்கின்றவரும் அழிவில்லாதவரும் உலகங்களுக்குஸ்தானமும் ஜகத்திற்கு நாதரும் உலகங்களுக்கு அபயத்தையளிப்பவருமாயிருப்பவரே! ஓ! தேவரே! மகரிஷிகளால் புராணங்களிலும் வேதங்களிலும் உம்முடைய கர்மங்களால்உண்டானவைகளும் ரஹஸ்யங்களுமான நாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஓ! கேசவரே! அவைகளுடைய அர்த்தவிவரணத்தை உம்மிடமிருந்து நான் கேட்கவிரும்புகிறேன். ஓ! பிரபுவே! உம்மைத்தவிர வேறொருவரும் இந்தநாமங்களுடைய அர்த்த

விஸ்தாரத்தைச் சொல்லுகிறேன்' என்றுகேட்க, ஸ்ரீபகவான் சொல்லலானார். 'ஓ! அர்ஜுன! ரிக்வேதத்திலும் யஜுர்வேதத்திலும் ஸாமவேதத்திலும் அதர்வவேதத்திலும் புராணத்திலும் உபநிஷத்திலும் சோதிடசாஸ்திரத்திலும் ஸாங்கியசாஸ்திரத்திலும் யோகசாஸ்திரத்திலும் ஆயுர்வேதத்திலும் மஹரிஷிகளால் என்னுடைய அநேகநாமங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவ்வகளில் சில நாமங்கள் குணத்தாலுண்டானவைகள்; சில கர்மத்தினாலேற்பட்டவைகள். ஓ! பாபமற்றவனே! நீ பரிசுத்தனாக என்னால்சொல்லப்படும் கர்மத்தாலேற்பட்டநாமங்களுடைய அர்த்தவிஸ்தாரத்தைக் கேள். குழந்தாய்! முன் நீ என்னுடையபாதியாகக் கருதப்பட்டவன். எவருடைய அருளிலிருந்து பிரம்மாவும் கோபத்திலிருந்து ருத்ரரும் உண்டானார்களோ, எவர் ஸ்தாவரஜங்கமம் எல்லாவற்றிற்கும் காரணமோ தேவர்களுள்ளே மிகுந்தயசஸுடையவரும் பரமாத்மாவும் எல்லாமும் நிர்க்குணமும் குணஸ்வரூபமுமாயிருக்கிற அந்த நாராயணருக்கு நமஸ்காரம். ஓ! பலவான்களில் சிறந்தவனே! [1]பதினெட்டுக் குணங்களையுடைய ஸத்வகுணமான அது என்னுடைய பரமானஸ்வரூபம்; அது ஆகாயமும் பூமியுமாயிருந்து உலகங்களைத் தரிக்கின்றதும் கர்மங்களின் பயனை ஸ்வர்க்கமுதலானஸ்வரூபமும் பாதிக்கப்படாத சித்ரூபமும் அழிவற்றதும் ஜயிக்கமுடியாததும் உலகங்களுக்கு ஆத்மாவாகச் சொல்லப்பட்டதுமாயிருக்கிறது. அதிலிருந்தும் ஸ்ருஷ்டிப்பிரளயமுதலான எல்லாவிசாரங்களும் உண்டாகின்றன. தவமும் யஜ்ஞமும் யாகம்செய்பவரும் புராணபுருஷரும் விராட்டும் உலகங்களுடையஉற்பத்திநாசங்களுக்குக்காரணருமாயிருப்பவர் அநிருத்தரென்று சொல்லப்பட்டார். பிரம்மாவின் ராத்ரியினுடைய முடிவானது உண்டானபொழுது ஸகலற்றபராக்ரமமுள்ள அந்தஅநிருத்தருடைய அருளால் க்ஷணமாத்ரத்தில் ஸூர்யனுக்குச்சமமான கமலமானது உண்டாயிற்று. அதில் பிரம்மாவானவர் உண்டானார். அவர்அவருடைய அருளிலிருந்து முண்டானவரே.' பகலின்முடிவில் கோபத்தால் வியாபிக்கப்பட்ட தேவரான அநிருத்தருடையநெற்றியிலிருந்தும் ஸம்ஹாரத்தைச் செய்கின்றருத்ரர் புத்ரராக உண்டானார். இவர்களிருவரும் தேவர்

---

1 பிரீதி, மிகுதியானபிரகாசம், விருத்தி, ஸுகலபனுபவித்தல், ஸுகம், திருபணத்தனமில்லாமை, பரபரப்பில்லாமை, ஸந்தோஷம், ஸ்திரத்தை, பொறுமை, தைரியம், கொல்லாமை, சுயாயிருத்தல், குரோதமில்லாமை, ருசுவாயிருத்தல், ஸமமாயிருத்தல், உண்மையுடனிருத்தல், அஸூயையில்லாமை.

களில்சிறந்தவர்கள். இருவரும் அருளிலும் கோபத்திலுமிருந்து உண்டானவர்கள்; அவரால்கற்பிக்கப்பட்ட மார்க்கத்தையுடையவர்களாகி ஸ்ருஷ்டிலயம்ஹாரத்தொழில்களைச் செய்கிறவர்கள். எல்லாப் பிராணிகளுக்கும் வாத்தையளிக்கின்ற அவர்கள் இந்தவிஷயத்தில் நிமித்தமாத்திரமாயிருக்கிறவர்களே. ஓ! பாண்டுபுத்திரனே! யுகந்தோறும் கபர்த்தமென்னும்ஜடையையுடையவரும் முண்டனமுடையவரும் மயானமாகிறகிருகத்திலிருப்பவரும் உக்ரமான விரதங்களை ஆசரிப்பவரும் யோகமுள்ளவரும் திரிபுரங்களை அழித்தவரும் தக்ஷன் யாகத்தை அழிப்பவரும் பகனென்கிறஸூர்யனுடைய நேத்திரத்தைக் கவர்ந்தவருமான ருத்ரானவர் நாராயணஸ்வரூபாக அறியத்தக்கவர். ஓ! குந்திபுத்திரனே! தேவர்களுக்கெல்லாம்தேவான அந்த மஹேஸ்வரர் பூஜிக்கப்பட்டால் தேவரும் பிரபுவுமானநாராயணர் நன்கு பூஜிக்கப்பட்டவராவார். ஓ! பாண்டுபுத்திரா! நான் எல்லா உலகங்களுக்கும் ஆத்மாவாயிருக்கிறேன். ஆகையால் நான் முதலிலே ருத்ராயிருக்கும் என்னையே பூஜிக்கிறேன். நான் எல்லாருக்கும் சிக்ஷகனும் வாங்கனியளிப்பவனும் சிவரூபனுமான என்னைப் பூஜியாமலிருந்தால் ஒருவரும் பூஜிக்கமாட்டாரென்று என்னால் ஆத்மபூஜையான செய்யப்பட்டது. என்னால் செய்யப்பட்டபிரமாணத்தையன்றே உலகமானது நன்குஅனுஸரித்துவருகிறது? பிரமாணங்கள் கௌரவிக்கத்தக்கவைகள். ஆகையால், அவரை நான் பூஜிக்கிறேன். எவன் அவரை அறிகிறானே அவன் என்னை அறிகிறான். எவன் அவரை அனுஸரிக்கிறானே அவன் என்னை அனுஸரிக்கிறான். ஓ! குந்திபுத்திரனே! ஒரேவஸ்துவான ருத்ராகவும் நாராயணராகவும் இரண்டாகச்செய்யப்பட்டு உலகத்தில் சரீரத்திலிருந்துகொண்டு எல்லாக்காரியங்களின்நிமித்தமாகவும்ஸஞ்சரிக்கிறது. ஓ!பாண்டுபுத்திரனே! எனக்கு ஒருவனும் மரமானது ஆளிக்கத்தக்கதில்லையென்று மனத்தில்ஆலோசித்து நான் அனுதியும் ஈச்வரரும் ருத்திரருமான என்னையே நானேவே புத்திரனுக்காக ஆராதித்தேன். விஷ்ணுவானவர் தம்மைத்தவிர ஒரு தெய்வத்தையும் வணங்குகிறதில்லையென்று நினைத்தே நான் ருத்ரனை வணங்குகிறேன். பிரம்மா, ருத்ரர், இந்திரன் இவர்களுடன்கூடியதேவர்களும் முனிவர்களும், தேவர்களில்சிறந்தவரும் தேவரும் ஹரியுமானநாராயணரைப் பூஜிக்கின்றார்கள். ஓ! பாரத! முக்காலத்திலுமுள்ள எல்லாருக்குமே விஷ்ணுவானவர் தலைவரும் எந்நாளும்ஸேவிக்கத்தக்கவரும் பூஜிக்கத்தக்கவருமாயிருக்கிறார். ஓ! குந்திபுத்திரா! ஹவிஸையளிப்பவரான

விஷ்ணுவை நமஸ்கரிப்பாயாக. சாணத்தையளிப்பவரானவிஷ்ணுவை வணங்கு. வரத்தையளிப்பவரை வணங்கு. ஹஷ்பகவ்யங்களையருந்துகிறவரை வணங்கு. [1]நான்குவிதமானஜனங்களும் என்னுடையபக்தர்களே. அவர்களில் சிவனுடைதவதைகளை உபாஸ்யாதவாகளானவர்கள் சிறந்தவர்கள். விருப்பத்தைவிட்டுக் கர்மங்களைச் செய்கிறவர்களான அவர்களுக்கு நானே கதி. மற்றமூன்றுவகையான பக்தர்களும் பயனைவிரும்புகிறவர்களாகக் கருதப்பட்டார்கள். அவர்களெல்லோரும் நல்லகதியையுடையவர்கள். ஞானியோ சிறந்தமுக்தியை அடைவான். ஞானத்துடன்கூடின அனுஷ்டானமுடையவர்கள் பிரம்மாவையோ ஈஸ்வரரையோ மற்றத்தேவர்களையோ ஸேவித்தவர்களாலும் என்னையே பயனாக அடைவார்கள். ஓ! பார்த்த! பக்தனைப்பற்றிய இந்தவிசேஷமானது உனக்குச் சொல்லப்பட்டது. ஓ! குந்திபுத்திர! நீயும் நானும் நரநாராயணர்களாகக் கருதப்பட்டவர்கள். பூபாரத்தைத்தொலைப்பதற்காக மனுஷ்யசரீரத்தில் பிரவேசித்தோம். ஓ! பாரத! ஆத்மாவைப்பற்றியயோகங்களையறிகின்றவனும் நிவிருத்திரூபமான (தர்மத்திற்கும்) அபிவிருத்தியைச்செய்கிற (தர்மத்திற்கும்) காரணனும் ஸநாதனமான நானொருவனே நரர்களுக்குப் பிரஸித்தமான ஸ்தானம். அப்புக்கள் நானிடமிருந்துமுண்டாயின. (ஆகையால்) அப்புக்கள் நாரங்களென்று சொல்லப்பட்டன. முன் அவைகள் எனக்குஸ்தானமாயின. ஆகையால் நான் நாராயணனுகிறேன். நான் எல்லாமுமாகி ஸர்யன்கிரணங்களால்மறைப்பதுபோல மறைக்கிறேன். அதனாலும் எல்லாப்பிராணிகளுக்கும் வாஸஸ்தானமாயிருப்பதனாலும் வாஸுதேவனுகிறேன். ஓ! பாரத! குந்திபுத்ர! எல்லாப்பிராணிகளுக்கும் லயஸ்தானமாயிருப்பதாலும் உற்பத்திஸ்தானமாயிருப்பதாலும் என்னால் பூமியும் ஆகாயமும் வியாபிக்கப்பட்டமையாலும் எனக்கு அதிகமான காந்தியிருப்பதாலும் பூதங்களில்பிரவேசித்து அந்தஜகத்தாயிருப்பதாலும் எங்கும் வியாபித்தலாலும் விஷ்ணுவென்று சொல்லப்படுகிறேன். இந்திரியங்களையடக்குவதால் ஸித்தியையும் தேவலோகத்தையும் பூலோகத்தையும் அந்தரிக்ஷத்தையும் அடையவிருப்பமுள்ளவர்கள் என்னை விரும்புகிறார்கள். ஆகையால், நான் [2]தாமோதரனு

---

1 பீடையடைந்தவன், ஞானத்தைவிரும்புகிறவன், பொருளை விரும்புகிறவன், ஞானி.

2 தாம= இந்திரியநிக்ரகம், உத்=உபர்வு, ரு=அடைவது; இந்திரியநிக்ரகத்தினால் அவனைஅடைத்து உயர்வுஅடைவதால் தாமோதரர் என்பது

கிறேன். அன்னமுமீ வேதங்களும் ஜல்மும் அமிருதமும் ப்ருச்னி என்று சொல்லப்படுகின்றன. அவைகள் எப்பொழுதும் என்னுடையகர்ப்பத்திலிருப்பதால் நான் ப்ருச்னிகர்ப்பனீகிறேன். ரிஷிகள் எனீனேக்ர ! ரும் த்விதாரா லும் கிணற்றில் தள்ளபபட்டதீர்தரைக் காப்பாற்றும்' என்று சொன்னார்கள். பிறகு பிரம்மாவின் மூக்கினபுத்திரரும் ரிஷிகளில் சிறந்தவருமானத்ரிதர், 'பிருச்னிகர்ப்பா' என்றுசப்தித்ததால் கிணற்றிலிருந்தும் கரையேறினர். உலகங்களீத்தபிக்கச்செய்கிறஸூர்யன் அக்னி சந்திரன் இவர்களுடையகிரணங்கள் பிரகாசிக்கின்றன. இவைகள் என்னுடையகேசங்களாகச் சொல்லப்படுகின்றன. ஆகையால் எல்லா முணர்ந்தபிராம்மணஸ்ரேஷ்டர்கள் என்னீக் கேசவனுகச் சொல்லுகின்றார்கள். மகாத்மாவானஉசத்திபராலே தம்முடையபத்னியினிடம் கர்ப்போத்பத்தி செய்யப்பட்டது. பிறகு ஒருஸமயம் உசத்தியரில் லாதபொழுது பிருகஸ்பதியானவர் தேவர்களுடையீ ஆஜ்ஞையினாலே புத்திமானனஅந்தஉசத்தியருடைய அந்தப்பத்னியைஅடைந்தார். ஓ! குந்தீபுத்ரா! அப்பொழுது சேர்க்கையின்பொருட்டு வந்தவரும் ரிஷிகளில்சிறந்தவருமான அவரைநோக்கிப் பஞ்சபூதங்களின் குணஸ்வரூபமானகர்ப்பமானது, 'ஓ! வரமளிபபவரே! நான் முன்னமே வந்திருக்கிறேன். ஆகையால் என்மாதாவை வருத்தப்படுத்தாதீர்' என்றுசொல்லிற்று. இதை ப்ருஹஸ்பதிகேட்டுக் கோபித்து, 'சேர்க்கையின்பொருட்டுவந்தஎன்னீ நீதடுத்தமையால் என்சாபத்தால்குருடனுவாய். இதில் ஸந்தேகமில்லீ' என்று சாபமும்கொடுத்தார். உடனே அந்தக்கர்ப்பம் ரிஷிஸ்ரேஷ்டரானப்ருகஸ்பதியின்சாபத்தால் நெடுநாளுள்ள நேத்திரீதாஷத்தை அடைந்தது. ஆது முன்காலத்தில்தீர்க்கதமஸ்என்கிறபெயர்கொண்ட ரிஷியாயிற்று. அப்பொழுது அவர் அனுதியானநான்குவேதங்களையும் ஸாங்கோபாங்கமாக அத்யயனம்செய்து ரகஸ்யமானஎன்னுடைய இந்தகாமத்தை விதிப்படி கிரமமாக, 'கேசவா' என்று அடிக்கடி ஜபித்தார். அதனுல் அவர் நேத்திரங்களை அடைந்தவரானார். மேலும் சிறந்த நேத்திரங்களையுடையவருமானர். ஓ! அர்ஜுனு! 'கேசவ' என்கிறஎன்னுடைய நாமமானது இவ்விதம் எல்லாத்தேவர்களுக்கும மகாதமாக்களான ரிஷிகளுக்கும் வாத்தையளிக்கின்றது. ஸோமனுடன் சேர்ந்த அக்னியானவன் ஒரேகாரணத்தையடைந்து (எல்லாத்தேவர்களுக்கும் மகாத்மாக்களானரிஷிகளுக்கும்) முகமாகச் செய்யப்பட்டான். ஆகையால், சராசரமானஎல்லாஜகத்தும் அக்னிஸோமர்களுடையஸ்வரூபம்.

புராணத்திலும், 'அக்னியும் ஸோமனும் ஒரேசரீரத்தையுடையவர்கள். தேவர்களும் அக்னியைமுகமாகவுடையவர்கள்' என்றும், 'ஒரேகர்ப்பத்தில் பிறந்ததனால் ஒருவரையொருவர் ஸந்தோஷிக்கச் செய்கிறவர்களும் உலகங்களைத் தரிக்கிறவர்களுமாயிருக்கிறார்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறார்கள்" என்றுசொன்னர்.

முந்நூற்றைம்பத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

கிருஷ்ணன் உலகத்தின்படைப்புமுறையையும் பிராம்மணர் மகிமையையும் அர்ஜுனனுக்குச் சொல்லியது.)

அர்ஜுனன், 'வீரானமதுஸூதனரே! முன் அக்னியும் ஸோமனும் எப்படி ஒரேஇடத்திலிருந்து பிறந்தவர்களாகச் சொல்லப்பட்டார்கள்? எனக்கு இத்தச்சந்தேகமுண்டாயிருக்கிறது. அதை நிவிருத்திசெய்யும்' என்றுவினவ, ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லத் தொடங்கினர்.

'ஓ! பாண்டுபுத்திரனே! மிகவும்ஸந்தோஷம். என்னுடைய தேஜஸின்உத்பத்தியாகிற பழமையான கதையை உனக்குச் சொல்லப்போகிறேன். ஓ! குந்தீபுத்ரனே அரசனே! ஒருமனத்துடன் கேட்பாயாக. பிரளயகாலத்தில் ஆயிரம்சதுர்யுகம்முடிந்தபின் எல்லாப் பிராணிகளுக்கும்பிரளயமுண்டாகியும் சாசசமான அவைவிளங்காமற் போயும் பிருதிவீதேயுவ்யாயுஇவையில்லாமல் அந்தகாரிருளில் உலகம் ஜலத்தால் ஒரேஸமுத்திரமாகியும், 'இது எனது' என்று பூதங்களின்பெயர் அறியப்படாததாக இரண்டற்றவஸ்துவானது நிலவிற்றும் ராத்ரியில்லாமலும் பகலில்லாமலும் [1]ஸத்தில்லாமலும் [2]அஸத்தில்லாமலும் வெளிப்படையில்லாமலும் மறைவில்லாமலுமிருப்பதான இந்நிலைமையில் நாராயணரது (ஈஸ்வர்யமுதலிய) குணங்களுக்கிடமும் மூப்பும்இறப்புமில்லாததும் ஞானேந்திரியங்களுக்குப்புலப்படாததும் (கர்மேந்திரியங்களால்) பற்றமுடியாததும் உற்பத்தியில்லாததும் ஸத்யமும் கத்திமுதலியவற்றால் கிழல்லமுடியாததும் இரண்டற்றதும் பிரவிருத்திகளின் விசேஷங்களில்லாததும் வைசமற்றதும் குறைவற்றும் சரீரமின்றி (ஞானமில்லாதவரையில்) ஜராநாசமற்று

---

1 ப்ரதானம். 2 சூன்யம்.

எங்கும்வியாபித்து அஞ்ஞியாய் எல்லாவற்றையும் செய்கிறதமஸுக்கு மேலானதுயான பிரம்மத்தினிடமிருந்து புருஷர் உண்டானார். பிரம்மத்தைக்காரணமாகவுடையவரும் புருஷரூமான இந்தப்பிரம்மாவினுடைய அவதாரகாலத்தில் அழிவற்றவரான ஹரியானவர் இருந்தார். இந்தவிஷயத்தில், 'பகல்நீந்தஇல்லை. ராத்ரியுமிருந்தஇல்லை. [1]ஸத்துமிருந்தஇல்லை. [2]அஸத்துமிருந்தஇல்லை. எல்லாஸ்வரூபமுமாயிருக்கிறதமஸை ஸ்ருஷ்டிக்கு முன்னிருந்தது' என்று வேதவசனமுமிருக்கிறது. அது விஸ்வரூபனுடைய ராத்ரியன்றோ? இவ்விதம் இதனுடையஅர்த்தமானதுவிவரிக்கப்படுகிறது. தமஸிலிருந்துமுண்டானவரும் ப்ரம்மத்தைக்காரணமாகவுடையவரும் புருஷரூமான பிரம்மாவினுடைய அவதாரமுண்டானபொழுது அந்தப்புருஷர் பிரஜைகளைஸ்ருஷ்டிக்கவிரும்பி நேத்திரங்களிலிருந்தும் அக்னியையும் ஸோமனியும் ஸ்ருஷ்டித்தார். பிறகு பூதங்களுடையஸ்ருஷ்டிகள் செய்யப்பட்டுப் பிரஜைகள் கிரமவசத்தால் பிராம்மணஜாதியையும் க்ஷத்ரியஜாதியையும் அடைந்தன. [3]ஸோமனென்பவன் பிராம்மணஜாதி. பிராம்மணஜாதி பிரம்மணர்கள். அக்னியென்பவன் க்ஷத்ரியஜாதி.. க்ஷத்ரியஜாதியைக்காட்டிலும் பிராம்மணஜாதி மிகவும் பலமுடையது. இந்தப் பிராம்மணஜாதியானது உலகங்களுக்குப் பிரத்யக்ஷமானகுணங்களையுடையது. அது எப்படியென்றால், பிராம்மணர்களுக்குமேலான பிராணியானது இதற்குமுன் உண்டானதில்லை 'எவன் பிராம்மணன்முகத்தில் ஆஹுதிசெய்கிறானோ அவன் ஜ்வலிக்கிறஅக்னியில் ஹோமம் செய்கிறவன்' என்றெண்ணிச் சொல்லுகிறேன். பிராணிகளைநிலைக்கச்செய்து மூவுலகமும் பிராம்மணஜாதியால்தரிக்கப்படுமென்று ப்ரம்மாவினுல் பிராணிகளுடைய ஸ்ருஷ்டியானது செய்யப்பட்டது. (இதற்குமந்திரவசனமும் இருக்கிறது. அதன்பொருளாவது, 'ஓ! அக்னியே! நீ எல்லாயஜ்ஞங்களிலும் [4]ஹோதாவாயுள்ளவன்; தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் உலகத்திற்கும் நன்மைசெய்கிறவன்' என்பது. இந்தவிஷயத்தில், 'ஓ! அக்னியே! நீ எல்லாயாகங்களுக்கும் ஹோதா' என்றும், 'நீ தேவர்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் உலகத்திற்கும் ஹிதமாயிருப்பவன்' என்றும் ஸ்பஷ்டமானவேதவசனமும் இருக்கிறது. அக்னியன்றோ யஜ்ஞங்களுக்கு ஹோதாவும் கர்த்தாவு

---

1 மூர்த்தம். 2 அமூர்த்தம்.

3 ஸோமனென்பவன் ப்ரம்மம். ப்ரம்மமே ப்ராம்மணர்கள்.

4 'அக்னியைஹோதாவாகத்தூகித்ததால் அக்னியைவிடஹோதாவான பிராம்மணன் மேலானவனென்று அறிவிக்கப்பட்டது' என்பதுபழையவுரை.

மாயிருப்பவன்? அந்த அக்னி பிராம்மணஜாதி. மந்திரங்களின்றி ஹோமம்இல்லை. புருஷனில்லாமல் ஹவிஸுக்குரியமந்திரங்களுடைய ஆலோசனை இல்லை. தேவர்கள் மனிதர்கள் ரிஷிகள் இவர்களுக்குப் பூஜையானது ஏற்பட்டிருக்கிறது. புருஷன், 'இதனால் நீ ஹோமம் செய்யக்கடவாய்' என்றுஎவற்பெற்றவன். மனிதர்களுக்குஹோமம் செய்விக்கலில்அதிகாரம்பெற்றவர்கள் செய்விப்பார்கள். ஹோமம் செய்வித்தலானது பிராம்மணனுக்கே விதிக்கப்பட்டிருக்கிறது; இரு பிறப்பினர்களாயிருந்தும் க்ஷத்ரியனுக்கும் வைஸ்யனுக்கும் விதிக்கப்படவில்லை. ஆகையால் அக்னிஸ்வரூபர்களானபிராம்மணர்களே யஜ்ஞங்களை வகிக்கிறார்கள். அந்தயஜ்ஞங்கள் தேவர்களைத் திருப்தியடையச்செய்கின்றன. தேவர்கள் பூமியை [1]விருத்திசெய்விக்கிறார்கள். எந்தவித்வான் பிராம்மணன்முகத்தில் ஆஹுதியைச்செய்கின்றானோ அவன் ஜ்வலிக்கிறதான அக்னியில் ஹோமம்செய்கிறவனென்று சதபதமென்கிற சுக்லயஜுர்வேதபாகத்திலும் பிராம்மணன் முகத்தில் ஹோமம் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமிருந்தாலும் அக்னிஸ்வரூபர்களும் வித்வான்களுமானபிராம்மணர்கள் அக்னியைஆராதிக்கின்றார்கள். அக்னியானவன் விஷ்ணுரூபனுகி எல்லாப்பிராணிகளிடத்திலும்பிரவேசித்துப் பிராணன்களைத் தரிக்கிறான். மேலும் இந்த விஷயத்தில் ஸநத்குமாரால்சொல்லப்பட்ட சுலோகங்களிருக்கின்றன. (அவற்றின்பொருளாவது,)'முன்காலத்தில் எல்லாவற்றிற்குமுன்ஆதியும் சனாதனமற்றவருமான பிரம்மாவானவர் ஜகத்தைஸ்ருஷ்டித்தார். [2]பிரம்மாவைக்காரணமாகவுடையதேவர்கள் வேதகோஷங்களால் தேவலோகத்தில் வஸிக்கின்றார்கள். பிராம்மணர்களுடையஸத்யவசனமும் கர்மமும் ஸ்ரத்தையும் தவமும் [3]ஊறிகள் (வெண்ணெயைத்) தாங்குவதுபோலப் பூமியையும் ஸ்வர்க்கத்தையும் வாக்குக்குஅமிருதமான வேதத்தையும்தரிக்கின்றன. ஸத்யத்திற்குமேலானதர்மமில்லை. மாதாவுக்குஸமமானகுருவுமில்லை. இகபரங்களிலுள்ளநன்மையையுண்டுபண்ணுவதில் பிராம்மணர்களுக்குமேல்பட்டது இல்லை. எந்தஅரசர்களுடைய ராஜ்யத்தில் பிராம்மணர்கள் [4]விருத்தியால் இழிவானவர்களாயிருக்கின்றார்களோ அவர்களுடையதேசத்தில் எருது(மழையில்லாமையால் கலப்பையை) இழுக்கிறதில்லை; வாஹனங்கள் (தான்யமில்லாததால் வண்டிகளை) இழுக்கிறதில்லை; செக்கானது ஆடுகிறதில்லை. அவர்கள் தானத்தில் இல்லாமையடைந்தவர்களும் திருடர்களுமாகின்றார்கள்.

1 செழிப்படைய. 2 அல்லது வேதத்தை.
3 வேறு பாடம். 4 'ஜீவனோபாயமற்ற' என்றும்கொள்ளலாம்.

அந்தப்பிராம்மணர்களும் புராணம் இதிஹாஸம்இவைகள் பிரமாண மானதால் நாராயணருடையமுகத்திலிருந்துமுண்டானவர்களும் ஸர் வஸ்வரூபர்களும் எல்லாவற்றிற்கும் கர்த்தர்களும் எல்லாத்தன்மையு முடையவர்களுமாயிருக்கின்றார்கள். வியவஹாரமுடிவிலோ வரத்தை யளிப்பவரும் தேவர்களுக்குத்தேவருமான அந்தநாராயணருடைய வாக்கின்மஹாஸமூஹத்தில் முதலில் பிராம்மணர்களுண்டானார்கள். பிராம்மணர்களிடமிருந்தும் மற்றவர்ணங்களுண்டாயின. இவ்வித மிருத்தலால் வேதமயமானபிராம்மணர்கள் தேவர்களையும் அஸு ரர்களையும் காட்டிலும் சிறந்தவர்கள். தேவர்களும் அஸுரர்களும் மஹரிஷிகளுமான பிராணிவிசேஷங்கள் பிரம்மாவான என்னாலேயே முன்காலத்திலுண்டுபண்ணப்பட்டன; ஸ்தாபிக்கவும்பட்டன; நிக்ர ஹிக்கவும்பட்டன. அந்தப்பராம்மணர்களுடைய மஹிமையைக்கேள். இந்திரனவன் அஹல்யையைச்சேர்ந்தகாரணத்தினால் கௌதமரிட மிருந்து பச்சையானமீசையுடையவனுயிருக்கும்தன்மையை அடைந் தானன்றே? கௌதமர்நிமித்தமாக இந்திரன் அண்டமில்லாதவனுகிப் பிறகு அஜத்தின்விருஷணத்தையும் அடைந்தான். அச்வினீதேவர் களுக்குரியஸோமக்கிரகத்தைத்தடுப்பதற்கு வஜ்ராயுதத்தைஓங்கின இந்திரனுடையகைகள் ச்யவனரால் ஸ்தம்பனஞ்செய்யப்பட்டன. யாக த்தையழித்ததால் கோபங்கொண்டவனுனதக்ஷனால் திரும்பவும் சரீ ரத்தைத் தவத்தில்விதியோகித்து நெற்றியில் ருத்ரரைப்போல மூன்று நேத்திரங்களுடையஆகிருதியானது உண்டுபண்ணப்பட்டது. திரி புரர்களைக்கொல்லுவதற்காகத் தீக்ஷைபெற்றவரானருத்ரருடையஜடை கள் சுக்கிராசாரியரால் தலையிலிருந்தும்அறுத்து அக்னியில்போடப் பட்டன. அதிலிருந்தும் ஸர்ப்பங்களுண்டாயின. அந்தஸர்ப்பங்க ளால்பீடிக்கப்பட்டஅவருடையகழுத்துக் கறுத்தவர்ணத்தையடைந் தது. முன் ஸ்வாயம்புவமன்வந்தரத்திலும் அவர் நாராயணருடைய கரத்தினல்கட்டுண்டதால் கறுத்தகழுத்தையுடையவரானர். அமிரு தத்தினுற்பத்திகாலத்தில் வாயுவினல்சேர்க்கப்பட்டவிஷத்தைப்பக்ஷி க்கிறவரானர். 'விஷபானஞ்செய்தார்' என்கிறநிமித்தமாகவே பிரம் மாவினல் சந்திரகலையானது (சிரத்தில்) வைக்கப்பட்டது. அங்கி ரஸின்புத்திரரான்பிருகஸ்பதி ஸ்நானம்செய்கையில் ஜலம் தெளிய வில்லை. உடனே பிருஹஸ்பதி ஜலவிஷயமாகக் கோபித்தார். 'நான் ஸ்நானம்பண்ணுகையில் கலங்கித் தெளியாமலிருந்தமையால் இது முதல் சிறுமீன், பெருமீன், மகரம், ஆமைமுதலானஜந்துக்களாலும் தவளைகளாலும் வியாபிக்கப்பட்டுக் கலங்கக்கடவீர்கள்' என்று சபித்

தார். அதுமுதல் ஜலங்கள் ஜலஜந்துக்களால் நிரம்பினவாயின. த்வஷ்டாவின்புத்திரனைவிச்வரூபன் தேவர்களுக்குப் புரோஹித னானன். அஸுரர்களுக்குமருகனானவன் தேவர்களுக்குப் பிரத் யக்ஷமாகவும் அஸுரர்களுக்கு மறைவாகவும் ஹவிர்ப்பாகத்தையளி த்தான். அப்பொழுது அஸுரர்கள் ஹிரண்யகசிபுவை முன்னிட்டுக் கொண்டு விச்வரூபனுக்குமாதாவானஸஹோதரியினிடம், 'ஓ! சகோ தரியே! த்வஷ்டாவுக்குப்பிறந்தவனும் உன்னுடையபுத்திரனும் மூன் றுசிரமுடையவனும் தேவர்களுக்குப்புரோஹிதனுமான இந்தவிச்வ ரூபன் தேவர்களுக்குப் பிரத்யக்ஷமாகப் பாகத்தையளித்தான்; எங் களுக்கு மறைவாகஅளித்தான். அதனால் தேவர்கள் விருத்தியடை கின்றார்கள். நாங்கள் க்ஷயத்தையடைகின்றோம். ஆகையால் நீ இவ னைத் தேவர்களினின்றும்விலக்கி, எங்கள் பக்ஷத்தைச்சாரும்படிசெய் யவேண்டும்' என்னும் வரத்தைப் பிரார்த்தித்தார்கள். உடனே தாயா னவள் நந்தன்வனத்தையடைந்த விச்வரூபனைநோக்கி, 'புத்திரா! நீ ஏன் சத்ருவின்பக்ஷத்தைவிருத்திசெய்கிறாய்? மாதுலர்களுடைய பக்ஷத்தை நாசம்செய்கிறாய்; இவ்விதம் நீ செய்யக்கூடாது' என்று சொன்னள். அந்தவிச்வரூபனும் தாயின்வார்த்தையைத் தடிக்கலாகா தென்றெண்ணிக் கௌரவித்து ஹிரண்யகசிபுவை அடைந்தான். ஹிரண் யகசிபு பிரம்மாவின்புத்திரானவஸிஷ்டரிடமிருந்தும், 'நீ வேறொரு வனை ஹோதாவாகவரித்ததனால் யாகத்தைமுடிக்காதவனுமே அபூர் வமரகஉண்டானபிராணியிடமிருந்தும் மரணத்தையடைவாய்' என்று சாபத்தை அடைந்தான். அவருடையசாபத்தால் ஹிரண்யகசிபு மர ணத்தை அடைந்தான். பிறகு விச்வரூபன் மாதாவின்பக்ஷத்தை விருத்திசெய்துகொண்டு மிகவும்தவமுடையவனானன். அவனுடைய விரதங்களைப் பங்கம்செய்வதற்காக இந்திரன் அழகுபொருந்திய அநேகஅப்ஸரஸுகளை ஏவினன். அவர்களைப்பார்த்து அவனுடைய மனமானது கலங்கியது. (அவன்) அந்தஅப்ஸரஸுகளிடம் விரை வில் பற்றுள்ளவனானன். அவன் பற்றுள்ளவனெனியிருப்பதை அப்ஸ ரஸுகள் அறிந்து,''நாங்கள் வந்தபடி போகிறோம்' என்று சொன்னர் கள். அப்பொழுது விச்வரூபன் அவர்களைநோக்கி, 'எங்கேபோகி றீர்கள்? என்னுடன் இருக்கலாம். நன்மையுண்டாகும்' என்று சொன்னன். அவர்களும் அவனைநோக்கி, 'தேவஸ்திரீகளும் அப் ஸரஸுகளுமான நாங்கள் தேவனும் வரமளிப்பவனும் ஸமர்த்தனு மானஇந்திரனை முன் வரித்திருக்கிறோம்' என்று சொன்னர்கள். பிறகு விச்வரூபன் அவர்களைநோக்கி, 'இப்பொழுதே இந்திரனும்

தேவர்களும் இல்லாமற்போவார்கள்' என்று சொன்னான்; உடனே மந்திரங்களை ஜபித்தான். அந்தமந்திரங்களாலே திரிசிரஸை விருத்தியடைந்தான். ஒருமுகத்தினாலே எல்லாஉலகங்களிலும் விதிப்படி கிரியைசெய்கின்ற வேதியர்களாலே யாகங்களிலே நன்றாக ஹோமம் செய்யப்பட்ட ஸோமத்தையும் ஒருமுகத்தால் அன்னத்தையும் ஒரு முகத்தால் இந்திரனுடன்கூடின தேவர்களையும் பானம் செய்தான். பிறகு இந்திரன், விருத்தியடைகிறவனும் ஸோமபானத்தால் புஷ்டி செய்யப்பட்ட எல்லாஅவயவங்களையுமுடையவனுமான அவனைப்பார்த்துத் தேவர்களுடன் கவலையடைந்தான். இந்திரனைச்சேர்ந்தஅந்தத்தேவர்கள் பிரம்மாவைஅடைந்தார்கள். அவர்கள் அவரைநோக்கி, 'விஸ்வரூபனாலே எல்லாயாகங்களிலும் நன்றாக ஹோமம்செய்யப்பட்ட ஸோமமானது பானம்செய்யப்படுகிறது. நாங்கள் பாகமில்லாதவர்களாகினோம். அஸுரர்களுடையபக்ஷம் விருத்தியடைகிறது. நாங்கள் குறைந்துபோகிறோம். ஆகையால் உடனே எங்களுக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டும்' என்றுசொன்னார்கள். அவர்களை நோக்கிப் பிரம்மா, 'பிருகுவம்சத்தினுதித்தததீசரிஷியானவர் தவஞ் செய்துகொண்டிருக்கிறார். அவர் சரீரத்தைவிடும்படி அவரிடம் வரத்தைக் கேளுங்கள். அவருடைய எலும்புகளால் வஜ்ராயுதம் செய்யுங்கள்' என்று சொன்னார். பிறகு தேவர்கள் பகவான்ததீசமகரிஷியானவர் தவம்செய்கிறவிடம் வந்தார்கள். இந்திரன்முதலான தேவர்கள் அவரைஅடைந்து, 'ஓ! பகவானே! க்ஷேமமா? தவம் இடையூறில்லாமல் கூடுகிறதா?' என்றுகேட்டார்கள். ததீசரும் அவர்களை நோக்கி, 'உங்களுக்குநல்வரவா? என்னசெய்யவேண்டும்? சொல்லலாம். எதைச் சொல்லுவீர்களோ அதைச்செய்வேன்' என்று சொன்னார். அவர்கள் அவரைநமஸ்காரம்பார்த்து, 'உலகத்தின் நன்மைக்காகப் பகவானை நீர் சரீரத்தை விடவேண்டும்' என்று சொன்னார்கள். இவ்விதம்சொல்லப்பட்டததீசர் 'ஆயிரம்வருஷம் என்னால் இந்திரனுடைய பதமடையப்படுமானால் சரீரத்தைவிடுவேன்' என்று அவர்களுக்குச் சொன்னார். அப்பொழுது இந்திரன், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லித் தன்னுடைய ஸ்தானத்தைக்கொடுத்துவிட்டுத் தபஸியானான். ததீசர் இந்திரனுக்கு அவ்வளவுக்குமுன்னமே இந்திரனுடன்கூடினதேவர்கள், 'தேகத்தைவிடுவதற்கு இதுகாலம்' என்று வந்தார்கள். அப்படியே வருத்தமில்லாதமனமுடையவரும் ஸுகதுக்கங்களில் ஸமமானவரும் மகாயோகியுமானததீசரானவர் உடனே புத்தியில் பரமாத்மாவைத்தியானித்துக்கொண்டு சரீரத்தைவிட்டார். இந்த விஷயத்தில்

தபீசர் இந்திரனுனர், (அவருடைய)எலும்புகளால் (வஜ்ராயுதம்)செய்யப்பட்டதென்று சுருதியுமிருக்கிறது. அவருடையபரமபவித்மாவிலனை ஸமயத்தில் பிரம்மாவானவர் அந்தஎலும்புகளைஎடுத்து வஜ்ராயுதத்தைச்செய்தார். பிளக்கமுடியாததும் அணுகமுடியாததும் பிராம்மணருடையஎலும்புகளாலுண்டானதும் விஷ்ணுவினுல்பரிரக்ஷிக்கப்பட்டதுமான அந்தவஜ்ராயுதத்தால் இந்திரன் விஸ்வரூபனைக்கொன்றான். 'யஜ்ஞபசுவானஉன்னுடையசிரசைக் கொய்கிறேன்'என்று சொல்லிக்கொண்டு தச்சனுல் அவனுடையதலையையும் வெட்டினுன். அதற்குப் பிறகு விஸ்வரூபனுடையசரீரத்தைக்கடைந்து துவஷ்டாவின்புத்திரனுலேஉண்டுபண்ணப்பட்டவனை விருத்திரனென்கிற சத்துருவை இந்திரன்கொன்றான். அந்தஇரண்டுவிதமானபிரம்மஹத்தியும் உண்டானபொழுது இந்திரன் பயத்தால் தேவராஜ்யத்தைவிட்டு மானஸஸரஸில் நூலத்திலுண்டாகிக் குளிர்ச்சியாயிருக்கிற தாமரைக்கொடியையும், அடைந்தான். அதிலுமே தன்னுடைய ஐஸ்வரியத்தின் யோகத்தால் அணுமாத்திரமாகித் தாமரைத்தண்டில் புகுந்தான். பிறகு பிரம்மஹத்திநிமித்தமாக மூவுலகங்களுக்கும்நாதனும் இந்திராணீவல்லபனுமான இந்திரன் ஒளித்தபொழுது ஜகத்து ஈஸ்வரனில்லாததாயிற்று. தேவர்களே ராஜஸ-மே தமஸ-மே வந்தடைந்தன. மஹரிஷிகளுடைய மந்திரங்கள் பிரயோஜனப்படவில்லை. ராக்ஷஸர்கள் கிளம்பிவிட்டார்கள். வேதமும் குறைவுபட்டது. இந்திரனில்லாமல் பலமற்றவைகளான உலகங்கள் லேசாக ஆக்ரமிக்கக்கூடியவைகளாயின. பிறகு தேவர்களும் முனிவர்களும் ஆயுவென்கிற அரசனுடைய புத்திரனை நஹுஷனென்பவனைத் தேவராஜ்யத்தில் அபிஷேகம் செய்தார்கள். நஹுஷன் நெற்றியில்ஜ்வலிக்கிறவைகளும் கல்லாத் தேஜஸ-களையும் அபகரிக்கின்றவைகளுமான ஐந்நூறுஜோதிஸ-களால் ஸ்வர்க்கத்தைப் பரிபாலித்துவந்தான். பிறகு உலகங்கள் ஸ்வபாவத்தைஅடைந்தன. கவலையற்றவைகளும் ஸந்தோஷமடைந்தவைகளுமாயின. பிறகு நஹுஷன், 'இந்திராணியைத்தவிர நீ இந்திரனுடையபோக்யவஸ்துக்களெல்லாம் என்னை அடைந்தன' என்றுசொன்னுன். அவன் இவ்விதம்சொல்லிவிட்டு இந்திராணியின் ஸமீபம்சென்றான். பிருஹஸ்பதியின் கிருகத்திலிருப்பவளான அவளைநோக்கி, 'அழகானவளே! நான் தேவர்களுக்கு இந்திரன். என்னை நீ அடைவாயாக' என்றுசொன்னுன். அவளைநோக்கி இந்திராணியானவள், 'நீர் இயற்கையாகவேதர்மத்திலன்புள்ளவரும் 'சுந்திரமம்சத்திலுண்டானவருமாயிருக்கிறீர். ஆகையால் பிறன்மனையை விரும்புதல்

தகாது' என்று விடைகூறினாள். பிறகு நஹுஷன், 'நான் இந்திராணியைப் பதத்திலிருக்கிறேன். நான் இந்திராணியாஜ் யத்தில் சிறந்தவஸ்துக்களை அடைகிறவன். இதில் ஓர் அதர்ம முமில்லை. நீ இந்திரனால் அனுபவிக்கப்பட்டவள்' என்று அவ ளுக்குச்சொன்னான். அவள் அவனைநோக்கி, 'எனக்கு ஒருவிர தம் மூடிவுபெறுமேலிருக்கிறது; சில தினங்களுக்குள்ளே அதனுடைய முடிவில் உம்மை அடைவேன்' என்று சொன்னாள். இந்திராணி இவ்விதம்சொல்ல அவன் சென்றுவிட்டான். பிறகு இந்திராணி யானவள் துக்கசோகங்களால்வருத்தமுற்றவளாகவும் பதியைப்பார்ப் பதிலாவலுள்ளவளாகவும் நஹுஷனிடமிருந்தும் பயத்தால் பற்றப் பட்டவளாகவும் பிருஹஸ்பதியிடம் சென்றாள். அந்தப்பிருஹஸ்பதி யும் மிக்கவருத்தமுற்றவளான அவளைப் பார்த்தவுடனே தியானம் செய்து பதியின்காரியத்தில் பற்றுள்ளவளாக அறிந்து, 'இந்தவிரதத் தோடு தவத்தைச்செய்து வரத்தையளிப்பவளான உப்ஸ்ருதியென் கிறதேவியை அழை. அப்பொழுது அவள் உனக்கு இந்திரனைக் காண் பிப்பாள்' என்று சொன்னார். உடனே அவள் பெரிதான நியமத்தி லிருந்துகொண்டு வசமளிப்பவளான உபஸ்ருதிதேவியை மந்திரங் களால் அழைத்தாள். அந்தஉபஸ்ருதி சசியின்எதிரிடம் வந்தாள். அவளை நோக்கி, 'இதோ இருக்கிறேன்' என்று சொல்லி, 'நீ அழைத்தபடி வந்துவிட்டேன். உனக்கு என்னஇஷ்டத்தைச்செய்ய வேண்டும்?' என்றும்கேட்டாள். சசி, 'அவளைத் தலையால் வணங்கி, 'ஓ! பூகவதி! என்னுடையபர்த்தாவைக் காண்பிக்கக்கடவாய். நீ ஸத்யமாயும் ஸத்துக்களுக்குமாதாவாயும் இருப்பவள்' என்று சொன் னாள். அவள் இவளை மானஸஸரஸுக்கு அழைத்துக்கொண்டுபோ னாள்; அவ்விடத்தில் தாமரைத்தண்டிலிருக்கின்றஇந்திரனைக் காண் பித்தாள். அப்பொழுது இந்திரன் இளைத்தவளும் சோர்வடைந்த வளும் தனதுமனைவியுமான அந்தச்சசியைப்பார்த்து, 'ஆ! ஆ! தூண மல்போலுள்ளதேஹத்தையுடைய (என்னுடைய) பத்னியானவள் துக்கத்தால் வருந்திக்கொண்டு வந்தடைந்தாளென்கிற இந்தத்துக்கம் எனக்குவந் ததே!' என்று கவலைகொண்டான். அவளைநோக்கி இந்திரன், 'எவ் விதம்இருக்கிறாய்?' என்று கேட்டான். அவள், 'நஹுஷன் என் னைப் பத்னியாகச்செய்துகொள்வதற்கு அழைக்கிறான். என்னால் அவனுக்குக் காலமும் குறிக்கப்பட்டிருக்கிறது' என்று சொன்னாள். இந்திரன் அவளுக்கு, 'நீ போ. நஹுஷனைநோக்கி, 'நீர் ரிஷிகளால் வகிக்கப்பட்ட புனிதானவாஹனத்திலேறிவந்து என்னை விவாஹம்

செய்யும்' என்றும், இந்திரனுக்குப் பெரியவைகளும் மனத்திற்குப் பிரியமானவைகளும் அவனுலேறப்பட்டவைகளுமான சோகனங்களிருக்கின்றன. நீர் வேறுவாகனத்தினுல் என்னை அடைவதற்கு யோக்கியராகிறீர்' என்றும் சொல்' என்று சொன்னன். இவ்விதம்சொல்லப்பட்டு அவள் ஸந்தோஷமடைந்து சென்றுள். இந்திரனும் திரும்பவும் தாமரைத்தண்டினுள் சென்றுன். பிறகு நகுஷன் அந்த இந்திராணிவந்ததைப் பார்த்து, 'நீ எனக்குக்குறிப்பிட்ட அந்தக்கால மானது பூர்ணமாகிவிட்டது' என்று சொன்னன். அவளோநோக்கி இந்திராணி இந்திரன்சொன்னபடி சொன்னுள்.' அவன் மஹரிஷிகளால்வஹிக்கப்பட்ட வாகனத்திலேறிக்கொண்டு இந்திராணியின்ஸபீபம் சென்றுன். அப்பொழுது மித்ரனுக்கும் வருணனுக்கும் கும்பத்தில்பிறந்தவரும் ரிஷிகளில்சிறந்தவருமான அகஸ்தியமுனிவர் நஹுஷனுலே 'அந்தமஹாமுனிவர்கள் 'அவமதிக்கப்பட்டதைப்பார்த்தார். அது தாங்குவதற்குவருத்தமுள்ளதென்றுநினைத்துத் தாமும்சிரிக்க அவனுல் பாதங்களால் பரிசிக்கவும்பட்டார். உடனேஅவர் நகுஷனேநோக்கி, 'கெட்டகாரியத்தில்முயலுகின்றவனே! பாபி! பூமியில் விழுக்கடவாய். எதுவரை பூமியும் மலைகளுமிருக்குமோ அதுவரை ஸர்ப்பமாயிருக்கக்கடவாய்' என்றுசொன்னர். மகாமுனிவர்சொல்லும் பொழுதே அவன் அந்தவாகனத்திலிருந்தும் விழுந்தான். பிறகு மூவுலகமும் இந்திரனற்றதாயிற்று. அப்பொழுது தேவர்களும் முனிவர்களும் இந்திரனுக்காகப் பகவானனவிஷ்ணுவைச் சரணமடைந்தார்கள். ' அவரைநோக்கி, ' ஓ! பகவானே! பிரம்மஹத்தியால்அவமதிக்கப்பட்டஇந்திரனை ரக்ஷிக்கவேண்டும்' என்று சொன்னர்கள். அப்பொழுது ' வரத்தையளிப்பவரான அவர் அவர்களைநோக்கி, ' இந்திரன் விஷ்ணுவைத்தேவதையாகவுடைய அசுவமேதயாகத்தைச் செய்யட்டும். அதனுல் ஸ்வர்க்கஸ்தானத்தை அடைவான்' என்று சொன்னர். பிறகு தேவர்களும் முனிவர்களும் இந்திரனைக்காணுமையால் இந்திராணியைநோக்கி, ' ஓ! ஸௌபாக்யவதி! செல். இந்திரனை அழைத்துவா' என்று சொன்னர்கள். அவள் அந்த ஸபையிலிருக்கிறஇந்திரனை அழைத்தாள். இந்திரனும் அந்தஸபையிலிருந்து வெளியில்வந்து ஸ்வதேஜஸ்ஸை அடைந்தான். பிருகஸ்பதியும் இந்திரனுக்காக அஸ்வமேதமென்கிறமஹாயாகத்தை நடத்தினர். அந்தயாகத்தில் கறுப்பும் வெளுப்புமான யாகாஸ்வத்தையிட்டு அதையே [1]வாகனமாகச்செய்து பிருஹஸ்பதியானவர் தேவர்களுக்

[1] வேறுபாடம்.

குப்பதியான்இந்திரனின் ஸ்வர்க்கஸ்தானத்தை அடையும்படிசெய்தார். பிறகு அந்தத்தேவராஜன் பாவமற்றவனுகித் தேவர்களும் ரிஷிகளும் துதிக்க ஸ்வர்க்கத்திலிருப்பவனுனன். பிரம்மஹத்தியை ஸ்திரீகள் விருக்ஷங்கள் மலைகள் பூமி ஆகிய இவைகள் நான்குஸ்தானங்களிலும் பிரித்துக்கொடுத்தான். அது ஸ்திரீகளிடம் ரஜஸாகவும் விருக்ஷங்களில் பிசினுகவும் மலைகளில் பலமாகவும் பூமியில் உவராகவுமிருக்கிறது. அவைகள் தொடத்தக்கவைகளல்ல. ஆகையினுலேதான் ஹவிஸானது லவணமின்றிப் பாகம்செய்யப்படுகின்றது. இவ்விதம் இந்திரன் பிராம்மணர்களுடைய தேஜஸின்பெருமையால் விருத்திசெய்யப்பட்டுச் சுத்தருவதம்செய்து தன்ஸ்தானத்தை அடைவிக்கப்பட்டான். மஹாத்மாவுடையசாபநிவிருத்திக்காகத் தேவர்களும் ரிஷிகளும்பிரார்த்தித்ததால் அகஸ்தியர், 'ஸ்ரீமானுனதர்மாஜன் பிராதாக்களோடு உன்வம்சத்தில் பிறப்பான். அவனுக்குத்தம்பியானபீமனுடீ கிரஹிப்பாய். அப்பொழுது தர்மபுத்திரன் உன்னுடையவினுக்களுக்குவிடை சொல்லி உன்னையும் அவனையும் விடுதல்அடையச்செய்வான்' என்று சொன்னர். முன்காலத்தில் பரத்வாஜமஹரிஷியானவர் ஆகாயகங்கையை அடைந்து ஸ்நானம்செய்தார்; மூன்றுஅடிகளைவைக்கிறவரானவிஷ்ணுவினுலே அடிக்கப்பட்டார். (அப்பொழுது) அவர் பரத்வாஜராலே அடையாளத்தோடுகூடியகையால் மார்பிலடிக்கப்பட்டு அடையாளத்தோடுகூடியமார்பையுடையவரானர். அக்னி பிருகுமஹரிஷியினுல்சபிக்கப்பட்டு எல்லாவற்றையும்புஜிப்பவனுனன். அதிதியானவள், 'இதைப்புஜித்துவிட்டுத் தேவர்கள் அஸுரர்களைக் கொல்லுவார்கள்' என்று தேவர்களுக்கு அன்னத்தைப் பாகம்செய்தாள். புதனனவன் விரதானுஷ்டானத்தின்முடிவில் அவ்விடம் வந்தான். அதிதியினிடம், 'பிக்ஷைகொடு' என்றுயாசிக்கவும்செய்தான். அப்பொழுது அதிதியானவள், 'இது முதலில் தேவர்களால் அருந்தத்தக்கது. மற்றவனுல் முந்தி அருந்தத்தக்கதில்லை' என்றுசொல்லிப் பிக்ஷைகொடுக்கவில்லை. உடனே பிக்ஷைகொடாததால் கோபங்கொண்டவனும் பிராம்மணனுமானபுதன், 'அதிதியின்உதரத்தில் பிடைஉண்டாகப்போகிறது' என்று அவளைச்சபித்தான். அண்டமென்றுபெயருள்ள ஸூர்யனுடைய இரண்டாவதுஜன்மத்தில் மாதாவான அதிதியினுடைய [1]அண்டமானது பேதிக்கப்பட்டது. [2]மார்த்தாண்டனென்கிறஆதித்யன் சிராத்ததேவனுனன். தக்ஷனுக்கு அறுபது கன்னிகைகள் இருந்தார்கள். அவர்களில் பதின்மூவரைத் தக்ஷன் கஸ்

[1] கருப்பை. [2] ம்ருத + அண்ட = மார்த்தாண்ட.

யபருக்குக் கொடுத்தான்; பதின்மரைத் தர்மரூக்குக் கொடுத்தான்; பதின்மரை மனுவுக்குக் கொடுத்தான்; இருபத்தெழுவரைச் சந்திரனுக்குக் கொடுத்தான். ஒரேதன்மையுள்ளவர்களும் நக்ஷத்திரமென்கிறபெயர்கொண்டவர்களுமான அவர்களில் ரோஹிணியிடம் சந்திரன் மிகவும் அதிகமானபிரீதியுடையவனாயிருந்தான். அதனால் மற்ற அந்தப் பத்னிகள் பொறுமைகொண்டு பிதாவின்ஸமீபம்சென்று, 'ஓ!' பகவானே! நாங்கள் ஒரேதன்மையுள்ள பிரபாவமுடையவர்களாயிருக்க, சந்திரன் ரோஹிணியை மிகவும் அதிகமாக விரும்புகிறான்' என்று இந்தவிஷயத்தைச் சொன்னார்கள். அவன், ''க்ஷயமானது இவனை அடையட்டும்' என்றுசொன்னான். தக்ஷனுடையசாபத்தால் ஸோம ராஜனுக்கு க்ஷயமும் உண்டாயிற்று. க்ஷயத்தினால்வ்யாபிக்கப்பட்ட அவன் தக்ஷனை அடைந்தான். தக்ஷனும் அவனைநோக்கி, 'நீ ஒரு தன்மையாயில்லை' என்றுசொன்னான். அப்பொழுது ரிஷிகள் சந்திரனைநோக்கி,' க்ஷயரோகத்தால் குறைந்துபோகிறாய். மேற்குத்திக்கில் ஸமுத்திரத்தில் ஹிரண்யஸரஸென்னும்தீர்த்தம் இருக்கின்றது. அவ்விடம்சென்று சரீரத்தை ஸ்நானம்செய்வி' என்றுசொன்னார்கள். உடனே சந்திரன் சென்றான். அவ்விடத்திலுள்ள ஹிரண்யஸரஸின் தீர்த்தத்தையடைந்து சரீரத்தை முழுகச்செய்தான். ஸ்நானஞ் செய்து தன்னைப் பாவத்திலிருந்தும் விடுவித்துக்கொண்டான். அந்தத்தீர்த்தத்தால் சந்திரன் விசேஷகாந்தியடைந்ததுமுதல் அந்தத் தீர்த்தமானது பிரபாஸதீர்த்தமென்கிறபெயரால் கியாதிபெற்றதாயிற்று. அந்தச்சாபத்தால் இப்பொழுதும் சந்திரன் அமாவாஸ்யையினிடையில் க்ஷயத்தை அடைகிறான். பௌர்ணமியில் மாத்திரம் பூர்த்தியடைந்து மேகரேகைபோல அடையாளமுடைய சரீரத்தைக்காண்பிக்கிறான்; மேகத்திற்குரிகானவர்ணத்தை அடைந்தான். அவனுடைய முழுசீபான்றஅடையாளமானது நிர்மலமாகிவிட்டது. ஸ்தூலசிரஸென்கிற மகாமுனிவர் மேருவினுடைய ஈசானதிக்கின்கோணத்தில் தவம்புரிந்தார். அப்பொழுது தவம்செய்கிற அவருடையசரீரத்தை எல்லாக்கந்தத்தையும் வகிக்கிறவனும் சுசியுமானவாயு வீசிக்கொண்டு பரிசித்தான். தவத்தால் தாபத்தையடைந்த சரீரமுடையவரும் இனிதாதவருமான அவர் வாயுவீசுவதால் மனத்தில் சந்தோஷத்தை அடைந்தார். அவ்விடத்தில் வாயுவின் வீசுதலால் செய்யப்பட்ட ஸந்தோஷத்தையுடைய அவருக்கு விருக்ஷங்கள் புஷ்பசோபையைக் காண்பித்தனவென்று அவர் அவைகளை, 'நீங்கள் எல்லாக்காலமும் புஷ்பங்களும் பழங்களுமுடையவர்களாகமாட்டீர்கள்' என்று

சபித்தாராம்.' முன்காலத்தில் நாராயணர் உலகங்களின் நன்மைக்காகப்படபாமுகனென்கிற மகரிஷியானார். மேருவில்தவம்செய்கிறவரான அவர் சமுத்திரத்தைஅழைக்க அது வாவில்லை. அதனால் கோபமடைந்தஅவர் தம்முடையசரீரத்தின் உஷ்ணத்தால் ஸமுத்திரத்தை அசைவற்றஜலமுடையதாகச் செய்தார். வேர்வையின்பெருக்குக்குச்சமானமாக இந்தஸமுத்திரத்திற்கு லவணத்தன்மையையும் உண்டுபண்ணினார். 'அருந்தத்தகாததாய். உன்னுடையஇந்தஜலம் படபாமுகமென்றுபெயருடைய அக்னியினால் பானம்செய்யப்பட்டு அதற்கு மதுரமாகும்' என்றுசொல்லினர். அப்படிப்பட்டஇந்தஜலம் ஸமுத்திரத்திலிருந்தும் இப்பொழுதும்கூடத் தொடர்ந்ததாயிருக்கிற படபாமுகமென்னும்பெயருடைய அக்னியினால் பானம்செய்யப்படுகிறது. உமையானவள் தக்ஷனிடம்கோபத்தால் திரும்பவும் ஹிமவானுக்குப் புத்திரியானாள். இமயமலையினுடையபுத்திரியான உமைஎன்கிறகன்னிகையை ருத்ரர் விரும்பினார். பிருகுமஹரிஷியும் ஹிமவானை அடைந்து, 'இந்தக்கன்னிகையை எனக்குக் கொடு' என்று கேட்டார். அவரைநோக்கி ஹிமவான், 'ருத்திரரானவர் என்புத்திரியினால் விரும்பப்பட்ட நாயகராயிருக்கிறார்' என்றுசொன்னான். (அப்பொழுது) பிருகுவானவர் அவனைநோக்கி, 'கன்னியைவரிப்பதில் விருப்பமுள்ளநான் உன்னால் மறுக்கப்பட்டமையால் நீ ரத்தினங்களுக்கு இருப்பிடமாகமாட்டாய்' என்றுசொன்னார். இதுவரையில் இந்த முனிவசனம் நிலைத்திருக்கிறது. ஆகையால் பிராம்மணர்களுடையமஹிமை இவ்விதமாயிருக்கிறது. க்ஷத்ரியஜாதியும் பிராம்மணர்களுடைய அருளால் சாஸ்வதமும் அழிவற்றதுமாயிருக்கிறபூமியைப் பத்னியாக அடைந்து அனுபவித்தது. அப்படிப்பட்ட இந்தப்பிராம்மணக்ஷத்திரஜாதிகள் அக்னிஸோமஸ்வரூபம். அதனால் இந்தஜகத்தைத் தரிக்கப்படுகிறது.

மூன்றூற்றெழும்பத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(கிருஷ்ணர் தம்நாமங்களின்அர்த்தவிசேஷங்களையும் நாராயணதம்நாராயணருக்குத்போர்நடந்ததையும் அர்ஜுனனுக்குச் சொல்லியது.)

நாமங்களுடையஅர்த்தவிஸ்தாரத்தைச் சொல்லப்போகிறேன். ஒருமுகமானமனமுடையவனாகக் கேட்கக்கடவாய். [1]ஸுரர்களும்

---

1 'அக்னி' என்பது டீழையுரை.

சந்திரனும் கிரணங்களென்றுபெயர்கொண்ட என்னுடைய கேசங்களாலே உலகத்தை அடிக்கடி விழிக்கச்செய்கிறவர்களும், தபிக்கச் செய்கிறவர்களுமாகித் தனித்தனி இளம்புகிறார்கள். போதிப்பதனும் தபிக்கச்செய்வதனுமாகிய உலகத்திற்குச் சர்வாஷமேற்படும். ஓ! பாண்டுபுத்திரனே! அக்னியினாலும் ஸோமனாலும்செய்யப்பட்ட இந்தக்கர்மங்களால் ஈசானனும் வரமளிப்பவனும் உலகங்களை உண்டுபண்ணுகிறவனுமான நான் ஹ்ருஷீகேசனாகிறேன். நான் கிருதங்களில்நடக்கின்றயாகங்களில், 'இலோபஹுத' என்கிறமந்திரத்தினால்அழைக்கப்பட்டுப் பாகத்தை ஹரிக்கிறேன்; அதனாலும் என்னுடையநிறம் சிரேஷ்டமானஹரிதவர்ணமானதனாலும் நான் 'ஹரி' என்று கருதப்பட்டேன். 'தாம' என்றால் உலகங்களின்ஸாரம். [1] விசாரிக்கப்பட்டது ரிதம். ஆதலால் (விசாரித்த)உடனே நான் பிராம்மணர்களாலே, 'ரிததாமா' என்றுசொல்லப்பட்டேன். முன்காலத்தில் ஜலத்தில்முழுகினதும் ஜலத்தின்ருசையைஅடைந்ததுமான (கோவென்ற) பூமியை (அவிந்தம்)அடைந்தேன். அதனால் நான் தேவர்களால், 'கோவிந்தன்' என்னும்சொல்லால் துதிக்கப்பட்டேன். 'சிபி விஷ்டன்' என்கிறநாமாவில், 'சிபி' என்றால் ரோமங்களில்லாதவன். (அதனால் அவயவமற்றவன். ஆதலால்) அவனால் எல்லாம் (ஆவிஷ்டம்) பிரவேசிக்கப்பட்டதுபற்றி, 'சிபிவிஷ்டன்' என்று கருதப்பட்டேன். யாஸ்கரென்கிறமுனிவர் அநேகயாகங்களில் ஜாகரூகராகி, 'சிபிவிஷ்ட' என்றுகானம்செய்தார். இந்தக்காரணத்தால் நான் ரகஸ்யமான இந்தநாமத்தைத் தரிக்கிறேன். கம்பீரமான புத்தியையுடையயாஸ்கமுனிவர் என்னை, 'சிபிவிஷ்ட' என்று துதிசெய்து என்னுடையஅனுக்ரகத்தால் பாதாளத்தில்மறைந்ததான நிருக்தமென்கிறகிரந்தத்தை அடைந்தார். எல்லாப்பிராணிகளுக்கும் க்ஷேத்ரஜ்ஞனானநான் ஒருபொழுதும் ஜனித்தவனுமில்லை; ஜனிக்கிறவனுமில்லை; ஜனிப்பவனுமில்லை. அதனால் நான் அஜனென்றுகருதப்பட்டேன். குந்தியின்புத்திரா! என்னால் அற்பமாகவும் அமங்களமாகவும் ஒருபோதும் முன் சொல்லப்படவில்லை. பிரம்மாவின்புத்ரியானஎன்னுடையஸாஸ்வதீதேவியானவள் தவறுதல்; உண்மையுள்ளவள். (அப்படிஸத்யத்தையடைத்தவனதலாலும் பிரத்யக்ஷமானபிருதிவ்யப்புதேயுஆகிய)[2] ஸத்தும் (அப்யத்தியக்ஷமானவாயுஆகாயம்ஆகிய) அஸத்தும் என்னால் என்னிடத்

---

[1] ஸத்தியம்.

[2] 'ஸத் + த்யத் = 'ஸத்யம்' என்று பிரித்துப் பொருள்கூறுவது பழையமுறை.

தில் பிரம்மாவுக்கிருப்பிடமானகாபிகமலதேசத்தில் பிரவேசிக்கச் செய்யப்பட்டதனும் என்னை முனிவர்கள் ஸத்யனுக அறிகின்றார்கள். நான் ஸத்வகுணத்திலிருந்தும் முன் நழுவாதவன். ஸத்வத்தை என்னில்செய்யப்பட்டதாக அறிவாய்: தனஞ்சய! முன் ஜன்மத்திலுள்ள ஸத்வமானது இந்தஜன்மத்திலும் என்னிடமிருக்கும். அதனாலும் ஸத்வகுணத்தால் நிஷ்காமகர்மமுள்ளவனும் களங்கமற்றவனுமாயிருப்பதனாலும் ஸாத்வதமென்கிற பாஞ்சராத்ரசாஸ்திரத்தாலுண்டானஞானத்தினால் பிரம்மவித்துக்களால் பார்க்கப்பட்டவனென்பதனாலும் நான் ஸாத்வதன். ஓ! பார்த்த! அர்ஜுன! நான் இரும்பினால்செய்யப்பட்ட பெரியகலப்பைக்கொழுவாகிப் பூமியைக் கிறுகிறேன். (அப்படி கர்ஷணம்செய்வதாலும்) என்னுடையவர்ணம் கிருஷ்ணமாயுள்ளதனாலும் நான் கிருஷ்ணன். என்னில் அப்புக்களுடன்பூமியும் வாயுவுடன்ஆகாயமும் தேஜஸுடன்வாயுவும் சேர்க்கப்பட்டன. (அந்தவிஷயத்தில் எனக்குக் குண்டமென்கிற டங்குதல் வி=இல்லாததால்) நான் [1]வைகுண்டனுமானேன். சாந்தமான ப்ரம்மமும் மேலானது. இந்தத்தர்மமும் பரமாகச் சொல்லப்படுகிறது. நான் அவைகளிலிருந்து முன்நழுவாதவன். அந்தக்கர்மத்தினால் நான் அச்சுதன். எங்கும்வியாபித்த பிருதிவ்யாகாயமிரண்டும் பிரசித்தமானவை. அவைகளைச்சேர்த்துத் தரித்ததினிமித்தம் ருஜு வாய் [2]அதோக்ஷஜனுகச் சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்லப்பட்டவன்னை வேதங்களையறிந்தவர்களும் வேதங்களின்அர்த்தங்களை விசாரிக்கிறவர்களுமாயிருப்பவர்கள் பிராக்வம்ச(மென்கிறயாக சாலையின்ஸ்தலவிசேஷ)த்தில் கானம்செய்கிறார்கள். அதனாலும் நான்அதோக்ஷஜனுகக் கருதப்பட்டேன். ஓரே அபிப்பிராயமாக, 'பிரபு வானநாராயணைத்தவிர உலகத்தில் வேறு [3]அதோக்ஷஜனில்லை'

---

1 'வி' என்பதற்கு வாயுவும் தேஜஸும் ஜலமும் பொருள்; 'கு' என்பதற்குப் பூமியென்பது பொருள்; 'ட' என்பதற்கு ஆகாயமென்பது பொருள். அவற்றைச்சேர்த்தவர் வீகுண்டர். 'குண்ட' என்பதற்குத்திறமையின்மை என்பதும், 'வி' என்பதற்கு இல்லையென்பதும் பொருள். அவற்றைச்சேர்ப்பதில்திறமையின்மை இல்லாததால் வைகுண்டர்என்றுமாம்.

2 'அதஃ=கீழிருப்பதான பிருதிவீ. அக்=வியாபித்திருப்பதான ஆகாயம். ஸஞ்ஜ்=சேர்த்துத்தரிப்பவன். இதில் ஸந்தியால் ஸகரம் மறைகிறது. ஸகரம் ஷகாரமாகிறது.

3 'அ=உலகங்களுக்கு லயஸ்தானம்; தோக்ஷ=இருப்பிடம்; ஜ=உற்பத்திகாரணம். உலகின்களவின் லயத்திற்கும் ஸ்திதிக்கும் உத்பத்திக்கும்ஸ்தானமானதால், அதோக்ஷஜன்' என்பது பழையஅரை.

என்கிறசப்தமானது பரமரிஷிகளாலே சொல்லப்பட்டது; உலகத்தில் அக்னிஜ்வாலாரூபனான என்னைச்சேர்ந்திருதமானது ஸ்பிராணிகளுடையபிராணன்களைத் தரிக்கின்றது. அதனால் ஜாக்ரதையுள்ளவேத வித்துக்களால் நான், 'கிருதார்த்தஸ்' என்று சொல்லப்பட்டேன். பித்தமென்றும் சிலேஷ்மமென்றும் வாதமென்றும் பிரஸித்தமான மூன்றுதாதுக்களும் கர்மத்தாலுண்டானவைகளென்று கருதப்பட்டன. இவை ஸங்காதமென்று சொல்லப்படுகின்றன. இவைகளால் ஜந்துவானது தரிக்கப்படுகிறது. இவைகள் குறைந்தால் குறைவடைகிறது. அதனால் ஆயுர்வேதத்தையறிந்தவர்கள் என்னை (மூன்று தாதுக்களையுமுடைமையால்) திரிதாதுவாகச் சொல்லுகின்றார்கள். ஓ! பாரத! 'வ்ருஷம்' என்பது உலகங்களில் நிகண்டுபதங்களுடைய விவரணத்தில், 'பூஜ்யமானதர்மம்' என்று பிரசித்தமாயிருக்கிறது. என்னை உத்தமமானவிருஷமாக அறிவாய். கபிஎன்றால் வராஹம்என்றும் விருஷஎன்றால் ஸ்ரேஷ்டமென்றும் தர்மம்என்றும் சொல்லப்படுகின்றன. அதனால் கப்யபரென்னும் ஸ்ருஷ்டிகர்த்தர் என்னை, 'விருஷாகபி' என்று சொன்னார். வேதியர்களும் தேவர்களும் என்னுடையஆதியையும் மத்யத்தையும் முடிவையும் ஒருபோதும் அறிகிறதில்லை. (ஆகையால்) ஆதியும் மத்தியமும் முடிவுமற்றவனும் ஸர்வாணும் உலகங்களுக்கு ஸாக்ஷியுமானநான் [1]விபுவாகச்சொல்லப்பட்டேன். ஓ! தனஞ்சய! சுசியானவைகளும் கேட்பதற்கினிமையுள்ளவைகளுமான வார்த்தைகளை நான் இவ்வுலகில் கேட்கின்றேன். பாவங்களைக் (காதலும்) கேட்கிறதில்லை. அதனால் நான் சுசிஸ்ரவஸ் (என்றுசொல்லப்படுகிறேன்.) தேவர்களை விருத்தியடையச்செய்கின்றவனானநான் முன்காலத்தில் ஒருகொம்புடைய வராஹமாகி இந்தப் பூமியை எடுத்தேன். அதனால் நான், 'ஏகஸ்ருங்கன்' என்று சொல்லப்படுகிறேன். வராஹரூபத்தைத்தரித்தவனை நான் அப்படியே இருந்தேன். உயர்ந்தவைகளானதோள், நாஸிகை, தெற்றுப்பல் இம் மூன்றையுமுடைய சரீரத்தினுடையபரிமாணத்தால் நான், 'த்ரிககுத்' என்று பிரஸித்திபெற்றேன். ஞானத்தை விசாரிக்கின்றவர்களால் கபிலவர்ணமானஎன்னுடையஸ்வரூபமானது, 'விரிஞ்சன்' (விசேஷமாகத் தத்துவங்களை லயஞ்செய்கிறவன்) என்றுசொல்லப்பட்டது. சேதனன்மூலமாய் எல்லாஉலகங்களையும்செய்கின்றஅந்த, 'விரிஞ்சி' என்கிற ப்ரம்மாவும் நானே. உறுதியானநிச்சயத்தையுடைய ஸாங்கியர்களான ஆசாரியர்கள் வித்தையினுடையஉதாயமுள்ளவனும்

[1] வ்யாபித்தவன்.

()

ஆதித்யமண்டலத்திலிருப்பவனும் ஸுகரீனனுமான என்னைக் 'கபில'னுக்குச் சொல்லுகின்றார்கள். வேதத்தில் துதிக்கப்பெற்றவரும் எப்பொழுதும்யோகிகளால்பூஜிக்கப்படுகிறவரும் விபுவும் காந்தியுள்ளவருமான ஹிரண்யகர்ப்பரும் நானே. வேதத்தையறிந்தஜனங்கள் இருபத்தோராயிரம் கணக்குள்ள ரிக்குவேதமாக என்னைச் சொல்லுகிறார்கள்; ஆயிரம்சாகைகளுடன்கூடிய ஸாமமாகவும் சொல்லுகிறார்கள். எண்ணை ஆரண்யகமென்கிற உபநிஷத்தில்கானம்செய்கின்றவர்களும் வேதியர்களுமான என்னுடையபக்தர்கள் மிகவும்அரியவர்கள். (தவிரவும்) நூற்றொருசூக்திகளுள்ளதும் அத்வர்யுகாண்டமென்னப்படுவதுமான யஜுர்வேதத்தில் நான் அந்தயஜுர்வேதமாக ஸ்மரிக்கப்பட்டேன். அப்படியே அதர்வவேதத்தை அறிந்தவர்களானவேதியர்கள் ஐந்துகல்பங்களுள்ளதும் கிருத்தியைகளென்கிற கிரந்தங்களால் விவரணம் செய்யப்பட்டதுமான அதர்வவேதமாக என்னைச்சொல்லுகின்றார்கள். சாகைகளுடையபேதங்களும் சாகைகளிலுள்ளகாண்டங்களும் ஸ்வரமும் வர்ணமும் உச்சாரணமும் ஆகியஎல்லாம் என்னல் செய்யப்பட்டவைகளென்று அறியக்கடவாய். ஓ! பார்த்தனே! வர்த்தையளிக்கின்றவரும் அப்வசிரமுள்ளவரும் [1]கிரமத்தின்பிரிவையும் அங்ஷாங்களின்பிரிவையும் அறிந்தவரும் வடகோணத்திலிருப்பவருமான அவர் நானே. [2]வாமதேவரால் உபதேசிக்கப்பட்ட மார்க்கத்தையுடையவரும் மஹாத்மாவுமான பாஞ்சாலமுனிவரால் என்னுடைய அனுக்ரகத்தால் அனுகியான அந்தப்பூதத்தினிடமிருந்தும் கிருமமானதை அடையப்பட்டது. பாப்ரவ்யகோத்ரத்தில்பிறந்தஅவர் முதலில் கிரமத்தின்கரையை அடைந்தவராகவிளங்குகிறார். பிறகு [3]காலவரென்பவர் காராயணரிடமிருந்து வரத்தையடைந்து சிறந்ததானயோகத்தையும்பெற்றுக் கிரமத்தையுண்டுபண்ணி வேதசிக்ஷையையும் உண்டுபண்ணிக் கிரமத்தின்கரையை அடைந்தவரானார். பிறகு [4]புண்டரீகனென்பவனும் பிரதாபமுடையபிரம்மதத்தனென்கிற அரசனும் ஜனனமரணங்களாலுண்டானதுக்கத்தை அடிக்கடிநினைத்துநினைத்து [5]ஏழுஜன்மங்களில் முக்கியஜன்மத்தையடைந்து [6]யோகஸம்பத்தை

---

1 'இரண்டுசூக்தைச்சொல்லித் திரும்பவும் மூன்றியபதத்தைவிட்டுப் பின்றியபதத்துடன் அடுத்தபதத்தைச்சேர்த்துச் சொல்வது. [ப்பில் தெரிகிறது.

2 வேறுபாடம்.

3 'காலவருக்குப் பாப்ரவ்யகோத்ரம்' என்று இங்கிலிஷ்மொழிபெயர்

4 'கண்டரீகன்' என்பது வேறுபாடம்.

5 'ஏழுஜன்மத்திலுள்ள ஜனனமரணதுக்கங்களை அடிக்கடி நினைத்துநினைத்து' என்பது பழையவுரை.

யடைந்தார்கள். ஓ! பார்த்தனே! முன்காலத்தில் நான் ஏருகாணத்திற்காகத் தர்மருக்குப் பிரஸித்தனனுபுத்திரனுனேன். ஓ! கௌரவஸ்ரேஷ்ட! அதனல் நான் தர்மஜனுக்குக் கருதப்பட்டேன். முன்காலத்தில் நாராயணர்கள் அழிவற்றதர்மமயமான வாகீனத்திலேறிக் கொண்டு கந்தமாதனமென்கிற பர்வதத்தில் ஹம்புரிந்தார்கள். அந்த ஸமயத்தில் தக்ஷனுடையயாகமானது நடந்தது. ஓ! பாரத! தக்ஷன் ருத்ரருக்குப் பாகத்தை அமைக்கவில்லே. அப்பொழுது தக்ஷியின் வசனத்தால்(ருத்ர்) தக்ஷயஜ்ஞத்தை அழித்தார்; கோபத்தால் அடிக்கடி ஜ்வலிக்கிறசூலத்தை எவினர். அந்தச்சூலமானது விஸ்தாரமான தக்ஷனுடையயாகத்தைச் சரும்பலாகச்செய்துவிட்டுப் ப்ரதிகாரப்ரமத்திலிருக்கிறஎங்களுடையஸமீபத்தில் வேகமாகவந்தது. ஓ! பார்த்த! (அது) மிக்கவேகத்துடன் நாராயணருடையமார்பில்விழுந்தது. அப்பொழுது நாராயணருடையகேசங்கள் அந்தச்சூலத்தின்தேஜஸால் வியாபிக்கப்பட்டு [1]முஞ்சத்தின்நிறமுடையவைகளாயின. அதனல் நான் முஞ்சகேசமுள்ளவன். அந்தச்சூலமும் மஹாத்மாவானநாராயணரால் ஹுங்காரத்தால் விலக்கப்பட்டது. நாராயணரால் திருப்பப்பட்டஅது சங்காருடைய காத்தை அடைந்தது. பிறகு ருத்ரர் தவமுள்ளவர்களான அந்தரிஷிகளிடம் ஓடினர். அப்பொழுது எல்லாஸ்வரூபமுமான அந்த நாராயணர் மிகவும்படபடப்புடைய இவரைக் கையால் கழுத்தில் பிடித்தார். அதனல் அவருக்கு (கிரியகண்டமுடையவனென்கிற) நிகண்டத்தன்மை உண்டாயிற்று. பிறகு ருத்திரரை அடிப்பதற்காக நரர் தர்ப்பத்தின் உட்குச்சியை எடுத்து மந்திரங்களோடு விரைவாகச் சேர்த்தார். அது பெரியகோடாலி ஆயிற்று. அப்பிரபாழுது அந்தநரரால் வேகமாய்எறியப்பட அது முறிந்துவிட்டது. பரசுமுறிந்தஅதக்காரணத்தால் நான், 'கண்டபரசு' என்று கருதப்பட்டேன். ருத்திரருக்கு உச்சேஷணமென்கிற பாகத்தைத் திரும்பவும் அளித்தார்கள். இந்தவிஷயத்தில் சுருதியுமிருக்கிறது. வேதங்களால் திரும்பவும், 'அப்படியே ருத்ரானவர் [2]உச்சேஷணபாகத்தையுடையவர். எல்லாராலும்அடையமுடியாத ஸ்வரூபத்தையுடைய உச்சேஷணபாகத்தால் உச்சேஷணகாலத்தில் அவருக்கு ஹோமம் செய்யவேண்டும்' என்றுசொல்லப்பட்டார்' என்றுசொன்னர்.

அர்ஜுனன், 'ஓ! விருஷ்ணிகுலத்திலுதித்தவரே! அப்பொழுது மூவுலகங்களையும்நாசம்செய்கின்றஅந்தயுத்தத்தில் யார் ஜயத்

[1] தர்ப்பை. [2] மிகுந்தபாகம்.

தை அடைந்தார்? ஓ! ஜனார்த்தனரே! இந்த எனக்குச் சொல்லும்' என்றுவினவ, ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லத்தொடங்கினர். 'மிகுந்த முயற்சியுள்ளவர்களும் ருத்திரநாராயணரூபர்களுமான அவர்களுடையயுத்தத்தில் எல்லாஉலகங்களும் முழுமையும் அப்பொழுது விரைவில் வருத்தத்தையடைந்தன. அக்னியானவன் [1]யாகங்களில் சுத்தமும் நன்றாகஆஹுதிசெய்யப்பட்டதுமான ஹவிஸைக் கொடுக்கவில்லை. ஆத்மபாவனியுள்ளரிஷிகளுக்கு வேதங்கள் தோன்றவில்லை. அப்பொழுது ரஜஸும் தமஸுமே தேவர்களையடைந்தன. பூமியானது மிகவுஞ்சலித்தது. ஆகாயம் பிளந்தது. (ஸூர்யன்முதலான) தேஜஸுகள் விளங்கவில்லை. பிரம்மாவும், ஆஸனத்திலிருந்து நழுவினார். கடலும் வற்றிற்று. இமயமலையும் சிதறிற்று. ஓ! பாண்டுபுத்திர! இவ்விதம் நிமித்தங்களுண்டானபொழுது பிரம்மாவானவர் தேவகணங்களாலும் மஹாத்மாக்களானரிஷிகளாலும் சூழப்பெற்று யுத்தம் நடக்கின்ற இடத்தை விரைவில் அடைந்தார். [2]வியவஹார விஷயத்தையடைந்தவரான அந்தகன்முகர் அஞ்சலியைச்செய்துகொண்டு ருத்ரரைநோக்கி, 'ஓ! விஸ்வேசரே! உலகங்களுக்கு மங்களமுண்டாகட்டும். உலகத்தினுடையநன்மையில் விருப்பத்தால் ஆயுதங்களை விட்டுவிடும். அக்ஞரமும் அவ்யக்தமும் நியந்தாவும் உலகத்தைப்படைப்பதும் சலனமற்றதும் கர்த்தாவும் க்ஷத்ரவத்வமற்றதும் கர்த்தாவன்றென்று சொல்லப்படுவதும் வ்யக்தமாயிருக்குந்தன்மையையடைந்ததுமான ப்ரம்மத்தினுடைய சுபமானஓர் அம்சமானதும் தர்மருடையகுலத்தை வகிக்கிறவர்களும் தேவஸ்ரேஷ்டர்களும் பெரியதவத்தோடுகூடினவர்களும் பெரிய வ்ரதமுள்ளவர்களுமான நாராயணர்களாக அவதரித்திருக்கிறது. ஒருகாலனத்தினிமித்தம் நான் அவருடையஅருளால் உண்டானேன். ஐயா! ஸநாதனரான ரிரும் முன்ஸ்ருஷ்டியில் அவருடையக்ரோதத்தில் உண்டானவர். ஓ! வரத்தையளிப்பவரே! என்னோடும் தேவர்களோடும் மஹரிஷிகளோடும் சீக்கிரமாக அவருக்கு அருள்வரச்செய்யும். உலகங்களுக்குச் சாந்தியானது உண்டாகட்டும். தாமஸிக்கவேண்டாம்' என்று சொன்னார். இவ்விதம் பிரம்மாவினால்சொல்லப்பட்ட ருத்ரர் கோபபாக்னியைவிலக்கிவிட்டு உடனே தேவரும் பிரபுவுமான நாராயணரை அருளுள்ளவராகச்செய்தார்; ஸ்திரியாயிருப்பவரும் வரிக்கத்தக்கவரும்

---

1 வேறுபாடம்.

2 'நிருக்தங்களாலேமாத்திரம் அறியத்தக்கவரான' என்பது இங்கிலிஷ் மொழிபெயர்ப்பு.

வரத்தையளிப்பவருமான ஹரியைச்சரணமாகவுமடைந்தார். அப்பொழுது உடனே வரத்தையளிப்பவரும் தேவரும் குரோதத்தைஜயித்தவரும் இந்திரியங்களைஜயித்தவருமான ஹரியானவர் அவ்விடத்தில் ருத்திரருடன் சேர்ந்து ப்ரீதியடைந்தவரானார். ரிஷிகளாலும் ப்ரம்மாவினாலும் தேவர்களாலும் மிகவும் பூஜிக்கப்பட்டு உலகத்திற்குப்பிரபுவான அந்தஹரியானவர் தேவரான ஈசானரைநோக்கி, 'எவன் உம்மை அறிகிறானோ அவன் என்னை அறிகிறான். எவன் உம்மை அனுஸரிக்கிறானோ அவன் என்னை அனுஸரிக்கிறான். நம்மிருவருக்கும் சிறிதும் பேதமில்லை. உமக்கு வேறுவிதமானபுத்தி உண்டாகவேண்டாம். இதுமுதல் எனக்குச் சூலத்தாலுண்டான இந்த அடையாளமானது ஸ்ரீவத்ஸமாகக்கடவது. என்னுடையகரீத்தால் அடையாளம்செய்யப்பட்டதும் ஸ்ரீகண்டாவீர்' என்றுசொன்னார். அப்பொழுது இவ்விதம் ருத்ரரும் நாராயணரும் ஒருவருக்கொருவர் அடையாளத்தை உண்டுபண்ணிக்கொண்டார்கள். நரநாராயணரிஷிகள்சேர்ந்து ருத்ரருடன் நிகரற்றஸ்நேகத்தையும்செய்து தேவர்களை அனுப்பிவிட்டு ஜாகரூகர்களாகித் தவத்தைச் செய்தார்கள். ஓ! பார்த்தனே! இவ்விதம் யுத்தத்தில் நாராயணருடையஜயமானது உனக்குச் சொல்லப்பட்டது. ஓ! பாரத! ரகஸ்யமானநாமங்களும் விளக்கமாகச் சொல்லப்பட்டன. சொல்லப்பட்ட அவைகள் இவ்வுலகில் ரிஷிகளால் சொல்லப்பட்டவைகள். ஓ! குந்தீபுத்திரனே! இவ்விதம் நான் அநேகவிதமானரூபங்களுடன் பூமியிலும் ப்ரம்மலோகத்திலும் அனுகியானகோளிலோகத்திலும் ஸஞ்சரிக்கின்றேன். என்னால் நீ யுத்தத்தில் ரக்ஷிக்கப்பெற்றுப் பெரியஜயத்தை அடைந்தாய். இப்பொழுது யுத்தம்நடக்கையில் உனக்குமுன்னேபோகின்றவனைத் தேவதேவரும் ஜடாதாரியுமானருத்ரராக அறி. குரோதத்தினுண்டானழையால் அவரே என்னால் உனக்குமுன்னே காலனைச் செய்யப்பட்டார். முன் அவரால் கொல்லப்பட்டவர்களானசத்துருக்களை நீ கொன்றாய். அறிவுவிரிதானபிரபாவமுடையவரும் தேவர்களுக்கெல்லாம்தேவரும் உமாபதியும் உலகங்களுக்கீசரும் பாவங்களைஹரிப்பவரும் நாசமற்றவருமானஅந்தத்தேவரை நீ பரிசுத்தனாகி 'வணங்கக்கடவாய். ஓ! தனஞ்சய! அவர் கோபத்தாலுண்டானவரென்று முன் பலமுறை உனக்குச் சொல்லியிருக்கிறேன். அவருடையபெருமையையும் நீ முன்னமே கேட்டிருக்கிறாய்' என்றுசொன்னார்" என்றார்.

———·

மூன்நூற்றைம்பத்துமூன்றுவீது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாரதர் ஸ்வேதத்வீபத்திலிருந்துதிரும்பிப் பதரிகாச்ரமம்வந்ததும் அங்கு நாநாராயணருடன் ஸம்பாஷித்ததும்.)

சௌனகர், "ஓ! ஸூதபுத்திரரே! எல்லாமுனிவர்களும் கேட்டு மிக்கஆச்சரியத்தையடைந்த மிகப்பெரியகதையை நீர் விரிவாகச்சொன்னீர். ஓ! ஸூதபுத்ரரே! எல்லாஆச்ரமங்களின் அனுஷ்டானமும் எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானமும் நாராயணருடைய கதையான துய்யனலிப்பதுபோலப் பயனளிக்கிறதில்லை. நாராயணரைப்பற்றியதும் பரிசுத்தமும் எல்லாபபாவங்களிலிருந்தும் விடுவிப்பதுமான இந்தக்கதையை ஆதிமுதல் கேட்டுப் பரிசுத்தமான அங்கங்களுடையவர்களாகினும். தேவரும் எல்லாஉலகங்களாலும் நமஸ்கரிக்கப்பட்டவருமானபகவான் பிரம்மாமுதலான எல்லாத்தேவர்களாலும் மற்றமஹரிஷிகளாலும் பார்க்கமுடியாதவர். ஓ! ஸூதபுத்திரரே! (அப்படியிருக்க) நாரதரானவர் தேவரும் ஹரியுமானநாராயணரைப் பார்த்தாரென்பது அந்தத்தேவருடையஸம்மதத்தாலென்பது நிச்சயம். நாரதரானவர் அகிருத்தசரீரத்திலிருக்கிறஜகந்நாதரைப் பார்த்தாரென்பதற்கும் தேவர்களிற்சிறந்தவர்களான நாநாராயணர்களைப்பார்ப்பதற்குத் திரும்பச்சென்றாரென்பதற்கும் என்னகாரணம்? அதை எனக்குச்சொல்லும்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர்.

"ஓ! சௌனகரே! பரிக்ஷித்தின்குமாரரான ஜனமேஜயருடைய அச்வமேதயாகம் நடந்துவரும்பொழுது விதிப்படிசெய்யப்பட்டகர்மாக்களுடையமத்யங்களில் அரசர்களில் சிறந்தவரானஜனமேஜயர் வேதங்களுக்குநிதியும் ஸுமர்த்தரும் தமது பிதாமஹருக்குப்பிதாமஹரும் கிருஷ்ணத்வைபாயனரென்றுபெயருள்ளவருமான வ்யாஸமுனிவரை நோக்கி, 'சுவேதத்வீபத்திலிருந்தும் திரும்பினவரும் பகவானுடைய வாக்கியத்தைத்தியானம்செய்பவரும் தேவரிஷியுமானநாரதரால் இதற்குமேல் என்னசெய்யப்பட்டது? அவர் பதரிகாச்ரமம்வந்து அந்த முனிவர்களையும் அடைந்து எவ்வளவுகாலம் வசித்தார்? எந்தக் கதையைக்கேட்டார்? ஓ! தவங்களுக்குநிதியான பிராம்மணரே! லக்ஷக்கணக்குள்ள விரிவானபாரதமென்னும் இதிஹாசத்திலிருந்தும் மிகவும்உத்தமமான ஞானமாகிறஸமுத்திரத்தைப் புத்தியாகிற

மத்தால் கடைந்து தயிரிலிருந்து வெண்ணெய்போலவும் மலயாசலத்திலிருந்து சந்தனம்போலவும் வேதங்களிலிருந்து உபநிஷத்துப் போலவும் ஓஷதிகளிலிருந்து அமிருதம்போலவும்எடுக்கப்பட்டதும் நாராயணருடைய சரித்திரத்தைப்பற்றியதுமான இந்திகதாமிருதமானது உம்மால் சொல்லப்பட்டது. பகவானும்தேவருமான அந்தணர் எல்லாப்பிராணிகளுக்கும் ஆத்மாவானவர். ஓ! பிராம்மணசிரேஷ்டரே! எதில் கல்பத்தின்முடிவில் பிரம்மாமுதலான எல்லாத்தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும் சராசரமான எல்லாஉலகமும் பிரவேசிக்கின்றனவோ அந்தநாராயணரூபமான தேஜஸானது பார்க்கமுடியாததாயுள்ளது. அதைக்காட்டிலும் இவ்விடத்திலும் ஸ்வர்க்கத்திலும் பரிசுத்தமும் மேலானதுமான வஸ்துஇல்லையென்று நிணைக்கிறேன். எல்லா ஆஸ்ரமங்களின் அனுஷ்டானமும் எல்லாத்தீர்த்தங்களிலும் ஸ்நானமும் நாராயணருடைய கதைபோலப் பயனளிக்கிறதில்லை. எல்லாவற்றிற்கும் ஈஸ்வரான ஹரியினுடையதும் இம்மையில் எல்லாப்பாவங்களையும் நாசம்செய்கின்றதுமான இந்தச்சரித்திரத்தை ஆதிமுதல்கேட்டு இப்பொழுது எல்லாவிதத்தாலும் பரிசுத்தர்களானோம். வாஸுதேவரை ஸஹாயமாகக் கொண்டு உத்தமமானஜயத்தை அடைந்தவரும் எனக்குப்பிரபிதாமஹருமான தனஞ்சயர் அந்தயுத்தத்தில் செய்தது ஆச்சரியமன்று. ஏனென்றால், மூவுலகங்களுக்கும் நாயகரானஅந்தவிஷ்ணுவானவர் ஸஹாயத்தைச்செய்கின்ற ஸகாவானமையால் இவருக்கு மூன்றுலகங்களிலும் அடையமுடியாதது ஒன்றுமில்லையென்று நிணைக்கிறேன். ஓ! பிராம்மணரே! என்னுடைய முன்னோர்களுடைய நன்மைக்கும் ஸ்ரேயஸுக்கும் ஜனார்த்தனரே துணையாயிருந்தமையால் அவர்களே சிறந்தவர்கள். அவர்கள் உலகங்களால்பூஜிக்கப்பட்டவரும் தவத்தாலும் பார்க்கமுடியாதவரும் ஸ்ரீவத்ஸம்என்கிற மறுவை அடையாளமாகவுடையவருமான பகவானே நேரில்பார்த்தார்கள். ஜலத்தில்சயனித்தவரும் ஜனனமற்றவரும் வியாபகரும் தேவருமான ஹரியைப்பார்த்த பிரம்மபுத்திரரான அந்தநாரதர் அவர்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தவர். ஸ்வேதத்வீபம்சென்று ஹரியை நேரில் தரிசித்தவரும் நாசமற்றவருமான அந்தநாரதமுனிவரை அல்பதேஜஸுடையவராக நான் நிணைக்கவில்லை. அப்பொழுது அசிருத்த சரீரத்திலிருக்கிறதேவரை நாரதர் தரிசித்தது தேவருடையஅருளைப் பற்றியதென்பது வெளிப்படை. திரும்பவும் நாரதர் நாராயணரைப் பார்ப்பதற்குப் பதரிகாவனத்திலுள்ள ஆஸ்ரமத்தையடைந்தா

ரென்பது என்னகாரணம்? ஸ்வேதத்வீபத்திலிருந்து திரும்பினவரும் பிரம்மபுத்ரருமான நாரதர் பதரிகாஸ்ரமம்வந்து அந்தரிக்ஷகீயும டைந்து எவ்வளவுகாலம் வஸித்தார்? என்னகேள்விகளைக் கேட் டார்? பெரியமஹாத்மாவான அந்தமுனிவர் ஸ்வேதத்வீபத்திலிருந்து திரும்பிவந்தபோது மஹாத்மாக்களான நாராயணமுனிவர்கள் என்ன சொன்னார்கள்? அவற்றையெல்லாம் உள்ளபடிஎனக்குச் சொல் லக்கடவீர்' என்றுகேட்டார். அப்பொழுது வ்யாஸர் அவருடையஅந் தவார்த்தையைக்கேட்டு ஸபீபத்திலிருக்கிற வைசம்பாயனரென் கிறசிஷ்யருக்கு, 'என்னிடமிருந்து நீ கேட்டஎல்லாவற்றையும் இவ னுக்குச்சொல்' என்று ஆஜ்ஞைசெய்தார். வேதியர்களில்சிறந்தவரான அவரும் குருவினுடைய வசனத்தைஅங்கீகரித்து அப்பொழுதே புராதனமானசரித்திரத்தையெல்லாம் (அவருக்குச்)சொல்லத்தொடங் கினர்.

"எவருடைய அனுக்ரஹத்தால் நாராயணருடையஇந்தக்கதை யைச் சொல்ல்ப்போகிறேனோ பகவானும் அளவற்றதேஜஸ்ஸுடைய வருமான அந்தவ்யாஸருக்கு நமஸ்காரம். ஓ! அரசரே! பெரிதான ஸ்வேதத்வீபத்தையடைந்து விகாரமற்றவரான ஹரியையும் பார்த்து விட்டுத் திரும்பினவரானநாரதர் பரமாத்மாவினால் சொல்லப்பட்ட அரியவிஷயத்தை மனத்தால்வஹித்துக்கொண்டு விரைவாக மேருவை யடைந்தார். ஓ! அரசரே! தூரமானவழிசென்று திரும்பவும் க்ஷேமத் துடன்கூடினவராக இவ்விடம்வந்தமையால் பிறகு இவருக்கு மனத தில் பெரிதானபயமுண்டாயிற்று. பிறகு மேருவிலிருந்தும் கந்தமா தனபர்வதத்தைக்குறித்துப் புறப்பட்டார். ஆகாயத்திலிருந்தும்வேக மாகப்பதரிகாவனத்தில் குதித்தார். பிறகு அவர் தேவர்களும் ஸநா தனர்களும் ரிஷிகளில்சிறந்தவர்களும் பெரிதானதவத்தை அனுஷ் டிக்கின்றவர்களும் ஆத்மநிஷ்டையுடையவர்களும் பெரியவிரதங்களை யுடையவர்களும் உலகங்களையெல்லாம்பிரகாசிக்கச்செய்கிற ஸூர்ய னைக்காட்டிலும் அதிகமானதேஜஸ்ஸுள்ளவர்களும் ஸ்ரீவத்ஸமென் கிறமறுவையுடையவர்களும் பூஜிக்கத்தக்கவர்களும் ஜடாமண்டல தாரிகளும் ஹம்ஸம்போன்றரேகைகளுள்ள புஜங்களுடையவர்களும் பாதங்களில் சக்ரரேகையடையாளமுடையவர்களும் விசாலமான மார்பையுடையவர்களும் நீண்டபுஜங்களுடையவர்களும் நான்குகை களுடையவர்களும் அறுபதுபற்களுடையவர்களும் எட்டுத்தெற்றுப் பற்களுடையவர்களும் மேகக்கூட்டத்திற்கு நிகரானஒலியுடையவர் களும் அழகானமுகமுடையவர்களும் விசாலமானநெற்றியுடையவர்

களும் அழகானபுருவமும் கபோலமும் நாஸிகையுமுடையவர்களு
மான நாகநாராயணர்களைக் கண்டார். அந்தத்தேச
கள் குடைக்குகைகாயிருந்தன. இவ்விதலக்ஷணமுள்ளவர்களும் மகா
புருஷர்களென்றுபேயர்பெற்றவர்களுமான அவர்களை நாரதர்பார்த்துச்
சந்தோஷமுடையவரானார். பிறகு அவர்கள் 'அவர்களால் நன்றுகப்
பூஜிக்கப்பட்டவரும், 'நல்வரவா' என்றுசொல்லி க்ஷேமம்விசாரிக்
கப்பட்டவருமாகி அந்தப்புருஷச்ரேஷ்டர்களைப்பார்த்து, 'இந்தரிஷி
ச்ரேஷ்டர்கள் ச்வேதத்வீபத்தில் என்னால் பார்க்கப்பட்டவர்களும்
எல்லாப்பிராணிகளாலும்நமஸ்கரிக்கப்பட்டவரிகளுமான ஸபையோர்
களைப்போலவே இருக்கிறார்கள்' என்று உள்ளத்தில் நிஸ்சத்தார்.
இவ்விதம் அந்தநாரதர் மனத்தினால்சிந்தித்துப் பிரதக்ஷிணமும்செய்து
அங்கு தர்ப்பத்தாலானதும் சுததமுமான பீடத்தில் உட்கார்ந்தார்.
பிறகு தவங்களுக்கும் தேஜஸ்களுக்கும் யசஸ்களுக்குமிருப்பிட
மும் சாந்திதரிகளையுடையவர்களுமான அந்தரிஷிகள் முன் பகற்
கடனைமுடித்துவிட்டுப் பிறகு ஸாவதானத்துடன் பாத்யத்தாலும்
அர்க்கியத்தாலும் நாரதரைப் பூஜித்தார்கள். அரசரே! அதிதிபூஜை
யையும் ஆன்னிகங்களையும்செய்து அவ்விருவர்களும் பீடங்களிலிருந்
தார்கள். அவ்விடத்தில் (நாரதரும்நாகநாராயணர்களுமாகிய) அவர்கள்
உட்கார்ந்திருக்கையில் அந்தத்தேசமானது ஆஜ்யத்தின்ஆஹுதி
யால் பெரியஜ்வாலையுடைய அக்கினிகளாலே யாகசாலைவிளங்குவது
போல விளங்கிற்று. பிறகு அவ்விடத்தில் நாராயணரானவர் ஸுக
மாகஉட்கார்ந்திருப்பவரும் ச்ரமம்நீங்கினவரும் அதிதிபூஜைசெய்யப்
பெற்றவரும் ஸுகத்துடனிருப்பவருமான நாரதரைநோக்கி, 'இப்
பொழுது உம்மாலே ச்வேதத்வீபத்தில் பகவானும் ஸநாதனரும்
எங்களிருவருக்கும்பரமகாரணருமான அந்தப்பரமாத்மா கூறப்
பட்டாரா?' என்றுகேட்டார். நாரதர், 'என்னால் விச்வரூபத்தைத்
தரிக்கிறவரும் விகாரமற்றவரும் ஸ்ரீமானுமானபுருஷர் பார்க்கப்பட்
டார். எல்லாஉலகங்களும் ரிஷிகளும் தேவர்களும் அவரிடமிருக்கி
றார்கள். ஸநாதனர்களானஉங்களைப்பார்த்து இப்பொழுதும் அவரைப்
பார்க்கிறேன்.' அவ்யக்தமானரூபத்தைத்தரிக்கிற அந்தஹரிபானவர்
எந்தலக்ஷணங்களுடனிருக்கிறாரோ வ்யக்தரூபத்தைத்தரிக்கின்ற நீங்
களும் அந்தலக்ஷணங்களுடனிருக்கிறீர்கள். நீங்கள் அவ்விடத்தில்
என்னாலே அந்தத்தேவருக்குப் பக்கத்தில்பார்க்கப்பட்டீர்கள். இப்
பொழுதுதான் பரமாத்மாவினால்அனுப்பப்பட்டு இங்கே வந்தேன்.
மூவுலகங்களிலும் தேஜஸினாலும் யசஸினாலும் ஸ்ரீயினாலும் தர்ம

ருடைய புத்திரர்களானவர்களைத்தவிர வேறுயார் அவருக்கொப்பா வார்? அவனாலே எனக்குத் தர்மமுழுதும் சொல்லப்பட்டது. க்ஷேத்ர ஜ்ஞனென்றுபேருடையவரும் சொல்லப்பட்டார். 'இவ்வுலகில் இனி உண்டாகப்போகின்றவதாரங்களும் சொல்லப்பட்டன. அவ்விடத் தில் வெளுப்புவர்ணமுடையவர்களும் ஐந்துஇந்திரியங்களுடைய செய்கையுமில்லாதவர்களும் ஞானிகளுமான புருஷர்களிருக்கின்றார் கள். அவர்களெல்லாரும் புருஷோத்தமரிடம் பக்தியுள்ளவர்கள். அவர்கள் எப்பொழுதும் தேவரைப் பூஜிக்கின்றனர். அவரும் அவர் களுடன்கூட விளையாடுகிறார். பரமாத்மாவும் பிராம்மணர்களிடம் பிரியமுள்ளவருமானபகவான் பக்தர்களிடம் அன்புள்ளவன்றோ? பாகவதர்களிடம்பிரியமுள்ளவரும் எல்லாவற்றையும் புஜிக்கிறவரும் எங்கும்நிறைந்தவரும் தேவரும் லக்ஷ்மிக்குப்பதியும் பக்தர்களிடமன் புள்ளவருமான அவர் எப்பொழுதும் பூஜிக்கப்பட்டு ஸந்தோஷிக்கின் றார். ஸ்வேதத்வீபத்திற்குமேற்பட்டவரும் தேஜஸென்றுமிகவும் கியாதிபெற்றவரும் ஸ்வப்பிரகாசதத்வத்தால்விளங்கும்படிசெய்யப்பட்டவ ரும் பெரிதானபுகழ்பெற்றவரும் மிகுந்தபலமும் காந்தியுமுடையவரு மான அந்தப்பரமாத்மாவே தவத்துடன் கர்த்தாவும் உபாதானகாரண மும் கார்யமும் நிமித்தமும் ஆஜ்ஞையைவிதிப்பவரும் தத்வமுமாக இருக்கிறார். ஆத்மதத்தியானத்தையுடைய அவரால் மூன்றுலகங்க ளுக்கும்க்ஷேமமுண்டாயிற்று. சுபமான இந்தச்சாந்தபுத்தியினாலே அவர் ஆத்மநிஷ்டையுடன்கூடினவிரதத்தை அடைந்தார். தேவர்க ளுக்கீசரான பகவான் அனுஷ்டிக்கஅரிதானதவம் செய்கையில் அவ் வீடத்தில்ஸூர்யன் வெப்பத்தைச் செய்கிறதில்லை. சந்திரன் விளங் குகிறதில்லை. வாயு வீசுகிறதில்லை. உலகங்களுக்குக் கர்த்தாவான அந் தத்தேவர் பூமியில் வீட்டுஅங்குலஉயரமுள்ளவேதியிலிருந்து ஒருபா தத்தால்நிற்கிறவரும் மேலேதூக்கப்பட்டகைகளையுடையவரும்வடக் குமுகமானவரும் ஆங்காங்களோடுகூடியவேதங்களை ஆவிருத்திசெய்ப வருமாக அனுஷ்டிக்கையிலும் அரிதானதவத்தைச் செய்தார். பிரம் மாவும் ரிஷிகளும் ஸாங்க்ஷாத்பதியும் மற்றத்தேவஸ்ரேஷ்டர்களும் தைத்யர்களும் தானவர்களும் ராக்ஷஸர்களும் நாகர்களும் கருடர்க ளும் கந்தருவர்களும் அப்ஸரர்களும் ராஜரிஷிகளும் எப்பொழுதும் விதியுடன்கொடுக்கின்ற ஹவ்யகவ்யமானத்தும் அந்தத்தேவருடைய சரணங்களை அடைகின்றனர். ஏகாந்தத்தையடைந்த புத்தியுடையவர் களால் செய்யப்பட்ட கிரியைகளையெல்லாம் தேவரானவர் தாமே சிரஸால் ஏற்கிறார். அவருக்கு ஜ்ஞானமுடையவர்களான மகாத்

மாக்களைக்காட்டிலும் மிகவும்பிரியமாயிருப்பவன் மூன்று உலகங்களிலும் வேறில்லை. அதனால் அவருடையஏகாந்தமானஸ்நேஹத்தையடைந்து அந்தப்பரமப்ரீத்மாவால்விடப்பட்டு இப்பொழுது இங்கேவந்தேன். இவ்விதம் பகவானும் தேவருமானஹரியானவர் தாமே எனக்குச் சொன்னார். ஆகையால் அவரையே மேலாகநினைத்துக்கொண்டவனாகி உங்களுடன் எப்பொழுதும் இங்கேயிருப்பேன்' என்றுசொன்னார்.

மூன்நூற்றைம்பத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாராயணர்கள் பகவானுடையமகிமையைச் சொல்லியதும் நாரதர் தவஞ்செய்ததும்.)

நரரும் நாராயணரும், 'பிரபுவானவர் உம்மால் சேவில்பார்க்கப்பட்டமையால் நீர் சிறந்தவர். அனுக்ரஹிக்கப்பட்டவருமாகிறீர். அவரை, பிரம்மாவாயிருந்தாலும் ஒருவரும் பார்த்தவரில்லை. அவ்யக்தத்திற்குக்காரணரும் புருஷோத்தமருமான பகவான் பார்ப்பதற்கரியவர். ஓ! நாரதரே! எங்களுடையஇந்தவார்த்தை ஸத்தியமானது. இவருக்கு உலகத்தில் பக்தரைக்காட்டிலும் மிகவுமினியமாயுள்ளவன் ஒருவனுமில்லை. ஓ! ப்ராம்மணஸ்ரேஷ்டரே! ஆகையால் அவர் தாழாகவே தம்முடையஆத்மாவைக் காண்பித்தார். ஓ! ப்ராம்மணஸ்ரேஷ்டரே! தவத்தைச்செய்கிறவரான அந்தப்பரமாத்மாவினுடையஸ்தானத்தை எங்களிருவரைத்தவிர ஒருவனும் அடைகிறதில்லை. அந்தஸ்தானத்துக்கு ஒன்றுசேர்ந்த ஐம்பிரம்ஸ்ரியர்களுக்குள்ளே காந்தியானது விளங்குகின்றஅவரால் உண்டாகின்றது. ஓ! பொறுமையுடையவர்களிற்சிறந்தவரானவேதியரே! ப்ரம்மாவுக்கும் பதியாயிருக்கிறஅந்தத்தேவரிடமிருந்தும் பூமியினிடமுள்ளபொறுமையானது உண்டாகிறது. எல்லாப்பிராணிகளுக்கும்ஹிதரானஅந்தத்தேவரிடமிருந்தும் ரஸமானது உண்டாகிறது. அப்புக்கள் அந்தரஸத்துடன் கூடுகின்றன; ஒடுங்கின்மையைவடைகின்றன. அவரிடமிருந்துதானே ரூபமென்கிறகுணத்தைஸ்வரூபமாகவுடையதேயுவானது உண்டாயிற்று. அந்தத்தேயுவுடன் ஸூர்யன் சேர்ந்து உலகத்தில் விளங்குகிறான். புருஷோத்தமரான அந்தத்தேவரிடமிருந்தும் ஸ்பரிசம் உண்டாயிற்று. அந்தஸ்பரிசத்துடன் வாயுவானது சேர்ந்து

உலகங்களில் ஒன்றாக வீசுகிறது. எல்லாஉலகங்களுக்கும் ஈசுவரரும் பிரபுவுமான அவரிடமிருந்தும் சப்தமுமுண்டாயிற்று. அந்தச்சப்தத்துடன் ஆகாயம் சேர்ந்து மறைக்கப்படாததாயிருக்கிறது. அந்தத் தேவரிடமிருந்தும் எல்லாப்பிராணிகளிடமுமுள்ள மனமானது உண்டாயிற்று. சந்திரன் அதனுடன் பிரகாசிக்கிறான். வித்தையையுஹாய மாகவுடையவரும் ஹவ்யகவ்யங்களைப்புஜிப்பவருமான பகவானுடைய ஸ்தானமானது ஸத்துஜ் பிராணிகளின்உற்பத்திக்குக்காரணமும் வேதமென்றுபெயருள்ளதுமாயிருக்கிறது. ஓ! பிராம்மணஸ்ரேஷ்டரே! உலகத்தில் பிளங்கமற்றவர்களும் புண்ணியபாபமற்றவர்களும் சூக்ஷ்மகரமானமார்க்கத்தையடைகின்றவர்களுமானவர்களுக்கு இந்தஉலகத்தைத்தரிப்பவனும் ஜ்வாலைகளின்பரம்பரையோடுகூடினவனும் மிக்கதேஜஸ்ஸையுடையவனும் எல்லாஉலகத்திலுமுள்ள இருளைப்போக்குகின்றவனுமான ஆதித்யன் துவாரமாகச் சொல்லப்படுகிறான். அவர்கள் ஆதித்யனுல்தகிக்கப்பட்ட எல்லாஉறுப்புக்களையுமுடையவர்களும் ஒருவாலும் ஓரிடத்திலும்காணமுடியாதவர்களும் பரமாணுவாயிருப்பவர்களுமாகிப் பிறகு [1]அந்தத்தேவரை அடைகின்றார்கள். அவரிடமிருந்தும்விடுபட்டு அகிருத்தருடையசரீரத்திலிருக்கிறார்கள். பிறகு அதைவிட்டு மனமாகிப் பிரத்யும்னரை அடைகின்றார்கள். பிறகு வேதியர்களிற்சிறந்தவர்களான ஸாங்கியர்கள் பாகவதர்களுடன் பிரத்யும்னரிடமிருந்துவிடுபட்டு ஸங்கர்ஷணரென்கிற ஜீவனை அடைகின்றார்கள். அவரைவிட்டு அந்தப்பிராம்மணஸ்ரேஷ்டர்கள் (ஸத்வம்ராஜஸ்தமஸென்னும்) முக்குணங்களைவிட்டவர்களாகி க்ஷேத்ரஜ்ஞனும் நிர்க்குணமானஸ்வரூபமுடையவனுமான பரமாத்மாவைச் சீக்கிரம் அடைகின்றார்கள். எல்லாவற்றிற்குமிருப்பிடமான வாஸுதேவரை உள்ளபடி க்ஷேத்ரஜ்ஞராகஅறியும். நிலைத்தமனமுள்ளவர்களும் நியமமுள்ளவர்களும் இந்திரியங்களைஅடக்கினவர்களுமான ஒரேவிதமானபாவனையை அடைந்தவர்களுமானவர்கள் வாஸுதேவரை அடைகின்றார்கள். ஓ! பிராம்மணஸ்ரேஷ்டரே! நாங்களும் தீர்மருடையகிருத்தில் பிறந்து ரமணீயமாயும் விசாலமாயுமிருக்கிறபதரிகையைஅணைந்து உக்ரமானதவத்தை மேற்கொண்டோம். ஓ! பிராம்மணரே! தேவர்களுக்குப் பிரியமும் மூன்றுலோகங்களிலுமிருப்பவைகளுமாக உண்டாகும் அந்தத்தேவருடைய அவதாரங்களுக்கு க்ஷேமமுண்டாகவேண்டும். ஓ! பிராம்மணஸ்ரேஷ்டரே! தபோதனரே! திரும்பவும் முன்போலத் தங்கள் விதியோடுகூடினவர்களும்

---

1 ஆதித்யமண்டலவாலியான நாராயணரை.

L 2

ஸ்ரேஷ்டமானஸர்வகிருச்சிரமென்கிற விரதத்தைதன்றுச்செய்கிறவர் களுமானஎங்களாலும் உமக்குஉள்ளவிதியுடன்கூடினவரும், ஸர்வ கிருச்சிரமென்கிறவிரதத்திலிருப்பவரும் பகவானுடன்சேர்ந்து ஸங் கற்பத்தைச்செய்தவருமானீர் ஸ்வேதத்வீபத்தில் காணப்பட்டீர். ஸ்தாவராஜங்கமங்களுடன்கூடின மூன்றுலோகங்களிலும் நடந்ததும் நடக்கின்றதும் நடப்பதுமான சுபாசுபங்களெல்லாம் எங்களுக்கு நன் றாகத்தெரியும். ஓ! மகாமுனிவரே! தேவர்களுக்குத்தேவரான அவர் உமக்கு எல்லாவற்றையும் சொன்னர்" என்றுசொன்னர்கள். உக்கிர மானதவத்திலிருப்பவர்களான அவர்களுடையஇந்தவார்த்தையைக் கேட்டு நாராயணரைப்புகழியாகவுடையவரானநாரதர் அஞ்சலி செய்துகொண்டு நாராயணரைப்பற்றியபலமந்திரங்களை விதிப்படி ஜபித்தார். மிக்கதேஜஸ்ஸுள்ளவரும் பகவானுமான அந்தநாரதரிஷி நாகநாராயணர்களுடையஆச்ரமத்தில் தேவவருஷத்தில் ஆயிரம்வரு ஷம் தேவர்களான அந்தநாகநாராயணர்களையே பூஜித்துக்கொண்டு வஸித்தார்.

மூன்றூற்றைம்பத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(நாகநாராயணர் பிதிருகாரியம்மிகச்சிறந்ததென்று நாரதருக்குச் சொல்லியது.)

பிறகு ஒருஸமயத்தில் பிரம்மாவின்புத்திரானநாரதர் நியர்யப் படி தெய்வகர்மத்தைச்செய்துவிட்டுப் பிறகு பித்ருகர்மாஷ்வச்செய் தார். அப்பொழுது அவரைநோக்கித் தர்மதின்முதற்புத்திரரும் பிர புவுமான நாராயணர், 'ஓ! பிரம்மணஸ்ரேஷ்டரே! புத்திமான்களிற் சிறந்தவரே! உம்மால்செய்யப்பட்டதெய்வகர்மத்திலும் பித்ருகர்மத் திலும் எவர் ஆராதிக்கப்படுகிறார்? அதை எனக்கு உண்மையாகச் சொல்லும். இது என்னகர்மம் செய்யப்படுகிறது? இதற்கு என்ன பயன் விரும்பப்படுகிறது?' என்று வினவ, நாரதர் சொல்லலானர். 'முன் உம்மாலே தெய்வகர்மாவானது நிச்சயத்தக்கதென்றும் பரா யும் ஆதியந்தமற்றவாயுமிருக்கிற பரமாத்மா தெய்வதமாகஅறியத் தக்கவரென்றும் சொல்லப்பட்டது. ஆனகயால் [1]அவரையே பாவனை செய்துகொண்டு விகாரமற்றவரானநாராயணரை எந்நாளும் பூஜிக்கி

---

[1] 'அந்தவார்த்தையையே பாவித்துகொண்டு' என்றுமாம்.

கிறேன். அவரிடமிருந்து முந்தி உலகங்களுக்குப்பிதாமஹரானபிரம்மா உண்டானார். பிரம்மாவும் பிரீதியடைந்து என்னுடையபிதாவை உண்டுபண்ணினார். நான் அவருடையலங்கற்பத்தினுண்டானவனும் முன்னதாகஉண்டுபண்ணப்பட்டவனுமான புத்திரன். ஓ! ஸாதுவே! நாராயணருடைய பூஜையுச்செய்தபிறகு நான் பித்ருக்களை பூராதிக்கிறேன். இவ்விதம் பிதாவும் மாதாவும் பிதாமஹரும் உலகங்களுக்குப்பதியுமாயிருக்கிற அந்தப்பகவானே நித்யம் பித்ருயஜ்ஞங்களில் என்னால் பூஜிக்கப்படுகிறார். 'தேவர்களானபித்ருக்கள் புத்திரர்களைப் பூஜித்தார்கள்' என்றுவேறுவிதமான சுருதியுமிருக்கிறது. (அக்னிஷ்வாத்தர்கள் 'என்கிறபுத்திரர்களுக்கு வேதாத்தியயனம்செய்வித்துவிட்டு அஸுரர்களுடன் யுத்தத்திற்குப்போனதேவர்களுக்கு) வேதசுருதியானது நஷ்டமாகிவிட்டது. திரும்பவும் அவர்கள் புத்திரர்களாலே அத்தியயனம்செய்விக்கப்பட்டார்கள். ஆகையால் மந்திரங்களைக்கொடுத்தஅந்தப்புத்திரர்கள் [1]பிதாவாயிருக்கும். தன்மையை அடைந்தார்கள். புத்திரர்களும் பிதிருக்களும் ஒருவரையொருவர்பூஜித்தார்களென்பது ஆத்மபாவனையுள்ள உங்களுக்குத் தேவர்களால் தெரிந்திருக்கும்; நிச்சயம். தர்ப்பங்களைப்போட்டுப் பிதிருக்களுக்குரியமூன்றுபிண்டங்களைவைத்துப் பூஜிக்கிறார்களே. முன்காலத்தில் அந்தப்பிதிருக்கள் எப்படி பிண்டமென்கிறபெயரை அடைந்தார்கள்?' என்றுகேட்டார். நாராயணர்கள் சொல்லத்தொடங்கினார்கள். 'முன்காலத்தில் ஸமுத்திரத்தை ஆடையாகவுடையதும் நஷ்டமானதுமான இந்தப்பூமியைக் கோவிந்தரானவர் வராகரூபத்தைஅடைந்து சீக்கிரமாக உத்தரணம்செய்தார். ஓ! நாரதரே! பிரபுவானபுருஷோத்தமர் பூமியைத் தன்நிலையில் ஸ்தாபனம்செய்துவிட்டுப் பிறகு ஜலத்தில் உள்ளே சேற்றினல்பூசப்பட்ட அங்கங்களையுடையவரும் உலககார்யத்தின்பொருட்டு முயற்சித்தவருமாகி ஸூர்யன்உச்சியையுடைந்துஆந்திகாலம்வந்தவுடன் தெற்றுப்பற்களில்பற்றிக்கொண்ட மூன்றுமண்ஆட்டிகளைச் சீக்கிரமாகஉதறிப் பூமியில் தர்ப்பங்களை விரித்து ஸ்தாபனம்செய்தார். அவர் அந்தப்பிண்டங்களில் தம்மைஉத்தேசித்து ஷிதிப்படி பிதிருகர்மாவைச் செய்தார். தேவர்களுக்கேசரான பிரபுவானவர் தம்முடையதியினுலேயே மூன்றுபிண்டங்களை ஸங்கல்பித்துத் தம்முடைய அங்கங்களின்உஷ்ணத்தாலுண்டானவைகளும் உள்ளே எண்ணெயுள்ளவைகளுமான திலங்களை அபஸவ்யமாக இறைத்துத் தாமே மிழக்குமுகமாயிருந்து பிண்டத்தியாகத்தைச்செ

1 வேற்பாடம்.

ய்தார்; பிறகு மரியாதைஸ்தாபனம்செயவதற்காக ஒருவார்த்தை யையும் சொன்னர். விருஷாகபிஎன்கிறபகவான், 'உலகங்களைச்செய்த தானே பிதிருக்களைச்சிருஷ்டிக்க யத்தனித்தேன். உடனே பிதிருக்க ளுடைய சிறந்தகார்யங்களின் ஏற்பாடுகளைச்சிந்திக்கிறவனை என்னு டைய கோபப்பார்வையிலிருந்தும் நன்றாகஉதறப்பட்ட இந்தப்பிண்டங் கள் (எள்ளுத்)தென்திக்கில் பூமியைப்பிடித்துக்கொண்டு அமைந் தன. ஆகையால் அவைகள் பித்ருக்களை, இந்த மூன்றும் சரீர மில்லாதவர்களும் பிண்டமூர்த்திகளைத் தரிக்கிறவர்களும் உலகத் தில்என்னால்ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்களும் ஸ்வதந்தர்களுமான பிதா, பிதாமஹர், பிரபிதாமஹரென்கிற பிதிருக்களாகட்டும். நானே இந்த மூன்றுபிண்டங்களிலுமிருக்கிறவனைக அறியத்தக்கவன். என்னைக் காட்டிலும்அதிகனுயிருப்பவன் ஒருவனுமில்லை. வேறுஎவன் என் னால் பூஜிக்கத்தக்கவனுவான் ? உலகத்தில் நானே பிதா; நானே பிதா மஹன். காரணமானதானே இவ்வுலகத்தில் பிதாமஹருக்குப்பிதாவு மாயுள்ளவன்' என்றார். இவ்விதம் இந்தவார்த்தையைத் தேவர் களுக்குத்தேவரானவிருஷாகபியானவர் சொல்லிவிட்டு வாராஹபர் வதத்தில் விஸ்தாரமானபிண்டங்களைவைத்து ஆத்மாவைப்பூஜித்து விட்டு அவ்விடத்திலே மறைந்தார். வேதியரே! சோபனமான புத்தியுடையவரே! இந்தநிமித்தமாகப் பித்ருக்கள் பிண்டமென்கிற பெயரைஅடைந்து விருஷாகபியின்வசனப்படி எப்பொழுதும் பூஜை யைப் பெறுகின்றார்கள். எவர்கள் பித்ருக்களையும் தேவர்களையும் குருக்களையும் அதிதிகளையும் கோக்களையும் பிராம்மணஸ்ரேஷ்டர் களையும் மாதாவையும் பிதாவையும் மனத்தினுலும் செய்கையினுலும் வாக்கினுலும் பூஜிக்கின்றார்களோ அவர்கள் விஷ்ணுவையே பூஜிக் கிறார்கள். அந்தப் பகவானுனநாராயணர் எல்லாப்பிராணிகளுடைய சரீரங்களையுமடைந்தவரும் உள்ளத்திற்சென்றவரும் எல்லாப்பிராணி களிடத்திலும் ஸமமானவரும் லோகதுக்கங்களைத்தீர்ப்பவரும் பூஜிக் கப்படுகிறவரும் மஹாதமாவும் எல்லாஸ்வரூபருமாயிருப்பனென்று வேதம் சொல்லுகிறது' என்றுசொன்னர்கள்.

மூன்றூற்றைம்பத்தாறுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாரதர் தமதாஸ்ரமத்திற்சென்றதும் வைசம்பாயனர் பகவானுடைய மகிமையைச் சொல்லியதும்.)

நாரதரானவர் நாராயணர்களால்சொல்லப்பட்ட இந்தவார்த்தையைக்கேட்டுத் தேவரிடத்தில்மிகவும்பக்தியடைந்து ஏகாந்தியாயிருக்கும்தன்மையையடைந்தார்; நாராயணர்களுடைய ஆஸ்ரமத்தில் ஆயிரம்வருஷம்வஸித்துப் பகவானுடையசரித்திரத்தைக்கேட்டு விகாரமற்றவரான ஹரியையும்தரிசித்து இமயமலையின் நடுவில் தேவர்களால்பூஜிக்கப்பட்ட தமதாஸ்ரமத்தை அடைந்தார். பிரஸித்தமான கீர்த்தியுடைய நாராயணர்களென்கிற அந்தரிஷிகளும் அழகான அந்தஆஸ்ரமத்திலேயே உத்தமமானதவத்தைச் செய்துகொண்டிருந்தார்கள். அளவற்றபராக்ரமமுடையவரும் பாண்டவர்களுடையகுலத்தைத்தாங்குகிறவருமானரீரும் இப்பொழுது ஆதிமுதல் இந்தக்கதையைக்கேட்டுப் பரிசுத்தமான ஆத்மாவையுடையவரானீர். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! எவன் கர்மத்தினுலோ மனத்தினுலோ வாக்கினுலோ அழிவற்றவரானவிஷ்ணுவைப் பகைபபானே அவனுக்கு இவ்வுலகமும் பரலோகமும் இல்லையேயில்லை. எவன் தேவர்களிற்சிறந்தவரும் தேவரும் (பாபங்களை) ஹரிப்பவருமானநாராயணரைத் தவேஷிப்பானே அவனுடையபிதிருக்கள் அளவற்றவருஷங்கள் நரகத்தில் முழுகுகின்றார்கள். 'ஆத்மாவானது எந்தஜனத்திற்குத்தான் எப்படி தவேஷிக்கத்தக்கதாகும். ஓ! புருஷஸ்ரேஷ்டரே! 'விஷ்ணுவானவர் ஆத்மாவாக அறியத்தக்கவர்' என்று சுருதி மொழிகின்றதன்றே? ஐயா! கந்தவதியின்புத்திரரும் எங்கள்குருவுமான ரிஷியானவர் பரமாத்மாவினுடைய இந்தமகிமையைச்சொல்லினர். ஓ! களங்கமற்றவரே! இதை அவரிடமிருந்து நான்கேட்டேன். உமக்கும் சொன்னேன். ஓ! அரசரே! நாரதரோ சாஸ்ரியமானதும் சுருக்கமுள்ளதுமான இந்தத்தர்மத்தை ஜனத்துக்குநாதரானநாராயணரிடமிருந்தும் நேரில் அடைந்தார். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! அப்படிப்பட்ட மகத்தான இந்தத்தர்மமானது முன் உமக்கு ஹரிகேசரால் சுருக்கமானவிதியினால் இவ்விதம் அமைத்துச் சொல்லப்பட்டது. கிருஷ்ணத்வைபாயனரான வ்யாசரைப் பிரபுவானநாராயணராக அறியக்கடவீர். புண்டரீகாக்ஷரைத்தவிர வேறுஎவன் மகாபாரதத்தைச் செய்கிறவனுவான். பிரபுவான

அந்தநாராயணரைத்தவிரப் பலவிதமானதர்மங்களையும் எவன் சொல்லுவான். உம்மால் எப்படிசெய்யவேண்டுமென்றுநினைக்கப்பட்டதோ அப்படி உம்முடைய மஹாயாகமான்றை நடக்கட்டும். அஸ்வமேத்தத்தைத்தொடங்கியதீர் 'உண்மையாகத் தர்மத்தைக்கேட்கவிட்டீர்'' என்றுசொன்னீர். பெரிதான இந்தச்சரித்திரத்தைநீங்கேட்டுப் பரிக்ஷித்தின் புத்திரரான ஜனமேஜயமஹாராஜா உடனே (யாகத்தை முடிப்பதற்கு எல்லாக்கர்மங்களையும் ஆரம்பித்தார். ஓ! சௌனகரே! இவ்விடத்தில் நைமிசாரண்யவாஸிகளின் இடையில் கேட்கப்பட்ட நான் இப்பொழுது நாராயணீயமென்கிற இந்தீச்சரித்திரத்தை உமக்குச் சொன்னேன். முன்காலத்தில் நாரதரால் ரிஷிக்களும் பாண்டவர்களும் கிருஷ்ணனும் பீஷ்மரும் கேட்டுக்கொண்டிருக்கையில் பிருஹஸ்பதிக்குச் சொல்லப்பட்டவரும் பரமரிஷியும் ஜனங்களுக்கும் உலகங்களுக்கும்பதியும் பெரியபூமியைவகிப்பவரும் வேதத்தையும் வினயத்தையும் முக்கியமாகக்கொண்டவரும் சமம்விரதமிவைகளுக்குநிதியும் யமநியமங்களைப்பரமாகக்கொண்டவரும் பிராம்மண ஸ்ரேஷ்டர்களுடன்கூடினவரும் தேவர்களுக்குஹிதருமான அந்த ஹரியே உமக்குக் கதியாவார். அஸுரர்களுடையவதத்தைச்செய்கிறவரும் தவங்களுக்கிருப்பிடமும் மிகப்பெரியகீர்த்திகளுக்குப் பாத்திரமும் ஏகாந்திகளுக்கு மோக்ஷத்தைக்கொடுப்பவரும் சரணத்தைக்கொடுப்பவரும் அபயத்தைக்கொடுப்பவரும் ஸுகங்களுடைய பாகத்தைக்கொடுப்பவருமான ஹரியானவர் உங்களுக்குக் கதியைக் கொடுக்கிறவராகட்டும். மதுகைடபர்களைக்கொன்றவரும் கிருதயுக தர்மத்தைஅறிந்து (அனுஷ்டிப்ப) வர்களுக்குக் கதியைக்கொடுப்பவரும் அபயத்தைக்கொடுப்பவரும் யாகத்தில்பாகத்தைக்கிரகிப்பவருமானஅவர் உமக்குச் சரணமாகட்டும். (ஸத்வமூதலான்) முக்குணங்களையுடையவரும் (உண்மையில்) நிர்க்குணரும் (வாஸுதேவர்முதலான), நான்குஸ்வரூபங்களைத் தரிப்பவரும் (ஞானம்வெட்டுதல்முதலான்) பூர்த்தம்யாகமிவைகளுடையபயன்களின் பாகத்தை [1]அளிப்பவரும் எப்பொழுதும்ஜயிக்கப்படாதவரும் சலிக்கின்றவைகளை அதிக்கிரமித்தவருமானபகவான் மனஸ்விகளும் புண்ணியசாலிகளுமான ரிஷிகளுக்குக் கதியைச் செய்யட்டும். [2]ஜலத்தினுள்ளான நாராயணரும் அந்தரிஷியான வாஸுதேவரின்கிணைமயால் உலகங்

---

1 'ஹரஃ' என்பது மூலம்; 'கொள்பவர்' என்றும் கொள்ளலாம்.

2 'ஸலிலோத்பவஃ' என்பது மூலம்; அமிருத்தமூர்த்தி; சதுர்முகப்ரம்மா என்பர் சிலர்.

களுக்குஸ்ரக்ஷியும் ஜனனமற்றவரும் ஸனதியானபுருஷரும் ஸூர்யன்போன்றநிறமுடையவரும் ஈச்வரரும் அதேகவிதமானகதியுமான அந்தவ்ஸுதேவரை ஒரேபுத்தியுடன் நமஸ்கரியுங்கள். அவரோ, உலகங்களுக்குக்காரணம்; மோக்ஷத்திற்குஸ்தானம் ஓ! உதாரே! ஸூக்ஷ்மமும் பரமானந்தானமும் சலியாதஸ்தானமும் ஸநாதனமுமான அப்படிப்பட்ட இந்தவாஸுதேவரென்கிறப்ரம்மமானது புத்தியால் மனத்தைஅடக்கி ஸாங்கியர்களாலும் யோகிகளாலும் வரிக்கப்பட்டது" என்றுசொன்னர்.

முந்நூற்றைம்பத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாராயணர் ப்ரம்மாவைப் படைத்ததும் மதுகைடபர்களைக் கொன்று வேதத்தை மீட்டதும்.)

சௌனகர், "பகவானை அந்தப்பரமாத்மாவினுடையமாகாத்மியத்தையும் தர்மருடையகிருகத்தில் நாராயணஸ்வரூபமானஜன்மத்தையும் மகாவராஹத்தால்ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிண்டங்களின் பழமையானஉற்பத்தியையும் கேட்டோம். ஓ! களங்கமற்றபிராம்மணரே! ப்ரவிருத்தியிலும் நிவிருத்தியிலும் யார் எப்படி கல்பிக்கப்பட்டாரென்பதையும் நாங்கள் கேட்டோம். ஈசானதிக்கில் பெரிய கடலில் ஹவ்யகவ்யங்களைப்புஜிக்கிறவரான விஷ்ணுவையும் கேட்டோம். முன் நீர் பெரிய [2]அசுவத்தின்சிரமுடையரூபத்தையும் அது பரமஸ்தானத்திலிருப்பவரும் பகவானுமானபிதாமஹனால் பார்க்கப்பட்டதையும் சொன்னீர். ஓ! புத்திமான்களில்சிறந்தவரே! உலகங்களோத் தரிக்கிறவரான ஹரியினுலே மகான்களாலும்முன்பார்க்கப்படாததும் பிரபாவமுடையதுமான அந்தரூபமானது ஏன் உண்டுபண்ணப்பட்டது? ஓ! முனிவரே! தேவர்களில்ஸ்ரேஷ்டரும் ஆச்சரியகாரரும் அளவற்றபராக்கிரமமுடையவரும் பரிசுத்தருமான அந்தஹயக்ரீவரைப் பிரம்மாவானவர் பார்த்து என்னசெய்தார்? ஓ! உத்தமமானபுத்தியுடையவரே! எங்களுடையஇந்தஸம்சயத்தை (நிவிருத்திசெய்யும்.) ப்ரஹ்மத்தினிடமிருந்துண்டானதும் [1]ஸ்ரீமஹாபுருஷனைப்பற்றியதுமானபுராணத்தைச் சொல்லும். ஓ! பிராம்மணரே! உம்மால் நாங்கள் பரிசுத்தம்செய்யப்பட்டோம். பரிசுத்தமான அந்

---

[1] வேறுபாடம். [2] ஹயக்ரீவரானவர்.

தக்கதைகளைச் சொல்லும்" என்றுகேட்க, ஸூதபுத்திரர் சொல்லத்தொடங்கினர். "ஓ! (சௌனகரே!) பரிக்ஷித்தின்புத்திரரான ஜனமேஜயமகாராஜருக்குப் பகவானுடைவயாஸர் (வைசம்பாயனர்மூலமாய்) சொல்லியதும் வேதத்திற்குநிகரானதுமான அந்தஎல்லாப் புராணத்தையும் உமக்குச் சொல்லுவேன். ஜனமேஜயராஜர் அசுவத்தின்சிரத்தையுடையவரும் தேவரீருமான ஹரிமேதஸினுடைய மூர்த்தியைக் கேட்டுச் சந்தேகமுற்று வைசம்பாயனரை நோக்கி, "பிரம்மாவால் பார்க்கப்பட்ட அசுவத்தின் சிரத்தைத்தரிக்கின்ற தேவருடையஅந்தச்சரீரமானது எதற்காகத் தேவரால் கல்பிக்கப் பட்டதாயிற்று?" என்கிறதைக் கேட்டார். வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர். "ஓ! அரசரே! இந்தஉலகத்தில் தேஹபந்தத்துடன்கூடியஎல்லாம் ஈஸ்வரருடையஇச்சையாலுண்டான ஐந்து பூதங்களாலும் வியாபிக்கப்பட்டிருக்கின்றன. ஈஸ்வரரோ உலகங்களைப்படைப்பவரும் பிரபுவும் விராட்டும் பிராணிகளுக்கு அந்தராத்மாவும் வரங்களையளிப்பவரும் ஸகுணரும் நிர்க்குணரும்மான நாராயணர். ஓ! ராஜர்ஸ்ரேஷ்டரே! வ்யக்தமானபூதங்களின் ப்ரளயத்தைக் கேளும். முன்காலத்தில் ஒன்றுமிருக்கிறஸமுத்திரஜலத்தில் பிருதிவியானது லயத்தையடைந்தபிறகு ஜலமும் தேயுவாகித் தேயுவும் வாயுவில் லயித்து வாயுவும் ஆகாயத்தில்ஒடுங்கி ஆகாயமும்மனத்தையடைந்து மனமும்மஹத்தத்வத்திலொடுங்கி மஹத்தத்வமும் பிரகிருதியில்அடங்கிப் பிரகிருதியும் புருஷனிடைந்து புருஷனும் எங்கும் வியாபித்தவனுயிருக்க எல்லாம்தமஸாகவே ஆயிற்று. ஒன்றும் [1]இலங்கவில்லை, தமஸிலிருந்தும் (காரணமான) ப்ரம்மமுண்டாயிற்று. தமஸை மூலமாகவுடையதும் ஸத்யமானஸ்வரூபத்தையுடையதும் (ஸகலபிரபஞ்சமுமாயிருக்கிற) எல்லாநாமரூபங்களையும் முடியாகக்கொண்டதுமான ஆந்தஅதிஷ்டானமானது புருஷரூபமானசரீரத்தை அடைந்தது. (புருஷரூபமான்சரீரத்தைபடைந்த) அவர் ஆதிருத்தரென்று சொல்லப்பட்டார். அவரைப் பிரதானமாகச் செல்லுகிறார்கள். ஓ! ராஜர்ஸ்ரேஷ்டரே! அந்தப்பிரதானத்தை (ஸத்வமுதலான) முக்குணங்களையுடைய அவ்யக்தமென்று அறியவேண்டும். பிரபுவான ஹரியானவர் வித்தையைஸஹாயமாகக்கொண்டு தேவரானவிஷ்வர்ஸேனராயிருக்கிறார். பிராணிகளுக்கு ஆதிகர்த்தாவும் பிரபுவும் அறியமுடியாதவருமான அந்தஹரியானவர் நித்தியைன்ஸ்வரூபமான யோகத்தை அடைந்து பலகுணங்களினின்றுமுண்டாகும் பலவிதமான உலகத்

[1] 'பகுத்தறிவு இல்லையாயிற்று' என்பது பழையவுரை.

தின்ஸ்ருஷ்டியை நிகழ்த்து ஜலத்திலே சயனம்செய்துகொண்டார். ஸ்ருஷ்டியைச்சிந்திக்கிற அவர் மஹத்தான ஆத்மகுணத்தை நிகழ்த்தார். அதிலிருந்தும் அஹங்காரமுண்டாயிற்று. அப்பொழுது அழகானகான்குமுகங்களையுடையவரும் [1]ஹிரண்யகர்ப்பரும் எல்லா உலகங்களுக்கும் பிதாமஹருமாகிய தாமரைப்பூக்கள்போன்ற கண்களுள்ளவரும் பகவானுமான பிரம்மாவானவர் (அஹங்காரரூபமான) அநிருத்தரிடமிருந்தும் (நாபி) கமலத்திலுண்டானார். பிறகு காந்திமானும் ஸுகதருமும் ஆச்சரியமானவரும் ஸத்குணமுள்ளவரும் மேலானஸ்தானத்திலிருப்பவரும் பிரபுவுமான அவர் உலகங்களைப் பூர்ணம்செய்யப் பிராணிகளின் கூட்டங்களைப் படைத்துக்கொண்டு ஆயிரம்மிதழ்களையுடைய தாமரைப்புஷ்பத்திலிருப்பவராகக் காணப்பட்டார். முன்னமே ஸாத்ர்யகிரணத்திற்குநிகரானபத்மத்தின்தளத்தில் நாராயணரால்செய்யப்பட்டவைகளும் சிறந்தகுணமுடையவைகளுமான இரண்டுஜலத்திவலைகளிருந்தன. பகவானும் ஆதியந்த மற்றவருமான் அச்சுதரானவர் அவைகளைப்பார்த்தார். அவைகளில் ஒரு பிந்துவானது தேன்நிறமுடையதும் அழகானகாந்தியுடையதுமாயிற்று. அப்பொழுது அது நாராயணருடைய ஆஜ்ஞையினால் தமோகுணம்நிறைந்த மதுவென்கிறஅஸுரனுமாயிற்று. கடினமான மற்றப்பிந்துவானது கைடபனுமாயிற்று. அவன் ரஜோகுணம் நிறைந்தவன். ஸ்ரேஷ்டர்களும் தமோகுணரஜோகுணங்களையுடையவர்களும் பலவான்களுமான அவர்கள் கதாயுதபாணிகளாகிப் பத்மத்தின் தண்டையணுஸரித்து ஓடினார்கள். அவர்கள் தாமரைமலரிலிருக்கிறவரும் அளவற்றகாந்தியுடையவருமான முதலில்அழகானஉருவமுள்ள நான்குவேதங்களையும் [2]ஸ்ருஷ்டிக்கிறவருமான பிரம்மாவைக் கண்டார்கள். பிறகு அஸுரஸ்ரேஷ்டர்கள் சரீரத்தைதாடுகூடிய அந்தவேதங்களைப்பார்த்து உடனே ப்ரம்மாபார்த்துக்கொண்டிருக்கையில் சீக்கிரமாக வேதங்களைக் கவர்ந்துகொண்டார்கள். பிற்கு அஸுரஸ்ரேஷ்டர்களநுஅவர்கள் ஸநாதனமானவேதங்களைக் கவர்ந்துகொண்டுவிரைவாக ஈசானதிக்கில் சமுத்திரத்தின்வழியாகப் பாதாளத்தை அடைந்தார்கள். பிறகு வேதங்கள் அப்படிக்கப்பட்டபொழுது பிரம்மாவானவர் கலங்கத்தையடைந்தார். பிறகு வேதமிழந்தவரானபிரம்மா ஈசானரான நாராயணரைநோக்கி, 'வேதங்கள் எனக்குச் சிறந்தநேத்திரம். வேதங்கள் எனக்குச்சிறந்தபலம். வேதங்கள் எனக்கு மேலானஸ்தானம். வேதங்கள் எனக்கு ஸ்ரேஷ்டமானப்ரம்மம். என்னுடைய

1 ஸுவர்ணத்தை உதரத்திலுண்டையவர். 2 வெளியிடுபவர்.

வேதங்களெல்லாம் அஸுரர்களால் இங்கிருந்தும் பலாத்காரமாக அபகரிக்கப்பட்டன. என்னுடையஉலகங்கள் வேதமில்லாமல் செய்யப்பட்டு இருள்டைந்தவைகளாயிருக்கின்றன. வேதங்களில்லாமல் நான் எப்படி உலகங்களுடைய உத்தமமானஸ்ருஷ்டியைச் செய்வேன். ஆ! கஷ்டம். என்னுடைய வேதங்களின்நாசத்தாலுண்டான தும் பெரிதும் கடுமையானதும் சோகத்திற்குஏதுவாயிருந்தகாரணமுமான துக்கமானது உண்டாகி மனத்தை வருத்துகிறது. சோகஸாகரத்தில்முழுகினவனானஎன்னை இதினின்றும் இப்போது யார் கரையேற்றுவார்? யார் நஷ்டமான அந்தவேதங்களைக் கொண்டுவருவார்? யாருக்கு என்னிடம் பிரியமுண்டாகும்?' என்றவார்த்தையைச் சொன்னார். ஓ! புத்திமான்களிற்சிறந்தவான ராஜஸ்ரேஷ்டரே! இவ்விதம் சொல்லுகிறவரானபிரம்மா ஹரியினுடையஸ்தோத்திரத்தைச் செய்யநினைத்தார். பிறகு பிரபுவானப்ரம்மதேவர் அஞ்சலிபந்தத்தோடு ப்ரமானஸ்தோத்திரத்தைச் சொல்லினர். 'ப்ராணவரூபமாயிருப்பவரே! வேதங்களின் அபிப்பிராயத்திற்கு விஷயமாயிருப்பவரே! உமக்கு நமஸ்காரம். எனக்குமுன்னிருப்பவரே! உமக்கு நமஸ்காரம். உலகங்களுக்குஆதியிலிருப்பவரே! உலகங்களிற்சிறந்தவரே! ஸாங்கியயோகங்களுக்கு நிதியாயிருப்பவரே! ஓ! பிரபுவே! ஸ்தூலஸூக்ஷ்மங்கள்யாவற்றையும்செய்தவரே! சிந்திக்கமுடியாதவரே! கூடமானமார்க்கத்தையடைந்தவரே! எல்லாவற்றையும்புஜிக்கிறவரே! எல்லாப்பிராணிகளுக்கும் அந்தராத்மாவே! கருவில் ஜனியாதவரே! நான் உலகங்களுக்கு [1]ஸ்தானமும் தாமேஉண்டானவருமானஉம்முடைய அருளிலுண்டானவன். எனக்கு உம்மிடமிருந்து ப்ராம்மணர்களால்பூஜிக்கப்பட்ட மானஸமென்கிற முதல்ஜன்மம் உண்டாயிற்று. (பிறகு) எனக்குச் சாக்ஷுஷமென்கிற புராதனமான இரண்டாவதுஜன்மம்உண்டாயிற்று. உம்முடையஅருளாலே எனக்கு வாசிகமென்கிற பெரிதான மூன்றுவதுஜன்மமுண்டாயிற்று. ஓ! பிரபுவே! உம்மிடமிருந்து எனக்கு ஸ்ரோத்ராஜமென்கிற நான்காவதுஜன்மமுண்டாயிற்று உம்மிடமிருந்து எனக்கு [2]காஸத்யமென்கிற ஐந்தாவதுஜன்மம் சொல்லப்படுகிறது. உம்மிடமிருந்தும் எனக்கு அண்டஜமென்கிற ஆறுவதுஜன்மமும் ஏற்பட்டது. ஆ! பிரபுவே! இதுவோ பத்மஜன்மமென்கிற ஏழாவதுஜன்மம். ஓ! மூன்றுகுணங்களுமில்லாதவரே! ஸ்ருஷ்டிதோறும் முதன்மையானவனும் தாமரைப்

1 'உலகங்களுக்குப் பிரகாசத்தைச்செய்கிறவர்' என்பது பழையஉரை.

2 காவிதையிலுண்டானது.

புஷ்பங்கள்போனற கண்களுடையவனும், பிரதானத்தின்குணத்தால் கல்பிக்கப்பட்டவனுமானநான் உம்முடையபுத்திரன். நன்குபடைப் பவரே! நீர் ஈஸ்வரரும் பிராணிகளுடைய பிரகிருதியுமாயிருப்பவர். வயதைஅதிக்ரமித்திருப்பவரே! உம்மால் நான் வேதங்களோடேக்ஷத்ர மாகவுடையவனுகஸ்ருஷ்டிக்கப்பட்டேன். என்னுடையநேத்திரமான அந்தவேதங்கள் அபகரிக்கப்பட்டன. குருடனுகிவிட்டேன். விழித் துப் பாரும். என்னுடையநேத்திரங்களைக் கொடும். நான் உமக்குப் பிரியன். நீர் எனக்குப் பிரியர்' என்றுசொன்னர். இவ்விதம்துதிக்கப் பட்டவரும், பகவானுயும், எங்கும்முகமுடையவருமான அவர் நித்திரை யைவிட்டார். பிறகு உடனே பிரபுவானவர் வேதங்களின்கரியத்திற் காக முயற்சியுள்ளவராய் ஈஸ்வரத்தன்மையாலுண்டான பிரவிருத்தி யினுலே அழகானநாஸிகைகளையுடையசரீரத்தோடு சந்திரனுக்குநிக ரானகாந்தியுடையவராகி வேதங்களுக்கிருப்பிடமும் சுத்தமுமாயிருக் கிற ஹயக்ரீவரூபத்தைத்தரித்து இரண்டாவதுசரீரத்தை அடைந் தார். (அஸ்விநிமுதலான) நக்ஷத்திரங்களுடனும் மற்றத்தாரகைகளுட னும்கூடினஸ்வர்க்கமானது அவருக்குச் சிரமாயிற்று. அவருடையகே சங்கள் நீண்டவைகளும் ஸூர்யனுடைய கிரணங்களுக்குச்சமமான காந்தியுடையவைகளுமாயின. ஆகாயமும் பாதாளமும் காதுகளும் பிராணிகளைத்தரிக்கின்றபூமியானது நெற்றியும் பரிசுத்தமானகைகை யும் ஸாஸ்வதியும் பெரியகாந்தியுள்ளபுருவங்களுமாயின. சந்திரனும் ஸூர்யனும் அவருக்கு நேத்திரங்களாயின. ஸந்தியாகாலம் நாஸிகை யாகக் கருதப்பட்டது. தவிரவும் ஓங்காரமானது ஸம்ஸ்காரமாகவும் பின்னல் நாவாகவும் நிர்மாணஞ்செய்யப்பட்டன. ஓ! அரசரே! ஸோமபர்களென்று பிரஸித்திபெற்றபிதிருக்கள் தந்தங்களாயினர். கோலோகமும் பிரம்மலோகமும் மகாத்மாவானஈஸ்வரருக்கு உதடுக ளாயின ஓ! அரசரே! சிறந்தகுணங்களையுடையகாளராத்ரியானது அவருக்குக் கழுத்தாயிற்று. இவ்விதம் அநேகமூர்த்திகளால்சூழப் பட்ட ஹயக்ரீவரூபத்தைச்செய்துகொண்டு மறைந்தார். ஜகத்திற் கெல்லாம் ஈசரான அந்தப்பிரபு பாதாளத்தில் பிரவேசித்தார். பாதா ளத்தில் பிரவேசித்தவரான அவர் சிறந்ததான யோகத்தையடைந்து வேதசிக்ஷையில்ஏற்பட்ட ஸ்வரத்தை நன்றுகக்கிரமித்துக்கொண்டு (ஸாமாவயவமான) உத்கீதஸ்வரத்தை உண்டுபண்ணினர். அந்த ஸ்வர மானது எங்கும் எதிரொலியுள்ளதும் குளிர்ந்ததும் எல்லாப்பூதங்க ளுடனும் உண்டானதுமாகி ஜலத்தினுட்சென்றது. அப்பொழுது அந்த அஸுரர்கள் வேதங்களை ஸங்கேதத்தால்கட்டிப் பாதாளத்தில்

வைத்துவிட்டுச் சப்தமுனீன்டானவிடத்தைக்குறித்து வேகமாகப் புறப்பட்டார்கள். அரசரே! அந்த ஸமயத்தில் தேவரும் ஹயக்ரீவ ரூபத்தைத்தரிஸிபவருமான ஹரியானவர் பாதாளத்தையடைந்த எல் லாவேதங்களையும் கிரகித்துத் திரும்பவும் பிரம்மாவினிடம் கொடுத் தார். ஹயக்ரீவரானவர் வேதங்களை ஸ்தாபனஞ்செய்துவிட்டுப் பிறகு ஈசான்யஸமுத்திரத்தில் தமது ஸ்வபாவநிலைமை அடைந்தார். அத னல் ஹயக்ரீவர் வேதங்களுக்கிருப்பிடமானார். பிறகு மதுகைட பர்களென்கிற அந்த அஸுரர்கள் ஒன்றையுங்காணுமல் .எந்தஇடத் தில் வேதங்கள் வைக்கப்பட்டனவோ அவ்விடம் மீண்டும் வேகத் துடன் வந்தார்கள்; அந்தஸ்தானம் சூன்யமாயிருப்பதையுங் பார்த் தார்கள். பலசாலிகளில்சிறந்தவர்களான அவர்கள் உடனே மிக்க வேகத்துடன் அப்பொழுதே திரும்பவும் பாதாளத்திலிருந்து சீக்கிர மாக மேலேவந்தார்கள். உற்பத்தியைச் செய்தவரும், பிரபுவும், வெண்ணிறமுமுடையவரும், சந்திரன்போலச் சுத்தமானகாந்தியுடைய வரும், அநிருத்தசரீரத்திலிருப்பவரும், அளவற்றபராக்ரமமுடைய வரும், மீண்டும் தமமுடையஅளவுக்குத் தக்கபடி செய்யப்பட்டி தும் ஜலத்தின்மேலமைக்கப்பட்டதும் ஸர்ப்பத்தின் உடலால்நிறைந் ததும் ஜ்வாலைகளின்பரம்பரையால் சூழப்பட்டதுமான சயனத்தில் யோகநித்திரையை அடைந்தவருமான அந்தப்புருஷரையே பார்த் தார்கள். அந்த அஸுரத்தலைவர்கள் களங்கமற்றஸத்வகுணமுள்ள வரும் அழகான காந்தியுடையவருமான அவரைப் பார்த்துவிட்டு அட் டஹாஸம்செய்தார்கள். ரஜோகுணமும்தமோகுணமும் நிரம்பிய அவர்கள், 'வெண்ணிறமுள்ள இந்தப்புருஷனே அவன்; நித்திரையை அடைந்து படுத்திருக்கிறான். இவனுலேதான் பாதாளத்திலிருந்து வேதங்கள் கொண்டுவரப்பட்டிருக்கும். நிச்சயம். இவன் யாரைச் சேர்ந்தவன்? இவன் யார்? ஏன் [1]போகத்துடன் தூங்குகிறான்?' என்றுசொல்லினர். அவர்கள் இவ்விதவார்த்தையைச் சொல்லிக்கொ ண்டு ஹரியை எழுப்பினர்கள். அப்பொழுது 'புருஷோத்தமானவர் விழித்துக்கொண்டு அவர்களைப்பார்த்து அந்த அஸுரஸ்ரேஷ்டர்கள் யுத்தத்தில்விருப்பமுள்ளவர்களாயிருத்தலை அறிந்து யுத்தத்தில் மனத் தைச் செலுத்தினர். பிறகு அவர்களுக்கும் நாராயணருக்கும் யுத்த மானது நடந்தது. அப்பொழுது மதுஸூதனர் ரஜஸாலும்தமஸாலும் வியாபிக்கப்பட்டசரீரத்தையுடைய அந்தமஹாகைடபர்களிருவரையும் பிரம்மாவுக்குமரியாதைசெய்வதற்காகக் கொன்றார். அப்பொழுது

[1] ஸர்ப்பத்தினுடல்; ஸுகம்.

புருஷோத்தமரானவர் அவர்களுடைய வதத்தினாலும் வேதங்களைக் கொண்டுவந்ததினாலும் பிரம்மாவினுடையசோகத்தைச் சீக்கிரம் விலக்கினர், பிறகு ஹரியினால்வரிக்கப்பட்டவரும் வேதங்களாலுபசரிக்கப்பட்டவருமான அந்தப்பிரம்மாவானவர் உடனே ஸ்தாவரஜங்கமங்களான எல்லாஉலகங்களையும் படைத்தார். தேவரான ஹரியானவர் பிரம்மாவுக்குச் சிறந்ததும் உலகங்களுடையஸ்ருஷ்டிக்குஉசிதமுமான மதியை அளித்துவிட்டுத் தாம் எங்கிருந்துவந்தாரோ அங்கேயே மறைந்தார். ஹரியானவர் ஹயக்ரீவவடிவங்கொண்டு அந்த அஸுரர்களைக்கொன்றுவிட்டுத் திரும்பவும் பிரவிருத்திதர்மத்தின்பொருட்டு அந்தஅதிருத்தசரீரத்தையே தரித்தார். இவ்விதம் மஹாபாக்கியவானை இந்தஹரியானவர் ஹயக்ரீவரானார். வரத்தையளிப்பதும் ஈஸ்வரரைச்சேர்ந்ததுமான இந்தரூபமானது புராணத்தில்சொல்லப்பட்டுப் பிரஸித்தமாயிருக்கிறது. எந்தப்பிராம்மணன் இந்தச்சரித்திரத்தை எந்நாளும் கேட்டு (மனத்தில்) தரிப்பானோ அவனுடைய அத்தியயனமானது ஒருநாளும் நாசத்தையடையாது. பாஞ்சால தேசத்தரசன் கடுமையானதவத்தினால் தேவரான ஹயக்ரீவரை ஆராதித்து [1]அந்தத்தேவரால் மார்க்கமுபதேசிக்கப்பட்டுக் கிரமத்தை அடைந்தான். ஓ! அரசனே! நீர்என்னைக்கேட்டமையால் ஹயக்ரீவரைப் பற்றியசரித்திரமாகிற வேதத்திற்குநிகரான இந்தப்புராணம் உமக்குச் சொல்லப்பட்டது. தேவரானவர் ஒருகாரியத்தைச்செய்வதினிமித்தம் எந்தஎந்தச்சரீரத்தை எடுப்பதற்கு விரும்புவாரோ அந்தஅந்தச் சரீரத்தைத் [2]தாம் தம்மையே தம்மாலேயே வேறுபடுத்துத்தொண்டு எடுத்துக்கொள்ளுகிறார். ஸ்ரீமானுயிருக்கிறஅவர் வேதங்களுக்கிருப்பிடம். அவரே தவத்திற்கும் இருப்பிடம். யோகமும் ஸாங்கியமும் மேலானபிரம்மமும் [3]ஹவிஸும் பயனியளிக்கிறபிரபுவும் அவரே. வேதங்கள் நாராயணரையே தாத்பரியவிஷயமாயுடையவைகள். யஜ்ஞங்கள் நாராயணஸ்வரூபம். தவமும் நாராயணரைப் பயனுடையது. மோக்ஷமும் நாராயணரை விஷயமாயுடையது. ஸத்யமும் நாராயணரைப் பயனுடையது. கர்மாவின்பயனும் நாராயணஸ்வரூபமாயுள்ளது. மறுபடி திரும்புதலில்லாத மோக்ஷதர்மமும் நாராயணரையே பயனுடையது. பிரவிருத்தியைக்காரணமாகவுடைய தர்மமும் நாராயணஸ்வரூபமாயுள்ளது. பூமியிலிருக்கிற மிகவும்

1 வேறுபாடம்.

2 தாம்என்பதால்கர்த்தாவுமவரே. தம்மையேஎன்பதால் உபாதானமுமவரே. தம்மாலேயேஎன்பதால் நிமித்தகாரணியும் அவரே. 3 கர்மம்.

சிரேஷ்டமானகந்தமும் நாராயணஸ்வரூபமாகக் கருதப்பட்டது. அரசரே! அப்பிஜுடையகுணமானரஸங்களும் நாராயணஸ்வரூபம். ஜோதிகளுடையசிரேஷ்டமானரூபமும் நாராயணஸ்வரூபமாகக் கருதப்பட்டது. வாயுவின்குணமானஸ்பரிசமும் நாராயணஸ்வரூபமாகக் கருதப்பட்டது. ஆகாயத்திஜுண்டானசப்தமும் நாராயணஸ்வரூபமாகவேயிருக்கிறது. பிரகாசமில்லாதகுணங்களும் லக்ஷணமாகவுடையமனமும் அவரிடமிருந்தும் உண்டாயிற்று. (ஆத்மன்முதலிய) ஜோதிஸ்களுக்கெல்லாம் ஆதாரமானகாலமும் நாராயணரைக் காரணமாகவுடையது. கீர்த்தியும் காந்தியும் லக்ஷ்மியும் தேவதைகளும் நாராயணரை ஆதாரமாகவுடையவர்கள். ஸாங்கியமானது நாராயணரை விஷயமாகவுடையது. யோகமானது நாராயணஸ்வரூபமாயுள்ளது. பூர்வவாஸனையும கர்மங்களும் அதிருஷ்டமும் எவைகளுக்குக் காரணமோ அவைகளுக்குப் புருஷன் காரணனன்றே? பிரதானமும் காரணம். இந்தஉலகத்தில் உபாதானமும் கர்த்தாவும் தனித்தனியாக [1]காரணமும் பலவிதமானசேஷ்டையும் தைவமானதெய்வமும்என்று ஐந்துகாரணங்களாகக் கணக்கிடப்பட்டவரான ஹரியே எல்லாவற்றிலும் ஆதாரமாயுள்ளவர். எங்கும்பிரவிருத்திக்கின்ற ஹேதுக்களாலே தத்வத்தை அறியவிரும்புகிறவர்களுக்கு மகாயோகியும் பாபங்களைஅபகரிப்பவரும் பிரபுவுமான நாராயணர் ஒருவரேதத்வம். உலகங்களோடுகூடியபிரம்மாமுதலியவர்கள், மஹாத்மாக்களானரிஷிகள், ஸாங்கியர்கள், யோகிகள், ஆத்மாவையறிந்தயதிகள் ஆகியஇவர்களுடையஅபிப்பிராயத்தைக் கேசவர் அறிகிறார். அவர்கள் அவருடையஅபிப்பிராயத்தை அறிகிறதில்லை. எல்லா உலகங்களிலும் எவர்கள் தெய்வகர்மத்தையும் பித்ருகர்மத்தையும் செய்கிறார்களோ, தானங்களைக் கொடுக்கின்றார்களோ, பெரிதாதவத்தைச் செய்கின்றார்களோ அவர்களெல்லோருக்கும் ஈச்வரத்தன்மையை அடைந்தஹரியே ஆதாரமாயிருப்பவர். எல்லாப்பிராணிகளிடத்திலும் வஸிப்பதால் அவர் வாஸுதேவரென்று சொல்லப்படுகிறார். நித்யரும் பரமரும் மஹரிஷியுமாயிருக்கிறஅவர் பெரியஐச்வரியமுடையவரும் [2]குணவானும் குணமென்றுபெயருடையவருமாகக் காலமானது 'எப்படி ருதுவில் ருதுவுடன்கூடிக் குணங்களுடைய சேர்க்கையை அடைகிறதோ அப்படி சீக்கிரமாகக் குணங்களோடு

[1] அஸாதாரணமானகாரணம்.

[2] 'குணவர்ஜிதாய:' என்பது வேறுபாடம்; 'குணவர்ஜிதர் என்று பெயருள்ளவர்' என்பது பொருள்.

சேர்க்கையை அடைகிறார். இவ்வுலகத்தில் மகாத்மாவான அவருடைய கதியை அறிகிறவர்கள் இலர். ஒருவரும் அவருடையவரவையும் பார்க்கிறதில்லை. ஞானத்தையேவடிவமாகவுடையவர்களும் சித்தத்தை அடக்கினவர்களுமானமகரிஷிகள் நித்யரும் [1]குணங்களால்சிறந்தவருமான புருஷரைப் பார்க்கின்றார்கள்" என்றுசொன்னார்.

முந்நூற்றைம்பத்தெட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(ஏகாந்திதர்மத்தின்வரலாறு.)

ஜனமேஜயர், "ஆ! ஆ! பகவானானஹரியானவர் ஏகாந்திகளான எல்லோரையும் சந்தோஷிக்கச்செய்கிறார்; விதிப்படி" செய்யப்பட்டபூஜையையும் தாமே சிரஸால் ஏற்றுக்கொள்ளுகிறார்., உலகத்தில் வாஸுதேவரிடத்தவர்களும் புண்ணியபாபமற்றவர்களுமாயிருக்கிறவர்களுக்குக் குருபரம்பரையாகவந்தஞானமானது உம்மால் சொல்லப்பட்டது. அவர்கள் நான்காவதான வாஸுதேவரூபமான மோக்ஷத்தில் புருஷோத்தமரான வாஸுதேவரையே அடைகிறார்கள். [2]ஏகாந்திகளான புருஷர்கள் பரமபதத்தை அடைகிறார்கள். ஏகாந்திகள் [3]மூன்றுவிதமானகதிகளை அடையாமல் விகாரமற்றவரான ஹரியை அடைகின்றமையால் இந்தஏகாந்ததர்மமானது சிறந்ததும் சாராயணருக்குப்பிரியமுமாயுள்ளதென்பது நிச்சயம். எந்தவேதியர்கள் உபநிஷத்துக்களோடு வேதங்களையும் நன்றாகஅறிந்து விதிப்படி பரீக்ஷிக்கிறார்களோ, எவர்கள் யதிதர்மத்துடனிருக்கிறார்களோ அவர்களுக்கார்ட்டிஜும் ஏகாந்திகளானமனிதர்களுக்கு உயர்ந்ததான கதியுண்டென்று நிணைக்கிறேன். ஓ! மைர்த்தரே! இந்தயதிதர்மத்தைச்சொன்னவர் யார்? தேவனு? ரிஷியா? ஏகாந்திகளுடைய அனுஷ்டானம் எப்படிப்பட்டது? எப்பொழுது உண்டுபண்ணப்பட்டது? என்னுடைய இந்தஸம்தேகத்தை நிவிர்த்தி செய்யும். எனக்கு மிக்கருசி ஹலமுண்டாயிருக்கிறது" என்றுவினவ், வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார். "கௌரவர்களுக்கும்பாண்டவர்களுக்கும்கோரிட்டயுத்தத்தில் சேனைகள் ஆயத்தமாயிருக்கையில்

---

1 'குணங்களுக்குமேற்பட்டவரும்' எனினுமாம்.

2 'நிஷ்காமர்களானபக்தர்கள்' என்பது பழையஉரை. [உரை.

3 'ஸங்கர்ஷணப்ரத்யும்னஅநிருத்தர்களை உபாஸியாமல்' என்பது பழைய

அர்ஜுனன் மனத்தில் வருத்தமடைந்தபொழுது பகவானைநிருஷ்ணனுலே நேரில்சொல்லப்பட்ட [1]கதியில்லாதஞானதர்மமும் கதியுடன்கூடினஉபாஸனதர்மமும் என்னுல் உமக்கு முன்னமே சொல்லப்பட்டன. அறியவரிதாயிருக்கிற இந்தத்தர்மமோ மனத்தைவசம் செய்யாதவர்களால் அறியமுடியாததாயிருக்கிறது. ஸாமவேதத்தோடொப்பானஇது முன்னமே கிருதயுகத்தில் செய்யப்பட்டது. ஓ! அரசரே! ஈசானநாராயணரால் தம்மாலேயே தரிக்கப்படுகிறது. ஓ! மஹாராஜரே! [2]இதற்காகவே தர்மபுத்திரர் மஹாபாக்கியவானை நாரதரை ரிஷிகளுக்குமுடிவில் கிருஷ்ணனுடைமிஷ்மரும் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுதுப்பரஸ்னம்செய்தார். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! குருவானவ்யாஸர் நான்கேட்டுக்கொண்டிருக்கையில் சொல்லினர். அவ்விடத்தில் நாரதர் சொன்னபடி சொல்லுகிறேன். அதைக் கேளும். ஓ! பூபாலரே! பிரம்மாவுக்கு நாராயணர்முகமாக மானஸ ஜன்மமுண்டான்போது நாராயணரே அந்தத்தர்மத்தினுலே தெய்வ கர்மாவையும் பித்ருகர்மாவையும் செய்தார். பேனபர்களென்னும்ரிஷிகளும் அந்தத்தர்மத்தை அடைந்தார்கள். பேனபூர்களிடமிருந்தும் வைகானஸர்கள் அந்தத்தர்மத்தை அடைந்தார்கள்; வைகானஸர்களிடமிருந்து சந்திரன் அடைந்தான். பிறகு அது திரும்பவும் மறைந்துவிட்டது. ஓ! அரசரே! பிரம்மாவுக்குச் சாக்ஷுஷமென்கிற இரண்டாவதுஜன்மம் ஏற்பட்டபொழுது லோமனிடமிருந்து அந்தப்பிதாமஹர் இந்தத்தர்மத்தைக் கேட்டார். ஓ! அரசரே! அப்பொழுது நாராயணஸ்வரூபரானபிதாமஹர் அதை ருத்திரருக்குக் கொடுத்தார். அரசரே! பிறகு முன்கிருதயுகத்தில் யோகத்திலிருந்தருத்திரர் வாலகில்யர்களென்கிற எல்லாரிஷிகளுக்கும் இந்தத்தர்மத்தைக் கற்பித்தார். திரும்பவும் அந்ததர்மமானது மானுஷ்யிலுலே மறைந்துவிட்டது. அரசரே! வாக்கிலிருந்தும் பிரம்மாவினுடைய மூன்றுவது பெரியஜன்மமானது உண்டானபொழுது இந்தத்தர்மமானது நாராயணரிடமிருந்தே உண்டாயிற்று. அதை ஸுபர்ணனென்கிறரிஷியானவர் நாராயணரிடமிருந்தும் அடைந்தார். ஸுபர்ணர்வர் இந்தஉத்தமமானதர்மத்தை நன்றாகச்செய்யப்பட்ட தவத்தோடும் பொறிகளினடக்கத்தோடும் விரதத்தோடும்மூன்றுதரமனுஷ்டித்ததனுல் இந்தவிரதம் இவ்வுலகில் திரிலோபர்ணமெ

---

1 வேறபாடம்.

2 அறியமுடியாததாய் நாராயணாலேயே தரிக்கப்படுவதால் அந்தநாராயணரானகிருஷ்ணன்கேட்கப் பிரஸ்னம் செய்தாரென்ற கருக்க.

ன்றுசொல்லப்படுகிறது. ரிக்குவேதத்தின்பாடத்தில் படிக்கப்பட்ட இந்த விரதம் அனுஷ்டிக்க அரிதானது. ஓ! அரசரே! ஸுபர்ணரிட மிருந்தும் ஸகாதருமும் பிரஸித்தமுமான இந்தத்தர்மமானது உலகங்க ளுக்கு ஆயுளாயிருக்கிறவாயுவினால் அடையப்பட்டது; வாயுவினஸமீ பத்திலிருந்தும் [1]விகஸத்தாலுண்ணுகின்ற ரிஷிகளால் அடையப்பட் டது. அவர்களிடமிருந்தும் உத்தமமான அந்தத்தர்மத்தை ஸமுத்திர ராஜன் அடைந்தான். பிறகு அந்தத்தர்மமானது திரும்பவும் நாரா யணரால்கரிக்கப்பட்டு மறைந்துவிட்டது. புருஷர்ஷேஷ்டரே! திரும் பவும் காதிலிருந்து மஹாத்மாவானபிரம்மாவின் ஸ்ருஷ்டியானது உண்டாயிற்று. அந்தவிஷயத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். என்னிட மிருந்து கேளும். ஹரியும் தேவருமானநாராயணர் தாமே ஜகத்தைப் படைக்கஎண்ணி ஜகத்தின்ஸ்ருஷ்டியைச்செய்கிறவரும் ஸமர்த்தரு மானபுருஷரைச் சிந்தித்தார். உடனே சிந்திக்கிறவரான அவருடைய காதுகளிலிருந்தும் புருஷரும் பிரஜைகளுடையஸ்ருஷ்டியைச் செய் கிறவருமான பிரம்மாவானவர் வந்தார். அவரைநோக்கி ஜகத்பதியான நாராயணர், 'புத்திரா! முகத்திலிருந்தும் பாதத்திலிருந்தும் எல்லாப் பிரஜைகளையும் ஸ்ருஷ்டிசெய். நல்லவிரதமுடையவனே! உனக்கு ப்ரே யஸையும் பலத்தையும் [2]பராக்கிரமத்தையும் செய்வேன். ஸாத்வதமென் றுபெயருடையதர்மத்தையும் என்னிடமிருந்து பெற்றுக்கொள். அந் தத்தர்மத்தைக்கொண்டு ஸ்ருஷ்டிக்கப்பட்டகிருதயுகத்தை விதிப்படி நிலைக்கச்செய்' என்றுசொன்னார். அப்பொழுது பிரம்மாவானவர் ஹரி மேதஸ்ஸானதேவருக்கு நமஸ்காரம்செய்தார். அவர் உபநிஷத்துட னும் சுருக்கத்துடனும் ஆரண்யகத்துடனும்சேர்ந்ததும் நாராயணர் முகத்தில் வெளிவந்ததும் சிறந்ததுமானதர்மத்தையும் கிரஹித்தார். அப்பொழுது வராஹரூபத்தைதரிக்கின்றதேவரானவர் அளவற்றதேஜஸை யுடையபிரம்மாவுக்குக் கிருதயுகத்திற்குரியதர்மமுள்ளதும் புராணில் விருப்பமில்லாதகர்டிமென்று பெயர்கொண்டதுமான அந்தத்தர் மத்தை உபதேசம்செய்துவிட்டுப் பிறகு அந்தக்ஷணமே எதில் அவ் யக்தமான சுத்தப்ரம்மமானது நிலையுள்ளதாயிருக்கிறதோ அஜ்ஞா னத்தின் அக்கரையான அந்தப்பதத்தை அடைந்தார். பிறகு உலகங்க ளுக்குப்பிதாவான அந்தப்பிரம்மாவானவர் ஸ்தாவரஜங்கமங்க ளானஎல்லாஉலகங்களையும் படைத்தார். உடனே அப்பொழுது முத லில் சுபமானகிருதயுகமானது நடந்துவந்தது. அதில் ஸாத்வத

---

1 897 - ம்பக்கம் 93 - வதுவரியிற்காண்க.

2 பலத்தைச்செலுத்துகின்ற திறமை.

மென்கிறதர்மமானது உலீக்ங்களில் பாவி நிலேத்திருந்தது. உலகங் களேப்படைத்த ப்ரம்மாவானவர் முதன்மையான அந்தத்தர்மத்தினு லேயே தேவர்களுக்குஈசரும் ஸ்ரீயும் பிரபுவுமான நாராயண ரைப் பூஜித்தார். பிறகு அப்பொழுதே உலகங்களுடைய நன்மை யின் விருப்பத்தால் தர்மம் நிலேத்திருப்பதற்காக ஸ்வாரோசிஷ மனுவுக்கு அத்யயனம் செய்வித்தார். ஓ! அரசரே! பிறகு ஜாக்கிரதையுடையவரும் எல்லாஉலகங்களுக்கும் பதியும் விபுவு மானஸ்வாரோசிஷர் தமதுபுத்திரரான சங்கபதருக்குக் கற்பித்தார். பாரதரே! பிறகு சங்கபதரும் தம்முடையஒஜஸ்ஸுபுத்திரனும் திக்குக் களேக்காப்பவனுமான ஸுதர்மாவுக்குப் போதித்தார். பிறகு இரே தாயுகம்வந்தபோது திரும்பவும் 'அந்தத்தர்மமானது' மறைந்துவிட் டது. ஓ! ராஜஸ்ரேஷ்டரே! முன்காலத்தில் நாஸிகையிலிருந்தும் ப்ரம்மாவினுடையஜன்மம் ஏற்பட்டபொழுது உடனே தேவரும் ஸ்ரீயும் பிரபுவும் தாமரைமலர்கள்போன்றகண்களேயுடையவருமான நாராயணர் தாமாகவே ப்ரம்மாபார்த்துக்கொண்டிருக்கையில் இந்தத் தர்மத்தைச் சொன்னர். அரசரே! அவரிடமிருந்தும் பகவானுனை ஸநத்குமாரர் அத்தியயனம்செய்தார். ஓ! கௌரவஸ்ரேஷ்டரே! கிருதயுகத்தின் ஆதியில் ஸநத்குமாரரிடமிருந்தும் வீரணென்கிறஸ் ருஷ்டிகர்த்தர் இந்தத்தர்மத்தை அத்யயனம்செய்தார். வீரண்ரும் இதை அத்தியயனம்செய்து ஸாப்யரென்கிறமுனிவருக்குக் கொடுத் தார். ஸாப்யர் புத்திரரும் சுத்தரும் நல்லவிரதமுடையவரும் நல்ல மேதையுடையவருமான [1]குக்ஷிபாலருக்கும் தர்மவானுனவிக்ஷாலருக் கும் கொடுத்தார். பிறகும் நாராயணருடையமுகத்தால் வெளிவந்த தர்மமானது மறைந்துவிட்டது. திரும்பவும் அண்டஜனென்னும் ஜன்மமுண்டானபொழுது ஹரியைஉத்பத்திகாரணமாகவுடைய ப்ரம் மாவுக்கு மீண்டும் இந்தத்தர்மமானது நாராயணருடைய முகத் தால் வெளிவந்தது. ஓ! அரசரே! ப்ரம்மாவினுல் கிரகிக்கப்பட்டு விதிப்படி அனுஷ்டிக்கவும்பட்டது. அரசரே! ப்ரஹ்மிஷத்துக்க ளென்றுபெயர்கொண்டமுனிவர்களும் ஒதுவிக்கப்பட்டார்கள். அது ப்ரஹ்மிஷத்துக்களிடமிருந்தும் ஸாமவேதத்தின் முடிவை அடைந்த வரும் ஜ்யேஷ்டரென்று,எங்கும்புகழ்பெற்றவருமான ஓருவேதியரை அடைந்தது. ஹரியானவர் ஜ்யேஷ்டரின்ஸாமத்தால் வரிக்கப்பட் டார். ஜ்யேஷ்டரிடமிருந்து அவிகம்பனுனென்கிறஅரசனிடம் வந் தது. ஓ! ஸமர்த்தரானஅரசரே! பிறகு இந்தத்தர்மமானது மறைந்து

1 'க்ஷிபாலகரானகுக்ஷியென்பவருக்கு' என்பது வேறுபாடம்.

விட்டது. ஓ! அரசரே! ஹரியினிடமிருந்தும் பிரம்மாவினுடைய பத்மஜமென்கிற இந்தவழாவதுஜன்மமுண்டானபொழுது இந்தத் தர்மமானது நாராயணாலே தாமாகவே யுகத்தினுதியில் சுத்தரும் உலகங்களைத்தரிப்பவருமான பிதாமஹருக்குச் சொல்லப்பட்டது. பிதாமஹரும் இந்தத்தர்மத்தை முன்காலத்தில் தக்ஷனுக்குச் சொன்னார். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! பிறகு தக்ஷன் புத்திரியின்புத்திரர்களில் மூத்தவனான ஆதித்யனிடம் கொடுத்தான். ஜ்யேஷ்டனான அந்த ஆதித்யனிடமிருந்து பிறகு விவஸ்வான் கிரகித்தான். பிறகு திரே தாயுகத்தின் ஆதியில் விவஸ்வான் மனுவுக்குக் கொடுத்தான். மனு வும் உலகங்களுடைய ஐஸ்வரியத்திற்காகப் புத்திரனை இக்ஷ்வாகு வுக்குக்கொடுத்தான். இக்ஷ்வாகுவினால் சொல்லப்பட்டு உலகங்க ளில்பரவி நிலைத்திருக்கின்றது. அரசரே! பிரளயத்தில திரும்பவும் நாராயணரை அடையப்போகிறது. ஓ! ராஜஸ்ரேஷ்டரே! பகவத் கீதையில் சுருக்கமானவிதியுடன் கற்பிக்கப்பட்ட யதிதர்மத்தையும் முன் உமக்குச் சொல்லியிருக்கிறேன். ஓ! அரசரே! இந்ததர்ம மானது ஜகந்நாதரான நாராயணரிடமிருந்தும் நாரதரானலே நேரி லேயே ரகஸ்யத்துடனும் சுருக்கத்துடனும் நன்றாக அடையப்பட் டது. ஓ! அரசரே! இவ்விதம் பெரிதும் ஆதியுமுண்டானதும் எப் பொழுதும் இருப்பதும் அறியவரியதும் செய்யவரியதுமான இந் தத்தர்மமானது ஸாத்வதர்களால் எப்பொழுதும் தரிக்கப்படுகின்றது. தர்மத்தின் ஞானத்துடன் நன்றாக அனுஷ்டிக்கப்பட்டதும் அஹிம் ஸையுள்ளதர்மத்துடன்கூடினதுமான இந்தக்கர்மத்தினால் ஈஸ்வர ரான ஹரியானவர் பிரீதியடைகிறார். க்ஷேத்ரஜ்ஞரும் மம்தையற்ற வரும் திஷ்டரூபமான ஹரியே ஒருபிரிவானபாகத்தையுடையவராக வும் சிலவிடத்தில் இரண்டுபிரிவையுடையவராகவும் மூன்றுபிரிவை யுடையவராகவும் நான்குபிரிவையுடையவராகவும் கணக்கிடப்பட்டுக் காணப்படுகிறார். அரசரே! பஞ்சபூதங்களுடைய குணங்களையும் அதிக்ரமித்தஜீவனும் ஐந்து இந்திரியங்களையும் ஏவுகின்றபிரீதித் மானமனமும் ஹரியே. ஸ்ரீமானவர் உலகங்களுக்கிருப்பிடம். அவர் உலகங்களின் ஸ்ருஷ்டியைச்செய்பவர்; அகர்த்தாவும் கர்த் தாவும் காரியமும் காரணமுமாயிருப்பவர். வேந்தரே! விகாரமற் றவரான அந்தப்புருஷர் எப்படி விரும்புகிறாரோ அப்படி வினையாடுகி றார். ஓ! ராஜஸ்ரேஷ்டரே! மதிஞவசமில்லாதவர்களால் அறியமுடி யாத இந்த ஏகாந்திதர்மமானது என்னால் குருவின் அருளால் உமக் குச் சொல்லப்பட்டது. அரசரே! ஏகாந்திகளான புருஷர்கள் அதை

கர்கள்கிடைப்பது அரிது.' 'ஓ! குருநந்தனரே! ஹிம்ஸைசெய்யாத வர்களும் ஆத்மஜ்ஞானமுடையவர்களும் எல்லாப்பிராணிகளுடைய நன்மையிலும் பற்றுள்ளவர்களுபான ஏகாந்திகளால் உலகமானது வியாபிக்கப்படுமானால் (அப்பொழுது) பயனில்விருப்பத்தோடு செய் யப்பட்ட கர்மங்கள் இல்லாத கிருதயுகப்பிரபானது உண்டாகும். ஓ! அரசரே! இவ்விதம் பகவானும் எனக்குக்குருவும் தர்மங்களை யுணர்ந்தவரும் வேதியர்களில் சிறந்தவருமான அந்தவ்யாஸமுனிவர் முனிவர்களுடையஸன்னிதியில் கிருஷ்ணனும்பீஷ்மரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது தர்மராஜருக்குச் சொன்னர். மன்னரே! அவருக்கும் முன்காலத்தில் மிகவும்பெரியதவமுடைய்வரான நாரதர் தேவரும் பரப்ரம்மமும் வெண்ணிறமுள்ளவரும் சந்திரனுக்கு நிக ரானகாந்தியுடையவருமான அச்சுதரைப்பற்றிச் சொன்னர். நாராய ணரைப் பரகதியாயுடையவர்களான ஏகாந்திகள் எந்தவிடத்தில் சேருகின்றார்களோ அதுவே முக்தர்களுக்குரியதும் பரமும் [1]கேவல மும்மாயிருக்கிறஸ்தானமாகும்" என்றுசொன்னர். ஜனமேஜயர், "இவ்விதம் பலவிதமாயும அறிஞர்களால் அனுஷ்டிக்கப்பட்டதாயு மிருக்கிறதர்மத்தை மற்றவேதியர்கள் பலவிதமானவிரதங்களிலிருந்து ஏன் செய்வதில்லை?" என்றுகேட்க, வைசம்பாயனர், "ஓ! பரத குலத்தரசரே! தேகத்தில்கட்டுண்டஜீவர்களில் ஸாத்விகி, ராஜஸி, தாமஸிஎன்று மூன்றுபிரகிருதிகள் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. குரு குலத்தைவகிக்கின்றஅரசரே! ஜீவர்களில்ஸ்ரேஷ்டனான ஸத்வகுணமு டையபுருஷன் மோக்ஷத்திற்கு நிச்சயிக்கப்பட்டவனுவான். [2]அவன் இவ்வுலகத்திலும் மோக்ஷத்திலும் புருஷரும் பிரம்மவித்துக்களில் சிறந்தவருமான நாராய்ணரைப் பரமாக அறிகிறான். அதனால் அவன் ஸாத்விகனைக் கருதப்பட்டான். நாராயணரைப் பரகதியாகவுடைய ஏகாந்தபக்தனானவன் ஏப்பொழுதும் புருஷோத்தமரைச் சிந்தித்துக் கொண்டு இஷ்டத்தையுமடைகிறான். புத்திமான்களும் மோக்ஷதர் மத்தோடுகூடினவர்களும் ஆசையற்றவர்களுமான சிலபேர்களுடைய யோகக்ஷேமங்களை ஹரியானவர் வகிக்கின்றார். பிறக்கின்றவனை எந்தப்புருஷனே மதுஸூதனர் பார்க்கின்றாரோ அவன் ஸாத்விகனாக அறியத்தக்கவன். அவன் மோக்ஷத்திற்கு நிச்சயிக்கப்பட்டவனு வான். ஏகாந்திகளால்அனுஷ்டிக்கப்பட்ட தர்மமானது ஸாங்கியயோ

---

[1] இரண்டற்றது.

[2] 'அவன் இவ்வுலகத்திலும் நாராயணரைப் பிரம்மவித்துக்களில்சிறந்த புருஷராகவும் மோக்ஷத்தில்பரமாகவும் அறிகிறான்' என்றும் கொள்ளலாம்.

கங்களுக்கொப்பானது. ஆகையால் அவர்கள் நாராயணரூபமான மோக்ஷத்தில் பரகதியை அடைகின்றார்கள். நாராயணரால்பார்க்கப் பட்டபுருஷன் ஆத்மஞானியாவான். அரசரே! இவ்விதம் தன்னிஷ்டத்தால் ஆத்மஞானியாகான். ராஜஸி, தாமஸி, என்கிறபிரகிருதிகள் ஒன்றோடொன்று கலந்தனவகளாகக் கருதப்பட்டன. அரசரே! அவ்வாறுவமாகப்பிறந்து பிரவிருத்திதர்மங்களுடன்கூடினவனுயிருக்கிற புருஷனையோ ஹரியானவர் பார்க்கிறதில்லை பிறப்பவனுன இவனை உலகங்களுக்குப்பிதாமஹரானப்ரம்மாவானவர் பார்க்கிறார். அவனுக்கு ராஜஸனுமும் தாமஸனுமான மனமானது வியாபிக்கபடடிருக்கிறது. ஓ! அரசர்களிலசிறந்தவரே! தேவர்களும் முனிவாகளும் ஸத்வத்தில் விருப்பவர்களாயினும் ஸூக்ஷ்மமானஸத்வமில்லாதவர்களாயிருக்கிறார்கள். அதனல் [1]வைகாரிகர்களாகக்கருதப்பட்டார்கள்" என்று சொன்னர்.

ஜனமேஜயர், "வைகாரிகனுடபுருஷன் எப்படி புருஷோத்தமரை அடைவான்? எல்லாவற்றையும் பார்த்தபடி சொல்லும். பிரவிருத்தியையும் நிரமமாகச்சொல்லும்" என்று வினவ வைசம்பாயனர், "மிகவும் ஸூக்ஷ்மமனும் தத்வங்களோடுகூடினவனும் (அகாரஉகார மகாரமென்கிற) மூன்று அக்ஷரங்களோடுகூடினவனும் கிரியையற்றவனும் இருபத்தைந்தாமவனுமான புருஷனை [2]புருஷன் அடைவான். இவ்விதமும் ஸாங்கியமும் யோகமும் வேதத்தின்உபநிஷத்தும் பாஞ்சராத்ரமும் ஒன்றுகவும் இவைகள் ஒன்றுக்கொன்று ஸாதனமாகவும் சொல்லப்படுகின்றன. ஏகாந்திகளுடையஇருதத்தர்மமானது பரமானநாராயணரை விஷயமாகவுடையஸ்வரூபமுள்ளது. அரசரே! ஸமுத்திரத்திலிருந்தும் பெருகியஜலப்பிரவாகங்கள் திரும்பவும் அதையே அடைகின்றதுபோலவே இந்தஞானங்களாகிய பெரியஜலப்பிரவாகங்கள் திரும்பவும் நாராயணரையே அடைகின்றன. ஓ! யதுக்களுக்குப் பந்துவாயுள்ளவரே! உமக்கு ஸாத்வதமென்கிற இந்தத்தர்மமானது சொல்லப்பட்டது. ஓ! பாரதரே! சக்தியிருந்தால் நீர் முறைப்படி இதைச் செய்யும். இவ்விதம் மஹாபாக்கியவானனஅந்தநாரதர் என்னுடைய குருவுக்கு [3]ஸாவேதர்களுக்கும் யதிகளுக்குமுரிய அழிவற்ற ஏகாந்தகதியைச் சொன்னர். வ்யாஸரும் பிரீதியுடன புத்திமா

---

[1] ஆங்காரிகஸ்ருஷ்டியிலுள்ளவர்கள்.

[2] பிரகிருதியிலிருந்துவிடுபட்டஜீவாத்மா.

[3] 'கிருகஸ்தர்களுக்கும்' என்பது பழையஉரை; 'வெள்ளவஸ்திர முடையவர்' என்பது.

ஞனதர்மபுத்திரருக்குச் சொன்னார். குருவினிடமிருந்துபாவினதான அப்படிப்பட்ட இந்தத்தர்மமே என்னால் உமக்குச் செரிவ்வப்பட்டது. ஓ! அரசர்களில்சிறந்தவரே! இவ்விதம் இந்தத்தர்மமானது அனுஷ்டிக்கமுடியாததாயிருக்கிறது. உம்மைப்போலவே மற்றவர்களும் மோகத்தையடைந்து அனுஷ்டிக்கவில்லை. ஓ! அரசரே! கிருஷ்ணரே உலகங்களைச்சிருஷ்டிக்கிறவரும் மேலுலகிக்கச்செய்கிறவரும் ஸம்ஹாரத்தைச்செய்கிறவரும் காரணருடியாயிருக்கிறார்" என்று சொன்னார்.

முந்நூற்றைம்பத்தொன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(வ்யாஸர் விஷ்ணுவுக்குப்புத்ரரானவரலாறு.)

ஜனமேஜயர், "ஓ! பிரம்மரிஷியே! உலகங்களில் ஸாங்கியம், யோகம், பாஞ்சராத்ரம், வேதத்தின்ஆரண்யகம்என்கிற இந்தச்சாஸ்திரங்கள் வழங்குகின்றன. ஓ! முனிவரே! இவைகள் ஒன்றைப்பற்றியவையா? பலவற்றைப்பற்றியவையா? என்னால்கேட்கப்பட்ட நீர் சொல்லும். க்ரமமாக இவைகளின்வரலாற்றையும் சொல்லும். விகாரத்தைஅடைந்தவனுடைய புருஷன் புருஷோத்தமரானபரமாத்மாவை எப்படி அடைவான்?" [1]என்றுகேட்டார். வைசம்பாயனர், "அதிகமாகஅறிந்தவரும் சிறந்தவரும் மிகவும்உதாரரும் நல்லமனமுள்ளவரும் ஸத்யவதியானவள் பராசரரிடமிருந்தும் த்வீபத்தின்மத்தியில் பெற்றபுத்ரரும் அஜ்ஞானமாகிறஇருளை நாசஞ்செய்கிறவருமான அந்தவ்யாஸமுனிவருக்கு நமஸ்காரம். பிதாமஹருக்குமுந்தினநாராயணர்முதற்கொண்டு ஆறுமவரும் மஹரிஷிக்குரியஸம்பத்தோடுகூடினவரும் நாராயணருடைய அம்சத்தாலுண்டானவரும், ஒரேபுத்ரரும் த்வைபாயனரும் வேதங்களுக்குப்பெரியரிஷியுமாகச்சொல்லப்படுகிறவரும் [2]மஹாத்மாவும் ஜனனமற்றவரும் அனுகியுமான அந்தவ்யாஸரை ஆதிகாலங்களில பெரியஜீவரிஷிமுடையவரும் உதாரமானதேஜஸுள்ளவருமான நாராயணர் புத்ரராக ஸ்ருஷ்டித்தார்" என்றுசொன்னார்.

---

[1] அதிகபாடமான அரைஸ்லோகம் விடப்பட்டது.

[2] ஒருசொல் விடப்பட்டது

ஜனமேஜயர், "ஓ! பிராம்மணரிஷீச்டரே! முன்பு நீரே, வஸிஷ்டருடையபுத்திரர் சக்தி. சக்தியின்புத்திரர் பராசரர். பராசரரின்புத்திரர் கிருஷ்ணத்வைபாயனமுனிவர்' என்று உற்பத்தி சொன்னீர். நீர்தாமே திரும்பவும் இவரை நாராயணருடையபுத்திரராகச் சொல்லுகிறீர். அளவற்றதேஜஸையுடைய வ்யாஸருடையதிவ்யஜன்மமானது எப்படிப்பட்டது? ஓ! உத்தமமானபுத்தியையுடையவரே! நாராயணரிடமிருந்துண்டான ஜன்மத்தைச் சொல்லும்" என்றுகேட்க, வைசம்பாயனர் சொல்லலானார். "ஓ! அரசரே! வேதத்தின்அர்த்தத்தையுணர்ந்தவரும் தர்மத்தில்நிறைந்தவரும் தவத்திற்கிருப்பிடமும் எனக்குக்குருவும் ஞானிஷ்டரும் இமயமலையின்தாழ்வரையிலிருப்பவரும் பாரதமென்கிறசரித்திரத்தைச்செய்துவிட்டுத் தவத்தால் ஸ்ரமத்தையடைந்தவரும் புத்திசாலியுமானவ்யாஸருக்கு அப்பொழுது ஸுமந்து, ஜைமினி, மிகவும்பலமானவிரதமுடையபைலர், நாலாவதுசிஷ்யனுனான், வ்யாஸபுத்திரான்சுகர்ஆகியநாங்கள் ஜாக்ரதையுடன் சுச்ரூஷைசெய்துகொண்டிருந்தோம். ஸாங்கமானவேதங்களையும் பாரதத்தின்அர்த்தங்களையும் முழுதும் ஆவிருத்திசெய்கின்றவரானவ்யாஸமுனிவர் இமயமலையின்தாழ்வரையில் உத்தமர்களான இந்தநீக்குசிஷ்யர்களாலே சூழப்பட்டுப் பூதங்களால் சூழப்பட்டஈச்வரர்போல விளங்கினார். ஒருமனமுடையவரும் அடக்கமுடையவருமான அவரை நாங்கள் அடுத்து உபாஸித்தோம். பிறகு ஒருகதையின்மத்தியில் வேதியர்களிற்சிறந்தவரான அவரை நாங்கள் வேதார்த்தங்களையும் பாரதத்தின் அர்த்தங்களையும் அப்படிப்போலவே நாராயணரிடமிருந்துண்டான ஜன்மந்தையும் கேட்டோம். தத்வத்தையுணர்ந்தஅவர் முந்தி வேதங்களின்அர்த்தங்களையும் பாரதத்தின் அர்த்தங்களையும் சொல்லிவிட்டு நாராயணரிடமிருந்தும் உண்டான இந்தஜன்மத்தையுமுசொல்லுவதற்கு ஆரம்பித்தார். வ்யாஸர், 'ஓ! வேதியர்களே! ஆதிகாலத்திலுண்டானதும் உத்தமமும் ரிஷியைப்பற்றியதும் என்னுல்தவத்தாலறியப்பட்டதுமான இந்தச்சிறந்தசரித்திரத்தைக் கேளுங்கள். ஏழாவதுப்ரம்மாவின்காலத்தில் பிரஜைகளுடையஸ்ருஷ்டியானது உண்டானபொழுது மகாயோகியும் சுபாசுபங்களற்றவரும் அளவற்ற காந்தியுடையவருமான நாராயணரானவர் முதலில் நாபியிலிருந்தும் பிரம்மாவைப் பஷ்டத்தார். பிறகு பிரம்மா ஆவிர்ப்பவித்தார். அப்பொழுது அந்தப் பிரம்மாவைநோக்கி நாராயணர், 'ஓ! பிரம்மாவே! பிரஜைகளின்ஸ்ருஷ்டிசெய்கிறவரும் பிரபுவுமான

நீர் என்னுடையகாபியிலிருந்து உண்டானீர்: பண்டிதபுராமர்களுடன்கூடின பலவிதமானபிரஜைகளை நீர் ஸ்ருஷ்டியும்' என்று சொன்னர். இவ்விதம் சொல்லப்பட்டவரான அந்தப்பிரம்மா பிரியத்தியில்லாதவராகிய கவலையால் மனத்தில்வியாகுலத்தை அடைந்தவருமாகி வாக்காயளிப்பவரும் தேவருக்கு ஈஸ்வரருமான ஹரியை வணங்கி, 'ஓ! தேவர்களுக்கெல்லாம்தலைவரே! பிரஜைகளைஸ்ருஷ்டிப்பதற்கு எனக்குச் சக்தியுண்டா? உமக்கு நமஸ்காரம். ஓ! தேவரே! நான் பிரஜ்ஞையில்லாதவன். மேலே எது செய்யவேண்டியதோ அதைச் செய்யும்' என்று சொன்னர். இவ்விதம்சொல்லப்பட்டவரும் தேவர்களுக்கீசரும் புத்திமான்களில் சிறந்தவருமான அந்தப்பிரபுவான் உடனே மறைந்தவராகிப் பிறகு புத்தியை நினைத்தார். உடனே புத்தியானவள் ஸ்வரூபத்தோடு பிரபுவான ஹரியின்பக்கத்தில் நின்றாள். அப்பொழுது தாம் யோகமற்றவராயிருக்கிற ஹரியானவர் இந்தப் புத்தியை யோகத்தோடு சேர்ப்பித்தார். அந்தப்புத்தியானவள் ஸ்ரீஹரியோகத்தோடிருப்பவரும் நடையுள்ளவருமாயிருக்கையில் பிரபுவும் விகாரமற்றவருமான அந்தத்தேவர் அவளைநோக்கி, 'உலகத்தின்படைப்பாகிறகாரியமுத்தியின்பொருட்டுப் பிரம்மாவினிடம் பிரவேசிக்கக்கடவாய்' என்னும்வசனத்தைச்சொன்னர். உடனே ஈஸ்வரால் கட்டளையிடப்பட்ட அந்தப்புத்தியானவள் சீக்கிரமாக அவரிடம் சென்றாள். பிறகு அந்தஹரியானவர் புத்தியோடுகூடின அந்தப்பிரம்மாவை மீண்டும் பார்த்தார். திரும்பவும், 'பலவிதமான இந்தப்பிரஜைகளை ஸ்ருஷ்டியும்' என்று ஒருவார்த்தை சொன்னர். அந்தப்பிரம்மா, 'அப்படியே ஆகட்டும்' என்றுசொல்லிவிட்டு ஹரியினுடைய ஆஜ்ஞையைச் சிரத்தால்வகித்தார். பகவானை அந்தகாராயணம்இவ்விதம் சொல்லிவிட்டு அந்தவிடத்திலேயே மறைந்தார். பிறகு ஒரு முகூர்த்தகாலத்தில் தேவனென்றுபெயருடைய [1]ஆகிருதியான இவரையடைந்தது. அந்தஆகிருதியை அடைந்து அதனுடன் [2]ஒன்றுயிருக்குந்தன்மையை அடைந்தவரானர். அப்பொழுது உடனே இவருக்குத்திரும்பவும் வேறுபுத்தியானது உண்டாயிற்று. 'மேலான ஸ்தானத்திலிருக்கிறபிரம்மாவினுலே தைதீயர்கள், தானவர்கள், கந்தருவர்கள், ராக்ஷதர்கள்இவர்களுடையஸங்கல்பங்களால் ரக்ஷிப்பிக்கிற இந்த எல்லாப்பிரஜைகளும் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. இந்தப்பூமி

---

1 வேறுபாடம்.

2 'தேவசரீரத்தில் ஆத்மபாவத்தையடைந்தார்; அஹங்காரியானர்' என்றுகருத்து.

யானவள் பாரத்தால்பீடியாபிக்கப்பட்டு இரக்கப்படத்தக்கவளானாள். பகரில் பலசகலிகளான அசேகம்தைத்யர்களும் தானவர்களும் ராகூ தர்களுமுண்டாவார்கள்; தவத்தைச்செய்து உத்தமமானவரங்களை யுமடைவார்கள். வாதானத்தால் கொழுத்தவர்களான அவர்கள் எல் லாரும் அவ்விசயம் தேவஸ்ரீங்களையும் தவத்தையேதனமாகவுடைய முனிவர்களையும் பீடிப்பார்கள். அப்பொழுது நான் இந்தபாரத்தை இறக்குதலானது நியாயமாகும். பிறகு பூமியில் கிரமமாக அசேக அவ தாரங்களாலே துஷ்டர்களுடைய நிக்கிரகத்தினலும் ஸாதுக்களு டைய அனுக்கிரகத்தினலும் இவ்வகத்தக்கவளும் ஸத்யமானவளுமான இந்தப்பூமியான்வள் நிலைத்திருப்பாள். பாதாளத்திலிருக்கிற ஸர்ப்ப ரூபனனென்னேலே இவள் தரிக்கப்படுகிறுளன்றே? என்னல் தரிக் கப்பட்டுச் சராசரமானஎல்லாஜகத்தையும் தரிக்கிறுள். ஆகையால் அவதாரத்தை அடைந்து பூமியினுடைய ரகூஷணத்தைச் செய்வேன்' என்று இவ்விதம்ஆலோசித்துப் பகவானனந்தமதலைவனர் அவ தாரத்தின் உற்பத்தியின்பொருட்டு வராஹரூபம், நரஸிம்மரூபம், வாமனரூபம், அப்படிப்போலவே மனுஷ்யரூபம் ஆகிய அசேகரூபங் களை, 'இவைகளாலே நான் தேவசத்துருக்களான துஷ்டர்களைக்கொல் லவேண்டும்' என்று ஸ்டிருத்தார். பிறகு ஜகத்தைஸ்ருஷ்டித்த பக வான் திரும்ப, 'போ' என்கிறசொல்லால் எதிரொலியுண்டாகச் செய்துகொண்டு [1]ஸரஸ்வதியை உச்சரித்தார். அப்பொழுது ஸரஸ் வதியின் ஸாரமானவரும் பிரபவினுடைய வாக்கிலுண்டானவரும் சென்றதும்நிகழ்கின்றதுமவருவதுமானவற்றை அறிகிறவரும் உண் மைபுரைகிறவரும் பலமானவிரதமுடையவருமான அபாந்தரதம ஸென்கிறபுத்திர் உண்டானர். தேவர்களுக்கு ஆதியும் விகாரமற்ற வருமானபகவான் தலையால்வணங்கினஅவரைநோக்கி, 'புத்திசாலி களில்சிறந்தவனே! நீ வேதத்தின் சரித்திரத்தில் [2]சுருதியைத்தெரிசய்ய வேண்டும். முனிவ! ஆகையால் கட்டளைப்படி என்னுடைய இந்த வார்த்தையைச்செய்' என்றுசொன்னர். அப்பொழுது அவரால்ஸ்வா யம்புவமன்வந்தரத்தில் வேதங்கள் பிரிக்கப்பட்டன. அப்பொழுது பகவானனன்ஹரி இவருடைய அந்தச்செய்கையினல் ஸந்தோஷித்தார். (பிறகு அவளைநோக்கி,) 'ஓ! புத்திரா! பிராம்மண! வேறுமன்வந்தரங் களிலும் நீகன்றுகச்செய்ததவத்தினலும் யமத்தினலும் நியமத்தினு லும் இவ்விதமே உலகங்களுக்குப்பிரவர்த்தகனும் சலிக்காதவனுமாவாய். மீள

[1] வாக்கை. [2] வேதச்சுருக்கம்.

L கூஉ.

வும் கலியுகமானதுவரும்போது பரதகுலத்திலுண்டானவர்களும் மஹாத்மாக்களும் பாருலகில்பிரசித்திபெற்றவர்களுமான கௌரவர்க ளென்கிறஅரசர்கள் உண்டாவார்கள். ஓ! பிராம்மணர்களில்சிறந்த வலீர! உன்னிடமிருந்துண்டான அவர்களுடையகுலத்தில் உன்னைத் தவிர (மற்றவர்களுக்கு) ஒருவரையொருவர்ஒழிவுல்லாதற்காகக் கலகமான துநேரிடும். அப்பொழுதும் தவத்துடன்கூடினநீ வேதங்களை அதிக கவிதமாகப் பிரிக்கப்போகிறாய். கறுப்பானகலியுகம் வந்தபொழுது கறுத்தநிறமுடையவனுவாய். தவத்துடன் ஞானவிதமானதர்மங்களைச் செய்கிறவனும் ஞானத்தைஉண்டுபண்ணுகிறவனுமாவாய். (ஆனலும்) ராகத்திலிருந்தும் விடுபடமாட்டாய். உன்னுடையபுத்திரனே மஹேஸ்வரருடைய அனுக்ரகத்தால் ஆசீர்நீங்கிப் பரமாத்மாவாவான். இந்த வார்த்தை மாறாது. பிதாமஹருடையமானஸபுத்திரென்று பிராம் மணர்களால் சொல்லப்படுகிறவரும் உத்தமமான புத்தியுள்ளவரும் சிறந்தவரும் தவத்திற்குஇருப்பிடமானவரும் ஸூர்யனுக்குமேலான காந்தியுள்ளவருமான வஸிஷ்டருடையகுலத்தில் அவரைக்காட்டி லும்மேலானமகிமையுள்ள பராசரரென்கிறமஹரிஷி உண்டாவார். வேதங்களுக்குநிதியும் மிகவும்சிறந்தவரும் பெரியதவமுடையவரும் தவத்திற்கிருப்பிடமுமான அவர் உனக்குப் பிதாவாவார். அந்தமுனி வரிடமிருந்தும் நீ பிதிருகன்னிகையிடம் கானீனபுத்திரனுகக் கர்ப் பத்தில் பிறப்பாய். சென்றதும் நிகழ்கின்றதும் வருவதுமான ஞானங் களுடையகதியை அறிவாய். முன்னேசென்றவையும் என்னுல் செய் யப்பட்டவையுமான ஆயிரம்யுகங்களின் மாறுதல்களைத் தவத்தினுல் நீ பார்ப்பாய். திரும்பவும் வரப்போகிற அநேகமாயிரம்யுகங்களுடைய மாறுதல்களையும் பார்ப்பாய். ஓ! முனிவனே! என்னுடையஸ்மா ணத்தினுலே ஆதியந்தமற்றவனும் சக்கரத்தைக் கையில்தரிப்பவனு மானஹரியும் உலகத்தில் பார்ப்பாய். இந்தவார்த்தை மாறாது. விசாலமானபுத்தியையுடையவனே! உனக்கு நிகரற்றகீர்த்தியுமுண் டாகும். சனியின்சகோதரனும் மகானுமான ஸூர்யபுத்திரன் மனு வாகப் பிறப்பான். புத்திரனே! என்னுடையஅருளால் அந்தமன்வந் தரத்திலும் நீயே மனுமுதலான்வர்களுடையசங்கத்திற்கு மூன்றி னவனுவாய். ஸந்தேகமில்லை. உலகத்திலிருப்பதெல்லாம் ஹரியுடைய கார்யம். (என்னைத்தவிர) மற்றவன் (ஒன்றைச்செய்வதற்கு) மற்றொரு வனை அபேக்ஷிக்கிறான். நான் இஷ்டப்படிசெய்கிறேன்' என்றார். ஈஸ் வரானநாராயணர் ஸாஸ்வதியினிடமுண்டான அபரிமிதமானதமென் ணும்ரிஷியைநோக்கி இவ்விதமானவார்த்தையைச் சொல்லிவிட்டுப்

பிறகு, 'கார்யத்தை ஸாதி' என்றும் சொன்னர். அப்படிப்பட்ட நாடன் தேவநாராயணனின் அனுக்ரகத்தால் அவரிடமிருந்து அபாந்தரதமனென்கிற பெயருடையவனாகப் பிறந்தேன். மீண்டும் ஹரியினுடையஆஜ்ஞையினாலே பிரஸித்தனும் வஸிஷ்டவம்சத்தின் புத்திரனுமாகப் பிறந்தேனு. நான் நாராயணருடைய அருளால் நாராயணருடைய அம்சத்தாலுண்டானே என்னுடைய இதிஹாஸபுராணமத்தைச் சொன்னேன். ஓ! புத்திமான்களில்சிறந்தவர்களே! என்னால் முன்காலத்தில் சிறந்தஸமாதியினாலே மிகவும்பெரிதும் மிகவும்கடுமையுமானதவமானது ஸாதிக்கப்பட்டது. ஓ! புத்திரர்களே! நீங்கள் கேட்டவைகளான இதிஹாஸபுராணம் வரும்ஜன்மம்எல்லாவற்றையும் பக்தர்களானஉங்களுக்கு ஸ்நேஹத்தால் சொன்னேன்' என்றுசொன்னர். ஓ! அரசரே! நீர்கேட்டபடி எங்கள்குருவும் கிலேசமில்லாத மனத்தையுடையவருமான வ்யாஸமுனிவருடைய இந்தபுராணஜன்மமானது சொல்லப்பட்டது. பின்னும் கேளும். ராஜரிஷியே! ஸாங்கியம், யோகம், பாஞ்சராத்ரம், வேதம், பாசுபதமென்கிறஇந்தச் சாஸ்திரங்களே வெவ்வேறுமதங்களாகவே அறியக்கடவீர்., பரமரிஷியான அந்தக்கபிலர் ஸாங்கியத்தைச்சொன்னவராகச் சொல்லப்படுகிறார். யோகத்தைஅறிந்தவர் ஹிரண்யகர்ப்பர். அதற்குமுன்னறிந்தவன் ஒருவனுமில்லை. அநாதிஅபாந்தரதமரே வேதத்திற்கு ஆசாரியராகச் சொல்லப்படுகிறார். இவ்வுலகில் அந்தமுனிவரைச் சிலர் ப்ராசீனகர்ப்பராகச் சொல்லுகிறார்கள். உமைக்குப்பதியும் பூதங்களுக்குப்பதியும் ஸ்ரீகண்டரும் பிரம்மாவுக்குப்புத்திரரும் நிலையுள்ளமனமுடையவருமானசங்கர் இந்தப்பாசுபதமென்கிற சாஸ்திரத்தைச் சொன்னர். பாஞ்சராத்ரமுழுமையும் பகவானாராயணர் தாமே சொன்னர். 'ஓ! ரிஷிகளில்சிறந்தவரே! இந்தஎல்லாச்சாஸ்திரங்களிலும் வேதத்தையனுஸரித்தும அனுபவத்தையனுஸரித்தும் பிரபுவானநாராயணரே தாத்பரியமானஅர்த்தமாகக் காணப்படுகிறார். ஓ! அரசரே! தமோகுணம்மேலிட்டவர்கள் இவரை இவ்விதமாக அறிகிறதில்லை. அவரைத்தவிர மற்றொருவனும் இல்லை' என்று சொல்லுகிற புத்திமான்களானவர்கள் ஸர்வஜ்ஞரான அந்தநாராயணரையே சாஸ்திரங்களைச்செய்தவராகவும் சாஸ்திரங்களுடையதாத்பரியத்திற்குவிஷயமாகவும் சொல்லுகிறார்கள். ஸந்தேகமில்லாதஎல்லாரிடத்திலும் ஹரியானவர் எப்பொழுதும் வஸிக்கிறார். தர்க்கத்தின் பலத்தினாலே ஸந்தேகமுடையவர்களிடம் மாதவர் வஸிக்கிறதில்லை. ஓ! அரசரே! பாஞ்சராத்ரத்தை அறிந்தவர்களும் க்ரமப்படிபற்

முள்ளவர்களும் ஏகாந்தபரிவணையை அடைந்தவர்களுமானவர்கள் ஹரியை அடைகிறார்கள். ஓ! அரசே! ஸாங்கியமும்யோகமுமாகிய இரண்டும் ஸநாதனமானவை. எல்லாவேதங்களும் ஸநாதனமானவை. அவைகளெல்லாவற்றிலும் எல்லாமுனிவர்களாலும், நாராயணரே அனுதியான இந்தஎல்லாஜகத்தாகவும் சொல்லப்பட்டார். வேதத்தால்சொல்லப்பட்டு எல்லாஉலகங்களிலும்நடக்கிற சுபாசுபமானஎல்லாக்கர்மாக்களும் ஸ்வர்க்கத்திலும் அந்தரிக்ஷத்திலும். பூமியிலும் ஜலங்களிலுமுள்ளனவும் ரிஷியான அவரிடமிருந்து உண்டாயின வென்று அறியவேண்டும்" என்றுசொன்னர்.

முந்நூற்றுபதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(பரமாத்மாவின்மகிமையைப்பற்றி ப்ரம்மாவுக்கும் சிவனுக்கும்நடந்த ஸம்பாஷணை.)

ஜனமேஜயர், "ஓ! பிராம்மணரே! புருஷர்கள் அநேகர்களா? அல்லது ஒருவனேதானு? இவ்வுலகில் எவன் ஸ்ரேஷ்டனைபுருஷன்? இதத்தில் யார் காரணமாகச் சொல்லப்படுகிறார்?" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லலானர். "ஓ! குருவம்சத்தைவகிக்கின்றவரே! உலகத்தில் ஸாங்கியர்கள் யோகிகள்இவர்களுடைய விசாரத்தில்புருஷர்கள் அநேகர்கள். புருஷனைஒருவனாக இவர்கள் அபிப்பிராயப்படுகிறதில்லை. எல்லாப்புருஷர்களுக்கும் காரணமானது ஒன்றுகச் சொல்லப்படுகிறது. குணங்களால் சிறந்தவனும், எல்லாமாயிருப்பவனுமான அந்தப்புருஷனை ஆத்மனைபயறிந்தவரும் தவத்தைடுண்டினவரும் அடங்கினவரும் (எல்லாராலும்) நமஸ்கரிக்கத்தக்கவரும் பரமரிஷியும் குருவுமான வ்யாஸரைவணங்கி விரிவாகச் சொல்லுகிறேன். ஓ! அரசே! அவசியம்படிப்புள்ளதும், ஸத்யமுமாக எல்லாவேதங்களிலும் பிரஸித்தமான இந்த[1] புருஷஸூக்தமானது முனிஸிகாமணியான வ்யாஸரால் சிந்திக்கப்பட்டது. ஓ! பாரதரே! கயிலர்முதலான முனிவர்களாலே ஆத்மவிசாரத்தை ஆராயித்துப் பொதுவாகவும் விசேஷமாகவும் சாஸ்திரங்கள் சொல்லப்பட்டன. வ்யாஸரானவர் சுருக்கமாக ஓரேபுருஷனென்பதைச் சொன்னர். அளவற்றதேஜஸ்ஸுள்ள அவருடைய அனுக்ரஹத்தால் அதை

[1] புருஷஞ்ஞபரமேஷ்டி சொல்லுகிறவசனம்.

நான் உமக்குச் செவ்வையாகச் சொல்லுகிறேன். ஓ! அரசரே! இந்தவிஷயத்திலும் பிரம்மாவுடன் ருத்ரருக்குண்டான ஸம்வாத ரூபமான பழைய இதிஹாஸத்தைச் சொல்லுகிறார்கள். அரசரே! பாற்கடலின் நடுவில் ஸ்வர்ணத்திற்கு நிகரான காந்தியுடைய வைஜயந்தமென்று பெயர்பெற்ற சிறந்ததான ஒரு மலை இருக்கிறது. அரசரே! வைஜயந்தமென்னும் அவ்விடத்தில் பிரம்மதேவர் ஒருவராக ஆத்மாவின் கதியை விசாரித்துக்கொண்டு ப்ரம்மலோகத்திலுள்ள சிறுகத்தைவிட்டு நித்தியம் வலிக்கிறார். புத்திமானான அந்த ஞானி அவ்விடத்திலிருக்கும்பொழுது ஒரு காலத்தில் (அவருடைய) நெற்றியிலுண்டான புத்திரரும் மஹாயோகியும் மூன்று கண்களுடையவரும் பிரபுவுமான சங்கரர் தற்செயலாக ஆகாயமார்க்கத்தில் வந்தார்; பிறகு ஆகாயத்திலிருந்தும் மலையின்கொடுமுடியில் சீக்கிரமாக இறங்கி எதிரில்வந்து சந்தோஷத்துடன் பாதங்களில்நமஸ்கரித்தார். அப்பொழுது பாதங்களில் பணிந்தவரைப்பார்த்துப் பிரபுவும் தனித்திருப்பவருமான பிரம்மாவானவர் இடக்கையினால் தூக்கினார். நீண்டகாலத்தின்பின்வந்த அந்தபபுத்திரரைநோக்கிப் பகவானவர், 'ஓ! நீண்டபுஜங்களையுடையவரே! உமக்குசுகமாவா? பாக்கியத்தால் என்னுடைய ஸமீபம் வந்தீர். ஓ! புத்திரரே! உம்முடைய அத்தியயனத்திற்கும் தவத்திற்கும் எப்பொழுதும் க்ஷேமமா? நீர் எப்பொழுதும் கடமையான தவமுடையவராதலால் உம்மைத் திரும்பவும் கேட்கிறேன்' என்றுசொன்னார். ருத்ரர், 'ஓ! பகவானே! உம்முடைய அனுக்ரகத்தால் என்னுடைய வேதாத்தியயனத்திற்கும் தவத்திற்கும் எல்லாஜகத்திற்கும் க்ஷேமமே. சந்தேஹமில்லை. ஓ! பகவானே! என்னில் நீர் ப்ரம்மலோகத்திலுள்ளகிருகத்தில் வெகுகாலத்திற்குமுன் பார்க்கப்பட்டீர். ஆகையால் நான் உம்முடையபாதத்தால் அடையப்பட்ட இந்தபூமியை அடைந்தேன். தவிரவும் நீர் ஏகாந்தமாய்வசிப்பதால் எனக்கு (கேட்க) குதூஹலமுண்டாகிறது. ஓ! பிதாமஹரே! இது அற்பமானகாரணமாயிராதன்றோ? சிறந்ததும் பதிதாகமற்றதும் தேவர்களாலும் அஸுரர்களாலும் வலிக்கப்பட்டதும் அளவற்றஒளியுடைய முனிவர்களாலும் கந்தருவர்களாலும் அப்ஸரஸுகளாலும்எப்பொழுதும் நன்குவசிக்கப்பட்டதுமான அந்தக்கிருகத்தைவிட்டுவிட்டு இந்தச்சிறந்ததானபருவதத்தைத் தனியே என்அடைந்தீர்?' என்றுகேட்டார். பிரம்மா, "வைஜயந்தம்என்கிற இந்தச்சிறந்தமலையில நான் எப்பொழுதும் வசிக்கிறேன். இதில் ஒருமுகமானமனத்தால் விராட்

புருஷரைத் தியானிக்கிறேன்' என்றுசொன்னார். ருத்ரர், 'ஓ! பிரம்மாவே! ஸ்வயம்புவானஉம்மாலே அனேகம்புருஷர்கள் ஸ்ருஷ்டிக்கப்பட்டார்கள். ஓ! பிரம்மாவே! மற்றவர்களும் 'ஸ்ருஷ்டிக்கப் படுகிறீர்கள். அந்தவிராட்புருஷரோ (அநேகர்களில்) ஒருவர்..ஓ! பிரம்மாவே! உம்மால்தியானிக்கப்படுகிற ஒருவரான அந்தப்புரு ஷோத்தமர் யார்? என்னுடையஇந்தஸந்தேகத்தைத் விலக்கும். எல்லாக்குப் பெரியகுதூஹலம் உண்டாயிருக்கிறது' என்றுகேட்டார். பிரம்மா, 'புத்ரரே! நீசொல்லிய அந்தப்புருஷர்கள் அநேகர்கள். இவ்விதமானஇது பிரத்யக்ஷத்தினாலே அறியப்படாவிஷயம். இவ்விதம் பார்க்கவேகூடாது. ஒருவரான விராட்புருஷருடையஆதாரத்தைச் சொல்லுவேன். அவர் அநேகம்புருஷர்களுக்கு ஒரேகாரணராகச் சொல்லப்படுகிறார். (அவரைஅறிந்தவர்கள்) [1]விராட்டும [2]ஸாத்யாத்மாவும் [3]காரணரும் [4]நிர்க்குணரும் எப்பொழுதுமிருக்கிறவருமான அந்தப்புருஷரை நிர்க்குணராகி அடைகின்றார்கள்.

மூன்றூற்றுபத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(பரமாத்மாவின்மகிமையைப்பற்றி ப்ரம்மாவுக்கும் சிவனுக்கும்நடந்த ஸம்பாஷணைத்தொடர்ச்சி.)

ஓ! 'புத்ரரே! கேளும். இந்தப்புருஷர் சாஸ்வதரும் 'அழிவற்றவரும் குறைவற்றவரும் அறியமுடியாதவரும் எல்லாவற்றையும அடைந்தவருமாகச் சொல்லப்படுகிறார். ஓ! சிரேஷ்டரே! அவர் குணங்களோடுகூடினஉம்மாலும் என்னாலும் மற்றவர்களாலும் பார்க்கமுடியாதவர். எல்லாமாயிருக்கிறஅவர் நிர்க்குணர்களால் ஞானத்தினாலே பார்க்கத்தக்கவராக நிணைக்கப்படுகிறார். அவர் சரீரமில்லாதவராகி எல்லாச்சரீரங்களிலும் வசிக்கிறார். அவர் சரீரங்களில்வசிக்கிற வாயிருந்தாலும் கர்மங்களால் ஸம்பந்திக்கப்படுகிறதில்லை. அவர் எனக்கும் உமக்கும் தேஹாபிமானிகளானமற்றவர்களுக்கும் அந்தர்யாமி. எல்லாருக்கும் அவர் ஸாக்ஷியாகவர்; ஒருவனாலும் ஒரிடத்திலும் அறியமுடியாதவர். எல்லாச்சரங்களையுமுடையவரும் எல்லாப் புஜங்களையுமுடையவரும் எல்லாப்பாதங்களையும் கண்களையும் காஸி

---

1 அரிருத்தன். 2 பிரத்யும்னன். 3 ஸங்கர்ஷணன். 4 வாஸுதேவன்.

கைகளையுமுடையவருமாயிருக்கிறார். அவர் ஒருவராகிச் சரீரங்களில் லாகத்துடன் யதேச்சையாக ஸஞ்சரிக்கிறார். சரீரங்களும் சுபாசுப மான அவற்றின்வாஸனையும் க்ஷேத்திரங்கள். அவைகளே யோகத் தையேஉருவமாகக்கொண்டஅவர் அறிகின்றார். அதனால் அவர் க்ஷேத்திரஜ்ஞரென்றுசொல்லப்படுகிறார். பிராணிகளுள் ஒன்றும் அவருடையவரவும் போக்கும் அறியமுடியா. ஸாங்கியமார்க்கத்தினு லும் யோகத்திலுலும் நிரமப்படி அவருடையகதியை நானும் ஆலோ சிக்கின்றேன். (ஒருவருக்கும்) எட்டாத மிகவும்மேலான அவரு டையகதியைநான் அறியவில்லை. அனுதியானபுருஷரையும் அவர் ஒருவராயிருக்குமதன்மையையும் அவருடையபெருந்தன்மையையும் அறிந்தபடி சொல்லுகிறேன். அவர் ஏகபுருஷராக நிணைக்கப்பட் டிருக்கிறார். ஸநாதனரான அவர் ஒருவர்தாம் மஹாபுருஷரென்கிற பெயரை வஹிக்கிறார். உலகத்தில் ஏகே அக்னியானது அநேகவிதமா கப் பிரகாசிக்கிறது. ஏகேஸூர்யன் பிரகாசத்திற்கு ஏகேகாரணமா யிருக்கிறான். ஏகேவாயு அநேகவிதமாக வீசுகிறது. ஏகேஸமுத்தி ரம் ஜலங்களுக்கெல்லாம் காரணமாயிருக்கிறது. அதுபோல நிர்க்குண ரானஏகேபுருஷர் எல்லாரூபமுமாயிருக்கிறார். நிர்க்குணரான அந்தப் புருஷரை முக்தர்கள் அடைகின்றார்கள். குணமயமானஎல்லாவற்றை யும்தள்ளிவிட்டுச் சுபாசுபமானகர்மத்தையும்தள்ளிவிட்டு ஸத்யத்தை யும் மித்தையையும் தள்ளிவிட்டவன் இவ்விதம் நிர்க்குணனாகிறான். சிந்திக்கமுடியாதவரும் [1]சேதனர்களில் ஸூக்ஷ்மமானஅதிருத்தர் முதலியநான்காயிருபபவருமான அவரை அறிந்து எவன் மிகவும் சாந் தனாகி ஸஞ்சரிக்கிறானோ அவன் மங்களரூபமானபுருஷனை அடை வான். சில [2]பண்டிதர்கள் பரமாத்மாவை ஒருவனாகச் சொல்லுகிறார் கள். ஆத்மாவைவிசாரிக்கின்ற [3]மற்றவர்களும் அப்படியே பிரத்யகா த்மாவை ஏகேஆத்மாவானபரமாதமாவாகச் சொல்லுகின்றார்கள். அவைகளில் பரமாத்மாவானவன் நித்யனும் நிர்க்குணனுமாகக் கரு தப்படுகிறான். அவனோ நாராயணனைஅறியத்தக்கவன். அவன் ஸர்வாத்மாவானபுருஷன். அவன் ஜலத்தினால் தாமரையிலை பற்றப் படாததுபோல வினைப்பயன்களால் பற்றப்படுகிறதில்லை. [4]கர்மத் தையேஉருவமாகக்கொண்டமற்றவன் பஞ்சமோக்ஷங்களோடு கூடு கிறான். அவன் [5]பதினேழுடன் கூடியஸங்காதத்தோடும் கூடுகிறான்.

---

1 'பாவஸூக்ஷ்மம்' என்பது மூலம். 2 யோகிகள்.

3 ஸாங்கியர்கள். 4 கர்மங்களில்பற்றுள்ள.

5 பதினேழுதத்வங்களின்கூட்டம்மானுலிங்கசரீரம்.

இவ்விதம் பலவிதமாயிருக்கிற புருஷன் உமக்குக் கிரமமாகச் சொல்லப்பட்டான். ஐயா! எல்லாமானதும் (ஸ்ருஷ்டிஸ்திதிலய ஹாமான) உலகவியாபீரத்திற்குஸ்தானமும் அறியவேண்டியதும் மேலானதும் சாஸ்திரங்களால் அறிவிக்கக்கூடியதும் நினைக்கிறதும் நினைக்கப்படுவதும் புஜிப்பதும் புஜிக்கக்கூடியதும் முகருகிறதும் முகரத்தக்கதும் ஸ்பரிசிக்கிறதும் ஸ்பரிசிக்கத்தக்கதும் பார்க்கிறதும் பார்க்கத்தக்கதும் கேட்கிறதும் கேட்கத்தக்கதும் அறிகிறதும் அறியத்தக்கதும் ஸகுணமும் நிர்க்குணமும் பிரதானமும் அழிவற்றதும் அனுதியும் விகாரமற்றதுமானது பிரம்மம்என்று நன்குசொல்லப்பட்டிருக்கிறது. பிரம்மாவான எனக்கு முந்தியஸ்ருஷ்டியைச்செய்தஅதைப் பிரம்மரிஷிகள் [1]அநிருத்தனுக்குச் சொல்லுகிறார்கள். உலகத்தில் வேதத்தில் சொல்லப்பட்டதும் நல்லதும் இஷ்டமானபயனுடையதுமாயிருக்கிற கர்மம் அவருக்கு திருப்தியுண்டுபண்ணத்தக்கது. எல்லாத்தேவர்களும் மிகவும்மீடக்கமுடையமுனிவர்களும் பிராக்வம்சம்என்கிறஸ்தானத்தில் யஜ்ஞபாகத்திற்குரிய அவரை உபாஸிக்கின்றார்கள். ஓ! புத்திரரே! முந்தியுண்டானவனும் பிரஜைகளுக்குஈஸ்வரனும் பிரம்மாவுமான நான் அவரிடமிருந்து உண்டானவன். நீரும் என்னிடமிருந்து உண்டானீர் என்னிடமிருந்து சாசரமானஉலகமும் உபநிஷத்துக்களுடன்கூடியஎல்லாவேதங்களும் உண்டாயின. நான்காகப்பிரிந்த அந்தப்புருஷர் எப்படி விரும்புகிறாரோ அப்படி [2]விளையாடுகிறார். இவ்விதம் தேவரானஅந்தப்பகவான் தம்உருவமானஅறிவினால் அறிவித்தார். ஓ! பூத்திரரே! கேட்டவரானஉமக்கு ஸாங்கியசாஸ்திரத்திலும் யோகசாஸ்திரத்திலும் உள்ளபடி சொன்னேன் இது உண்மையாகச் சொல்லப்பட்டது' என்றார்" என்று சொன்னார்.

மூந்நூற்றுபத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாரதர், இந்திரனிடம் வந்ததும் அவன் அவரைக் கதை சொல்லச்சொல்லியதும்.)

தர்மபுத்திரர் பீஷ்மரைநோக்கி, "பிதாமஹரானஉமமால் மோக்ஷதர்மத்தைச்சேர்ந்த சுபமானதர்மங்கள் சொல்லப்பட்டன. பிரம்மசாரிமுதலானஆஸ்ரமிகளுக்குரிய சிறந்ததர்மத்தை நீர் எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்க, பீஷ்மர் சொல்லலானார்.

---

[1] அநுஷ்காரம். [2] லீலைசெய்கிறார்.

"எல்லா ஆஸ்ரமங்களிலும் விதிக்கப்பட்டதர்மம் [1]ஸத்தியமும் [2]ஸத்தியமானபயனளிப்பதுமானதே. இவ்வுலகில் அநேகவழிகளையுடைய தர்மத்தின் அனுஷ்டானம் வீண்போகாது. ஓ! பரதஸ்ரேஷ்டனே! எவன் எவன் எந்த எந்தவிஷயத்தில் உறுதியை அடைகிறானோ அவனவன் அதைஅதையே வெகுமதிக்கிறான். மற்றதை வெகுமதிப்பதில்லை. ஓ! அரசனே! முன்காலத்தில் நரிதமகரிஷியால் இந்திரனுக்குச்சொல்லப்பட்ட இந்தக்கதையை நீ என்னிடமிருந்து கேள். அரசனே! ஸித்திபெற்றவரும் மூவுலகங்களுக்கும் ஸம்மதருமான நாரதமஹாமுனிவர் வாயுவானது தடையில்லாமல் ஸஞ்சரிப்பதுபோலக் கிரமமாக உலகங்களில் ஸஞ்சரித்தார். பெரிய வில்லுடையவனே! அவர் ஒரு ஸபையில் தேவராஜனுடைய அரண்மனையை அடைந்தார்; இந்திரனால்பூஜிக்கப்பட்டு ஸபீபத்தைஅடைந்து உட்கார்ந்தார். அவகாசம்செய்துகொண்டு உட்கார்ந்திருக்கிற அவரைநோக்கிச் சசிபதியான அவன், 'ஓ! குற்றமற்றமகாமுனிவரே! எதாவதுஆச்சரியம் உம்மால் பார்க்கப்பட்டிருக்கிறதா? பிரம்மரிஷியே! சராசரங்களோடுகூடிய மூன்றுலகத்தையும் நீர் பார்த்திருக்கிறீர். ஸித்திபெற்றவரானநீர் குதூஹலத்துடன் எங்களும் ஸாக்ஷிபோல ஸஞ்சரிக்கிறீர். ஓ! தேவரிஷியே! உலகில் உமக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. (ஆகையால்) கேட்கப்பட்டதையோ அனுபவிக்கப்பட்டதையோ பார்க்கப்பட்டதையோ எனக்குச் சொல்லும்' என்றுகேட்டான். மன்னவ! பேசுகிறவர்களில்சிறந்தவரானநாரதர் அடுத்துஉட்கார்ந்திருக்கிற அந்த இந்திரனுக்குவிரிவானகதையைச் சொன்னார். பிராம்மமேன்மைத்தமாகிய அவர் கேட்கப்பட்டபொழுது எந்தமுறைபோகச் சொன்னாரோ அப்படி நீ என்னிடமிருந்துகேள்.

முந்நூற்றறுபத்துமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(ஒருப்ராம்மணர்வீட்டுக்கு ஸ்ரீ அதிதி வந்ததும் அவர் அவரை உபசரித்ததும்.)

அரசனே! கங்காநதியின்தென்கரையில் மஹாபத்மமென்கிற சிறந்தபட்டணத்தில் நிஷ்டையாயிருப்பவரும் அழகுடையவரும் [3]அத்ரி

---

1 அஹிம்ஸை பயனளிக்குந்தன்மை. 2 நெடுநாளிருக்கிறபயன்.

3 'லோமாந்வயே' என்பது மூலம்.

வம்சத்தில்பிறந்தவரும் மனஸ்தைஜயித்தவருமே பாக்கவீகோத்ரமு டையவ்ரும் தர்மத்தைநித்யமாகக்கொண்டவரும் கோபத்தைவென்ற வரும் எப்பொழுதும் திருப்தியுடையவரும் இந்திரியங்களை ஜயித்த வரும் தவத்திலும்தம்வேதத்திலும்பற்றுதலுள்ளவரும் மெய்சொல் லுகிறவரும் ஸஜ்ஜனர்களுக்குலம்மதமானவரும் நியாயமாகக்கிடை த்ததனத்தோடும் தம்சீலத்தோடும்கூடினவருமான ஒருபிராம்மணர் இருந்தார். ஓ! அரசனே! ஞாதிகளாலும் ஸம்பந்திகளாலும் விரிவா யும் புத்திரபௌத்ரர்களால் நிலைபெற்றதாயும் புகழ்பெற்றதாயுமிருக் கிற பெரியகுலத்தில் உயர்வானஜீவனத்தை அடைந்தஅவர் அநேகம் புதல்வர்களைப்பெற்று விரிவானகர்மத்திலிருக்கிறவரும் குலதர்மத் தையடைந்தவருமாகித் தர்மத்தைச்செய்வதில் நிலையுள்ளவராயிருந் தார். ஒருகால் அவர் வேதத்தில்சொல்லப்பட்டதும் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டதும் சிஷ்டர்களாலனுஷ்டிக்கப்பட்டதுமான மூன்று விதமான்தர்மத்தையும் மனத்தால்ஆராய்ந்து, 'எந்தக்கர்மத்தைச் செய்தால் "எனக்குச் சுபம் கிடைக்கும்? எது கர்மஸாத்தியம்? எது மேலானஸ்தானம்?' என்று இவ்விதம் நித்தியமாக ஆராய்கிறவரா யிருந்தும் நிச்சயத்தை அடையவில்லை. இவ்விதம் அவர் ஆராய்ந்து கொண்டிருக்கும்போது, ஒருகாள் சிறந்ததர்மத்தையடைந்தவரும் மிகவும்ஸமாதியுற்றவருமான ஒருபிராம்மணஅதிதி வந்தார். அவர் அவருக்கு (விசிறிவீசுதல்முதலான) கிரியையுடன்கூடினஸ்ரத்தை தால்பூஜையைச்செய்தார். ஸ்ரமம்நீங்கினவரும் செவ்வையாகஉட் கார்ந்திருக்கிறவருமான அவரைநோக்கிப் பின்வரும்வசனத்தைச் சொல்லலானார்.

மூன்நூற்றறுபத்துநான்காவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(பிராம்மணர் மோக்ஷோபாயத்தைக்கேட்க, அதிதி தம்க்தம் அது ஸம்சயமாயிருப்பதாகச் சொல்லியது.)

'ஓ! குற்றமற்றவரே! இந்தப்பூஜையைச்செய்து உம்மிடத்ய வாக்கின்மாதுரியத்தால் மீத்திரத்தன்மையை அடைந்தோன் ஒன்று சொல்லுகிறேன். அதைக் கேளும். பிராம்மணஸ்ரேஷ்டரே! நானே குடும்பகாரியத்தைப் [1]புத்திரனிடம்ஒப்பித்துவிட்டு மேலானமோக்ஷ

1 வேறுபட்டம்.

தர்மத்தைச் செய்யவேண்டும். வேதியரே! அதற்கு மார்க்கம் எதாகும்? நான் 'ஆத்மாவையடைந்து ஒருவனுக ஆத்மாவிலிருப்பைப் பார்க்கவிரும்புகிறவனுயிருந்தும் சாதாரணமானகுணங்களாலே கட்டப்பட்டு அதைப் பார்க்கவில்லை. புத்திரப்பயனே ஆஸ்ரயித்து இந்தஎண்ணுடையபிராயமான ஜ்ஞேல்லுவதற்குமுன்னே பரலோகத்திற்கு ஹித மான பாதேயத்தைத் தேடிக்கொள்ளவிரும்புகிறேன். 'இந்தஉலகத்தில் உள்ளபண்டங்களில் [1]ஏதில் அக்கரையையடையவிரும்புகிறஎனக்குத் தர்மமயமானஓடம் (ஏற்படும?' என்கிற) இந்தப்புத்தி உண்டாயிற்று. உலகத்தில் சேர்த்துஜ்ஜவக்கப்பட்டவைகளும் பிறகு பிரிந்துபோகும் படிசெய்யப்பட்டவைகளுமான பிராணிஸமூகங்களைப்பார்த்தும் பிராஜைகளுக்குமேலே சலிக்கும்படிசெய்யப்பட்ட (ரோகங்களாகிற) தர்ம ராஜனுடையகொடிச்சீலையின்வரிசையைப்பார்த்தும் (அன்னமுதலிய) போகங்களில்லாசைகளால் பிறரைப்பிரார்த்திக்கின்ற [2]யுதிகளையும் பார்த்தும் என்னுடையமனம் (ஒன்றிலும்) பற்றவில்லை. ஓ! அதிதியே! ஆகையால் புத்தியின்பலத்தைப்பற்றிய தர்மத்தினுலே நீர் என்னைத் தர்மத்தில் ஆஜ்ஞாபிக்கவேண்டும்' என்றுசொன்னர். மிகவும்அறிவுடையவரான அந்தஅதிதியானவர் தர்மமாகச்சொல்லுகிற அவருடையவார்த்தையைக் கேட்டு அவரைநோக்கி இனியசொற்களால் அழகாக மறுமொழிசொல்லலானர். 'நானும் இந்தவிஷயத்தில் மயக்கமுடையவனுயிருக்கிறேன். எனக்கும் (இதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற) இந்தஎண்ணம் இருக்கிறது. அநேக மார்க்கங்களுள்ள [3]ஸ்வர்க்கத்தின் விஷயத்தில் நல்லநிச்சயத்தை அடையவில்லை. சிலர் மோக்ஷத்தை ஸ்வீகரிக்கின்றர்கள். சிலவேதியர்கள் யாகத்தின்பயனைப் புகழ்கின்றர்கள். சிலர் வானப்பிரஸ்தாச்ரமத்தை அடுத்திருக்கின்றர்கள். சிலர்கிருகஸ்தாச்ரமத்தைஅடுத்திருக்கின்றர்கள். சிலர் ராஜதர்மத்தை அடுத்திருக்கின்றர்கள். சிலர் தமது [4]பயனே ஆஸ்ரயித்திருக்கின்றர்கள். சிலர் குருவின் (பணிவிடைமுதலான) தர்மங்களே ஆஸ்ரயித்திருக்கின்றர்கள். சிலர் மௌனத்தை ஆஸ்ரயித்திருக்கின்றர்கள். சிலர் மாதாபிதாக்களுடையசுஸ்ரூஷையைச்செய்து ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். சிலர் அக்நிமுகையினுலும் சிலர் ஸத்தியத்தினுலும் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். சிலர் யுத்தத்தில்எதிர்த்துநின்று கொல்லப்பட்டு ஸ்வர்க்கத்தை

---

1 எந்த ஆஸ்ரமத்தில்?

2 வேறுபாடம்.

3 மோக்ஷம் ஸ்வர்க்கம் இரண்டிக்கும் பொது.

4 இதத்திலுள்ளபயனே.

அடைந்தார்கள். சிலர் உஞ்சவிருத்திகளாலே ஜீவிதமிபெற்று ஸ்வர்க்கமார்க்கத்தையடைந்தார்கள். சுபகர்மமுடையவர்களும், புத்திமான்களும், ஸந்தோஷமுள்ளமனமுடையவர்களும், இருதியீங்கணஜயித்தவர்களுமானசிலர் வேதாத்தியயனத்திற்குரிய விரதங்களில் பற்றுள்ளவர்களும் வேதாத்தியயனத்தில் முயன்றவர்களுமாகி ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள் நேர்வழியுடையவர்களும் சுத்தமனமுடையவர்களுமான சிலர் ருஜுத்தன்மையில்லாதஜனங்களால் உபத்திரவிக்கப்பட்டும் ருஜுத்தன்மையை விடாதவர்களாகி ஸ்வர்க்கத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டார்கள். இவ்விதம் ஸ்பஷ்டமாகிறதர்மமார்க்கங்களாலே பலவிதமானஜனங்களாலே காற்றினால் மேகத்தின்ஒரிசை கலக்கப்படுவதுபோல என்னுடையபுத்தியும் கலக்கப்பட்டதாயிருக்கிறது.

மூன்நூற்றுபத்தைந்தாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(அதிதி, ப்ராம்மணரைப் பத்னியிடம் போகச்சொல்லியது.)

ஓ! வேதியரே! ஆனாலும் நான் உமக்கு என்னுடையகுருவினால் எப்படிச் சொல்லப்பட்டதோ அப்படிக் கிரமமாக உபதேசத்தைச்செய்கிறேன். அர்த்தத்தின்தத்வத்தை என்னிடமிருந்து கேளும். கோமதிநதீதீரத்தில் தர்மசமென்கிறவனத்தில் முன்ஸ்ருஷ்டியில் தர்மம்யமானசக்கரமானது பிரவிருத்திக்கும்படி செய்யப்பட்டது. அவ்விடத்தில் பெரிதான [1]நாகச்சுனை ஒன்றிருக்கிறது. ஓ! ப்ராம்மணச்ரேஷ்டரே! அவ்விடத்தில் எல்லாத்தேவர்களாலும் யாகம் செய்யப்பட்டது. அந்தவிடத்தில் அரசர்களில்சிறந்தவனான மாந்தாதா இந்திரனை ஜயித்தான். அவ்விடத்தில் தர்மபுத்தியுடைய பெரியோருநாகன் வாஸஞ்செய்துகொண்டிருக்கிறான். ஓ! ப்ராம்மணச்ரேஷ்டரே! பத்மநாபனென்கிறபெயருடையவனும் பத்மனென்றே ப்ரஸித்திபெற்றவனும் கர்மம் உபாஸனம்ஞானமென்கிற மூன்றுவிதமானமார்க்கத்தினும் நிஷ்டைபெற்றவனுமான அந்தமஹாநாகன் வாக்கினாலும் செய்கையினாலும் மனத்தினாலும் ப்ராணிகளுக்குச் சந்தோஷத்தைச் செய்கின்றான். அவன் விஷமத்திலிருப்பவையும் ஸமஸ்திலையிலிருப்பவையுமான சேத்ரமுதலானவற்றை ஸாமதானபேததண்டங்

---

[1] 'நாகபுரம்' என்பது வேறுபாடம்.

களால் நான்குவிதமாயிருக்கும்படி தியானத்தால் ரக்ஷிக்கிறான். நீ விதியினால் அவனிடம்போய்ச்சென்று உனது இஷ்டத்தைக் கேட்கக் கடவீர். அவன் உமக்குச் சிறந்ததர்மத்தைத் தெரிவிப்பான்; பொய்யைச் சொல்லமாட்டான். அந்தநாகன் எல்லா அதிசீகளையும் மூடையவனும் புத்திஜீவிகளாஸ்திரத்திலும்வல்லவனும் உவமையற்ற வைகளும் விரிவுபட்டவைகளுமான எல்லாகுணங்களுமபொருந்தியவனும். இயற்கையால் எப்பொழுதும் ஜலம்போலத்தெளிவுள்ளவனும் எப்பொழுதும்அத்தியயனத்தில்பற்றுள்ளவனும தவம்அடக்கம்மேலானசீலம்இவைகளுள்ளவனும யாகசீலமுடையவனும்தானத்தைச்செய்கிறவனும் பொறுமையுள்ளவனும் மேலானநடையிலநிலைத்திருப்பவனும் உண்மையானவாக்குடையவனும் அஸூயையற்றவனும் நல்லசீலமுடையவனும் இந்திரியங்களையடக்கினவனும (தேவர்களுக்கும் பிராம்மணர்களுக்கும்கொடுத்து) மிச்சமானஅன்னத்தைப் புசிப்பவனும் வார்த்தையால்எல்லாருக்கும்அனுகூலமாயிருப்பவனும் ஹிதத்தாலும்ருஜுத்தன்மையினாலும் உயர்ந்தவனும் நன்மைதீமைகளையறிந்தவனும ஒருவரோபமில்லாதசெய்யாதவனும் பிராணிகளின் ஹிதத்தில்முயன்றவனும் கங்கையின்மடுவிலுள்ளஜலத்தில் குலக்கிரமமான வாஸத்தையுடையவனுமாயிருக்கிறான்' என்றுசொன்னர்.

முந்நூற்றுறுபத்தாறுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம். (தொடர்ச்சி.)

(ப்ராம்மணர் நாகனிடம் சென்றது.)

அந்தப்பிராம்மணர் அதிதியைநோக்கி, 'என்னால் கேட்கப்பட்ட இந்தஉம்முடையவார்த்தையானது பெரியசுமையைச்சுமப்பவனுக்குப் பெரியசுமைதாங்கிபோல மிகவும் களைப்பைநீக்குகிறது. வழிநடந்து ஸ்ரமப்பட்டவனுக்குச் சயனம்போலவும் நின்றுசிரமத்துடைந்தவனுக்கு ஆஸனம்போலவும் தாகமுள்ளவனுக்குத் தீர்த்தம்போலவும் பசியால்வருந்துகிறவனுக்குப் போஜனம்போலவும் விரும்பியபொருள் வேண்டியகாலத்தில் கிடைத்ததுபோலவும் புத்திரனைவிரும்புகிறவனும விருத்தனுமாயிருப்பவனுக்குப் புத்திரன் போலவும் மனத்தால்நினைக்கப்பட்டவனை பிரீதியுள்ளஸ்நேகிதனுடையதர்சனம்போலவும் உம்மால் இந்தவார்த்தையானது சொல்-

லப்பட்டது. அது என்னை மிகவும்ஸந்தோஷிக்கச்செய்கிறது. மிகவும் அறிவையுண்டுபண்ணுகிற வார்த்தையினாலே ஸ்ரீனக்கு இந்த உபதேசமானது செய்யப்பட்டது. அதை ஆகாயத்தில் செலுத்தப்பட்ட கண்ணையுடையவன்போல (தடையின்றி) பார்க்கவுஞ்செய்கிறேன்; யோசிக்கவுஞ்செய்கிறேன். நீர் எனக்கு எவ்விதம் சொல்லுகிறீரோ அவ்விதமே செய்வேன். ஓ! ஸாதுவே! இந்தராத்ரி நீர் என்னுடன்கூட வஸிக்கக்கடவீர். இதோ ஸூர்யபகவான் கிரணமடங்கினவனும் கீழ்நோக்கினவனுமாயிருக்கிறான். ஆகையால் நீர் ஸுகமாகவஸித்துச் சரமபரிகாரம்செய்துகொண்டு நாளைக்காலையில் போகலாம்' என்றுசொன்னார். ஓ! பகைவர்களைக்கொல்பவனே! பிறகு அந்தஅதிதியானவர் அந்தவேதியரால ஆதித்யம்செய்யப்பட்டு அந்த ராத்ரி அவரோடு வஸித்தார். அப்பொழுது தர்மத்தோடு கூடியுதத்வத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பவர்களான அவர்களுக்கு ஸுகமாக அந்தராத்ரிமுழுவதும் பகலுக்கொப்பாகச் சென்றுவிட்டது. பிறகு விடியற்காலத்தில் அந்தஅதிதியானவர் தம்காரியத்தைவிரும்புகிறவான அந்தவேதியரால் சக்திக்குத்தக்கபடி பூஜிக்கப்பட்டார். பிறகு தர்மத்தைச்செய்கிறவரும் ஸுகிருதத்தில் ஒரேவிதமான உறுதியுடையவரும் (செய்யவேண்டிய கர்மத்தில்நிச்சயத்தைச்செய்தவருமான அந்தவேதியர் பந்துக்களால் அனுமதிசெய்யப்பட்டு உபதேசிக்கப்பட்டபடி ஸமயத்தில் ஸ்ரப்பங்களிற்சிறந்தவனுபத்மனுடையகிருகத்தை அடைந்தார்.

மூன்நூற்றுபத்தேழாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(ப்ராம்மணர் நாகனுக்குத் தம்மவாவைத்தெரிவித்தும்படிசொல்லி மணல்திட்டில் வஸித்தது.)

அந்தவேதியர் விசித்திரமானவனங்களையும் புண்ணியதீர்த்தங்களையும் தடாகங்களையும் கிரமமாகஅடைந்து ஒருமுனிவரை அடைந்தார். பிறகு அந்தவேதியர் அந்தப்பிரம்மணரால்சொல்லப்பட்டபடி அந்தமுனிவரிடம் காகத்தைக்குறித்து நியாயமாக வினவினர். அவர் முறைப்படிகேட்டுச் சென்றார். அர்த்தத்தையுணர்ந்தவர் நியாயப்

படி நாகத்தின்கிருகத்தையடைந்து, 'நான் வந்திருக்கிறேன்' என்று, 'போ' என்கிறசப்தத்தால் அழகானவார்த்தையைச் சொன்னர். அவருடைய அந்தவார்த்தையைக்கேட்டு ரூபமுடையவுளும் தர்மத்திலன்புடையவளும் பதிவிரதையுமான நாகபத்நியானவள் வந்து அந்த வேதியரைக் கண்டாள். தர்மத்தில்பற்றுள்ள அவள் அவருக்கு விதிப்படி பூஜையைச்செய்தாள். 'நல்லவரா?' என்றுகேட்டுவிட்டு, 'நான் என்னசெய்யவேண்டும்?' என்றும்சொன்னள். வேதியர் அவளை நோக்கி, 'உன்னுடையினியவார்த்தையாலே சிரமபரிகாரத்தையடைந்தவனும் பூஜிக்கப்பட்டவனுமானேன். பெண்ணே! உத்தமனும் தேவனுமான நாகனைப் பார்க்கவிரும்புகிறேன். இதுதான் எனக்குப் பெரியகாரியம். இதுதான் எனக்குப் பிரியவிருப்பம். இந்தப் பயனுக்காகத்தான் இப்பொழுது நான் நாகனுடைய ஆசிரமத்தை அடைந்தேன்' என்றுசொன்னர். நாகபாரியை, 'அந்தணரே! பூஜ்யரான என்னுடையநாயகர் ஸர்ப்பயனுடையாதத்தைவகிப்பதற்காக ஒருமாஸம் நியஞ்சரிக்கப்போயிருக்கிறார்; [1]ஏழெட்டுநாட்களில் சந்தேகமின்றி வந்துவிடுவார். பூஜ்யரானஎன்நாயகர் பரதேசம்சென்றிருப்பதை நீர் தெரிந்துகொள்ளும். வேறு என்னசெய்யவேண்டும்? அதை எனக்குச் சொல்லும்' என்றுசொன்னள். பிராமணர், 'ஓ! பதிவிரதையே! நான் இந்தநிச்சயத்தால் இவ்விடம் வந்தேன். தேவியே! அவன்வரவைஎதிர்பார்த்துக்கொண்டு பெரிதான இந்த வனத்தில் வசிப்பேன். அவன்வந்தவுடனே ஞாபகமாக நான் இவ்விடம்வந்ததாகத் தெரிவிக்கவேண்டும். அவன்வந்தவுடன் நான்வந்த செய்தியை நீ அவனிடம்சொல்லவேண்டும். நானும் கௌதமநதியினுடைய அழகான இந்தமணல்திட்டில் அல்பமான ஆகாரத்தைச் செய்துகொண்டும் நீ சொன்னகாலம்வரையில் எதிர்பார்த்துக்கொண்டும் வஸிப்பேன்' என்று சொன்னர். பிறகு வேதவித்தும் வேதியர்களில்சிறந்தவருமான அந்தவேதியர் அந்தநாகன்னிகையைப் பலமுறையுமானஞ்செய்துவிட்டு, நதியின்மணல்திட்டையடைந்தார்.

---

1 'பதினைந்து' என்றும்கொள்ளலாம்.

மூன்றாற்றாவது தேட்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தோடர்ச்சி.)

(நாகனைச்சேர்ந்தவர்கள் போஜனம்செய்யும்படி ப்ராம்மணரைக்கேட்ட சொல்லியதும் அவர் மறுத்ததும்.)

ஓ! நரசிரேஷ்டனே! பிறகு தவத்தையுடையவரும் ஆகார மில்லாமல்வஸிப்பவருமான அந்தவேதியருக்காக அந்தநாகர்கள் தக்கத்தை அடைந்தார்கள். இந்தப்பத்மனென்கிற நாகனுடையபந்துக்களும் ஸோதரர்களும் புத்திரர்களும் பத்னியும் எல்லோரும் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு அந்தவேதியரிடம் சென்றார்கள். அவர்கள் மணல்திட்டில் ஏகாந்தத்தில் உறுதியான விரதமுடையவரும் நன்றாக உட்கார்ந்திருப்பவரும் ஆகாரமற்றவரும் மந்த்ரஜபத்தில்பற்றுள்ளவருமான அந்தப்ப்ராம்மணரைக் கண்டார்கள். அந்தப்பந்துக்களெல்லோரும் அந்தவேதியரையடைந்து அடிக்கடி பூஜித்து யோக்யமற அதிதிஸத்காரத்திற்குரியவார்த்தையைச் சொல்லலானார்கள். 'ஓ! தபோதனரே! இன்றுவந்தஉமக்கு இப்பொழுது ஆறுவதுதினமாய்விட்டது. தர்மத்தில்நன்புள்ளவரே! ஆகாரத்தைக்குறித்து ஒன்றும் சொல்லவில்லை. எங்களைக்குறித்து வந்தவராயிருக்கிறீர். நாங்களும் உம்முடையஸமீபம் வந்திருக்கிறோம். உமக்குஇஷ்டமும் நிரம்பியதுமான அதிதிபூஜையை நாங்கள் செய்யவேண்டும். ஓ! ப்ராம்மணர்களில்சிறந்தவரான ப்ராம்மணரே! ஆகாரநிமித்தமாகக் கிழங்கையோ கனியையோ சருகையோ ஜலத்தையோ அன்னத்தையோ நீர் புஜிக்கவேண்டும். ஆகாரமில்லாமல் நீர் வனத்தில்வஸிப்பதால் குழந்தைகள்முதல் முதியவர்கள்வரையுமுள்ள இவர்களெல்லோரும் தர்மத்தின்ஸங்கரத்தாலே பீடிக்கப்படுகிறார்கள். நாகர்களானஎங்களுள் பருணஹத்திப்பண்ணினவனும் இந்தக்குலத்தில் தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் பந்துக்களுக்கும்முந்தி ஆகாரம்செய்தவனும் ஒருவனுமில்லை' என்றுசொன்னார்கள். வேதியர் (உங்களுடைய உபதேசத்தாலேயே நான்ஆகாரம்செய்தவன்போலானேன். நாகனுடைய வாக்கைக்குறித்து இரண்டுதரமும் பத்துதரமும் ஏட்டுசேர்த்திசென்றதன்பிறகும் நாகன்வராமலிருந்தால் அப்பொழுது ஆகாரத்தைச்செய்வேன். இந்தவிதமானது அவனுடையவரவுக்காக ஏற்பட்டது. நீங்கள் வருத்தத்தையடையவேண்டாம். வந்தபடி போகலாம். அவனுடையவரவுக்காக இது எல்லாம் ஏற்பட்டது. இதை

இப்பொழுது நீங்கள் கெடுக்கவேண்டாம்' என்று சொன்னார். ஓ! யுதிஷ்டிரனே! அந்த நாகர்கள் அந்தப் பிராம்மணரால் அனுமதிசெய்யப்பட்டும் பயணியடையாதவர்களாகத் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

மூன்நூற்றுமுப்பத்தொன்பதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாகன்வந்ததும்அவன்மனைவி அவனை ப்ராம்மணரிடம்போகச் சொல்லியதும்.)

பிறகு பலகதிகளையுடையகாலமானது பூர்ணமாகிபொழுது பத்மனென்கிறநாகன் தன்காரியத்தைச்செய்து ஸந்தோஷத்துடனும் அனுமதி கொடுக்கப்பெற்றுத் தன்வீட்டுக்கு வந்தான். அவன் மனைவி அவனைப் பாதப்ரக்ஷாலனமுதலான பணிவிடைகளாலே உபசரித்தாள். (அப்பொழுது) நாகன் தன்ஸமீபத்தை அடைந்த அந்தப்பதிவிரதையை நோக்கி, 'கல்யாணி! தேவதைகளையும் அதிதிகளையும் பூஜித்துக் கொண்டிருக்கிறாயா? முன்சொல்லப்பட்டவிதியுடன் கர்மங்களில் முயற்சியுடையவளாயிருக்கிறாயா? * * * பயனில்லாததானஎன்பிரிவினிமித்தம் பெண்புத்தியால் (மனம்) மெலிந்தவளாகித் தர்மஸேதுவைவிடாமலிருக்கிறாயா?' என்று கேட்டான். நாகபத்னியானவள், 'சிஷ்யர்களுக்குக் குருசுச்ரூஷையும் வேதியர்களுக்கு வேதங்களை ஓதுவதும் தொண்டர்களுக்கு எஜமானனுடைய கட்டளையைச்செய்வதும் அரசனுக்கு உலகங்களைக்காப்பதும் க்ஷத்ரியஜாதிக்குள் எல்லாப்பிராணிகளையும் ரக்ஷிப்பதும் இவ்வுலகத்தில் தர்மமாகச் சொல்லப்படுகின்றன. வைசியர்களுக்கு அதிதிபூஜையையுடையாகவிருத்தியானது சொல்லப்படுகிறது. வேதியன்க்ஷத்ரியன் வைசியன் இவர்களுடைய பணிவிடையானது சூத்ரர்களின் கர்மம். ஓ! நாகர்களிற்சிறந்தவரே! எல்லாப்பிராணிகளுடைய ஹிதத்தையும் விரும்புவது கிருகஸ்தனுக்குரியதர்மம். நியமமுள்ளவனாகவும் எப்பொழுதும் க்ரமப்படிஜிதாத்மாவானவனாகவும் இந்திரியங்களுடையதர்மஸம்பந்தத்தினாலுண்டான ஸித்தியை அடைகிறான். 'நான் யாருடையவன்? எங்கிருந்துவந்தவன்? யார்? இம்மையில் என்னைச்சேர்ந்தவன் யாரவன்?' என்கிற இவ்விதமானபயனுள்ளபுத்தியுடன் எப்பொழுதும் மோக்ஷாச்ரமமானஸந்யாஸத்தில் வஸிக்கவேண்டும். புத்தினிக்குப்

பதிவிரதாதர்மமானது பரமதர்மமாகச் சொல்லப்படுகிறது. ஓ! நாகர்களிற்சிறந்தவரே! உம்முடைய உபதேசத்தால் அதை நான் உண்டையாக அறிவேன். தர்மத்தையுணர்ந்தவளானநான், நீர்தர்மத்தை நித்தியமாகக்கொண்டிருத்தலால் ஸன்மார்க்கத்தை விட்டுவிட்டுக் கேட்டமார்க்கத்தை எப்படி அடைவேன்? ஓ! மஹாபாக்கியமுள்ளவரே! தேவதைகள்விஷயத்தில் தர்மானுஷ்டானமானது குறைந்ததில்லை. அதிதிகளுடையபூஜையிலும் சோம்பலில்லாமல் எக்காலும் முயற்சித்துவருகிறேன். ஆனால் இவ்விடம் ஒருபிராம்மணர்வந்து ஏழுஎட்டுநாள்கள்சென்றுவிட்டன. அந்தக்காரியத்தையும் என்னிடம் சொல்லவில்லை. உம்முடையதரிசனத்தை விரும்புகின்றார். யுக்தப்பிராம்மணர் கோமதீநதியின்மணல்திட்டில் உம்மைப்பார்ப்பதில் விருப்பமுடையவராகி வேதத்தைஆவிருத்திசெய்துகொண்டு கடுமையானவிரதத்துடன் உட்கார்ந்திருக்கிறார். நாகர்களிற்சிறந்தவரே! அவர், 'நாகஸ்ரேஷ்டர்வந்தவுடன் என்னிடம் அவரை அனுப்பவேண்டும்' என்று உறுதியாக என்னிடம் ஸமாதானம்சொன்னார். ஓ! மகாபுத்திமானே! நீர் இதைக்கேட்டு அவ்விடம் போகவேண்டும். ஓ! கண்ணீச்செவியாயுடையவரே! அவருக்குத்தரிசனம் கொடுப்பதற்கும் தக்கவராகிறீர்' என்றுசொன்னாள்.

மூந்நூற்றெழுபதாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாகன்கோபித்ததும் அவன்மனைவி அவனை ஸமாதானஞ் செய்து ப்ராம்மணரிடம்போகச்சொல்லியதும்.)

பிறகு நாகன் மனைவியைநோக்கி, 'சுத்தமானபுன்சிரிப்புள்ளவளே! பிராம்மணரூபத்துடனகூடினஅவரைக் கேவலம் மனுஷ்யரானவேதியராகவா அலது தேவராகவா பார்க்க நினைக்கிறாய்? சீர்த்திபெறறவளே! எந்தமனிதன் என்னைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினால் (பார்க்கச்) சக்தனுவன்? காந்தி புடையவளே! தேவாலுரகணங்களிலும தேவரிஷிகளிலும் பார்க்கருகிலுள்ளவன் ஆஜ்ஞையைமுன்னிட்டு வார்த்தையைச் சொல்லுவான்? நாகர்களும் (அவர்கள்) அதித்தகாங்களும் மிக்கவீரியமுடையவர்களும் திவ்யகந்ததையுடையவர்களும் வேகமுடையவர்களும் வணக்கத்தக்கவர்களும் வரத்தையளிக்கின்றவர்களுமாயுள்ளவர்கள். விசேஷமாக மனிதர்

களுக்குப் பாரக்கத்தகாதவர்களென்று சொன்னதையருந்து எழுந்து நிசாசரனும், நரகபத்தினியுமானவள், 'ஓ! வாயுவை அருந்துகிறவரே! உண்மையால் இவர் தேவரல்லரென்று நினைக்கிறேன். அதிகமாகோப முடையவரே! அவரிடம் ஒன்றை அறிகிறேன். என்னவென்றால் பத்திமானுயிருக்கிறார். வேறுவரதாகாரியத்தையிரும்புகிற அவர் ஜலத்தையடையு விரும்பியதையும் மழையில்பிரியமுடையதுமாயிருக்கிற சாதகபக்ஷியானது மழையை எதிர்பார்ப்பதுபோல உம்முடையதரிசனத்தை எதிர்பார்க்கிறார்; உம்முடையதரிசனத்தைத் தவிர [1]ஒருவிக்கினத்தையும் எதிர்பார்க்கமாட்டார். கல்லவம்சத்தில் பிறந்தஉம்மைப்போன்ற ஒருவனும உபேக்ஷிக்கமாட்டான் ஆகையால் கூடப்பிறந்தகோபத்தைத்தள்ளிவிட்டு நீர் அவரைப்பார்க்க வேண்டும். அவருடைய ஆசையைக்கெடுப்பதால் இப்பொழுது ஆத மாவைத்தக்கித்துக்கொள்ளாதீர். ராஜனுனும் ராஜகுமாரனுனும் ஆசையுடன்வந்தவாகளுடைய கண்ணீரைத துடையாவிட்டால் பருணஹத்திசெய்தவர்களாகிறார்கள். ஒருவன் மௌனத்தால் ஞானபலாபத்தையும் தானத்தால் பெரியபுகழையும் ஸத்யவார்த்தையால் பேசுந்திறமையையும் அடைகிறன்; பரலோகத்திலும் பூஜிக்கப்படுகிறன்; பூமிதானத்தால் [2]ஆஸ்ரமத்திற்குநிகரானகதியை அடைகிறன். நியாயமாகத்தனலாபத்தைபபெற்றவன் பயனை அடைகிறன். இஷ்டமூம் பரவத்துடன்கூடாததும் ஆத்மாவுக்குஹிதமுமான கிரியையைச் செய்து ஒருவனும் நரகத்தையடைகிறதில்லையென்று தர்மத்தையுணர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்' என்றுசொன்னுள். நரகன், 'அபிஷானங்களால் எனக்கு அஹங்காரமில்லை பதிவிரதையே! ஆனல் ஜாதிமின்தோஷத்தால் ஸங்கற்பத்தாலுண்டான மிக்கோபமானது உன் சொல்லாகிறபீயினுலே எரிக்கப்பட்டது. பதிவிரதையே! நான் கோபத்தைக்காட்டிலும் அதிகமான இருளைப் பார்க்கவில்லை. கோபத்தின்மிகுதியினுல் நரகர்கள் நிந்தையை அடைகின்றனர். பிரதாப முடையவனும் அப்படியே இந்திரனுடன் சண்டைசெய்தவனுமான இராவணன் கோபத்தின்வசத்தையடைந்து யுத்தத்தில் ராமரால் கொல்லப்பட்டான். அந்தப்புரத்திலிருந்த கன்னை அபகரிக்கப்பட்ட தாகக்கேட்டு அவமானத்தாலுண்டானகோபத்தால் மனவருத்தமடைந்த கார்த்தவீரியனுடைய புத்திரர்கள் பரசுராமரால் கொலசீபட்டார்கள். ஜமதக்கினியின்புத்திரரான பரசுராமரால் இந்திரனுக்கு

1 'மற்றது லக்ஷ்யமில்லை' என்பது கருத்து.

2 ஆஸ்ரமங்களிலெல்லாம் அனுஷ்டித்ததனுலுண்டாகும் புண்ய.

நிஷாதனவனும் மகாபலசாலியுமான கார்த்தவீர்யன் கோபத்தால் யுத்தத்தில் கொல்லப்பட்டான். ஆகையால் உன்னுடையஇவ்விதமான வார்த்தையைக்கேட்டுத் தவங்களுக்குச்சத்துருவும் ஸ்ரேயலாகூ கெடுப்பதுமானஇந்தக்கோபமானது என்னால் அடக்கப்பட்டு நீண்டகண்களையுடையவளே! தர்மத்தின்கெடுதலில்லாதவளே முன் னிலையுடைய நீ எனக்கு மனவியானதால் என்னை விசேஷமாக ப்ரார்த்தித்துக்கொள்ளுகிறேன். நான் எந்தவிடத்தில் அந்தப்பிராம்மணர் இருக்கிறாரோ அவ்விடம் இப்பொழுதே போகிறேன். எல்லாவிதத் தாலும் என்னிடம் வார்த்தையைச் சொல்லி அவர் காரியத்தை நிறை வேற்றிக்கொண்டு போகட்டும்' என்று சொன்னான்.

முற்நூற்றெழுபத்தோராவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாகன் ப்ராம்மணரைக்கண்டு பேசியது.)

நாகர்களுக்கதிபதியான அந்தப்பத்மன் இவ்விதம்சொல்லி விட்டு மனத்தால் அந்தப்ராம்மணரையே தியானம்செய்துகொண்டும் அவர்காரியத்தைஆலோசித்துக்கொண்டும் அவரைக்குறித்து அவ்விடம் சென்றான். அரசனே! புத்திமானும் இயற்கையாகவே, தர்மத்தில் ஆவலுடையவனுமான அந்தநாகராஜன் அவரை அடைந்து, 'ஐயா! கூஷிக்கவேண்டும். சொல்லுகிறேன்: கோபத்தையடையாதீர். இவ்விடத்தில் யார்நிமித்தம் எதற்காக வந்தீர்? ஓ! பிராம்மணரே! உம்முடையஸ்நேகத்தால் கேரில் உம்மையடைந்து பிரஸன்னஞ்செய்கிறேன். நீர் ஸகர்தமான கோமதிநதீதீரத்தில் யாகம் உபாஸிக்கிறீர்?' என்று மதுரமானவார்த்தையைச் சொன்னான். பிராம்மணர், 'ஓ! நாகப்ரேஷ்டனே! நான் தர்மாரண்யனென்று பெயருள்ளவன். பத்மநாபன்என்கிறநாகனைப்பார்ப்பதற்கு இவ்விடம்வந்திருக்கிறேன். இதை அறியக்கடவாய். அவனிடத்தில் எனக்குக்காரியமிருக்கிறது. நான் அவனில்லாதிருக்கையில் அவனுடையபத்னியால், 'அவர் வெளியேபோயிருக்கிறார்' என்று கேட்டேன். அவள், உழவன் சேதத்தை நிர்பார்ப்பதுபோல எதிர்பார்க்கிறேன். யோகத்துடன்கூடியவனும் பீடைஇல்லாதவனுமானநான் அவனுக்குக் கிலேசத்தைப் போக்குவதும க்ஷேமத்தைச்செய்வதுமான அந்தவேதத்தை ஆவிருத்திசெய்கிறேன்' என்றுசொன்னார். நாகன், "ஓ! மஹாபாக்கிய

முள்ளவரே! ஆச்சரியம். நீர் நல்லறிவுமுடையவரும் சாதுவும் ஸத்ஸங்கர்களிடத்தில் அன்புள்ளவருமாயிருக்கிறீர். குற்றம்மென்னுத்தகாதவரானீர். பிறகு ஸ்நேகத்துடன் பார்க்கிறீர. ஓ! பிராம்மணசிரேஷ்டரே! நீர் அடையவிரும்பிய அந்தகாகன் நானே! இஷ்டப்படி கட்டளையிடும். நான் உமக்கு என்னபிரியத்தைச் செய்யவேண்டும்? நான் நீர்வந்திருப்பதின் நிமித்தமென்னுடையமனஷியால் கேட்கப்பட்டேன். ஓ! பிராம்மணரே! அதனால் உம்மைப்பார்க்க நானே வந்தேன். என்னை அடைந்தவரானீரும் இப்பொழுது கிருதார்த்தராகத் திரும்பிப்போவீர். ஓ! பிராம்மணசிரேஷ்டரே! நீர் நமபிக்கையைத்து என்னை உம்முடையகாரியத்தில் பிரவிருத்திக்கச்செய்யலாம். நீர் உம்முடைய ஸ்ஜாக்யத்தைவிட்டுவிட்டு இவ்விடத்தில் என்னையே அனுஸரித்திருப்பதால் எங்களெல்லாம் விசேஷமாகக் குணங்களால் விலைக்கு வாங்கிவிட்டீர்' என்றுசொன்னன். பிராம்மணர், 'ஓ! மஹாபாக்கிய முள்ளநாகனே! அர்த்தங்களை அறியாதவனுனான் உன்னுடையதரிசனத்தில்நிருப்பமுடையவனும் ஒருவிஷயத்தைக்கேட்க விருப்பமுடையவனுமாக வந்தேன். நான் விஷயங்களினின்றும்திருப்பித்தன்னிடமிருப்பவனும் ஜீவாத்மாவுக்குஉடையவேண்டியஸ்தானமாயிருக்கிற பரமாத்மாவைதரிசிக்கிறவனுமாகிச் சலிப்பதும் இருப்பிடத்தைவிரும்புகிறதும் பெரியஅறிவையுடையதுமானசித்தத்தை அளிக்கிறவனுயிருக்கிறேன். அபபடிப்பட்டநீ யசஸ்களாகிறமத்திய கிரணங்களையுடையவைகளும் சந்திரகிரணங்களுடையஸ்பரிசத்திற்கு நிகரானவைகளும் உன்னுல்பிரகாசிக்கச்செய்யபபட்டவைகளும் மனத்திற்கினியவைகளுமானகுணங்களாலேபிரகாசிக்கிறாய். ஓ! காற்றை அருந்துகிறவனே! உன்னைப்பார்த்தநான் ஒருபரஸ்னம்செய்கிறேன். நீ நிவர்த்திசெய்யவேண்டும். பிறகு காரியத்தைச் சொல்லுவேன். அந்தக்கேள்வியை நீ கேட்கக்கடவாய்.

மூன்றூற்றெழுபத்திரண்டாவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(நாகன் ஸ்ரீர்யாணிடத்துள்ளஅதிசயங்களை ப்ராம்மணருக்குச் சொல்லியது.)

முறைப்படி ஒரேஉருவையையுடைய சூரியனுடையஅந்தரதத்தைவணங்கிப்பதற்குப் போகிறாய். அவ்விடத்தில் நீ ஆச்சரியமான ஏதாவதுஒன்றைப்பார்த்திருந்தால் அதைச்சொல்லவேண்டும்' என்று

கோலல நாகன் அவரைநோக்கி, 'ஸ்வாயம்பகவானுக்கு அநேகஆச்சரியங்களுக்கு இருப்பிடம். அவைகளில் மூன்று உலகங்களிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட எல்லாப்பிராணிகளும் பிரமிக்கத்தக்கன்றன. அவருடைய ஆயிரம்கிரணங்களிலும் கன்றுகளித்திபெற்றமுனிவர்கள் தேவர்களுடன்கூடக் கிரகங்களில் பக்திகள்போல ஆஸ்ரயித்துக்கொண்டு வலிக்கிறார்கள். அவரிடமிருந்து வெளியவாயுவான தூண்டும்பி அவருடைய கிரணங்களை ஆஸ்ரயித்துக்கொண்டு ஆகாயத்தில் விருத்தியடைகின்றது. அவரிடமிருக்கும் இதைக்காட்டிலும் மேலான ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஓ! பிராம்மணரிஷியே! பிரஜைகளுடைய ஹிதத்தைவிரும்பி அந்தவாயுவைப்பிரித்து வர்ஷாகாலங்களில் ஜலத்தை வருஷிக்கிறார். இதைக்காட்டிலும் வேறு என்ன ஆச்சரியம் வேண்டும்? அவருடையமண்டலத்தின்மத்தியிலிருந்து கொண்டு அந்தர்யாமியானவர் பரமமான காந்தியினாலே ஜ்வலித்துக்கொண்டு, உலகங்களைப் பார்க்கிறார். இதைக்காட்டிலும் வேறு என்ன ஆச்சரியம்வேண்டும்? அவருக்குப்பாதம்போன்ற சுக்கிரனென்றுபெயருடைய வெண்மையான கிரகமானது ஆகாயத்தில் மேகமாகி வருஷாகாலங்களில் ஜலத்தை விடுகிறது. இதைக்காட்டிலும் மேலான ஆச்சரியம் என்ன இருக்கிறது? அவர் வர்ஷாகாலத்தில் பொழிந்தஜலதத்தைத் திரும்பவும் வெண்மையானகிரணத்தால் எட்டு மாதங்கள் இழுக்கிறார். இதற்குமேல் என்ன ஆச்சரியம் இருக்கிறது? அவருடையவிசேஷமான தேஜஸ்ஸுகளில் ஆத்மாவானவர் நிலைத்திருக்கிறார். இந்தப்பூமியும் அவரிடமிருந்து சாராசரங்களோடுகூட ஸ்தாபிதம்பண்ணப்பட்டிருக்கிறது. அவரிடத்தில் மிக்கபுஜபலத்தையுடையவரும் சர்வஜ்ஞரும் புருஷோத்தமரும் ஆதியந்தமற்றவருமான தேவர் இருக்கிறார். ஓ! வேதியரே! இதைக்காட்டிலும் மேலான ஆச்சரியம் என்ன இருக்கிறது? ஸாவித்ரீயினால் ஆஸ்ரயித்ததனால் நிர்மலமான ஆகாயத்தில் நான் பார்த்தஆச்சரியங்களுக்கெல்லாம் ஆச்சரியமாயிருக்கிற இந்த ஒன்றையும் என்னிடமிருந்து கேளும். முன்காலத்தில், மத்தியாந்நமயத்தில் ஆதித்தியர் உலகங்களைத்தபிக்கச்செய்கையில் எங்கும் வேறொருஸூர்யன்போலப் பிரகாசிக்கிறவரான ஒருவர் காணப்பட்டார். அவர் தம்மூடையதாந்தியாகிற தேஜஸினால் எல்லாவுலகங்களையும் ஒளிமழுங்கச்செய்து ஆகாயத்தைத்பிளக்கிறவர்போல ஆதித்தியனுக்குமேலே வந்தார். ஹோமம்செய்யப்பட்ட அக்கினிபோலத் தேஜஸ்ஸுகளாகிறகிரணங்களால்வியாபித்து நிச்சயிக்கமுடியாதரூபத்தாலே இரண்டாவது ஆதித்யர்போல்வும் (வந்தார்.) அவர்வந்ததும்

ஆதித்தியர் கைகளைக் கொடுத்தார். எதிர்கொண்டுபூஜிக்கப்பட்டவரும் சாரத்திக்கிறவருமான அவர் வலக்கையைக்கொடுத்தார். பிறகு அவர் ஆகாயத்தைப்பேதித்துக்கொண்டே ஸூர்யமண்டலத்தில் பிரவேசித்தார். அவருடையதேஜஸானது ஒன்றுகூடிச்சேர்ந்துகொண்டு கூடாரத்தில் ஸூர்யனுயிற்று. அப்பொழுது அவர்களுடைய தேஜஸ்களைச்சேர்ந்திருக்கையில் எங்களுக்கு, 'இவர்களுள் தேரிலிருந்த ஸூர்யனியர்? வந்தவர்யார்?' என்று ஸந்தேகம் உண்டாயிற்று. ஸந்தேகத்தைஅடைந்தநாங்கள் ஆதித்யரைநோக்கி, 'வேறுனஸூர்யன்போல ஆகாயத்தைஆக்ரமித்துஅடைந்தஇவர் யார்?' என்று கேட்டோம்.

முந்நூற்றெழுபத்துமூன்றுவது அத்யாயம்.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(ஸூர்யன் தன்னிடம் பிரவேசித்ததேஜஸின்வரலாற்றைச்சொல்லியது.)

ஆதித்யர், 'இவர் வாயுவுக்குமித்ரான அக்னிதேவரல்லர்; அஸுரனும் அல்லர்; நாகனுமல்லர். உஞ்சவிருத்திவிரதத்தில் ஸித்திபெற்றஇந்தமுனிவர் ஸ்வர்க்கத்தை அடைந்தார். இந்தவேதியர் இவ்வுருவங்களிலே ஆகாரமாகவுடையவரும் உதிர்ந்தசருகுகளே ஆகாரமாகவுடையவரும் ஜலத்தையருந்துகிறவரும் வாயுவைப் பக்ஷிப்பவருமாகி ஸமாதியுடையவராயிருந்தார். இவ்வர்க்கமார்க்கத்தில் முயற்சிசெய்து இவர் ஸ்வர்க்கத்தை அடைவதற்குக்காரணரான (அந்த) ஈச்வரை வேதத்தின்ஸம்ஹிதைகளால்துதித்தார். ஓ! ராசசிங்கமே! இந்தவேதியர் ஸங்கமற்றவரும் ஆசையற்றவரும் எங்களுடனும் உஞ்சவிருத்தியாகாரமாகவுடையவரும் ஸகலமானபிராணிகளுடையஹிதத்திலும்முயற்சியுள்ளவருமானவர். தேவர்களும் கந்தர்வர்களும் மற்றும் இப்படிப்பட்டவர்கள் அடைந்தஉத்தமகதியை படைத்ஸமர்த்தராகார்' என்றுசொன்னார். ஓ! பிராம்மணரே! அந்த ஸூர்யமண்டலத்தில் இவ்விதமான இந்த ஆச்சரியமானது எனுனால் பார்க்கப்பட்டது. பிராம்மணரே! அந்த மனுஷ்யர் மிகவும்கடுமையான விதியையிட்டு ஒழித்தற்கருமையானகதியை அடைந்தார். அவர் ஸூர்யனுடனேசேர்ந்துகொண்டு பூமியைச் சுற்றி வருகிறார்' என்றுசொன்னேன்.

மூந்நூற்றெழுபத்துநான்காவது அத்யாயம
மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(பிராம்மணர் நாகனிடம் விடைபெற்றுச் சென்றது

பிராம்மணர், 'ஓ! நாகனே! இது ஆச்சரியம். இதில் ஸந்தேகமில்லை. மிகவும் பிரீதியடைந்தவனுகிறேன். வேறுவிஷயத்தை அடுத்து நேரிட்டவாக்கியங்களால் மார்க்கத்தைக் காண்பிக்கப்பட்டவனுனேன். நாகர்களிற்சிறந்தவனுவீர! உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். போகிறேன். காரியங்களில்லாவதிலும் செய்விக்கலிலும் என்னை நினைக்கவேண்டும்' என்றுசொன்னர். நாகன், 'மனத்திலுள்ளதை ஏதச்சொல்லாமல் நீர் இப்பொழுது எங்கேபுறப்பட்டீர்? ஓ! பிராம்மணரே! என்னகாரியத்திற்காக நீர் இவ்விடம் வந்தீர்? அதைச்சொல்லும்.சுல்லவிரதமுடையபிராம்மணஸ்ரேஷ்டரே! (சிறிது) சொல்லப்பட்டதும்(முழுதும்) சொல்லப்படாததுமானகாரியமானது செய்யப்பட்டபிறகு என்னிடம்தெரிவித்து என்னலனுமதிகொடுக்கப்பெற்றபின்பு நீர் போகவேண்டும். ஓ! பிரம்மரிஷியே! நினைக்கமுள்ளவானநீர் இப்பொழுது பிரயோஜனமில்லாமல் என்னைப்பார்த்துத்தள்ளிவிட்டு மாத்தினடியையடைந்தவர்போலப் போகத்தக்கீவரல்லீர். ஓ! பிராம்மணஸ்ரேஷ்டரே![1] உம்மிடத்தில் நானும் என்னிடத்தில் நீரும் இருக்கிறோம். சந்தேகமில்லை. இந்த உலகமெல்லாம் உம்மைச்சேர்ந்தது. ஓ! குற்றமற்றவரே! என்னிடத்தில் உமக்கு என்ன ஆலோசனை?' என்றுசொன்னன். பிராம்மணர், 'பேரறிவுடையீர்! நீரும் ஆத்மாவையறிந்தவனுமான நாகனே! இது இப்படியே. உள்ளபடி எல்லாவிதத்தாலும் உன்னைவிடமேலானதேவர்கள் இல்லை. நானும் நீயும் எல்லாப்பிராணிகளும் எவரிடத்தில் எப்பொழுதும் அடைந்தங்களாயிருக்கிறோமோ அவரே நீ; அவரே நான். நான் யாரோ அவரே நீயும். ஓ! நாகஸ்ரேஷ்டனே! ஐந்து மகுப் புண்யஸமூகத்தில் சந்தேகமுண்டாயிருந்தது. ஓ! ஸாதுவே! நான் புருஷார்த்தஸாதனமான உஞ்சவ்ரதத்தை அனுஷ்டிப்பவன். ஓ! ஸாதுவே! இதே என னுடையஉறுதி. உத்தமமானகாரணமானதுசொல்லப்பட்டது. ஓ! நாகனே! விடைபெற்றுக்கொள்கிறேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். கிருதார்த்தனுனேன்' என்று சொன்னர்.

---

1 'உம்மிடத்தில் நான் அன்புடையவனும் என்னிடத்தில் நீர் அன்புடையவர்' என்பது பழையவுரை.

மோக்ஷதர்மம் (தொடர்ச்சி.)

(ப்ராம்மணருக்கும் நாகனுக்கும் நடந்ததாகவும் தர்மவ்யாதனால் சொல்லப்பட்டதாகவும் உள்ள கதை.)

அர்ச்சுனா! உறுதியையடைந்தவரான அந்தப் ப்ராம்மணர் நாகஸ்ரேஷ்டனிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டுவந்து தமது பிரகாசமான நிறைவாகிய ஆத்மாவை பிரகாசமான நிறைவான ஆத்மாவில் ஒடுக்கி ஒப்பற்ற பரமாத்மாவான ஸனாதனனை அடைந்தார். அர்ச்சுனா! அந்தப் ப்ராம்மணரால் மோக்ஷதர்மத்தைப் பற்றி முன்னமே நிச்சயிக்கப்பட்டிருந்தார். ராஜனே! அடிபொழுது இந்தக் கதையையும் சொன்னார். ராஜஸ்ரேஷ்டனே! சுபலனாலும் ஜனகருடைய ஸபையில் மஹாத்மாவான நாரதருக்குப் பரிசுத்தமான இந்தக் கதையானது சொல்லப்பட்டது. ராஜஸ்ரேஷ்டனே! கேட்கப்பட்ட வஸ்துவை நிரீக்ஷிப்பவனான நாரதராலும் இந்த்ரனுடைய ஸபையிலிருந்த ஸமயத்தில் சொல்லப்பட்டது. பரதஸ்ரேஷ்டனே, அர்ச்சுனா! அந்தக் கேசவாதி ராஜனாலும் முன்காலத்தில் சுபமான இந்தக் கதையானது பிரஸித்தர்களான எல்லாதேவதையாகளுக்கும் சொல்லப்பட்டது. அர்ச்சுனா! எனக்குப் பரசுராமனுடன் மிகவும்பயங்கரமானயுத்தம்நடந்தது நேரிட்டபொழுது வஸுக்களாலே இந்தக்கதையானது எனக்கும் சொல்லப்பட்டது. தர்மதத்துவங்களில் சிறந்தவனே! என்னுடைய கேட்கிறவனுமான உனக்கு உத்தமமும் பரிசுத்தமும் சுபமுமான இந்தவிலக்ஷணமான இந்தக்கதையானது உள்ளபடி சொல்லப்பட்டது. ஓ! பாரத! நீ என்னிடம் எதைக் கேட்கிறாயோ அதுவே மோக்ஷதர்மம். அர்ச்சுனா! அவர் ஆசையில்லாமல் தர்மமாகிறபுருஷார்த்தத்தைச்செய்வதில் தீராதஇருந்தார், உறுதியையடைந்த தப்பிராம்மணர். நாகஸ்ரேஷ்டனிலேயே தேதிக்கப்பட்ட தமதுகிருத்தியத்தையுடையவரும் ஸமஸ்தமங்களாலும் சிறக்கிறவரும் அற்பமான உஞ்சசிலத்தாலுஞ்ஜீவனமுடையவருமாகிவனத்தின்மத்தியத்தை அடைந்தார்" என்றுசொன்னார்.

மோக்ஷதர்மம் முற்றும்.

சாந்தீபர்வம் முற்றிற்று.